திருக்குறள்

புது உரை

நாமக்கல் கவிஞர்

திருக்குறள் புது உரை

சரஸ்வதி மஹால்
ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம்

நாமக்கல்

வெ. இராமலிங்கம் பிள்ளை

கவிஞர் இல்லம் நாமக்கல்
1954.

விற்பனை உரிமை

இன்ப நிலையம்

மயிலாப்பூர் — சென்னை-4.

முதற்பதிப்பு: ஆகஸ்ட். 1954.
உரிமை ஆசிரியருக்கே.

விலை ரூ 10

உமா அச்சகம் — சென்னை - 1.

முன்னுரை

இந்த நூலுக்குத் 'திருக்குறள் புது உரை' என்று பெயரிடப்பட்டிருக்கிறது. அதற்குக் காரணம் இதிலுள்ள உரைகள் மிகவும் எளிய நடையில் ஒரு புது முறையில் சொல்லப்படுகின்றன என்பதற்காக மட்டும் அல்ல. பழைய உரைகளில், பல குறள்களுக்கு மிகவும் தவறுகச் செய்யப்பட்டுள்ள உரைகளுக்கு முற்றிலும் வேறுபட்ட புது உரைகள் சொல்லப்பட்டிருப்பதே 'புது உரை' என்ற பெயருக்கு முக்கிய காரணம். பத்து உரையாசிரியர்கள் எழுதிய பழைய உரைகளுக்குள் பரிமேலழகர் செய்த உரையே மிகச் சிறந்ததெனக் கொள்ளப்பட்டு, கடந்த அறுநூறு ஆண்டுகளுக்கு அதிகமாகப் பரிமேலழகர் உரையே பாடமாகப் போதிக்கப்பட்டு வந்திருக்கிறது. பரிமேலழகர் மிகச் சிறந்த அறிஞர் என்பதில் ஐயமில்லை. ஆனால் திருவள்ளுவருடைய காலத்துக்குச் சுமார் (1400) ஆயிரத்து நானூறு ஆண்டுகளுக்குப் பின்னல் தோன்றிய பரிமேலழகர், திருவள்ளுவருடைய கருத்தையும் திருவள்ளுவர் காலத்தில் அரங்கேற்றப்பட்ட உரைகளையும் ஆராய்ந்தெழுத அவகாச மில்லாதவராகி, தம்முடைய காலத்தில் வழங்கிய உரைகளையும், அப்போதிருந்த சமூகப் பழக்க வழக்கச் சம்பிரதாயங்களையும் தழுவித் தம்முடைய உரையைச் செய்திருக்கிறார். பரிமேலழகருக்கு முன்னல் திருக்குறளுக்கு உரைகள் செய்திருந்த ஒன்பது பேர்களும் அவரவர்கள் மனம் போனபடி குறள்களின் வரிசைக் கிரமங்களை மாற்றிக்கொண்டு, வைப்பு முறையைச் சீர்கெடுத்திருந்தார்கள். அதை ஒழுங்குபடுத்த மூலத்தின் ஏட்டுப் பிரதிகளைத் தேடி

ஆராய்வதற்கே பரிமேலழகர் அரும் பாடுபட்டிருக்க வேண்டுமென்று அனுமானிக்க இடமிருக்கிறது. ஆதலால் உரைகளையும் ஆராய்ந்து மாற்றி யமைக்க அவருக்கு அவகாசம் இல்லைபோலும். எனவே அவருடைய உரைகளும் அநேக இடங்களில் திருவள்ளுவருடைய கருத்துக்கு ஒவ்வாதனவாகவும் தத்துவங்களுக்கும் சத்தியங்களுக்கும் முரண்பட்டனவாகவும் இருக்கின்றன. அப்படிப் பட்ட இடங்களிலெல்லாம் முற்றிலும் வேறுபட்டப் பொருத்தமானப் புது உரைகளைச் செய்திருப்பதே இந் நூலின் சிறப்பு. இதற்கு ஒரு உதாரணமாகத் 'தவம்' என்ற அதிகாரத்திலுள்ள பத்துக் குறள்களுக்கும் பரிமேலழகர் தந்துள்ள உரைகளோடு இதிலுள்ள உரைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் புதுமை விளங்கும். 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டிக் குறுகத் தறித்த குறள்' என்ற பெருமை வாய்ந்த திருக்குறளுக்கு இந்தப் புது உரைதான் முடிவான உரை யென்று சொல்லி விட முடியாதென்றாலும், இதுவரையிலும் வெளிவந்துள்ள எல்லா உரைகளிலும் இந்தப் 'புது உரை'தான் திருவள்ளுவருடைய கருத்துக்கு மிகவும் நெருங்கியதாக இருக்கிறதென்பது நிச்சயம். இதைக் கண்ணுறும் அறிஞர்கள் இது பரிமேலழகருக்குச் சிறுமை செய்வதாகச் சீற்றங்கொண்டுவிடாமல் அமைதியுடன் ஆராய்ந்து ஆதரிப்பார்களென்று வணக்கத்துடன் வேண்டிக்கொள்ளுகிறேன்.

வெ. இராமலிங்கன்.

நன்றி

திருக்குறளுக்கு ஒரு புது உரை எழுதவேண்டு மென்ற அவசியத்தை 1932-ம் ஆண்டில், வேலூர் சிறையில் நான் காந்தியக் கைதியாக இருந்த காலத்தில் உணர்ந்தேன். சிறையிலிருந்து விடுதலையானபின் இந்தப் புது உரைக்காகத் திருக்குறள் ஏட்டுப் பிரதிகளை ஆராய வும் அறிஞர்களோடு ஆலோசிக்கவும் பற்பல இடங் களுக்குச் செல்லவேண்டி யிருந்தது. அந்தச் செலவு களுக்கெல்லாம் எனக்கு உதவிகள் புரிந்த அன்பர் களுக்கும் இதை அச்சேற்ற உதவிய நண்பர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகும்.

முதலில், பல இடங்களிலிருந்த ஏட்டுப் பிரதிகளைப் பார்க்க எனக்கு வழி காட்டி இந்தப் புது உரையை எழுதும்படி உத்ஸாகப்படுத்திய ராயப்பேட்டைத் தமிழ் முனிவர் திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அமரருக்கு அஞ்சலி செய்கின்றேன்.

என்னை நேரிற் கண்டறியாதவராக இருந்தும், நான் கேளாமலும், தாமாகவே இந்த ஆராய்ச்சிக்குப் பெரும் பொருள் உதவிய சீர்காழி தென்பாதியைச் சேர்ந்த ஸ்ரீ திருநாராயண பிள்ளையவர்களுடைய பேத்தியாம் திரு. டி. ராஜம்மாள் அவர்களின் அபூர்வ குணத்தை எவ்வளவு புகழ்ந்தாலும் பொருந்தும். இவர் என்னுடைய இலக்கி யங்களைப் படித்து என்னைப்பற்றி மிகுந்த நன்மதிப்பு கொண்டிருந்தவர். என்னை நேரிற் கண்டு மகிழ விழைந் தவர். ஆனால் கண்டதில்லை. திருக்குறளுக்குப் புது உரை வெளியிட நான் ஆராய்ச்சி செய்துகொண்டிருந்

தை அறிந்து, அவர்களே எனக்கு ஒரு கடிதம் அனுப்பி, அதில் "தாங்கள் திருக்குறளுக்குப் புது உரை ஒன்று எழுதி வருவதாக அறிந்து, அந்த உரை விரைவில் வெளியாகவேண்டுமென்று மிகவும் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். தாங்கள் செய்யும் மிகச் சிறந்த இந்தத் திருப்பணிக்கு என்னுடைய காணிக்கையாகக் கொஞ்சம் பணம் அனுப்ப விரும்புகிறேன். அதைத் தாங்கள் மறுத்துவிடாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும். தங்களுடைய அனுமதி கிடைத்தவுடன் அனுப்பக் காத்திருக்கிறேன்" என்று எழுதினார்கள். இந்த வெகு அசாதாரணமான கடிதத்தைக் கண்டு ஆச்சரியமடைந்த நான் அதற்குத் தகுந்தபடி பதில் எழுதினேன். உடனே நான் எதிர்பார்த்ததற்கு மிகவும் அதிகமாக ஒரு பெருந் தொகையை அனுப்பினார்கள். அதற்கு நான் வந்தனம் செய்து முடிக்குமுன் மறுபடியும் அதைப்போலவே ஒரு பெருந்தொகையை அனுப்பினார்கள். இந்த வண்மை புலவர்களின் வாழ்த்துக்குரியது.

அடுத்தபடியாக இவ்வாராய்ச்சிக்குப் பேருதவி புரிந்த கோவை ஜில்லா சன்மார்க்க சங்கத் தலைவர் திரு. வி. சி. சுப்பையா கவுண்டரவர்களுக்கும் திருச்செங்கோடு புல்லிகார் திரு. ஆர். வி. கோபால் அவர்களுக்கும் கோட்டையூர் திரு. க. வீ. அள. மு. இராமநாதன் செட்டியார் அவர்களுக்கும் மதுரை திரு. கருமுத்து தியாக ராஜன் செட்டியாரவர்களுக்கும், கோவை திரு. கே. ராமகிருஷ்ணம் பிள்ளையவர்களுக்கும் தாராபுரம் திரு. ஏ. சேனாபதி கவுண்டரவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி.

இந்தப் புது உரையின் கைப்பெழுத்துப் பிரதியின் பகுதிகளைப் படித்துப் பார்த்து எனக்குப் பாராட்டுகள்

எழுதி ஊக்கமளித்த திரு. ராஜாஜி, திரு. வி. கல்யாண சுந்தர முதலியார், கவிமணி திரு. தேசிக விநாயகம் பிள்ளை, திரு. பெரியசாமி தூரன், திரு. ரா. பி. சேதுப் பிள்ளை, திரு. அ. வரதநஞ்சைய பிள்ளை, திரு. சீனிவாசராகவன் முதலானவர்களுக்கும்,

இந்தப் புது உரையை அச்சேற்றுவதற்கு மிகவும் ஆர்வங்கொண்டுப் பொருளுதவிகள் புரிந்த கோவை ஸ்ரீ பி. ஏ. ராஜூ செட்டியார், போகாசனப் பிரசாரகர் சென்னை ஸ்ரீ வி. என். குமாரசாமி, கோவை கீதா போதகர் ஸ்ரீ என். கிரிதாரி பிரசாத், பாலடமங்கலம் ஸ்ரீ எஸ். எம். வெங்கட்ராம செட்டியார், பொள்ளாச்சி ஸ்ரீ என். மகாலிங்கம், இந்நூலை அழகாக அச்சடித்துதவிய சென்னை 'உமா' அச்சகத்தின் உரிமையாளர் ஸ்ரீ ஜி. உமாபதி, எனக்காகப் 'புருப்'களைத் திருத்தி அச்சாபீசில் காரியங்களைக் கவனித்துக்கொண்ட 'இன்ப நிலையம்' உரிமையாளர் ஸ்ரீ சோம. சுவாமிநாதன் முதலான அனைவருக்கும் என் மனப்பூர்வமான நன்றி உரியதாகும்.

இந்த நூல் வெளியாவதற்கான எல்லா முயற்சிகளிலும் இடைவிடாது எனக்கு உற்ற துணையாக நின்று, பெருமை செய்யும் மிகச் சிறந்த கீதாபோதகராகிய ஸ்ரீ என். கிரிதாரி பிரசாத் அவர்களுக்கு நான் பிரத்யேக நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தெ. இராமலிங்கன்.

அறிஞர்களின் அணிந்துரைகள்

☆

ராஜாஜி :

என் பிரியமுள்ள ராமலிங்கத்துக்கு,

நீங்கள் அனுப்பிய திருக்குறள் புது உரையைப் படித்து மிகுந்த இன்பமடைந்தேன். உங்கள் புது உரையையும் நீங்கள் கையாண்டிருக்கிற புது முறையையும் நான் மிகவும் மெச்சுகிறேன். மிகவும் நுட்பமான கருத்துகளை வெகு ஜாக்ரதையாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஆனால் இந்த நூலுக்கு நான் முன்னுரை எழுதுவது என்ற வீண் பெருமையை நான் விரும்பவில்லை. இந்த விஷயத்தில் என்னைவிட அறிவுடைய நீங்கள் எழுதிய நூலுக்கு முன்னுரை எழுத நான் யார்? மேலும் தங்களுடைய நூலுக்கு இன்னொருவருடைய முன்னுரை எதற்கு? உங்கள் நூல் யாருடைய சிபார்சும் இல்லாமல் புகழுடன் நிலவத்தக்கது. மனம் நிறைந்த அன்போடு வாழ்த்துகிறேன்.

தமிழ் முனிவர்
திரு. வி. கலியாணசுந்தர முதலியார் :

கெழுதகை நண்பர் நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார் திருக்குறளுக்கு உரை கண்டனர் என்று கேட்டு மகிழ்வெய்துகிறேன். உரை என் முன்னிலையில் படிக்கப்பட்டது. கவிஞரை ஈன்ற மணிவயிற்றின் தவமே தவம்.

புது உரை, பழைமைக்கு முரண்படாதது; புதுமைக்கு அரண் செய்வது; காலத்துக்கு ஏற்றது; அதன்கண் காந்திய மணங்கமழ்கிறது; அந்த மணம் தமிழ் நாட்டை ஓம்பும்.

நாமக்கல் கவிஞர் வாழ்க; அவர் முயற்சி வெல்க.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை :

வையத்துக் காந்திமகான் வாழ்வதனில் வள்ளுவர்தம்
பொய்யற்ற நூற்குப் பொருள்கண்டான்—செய்யதமிழ்ப்
பண்பறிந்த ஆஸ்தானப் பாவலன் ராமலிங்க
நண்பனை வாழ்த்துவோம் நாம்.

* * *

மண்ணுலகில் காந்திமகான் வாழ்க்கையினில் வள்ளுவர்தம்
புண்ணியநன் னூற்குப் பொருள்கண்டோன்—என்னுதமிழ்ப்
பண்பறிந்த ஆஸ்தானப் பாவலன் ராமலிங்க
நண்பனை வாழ்த்துகவென் நா

* * *

வையமிசை காந்திமகான் வாழ்க்கையினில் வள்ளுவர்தம்
தெய்வமறை யார்க்கும் தெளியவைத்தான்—செய்யதமிழ்
பண்பறிந்த ஆஸ்தானப் பாவலன் ராமலிங்க
நண்பனை வாழ்த்துவோம் நாம்.

'கலைக்களஞ்சியம்' ஆசிரியர்
திரு. ம. ப. பெரியசாமி தூரன் :

நமது நாமக்கல் கவிஞர் தமது நீண்டகால ஆராய்ச்சியாலும் அனுபவத்தாலும் கண்ட உரையை மிகச் சிறந்த முறையிலே தருகிறார். பழைய உரைகளிலுள்ள தவறுகளைத் தெளிவாக எடுத்துக் காட்டிப் புது உரைகள் கண்டிருக்கிறார். அவருடைய முயற்சியிலிருந்து திருக்-

குறளைப் பற்றிப் பல புதிய உண்மைகளை நாம் அறிகிறோம். திருக்குறளின் ஆழமும், விரிவும் எவ்வளவு பெரிதென் பதை கவிஞர் உரை எடுத்துக் காட்டுகிறது. இவ்வுரை யின் வாயிலாகக் கவிஞர் தமிழுக்கு மிகச் சிறந்த சேவை செய்திருக்கிறார் என்பதை யாரும் மறுக்க முடியாது. இதுவரை யாரும் கூறாத பல அரிய விளக்கங்கள் அவர் உரையிலே காணப்படுகின்றன. சிந்தனையைத் தூண்டித் திருக்குறளின் அருமையைத் தெரிவிக்கும் இவ்வுரை தந்த நாமக்கல் கவிஞரை நான் வாயார மனமாரப் போற்றுகிறேன்.

'சொல்லின் செல்வர்' திரு. ரா. பி. சேதுபிள்ளை :

தமிழ் மறை என்றும், பொதுமறை என்றும், அறிஞர்கள் அனைவரும் போற்றிப் புகழும் பெருமை சான்ற திருக்குறள் உலகுய்ய எழுந்த விழுமிய நூல்களுள் ஒன்று. அத்தகைய பாங்குடைய நூலுக்கு, முன் பதின்மர் உரை செய்தார் என்பர். இந்நாளில் 'கவிக்கு நாயகர்' எனச் சென்னை அரசாங்கத்தாரால் மதிக்கப் பெற்ற நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்கள் திருக்குறளுக்கு ஓர் புதிய உரை எழுதியுள்ளார். நூலாசிரியரின் உள்ளத்தை உள்ள வாறுணர்ந்து, சாதிக் கண்கொண்டும், சமயக் கண்கொண் டும், கட்சிக் கண்கொண்டும் காணாமல் சமன் செய்து சீர் தூக்கும் கோல் போன்ற உள்ளம் உரையாசிரியருக்கு இருக்க வேண்டுமென்ற உண்மையை நன்குணர்ந்த நாமக்கல் கவிஞர் 'எப்பொருள் யார்யார் வாய்க் கேட் பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பது அறிவு' என்னும் வாய்மொழியின் வழிநின்று முந்தையோர் உரை களை யெல்லாம் ஆராய்ந்து தம் புது உரையை மிக்கத் திறம்பட உரைக்கின்றார். எல்லோரும் அறிதற்குரிய எளிய நடையில் எடுத்துரைக்கும் கவிஞருடைய புதிய உரைக்

குத் தமிழகத்தார் நன்றி என்றும் உரியதாகும். கவிஞருரை அரங்கேறும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

பேராசிரியர், புலவரேறு

திரு. அ. வரதநஞ்சையபிள்ளை :

உலக மக்கள் அனைவருக்கும் எக்காலத்தும் மாறுபாடில்லாத அரும்பெரும் நீதிகளை வழங்கும் பொதுமறை ஒன்றே. அதுதான் தமிழ்த்தாய் தந்த திருக்குறளாம். இதற்கு முன்னர் தருமர், மணக்குடவர், பரிமேலழகர் முதலிய பதின்மர் உரை வகுத்தனர் எனினும் அந்நூலில் மதிக்கத் தகுந்த உண்மைகள் முழுதும் வெளிப்படவில்லையென்பது அறிஞர்கள் அறிந்ததொன்றே.

எனது அருமை நண்பரும், சென்னை ஆத்தானப் புலவரும் ஆகிய திருவாளர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள் புது உரை' மிகவும் போற்றத் தக்கது. அதிகார அடைவு முறை, முன்பின் பொருத்தம், எடுத்த கருத்திற் கியைபு முதலியவற்றை நினைவு கூர்ந்து புலவர் உள்ளம் பூரிக்கத் தக்கவாருக அவர் உரை செப்பும் நேர்மைக்கு வியப்புறுகிறேன். இந்த ஆராய்ச்சிஉரை முழுதும் நூலுருவில் வெளிப்பட்டுக் காட்சியளிக்கும் நன்னாளைக் காணப் பெரிதும் அவாவி எதிர் நோக்குகின்ருேம்.

பேராசிரியர் அ. சீநிவாசராகவன் :

நமது ஆஸ்தான கவிஞர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை அவர்கள் தமது ஆருத் தமிழ்க் காதலின் விளைவான ஆராய்ச்சியினால் திருக்குறளுக்கு மிகவும் புதுமையான உரைகண்டிருக்கிறார். அவர் தருகின்ற புதுஉரைப் பொருளில் தோய்ந்து இன்புறும் பாக்கியம் அந்நூல் அச்சாவதற்கு முன்பே கவிஞருடைய அன்பால் எனக்குக்

கிடைத்தது. அவ்வுரை வள்ளுவருடைய உள்ளத்தின் விசாலத்தையும் ஆழத்தையும் காண நமக்குக் கிடைத்துள்ள ஒரு புது சாளரம்.

கவிஞர் உள்ளத்தைக் கவிஞரே உணரக் கூடும் என்பது எவ்வளவு உண்மையானது என்பதை இவ்வுரையால் நான் நன்ருக அறிந்தேன்.

அறிவும், காந்தீய அடிப்படையில் தோன்றும் சமுதாய உணர்வும் சேர்ந்து சமைந்த மிகவும் புதிய கோணத்திலிருந்து நாமக்கல் கவிஞர் வள்ளுவரைக் காண்கின்ருர், அவர் காணும் காட்சியை மிகவும் இனிய நடையில். பழகும் தமிழில் நமக்குத் தருகின்ருர். வள்ளுவர் பெருமையில் இதுவரை நமக்குத் தோன்ருத பல புதிய அம்சங்கள் கவிஞர் உரையால் புலனுகின்றன. அதோடு நாமக்கல் கவிஞருடைய புலமையும், கனிந்த இதயமும் நமக்குக் கிடைக்கின்றன். வேறு என்ன வேண்டும் ?

திருக்குறள் புது உரை

1. அறத்துப்பால்

1. பாயிர இயல்

அதிகாரம் 1 - கடவுள் வாழ்த்து

(1.) அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

பத உரை : எழுத்து எல்லாம் = எழுத்துகள் எல்லாம், அகர முதல = 'அ' என்கிற எழுத்திலிருந்து ஆரம்பமாகின்றன, (அதுபோல) உலகு = இந்த உலகம், ஆதி பகவன் முதற்றே = எல்லாவற்றிற்கும் ஆதியாக உள்ள பகவானுகிய கடவுளிடத்திலிருந்துதான் ஆரம்பமாகிறது.

பொழிப்புரை : எல்லா எழுத்துக்களுக்கும் 'அ' என்ற எழுத்து மூலமாக இருப்பது போல இந்த உலகுக்கும் இதில் காணப் படும் எல்லாப் பொருள்களுக்கும் ஒரு மூலம் இருக்க வேண்டும். அந்த மூலத்தைத்தான் பகவான் அல்லது கடவுள் என்கிருேம்.

விளக்கம் : கடவுளைச் சுட்டிக்காட்ட எழுத்துகளை உவமானமாகச் சொல்லப்பட்டிருப்பதில் ஒரு அருமை தோன்றுகின்றது. என்னவெனில் : இந்த நூல் எழுத்துகளால் ஆக்கப் பட்டிருக்கிறது. ஒரு கருத்தை வெளியிட 'சொல்' வேண்டும். வெறும் வாய்ச்சொல் கேட்டவனுக்குத்தான் பயன் படும். சொல்லைச் சொன்னவன் இல்லாத இடத்திலும், இல்லாத காலத்திலும் பிறர் அறிந்து பயனடையும்படி செய்வதற்கு எழுத்துதான் வேண்டும். எழுத்துக்கள் அகரத்திலிருந்து ஆரம்பமாகின்றன. 'அ' என்ற எழுத்திலிருந்து புறப்பட்ட மற்ற எழுத்துகளும் சேர்ந்ததிலிருந்து இந்த நூலும் இதிலுள்ள எண்ணிறந்த கருத்துகளும் விரிந்திருக்கின்றன.

எழுத்தைக்கொண்டு எழுதினவனை எண்ணிப் பார்க்கிருேம். அதே போல உலகத்தைக் கொண்டு அதை உண்டாக்கினவனை எண்ணவேண்டும் – என்பது கருத்து.

அப்படி எண்ணுமல் பல நூல்களைக் கற்றவர்களிலும் கூட அநேகர் அவனை வணங்க மறுக்கிருர்களே :

2. கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்ருள் தொழாஅ ரெனின்.

ப. ரை: வால் அறிவன் = தூய அறிவாக இருக்கின்ற பகவானுடைய, நல்தாள் தொழாஅர் எனின் = நன்மை பயக்கத் தகுந்த பாதங்களை வணங்கமாட்டார் என்ருல், கற்றதனல் ஆய பயன் என்கொல் = அவர்கள் கல்வி கற்றதனல் அடைந்த பலன் என்னவோ தெரியவில்லை.

பொ. ரை: நன்ருகப் படித்தவர்களாக இருந்தும் அறிவுக்கெல்லாம் அறிவாக இருக்கின்ற பகவானுக்கு வணக்கம் செலுத்த மறுக்கின்றவர்களும் இருக்கிருர்களே! அவர்கள் படித்த படிப்பு என்ன படிப்பு?

வி-ம்: கல்வி கற்பது அறிவுக்காக. நாம் எவ்வளவு கல்வி கற்ருலும் அதிலிருந்து அறிந்துகொண்ட அறிவுக்கு மேல் இன்னும் அறியவேண்டிய அறிவு இருந்துகொண்டே இருக்கிறது. அந்த அறிவின் எல்லை எங்கே முடிகிறது என்று நாடுகின்ற போது அது நாமறிந்த அறிவுக்கு எட்டாததாக இருக்கிறது. ஆகவே நாம் அறிந்து கொள்ள முடியாத அறிவு இருந்து கொண்டே இருப்பது மட்டும் நிச்சயமாகத் தெரிகிறது. நம் அறிவுக்கு எட்டாத அந்த அறிவின் பூரணத்தைத்தான் 'வாலறிவன்' என்றும் 'பகவன்' என்றும் சொல்லுகிருேம். அந்த 'பகவான்' என்ற பூரண அறிவிற்கு மிக மிகவும் குறைந்ததுதான், நம்முடைய அறிவு என்பதை ஒப்புக்கொள்ளாவிட்டால் நாம் கற்ற கல்வியின் பயன் என்னவோ! ஒப்புக்கொண்டால் அதற்கு வணங்க வேண்டும் – என்பது கருத்து.

அந்த பகவான் எங்கே இருக்கிருன் என்ருல்:

3. மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்.

ப. ரை: மலர்மிசை ஏகினுன் = நம்முடைய மனத்தாமரையில் நம்முடன் கூடவே வந்தவன், மாண் அடி சேர்ந்தார் = மிகச் சிறந்த சரணத்தை அடைந்தவர்கள், நிலம் மிசை = உலக வாழ்வில், நீடு வாழ்வார் = பெருக்கத்தோடு சுகமாக இருப்பார்கள்.

பொ. ரை: (அந்தபகவானை வேறெங்கும் தேடவேண்டியதில்லை) அவன் நம்முடைய மனதில் நம் கூடவே பிறந்தவன். (மனச் சாட்சியாக விளங்கும்) அவனிடம் அடைக்கலம் புகுந்தவர்கள் (உலகத்தில்) சுகமாக வாழ்வார்கள்.

வி-ம்: (கடவுள் என்ற ஒரு உண்மை நம்முடைய மனதில் தோன்றி நம்முடைய மனச்சாட்சிக்கு மட்டும் தெரிகிற பொருள். வேறெங்கும் அதைக்காண முடியாது. ஆதலால் நம்முடைய மனச்சாட்சிக்கு நாம் வணங்கி சரண் புகுந்தால் அந்த பகவானுடைய அருள் பெறலாம். அதனால் சுகம் அடைய முடியும் - என்பது கருத்து.)

அந்த பகவானை எப்படி வணங்கவேண்டும் என்றால்:

4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

ப. ரை: வேண்டுதல் வேண்டாமை இலான்=விருப்பு வெறுப்பு இல்லாதவனாகிய பகவானுடைய, அடி சேர்ந்தார்க்கு= பாதத்தை கதியென்று சேர்கின்றவர்களுக்கு, யாண்டும்= எந்தக் காலத்திலும், இடும்பை இல=துன்பம் இல்லை.

பொ. ரை: வேண்டியவன் வேண்டாதவன் என்று வேற்றுமை பாராட்டாமல், தன்னைச் சரணமென்று அடைந்தவர்கள் எல்லாருக்கும் அருள் செய்பவனாகிய பகவானை, வணங்குகிறவர்களை எந்தக் காலத்திலும் துன்பம் பாதிக்காது.

வி-ம்: பகவான் விருப்பு வெறுப்பு இல்லாத குணத்தின் பூரணம். நாமும் விருப்பு வெறுப்பில்லாமல் அவனை வணங்கினால்தான் அவனுடைய அருளை அனுபவிக்க முடியும். அதாவது அந்த பகவான் நமக்கு ஒரு நன்மை செய்ய வேண்டுமென்று கோரியோ அல்லது நாம் விரும்பாத இன்னொருவனுக்கு ஒரு தீமை செய்ய வேண்டும் என்று கோரியோ வணங்கக் கூடாது — என்பது கருத்து.

அப்படி விருப்பு வெறுப்பில்லாமல் பகவானைச் சரண்புகுந்தால்:

5. இருள்சே ரிருவினையும் சேரா விறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

ப. ரை: இறைவன்=எல்லா உயிர்களுக்கும் தந்தையானவன் கடவுள் என்பதன், பொருள்சேர்= அர்த்தமாகிய விருப்பு வெறுப்பு இல்லாததான, புகழ் புரிந்தார் மாட்டு=பெருமையை விரும்பி அவனை வணங்குகிறவர்களிடத்தில், இருள் சேர்=அறியாமையைச் சேர்ந்த, இரு வினையும் சேரா=நல்வினை தீவினை என்ற இரண்டு வினைகளும் சேரமாட்டா.

பொ. ரை: இறைவன் எல்லா உயிர்களுக்கும் தந்தை. அதனால் வேண்டுதல் வேண்டாமை இல்லாமல் எல்லாரையும் சமமாகக் கருதிக் காக்கிறான். அந்த பெரும் புகழை உணர்ந்து,

அவனை வணங்குகிறவர்களை அஞ்ஞானத்தால் வருகிற நல்வினை தீவினை என்னும் இரண்டு வினைகளும் தொடரமாட்டா.

வி-ம்: விருப்பு வெறுப்பு என்ற அஞ்ஞானத்திலிருந்துதான் நல்வினை தீவினை என்ற இரண்டு வினைகளும் தொடர்கின்றன. விருப்பு வெறுப்பு இல்லாததனால்தான் இறைவன் ஞானமயமாக விளங்குகிறான். ஆகையினால் அந்த ஞானத்தை அனுபவிக்க நாமும் விருப்பு வெறுப்புகளை விலக்கி இறைவனை வணங்க வேண்டும் – என்பது கருத்து.

விருப்பு வெறுப்புகளை விலக்குவதற்கு அவற்றிற்குக் காரணமான பஞ்சேந்திரிய ஆசைகளைக் குறைக்க வேண்டும். அதற்கு:

6. பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வார்.

ப. ரை: பொறிவாயில் ஐந்து அவித்தான்=மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து இந்திரிய ஆசைகளும் இல்லாதவனான இறைவனுடைய, பொய்தீர்=பொய்த்தல் அறியாத, ஒழுக்கநெறி நின்றார்=ஒழுங்கான இயல்பை உணர்ந்து நடக்கின்றவர்கள், நீடுவாழ்வார்=சுகமாக வாழ்க்கை நடத்துவார்கள்.

பொ. ரை: பஞ்சேந்திரிய ஆசைகள் என்பதே இல்லாத இயல்பினன் பகவான். பொய்த்தல் இல்லாத அந்த இயல்பை உணர்ந்து அதற்கான நல்லொழுக்கத்தைக் கடைப்பிடித்து நடக்கின்றவர்கள், அந்த இயல்பின் பரிபூரண அருளுக்குப் பாத்திரர் ஆவார்கள்.

வி-ம்: இந்திரிய ஆசைகளே இல்லாமல் சத்திய இயல்பான பகவானுடைய அருளை அடைவதற்கு நாமும் இந்திரிய ஆசைகளை அடக்க வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு அந்த நன்னெறியைப் பின்பற்றுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்வாழ்வு கிடைக்கும் – என்பது கருத்து.

முற்றிலும் இந்திரிய நிக்ரகம் செய்து, அதனால் வரக்கூடிய பெரும் பயன்களை எண்ணி முயற்சி செய்ய முடியாவிட்டாலும், உலக வாழ்க்கையில் நமக்கு அடிக்கடி வருகிற மனக்கவலைகளை மாற்றுவதற்காகவேனும்:

7. தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிது.

ப. ரை: தனக்கு உவமை இல்லாதான்=வேறு எவரும் தனக்கு இணை இல்லாதவனாகிய பகவானுடைய, தாள் சேர்ந்தார்க்கு

அல்லால்=சரணுகதி அடைந்தவர்களுக்கு அல்லாமல் மற்றவர்களுக்கு, மனக்கவலை மாற்றல் அரிது=மனக்கவலைகளை போக்கிக் கொள்வது முடியாது.

பொ. ரை: எல்லாம் வல்ல தன்மையினுல் தனக்கு நிகரானவர் வேறு எவருமில்லாதவனுகிய இறைவனிடத்தில் சரண்புகுந்தவர்கள்தாம் தங்களுக்கு வந்த மனக் கவலையைப் போக்கிக் கொள்ள முடியும். மற்றவர்களுக்கு முடியாது.

வி-ம்: நமக்கு ஒரு மனக்கவலை வந்தால் அதைப் போக்கிக் கொள்ள நம்மைக் காட்டிலும் சிறந்தவனை வேருெருவனிடம் போகிருேம். அவன் காலில் விழுந்து கூடக்கேட்டுக் கொள்ளுகிருேம். அவனுல் அது முடியவில்லையானுல் அவனைக் காட்டிலும் சிறந்தவனென்று இன்னெருவனிடம் அடைக்கலம் புகுகின்ருேம். இப்படிப் பலரிடத்தில் சென்றும் நம் மனக்கவலை நீங்காதபோது இந்த எல்லாருக்கும் மேலாக, அவனுக்கு மேல் எவ்ரும் இல்லாதவனை இறைவனிடத்தில் சரணுகதி அடைந்தால்தான் அந்த மனக்கவலை மாறும் என்பது கருத்து.

அது ஏன் என்ருல்:

8. அறவாழி அந்தணன் ருள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்த லரிது.

ப. ரை; அற ஆழி=தர்மங்களெல்லாம் தங்கியிருக்கும் சமுத்திரம் போன்ற, அந்தணன்=அமைதி மயமான பகவானுடைய, தாள் சேர்ந்தார்க்கு அல்லால்=பாதங்களில் அடைக்கலம் புகுந்தவர்களுக்கு அல்லாமல் (மற்றவர்களுக்கு), பிற ஆழி=அறங்களுக்கு மாருன மறம் எனப்படுகிற துன்ப சமுத்திரத்திலிருந்து, நீந்தல் அரிது=நீந்திக் கரை சேர்வது முடியாது.

பொ. ரை: தர்மங்கள் நிறைந்த சமுத்திரம் போன்று சாந்த மயமாக இருக்கிற இறைவனிடத்தில் சரணுகதி அடைகிறவர்களைத்தவிர மற்றவர்கள் அதர்மம் நிறைந்த சமுத்திரம் போல் இருக்கிற உலக துன்பக் கவலைகளை நீந்தி நிம்மதி அடைய முடியாது.

வி-ம்: இறைவன் தர்மங்களின் சமுத்திரம். ஆனுல் சாதாரண சமுத்திரம்போல் அலைமோதிக்கொண்டு அமைதியற்ற சமுத்திரம் அல்ல. அசைவில்லாத சாந்தமயமான சமுத்திரம். அந்த சமுத்திரத்தை அணுகினுல் நமக்கு அற உணர்ச்சியும் அமைதியும் கிடைக்கும். அதனுல் (அற ஆழியல்லாத பிற ஆழியான) மற ஆழி என்ற உலக துன்பங்களை நீந்தி மனக் கவலைகளை மாற்றிக்கொள்ளலாம்.

('பிறவாழி நீந்தல்' என்பதற்கு அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் அறத்தை நீக்கிய பிற என்பதைக்காட்டிலும் அறத்துக்கு மாறுன மறம் என்று கொள்ளுவது மேல்.)

இதுவரை சொல்லப்பட்டவைகளை எண்ணிப் பார்த்து, நமக்குமேல் ஒரு பகவான் இருக்கிறுன் என்பதை உணர்ந்து அந்த பகவானுக்கு வணக்கம் செய்யாவிட்டால் :

**9. கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றுளை வணங்காத் தலை.**

ப. ரை : எண்குணத்தான்=எட்டு குணங்களும் ஒருங்கே உடையவனுகிய பகவானின், தாளை வணங்கா தலை=பாதத்தை வணங்காதவருடைய தலைகள், கோள் இல்=ஏற்றுக்கொள்ளும் தன்மை இல்லாத, பொறியின் = மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய கருவிகளைப் போல், குணமிலவே = பயனற்றவைகளே யாகும்.

பொ. ரை: எண்ணத்தகுந்த சகல நற்குணங்களும் அடங்கினவாகிய எட்டு குணங்களும் ஒருமிக்க உடையவனுன கடவுளின் பாதங்களை வணங்காத தலைகள், தாம் செய்ய வேண்டிய வேலையைச் செய்ய முடியாத மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐந்து புலன்களைப் போலவே செய்ய வேண்டிய வேலையைச் செய்யச் சக்தியில்லாதவை.

வி - ம் : சகல குணங்களுக்கும் இருப்பிடமானவன் பகவான் என்பதை உணர்ந்து அவனுக்கு வணக்கம் செலுத்தவேண்டும் என்று அறியாதவனுடைய மூளை, தொட்டால் உணராத உடம்பு போலவும், பேச்சும் ருசியும் அறியாத வாய் போலவும், பார்வை இல்லாத கண் போலவும், வாசனை அறியாத மூக்குப் போலவும், கேளாத செவிட்டுக் காது போலவும் இருந்தும் இல்லாததுதான். தலையினுடைய வேலை சிந்தித்துப் பார்க்க வேண்டியது. சிந்தித்துப் பார்க்கிற தலை கடவுளை வணங்கும்—என்பது கருத்து.

இறைவனுக்கே உள்ளனவாகச் சொல்லப்படுகிற எட்டு குணங்களாவன : (1) தன்வயத்தனுதல் (2) தூய உடம்பினனுதல் (3) இயற்கை உணர்வினனுதல் (4) முற்றும் உணர்தல் (5) பாசங்களால் பந்தப்படாதிருத்தல் (6) பேரருளுடைமை (7) எல்லையில்லாத வல்லவனுயிருத்தல் (8) சச்சிதானந்த மயமாயிருத்தல். மனிதனுடைய மூளை சிந்திக்க முடிகிற உயர் குணங்கள் இநத எட்டு குணங்களைத் தவிர வேறில்லை. அப்படி சிந்திக்கிறவர்கள் வணங்கினுலும் சரி, சிந்திக்காதவர்கள் வணங்காவிட்டாலும் சரி உண்மை என்னவெனில் :

10. பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவ னடிசேரா தார்.

ப. ரை: பிறவி பெரும் கடல் நீந்துவர் = (மக்கள் எல்லாரும்) பிறவி என்ற பெரிய சமுத்திரத்தில் நீந்திக் கொண்டிருக்கிறவர்கள். இறைவன் அடி சேராதவர் நீந்தார் = அவர்களுக்குள் பகவானிடம் சரணுகதி அடையாதவர்கள் நீந்திக் கரையேற மாட்டார்கள்.

பொ. ரை: பிறவி என்பது பெரிய சமுத்திரம். மனிதர்கள் எல்லாம் அதில் நீந்தி தத்தளித்துக் கொண்டிருக்கிறவர்கள். அவர்களுள் பகவானை நினைத்து அவனுக்குள் அடைக்கலம் புகுகின்றவர்கள், அவனுடைய அருளாகிய தெப்பத்தைப் பிடித்துக்கொண்டு நீந்திக் கரையேறுவார்கள். மற்றவர்கள் கரையறியமாட்டாமல் மீண்டும் மீண்டும் முழுகி முழுகித் தத்தளித்துக் கொண்டே இருப்பார்கள்.

வி-ம்: சமுத்திரத்தில் நீந்துவது மிகவும் கஷ்டமான காரியம். அடுத்தடுத்துப் பல அலைகள் வந்து மோதி மூச்சுத்திணறும். அதுபோல் நம்முடைய பிறப்பில் பல துன்பங்கள் அடுத்தடுத்து வந்து அழுத்தும். தெய்வ நம்பிக்கையை விடாமல் அவனே கதி என்று அவனிடம் சரண் அடைந்தவர்கள் தாம் அத்துன்பங்களைச் சமாளிப்பார்கள். மற்றவர்கள் மன முடைந்து முழுகிவிடுவார்கள்—என்பது கருத்து.

அதிகாரம் 2—வான்சிறப்பு

[வான் சிறப்பு = மழையின் பெருமை. மழை, கடவுள் என்ற ஒரு சக்தியை நினைப்பூட்டுகிறது. மழையினால் உலகம் அடைகிற நன்மையை எண்ணி, அந்த மழை இல்லாவிட்டால் உலகத்தில் உயிர்கள் படவேண்டிய துன்பத்தையும் நினைத்து, அந்த மழையைத் தருகிற வல்லமையை வியந்து பாராட்டுகிறோம். அதனால் கடவுள் வணக்கத்துக்கு அடுத்ததாக வான் சிறப்பு சொல்லுகிறார். வானத்திலிருந்து பெய்வதால் 'வான்' என்பது 'மழை' என்ற பொருள் பெற்றது.]

11. வானின் றுலகம் வழங்கி வருதலாற்
றானமிழ்த மென்றுணரற் பாற்று.

ப. ரை: வான் நின்று = மழை பெய்வதிலிருந்து, உலகம் வழங்கி வருதலால் தான் = உலகம் நடைபெற்று வருகிற காரணத்தால் தான், அமிழ்தம் என்று உணரல் பாற்று = அந்த மழையை அமிர்தம் என்று எண்ண வேண்டியிருக்கிறது.

பொ. ரை: மழை பெய்வதால்தான் உலகில் உயிர்கள் இருந்து வருகின்றன. அதனால் மழையை அமிர்தமாகப் பாராட்ட வேண்டியிருக்கிறது.

வி-ம்: அமிர்தம் என்பது அதை உண்டவர்களை அழிவில்லாமல் இருக்கச் செய்யக் கூடியது. மழையினால்தான் உலகத்தில் உயிர்கள் இருந்துகொண்டே இருக்கும்படி உலகம் நடைபெறுகிறது. அதனால் மழை உலகத்துக்கு அமிர்தம் போன்றது.

அது எப்படி எனில்:

12. துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத்
துப்பாய தூஉ மழை.

ப. ரை: துப்பார்க்கு = உணவு உண்டே உயிர் வாழவேண்டிய மனிதர்களுக்கு, துப்பாய = வேண்டிய உணவுப் பொருள்களை, துப்பாக்கி = உண்டாக்கித்தந்து, துப்பார்க்கு = அவர்கள் உணவு உண்ணும்போது, துப்பாய தூஉம் = தானும் ஒரு உணவாக உதவுவதும், மழை = மழைதான்.

பொ. ரை: உணவில்லாமல் உயிர்வாழ முடியாத மனிதர்களுக்குத் தேவையான உணவுப் பொருள்களை விளையச் செய்வதும் உணவை உண்ணும்போது அத்யாவசியமான அனுபானமாகிய குடி தண்ணீராக உதவுவதும் மழைதான்.

வி-ம்: பசியும் தாகமும் எல்லா ஜீவராசிகளுக்கும் உண்டு. உணவும் தண்ணீரும் அவைகளுக்கும் வேண்டியதே. என்றாலும் மற்ற உயிர்கள் மழையின் பெருமையை உணரவும் முடியாது, அவைகள் உணரவேண்டுமென்பதும் இங்கே நோக்கமல்ல. ஆதலால் மனிதர்களைக் குறித்தே சொல்லப்பட்டிருக்கிறது. மனிதனுக்கு உணவுப் பொருள்களை விளைவிப்பதும் அவற்றை உணவாக சமைத்து உண்ணும்போது உண்ணீராக உதவுவதும் எல்லாம் தண்ணீரே. அத்தண்ணீர் மழையினால் தான் உண்டு—என்பது கருத்து.

வானம் மழை பொழியாவிட்டால் உணவு கிடைக்காது:

13. விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்
துண்ணின் றுடற்றும் பசி.

ப. ரை: விண் இன்று பொய்ப்பின் = ஆகாயம் மழை பெய்வது இல்லாமல் பொய்யாகிவிடுமானால், விரி நீர் வியன் உலகத்து = விரிந்த கடலால் சூழப்பட்டதென்ற பெருமை

உடைய இந்த உலகத்தில், உள் நின்று பசி உடற்றும் = உள் நாடுகளில் பசியென்பது தோன்றி உயிர்களை வதைக்கும்.

பொ. ரை: இந்த உலகம் விரிந்த கடலால் சூழப்பட்டிருக்கிறது என்ற பெருமை உடையதானாலும் மழை பெய்யாவிட்டால் உள் நாடுகளில் பசிப்பிணி ஏற்பட்டு உயிர்களை வதைக்கும்.

வி-ம்: உலகம் மிகப்பெரிய சமுத்திரத்தால் சூழப்பட்டிருக்கிறது என்றாலும் அந்த சமுத்திரத்திலுள்ள நீர் உள் நாடுகளுக்கு உதவாது. மழை பெய்யாவிட்டால் கடலோரங்களிலுள்ள உயிர்கள் ஓரளவு பசியாறிக்கொள்ள முடிந்தாலும், உள் நாடுகளிலுள்ள மனிதர்களும் மற்ற உயிர்களும் உணவில்லாமல் பசியால் துன்புற்று மடிந்துவிடுவார்கள். 'உள் நின்று' என்பது உள் நாடுகளில்.

எப்படி என்றால்:

14. ஏரி னுழாஅ ருழவர் புயலென்னும்
வாரி வளங்குன்றிக் கால்.

ப. ரை: புயல் என்னும் = மழை என்கிற, வாரிவளம் = நீர் வளம், குன்றி (ய)க்கால் = இல்லாது போனால், உழவர் ஏரின் உழாஅர் = உழவர்கள் கலப்பை கொண்டு உழவு செய்யமாட்டார்கள்.

பொ. ரை: மழை பெய்வதனால் கிடைக்கக் கூடிய நீர்வளம் இல்லாமல் உழவர்கள் கலப்பை கொண்டு உழுது பயிரிட்டு உணவுப் பொருள்களை விளைவிக்க முடியாது.

வி-ம்: உழுது பயிர் செய்யாமல் உணவுப் பொருள்கள் கிடைக்கா. உழவுத் தொழில் நீர்வளமில்லாமல் முடியாது மழையில்லாமல் நீர்வளம் இருக்க முடியாது. ஆகையினால் உள் நாடுகளில் உழவு நடக்காது. அதனால் உணவு கிடைக்காது. அதனால் பசி உயிர்களை வதைக்கும் — என்பது கருத்து.

ஆகையினால்:

15. கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉ மெல்லா மழை.

ப. ரை: கெடுப்பதூஉம் = பெய்யாதிருந்து உலக மக்களுக்குக் கெடுதி செய்வதும், கெட்டார்க்கு சார்வாய் மற்று ஆங்கே எடுப்பதூஉம் = அப்படி மழையில்லாமல் துன்பப்படுகிற உலகத்தாருக்கு உதவியாக வந்து உடனே அவர்களைக் கை தூக்கி விடுவதும், எல்லாம் மழை = எல்லாம் மழைதான்.

பொ. ரை: பெய்யாமல் இருந்து உலக மக்களுக்குக் கெடுதி உண்டாக்குவதும், எதிர்பாராத போதும் திடீரென்று பெய்து அவர்களைக் கைதூக்கிவிடுவதும் எல்லாம் மழைதான்.

வி-ம்: மழை இல்லாவிடில் உழவு நடக்காது. உழவில்லாவிடில் உணவு கிடைக்காது. அதனால் மக்களுக்குக் கேடுண்டாகிறது. திடீரென்று மழை பெய்கிறது. உடனே உழவு நடக்கிறது. உணவுப் பஞ்சம் நீங்குகிறது. துன்பத்திலிருந்து தூக்கிவிடப்பட்டவர்கள்போல மக்கள் செழிப்படைகிறார்கள். அதனால் கெடுப்பதும் மழைதான். கெட்டுப்போன சமயத்தில் கைகொடுத்து எடுப்பதும் மழைதான்.

பயிர் செய்து கிடைக்கிற உணவு தானியங்களுக்காக உழவு செய்யத்தான் மழைவேண்டியிருக்கிறதே. உழவு செய்யாமல் தானாகவே உற்பத்தியாகிற எதையாவது உண்டு கேடில்லாமல் இருக்கலாமே என்றாலும்:

16. விசும்பிற் றுளிவீழி னல்லான்மற் றாங்கே
பசும்புற் றலைகாண் பரிது.

ப. ரை: விசும்பின் துளி = ஆகாயத்தின் மழைத்துளி, வீழின் அல்லால் = விழுந்தால் அல்லாமல், பசும்புல் தலை காண்பு அரிது = பச்சைப்புல்லின் நுனியைக்கூட பார்க்கமுடியாது.

பொ. ரை: ஆகாயத்திலிருந்து மழைத்துளி விழுந்தாலல்லாமல் பூமியில் பச்சைப்புல்கூட தலைகாட்டாது.

வி-ம்: நீர்ப்பசையுடன் ஈரமுள்ள பொருள்தான் உணவுக்கு உதவும். மழைத்துளி விழாமல் பச்சைப்புல்கூட தலைகாட்டாது. அப்படியிருக்க மரம் செடி கொடிகள்தாம் ஏது? எதைத்தின்று உயிர் வாழ முடியும்? — என்பது கருத்து.

அதுமட்டுமா!:

17. நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றுந் தடிந்தெழிலி
தானல்கா தாகி விடின்.

ப. ரை: எழிலி = மேகமானது, தடிந்து தான் நல்காது ஆகி விடின் = மின்னி தானாகவே மழையைக் கொடுக்காமற் போய் விட்டால், நெடுங்கடலும் = பெரிய சமுத்திரம்கூட, தன் நீர்மை குன்றும் = தன்னுடைய நீர் அளவில் குறைந்து போகும்.

பொ. ரை: தருமாகவே மேகங்கள் ஒன்றோடொன்று சேர்ந்து இடி இடித்து மின்னல் மின்னி மழை பெய்யாவிட்டால், பிரம

மாண்டமான சமுத்திரமும் தன்னுடைய நீரளவில் குறைந்து போகும்.

வி-ம்: கடலில் உள்ள நீர்தான் ஆவியாக மாறி மேகங்களாக ஆகாயத்தில் சஞ்சரிக்கிறது. அந்த மேகங்கள் இடி மின்னலுடன் ஒன்றோடொன்று சேர்ந்தால்தான் மழை பெய்யும். அப்படி அவைகள் சேராமலிருந்துவிட்டால் மழை பெய்யாது ஆறுகள் ஓடா. ஆவியாகப் பிரிந்து போன நீர் மறுபடியும் கடலைச் சேராது. அதனால் கடலின் நீர் குறைந்து கடல் வற்றிப்போகவும் கூடும்—என்பது கருத்து.

ஆனால் மேகங்கள் அப்படிச் செய்வதில்லை. ஏதோ ஒரு சக்தி, அதன் இஷ்டப்படி அந்த மேகங்களைச் சேர்த்து மழையாகப் பெய்யச் செய்கிறது. அந்த சக்தியை நாம் வானவர்கள் என்று வணங்குகிறோம். மேகங்கள் மழையாகப் பெய்யாவிட்டால்:

18. சிறப்பொடு பூசனை செல்லாது வானம்
வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.

ப. ரை: வானம் வறக்குமேல்=ஆகாயம் மழை பெய்யாமல் வறண்டு போனால், ஈண்டு=இந்த உலகத்தில், வானோர்க்கும்=வானவர்கள் எனப்படும் தேவர்களுக்கும் கூட, சிறப்பொடு பூசனை செல்லாது=சிறப்புகளும் பூசைகளும் நடக்கா.

பொ. ரை: வானத்திலிருந்து மழை பெய்யாவிட்டால் இங்குள்ள மக்கள் வானவர்களுக்குச் சிறப்புகளும் பூசைகளும் செய்யமாட்டார்கள்.

வி-ம்: வானத்தில் சஞ்சரிக்கிற மேகங்களை மின்னலுடன் மழையாகப் பெய்யச் செய்கிறவர்கள் வானத்திலுள்ள தேவர்கள்தாம் என்பதும் தேவர்களுக்குத் தலைவனான இந்திரன் மின்னல் என்கிற தன்னுடைய வயிர ஆயுதத்தால் மேகங்களை இடித்து மழையாகப் பெய்யச் செய்வதாகவும் நம்பிக்கை. அதனால் மழைக்காக ஜனங்கள் இந்திர விழாக் கொண்டாடி இந்திரனுக்கும் தேவர்களுக்கும் சிறப்புகள் பாடி பூசைகள் நடத்துவதுண்டு. மழையில்லாவிட்டால் அந்த சிறப்பும் பூசனையும் நடக்காது. வானத்திலிருந்து மழை வருவதால் அதைப் பெய்யச் செய்யும் தேவர்களை 'வானோர்' என்று வணங்குகிறோம்—என்பது கருத்து.

மழையில்லாவிட்டால் வானவர்களுக்குச் சிறப்பும் பூசைகளும் நடக்காது என்பது மட்டுமல்ல. மழையில்லாவிட்டால் புண்ணியம் செய்வதும் ஆன்ம விசாரணையும் இருக்காது. எப்படியெனில்:

19. தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம்
வானம் வழங்கா தெனின்.

ப. ரை: வானம் வழங்காது எனின் = ஆகாயம் மழையைக் கொடுக்காவிட்டால். வியன் உலகம் = பரந்த உலகத்தில். தானம் தவம் இரண்டும் தங்கா = தானம் கொடுப்பதும் தவம் செய்வதும் ஆகிய இரண்டும் இருக்கமாட்டா.

பொ. ரை: மழை இல்லாவிட்டால் விஸ்தாரமான இந்த உலகத்தில் எந்த இடத்திலும் தானம் கொடுக்கிற புண்ணிய எண்ணமும் தவம் செய்ய வேண்டுமென்ற ஆன்ம உணர்ச்சியும் இருக்கமாட்டா.

வி-ம்: மழை பெய்து, உணவுப் பொருள்கள் மலிந்து, நிம்மதி ஏற்பட்ட பிறகுதான் புண்ணிய எண்ணமும் ஆன்ம விசாரணையும் உதிக்கும். ஆதலால் மழையில்லாவிடில் தானங்கொடுப்பதும் தவம் செய்வதும் உலகத்தில் இருக்காது. என்பது கருத்து.

உணவுக்கு மட்டும் என்றாலும் சரி, வானவர் பூசைக்காலும் சரி, புண்ணியம் செய்வதற்கானாலும் சரி, மற்றும் வேறு எதற்கானாலும் சரி:

20. நீரின் றமையா துலகெனின் யார்யார்க்கும்
வானின் றமையா தொழுக்கு.

ப. ரை: நீர் இன்று உலகு அமையாது = தண்ணீர் இல்லாமல் உலகம் நடைபெறாது. எனின் = ஆயின், யார்யார்க்கும் = எப்படிப்பட்டவர்களுக்கும், வான் இன்று = மழை இல்லாமல், ஒழுக்கு அமையாது = நீர் ஊற்று கிடைக்காது.

பொ. ரை: நீர் இல்லாமல் உலகம் நடைபெற முடியாது. அந்த நீரும் எப்படியெப்படியெல்லாம் முயன்றாலும் மழை இல்லாமல் கிடைக்காது.

வி-ம்: 'யார்யார்க்கும்' மழையில்லாமல் நீர் கிடைக்காது என்றால், தண்ணீருக்காக ஆற்றில் அணைகட்டி வாய்க்கால் வெட்டினாலும் சரி, குழாய் வைத்துத் தண்ணீர் கொண்டுவர முயன்றாலும் சரி, கிணறு வெட்டி ஊற்று நீர் தேடினாலும் சரி, மழை பெய்யாமல் ஆற்று நீரும் கிடைக்காது. ஊற்று நீரும் கிடைக்காது.

அதி. 3—நீத்தார்பெருமை

[நீத்தார் — ஆசை பாசங்களை நீக்கிய வாழ்க்கை நடத்தி உலக நிலைத்துக்கு வழிகாட்டிய மகான்கள்...கடவுள் வணக்கம் சொல்லி, கடவுளைக் காட்டும் மழையின் பெருமையைச் சொல்லி, அதற்கடுத்ததாகக் கடவுள் நினைவோடுவாழ்ந்து வழிகாட்டிய நீத்தார் பெருமையை நினைப்பூட்டுகிறார்.]

21. **ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து**
வேண்டும் பனுவற் றுணிவு.

ப. ரை : ஒழுக்கத்து நீத்தார் பெருமை—ஒழுக்கம் தவறாமல் ஆசாபாசங்களை நீக்கி வாழ்ந்தவர்களுடைய பெருமையை (என்னுவது). விழுப்பத்து = நன்மை தரத்தக்கது. பனுவல் துணிவு = நூலைத் தொடங்கும் போது. வேண்டும் — அதை நினைக்க வேண்டும்.

பொ. ரை : ஒழுக்கம் தவறுதல் ஆசாபாசங்களின் பற்றுகளை நீக்கி வாழ்ந்தவர்களான மகான்களின் பெருமையைப் போற்றுவது நன்மை தரக்கூடியது. நூலின் ஆரம்பத்தில் அதை நினைக்க வேண்டும்.

வி-ம் : இந்த (திருக்குறள்) நூல், அறம், பொருள், இன்பம் என்ற மூன்றையும் விஸ்தரிப்பது என்றாலும் அறம் என்பதன் அடிப்படையில்தான் மற்ற எல்லாம் சொல்லப்படுகின்றன. அறம் என்பதில் ஆரம்பமாகிறது. ஆகையால் அந்த அறத்தைச் சொல்லுமுன் அந்த அறத்தை வாழ்ந்து காட்டிய நீத்தார் பெருமையை நினைக்கச் சொல்லுகிறார்.

அந்த நீத்தார் பெருமையை நினைத்துத்தான் பார்க்க வேண்டுமே யல்லாமல் சொல்லால் அளக்க முடியாது :

22. **துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்**
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

ப. ரை : துறந்தார் பெருமை துணை கூறின் = ஆசா பாசங்களை விலக்கி வாழ்ந்தவர்களுடைய பெருமையை அளந்து சொல்லப் புகுந்தால் அது. வையத்து இறந்தாரை எண்ணிக் கொண்டு அற்று = இந்த உலகத்தில் இறந்தவர்கள் எத்தனை பேர் என்று கணக்கெண்ணப் புகுவது போல் ஆகும்.

பொ. ரை : நீத்தார் பெருமையின் அளவு சொல்லப் புகுவது, இது வரையிலும் இந்த உலகத்தில் பிறந்து இறந்துபோனவர்கள் எத்தனை பேர் என்று கணக்கிடப் புகுவதை ஒக்கும்.

வி - ம்: இந்தக் குறளில் இருக்கிற 'துறந்தார்' என்ற பத துக்குத் துறவறத்தில் சொல்லப்படுகிற துறவி அல் இல்லற வாழ்க்கையிலும் பற்றற்று வாழ்ந்த நீத்தார் உள் பிறக்காமல் இறக்கமுடியாது. அதனால் 'இறந்தாரை' என்று

இப்படிப் பிறப்பதையும் இறப்பதையும் சிந்தித்து பார்த்து :

23. இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டார்
பெருமை பிறங்கிற் றுலகு.

ப. ரை : இருமை வகை = பிறப்பதும் இறப்பதுமாகிய இந் இரண்டையும் அந்த வகையைச் சேர்ந்த தத்துவங்களையும். தெரிந்து = ஆராய்ந்து அறிந்து, ஈண்டு அறம் பூண்டார் = இந் தப் பிறப்பில் தர்மமான வாழ்க்கையை நடத்தியவர்களாகிய நீத்தார்களுடைய, பெருமை பிறங்கிற்று உலகு = பெருமை யினால்தான் உலகம் பிரகாசம் அடைந்திருக்கிறது.

பொ. ரை : பிறப்பதும் இறப்பதும் ஏன் என்பதையும் அதை ஒட்டிய மற்ற விஷயங்களையும் சிந்தித்து ஆராய்ந்து அறிந்து, அந்த அறிவினால் தர்மம் தவருது வாழ்ந்த நீத்தார்களுடைய சரித்திரப் பெருமையினால்தான் உலகம் பிரகாசிக்கிறது.

வி - ம்: ஏன் பிறக்கிருர்கள், ஏன் இறக்கிருர்கள், பிறக்கா மலும் இறக்காமலும் இருக்க முடியாதா என்பனவற்றையும் அவற்றை ஒட்டிய விஷயங்களையும் சிந்தனைசெய்து ஆராய்ந்து அறிந்து, பிறவாமலிருக்க வழி தேடலாம் என்ற நம்பிக்கை யினால் ஒழுக்கம் சிறந்த தர்ம வாழ்க்கை நடத்தினவர்களே நீத்தார் எனப்படுவர். அவர்களுடைய சரித்திரம்தான் உல கத்துக்கு ஞானப் பிரகாசம் தருகிறது. இருமை என்பது பிறப்பது, இறப்பது என்ற இரண்டும்.

அந்த நீத்தார் மேற்கொள்ளும் ஒழுக்கமான தர்மவாழ்க்கை யும் அந்த வாழ்க்கையினால் அவர்களுக்கு வரும் பெருமையும் என்னவெனில் :

24. உரனென்னுந் தோட்டியா னோரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து.

ப. ரை: உரன் என்னும் தோட்டியான் = வைராக்யம் என்ற ஆயுதத்தால், ஓர் ஐந்தும் காப்பான் = ஐந்து இந்திரிய ஆசை களையும் அடக்கி ஆளக்கூடியவன், வரன் என்னும் வைப் புக்கு = வரம் தரக்கூடிய வலிமைக்கு, ஓர் வித்து = ஒரு இருப் பிடமாவான்.

பொ. ரை: வைராக்யம் என்ற மன உறுதியோடு பஞ்சேந்திரிய ஆசைகளை அடக்கி ஆளக்கூடியவன் உலகத்துக்கு நன்மை உண்டாக்கக் கூடிய தெய்விக சக்திக்கு இருப்பிடமாவான்.

வி-ம்: ஒரு முகமான வைராக்யத்தோடு இந்திரியங்களை அடக்கி, ஒழுக்க நெறி தவருமல் இருக்கிறவர்களுக்குத் தவ வலிமை என்ற தெய்விக சக்தி உண்டாகும். அந்த சக்தியினுல் அவர்கள் உலகத்துக்கு நன்மை உண்டாக்கத்தக்க வல்லவர்கள் ஆகிருர்கள். 'தோட்டி' என்பது கருவி.

இந்திரியங்களை அடக்கி ஆள்வதனுல் ஆன்ம பலமும் தவ வலிமையும் வருகிறது என்பது மட்டுமல்ல; இந்திரிய சுகங்களை உயர்ந்த முறையில் அனுபவிப்பதற்குக்கூட இந்திரியங்களை அடக்கி ஆள வேண்டும். அதற்கு சாட்சியம் வேண்டுமானுல்:

25. ஐந்தவித்தா ஞற்ற லகல்விசும்பு ளார்கோமா
னிந்திரனே சாலுங் கரி.

ப. ரை: ஐந்து அவித்தான் ஆற்றல் = ஐந்து ஆசைகளையும் அடக்கி ஆளக்கூடியவன் அடையும் பெருமைக்கு, அகல் விசும்பு உளார் கோமான் = அகன்ற வானுலகத்திலுள்ள தேவர்களுக்கு அரசனுன, இந்திரனே சாலும் கரி = இந்திரனே போதுமான சாட்சியமாவான்.

பொ. ரை: பஞ்சேந்திரியங்களையும் அடக்கி, ஆளக்கூடியவன் அடையக்கூடிய சிறப்புகளுக்கு அகன்ற வானுலகத்திலுள்ள தேவர்களுக்கு அரசனுன இந்திரனே போதுமான சாட்சி.

வி-ம்: பஞ்சேந்திரிய ஆசைகளை அடக்கி, தவம் பூண்டு அதற்கென்று சொல்லப்பட்ட நியமங்களில் நின்று, நூறு யாகங்களைச் செய்கிறவனுக்கு இந்திர பதவி கிடைக்கும். அதன்மேல் அவன் சங்க நிதி, பதும நிதி, காமதேனு, கற்பக விருக்ஷம் என்ற செல்வங்களுக்கும் இந்திராணி அரம்பையர் முதலான பெண்களின் இன்பத்துக்கும் அதிபதியாகிருன். ஆதலால் பிறப்பறுத்தல், மோக்ஷம், முத்தி என்ற நோக்கமே இல்லாமலும் இந்திரியங்களை அடக்கியாளக்கூடியவன் இன்னும் மேலான செல்வத்தையும் இன்பங்களையும் அடையமுடியும் என்பது கருத்து.

ஆனுல் நீத்தார் என்பவர்கள் இந்திரனைப் போல வெறும் சுகபோகங்களைக் கருதி, கொஞ்ச காலத்துக்கு மட்டும் இந்திரியங்களை அடக்கி அதன் நன்மைகளைப் பெற்று மறுபடியும் இந்திரிய போகங்களை நாடுகிறவர்கள் அல்ல. பின் அந்த நீத்தார் யாரென்ருல்:

26. செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.

ப. ரை : செயற்கு அரிய செய்வார் பெரியர் = மற்றவர்கள் செய்ய முடியாத காரியத்தைச் செய்கிறவர்களே பெரியவர்கள்; செயற்கு அரிய செய்கலாதார் சிறியர் = மற்றவர்கள் செய்ய முடியாத காரியத்தை தாமும் செய்யமுடியாதவர்கள் சிறியவர்கள்.

பொ. ரை : வேறெவரும் செய்ய முடியாத காரியங்களைச் செய்யக் கூடியவர்கள்தாம் பெரியவர்கள். அவர்கள்தாம் நீத்தார் எனப்படுபவர்கள். அப்படி அபூர்வமான காரியங்களைச் செய்ய முடியாதவர்கள் நீத்தார் அல்ல.

வி - ம் : இந்திரனைப் போல சொற்ப காலத்துக்கு மட்டும் வெறும் சுயநல சுகபோகங்களுக்காக இந்திரிய ஆசைகளை அடக்கித் தவநெறியை மேற்கொள்ளுகிறவர்கள் 'நீத்தார்' என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. அவர்கள் சிறியவர்களே. 'நீத்தார்' என்ற பெரியவர்கள் நிரந்தரமாக இந்திரிய ஆசைகளை நீக்கினவர்கள். அவர்கள் இந்திரனைப் போன்ற சிறிய தவசிகள் செய்ய முடியாத அரிய காரியங்களைச் செய்ய வல்லவர்கள் — என்பது கருத்து.

அப்படிப்பட்ட 'நீத்தார்' இந்திரியங்களை அடக்குவதோடு மட்டும் நின்று விடாமல் :

27. சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு.

ப. ரை : சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற = நாக்கின் சுவை, கண்ணின் பார்வை, உடலில் தீண்டும் உணர்ச்சி, காதில் கேட்கும் ஓசை, மூக்கில் முகரும் வாசனை என்ற, ஐந்தின் வகை தெரிவான் கட்டே உலகு = என்ற ஐந்து இந்திரிய இயல்புகளையும் அவற்றின் வகையான தத்துவங்களையும் தெரிந்தவனிடத்தில்தான் உலகம் பெருமை பாராட்டும்.

பொ. ரை : மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐந்து இந்திரியங்களின் இயல்புகளையும், அவைகளுடைய உணர்ச்சிகளையும் அந்த வகைகளைச் சேர்ந்த தத்துவங்களையும் தெரிந்து, இன்னின்ன இந்திரியத்தை இப்படியிப்படி அடக்கி ஆண்டால் இன்னின்ன சக்தி கிடைக்கும் என்பதைக் கடைப் பிடித்து நடந்து, தவ வலிமையும் ஆன்ம பலமும் அடைந்தவர்களைத்

தான் 'நீத்தார்' என்று பெருமை கொண்டாடுகிறோம். (ஐந்து பூதம், ஐந்து பொறி, ஐந்து புலன் என்பனவற்றின் தத்துவங்களை யோக சாஸ்திரங்களிலும், ஆன்ம விசாரணை நூல்களிலும் விஸ்தாரமாகப் படித்தறிந்தாலன்றி சுருக்கிச் சொன்னால் விளங்காது.)

அப்படிப்பட்ட தவ வலிமையுள்ள பெரியவர்கள் :

28. நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்.

ப. ரை : நிறைமொழி மாந்தர் = (அப் பெரியோர்) சொன்னது சொன்னபடி நிறைவேறக் கூடிய வாக்குடையவர்கள், பெருமை = அவர்களுடைய மகிமையை, நிலத்து மறை மொழி காட்டி விடும் = இந்த உலகத்தில் வழங்குகின்ற வேதங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

பொ. ரை : தபோபலமுள்ள பெரியவர்கள் சொன்னது சொன்னபடி நடக்கக்கூடிய வாக்குடையவர்கள். அவர்களுடைய பெருமை வேதம் வேதமந்திரம் முதலான சத்திய நூல்களால் தெரியக் கிடக்கிறது.

வி - ம் : 'உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் வரன் என்னும் வைப்புக்கு ஓர் வித்து' என்றபடி அந்தப் பெரியவர்கள், அவர்கள் சந்தோஷப்பட்டு வரம் கொடுத்தாலும், கோபங்கொண்டு சபித்தாலும் சொன்னது சொன்னபடி பலிக்கும். ஆகையினால் அவர்கள் 'நிறைமொழி மாந்தர்' என்பது மட்டுமன்றி அந்த நீத்தார் சொல்லிப்போன உண்மைகளின்படிதான் உலகம் நடக்கிறது—என்பது கருத்து.

ஆனாலும் உண்மையான 'நீத்தார்' கோபத்தை அறவே விலக்கினவர்கள். ஆகையினால் அவர்கள் பிறரை வாழ்த்தினால் வாழ்த்துவார்களே ஒழிய கோபித்துச் சபிக்க மாட்டார்கள். எப்படியெனில் அவர்கள் :

29. குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்த லரிது.

ப. ரை : குணம் என்னும் குன்று ஏறி நின்றார் = (அந்தப் பெரியவர்கள்) குணம் என்ற மலையில் ஏறி அங்கேயே தங்கியிருப்பவர்கள், வெகுளி = கோபத்தை, கணமேயும் காத்தல் அரிது = கணப்பொழுது கூட வகிக்கமாட்டார்கள்.

பொ. ரை: அந்தப் பெரியோர்கள் மேலான குணம் என்ற மலையின் உச்சிக்குப் போய் அங்கேயே தங்கியிருப்பவர்கள். அவர்கள் கணப்பொழுதுகூட கோபத்தைத் தரிக்கமாட்டார்கள்.

வி-ம்: 'நீத்தார்' என்பதற்குச் சரியான தகுதி வாய்ந்த பெரியவர்கள் கோபதாபங்களை விட்டு, படிப்படியாக குணத்தில் உயர்ந்து குண மலையின் உச்சிக்குப்போய் மீண்டும் கீழே இறங்கும் எண்ணமே இல்லாமல் அந்த குண உச்சியிலேயே இருப்பவர்கள். அவர்களுக்குக் கோபமே வராது. வந்தாலும் க்ஷண நேரம் கூடத் தங்காது. ஆதலால் அவர்கள் யாரையும் கோபித்துச் சபிக்கமாட்டார்கள் என்பது கருத்து.

ஏன் என்ருல் அவர்கள் :

30. அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழுக லான்.

ப. ரை: மற்று எவ்வுயிர்க்கும் = மற்ற எல்லா உயிர்களுக்கும், செம் தண்மை பூண்டு ஒழுகலான் = கருணையே மேற்கொண்டு நடந்து கொள்வார்களானதிஞல், அந்தணர் என்போர் = அந்தப் பெரியவர்களே அமைதி கண்ட 'அந்தணர்' எனப்படுகிறவர்கள், அறவோர் = தர்மங்களுக்கு இருப்பிடமானவர்கள்.

பொ. ரை: மற்ற எல்லா உயிர்களிடத்தும் ஜீவகாருண்யமே மேற்கொண்டு நடந்து கொள்வார்கள். ஆனதிஞல் அந்த 'நீத்தார்' சாந்தர்கள்; தர்மங்களுக்கு இருப்பிடமானவர்கள்.

வி-ம்: மனிதர்கள் மட்டுமல்லாமல் உலகத்திலுள்ள எல்லா ஜீவராசிகளும் சுகமாக இருக்க வேண்டுமென்று ஜீவகாருண்ய ஒழுக்கமே நடத்தி சாந்தர்களாகவும் தர்மங்களுக்கு இருப்பிடமாகவும் உள்ளவர்களே 'நீத்தார்'. அவர்கள் பெருமையைப் போற்றிஞல் மக்கள் அறங்களைக் கடைப்பிடித்து நல்வாழ்வு நடத்துவார்கள்.

அதி. 4—அறன்வலியுறுத்தல்

[அறன் வலியுறுத்தல்=மனிதப் பிறவிக்குக் கடமைகள் என்று சுருதி, யுக்தி, அனுபவங்களால் கண்டறியப்பட்ட நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று வற்புறுத்தல்]

31. சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ உயிர்க்கு.

ப. ரை : சிறப்பு ஈனும் = சிறப்புண்டாக்கும்; செல்வமும் ஈனும் = செல்வமும் உண்டாக்கும்; (அப்படிபட்ட) அறத்தின் ஊங்கு = தர்மங்களைக் காட்டிலும் மேலான, ஆக்கம் உயிர்க்கு எவன்?=செல்வம் மனிதருக்கு என்ன இருக்கிறது?

பொ. ரை : சிறப்புத் தரும்; செல்வமும் தரும்; அப்படிப்பட்ட தர்மத்தைக் காட்டிலும் உயர்ந்த பொக்கிஷம் மனிதருக்கு என்ன இருக்கிறது?

வி - ம் : அறம் செய்வதனுல் உடனே சிறப்புண்டாவது நிச்சயம். ஆனுல் செல்வம் உடனே கிடைக்கும் என்று சொல்ல முடியாது. இருந்தாலும் நல்ல காரியத்தைச் செய்வதன் பலன் இல்லாமற் போகாது. ஆதலால் புகழைப் போல செல்வம் உடனே கிடைக்காவிட்டாலும் பின்னுல் கிடைக்காமற் போகாது. அதற்காகவே 'செல்வமும் ஈனும்' என்று 'உம்' சேர்த்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

புகழை விரும்பா விட்டாலும். செல்வம் உடனே கிடைக்கா விட்டாலும் :

'32. அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடு.

ப. ரை : அறத்தின் ஊங்கு ஆக்கமும் இல்லை = தர்மமான நல்ல காரியங்களைச் செய்வதைக் காட்டிலும் நன்மை தரக் கூடியதும் வேறில்லை; அதனை மறத்தலின் ஊங்கு இல்லை கேடு = அதை மறந்து விடுவதைக் காட்டிலும் கெடுதி உண்டாக்கக் கூடியதும் வேறில்லை.

பொ. ரை : அறமாகிய நல்ல காரியத்தைச் செய்வதைக் காட்டிலும் நல்லதும் வேறில்லை. அதை மறந்து விடுவதைக் காட்டிலும் கெடுதலும் வேறில்லை.

வி - ம் : அறம் செய்வதனுல் நன்மைகள் உண்டாகும் என்பது சரி. அதை மறந்து விடுவதால், அந்த நன்மைகள் உண்டாவது தானே இல்லாமற் போகும், கேடு எப்படி வரும் என்ற சந்தேகம் உண்டாகலாம். பலநாள் அறம் செய்கிறவனும் கூட ஒருநாள் அதை மறந்து கடமையில் தவறுவானுகில் அந்தச் சமயம் பார்த்துக் காத்துக்கொண்டிருக்கிற அறவாழ்வின் பகைவர்களாகிய கெட்ட எண்ணங்கள் புகுந்து அது வரையிலும் அவன் செய்த அறங்களின் பயன்களையும் அழித்து விடக்கூடிய தீய ஒழுக்கத்திற்கு ஆளாக்கி விடலாம். ஆதலால் அறம் செய்ய முடியாத சமயங்களிலும் அதை மறக்காமல் இருக்க வேண்டும்—என்பது கருத்து.

எவ்வளவு அறம் செய்ய வேண்டும், எப்போது செய்ய வேண்டும் என்ற எல்லைக் கட்டுப்பாடுகள் இல்லை. செய்த வரைக்கும் நன்மை :

**33. ஒல்லும் வகையா னறவினை யோவாதே
செல்லும்வா யெல்லாஞ் செயல்.**

ப. ரை : ஒல்லும் வகையான் = கூடிய மட்டிலும், அறவினை = நல்ல காரியங்களை, ஓவாது = தொடர்ச்சி விட்டுப் போகாத படி, செல்லும் வாய் எல்லாம் = செய்வதற்கு வாய்ப்பு கிடைத்த போதெல்லாம், செயல் = செய்ய வேண்டும்.

பொ. ரை : நல்ல காரியங்களைச் சக்திக்கு எட்டிய மட்டிலும் சமயம் நேர்ந்தபோதெல்லாம் தொடர்ந்து செய்யவேண்டும்.

வி-ம் : தர்மங்களைச் செய்ய வசதியில்லாமலும் நேரமில்லாமலும் உடனுக்குடன் செய்ய முடியாமற் போய்விட்டாலும் அதை மறந்து விட்டுவிடாமல் வசதி கிடைக்கிற அளவுக்கு சமயம் நேர்ந்தபோதெல்லாம் செய்தால் நல்லது.

அறம் என்பது எத்தனை தரம் நல்லது செய்யப்பட்டது அல்லது எவ்வளவு பெரிய தர்மம் செய்யப்பட்டது என்ற கணக்கைப் பொறுத்ததும் அல்ல. பின் எதைப் பொறுத்தது என்றால் :

**34. மனத்துக்கண் மாசில னாதல் அனைத்தறன்
ஆகுல நீர பிற.**

ப. ரை : மனத்து கண் = மனதின் இடத்தில், மாசு இலன் ஆதல் = குற்றம் இல்லாதவனாக இருப்பது, அனைத்து அறன் = அவ்வளவுதான் அறம், பிற = மற்றனவெல்லாம், ஆகுல நீர = ஆடம்பர வகையைச் சேர்ந்தவை.

பொ. ரை : மனதில் குற்றமில்லாதவனாக இருக்க வேண்டும், அவ்வளவுதான் தர்மம். மற்றதெல்லாம் ஆடம்பர வகையைச் சேர்ந்தது.

வி-ம் : மனதில் கெட்ட நோக்கமில்லாமல் செய்கிற நல்ல காரியம்தான் அறம். அது எவ்வளவு சிறியதாயினும் பாதகமில்லை. ஆனால் மனதில் ஒரு கெட்ட நோக்கத்தை வைத்துக் கொண்டு எவ்வளவு பெரிய தர்மத்தைச் செய்தாலும் அது வெறும் ஆடம்பரத்துக்காகச் செய்வதாகுமேயல்லாது அறம் ஆகாது.

மனதில் குற்றமில்லாமல் செய்கிற அறம் எதுவென்றால்:

35. அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொன் னுன்கு
இழுக்கா வியன்ற தறம்.

ப. ரை: அழுக்காறு, அவா, வெகுளி, இன்னுச்சொல் நான்கும்=பொருமை, ஆசை, கோபம், கடுஞ்சொல், ஆகிய நான்கும், இழுக்கா=நீக்கி, இயன்றது அறம்=செய்வது தான் அறம்.

பொ. ரை: பொருமை, ஆசை, கோபம் கடுஞ்சொல் இந்த நான்கும் இல்லாமல் செய்கிற காரியங்களே அறம் எனப் படும்.

வி-ம்: பொருமை, சுயநல ஆசை, கோபம், கடுஞ்சொல் ஆகிய நான்கு குற்றங்களுக்கும் மனதில் இடம் கொடுக்காமல் செய்கிற காரியங்கள் எல்லாம் நல்ல காரியங்களாகவே இருக்கும்.

அப்படிப்பட்ட அறத்தை எப்போது செய்வது என்ற யோசனைக்கே இடமில்லை. ஒத்திப்போடக் கூடாது. உடனே செய்ய வேண்டும்:

36. அன்றறிவா மென்னு தறஞ்செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றுத் துணை.

ப. ரை: அன்று அறிவாம் என்னுது அறம் செய்க=அன்றைக்குப் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணிவிடாமல் தர்மச் செயல்களை இப்போதே செய்க, மற்று அது=அப்படிச் செய்வது, பொன்றும் கால்=உடல் சாகிற காலத்தில், பொன்றுத் துணை=தான் சாகாமலிருந்து உயிருக்குத் துணை புரியும்.

பொ. ரை: (சாகப்போகிற) அன்றைக்குச் செய்து கொள்ளலாம் என்று ஒத்திப்போடாமல் இப்போதிருந்தே தர்ம காரியங்களைச் செய்க. அப்படிச் செய்வது, உடல் அழிந்த பின்னும் தான் அழியாமலிருந்து உயிருக்கு உதவி செய்யும்.

வி-ம்: சாகிற சமயத்தில் அறம் செய்ய முடியாது. ஒருவன் சாகக் கிடக்கும் போது பிறர் அவனுக்காகச் செய்கிற தான தர்மங்கள் அறம் ஆகமாட்டா. அவை அவனுடைய உயிருக்கு உதவி செய்ய முடியாது. சாகும் காலம் வருவதற்கு முன்னுல் மனக் குற்றங்கள் இல்லாமல் அவனுகவே செய்த நல்ல காரியங்கள்தாம் அறம். அவற்றின் பலன்கள் அவனுடைய உடல் அழிந்த பிறகும் அவனுடைய உயிரோடு இருந்து மோக்ஷத்தையோ அல்லது நல்ல மறு பிறப்பையோ அடைய அவனுக்குத் துணை புரிகின்றன.

அப்படி அறம் செய்தவனுக்கு, அந்த அறத்தின் பலன் அவனுடைய உயிருக்குத் துணையாக இருந்து நல்ல மறுபிறப்பைத் தருகிறது என்பதையும், அறஞ் செய்யாதவனுக்கு நல்ல மறுபிறப்பு கிடைப்பதில்லை என்பதையும் எப்படி அறிகிறோம் என்றால் :

37. அறத்தா றிதுவென வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தா னிடை.

ப. உரை: சிவிகை பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை = பல்லக்கைச் சுமந்துகொண்டு போகிறவனுக்கும் அதில் உட்கார்ந்துக் கொண்டு போகிறவனுக்கும் இடையிலுள்ள (வித்யாசம் என்னவென்று சிந்தித்துப் பார்த்தால்) அறத்து ஆறு இது என வேண்டா = அறம் செய்வதன் பலன் என்னவென்பதை யாரும் நமக்குச் சொல்ல வேண்டியதில்லை.

பொ. உரை : பல்லக்கைச் சுமந்து கொண்டு போகிறவனுக்கும் அதில் சவாரி செய்துகொண்டு போகிறவனுக்கும் இடையிலுள்ள வித்தியாசம் என்னவென்பதை ஆலோசனை செய்து பார்த்தால், தர்மத்தின் பலன் என்னவென்பதை யாரும் நமக்குச் சொல்ல வேண்டியதில்லை.

வி - ம் : உடல் வருந்த பல்லக்கைத் தூக்கிக்கொண்டு போகிறவனும் மனிதன், அந்தப் பல்லக்கில் உட்கார்ந்து உடல் வருத்தம் இல்லாமல் சுகமாக சவாரி போகிறவனும் மனிதன். ஒருவன் ஏன் அவ்வளவு கஷ்டப்படுகிறான், இன்னொருவன் ஏன் அவ்வளவு சுகப்படுகிறான் என்பதை சிந்திக்கவேண்டும். எப்படியெப்படி யெல்லாம் சிந்தித்துப் பார்த்தாலும் பல்லக்கைத் தூக்குகின்றவனிடத்தில் இல்லாத ஏதோ ஒரு பலம் அதில் சவாரி செய்கிறவனுக்கு இருக்க வேண்டும் என்று தெரிகிறது. அந்தப் பலத்தைத்தான் புண்ணியம் என்று மதிக்கிறோம். அந்தப் புண்ணியம் அறம் செய்ததன் பலன். அறம் செய்யாதவனுக்கு அந்தப் புண்ணிய பலம் இல்லை. ஆகையினால் பல்லக்கில் சவாரி செய்கிறவன் அறம் செய்தவன். பல்லக்கைத் தூக்குகிறவன் அறம் செய்யாதவன்.

பல்லக்கில் சவாரி செய்கிறவன் அந்த அளவுக்கு அறம் செய்தவன். அதைவிடப் பெரிய சுகங்களுக்கு, அதற்குச் செய்த அறங்களைவிட அதிகம் செய்திருந்தால் கிடைக்கும். எல்லா சுகங்களுக்கும் உச்சமென்று கருதப்படுகிற பேரின்பமாகிற பிறப்பில்லாத மோக்ஷ இன்பத்தையும் அறம் செய்தால் அடையலாம். எப்படியெனில் :

38. வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்.

ப. உரை: வீழ்நாள் படா அமை = சாகும் நாள் வராமலிருக்கும் போதே, நன்று ஆற்றின் = நல்ல முறையில் தர்மங்களைச் செய்தால், அஃது ஒருவன் வாழ்நாள் வழி அடைக்கும் கல் = அது ஒருவன் மீண்டும் பிறந்து வாழ வேண்டிய காரணத்தைத் தடுத்துவிடக் கூடிய பாதுகாப்பு.

பொ. உரை: மரணம் வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று இருந்துவிடாமல் சுகமாக இருக்கும்போதே சரியான முறையில் அறங்களைச் செய்கிறவனுக்கு, அச் செயல் அவன் மீண்டும் பிறப்பதற்குள்ள காரணங்களை இல்லாமற் செய்து விடக்கூடிய கற்கோட்டை.

வி - ம்: 'அன்றறிவாம் என்னாது அறஞ் செய்க மற்று அது பொன்றுங்கால் பொன்றாத் துணை' என்று முன்னால் சொல்லியபடி மரணம் வந்து விடுவதற்கு முன்னால் சரியான முறையில் அறங்களைச் செய்தால் பிறவாமல் இருக்கவும் கூடும் — என்பது கருத்து.

அறம் செய்தால் அடுத்த பிறவி நல்ல பிறவியாகும் என்பதும், நல்ல முறையில் அறம் செய்தால் பிறப்பில்லாமலேயே இருந்து பேரின்பம் என்ற மோக்ஷத்தைப் பெறலாம் என்பதும், வெறும் நம்பிக்கைகள்தாம். இதை நம்புகின்றவர்கள் நம்பட்டும் நம்பாதவர்கள் விட்டுவிடட்டும். ஆனால் இவற்றை நம்புகிறவர்களுக் கானாலும் சரி, நம்பாதவர்களுக்கானாலும் சரி, உலகத்தில் இருக்கிற வரைக்கும் ஒருவன் சந்தோஷமாக இன்ப வாழ்க்கை நடத்த வேண்டுமானாலும் கூட:

39. அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில.

ப. உரை: அறத்தான் வருவதே இன்பம் = அறமாகிய நல்ல காரியங்களைச் செய்து அதனால் வருகிற மகிழ்ச்சியே நல்ல இன்பம், மற்றெல்லாம் = மற்ற வழிகளில் அடைகிற மகிழ்ச்சியெல்லாம், புறத்த புகழும் இல = இன்பத்தோடு சேர்ந்தவையல்ல, புகழத்தக்கனவும் அல்ல.

பொ. உரை: தர்மமான செயல்களைச் செய்து அதனால் வருகிற மகிழ்ச்சிதான் சரியான இன்பமாகும். மற்ற வழிகளில் அடைகிற மகிழ்ச்சி இன்பம் அல்ல: புகழ் கூட கிடைக்காது.

வி - ம்: அறமான நல்ல காரியங்களைச் செய்தபின் நம்முடைய மனதில் மனச்சாட்சி மகிழக்கூடிய பரிசுத்தமான இன்பம்

உண்டாகிறது. அப்படிப்பட்ட தூய இன்பம் அறமல்லாத எதைச் செய்தாலும் வருவதில்லை. அதுமட்டுமல்ல, நாம் தர்மமான காரியத்தைச் செய்ததை அறிந்த பலரும் நம்மை அதற்காகப் பாராட்டிப் புகழ்வார்கள். அறமல்லாத் காரியத்தால் மனச் சாட்சி மகிழக் கூடிய தூய இன்பம் அடையவும் முடியாது. அறமல்லாத காரியங்களைப் பிறர் புகழவும் மாட்டார்கள். இங்கே 'இன்பம்' என்றது காம இன்பத்தை அல்ல. இன்பங்களுக்கெல்லாம் தலைசிறந்த இன்பம் காம இன்பம் ஆனதால் 'இன்பம்' என்றாலே காம இன்பத்தைக் குறிக்கும் என்றாலும், உலகத்தில் மனிதன் அனுபவிக்கிற இன்பம் காம இன்பம் ஒன்றுமட்டும் அல்ல. காம இன்பம் வெறும் உடலை மட்டும் பற்றியது. உடலைத் தவிர்த்து (மெய்) வாய், கண், மூக்கு, செவி என்ற மற்ற நான்கு பொறிகளும் அனுபவிக்கிற இன்பங்கள் தனித்தனியே இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக மனம் அனுபவிக்கிற இன்பம் வேறு. இங்கே சொல்லப்படுவது மனச்சாட்சி அனுபவிக்கிற தூய இன்பம்.

ஆகையால் தூய மனமகிழ்ச்சியான இன்பத்தை விரும்பியானாலும் சரி, அல்லது புகழை விரும்பியானாலும் சரி :

40. செயற்பால தோரு மறனே யொருவற்
குயற்பால தோரும் பழி.

ப. ரை : ஒருவற்கு = ஒருவனுக்கு, செயல் பாலது ஒரும் அறனே = செய்ய வேண்டிய காரியங்கள் ஆராய்ந்தறிந்த நல்ல காரியங்களே, உயல் பாலது ஒரும் பழி = செய்து விடாமல் நீக்கவேண்டிய காரியங்கள் ஆராய்ந்து பழிவரக் கூடிய காரியங்களே.

பொ. ரை : ஒவ்வொருவரும் ஆராய்ந்து செய்ய வேண்டிய காரியம் அறமே. செய்துவிடாமல் ஆராய்ந்து விலக்க வேண்டியது பழி வரக்கூடிய காரியங்களே. ('ஒரும்' என்பது 'ஆராயும்')

வி - ம் : அடுத்த பிறவி நல்ல பிறவியாகக் கிடைக்கும் அல்லது பிறப்பே இல்லாத மோக்ஷம் கிடைக்கும் என்ற நம்பிக்கைகளுக்காகச் செய்தாலும் சரி, அல்லது உலகத்தில் சந்தோஷமாக இருக்கவேண்டும் அல்லது கீர்த்தி அடைய வேண்டும் என்று மட்டும் விரும்பினாலும் சரி, ஒவ்வொருவரும் செய்ய வேண்டியது புண்ணியம், செய்து விடாமல் கவனத்தோடு நீக்கவேண்டியது பாவம்.

பாயிர இயல் முடிந்தது.

2. இல்லற இயல்

அதி. 5—இல்வாழ்க்கை

[இல்வாழ்க்கை என்பது மனைவி மக்களோடு குடும்பம் நடத்துவது]

41. இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு
நல்லாற்றி னின்ற துணை.

ப. ரை: இல்வாழ்வான் என்பான் = வீட்டோடு வாழ்ந்து குடும்பம் நடத்துகிறவன் என்பவன், இயல்புடைய மூவர்க்கும் = இல்வாழ்க்கையின் இயல்போடு சம்பந்தமுடைய = உறவினர், நண்பர்கள், ஏழைகள் என்ற = மூவர்க்கும், நல் ஆற்றில் நின்ற துணை = நல்ல முறையில் கிடைக்கக் கூடிய துணைவன்.

பொ. ரை: குடும்ப வாழ்க்கை நடத்துகிற இல்லறத்தான், இல்லற இயல்போடு தொடர்புடைய உறவினர், நண்பர்கள், எளியவர்கள் என்ற மூன்று வகையாருக்கும் எளிதில் கிடைக்கக் கூடிய உபகாரி.

வி-ம்: 'இயல்புடைய மூவர்க்கும்' என்பதற்கு 'இல்லறத்தின் இயல்புடன் சேர்ந்த மூவர்க்கும்' என்று பொருள் செய்வது தான் சரி. ஏன் எனில் 'பிரம்மச்சாரி, வானப்பிரஸ்தன், சன்யாசி என்ற மூவருக்கும்' என்று பொருள் செய்தால் அடுத்த குறளில் வருகிற 'துறந்தார்க்கும்' என்ற பதத்திற்கு நேரான பொருள் செய்ய முடியாமல் தடுமாற வேண்டியிருக்கிறது. மேலும் இல்லறத்தின் 'இயல்புடைய மூவர்' உறவினர், நண்பர்கள், வறியவர் என்ற மூவராகத்தானிருக்க முடியும். ஏன் எனில் வனத்துக்கு மனைவியுடன் சென்றுவிடும் வானப்பிரஸ்தன் இல்வாழ்வானுடைய உதவியைக் கருதுகிறவன் அல்ல. சன்யாசியும் தினந்தினம் இல்வாழ்வானிடம் வருகிறவனல்ல. அதனால் அவர்கள் இல்வாழ்வானுடைய இயல்போடு தொடர்புடையவர்களல்ல.

இல்வாழ்வான் என்பவன் உறவினர், நண்பர்கள், ஏழைகள் என்ற மூவருக்கும் துணையாவது மட்டுமல்லாமல்:

42. துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை.

ப. ரை: துறந்தார்க்கும் = துறவிகளுக்கும், துவ்வாதவர்க்கும் = உணவருந்தாமலிருக்கிறயாருக்கும், இறந்தார்க்கும் = அளவு

கடந்த வாழ்க்கை நடத்தி கெட்டுப் போனவர்களுக்கும். இல் வாழ்வான் என்பான் துணை=இல்லறம் நடத்துகிறவன் துணை யாவான்.

பொ. ரை: துறவிகளுக்கும், சாப்பிடாமலிருக்கிற யாருக்கும், அளவுக்கு மீறிய வாழ்க்கை நடத்தி கெட்டுப் போனவர் களுக்கும் குடும்ப வாழ்க்கை நடத்துகின்ற இல்வாழ்வான் துணையாவான்.

வி-ம்: 'துவ்வாதவர்க்கும்' என்பது உறவினரும் நண்பர் களும் ஏழைகளும் அல்லாது தம்மைச் சந்திக்க நேர்ந்த புதிய மனிதர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் உணவருந்தாம லிருந்தால் அவர்களுக்கும், என்பது அர்த்தம். 'இறந்தார்க் கும்' என்பதற்கு 'திக்கற்றவர்களாகத் தம்மிடம் வந்து செத்துப் போனவர்க்கு' என்ற பொருள் பொருந்தாது. இது இல்வாழ்வானுடைய தினசரி வாழ்க்கையில் நிகழக் கூடிய தல்ல, எங்கோ ஒருவர் அப்படி திக்கற்றவர்களாக வந்து இறக்க நேரலாம். இறத்தல்—வரம்பு கடத்தல். இறந்தார்— வரம்பு கடந்த வாழ்க்கையால் கெட்டுப் போனவர். இல் வாழ்வான் அவர்களுக்கு உதவி செய்து மீண்டும் வாழ வைக்க முடியும்.

இப்படிப் பலருக்கும் உபகாரியாக இருப்பதோடு இல்லறத் தான் தன்னுடைய கடமைகளை ஒரு முறைவகுத்து திட்டமாக நடத்த வேண்டும். அந்த முறை என்னவெனில்:

**43. தென்புலத்தார்தெய்வம் விருந்தொக்க லுனென்றாங்
ஐம்புலத்தா றோம்ப றலை.**

ப. ரை: தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல், தான்= மூதாதைகள், தெய்வம், விருந்தினர்கள், குடும்பத்திலுள்ள வர்கள், தான், என்ற ஐம்புலத்து ஆறு ஓம்பல் தலை=என்ற ஐந்து இடத்தின் வரிசைக் கிரமத்தை கவனித்து, தன் அறங் களைச் செய்வது மிகவும் சிறந்த முறை.

பொ. ரை: முன்னோர்களை நினைத்துச் செய்ய வேண்டிய பூசனை களையும், தெய்வத்தை வழிபட்டுச் செய்யவேண்டியதான தர்ம பூசைகளையும், வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தினர்களையும், தன் குடும்பத்திலுள்ள மற்றவர்களையும் கடைசியாகத் தன்னை யும் என்ற வரிசை முறையில் செய்ய வேண்டிய கடமை களைச் செய்வதுதான் இல்லறத்தின் தலை சிறந்த நெறி.

வி-ம்: மூதாதைகளை முதலில் சிந்தித்து, அதன்பின் தெய் வத்தை வணங்கி, பிறகு விருந்தினர்களை முதலில் கவனித்து, அடுத்தபடி வீட்டிலுள்ள மற்றவர்களை கவனித்துக் கடைசி

யாகத் தன் நலத்தையும் கவனித்துக்கொள்ள வேண்டும். இப்படிச் செய்வதுதான் இல்வாழ்க்கையின் தலைசிறந்த முறை.

மேற்சொன்ன முறையில் தன்னலத்தைக் கடைசியாக்கிக் கடமைகளைச் செய்வதுதான் மிகச் சிறந்த இல்வாழ்க்கை என்றாலும், அந்த முறைப்படி செய்வதற்கு எல்லாருக்கும் சந்தர்ப்ப சௌகரியங்கள் ஒரே மாதிரி கிடைக்காது. ஆதலால் அந்த முறைப்படி செய்ய முடியா விட்டாலும் ;

> 44. பழியஞ்சிப் பாத்தூ ணுடைத்தாயின் வாழ்க்கை
> வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.

ப. ரை : பழி அஞ்சி = பழிபாவங்களுக்கு அஞ்சி, பாத்து (பகுத்து) ஊண் உடைத்து ஆயின் = உணவைப் பிறருக்கும் பகுந்து கொடுத்துப் பின் தான் உண்பவனானால், வாழ்க்கை வழி = அவனுடைய இல்லற வாழ்வின் நெறி முறை. எஞ்சல் = குறைவது, எஞ்ஞான்றும் இல் = ஒரு நாளும் இல்லை.

பொ. ரை : பழிவரக்கூடிய பாவ காரியங்களைச் செய்வதை பயத்தோடு நீக்கி, தனக்குள்ள உணவைப் பிறருக்கும் பங்கிட்டுக் கொடுத்து உண்கிறவனுடைய வாழ்க்கை இல்லற முறைக்குக் குறைவானது என்று ஒரு நாளும் சொல்ல முடியாது

வி - ம் : பழி பாவங்களுக்குப் பயந்து நடந்து, தனக்குள்ள நலங்களில் பிறருக்கும் பங்கு கொடுத்து உண்பவனானால், முன்னே சொன்ன முறைப்படி செய்ய முடியாவிட்டாலும் இதை இல்லற நெறியில் குறைந்ததாக ஒரு நாளும் சொல்லமாட்டார்கள். 'பாத்தூண் உடைத்தாயின்' என்று உணவைச் சொன்னது, உணவு ஒன்றை மட்டும் பகுந்து கொடுக்க வேண்டும் என்ற அர்த்தத்தில் அல்ல. உயிர்களுக்கு உணவு முக்கியமானதால் உணவைச் சொன்னார். அதனால் தனக்குள்ள நலங்களை அவைகள் இல்லாத பிறருக்கும் பகுந்து கொடுக்க வேண்டும் என்பது மறைந்து நிற்கும் பொருள்.

இன்னும் சுருக்கமாக இல்வாழ்க்கை என்பது என்னவென்றால் :

> 45. அன்பு மறனு முடைத்தாயி னில்வாழ்க்கை
> பண்பும் பயனு மது.

ப. ரை : அன்பும் அறனும் உடைத்தாயின் = எல்லாரிடத்தும் அன்பும் அவரவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையும் உள்ளதாக இருக்குமானால், இல்வாழ்க்கை பண்பும் பயனும் அது = அதுதான் இல்வாழ்க்கையின் முறையும் உலகத்துக்குப் பயனுள்ளதும் ஆகும்.

பொ. ரை : எல்லாரிடத்திலும் அன்பாக நடந்து கொள்வதும் அவரவர்களுக்குத் தகுந்தபடி துணைபுரிந்து தர்மமான கடமை களைச் செய்வதும் உள்ளதானால் அதுதான் இல்வாழ்க்கை யின் தன்மை. தமக்கும் உலகத்துக்கும் நல்ல பயன்களைத் தரக்கூடியதும் அதுவே.

வி - ம் : அன்பு கெடாமல் கடமைகளைச் செய்வதுதான் இல் வாழ்க்கை. அன்புதான் இல்வாழ்வின் பண்பு; அறம்தான் அதன் பயன். 'அன்பு' என்று இங்கே சொல்லப்படுவது மனைவியிடத்தில் கணவன் காட்டும் அன்பு அல்ல. கணவனும் மனைவியும் சேர்ந்து பிறரிடத்தில் காட்டும் அன்பு.

அன்பும் அறனுமாக மட்டும் இல்வாழ்க்கை நடத்தினால் :

46. அறத்தாற்றி னில்வாழ்க்கை யாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

ப. ரை : அறத்து ஆற்றின் = தர்மமான முறையில், இல் வாழ்க்கை ஆற்றில் = இல்வாழ்க்கை நடத்தினால், புறத்து ஆற்றில் = வேறு வழிகளில், போஒய்ப் பெறுவது எவன் = போய் அடையக் கூடியது என்ன இருக்கிறது?

பொ. ரை : முறை தவறாமல் இல்வாழ்க்கை நடத்தினால் வேறு வழிகளிற் சென்று அடையக்கூடிய நன்மை என்ன இருக் கிறது?

வி - ம் : இதுவரையிலும் சொல்லப்பட்ட முறையில் இல்லறம் நடத்தினால் துறவறத்துக்குப் போய் அடையக்கூடிய நன்மை ஒன்றுமில்லை — என்பது கருத்து.

ஏன் என்றால் :

47. இயல்பினா னில்வாழ்க்கை வாழ்பவ னென்பான்
முயல்வாரு ளெல்லாந் தலை.

ப. ரை : இயல்பினான் = முறைதவறாத இயல்போடு, இல் வாழ்க்கை வாழ்பவன் என்பான் = குடும்ப வாழ்க்கை நடத்து கிறவன் என்று சொல்லப்படுகிறவன், முயல்வாருள் எல்லாம் தலை = நல்வாழ்வு பெற முயற்சி செய்கிறவர்கள் எல்லாரிலும் சிறந்தவன்.

பொ. ரை : இல்லற தர்மங்களின் இயல்போடு குடும்பம் நடத்து கிறவன் மேலான வாழ்வு பெறவேண்டுமென்று பற்பல வழி களில் முயற்சி செய்கிற எல்லாரிலும் மேம்பட்டவன்.

வி - ம் : 'முயல்வாருளெல்லாம்' — பலவித முயற்சிகள் செய்கிறவர்கள் எல்லாரிலும், அதாவது துறவறம் பூண்டு பல வழிகளில் தவம் செய்கிறவர்கள், சாகாமலிருக்க காயகற்பம் தேடுகிறவர்கள், வெவ்வேறு சித்திகள் பெறுவதற்கான வெவ்வேறு மந்திர தந்திரங்களை நாடுகிறவர்கள், முதலான எல்லாரினும்.

இல்வாழ்க்கையை சரியாக நடத்துகிறவன் துறவு, தவம் முதலிய மற்ற முயற்சிகள் செய்கிறவர்கள் எல்லாரிலும் பெருமையுடையவன் என்பது எப்படியென்ருல் :

48. ஆற்றி னொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து.

ப. ரை : ஆற்றின் ஒழுக்கி = ஆற்ரெழுக்குபோல் முறை தவருமல் நடத்தி, அறன் இழுக்கா இல்வாழ்க்கை = தர்மம் கெடாத இல்வாழ்க்கை, நோற்பாரின் = துறவறம் முதலிய மற்ற முயற்சிகளில் ஈடுபட்டவர்களைக் காட்டிலும், நோன்மை உடைத்து = சகிப்புத்தன்மை உள்ளது.

பொ. ரை: ஆற்ரெழுக்கு போல கடமைகளின் வரிசைக் கிரமம் தவருமல் நடத்தி, தர்மம் கெடாமல் செய்யப்படுகிற இல்வாழ்க்கையானது, துறவறம், தவம் முதலிய மற்ற முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் மேற்கொள்ள வேண்டிய சகிப்புத்தன்மையைக் காட்டிலும் அதிக சகிப்புத்தன்மை உள்ளது.

வி - ம் : துறவறம் முதலிய மற்ற முயற்சிக்காரர்கள் உணவு சுருக்கும் பல விரதங்களை மேற்கொண்டு உடல் சுகத்தைக் கருதாமல் பல துன்பங்களைச் சகிக்க வேண்டும். இல்லற வாழ்க்கையைச் சரியான முறையில் நடத்துவதற்கு அதைக் காட்டிலும் பொறுப்பும் சகிப்புத் தன்மையும் அதிகம் வேண்டும். அதனுல்தான் 'இல்வாழ்வான் முயல்வாருளெல்லாம் தலை' யாவான்.

ஆகையினுல் :

49. அறனெனப் பட்டதே யில்வாழ்க்கை யஃதும்
பிறன்பழிப்ப தில்லாயி னன்று.

ப. ரை : அறன் எனப்பட்டதே இல்வாக்கை = தர்மம் என்று சொல்லப்படுவதே இல்லற தர்மந்தான், அஃதும் = அதுவும், பிறன் பழிப்பது இல்லாயின் நன்று = மற்றவனுகிய துறவறத்தானை பழிக்காமல் இருப்பது நல்லது.

பொ. ரை: மனிதர்கள் நடத்த வேண்டிய தர்மமே இல்லற வாழ்க்கைதான். ஆனாலும் துறவறம் என்பதை அவமதிக்காமல் இருப்பது நல்லது.

வி-ம்: மனிதப் பிறவிக்கு, தர்மம் என்று சொல்லத் தகுந்ததே இல்லற தர்மம்தான். இருந்தாலும் துறவறம் என்பதும் உண்மை. அதையும் அவமதித்துவிடக் கூடாது. துறவறம் மதிக்கத் தகுந்ததானாலும் மனித இயல்புக்கு அது இரண்டாம் பக்ஷம்தான். ஏன் எனில் உலகம் இல்லறத்தால் தான் நடக்க வேண்டும் — என்பது கருத்து.

எதற்காகத் துறவறத்தை எண்ணுகிறோமோ அந்த பலன் இல்லறத்தைச் சரியாக நடத்தினாலே கிடைக்கும். அது எப்படியெனில்:

50. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப் படும்.

ப. ரை: வையத்துள்=உலகத்தில், வாழ்வாங்கு வாழ்பவன்= வாழவேண்டிய முறையில் வாழ்கிறவன், வான் உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்=ஆகாயத்திலிருக்கிற தெய்வத்தோடு சேர்க்கப்படுவான்.

பொ. ரை: உலகத்தில் மனைவி மக்களோடு இல்லறம் நடத்தி. வாழ வேண்டிய முறையில் வாழ்கின்றவன், அதற்கென்று அவன் வேறு முயற்சி செய்யாமலேயே, வானத்திலுள்ள தெய்வத்தோடு சேர்க்கப்படுவான்.

வி-ம்: வானுறையும் தெய்வத்தை நாடித்தானே துறவிகள் தவம் செய்கிறார்கள். அந்தப் பலனை 'வையத்து வாழ்வாங்கு வாழ்வதே' தரும். ஆதலால் அறன் எனப்படுவதே இல் வாழ்க்கைதான். 'தெய்வத்துள் வைக்கப்படும்' என்பதற்கு இறைவனோடு சேர்க்கப்படுவான் என்று பொருள். இல்லறத்தைச் சரியாக நடத்துகிறவன் கர்மயோகம் செய்கிறவன். அவன் வீடு பெறமுடியும் என்பது கருத்து.

அதி. 6—வாழ்க்கைத்துணைநலம்

[வாழ்க்கைத் துணை நலம் — இல்வாழ்க்கைக்கு இன்றியமையாத மற்றொரு பங்காளியான மனைவிக்கு இருக்க வேண்டிய நற்குணங்கள்.]

51. மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

ப. ரை: மனைத்தக்க=வீட்டுக்குத் தகுந்த, மாண்பு உடையள் ஆகி=சிறப்புடையவளாகி, தன் கொண்டான் வளம் தக்காள்—தன்னை இல்லாளாகக் கொண்டவனுடைய செல்வ நிலைக்குத் தகுந்தபடி நடந்து கொள்பவள், வாழ்க்கைதுணை= இல்வாழ்க்கைக்குத் (தக்க) துணை ஆவாள்.

பொ. ரை: குடும்பத்துக்குத் தகுந்த பெருமையுள்ளவளாகித் தன் கணவனுடைய செல்வ நிலைக்குத் தகுந்த குடித்தனம் நடத்தக் கூடிய மனைவிதான் இல்வாழ்க்கைக்குச் சரியான துணை ஆவாள்.

வி-ம்: இங்கே 'துணை' என்பது 'உபகாரி' என்றபொருளில் சொன்னதல்ல. 'துணை' என்பது, 'துணைப்பதம்', 'துணைக்கரம்' என்பன போல ஒரே காரியத்தை ஒரே நோக்கத்துடன் செய்யும் ஒரே மாதிரியான இரண்டில் ஒன்று என்று பொருள் தருவது. வாழ்க்கைத் துணை=இல்வாழ்க்கைக்குச் சரியான 'ஜோடி' அல்லது 'ஜதை'. தொழில் வேற்றுமையால் விட்டுக்கு வீடு பெருமை வேறுபடும். ஆதலால் 'மனைத்தக்க' என்பது 'தான் புகுந்த விட்டுக்குத்தக்க' என்ற பொருள் தருவது.

குடும்பத்தின் பெருமைக்குக் காப்பாளி மனைவிதான். ஆகையால்:

52. மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை
யெனைமாட்சித் தாயினு மில்.

ப. ரை: மனைமாட்சி=குடும்பத்துக்குப் பெருமை தரக்கூடிய குணங்கள், இல்லாள் கண் இல் ஆயின்=மனைவியிடத்தில் இல்லாமற் போனால், வாழ்க்கை=ஒருவனுடைய வாழ்க்கை, எனைமாட்சித்து ஆயினும் இல்=வேறு என்ன பெருமைகள் உடையதானாலும் பயனற்றதாகும்.

பொ. ரை: குடும்பத்துக்குப் பெருமை உண்டாக்குவதற்கு அவசியமான நற்குணங்கள் தன் மனைவியிடத்தில் இல்லாமற் போனால், அப்படிப்பட்டவனுடைய வாழ்க்கை, வேறு எத்துணை சிறப்புகள் உள்ளதானாலும் பயனற்றதேயாகும்.

வி-ம்: ஒருவனுக்குச் செல்வம், செல்வாக்கு, கல்வி, கலைத்திறம் முதலான பல சிறப்புகள் எவ்வளவு இருந்தாலும் அவனுடைய மனைவியிடத்தில் மனைமாட்சிக்கு அவசியமான குணம் இல்லாவிட்டால் அவனுடைய வாழ்க்கை வீணானதாகும் — என்பது கருத்து.

மற்ற எது இல்லாமற் போனாலும் பாதகமில்லை. மனைமாட்சியுடைய இல்லாள் மட்டும் இருந்தால்:

53. இல்லதெ னில்லவள் மாண்பானா லுள்ளதெ
னில்லவள் மாணாக் கடை.

ப. ரை : இல் அவள் மாண்பு ஆனால் இல்லது என் = இல்லாள் மட்டும் மனைமாட்சி உடையவள் ஆனால் இல்லாதது என்ன? இல் அவள் மாணாக்கடை உள்ளது என் = இல்லாள் மனைமாட்சி இல்லாதவளாகி விட்டால் என்ன இருக்கிறது ?

பொ. ரை : குடும்பத்துக்குப் பெருமை வரக்கூடிய குணங்கள் மட்டும் மனைவியிடத்தில் இருக்குமானால் அந்த வீட்டில் இல்லாதது ஒன்றுமில்லை. அந்த நற்குணங்கள் மனைவியிடத்தில் இல்லாமற் போனால் அந்த வீட்டில் மற்ற என்ன இருந்தாலும் இல்லாதது போலத்தான்.

வி - ம் : மனைமாட்சி தரக்கூடிய நற்குணமுள்ள மனைவி மட்டும் இருப்பாளானால் இல்லாத நலங்களெல்லாம் ஒவ்வொன்றாக உண்டாகும். அந்த மனைமாட்சிக் குணம் மனையாளிடத்தில் இல்லாவிட்டால் அந்த மனையில் ஏற்கெனவே இருக்கிற நலங்களும் இல்லாமற் போகும் – என்பது கருத்து.

அந்த மனைமாட்சி என்ற பெருமைக்கு அடிப்படை எது வென்றால் :

54. பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

ப. ரை : கற்பு என்னும் திண்மை உண்டாகப் பெறின் = கற்பு என்று சொல்லப்படுகிற உறுதி இருக்குமானால், பெண்ணின் பெரும் தக்க யாஉள = பெண்ணைக் காட்டிலும் பெருமையுள்ளது என்ன இருக்கிறது ?

பொ. ரை : கற்பு என்கிற மன உறுதியுள்ள பெண்ணைக் காட்டிலும் பெருமை தரக்கூடிய பொருள் உலகத்தில் என்ன இருக்கிறது ?

வி - ம் : கற்புடைய பெண்ணைக் காட்டிலும் சிறந்த பொருள் ஒன்றுமில்லை. அப்படிப்பட்ட கற்புடைய பெண்ணை வாழ்க்கைத் துணையாக அடைகிறவனுடைய இல்வாழ்க்கை மிகவும் சிறப்புடையதாகும் – என்பது கருத்து.

கற்புடைய மனைவியின் பெருங்குணம் என்னவென்றால் அவள் :

55. தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை.

ப. ரை: தெய்வம் தொழாஅள்=தெய்வத்தை வணங்க மாட்டாள், கொழுநன் தொழுது எழுவாள்=கணவனை வணங்கி எழுந்திருப்பாள், பெய் எனப் பெய்யும் மழை=அவள் பெய் என்று சொன்ன உடனே மழை பெய்யும்.

பொ. ரை: கற்புடைய பெண், தெய்வத்தைக்கூட வணங்க மாட்டாள்; தெய்வத்துக்குப் பதிலாகத் தினந்தினம் காலையில் கணவனைத் தொழுது விட்டுத்தான் படுக்கையை விட்டு எழுந்திருப்பாள். அவள் 'பெய்' என்று சொன்ன உடனேயே மழை பெய்யும்.

வி-ம்: 'கற்பு' என்பது, கணவனைத் தவிர வேறு ஆண்களை இச்சிக்காத குணம் மட்டும் அல்ல; அதற்கும் மேலான ஒரு தெய்விக சக்திவாய்ந்த பெண்மையைத்தான் இங்கே 'கற்பு' என்று சொல்லப்படுகிறது. அந்த சக்தி, கணவனையே தெய்வமாக வணங்கி, அவனுடைய விருப்பமே தன் விருப்பமாகவும், அவனுடைய க்ஷேமமே தன்னுடைய க்ஷேமமாகவும், அவனுடைய நோக்கமே தன்னுடைய நோக்கமாகவும், கொண்டு, தன்னுடைய எல்லா உரிமைகளையும் கணவனுக்குள் அடக்கினதாக நம்பி, அந்த உறுதியில் சிறிதும் பிறழாமல் நடந்து கொள்ளும் பெண்களுக்கு உண்டாவதாக நம்பப்படுவது. அதே அர்த்தத்தில்தான் தலை சிறந்த தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் 'கற்பு' என்ற சொல் கையாளப்பட்டிருக்கிறது. அப்படி நம்புவது சரியா அல்லவா என்ற விஷயம் வேறு. அந்த ஆராய்ச்சியில் இறங்கிவிடக் கூடாது. ஆனால் 'கற்பு' என்ற சொல்லை முன் சொல்லப்பட்ட தெய்விக சக்தியுடைய பெண்மையைக் குறிக்கும் பொருளில்தான் வள்ளுவர் சொல்லியிருக்கிறார் என்பதை மறந்துவிடக்கூடாது. அதே பொருளைத் தொடர்ந்துதான் கம்பரும் 'மாதரார் கற்பின் நின்றன கால மாரியே' என்று பாடியிருக்கிறார். அந்தப் பொருளை ஒத்துக் கொண்டுதான் இந்தக் குறளுக்கு அர்த்தம் செய்ய வேண்டும். அப்படி அர்த்தம் செய்தால் திருவள்ளுவர் பெண்களை ஆண்களுக்கு அடிமைகளாகப் பேசியிருக்கிறார் என்ற அறியாமை அகன்று போகும்.

கணவனைத் தெய்வமாகத் தினமும் வணங்கி, தெய்விக சக்தி பெறும் 'கற்பு' என்பது உலகத்தில் மிகவும் அரிது. அப்படிப்பட்ட கற்புள்ள பெண்ணேதான் வாழ்க்கைத் துணையாக வர வேண்டுமென்று விரும்புவது முடியாத காரியம். ஆகையால் எல்லாப் பெண்களுக்கும் எளிதானது என்று நினைக்கும்படியாகச் சொல்ல வேண்டுமானால், மனைவிக்குக் குறைந்தபட்சமாக இருக்கவேண்டிய குணம்:

56. தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

ப. ரை.: தற்காத்து=தன்னுடைய பெண்மையைத் தானே காத்துக் கொண்டு, தற்கொண்டான் பேணி=தன்னை மணந்து கொண்ட கணவனுடைய நன்மைகளைப் பாதுகாத்து, தகை சான்ற சொல் காத்து=மிக உயர்ந்த சொல்லாகிய கல்யாண வாக்குறுதியைக் காத்து, சோர்விலாள் பெண்=இவற்றில் சோர்ந்து போகாமல் இருப்பவள் மனைவி.

பொ. ரை: தன்னுடைய பெண் பெருமையைப் பிறருடைய உதவியோ அல்லது கட்டாயமோ இல்லாமல் தானே காத்துக் கொள்வதிலும். கணவனுடைய சுக சௌகரியங்களைக் கவனித்துக் கொள்வதிலும், கல்யாண வாக்குறுதியின் சத்தியத்தைக் காப்பாற்றுவதிலும் சோர்ந்து விடாமல் எச்சரிக்கையாக இருப்பவளே சரியான பெண் ஜாதி.

வி – ம்: 'தகை சான்ற சொல்' என்பது 'கற்பெனப் படுவது சொல் திறம்பாமை' என்பதிலுள்ள 'சொல்'—வாக்குறுதி.

அப்படிப்பட்ட பெண்ணுக்குக் காவலே வேண்டியதில்லை. ஏன் எனில்:

57. சிறைகாக்குங் காப்பெவன் செய்யு மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை.

ப. ரை: சிறை காக்கும் காப்பு எவன் செய்யும்=சிறையில் அடைத்ததுபோலப் பூட்டிவைத்துக் காக்கின்ற காவல் என்னத்திற்கு? மகளிர் நிறை காக்கும் காப்பே தலை=பெண்களுக்கு உள்ள கற்பு என்ற மன உறுதியின் காவலே சிறந்தது.

பொ. ரை: பெண்களை வெளியே போகவிடாமல் வீட்டுக்குள்ளேயே அடைத்து வைத்துக் காவல் செய்வது பயனற்றது. தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளும் அவர்களுடைய கற்பு உணர்ச்சிதான் அவர்களுக்குச் சிறந்த காவல்.

வி - ம் 'நிறை' என்பது பெண்களுக்கு அவர்களுடைய உடலின் கூச்சத்தோடு சேர்ந்த தற்காப்பு உணர்ச்சி.

இப்படிப்பட்ட கற்புணர்ச்சி உள்ள பெண்ணை மனைவியாகப் பெற்றால்:

58. பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழு முலகு.

ப. ரை: பெண்டிர் பெரும் சிறப்பு=பெண்களுக்குப் பெரும் சிறப்பு தருவதான கற்புடைய பெண்ணை, பெற்றான் பெறின்= கணவன் மனைவியாக அடைந்தால், புத்தேளிர் வாழும் உலகு பெறுவர்=தேவர்கள் வாழும் உலகத்தை அடைவார்கள்.

பொ. ரை: பெண்களுக்குப் பெருஞ் சிறப்புத் தருவதாகிய கற்பு என்ற மன உறுதியுள்ள பெண்ணை, கணவன் மனைவியாகப் பெறுவானாயின் அப்படிப்பட்ட கணவர்கள் தேவலோக இன்பத்தை அடைவார்கள்.

வி - ம்: கற்புடைய பெண்ணை மனைவியாகப் பெற்ற கணவன் தேவலோக இன்பத்தைப் பெறுவான். கற்புடைய மனைவியுள்ள இல்வாழ்க்கை தேவலோக இன்பத்துக்குச் சமானம் என்பது கருத்து. 'வாழ்க்கைத் துணை நலம்' என்ற அதிகாரம் முழுவதும் பெண்ணின் பெருமையினால் ஆண்கள் அடையக் கூடிய நன்மைகளை மட்டும் சொல்ல நிற்பது. அதனால் ஆண்களுடைய தயவுக்கு ஆளானால் பெண்கள் தேவலோகத்தில் சிறப்படைவார்கள் என்று பொருள் செய்வது பொருத்தமானதல்ல.

இல்வாழ்க்கையில் ஒரு ஆண் பிள்ளை அடைகிற சிறப்பெல்லாம் கற்புடைய மனைவியின் பெருமையினால்தான். ஆகையால் மனைவி கற்புடையவளாக இல்லாமற் போய்விட்டால்:

59. புகழ்புரிந் தில்லிலோர்க் கில்லை யிகழ்வார்முன்
னேறுபோற் பீடு நடை.

ப. ரை: புகழ் புரிந்த இல் இலோர்க்கு=புகழ் தரக்கூடிய கற்புள்ள மனைவி இல்லாதவர்களுக்கு, இகழ்வார்முன்=(அதற்காக அவர்களை) ஏளனம் செய்கிறவர்களுக்கு முன்னால், ஏறு போல் பீடு நடை இல்லை=ஆண் பிள்ளைக்குரிய நிமிர்ந்த நடை இருக்காது.

பொ. ரை: பெண்களுக்குப் புகழ் தருவதான கற்பு என்ற குணம் இல்லாத பெண்ணை மனைவியாகக் கொண்டுள்ள ஒருவனை, அதற்காக யாரேனும் ஏளனம் செய்தால், அப்படி ஏளனம் செய்கிறவர்களுக்கு முன்னால் அவன் ஆண்பிள்ளைக்குரிய கம்பீரத்தோடு நிமிர்ந்து நடக்க முடியாது.

வி - ம்: வேறு எந்தக் காரணத்துக்காக ஒருவன் ஏளனம் செய்யப்பட்டாலும் அதை அவன் அலட்சியமும் செய்ய முடியும்; எதிர்த்துப் பேசவும் தைரியம் வரும். ஆனால் மனைவி கற்புடையவளாக இல்லாத ஒருவனை மற்றவர்கள் யாரேனும் அதற்காக ஏளனம் செய்ய நேர்ந்தால் அவன் தலை குனிய வேண்டியதுதான். 'ஏறு' என்பது நடப்பனவாகிய பிராணிகளின் ஆணுக்குப் பொதுப் பெயரானதால் மனிதனுக்கும் பொருந்தும். அதனால் 'ஏறு போல்' என்பதற்கு 'ஆண் சிங்கம்' என்ற பொருள் செய்ய வேண்டிய கட்டாயமில்லை. கற்பில்லாத பெண்ணை மனைவியாக உடைய ஒருவனை, அதற்

காகப் பிறர் அவனைப் பரிகாசம் செய்தால் அவன் ஆண் பிள்ளைக்குரிய கெம்பீரத்தோடு தலை நிமிர்ந்து நடக்க முடியாது—என்பது கருத்து.

இல்வாழ்க்கை சிறப்பாக நடப்பதற்கு வாழ்க்கைத் துணைவியாகிய மனைவி பெருமையுள்ளவளாக அமைய வேண்டும். அதனால் :

60. மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு.

ப. ரை : மங்கலம் என்ப=குடும்பத்துக்கு நல்வாழ்வு என்று சொல்லப்படுவது, மனை மாட்சி=மனையாளின் பெருமையே. மற்று அதன் நன் கலம் நல் மக்கள் பேறு=அதன்பின் அந்த நல்வாழ்விற்கு நல்ல ஆபரணம் ஆவது நல்ல மக்களைப் பெறுதல்.

பொ. ரை : குடும்பத்திற்கு எல்லா நன்மைகளையும் உண்டாக்கக் கூடிய மங்கலப் பொருள் மனையாளின் பெருமைதான். அந்தப் பெருமைக்கு அழகு தரும் ஆபரணமாவது நல்ல மக்களைப் பெறுவது.

அதி. 7—மக்கட் பேறு

[மக்கள் பேறு=மக்களாகிய செல்வம்–புத்திர பாக்கியம்]

61. பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

ப. ரை : பெறும் அவற்றுள்=பெறவேண்டும் பொருள்களுக்குள், அறிவு அறிந்த மக்கள் பேறு அல்ல பிற=அறிய வேண்டியதை அறியக்கூடிய மக்களைப் பெறுவதை அல்லாத வேறு எதுவும், யாம் அறிவது இல்லை=நாம் அறியக் கூடியது இல்லை.

பொ. ரை : நாம் அடைய வேண்டுமென்று விரும்புகின்ற பொருள்களுக்குள் நல்லறிவுடைய மக்களைப் பெறுவதைக் காட்டிலும் சிறந்தது வேறு இருப்பதாக நமக்குத் தெரியவில்லை.

வி - ம் : 'அறிவறிந்த மக்கள்' என்பதற்கு 'அறிய வேண்டியவற்றை அறியக் கூடிய புத்தி கூர்மையுள்ள மக்கள்' என்பது மட்டும் தான் அர்த்தம். 'அறிவறிந்த மக்கள்' என்பது

பெண் மக்களை நீக்கி, ஆண் மக்களை மட்டும் தான் குறித்தது என்பது சரியல்ல. 'மக்கட் பேறு' என்ற அதிகாரம் ஆண் மக்கள் வேறு, பெண் மக்கள் வேறு என்று பிரித்து எழுதப் பட்டிருக்கிறதென்றால் திருவள்ளுவர் பெருமைக்கு நாம் செய்யக்கூடிய அநியாயம் அதைவிட வேறில்லை. மேலும் 'அறிவறிந்த' என்பது, இம்மை மறுமை என்பவைகளுக்கான 'அறிவை அறிந்த' என்று நீட்டிப் பொருள் செய்தாலும் ஆண்கள் மட்டும்தானா இம்மை மறுமைகளை அறிய வேண்டியவர்கள்? பெண்கள் அவற்றை அறிய வேண்டாமா? அறியக் கூடாதா? அல்லது அறியக் கூடிய புத்தி கூர்மை பெண்களுக்கு இருக்க முடியாதா? 'அறிவறிந்த' என்பதற்கு ஆண் மக்கள் பெற்றோருக்குச் செய்ய வேண்டிய நீர்க் கடன் (திவசம் முதலியன) என்ற 'அறிவை அறிந்த' என்று பொருள் கொள்வதற்குப் பதங்களில் இடமில்லை. ஆண் மக்கள் அறிய வேண்டிய அறிவு, நீர்க்கடன் செய்வது மட்டுமல்ல. மேலும் நீர்க்கடன் என்பது ஒரு சாராருடைய சடங்கு நம்பிக்கை. திருவள்ளுவர் அப்படிப்பட்ட நம்பிக்கைகளை அவமதிப்பதில்லையானாலும் சடங்குகளை அவர் திணிப்பதில்லை. அதனால்தான் எல்லா மதத்தினரும் திருக்குறளைப் பொது மறையாகப் போற்றுகின்றார்கள். எது எப்படியிருந்தாலும் ஆண் மக்கள்தாம் 'அறிவறிந்த மக்கள்' என்று வள்ளுவர் எண்ணியிருக்கவே முடியாது.

நல்லறிவுடைய மக்களைப் பெற்றால்:

**62. எழுபிறப்புந் தீயவை தீண்டா பழிபிறங்காப்
பண்புடை மக்கட் பெறின்.**

ப. ரை: பழிபிறங்கா பண்பு உடை மக்கள் பெறின் = பழிபாவத்திற்கு ஆளாகாத குணமுடைய மக்களைப் பெற்றால், எழு பிறப்பும் தீயவை தீண்டா = ஏழு பிறவிகள் வரையிலும் துன்பங்கள் தொடமாட்டா.

பொ. ரை: பழிபாவங்களுக்கு ஆளாகிவிடாத நல்ல குணமுள்ள மக்களைப் பெற்றால், அவர்களைப் பெற்ற தந்தை-தாயருக்கு அவர்களுடைய மறு பிறவிகளில் ஏழு பிறவிகள் வரையிலும் துன்பம் வராது.

வி-ம்: 'பழி பிறங்காப் பண்புடைய மக்களைப்' பெற்றவர்கள் ஏழு ஜென்மங்களுக்குத் துன்பமில்லாமல் இருப்பார்கள் என்பதனால் இந்தப் பாட்டிலும் மறுமைப் பயன் இருக்கிறது. அதனால் 'பழி பிறங்காப் பண்புடை மக்கள்' என்பதற்கும் 'அறிவறிந்த மக்கள்' என்பதற்குச் சொன்னது போல 'ஆண் மக்கள்' என்ற பொருள் தான் சொல்ல வேண்டியதாகும். அப்படியானால் ஆண் மக்கள் மட்டும்தானா 'பழி

பிறங்காப் பண்புடைய'வர்களாக இருக்க வேண்டும்? இருக்க முடியும்? பெண் மக்கள் அப்படி இருக்கக் கூடாதா?.... என்ற கேள்விகள் பிறக்கின்றன. ஆதலால் 'அறிவறிந்த மக்கள்.' 'பழி பிறங்காப் பண்புடை மக்கள்' என்ற இரண்டும் ஆண்—பெண் இரண்டுக்கும் பொதுவாகும். 'எழு பிறப்பும்' என்பது வினைப் பயன் தொடர்பாக இனி வரக்கூடிய ஏழு பிறப்புகளிலும் என்ற பொருள் தருவது. இந்த 'எழு பிறப்பு' என்பதன் தத்துவத்தை, வினைப் பயன்களையும், பிறவிகளையும் விரித்துக் கூறும் பிரத்யேக சாஸ்திரங்களில் ஆராய்ந்து கொள்ள வேண்டியது. அதை விளங்க வைக்க இங்கே இடந் தராது. 'எழு பிறப்பு' 'எழுமை' என்ற நம்பிக்கை நெடுங் காலமாகத் தமிழ் மக்களுக்குள் பழக்கத்திலிருந்து வருகிற பதங்கள். பாவ புண்ணியங்களின் பலன்களை நினைப்பூட்ட வேண்டிய சந்தர்ப்பங்களிலெல்லாம் இச்சொற்கள் பயன் படுத்தப்பட்டு வந்திருக்கின்றன. அதனால்தான் பாமர மக்களும் 'ஏழு பிறப்புகள்' என்பது என்ன என்ற ஆராய்ச்சி இல்லாமலேயேகூட நல்வினை தீவினை என்பவைகளையும் மறு பிறப்புகளையும் நம்பி நடக்கிறார்கள். அந்த அளவில் மட்டும் இதை வைத்துக் கொண்டாலும் குற்றமில்லை. அறிவுக்காக ஆராய்கின்றவர்கள் அதற்கான சாஸ்திரங்களைப் பார்க்க வேண்டும். 'எழு பிறப்பு' என்பதற்கு ஏழு தலைமுறை என்று மட்டும் கொள்வது. 'எழு வகைப் பிறவிகள்' என்பதைக் காட்டிலும் நல்லது.

'அறிவறிந்து பழி பிறங்காப் பண்புடைய' மக்களைப் பெற்றால் இனிமேல் வரக்கூடிய ஏழு பிறவிகளிலும் நமக்குத் துன்பம் வராது என்பது மெய்யானாலும், அப்படிப்பட்ட நன் மக்களை இந்தப் பிறவியில் அடைவதற்கும் நாம் முற்பிறப்பிற் செய்த நல்வினைப் பயன் இருக்க வேண்டும். ஆகையால் நன் மக்களைப் பெறுவதும் நம்முடைய வினைகளைப் பொறுத்ததே யாகும். ஆதலால் நம்முடைய தர்ம ஒழுக்கங்களைத்தான் நாம் கவனிக்க வேண்டும். ஏனென்றால்:

63. தம்பொருளென்பதம் மக்க ளவர்பொருள்
டந்தம் வினையான் வரும்.

ப. ரை: தம்பொருள் என்ப தம் மக்கள்=தம்முடைய செல்வம் எனப்படுவது தம்முடைய மக்களே; அவர் பொருள்=அந்த மக்கள் பொருளாக உதவும் தன்மை, தம் தம் வினையான் வரும்=தங்கள் தங்களுடைய வினைக்குத் தக்கமாதிரி அமையும்.

பொ. ரை: நம்முடைய மக்கள் நமக்குச் செல்வம். அந்த மக்கள் நமக்குச் செல்வம் போலப் பல நன்மைகளை உண்டாக்கக்

கூடிய நற்குண நற்செய்கைகள் அவர்களுக்கு அமைவதும் நம்முடைய நல்வினை தீவினைகளைப் பொறுத்ததுதான்.

வி-ம்: 'தம் தம் வினையான் வரும்' என்பதிலுள்ள 'தம்' என்ற பதங்களை 'தம் பொருள் என்ப தம் மக்கள்' என்பதிலுள்ள 'தம்' என்ற பதங்களோடுதான் சேர்த்துப் பொருள் செய்ய வேண்டும். 'அவர் பொருள்' என்பதிலுள்ள 'பொருள்' என்பதற்கு 'குணம்' என்று அர்த்தம். நன்மக்களைப் பெற்றால் அடுத்த பிறவிகளில் நல்ல கதி கிடைக்கும் என்பதற்கும், முற்பிறப்பில் நாம் அதற்கான நல்வினைகளைச் செய்திருக்க வேண்டும் என்பது கருத்து.

முன் பிறப்பு பின் பிறப்பு என்ற நம்பிக்கைகள் ஒருபுறமிருக்கட்டும். இப்பிறப்பில் மக்களைப் பெறுவதால் நாம் அடையும் இன்பத்தை அனுபவிப்போம்:

64. அமிழ்தினு மாற்ற வினிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்.

ப. ரை: தம் மக்கள்=தாம் பெற்ற குழந்தைகளின், சிறு கை அளாவிய கூழ்=இளங் கைகளால் குழப்பப்பட்ட கூழும். அமிழ்தினும் ஆற்ற இனிதே=அமிர்தத்தைக் காட்டிலும் அதிகமான சுவை தரக்கூடியதாகும்.

பொ. ரை: தாம் பெற்ற குழந்தைகள் அவர்களுடைய இளங் கைகளைப் போட்டுக் குழப்புகிற உணவு, வெறும் கூழாக இருந்தாலும் அது தேவாமிர்தத்தைக் காட்டிலும் சுவை உள்ளதாக இருக்கும்.

வி-ம்: 'கூழ்' எல்லா உணவுக்கும் பொதுப்பெயராகப் பொருள் கொள்ளலாம் என்றாலும், வழக்கத்தில் கரைத்துக் குடிக்கிற உணவுக்குத்தான் 'கூழ்' என்று பெயர். இந்த உணவில் ஆறு சுவைகள் சேராது. ஒரே சுவையாகத்தான் இருக்கும். அப்படிப்பட்ட கூழானாலும் தம் குழந்தையின் இளங் கைகளால் உழப்பப்பட்டதானால் தேவாமிர்தத்தைக் காட்டிலும் சுவையுள்ளதாக இருக்கும்—என்பது கருத்து.

மேலும்:

65. மக்கண்மெய் தீண்ட லுடற்கின்ப மற்றவர்
சொற்கேட்ட லின்பம் செவிக்கு.

ப. ரை: மக்கள் மெய் தீண்டல் உடற்கு இன்பம்=நாம் பெற்ற குழந்தைகளின் உடல் நம்மேல் படுவது நம்முடைய உடலுக்கு

இன்பம், மற்று அவர் சொல் கேட்டல் இன்பம் செவிக்கு=அக் குழந்தைகளின் பேச்சைக் கேட்பது காதுக்கு இன்பம்.

பொ. ரை: நாம் பெற்ற குழந்தைகளின் உடல் நம்முடைய உடலின்மேற் படுவது நம்முடைய உடல் உணர்ச்சிக்கு இன்பம் தரக்கூடியது. அவர்களுடைய பேச்சைக் கேட்பது நம்முடைய காதுக்கு இன்பம் தரக்கூடியது.

வி-ம்: 'மக்கள் மெய் தீண்டல்' என்பது பெற்றோர்கள் மக்களைத் தீண்டினாலும் சரி, அல்லது அவர்கள் பெற்ற மக்கள் வந்து பெற்றோரைத் தீண்டினாலும் சரி இரண்டும் ஒரே இன்பம்.

மக்கள் 'சொற் கேட்டல் இன்பம் செவிக்கு' என்பதில் சொல் என்பது அர்த்தமுள்ள உருப்படியான வார்த்தையாகும். அந்த அர்த்தமுள்ள உருப்படியான வார்த்தைகளடங்கிய பேச்சைக் காட்டிலும் இன்பம் தருவது:

66. குழலினி தியாழினி தென்பதம் மக்கண்
மழலைச்சொற் கேளா தவர்.

ப. ரை: தம் மக்கள் மழலை சொல் கேளாதவர்=தாம் பெற்ற குழந்தைகளின் குதலைப் பேச்சைக் கேளாதவர்கள். குழல் இனிது யாழ் இனிது என்ப=புல்லாங்குழல் இனிமையாக இருக்கிறது, வீணை இனிமையாக இருக்கிறது என்பார்கள்.

பொ. ரை: தாம் பெற்ற குழந்தைகளின் குதலைப் பேச்சைக் கேளாதவர்கள்தாம் குழலோசையும் வீணை வாத்தியமும் இனிமையானவை என்று சொல்லுவார்கள்.

வி-ம்: தலை சிறந்த இசைக் கருவிகளாகிய குழலையும் யாழையும் சொல்லிவிட்டதால், பொதுவாக இசையும் சிறப்பாக மற்ற இசைக் கருவிகளும் அவற்றுள் அடங்கும். செவி இன்பத்துக்கென்றே செய்யப்படுகிற இசையையும் இசைக் கருவிகளின் நாதத்தையும் காட்டிலும் இன்பம் தருவது தாம் பெற்ற குழந்தைகளின் மழலைச் சொல்—என்பது கருத்து.

அந்தக் குழந்தைகளை வளர்த்து:

67. தந்தை மகற்காற்று நன்றி யவையத்து
முந்தி யிருப்பச் செயல்.

ப. ரை: தந்தை மகற்கு ஆற்றும் நன்றி=தந்தை மகனுக்குச் செய்ய வேண்டிய நன்மை, அவையத்து முந்தி இருப்ப

செயல்=சபையில் முதன்மையானவருள் ஒருவனாக இருக்கும்படிச் செய்து வைப்பது.

பொ. ரை: தகப்பன் மகனுக்குச் செய்ய வேண்டிய நன்மை எதுவென்றால், மகன் கற்றறிந்தார் சபையில் சிறப்புடையவனாக விளங்கும்படி (நல்ல கல்வி கேள்வி அறிவுடையவனாகச்) செய்து வைப்பதுதான்.

வி-ம்: 'தந்தை மகனுக்கு ஆற்றும் நன்றி' என்றதனால் ஆண் மக்களுக்குத் தகப்பன் செய்யும் நல்ல காரியம் என்பது வெளிப்படை. அப்படியானால் பெண் மக்களுக்கு அப்படி ஒன்றும் தகப்பன் செய்ய வேண்டாமா என்ற கேள்வி பிறக்கின்றது. அதை நினைத்துப் பெண் மக்களைக் குறைவாகக் கருதப்பட்டிருக்கிறதாக எண்ணிவிடக் கூடாது. இங்கே ஒரு சபையில் மகன் முன்வரிசையில் இருக்கும்படிச் செய்ய வேண்டும் என்பதுதான் முக்கியம். கல்வி, கேள்வியெல்லாம் அந்த முக்கிய காரியத்துக்கு வேண்டிய உபகரணங்கள்தான். ஆணைப்போலப் பெண்ணும் சபையில் முன்வரிசையில் இருக்க வேண்டும் என்பது தமிழ் மரபல்ல. ஏன் என்றால் ஆண் இயல்பு வேறு, பெண் இயல்பு வேறு என்பதற்கிணங்க வீட்டை விட்டு வெளியே போய் (ஊருக்கு வெளியிலும்) பொருள் சம்பாதிப்பது, விவகாரம் பேசுவது, அரசியல் செய்வது, போர் புரிவது முதலான வெளிக் காரியங்கள் முழுவதும் ஆண்களைச் சேர்ந்ததென்றும், கணவனைப் பேணுவது, மக்களை வளர்ப்பது, விருந்தினரைக் கவனிப்பது, நலிந்தவர்களுக்கு உதவி செய்வது முதலாகிய வீட்டுக்குச் சம்பந்தப்பட்ட சகல காரியங்களையும் கவனித்துக் கொள்ள வேண்டியது மட்டும் பெண்களின் வேலை என்பதும் தமிழ் சமுதாயத்தின் நாகரிகம். வீட்டோடிருந்து குடித்தனம் நடத்துவதுதான் இல்லறம். அந்த இல்லறத்தின் அதிகாரி பெண்தான். கணவனுடைய நிலைமைக்குத் தக்கபடி அவனுள் ஐக்கியமாகிவிட்ட மற்றொரு பாதியாகத்தான் மனைவி நடந்துகொள்ள வேண்டும் என்பது தமிழ் வழக்கம். ஆதலால் சபைக்குப் போய் விவாதிப்பதோ அல்லது போதிப்பதோ ஆண் மக்களுடைய வேலையாகக் கருதித்தான் இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. இக்காலத்தில் பெண்களும் சபையில் முன்னணியில் இருக்கிறார்கள் என்பதை மட்டும் வைத்துக் கொண்டு இதைச் சீர்தூக்கக் கூடாது. திருக்குறளில் பெண்களுக்கு மட்டும் என்று சொல்லப்பட்டிருக்கிற பகுதியைத் தவிர மற்ற இடங்களில் சொல்லுவதெல்லாம் இருபாலாருக்கும் பொதுவேயாகும். இதே குறளில் 'தந்தை மகற் காற்றும் நன்றி' என்பதிலேயே தாயும் சேர்ந்ததுதான். இந்த நன்றி தந்தை மட்டும் செய்கிற நன்றியல்ல.

அப்படி, கற்றோர் நிறைந்த சபையில் மகன் முதன்மை பெற்றவர்கள் வரிசையில் இருப்பதைக் கண்டபோது பெற்றோர்கள் அந்த மகனைப் பெற்றதில் பெருமையடைந்து இன்புறுவார்கள். எப்படியெனில் :

**68. தம்மிற்றம் மக்க ளறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லா மினிது.**

ப. ரை : தம்மின் தம் மக்கள் அறிவுடைமை = தம்மைக் காட்டிலும் தம்முடைய மக்கள் அறிவுடையவர்களாக இருப்பதைக் காண்பது, மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது = உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுக்கும் இன்பம் தரக்கூடியது.

பொ. ரை : தம்மைக் காட்டிலும் தம்முடைய மக்கள் அறிவுடையவர்களாக (மதிக்கப்பட்டு சபையின் முன்னணியில் இடம் பெற்று) இருப்பதைக் காண்பது உலகத்தில் மக்களைப் பெற்ற எல்லாருக்கும் இன்பம் உண்டாக்கக் கூடியது.

வி - ம் : 'மக்கட் பேறு' என்ற இந்த அதிகாரம் மக்களைப் பெறுவதனால் பெற்றோர்கள் அடையக்கூடிய நன்மையையும் இன்பத்தையும் மட்டும் சொல்ல வந்தது. ஆதலால் மக்கள் அறிவுடையவர்களாக இருப்பதைக் கண்டு பெற்றோர்களைக் காட்டிலும் சபையிலுள்ளவர்கள் அதிகமாக இன்புறுவார்கள் என்று பொருள் செய்வது சரியல்ல. தம்மின் தம் மக்கள் என்றதனாலும் 'மன்னுயிர்க்கெல்லாம்' என்றதனாலும் இந்த இன்பம் அந்த மகனைப் பெற்ற தந்தை தாய் இருவருக்கும் பொதுவானது.

தம்முடைய மகன் கற்றோர் சபையில் முன்னிடம் பெற்ற அறிவாளியாக விளங்குவதைக் கண்டு தந்தையும் தாயும் இன்பமடைவார்கள். ஆனாலும் மகன் அறிவுடையவன் என்பதற்காக மெச்சப்படும்போது அடைகிற இன்பத்தைக் காட்டிலும் இன்னொரு காரணத்துக்காக அவன் மெச்சப்படுகிற போது, தாயானவள் இன்னும் அதிக மகிழ்ச்சியடைவாள். அது என்னவென்றால் :

**69. ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்.**

ப. ரை : தன் மகனை சான்றோன் என கேட்ட தாய் = தன் மகனை மிக உயர்ந்த குணங்களுள்ள நல்லவன் என்று பிறர் சொல்லுவதைக் கேட்ட தாயானவள், ஈன்ற பொழுதின் பெரிது உவக்கும் = பெற்றெடுத்தபோது அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிகமான பூரிப்பை அடைவாள்.

பொ. ரை: மிக உயர்ந்த குணங்களுள்ள நல்லவன் என்று ஊரார் தன்னுடைய மகனைப் புகழ்ந்து பேசுவது காதில் விழுகிறபோது, தாயானவள் அந்த மகனைப் பெற்றெடுத்த காலத்தில் அடைந்த மகிழ்ச்சியைக் காட்டிலும் அதிகமான மகிழ்ச்சியை அடைவாள்.

வி - ம். தன் மகனைச் சான்றோன் என்று பிறர் சொல்லக் கேட்பதில் தாய்க்கு மட்டுந்தானா இன்பம், தந்தைக்கு இல்லையா, ஏன் இதில் தாயை மட்டும் சொல்லப்பட்டிருக்கிறது, தந்தையைச் சொன்னாலே தாயையும் சேருமே, ஏன் பிரித்துச் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், ஆண்மையின் உணர்ச்சிக்கும் பெண்மையின் உணர்ச்சிக்கும் வேற்றுமை உண்டு என்பதைக் குறிப்பிடவே. தந்தை தன்னுடைய மகன் கல்வியறிவு, கலைத்திறம், சாமர்த்தியம், சம்பாதனை, ஆண்மை, ஆற்றல் முதலியவற்றில் சிறப்புடையவனாக இருப்பதைக் கண்டு மகிழ்வதைப் போல் வெறும் நல்லவன் என்பதற்காக மட்டும் அவ்வளவு மகிழ்ச்சியடைந்துவிடமாட்டான். ஆனால் தாயானவள் தன் மகனுக்கு மற்றச் சிறப்புகள் இல்லாவிட்டாலும் அவன் வெகு நல்லவன் என்பதில் மட்டுமே மிக்க மகிழ்ச்சி கொள்ளுவாள். அதுவும் ஊரார் அவனை வெகு நல்லவன் என்று மெச்சுவதைக் கேட்கிறபோதெல்லாம் ஏற்கனவே இயல்பாக உள்ள மகிழ்ச்சி அதிகமாகும். அன்பு, ஆதரவு, ஈரம், இரக்கம், உபகாரம் என்று சொல்லப்படுகிற குணங்கள் பெண்மைக்கே அதிகம் என்பது இயற்கையானதால் மகனுடைய சான்றாண்மையில் தந்தையைக் காட்டிலும் தாயே அதிக இன்பமடைவாள் என்பது கருத்து.

இப்படி மகிழும் தாய் தந்தையர்க்கு:

70. மகன்றந்தைக் காற்று முதவி யிவன்றந்தை
யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்.

ப. ரை: மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி = மகன் தந்தைக்குச் செய்யக்கூடிய உதவி, 'இவன் தந்தை என் நோற்றான் கொல்' என்னும் சொல் = 'இந்த மகனைப் பெற இவனுடைய தந்தை என்ன தவம் செய்தானோ' என்று ஊரார் சொல்லும் வார்த்தை.

பொ. ரை: மகன் தந்தைக்குச் செய்ய வேண்டிய பிரதியுபகாரம் என்னவென்றால், 'இப்படிப்பட்ட கல்வியறிவும் சான்றாண்மையும் உள்ள மகனைப் பெற இவனுடைய தந்தை என்ன தவம் செய்தானோ' என்று உலகத்தார் சொல்லும்படியான புகழை உண்டாக்கி வைப்பதுதான்.

வி - ம் : உலகத்தார் அப்படிப் புகழும்படியாக மகன் நடந்து கொள்ள வேண்டியதுதான் மகன் செய்யக்கூடிய உதவி. இந்தப் புகழ் தந்தைக்கு மட்டும் அல்ல, தாய்க்கும் சேரும். தாயானவள் தந்தையின் சரிபாதியாக அவனோடு ஒட்டிய பகுதியானதால் தாய்க்குத் தனியே சொல்ல வேண்டியதில்லை.

இந்தப் புகழைத் தாய் தந்தையர் பெறுவதுதான் மக்களைப் பெறுவதனால் அடையக் கூடிய பயன்.

அதி. 8—அன்புடைமை

[வாழ்க்கைத் துணையான மனைவியுடன் குழந்தைகளைப் பெற்றுக் குடும்பம் நடத்துகிறவர்கள் தம்முடன் பழக நேருகின்ற எல்லாரிடத்திலும் அன்பாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவது இந்த 'அன்புடைமை' அதிகாரம். இல்லறத்துக்கு இன்றியமையாதது அன்புடைமை. அந்த அன்பு. மனைவி மக்களிடம் காட்டும் அன்பல்ல. மனைவி மக்கள் அல்லாத மற்றவரிடம் காட்டும் அன்பே, அன்புடைமையாகும்]

71. அன்பிற்கு முண்டோ வடைக்குந்தா ழார்வலர்
புன்கணீர் பூச றரும்.

ப. ரை : அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்=அன்பு என்பதை அடைத்து வைக்கத் தாழ்ப்பாளும் உண்டா? ஆர்வலர்=அன்புடையவர்களுடைய, புன் கண் நீர் பூசல் தரும்= சிறிதளவு கண்ணீரே ஓசையிட்டு அதைக் காட்டிவிடும்.

பொ. ரை : அன்பு உணர்ச்சியைத் தாழ் போட்டு அடைத்து வைத்திருக்க முடியாது. அன்புள்ளவர்களுடைய துளியளவான கண்ணீரே அதைக் கூச்சலிட்டு அறிவிப்பது போலப் பிறருக்குக் காட்டிவிடும்.

வி - ம் : அன்பு என்பது இயல்பாகவே மனிதருக்குள் இருக்கும் பச்சாத்தாப உணர்ச்சி. அது பிறர் துன்பப்படுவதை அறிந்த உடனேயே அடக்கிவைக்க முடியாதபடி துடித்தோடி வந்து துன்பப்படுகின்றவர்கள் துயரத்தில் பங்கு கொள்ளும். அப்போது தானாகவே கண் கலங்கும். அந்தக் கண் கலக்கத்தில் வெளிப்படுகின்ற சிறுதுளி கண்ணீரே அன்புடைமையைக் காட்டிவிடும். பிறருடைய துன்பத்தைக் கண்டு கண் கலங்குவதே அன்புடைமைக்கு அறிகுறி—என்பது கருத்து.

அந்த அன்பு இல்லாதவர்களும் உண்டு. இல்லாதவர்களுக்கும் உள்ளவர்களுக்கும் என்ன வேற்றுமை யென்றால் :

72. அன்பிலா ரெல்லாந் தமக்குரிய ரன்புடையா
ரென்பு முரியர் பிறர்க்கு.

ப. ரை : அன்பு இலார்=அன்பில்லாதவர்கள், எல்லாம் தமக்குரியர்=எல்லாப் பொருள்களும் தமக்கு மட்டும் தான் உரியவை என்று எண்ணுவார்கள், அன்பு உடையார்=அன்புள்ளவர்கள், என்பும் பிறர்க்கு உரியர்=தம்முடைய எலும்பைக் கூட பிறருக்கு உரிமையாக்கிவிடுவார்கள்.

பொ. ரை: அன்பில்லாதவர்கள் தம்முடையதானாலும் பிறருடையதானாலும் எல்லாப் பொருள்களும் தமக்கே உரியனவாக எண்ணுவார்கள். ஆனால் அன்புள்ளவர்கள் பிறருடைய துன்பங்களைப் போக்கத் தம்முடைய எலும்பைக் கூடக் கொடுத்து விடுவார்கள்.

வி - ம்: அன்பில்லாமையின் உச்சம் எதையும் எக்காரணத்தாலும் இன்னொருவருக்குத் தராது. அன்புடைமையின் உச்சம் பிறருக்கு உதவி செய்யத் தன்னிடத்திலுள்ள எதையும் கொடுத்துவிட எப்போதும் தயங்காது. 'என்பும்' கொடுத்து விடுவார்கள் என்பது உயிரையும் தருவார்கள் என்ற பொருளில்தான். ஆனால் 'என்பும்' என்ற பதத்திற்காக ஒரு புறாவுக்காக உடல் முழுவதையும் ஈடாகத் தந்த சிபிச் சக்ரவர்த்தி கதையையும், தேவர்களுடைய துன்பங்களை நீக்க இந்திரனுக்குத் தன் முதுகெலும்பைக் கொடுத்த ததீசி முனிவருடைய கதையையும் உதாரணமாகப் பொருள் சொல்லுவது வழக்கம். 'என்பு' என்பதற்கு 'உடம்பு' என்றும் 'எலும்பு' என்றும் அர்த்தம் உண்டு.

அன்புடைமைதான் மனிதனை மனிதனாக்குவது :

73. அன்போ டியைந்த வழக்கென்ப வாருயிர்க்
கென்போ டியைந்த தொடர்பு

ப. ரை : ஆர் உயிர்க்கு=பெறுதற்கு அரியதான மனிதப் பிறப்புக்கு, என்போடு இயைந்த தொடர்பு=எலும்போடு சேர்ந்து பிறந்திருக்கிற பற்று, அன்போடு இயைந்த வழக்கு என்ப=அன்பு என்பதோடு ஒட்டியிருக்கிற நியாயந்தான் என்பார்கள்.

பொ. ரை : மனிதப் பிறவி மற்றப் பிறவிகளுக் கெல்லாம் உயர்ந்த பிறவியென்றும், அடைவதற்கு அரிய பிறவியென்

றும் சொல்லப்படுவது எதனால் என்றால். மனிதப் பிறவிக்கு அதன் எலும்போடு சேர்ந்து பிறந்திருக்கிற அன்பு உணர்ச்சியிருக்கிற காரணத்தால்தான்.

வி-ம்: மனிதர்களுக்குத்தான் சேர்ந்து வாழும் சமூக உணர்ச்சி உண்டு. அந்த உணர்ச்சி இயற்கையாகவே மனித சரீரத்தில் எலும்போடு கலந்திருக்கிற அன்பு என்ற குணத்தினால் தான் உண்டாகிறது. 'ஆருயிர்க்கு' என்றதனால் மனிதப் பிறப்பைக் குறிக்கும்.

சமூக உணர்ச்சி அன்பினால் வளர்வது எப்படியென்றால்:

74. அன்பீனு மார்வ முடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு.

ப. ரை: அன்பு ஈனும் ஆர்வம் உடைமை=அன்பு என்பது பிறரால் விரும்பப்படும் தன்மையை உண்டுபண்ணும். அது ஈனும் நண்பு என்னும் நாடா சிறப்பு=அந்த விரும்பப்படும் தன்மை நட்பு என்று சொல்லப்படும் சிறந்த உறவைத் தேடாமலேயே உண்டாக்கிவைக்கும்.

பொ. ரை: அன்பு என்பதுதான் ஒருவரை யொருவர் விரும்புகின்ற பிரியத்தை உண்டாக்குவது. அந்தப் பிரியத்திலிருந்துதான் சினேகம் என்ற உறவு தானாகவே உண்டாகிறது.

வி-ம்: மனிதர்கள் ஒருவரோடொருவர் குலவி வாழ்வதற்கு அன்புதான் காரணம். 'நாடாச் சிறப்பு' என்பது தேடாமல் வரும் நட்பு உறவு. நாடிவரும் நட்பு அன்பினால் வருவதல்ல. ஒரு காரியத்தை நாடி அதற்காக நட்பு கொள்ள முயல்வது 'நாடாச் சிறப்'பல்ல.

அன்பில்லையானால் வாழ்க்கையில் சிறப்பில்லை. அதனால் தான்:

75. அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்
தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு.

ப. ரை: வையகத்து=உலகத்தில், இன்புற்றார்எய்தும் சிறப்பு= இன்பமாக வாழ்ந்தவர்கள் அடையும் புகழ், அன்புற்று அமர்ந்த வழக்கு என்ப=யாருக்கும் அன்பாக இருப்பதைக் கடைப்பிடித்து நின்ற தன்மையினால்தான் என்று சொல்லப்படும்.

பொ. ரை: உலகத்தை இன்பமாக அனுபவித்துப் புகழ் பெற்றவர்களுடைய சிறப்பெல்லாம் அவர்கள் அன்பைக் கடைப்பிடித்து நடந்துகொண்ட காரணத்தினால்தான்.

வி-ம்: சரியான முறையில் இல்வாழ்க்கை இன்பமும் அனுபவித்து உலகத்தில் கீர்த்தியும் அடைந்தவர்களுடைய பெருமையெல்லாம் அவர்கள் யாருக்கும் அன்பு தவருமல் நடந்து கொண்டார்கள் என்பதுதான். 'இன்புற்ருர் வையகத்தில் எய்தும் சிறப்பு' என்று கொண்டு 'உலகத்தில் இன்புற்றவர்கள் அடையும் சிறப்பு' என்பதுதான் பயனுடைத்து.

'அறமெனப் பட்டதே இல்வாழ்க்கை'. அந்த இல்வாழ்க்கைக்குச் சிறப்புண்டாக்குவது அன்புதான். அன்பு என்பது பிறரிடம் கொண்ட பச்சாத்தாபத்தினுல் அவர்களுக்கு உதவி செய்வதில் வெளிப்படுகின்றது. அந்த உதவி குற்றமான காரியங்களின் மூலமாகச் செய்தால் அது அன்பு செய்ததாகாது. ஏன் எனில்:

76. அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார்
மறத்திற்கு ம:தே துணை.

ப. ரை: அறத்திற்கே அன்பு சார்பு=தர்மம் என்பதற்கேதான் அன்பு ஆதாரம், மறத்துக்கும் அ:தே துணை என்ப அறியார்=அதர்மத்திற்கும் அதுவே துணை என்பவர்கள் அறியாதவர்கள்.

பொ. ரை: தர்மமான நல்ல காரியங்களைச் செய்வதுதான் அன்பு என்பதைச் சேர்ந்தது. அதர்மமான தீய காரியங்களையும் அன்புக்காகச் செய்யலாம் என்பவர்கள் அறியாதவர்கள்.

வி-ம்: ஒருவருக்கு உதவி செய்வதற்காக வேெருருவருக்குத் தீங்கு செய்தால் அந்த உதவி அன்பல்ல. ஒருவருக்கு அன்பு போல இன்னெருவருக்குத் துன்பம் செய்வதில் முடிகிறது. அது அறமும் அல்ல. அன்புடைமையும் அல்ல. 'அறத்திற்கே அன்பு சார்பு' என்பதிலுள்ள 'ஏ' காரம் அறமாகிய நல்ல காரியத்துக்கு மட்டும்தான் அன்பு சம்பந்தப்பட்டது என்பதை அழுத்தமாகக் காட்டுகிறது.

அறத்திற்கே சார்பான அன்பில்லாதவர்களை:

77. என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை யறம்

ப. ரை: என்பு இல் அதனை வெய்யில் போல=எலும்பு இல்லாத உயிரை வெயில் எரிப்பது போல, அன்பு இல் அதனை அறம் காயும்=அன்பு இல்லாத உயிரை அறம் எரிக்கும்.

பொ. ரை: சூரிய வெப்பம் எலும்பில்லாத உயிர்களாகிய புழுக்களைத் துடி துடிக்கச் செய்வது போல, தருமம் என்ற தெய்வம் அன்பில்லாத உயிர்களாகிய மனிதர்களைத் துடிதுடிக்கச் செய்து விடும்.

வி - ம்: புழுக்களுக்கு எலும்பில்லாததால் வெயிலில் சிக்கிக் கொண்டால் தப்பி ஓட முடியாமல் துடித்துச் சாக வேண்டியதுதான். எலும்புடைய பிராணிகளுக்குச் சூரிய வெப்பத்தை ஓரளவு தாங்கக் கூடிய பாதங்கள் உண்டு, உடலை சூரிய வெப்பத்தினின்று காத்துக் கொள்வதற்கு, பாதத்தின் உதவியால் நிழலுக்கு ஓடிவிட முடியும். அதுபோல் மனிதனுக்கு அவனுடைய எலும்போடு சேர்ந்து பிறந்திருக்கிறதான முன்னே சொல்லப்பட்ட அன்பு இருந்தால் தரும தேவதையின் வெப்பத்திற்கு ஆளாகாமல் தப்பித்துக் கொள்ளலாம். உடலுக்கு நன்மை தேடிக்கொள்ள உதவுவது என்பு. உயிருக்கு நன்மை தேடிக்கொள்ள உதவுவது அன்பு. அப்படி மனிதனுடைய எலும்போடு பிறந்திருக்கிற அன்பு எலும்போடு நின்றுவிடாமல் நெஞ்சகத்துக்கு வரவேண்டும். எல்லா மனிதருக்கும் அன்பு எலும்போடு வந்துதான் இருக்கிறது. ஆனால் அது எந்த அளவுக்கு மனதில் இடம் பெற்று மனம் விரிகின்றதோ அந்த அளவுக்குத்தான் அவன் பிறருக்கு உதவி செய்யக் கூடியவன் ஆகிறான்.

நெஞ்சகத்தில் அன்பில்லாவிட்டால்:

78. அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்று.

ப. ரை: அன்பு அகத்து இல்லா உயிர் வாழ்க்கை = அன்பு நெஞ்சத்தில் இல்லாத மனிதனுடைய வாழ்க்கை, வன் பாற்கண் வற்றல் மரம் தளிர்த்து அற்று = கெட்டியான நிலத்தில் முளைத்து வற்றிப் போயிருக்கிற மரம் செழிப்பாக தழைக்குமென்பது போலத்தான்.

பொ. ரை: மனதில் அன்பில்லாத மனிதனுடைய வாழ்க்கை மிகவும் கெட்டியான தரையில் முளைத்துவிட்ட மரம் தழைத்து செழிக்கும் என்று எதிர் பார்ப்பதைப் போன்றது.

வி - ம்: நீர்ப்பசையில்லாத கெட்டியான தரையில் எப்போதோ மழை பெய்தபோது முளைத்துவிட்ட மரம் உயிரோடு இருந்தாலும் வற்றித்தானிருக்கும். தழைத்து செழித்துப் பிறருக்கு நிழல் கொடுக்காது. ஏன் செழிக்காது என்றால் நிலத்தில் ஈரமில்லாததால். அப்படியானால் எப்படி உயிரோடிருக்குமென்

ருல் மழைபெய்தகாலத்தில் முளைத்துப் பெருத்துவிட்ட மரம், பிறகு நெடுங்காலம் மழையில்லாவிட்டாலும் ஆகாயத்தில் சஞ்சரிக்கின்ற நீராவி அணுக்களின் சாரத்தால் உயிரோடிருக்கும். ஆனல் வேரில் ஈரமில்லாததால் செழிப்பாகத் தழைக்காது. அப்படிப்போல நெஞ்சில் அன்பென்னும் ஈரமில்லாதவன் உயிரோடிருந்தாலும் செழிப்பாக இருக்கமாட்டான், பிறருக்கு நிழலும் தரமாட்டான். 'வற்றன் மரம்' என்பதற்குப் பட்டுப் போன மரம் என்று பொருள் செய்துவிடக் கூடாது.

தானிருக்கும் நிலத்தில் ஈரமில்லையென்று மரம் வேறு இடத்துக்குச் சென்று செழிக்க முடியாது. ஆனல் மனிதன் தன் மனதில் அன்பில்லாவிட்டாலும் பிறருடைய அன்பால் செழிப்பாகத் தோற்றலாம். ஆனலும் :

79. புறத்துறுப் பெல்லா மெவன்செய்யும் யாக்கை
யகத்துறுப் பன்பி லவர்க்கு.

ப. ரை : யாக்கை அகத்து உறுப்பு அன்பு இல் அவர்க்கு = உடம்பின் உள் அங்கமாகிய அன்பு இல்லாதவர்களுக்கு, புறத்து உறுப்பு எல்லாம் எவன் செய்யும் = வெளி அங்கங்களெல்லாம் எதற்கு உதவும் ?

பொ. ரை : சரீரத்தின் உள்ளே அமைய வேண்டிய அங்கமாகிய அன்பு இல்லாதவர்களுக்கு, வெளியே காணப்படுகிற மற்ற அங்கங்களெல்லாம் எவ்வளவு அழகாக அமைந்திருந்தாலும் அவற்ருல் என்ன பயன் ?

வி - ம் : உடலுக்குத் தொழில் செய்ய உதவியாக இருப்பவை கை, கால், கண், மூக்கு, வாய், செவி முதலான வெளி அவயவங்கள். அந்த அவயவங்களை வேலை செய்யத் தூண்டுவது உடலுக்கு உள்ளிருக்கிற அங்கமாகிய உள்ளம். அந்த உள்ளத்தில் அன்பு இருந்தால்தான் நல்ல காரியங்களைச் செய்யத் தூண்டும். இங்கே யாக்கையின் புறத்து உறுப்புகளையும் அதன் அகத்து உறுப்பையும் பற்றித்தான் பேச்சு. 'புறத்துறுப்பெல்லாம்' என்பதற்கு இடம், பொருள், ஏவல் என்ற அங்கங்கள் என்ற பொருள் பொருந்தாது.

உடலுக்கு நன்மை செய்வன புறத்துறுப்புகள். உயிருக்கு நன்மை செய்வது அகத்துறுப்பாகிய அன்புடைமை. ஆதலால் :

80. அன்பின் வழிய துயிர்நிலை அஃதிலார்க்
கென்புதோல் போர்த்த வுடம்பு.

ப. ரை: அன்பின் வழியது உயிர் நிலை=அன்பின் வழியில்நடந்து கொள்வது தான் உயிருள்ள உடம்புக்கு அடையாளம். அஃது இலார்க்கு உடம்பு தோல் போர்த்த என்பு=அந்த அன்பு இல்லாதவர்களுக்கு உடம்பு தோலால் மூடப்பட்ட எலும்புதான்.

பொ. ரை: அன்புடையவர்களாக நடந்து கொள்ளுகிற மனிதர்கள்தாம் உயிருள்ளவர்கள். அப்படியல்லாதவர்களுக்கு அவர்களுடைய உடம்பு தோலால் மூடப்பட்ட எலும்புதான்.

வி-ம்: மனிதப் பிறவிக்கு அதன் எலும்போடு கூடப்பிறந்தது அன்பு என்று முன்னே சொல்லப்பட்டது. அதன்படி அன்போடு நடக்கிற மனிதர்கள் உயிருள்ள எலும்புள்ளவர்கள். அன்பில்லாதவர்களுடைய உடம்பு உலர்ந்துபோன எலும்புக் குவியலைத் தோலால் மூடியிருப்பது போல்தான்.

அதி. 9—விருந்தோம்பல்

[விருந்தினரை உபசரித்தல்]

*81. இருந்தோம்பி யில்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு.*

ப. ரை: இருந்து ஓம்பி இல் வாழ்வது எல்லாம் வீட்டோடு இருந்துகொண்டு பண்டங்களைப் பாதுகாத்து குடும்பம் நடத்துவது எல்லாம், விருந்து ஓம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு=விருந்தாளிகளை வரவேற்று உபகாரம் செய்வதற்காகத்தான்.

பொ. ரை: வீடுவாசலோடு இருந்துகொண்டு பொருள்களைப் பாதுகாத்து. மனைவிமக்களுடன் குடும்பம் நடத்துவதன் நோக்கமெல்லாம், வீட்டுக்கு வந்தவர்களை உபசரித்து உலகத்துக்கு உபகாரமாக இருப்பதற்காகத்தான்.

வி-ம்: விருந்தோம்பல் என்பது தனக்குள்ள எதையும் பிறருக்கும் கொஞ்சம் கொடுப்பது என்ற பொருள் கொண்டது. மனிதனுக்கு மிகவும் முக்கியமானது உணவு. அதனல் பிறருக்கும் உணவளிப்பதை விருந்தாகச் சொல்லப்படுகிறது.

ஆதலால் நமக்குக் கிடைக்கிற எதிலும் பிறருக்கும் கொஞ்சம் கொடுக்க வேண்டும்:

*82. விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று.*

ப. ரை : விருந்து புறத்ததா தான் உண்டல்=விருந்தாளி இல்லாமல் தான் மட்டும் உண்பது. சாவா மருந்து எனினும்=சாகாமலிருக்கச் செய்யக்கூடிய மருந்தானாலும். வேண்டல்பாற்று அன்று=விரும்பத்தக்கதல்ல.

பொ. ரை : இன்னொருவருக்குக் கொஞ்சம் கொடுக்காமல் தானே உண்பது, சாகாமலிருக்கச் செய்யக்கூடிய தேவாமிர்தத்தை உண்பதானாலும் அது விரும்பத் தகுந்ததல்ல.

வி - ம் : 'மருந்தே ஆயினும் விருந்தோடு உண்' என்பது தான் இது. நல்லவர்கள் பிறருக்கும் கொஞ்சம் கொடுத்து விட்டுத் தான் எதையும் உண்பார்கள் என்பது கருத்து. இதுதான் விருந்தோம்பலின் உச்சமான நோக்கம்.

அப்படி உணவருந்தும் போதெல்லாம் விருந்தினரைத் தேடிக்கொண்டிருக்க முடியாவிட்டாலும் நம் வீட்டை நாடி வருகிற விருந்தினர்களை உபசரிக்க வேண்டும். வருகிறவர்களுக்கெல்லாம் போட்டுக் கொண்டே இருக்க முடியுமா என்றால் :

83. வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுத லின்று.

ப. ரை : வரும் விருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை=வருகிற விருந்தினர்களை நாள்தோறும் உபசரிக்கிறவனுடைய வாழ்க்கை, பருவந்து பாழ்படுதல் இன்று=(அதனால்) வறுமையுற்றுக் கெட்டுப்போவது இல்லை.

பொ. ரை : தினந்தினமும் வருகிற விருந்தினர்களுக்கெல்லாம் உணவளித்து உபசரிக்கிறவனுடைய வாழ்க்கை அதனால் தரித்திரமடைந்து கெட்டுப்போகும் என்பது இல்லை.

வி - ம் : தினந்தினமும் வருகிற விருந்தாளிகளுக்கெல்லாம் உபசாரம் நடத்திக்கொண்டேயிருந்தால், கெட்டுப் போய் விடுவோம் என்பது தவறு. நம்மை நாடிவருகிற விருந்தினர்கள் தினந்தினம் கூட்டங் கூட்டமாக வருவதில்லை. உரிமையுள்ளவர்கள் அப்போதைக்கப்போது வருவார்கள். அப்படிப் பட்டவர்கள் தினந்தினம் வந்தாலும் நமக்குள்ள சாப்பாட்டில் தான் கொஞ்சம் அவர்களுக்குக் கொடுக்கிறோம். உள்ள சாப்பாட்டுக்கு மேல் அதிகம் பேர் வந்துவிட்டால் நம்முடைய பங்கை அதிகமாகக் குறைத்துக் கொள்ளுகிறோம். அந்த மனதோடு விருந்தோம்பினால் விருந்து பாரமாகத் தோன்றாது. ஆகையால் விருந்தினரை உபசரிப்பதனால் குடும்பம் கெட்டுப் போகும் என்பது இல்லை. தகாத முறையில் சக்திக்கு மீறிய ஆடம்பரங்களைச் செய்து விருந்துகள் நடத்தி தரித்திரமடைவதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

இப்படித் தன்னலத்தை எவ்வளவு வேண்டுமானாலும் குறைத்துக்கொள்ளக் கூடிய தியாக உணர்ச்சியோடு விருந்தினர்களைப் பாரமாகக் கருதாமல் விருந்தோம்பினால் :

84. அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து நல்விருந் தோம்புவா னில்.

ப. ரை : முகன் அமர்ந்து நல் விருந்து ஓம்புவான் இல் = முகம் கோணாமல் தகுதியுள்ள விருந்தினர்களை உபசரிக்கிறவனு டைய வீட்டில், அகன் அமர்ந்து செய்யாள் உறையும் = மனமு வந்து திருமகள் வீற்றிருப்பாள்.

பொ. ரை : தன்னிடம் வரும் உரிமை பற்றிய தகுதியுடைய விருந்தினர்களை முகங் கோணாமல் உபசரிக்கிறவனுடைய வீட்டில் செல்வத் திருமகளாகிய லக்ஷ்மியானவள் மனமகிழ்ச் சியோடு வாசம் செய்வாள்.

வி - ம் : வருகிற விருந்தினர்களுக்கு முகம் கோணாமல் உப சாரம் செய்கிறவனுக்கு தரித்திரம் வராது. அவன் வீட்டில் லக்ஷ்மிகரம் இருந்து கொண்டேயிருக்கும். ஏனெனில், அவ னுக்கு இல்லாமை என்ற உணர்ச்சியே இராது. அவன் தன் னிடத்தில் உள்ளதைப் பிறருக்கு பங்கிட்டுத் தந்து மகிழ்ச்சி யோடு மன நிறைவு உள்ளவனாகவே இருப்பவன். அதனால் அவன் வீட்டில் மங்கலம் இருந்துகொண்டேயிருக்கும். இங்கே 'செய்யாள் உறையும்' என்பதற்கு 'செல்வம் மிகுந்திருக் கும்' என்று பொருள் செய்துவிடக் கூடாது. பணம் நிறைய இருப்பது மட்டும் லக்ஷ்மிகரம் ஆகிவிடாது. எத்தனை விருந் தினர்கள் வந்துவிட்டாலும் முகம் கோணாமல் விருந்திடு கின்ற அந்த மனப்பண்புதான் வீட்டுக்கு லக்ஷ்மிகரம். 'நல் விருந்து' என்பது 'விருந்திடத் தகுதியுள்ளவர்கள்' என்பது. வீட்டுக்கு வந்தவர்களுக்கு முகம் கோணாமல் உள்ளதிற் கொஞ்சம் உபசரித்து விருந்திடுகிறவனுடைய மனை மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்—என்பது கருத்து.

அப்படிப்பட்ட மனப் பண்புடையவனுக்கு வருமானத்தைப் பற்றிய கவலையே இருக்காது. எப்படியெனில் :

85. வித்து மிடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சின் மிசைவான் புலம்.

ப. ரை : விருந்து ஓம்பி மிச்சில் மிசைவான் புலம் = விருந்தினர் களுக்கு இட்டு மிச்சமிருப்பதை உண்ணுகிறவனுடைய விளை நிலத்துக்கு. வித்தும் இடல் வேண்டும் கொல்லோ = விதை கூடப் போட வேண்டுமா ?

பொ. ரை: விருந்தினர்களுக்கு முதலில் உணவு கொடுத்துவிட்டு மிச்சம் இருப்பதை உண்பவனுடைய வயலுக்கு விதை கூடப் போட வேண்டுமா?

வி-ம்: தன் வீட்டிலுள்ள உணவை முதலில் விருந்தினர்களுக்குக் கொடுத்து அவர்கள் உண்டபின் மிச்சமிருந்தால் உண்பான். மிச்சமில்லாவிட்டால் பட்டினியாகவும் இருந்து விடுவான். அப்படிப்பட்ட மனப்பான்மை உள்ளவனுக்கு வருமானத்தைப் பற்றிய கவலைக்கே இடமில்லை. ஏனெனில் அவன் தனக்குள்ளதைக் கொண்டே பிறருக்கு விருந்திடுகிறவன். அவன் நிலத்திலும் தானியம் இல்லாமற் போய் விடுமோ என்ற அச்சத்தை நீக்குவதற்காக அவன் நிலத்துக்கு 'வித்தும் இடல் வேண்டுங் கொல்லோ' என்றார். விதை போடாமல் விளைநிலம் தானாகவே தானியம் தரும் என்று அர்த்தமல்ல. விளைநிலமும் வித்திடலும் அவனுடைய வருவாயைக் குறிப்பதற்காக வந்த உவமானங்கள். உள்ள உணவை விருந்தினருக்கு இட்டு மிச்சமிருந்தால் உண்பது என்ற மனப்பான்மையுள்ளவனுக்குத் தானியம் அவனுடைய நிலத்திலிருந்து வரவேண்டுமென்பதில்லை—என்பது கருத்து.
விருந்தினர்க்கு உணவிட்டபின் மிச்சமிருந்தால் உண்பது. இல்லையானால் பட்டினியும் இருப்பது என்ற மனப்பான்மை உள்ளவன் எத்துணை விருந்தினர்கள் அடுத்தடுத்து வந்தாலும் விருந்தோம்பத் தயங்கமாட்டான். எப்படியெனில்

86. செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.

ப. ரை: செல் விருந்து ஓம்பி = போக விரும்பும் விருந்தினரை விடை கொடுத்து அனுப்பிவிட்டு. வரும் விருந்து பார்த்திருப்பான் = இன்னும் வரக்கூடிய விருந்தினரை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவன். நல் விருந்து வானத்தவர்க்கு = (அப்படிப்பட்டவன்) தேவர்களுக்கு நல்ல விருந்தாளி.

பொ. ரை: தன் வீட்டுக்கு ஏற்கனவே விருந்தாக வந்திருந்து போக விரும்புகின்றவர்களை விடை கொடுத்து அனுப்பி விட்டு, இன்னும் வரக் கூடிய விருந்தாளிகளை எதிர்பார்த்திருப்பான். அப்படிப்பட்டவனை தேவர்கள் மிகவும் மகிழ்ச்சியோடு அவர்களுடைய விருந்தாளியாக ஏற்றுக் கொள்ளுவார்கள்.

வி-ம்: இந்த முறையில் விருந்தோம்புகின்றவனை தேவலோகத்திலுள்ளவர்கள் வரவேற்றுத் தேவர்களோடு ஒருவனாகக் கொண்டாடுவார்கள். 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன்

வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்று முன்னே சொன்னபடி அவன் தெய்வ பதவியை அடைவான். அதற்கென்று வேறு முயற்சி ஒன்றும் இல்லாமலேயே அவன் மறுமைப் பயனையும் அடைவான்—என்பது கருத்து.'

அப்படி விருந்திட்டு நல்ல மறுமைப் பயனையும் அடைவதற்கு எத்தனை பேருக்கு எப்படியெப்படி விருந்திட வேண்டும் என்ற கணக்கு ஒன்றுமில்லை:

87. இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்.

ப. ரை: இனை துணைத்து என்பது ஒன்று இல்லை=இவ்வளவு அவ்வளவு என்பது ஒன்றும் இல்லை, விருந்தின் துணை துணை வேள்வி பயன்=விருந்தோம்பல் எவ்வளவுக்கெவ்வளவு செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நல்ல காரியம் செய்த பலன் உண்டு.

பொ. ரை: விருந்தோம்பல் என்பதற்கு இவ்வளவு அவ்வளவு என்ற கணக்கில்லை. எவ்வளவுக்கெவ்வளவு விருந்தினரை உபசரிக்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு புண்ணியம் செய்த பயன் உண்டு.

சரியான முறையில் இல்லறம் நடத்தி, விருந்தோம்பலை மேலே சொன்ன முறையில் நடத்தினால் அதைவிடத் தவம் வேறொன்றும் இல்லை. எப்படியெனில்:

88. பரிந்தோம்பிப் பற்றற்றேமென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார்.

ப. ரை: விருந்து ஓம்பி வேள்வி தலைப்படாதார்=விருந்தினரை உபசரித்து உபகாரம் செய்வதை மேற்கொள்ளாதவர்கள், பரிந்து ஓம்பி பற்று அற்றேம் என்பர்=பரிவோடு பல நோன்புகளைக் காத்து, பற்றுகளை விட்டுவிட்டோம் என்பார்கள்.

பொ. ரை: விருந்தினரை உபசரித்து உலகத்துக்கு உபகாரிகளாக இருக்கும் புண்ணிய காரியத்தை மேற்கொள்ளாதவர்கள்தாம் வெகு துன்பங்களைச் சகித்துக் கொண்டு 'பற்றற்ற துறவிகளாகிவிட்டோம்' என்பார்கள்.

வி-ம்: இல்லறத்தில் இருந்துகொண்டு, விருந்தினரை உபசரித்து உலகத்துக்கு உபகாரமான காரியத்தைச் செய்ய முயலாதவர்கள்தாம் மிகவும் கடினமான துறவறத்தை மேற்

கொண்டு அதைப் பரிவோடு காத்துப் பற்றற்றேம் என்று சொல்லிக் கொள்ள வேண்டும். சரியானபடி விருந்தோம்பினாலே உலக இன்பங்களையும் அனுபவித்து 'நல்விருந்து வானத்தவர்க்கு' என்ற பதவியையும் பெறலாமே!

விருந்தோம்பும் நல்ல காரியத்தைச் செய்வதற்குச் செல்வமுடையவர்களாக இருக்கவேண்டுமென்பதில்லை. எல்லா இல்லறத்தாரும் அவரவர் சக்திக்கேற்றபடி செய்யலாம். ஆனால் செல்வம் படைத்தவர்களுக்கு விருந்தோம்புவதால் வரக்கூடிய பலன்களை அடைய வசதிகள் அதிகம். அப்படியிருந்தும் அவர்கள் விருந்தோம்பாவிட்டால்:

**89. உடைமையு ளின்மை விருந்தோம்ப லோம்பா
மடமை மடவார்க ணுண்டு.**

ப. ரை: உடைமையுள் இன்மை=செல்வம் இருந்தும் வறுமை எனப்படுவது. விருந்து ஓம்பல் ஓம்பா மடமை=விருந்தோம்பும் தர்மத்தை மேற்கொள்ளாத அறிவின்மை. மடவார்கண் உண்டு=அறிவில்லாதவர்களிடம் உள்ளது அதுதான்.

பொ. ரை: செல்வமிருந்தும் தரித்திரம் என்று சொல்லத்தகுந்தது எதுவென்றால் விருந்தோம்பல் மேற்கொள்ளாத அறியாத்தனம். அறிவின்மை மிகுந்தவர்களின் உடைமை அதுதான்.

பணம் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, விருந்தோம்புகிறவன், அவன் செய்யும் விருந்தைக் காட்டிலும் மிகவும் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இனிய முகத்துடன் உபசரிப்பதுதான். இல்லையானால்:

**90. மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து.**

ப. ரை: மோப்ப குழையும் அனிச்சம்=முகர்ந்த உடனேயே வாடிப் போகும் அனிச்சம் என்ற மலர். முகம்திரிந்து நோக்க குழையும் விருந்து=கோணிய முகத்தோடு பார்த்த உடனேயே விருந்தாளியின் உள்ளம் வாடி விடும்.

பொ. ரை: அனிச்ச மலர் நாம் முகர்ந்த உடனேயேவாடிவிடும். விருந்தினரின் உள்ளம் நாம் கோணிய முகத்தோடு அவர்களைப் பார்த்துவிட்டாலே உடனே வாடிவிடும்.

வி-ம்: அனிச்சமலர் என்பது மிகவும் நுட்பமான சுபாவமுடைய மலராக இலக்கியங்களில் சொல்லப்படுகிற ஒரு மலர்.

அதி. 10—இனியவை கூறல்

[இல்லற ஒழுக்கத்துக்கு இன்றியமையாத குணம் யாரோடும் எப்போதும் எதற்காகப் பேசினாலும் இனிமையான வார்த்தைகளையே பேச வேண்டும் என்பது]

91. இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ்
செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.

ப. ரை : செம்பொருள்=செம்மையான அர்த்தத்தை, கண்டார் வாய்ச்சொல்=அறிந்தவர்களுடைய வாயிலிருந்து வெளி வரும் சொற்கள், இன்சொல்=இனிய வார்த்தைகளாகவும், ஈரம் அளைஇ=இரக்கம் கலந்தவைகளாகவும், படிறு இல ஆம்=வஞ்சனை இல்லாதனவாகவும் இருக்கும்.

பொ. ரை : இல்வாழ்க்கையின் பெருமையையும், பயனையும் செம்மையாக உணர்ந்தவர்களுடைய வாயிலிருந்துவருகின்ற வார்த்தைகளெல்லாம் கேட்பதற்கு இனிமையாகவும் அன்பு கலந்தனவாகவும் வஞ்சக நோக்கம் இல்லாதனவாகவும் இருக்கும்.

வி-ம் : கேட்பதற்கு இனிமையாகவும் பச்சாத்தாபம் உள்ள தாகவும் பேசினால் மட்டும் போதாது. அகத்தில் வஞ்சனை எண்ணாததாகவும் இருக்க வேண்டும். அதுதான் இன்சொல்.

இனிய செயல்களைக் காட்டிலும் சிறந்தன வஞ்சனையற்ற இனிய சொற்கள் :

92. அகனமர்ந் தீதலி னன்றே முகனமர்ந்
தின்சொல னாகப் பெறின்.

ப. ரை : முகன் அமர்ந்து இன் சொலன் ஆகப் பெறின்=முகம் மலர்ந்து இனிய வார்த்தைகளைச் சொல்லக் கூடியவனாக இருந்தால், அகன் அமர்ந்து ஈதலின் நன்று=மனம் மகிழ்ந்து கொடுப்பதைக் காட்டிலும் நல்லது.

பொ. ரை : முகமலர்ச்சியோடு இனியவார்த்தைகளைச் சொல்லுவது மனப்பூர்வமாக தானம் கொடுப்பதைக் காட்டிலும் நல்லது.

வி-ம் : தானங் கொடுப்பதில் புண்ணியத்தின் பலன் உண்டு. தானம் கொடுக்க முடியாவிட்டாலும் இனிய வார்த்தைகளை அன்போடும் வஞ்சமில்லாமலும் சொன்னால் அதனால்

தானம் கொடுத்த பலனைக்காட்டிலும் அதிக நன்மை உண்டு. வஞ்சனையற்ற இனிய வார்த்தைகளோடு தானமும் கொடுத்தால், அந்த தானத்தைக் காட்டிலும் சிறந்தது இனிய வார்த்தை.

அறங்களுக்கு ஆதாரம் இனிய சொற்கள் என்பது மட்டுமல்ல; அறம் என்பதே இனியவை சொல்லுவதில் அடங்கி விடும். எப்படியெனில் :

93. முகத்தா னமர்ந்தினிது நோக்கி யகத்தானா
மின்சொ லினதே யறம்.

ப.ரை : முகத்தான் அமர்ந்து இனிதுநோக்கி = முகத்தில் மலர்ச்சியுடன் இனிமையாகப் பார்த்து, அகத்தான் ஆம் இன்சொலினதே அறம் = மனப்பூர்வமாக வெளி வருகிற இனிய சொல்லைச் சேர்ந்ததுதான் தர்மம்.

பொ. ரை : மலர்ந்த முகத்தோடு இனிமையாகப் பார்த்து, மனமும் கலந்து வெளிப்படுகிற இன் சொல் தான் அறம்.

வி - ம் : மலர்ந்த முகம் யாரையும் வரவேற்கிறது இனிய பார்வை வந்த காரியம் என்னவென்பதை அன்போடு கேட்கிறது. பின் மனம் அனுதாபத்தோடு சிந்தித்து இனிய வார்த்தைகளாக வஞ்சனையின்றி வெளியிடப்படுகிற கருத்தே தான் தர்மச் செயலாகிறது. மனம், வாக்கு, காயம் என்ற மூன்றும் சுத்தமாகச் சேர்ந்த வஞ்சகமற்ற இன்சொல்லே அறம்.

அப்படிப்பட்ட தூய இன்சொல் உடையவனுக்கு எல்லா நன்மைகளும் கைகூடும். எது கைகூடா விட்டாலும் :

94. துன்புறூஉந் துவ்வாமை யில்லாகும் யார்மாட்டு
மின்புறூஉ மின்சொ லவர்க்கு.

ப. ரை : யார் மாட்டும் = யாரிடத்திலும், இன்பு உறூஉம் இன் சொல் அவர்க்கு = இன்பம் உண்டாக்கக் கூடிய இனிய வார்த்தைகளையே சொல்லுகின்ற அவர்களுக்கு, அன்பு உறூஉம் துவ்வாமை இல்லாகும் = துன்பப்படுத்துகிற உணவில்லாமை இல்லையாகும்.

பொ. ரை : யாரிடத்திலும் எப்போதும் இனிய வார்த்தைகளையே பேசுகின்றவர்களுக்கு, துன்பப்படுத்தக் கூடிய பசிப் பிணியே இருக்காது.

வி - ம் : யாரிடத்திலும் எப்போதும் இனிய வார்த்தைகளையே பேசுகின்றவர்களை யாரும் விரும்புவார்கள். வேறு என்ன நன்மைகள் வந்தாலும் வராவிட்டாலும் அவர்களுக்கு யாரும் உணவளிப்பார்கள். அதனால் சாப்பாடில்லாத துன்பமே வராது.

இனிய சொற்களையே பேசும் ஒழுக்கம் பசிப்பிணியைப் போக்கிக் கொள்வதையோ அல்லது வேறு நன்மைகளையோ எண்ணிச் செய்வதல்ல. மனிதருக்கு அழகே அதுதான் :

95. பணிவுடைய னின்சொல னாதல் லொருவற்
கணியல்ல மற்றுப் பிற.

ப. ரை : பணிவு உடையன் இன் சொலன் ஆதல்=வணக்கமுள்ளவனாகவும், இனிய வார்த்தைகளையே பேசக் கூடியவனாகவும் இருப்பது, ஒருவற்கு அணி=ஒருவனுக்கு அழகு; அல்ல மற்றுப் பிற=அது மட்டுமல்ல பிற நன்மைகளும் உண்டாகும்.

பொ. ரை : வணக்கமுடையவனாகவும் இனிய வார்த்தைகளையே பேசுகின்றவனாகவும் இருப்பது ஒருவனுக்கு அழகு. அதுமட்டும் அல்ல; அதனால் வேறு நன்மைகளும் உண்டாகும்.

வி - ம் : இனிய சொல்லுடையவனாக இருந்தாலே அவனுடைய வாழ்க்கை துன்பமில்லாமலிருக்கும் என்று முன் சொல்லப்பட்டது. இன் சொல்லோடு பணிவுடையவனாகவும் இருந்தால் அவனுக்கு வாழ்க்கைக்கான நன்மைகளோடு வேறு நன்மைகளும் உண்டாகும் என்று இங்கே சொல்லப்படுகிறது.

பணிவுடைமையும் சேர்ந்த இன் சொல்லால் வரக்கூடிய அந்த 'மற்றுப் பிற' என்ற நன்மைகள் என்னவெனில் :

96. அல்லவை தேய வறம்பெருகு நல்லவை
நாடி யினிய சொலின்.

ப. ரை : நல்லவை நாடி. இனிய சொலின்=நன்மை உண்டாக்கும் நோக்கத்தோடு இனிய சொற்களைப் பேசினால், அல்லவை தேய=பாவங்கள் குறைய, அறம் பெருகும்=புண்ணியம் அதிகமாகும்.

பொ. ரை : நன்மை உண்டாக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தோடு இனிய சொற்களைப் பேசினால் பாபம் குறைந்து புண்ணியம் அதிகமாகும்.

வி - ம் : முதல் பாட்டில் இனிய சொற்கள் வஞ்சகமற்றனவாக 'படிறிலவாய்' இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது.

இந்தக் குறளில் வஞ்சகம் இல்லாதிருப்பதோடு நல்லநோக்கமும் இருக்க வேண்டும் என்பது சேர்க்கப்பட்டிருக்கிறது. இதற்கு முந்தின குறளில் இனிய சொல்லோடு பணிவுடைமையினால் அகங்காரம் குறைகிறது. நல்ல நோக்கத்தால் ஆன்ம சுத்தம் நிலைக்கிறது. அதனால் பாவம் குறைகிறது. புண்ணியம் அதிகரிக்கிறது.

ஆதலால் இம்மை மறுமை இரண்டுக்கும் நன்மை பயக்கக் கூடியன இனிய சொற்கள் :

**97. நயனீன்று நன்றி பயக்கும் பயனீன்று
பண்பிற் றலைப்பிரியாச் சொல்.**

ப. ரை : பயன் ஈன்று=பிறருக்கு நல்ல பலனைத் தந்து, பண்பில் தலைப்பிரியா சொல்=குறிப்பிட்ட குணம் நீங்காமலிருக்கிற இனிய சொல், நயன் ஈன்று நன்றி பயக்கும்=அருளைத் தந்து தனக்கும் நன்மைகளை உண்டாக்கும்.

பொ. ரை : பிறருக்கு நன்மை உண்டாக்கி எப்போதும் அதன் குணத்தில் மாறுபடாமலேயே இருக்கக் கூடிய இன் சொல் தமக்கு அருள் குணத்தைக் கொடுத்துப் பல நன்மைகளைச் செய்யும்.

வி - ம் : 'நல்லவை நாடி இனிய சொலின்' என்று முன் சொல்லப்பட்டபடி பிறருக்கு நன்மை உண்டாக்கி, அப்படிப் பிறருக்கு நன்மை உண்டாக்கிவிட்டதனால் அகந்தை பிறந்து பணிவுடைமை என்ற பண்பு கெட்டுப் போகாதபடி எப்போதும் பார்த்துக்கொண்டால் ஆன்மஉணர்ச்சியும். அருள்குணமும் உண்டாகும்—என்பது கருத்து.

இனியவை கூறுவது அப்போதைக்கு உண்டாகிற இன்பக் களிப்புக்காக மட்டுமல்ல. அதன் பண்புகளாகச் சொல்லப்பட்ட மற்ற பெருமைகளும் இருக்க வேண்டும். அப்படி இருந்தால் :

**98. சிறுமையு ணீங்கிய வின்சொல் மறுமையு
மிம்மையு மின்பந் தரும்.**

ப. ரை : சிறுமை உள் நீங்கிய இன்சொல்=சிறு மனப்பான்மை இல்லாத இனிய சொல், மறுமையும் இம்மையும் இன்பம் தரும்=மறு பிறவிக்கும் இப்பிறவிக்கும் இன்பம் உண்டாக்கும்.

பொ. ரை : மனதில் அற்ப எண்ணங்களில்லாமல் இனிய வார்த்தைகளையே சொல்லப் பழகினால் அது நமக்கு இனி

வரும் பிறவிக்கும் இந்தப் பிறவிக்கும் இன்பம் உண்டுபண்ணி வைக்கும்.

வி-ம்: இம்மையும் மறுமையும் என்று சொல்லாமல் 'மறுமையும் இம்மையும்' என்று மறுமையை முன்னால் சொல்லியிருப்பது குறிப்பிடத்தக்கது. இந்தப் பிறப்பில் இனியவை கூறுவதை மேலே சொல்லப்பட்ட முறையில் எப்போதும் செய்தால் 'அல்லவை தேய்ந்து அறம் பெருகி' அதனால் மறு பிறப்பு இன்பமுள்ளதாக இருக்கும் என்று நிச்சயமாக நம்பலாம். ஆனால் இந்தப் பிறப்பில் நாம் அனுபவிக்கும் இன்பங்களுக்குப் போன பிறவியில் இப்படி நாம் நடந்திருக்க வேண்டும். அது நமக்குத் தெரியாது. ஆகையால் போன பிறப்பின் குற்றங் குறைகளால் இப்போது அனுபவிக்கிற இன்பம் ஏறத்தாழ இருந்தாலும், மறுபிறப்புக்காவது அது இன்பந்தரும் என்று நம்பி 'சிறுமையுள் நீங்கிய இன்சொல்' பேச வேண்டும் என்பதற்காக மறுமை முன்னால் வைக்கப்பட்டது.

இம்மை மறுமை என்ற விஷயங்களைக் கருதாவிட்டாலும் சரி, இனிய வார்த்தைகளின் பண்புகளைப் பற்றி ஆராயாவிட்டாலும் சரி, இனிமையான வார்த்தைகளைப் பேசுவதன் நல்ல பலன் எங்கும் எப்போதும் உண்டு. அதனால்:

99. இன்சொ லினிதீன்றல் காண்பா னெவன்கொலோ
வன்சொல் வழங்கு வது.

ப. ரை: இன் சொல் இனிது ஈன்றல் காண்பான் = இனிய வார்த்தைகள் இனிய பலனை உண்டாக்குவதைப் பார்த்துக் கொண்டிருக்கிற ஒருவன், எவன் கொலோ வன் சொல் வழங்குவது = எதற்காகக் கடுமையான வார்த்தைகளைச் சொல்லுகிறானோ தெரியவில்லை.

பொ. ரை: இனிய வார்த்தைகளால் இனிய பலன்கள் உண்டாவதை தினந்தினம் கண்ணுக்கு முன்னால், பார்த்துக் கொண்டிருக்கிற மனிதன் எதற்காகத் துன்பத்தை உண்டாக்குகிற கடுஞ் சொற்களைப் பேசுகிறானோ தெரியவில்லை.

வி-ம்: உலகத்தில் பலபேர் இனிய வார்த்தைகளைப் பேசுவதையும் அதனால் இனிய பலன்கள் உண்டாவதையும் கண்ணாரக் கண்ட பின்னும் நாம் மட்டும் ஏன் கடுஞ் சொற்களைக் கையாள வேண்டும்? நமக்கும் அந்த இனிய வார்த்தைகள் தெரிந்தவை தாமே?

ஆதலால்:

100. இனிய வுளவாக வின்னாத கூறல்
கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.

ப. ரை: இனிய உளவாக = இனிய சொற்கள் இருக்கும் போது, இன்னாத கூறல் = இனிமையில்லாத சொற்களைப் பேசுவது, கனி இருப்ப காய் கவர்ந்து அற்று = கனி இருக்கும் போது காயைப் பறிப்பதைப் போன்றது.

பொ. ரை: இனிமையான வார்த்தைகள் வேண்டிய மட்டும் இருக்கும் போது கடுமையான வார்த்தைகளைப் பேசுவது பழங்களை விட்டு விட்டுக் காய்களைப் பறித்துக் கொள்வது போலத்தான்.

வி-ம்: இனிய பழங்கள் நிறைந்த ஒரு மரத்தில் ஏறின ஒருவன் இனிப்பான பழங்களைப் பறித்துக் கொள்ளாமல், அதிலுள்ள கசப்பும் புளிப்புமான காய்களைப் பறிப்பது எப்படியோ, அப்படித்தான் நல்ல வார்த்தைகளிருக்க அவற்றை விட்டுக் கடுஞ் சொற்களைப் பேசுவது.

அதி. 11—செய்ந் நன்றியறிதல்

[ஒருவர் நமக்குச் செய்த உதவியை எப்போதும் நினைவில் வைத்து நன்றி காட்டுவது]

101. செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது.

ப. ரை: செய்யாமல் = (நாம் அவருக்கு ஒரு உதவியும்) செய்யாதவர்களாக இருந்தும், செய்த உதவிக்கு = நமக்கு ஒருவர் செய்யும் உதவிக்கு, வையகமும் வானகமும் மாற்றல் அரிது = பூலோகத்தையும் தேவலோகத்தையும் ஈடாகக் கொடுத்தாலும் போதாது.

பொ. ரை: முன்னே நாம் ஒரு உதவியும் அவருக்குச் செய்தவர்கள் அல்லாமலிருந்தும் ஒருவர் நமக்குச் செய்கிற உதவிக்கு பூலோகம் தேவலோகம் இரண்டையும் தந்தாலும் ஈடாகாது.

வி-ம்: நம்மிடத்தில் எந்த உதவியையும் முன்னால் பெற்றவரல்லாத ஒருவர், அவராக வந்து நமக்குத் தக்க சமயத்தில் உதவி செய்தால், அதற்கு என்ன கொடுத்தாலும் ஈடாகாது, என்பது கருத்து.

உதவியை மதிப்பிடுவது எதைக் கொண்டு என்றால்:

102. காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு
ஞாலத்தின் மாணப் பெரிது.

ப. ரை: செய்த நன்றி சிறிது எனினும்=செய்த உதவி சிறியதே ஆனாலும், காலத்தினால்=அதுசெய்யப்பட்ட காலத்தை ஒட்டி, ஞாலத்தின் மாணப் பெரிது=உலகத்தைக் காட்டிலும் மிகப் பெரியதாகும்.

பொ. ரை: ஒரு உதவி சிறியதாக இருந்தாலும் அது செய்யப்பட்ட சமய சந்தர்ப்பங்களை ஒட்டி இந்த உலகத்தைவிட மிகப் பெரியதாக மதிக்கப்படும்.

வி-ம்: 'காலத்தினால்' என்றது, உதவி பெறுகின்றவனுடைய நெருக்கடியான சமயத்தைக் குறிக்கும்.

முதற் பாட்டில் சொன்ன உதவி 'செய்யாமற் செய்த உதவி' அதற்கு வையகமும் வானகமும் கூட ஈடாகாது. இங்கே சொல்லப்பட்டது 'காலத்திற் செய்த உதவி' இது உலகத்தைக் காட்டிலும் பெரியது. இனி, செய்யாமற் செய்த உதவி அல்லாவிடினும், காலத்திற் செய்த உதவியல்லாவிடினும், தன்னலம் அற்ற தன்மையினால் உயர்ந்த உதவியும் உண்டு. என்னவெனில்:

103. பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி
னன்மை கடலிற் பெரிது.

ப. ரை: பயன் தூக்கார் செய்த உதவி=பிரதிப் பயனைக்கருதாமல் செய்த உதவியின், நயன் தூக்கின்=கருணையைச் சீர் தூக்கிப் பார்த்தால், நன்மை கடலின் பெரிது=பெருமை கடலினும் பெரியது.

பொ. ரை: பிரதிப் பிரயோசனத்தைக் கருதாமல் செய்கிற உதவியிலுள்ள தன்னலங் கருதாக் கருணையைச் சீர்தூக்கிப் பார்த்தால் அதன் பெருமை கடலைக் காட்டிலும் பெரியது.

வி-ம்: செய்யாமற் செய்யும் உதவி, காலத்தில் செய்யும் உதவி, பயன் தூக்காமல் செய்யும் உதவி என்று மூன்று வித உதவிகள் மேலுள்ள மூன்று குறள்களிலும் சொல்லப்பட்டன.

எந்த உதவியானாலும் சரி, அதன் பயன், உதவியைப் பெறுகிறவனுக்கு நன்மை உண்டாவது. ஆதலால்:

104. தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்றெரி வார்.

ப. ரை: பயன் தெரிவார்=உதவியின் பயனை உணரக் கூடியவர்கள், தினை துணை நன்றி, செயினும்=ஒருவன் தமக்குத்

தினையளவு உதவி செய்தாலும். பனைத்துணையா கொள்வர்= அதை பனையளவாக மதிப்பார்கள்.

பொ. ரை: உபகாரத்தின் பயனை உணரக்கூடியவர்கள், ஒருவன் தமக்குத் தினையளவு மிகச் சிறிய உதவியைச் செய்தாலும் அதனைப் பனையளவு மிக உயர்ந்ததாகப் பாராட்டுவார்கள்.

வி-ம்: 'தினை' சிறுமையைக் குறிப்பது. 'பனை' உயர்வைக் குறிப்பது.

தினையும், பனையும் கூட ஒரு குறிப்பிட்ட சிறுமையையும் உயரத்தையும்தான் காட்டுவன. ஆனால் உதவியின் சிறுமையும் உயர்வும், மனிதனுக்கு மனிதன் பண்புக்குத் தக்கபடி மாறுபடும்:

105. உதவி வரைத்தன் றுதவி யுதவி
செயப்பட்டார் சால்பின் வரைத்து.

ப. ரை: உதவி உதவி வரைத்து அன்று=உதவியின் மதிப்பு உதவியின் அளவைப்பொறுத்ததல்ல. உதவி செய்யப்பட்டார் சால்பின் வரைத்து=உதவி யாருக்குச் செய்யப்பட்டதோ அவருடைய பெருங்குணத்தின் அளவைப் பொறுத்தது.

பொ. ரை: உபகாரத்தின் மதிப்பு உபகாரம் எவ்வளவு என்றதைப் பொறுத்ததல்ல. உபகாரத்தை அடைந்தவனுடைய குணப் பெருமையின் அளவைப் பொறுத்தது.

வி-ம் உதவியைப் பெற்றுக் கொண்டவனுடைய நன்றியறிவு எவ்வளவு அதிகமாக இருக்கிறதோ அவ்வளவு உயர்ந்ததாகும். அந்த குணம் எவ்வளவு குறைவாக இருக்கிறதோ அவ்வளவு சிறியதாகிவிடும்.

உனக்குப் பெருங்குணம் இருந்தால் உனக்கு உதவி செய்தவர்களுக்கு நீ செய்ய வேண்டியது என்னவெனில்:

106. மறவற்க மாசற்றார் கேண்மை துறவற்க
துன்பத்துட் டுப்பாயார் நட்பு.

ப. ரை: மாசு அற்றார் கேண்மை மறவற்க=குற்றமற்ற நல்லவர்களுடைய நட்பை மறந்து விடாதே, துன்பத்துள் துப்பு ஆயார் நட்பு துறவற்க=(குற்றம் உள்ளவர்களாக இருந்தாலும்) துன்ப காலத்தில் உதவி செய்தவர்களுடைய நட்பை (குற்ற முள்ளவரென்று) வெறுத்து விட்டுவிடாதே.

பொ. ரை: குற்றமற்ற நல்லவர்களுடைய சினேகத்தை மறந்து விடாதே. உன்னுடைய துன்ப காலத்தில் உதவி செய்த

வர்கள் குற்றமுடையவர்களானாலும் அதற்காக வெறுப்புக் காட்டி அவர்களுடைய நட்பைத் தள்ளி விடாதே.

வி-ம்: உதவி செய்கிறவர்கள் அவர்களுடைய சொந்த வாழ்க்கையில் குற்றமற்றவர்களாகவும் இருக்கலாம். ஏதாவது குற்றம் உள்ளவர்களாகவும் இருக்கலாம். குற்றமற்றவர்களானால் அவர்களை மறந்து விடாமல் இருந்தாற் போதும்; மறவாமல் இருப்பதும் முடியும். அவர்களைக் கண்டபோதெல்லாம் கொண்டாடிக் குலவவும் மனம் வரும். ஆனால் உதவி செய்தவர்கள் ஏதாவது குற்றமுள்ளவர்களானால் அவர்களை அதற்காக வெறுத்து விட்டுவிட எண்ணம் வருவது சகஜம். அவர்களுடன் நட்பு கொண்டாடிக் குலவுதல் செய்யவும் கூசும். அதற்காக இந்த எச்சரிக்கை. வேறு வகையான உதவி செய்தவராக இருந்தாலும் துறந்துவிடலாம். ஆனால் துன்ப காலத்தில் கைகொடுத்து உதவியவன் என்ன குற்றமுள்ளவனானாலும் அவன் நட்பைத் தள்ளிவிடக் கூடாது என்பது கருத்து. இங்கே 'மாசற்றார்' என்பதற்கு. குற்றமற்ற மகான்கள். என்பது பொருளல்ல; உதவி செய்தவர்களில் குற்றங்கள் இல்லாத வாழ்க்கையுள்ளவர்கள் என்றுதான் பொருள். குற்றமற்றவர்கள் அல்லா விட்டாலும் துன்பத்துள் துப்பாயார் நட்பைத் துறவற்க. என்றுதான் கொள்ளவேண்டும் இல்லையானால் 'மாசற்றார்' என்ற சொல்லுக்கு இந்த அதிகாரத்தில் இடமில்லை. அதனால் துன்ப காலத்தில் உதவி செய்தவர்கள் வேறு வகையில் குற்றமுள்ளவர்களானாலும் அவர்கள் நட்பைத் தள்ளிவிடக்கூடாது. ஏன் எனில்:

**107. எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்
விழுமந் துடைத்தவர் நட்பு.**

ப.ரை: தம் கண் விழுமம் துடைத்தவர் நட்பு=தங்களுக்கு வந்த துன்பங்களை நீக்கினவருடைய நட்பை. எழுமை எழு பிறப்பும் உள்ளுவர்=ஏழேழு தலை முறைக்கும் நினைத்துப் பார்ப்பார்கள். (நன்றியுள்ளவர்கள்)

பொ.ரை: தங்களுடைய கஷ்ட காலத்தில் வந்து உதவி செய்து துன்பக் கண்ணீரைத் துடைத்து வைத்தவர்களுடைய நட்பை. நன்றியறிவுள்ள நல்லவர்கள் ஏழேழு தலைமுறைக்கும் நினைத்துக் கொண்டே இருப்பார்கள்.

வி-ம்: 'எழுமை யெழு பிறப்பும்' என்பதற்கு ஏழேழு தலைமுறைக்கும் வாழையடிவாழையாக சொல்லிக் கொண்டிருப்பார்கள் என்பது நல்லது. அப்படியில்லாமல் "எழுவகைப் பிறப்புகளைச் சொன்னால் அறிவுக்குப் பொருந்தவில்லை. ஏழு

வகைப் பிறப்புகளாவன ; தேவர், மனிதர், விலங்கு பறவை,
ஊர்வன, நீர் வாழ்வன, தாவரம் என்பன. இந்தப் பிறவி
களில் பிறந்தாலும் நினைத்துக் கொண்டிருப்பார்கள் என்பது
சரியல்ல.]

ஆதலால் 'துறவற்க துன்பத்துள் துப்பாயார் நட்பு'—
குற்றமுடையவர்களானாலும் துன்பகாலத்தில் உதவி செய்த
வர்கள் நட்பை விட்டுவிடக் கூடாது. அவர்கள் நேரடியாகப்
பின்பு ஒரு குற்றமே செய்து விட்டாலும் :

108. நன்றி மறப்பது நன்றன்று நன்றல்ல
தன்றே மறப்பது நன்று.

ப. ரை : நன்றிமறப்பது நன்று அன்று = உதவியை மறப்பது
நல்லதல்ல. நன்று அல்லது அன்றே மறப்பது நன்று = நல்
லது அல்லாததை அப்போதே மறந்து விடுவது நல்லது.

பொ. ரை : ஒருவன் நம்முடைய துன்ப காலத்தில் நமக்குச்
செய்த உதவியை மறப்பது நல்லதல்ல. அவன் செய்யும்
குற்றத்தை உடனே மறந்துவிடுவது நல்லது.

வி-ம் : நம்முடைய கஷ்ட காலத்தில் நமக்கு உதவி செய்த
ஒருவன், அதன் பிறகு ஏதாவது நமக்குக் குற்றம் செய்து
விட்டாலும் அந்தக் குற்றத்தை மறந்து விட வேண்டுமே
யொழிய, முன் அவன் தக்க சமயத்தில் நமக்குச் செய்த
உதவியை மறந்துவிடக் கூடாது.

பின்னல் அவன் செய்கிற குற்றம் மிகப் பெரியதானு
லும் சரி :

109. கொன்றன்ன வின்னு செயினு மவர்செய்த
வொன்றுநன் றுள்ளக் கெடும்.

ப. ரை : கொன்று அன்ன இன்னு செயினும் = கொல்லுவதைப்
போன்ற குற்றம் செய்து விட்டாலும். அவர் செய்த ஒன்று
நன்று உள்ள கெடும் = அவர் முன் செய்த அந்த ஒரு உத
வியை நினைத்துப் பார்த்தால் இந்தக் குற்றம் மறைந்து
போகும்.

பொ. ரை : (முன்னே நம்முடைய கஷ்டகாலத்தில் உதவி செய்த
ஒருவர் பின்னல் நமக்கு) கொலை செய்வதைப் போன்ற
துன்பத்தைச் செய்து விட்டாலும், அவர் முன் நமக்குத் தக்க

சமயத்தில் உதவிசெய்த அந்த ஒன்றை நினைத்துப் பார்த்தால் இப்போது செய்யும் தீமைகள் மறைந்துவிடும்.

வி-ம்: பின்னுல் அவர் என்ன குற்றம் செய்துவிட்டாலும் முன்னே அவர் தக்க சமயத்தில் நமக்குச் செய்த உதவியை நினைத்து, பின்னுல் செய்யும் குற்றத்தை மறந்துவிட வேண்டியதுதான். அதுதான் நன்றியறிதல் - என்பது கருத்து.

அவர், பின்னுல் செய்துவிட்ட குற்றத்தை மன்னித்து மறந்துவிட முடியாவிட்டாலும், அவருக்குத் தீங்கு ஒன்றும் செய்துவிடக் கூடாது. தீங்கு செய்தால் அவர் செய்த உதவியைக் கொன்றதாகும். அதனுல்:

110. எந்நன்றி கொன்ருர்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.

ப. ரை: எந்நன்றி கொன்ருர்க்கும் உய்வு உண்டாம் = வேறு எந்த நன்மையை அழித்தவர்களுக்கும் தப்பித்துக் கொள்ள மார்க்கம் உண்டாகலாம். செய்ந் நன்றி கொன்ற மகற்கு உய்வு இல்லை = ஆனுல், துன்பகாலத்தில் செய்த உதவியை அழிக்கிற மனிதனுக்குத் தப்பித்துக் கொள்ளும் மார்க்கமே இல்லை.

பொ. ரை: வேறு எந்த நன்மையை அழித்தவனுக்கும் அதனுலுண்டாகும் பாவத்திலிருந்து தப்பித்துக் கொள்ள மார்க்கமுண்டு. ஆனுல் துன்ப காலத்தில் தனக்கு உதவி செய்த நன்றியை அழித்து, உதவி செய்தவனுக்குத் தீங்கு செய்கிற ஒருவனுக்கு அந்தப் பாவத்தினின்றும் தப்பித்துக் கொள்ள மார்க்கமே இல்லை.

வி-ம்: நன்றி கொல்லுதலாவது உபகாரம் செய்தவனுக்கு அபகாரம் செய்வது. நன்றியை மறந்துவிட்டால் அது நல்லதல்ல என்பது மட்டும் ஆகும். ஆனுல் நன்றியைக் கொன்று நன்றி செய்தவனுக்குத் தீமை செய்தால் அது நிச்சயமாகப் பாவமுண்டாக்கும். அதினின்றும் தப்ப முடியாது.

அதி. 12—நடுவுநிலைமை

[நடுவுநிலைமை = ஓரவஞ்சனையில்லாத குணம். குறிப்பாக ஒரு வழக்கைத் தீர்க்கும்போது சுயநல ஆசையினுல் பாரபட்சம் செய்துவிடாத நேர்மைக் குணம்.]

111. தகுதி யெனவொன்று நன்றே பகுதியாற்
பாற்பட் டொழுகப் பெறின்.

ப. ரை : பகுதியான் பால்பட்டு = வேற்றுமையான கருத்துள்ள வனுடைய நிலைமையில் தன்னை வைத்துக் கொண்டு, ஒழுகப் பெறின் = நடந்து கொண்டால், தகுதி என ஒன்று நன்றே = நடுவு நிலைமை என்ற ஒரு குணம் நல்லதாகவே இருக்கும்.

பொ. ரை : கருத்து வேற்றுமைப் பட்டவனுடைய நிலைமையில் தன்னை வைத்துக் கொண்டு ஒவ்வொருவனும் ஆராய்தல் செய்தால் பாரபட்சம் இல்லாமை என்ற நேர்மைக் குணம் சரியாகவே அமையும்.

வி - ம் : எந்த வழக்கிலும் வெவ்வேறு கருத்துகள் இருக்கும். அதைப்பற்றி ஆராய்ந்து தீர்ப்புச் செய்கிறவன், அந்தந்தக் கருத்து வேற்றுமை உள்ளவனுடைய நிலையில் தன்னை நிறுத்திக் கொண்டு ஆராய்ந்தால் நடுவுநிலைமை தவறாது.

இந்த நேர்மைக் குணம்தான் இல்லறத்தானுடைய குடும்பத்துக்கும் பரம்பரைக்கும் பாதுகாப்பு :

112. செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி
யெச்சத்திற் கேமாப் புடைத்து.

ப. ரை : செப்பம் உடையவன் ஆக்கம் = நேர்மைக்குண முடையவனுடைய பெருமைகள், சிதைவு இன்றி எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து = அழிந்து போகாமல் அவனுடைய சந்ததிக்குப் பாதுகாப்பாக இருக்கும்.

பொ. ரை : ஓரவஞ்சனை யற்ற குணமுடையவனுடைய பெருமைகள், விரைவில் அழிந்து போகாமல் அவனுடைய பரம்பரையைப் பாதுகாக்கும்.

வி - ம் : 'ஆக்கம்' என்பது பணச் செல்வம் மட்டுமல்ல; செல்வம், செல்வாக்கு, புகழ் முதலான அவன் ஆக்கி வைத்த எல்லாம் சேர்ந்தது 'ஆக்கம்'. நேர்மையான குணமுடையவன் பணமும் ஆக்கியிருக்கலாம். அத்துடன் அவன் நேர்மைக் குணம் அவனுக்குப் புகழும் தந்திருக்கும். அதனால் அவன் சந்ததியை அந்த நல்ல பெயரும் காக்கும். சந்ததியின் நல்வாழ்வே இல்லறத்தின் நோக்கமானதால் ஓரவஞ்சனையற்ற நேர்மைக் குணம் பரம்பரைக்குப் பாதுகாப்பு எனப்பட்டது.

நடுவு நிலைமையுள்ளவன் நேர்மையில்லாத வழிகளில் வரக்கூடிய செல்வத்தையோ செல்வாக்கையோ விரும்ப மாட்டான் :

113. நன்றே தரினு நடுவிகந்தா மாக்கத்தை
யன்றே யொழிய விடல்.

ப. ரை: நன்றே தரினும் = நன்மையே தருவதானாலும், நடுவு இகந்து ஆம் ஆக்கத்தை = நடுவு நிலைமையை விட்டுவிட்டு அடையக் கூடிய செல்வத்தை. அன்றே ஒழிய விடல் = அப்போதே விலக்கிவிட வேண்டும்.

பொ. ரை: நன்மையே தருவதானாலும் நேர்மையை விட்டு அடையக் கூடியதாக இருக்கிற செல்வத்தை, அப்போதே ஏற்றுக் கொள்ளாமல் விட்டொழிக்க வேண்டும்.

வி-ம்: 'நன்றே தரினும்' என்பது செல்வத்தினால் அடையக் கூடிய சுகபோகங்கள் முதலியவற்றைத் தருவதானாலும் என்பதற்கு.

நேர்மையற்ற வழியில் ஓரவஞ்சனை செய்து வருகின்ற செல்வம் சீக்கிரத்தில் சிதைந்து போகும். அப்படிச் சம்பாதித்தவனுடைய குடும்பத்துக்கும் சந்ததியார்க்கும் அது பாதுகாப்பாக உதவாது. அதனால் பிற்காலத்தார் இவனை நடுவு நிலைமையற்றவனாகத் தூற்றுவார்கள். எப்படியெனில்:

114. தக்கார் தகவில ரென்ப தவரவ
ரெச்சத்தாற் காணப் படும்.

ப. ரை: தக்கார் தகவு இலர் என்பது = நடுவு நிலைமை உள்ளவர் நடுவு நிலைமை இல்லாதவர் என்பது, அவரவர் எச்சத்தால் காணப்படும் = அவரவர்களுக்குப் பின்னுள்ள (சந்ததி முதலிய) மிச்சங்களால் கண்டு கொள்ளலாம்.

பொ. ரை: ஒருவன் நடுவு நிலைமை உள்ளவனா இல்லாதவனா என்பதை அவனுக்குப்பின் வருகிற அவனுடைய (சந்ததி முதலான) மிச்சங்களால் கண்டு கொள்ளலாம்.

வி-ம்: 'செப்பமுடையவன் ஆக்கம் சிதைவின்றி எச்சத்திற்கு ஏமாப்புடைத்து' என்று முன் சொன்னது இங்கே விளக்கப் படுகிறது. ஒவ்வொரு மனிதனும் அவனுக்குப் பின் அவனுடைய எச்சங்களாக மக்களையும் பேரப் பிள்ளைகளையும் சம்பாதித்த செல்வத்தையும் புகழையும் விட்டுப் போகிறான். அப்படி அவன் விட்டுப் போன செல்வம் சிதைந்து போகாமலும் அவனுடைய புகழ் மங்கிப் போகாமலும், அவனுடைய மக்களும் மற்றவர்களும் குடும்பத்தின் பெருமையைக் கெடுக்காமலும் சுகமாக வாழ்வதைக் கண்டால், அவன் நடுவு நிலைமையோடு வாழ்ந்த 'தக்கான்' என்பார்கள். இல்லாவிட்டால் அவன் நடுவு நிலைமை இல்லாமல் வாழ்ந்த 'தகவு இலான்' என்பார்கள். ஆதலால் ஒருவன் விட்டுப் போகிற எச்சங்களால் அவனுடைய பெருமை சிறுமை பேசப்படுகிறது...... இங்கே நடுவு நிலைமை உள்ளவர்களுக்குத்தான்

மக்கள் உண்டென்றும் நடுவு நிலைமை இல்லாதவர்களுக்கு மக்கள் இல்லை யென்றும் பொருள் சொல்லுவது முற்றிலும் தவறு. அது சுருதி, யுக்தி, அனுபவம் என்ற மூன்றுக்கும் பொருந்தாது.

ஆகையினுல் பின்னுல் வரக்கூடிய கெட்ட பெயருக்கு அஞ்சி இப்போதைக்குப் பணம் இல்லையே எனபதற்காகத் தவறி விடக்கூடாது. ஏன் எனில் :

115. கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்
கோடாமை சான்ருேர்க் கணி.

ப. ரை : கேடும் பெருக்கமும் இல்லல்ல = ஏழையாவதும் பணக்காரன் ஆவதும் இல்லாததல்ல. நெஞ்சத்து கோடாமை சான்ருேர்க்கு அணி = மனம் கோணலாகாமல் நேர்மை யாகவே இருப்பது உயர்ந்த குணமுடையவர்களுக்கு அழகு.

பொ. ரை: கெட்டகாலமும் நல்லகாலமும் இல்லாததல்ல. மனதிலுள்ள நேர்மையை விட்டுக் கோணுமல் இருப்பதுதான் உயர் குணமுடையவர்களின் அழகு.

வி-ம் : ஏழையாவதும் பணக்காரனுவதும் எல்லாருக்கும் உள்ளதுதான். ஏழை ஏழையாகவே இருந்து விடுவதும் இல்லை; பணக்காரன் பணக்காரனுகவே இருந்து விடுவதுமில்லை. அதையறிந்து நல்லவர்கள் இப்போது ஏழையாகவே இருக்கிருேமே என்பதற்காக நேர்மையற்ற காரியத்தை மனதிலும் நினைக்க மாட்டார்கள் - என்பது கருத்து.

நேர்மையான காரியம் எது, நேர்மையற்ற காரியம் எது என்பதை நாம் எப்படி அறிய முடியும் என்ருல் :

116. கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்ச
நடுவொரீஇ யல்ல செயின்.

ப. ரை : நடுவு ஒரீஇ அல்ல செயின் = நடுவு நிலைமையை விட்டு அதற்கு மாருன காரியத்தை ஒருவன் செய்யும்போது, தன் நெஞ்சம் கெடுவல் யான் என்பது அறிக = அவனுடைய மனச்சாட்சி 'நான் கெட்டுப் போவேன்' என்று எச்சரிப்பதை அறிய வேண்டும்.

பொ. ரை : ஒருவன் நடுவு நிலைமை விட்டு அதற்கு மாருன காரியத்தைச் செய்யத் துணியும்போது அவனுடைய மனச்சாட்சி 'நான் கெட்டுப் போவேன்' என்று எச்சரிப்பதை அவன் அறிய வேண்டும்.

வி-ம்: நடுவு நிலைமை தவறும்போதுதான் மனச்சாட்சி எச்சரிக்குமா? மற்ற குற்றங்களுக்கு எச்சரிக்காதா என்ற கேள்வி பிறக்கலாம். எல்லாக் குற்றங்களுக்கும் மனச்சாட்சி எச்சரிக்கத்தான் செய்கிறது. ஆனால் பெரும்பாலும் குற்றங்கள் ஆத்திரத்தாலும் அவசரத்தாலும் மனச் சாட்சி பேசுவதற்கு முன் நடந்து விடலாம். இங்கே நடுவு நிலைமை வகித்து வெவ்வேறு கருத்துக்களின் நிலைமைகளை நிதானமாக ஆராய்ந்து தீர்ப்புச் செய்ய வேண்டியவனைப் பற்றி மட்டுந்தான் சொல்லப்படுகிறது. ஆதலால் இவனுடைய மனச்சாட்சி இவனை எச்சரிக்கப் போதுமான அவகாசம் இருக்கிறது. இந்த அதிகாரம் ஒரு வழக்கைத் தீர்த்துவிட நியாயம் அறிந்து நிதி சொல்ல வேண்டியவனைப் பற்றியது. வழக்குகளில் ஓரம் பேசிச் சுயநலம் தேடக்கூடாது. அப்படிச் செய்தால் அவன் குடி முழுகிப்போய் அவனுக்குப் பின்னால் அவனுக்குப் பழிச் சொல்லும் உண்டாகும் என்பதைச் சொல்லுவது. அது. 'வேதாளம் சேருமே வெள்ளெருக்குப் பூக்குமே – பாதாள மூலி படருமே – மூதேவி – சென்றிருந்து வாழ்வாளே சேடன் குடிபுகுமே-மன்றோரம் சொன்னார் மனை' என்பதன் நோக்கமுடையது. ஆனால் இந்த நடுவு நிலைமை வழக்குத் தீர்க்கிறவர்களுக்கு மட்டுந்தானா என்றால் அப்படியல்ல. பிறர் வழக்கை ஆராயும்போது வற்புறுத்தப்படும் நடுவு நிலைமை தன் வழக்குகளுக்கும் வாழ்க்கைக்கும் கூடச் சொன்னதாகும்.

நடுவு நிலைமை தவறி வழக்கில் ஓரஞ் சொன்னால் வெகு சுலபமாகப் பெரிய லாபத்தை அடைய முடியும், அதனால் தரித்திரம் நீங்கிச் செல்வ முடையவனாகவும் ஆகிவிடலாம். ஆனால் அதற்காகச் சான்றோர்கள் நேர்மை தவறிவிட மாட்டார்கள்.

117. கெடுவாக வையா துலக நடுவாக
நன்றிக்கட் டங்கியான் றாழ்வு.

ப. ரை: நடுவாக நன்றிக் கண் தங்கியான் தாழ்வு = நடுவு நிலைமை என்ற தர்மத்தில் நிலைத்தவனாக நடந்து கொள்ளுகிறவனுடைய வறுமையை, கெடுவாக வையாது உலகு = குற்றமாக உலகம் கருதாது.

பொ. ரை: நடுவு நிலைமை தவறாமல் எப்போதும் நடந்து கொள்ளுகிறவனுடைய தரித்திரத்தை ஒரு குற்றமாக உலகத்தார் கருதமாட்டார்கள்.

வி-ம்: 'நன்றிக்கட் டங்கியான்' என்பதற்கு நேர்மை என்ற நல்ல குணத்திலேயே எப்போதும் தங்கியிருப்பவன் என்று

பொருள். அதனல் எப்போதும் நேர்மை தவருமல் வாழ்க்கை நடத்துகிறவன் ஏழையாகவே இருக்க நேர்ந்தாலும் அவனை உலகம் அவமதித்துவிடாது. மேலும் அவனுடைய ஏழ்மையினுல் அவனுக்குத் துன்பம் வந்து விடாமலும் உலகத்தார் கவனிப்பார்கள் என்பதும் தோன்றுகின்றது.

இந்த நடுவு நிலைமைக் குணம் பொதுவாகப் பல காரியங்களுக்கும் வேண்டியதானலும், ஒரு வழக்கைச் சீர்தூக்கி நியாயம் செய்கிற நிலையை முக்கியமாக வைத்துச் சொல்லுவதால், அப்படி நியாயம் சொல்லும் போது பாரபட்சமில்லாமல் சொல்ல வேண்டும் :

118. சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்
கோடாமை சான்ருேர்க் கணி.

ப. ரை : சமன் செய்து சீர்தூக்கும் கோல் போல் அமைந்து = சரி பார்த்து நிறுத்தளக்கின்ற துலாக் கோலைப் போல இருந்து, ஒருபால் கோடாமை சான்ருேர்க்கு அணி = ஒரு பக்கமாகச் சாய்ந்து விடாமலிருப்பது உயர்ந்த குணமுள்ளவர்களுக்கு அழகு.

பொ. ரை : பண்டங்களைச் சரி சமனுக நிறுக்கின்ற தராசுபோல ஒரு பக்கத்திலும் சாயாமலிருப்பதுதான் உயர்ந்த குணமுள்ளவர்களின் லக்ஷணம்.

வி - ம் : எந்த வழக்கிலும் இரண்டு கட்சிகளுக்குக் குறையாமலிருக்கும். இரண்டு கட்சியின் நியாயத்தையும் சமனுகச் சீர்தூக்கவேண்டும். அதுதான் நடு நிலைமை உள்ளதற்கு அழகு.

இப்படிச் சீர்தூக்கி நேர்மையான தீர்ப்புச்சொல்ல, உள்ளம் நேராக இருக்க வேண்டும்:

119 சொற்கோட்ட மில்லது செப்ப மொருதலையா
வுட்கோட்ட மின்மை பெறின்.

ப. ரை : ஒரு தலையா உள் கோட்டம் இன்மை பெறின் = ஒரு பக்கமாக உள்ளம் கோணுதல் இல்லாமல் இருந்தால், செப்பம் சொல் கோட்டம் இல்லது = நடுநிலையின் தீர்ப்பு கோணவில்லாமல் இருக்கும்.

பொ ரை : மனம் ஒரு பக்கத்தில் சாய்ந்து விடாமல் இருந்தால் தீர்ப்புச் சொல்லுவதும் நடு நிலைமை தவருததாக இருக்கும்.

வி - ம் : வழக்கைச் சீர்தூக்குகிறவனுடைய மனம் ஒரு கட்சிக்குச் சலுகையாகச் சாய்ந்து விடாமல் இருந்தால்தான் தீர்ப்பு நியாயமானதாக இருக்கும்.

அப்படி மனம் சாயாமல் இருப்பதுதான் வழக்கை ஆராய்ந்து நீதி சொல்ல வந்தவர்களுக்கு இருக்க வேண்டிய குணம். ஏனெனில் :

120. வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்.

ப. ரை : பிறவும் தமபோல் பேணிச் செயின் = பிறருடைய பொருளேயும் தம்முடைய பொருள் போல நிறுத்து அளந்தால், வாணிகம் செய்வார்க்கு வாணிகம் = அதுதான் வியாபாரம் செய்கிறவர்களுக்கு அவர்கள் வேலே.

பொ. ரை : எதையும் சமஞக நிறுத்து அளந்து கொடுக்க வேண்டியதே தன் கடமையாகக் கொண்ட வாணிகனுக்கு அழகு என்னவென்றுல், பிறருடைய, பண்டத்தையும் தன்னுடையது போல ஏற்றத் தாழ்வில்லாமல் நிறுத்து அளக்க வேண்டியதுதான். அப்படித்தான் நடுவு நிலேமை வகிக்க வேண்டியவர்களும் நிறுத்து அளந்து தீர்ப்புச் சொல்ல வேண்டும்.

வி-ம் : 'சமன் செய்து சீர் தூக்கும்' துலாக் கோலேக் கொண்டு எப்படிப் பிறருடைய பண்டத்தையும் தன்னுடையது போலவே வாணிகன் ஏற்றத் தாழ்வில்லாமல் நிறுத்து அளக்க வேண்டுமோ அதுபோல் நடுவு நிலேமை வகிக்க வேண்டியவனும் பிறருடைய நியாயத்தையும் தன்னுடையது போலவே சீர்தூக்க வேண்டும். அதுதான் நடுவு நிலேமை.

அதி. 13—அடக்கமுடைமை

['அடக்க முடைமை' என்பது பொதுவாக ஐந்து பொறிகளேயும் அடக்கியாள வேண்டும் என்பதும் குறிப்பாக மனம் சொல், செயல் என்ற மூன்றையும் கட்டுப்படுத்த வேண்டும் என்பதும் ஆகும்.]

121. அடக்க மமரரு ளுய்க்கு மடங்காமை
யாரிரு ளுய்த்து விடும்.

ப. ரை: அடக்கம் அமரர் உள் உய்க்கும் = அடக்கம் என்னும் நற்குணம் தேவர்களோடு சேர்த்து வைக்கும், அடங்காமை ஆர் இருள் உய்த்து விடும் = அடங்காமை என்னும் தீய குணம் மிகுந்த இருட்டில் சேர்த்து விடும்.

பொ. ரை: அடக்கமுடைமை என்ற நல்ல குணம் ஒருவனை தேவர்களோடு சேர்த்து வைக்கும். அடங்காமை என்ற கெட்டகுணம் அவனை மிகுந்த இருட்டான இடத்தில் தள்ளி விடும்.

வி-ம்: அடக்கம் என்ற நல்ல குணத்தால் ஞானபலம் பெருகும்; அதனால் தெய்வத்தன்மை யென்ற பிரகாசத்தை அடைய முடியும். அடங்காமை என்ற கெட்ட குணம் அஞ்ஞானம் என்ற இருட்டில் தள்ளிவிடும்.

ஆகையினால்:

122. காக்க பொருளா வடக்கத்தை யாக்க
மதனினூங் கில்லை யுயிர்க்கு.

ப. ரை: அடக்கத்தை பொருளா காக்க = அடக்க முடைமை என்ற குணத்தைச் செல்வமாகப் பாதுகாக்க வேண்டும், உயிர்க்கு ஆக்கம் அதனின் ஊங்கு இல்லை = உயிருக்கு வல்லமை தருவது அதைக் காட்டிலும் வேறொன்றுமில்லை.

பொ. ரை: அடக்கத்தைப் பொக்கிஷமாகப் பாதுகாக்க வேண்டும். உயிருக்கு அதைக் காட்டிலும் சக்தியுண்டாக்குவது வேறொன்றுமில்லை.

வி-ம்: அடக்க முடைமை உயிருக்கு ஆன்ம சக்திகளைப் பலப் படுத்தும். 'உயிர்க்கு' என்பது மனிதருக்கு என்ற பொருளில் நிற்பது.

அடக்கமுடைமை என்பது ஒன்றும் தெரியாதவனாக அடங்கிக் கிடப்பதல்ல. பின் என்ன வெனின்:

123. செறிவறிந்து சீர்மை பயக்கு மறிவறிந்
தாற்றி னடங்கப் பெறின்.

ப. ரை: அறிவு அறிந்து = அறிய வேண்டியவற்றை அறிந்து, ஆற்றின் அடங்க பெறின் = (அவ்வறிவு காட்டும்) நல்ல நெறியில் அடக்கமுடையவனாக நடந்து கொண்டால், செறிவு அறிந்து = அந்த அடக்கத்தின் மிகுதிக்குத் தக்கபடி, சீர்மை பயக்கும் = சிறப்பு உண்டாகும்.

பொ. ரை: (கற்க வேண்டியதைக் கற்று) அறிய வேண்டியதை அறிந்து அக் கல்வியறிவின் நெறியில் அடங்கி நடந்து கொண்டால் அந்த அடக்கம் எவ்வளவுக் கெவ்வளவு நிறைந்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு சிறப்புண்டாகும்.

வி-ம்: 'செறிவறிந்து' = செறிவின் அளவை அறிந்து - செறிவுக்குத் தக்கபடி.

அறிவறிந்து நன்னெறியில் நின்று, தான் மற்றவர்களைக் காட்டிலும் உயர்ந்தவன் என்று எண்ணுமல் எல்லாரிடத்திலும் எல்லாக் காரியத்திலும் பணிவாக நடந்து கொள்வது தான் அடக்கம் என்பது. ஆனல் தன் கண்ணியத்தையும் கொள்கைகளையும் விட்டுத் தாழ்ந்து விடக் கூடாது :

124. நிலையிற் றிரியா தடங்கியான் றோற்றம்
மலையினு மாணப் பெரிது,

ப. ரை : நிலையில் திரியாது = தன் கொள்கையில் மாறுதல் வந்து விடாதபடி, அடங்கியான் தோற்றம் = அடங்கி நடக்கிறவனுடைய பெருமை, மலையினும் மாண பெரிது = மலையைக் காட்டிலும் மிகவும் பெரிது.

பொ. ரை : தன்னுடைய கொள்கைகளை விட்டு விடாதபடி, பிறருக்குத் தணிவாக நடந்து கொள்ளுகிறவனுடைய புகழ், மலையைக் காட்டிலும் மிகவும் பெரிது.

வி - ம் : 'நிலை' தான் காத்துக் கொள்ள வேண்டிய தன்னுடைய 'கொள்கை' அல்லது 'மானம்'. பிறருக்குப் பணிவாக நடந்து கொள்ள வேண்டுமென்று தன் கொள்கையையும் கண்ணியத்தையும் விட்டு விடக் கூடாது. கொள்கையும் மானமும் குறைந்துவிடும்போல் இருக்கிற சந்தர்ப்பங்களில் பணிவு காட்டுவது மிகவும் கடினமானது. ஆகையால் கண்ணியமும் கெடாமல் பணிவும் காட்டுகிறவனுடைய சிறப்பு மிகவும் பெரியதாகும்.

அப்படிப்பட்ட பணிவுள்ள அடக்கம் செல்வமுடையவர்களிடத்தில் இருந்தால் மிகவும் நல்லது :

125. எல்லார்க்கு நன்றாம் பணித லவருள்ளுஞ்
செல்வர்க்கே செல்வந் தகைத்து.

ப. ரை : எல்லார்க்கும் நன்று ஆம் பணிதல் = எல்லா மனிதர்களுக்கும் நல்லது பணிவுடைமை என்னும் அடக்கம், அவருள்ளும் செல்வர்க்கே செல்வம் தகைத்து = அவர்களுக்குள்ளேயும் செல்வ முடையவர்களுக்கே செல்வம் போன்றது அடக்கமுடைமை.

பொ. ரை : பணிவுடையவராக இருக்க வேண்டும் என்பது எல்லாருக்கும் நல்லது, ஆனலும் செல்வ முடையவர்களுக்கே அது செல்வம் போன்றது.

வி - ம் : 'செல்வர்க்கே செல்வம் தகைத்து' என்பதற்கு செல்வமுடையவர்கள் தாம், பணி வுடைமையை அவர்களு

டைய செல்வத்தைப் பாதுகாப்பது போல் பாதுகாக்க வேண்டும் என்பதுதான் அர்த்தம். மற்றவர்களைக் காட்டிலும் செல்வர்கள் அடக்கமுடையவர்களாக இருப்பதுதான் உலகத்துக்கு உபகாரமுள்ளதாகும். இங்கே 'செல்வம்' என்றது வெறும் பணச் செல்வத்தைத்தான். 'கல்விச் செல்வம்' 'குலப் பெருமை' முதலியவற்றை இதில் சம்பந்தப் படுத்தக் கூடாது.

அடக்கமுடைமை என்பது ஒவ்வொருவரும் தம்முடைய ஐந்து புலன்களையும் அடக்கி வசப்படுத்திக் கொண்டு உலக இன்பங்களை அளவாக அனுபவிக்க வேண்டும் என்பதுதான். அப்படிச் செய்வதனால் இல்லறம் இனிது நடந்து இம்மைப் பயன்களை அடைவது மட்டுமல்லாமல் மறுமைக்கும் நல்லது :

126. ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

ப. ரை: ஒருமையுள் = ஒரு பிறப்பில், ஆமை போல் ஐந்து அடக்கல் ஆற்றின் = ஆமையானது ஐந்து அவயவங்களையும் அடக்கியாள்வதைப் போல (நாம் நமது) ஐந்து பொறிகளையும் அடக்கி யாள முடியுமானால், எழுமையும் ஏமாப்பு உடைத்து = (நம்முடைய) ஏழு பிறவிகளுக்கும் அது பாதுகாப்பளிக்கும்.

பொ. ரை: ஆமையானது தன்னுடைய நான்கு கால்களும் தலையும் ஆகிய ஐந்து உறுப்புகளையும் அடக்கியாள்வதைப் போல, நாம் நமது ஐந்து ஆசைகளையும் இந்தப் பிறப்பில் அடக்கியாள முடியுமானால், அது நமக்கு இனிவரக்கூடிய ஏழு பிறப்புகளுக்கும் பாதுகாப்பளிக்கும்.

வி-ம்: இங்கே 'ஐந்தடக்கல்' என்பதற்கும் தவசிகளுக்குச் சொல்லப்பட்ட 'ஐந்தவித்தல்' என்பதற்கும் உள்ள வேற்றுமையைக் கவனிக்க வேண்டும். 'ஐந்தடக்கல்' என்பது ஐந்து ஆசைகளையும் அடக்கி ஆள்வது. 'ஐந்தவித்தல்' என்பது ஐந்து ஆசைகளையும் அறவே ஒழிப்பது. தவசியானவன் ஐந்து ஆசைகளுக்கும் துளிகூட இடந்தரக் கூடாது. இல்லறத்தான் ஐம்புல ஆசைகளையும் அனுபவிக்க வேண்டியவன். ஆனால் கட்டுக்கு மீற விடாமல் ஆசைகளை அடக்கி அளவாக அனுபவிக்க வேண்டும். ஆமையானது எப்படித் தன் தலையையும் கால்களையும் அடக்கிக் கொண்டு வேண்டும் போது வேண்டிய அளவு வெளியே நீட்டுகிறதோ, அப்படி இல்லறத்தான் தன்னுடைய ஐந்து இந்திரியங்களையும் வசப்படுத்திக் கொண்டு வேண்டும் போது வேண்டியபடி தக்க அளவோடு அனுபவிக்க வேண்டும்.

இப்படி ஐந்து ஆசைகளையும் அடக்கிக், காத்தால் மிகவும் நல்லது தான், ஆனால் அது பெரிய முயற்சி. அவ்வளவும் முடியாவிட்டாலும் குறிப்பாக :

127. யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

ப. ரை : யாகாவார் ஆயினும் நாகாக்க = எதை அடக்கா விட்டாலும் நாக்கை அடக்க வேண்டும், காவாக்கால் = அடக்கா விட்டால், சொல் இழுக்கு பட்டு சோ காப்பார் = சொல்லில் குற்றப்பட்டுத் துன்பத்துக்கு ஆளாவார்கள்.

பொ. ரை : எதை அடக்கியாளாவிட்டாலும் நாக்கை அடக்கி யாள வேண்டும். அடக்காவிட்டால் குற்றமான சொல்லைப் பேசித் துன்பப்பட நேரும்.

வி - ம் : நாக்குப் பதட்டமில்லாத அடக்கமே மிகவும் முக்கிய மானது.

பேச்சில் அடக்கமில்லா விட்டால் அடக்கமுடைமை என்ற பெருமை கெட்டுப் போகும் :

128. ஒன்றானுந் தீச்சொற் பொருட்பய னுண்டாயி
னன்றாகா தாகி விடும்.

ப. ரை : ஒன்றானும் தீச் சொல் பொருள் பயன் உண்டாயின் = ஒரு சொல்லாலாவது கெட்ட சொல்லின் பொருள் தரக் கூடியபயன் உண்டாகுமானால், நன்று ஆகாது ஆகிவிடும் = நல்லது அல்லாதது ஆகிவிடும்.

பொ. ரை : (பேசுகின்ற பேச்சுகளில்) ஒரு வார்த்தையாவது கெட்ட வார்த்தையின் அர்த்தம் உண்டாக்கக் கூடிய பயனை உண்டாக்கிவிடுமானால் அடக்கம் என்பது கெட்டுப் போகும்.

வி - ம் : எப்படி அர்த்தம் செய்தாலும் கெட்ட வார்த்தைக் குள்ள அர்த்தம் மறைமுகமாகவும்கூட உண்டாக்காத சொற் களைச் சொல்ல வேண்டும் என்பது தெரியவே, தீச் சொல் - பொருள் - பயன் என்று அடுக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது.

மறைமுகமாகவும் தீய பொருள் தரக்கூடிய சொல்லைப் பேசக்கூடா தென்றால், நேராகப் புண்படுத்தக் கூடிய சொல்லைப் பேசுவது மிகவும் கெட்ட பலன்களை உண்டாக்கும் என்பதில் ஐயமென்ன ? அந்தக் கெட்ட பலன் உடனே உண்டாகாவிட்டாலும் நிச்சயமாகப் பின்னால் உண்டாக இடமிருக்கிறது. எப்படியெனில் :

129. தீயினுற் சுட்டபு ணுள்ளாறு மாருதே
நாவினுற் சுட்ட வடு.

ப. ரை: தீயினுல் சுட்ட புண் உள் ஆறும் = நெருப்பினுல் சுட்டுவிட்ட புண் உள்ளே ஆறிவிடும், நாவினுல் சுட்ட வடு ஆருது = நாக்கினுல் சுட்ட வசை ஆருது.

பொ. ரை: நெருப்பினுல் சுட்ட புண் வெளியில் தழும்பு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும். ஆனுல் நாக்கினுல் உண்டாக்கிய வசையின் புண் வெளியே தழும் பில்லாவிட்டாலும் உள்ளத்தில் ஆருது.

வி-ம்: தீயினுல் சுட்டபுண் உள்ளே ஆறிப் போன பின்னும் வெளியில் தழும்பு இருக்கும்; எனினும் தழும்பினுல் துன்பம் இருக்காது. ஆனுல் தீய சொல்லால் உண்டான புண் வெளியில் தெரியாவிட்டாலும் உள்ளத்தில் ஆருமல் இருந்து கொண்டே இருக்கும். அப்படி மனப் புண் அடைந்த ஒருவனுல் அந்தப் புண்ணை உண்டாக்கினவனுக்கு எப்போதாவது துன்பம் வரலாம். மனப்புண் அடைந்தவன் அந்த மனப் புண்ணை உண்டாக்கினவனுக்கு ஒரு துன்பமும் செய்ய விரும்பாதவனுக இருந்தாலும்கூட அந்தப் புண்ணை உண்டாக்கினவனை நினைக்கும் போதெல்லாம் அவனுக்காவது துன்பம் உண்டாகும். ஆகையினுல் நாவினுல் சுட்டபுண் முற்றிலும் ஆறிவிடாது.

புண்படுத்தக்கூடிய சொல்லுக்குக் காரணம் கோபம். கோபம் அடக்க முடைமைக்குப் பகையானது. முதலில் கோபத்தை அடக்கப் பழக வேண்டும். அதன் பிறகு அடக்க முடையவனுக இருப்பது எளிதாகும். ஆதலால்:

130. கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி
யறம்பார்க்கு மாற்றி னுழைந்து.

ப. ரை: கதம் காத்து கற்று = கோபத்தை அடக்கிப் பழகி, அடங்கல் ஆற்றுவான் செவ்வி = அடக்க முடையவனுக நடந்து கொள்ளக் கூடியவனுடைய நலத்தை. அறம் நுழைந்து ஆற்றின் பார்க்கும் = அறக்கடவுள் தானே வந்து தன் இயல்பாகவே பார்த்துக் கொள்ளும்.

பொ. ரை: கோபத்தை அடக்கப் பழகி. அடக்க முடையவனுக நடந்து கொள்ளக் கூடியவனுடைய சேமத்தை, அறக் கடவுள் தானுகவே வந்து அவனுடைய இருப்பிடத்தில் நுழைந்து தன்னுடைய இயல்பான கடமையாகப் பார்த்துக்கொள்ளும்.

வி-ம்: 'கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான்' என்பதை 'கதங் காத்துக் கற்று' என்றும் அதன்பின் 'அடங்க லாற்று வான்' என்றும் பொருள் கொள்ள வேண்டும். கதங்காத்து அதற்குப்பின் கல்வியறிவுடையவனாக வேண்டும் என்பதில் அர்த்தமில்லை. 'செவ்வி' என்பது இங்கே காலத்தைக் குறிப்பதல்ல; செவ்விய வாழ்வைக் குறிப்பது. அடக்கமுடைமைக்கு வேண்டிய முதல் கல்வி எது வென்றால் கோபத்தை அடக்கப் பழகுவது. அதன் பிறகு மற்ற அடக்கங்கள் எளிது. கோபத்தை அடக்கினால் நாக்கை அடக்கலாம்; நாக்கை அடக்குவது மனதை அடக்குவதாகும். மனதை அடக்கினால் மற்றெல்லாப் புலன்களையும் அடக்கியாள முடியும்.

அதி. 14—ஒழுக்கமுடைமை

[ஒழுக்கமுடைமை என்பது குற்றமற்ற பழக்கவழக்கங்கள் சேர்ந்த நல்ல நடத்தை. ஒவ்வொரு நாளும் நாம் செய்கிற ஒவ்வொரு செயலும் நல்ல நடத்தைக்கு ஒத்ததா என்று சீர்தூக்கிச் செய்யும் சீலம்—'ஒழுக்கமுடைமை.']

131. ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க
முயிரினு மோம்பப் படும்.

ப. ரை: ஒழுக்கம் விழுப்பம் தரலான் = நல்ல நடத்தை மேன்மையைத் தருமாதலால், ஒழுக்கம் உயிரினும் ஓம்பப் படும் = நல்ல நடத்தையை உயிரைக் காட்டிலும் சிறந்ததாகப் பாதுகாக்க வேண்டும்.

பொ. ரை: நல்ல நடத்தை ஒருவனுக்கு மேன்மை உண்டாக்குவதனால் நல்ல நடத்தையை உயிரைக் காட்டிலும் உயர்ந்ததாக மதித்து மிகவும் கருத்தோடு காக்க வேண்டும்.

வி-ம்: உயிர் எல்லாருக்கும் இருக்கிறது. உயர்வு எல்லாருக்கும் இல்லை. ஒழுக்கத்தினால்தான் உயர்வு கிடைக்கிறது. அதனால் உயிரைக் காட்டிலும் சிறந்தது ஒழுக்கம்.

எல்லா நன்மைகளுக்கும் ஒழுக்கமே காரணம். எப்படிப் பார்த்தாலும் நல்வாழ்வுக்கு அடிப்படை ஒழுக்கம்தான். ஆகையினால்:

132. பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்
தேரினு மஃதே துணை.

ப. ரை: பரிந்து ஓம்பி ஒழுக்கம் காக்க = உடல் வருந்தி மிக்க கருத்தாக ஒழுக்கத்தை வளர்க்க வேண்டும். தெரிந்து ஓம்பி தேரினும் அஃதே துணை = (கல்வி கேள்விகளால்) தெரிந்து ஆராய்ந்து பார்த்துத் தீர்மானித்தாலும் அதுதான் உதவக் கூடியது.

பொ. ரை: கல்வி கேள்விகளால் தெரிய வேண்டியவற்றைத் தெரிந்து அப்படித் தெரிந்த அறிவைக் கொண்டு சீர்தூக்கிப் பார்த்து முடிவு செய்தாலும் ஒழுக்கம் என்ற நல்ல நடத்தை தான் நமக்குத் துணைபுரியத்தக்கது என்று தெரிகிறது. ஆகையினால் என்ன கஷ்டமிருந்தாலும் பொறுத்துக்கொண்டு ஒழுக்கத்தை வளர்க்க வேண்டும்.

வி-ம்: எப்படிப் பார்த்தாலும் ஒழுக்கம் தான் நமக்குத் துணை என்றதனால் இம்மையைக் கருதினாலும் மறுமையைக் கருதினாலும் ஒழுக்கமுடைமை தான் உதவி செய்யும் என்பது கருத்து.

பிறப்பில் சமனாகவே இருக்கிற மனிதருக்குள் உயர்வு தாழ்வு உண்டாக்குவதே ஒழுக்கம்தான் :

133. ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்.

ப. ரை: ஒழுக்கம் உடைமை குடிமை = ஒழுக்கம் உள்ளவனாக இருப்பது குடிப் பிறப்பு, இழுக்கம் இழிந்த பிறப்பு ஆய் விடும் = ஒழுக்கத்தில் தவறுவது தாழ்ந்த பிறப்பாகிவிடும்.

பொ. ரை: ஒழுக்க முடைமைதான் உயர்ந்த குலம் என்பது. ஒழுக்கம் தவறினால் தாழ்ந்த குலம் ஆகிவிடும்.

வி-ம்: ஒழுக்க முடைமையினால்தான் ஒருவன் உயர்ந்த பிறப்புடைய வனாகக் கருதப்படுகிறான். ஒழுக்கம் கெட்டவன் உயர்ந்த குலத்தில் பிறந்திருந்தாலும் தாழ்ந்த பிறப்புடைய வனாகவே மதிக்கப்படுவான்.

அதற்கு உதாரணமாக :

134. மறப்பினு மோத்துக் கொளலாகும் பார்ப்பான்
பிறப்பொழுக்கங் குன்றக் கெடும்.

ப. ரை: ஓத்து மறப்பினும் கொளல் ஆகும் = வேதம் ஓதுவதை மறந்து விட்டாலும் ஒப்புக் கொள்ளலாம்; பார்ப்பான் பிறப்பு ஒழுக்கம் குன்ற கெடும் = பிராமணனுடைய பிறப்பு அவனுடைய ஒழுக்கம் குறைந்தால் கெட்டு விடும்.

பொ. ரை: வேதம் முதலிய ஞான நூல்களைப் படிப்பதை மறந்து விட்டாலும் பாதகமில்லை. ஆனால் பிராமணன் அவனுடைய ஒழுக்கத்தில் குறைந்தால் அவனுடைய பிறப்பு கெட்டுப் போகும்.

வி - ம்: வேதம் முதலிய ஞான நூல்களைத் தினந்தினம் தவறாமல் படிப்பதும் பிறருக்குப் போதிப்பதும் ஒழுக்கம் தவறாத தூய வாழ்க்கை நடத்திப் பிற மக்களுக்கு வழிகாட்டியாக இருப்பதும் ஆகிய காரணங்களால்தான் பிராமணன் உயர் குலத்தான் என மதிக்கப்படுவது. இவற்றுள் வேதம் ஓதுவதை ஒருநாள் மறந்து விட்டாலும் குற்றமில்லை. ஆனால் அவனுடைய நல்ல நடத்தைகளில் தவறுவானாகில் உடனே அவன் தாழ்ந்த குலத்தான் ஆகிவிடுவான். 'ஓத்து மறப்பினும்' என்பதற்கு, படித்ததை யெல்லாம் மறந்து போனாலும் என்பது பொருளல்ல. தினந்தினம் தவறாமல் ஓதவேண்டிய நேரங்களில் ஓத மறந்துவிட்டாலும் - என்பது பொருள்.

குலத்தின் உயர்வு மட்டுமல்ல; எந்த விதமான உயர்வும் ஒழுக்கம் தவறினவனிடம் தங்காது:

135. அழுக்கா றுடையான்க ணாக்கம்போன் றில்லை
யொழுக்க மிலான்க ணுயர்வு.

ப. ரை: அழுக்காறு உடையான் கண் ஆக்கம் இல்லை போன்று = பொறாமை உள்ளவனிடத்தில் செல்வ இன்பம் இருக்காது: அதுபோல், ஒழுக்கம் இலான்கண் உயர்வு இல்லை = ஒழுக்கமில்லாதவனிடத்தில் உயர்வு இருக்காது.

பொ. ரை: பொறாமையுள்ளவனிடத்தில் செல்வத்தினால் அடையக்கூடிய இன்பங்கள் இருக்காது. அதைப் போல ஒழுக்கமில்லாதவனிடத்தில் மேன்மை தங்காது.

வி - ம்: பொறாமைப் பட்டுக் கொண்டே இருப்பவன் பிறருடைய நல் வாழ்வைக் கண்டு துன்பப் பட்டுக் கொண்டேயிருப்பான். அதனால் அவனுக்குச் செல்வத்தின் இன்பங்கள் இல்லாமற் போகும். அது போல ஒழுக்கமில்லாதவன் எந்த உயர்ந்த பதவியில் இருந்தாலும் அந்தப் பதவியின் மேன்மை அவனுக்கு இல்லாமற் போகும்.

ஒழுக்கமென்பது ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காரியத்திலும் கருத வேண்டிய கடமை. அதனால் கடினமானதாகத் தோன்றலாம். ஆனாலும்:

136. ஒழுக்கத்தி னொல்கா ருரவோ ரிழுக்கத்தி
னேதம் படுபாக் கறிந்து.

ப. ரை : இழுக்கத்தின் ஏதம் படுபாக்கு அறிந்து = ஒழுக்கம் தவறுவதால் வரக்கூடிய குற்றத்தை உணர்ந்து. உரவோர் ஒழுக்கத்தின் ஒல்கார் = அறிவுடையோர் ஒழுக்கத்தில் தளரமாட்டார்கள்.

பொ. ரை : ஒழுக்கம் தவறுவதால் வரக்கூடிய குற்றங்களை உணர்ந்து. அறிவுடையோர் ஒழுக்கத்தில் தளரமாட்டார்கள்.

வி - ம் : ஒழுக்கம் கெடாமல் இருப்பது சில சமயங்களில் கடினமானதாக இருந்தாலும் பின்வாங்க மாட்டார்கள் என்பதைக் குறிக்கவே 'ஒல்கார்' எனப்பட்டது.

ஒழுக்கத்தினால் எல்லாருக்கும் மேன்மை வரும். அப்படி ஒழுக்கத்தினால் மேன்மையடைந்தவர்கள் ஒழுக்கம் தவறினால், மற்றவர்கள் ஒழுக்கம் தவறுவதைவிட அதிகப் பழிப்புக்கு ஆளாவார்கள் :

137. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை யிழுக்கத்தி
னெய்துவ ரெய்தாப் பழி.

ப. ரை : ஒழுக்கத்தின் மேன்மை எய்துவர் = ஒழுக்கத்தினால் மேன்மை யடைந்தவர்கள். இழுக்கத்தின் எய்தா பழி எய்துவர் = ஒழுக்கம் தவறினால் (மற்றவர்கள்) அடையாத பழியை அடைவார்கள்.

பொ. ரை : ஒழுக்கத்தினால் உயர்ந்த நிலையை அடைந்தவர்கள் ஒழுக்கம் கெட்டு நடப்பார்களானால், மற்றவர்கள் அப்படி ஒழுக்கம் தவறினால் அடையாத பெரும் பழியை அடைவார்கள்.

வி - ம்: சாதாரணமானவர்கள் ஒழுக்கம் கெட்டு நடந்து விட்டால் அதை மக்கள் பொருட்படுத்த மாட்டார்கள். ஆனால் ஒழுக்கத்துக்காகவே மேன்மைப் படுத்தப்பட்டவர்கள் ஒழுக்கம் கெட்டு நடந்து விட்டால் அது மிகப் பெரிய குற்றமாகப் பழிக்கப்படும்.

ஒழுக்கமுள்ளவனை எல்லாரும் மேன்மைப் படுத்துவார்கள் என்பதற்காகவோ, ஒழுக்கம் கெட்டவனை எல்லாரும் பழிப்பார்கள் என்பதற்காகவோ மட்டும் அல்ல ஒழுக்கமுடைமை. ஒவ்வொருவனும் தன்னுடைய சொந்த நன்மைக்காகவே ஒழுக்கமுள்ளவனாக இருக்க வேண்டும். ஏன் எனில் :

138. நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க
மென்று மிடும்பை தரும்.

ப. ரை: நல்லொழுக்கம் நன்றிக்கு வித்து ஆகும் = நல்ல நடத்தை நன்மைகளுக்காக விதை போட்டதாகும், தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும் = கெட்ட நடத்தை எப்போதும் துன்பம் தரும்.

பொ. ரை: நல்ல நடத்தை, பின்னால் விளையப் போகிற நன்மைகளுக்கு விதை தெளிப்பதாகும். கெட்ட நடத்தை எப்போதும் தீமையே விளைக்கும்.

வி-ம்: நல்ல நடத்தையினால் உடனே நன்மைகள் கிடைக்காவிட்டாலும் பின்னால் அதிலிருந்து நன்மையே விளையும். ஆனால் கெட்ட நடத்தை உடனேயும் துன்பம் தரும்; பின்னாலும் தொடர்ச்சியாகத் துன்பமே உண்டாக்கும்.

ஒழுக்கமுடைமை கெட்டுப் போகாமலிருக்கத் தீய ஒழுக்கத்துக்கு இடந்தரக்கூடிய பேச்சைக்கூடப் பேசக்கூடாது :

139. ஒழுக்க முடையவர்க் கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொலல்.

ப. ரை: ஒழுக்கம் உடையவர்க்கு=ஒழுக்கம் உள்ளவர்களுக்கு, தீய வழுக்கியும் வாயால் சொலல் ஒல்லாவே=தீய ஒழுக்கத்திற்கு அறிகுறியான சொற்களை மறந்தாற்போல்கூட வாயால் சொல்லுவது தகாது.

பொ. ரை: ஒழுக்க முடையவர்களுக்குத் தீய ஒழுக்கத்துக்குச் சம்பந்தப்பட்ட வார்த்தைகளை வாய் தவறிக்கூடச் சொல்லுவது தகாது.

வி-ம்: 'தீய' என்பதற்கு இங்கே தீய சொற்கள் என்ற பொதுவான பொருள் அல்ல; தீய ஒழுக்கத்தைச் சேர்ந்த சொற்கள். கோபத்தால் பேசுகின்ற தீய சொற்கள் வேறு.

நல்ல பழக்க வழக்கங்கள் உள்ளவனாக எப்போதும் நடந்து கொள்ள வேண்டும் என்பதுதான் ஒழுக்க முடைமை என்றாலும், அந்த நல்ல பழக்க வழக்கங்களையும் இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்றபடி நடத்த வேண்டும் :

140. உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றுங்
கல்லா ரறிவிலா தார்.

ப. ரை: பல கற்றும்=பல நூல்களைக் கற்றிருந்தாலும், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் கல்லார் அறிவு இலாதார்=உலகப் போக்குடன் ஒட்டி நடந்து கொள்ளத் தெரிந்து கொள்ளாதவர்கள் அறிவில்லாதவர்கள்.

பொ. ரை: எவ்வளவு படித்திருந்தாலும் உலகப் போக்கை ஒட்டி நடந்துகொள்ளத் தெரியாதவர்கள் அறிவில்லாதவர்கள்.

வி-ம்: 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' என்பது முழு உலகத்தோடும் ஒட்டுதல் அல்ல. ஒருவன் 'இருக்கும் இடத்தை ஒட்டி' என்பதுதான் கருத்து. மேலும் அப்போதுள்ள 'சமய சந்தர்ப்பங்களையும் அனுசரித்து' என்பதும் அர்த்தம்.

அதி. 15—பிறனில் விழையாமை

[இன்னொருவனுடைய மனையாளிடம் காம இச்சை கொள்ளாதிருத்தல்.]

141. பிறன்பொருளாட் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்
தறம்பொருள் கண்டார்க ணில்.

ப. ரை: பிறன் பொருளாள் = இன்னொருவனுக்கு உரிமைப் பொருளானவளை, பெட்டு ஒழுகும் பேதைமை = விரும்பியலையும் மூடத்தனம், ஞாலத்து அறம் பொருள் கண்டார் கண் இல் = உலகத்தில் இல்லறத்தின் அர்த்தத்தை அறிந்தவர்களிடத்தில் இல்லை.

பொ. ரை: இன்னொருவனுக்கு உரிமைப் பொருளாகிய அவன் மனைவியின்மேல் காம இச்சை கொண்டு அலைகிற மூடத்தனம், உலகில் நடக்கவேண்டிய இல்லற தர்மத்தின் அர்த்தத்தை அறிந்தவர்களிடம் இருக்காது.

வி-ம்: உலகத்தில் சமுதாயம் இனிது நடைபெற இல்லறத்தின் வரையறைகளை ஒவ்வொருவரும் மீறாமல் நடக்க வேண்டும் என்பதற்காக 'ஞாலத்து அறம் பொருள் கண்டார்' எனப்பட்டது.

இல்லற ஒழுக்கத்துக்கு மிகவும் கேடு செய்வது இந்தப் பிறன் மனைவியைக் காமுறுதல்தான். ஆதலால்:

142. அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை
நின்றாரிற் பேதையா ரில்.

ப. ரை: அறன் கடை நின்றாருள் எல்லாம் = இல்லற தர்மங்களில் கீழ்க்கடையானவர்கள் எல்லாரினும், பிறன் கடை = பிறனுடைய மனையின் வாசலில் (அவனுடைய மனையாளின் மேல் காமுற்று) நின்றாரின் பேதையார் இல் = போய் நிற்கிறவர்களைக் காட்டிலும் மூடர்கள் வேறில்லை.

பொ. ரை: இல்லற ஒழுக்கத்தில் மிகவும் குறைந்தவர்களாக நடந்து கொள்ளுகிறவர்கள் எல்லாரினும் பிறனுடைய மனைவியின் மேலுள்ள காம ஆசையினால் அவனுடைய வாசலுக்குச் சென்று நிற்பவனைக் காட்டிலும் மூடன் வேறெவரும் இல்லை.

வி-ம்: இல்லற ஒழுக்கத்தைக் கெடுக்கிற மற்ற எல்லாக் குற்றங்களிலும் பெரியது பிறன் மனைவியைக் காமுறுதல் என்பதற்கே 'அறன் கடை நின்றாருளெல்லாம்' அவனைக் காட்டிலும் பேதை இல்லையென்றது.

பிறன் மனைவியைக் காமுறுகின்றவர்கள். இல்லற தர்மத்தில் மிகவும் கீழ்க் கடையில் உள்ளவர்கள் எல்லாரிலும் பேதையானவர்கள். அப்படிப்பட்ட பேதைகள் எல்லாரிலும் இன்னும் கீழ்க்கடையானவன் யாரென்றால்:

143. விளிந்தாரின் வேறல்லர் மன்ற தெளிந்தாரிற்
றீமை புரிந்தொழுகு வார்.

ப. ரை: மன்ற தெளிந்தார் இல் தீமை புரிந்து ஒழுகுவார் = மிகவும் நம்பினவர்கள் வீட்டில் இந்தத் தீய காரியத்தை விரும்பி அலைகிறவர்கள், விளிந்தாரின் வேறல்லர் = செத்த பிணத்துக்குச் சமானமேயன்றி வேறல்லர்.

பொ ரை: தம்மை மிகவும் நம்பியிருந்தவனுடைய வீட்டில் அவனுடைய மனைவியின் காம இன்பத்தை விரும்பியலைகிறவர்கள் செத்த பிணங்களுக்குச் சமானமல்லாது வேறில்லை.

வி-ம்: மிகவும் நம்பிக்கை வைத்திருந்த இடத்தில் இந்தத் தீமையைச் செய்கிறவர்களை அறன் கடை நின்றவர்கள் என்றோ பேதையர் என்றோகூடச் சொல்லத் தகாது. அவர்கள் சிறிதும் உணர்ச்சியற்ற பிணத்துக்கே சமானமாவார்கள்.

யாராக இருந்தாலும் என்ன?

144. எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்
தேரான் பிறனில் புகல்.

ப. ரை: தினைத்துணையும் தேரான் பிறன் இல் புகல் = தினையளவு கூட எண்ணிப் பார்க்காமல் பிறனுடைய (மனைவியை நாடி) அவன் வீட்டுக்குள் நுழைகிறவர்கள், எனைத் துணையர் ஆயினும் என் = எவ்வளவு பெருமையுடையவர்களாக இருந்தாலும் என்ன?

பொ. ரை: கொஞ்சங்கூட எண்ணிப் பார்க்காமல் இன்னொருவனுடைய மனைவியைக் காமுற்று அவனுடைய வீட்டுக்குள் நுழைகிறவர்கள் வேறு வழிகளில் எவ்வளவு சிறப்புடையவர்களாக இருந்தாலும் ஏதற்காகும் ?

வி - ம்: பிறனுடைய மனைவியுடன் காம உறவை நாடி அலைகிறவனுக்கு மற்ற விதங்களில் என்னென்ன சிறப்புகள் இருந்தாலும் அவைகள் அனைத்தும் இந்த ஒரு குற்றத்தால் அழிந்து போகும்.

செல்வத்தாலும் செல்வாக்கினாலும் இந்தக் குற்றத்தை எளிதாகச் செய்துவிடலாம். ஆனால் அதன் விளைவு என்னவெனில் :

145. எளிதென வில்லிறப்பா னெய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

ப. ரை: எளிது என இல் இறப்பான் = எளிதாகக் கிடைக்கிறது என்று பிறனுடைய மனைவியிடம் எல்லை கடந்து நடந்து கொள்ளுகிறவன், எஞ்ஞான்றும் விளியாது நிற்கும் பழி எய்தும் = எந்தக் காலத்திலும் மறையாமல் இருக்கக் கூடிய பழியை அடைவான்.

பொ. ரை: (சுலபமாகக் கிடைக்கிறதென்றோ, வெகு சாதாரண காரியந்தானே என்றோ) இலேசாக மதித்துப் பிறனுடைய மனைவியிடம் காம ஆசையினால் எல்லை கடந்த காரியத்தைச் செய்கிறவன் எல்லென்றும் நிலைத்திருக்கக் கூடிய பழியை அடைவான்.

வி - ம்: 'விளியாது நிற்கும் பழி' சாகாமல் நிலைத்திருக்கும் பழி. அதாவது இவன் செத்த பின்னும் நெடுநாள் பேசப்படும் பழிச்சொல்.

இவன் இறந்த பிறகும் பழி நிலைத்திருக்கும் என்பது கிடக்கட்டும்; இவன் உயிரோடு இருக்கும் போதே அதனால் இவனுக்கு வருகிற துன்பங்களைப் பாருங்கள் :

146. பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்.

ப. ரை: இல் இறப்பான் கண் = பிறன் மனைவியிடம் நெறி கடந்து நடந்து கொள்ளுகிறவனிடம், பகை பாவம் அச்சம் பழி என நான்கும் இகவா ஆம் = பகைமை, பாவம், அச்சம், பழிச் சொல் என்ற நான்கும் நீங்காமல் இருந்துகொண்டிருக்கும்.

பொ. ரை: பிறன் மனைவியோடு காமத் தொடர்பு நாடுகிறவனிடத்தில் பகைவரின் வஞ்சினம், குற்றத்தினாலுண்டாகும் பாவம், கண்டுகொண்டால் என்னவாகுமோ என்ற அச்சம், பிறர் பேசும் பழிச்சொல் என்ற நான்கும் அவனை விட்டு நீங்காமல் எப்போதும் இருந்துகொண்டேயிருக்கும்.

வி - ம்: 'பகை' என்பது பிறன் மனைவியைச் சேர்ந்தவர்கள் இவனிடத்தில் கொள்ளும் பகைமையும், அதனால் இவன் அவர்களிடத்தில் கொள்ளக்கூடிய பகைமையும் ஆகிய மாச்சரியம்.

இல்லற வாழ்க்கை உலகத்தில் சரியாக நடப்பதற்கு மிகவும் முக்கியமானது ஒருவன் மனைவியை இன்னொருவன் இச்சிக்காமலிருப்பதுதான். ஆதலால்:

147. அறனியலா னில்வாழ்வா னென்பான் பிறனியலாள்
பெண்மை நயவா தவன்.

ப. ரை: அறன் இயலான் இல் வாழ்வான் என்பான் = தரும நெறியில் குடும்ப வாழ்க்கை நடத்துகிறவன் என்பவன், பிறன் இயலாள் பெண்மை நயவாதவன் = இன்னொருவனுக்கு முறைமைப்பட்டவளுடைய பெண்மை இன்பத்தை விரும்பாதவன்.

பொ. ரை: இல்லற முறைமைப்படி குடும்ப வாழ்க்கை நடத்துகிறவன் எவனென்றால், இன்னொருவனுக்குமுறைப்படி வாழ்க்கைப்பட்டிருக்கிறவளுடைய பெண்மையின் இன்பத்தை விரும்பாதவன்.

வி - ம்: இல்லறத்தின்இயல்பை அறிந்துவாழ்க்கை நடத்துகிற ஒருவன் இன்னொரு குடும்பத்தின் இல்லற இயல்பைக் கெடுக்கமாட்டான். ஆதலால் 'அறன் இயலான்' வாழ்கிறவன் 'பிறன் இயலாளை' விரும்பக் கூடாது.

இல்லற இயலின் பெருமையை மதிக்கின்ற உயர்குணம் உள்ளவர்கள் என்ன செய்வார்களென்றால்:

148. பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்
கறனொன்றோ வான்ற வொழுக்கு.

ப. ரை: பிறன் மனை நோக்காத பேர் ஆண்மை = இன்னொருவனுடைய மனைவியை காம இச்சையோடு கண்ணாலும் பார்க்காத மன உறுதி, சான்றோர்க்கு அறன் ஒன்றோ ஆன்ற

ஒழுக்கு = உயர்ந்த குணமுள்ளவர்களுக்கு தர்மம் என்பது மட்டுமல்ல, பொருத்தமான ஒழுக்கமும் ஆகும்.

பொ. ரை: இன்னொருவனுடைய மனைவியைக் காமக் குறிப்போடு கண்ணெடுத்துங்கூடப் பார்க்காமலிருக்கிற மனவலிமை உயர்ந்த குணமுடையவர்களிடம் உண்டு. அது அவர்களுக்கு இல்லற தர்மம் மட்டுமல்ல; அவர்களுடைய ஒழுக்கமே அதுதான்.

வி-ம்: அப்படிப்பட்ட மனஉறுதி உள்ளவர்கள் சிலரே. அதனால் உலகத்தில் இந்தப் பிறர் மனைவியைக் காமுறும் குற்றம் மிகவும் அச்சமுண்டாக்கக் கூடியதாக இருக்கிறது. அப்படிப் பட்ட இவ்வுலகில்:

149. நலக்குரியார் யாரெனி னுமநீர் வைப்பிற்
பிறற்குரியா டோடோயா தார்.

ப. ரை: நாமநீர் வைப்பில் = அச்சமுண்டாக்கும் தன்மையான உலகத்தில், நலக்கு உரியார் யார் எனில் = மேன்மைக்கு உரியவர்கள் யாரென்றால், பிறற்கு உரியாள் தோள் தோயா தார் = இன்னொருவனுக்கு உரிமை யானவளுடைய தோள்களை அணையாதவர்கள்.

பொ. ரை: அச்சந்தரக்கூடிய தன்மையுடைய இந்த உலகத்தில் மெச்சத் தகுந்தவர்கள் யாரென்றால் இன்னொருவனுடைய மனைவியின் தோளை காம உணர்ச்சிக்காக அணையாதவர்களே.

வி-ம்: 'நாமநீர்' என்பதற்கு இங்கே 'அச்சந்தரும் தண்ணீர்' அல்ல, 'அச்சந்தரும் தன்மை'. உலகத்தில் காமத்தினால் நிகழும் குற்றங்களே மிகுதி. அதிலும் ஒருவன் இன்னொருவனுக்கு உரிமைப் பொருளான மனைவியைக் காமுறுவதனால் தான் அச்சமுண்டாக்கத்தகுந்த பல தீமைகள் உண்டாகின்றன. அப்படி அச்சமுண்டாக்கும் தன்மையுள்ளதான இவ்வுலகில் பிறன் மனைவியின் காம இன்பத்தை நாடாதவனே போற்றத் தகுந்தவன் என்ற பொருள் உண்டாக்கவே 'நாமநீர் வைப்பு' எனப்பட்டது.

ஆதலால் இல்லறத்தான் வேறு என்ன தவறு செய்து விட்டாலும்:

150. அறன்வரையா னல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று.

ப. ரை: அறன் வரையான் அல்ல செயினும் = தர்மம் என்பதை வரையறுக்கத் தெரியாமல் தர்மமல்லாதவற்றைச்

செய்து விட்டாலும், பிறன் வரையாள் பெண்மை நயவாமை நன்று = இன்னொருவனுக்கென்றே வரைநிறுக்கப் பட்டுள்ள மனைவியின் பெண்மை இன்பத்தை விரும்பா திருப்பது நல்லது.

பொ. ரை: எது அறம் எது அறமல்ல என்ற வரம்புகட்டிக் கொள்ளத் தெரியாமல் அறம் அல்லாதவைகளைச் செய்து விட்டாலும், இன்னொருவன் வரைக்குந்தான் என்ற வரம்புக்கு உட்பட்ட அவனுடைய மனைவியுடன் காம இன்பத்தை விரும்பாதிருக்கும் ஒரு நல்ல காரியமே சிறப்புடையது.

வி-ம்: அறம் என்ற தர்மத்தின் இலக்கணத்தைச் சேராத வேறு எதைச் செய்துவிட்டாலும், இன்னொருவனுடைய மனைவியிடம் காமக் குற்றம் செய்யாதிருப்பதே நல்லது. அதுவே அறம்.

அதி. 16—பொறையுடைமை

[பொறையுடைமை என்பது பிறர் நமக்குச் செய்யும் திங்குகளைப் பொறுத்துக் கொண்டு அவர்களுக்கு ஒரு திங்கும் செய்யாமல் மன்னித்து விடுதல்.]

151. அகழ்வாரைத் தாங்கு நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்த றலை.

ப. ரை: அகழ்வாரை தாங்கும் நிலம் போல = குழிதோண்டுகிறவர்களையும் சுமந்து கொண்டிருக்கிற பூமியைப் போல, தம்மை இகழ்வாரை பொறுத்தல் தலை = தம்மை அவமதிக்கிறவர்களை மன்னித்து விடுதல் தலை சிறந்த குணம்.

பொ. ரை: குழிதோண்டுவதற்குத் தன்னையே வெட்டுகிறவர்களையும் சுமந்து கொண்டிருக்கிற பூமியைப் போல, தம்மை அவமதிக்கிறவர்களை மன்னித்து விடுதல் மிகவும் சிறந்த குணம்.

வி-ம்: பூமியானது தன்னை வெட்டுகிறவனைத் தானே சுமந்து கொண்டிருப்பது போல, உயர்ந்த குணமுடையவர்கள் தங்களை அவமதித்தவர்களை மன்னித்து விடுவது மட்டுமல்லாமல் வேறு உதவியும் செய்வார்கள் என்பது கருத்து.

வேறு உதவி செய்யாவிட்டாலும்:

152. பொறுத்த லிறப்பினை யென்று மதனை
மறத்த லதனினு நன்று.

ப. ரை: பொறுத்தல் இறப்பினை = குற்றத்தைப் பொறுத்துக் கொள்வது. என்றும் அதனை மறத்தல் அதனினும் நன்று = எப்போதும் அக்குற்றத்தை மறந்துவிடுவது மன்னித்துவிடு வதைக் காட்டிலும் நல்லது.

பொ. ரை: பொறுத்தல் என்பது தவறிச் சொல்வதைப் பொறுத்துக்கொள்வது. பொறுத்து மன்னித்து விடுவதைக் காட்டிலும் அதை முற்றிலும் மறந்துவிடுவது மிகவும் நல்லது.

வி - ம்: பொறுப்பது என்றால் குற்றத்தைத்தான் பொறுத்துக் கொள்ள வேண்டும். வேறு எதைப் பொறுத்தல் பொறுமை யாகும்? அதை முற்றிலும் மறந்தே விடுவதுதான் அதை விட நல்லது. 'இறப்பு' என்பது 'குற்றம்'.

முற்றிலும் மறந்து விடுவது மிகவும் கடினம். மன்னித்து விடுவதும் எளிதல்ல. அதற்கும் வல்லமை வேண்டும்.

**153. இன்மையு ளின்மை விருந்தொரால் வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை.**

ப. ரை: இன்மையுள் இன்மை விருந்து ஒரால் = வறுமைக்குள் வறுமை விருந்தினரை உபசரிக்கத் தவிர்தல். வன்மையுள் வன்மை மடவார் பொறை = வல்லமைக்குள் வல்லமை அறி வில்லாதாருடைய குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளுதல்.

பொ. ரை: இல்லாமையிலும் இல்லாமை விருந்தினரை உபசரிக் கத் தவிர்வது. வல்லமையிலும் வல்லமை அறிவில்லாத வர்கள் செய்துவிட்ட குற்றத்தைப் பொறுத்துக் கொள்வது.

வி - ம்: 'இன்மையுள் இன்மை விருந்தொரால்' என்ற பதங் களால் முன் 'விருந்தோம்பல்' என்னும் அதிகாரத்திற் சொல்லப்பட்ட 'உடைமையுள் இன்மை விருந்தோம்பல் ஓம்பா மடமை மடவார்கண் உண்டு' என்ற குறள் வேண்டு மென்றே நினைப்பூட்டப் படுகிறது. செல்வம் இருந்தும் விருந் தினரை உபசரிக்காமல் விட்டுவிடல் மிக்க வன்னெஞ்சம் உள்ளவர்கள்தாம் செய்வார்கள். தம்மை அவமதிக்கிறவர் களைப் பொறுத்து மன்னிப்பதும் வன்னெஞ்சம் உள்ளவர்கள் தாம் செய்ய முடியும். ஆனால் இந்த இரண்டு வன்னெஞ்சங் களும் முற்றிலும் வேறுபட்டன. விருந்தோம்பல் செய்யத் தவிரும் வன்னெஞ்சம் அன்பற்ற மூடத்தனமுடையது. தமக் குத் தீங்கு செய்கிறவர்களைப் பொறுத்து மன்னித்து விடுகிற வன்னெஞ்சம் அன்பு நிறைந்தது. விருந்தினரை விலக்கும் வன்னெஞ்சம் மடமையைச் சேர்ந்தது. பொறுமையுள்ள வரின் வன்னெஞ்சம் அறிவுடைமையைச் சேர்ந்தது. ஆத

லால் விருந்தினரை விலக்கும் வன்னெஞ்சம் வலிமை இல்லாமையோடு சேர்ந்ததேயாகும். ஆகையினால் வன்மையுள் வன்மை மடவார்ப் பொறை; (வன்மை), இன்மையுள் இன்மை விருந்தொரால்' என்பது பொருத்தம்.

அறிவில்லாதவர்கள் செய்துவிடும் குற்றத்தை மட்டுமல்ல; யார் செய்த குற்றத்தையும் மன்னித்து விடுவது மிகவும் பெருமை தரத்தக்கது :

154. நிறையுடைமை நீங்காமை வேண்டிற் பொறையுடைமை போற்றி யொழுகப் படும்.

ப. ரை: நிறை உடைமை நீங்காமை வேண்டின் = நிதான குணமுள்ளவன் என்ற பெருமை நீங்காமல் இருக்க வேண்டுமானால், பொறை உடைமை போற்றி ஒழுகப்படும் = பொறுமை உள்ளவனாக இருப்பதைப் பாதுகாத்து நடந்து கொள்ள வேண்டும்.

பொ. ரை: நிறைகுணம் உள்ளவன் என்ற பெருமை நீங்காமலிருப்பதற்குப் பொறையுடைமை என்ற குணத்தைப் பாதுகாத்து அதற்கிணங்க நடந்து கொள்ள வேண்டும்.

வி - ம்: பொறையுடைமையைப் 'பாதுகாப்ப' தென்பது எப்போதும் எல்லாக் காரியத்திலும் பொறையுடையவனாக நடந்து கொள்ள வேண்டும் என்பதில் கருத்தாக இருப்பது.

அப்படியானால் 'நமக்குத் தீங்கு செய்கிறவர்களைத் தண்டிக்க வேண்டாமா?' என்றால், தண்டிக்கிற வேலையைத்தான் எல்லாரும் செய்கிறார்களே! அதற்குப் பொறையுடைமை என்னத்திற்கு? :

155. ஒறுத்தாரை யொன்றாக வையாரே வைப்பர் பொறுத்தாரைப் பொன்போற் பொதிந்து.

ப. ரை: ஒறுத்தாரை = (தீங்கு செய்தவனுக்குத்) திருப்பித் தீங்கே செய்து தண்டித்து வருகிறவர்களை, ஒன்றாக வையாரே = குறிப்பிடத் தகுந்தவர்களாக யாரும் நினைக்க மாட்டார்கள்; பொறுத்தாரை பொன்போல் பொதிந்து வைப்பர் = தீங்கு செய்தவனைப் பொறுத்து மன்னித்து விடுகிறவர்களைப் பொன்னே போல் போற்றுவார்கள்.

பொ. ரை: தீங்குக்குத் தீங்கு திருப்பிச் செய்து விடுகிறவனை ஒரு குறிப்பிடத் தகுந்த மனிதனாக உலகத்தார் நினைக்க மாட்டார்கள். ஆனால் தீங்கு செய்தவனை மன்னித்து விடுகிற

வனை மிகவும் குறிப்பிடத் தகுந்தவனாக மதித்து அவன் பொறுமைக் குணத்தைப் பொன்போலத் தங்கள் மனதில் போற்றிப் பூட்டி வைத்துக் கொள்வார்கள்.

வி-ம்: 'ஒறுத்தல்' தண்டித்தல். இங்கே தீங்குக்குத் தீங்கு திருப்பிச் செய்வதைக் குறிக்கிறது. இந்த 'ஒறுத்தல்' என்பதற்கும் அரசாங்கம் குற்றவாளிகளைத் தண்டித்தல் என்ற 'ஒறுத்தல்' என்பதற்கும் சம்பந்தமில்லை.

தண்டிக்கிறவனுக்கும் மன்னிக்கிறவனுக்கும் என்ன வித்தியாசம் என்றால்:

**156 ஒறுத்தார்க் கொருநாளை யின்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ்.**

ப. ரை: ஒறுத்தார்க்கு ஒரு நாளை இன்பம் = தமக்குத் தீங்கு செய்துவிட்டவரைத் தண்டிக்கிறவருக்கு தண்டிக்கிற அந்த ஒரு நாளைக்குத்தான் மகிழ்ச்சி, பொறுத்தார்க்கு பொன்றும் துணையும் புகழ் = பொறுத்து மன்னித்து விடுகிறவருக்குச் சாகும் வரைக்கும் புகழ்.

பொ. ரை: தமக்குத் தீங்கு செய்து விட்டவர்களுக்குத் தாமும் தீங்கு செய்து தண்டிக்கிறவர்களுக்கு அந்த ஒரு நாளைக்குத் தான் மகிழ்ச்சி. ஆனால் மன்னித்து விடுகிறவர்களுக்குச் சாகும் வரைக்கும் புகழ் உண்டு.

வி-ம்: 'ஒறுத்தார்க் கொரு நாளை யின்பம்' என்றதனால் பொறுத்தார்க்கு எப்போதும் இன்பம் என்பது கருத்து. 'பொன்றுந் துணையும் புகழ்' – சாகும் வரைக்கும் புகழ் என்றது பொறுத்தார் சாகும் வரைக்கும், பொறுத்ததை அறிந்தவர்கள் சாகும் வரைக்கும், பொறுக்கப்பட்டவன் சாகும் வரைக்கும் அல்லது அந்த நிகழ்ச்சியைப் பற்றிய நினைவு உலகத்தில் சாகும் வரைக்கும் என்று விரியும்.

தீங்கு செய்து விட்டவர்களைப் பொறுமையுடன் மன்னித்து விடுவதுதான் தலைசிறந்த குணம். மன்னிக்க முடியாமல் பொறுமையிழந்து தண்டித்து விட்டாலும், நன்மை கருதித் தண்டித்ததாகக் கொண்டு சமாதான மடையலாம். ஆனால் ஒன்றுமட்டும் செய்யவே கூடாது. என்னவென்றால்:

**157. திறனல்ல தற்பிறர் செய்யினு நோநொந்
தறனல்ல செய்யாமை நன்று.**

ப. ரை: திறனல்ல தற் பிறர் செய்யினும் = மன்னிக்கும் திறனல்லாததைத் தன்னிடம் பிறர் செய்துவிட்டாலும், நோநொந்து = அந்தத் துன்பத்தை மனதில் வைத்து நொந்து

கொண்டேயிருந்து, அறனல்ல செய்யாமை நன்று = தர்மம் அல்லாத காரியத்தைச் செய்யாதிருப்பது நல்லது.

பொ. ரை: மன்னிக்கத் தகாத குற்றத்தை ஒருவன் நம்மிடம் செய்துவிட்டாலும், அந்த வேதனையை மனதில் வைத்துக் கொண்டிருந்து வஞ்சம் தீர்ப்பதற்காகப் பின்னல் தர்மமல்லாத எதையும் செய்து விடாமலிருப்பது நல்லது.

வி-ம்: ஒருவர் எப்படிப்பட்ட குற்றத்தை நமக்குச் செய்து விட்டாலும் அதைப் பொறுத்துக் கொண்டு மன்னித்து விடுவது மிகச் சிறந்த காரியம். மன்னிக்காமல் தண்டித்து விட்டாலும் பாதகமில்லை. ஆனல் மன்னித்துவிடக் குணமில்லாமலும் தண்டித்துவிடத் தைரியமில்லாமலும் சும்மா இருந்துவிட்டு, அவன் தீங்கு செய்த துன்பத்தை மனதில் வைத்து நொந்து கொண்டேயிருந்து, பின்னல் சமயம் வாய்த்தபோது கபடமாக ஓர் அதர்மமான வழியில் அவனுக்குத் தீங்கு செய்ய முயலக் கூடாது. 'அறனல்ல' என்பது தண்டிப்பதைக் குறிப்பதல்ல. வேறு ஒரு விசேட அர்த்தமுள்ளது. மேலும் 'நோ நொந்து' என்பதற்கு 'ஒருவன் செய்த தீமையினல் வந்த துன்பத்திற்கு நொந்து' என்ற அர்த்தம் இந்த இடத்தில் பயனற்றது. ஒருவர் நமக்குத் தீங்கு செய்தால் உடனே நமக்குத் துன்பந்தான் உண்டாகிறது. அந்தத் துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு மன்னித்துவிட வேண்டுமென்றும் மறந்துவிட வேண்டுமென்றுந்தானே இந்தச் செய்யுளுக்கு முன்னுலுள்ள ஆறு குறள்களிலும் சொல்லிவந்திருக்கிறது. பின்னும் 'நோ நொந்து' என்பதற்கு அதே பொருள் கொள்வது சரியல்ல. 'நோ நொந்து' என்பதற்கு 'நோயால் நொந்து கொண்டிருந்து' அறனல்லாத அதர்ம வழியில் ஒரு தீங்கு செய்யக் கூடாது என்பது கருத்து.

பொறுமையுடையவர்கள் தமக்கு ஒருவன் செய்துவிட்ட தீமையை மனதில் வைத்துக் கொண்டேயிருந்து அவனுக்குத் தீங்கு செய்ய நினைக்க மாட்டார்கள். பின் என்ன செய்வார்கள் என்ருல்:

158. மிகுதியான் மிக்கவை செய்தாரைத் தாந்தம்
தகுதியான் வென்று விடல்.

ப. ரை: மிகுதியான் மிக்கவை செய்தாரை = உணர்ச்சி மிகுதியினல் ஒழுங்குக்கு மீறியவைகளைச் செய்துவிட்டவர்களை, தாம் தம் தகுதியான் வென்றுவிடல் = பொறையுடையவர்கள் தம்முடைய பெருங் குணத்தால் வென்று விடுவதைச் செய்வார்கள்.

பொ ரை: உணர்ச்சி வேகத்தினால் நிதானங் கெட்டுக் குற்றம் செய்துவிட்டவரைப் பொறுமையுடையவர்கள் அந்தப் பொறுமை என்ற தம்முடைய பெருங் குணத்தால் வசப் படுத்தி விடுவார்கள்.

வி-ம்: 'வென்று விடல்' என்பது 'தோற்கச் செய்வது' என்ற பொருளுடையதல்ல. நன்றியுள்ளவனாக ஆக்கி விடுதல். பொறுமையுடையவர்கள் தமக்குத் தீங்கு செய்து விட்டவனுக்கு அன்பு காட்டி நன்மையும் செய்வார்கள். அதனால் அவன் தன் குற்றத்தை உணர்ந்து இவர்களிடத்தில் அன்பனாகவும் விசுவாசம் உள்ளவனாகவும் வசப்பட்டு விடுகிறான்.

இப்படிப்பட்ட பொறுமையுடன் இல்லறம் நடத்துகிறவன் துறவிகளைக் காட்டிலும் சிறந்தவன்:

159. துறந்தாரிற் றூய்மை யுடைய ரிறந்தார்வா
யின்னாச்சொ னோற்கிற் பவர்.

ப. ரை: இறந்தார் வாய் இன்னாச் சொல் நோற்கிற் பவர் = நெறி கடந்து கோபங் கொண்டவர்களுடைய வாயினின்றும் வருகிற கடுஞ் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுகிறவர்கள், துறந்தாரின் தூய்மை உடையவர் = துறவிகளைக் காட்டிலும் பரிசுத்தமுள்ளவர்கள்.

பொ. ரை: கோபதாபத்தினால் நெறி கடந்து பேசுகிறவர்களுடைய வாயிலிருந்து வருகிற வசைமொழிகளைச் சகித்துக் கொள்ளுகிற இல்லறத்தான் துறவிகளைக் காட்டிலும் பரிசுத்தமானவன்.

வி-ம்: 'துறந்தாரில்' என்பதிலுள்ள 'இல்' உருபு ஒப்புப் பொருள் உடையதல்ல. உயர்வுப் பொருள் உள்ளது. நெறி கடந்து வசைகள் பேசுவதைக் கேட்டுக்கொண்டு அதைச் சகித்து மன்னித்து விடக் கூடிய மனமுடைய இல்லறத்தான் துறவியைக் காட்டிலும் தூய தவம் செய்கிறவனாகிறான்.

அதனால்:

160. உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லு
மின்னாச்சொ னோற்பாரிற் பின்.

ப. ரை: உண்ணாது நோற்பார் பெரியர் = (தவம் செய்வதற்காக) உணவுகளை ஒடுக்கிப் பசித் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுகிற துறவிகள் பெரியவர்களே. (அவர்களும் கூட) பிறர் சொல்லும் இன்னாச் சொல் நோற்பாரின் பின் = இன்

ஒருவன் சொல்லுகின்ற கடுமையான சொற்களால் உண்டாகும் மனத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளுகிறவர்களைக் காட்டிலும் பிற்பட்டவர்கள்தாம்.

பொ. ரை: துறவறத்தை மேற்கொண்டு தவத்திற்காக உணவுகளை ஒடுக்கி, பசித்துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளுகிறவர்கள் பெரியவர்களே; ஆனால், அவர்களும் கூட இன்னொருவன் பேசுகின்ற கடுமையான வசைமொழிகளைப் பொறுத்துக்கொண்டு அவனை மன்னித்து விடுகிற இல்லறத்தானுக்குக் குறைந்தவர்களே.

வி-ம்: தம்மைப் பற்றிய கடுமையான வசை மொழிகளைக் கேட்டுப் பொறுத்துக் கொண்டிருக்க வேண்டிய சோதனைகள் வரக்கூடிய நிலைமை துறவிகளுக்கில்லை. அப்படிப்பட்ட வாய்ப்புகள் நேர்ந்தாலும் அவர்கள் பொறுத்துக் கொள்வார்களா என்பது சந்தேகம். மேலும் இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்கத் தானே அவர்கள் துறவு மேற்கொண்டார்கள். ஆதலால் அந்தப் பொறுப்பைத் தவிர்த்து விடும் துறவியைக் காட்டிலும் அதை ஏற்றுக் கொண்ட இல்லறத்தான் சிறப்புடையவனாகிறான்.

அதி. 17—அழுக்காருமை

[அழுக்காருமை என்றால் பிறருடைய நல்வாழ்வைக் கண்டு மனதில் பொருமை கொள்ளாதிருப்பது.]

161. ஒழுக்காறுக் கொள்க வொருவன்றன் நெஞ்சத்
தழுக்கா றிலாத வியல்பு.

ப. ரை: தன் நெஞ்சத்து அழுக்காறு இலாத இயல்பு = தன்னுடைய மனதில் பிறருடைய நல்வாழ்வைக் கண்டு பொருமைப்படாமலிருக்கிற குணத்தை, ஒருவன் ஒழுக்கு ஆறு கொள்க = ஒவ்வொருவனும் தன்மனம் பழக வேண்டிய நெறி முறையாகக் கொள்ள வேண்டும்.

பொ. ரை: பிறருடைய நல் வாழ்வைக் கண்டு தன் நெஞ்சத்தில் பொருமைப்படாமல் இருக்கும் தன்மையை ஒவ்வொருவனும் தன்னுடைய மனம் பழக வேண்டிய நெறி முறையாகக் கருத வேண்டும்.

வி-ம்: 'அழுக்காறு' என்பது 'மனம் பொருமை' என்ற பொருள்தரும் ஒரே சொல். 'அழுக்கறு' என்பது வினைச் சொல், 'அழுக்காருமை' என்பது அதன் எதிர்மறைத் தொழிற்பெயர். அழுக்காறு என்பது வெறும் மனக் குற்றம்.

பிறருடைய செழிப்பைக் கண்டு மனம் பொறுக்காத தீய எண்ணத்தை. வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்ற வேற்றுமை பாராட்டாமல் எவரிடத்திலும் கொள்ளாமல் இருக்க வேண்டும். அப்படிச் செய்வது :

162. விழுப்பேற்றி னஃதொப்ப தில்லையார் மாட்டு
மழுக்காற்றி னன்மை பெறின்.

ப. ரை : யார் மாட்டும் அழுக்காற்றின் அன்மை பெறின் = யாரிடத்திலும் பொறாமைப்படுவது நம்மிடம் இல்லாதிருக்கப் பெற்றுவிட்டால், விழுப் பேற்றின் அஃது ஒப்பது இல்லை = நன்மை மிகுந்த செல்வங்களுக்குள் அதற்கு ஈடானது வேறொன்றுமில்லை.

பொ. ரை : யாருடைய நல்வாழ்வைக் கண்டும் பொறாமைப் படாத மனப்பண்பை நாம் அடைந்துவிட்டால் அதைக் காட்டிலும் நன்மை தரக்கூடிய செல்வம் வேறொன்றுமில்லை.

வி - ம் : தனக்கு உள்ளது போதும் என்று திருப்தி இல்லாமலும், அல்லது தானும் நல்வாழ்வு பெறவேண்டும் என்ற நல்ல முயற்சியில்லாமலும், தன்னைக் காட்டிலும் நல்ல நிலைமையில் இருப்பவர்களைப்பற்றிப் பொறாமைப் பட்டுக்கொண்டிருப்பதுதான் 'அழுக்காறு'. மக்களுக்குள் அமைதியின்மையை உண்டாக்குவது இதுதான். இந்தத் தீய மனப்பான்மை இல்லாதவனுக்கு நிம்மதி இருக்கும். அதனால் 'விழுப்பேற்றின் அஃதொப்பது இல்லை' எனத்தகுந்த மிகச் சிறந்த பாக்கியம் 'அழுக்காறுமை' யாகும்.

இந்த 'அழுக்காறுமை' என்ற நற்குணம் எவ்வளவுக் கெவ்வளவு குறைவாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு அதிகமான தீய காரியங்களைச் செய்யத் தூண்டும். அதனால் பாவம் மிகுந்து தர்மபலம் குறையும். ஆதலால் :

163. அறனாக்கம் வேண்டாதா னென்பான் பிறனாக்கம்
பேணா தழுக்கறுப் பான்.

ப. ரை : அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் = அறத்தின் நன்மைகளை விரும்பாதவன் என்பவன், பிறன் ஆக்கம் பேணாது அழுக்கறுப்பான் = இன்னொருவனுடைய நல்வாழ்வை விரும்பாமல் பொறாமைப் படுவான்.

பொ. ரை : தர்ம பலத்தை இகழ்ந்து விடுகிறவன்தான் இன்னொருவனுடைய நல்வாழ்வை விரும்பாமல் பொறாமைப் படுவான்.

வி-ம்: 'வேண்டாதான்' என்பதற்கு வெறும் 'விரும்பாதவன்' என்பது மட்டும் கருத்தல்ல. அழுக்காறு கொள்ளல் பாவம் என்பதை மறந்து தர்ம பலத்தை 'இகழ்ந்து விடுகிறவன்' என்பது கருத்து.

அதனால் அறிவுடையவர்கள்:

164. அழுக்காற்றி னல்லவை செய்யா ரிழுக்காற்றி
னேதம் படுபாக் கறிந்து.

ப. ரை: இழுக்காற்றின் ஏதம் படுபாக்கு அறிந்து = பொறாமையினால் பாவம் வரும் என்பதை அறிந்து, அழுக்காற்றின் அல்லவை செய்யார் = பொறாமையினால் அறமல்லாதவற்றைச் செய்ய மாட்டார்கள்.

பொ. ரை: அறிவுடையோர் பொறாமைப்பட்டு அதர்மமான காரியங்களைச் செய்துவிட மாட்டார்கள். ஏனெனில் பொறாமையினால் உண்டாவது பாவம் என்பதை அவர்கள் அறிந்தவர்கள்.

வி-ம்: 'இழுக்காற்றின்' என்பது அழுக்காறுமைக்கு 'இழுக்கு ஆற்றின்' என்பதாம். 'அறனல்ல செய்யார்' என்றது நல் வாழ்வுடன் இருக்கும் பிறருக்குத் தீங்கு செய்வதை மட்டும் குறிப்பதல்ல. தாமும் பிறரைப் போல் செல்வமுடையவர்கள் ஆகிவிட வேண்டும் என்ற ஆத்திரத்தால் பாவமான காரியங்களைச் செய்து விடுவதையே இங்கே அதிகமாகக் குறிப்பது.

பொறாமை ஒன்றே ஒருவனைக் கெடுக்கப் போதுமானது:

165. அழுக்கா றுடையார்க் கதுசாலு மொன்னார்
வழுக்கியுங் கேடீன் பது.

ப. ரை: அழுக்காறு உடையார்க்கு அது சாலும் = பொறாமை உடையவர்களுக்கு அது போதும், ஒன்னார் வழுக்கியும் கேடு ஈன்பது = பகைவர்கள் தவறிவிட்டாலும் அது கேடு உண்டாகிவிடும்.

பொ. ரை: பொறாமைக் குணம் உள்ளவர்களுக்குக் கேடுண்டாக்க அதுவே போதும். பகைவர்கள் கேடு செய்வது தவறிவிட்டாலும் அது நிச்சயமாகக் கேடுண்டாக்கும்.

வி-ம்: பகைவர்கள் இருந்து, அவர்கள் கேடுண்டாக்கச் செய்யும் முயற்சிகள் தவறிப் போனாலும் போகும். ஆனால் பொறாமைக்குணம் கேடு செய்யத் தவறாது. பகைவர் இல்லாவிட்டாலும் அதுவே அவனுக்குப் பகை செய்யும்.

அழுக்காறு என்னும் தீய குணம் பிறருடைய நல்வாழ்வைக் கண்டு பொறாமைப்படுவதோடு மட்டும் நிற்காது. நல்வாழ்வுடையவனிடத்திலிருந்து பிறர் உதவி பெறுவதைக் கூடப் பொறுக்காது. ஆதலால் :

**166. கொடுப்ப தழுக்கறுப்பான் சுற்ற முடுப்பதூஉ
முண்பதூஉ மின்றிக் கெடும்.**

ப. ரை : கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் = கொடை கொடுப்பதைக் கண்டு பொறாமைப் படுகிறவனுடைய உறவினர்கள், உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றி கெடும் = உடையும் உணவும் இல்லாமல் தவிப்பார்கள்.

பொ. ரை : தானங் கொடுப்பதைக் கண்டு மனம் பொறாதவர்களுடைய உறவினர்களும், உடையும் உணவும் இல்லாமல் தவிப்பார்கள்.

வி - ம் : தானம் கொடுப்பதைக்கூடப் பொறாமைப் படுவது பெரும் பாவத்தை உண்டாக்குவதால் பொறாமைப் படுகிறவனுடைய குடும்பத்தையும் அதைச் சேர்ந்தவர்களையும் கூட அந்தப் பாவம் தாக்கும் என்பது கருத்து. 'சுற்றம்' என்பது அவனும் அவனைச் சுற்றி அவனைச் சார்ந்திருக்கும் குடும்பமும் என்ற அளவுக்குத்தான் இங்கே பொருள் தருவது. வெறும் பொறாமையினால் வரும் பாவம் இவனோடு நிற்கும். பிறருக்குத் தானங் கொடுப்பதைப் பார்த்துப் பொறாமைப்படுவதனால் வரும் பாவம் இவனை மட்டுமல்ல இவனுடைய குடும்பத்தாரையும் தொடரும் என்பது கருத்து.

பொறாமைப் படுகிறவனிடத்தில் திருமகள் வாசம் செய்ய மாட்டாள் :

**167. அவ்வித் தழுக்கா றுடையானைச் செய்யவ
டவ்வையைக் காட்டி விடும்.**

ப. ரை : அழுக்காறு உடையானை = பொறாமைப்படுகிறவனைப் பற்றி. செய்யவள் அவ்வித்து = திருமகள் மனங் கோணி, தவ்வையை காட்டிவிடும் = (தான் விலகிக் கொண்டு) தன் தமக்கையைக் காட்டிவிடுவாள்.

பொ. ரை : பொறாமையுள்ளவனைப்பற்றி மனம் கோணி, சீதேவியானவள் தான் விலகிக் கொண்டு தன்னுடைய அக்காளாகிய மூதேவியைக் காட்டி விடுவாள்.

வி - ம் : பொறாமைப் படுகிறவனிடத்தில் ஏற்கனவே கிடைத்த செல்வம் இருந்தாலும் இந்தத் தீய குணத்தினால் அந்தச் செல்

வத்தின் பொலிவு அவனிடத்தில் இல்லாதபடி மூதேவி வந்து அடைவாள்.

செல்வத்தின் பொலிவு இல்லாமலிருப்பது மட்டும் அல்லாமல், விரைவில் அந்தச் செல்வமும் சிதைந்து பல தீமைகளும் உண்டாகும் :

168. அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி யுய்த்து விடும்.

ப. ரை: அழுக்காறு என ஒரு பாவி = பொறாமை என்னும் பெயருடைய ஒரு பாவி, திரு செற்று தீயுழி உய்த்து விடும் = செல்வத்தை அழித்துத் தீமைக்குள் சேர்த்துவிடும்.

பொ. ரை: அழுக்காறு என்ற பெரும் பாவம், செல்வத்தை அழித்துத் தீமைகளுக்குள் தள்ளிவிடும்.

வி - ம்: 'அழுக்காறு என ஒரு பாவி' என்றதனால் பொறாமை என்ற ஒரே பாவம் செல்வத்தைக் கெடுத்துத் தீமைகளில் தள்ளிவிடப் போதுமானது என்பது கருத்து.

பொறாமையுள்ளவர்களெல்லாம் செல்வத்தை இழந்து தீமைகளுக்கு ஆளாவார்கள் என்பது உண்மைதானா என்றால் கொஞ்சம் சந்தேகம் வரத்தான் வருகிறது :

169. அவ்விய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்
கேடு நினைக்கப் படும்.

ப. ரை: அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் = பொறாமை உள்ள மனமுடையவன் செல்வமுள்ளவனாக இருப்பதும், செவ்வியான் கேடும் நினைக்கப்படும் = செவ்வையான மனமுடையவன் ஏழையாக இருப்பதும் நினைத்துப் பார்க்க வேண்டியவைகள்தாம்.

பொ. ரை: பொறாமையுள்ள மனமுடையவன் செல்வமுடையவனாக இருப்பதையும் பொறாமை இல்லாத செம்மையான மனமுடையவன் ஏழையாக இருப்பதையும் பார்க்கிறோம். இது ஆராய்ந்து பார்க்க வேண்டிய விஷயம்தான்.

வி - ம்: பொறாமை மனமுள்ளவர்களிடத்தில் திருமகள் வாசம் செய்ய மாட்டாளென்றும் மூதேவி அடைவாள் என்றும் அவனுடைய செல்வம் சிதைந்து அவன் தீமையடைவான் என்றும் சொல்வது அனுபவத்துக்குப் பொருத்தமாக இல்லையே! பொறாமைக் குணமுள்ளவர்கள் பல பேர்கள் செல்வம் நிறைந்தவர்களாகச் சுகப்படுவதையும் பொறாமைக் குணம்

இல்லாதவர்கள் பலபேர்கள் ஏழைகளாகக் கஷ்டப்படுவதை யும் உலகத்தில் கண்ணாரப் பார்க்கிறோமே என்றால், அது உண்மைதான். அது சிந்திக்க வேண்டிய விஷயம்தான். ஆராய்ந்து பார்ப்போம்.

எப்படியெல்லாம் சிந்தித்து ஆராய்ந்து பார்த்தாலும் நாம் நிச்சயமாக அறியக் கிடப்பது என்னவென்றால் :

170. அழுக்கற் றகன்றாரு மில்லையஃ தில்லார்
பெருக்கத்திற் றீர்ந்தாரு மில்.

ப. ரை : அழுக்கற்று அகன்றாரும் இல்லை = பொறாமையினால் செல்வம் பெருகினவர்களும் இல்லை, அஃது இல்லார் பெருக் கத்தில் தீர்ந்தாரும் இல் = அந்தப் பொறாமைக் குணம் இல்லாததனால் செல்வம் இழந்து விட்டவர்களும் இல்லை.

பொ. ரை : பொறாமையினால் செல்வம் அதிகப்பட்டவர்களும் இல்லை; அது இல்லாததனால் செல்வம் இழந்து விட்டவர் களும் இல்லை.

வி - ம் : பொறாமைக் குண முள்ளவர்கள் உலகத்தில் சுகமாக இருப்பதும் பொறாமை இல்லாதவர்கள் கஷ்டப்படுவதும் பொறாமைக் குணத்தினால் அல்ல, என்பது நம்முடைய ஆராய்ச்சியினால் நிச்சயமாகத் தெரிகிறது. பொறாமை யுள்ளவன் செல்வத்தோடு சுகப்படுவதற்கும் பொறாமை இல்லாதவன் ஏழையாகக் கஷ்டப்படுவதற்கும் காரணங்கள் வேறு. அந்தக் காரணங்களையும் ஆராய்ந்து பார்த்தால் உண்மை விளங்கும். ஆனால் பொறாமைக் குணத்தினால் நன்மை வராது தீமைதான் உண்டாகும் என்பது மட்டும் நிச்சயம்.

அதி. 18—வெஃகாமை

[வெஃகாமை என்பது பிறருக்கு உரிமையான பொருளை எப்படியாவது தான் அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டு விடாமல் இருப்பது. இதுவும் அழுக்காறுமையைப் போன்ற மனக் குற்றம்.]

171. நடுவன்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்
குற்றமு மாங்கே தரும்.

ப. ரை : நடுவு அன்றி நன் பொருள் வெஃகில் = நீதி இல்லாமல் பிறருக்கு உரிமையான பொருளைக் கவர்ந்துகொள்ள ஆசைப்

பட்டால், குடிபொன்றி குற்றமும் ஆங்கே தரும் = குடித் தனம் கெட்டுக் குற்றமும் அதனால் உண்டாகும்.

பொ. ரை: நியாய மில்லாமல் பிறருக்குச் சொந்தமான பொருளைக் கவர்ந்துகொள்ள இச்சை கொண்டால் குடும்பத் துக்குக் கெடுதி வரும்; வேறு குற்றங்களும் உண்டாகும்.

வி - ம்: 'நன்பொருள்' உரிமையினால் ஒருவனிடத்தில் உள்ள பொருள்.

குடும்பத்துக்குக் கெடுதி வருவது பின்னால் என்றாலும் உடனே வரக்கூடிய குற்றம் என்னவெனில்:

172. படுபயன் வெஃகிப் பழிப்படுவ செய்யார்
நடுவன்மை நாணு பவர்.

ப. ரை: படுபயன் வெஃகி பழிப்படுவ செய்யார் = அப்போதைக்கு வரக்கூடிய நன்மைக்காக ஆசைப்பட்டு பழிக்கத் தகுந்த செயல்களைச் செய்ய மாட்டார்கள், நடுவன்மை நாணுபவர் = அநியாயம் செய்யக் கூசுகின்றவர்கள்.

பொ. ரை: அநியாயம் செய்ய அஞ்சுகின்றவர்கள், அப்போதைக்கு வருகிற நன்மைகளை மட்டும் கருதி, பிறர் பொருளைக் கவர ஆசைப்பட்டு பழிச் சொல்லுக்கு ஆளாகக் கூடிய குற்றங்களைச் செய்ய மாட்டார்கள்.

வி - ம்: உலகத்தார் பழித்துப் பேசுவார்களே என்று பயப்படுகிறவர்கள் 'நடுவன்மை நாணுபவர்'.

இவர்கள் பழிச்சொல் வருமே என்ற அச்சத்தினால் வெஃகாமல் இருப்பவர்கள். இவர்களைக் காட்டிலும் உயர்ந்த மனப் பண்புடையவர்கள் எப்படியென்றால்:

173. சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே
மற்றின்பம் வேண்டு பவர்.

ப. ரை: சிற்றின்பம் வெஃகி அறன் அல்ல செய்யாரே = சிறிய இன்பத்துக்கு ஆசைப்பட்டுத் தர்மமல்லாத செயல்களைச் செய்ய மாட்டார்கள், மற்றின்பம் வேண்டுபவர் = (சிற்றின்பம் அல்லாத) மற்ற பெரிய இன்பத்தை விரும்புகின்றவர்கள்.

பொ. ரை: பேரின்பத்தை விரும்புகிறவர்கள் உடனே கிடைக்கக் கூடிய சிற்றின்பத்துக்கு ஆசைப்பட்டுப் பிறருடைய

பொருளைக் கவரும் தர்மமல்லாத காரியத்தைச் செய்ய மாட்டார்கள்.

வி-ம்: 'வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்' என்பதற் கிணங்க இல்லறத்தைத் தர்மம் கெடாமல் நடத்தினால் பேரின்பம் கிடைக்கும் என்ற நம்பிக்கையுள்ளவர்கள், பிறர் பொருளுக்கு ஆசைப் படுவது அறமல்ல என்று விலக்குவார்கள்.

முன் சொல்லப்பட்டவர்கள் பழிச் சொல்லுக்குப் பயந்து அநீதி செய்யக் கூடாதென்பதற்காக வெஃகாமல் இருப்பவர்கள். இந்தக் குறளில் சொல்லப்பட்டவர்கள் பேரின்பத்தைக் கருதி அறமல்லாததைச் செய்யக்கூடாது என்பதற்காக வெஃகாமல் இருப்பவர்கள். இந்த இரண்டையும்விட இன்னும் உயர்ந்த மனப் பண்புடையவர்கள் உண்டு. அவர்கள் எப்படியென்றால்:

174. இலமென்று வெஃகுதல் செய்யார் புலம்வென்ற
புன்மையில் காட்சி யவர்.

ப. ரை: இலம் என்று வெஃகுதல் செய்யார் = இல்லாதவர்கள் என்பதற்காக பிறர் பொருளுக்கு ஆசைப்பட மாட்டார்கள். புலம் வென்ற புன்மை இல் காட்சியவர் = ஐம்புல ஆசைகளையும் அடக்கி ஆளும் குற்றமற்ற அறிவுள்ளவர்கள்.

பொ. ரை: ஐம்புல ஆசைகளையும் அடக்கி ஆளக்கூடிய குற்றமற்ற அறிவுடையவர்கள் செல்வம் இல்லையே என்பதற்காகப் பிறருடைய பொருளைக் கவர்ந்துகொள்ள ஆசைப்பட மாட்டார்கள்.

வி-ம்: ஐம்புல ஆசைகளை வசப்படுத்தி வாழ்க்கை நடத்துகிறவர்கள் குற்றமற்ற மெஞ்ஞான நோக்கமுள்ளவர்கள். அதனால் எவ்வளவு வறுமை இருந்தாலும் பிறன் பொருளுக்கு ஆசை கொள்ள மாட்டார்கள். 'காட்சி' என்பது 'ஞானம்'.

ஐம்புல ஆசைகளையும் அடக்கியாள வேண்டுமென்ற மிக உயர்ந்த நோக்கத்திற்கானாலும் சரி, பேரின்பம் அடைய வேண்டுமென்ற நல்ல விருப்பத்துக்கானாலும் சரி, பழிச் சொல் வருமே என்ற பயத்தினால் ஆனாலும் சரி, அறிவுள்ளவர்கள் யாரும் வெஃகாமல் இருக்க வேண்டும். இல்லாவிட்டால்:

**175. அஃகி யகன்ற வறிவென்னும் யார்மாட்டும்
வெஃகி வெறிய செயின்.**

ப. ரை: அஃகி அகன்ற அறிவு யார் மாட்டும் என்னும் = நுணுக்கமாகக் கல்வி கற்று விரிவடைந்த அறிவு யாரிடத்திலிருந்தாலும் என்ன பயனுடையதாகும்? (அவர்கள்) வெஃகி வெறிய செயின் = (அவர்கள்) பிறருடைய பொருளின் மேல் ஆசை கொண்டு வெறியான செயல்களைச் செய்வார்களானால்.

பொ. ரை: கூர்ந்து கவனித்துக் கல்வி கற்று விரிவடைந்த அறிவு யாரிடத்தில் இருந்தாலும், அவர்கள் பிறருடைய பொருளைக் கவர ஆசை வைத்து வெறி பிடித்த செயல்களைச் செய்வார்களானால் அவர்களுடைய அறிவு என்ன பயனுடையதாகும்!

வி-ம்: 'அஃகி' என்பது 'நுணங்கி' அல்லது 'வணங்கி' என்ற பொருள் தருவது. 'அஃகி அகன்ற அறிவு' உடல் வணங்கி மனம்குவிந்து கஷ்டப்பட்டுக் கற்றுக்கொண்ட அறிவு என்பதும் உட்கருத்து. பிறருடைய பொருளைக் கவர்ந்து கொள்ள ஆசைப்படுகிறவர்கள், எல்லாரிடத்திலும் 'வெஃகி வெறிய' செய்ய மாட்டார்கள்; செய்ய இடமும் இருக்காது. பொருள் உடையவர்களிடத்தில்தான் அதைக் கவர்ந்து கொள்ள ஆசை செலுத்தலாம். ஆதலால் 'யார் மாட்டும் வெஃகி வெறிய செயின்' என்று சேர்க்காமல் 'அறிவு யார் மாட்டும் என்னும்' என்று சேர்த்துப் பொருள் கொள்வது சிறப்புடையது.

நுணங்கி வணங்கி வருந்திக்கற்ற அறிவின் நோக்கம் தெய்வத் திருவருளை நாடுவதாக இருக்க வேண்டும். இல்லையானால்:

**176. அருள்வெஃகி ஆற்றின்க ணின்றான் பொருள்வெஃகிப்
பொல்லாத சூழக் கெடும்.**

ப. ரை: அருள் வெஃகி ஆற்றின் கண் நின்றான் = கருணையைப் பெற வேண்டுமென்று விரும்பி இல்லற ஒழுக்கத்தின் வரம்புக்குள் நிற்கிறவன், பொருள் வெஃகிப் பொல்லாத சூழ் கெடும் = பொருளின்மேல் ஆசை வைத்துப் பொல்லாத செயல்களை எண்ணினால் அறம் கெட்டுப்போகும்.

பொ. ரை: கருணையை விரும்பி இல்லற ஒழுக்கத்தின் நெறி கடக்காமல் இருக்கவென்றே இல்வாழ்க்கை நடத்துகிறவன், பொருளின்மேல் வைத்த ஆசையினால் கெட்ட காரியங்களைச் செய்ய நினைப்பானாயின் இல்லறம் கெட்டுப் போகும்.

வி - ம் : இல்லற வாழ்க்கையில் கருணையோடு நடக்கிறவன் தான் துறவறத்துக்குப் போக முடியுமென்றும். அதனால் துற வறத்துக்கு இல்லறம்தான் வழி யென்றும் பொருள் செய் வது முற்றிலும் தவறு. இல்லறந்தான் கிழட்டுப் பருவம் அடையும்போது துறவறத்துக்குப் போவதும் உண்டு. ஆனால் இல்லறத்தில் ஒரு சிறிதும் ஈடுபடாமல் துறவறம் மேற் கொண்டவர்கள் எண்ணிறந்தார் உண்டு. மேலும் இல்லறத் தைச் சரியாக நடத்திக் கருணை வாழ்க்கை யுடையவனாக இருப்பவன் துறவறத்துக்குப் போகவே வேண்டியதில்லை என்பது திருவள்ளுவருடைய தீர்மானம். ஆதலால் துறவறத் துக்கு இல்லறம் ('ஆறு') வழி யென்பது சரியல்ல. இல் லறத்திலேயே அருளை நாடலாம்.

பிறன் பொருளை வெ.ஃகுவதால் கருணை வாழ்வு கெட்டு விடும் என்பது மட்டுமல்ல. வேறு தீமைகளும் உண்டாகும். ஆதலால் :

177. வேண்டற்க வெ.ஃகியா மாக்கம் விளைவயின்
மாண்டற் கரிதாம் பயன்.

ப. ரை : வெ.ஃகி ஆம் ஆக்கம் வேண்டற்க = பிறர் பொருளைக் கவர்ந்து கொள்ளும் ஆசையால் வரக்கூடிய செல்வத்தை விரும்பவேண்டாம். விளைவயின் பயன் மாண்டற்கு அரிது ஆம் = அதிலிருந்து வரக்கூடிய பயன் பெருமை வருவதை இல்லாமற் செய்யும்.

பொ. ரை : பிறருடைய பொருளைக் கவர்ந்து வருவதாகிய செல் வத்தை விரும்ப வேண்டாம். அதனால் விருத்தியடைவது கெடும்.

வி - ம் : 'மாண்டற்கு அரிது' என்பது உயர்வு அடைய உத வாது என்ற பொருள் தருவது. அதாவது உள்ள செல்வமும் உயர்ந்து விட முடியாது. புகழ் பெறவும் முடியாது. 'மாண் டற்கு' என்பது 'புகழ் பெறுவதற்கு' என்பதாகும்.

உள்ள செல்வம் குறையாமலிருக்க வேண்டுமானால் :

178. அ.ஃகாமை செல்வத்திற் கியாதெனின் வெ.ஃகாமை
வேண்டும் பிறன்கைப் பொருள்.

ப. ரை : செல்வத்திற்கு அ.ஃகாமை யாது எனின் = செல்வத் துக்குக் குறையாத் தன்மை எதுவென்றால், பிறன் கைப் பொருள் வெ.ஃகாமை வேண்டும் = பிறனுக்கு உரிமையான

பொருளின்மேல் ஆசை கொண்டு அதைக் கவர்ந்து கொள்ள நினைக்காமல் இருக்கவேண்டும் என்பதுதான்.

பொ. ரை: செல்வக் குறைவு இல்லாதிருத்தல் எதுவென்றால் இன்னொருவனுக்குச் சொந்தமான பொருளை அபகரிக்க நினைக்காமலிருக்க வேண்டும் என்பதுதான்.

வி-ம்: பிறர் பொருளை அபகரிக்க ஆசைப்படாமலிருப்பதே குறைவற்ற செல்வம். உள்ள செல்வத்தையும் குறைவாக எண்ணச் செய்வது இந்த ஆசைதான்.

பிறருடைய உரிமைப் பொருளைக் கவர்ந்து கொள்ளும் ஆசையில்லாத மனமுடையவர்களுக்குக் குறைச்சல் வராது:

**179. அறனறிந்து வெஃகா வறிவுடையார்ச் சேருந்
திறனறிந் தாங்கே திரு.**

ப. ரை: அறன் அறிந்து வெஃகா அறிவுடையார் திறன் அறிந் தாங்கு திரு சேரும் = தர்மத்தை உணர்ந்து பிறருடைய உரிமைப் பொருளில் ஆசை கொள்ளாத அறிவுடையவர்களுடைய தகுதியை அறிந்த அளவுக்கு திருமகள் அவர்களிடம் வந்து சேர்வாள்.

பொ. ரை: தர்ம உணர்ச்சியோடு பிறருடைய உடைமையை அபகரிக்க ஆசையற்ற மனமுடையவர்களுடைய தகுதியை அறிந்து அந்த அளவுக்குத் திருமகள் அவர்களிடம் தானாகவே வந்து சேர்வாள்.

வி-ம்: பிறர் பொருளைக் கவர ஆசையில்லாத மனநிலையை எவ்வளவுக் கெவ்வளவு தர்ம உணர்ச்சியோடு கடைப்பிடிக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு அவர்களுக்குச் செல்வமகளின் ஆதரவு கிடைக்கும். செல்வம் வரும். செல்வம் கிடைக்கத் தாமதமானாலும் அவர்களிடத்தில் ஸ்ரீதேவி வாசம் செய்வாள்.

செல்வ மகள் வந்து சேர்வது எப்படியானாலும்:

**180. இறலீனு மெண்ணாது வெஃகின் விறலீனும்
வேண்டாமை யென்னுஞ் செருக்கு.**

ப. ரை: எண்ணாது வெஃகின் இறல் ஈனும் = எண்ணிப் பார்க்காமல் பிறருடைய உரிமையான பொருளை அபகரிக்க ஆசை கொண்டால் கேடுண்டாகும். வேண்டாமை என்னும் செருக்கு விறல் ஈனும் = (அப்படி வரும் செல்வத்தை) வேண்டா

மென்று விலக்கி விடுகிற பெருமிதம் வலிமையை உண்டாக்கும்.

பொ. ரை: அதனாலுண்டாகும் நன்மை தீமைகளை எண்ணிப் பார்க்காமல் பிறருடைய பொருளைக் கவர ஆசை கொண்டால் கெடுதி உண்டாகும். அப்படி வரும் செல்வம் வேண்டாமென்று விலக்கி விடும் பெருமை தர்ம பலத்தைக் கொடுக்கும்.

வி-ம்: 'இறல்' என்பதற்கு 'இறுதி' என்ற பொருள் இங்கே நல்லதல்ல. 'விறல்' என்பதற்கும் 'வெற்றி' என்ற பொருள் நல்லதல்ல. 'இறல்' என்பதற்குக் 'கெடுதி' என்றும் 'விறல்' என்பதற்கு நியாய பலத்தின் 'விறு' என்றும் பொருள் கொள்வது சிறப்புடையது.

அதி. 19—புறங்கூறுமை

[புறங்கூறுமை என்பது கோள் சொல்லாமை. தன்னலங் கருதி ஒருவன் இல்லாத விடத்தில் அவனைப் பற்றி இகழ்ந்து பேசுவது. இது சொற் குற்றம்.]

181. அறங்கூறு னல்ல செயினு மொருவன்
புறங்கூறு னென்ற லினிது.

ப. ரை: ஒருவன் அறம் கூறுன் அல்ல செயினும் = ஒருவன் அறம் என்பதின் கூறுபாட்டின்படி அறம் அல்லாதவற்றைச் செய்கிறவனானாலும், புறங்கூறுன் என்றல் இனிது = அவன் கோள் சொல்ல மாட்டான் என்பது இன்பமுண்டாக்கத் தக்கது.

பொ. ரை: ஒருவன் தர்மம் என்ற இனத்தைச் சேராத செயல்களைச் செய்கிறவனானாலும் அவன் கோள் சொல்ல மாட்டான் என்பது மெச்சத் தக்கது.

வி-ம்: 'அறம் கூறுன்' என்பதிலுள்ள 'கூறுன்' என்பது 'சொல்லமாட்டான்' என்ற பொருள் தருவதல்ல. (கூறு + ஆன்). 'கூறு' என்பது இங்கே 'கூறுபாடு' அல்லது 'பாகுபாடு' என்ற பொருள் தருவது. ஆதலால் 'அறம் கூறுன்' என்றதற்கு 'அறம் என்ற பாகுபாட்டின்படி' என்பது பொருள்.

அறத்தைச் சேராத செயல்களைச் செய்கிறவனானாலும் அவன் கோள் சொல்லாதவனாக இருந்தால் இனியது என்று ஏன் சொல்லுகிறோம் என்றால்:

182. அறனழீஇ யல்லவை செய்தலிற் றீதே
புறனழீஇப் பொய்த்து நகை.

ப. ரை: புறன் நழீஇ பொய்த்து நகை = (ஒருவன்) இல்லாத இடத்தில் நழுவி மறைந்து (அவனைப் பற்றி) பொய்களைச் சொல்லி மகிழ்வது. அறன் நழீஇ அல்லவை செய்தலில் தீதே = தருமத்தில் நழுவி தர்மமல்லாத செயல்களைச் செய்வதைக் காட்டிலும் கொடியது.

பொ. ரை: ஒருவனைக் காணாத விடத்தில் நழுவி அவனைப் பற்றிப் பொய்யான கோள்களைச் சொல்லி மகிழ்ச்சி யடைவது. மற்ற தர்மங்களில் தவறி தர்மமல்லாத காரியங்களைச் செய்வதைக் காட்டிலும் பெரிய பாவம்.

வி-ம்: 'அறனழீஇ' 'புறனழீஇ' என்பன அறன் + நழுவி புறன் + நழுவி என்பனவற்றின் விகாரம்.

கோள் சொல்லி உயிர் வாழ்வதைக் காட்டிலும்:

183. புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற் சாத
லறங்கூறு மாக்கம் தரும்.

ப. ரை: புறங்கூறி பொய்த்து உயிர் வாழ்தலின் = கோள் சொல்லிப் பொய்யனாகி உயிர் வாழ்வதைக் காட்டிலும். சாதல் அறம் கூறும் ஆக்கம் தரும் = செத்துப் போவது (தர்ம நூல்கள்) சொல்லுகின்ற நன்மையைத் தரும்.

பொ. ரை: கோள் சொல்லிப் பொய்யனென்ற பெயரெடுத்துப் பிழைப்பு நடத்துவதைக் காட்டிலும் செத்துப் போவது தர்ம நூல்களில் சொல்லப்படுகிற நன்மையைத் தரும்.

வி-ம்: காணாதவிடத்தில் ஒருவனைப் பற்றிப் பொய்களைப் புனைந்துரைத்து கோள் சொன்னால்தான் சீவனம் செய்ய முடியும் என்ற நிலைமை ஏற்பட்டாலும் அப்படி உயிர் வாழ்வதைக் காட்டிலும் இறந்து போவது புண்ணியம் என்று கருத வேண்டும்.

ஆகையினால்:

184. கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல்.

ப. ரை: கண் நின்று கண் அற சொல்லினும் = ஒருவனுக்கு முன்னால் நின்று கண்ணோட்டமில்லாமல் பேசி விட்டாலும்.

முன் இன்று பின் நோக்கா சொல் சொல்லற்க = அவன் முன்னால் இல்லாதபோது பின்னால் வரும் தீமைகளை நினைத்துப் பார்க்காத வார்த்தைகளைச் சொல்லக் கூடாது.

பொ. ரை : ஒருவனுக்கு முன்னால் நின்று தாட்சண்ணியமில்லாமல் பேசி விட்டாலும் குற்றமில்லை. ஆனால் அவன் உனக்கு முன்னால் இல்லாதபோது பின்னாலுண்டாகும் தீங்குகளை நினைத்துப் பார்க்காமல் கோள் சொல்லக் கூடாது.

வி - ம் : 'பின்னோக்காச் சொல்' பின்னால் வரக் கூடிய தீமைகளைப்பற்றி எண்ணிப் பார்க்காமல் பேசுவது. பின்னால் வரக் கூடிய தீங்கு என்பது யாரைப் பற்றிக் கோள் சொல்லப்படுகிறதோ அவனுக்கு வருகிற தீங்கு மட்டும் அல்ல. கோள் சொல்லுகிறவனுக்கே பின்னால் வரக்கூடிய தீங்குகளைப் பற்றியும் ஆகும்.

கோள் சொல்லுகிறவனுக்கே உண்டாகக் கூடிய தீமை என்னவென்றால் :

185. அறஞ்சொல்லு நெஞ்சத்தா னன்மை புறஞ்சொல்லும்
புன்மையாற் காணப் படும்.

ப. ரை : அறம் சொல்லும் நெஞ்சத்தான் அன்மை = நல்லறிவு சொல்லக் கூடிய எண்ணமுள்ளவன் அல்ல என்பதை, புறஞ் சொல்லும் புன்மையால் காணப்படும் = கோள் சொல்லுகின்ற அற்பத்தனத்தினால் கண்டு கொள்வார்கள்.

பொ. ரை : ஒருவன் நல்லது சொல்லும் எண்ணமுள்ளவன் அல்லவென்பதை, கோள் சொல்லுகின்ற அற்பத் தனமே காட்டிவிடும்.

வி - ம் : ஒருவன் இன்னொருவனிடத்திற் சென்று அவனுக்கு நல்லது சொல்ல வந்தவன் போல, அங்கில்லாத வேறொருவனைப் பற்றிக் கோள் சொல்லுகின்ற அவனுடைய அற்பத்தனமே அவன் நல்லது சொல்ல வந்த எண்ணமுள்ளவன் அல்லவென்பதைக் காட்டிவிடும். அதனால் இவனுக்கே தீமை உண்டு.

ஆகையினால் :

186. பிறன்பழி கூறுவான் றன்பழி யுள்ளுந்
திறன்றெரிந்து கூறப் படும்.

ப. ரை : பிறன் பழி கூறுவான் = இன்னொருவன் மேல் பழி சுமத்தக் கோள் சொல்லுகின்றவன், தன் பழி உள்ளும் திறன்

தெரிந்து கூறப்படும் = (தான் சொல்லுவதைக் கேட்கிறவன்) தன் மேல் குற்றம் நினைப்பானே என்பதைத் தெரிந்து பேச வேண்டும்.

பொ. ரை: இன்னொருவன்மேல் பழி சுமத்தக் கோள் சொல்லு கின்றவன் தான் யாரிடத்தில் கோள் சொல்லுகிறானோ அவன், தன் மேல் கோள் சொல்லும் குற்றம் நினைப்பானே என்றதைத் தெரிந்து பேச வேண்டும்.

வி - ம்: 'கோள் சொல்லுகின்ற அற்பத்தனமே சொல்லுகிற வன் நல்ல எண்ணமுள்ளவன் அல்லவென்பதைக் காட்டி விடும்' என்று முன்னுள்ள குறளில் சொல்லப்பட்டபடி, கோள் சொல்லுவதைக் கேட்கிறவன் தன்னைக் குற்றமுடையவனாக நினைப்பான் என்பதைக் கோள் சொல்லுமுன் நினைக்கவேண் டும். ஏன் எனில், 'தன் - பழி - உள்ளும் - திறன்' = 'தன் மேல் - குற்றம் - எண்ணுவதற்கு - இடம்' அந்தக் கோள் சொல்வதில் இருக்கிறது. அதைத் 'தெரிந்து கூற' வேண் டும்.

கோள் சொல்லுகின்றவர்கள் மிகவும் பொல்லாதவர்கள். அவர்கள்:

187. பகச்சொல்லிக் கேளிர்ப் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாட றேற்றா தவர்.

ப. ரை: பக சொல்லி கேளிர் பிரிப்பர் = பிளவு உண்டாகும் படிப் பேசி நண்பர்களைப் பிரித்து வைத்துவிடுவார்கள், நக சொல்லி நட்பு ஆடல் தேற்றாதவர் = மகிழ்ச்சி தரும்படி இனிமையாகப் பேசி நட்புண்டாக்குவதைத் தெரியாதவர் கள்.

பொ. ரை: கோள் சொல்லுகின்றவர்கள் வேற்றுமை உண்டா கும்படிப் பேசி மனமொத்த நண்பர்களையும் பிரிந்து போகும் படிச் செய்துவிடுவார்கள். மகிழ்ச்சியுண்டாக்கும் நல்ல வார்த்தைகளைச் சொல்லி நட்புண்டாக்குவது அவர்களுக்குத் தெரியவே தெரியாது.

வி - ம்: கோள் சொல்லுகிறவர்களுக்கு நண்பர்களையும் உற வினர்களையும் பிரித்து வைக்கும் மனஸ்தாப மூட்டுகிற பேச் சுக்களைத்தான் பேசத் தெரியுமேயன்றி, சேர்த்து வைக்கும் நல்ல வார்த்தைகளைப் பேசத் தெரியாது. 'கேளிர்ப் பிரிப் பர்' என்பதற்கு, 'தம்முடைய கேளிர் தங்களை விட்டுப் பிரிந்து போகும்படிச் செய்வார்கள்' என்பது பொருளல்ல. பொதுவாக நெருங்கிய நண்பர்களையும் ஒருவரை விட்டு ஒரு

வர் பிரிந்து போகும்படி மனஸ்தாப முண்டாக்குவதே அவர்கள் வேலை என்பது பொருள்.

நெருங்கிய நண்பர்களையும் பிரித்து வைத்துவிடும் இவர்கள் :

188. துன்னியார் குற்றமுந் தூற்று மரபினா
ரென்னைகொ லேதிலார் மாட்டு.

ப. ரை : துன்னியார் குற்றமும் தூற்றும் மரபினர் = நெருங்கிய நண்பர்களிடையும் குற்றம் காட்டிக் கோள் சொல்லும் குணமுடையவர்கள், என்கொலோ ஏதிலார் மாட்டு = பகைவர்களாக இருக்கிறவர்களுக்கிடையே என்ன செய்வார்களோ (சொல்ல முடியவில்லை)?

பொ. ரை : நெருங்கிய நண்பர்களுக்குள்ளேயும் (ஒருவர் குற்றத்தை ஒருவரிடம் தனித்தனியே இல்லாத இடத்தில்பேசி) கோள் சொல்லும் இனமாகிய இவர்கள் (ஏற்கனவே) பகைமை உள்ளவர்களுக்கிடையே என்ன செய்ய மாட்டார்கள் !

வி - ம் : 'பகச் சொல்லிக் கேளிரையும் பிரித்து' வைக்கக் கூடிய இவர்கள், பகைமை உள்ளவர்களிடையில் கோள் சொல்லுவார்களானால் அதன் விளைவு என்ன வாகுமோ! இங்கே 'தூற்றுதல்' என்பது 'பலருமறியப் பரப்புதல்' என்ற பொருளுடையதல்ல. 'கோள் சொல்லுவது' என்ற பொருளோடு நிற்க வேண்டியது. புறங் கூறுவோர் பலர் அறியப் பரப்ப மாட்டார்கள். அவர்கள் யாரும் அறியாத படி ஒருவனிடத்தில் இன்னொருவனைப் பற்றி மறைவில் பேசுகின்றவர்கள். 'துன்னியார்' என்றது தமக்குத் துன்னியார் அல்ல. 'ஏதிலார்' என்பதும் தமக்கு ஏதிலார் அல்ல. ஒருவருக்கொருவர் 'துன்னியார்' என்றும் ஒருவருக்கொருவர் 'ஏதிலார்' என்றும் கொள்ள வேண்டும்.

கோள்சொல்லிப் பகைமையை வளர்த்துக் கொடுமை விளைவிக்கிற இவர்களை இந்த உலகம் ஏன் சுமந்து கொண்டிருக்கிறதோ ! :

189. அறனோக்கி யாற்றுங்கொல் வையம் புறனோக்கிப்
புன்சொ லுரைப்பான் பொறை.

ப. ரை : புறன் நோக்கி புன்சொல் உரைப்பான் பொறை = இல்லாத காலம் பார்த்து கோள் சொல்லுகிறவனுகிய

சுமையை, வையம் அறன் நோக்கி ஆற்றும் கொல் = பூமி தன் கடமை என்று கருதிச் சுமந்து கொண்டிருக்கிறது போலும்.

பொ. ரை: ஒருவன் இல்லாத சமயம் பார்த்து அவனைப் பற்றிக் கோள் சொல்லுகிறவனை பூமியானது தன்னுடைய கடமை என்று கருதிச் சுமந்து கொண்டிருக்கிறதோ!

வி-ம்: 'அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல்' என்றபடி தன்னை வெட்டிக் குழிதோண்டுகிறவர்களையும் தாங்கிக் கொண்டிருக்கிற பூமி, கோள் சொல்லுகிறவர்களையும் தாங்குவது அதன் தர்மம் போலும்.

உலகத்தில் பல துன்பங்கள் கோள் சொல்லுவதால்தான் உண்டாகின்றன. அதனால்:

> 190. ஏதிலார் குற்றம்போற் றங்குற்றங் காண்கிற்பிற்
> றீதுண்டோ மன்னு முயிர்க்கு.

ப. ரை: ஏதிலார் குற்றம் போல் தம் குற்றம் காண்கிற்பில் = பிறருடைய குற்றத்தைப் போலத் தம்முடைய குற்றத்தையும் உணர்வார்களானால், மன்னும் உயிர்க்கு தீது உண்டோ = உலகத்தில் இருந்து வருகிற உயிர்களுக்குத் துன்பம் உண்டோ!

பொ. ரை: பிறர் செய்யும் குற்றங்களுக்காக அவர்களைக் குறைகூறுவது போலத் தம்முடைய குற்றங்களையும் (கோள் சொல்லுகிறவர்கள்) உணர்ந்து குறை கூறிக் கொள்வார்களானால் உலகத்தில் மக்களுக்குள் தீங்கு செய்வதும் இருக்குமா?

வி-ம்: கோள் சொல்லுகிறவன் உண்மையானதாகவோ கற்பனையாகவோ பிறர் மேல் குற்றம் சொல்லித்தான் கோள் மூட்ட வேண்டும். அப்படிப் பிறர் மேல் குற்றம் சொல்லுகிற அவன், தான் செய்யும் குற்றத்தை உணர்வானாகில் மனிதருக்குள் ஒருவருக் கொருவர் துன்பம் செய்யவே காரணம் இருக்காது. மேலும் ஒவ்வொரு மனிதனும் பிறருடைய குற்றங்களைப் பற்றிக் கோள் சொல்லுவதற்குக் காது கொடுக்கும் போது தன் குற்றங்களை உணர்வானாகில் கோள் சொல்லுவதும் இருக்காது. அதனால் வரும் துன்பங்களும் ஒழியும்.

அதி. 20—பயனில சொல்லாமை

[பயனில சொல்லாமை என்பது, பயனற்ற வீண் வார்த்தைகளைப் பேசாமலிருப்பது. பொதுவாக எவரிடத்திலும் எப்போதும் பயனற்ற பேச்சுகளைப் பேசாமல் இருப்பது. இந்த அதிகாரத்தில் பல பேர் கூடியுள்ள இடத்தில் வீண் பேச்சுகளைப் பேசி அருவருப்புண்டாக்குவது தீமை பயக்குமென்பதைக் குறிப்பாகச் சொல்லப்படுகிறது. இதுவும் சொற்குற்றம்.]

191. பல்லார் முனியப் பயனில சொல்லுவா
னெல்லாரு மெள்ளப் படும்.

ப. ரை: பல்லார் முனிய பயன் இல சொல்லுவான் எல்லாரும் எள்ள படும் = பல பேர் வெறுக்கும்படிப் பயனற்றதைப் பேசுகின்றவன், எல்லாரும் இகழ அவமானப் படுவான்.

பொ. ரை: பலபேர் வெறுக்கும்படியாக வீண் வார்த்தைகளைப் பேசுகின்றவன் எல்லாராலும் ஏளனம் செய்யப்பட்டு அவமானம் அடைவான்.

வி - ம்: 'பல்லார் முனிய' என்றதனுல் பல பேருக்கு முன்னுல் என்பது கருத்து.

அவமதிப்பு வருவது மட்டுமல்ல; பலபேர் கூடியுள்ள இடத்தில் பயனற்ற பேச்சைப் பேசிக் கொண்டிருப்பதால் தீங்கும் உண்டாகும்:

192. பயனில பல்லார்முற் சொல்ல னயனில
நட்டார்கட் செய்தலிற் றீது.

ப. ரை: பயன் இல பல்லார் முன் சொல்லல் = பயனற்ற வார்த்தைகளைப் பல பேருக்கு முன்னுல் பேசுவது, நயன் இல நட்டார் கண் செய்தலில் தீது = அன்பற்ற செயல்களை நண்பர்களிடத்தில் செய்து விடுவதைக் காட்டிலும் தீமையானது.

பொ. ரை: பல பேருக்கு முன்னுல் பயனற்ற பேச்சைப் பேசுவது, நண்பர்களிடத்தில் விரும்பத்தகாத குற்றங்களைச் செய்து விடுவதைக் காட்டிலும் கெடுதி உண்டாக்கக் கூடியது.

வி - ம்: நண்பர்களுக்குக் குற்றம் செய்துவிட்டால் மன்னித்து விடுவார்கள். அதனுல் தீங்கு வராது. ஆனுல் பல பேருக்கு

முன்னால் வீண் பேச்சுகளைப் பேசி வெறுப்புண்டாக்குவது தீமை பயக்கும்.

ஏன் எனில் அவனை யாரும் விரும்பமாட்டார்கள்:

193. நயனில னென்பது சொல்லும் பயனில
பாரித் துரைக்கு முரை.

ப. ரை: பயன் இல பாரித்து உரைக்கும் உரை = பயனில்லாத வார்த்தைகளைக் கேட்பவர்களுக்குப் பாரமாகத் தோன்றும் படி மிகுதியாகப் பேசுகின்ற பேச்சே, நயன் இலன் என்பது சொல்லும் = அவன் நல்லது இல்லாதவன் என்பதைத் தெரிவிக்கும்.

பொ. ரை: ஒருவன் வீண் வார்த்தைகளை அதிகமாகப் பேசுகின்ற செய்கையே அவன் விரும்பத் தகுந்தவன் அல்லவென்பதை வெளியாக்கிவிடும்.

வி-ம்: 'பாரித்துரைக்கும் உரை' அதிகமாக நெடுநேரம் பேசி கேட்கிறவர்களுக்கு அலுப்புண்டாக்கும் பேச்சு.

பிறருக்கு அலுப்புண்டாவதோடு பேசுகின்றவனுக்கும் நன்மை யுண்டாவதைக் கெடுக்கும்:

194. நயன்சாரா நன்மையி னீக்கும் பயன்சாராப்
பண்பில்சொற் பல்லா ரகத்து.

ப. ரை: பல்லார் அகத்து பயன் சாரா பண்பு இல் சொல் = பல பேருக்கு இடையில் பயனில்லாததும் தகுதியில்லாததுமான பேச்சைப் பேசுதல், நயன் சாரா நன்மையின் நீக்கும் = மகிழ்ச்சி உண்டாக்காததாகி நன்மையை நீக்கிவிடும்.

பொ. ரை: பலபேர்களுக்கிடையில் வீண் வார்த்தைகளையும் தகுதியற்ற வார்த்தைகளையும் பேசுவது இன்பத்தைக் கெடுத்து நன்மையைத் தடுத்துவிடும்.

வி-ம்: கேட்கிறவர்களுக்கு 'நயன் சாராமல்' சொல்லுகின்றவனை 'நன்மையினீக்கும்'.

எவ்வளவு பெருமையுள்ளவர்களானாலும் பல பேருள்ள இடத்தில் பயனில்லாத பேச்சைப் பேசக் கூடாது. பேசினால்:

195. சீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில
நீர்மை யுடையார் சொலின்.

ப. ரை: பயன் இல நீர்மை உடையார் சொலின் = பயனற்ற சொற்களை மேலான நிலைமையிலுள்ளவர்கள் சொல்லி விட்டால், சீர்மை சிறப்பொடு நீங்கும் = அவர்களுடைய பெருமையும் புகழும் அவர்களைவிட்டு நீங்கிவிடும்.

பொ. ரை: பயனில்லாத வார்த்தைகளை மேலான தன்மையுடையவர்கள் சொல்லிவிட்டால் அவர்களுடைய மேன்மையும் கீர்த்தியும் அவர்களைவிட்டு நீங்கிவிடும்.

வி-ம்: சாதாரண மக்கள் பயனற்ற வார்த்தைகளைப் பல பேருக்கிடையில் சொல்லி விடுவதால் அவர்களுக்கு ஏளனமுண்டாகும். அத்துடன் நன்மையில்லாமற்போகும். ஆனால் உயர்ந்த பதவியில் உள்ளவர்கள் அப்படிச் சொல்லிவிட்டால் அவர்களுக்கு அதுவரையிலும் இருந்த மதிப்பும் புகழும் உடனே மறைந்துவிடும்.

பல பேர்களுக்கிடையில் பயனற்ற சொற்களைப் பேசுகின்றவர்களே மிகவும் இகழத்தக்கவர்கள். அப்படிப் பட்டவர்களுக்குள் இன்னும் இகழந் தக்கவர்கள் யாரென்றால்:

196. பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி யெனல்.

ப. ரை: பயன் இல் சொல் பாராட்டுவானை மகன் எனல்! = பயனற்ற சொற்களைத் திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டிருப்பவனை மனிதன் என்று சொல்லுவது! — மக்கள் பதடி எனல் = மனிதருக்குள் பதர் என்று சொல்ல வேண்டும்.

பொ. ரை: பயனற்ற வார்த்தைகளையே மீண்டும் மீண்டும்பேசிக் கொண்டிருப்பவனை மனிதனென்று சொல்லுவது! மனிதப் பதர் என்றுதான் சொல்ல வேண்டும்.

வி-ம்: 'பாராட்டுதல்' என்பது பலமுறை சொல்லுதல். ஒருமுறை சொல்லும் போதே ஏளனம் உண்டாகும். அதை உணராமல் பயனற்றவைகளை திருப்பித் திருப்பிச் சொல்லுகிறவன் சத்தில்லாத பதர்தான்.

ஆதலால் அறிவுடையவர்கள் என்ன செய்வார்களென்றால்:

197. நயனில சொல்லினுஞ் சொல்லுக சான்றோர்
பயனில சொல்லாமை நன்று.

ப. ரை: சான்றோர் நயன் இல சொல்லினும் சொல்லுக = அறிவுள்ளவர்கள் இரக்கமில்லாத சொற்களைச் சொன்னாலும்

சொல்லுங்கள், பயன் இல சொல்லாமை நன்று = பயனில்லாத சொற்களைச் சொல்லாதிருப்பது நல்லது.

பொ. ரை : அறிவுடையவர்கள் இரக்கமில்லாத வார்த்தைகளைச் சொன்னாலும் சொல்லலாம், ஆனால் பயனில்லாதவற்றைச் சொல்லக் கூடாது.

வி - ம் : 'சான்றோர் நயனில சொல்லினும் சொல்லுக' என்பது அறிவுள்ளவர்கள் அது குறைந்தவர்களுடைய குற்றத்தைக் கண்டிக்க இரக்கமில்லாது பேசினாலும் பேசலாம் என்பதைக் குறிப்பது.

நல்ல வாழ்க்கை நடத்தப் போதுமான சாதாரண அறிவு மட்டும் இருந்தாலே அவர்கள் பயனற்ற வார்த்தைகளைச் சொல்ல மாட்டார்கள். இவர்களைக் காட்டிலும் உயர்ந்தவர்கள் மேலான பயன்களை ஆராய்ந்து பேசும் அறிவுடையவர்கள். அவர்கள் எப்படிப் பேசுவார்கள் என்றால் :

198. அரும்பய னாயு மறிவினார் சொல்லார்
பெரும்பய னில்லாத சொல்.

ப. ரை : அரும் பயன் ஆயும் அறிவினார் = மிக மேலான பயன்களை (விரும்பி) ஆராயும் அறிவுள்ளவர்கள், பெரும் பயன் இல்லாத சொல் சொல்லார் = பெரிய பலன்கள் இல்லாத சொற்களைப் பேசமாட்டார்கள்.

பா. ரை : வாழ்க்கையினால் அடையக் கூடிய மேலான பயன்களை நாடி ஆராயக் கூடிய அறிவுள்ளவர்கள் பெரிய நன்மைகளைக் கருத முடியாத பேச்சைப் பேச மாட்டார்கள்.

வி - ம் : 'அரும் பயன்' மனிதப் பிறப்பினால் தாம் அடைய விரும்பும் பயன்களுள் உச்சமான பேரின்பம். 'பெரும் பயன்' பிறருக்கு அவர்கள் பேச்சினால் உண்டாகக் கூடிய பெரிய நன்மைகள்.

இப்படி ஆய்ந்து பேசும் அறிவுடையவர்கள் பயனற்ற வார்த்தைகளைச் சொல்லிவிடக் கூடாதென்று மிகவும் எச்சரிக்கையோடு பேசுவார்கள். இவர்களைக் காட்டிலும் சிறந்தவர்கள் உண்டு. அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டியதுகூட இல்லை:

199. பொருடீர்ந்த பொச்சாந்துஞ் சொல்லார் மருடீர்ந்த
மாசறு காட்சி யவர்.

ப. ரை : மருள் தீர்ந்த மாசு அறு காட்சியவர் = மயக்கம் நீங்கிய குற்றமற்ற அறிவுடையவர்கள், பொருள் தீர்ந்த பொச்

சாந்தும் சொல்லார் = பயனற்ற சொற்களை மறந்துபோயும் சொல்லிவிட மாட்டார்கள்.

பொ. ரை: மயக்கம் நீங்கிக் குற்றமற்ற அறிவுடையவர்கள் மறந்தாற்போல் கூட வீண் வார்த்தைகளைப் பேசிவிட மாட்டார்கள்.

வி-ம்: உலகத்தின் ஆசாபாச மயக்கங்களில்லாமல் தெளிந்த அறிவுடையவர்கள் வாயிலிருந்து பயனற்ற வார்த்தைகள் வரவே வராது. 'மருள் தீர்ந்த மாசறு காட்சி' என்பது மெய்ஞ்ஞானம்.

ஆகையினால் பல பேருக்கு இடையில் பேசுகின்றபோது:

200. சொல்லுக சொல்லிற் பயனுடைய சொல்லற்க
சொல்லிற் பயனிலாச் சொல்.

ப. ரை: சொல்லில் பயன் உடைய சொல்லுக = சொற்களுக்குள் பயனுள்ள சொற்களை (தெரிந்தெடுத்து) சொல்லுவாயாக. சொல்லில் பயன் இலா சொல் சொல்லற்க = சொற்களுக்குள் பயன் இல்லாத சொற்களைச் சொல்லாதிருப்பாயாக.

பொ. ரை: பயனுடைய சொற்களை (ஆராய்ந்தெடுத்துப்) பேச வேண்டும். வீண் வார்த்தைகளை (ஆராய்ந்தறிந்து) விலக்க வேண்டும்.

வி-ம்: உனக்கும் பிறருக்கும் நன்மை யுண்டாக்கக் கூடிய பேச்சுகளைப் பேசு. வீண் பேச்சுகளைப் பேசாதே என்பது கருத்து.

அதி. 21—தீவினையச்சம்

[தீவினை அச்சம் என்பது பிறருக்குத் தீங்கு செய்தால் தனக்குப் பாவம் வருமே என்று பயந்து யாருக்கும் தீங்கு செய்யாதிருக்க விரும்பும் குணம்.]

201. தீவினையா ரஞ்சார் விழுமியா ரஞ்சுவர்
தீவினை யென்னுஞ் செருக்கு.

ப. ரை: தீவினை என்னும் செருக்கு = தீய வினைகளைச் செய்த பாவம் என்ற வல்லமைக்கு, தீவினையார் அஞ்சார் = தீங்கு செய்கிறவர்கள் அஞ்சுவதில்லை; விழுமியார் அஞ்சுவர் = நல்லவர்கள் அஞ்சுவார்கள்.

பொ. ரை : தீங்கு செய்வதனால் வரக்கூடிய பாவம் என்ற ஒரு வல்லமைக்கு, தீங்கு செய்யும் இயல்புள்ளவர்கள் அஞ்சுவதில்லை; ஆனால் நல்லவர்கள் அதற்கு அஞ்ச வேண்டும்.

வி - ம் : 'தீவினை என்னும் செருக்கு' தீய காரியங்களின் பயனாக உண்டாகும் 'பாவம் என்ற வல்லாண்மை.' 'செருக்கு' என்பதற்கு 'ஆற்றல் மிகுந்த அதிகாரி' என்பது இங்கே பொருள். தீங்கான காரியங்களைச் செய்தால் பாவம் உண்டு என்பதையும். அந்தப் பாவம் தன் ஆற்றலையும் அதிகாரத்தையும் தம்மீது செலுத்தித் தண்டிப்பது தப்பாது என்பதையும் தீய வினைகளைச் செய்கிறவர்கள் அறிவதுமில்லை அஞ்சுவதுமில்லை. ஆனால் நல்லவர்கள் அதை அறிவார்கள். அதனால் தீமை செய்ய அஞ்சுவார்கள்.

பிறருக்குத் தீங்கு செய்வதற்கு மிகவும் அஞ்ச வேண்டுவது ஏன் எனில் :

202. தீயவை தீய பயத்தலாற் றீயவை
தீயினு மஞ்சப் படும்.

ப. ரை : தீயவை தீய பயத்தலால் = தீங்கு செய்வது தீங்கையே உண்டாக்குவதனால், தீயவை தீயினும் அஞ்சப்படும் = தீங்கு செய்வதற்கு நெருப்புக்கு அஞ்சுவதைக் காட்டிலும் அதிகமாக அஞ்ச வேண்டும்.

பொ. ரை : தீங்கு செய்வது நமக்கே தீங்கைத் திருப்பித் தருவதால், தீங்கு செய்வதற்கு நெருப்புக்கு அஞ்சுவதைக் காட்டிலும் அதிகமாக அஞ்ச வேண்டும்.

வி - ம் : நெருப்பானது ஒரு பொருளைச் சுட்டெரித்துச் சாம்பராக்கி விட்டாலும் அத்துடன் நின்றுவிடும். நெருப்பு வைத்தவனை ஒன்றும் செய்யாது. ஆனால் ஒருவன் இன்னொருவனுக்குச் செய்யும் தீங்கு, பல துன்பங்களைப் பலருக்கு உண்டாக்கித் துன்பத்தைப் பெருக்கும். கடைசியில் அதன் பயன் தீங்கைச் செய்தவனையே வந்து தாக்கும். ஆதலால் 'தீயினும் அஞ்சப்படும்.'

இந்த உண்மையை உணர்வதே அறிவின் பயன் :

203. அறிவினு ளெல்லாந் தலையென்ப தீய
செறுவார்க்குஞ் செய்யா விடல்.

ப. ரை : அறிவினுள் எல்லாம் தலை என்ப = அறிவுகளுக்கெல்லாம் தலை சிறந்த அறிவு என்பது, செறுவார்க்கும் தீய

செய்யா விடல் = பகைவர்களுக்கும் தீங்கு செய்யாமல் விட்டு விடுதல்.

பொ. ரை: அறிவுகளுக்கெல்லாம் மிகச் சிறந்த அறிவு எதுவென்றால், பகைவர்களுக்கும் துன்பம் செய்யாமல் விட்டு விடுவது.

வி - ம்: 'விடல்' என்றதனால் பகைவன் அகப்பட்டுக் கொண்டாலும் துன்பம் செய்யாமல் 'விட்டு விடுவது' என்பதாகும். மேலும் பகைவனைத் தண்டிப்பது குற்றமல்லவென்று சொல்லுவார்கள். அப்படிக்கூடத் தீங்குசெய்யாமல் 'விடல்' நல்லறிவு.

தீவினைப் பயன் வரக்கூடாது என்பதற்காகப் பகைவனையும் அவன் சிக்கிக் கொண்டாலும், துன்பம் செய்யாமல் அவனை விட்டுவிட வேண்டும். அப்படியிருக்கப் பகையில்லாதவர்களுக்கும் துன்பம்செய்வது அறிவின்மை. ஆகையால்:

204. **மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழி**
னறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

ப. ரை: மறந்தும் பிறன் கேடு சூழற்க = மறந்தும்கூட இன்னொருவனுக்குக் கேடு செய்ய நினைக்க வேண்டாம். சூழின் அறம் சூழும் சூழ்ந்தவன் கேடு = நினைத்தால் உடனே அறக் கடவுள் அப்படி நினைத்தவனுக்குக் கேடு செய்ய நினைக்கும்.

பொ. ரை: மறந்தாற்போலக்கூட இன்னொருவனுக்குக் கேடுண்டாக்க நினைக்க வேண்டாம். நினைத்தால் அப்போதே தர்ம தேவதை அப்படி நினைக்கிறவனுக்குக் கேடுண்டாக்க நினைத்து விடும்.

வி - ம்: தீய வினையை நினைக்கும்போதே பாவம் உண்டாகி விடுவதால், அந்தப் பாவத்துக்குத் தண்டனை கொடுக்க அறக் கடவுள் நினைக்க வேண்டியது அதன் கடமையானதால், நினைத்தவனுக்குக் கெடுதி உண்டாகும்.

பகைமை முதலிய காரணங்களில்லாமல் வெறும் வறுமை கூடப் பிறருக்குத் துன்பம் செய்யத் தூண்டிவிடலாம். ஆதலால்:

205. **இலனென்று தீயவை செய்யற்க செய்யி**
னிலனாகு மற்றும் பெயர்த்து.

ப. ரை: இலன் என்று தீயவை செய்யற்க = பொருள் இல்லாதவன் என்பதற்காகப் பிறருக்குத் துன்பம் செய்துவிடக்

கூடாது; செய்யின் மற்றும் பெயர்த்து இலனாகும்=செய்தால் மற்றவைகளும் நீங்கி ஒன்றும் இல்லாதவனாகி விடுவான்.

பொ. ரை: பொருள் இல்லாதவன் என்பதற்காகத் தீங்கு செய்துவிடக் கூடாது. செய்தால் பொருள் இல்லாமை மட்டுமல்ல, அவனிடம் உள்ள மற்ற எதும் இல்லாமற் போய் விடும்.

வி-ம்: பொருள் இல்லை என்பதற்காகப் பிறருக்குத் துன்பம் செய்தால் அவனிடம் உள்ள குணம், குலம், கல்வி, திறமை முதலியன எதுவும் இல்லாமற் போய் மேலும் வறியனாகி மறுமை இன்பத்துக்கும் மார்க்கமில்லாதவனாகி விடுவான்.

பிறருக்குத் தீங்கு செய்வதால் செல்வம் வந்துவிடாது. ஆனால் தீவினையின் பாவம் நிச்சயமாக வரும். ஆதலால்:

206. தீப்பால தான்பிறர்கட் செய்யற்க நோய்ப்பால
தன்னை யடல்வேண்டா தான்.

ப. ரை: நோய்ப்பால தன்னை அடல் வேண்டாதான் = துன்பம் தரும் தீவினைப் பயன்கள் வந்து தன்னை வருத்தக் கூடாதென்று விரும்புகிறவன், தான் தீப்பால பிறர்கண் செய்யற்க = தான் பிறருக்குத் தீங்கான செயல்களைச் செய்யாதிருக்க வேண்டும்.

பொ. ரை: நோய்தரக் கூடிய தீவினைப் பயன்கள் பின்பு வந்து தன்னை வருத்தப்படுத்தாமலிருக்க விரும்புகிறவன், தான் இப்போது பிறருக்குத் தீங்கு செய்யாமலிருக்க வேண்டும்.

வி-ம்: பிறருக்குத் தீங்கு செய்கிறவன் பின்னால் துன்பமடைந்தே தீர வேண்டும்.

ஏன் என்றால்:

207. எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்.

ப. ரை: எனை பகை உற்றாரும் உய்வர் = எப்படிப்பட்ட பகைவரை உடையவர்களும் (அப் பகைவர்களிடமிருந்து) தப்பித்துக் கொள்ள முடியும்; வினை பகை வீயாது பின் சென்றடும் = தீவினை என்ற பகை விடாமல் பின் தொடரும்.

பொ. ரை: எவ்வளவு வலிமை பொருந்திய பகைவர்கள் இருந்தாலும் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்ள முடியும்.

ஆனால் தீவினைப் பயன் என்ற பகை நாம் எங்கே போய் ஒளிந்தாலும் நம்மை விடாமல் பின் தொடரும்.

வி-ம்: 'வினைப் பகை' நாம் செய்த தீவினைப் பயனாகிய பகை. 'வினை' என்பது 'நல்வினை' 'தீவினை' என்ற இரண்டுக்கும் பொருந்தும். ஆனால் 'பகை' என்பதுசேர்ந்ததால் தீவினையை மட்டும்தான் குறிக்கும். அதிகாரம் 'தீவினையச்சம்' ஆதலால் இங்கே தீவினை மட்டும் பேசப்படுகிறது.

ஆகையினால்:

208. தீயவை செய்தார் கெடுத னிழறன்னை
வீயா தடியுறைந் தற்று.

ப. ரை: தீயவை செய்தார் கெடுதல் = தீங்கு செய்தவர்கள் கெட்டுப் போவார்கள் என்பது. நிழல் தன்னை வியாது அடி உறைந்து அற்று = ஒருவனுடைய நிழல் அவனை விட்டு நீங்காமல் அவனுடைய பாதத்தோடு சேர்ந்து இருப்பது போலாம்.

பொ. ரை: தீமை செய்கிறவன் தீமையே அடைவான் என்பது, ஒருவனுடைய நிழல் அவனை விட்டு விலகாமல் அவனுடைய பாதங்களோடு எப்போதும் சேர்ந்தே இருப்பது போல விலக்கவே முடியாதது.

வி-ம்: நிழலை விட்டு விலகிப் போக நினைத்து எப்படியெல்லாம் முயன்று எங்கெங்கெல்லாம் சென்றாலும் முடியாது என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை, தீமை செய்தவன் தீமை அடைவதை விட்டு விலகிக் கொள்ள முடியாது என்பதும்.

பிறருக்குத் தீங்கு செய்வது என்பது தனக்கே தீங்கு செய்வதாக முடிவதால்:

209. தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந்
துன்னற்க தீவினைப் பால்.

ப. ரை: தன்னை தான் காதலன் ஆயின் = (ஒருவன்) தன்னைத் தானே நேசிக்கின்றவன் ஆனால், தீவினைப்பால் எனைத்து ஒன்றும் துன்னற்க = தீய செயல்களின் பக்கத்தில் சிறிதளவு கூட நெருங்கக் கூடாது.

பொ. ரை: ஒருவன் தனக்குத்தானே அன்பு செய்கிறவனாயின் தீங்கு செய்யும் காரியங்களின் பக்கத்தில் கொஞ்சங் கூட நெருங்கப்படாது.

வி - ம் : 'தீவினைப்பால் துன்னற்க' 'தீய வினையின் பக்கம் நெருங்க வேண்டாம்' என்பதுதான் பொருள். நல்வினை செய்ய முடியாவிட்டாலும் தீவினையின் பக்கம்கூடப் போகாதே என்பது கருத்து.

தன்னைத்தான் காதலித்துத் தனக்குத் தீங்கு வராதபடி காத்துக் கொள்ளுகிறவன் யாரென்றால் :

210. அருங்கேட னென்ப தறிக மருங்கோடித்
தீவினை செய்யா னெனின்.

ப. ரை : மருங்கு ஓடி தீவினை செய்யான் எனின் = பிறரிடத்தில் விரைந்து தீங்கான செயல்களைச் செய்யாதவன் என்றால், அரும் கேடன் என்பது அறிக = அவன் கேடடைவது அரிது என்பதைத் தெரிந்து கொள்க.

பொ. ரை : ஒருவன் அவசரப்பட்டுப் பிறருக்குத் தீங்கு செய்கிறவன் அல்லவென்றால் அவனுக்குக் கேடுவராது என்பதை அறிந்து கொள்ளலாம்.

வி - ம் : 'மருங் கோடி' என்பதற்கு 'பிறர் மருங்குவிரைந்து' என்பது பொருள். பிறரிடத்தில் விரைந்து தீவினை செய்வதாவது, பிறருக்குத் தீங்கு செய்தால் அதனால் தனக்குத் தீங்கு வருவது நிச்சயம் என்பதை நிதானிக்காமல் அவசரப்படுவது. அதனால் ஆலோசிக்காமல் பிறருக்குத் தீங்கு செய்தால் அதன் பயனாகிய தீவினையால் தனக்குத் தீங்கு வரும் என்பதற்கு யாரும் அஞ்சி வாழ்க்கை நடத்த வேண்டும்.

அதி. 22—ஒப்புரவறிதல்

['ஒப்புரவறிதல்' என்பது கைம்மாறு கருதாமல் பிறருக்கு உதவி செய்வது. அதாவது எல்லா மக்களும் இன்புற்று வாழ வேண்டும் என்ற மிக நல்ல நோக்கத்துடன் தனக்குள்ள எதையும் பிரதிப் பிரயோசனம் கருதாமல் தானாகவே தேவையுள்ளவர்களுக்குத் தந்து உதவுகிற தன்மை.]

211. கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு.

ப. ரை : கடப்பாடு கைம்மாறு வேண்டா = கடமை கைம்மாறு விரும்பாது; மாரி மாட்டு உலகு என் ஆற்றும் கொல்லோ =

மழையினிடத்தில் உலகம் என்ன (கைம்மாறு) செய்ய முடியும்?

பொ. ரை: கடமை என்று பிறருக்கு உதவி செய்கிறவர்கள் பதில் உதவியை விரும்ப மாட்டார்கள். மழை பெய்வதற்காக உலகத்தார் அந்த மழைக்கு என்ன பதில் உதவி செய்ய முடியும்?

வி - ம்: பிரதிப் பிரயோசனத்தை எதிர் பார்த்து மேகம் மழை பொழிவதில்லை. மழையில்லாவிட்டால் உலகத்தில் உயிர் வாழவே முடியாது. அவ்வளவு பெரிய உதவியைச் செய்கிற மேகத்துக்கு நன்றியறிவு காட்டி ஏதாவது பிரதி உபகாரம் செய்ய வேண்டும் என்று விரும்பினாலும் என்ன செய்துவிட முடியும்? அந்த மேகத்தைப் போல், தன் கடமை என்று கைம்மாறு கருதாமல் உதவி செய்வதுதான் ஒப்புரவு அறிந்த குணம்.

இந்த ஒப்புரவறியும் குணம் எப்படி எண்ணும் என்றால்:

212. தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு.

ப. ரை: தாளாற்றி தந்த பொருள் எல்லாம் = பாடுபட்டுச் சம்பாதித்த செல்வம் முழுவதும், தக்கார்க்கு வேளாண்மை செய்தல் பொருட்டு = தகுதியுடையவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகத்தான்.

பொ. ரை: பாடுபட்டுச் சம்பாதித்த செல்வமெல்லாம் தகுதியுள்ளவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகத்தான்.

வி - ம்: பாடுபட்டுச் சம்பாதித்த செல்வமெல்லாம் பாடுபட முடியாமலும், சம்பாதிக்க முடியாமலும், செல்வமில்லாமலும் இருக்கிறவர்களுக்கு உபகாரம் செய்வதற்காகத்தான் என்று எண்ணுவதுதான் ஒப்புரவறிதலின் உயர்ந்த தன்மை.

இப்படி எண்ணும் குணத்தைக் காட்டிலும் மேலானது எங்கேனும் உண்டா என்றால்:

213. புத்தே ளுலகத்து மீண்டும் பெறலரிதே
யொப்புரவி னல்ல பிற.

ப. ரை: ஒப்புரவின் நல்ல பிற = ஒப்புரவு என்பதைக் காட்டிலும் நல்லது வேறொன்று. புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே = தேவலோகத்திலும் இவ்வுலகத்திலும் பெறுதல் முடியாது.

பொ. ரை: பரோபகாரம் என்பதைக் காட்டிலும் சிறந்தது வேறொன்று தேவருலகத்திலும் இல்லை; இந்த உலகத்திலும் இல்லை.

வி - ம்: தேவருலகம் மனதில் கற்பனையாக எண்ணப்படும் உலகம். இந்த உலகம் கண்ணாரக் காண்கிற உலகம். ஒப்புரவைக் காட்டிலும் உயர்ந்த குணம் எண்ணவும் முடியாது காணவும் முடியாது என்பது கருத்து.

இந்த உபகார மனமுள்ளவன்தான் உயிருள்ள மனிதனாகக் கருதப்படுவான். இல்லாவிடில்:

214. ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

ப. ரை: ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான் = தனக்கு ஒத்தது பிறனுக்கும் என்ற அறிவுடையவன்தான் உயிரோடு இருப்பவனாவான், மற்றையான் செத்தாருள் வைக்கப்படும் = அந்த அறிவு இல்லாதவன் செத்த பிணத்தோடு சேர்க்க வேண்டியவன்.

பொ. ரை: தனக்கு ஒத்தது மற்றவர்களுக்கும் என்ற அறிவுள்ளவன்தான் உயிரோடிருப்பவன். அது இல்லாதவன் செத்த பிணத்துக்குச் சமானம்.

வி - ம்: உயிர் இருந்தால் உணர்ச்சி இருக்கும். உணர்ச்சி இருந்தால் இன்பமும் துன்பமும் தனக்கு உள்ளது போலத்தான் பிறருக்கும் என்ற அறிவு இருக்கும். அந்த அறிவு இல்லாதவன் உணர்ச்சியே இல்லாதவன். பிணத்துக்குத்தான் உணர்ச்சியிருக்காது. ஆகையினால் அவன் செத்தாருள் வைக்கப்படுவான்.

ஒத்தது அறியும் இந்த உபகார உணர்ச்சி ஓரளவிலேனும் அப்போதைக்கப்போது எல்லா மனிதர்களிடத்திலும் இருந்து வருகிறது. ஆனால் அதைத் தம்முடைய கடமையாகக் கொண்டு தினசரி நடத்துகிறவர்கள் சிலரே யாவர். அவர்கள் போற்றத் தகுந்தவர்கள். அவர்களில் மூன்றுவிதங்கள் உண்டு. எப்படியெனில்:

215. ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம்
பேரறி வாளன் திரு.

ப. ரை: உலகு அவாம் பேர், அறிவாளன் திரு = உலகத்தார் விரும்பத் தகுந்தவனான 'பெரிய அறிவாளனிடத்திலுள்ள

செல்வம், ஊருணி நீர் நிறைந்து அற்று = குடி தண்ணீர் உள்ள குளம் நிறைந்திருக்கிறது போல.

பொ. ரை: உலகத்தார் விரும்பத் தகுந்த பெரிய அறிவாளியிடத்திலிருக்கிற செல்வம், குடி தண்ணீருக்காக வுள்ள குளத்தில் நீர் நிறைந்திருக்கிறது போலாம்.

வி-ம்: குடி தண்ணீருள்ள குளம் நீர் நிறைந்திருந்தாலும் அவரவர்கள் தேவைக்குத் தகுந்த அளவுக்குத்தான் தண்ணீர் எடுத்துக் கொள்வார்கள். அதிகமும் இல்லாமல் குறைவாகவும் இல்லாமல். உதாரணமாக வெறும் தாக விடாய் தீர்த்துக் கொள்ளுகிறவன் தாகந்தீரவேண்டியதற்குமேல் எடுக்க மாட்டான். கட்டமுது உண்ணக் குளக்கரையில் உட்காருகிறவன் ஒரு செம்பு ஜலத்துக்கு மேல் எடுக்க மாட்டான். அப்படியே வீடுகளுக்கும் விருந்துகளுக்கும் அவசியத்துக்குத் தகுந்தபடி எடுத்துக் கொள்வார்கள். அதுபோல் அறிவுடைய உபகாரியிடத்தில் எவ்வளவு செல்வம் நிறைந்திருந்தாலும் அவன் யாராருக்கு எவ்வளவு தேவை என்பதைத் தன் அறிவினால் அளந்துதான் கொடுப்பான்.

இவன் செல்வம் 'பேரறிவாளன் திரு'. இவன் அறிவினால் அளந்து தருகிறவன். இவனைக் காட்டிலும் சிறந்த கொடையாளி ஒருவன் உண்டு. அவன் எப்படியென்றால்:

216. பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ
நயனுடை யான்கட் படின்.

ப. ரை: செல்வம் நயன் உடையான் கண் படின் = செல்வம் அன்புடையவனிடம் இருந்தால், பயன் மரம் உள்ஊர் பழுத்த அற்று = இனிப்பான பழந்தரக்கூடிய மரம் நடு ஊருக்குள் பழம் நிறைந்திருப்பது போலாம்.

பொ. ரை: அன்பு மிகுந்தவனிடத்தில் செல்வம் இருந்தால், அது இனிப்பான பழந்தரக் கூடிய மரம் நடு ஊரில் பழுத்துக் குலுங்குவது போன்றது.

வி-ம்: நல்ல சுவையுள்ள பழம் தரக் கூடிய மரம் நடு ஊரில் பழுத்திருந்தால் நேர்ந்தவர்களெல்லாம் அதில் பழம் பறிப்பார்கள். சில பேர் ஏறிப் பறிப்பார்கள். சில பேர் கல்லாலும் கம்பாலும் அடித்துப் பறிப்பார்கள். யாரும் கிடைத்தது போதும் என்று போய்விட மாட்டார்கள். தம் தேவைக்கு மேலும் எட்டின மட்டும் கொண்டுபோகவே முயல்வார்கள். அத்துடன் பழத்துக்காக ஏறுகிறவர்களும் அடிக்கிறவர்களும் பழத்தை மட்டும் பறிக்கமாட்டார்கள்.

கொம்பை வளைத்து ஒடித்தாலும் ஒடித்து விடுவார்கள். பழத்தோடு காய்களையும் பிஞ்சுகளையும்கூட உதிர்த்து விடுவார்கள். இத்தனையும் பொறுத்துக் கொண்டிருக்கும் அந்த மரம். அது போல் உதவி பெற வருகிறவர்கள் அவர்களிஷ்டப்படி அடித்துக் கொண்டு போவதையும் பொறுத்துக் கொண்டிருப்பான் ஈரமுள்ள நெஞ்சத்தவனாகிய 'நயனுடையான்'.

முன்னே சொல்லப்பட்ட உபகாரி அறிவினால் அளந்து கொடுக்கும் 'பேரறிவாளன்'. இவன் அன்பினால் அளவற்றுக் கொடுக்கிற 'நயனுடையான்'. இவர்கள் இருவரையும் காட்டிலும் உயர்ந்த உபகாரி இன்னொருவன் உண்டு. அவன் எப்படியென்றால் :

217. மருந்தாகித் தப்பா மரத்தற்றாற் செல்வம்
பெருந்தகை யான்கட் படின்.

ப. ரை : பெருந்தகையான் கண் செல்வம் படின் = பெருந்தன்மை உள்ளவனிடத்தில் செல்வமிருந்தால், மருந்து ஆகி தப்பா மரத்து அற்று = மருந்துக்கு மூலிகையாக உதவி, தானும் மடிந்து போகிற மரத்தைப் போன்றது.

பொ. ரை : பெருந்தன்மை யுள்ளவனிடத்தில் செல்வமிருந்தால் அது மருந்து செய்வதற்கு உதவியாக இருந்து அதற்காகவே மடிந்து கூடப் போகிற மூலிகை மரத்தைப் போன்றது.

வி - ம் : ஒரு மூலிகை மரமானது மருந்துக்காக, அவரவர்கள் தேவைக்குத் தகுந்தபடி தன்னுடைய இலை, பூ, காய், பட்டை, வேர் முதலியவற்றைத் தனித் தனியாகவும் தந்து, கடைசியில் சமூலமாக வேண்டுகிறவர்களுக்குத் தன்னையே கொடுத்துத் தானும் மடிந்து போகிறது. அதுபோல பெருந் தகைமை உள்ள ஒப்புரவாளன் தன்னிடத்திலுள்ள பல பொருள்களையும் பிறருக்கு உதவி, கடைசியாகத் தன் உயிரையே கொடுத்து உதவி செய்வதற்கும் தயங்க மாட்டான். இவனுக்கு வேறு பெயர் சொல்ல முடியாமல் 'பெருந்தகையான்' எனப்பட்டது. முதலில் சொல்லப்பட்ட ஒப்புரவாளன் அறிவினால் அளந்து கொடுப்பவன், இரண்டாவது சொல்லப்பட்டவன் அன்பினால் அளவின்றிக் கொடுப்பவன், கடைசியாகச் சொல்லப்பட்டவன் அருள் குணத்தினால் எதையும் தந்து விடக்கூடிய தியாகி. இவர்கள் முறையே கடை வள்ளல், இடை வள்ளல், தலை வள்ளல் எனப்படுவர்.

மேலுள்ள மூன்று குறள்களிலும் 'செல்வம், இருந்தால்' என்று சொல்லப்படுவதால் செல்வம் இருந்தால்தான் ஒப்புரவு செய்ய முடியும் என்பது அல்ல. ஏன் எனில் :

218. இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்.

ப. ரை : கடன் அறி காட்சியவர் = கடமையை உணர்ந்த அறிவுடையவர்கள், இடன் இல் பருவத்தும் ஒப்புரவிற்கு ஒல்கார் = செல்வம் இல்லாத காலத்திலும் பிறருக்கு உபகாரம் செய்யப் பின்வாங்க மாட்டார்கள்.

பொ. ரை : கடமையை உணரும் அறிவுடையவர்கள் தம்மிடம் செல்வம் இல்லாத காலத்திலும் பிறருக்கு உபகாரம் செய்யத் தயங்க மாட்டார்கள்.

வி - ம் : ஒப்புரவு அறிந்தவர்கள் பிறருக்கு உதவி செய்வது தங்கள் கடமை என்பதை உணர்ந்தவர்கள். ஒருவருக்கு உதவி அவசியமான சமயத்தில் தம்மிடம் பொருளில்லாவிட்டாலும் வேறு வழிகளில் வேண்டிய முயற்சிகளைச் செய்வார்கள்.

அப்படி முயற்சி செய்தும் உதவி செய்ய முடியாமற் போகிற சமயத்தில்தான் :

219. நயனுடையா னல்கூர்ந்தா னாதல் செயுநீர
செய்யா தமைகலா வாறு.

ப. ரை : நயன் உடையான் நல் கூர்ந்தான் ஆதல் = (ஒப்புரவு செய்கிற) இரக்கமுள்ளவன் ஏழையாவது, செயும் நீர செய்யாது அமைகலா ஆறு = செய்ய வேண்டிய உதவியைச் செய்ய முடியாமல் வருத்தப்படும் நிலைமையில்தான்.

பொ. ரை : ஒப்புரவு அறிந்த இரக்கமுள்ளவன் தான் ஏழை என்று உணர்வது, செய்ய வேண்டிய உபகாரத்தைச் செய்ய முடியாமல் வருத்தப்படுகிற சமயத்தில்தான்.

வி - ம் : 'அமைகலா ஆறு' என்பதற்கு 'அமைதியில்லாத விதம்' என்பது பொருள். அமைதியில்லாது வருந்துகின்ற விதத்தில்தான் அவர்கள் ஏழை. அதனால் 'விதம்' என்ற பொருள் தருகிற 'ஆறு' என்பது இங்கே 'காலம்' என்ற பொருள் தருவது.

ஆகையினால் ஒப்புரவு செய்வதைக் கடமை என்று உணர்கின்றவன் தன்னிடத்தில் பொருளில்லையென்பதற்காகப் பின்வாங்கவும் மாட்டான், ஒப்புரவு செய்தால் இருக்கிற செல்வத்தை இழந்து கெட்டுப் போவேன் என்று அஞ்சவும் மாட்டான். பின் எப்படி எண்ணுவான் என்றால் :

220. ஒப்புரவி னால்வருங் கேடெனி னஃதொருவன்
விற்றுக்கோட் டக்க துடைத்து.

ப. ரை: ஒப்புரவினால் கேடு வரும் எனின் = உபகாரம் செய்வதனால் கெடுதி உண்டாகும் என்றால், அஃது ஒருவன் விற்றுகோள் தக்கது உடைத்து = அது ஒருவன் தன்னை விற்றாவது கொள்ளத் தகுந்த தன்மை உள்ளது.

பொ. ரை: பிறருக்கு உதவி செய்வதால் ஒருவனுக்குக் கேடு வரும் என்றாலும் அப்படிப் பட்ட கேட்டை அவன் தன்னை விற்றாயினும் விலை கொடுத்து வாங்கிக் கொள்ளத் தகுந்த தன்மை அதில் அடங்கியிருக்கிறது.

வி-ம்: 'தக்க துடைத்து' – தகுந்த தன்மை உள்ளது. தக்க தன்மை என்னவெனில் புண்ணியமும் புகழும் என்பன.

அதி. 23—ஈகை

['ஈகை' என்பது பொதுவாக ஏழைகளுக்குக் கொடுப்பதையும் சிறப்பாக இரப்பவர்களுக்குத் தானம் கொடுப்பதையும் குறிப்பது. ஈகை என்பது தானம்.]

221. வறியார்க்கொன் றீவதே யீகைமற் றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து.

ப. ரை: வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை = ஏழைகளுக்கு ஒன்றைக் கொடுப்பதுதான் ஈகை, மற்று எல்லாம் குறி எதிர்ப்பை நீரது உடைத்து = மற்றதெல்லாம் குறிப்பிட்ட ஒரு இலாபத்தை எதிர் பார்த்துக் கொடுக்கும் தன்மையுள்ளது.

பொ. ரை: எதைக் கொடுத்தாலும் ஏழைகளுக்குக் கொடுப்பது தான் தானம். மற்றதெல்லாம் பிரதிப்பிரயோசனத்தை எதிர் பார்த்துக் கொடுக்கும் தன்மையுள்ளது,

வி-ம்: எந்தவிதமான தன்னலத்தையும் எதிர் பாராமல், தம்மினும் ஏழைகளாக இருக்கிறவர்கள் வறுமையினால் துன்புறுகிறார்களே என்ற இரக்கத்தினால் கொடுப்பதே ஈகை. அது புண்ணியம் என்பதைக் கூடக் கருதுவதில்லை. அப்படியில்லாமல் கொடுப்பதெல்லாம் எதிர்ப்பயனைக் கருதியதே.

புண்ணியத்தைக் கூட எதிர் பாராமல் ஏழைகளுக்குக் கொடுப்பவர்கள் சொர்க்கம் கிடைப்பதானாலும் ஏழையிடமிருந்து வாங்கிக் கொள்ள மாட்டார்கள்:

222. நல்லா றெனினுங் கொளறீது மேலுலக
மில்லெனினு மீதலே நன்று.

ப. உரை: நல் ஆறு எனினும் கொளல் தீது = நல்ல வழிக்கு என்றாலும் (ஏழைகளிடமிருந்து) வாங்குவது தீங்கு. மேல் உலகம் இல் எனினும் ஈதலே நன்று = மேல் உலகம் கிடைக்காது என்றாலும் (ஏழைகளுக்குக்) கொடுப்பதே நல்லது.

பொ. உரை: நல்ல நோக்கத்தோடு செய்வதானாலும் ஏழைகளிடமிருந்து வாங்கிக் கொள்வது தீய காரியம். மோட்சலோகம் கிடைக்காது என்றாலும் ஏழைகளுக்குக் கொடுப்பதே நல்ல காரியம்.

வி-ம்: மேல் உலகம் கிடைப்பதற்காக வானாலும் ஏழையிடமிருந்து வாங்கிக் கொள்ளக் கூடாது. ஏழைக்குக் கொடுப்பதால் மேலுலகம் கிடைக்காமற் போய்விடும் என்றாலும் ஏழைகளுக்குக் கொடுப்பதே நல்லது. 'கொளல் தீது' என்பதிலுள்ள 'கொளல்' என்பதற்கு 'பிச்சை யெடுத்தல்' என்பது பொருளல்ல. 'விட்டுலகத்தைச் சேரப் பிச்சை யெடுப்பது நல்ல நெறி யென்று சொல்லுவாருளர்' என்பது சரியல்ல. பிச்சை கேட்பவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றித்தான் இங்கே பேச்சு. இரத்தல் கூடாது என்பதைச் சொல்லுவது இந்தஅதிகாரத்தின் நோக்கமல்ல. ஆதலால் 'கொளல்' என்பதற்குக் 'கொள்ளுதல்'—வாங்கிக்கொள்ளுதல்-என்பது மட்டுந்தான் இங்கே பொருள். அதனால் 'கொளல் தீது' என்பதற்கு 'யாரும் யாரிடத்திலிருந்தும் எதற்காகவும் வாங்கிக் கொள்வது தீது' என்று பொருள் செய்ய முடியாது. ஏன் எனில் எல்லாரும் ஒருவரிடத்திலிருந்து ஒருவர் வாங்கித்தான் உலகம் நடைபெற வேண்டும். ஆதலால் மேல் உலகத்தைக் கருதிச் செய்கிற காரியத்துக்கானாலும் ஏழைகளிடத்தில் 'கொளல் தீது' என்பதுதான் பொருள். மேலும் 'வறியார்க்கொன் றீவதே ஈகை' என்று ஈகைக்கு எல்லை கட்டி விட்டதால் இந்தக் குறளிலுள்ள ஈதலே நன்று என்பதற்கு வறியார்க்குக் கொடுப்பதே நன்று என்றும், 'கொளல் தீது' என்பதற்கு வறியாரிடம் கொளல் தீது என்றும்தான் பொருளாகும்.

வறியார்க்குக் கொடுப்பதும் எப்படிக் கொடுக்க வேண்டுமென்றால்:

223. இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுள.

ப. ரை: இலன் என்னும் எவ்வம் உரையாமை ஈதல் = 'என்னிடம் இல்லை' என்னும் துன்பந்தரும் சொல்லைச் சொல்லாதிருப்பதும் கொடுப்பதும், குலன் உடையான் கண்ணே உள = நல்ல இனமான மனிதனிடத்தில்தான் உண்டு.

பொ. ரை: 'இல்லை' என்ற துன்பந்தரும் சொல்லைச் சொல்லாதிருப்பதும் கூடியதை உடனே கொடுப்பதும் நல்ல இனத்தைச் சேர்ந்தவனிடத்தில்தான் உண்டு.

வி-ம்: வறியவர்கள் தங்கள் குறையிரந்து கேட்கும் போது அவர்களுடைய குறையைத் தீர்க்கத் தன்னிடத்தில் வசதியில்லாதிருந்தாலும் நல்லவர்கள் 'இல்லை' என்று சொல்லிவிட மாட்டார்கள். வசதியிருந்தால் உடனே கொடுப்பார்கள்.

இரப்பார்க்குக் கொடுக்க இயலாத காலத்தில் இல்லை என்றும் சொல்லிவிடாமல் இரக்கம் காட்டுவதோடும் நின்றுவிடாமல் எப்படியாவது இரப்பாரின் குறை தீர்க்க முயல்வார்கள்:

224. இன்னா திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவு.

ப. ரை: இரந்தவர் இன்முகம் காணும் அளவு இரக்கப்படுதல் இன்னாது = பிச்சை கேட்பவர்கள் (அவர்களுடைய குறை தீர்ந்து) மகிழ்கின்ற அவர்கள் முகத்தைப் பார்க்கிற வரையிலும் ஒருவன் வெறும் இரக்கம் காட்டுவது நல்லதல்ல.

பொ. ரை பிச்சை கேட்டவர்கள் திருப்தி யடைந்து அவர்களுடைய மகிழ்ந்த முகத்தைப் பார்க்கிற வரையிலும் (ஒருவன் அவர்களுக்கு) வெறும் அனுதாபப் பேச்சுகள் மட்டும் பேசுவது நல்லதல்ல.

வி-ம்: பிச்சை கேட்டவர்களுக்குக் கொடுக்க வேண்டும். கொடுக்கத் தன்னிடத்தில் வசதியில்லாவிட்டால் வேறு வழியில் அவர்கள் குறையைத் தீர்த்து சந்தோஷப்படுத்த முயல வேண்டும். அதை விட்டு வெறும் பச்சாத்தாபம் மட்டும் பேசுவதும் அவர்களுக்குத் துன்பம்தான்.

இரப்பவர்களுக்கு இல்லை யென்னாமலும், வெறும் இரக்கம் பேசி மட்டும் விட்டுவிடாமலும், அவர்களுடைய பசிப்பிணியைத் தீர்த்து வைப்பது துறவு பூண்டு, தவம் செய்வதைக் காட்டிலும் புண்ணிய முள்ளது:

225. ஆற்றுவா ராற்றல் பசியாற்ற லப்பசியை
மாற்றுவா ராற்றலிற் பின்.

ப. ரை : ஆற்றுவார் ஆற்றல் பசி ஆற்றல் = தவம் செய்கிறவர்களின் திறமை பசியைப் பொறுத்துக் கொள்வது. (அது கூட) அப் பசியை மாற்றுவார் ஆற்றலின் பின் = அந்தப் பசியை (அது அடைந்தவர்களிடத்தில் இல்லாது போகும்படி) மாற்றிவைக்கிறவர்களின் திறமைக்குப் பிற்பட்டது தான்.

பொ. ரை : தவம் செய்கிறவர்களின் சிறப்பு பசியைப் பொறுத்துக் கொள்ளும் திறமையில் அடங்கியது. அதுவும் கூட பிறர் பசியைத் தீர்த்து வைப்பவர்களின் திறமைக்குப் பிற்பட்டது தான்.

வி - ம் : தவம் செய்வதில் பசி, தாகம் முதலிய துன்பங்களை சகித்துக் கொள்வது தனக்கு மட்டுந்தான் நன்மை நாடுவதாகும். ஆனால் பிறர் பசியைத் தீர்த்து வைப்பது பிறருடைய நன்மையையும் நாடுவதாகிறது. ஆதலால் அதினும் இது சிறப்புடையது :

226. அற்றா ரழிபசி தீர்த்த லஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி.

ப. ரை : அற்றார் அழி பசி தீர்த்தல் = ஏழைகளுக்கு அழிவு செய்யக் கூடிய அவர்களுடைய பசியைத் தீர்த்து வைப்பது (நல்லது), அஃது ஒருவன் பெற்றான் பொருள் வைப்பு உழி = அது ஒருவன் தான் பெற்ற செல்வத்தைச் சேமித்து வைக்கும் இடம் (போன்றது).

பொ. ரை : ஏழைகளுக்கு அழிவு செய்யக் கூடிய அவர்கள் பசியைத் தீர்த்து வைப்பது ஒருவன் தான் பெற்ற செல்வத்தை ஒரு இடத்தில் சேர்த்து வைப்பதாகும்.

வி - ம் : ஏழைகளின் பசிப்பிணியைத் தீர்த்து வைப்பது பிற்காலத்துக்குக் கொடுத்து வைத்த புண்ணியமாக நமக்கு உதவும். 'அழிபசி' என்பது உடலுக்கும் உயிருக்கும் அழிவு செய்யாவிட்டாலும் மனிதப் பண்புகளை யெல்லாம் பசிக் கொடுமை அழித்துவிடக் கூடியது என்பதை உணர்த்துவது.

பிறருடைய பசியைத் தீர்ப்பவனுக்குப் பின்னால் வரக்கூடிய மற்ற புண்ணியங்கள் எப்படியானாலும் ஒன்று மட்டும் நிச்சயம். என்னவெனில் :

227. பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னுந்
தீப்பிணி தீண்ட லரிது.

ப. ரை : பாத்து ஊண் மரீஇ யவனை = பங்கு கொடுத்து உணவு கொண்டவனை. பசி என்னும் தீப்பிணி தீண்டல் அரிது = பசி என்னும் தீய துன்பம் தீண்டுவது இருக்காது.

பொ. ரை: பசித்து வந்த பிறருக்கும் பங்கு கொடுத்துப் பசி யாற்றி விட்டுப் பின் உண்கின்றவனைப் பசி என்னும் கொடிய துன்பம் தொடுதல் கூட முடியாது.

வி - ம் : பசியென்று வந்த யாருக்கும் தனக்குள்ளதில் ஒரு பகுதியைக் கொடுத்து, அவர்கள் பசியை ஆற்றிவிட்டுப் பிறகு தன் பசியை ஆற்றிக் கொள்கிறவனுக்கு எக்காலத்தி லும் பசிக் கொடுமை வராது. 'மரீஇயவனை' என்பது 'மருவி யவனை' என்பதின் விகாரம்.

ஏழைகளின் பசிப்பிணியைத் தீர்த்து அவர்கள் மகிழ்ச்சி யடைவதைப் பார்த்து ஒருவன் அடையக்கூடிய இன்பம் மிக உயர்ந்தது. அந்த இன்பத்தை அறியாதார் :

228. ஈத்துவக்கு மின்ப மறியார்கொ ருமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்.

ப. ரை : தாம் உடைமை வைத்து இழக்கும் வன்கண் அவர் = தாம் உடைய செல்வத்தை அப்படியே வைத்துவிட்டு உயி ரிழக்கும் கல் நெஞ்சத்தார், ஈத்து உவக்கும் இன்பம் அறி யார் கொல் = ஏழைகளுக்குக் கொடுத்து மகிழ்ச்சியடையும் இன்பத்தை அறிய மாட்டாதவர்களோ !

பொ. ரை : தம்முடைய செல்வத்தை அப்படியே வைத்துவிட்டு உயிரிழந்து போகிற இரக்கமற்றவர்கள் ஏழைகளுக்குக் கொடுத்து மகிழ்ச்சி பெறும் இன்பத்தை அறியாததனால் அப்படிச் செய்கிறார்களோ !

வி - ம் : 'ஈத்துவக்கும் இன்பம்' என்பது ஈகையைப் பெற்றுக் கொண்ட ஏழைகளின் உவகையும், அதைக் கண்டு ஈகையைக் கொடுத்தவன் அடையக்கூடிய உவகையும் சேர்ந்த இன்பம். 'ஈந்து' என்பது வலித்தது 'ஈத்து'.

செல்வமுடையவன்தான் ஏழைகளுக்குக் கொடுக்க வேண் டும் என்பது 'ஈகை' அல்ல. ஏழையும் கூட தன்னைக் காட்டி லும் ஏழையாக உள்ளவனுக்குக் கொடுக்க வேண்டும். அது மட்டுமல்ல; பிச்சைக்காரனும்கூட, தான் பிச்சையெடுத்த சோற்றில் கொஞ்சம் பிச்சை கிடைக்காத பிச்சைக்கார னுக்குக் கொடுக்க வேண்டும் :

229. இரத்தலி னின்னாது மன்ற நிரப்பிய
தாமே தமிய ருணல்.

ப. ரை: இரத்தலின், இன்னாது = பிச்சை யெடுப்பதிலும் இகழ்ச்சி தரக்கூடியது (எதுவென்றால்), மன்றம் நிரப்பிய தாமே தமியர் உணல் = நெடுந் தெருக்களில் பிச்சை வாங்கி நிரம்பக் கிடைத்த உணவை முழுவதும் தாமே தனியாக உண்ணுதல்.

பொ. ரை: பிச்சை எடுக்கிற இகழ்ச்சியான நிலைமையிலும் இன்னும் இகழ்ச்சியான நிலைமையைத் தரக்கூடியதுஎதுவென்றால், நெடுந் தெருக்களில் வீடு வீடாகப் பிச்சை யெடுத்து நிரம்பக் கிடைத்த உணவு முழுவதையும் தானே தனியாக உண்பது.

வி-ம்: தனக்கு வேண்டியதற்கு மேல் நிரம்பக் கிடைத்தும், பிச்சை கிடைக்காத இன்னொருவனுக்கு அதில் கொஞ்சம் கொடுக்க மனமில்லாமல், தானே அத்துணை உணவையும் தின்பது ஈகை என்னும் இரக்கமில்லாத்தன்மை. முன் ஈகை யில்லாத பாவத்தினால்தான் இவன் பிச்சை யெடுக்கும் இழி வான நிலைமைக்கு வந்தான். இங்கேயாவது சிறிது ஈகைக் குணம் இருந்தால் கடைத் தேறலாம். அது இல்லாமல் தானே தனியனாக அத்துணை உணவையும் உண்ண நினைப்ப தால் இப்போதுள்ள 'இரத்தலின் இன்னாத' நிலைமைதான் கிடைக்கும்.

பிச்சை யெடுப்பவனாக இருந்தாலும் ஈகைக் குணம் வேண் டும். அது இல்லாதவன் இருந்து பயனென்ன ?:

**230. சாதலி னின்னாத தில்லை யினிததூஉ
மீத லியையாக் கடை.**

ப. ரை: சாதலின் இன்னாதது இல்லை = சாவதைக் காட்டிலும் துன்பமானது வேறு இல்லை, அதூஉம் ஈதல் இயையாக் கடை இனிது = அது கூட ஈகைக் குணம் அமையாவிட்டால் இனியதே.

பொ. ரை: சாவைக் காட்டிலும் துன்பம் தரக்கூடிய நிகழ்ச்சி வேறொன்றும் இல்லை. ஈகைக் குணம் இல்லாதவனைப் பற்றிய அந்தச் சேதி கூட இன்பமுண்டாக்கும்.

வி-ம்: செத்துப்போன சேதியைக் கேட்டால் யாரும் துன்ப மடைவார்கள். ஆனால் ஈகைக் குணம் சிறிதும் இல்லாதவன் செத்துப் போனால் அதைக் கேட்டவர்கள் 'அவன் தொலைந் தது நல்லது' என்று இன்பந்தான் அடைவார்கள். தன்னைக் காட்டிலும் ஏழையாக இருந்து துன்பப்படுகிறவர்களுக்குக் கொடுத்துதவும் ஈகைக் குணம் இல்லாதவன் இருப்பதைவிட இறப்பதே மேல் என்று சொல்லுவார்கள்.

அதி. 24 — புகழ்

['புகழ்' என்பது எளியவர்களுக்கு 'ஈகை' முதலான பாராட்டத்தக்க செயல்களால் ஒருவனுக்கு உண்டாகும் கீர்த்தி. பாராட்டத்தகுந்த செயல்களையே செய்ய வேண்டும் என்பது இல்லற வாழ்க்கையின் நோக்கமாக இருக்க வேண்டும் என்பதனுல், இல்லறத்தான் போற்ற வேண்டிய அறங்களின் முடிவாக 'புகழ்' வைக்கப்பட்டிருக்கிறது. புகழைக் கருதிச் செய்யப்படும் காரியங்களெல்லாம் நல்ல காரியங்களாகவே இருக்குமாதலால் புகழ் விரும்பத் தக்கது.]

231. **ஈத லிசைபட வாழ்த லதுவல்ல**
தூதிய மில்லை யுயிர்க்கு.

ப. ரை : ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது உயிர்க்கு ஊதியம் இல்லை = ஏழைகளுக்குக் கொடுப்பது; புகழ் பெற்று வாழ்வது: அதைத் தவிர உயிருக்குப் பயன் இல்லை.

பொ. ரை : ஏழைகளுக்குத் தானம் கொடுப்பதையும் அதனுல் புகழப்பட்டு வாழ்வதையும் தவிர இந்தப் பிறவியினுல் அடையக் கூடிய பயன் வேறு எதுவும் இல்லை.

வி-ம் : எல்லா நல்ல செயல்களுக்கும் புகழ் உண்டு. என்றுலும் ஏழைகளுக்குக் கொடுப்பது மிகச் சிறந்த நல்ல காரியமாதலால் ஈதலை முதன்மையாகச் சொல்லப்பட்டது.

ஏழைகளுக்குத் தானம் கொடுப்பதைத்தான் உலகம் என்றென்றும் பாராட்டி வருகிறது :

232. **உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன்**
றீவார்மே னிற்கும் புகழ்.

ப. ரை : உரைப்பார் உரைப்பவை எல்லாம் = சொல்லுகின்றவர்கள் சொல்லுவதெல்லாம், இரப்பார்க்கு ஒன்று ஈவார் மேல் நிற்கும் புகழ் = பிச்சை கேட்டவர்களுக்கு அவர்கள் கேட்ட ஒன்றைக் கொடுப்பவர்கள் மேல் சொல்லப்படும் புகழ் தான்.

பொ. ரை : சொன்னவர்கள் சொன்னதெல்லாம் இரந்து கேட்டவர்களுக்கு இல்லை யென்னுமல் கொடுத்தவர்களைப் பற்றிய புகழ்தான்.

வி-ம் : சரித்திர மென்றும் புராணமென்றும் கதை யென்றும் சொன்னதும் எழுதினதும் பாடினதும் எல்லாம் பார்க்கப்

போலால், ஏழைகளுக்குக் கொடுத்தவர்களைப் பற்றிய புக ழாகத்தான் இருக்கிறது.

அப்படி ஏழைகளுக்கு எந்தக் காலத்திலோ உதவி செய்த வர்களின் கீர்த்தியெல்லாம் இந்தக் காலத்திலும் இருந்து வருகின்றன. ஆகையினால்:

233. ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற்
பொன்றாது நிற்பதொன் றில்.

ப. ரை: ஒன்றா உலகத்து = எதுவும் பொருந்தியிராத இந்த உலகத்தில், உயர்ந்த புகழ் அல்லால் பொன்றாது நிற்பது ஒன்று இல் = சிறந்த புகழ் அல்லாமல் அழியாமல் நிலைத் திருப்பது வேறொன்றும் இல்லை.

பொ. ரை: ஒரு பொருளும் நிலையில்லாத இந்த உலகத்தில் உயர்ந்த கீர்த்தியைத் தவிர அழியாமல் நிலைத்திருக்கக் கூடி யது வேறொன்றுமில்லை.

வி - ம்: 'ஒன்றா உலகம்' என்பதற்கு 'பொருந்தாத உலகம்' என்பது பொருள். அதாவது எந்தப் பொருளும் பொருந்தி நிலைக்காத உலகம். 'உயர்ந்த புகழல்லால் பொன்றாது நிற் பது ஒன்று இல்லை' என்றால் எவ்வளவுக் கெவ்வளவு புகழ் உயர்ந்ததாக இருக்கிறதோ அவ்வளவுக் கவ்வளவு நீண்ட காலம் அழியாது நிற்கும் என்பது கருத்து.

அப்படிப்பட்ட அழியாத புகழை அடைய முடிந்தால் மோட்ச வீட்டைப் பற்றிய பெருமையை நினைக்க வேண்டி யதேயில்லை:

234. நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தே ளுலகு.

ப. ரை: நில வரை நீள் புகழ் ஆற்றின் = நிலத்தில் உள்ளவரை யிலும் நீண்டகாலம் இருக்கக் கூடிய புகழ்தரும் செயல்களைச் செய்தால், புலம் வரை = அறிவு எட்டுகின்ற வரையில், புத் தேள் உலகு போற்றாது = தேவர் உலகத்தை விரும்பாது.

பொ. ரை: உலகத்தில் இருக்கிற வரையிலும் ஒருவன் நெடு நாளைக்குப் புகழ் நிலைத்திருக்கக் கூடிய நற் செய்கைகளைச் செய்வானாகில் அறிவு எட்டுகின்ற வரையில் அது தேவலோ கத்தைப் புகழ்ந்து விரும்பாது.

வி - ம்: அறிவு எட்டுகின்ற வரையிலும் சிந்தனை செய்துபார்த் தால் உலகத்தில் நீடிக்கக் கூடிய புகழ் தரும் காரியங்களைச்

செய்கின்றவன் வானுறையும் தெய்வ லோகத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. 'புலவரை' என்பது புலம் + வரை என்று பிரித்துப் பொருள் கொள்ள வேண்டியது.

உலகத்தில் நீடித்திருக்கக் கூடிய புகழ் சும்மா கிடைத்து விடாது. சாமர்த்தியத்துடன் நற்காரியங்களைச் செய்கிறவனுக்குத்தான் கிடைக்கும் :

235. நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும்
வித்தகர்க் கல்லா லரிது.

ப. ரை : நத்தம் போல் கேடும் = சங்கைப் போல (உயிர் அழிந்த பின்னும் உருவம் அழியாதிருக்கிற) அழிவும், உளதாகும் சாக்காடும் = (உயிரும் உடலும் மறைந்த பின்பும்) மறையாதிருக்கும் புகழ் தரக் கூடிய மரணமும், வித்தகர்க்கு அல்லால் அரிது = நல்லறிவு உள்ளவர்களுக்கு அல்லாமல் மற்றவர்களுக்குக் கிடைக்காது.

பொ. ரை : சங்கு போல் உயிர் போன பின்பும் உருவம் இருக்கக் கூடிய அழிவும், உயிரும் உடலும் போன பின்பும் உலகத்தில் பேசப்படும் புகழ் தரக் கூடிய மரணமும், நல்லறிவு உள்ளவர்களுக்கன்றி மற்றவர்களுக்குக் கிடைக்காது.

வி - ம் : வறியவர்க்குக் கொடுத்தல் தலை சிறந்த புகழ் தரக் கூடியது. ஆனால் வேறு நல்ல காரியங்களைச் செய்கிறவர்களுக்கும் புகழ் உண்டு. எந்தப் புகழும் திறமை உள்ளவர்களுக்குத் தான் கிடைக்கும். அந்தத் திறமைதான் 'வித்தகம்' என்றது.

எந்த விதத்திலாவது ஒரு வித்தக முள்ளவனுக்குப் புகழ் வரும். அவனைத்தான் மக்கள் மதிப்பார்கள். அந்த வித்தகம் என்னும் சாமர்த்தியப் புகழ் இல்லாதவன் :

236. தோன்றிற் புகழொடு தோன்றுக வஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று.

ப. ரை : தோன்றின் = (மக்களிடையில் முன்னால் வந்து) தோன்றினால், புகழொடு தோன்றுக = (சாமர்த்தியப்) புகழொடு தோன்றுக. அஃது இலார் தோன்றலின் தோன்றாமை நன்று = அந்த (வித்தகப் புகழ்) இல்லாதவர்கள் (மக்களுக்கிடையில்) முன் வருவதைக் காட்டிலும் மறைவாக இருந்து விடுவதே நல்லது.

பொ. ரை: (ஒரு காரியத்துக்கு) பல பேருக்கிடையில் முன்னால் வந்தால் ஏதாவது ஒரு சாமர்த்தியப் புகழுள்ளவன் வர வேண்டும். அந்தச் சாமர்த்தியப் புகழ் இல்லாதவன் முன்னால் வருவதைவிட மறைந்திருப்பதே நல்லது.

வி-ம்: ஒரு காரியத்துக்கு 'நான்' என்று தலையிடுகிறவன் அந்தக் காரியத்துக்கு வேண்டிய சாமர்த்தியம் இருந்தால் முன் வந்து தோன்றவேண்டும். இல்லாவிட்டால் மறைவாகவே இருந்துவிட வேண்டும். ஏனெனில் அந்தக் காரியத்துக்கு வேண்டிய அளவுக்காவது வித்தகமுள்ளவனுக்குத்தான் பிறர் மதிக்கத் தகுந்த புகழுண்டு. இந்தக் குறளுக்கு 'மக்களாகப் பிறந்தால் புகழுக்கு ஏதுவாகிய குணத்தோடு பிறக்க வேண்டும். அக்குணமில்லாதார் மக்களாய்ப் பிறத்தலின் விலங்காய்ப் பிறத்தல் நன்று' என்று பொருள் செய்வது முற்றிலும் பயனற்றது. மேலும் புகழுக்கு வேண்டிய குணத்துடனே மக்களாகவோ விலங்காகவோ பிறப்பது நம்முடைய விருப்பத்தைப் பொறுத்ததல்ல. ஆதலால் 'தோன்றில்' என்பதற்கு 'முன் வந்தால்' அல்லது 'பிரவேசித்தால்' அல்லது 'தலையிட்டால்' என்பதுதான் பொருள்.

ஆதலால் 'நான்' என்று ஒரு காரியத்துக்காக முன்னால் வந்து தோன்றுகின்றவன் அந்தக் காரியத்தில் புகழ் பெற்றவனாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இகழப்படுவான்:

237. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவ தெவன்.

ப. ரை: புகழ்பட வாழாதார் = தமக்கு ஒரு புகழ் வரும்படி வாழத் தெரியாதவர்கள், தம் நோவார் தம்மை இகழ்வாரை நோவது எவன் = தங்களையே நொந்துகொள்ளாமல் தம்மை இகழ்வாரை நொந்து கொள்வது எதற்காக?

பொ. ரை: புகழ் அடையும்படி நடந்து கொள்ளாதவர்கள் தங்களைத் தாங்களே நொந்துகொள்ள வேண்டுமேயன்றித் தம்மை இகழ்வாரை நொந்து கொள்வது எதற்காக?

வி-ம்: முன் குறளில் சொன்னபடி வித்தகப் புகழில்லாமல் ஒரு காரியத்துக்கு முன் வருகிறவனை இகழத்தான் செய்வார்கள். அதற்காக அவன் பிறரை நொந்துகொள்வதில் என்ன பயன்?

ஆதலால் ஒவ்வொரு மனிதனும் ஏதாவது ஒரு விதத்தில் மெச்சத் தகுந்தவன் என்ற புகழ் பெற முயல வேண்டும்:

**238. வசையென்ப வையத்தார்க் கெல்லா மிசையென்னு
மெச்சம் பெறாஅ விடின்.**

ப. ரை: இசை என்னும் எச்சம் பெறாஅ விடின் = புகழ் என்ற மிச்சம் பெறாவிட்டால், வையத்தார்க்கு எல்லாம் வசை என்ப = உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் அது குற்றம் என்று உணரவேண்டும்.

பொ. ரை: புகழ் என்ற மிச்சத்தை சம்பாதிக்க முயலாவிட்டால் உலகத்தில் ஒவ்வொரு மனிதனுக்கும் அது குற்றமாகும் என்பதை உணர வேண்டும்.

வி-ம்: ஒவ்வொரு மனிதனும் எந்த ஒரு நல்ல காரியத்திலாவது மெச்சத் தகுந்தவன் என்ற பெயரெடுக்க முயல வேண்டும். அப்படி முயலாதிருப்பது குற்றமாகும்...எச்சம் என்பது அவனுக்குப் பின் நிற்கிற அவனைப்பற்றிய மிச்சம். அது அவன் இறந்து போன பிறகு தான் என்பதல்ல. அவன் வந்து போன இடத்திலும் அவன் இல்லாத பொழுது அவனைப் பற்றிப் பேசும்படி அங்கே விட்டுப் போகிற மிச்சமும் ஆகும்.

இப்படி எந்த விதத்திலாவது ஒரு கீர்த்தி பெற வேண்டுமென்ற முயற்சியோடு வாழ்க்கை நடத்துகின்ற மக்கள் மிகுந்த நாடு செழிப்படையும். இல்லாவிட்டால்:

**239. வசையிலா வண்பயன் குன்று மிசையிலா
யாக்கை பொறுத்த நிலம்.**

ப. ரை: இசை இலா யாக்கை பொறுத்த நிலம் = புகழ் இல்லாத சரீரங்களைச் சுமந்து கொண்டிருக்கிற நிலப்பகுதி, வசை இலா வண் பயன் குன்றும் = குற்றமில்லாத வளங்களின் பயனாகிய பொருள்களில் குறைந்து போகும்.

பொ. ரை: புகழ் வேண்டுமென்ற உணர்ச்சியில்லாத வெறும் உடல்களான மக்கள் மிகுந்துள்ள ஒரு நாட்டில் குற்றமற்ற செல்வ வளமும் அதன் பயனும் குறையும்.

வி-ம்: 'வசையிலா வண் பயன்' என்பது குற்றமான வழிகளில் அடையாத செல்வமும் அதன் பயன்களும் ஆகும். கீர்த்தியை விரும்பாமலும் அபகீர்த்திக்கு அஞ்சாமலும் இருக்கக் கூடிய மக்கள் உள்ள நாட்டிலும் செல்வமும் வளமும் இருக்க முடியும். ஆனால் அவை வசை மிகுந்த வழிகளில் வந்த செல்வமாகத்தா னிருக்க முடியும். 'யாக்கை' என்பது நாட்டுக்குச் சுமையான பயனற்ற வெறும் உடல் என்பதற்

காக. 'நிலம்' என்பதற்கு இங்கே வெறும் நிலம் என்றோ அல்லது உலகம் என்றோ பொருள் அல்ல. நிலப் பகுதியான நாடு என்பது பொருள்.

ஆதலால் ஒவ்வொருவரும் புகழைத் தேடவேண்டும். தேடிய புகழைக் காக்க வேண்டும் :

240. வசையொழிய வாழ்வாரே வாழ்வா ரிசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

ப. ரை : வசை ஒழிய வாழ்வாரே வாழ்வார் = (புகழ் தேடாத) குற்றம் நீங்கும்படி வாழ்கின்றவர்கள்தாம் வாழ்க்கை அறிந்தவர்கள். இசை ஒழிய வாழ்வாரே வாழாதவர் = வந்த புகழ் நீங்கி விடும்படி வாழ்கின்றவர்கள்தாம் வாழ்க்கை அறியாதவர்கள்.

பொ. ரை : புகழ் தேடாத குற்றம் ஒழியும்படி முயற்சி செய்கிறவர்களே வாழ்க்கை அறிந்தவர்கள். உள்ள புகழ் ஒழியும்படி அபகீர்த்தி வரக் கூடிய காரியங்களைச் செய்கிறவர்களே வாழத் தெரியாதவர்கள்.

வி - ம் : 'வசை என்ப வையத்தார்க் கெல்லாம் இசை என்னும் எச்சம் பெறுஅவிடின்' என்று சொல்லப்பட்ட 'வசை ஒழிய' வாழ்வாரே வாழ்வார். 'ஒழிய' என்பதற்கு 'ஒழிந்து போகும் படி' என்பது பொருள். புகழ் பெறாத வசை நீங்கும்படி புகழ் தேட வேண்டும். உள்ள புகழ் நீங்கிவிடாதபடி காத்துக் கொள்ள வேண்டும்.

இல்லறவியல் முற்றிற்று.

3. துறவறவியல்

துறவு அறம் இயல் – துறவு அறத்தின் இயல்பு. துறவறம் என்பது ஒருவன் வீடு – வாசல், மனைவி – மக்கள், உற்றார் – உறவினர், சொத்து – சுகம், என்ற பற்றுகளையெல்லாம் நீக்கித் தன்னுடைய முழு நேரத்தையும் முழுமனதுடன் இறைவனை நாடுவதில் ஈடுபடுத்துவது. முழுமனமும் ஒருவழிப்பட்டு நிற்பதற்காக ஐம்புல ஆசைகளை நீக்க வேண்டும். அது கைகூடுவதற்கு இந்திரியங்களை ஒடுக்க வேண்டும். அதற்காக உடலை வசப்படுத்த உணவாதிகளைக் குறைத்துப் பல விரதங்களைக் காக்க வேண்டும். உடலும் மனமும் வசப்பட்டபின் ஆன்ம உணர்ச்சி அதிகப்பட்டு இறைவனை நாடுவது எளிதாகும். அதன் பிறகு மெய்யறிவு கைகூடும் என்பது. இதன் நோக்கம் வீடு பெறுவது. அது பிறப்பறுத்தல், பேரின்பம், முக்தி, மோட்சம் எனப் பல பெயர்களால் குறிக்கப்படும். இந்த நெறிதான் துறவறம்.

இந்தத் துறவறத்தை, இல்லறத்தில் வழுவாது ஒழுகி அறிவுடையவர்கள் ஆனபிறகுதான் மேற்கொள்ள வேண்டுமென்பது இல்லை. திருவள்ளுவர் சொல்லுகின்ற துறவறம் இல்லறத்தின் பிற்பகுதியான வாழ்க்கை அல்ல. இல்லறத்தைச் சரியாக நடத்தினால் வீடு பெறுவதற்கும் துறவறம் வேண்டியதில்லையென்பதே வள்ளுவரின் வாக்கு.

மறுமையில் நல்லகதி கிடைக்க வேண்டுமென்று இம்மையில் மக்கள் செய்ய வேண்டிய முயற்சிகளில் இல்லறம் துறவறம் என்ற இரண்டு வழிகள் உண்டு. அவற்றுள் பெரும்பான்மையான மக்கள் மேற்கொள்ளக் கூடியது இல்லறமே என்பதனால் இல்லறத்தை முதலிற் சொல்லி, சிறுபான்மையோரே மேற்கொள்ளக்கூடிய துறவறம் அதன்பின் வைக்கப்பட்டுள்ளது.

இல்லறத்தை முடித்துக் கொண்டுதான் துறவறத்துக்குப் போகவேண்டும் என்றோ அல்லது போகமுடியும் என்றோ சொல்லுவதும் சரியல்ல. இல்லறத்தை முடித்துக் கொண்டும் துறவறத்துக்குப் போகலாம்; இல்லறத்தை இடையில் விட்டு விட்டும் போகலாம். இல்லறத்தில் ஒரு சிறிதும் ஈடுபடாமலும் போகலாம்.

நிற்க, திருக்குறளில் துறவறத்துக்குச் சொல்லப்பட்டுள்ள நீதிகளில் வெகு சில தவிர, மற்றெல்லாம் இல்லறத்தானுக்காகவும் சொல்லப்பட்டன. துறவறத்தானுக்கு அவை கட்டாயமான விதிகள். இல்லறத்தானுக்கு அவை அவசியமான அறிவுகள். இல்லறத்தானுக்குச் சொல்லப்பட்ட பொறுப்புகள் துறவறத்தானுக்கு இல்லை. ஆனால் துறவறத்தானுக்குச் சொல்லப்படுகின்ற விரதகுணமும் ஞானமும் இல்லறத்தானுக்கும் இருத்தல் நல்லது. விரதங்களைக் கவனிக்காவிட்டாலும் ஞானத்தை இல்லறத்தானும் அறிய வேண்டும். (துறவறத்துக்குச் சொல்லப்பட்டுள்ள குறள்களிலுள்ள சொல்லாட்சி (பதப்பிரயோகம்) மிகவும் வியக்கத்தக்கது. படிக்கும்போதே அவைகள் துறவறத்தானுக்கு மட்டும் சொல்லப்பட்டன அல்லவென்பது தெரியும்.)

துறவறத்தாருக்கு, வெவ்வேறு மதங்கள் வெவ்வேறு பழக்க வழக்க சடங்குகளையும் சாதனைகளையும் சொல்லுகின்றன. விவாதத்துக்கு இடமுள்ள சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் நீக்கி, எல்லா மதத்தாருக்கும் பொதுவான துறவு மனப் பண்புகளை மட்டுந்தான் திருக்குறள் போதிக்கின்றது; அந்த மனப் பண்புகள் எல்லா மக்களுக்கும் நன்மை பயக்கத்தக்கன.

துறவறத்துக்கு அவைகள் கட்டாயமான விதிகள். அவை விரதம் என்றும் ஞானம் என்றும் இரண்டு பகுதிகளாகச் சொல்லப்படுகின்றன.

விரதம்

விரதம் என்பது ஐம்புல ஆசைகளையும் அடக்குவதற்காக உணவுகளை மட்டுப்படுத்தி எண்ணங்களைக் கட்டுப்படுத்துவது.

அதி. 25—அருளுடைமை

[அருளுடைமை என்பது எல்லா உயிர்களிடத்திலும் கருணையோடு நடந்து கொள்வது. 'அருள்' என்பது 'அன்பு' என்பதன் முதிர்ச்சி. இல்லறத்தான் மனைவி, மக்கள், உற்றார். உறவினர்களிடத்தில் காட்டுகிற பரிவுக்கு 'அன்பு' என்று பெயர். அதே பரிவை எல்லா மனிதர்களுக்கும் மற்றெல்லா உயிருள்ள பிராணிகளுக்கும் காட்டுகின்ற போது அது 'அருள்' எனப்படும். அன்பு விரிந்து அருளாகின்றது. இல்லறத்தான் அன்புமட்டும் செய்தாலே போதும். ஆனால் துறவறத்துக்கு ஆரம்பமே அருள்தான். இல்லறத்தான் அருளுடையவனாக இருந்தால் மிகவும் மேன்மைதான். ஆனால் துறவறத்தான் அருள் இல்லாதவனாக இருந்தால் அவன் துறவறத்துக்குத் தகுதியற்றவன்.]

241. அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள.

ப. ரை: செல்வத்துள் செல்வம் அருள் செல்வம் = செல்வங்களுக்கெல்லாம் சிறந்த செல்வம் கருணையுள்ள குணம் என்ற செல்வம், பொருள் செல்வம் பூரியார் கண்ணும் உள = பணச் செல்வங்கள் கீழ்த்தரமான மனிதர்களிடத்திற் கூட இருக்கின்றன.

பொ. ரை: உடைமைகளில் எல்லாம் சிறந்த உடைமை அருளுடைமை. வெறும் பணம் உடைமை தீயவர்களிடத்திற் கூட உண்டு.

வி-ம்: பணச் செல்வத்தை யாரும் எந்த வழியிலாவது சம்பாதித்துவிட முடியும். ஆனால் கருணை என்கிற குணச் செல்வத்தை எல்லாரும் எந்த வழியிலாவது சம்பாதித்துவிட முடியாது. நல்ல எண்ண முள்ளவர்கள்தாம் அதைச் சம்பாதிக்க முடியும். அவர்களும் அருள்நெறி என்ற ஒரே ஒரு வழியில்தான் அதைச் சம்பாதிக்க முடியும். ஆதலால் 'அருட் செல்வம் செல்வத்துட் செல்வம்'.

அந்த அருள் நெறியில் நிற்கும் கருணை வாழ்வுதான் துறவறம். அதை நன்றாக ஆராய்ந்து கடைப்பிடிக்க வேண்டும்:

**242. நல்லாற்ரு னாடி யருளாள்க பல்லாற்ருற்
றேரினு மஃதே துணை.**

ப. ரை: நல் ஆற்ருன் நாடி அருள் ஆள்க = நல்ல முறையில் ஆராய்ந்து பார்த்துக் கருணையை மேற்கொள்ள வேண்டும்; பல் ஆற்ருல் தேரினும் அஃதே துணை = பல வழிகளிலும் ஆராய்ந்து பார்த்தாலும் அதுதான் துணையாக நிற்கது.

பொ. ரை: நன்ருக ஆராய்ந்து பார்த்துக் கருணை வாழ்வைக் கடைப்பிடிக்க வேண்டும். பல வழிகளை ஆராய்ந்து பார்த்தாலும் கருணை வாழ்க்கைதான் துணையாகக் கூடியது என்பது தெரியவரும்.

வி-ம்: பேரின்பத்தை அடைவதற்கென்று பல மார்க்கங்கள் சொல்லப்படுகின்றன. அவைகள் அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தால் இந்த 'அருளாள்வது' தான் முக்கியம் என்பது தெரியவரும். 'நல்லாற்ருல் நாடி' என்பதற்கு நல்ல முறையில், குறுகிய மனப்பான்மை யில்லாமல், பரந்த நோக்கத்துடன் பலவிதத்திலும் (பல்லாற்ருன்) ஆராய்வது என்பது. 'பல்லாற்ருன்' என்பது 'பல சமய நூல்களாலும்' 'பல் அறிஞர்கள் சொல்லுகின்ற உரைகளாலும்' என்ற பொருள் தருவது.

அருள் வாழ்க்கையை மேற்கொண்டால்தான் அருள் வடிவமான ஆண்டவனை அறிய முடியும். அருள் நெறியான துறவறத்தை மேற்கொண்டபின் உலகியல் விவகாரங்களில் தலையிடக் கூடாது:

**243. அருள்சேர்ந்த நெஞ்சினுர்க் கில்லை யிருள்சேர்ந்த
வின்ன வுலகம் புகல்.**

ப. ரை: அருள் சேர்ந்த நெஞ்சினுர்க்கு = அருள் நெறியை மேற்கொண்ட மனத்தவரான (துறவிகளுக்கு). இருள் சேர்ந்த இன்ன உலகம் புகல் இல்லை = அறியாமை சேர்ந்த துன்பங்களுள்ள உலகியல் செயல்களில் ஈடுபடுவது இல்லை.

பொ. ரை: அருள் நெறியை மேற்கொண்ட மனமுள்ள துறவிகளுக்கு அறியாமை சேர்ந்த துன்பங்கள் உள்ள உலகியல்களில் ஈடுபட வேண்டிய வேலை இல்லை.

வி-ம்: துறவு நிலைக்கு முதல் விரதம் அருள் வாழ்க்கை. அருள் வாழ்க்கையை மேற்கொண்ட துறவி, துன்பங்கள் மிக்க உலக நடை விவகாரங்களிலிருந்து விலகி விட்டவன். அவன் மீண்டும் அதில் இறங்கிவிடக் கூடாது. அவனுக்கு 'இருள்

சேர்ந்த இன்னா உலகம்' இல்லை. அவன் இந்த உலகத்தை அருள் சேர்ந்த நோக்குடன் அனுபவித்து உலக துன்பங்களுக்குச் சம்பந்தப்படாத செயல்களைத்தான் செய்வான். 'இன்னா உலகம்' என்பது நரகம் அல்ல. ஏனெனில் மனதில் அருள் சேர்ந்த உடனேயே நரகமின்மை சித்தித்து விடாது. அருள் சேர்ந்த மனமுடையவன் ஆவது துறவறத்தின் முதற்படிதான். அந்த அருள் மனத்தோடு இன்னும் கடக்க வேண்டிய படிகளைக் கடந்து, காக்க வேண்டிய விரதங்களைக் காத்து, ஞானமும் பெற்ற பிறகுதான் நரகமின்மையும் விடு உண்மையும் எண்ணத்தக்கன.

அருள் வழியில் நின்று கருணையே செய்கின்றவர்கள் துன்பம் விளைவிக்கக் கூடிய எதிலும் ஈடுபடமாட்டார்கள் என்பதனால் :

244. மன்னுயி ரோம்பி யருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயி ரஞ்சும் வினை.

ப. ரை : மன் உயிர் ஓம்பி அருள் ஆள்வார்க்கு = உலகிலுள்ள பிற உயிர்களைப் பாதுகாத்துக் கருணையே புரிகின்றவர்களுக்கு, தன் உயிர் அஞ்சும் வினை இல் என்ப = தன் உயிருக்காக அஞ்ச வேண்டிய வேலையே இல்லை எனப்படும்.

பொ. ரை : உலகத்தில் இருந்து வருகிற மற்ற உயிர்களையெல்லாம் தன்னுயிர் போலக் கருதி கருணைபுரிகிறவனுக்குத் தன்னுடைய உயிரைப்பற்றிப் பயப்படவேண்டிய காரணமே இருக்காது.

வி - ம் : பிற உயிர்களைத் தன்னுயிர் போலக் கருதி நடக்கிறவன் தன்னுயிரைப் பற்றிக் கவலைப்படவே வேண்டியதில்லை. அவனாகவும் கவலைப்பட மாட்டான். மற்றவர்களும் அவனைப் பாதுகாப்பார்கள்.

எதிர்பாராதபடி ஒரு தீமை வந்துவிட்டாலும் அதற்காக அருள் நெறியில் நிற்பவன் துன்பப்பட மாட்டான்:

245. அல்ல லருளாள்வார்க் கில்லை வளிவழங்கு
மல்லன்மா ஞாலங் கரி.

ப. ரை : அருள் ஆள்வார்க்கு அல்லல் இல்லை = அருள் நெறியை மேற்கொண்டு நடப்பவர்களுக்குத் துன்பம் என்பது இல்லை, வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் கரி = காற்று உலவுகின்ற வளப்பமுள்ள பெரிய உலகம் சான்று.

பொ. ரை : கருணையுள்ள காரியங்களையே செய்கின்றவர்களுக்குத் துன்பம் என்பது இல்லை. காற்று உலவுகின்ற வளமுள்ள இந்தப் பெரிய உலகம் அதற்குச் சாட்சி.

வி - ம் : ஜீவகாருண்யமே அறமாக உள்ளவர்கள் துன்பம் அடைவதேயில்லை. யாரும் அவர்களுக்குத் துன்பம் செய்ய மாட்டார்கள். அவர்களை மற்றவர்கள் துன்பம்வராமல் பாதுகாப்பார்கள். அதுமட்டுமல்ல; யாராவது அவர்களுக்குத் தீங்கு செய்து விட்டாலும்கூட அவர்கள் மனதில் துன்பம் அடையவே மாட்டார்கள். துறவிக்குத் துன்ப உணர்ச்சி வரக்கூடாது என்ற எச்சரிக்கையும் இதில் அடங்கியுள்ளது. 'வளி வழங்கும் மல்லல் மா ஞாலம் கரி' என்றதன் கருத்து என்னவெனில் : காற்றானது ஒரு கண நேரங்கூட ஓரிடத்தில் தங்காமல் உலகத்தைச் சுற்றிச் சுற்றிவந்து கொண்டே இருக்கிறது. அந்தக் காற்று அடிக்கடி சுற்றிப்பார்க்கிற எந்த நாட்டிலும் ஜீவகாருண்யத்தில் சிறந்த துறவிகள் துன்பப்பட்டதாகத் தெரியவில்லை என்றும் கற்பனை. 'மல்லல்' என்பது வளப்பம். வளப்பமுள்ள இடங்களில்தான் மனித சமூகம் இருக்கும். அங்கேதான் சாட்சியம் காணலாம் என்பதற்காகப் போலும்.

துறவறத்தை மேற்கொண்டும் அருளற்ற காரியங்களைச் செய்கிறவர்கள் உண்டு. அவர்கள் அருளை மறந்து விட்டவர்கள் :

246. பொருணீங்கிப் பொச்சாந்தா ரென்ப ரருணீங்கி
அல்லவை செய்தொழுகு வார்.

ப. ரை : அருள் நீங்கி அல்லவை செய்து ஒழுகுவார் = அருளை விட்டு விட்டு அருளல்லாத செயல்களைச் செய்துகொண்டிருக்கிறவர்கள், பொருள் நீங்கி பொச்சாந்தார் என்ப = பொருளை வைத்து விட்டு வைத்த இடம் மறந்து விட்டவர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

பொ. ரை : கருணை வாழ்க்கையை விட்டு அதற்கு மாறான செயல்களைச் செய்துகொண்டிருக்கும் துறவிகள், செல்வத்தை வைத்த இடம் மறந்துபோய்த் தடுமாறுகின்றவர்களுக்குச் சமானமாவார்கள்.

வி - ம் : துறவறத்தின் நோக்கமான இடத்தைச் சேருவதற்கு வழிச் செலவுக்கு வேண்டிய பொருள் அருள் குணம். அதை விட்டு விட்டு அந்த அருள் நெறிக்கு மாறான செயல்களில் துறவி இறங்குவானாகில் அது வாழ்க்கையின் இன்பங்களை அடைவதற்காக வைத்திருந்த செல்வத்தை வைத்த இடம்

மறந்து விட்டுத் தடுமாற்றமான காரியங்களைச் செய்வதைப் போன்றது. செல்வத்தை வைத்த இடம் மறந்துவிட்டுத் தடு மாறுகின்றவன் பல தவறுகளைச் செய்துவிடக் கூடும். அதைப் போல அருளை மறந்து விட்ட துறவி பல அருளற்ற காரியங் களைச் செய்து துறவு நிலையைக் கெடுத்துக் கொண்டவனாகி விடக் கூடும்.

அதனால் துறவறம் மேற்கொண்டதன் பயனை இழந்து விடு வான் :

247. அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லாகி யாங்கு.

ப. ரை : பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி ஆங்கு = செல்வம் இல்லாதவர்களுக்கு இந்த உலகம் இல்லாதது போல, அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை = அருள் இல் லாதவர்களுக்கு விட்டுலகம் இல்லையாகும்.

பொ. ரை : செல்வம் இல்லாதவர்கள் இந்த உலகத்தில் வாழ்க்கை நடத்த முடியாது. அது போல அருள் இல்லாத வர்கள் மோட்சலோகத்தின் வாழ்வு பெற முடியாது.

வி - ம் : இவ்வுலகத்துக்குச் செலாவணி நாணயம் பொருள். பேரின்ப உலகத்துக்குச் செலாவணி நாணயம் அருள். ஆத லால் அருளில்லாதவர்கள் பேரின்ப உலகத்தை அடைய முடியாது.

பொருளை இழந்துவிட்டாலும் அருளை இழந்துவிடக் கூடாது. ஏனெனில் :

248. பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
ரற்றார்மற் றாத லரிது.

ப. ரை : பொருள் அற்றார் ஒருகால் பூப்பர் = செல்வத்தை இழந்து விட்டவர்கள் மீண்டும் ஒரு காலத்தில் அதை அடைந்து செழிப்படைவார்கள்; அருள் அற்றார் அற்றார் மற்று ஆதல் அரிது = (ஆனால்) அருள் குணத்தை இழந்த வர்கள் இழந்தவர்களே; மீண்டும் அருளுடையராவது முடி யாது.

பொ. ரை : செல்வத்தை இழந்துவிட்டவர்கள் மறுபடியும் ஒரு காலத்தில் செல்வத்தைப் பெற்றுச் செழிக்க முடியும்; ஆனால் அருள் குணத்தை இழந்து விட்டவர்கள் மறுபடியும் அதை அடைவது முடியாது.

வி-ம்: பொருள் என்பது புறச் செல்வம், தன்னிடத்தில் அற்றுப்போனாலும் பிறரிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளக் கூடியது. அருள் அப்படிப்பட்டதல்ல. அது ஒருவனுடைய மனதில் கலந்துள்ள அகச் செல்வம். அவனுடைய நெஞ்சில் அருள் இல்லாது போனால் பிறருடைய நெஞ்சைப் புகுத்தி விட முடியாது.

ஆதலால் அருள் குணம் இல்லாதவன் துறவறம் மேற் கொள்ளுவது பயனற்றது:

**249. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றாற்றேறி
னருளாதான் செய்யு மறம்.**

ப. ரை: அருளாதான் செய்யும் அறம் தேறின் = அருள் குணம் இல்லாதவன் செய்கின்ற துறவறம் பலித்தால், தெருளாதான் மெய்ப் பொருள் கண்ட அற்று = தெளிந்த அறிவில்லாதவன் மெய்யான பொருளாகிய இறைவனைக் கண்டுவிட்டது போலத்தான்.

பொ. ரை: ஜீவகாருண்யம் இல்லாதவன் நடத்துகின்ற துறவறம் பலிப்பது தெளிந்த ஞானமில்லாதவன் கடவுளைக் கண்டுவிட முடியும் என்பது போன்றதுதான். இரண்டும் முடியாத காரியங்கள்.

வி-ம்: ஞானமில்லாதவன் மெய்ப் பொருளைக் காண முடியாது; ஞானமோ அருளில்லாதவனுக்கு வராது. ஆதலால் அருளில்லாதவன் செய்யும் துறவறம் அத்துறவறத்தின் நோக்கமாகிய மெய்ப்பொருளை அடைய உதவாது.

அருள் என்பது என்னவெனில்:

**250. வலியார்முற் றன்னை நினைக்கதான் றன்னின்
மெலியார்மேற் செல்லு மிடத்து.**

ப. ரை: தான் தன்னின் மெலியார்மேல் செல்லும் இடத்து = ஒருவன் தன்னைக் காட்டிலும் வலிமை குறைந்தவனைத் துன்புறுத்தப் போகும் போது, (தன்னின்) வலியார் முன் தன்னை நினைக்க = தன்னைக் காட்டிலும் வலிமையுள்ளவர்கள் தன்னைத் துன்புறுத்த வரும்போது அவர்களுக்கு முன்னால் தன்னுடைய நிலைமை எப்படியிருக்கும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பொ. ரை: ஒருவன் தன்னைக் காட்டிலும் குறைந்த பலமுள்ளவனுக்குத் துன்பம் செய்யப் போகும்போது, தன்னைக் காட்

டினும் மிகுந்த பலமுள்ளவர்கள் தனக்குத் துன்பம் செய்ய வந்தால் அவர்களுக்கு முன்னால் தன் நிலைமை எப்படியிருக்குமோ அதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

வி-ம் : அப்படி நினைத்துப் பார்த்தால் அருளுடைமை என்பது எளிதில் விளங்கும்.

அதி. 26—புலான்மறுத்தல்

[புலால் மறுத்தல் = ஊன் உண்பதை விலக்கல். பிற உயிரைக் கொன்று அதன் உடலை உண்பது அருள் நெறிக்குச் சிறிதும் பொருந்தாது. அருளைக் கருதுகிறவர்கள் புலால் உண்ணக் கூடாது. துறவறத்தை மேற்கொண்டவன் புலால் உண்டால் அப்போதே அவனுடைய துறவறம் கெட்டு விடும்.]

**251. தன்னூன் பெருக்கற்குத் தான்பிறி தூனுண்பா
னெங்ஙன மாளு மருள்.**

ப. ரை : தன் ஊன் பெருக்கற்கு தான் பிறிது ஊன் உண்பான் = தன்னுடைய தசை பெருக வேண்டுமென்று தான் இன்னொரு பிராணியின் தசையை உண்கிறவன், எங்ஙனம் அருள் ஆளும் = எப்படி அருளுடையவனாக நடந்து கொள்ள முடியும் ?

பொ. ரை : தன்னுடைய உடல் பருக்க வேண்டுமென்று இன்னொரு பிராணியின் உடலை உண்பவன், எப்படி ஜீவ காருண்யமுள்ளவனாக நடந்துகொள்ள முடியும் ?

வி-ம் : 'அருள்' என்பது மற்ற உயிர்களையும் தன்னுயிர் போல் எண்ணுவது. தன்னுயிர் பெரிதென்று பிற உயிரைப் போக்கி அதன் உடலைத் தின்பவனுக்கு அருள் குணம் எப்படி வரும் ?

ஆதலால் :

**252. பொருளாட்சி போற்றாதார்க் கில்லை யருளாட்சி
யாங்கில்லை யூன்றின் பவர்க்கு.**

ப. ரை : பொருள் ஆட்சி போற்றாதார்க்கு இல்லை = பொருட் செல்வத்தின் நன்மைகள் அதைப் பாதுகாக்காதவர்களுக்குக் கிடைக்கா, ஆங்கு ஊன் தின்பவர்க்கு அருள் ஆட்சி இல்லை = அதைப் போல, புலால் உண்பவர்களுக்கு அருள் செல்வத்தின் நன்மைகள் கிடைக்க மாட்டா.

பொ. ரை: பணத்தைப் பாதுகாக்காதவர்களுக்குப் பணத்தால் வரும் நன்மைகள் இல்லை. அதைப்போல் (உயிர்களைப் பாதுகாக்காமல் உயிர் நீங்கிய) ஊனைத் தின்பவர்களுக்கு அருளால் பெறக் கூடிய நன்மைகள் இல்லை.

வி-ம்: ஒவ்வொரு தம்படியையும் எண்ணிக் கணக்கிட்டுக் காவல் செய்யாதவனுக்குப் பணம் பெருகாது. அதைப் போல் ஒவ்வொரு உயிரையும் கருதிக் காக்க வேண்டிய அருள் நெறியில் நிற்கின்ற துறவி, ஊன் உண்டால் அருள் பெருகாது.

ஊன் உண்பவனுக்கு ஏன் அருள் வளராது என்றால்:

**253. படைகொண்டார் நெஞ்சம்போ னன்றூக்கா தொன்ற
னுடல்சுவை யுண்டார் மனம்.**

ப. ரை: படை கொண்டார் நெஞ்சம் போல் = கொலைக் கருவியைத் தம் கையிற் வைத்துக் கொண்டிருப்பவர்களுடைய மனதைப் போல, ஒன்றன் உடல் சுவை உண்டார் மனம் நன்று ஊக்காது = ஒரு பிராணியின் உடலைச் சுவைத்து உண்பவர்களுடைய மனம் நல்ல செயல்களில் ஊக்கம் கொள்ளாது.

பொ. ரை: கொலைக் கருவியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறவர்களுடைய மனதைப் போல, இன்னொரு பிராணியின் ஊனைத் தின்று சுவை கண்டவனுடைய மனமும் நல்ல காரியங்களில் நாட்டங் கொள்ளாது.

வி-ம்: கொலைக் கருவியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கிறவன் அந்தக் கருவியை உபயோகிக்க இலக்கு தேடிக் கொண்டே யிருப்பான். அதனால் அவன் மனம் துன்பம் செய்யும் காரியங்களிலேயே கண்ணாக இருக்கும். அதைப் போலவே இன்னொரு பிராணியின் ஊனைத் தின்று உருசி கண்டவன் எந்தப் பிராணியின் ஊன் அதிக சுவையுள்ளதாக இருக்கும் என்ற நாட்டத்தில் இருக்கக் கூடியவன். அதனால் அவனுடைய மனம் அருள் நெறியில் ஊக்க முள்ளதாக இருக்க முடியாது.

அருள் நெறியை விரும்பினவன் கொலைக்கு உடந்தையான ஊனுண்பதைச் செய்ய லாகாது:

**254; அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல்.**

ப. ரை: அருள் யாதெனின் கொல்லாமை = அருள் என்பது என்னவென்றால் உயிர்க் கொலை புரியாதிருப்பது. அல்லது யாதெனின் கோறல் = அருள் அல்லாதது என்ன வென்றால் ஒரு உயிரைக் கொல்லுவது, (அதனால்) அவ்வூன் தினல் பொருளல்லது = (கொன்று கிடைக்கிற) அந்த ஊனை (கொல்லா விரதம் மேற்கொள்ள வேண்டிய அருளாளனாகிய துறவறத்தான்) உண்பது அறிவில்லாத செய்கை.

பொ. ரை: அருள் என்பது கொலை செய்யாதிருப்பது. அருள் அல்லாதது என்பது கொலை செய்வது. அப்படியிருக்க அருள் நெறியை மேற்கொண்ட ஒருவன் கொலை செய்து கிடைக்கிற புலாலை உண்பது அர்த்த மறியாத காரியம்.

பிற உயிரைக் கொன்று அந்த ஊனை உண்பது அருளுக்கு மட்டுமல்ல அறிவுக்கும் பொருந்தாதது. எப்படியெனில்:

255. உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண
அண்ணாத்தல் செய்யா தளறு.

ப. ரை: உயிர் நிலை உண்ணாமை உள்ளது = மனிதருடைய உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய உணவுகள் ஊன் உண்ணாமை யிலேயே இருக்கின்றன. ஊன் உண்ண அளறு அண்ணாத் தல் செய்யாது = உயிர் நீங்கிய பிணத்தை உட்கொள்ள நரகம்கூட வாய் திறக்காது.

பொ. ரை: மனிதனுடைய உயர் வாழ்க்கைக்கு வேண்டிய எல்லா சத்துப் பொருள்களும் புலால் உண்ணாமலேயே கிடைக்கின்றன. உயிர் போன பிணத்தை ஏற்றுக் கொள்ள நரகம் கூட வாய் திறக்காது.

வி-ம்: மற்ற உணவுகளில் கிடைக்காத தனி நன்மை எதுவும் ஊன் உணவில் இல்லை. கொடிய இடமென்றும் பாவிகளைப் பழிவாங்கும் வெகு பயங்கரமான இடமென்றும், சொல்லப் படுகிற நரகமுங் கூட உயிர் போன உடலை உள்ளே விடுவ தில்லை. ஒருவன் நரகத்துக்குப் போனான் என்றால் அவனு டைய உயிர்தான் நரகத்தில் தள்ளப்படுகிறதாகச் சொல்லப் படுகிறதே யொழிய, உயிர் போன அவனுடைய பிணம் அங்கே அனுமதிக்கப்படுவதில்லை. ஆதலால் நரகம்கூட உட் கொள்ள மறுத்து விடுகிற பிணத்தை மனிதன் உட்கொள்வ தேன்? மற்ற உணவுகளில் இல்லாத தனி நன்மை ஊனுண வில் இல்லை என்பதால் இம்மைக்கான நன்மை ஒன்றும் ஊனுணவில் இல்லை. ஊனுண்பது நரகமும் மறுக்கின்ற செய் கையானதால் சொர்க்கத்தைப்பற்றி நினைக்கவும் இடமில்லை.

அதனால் மறுமைப் பயனும் நிச்சயமாக இல்லை. பின் ஏன் உண்பதற்காகப் பிற உயிரைக் கொல்ல வேண்டும்!

கொல்லுவது நாமல்லவே. வேறு யாரோ கொன்றார்கள். அந்த ஊனைத்தானே நாம் விலை கொடுத்து வாங்கினோம் என்று சொன்னால்:

**256. தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்.**

ப. ரை: தினல் பொருட்டால் உலகு கொல்லாது எனின் = தின்பதற்காக உலகத்தில் யாரும் பிற உயிரைக் கொல்லுவது இல்லையென்றால், விலை பொருட்டால் ஊன் தருவார் யாரும் இல் = விலைக்கு ஊனை விற்பவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்.

பொ. ரை: உண்பதற்கென்று பிற உயிரைக் கொல்லுகிற வழக்கம் உலகத்தில் இல்லையென்றால், மாமிசத்தை விலைக்கு விற்பவர்களும் இருக்க மாட்டார்கள்.

வி-ம்: ஊனுண்பவர்கள் அந்த ஊனுக்காக, உயிரோடிருக்கிற பிராணிகளைக் கொல்லுவதில் சம்மதமுள்ளவர்கள். அதனால் அவர்களுக்காக வேறு சிலர் அந்தக் கொலைத் தொழிலைச் செய்து ஊனை விலைக்கு விற்று இலாபம் அடைகிறார்கள். உண்பதற்கு ஊனை வாங்குகிறவர்கள் இல்லையென்றால் ஊனை விற்கப் பிராணிகளைக் கொல்லுகின்றவர்களும் இருக்கமாட்டார்கள்.

ஊனுண்பவர்கள் அவர்கள் உண்ணுகின்ற ஊன் மற்றப் பிராணிகளைக் கொன்றுதான் கிடைக்கிறது என்பதை நினைப்பதில்லை. யாரோ எங்கோ ஊனுக்காகப் பிராணிகளைக் கொல்லுவதை அவர்கள் தம் கண்ணாற் பார்க்காமலிருப்பதால் அதிலுள்ள கொடுமை தெரிவதில்லை. ஆனால் சற்றே அவர்கள் உணர்ந்து பார்ப்பார்களானால்:

**257. உண்ணாமை வேண்டும் புலாஅல் பிறிதொன்றன்
புண்ண துணர்வார்ப் பெறின்.**

ப. ரை: புலாஅல் பிறிது ஒன்றன் புண் = ஊன் துண்டுகள் இன்னொரு பிராணியின் உடலை வெட்டிய புண், அது உணர்வார்ப் பெறின் = அதை உணர்ந்து பார்க்கிறவர்கள் உண்டானால், உண்ணாமை வேண்டும் = (அவர்களாவது) புலாலை உண்ணாமலிருக்க வேண்டும்.

பொ. ரை: புலால் துண்டம் இன்னொரு பிராணியின் (உடலை வெட்டி வெட்டித் துண்டிக்கும் போது உண்டான) புண். அதை உணர்ந்து பார்க்கக் கூடியவர்கள் இருந்தால் அவர்களாவது அதை உண்ணாதிருக்க வேண்டும்.

வி - ம்: ஒரு உயிர்ப் பிராணியைக் கழுத்தை அறுத்துக் கொன்ற உடனேயே புலால் துண்டுகள் உண்பவனுக்குக் கிடைத்து விடுவதில்லை. கொல்லப்பட்ட பிராணியின் உடலைக் கிழித்து அதன் உறுப்புகளைத் துண்டு துண்டாகப் பலமுறை வெட்டிய பின் கிடைப்பது. அந்த வெட்டுகளாலுண்டான புண்களெல்லாம் சேர்ந்தது அந்த மாமிசத் துண்டுகள் என்பதைச் சிறிது உணர்ந்து பார்த்தால் அதன் பிறகும் புலால் உண்ண மனம் வரலாமா? என்பது கருத்து.

உயிருள்ள ஒரு பிராணியின் கழுத்தை அறுப்பதும் உடலைக் கிழிப்பதும் உறுப்புகளை வெட்டுவதும் எவ்வளவு கருணையில்லாத கொடுமைகள் என்பதை எண்ணித்தான்:

258. செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணா
ருயிரிற் றலைப்பிரிந்த வூன்.

ப. ரை: செயிரின் தலைப்பிரிந்த காட்சியார் = துன்பம் உண்டாக்குகிற குற்றங்களிலிருந்து நீங்கிவிட்ட நோக்கமுள்ளவர்கள், உயிரின் தலைப் பிரிந்த ஊன் உண்ணார் = உயிரை விட்டு நீக்கப்பட்ட புலாலை உண்ண மாட்டார்கள்.

பொ. ரை: பிற உயிர்களுக்குத் துன்பம் உண்டாக்குகிற குற்றங்கள் செய்வதை விட்டொழித்த நோக்கமுள்ளவர்கள் உயிரைப் போக்கிய ஊனைப் புசிக்கக் கூடாது.

வி - ம்: 'செயிரிற் றலைப்பிரிந்த காட்சியார்' உயிர்களுக்குத் துன்பம் செய்யும் குற்றங்களை விட்டு விட்டு அருளை மேற்கொண்டுள்ள துறவிகள், 'உண்ணார்' என்பது இங்கே 'உண்ணக் கூடாது' என்ற பொருள் தருவது.

துறவறத்தான் செய்யத் தகாத காரியங்களில் மிகவும் முக்கியமானது புலால் உண்பது. அவன் யோக முயற்சிகளையும் யாக முயற்சிகளையும் செய்வதைக் காட்டிலும் சிறந்தது புலால் உண்ணாமை:

259. அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்ற
னுயிர்செகுத் துண்ணாமை நன்று.

ப. ரை: அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் = ஓமத் தீயில் ஆகுதிகளைக் கொட்டி ஆயிரம் வேள்விகளைச் செய்வதைக்

காட்டிலும், ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று = இன்னொரு பிராணியின் உயிரைக் கொன்று (அதன் ஊனை) உண்ணாதிருப்பது நல்லது.

பொ. ரை: ஓமத் தீயில் அவிர்ப்பாகங்களைக் கொட்டி ஆயிரம் யாகங்களைச் செய்வதைக் காட்டிலும் இன்னொரு பிராணியின் உயிரை வதைத்து அதன் ஊனைத் தின்னாதிருப்பது நல்லது.

வி-ம்: தேவர்களை மகிழ்வித்து நன்மைகளைப் பெறுவதற் கென்று பல யாகங்களைச் செய்வதுண்டு. அந்த வேள்விகளை நடத்தி வைப்பவர்கள் துறவிகளேயாவர். அந்த வேள்வியின் ஓமத் தீயில் பல பொருள்களைப் பலியாகப் பெய்வார்கள். உயிர்ப்பலியும் உண்டு. ஆடு போன்ற உயிர்ப் பிராணியை வதைத்துக் கொன்று அதன் ஒரு குறிப்பிட்ட உறுப்பை எடுத்து அதை ஓமத்தீயில் அவித்து அதன் துண்டுகளைப் பிர சாதமாக வழங்குவார்கள், அந்த மாமிசத் துணுக்கை வேள்வி நடத்திய துறவிகளும் பிரசாதமாக உண்பார்கள். அந்த வழியிற் கூட புலால் உண்ணக் கூடாது என்று வலி யுறுத்துவதற்காக 'வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்து உண்ணாமை நன்று' என்றது.

யாரானாலும் எதற்காகவானாலும் புலால் உண்பதை மறுக் கிறவன் வணங்கத் தகுந்தவன்:

**260. கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்.**

ப. ரை: கொல்லான் புலாலை மறுத்தானை = (ஊன் உண்பதற் காகக்) கொலை செய்யாதவனாகவும் (பிறர் கொன்று வரும்) புலாலையும் வாங்கியுண்ண மறுக்கின்றவனாகவும் இருக்கிற வனை. எல்லா உயிரும் கைகூப்பி தொழும் = எல்லா உயிர் களும் கை குவித்து வணங்கும்.

பொ. ரை: புலால் உண்பதற்காகப் பிறிதொரு பிராணியைத் தானும் கொல்லான். பிறர் கொன்று விற்கும் புலாலையும் ஏற்றுக் கொள்ள மாட்டான். அப்படிப்பட்டவனை எல்லா உயிர்களும் கை குவித்து வணங்கும்.

வி-ம்: 'கை கூப்பி எல்லா உயிரும் தொழும்'; என்றதனால் 'எல்லா உயிரும்' என்பது சிறப்பாக எல்லா மனிதர்களும் என்றதைக் குறிக்குமென்றாலும், எல்லா சீவராசிகளும் தொழும் என்பதும் அழகுடையது. 'தொழும்,' என்பது அவனை வந்து வணங்கும் என்பதல்ல. அவன் எல்லா உயிர் களாலும் வணங்கத் தகுந்தவன் என்பதுதான் கருத்து. இதி

லுள்ள 'கொல்லான்' என்பதற்கு ஊன் உண்பதற்காகப் பிராணிகளைக் கொல்லான் என்பதுதான் பொருள். வேறு விதமான கொலைகள் இதில் அடங்கினவல்ல.

அதி. 27—தவம்

[தவம் என்பது ஒருவனுடைய மனம் முழுவதும் ஒரே நோக்கத்தில் ஈடுபட்டு, வேறு எண்ணங்களுக்கு இடங் கொடுக்காமல் இருப்பதற்காகச் செய்யப்படும் முயற்சி களின் தொகை. அந்த முயற்சிகள் இந்திரிய ஆசைகளை ஒடுக்குவதற்கான பல பயிற்சிகள் அடங்கியவை. அந்தப் பயிற்சிகள் பல வகைப்படும். ஆனால் அந்தப் பயிற்சியின் வேறுபாடுகளை விரிக்காமல், அந்தப் பயிற்சிகள் எல்லாவற் றிற்கும் அடிப்படையான சகிப்புத் தன்மையும் அசைவின்மை யும் மட்டும் இங்கே சொல்லப்படுகின்றன. துறவறத்தை மேற் கொண்டவன் இந்தச் சகிப்புத் தன்மையில் அசைவற்றவனாக நின்றால் ஆன்ம சக்திகள் வளர்ந்து தவ வலிமையும் ஞான மும் உண்டாகும். அதன் பின் அவன் நாடுகின்ற மெய்ப் பொருள் கிட்டும்.]

261. **உற்றநோய் நோன்ற லுயிர்க்குறுகண் செய்யாமை
யற்றே தவத்திற் குரு.**

ப. ரை: உற்ற நோய் நோன்றல், உயிர்க்கு உறுகண் செய் யாமை = தனக்கு வந்த துன்பங்களைப் பொறுத்துக் கொள் வது, தான் பிற உயிர்க்குத் துன்பம் செய்யாதிருப்பது. அற்றே தவத்திற்கு உரு = அவ்வளவுதான் தவத்தின் இலக் கணம்.

பொ. ரை: தனக்கு வரும் துன்பங்களைச் சகித்துக் கொள்ளுத லும், தான் பிற உயிர்க்குத் துன்பம் செய்யாமலிருப்பதும் ஆகிய அவ்வளவுதான் தவத்தின் இலக்கணம்.

வி-ம்: 'உற்ற நோய்' என்பது பசிதாகம் முதலிய துன்பங் கள் மட்டும் அல்ல. பசி தாகங்களைப் பொறுத்துக் கொள் வது மட்டும் பெரிதல்ல. ஆனால் இங்கே குறிப்பிடுவது தனக் குப் பிறர் செய்யும் துன்பங்களைப் பொறுத்துக் கொண்டு தான் பிறருக்குத் துன்பம் செய்யாமல் இருப்பதுதான் தவக் குணம். வெறும் பசியை மட்டும் பொறுத்துக் கொள் வது போதாது.

இந்த இரண்டு குணங்களும் இல்லாதவன் தவம் செய்ய அருகனல்ல:

262 தவமுந் தவமுடையார்க் காகு மவமதனை
யஃதிலார் மேற்கொள் வது.

ப. ரை: தவமும் தவம் உடையார்க்கு ஆகும். = தவம் என்பதும் (மேற்சொன்ன) தவ இலக்கணம் உள்ளவர்களுக்குத் தான் பலிக்கும். அஃதிலார் அதனை மேற் கொள்வது அவம் = அந்தத் தவ இலக்கணம் இல்லாதவர்கள் தவத்தை மேற் கொள்வது பயனற்றது.

பொ. ரை: தவம் என்பதும் மேலே சொல்லப்பட்ட தவக் குணங்களாகிய 'உற்ற நோய் நோன்றல் உயிர்க் குறுகண் செய்யாமை' என்ற இரண்டும் உடையவர்களுக்குத் தான் பலிக்கும். அந்தக் குணங்கள் இல்லாதவர்கள் தவத்தைமேற் கொள்வது வீண் முயற்சியாகும்.

வி - ம்: 'தவமும் தவமுடையார்க்காகும்' என்பதற்கு முற் பிறப்பில் தவம் செய்து, விட்ட குறை உள்ளவர்களுக்குத் தான் தவம் பலிக்கும் என்று பொருள் கொள்வது முற்றிலும் பயனற்றது. அது தவம் முயல எண்ணுகின்றவர்களின் ஊக் கத்தை அழிக்கக் கூடியது, ஒருவன் போன பிறப்பில் தவம் செய்து விட்டகுறை உள்ளவனு இல்லையா என்பதை எப் படிக் கண்டறிய முடியும்? விட்டகுறை இருந்தால்தான் பலிக் கும் இல்லாவிட்டால் பலிக்காது என்று சொல்வது வெறும் உண்மையை நினைப்பூட்டத்தான், முயற்சியைத் தடுப்பதற் கல்ல, என்றாலும் போன பிறப்பில் தவம் செய்து விட்ட குறை உள்ளவனும் கூட ஏதாவது ஒரு பிறப்பில்தானே தவத்தை ஆரம்பித்திருக்க முடியும்? மனிதன் அனாதி யல் லவே. ஆகையினால் அவனுடைய தவமுயற்சியும் அனாதியாக இருக்க முடியாதே. ஆதலால் அப்படிப் பொருள் கொள்வது தத்துவத்துக்கும் பொருந்தாது.

தனக்கு நேரும் துன்பங்களை யெல்லாம் சகித்துக் கொண்டே இருப்பதும் தான் பிறருக்கு ஒரு துன்பமும் செய் யாமலிருப்பதும்தான் தவம் என்றால் எப்படி உடலைப் பாது காப்பது? எப்படித் தவத்தைக் கொண்டு நடத்துவது என்று எண்ணினால்:

263. துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொன்
மற்றை யவர்க டவம்.

ப. ரை: துறந்தார்க்கு துப்புரவு வேண்டி = துறவிகளுக்கு உதவி கள் செய்ய வேண்டுமென்றுதான், மற்றையவர்கள் தவம் மறந்தார் கொல் = துறவிகளல்லாத மற்றவர்கள் தவம் செய்வதை மறந்திருக்கிறார்கள் போலத் தோன்றுகிறது.

பொ. ரை : துறவிகளுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதற்காகத்தான், இல்லறத்தார்கள் தாமும் தவம் மேற்கொள்வதை மறந்திருக்கிறார்கள்.

வி-ம்: துறவிகள் தமக்கு வரும் எல்லாத் துன்பங்களையும் சகித்துக் கொண்டு தவம் செய்ய வேண்டியவர்கள். தமக்குத் தேவையான உணவு, இருப்பிடம் முதலிய வசதிகளுக்காகவும் பிறரைக் கேட்கவும் கூசுகிறவர்கள். அதையறிந்து இல்லறத்தார்கள் அத்துறவிகளுக்கு வேண்டிய வசதிகளையெல்லாம் தாமாகவே அவர்களுக்குச் செய்து கொடுத்து அத்துறவிகளின் தவத்தைத் தங்களுடைய தவம்போலவே பாதுகாப்பார்கள். அதனால் உண்மைத் துறவி தனக்கு வேண்டிய வசதிகளைப் பற்றிக் கவலைப்படவே காரணம் இல்லை.

தன்னுடைய சுக சௌகரியங்களைப் பற்றிக் கருதாமல் எந்தத் துன்பத்தையும் பொறுத்துக் கொண்டு பிறருக்கு ஒரு துன்பமும் உண்டாக்காமல் தவம் செய்கின்ற துறவிக்குத் தவ வலிமை அதிகப்படும். அந்தத் தவ வலிமையினால் :

264. ஒன்னார்த் தெறலு முவந்தாரை யாக்கலு
மெண்ணிற் றவத்தான் வரும்.

ப. ரை : ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் = தமக்கு வேண்டாதவர்களுக்குக் கேடுண்டாக்குவதும் வேண்டியவர்களுக்கு நன்மை உண்டாக்குவதும். எண்ணில் தவத்தான் வரும் = நினைத்தால் தவத்தின் வலிமையுள்ளவனால் முடியும்.

பொ. ரை : தவசி நினைத்தால் அவனுக்கு விருப்பமில்லாதவர்களுக்குச் சாபமிட்டுக் கெடுப்பதும், அவனுக்கு விருப்பம் உள்ளவர்களுக்கு வரம் கொடுத்து வாழ வைப்பதும் செய்ய முடியும்.

வி-ம்: பிறருக்குச் சாபமிடுவதோ அல்லது வரங் கொடுப்பதோ தவசியினால் முடியும். ஏனென்றால் தவம் செய்வதனால் துறவிக்கு அப்படிப்பட்ட சக்திகள் உண்டாகின்றன. அந்த சக்திதான் தவ வலிமை எனப்படுவது.

ஆனால் வீடு பெறுவதற்காக மெய்ப் பொருளை நாடித் தவம் செய்கின்ற துறவி அந்தத் தவ வலிமையை வெறுப்பு விருப்புகளினால் சாபமிடுவதிலும் வரங் கொடுப்பதிலும் செலவு செய்துவிடக் கூடாது. ஏன் என்றால் :

265. வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ
மீண்டு முயலப் படும்.

ப• ரை: வேண்டிய வேண்டியாங்கு எய்தலான் = (சாபம் கொடுப்பதோ வரம் கொடுப்பதோ) விரும்பினதை விரும்பியபடி செய்துவிடுவதால், செய்தவம் மீண்டும் முயலப் படும் = அது வரையிலும் செய்த தவத்தை மறுபடியும் செய்யவேண்டும்.

பொ• ரை: வெறுப்பு விருப்புகளினால் சாபமிடுவதையோ வரங் கொடுப்பதையோ நினைத்ததை நினைத்தபடி செய்து விட்டால் செய்த தவத்தை மீண்டும் தொடங்க வேண்டும்.

வி - ம்: தவம் செய்ததனால் உண்டான தபோ பலம் சாபமிடு வதனாலும் வரங் கொடுப்பதாலும் செலவாகி விடுகிறது. அதனால் வீடு பெறக் கருதி அது வரைக்கும் செய்த தவத்தை மறுபடியும் தொடங்க வேண்டியதாகும்.

அதனால் வீடு பெறுவதற் கென்று தவம் செய்கிற துறவி கள் வெறுப்பு விருப்புகளில் இறங்கித் தவத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது:

266. தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லா ரவஞ்செய்வா ராசையுட் பட்டு.

ப• ரை: தவம் செய்வார் தம் கருமம் செய்வார் = தவம் செய்கிற துறவிகள் தம்முடைய தவக்காரியத்தையே செய்து கொண் டிருப்பார்கள், மற்று அவம் செய்வார் ஆசையுள் பட்டு = அதைவிட்டு (சாபம் வரம் முதலியவைகளில் இறங்கி விடுகிற வர்கள்) மறுபடியும் உலக ஆசைகளில் சிக்கிக் கொண்டு தவத்தை வீணாக்குகிறவர்கள்.

பொ• ரை: தவத்தை மேற்கொண்டவர்கள் தம்முடைய தவக் காரியத்தையே செய்துகொண்டிருக்க வேண்டும். அதை விட்டுச் சாபமிடுவதிலும் வரங்கொடுப்பதிலும் இறங்கி விடு கிறவர்கள். மறுபடியும் முன் அவர்கள் விட்டுவிட்ட உலகஆசை களில் சிக்கிக் கொண்டு தமக்கும் பிறருக்கும் தீங்கு செய் கிறவர்கள் ஆவார்கள்.

வி - ம்: இந்தக் குறளுக்கு — தவம் செய்கிற மனிதர்கள் தாம் தங்கருமம் செய்கிறவர்கள். மற்றெல்லாரும் ஆசையுட்பட்டு அவம் செய்கிறவர்கள் என்று கொண்டு இல்லறத்தாலும் துறவறம் பூண்டு தவம் செய்ய வேண்டும் என்ற கருத்தை உண்டாக்குவது திருக்குறளின் மூலக் கொள்கைகளுக்கு முற் றிலும் முரணாகும். அப்படிப் பொருள் கொண்டால் 'துறந் தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல் மற்றையவர் கள் தவம்' என்றும், 'அறமெனப் பட்டதே இல்வாழ்க்கை'

என்றும், 'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றின் போஒய்ப் பெறுவது எவன்' என்றும், இன்னும் பலவிதமாக இல்லறத்துக்கு ஏற்றம் சொன்னதெல்லாம் பொய்த்துவிடும். இங்கே 'தங்கருமம் செய்வார்' என்றது 'உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை' ஆகிய தம்முடைய தவக் கருமங்களைச் செய்வார்கள் என்பதேயாம்.

எவ்வளவு துன்பங்கள் நேரிட்டாலும் அதனால் நிலைகுலைந்து விடாமல் தவம் செய்தால்:

267. சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோற்கிற் பவர்க்கு

ப. ரை: சுடச்சுடரும் பொன்போல் = நெருப்பிலிட்டுக் காய்ச்சக் காய்ச்ச ஒளி அதிகப்படுகிற தங்கத்தைப் போல, துன்பம் சுடச் சுட நோற்கிற் பவர்க்கு ஒளி விடும் = எவ்வளவு துன்பங்கள் அடுத்தடுத்து வந்தாலும் நிலை குலையாமல் தவம் செய்கிறவர்களுக்குப் பெருமை அதிகப்படும்.

பொ. ரை: தீயிலிட்டுக் காய்ச்சக் காய்ச்சக் களிம்பு நீங்கி ஒளி அதிகப்படுகிற தங்கத்தைப் போல, எவ்வளவு துன்பங்கள் அடுத்தடுத்து வந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாமல் தவம் செய்கிறவர்களுக்குத் தவ வலிமை அதிகமாகும்.

வி-ம்: காய்ச்சக் காய்ச்சத் தங்கத்தின் மாற்றுயர்ந்து பிரகாசம் அதிகப்படும். அது போல துன்பங்களைப் பொறுக்கப் பொறுக்கத் தவத்தின் தரம் உயர்ந்து அதற்குத் தக்க ஞான ஒளி உண்டாகும்.

எவ்வளவு துன்பங்கள் வந்தாலும் நிலை குலையாமல் தவம் செய்யும் தன்மையை எப்படி அடைய முடியும் என்றால்:

268. தன்னுயிர் தானறப் பெற்றானை யேனைய
மன்னுயி ரெல்லாந் தொழும்.

ப. ரை: தன் உயிர் தான் அறப் பெற்றானை ஏனைய மன் உயிர் எல்லாம் தொழும் = தன்னுடைய உயிர் பெரியது என்ற எண்ணமும் தான் பெரியவன் என்ற எண்ணமும் அடியோடு விடுபட்ட மனமுடையவனை உலகத்திலுள்ள மற்ற உயிர்களெல்லாம் வணங்கும்.

பொ. ரை: மற்ற உயிர்களைக் காட்டிலும் தன்னுயிர் பெரிது என்ற பாசமும் மற்றவர்களைக் காட்டிலும் தான் உயர்ந்த

வன் என்ற அகங்காரமும் அடியோடு விட்டொழித்தல் பெற்றுவிட்டவனை உலகத்திலுள்ள மற்றெல்லாரும் வணங்குவார்கள்.

வி-ம்: 'தன்னுயிர் தானறப் பெற்ருனை' என்பதற்கு 'தன் உயிரைத் தான் தனக்குரித்தாகப் பெற்றவனை' என்று பொருள் செய்வது முற்றிலும் பயனற்றது.

அப்படிப்பட்டவனுடைய தவவலிமை மிகவும் உயர்ந்தது. அதனுல்:

269. கூற்றங் குதித்தலுங் கைகூடு நோற்றலி
ன் ஆற்ற றலைப்பட் டவர்க்கு.

ப. ரை: நோற்றலின் ஆற்றல் தலைப்பட்டவர்க்கு கூற்றம் குதித்தலும் கைகூடும் = தவத்தின் வலிமையில் உச்சம் பெற்றவர்களுக்கு எமனை வெல்லுவதும் முடியும்.

பொ. ரை: 'தவ வலிமையில் தலைசிறந்தவர்களுக்கு எமனை வெல்லுவதும் சித்திக்கும்'.

வி-ம்: 'கூற்றம் குதித்தல்' என்பது எமனைப் பற்றிய அச்சத்தையும் எமவாதனைகளையும் வெல்லுவது. தவவலிமை மிகுந்தவர்கள் தம்முடைய இச்சையாகவே மரண வேதனைகளின்றி சமாதி பெறுவரார்கள். கூற்றம் என்பது மரண காலத்தில் ஒரு உயிர் அதன் உடலினின்று பிரியும் போது உண்டாகின்ற சங்கடங்களின் உருவகம். அந்தச் சங்கடங்கள் இல்லாவிட்டால் கூற்றம் அங்கே இல்லாமற் போகின்றது. 'கூற்றம் குதித்தல்' என்பதற்கு மரணமே இல்லாமலிருத்தல் என்று பொருள் கொள்ளல் கூடாது. அது திருவள்ளுவரின் கருத்தாக இருக்க முடியாது. ஏனெனில், பின்னுல் வருகிற 'நிலையாமை' என்ற அதிகாரத்தில் மனித சரீரம் நிலையற்றது என்பதை வெகு அழுத்தமாகச் சொல்லுகிறுர்.

தவ வலிமையினுல் எமவாதனைகள் இல்லாமல் இச்சைப்படி மனமுவந்து இந்த உடலை விட்டொழிக்க முடியும். அப்படி மரண வேதனையில்லாமல் இச்சைப்படி உடலை விட்டவர்களைக் கண்டதில்லையே என்ருல்:

270. இலர்பல ராகிய காரண நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்.

ப. ரை: பலர் இலராகிய காரணம் நோற்பார் சிலர் நோலாதவர் பலர் = (அப்படிக் கூற்றம் குதித்தவர்கள்) பலபேர் இல்லாதிருப்பதற்குக் காரணம் தவம் செய்கிறவர்கள் வெகு சிலர்தாம். தவம் செய்யாதவர்களே அதிகமானவர்கள்.

பொ. ரை: எமபயத்தையும் எமவாதனைகளையும் வென்று இச்சைப்படி உடலை விடுகிறவர்கள் பல பேர் இல்லையென்பதற்குக் காரணம் (இது வரையிலும் சொல்லப்பட்ட முறையில் சரியானபடி) தவம் செய்கிறவர்கள் வெகு சிலர் தாம். தவம் செய்யாதவர்களே அதிகம்.

வி-ம்: இங்கே 'இலர் பலர்' என்பதற்கு 'செல்வமில்லாதவர்கள் பலர்' என்று பொருள் கொண்டு, அதைத் தொடர்ந்து உரை செய்வது முற்றிலும் தவறு. துறவறத்தான் செய்கின்ற தவத்துக்கும் செல்வத்துக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. துறவி தவம் செய்வதும் செல்வத்தைக் கோரி அல்லவென்பது மிகவும் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. மேலும் ஏழைகளாக இருப்பவர்களெல்லாம் 'தவம்' செய்யாதவர்கள் என்றால், மனிதர்கள் எல்லாரும் துறவு பூண்டு தவம் செய்தால்தான் ஏழையாகப் பிறக்காமல் பணக்காரனாகப் பிறக்க முடியும் என்று ஆகி விடும். அப்படியானால் இல்லறம் என்பதே வேண்டாததாகிவிடும். மேலும் 'நோற்பார் சிலர் பலர் நோலாதவர்' என்றதில் இல்லறத்தாரையும் சேர்த்துச் சொன்னது அல்ல. தவத்தை மேற்கொண்ட துறவிகளிலேயும் சரியான முறையில் தவம் செய்கின்றவர்கள் சிலரே; தவம் மேற்கொண்டும் சரியான முறையில் தவம் செய்யாதவர்களே பெரும்பாலோர் என்று தான் பொருள்.

அதி. 28—கூடாவொழுக்கம்

['கூடாவொழுக்கம்' என்பது துறவறத்தை மேற்கொண்டவன் காமாதி ஆசைகளை அடக்கத் திறனற்றவனாகித் துறவி போலவே நடித்துக் கொண்டு, திருட்டுத்தனமாகச் சிற்றின்பங்களை அனுபவிக்கும் 'நகாத நடத்தை'. ஆசைகளை அடக்குவது மிகவும் கடினமான காரியம். அடிக்கடி இந்த ஆசைகள் வந்து அழுத்துவதால் மறைவாகவேனும் ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ள எண்ணம் வரும். ஆதலால் துறவறம் மேற்கொண்டவன் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்பதும், துறவறத்தில் இருந்து கொண்டு களவொழுக்கம் நடத்துகிற பொய்த் துறவிகளைப்பற்றி இல்லறத்தார் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதும் இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகின்றன.]

271. வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்.

ப. ரை: வஞ்ச மனத்தான் படிற்று ஒழுக்கம் பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் = வஞ்சக நெஞ்சமுடையவனுடைய கள்ள

நடத்தையைக் கண்டு (அவன் தேகத்தில் கலந்துள்ள) ஐந்து பூதங்களும் தமக்குள் சிரிக்கும்.

பொ. ரை: துறவறத்தை மேற்கொண்டு கபடமாகக் கள்ள வாழ்க்கை நடத்துகிறவனைப் பற்றி அவன் தேகத்திலுள்ள பஞ்சபூதங்களும் தமக்குள் சிரித்து ஏளனம் செய்யும்.

வி-ம்: துறவறத்தில் இருந்துகொண்டு அதற்குத் தகாத கள்ள வாழ்க்கை நடத்துகிறவனுடைய செயல்கள், மற்றவர்களுக்குத் தெரியாவிட்டாலும் அவனுள் இருக்கும் பஞ்சபூதங்களுக்காவது தெரியும். அந்த ஐந்து பூதங்களும் 'அகத்தே நகும்' என்றதனால் அவனுடைய மனச்சாட்சியே அவனை ஏளனம் செய்யும் என்பது கருத்து.

துறவறம் என்பது வெறும் வேடத்தால் நடத்திவிடக் கூடியதல்ல:

**272. வானுயர் தோற்ற மெவன்செய்யுந் தன்னெஞ்சந்
தானறி குற்றப் படின்.**

ப. ரை: தன் நெஞ்சம் அறி குற்றம் தான் செயின் = தன்னுடைய மனமே குற்றமென்று அறிகிற காரியத்தைத் தான் செய்தால், வான் உயர் தோற்றம் எவன் செய்யும் = ஆகாயத்தைப் போல உயர்ந்த தவவேடத்தால் என்ன பயன்?

பொ. ரை: தன்னுடைய மனச்சாட்சி குற்றமென்று சொல்லுகிற காரியத்தைச் செய்கிறவனுடைய மிக உயர்ந்த துறவறச் சின்னங்களால் மட்டும் என்ன நன்மை வந்துவிட முடியும்?

குற்றமான வாழ்க்கையை மறைவாக நடத்துகிறவன் துறவறச் சின்னங்களை தரித்துக்கொள்ளுகிற வேடம் உலகத்தை ஏமாற்றுவதற்காகத்தான்:

**273. வலியி னிலைமையான் வல்லுருவம் பெற்றம்
புலியின்றோல் போர்த்துமேய்ந் தற்று.**

ப. ரை: வலி இல் நிலைமையான் வல் உருவம் = மன உறுதி இல்லாத துறவியின் வலிமை காட்டும் வேடம், பெற்றம் புலியின் தோல் போர்த்து மேய்ந்த அற்று = ஒரு பசுமாடு புலியின் தோலைப் போர்த்துக் கொண்டு பயிரைத் தின்பது போன்றது.

பொ. ரை: வைராக்கியம் இல்லாத துறவியின் தவவேடம், ஒரு பசுமாடு புலித்தோலைப் போர்த்துக் கொண்டு தானியப் பயிரைத் தின்பது போன்றது.

வி-ம்: ஒரு பசுமாடு புலித்தோலில் மறைந்து கொண்டு பயிரைத் தின்னப் போனால் மற்ற ஆடுமாடுகள் அதைப் புலியென்று அஞ்சி ஓடிவிடும். பிறகு ஏகபோகமாகச் சாவதானமாகப் பயிரை மேயலாம். தோட்டக்காரனும் பயிர்களுக்கிடையில் ஒரு புலி இருப்பதைக் கண்டால் புலி பயிரைத் தின்னாது என்பதனால் தனக்குச் சொந்தமாக உள்ள மற்ற கால் நடைகளிடம் அந்தப் புலி வந்து விடாமலிருப்பதைப் பற்றிக் கவனம் செலுத்துவானே யன்றி பயிரைப்பற்றிக் கவலைப்படமாட்டான். அதுபோல ஒரு துறவியானவன் தவ வேடங்களைத் தரித்துக் கொண்டு, தகாத காரியங்களைச் செய்தால் அதை யாரும் எளிதில் அறிய முடியாது. துறவி என்ற பய பக்தியினால் அவனிடம் தொடர்புள்ளவர்களும் கூட அவனிடம் நெருங்கி அவனுடைய ரகசியங்களை அறிய முயல மாட்டார்கள். பொதுமக்களும் அவனைப் பற்றிச் சந்தேகிக்க மாட்டார்கள். அதனால் அவனுடைய இஷ்டம்போல் கேட்பாரின்றிச் சிற்றின்பங்களில் களிக்கலாம்.

இப்படித் தகாத வாழ்க்கை நடத்துகிற துறவியின் வஞ்சகம் எப்படிப்பட்டதென்றால்:

**274. தவமறைந் தல்லவை செய்தல் புதன்மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த் தற்று.**

ப. ரை: தவம் மறைந்து அல்லவை செய்தல் வேட்டுவன் புதல் மறைந்து புள் சிமிழ்த்த அற்று = தவ வேடத்தில் மறைந்து கொண்டு துறவிக்குத் தகாத செயல்களைச் செய்வது ஒரு வேடன் புதரில் மறைந்திருந்து கண்ணி வைத்துப் பறவைகளைப் பிடிப்பதைப் போன்றது.

பொ. ரை: தவ வேடத்தில் மறைந்து கொண்டு துறவியானவன் தகாத காரியங்களைச் செய்வது, ஒரு வேடன் புதரில் மறைந்திருந்து கண்ணிவைத்துப் பறவைகளைப் பிடிப்பதற்குச் சமானம்.

வி-ம்: கண்ணி வைத்திருப்பதை அறியாமல் பறவைகள் அங்குள்ள இரை தின்ன வந்து சிக்கிக்கொள்கின்றன. அதுபோல பொய்த் துறவியின் வஞ்சக எண்ணத்தை அறியாமல் அவனிடம் உபதேசம் பெறுவதற்குப் பல பேர் வருகிறார்கள். அவர்களுக்குள் சிற்றின்ப ஆசைகளுக்குத் தகுந்தவர்களை வஞ்சித்து தன்னுடைய வசப்படுத்திக் கொள்ளுவான்.

துறவு வேடத்தில் கள்ளத்தனமான வாழ்க்கை நடத்துகிறவனால் பல கேடுகள் உண்டாகும்:

**275. பற்றற்றேமென்பார் படிற்றொழுக்க மெற்றெற்றென்
றேதம் பலவுந் தரும்.**

ப. ரை: பற்று அற்றேம் என்பார் படிற்று ஒழுக்கம் எற்று எற்று என்று ஏதம் பலவும் தரும் = பற்றுகளை யெல்லாம் விட்டு விட்டோம் என்னும் துறவிகள் திருட்டுத்தனமான சிற்றின்ப வாழ்க்கை நடத்துவார்களானால் அது 'ஏது' 'ஏது' என்றே துன்பங்கள் பலவற்றையும் உண்டாக்கிவிடும்.

பொ. ரை: ஆசைகளையெல்லாம் விட்டொழித்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் துறவிகள் கள்ளத்தனமாக அந்த ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் முறை 'இருக்காது' 'இருக்காது' என்று பிறர் நம்பும்படியாகவே பலவித துன்பங்களையும் உண்டாக்கி விடும்.

வி-ம்: சாதாரண மனிதர்கள் செய்யும் வெளிப்படையான குற்றங்கள் ஒன்று இரண்டு இடங்களில்தான் நடக்கும். அதைக் கண்டிப்பதும் தண்டிப்பதும் சுலபம். ஆனால் தவ வேடம் பூண்டு ஆசைகளையெல்லாம் விட்டுவிட்டவன் போலப் பாசாங்கு செய்து கொண்டு கள்ளத்தனமாக சிற்றின்ப வாழ்க்கை நடத்துகிற துறவி பல இடங்களில் பல பேருக்குப் பலவிதத் தீமைகளை உண்டாக்கி விடுவான். அவன் மறைவில் செய்கிற குற்றங்கள் வெகு நாள் வரை யாருக்கும் தெரியாது. பின் அதைச் சந்தேகித்து யாராவது அவனைப் பற்றிக் குறைகூற முற்பட்டாலும் மற்றவர்கள் 'ஏதேது அப்படி ஒன்றும் இருக்காது' என்று வாயடக்கி விடுவார்கள். அதனால் எல்லையற்ற தீமைகள் உண்டாகிவிடும்.

துறவறம் பூண்டு கள்ள வாழ்க்கை நடத்துகிறவன் சாதாரண குற்றவாளிகளைக் காட்டிலும் கொடியவன்:

**276. நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணா ரில்.**

ப. ரை: நெஞ்சில் துறவார் துறந்தார் போல் வஞ்சித்து வாழ்வாரின் வன்கணார் இல் = மனதில் ஆசைகளை விடாமல் விட்டு விட்டவர்களைப் போல் ஏமாற்றி வாழ்க்கை நடத்துகிறவர்களைப் போன்ற கல்நெஞ்சுள்ளவர்கள் வேறு இல்லை.

பொ. ரை: மனதில் ஆசைகளை விடாமல் விட்டுவிட்டவர்களைப் போல உலகத்தை ஏமாற்றி சீவனம் நடத்துகிறவர்களைப் போன்று பாவங்களுக்குப் பயப்படாத நெஞ்சழுத்தமுள்ளவர்கள் வேறு யாரும் இல்லை.

வி-ம்: 'நெஞ்சில் துறத்தல்' என்பது மண், பெண், பொன் என்ற மூன்று ஆசைகளையும் மனமார விட்டொழிப்பது.

நெஞ்சத்தில் வஞ்சனை இருக்க உடலிலும் உடையிலும் தவ வேடம் இருந்து பயனென்ன?:

277. புறங்குன்றி கண்டனைய ரேனு மகங்குன்றி
மூக்கிற் கரியா ருடைத்து.

ப. ரை: புறம் குன்றி கண்டு அனையரேனும் அகம் குன்றி மூக்கின் கரியார் உடைத்து = உடலின் வெளித் தோற்றத்தில் குன்றிமணியைப் போல ஒரே நிறமாகத் தென்பட்டாலும் உள்ளம் அந்தக் குன்றிமணியின் மூக்கைப் போல கருத்திருப்பவர்கள் உண்டு.

பொ. ரை: வெளிப் பார்வைக்குக் குன்றிமணியின் பெரும் பாகமும் உள்ளது போலச் சிறிதும் குற்றமற்றவர்களாகத் தென்பட்டாலும். மனம் மட்டும் அந்நக் குன்றிமணியின் மூக்கைப் போல இருண்டிருப்பவர்கள் உண்டு.

வி-ம்: கள்ளத்துறவி, அவனுடைய தவ வேடத்தால் பரிசுத்த முடையவன் போலத் தென்படுவான். ஆனால் அவன் மனம் ஆசைகள் நிரம்பிய அஞ்ஞானத்தால் குன்றிமணி மூக்கினும் இருண்டிருக்கும். குன்றியின் மூக்குதான் அதன் முளையுள்ள இடம். அந்த மூக்கிலிருந்துதான் குன்றி மரம் முளைத்து வளர்ந்து விரியும். மனிதனுடைய மனத்தி லிருந்துதான் எண்ணங்கள் முளைத்து விரிந்து வாழ்க்கை நடத்துவது. வாழ்க்கையின் முளைவரக் கூடிய மனம் அஞ்ஞானத்தில் இருண்டு கிடந்தால் அங்கிருந்து முளைக்கின்ற எண்ணங்களெல்லாம் அஞ்ஞானமாகத்தான் இருக்கும் என்பது கருத்து.

உலகத்தை வஞ்சிக்க எண்ணியே தவவேடம் தரிப்பவர் பலர் உண்டு:

278. மனத்தது மாசாக மாண்டார்நீ ராடி
மறைந்தொழுகு மாந்தர் பலர்.

ப. ரை: மனத்தது மாசாக மாண்டார் நீராடி மறைந்து ஒழுகும் மாந்தர் பலர் = மனதில் குற்றமான நோக்கங்களைக் கொண்டே பெரியோர்களின் இயல்பை நடித்து, மறைந்து வாழும் மக்கள் பலருண்டு.

பொ. ரை: மனதில் கெட்ட நோக்கங்களை வைத்துக் கொண்டு அதற்காகவே துறவிகள் போல வேடம் பூண்டு, நடித்துக் கள்ளவாழ்க்கை நடத்துகிற மனிதர்கள் பலர் உண்டு.

வி-ம்: துறவு பூண்டவர்களுக்கு மற்ற மக்கள் மிக்க மரியாதை காட்டி எல்லா வசதிகளையும் செய்து கொடுத்து, தம்முடைய வீடுகளில் அவர்களுக்குச் சிறப்பிடம் தந்து, பூசனை புரிவார்களானதால் தம்முடைய தீய ஆசைகளைப் பூர்த்தி செய்து கொள்ள அந்த வசதிகளைப் பயன் படுத்திக் கொள்ளும் கெட்ட எண்ணங் கொண்டே துறவறம் மேற் கொள்ளுகிறவர்கள் பலர் உண்டு.

ஆதலால் துறவிகளானாலும் சரி, மற்றவர்களானாலும் சரி, யாரையும் அவர்களுடைய வேடத்தை மட்டும் நம்பி ஏமாந்து விடக் கூடாது :

**279. கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.**

ப. ரை: கணை கொடிது; யாழ்கோடு செவ்விது; ஆங்கன்ன வினை படு பாலால் கொளல் = அம்பு கொடுமை செய்வது, வீணையின் கோணல் இன்பம் செய்வது, அப்படிப் போல (மக்களை அவரவர்கள்) செய்யும் செய்கைகளின் தன்மையினால் கொள்ள வேண்டும்.

பொ. ரை: பாணம் கோணலின்றி இருந்தாலும் அது கொலை செய்யக் கூடியது. வீணை கோணலாக இருந்தாலும் இனிமை செய்யக் கூடியது. அப்படிப் போல மக்களை அவரவர்கள் செய்யும் காரியங்களின் தன்மையை அறிந்து அவர்களை மதிப்பிட வேண்டும்.

வி-ம்: வில்லில் தொடுத்து விடப்படும் பாணம் பார்ப்பதற்கு நேராகவும் பளபளப்பாகவும் அழகாகவும் இருந்தாலும் அது செய்வது கொலைத் தொழில். வீணையானது பல கோணல்களும் மூலை முடுக்குகளுமாகப் பார்ப்பதற்கு நன்றாக இல்லாவிட்டாலும் அது மக்களுக்கு இன்பம் உண்டாக்குவது. அது போல மக்களில் பலவித சின்னங்களை அணிந்துகொண்டு பார்வைக்கு வெகு நல்லவர்கள் போலத் தீய காரியங்களையே செய்கிறவர்களும் உண்டு. ஒரு விதச் சின்னமும் இல்லாமல் பார்வைக்கு அழகில்லாதவர்களாக வெகு நல்ல காரியங்களையே செய்கிறவர்களும் உண்டு. ஆகையினால் வேடங்களைக் கண்டு ஏமாந்து விடக் கூடாது.

மனத்துறவு உள்ளவர்களுக்குத் தவவேடச் சின்னங்கள் வேண்டியதே இல்லை :

**280. மழித்தலு நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின்.**

ப. ரை: உலகம் பழித்தது ஒழித்துவிடின் மழித்தலும் நீட்டலும் வேண்டா = உலகத்தார் பழிகள் என்று சொல்லக் கூடிய குற்றங்களை நீக்கி விட்டால் மொட்டையடிப்பதும் முடிவளர்ப்பதும் வேண்டியதில்லை.

பொ. ரை: உலகத்தில் பழிகள் என்று விலக்கப்பட்ட குற்றங்களைச் செய்யாதிருந்தால் மொட்டையடித்துக் கொள்ளுவதும் தலை முடி, தாடி முதலியவற்றை நீண்டு வளர விடுவதும் முதலான சின்னங்கள் வேண்டியதில்லை.

வி-ம்: பழிச் சொல்லுக்கு ஆளாக்கக் கூடிய தீய செயல்களை அடியோடு விட்டுவிட்டால் அதுவே துறவறம். 'உலகம் பழித்தது' என்பது உலகம் இதுவரையில் கண்ட அனுபவத்தை அறிந்தவர்கள் பழிகள் என்று சொல்லியிருக்கிற குற்றங்கள். 'ஒழித்தல்' என்பது ஒரு சிறிதும் மிச்சமின்றி அடியோடு விட்டு விடுதல்.

அதி. 29—கள்ளாமை

[கள்ளாமை என்பது பிறருக்குச் சொந்தமான எதையும் சொந்தக்காரனுக்குத் தெரியாமல் திருடிக் கொள்ள நினையாதிருத்தல். இது எல்லா மக்களுக்கும் நல்ல குணம். ஏன் இது துறவறத்தில் சொல்லப்படுறதென்றால்: துறவியானவன் ஒரு உடைமையும் பணமும் இல்லாதவன். இல்லறத்தாருடைய அன்பினால் தான் அவனுக்கு உணவு முதலியன கிடைக்க வேண்டும். அந்த உதவிகள் சில சமயங்களிற் கிடைக்காமற் போகலாம். அப்போது எப்படியாவது பசிக் கொடுமையைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற அவசரத்தில் திருடுவதற்கு எண்ணம் உதித்து விடலாம். பசியைப் பொறுத்துக் கொள்ள முடியாவிட்டால் பிச்சை கேட்டாவது பசியைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமேயன்றி துறவியானவன் திருடிப் புசிக்க எண்ணிவிடக் கூடாது. மற்றவர்கள் திருடினால் குற்றம். ஆனால் துறவிக்குத் திருட்டு எண்ணம் உதித்தாலே போதும், அப்போதே அவன் துறவறம் பழுது பட்டதாகும். அந்த அளவில் கள்ளாமை துறவறத்தைச் சேர்ந்தது. மற்றபடி இந்த அதிகாரத்திலுள்ள பல நீதிகளும் எல்லாருக்கும் பொது.]

281. எள்ளாமை வேண்டுவா னென்பா னெனைத்தொன் றுங்
கள்ளாமை காக்கதன் னெஞ்சு.

ப. ரை: எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்து ஒன்றும் தன் நெஞ்சு கள்ளாமை காக்க = இகழ்ச்சி வராமல இருக்க

வேண்டுமென்று விரும்புகின்றவன் எந்த ஒரு பொருளையும் திருடிக் கொள்ள தன் மனம் எண்ணாமலிருப்பதைக் காக்க வேண்டும்.

பொ. ரை: தனக்கு இகழ்ச்சி வரக்கூடாதென்று விரும்புகின்ற ஒருவன் எந்தப் பொருளையும் திருடி எடுத்துக் கொள்வதைத் தன் மனம் நினைக்காமலிருக்கும்படி காக்க வேண்டும்.

வி-ம்: 'எள்ளாமை வேண்டுவான்' என்பது, தான் மேற்கொண்ட அறத்துக்கும் தனக்கும் இகழ்ச்சி வராதிருத்தல் வேண்டுகின்றவன்.

திருடுவதை மனத்தால் நினைத்தாலும் அறம் கெட்டுவிடும்:

282. உள்ளத்தா லுள்ளலுந் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தாற் கள்வே மெனல்.

ப. ரை: பிறன் பொருளை கள்ளத்தால் கள்வேம் எனல் உள்ளத்தால் உள்ளலும் தீதே = பிறருடைய பொருளைத் திருடி எடுத்துக் கொள்வோம் என்பதனை மனதால் நினைத்தாலும் கெடுதியே.

பொ. ரை: இன்னொருவனுக்குச் சொந்தமான பொருளை திருடிக் கொள்ளலாம் என்று நெஞ்சில் நினைத்தாலும் கெடுதல் உண்டாகும்.

வி-ம்: திருடி யெடுத்துக் கொள்ள நினைப்பது யாருக்கும் கூடாது. எனினும் சிறப்பாகத் துறவியினுடைய உள்ளம் ஆசைகள் அற்றதாகி இறைவனிடத்தில் ஈடுபட்டிருக்கவேண்டியது. ஆனதினால் ஆசைப்படுகிற எண்ணம் சிறிது காலந்தான் என்றாலும் துறவு நிலை உடனே பழுதாகும்.

துறவிகளுக்காயினும் சரி மற்றவர்க்காயினும் சரி:

283. களவினா லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

ப. ரை: களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து ஆவது போல கெடும் = திருட்டுத் தொழிலால் வரக்கூடிய செல்வம் அளவு கடந்து அதிகப்படுவது போலத் தோன்றி அழிந்து போகும்.

பொ. ரை: திருட்டுத் தொழிலால் அடையக் கூடிய செல்வம் அளவிட முடியாதபடி பெருகுவது போலக் காட்டி, திடீரென்று இல்லாது போகும்.

வி - ம்: 'களவினால் ஆகிய ஆக்கம்' என்பது களவு செய்ய விரும்பும் எண்ணத்தினால் வந்த செல்வம். அந்தச் செல்வம் முழுவதும் கைக்கு வந்து விட்ட செல்வம் அல்ல. கைக்கு வந்து விட்டது போலக் களவு மனம் எண்ணுகின்ற செல்வம். களவில் இறங்கிவிட்ட மனம் இரண்டொரு பொருளைக் கள்ளினால் வசப்படுத்திக் கொண்ட பின் மேலும் மேலும் களவுகளுக்குத் திட்டமிட்டுப் பல கனவுகளை எண்ணிக் கொண்டே போகும். அந்த எண்ணத்தில் 'களவினால் ஆகிய ஆக்கம்' 'அளவிறந்து ஆவது போல'த் தோன்றும். ஆனால் உடனே மறைந்து விடும். அதுமட்டு மல்ல. களவினால் அளவிறந்த செல்வம் கைக்கு வந்து விட்டாலும் களவு போன செல்வத்தை சொந்தக்காரர்கள் தேடிப் பிடிக்க முயலும் போது களவு போன ஒரு பொருளைக் கண்டு கொண்டாலும் அதன் மூலமாக அந்தக் களவாளி அதுவரைக்கும் களவினால் சேகரித்த செல்வம் முழுவதும் ஒருமிக்கப் பிடிபட்டுவிடும். ஆதலால் 'களவினால் ஆகிய செல்வம் அளவிறந்து ஆவது போலக் கெடும்'.

அதனால் களவுகளுக்குத் திட்டம் போடுகிற மனமுள்ளவன் பல துன்பங்களை அடைவான் :

284. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

ப. ரை : களவின் கண் கன்றிய காதல் விளைவின் கண் வீயா விழுமம் தரும் = திருட்டுத் தொழிலில் முற்றிவிட்ட ஆசை. பயன் கொடுக்கும்போது ஓயாத துன்பங்களைத் தரும்.

பொ. ரை : திருடுவதில் ஆசை வளர்ந்து விட்டால் அதன் பயனாக ஓயாத துன்பங்கள் வரும்.

வி - ம்: திருடுவதில் ஆசை வந்து விட்டால் அதை விட்டொழிப்பது கடினம். எங்கு போனாலும் எதைச் செய்யும் போதும் நாட்டம் திருடுவதிலேயே குறியாக இருக்கும். பல முறை தண்டிக்கப்பட்டாலும் அந்தத் திருட்டுப் பழக்கம் விடாது. அதனால் 'ஓயா விழுமம் தரும்'.

திருட்டு ஆசை வந்து விட்டவனுடைய மனதில் நல்ல எண்ணங்களுக்கு இடமில்லாமற் போய்விடும் :

285. அருள்கருதி யன்புடைய ராதல் பொருள்கருதிப்
பொச்சாப்புப் பார்ப்பார்க ணில்.

ப. ரை : பொருள் கருதி பொச்சாப்பு பார்ப்பார்கண் அருள் கருதி அன்புடையர் ஆதல் இல் = ஒரு பொருளை திருட

நினைத்து (பொருளுக்கு உடையவன்) ஏமாரும் தருணத்தைப் பார்த்துக் கொண்டிருப்பவர்களிடத்தில் அருளை விரும்பி அன்புள்ளவர்களாகும் முயற்சி இருக்காது.

பொ. ரை: ஒரு பொருளைத் திருட நினைத்து அந்தப் பொருளுக்குச் சொந்தக்காரன் ஏமாரும் சமயத்தைப் பார்த்துக்கொண்டிருப்பவர்களிடம் அருளைக் கருதி அன்பு செய்யும் குணம் இருக்க முடியாது.

வி-ம்: திருடுவதில் ஆசை மிகுந்து விட்டவன் திருடுவதற்கு இடமும் தருணமும் பார்த்துக் கொண்டு அதே நினைப்பாக இருப்பான். அவனுக்கு அருளை நாடி அன்பு செய்ய மனமோ நேரமோ ஏது?

திருட்டு எண்ணமுள்ளவர்கள் தாம் மேற்கொண்ட நெறியின் அளவறிந்து வாழ்க்கை நடத்த மாட்டார்கள்:

**286. அளவின்க ணின்றொழுக லாற்றார் களவின்கட்
கன்றிய காதலவர்.**

ப. ரை: களவின் கண் கன்றிய காதலவர் அளவின் கண் நின்று ஒழுகல் ஆற்றார் = திருடுவதில் முதிர்ந்த ஆசையுள்ளவர்கள் அளவோடு நின்று வாழ்க்கை நடத்த மாட்டார்கள்.

பொ. ரை: திருடுவதில் அதிகமான ஆசை கொண்டு விட்டவர்கள் தங்களுடைய நிலைமைக்குத் தகுந்த வரையறையோடு அடங்கி வாழ்க்கை நடத்த மாட்டார்கள்.

வி-ம்: திருடி வரக் கூடிய பொருளைக் கணக்கிட்டு தம்முடைய சக்திக்கும் தகுதிக்கும் மீறிய காரியங்களையே செய்வார்கள். 'அளவு' என்பது. தான் நிற்க வேண்டிய வரம்பு. இங்கு 'அளவைகள்' என்ற தத்துவப் பிரமாணங்களைப் போட்டுக் குழப்புவது சரியல்ல. அது வள்ளுவர் கருத்து ஆகாது.

தாம் மேற்கொண்ட வாழ்க்கையின் அளவறிந்து நடப்பவர்கள் திருடுவதை நினைக்க மாட்டார்கள்:

**287. களவென்னுங் காரறி வாண்மை யளவென்னு
மாற்றல் புரிந்தார்க ணில்.**

ப. ரை: களவு என்னும் கார் அறிவாண்மை அளவு என்னும் ஆற்றல் புரிந்தார் கண் இல் = திருட்டு என்ற இருண்ட மனப்பான்மை, அளவு என்ற வல்லமை உள்ளவர்களிடத்தில் இருக்காது.

பொ. ரை: அளவோடு வாழ்க்கை நடத்தக் கூடிய மனவலிமை உள்ளவர்களிடத்தில் திருட்டு என்ற இருட்டறிவு இருக்காது.

வி-ம்: தாம் மேற்கொண்ட அறத்தின் வரையறைகளுக்கு அடங்கி நடந்து கொள்ளும் திடசித்தமுள்ளவர்கள் திருட்டுத் தொழிலை எண்ண வேண்டிய அவசியமே ஏற்படாது.

ஆகையினால்:

288. அளவறிந்தார் நெஞ்சத் தறம்போல நிற்குங்
களவறிந்தார் நெஞ்சிற் கரவு.

ப. ரை: அளவு அறிந்தார் நெஞ்சத்து அறம் நிற்கும் (அது) போல களவு அறிந்தார் நெஞ்சிற் கரவு (நிற்கும்) = அளவோடு நடந்து கொள்ள அறிந்தவர்கள் மனதில் (அவர்கள் மேற்கொண்ட) அறம் நிற்கும். அதுபோல. திருட்டுத் தொழில் பழகியவர்கள் மனதில் (அவர்கள் மேற் கொண்ட அறத்தின்) மறைவு நிற்கும்.

பொ. ரை: தாம் மேற்கொண்ட அறத்தின் அளவோடு காரியங்களைச் செய்யத் தெரிந்தவர்களுடைய மனதில் அந்த அறம் இருந்துகொண்டே யிருக்கும். அந்த அளவுக்கு மீறி திருடப் பழகினவர்கள் மனதில் அந்த அறம் மறைந்து விடும். (கரந்து கொள்ளும்).

வி-ம்: துறவிக்கு அளவாவது: உலக ஆசைகளை விட்டுவிட்டுப் பசி தாகத்தையும் பாராட்டாமல் இறைவனை இடையறாது சிந்திப்பதும்; பசிக் கொடுமை அதிகப்பட்டபோது இல்லறத்தாரிடம் பிச்சை கேட்டுப் பசிநீங்கி மீண்டும் தன் தவ நிலையிலேயே நிற்பதும். அதை விட்டுத் துறவியானவன் தன் கையில் பொருள் வைத்துக்கொண்டு, தன் இச்சைப்படி எதையும் வாங்கிப் புசிப்பது அவனுக்கு வரையறுக்கப்பட்ட அளவை மீறுவதாகும். அப்படி மீறிய குற்றங்களைச் செய்வதற்குப் பொருள் வேண்டுமென்றுதான் துறவி திருடத் தொடங்குவது. இப்படி ஒவ்வொரு மனிதனும் அவனவன் நிற்கின்ற நிலைக்குத் தக்க அளவோடு செயல்களைச் செய்வது தான் 'அளவறிதல்'.

களவு மனம் வந்துவிட்டால் அளவோடு நிற்காது. அதனால் அவர்கள் செய்வதெல்லாம் அளவுக்கு மீறியதாகும்:

289. அளவல்ல செய்தாங்கே வீவர் களவல்ல
மற்றைய தேற்றா தவர்.

ப. ரை: களவல்ல மற்றைய தேற்றுதவர் அளவல்ல செய் தாங்கே வீவர் = திருடுவதைத் தவிர மற்ற எதையும் அறியாதவர்கள் அளவுக்குமீறிய செயல்களைச் செய்து கொண்டே கெட்டுப் போவார்கள்.

பொ. ரை: களவு ஆசை வந்து விட்டவர்கள் திருடுவதைத் தவிர வேறு எதிலும் மனந்தேறுதவர்களாகி அளவுக்கு மீறிய காரியங்களைச் செய்து கொணடே கெட்டுப் போவார்கள்.

வி - ம்: 'அளவல்ல செய்தல்' தம்முடைய நிலைமைக்குத் தகாதவைகளைச் செய்தல். 'செய்தாங்கே வீவர்' செய்து கொண்டே கெட்டுப் போவார்கள். அதாவது அவர்கள் தம்முடைய வரம்பு கடந்த ஆசைகளுக்காகத்தான் களவை மேற்கொண்டவர்கள். தாம் மேற்கொண்ட அறத்தின் வரம்பைக் கடந்து களவில் இறங்கி அளவுக்கு மீறின அவர்கள், களவு காரியங்களிலும் அளவுக்கு மீறியதையே செய்வார்கள். அறத்திலும் கெட்டு களவிலும் கெட்டு அவர்களுடைய வாழ்க்கை பாழாகும்.

ஆதலால் :

290. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

ப. ரை: கள்வார்க்கு உயிர் நிலை தள்ளும். கள்ளார்க்கு புத்தேள் உலகு தள்ளாது = திருடுகின்றவர்களுக்கு வாழ்க்கை தடுமாறும். திருடாதவர்களுக்குத் தேவருலகம் தடுமாற்றமின்றிக் கிடைக்கும்.

பொ. ரை: திருட்டுத் தொழிலில் இறங்குகின்றவர்களுக்கு சிவனத்துக்கும் தடுமாற்றம் உண்டாகிவிடும். திருடுவதை நினையாதவருக்கு தேவலோகம் கிடைப்பதும் எளிதாகும்.

வி - ம்: 'உயிர் நிலை' — உயிர் உடலோடு நிலைத்திருக்கும் வழி. அதாவது சிவனம் செய்யும் வழி. திருட்டில் பழகினவர்களுக்குக் கடைசியில் சோறு கிடைப்பது கூட திண்டாட்டமாகி விடும். திருட்டு எண்ணமே இல்லாதவர்களுக்கு ஆன்ம பலம் அதிகப்பட்டு வீடுபெறல் எளிதாகும்.

அதி. 30—வாய்மை

[வாய்மை என்பது வாயால் பேசுப்படுகிற உண்மை. உண்மை என்பது உள்ளம் அறிந்த சத்தியம். மெய்மை என்பது உள்ளத்துக்கும் சொல்லுக்கும் ஒத்ததாக உடல் (மெய்) செய்கின்ற சத்தியச் செயல். இப்படி மனம், வாக்கு, காயம்

ஆகிய மூன்றும் தனித்தனியே காக்கின்ற சத்தியத்தை முறையே உண்மை, வாய்மை, மெய்மை என்பது தமிழ் வழக்கு. எனினும பிரயோகத்தில் இந்த மூன்று சொற்களும் 'பொய் சொல்லாமை' என்ற ஒரு பொருளைக் குறிக்கவே உபயோகிக்கப்படுவது வழக்கமாகி விட்டது; இந்த அதிகாரத்தில் துறவியானவன் உள்ளம். வாய். மெய் என்ற மூன்றுக்கும் ஒத்ததான சத்தியத்தைக் காக்கவேண்டும் என்பது சொல்லப்படுகிறது. எல்லா மக்களுக்கும் வாய்மை வேண்டும். ஆனல் துறவு பூண்டவன் வாய்மை தவறினல் உடனே துறவறம் பழுதுபடும் என்பதனல் இது துறவறத்தில் வைக்கப்பட்டுள்ளது.]

291 வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந்
தீமை யிலாத சொலல்.

ப. ரை: வாய்மை எனப்படுவது யாது எனின் யாதொன்றும் தீமை இலாத சொலல் = வாய்மை என்று சொல்லப்படுவது எதுவென்ருல் சிறிதளவு கூடத் தீங்கு செய்யாத சொற்களைச் சொல்லுவது.

பொ. ரை: வாய்மை என்பது என்னவென்ருல் யாருக்கும் எந்த விதமான தீமையும் உண்டாக்காத வார்த்தைகளைச் சொல்லுவது.

வி-ம்: தீங்கு பயக்கக்கூடிய எந்தச் சொல்லும் வாய்மை யாகாது.

தீமையே இல்லாத நன்மை பயக்குமானல்:

292. பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்.

ப. ரை: புரைதீர்ந்த நன்மை பயக்கும் எனின் பொய்மையும் வாய்மை இடத்த = குற்ற மில்லாத நன்மை உண்டாக்குமானல் பொய் சொல்லுவதும் வாய்மையோடு சேர்ந்தது.

பொ. ரை: குற்றமற்ற ஒரு நன்மை உண்டாக்கும் நோக்கத்துடன் ஒரு பொய்யைச் சொன்னலும் அது வாய்மையாகக் கொள்ளப்படும்.

வி-ம்: 'புரைதீர்ந்த நன்மை' என்பது 'யாதொன்றும் தீமை யிலாத' நன்மை. புரை தீர்ந்த நன்மையைக் கருதி, பொய் யுரைப்பதற்கு உதாரணம்: ஒரு தாயானவள் பல பொய்களைச் சொல்லி தன் குழந்தைக்கு மருந்தெண்ணை ஊட்டுவது

போன்றது. புரையுள்ள நன்மைக்கு உதாரணம்: ஒருவன் தனக்கு வேண்டிய நண்பன் இன்னொருவனுக்குக் கொடுமை செய்துவிட்டதைப் பார்த்துக் கொண்டிருந்தான். தன்னுடைய நண்பன் செய்துவிட்டது அநீதி என்பது தெரியும். ஆனாலும் தன்னுடைய நண்பனைத் தப்ப வைக்க வேண்டுமென்ற நன்மையைக் கருதி அவன் அப்படிச் செய்யவில்லை என்று பொய் சொல்லுகிறான். இது தன்னுடைய நண்பனுக்கு நன்மையுள்ளதானாலும் இன்னொருவனுக்கு அநியாயம் செய்கிற புரை உள்ளது. அதனால் வாய்மையோடு சேராது.

புரை தீர்ந்த நன்மை எது. புரை தீராத நன்மை எது, என்பதை எப்படி அறிவது என்றால்:

293. தன்னெஞ் சறிவது பொய்யற்க பொய்த்தபின்
றன்னெஞ்சே தன்னைச் சுடும்.

ப. ரை: தன் நெஞ்சு அறிவது பொய்யற்க; பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னைச் சுடும் = தன்னுடைய மனச்சாட்சி அறிந்ததைப் பொய்யாக்கக் கூடாது. பொய்யாக்கினால் தன்னுடைய மனச்சாட்சியே தன்னை வருத்தும்.

பொ. ரை: ஒருவன் தன்னுடைய மனச்சாட்சி சத்தியமென்று அறிந்ததைப் பொய்யாக்கும்படி எதையும் சொல்லிவிடக் கூடாது. அப்படிச் சொன்னால் அவனுடைய மனச்சாட்சியே அவனை இடித்து வருத்தப்படுத்தும்.

வி - ம்: எதைச் சொன்னாலும், சொல்லுவது நன்மை பயக்குமா தீமை பயக்குமா என்று ஆலோசிக்க வேண்டும். அப்படி ஆலோசிக்கும் பொழுது தன்னுடைய மனச்சாட்சி எது சரி என்று அறிவிக்கிறதோ அதைச் சொல்ல வேண்டும். ஒருவனுடைய கண்ணும் காதும் அறிந்தது மட்டும் வெளியிடத் தகுந்த வாய்மையாகிவிடாது. கண்டதையும் கேட்டதையும் தன் அறிவோடு சேர்த்துப் பார்க்கும்போது மனச்சாட்சி அறிவிப்பதுதான் சொல்ல வேண்டிய வாய்மை.

சொல்லுவது வாய்மையா அல்லவா என்பதற்குச் சொல்லுகிறவனுடைய எண்ணம் நல்லதா கெட்டதா என்பதுதான் அளவுகோல். உள்ளம் நல்லதானால் நோக்கமும் பயனும் நல்லனவேயாகும். அப்படி உள்ளம் பொய்யாதிருந்தால்:

294. உள்ளத்தாற் பொய்யா தொழுகி னுலகத்தா
ருள்ளத்து ளெல்லா முளன்.

ப. ரை: உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் உளன் = மனச்சாட்சிக்குப் பொய்யில்லா

மல் நடந்து கொண்டால், அவன் உலகத்தார் எல்லாருடைய மனதிலும் இருப்பவனாவான்.

பொ. ரை: மனச்சாட்சிக்குப் பொய்யனாகாமல் நடந்து கொள்ளுகிற ஒருவன் உலகிலுள்ள மற்றெல்லாராலும் மதிக்கப்படுவான்.

வி-ம்: மனச்சாட்சிக்குப் பொய்யனாகாமல் நடந்து கொள்ளக் கூடியவன் வாயால் ஒரு பொய்யே சொன்னாலும் பிறருக்குப் புரை தீர்ந்த நன்மை உண்டாக்கும் நோக்கத்தோடுதான் சொல்லுவான். யாருக்கும் தீமை உண்டாக்கக்கூடிய எதையும் சொல்லமாட்டான். ஆதலால் அவன் என்ன சொன்னாலும் அது சத்தியம் என்று மற்றவர்கள் பாராட்டி அவன் சொன்னதை ஒத்துக்கொள்வார்கள். 'உலகத்தார்........எல்லாம்' என்பது அவனை அறிந்த மற்ற எல்லாரும் என்பது தான்.

இப்படி மனச்சாட்சிக்குப் பொய்யனாகாமல் பிறருக்குக் குற்றமற்ற நன்மையை நாடி வாயால் பொய் சொன்னாலும் கூட அப்படிப்பட்டவன் உலகத்தார் உள்ளத்துளெல்லாம் இருப்பான் என்றால், மனச்சாட்சிக்கும் பொய்யனாகாமல் வாயாலும் பொய் சொல்லாமல் இருக்கக் கூடியவன் உண்டானால் :

295. மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு
தானஞ்செய் வாரிற் றலை.

ப. ரை: மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு தானம் செய்வாரின் தலை = மனச்சாட்சிக்கும் மெய்யனாகி வாயாலும் மெய்யே பேசினால் (அவன்) தவமும் தானமும் ஒருங்கே செய்கிறவர்களைக் காட்டிலும் சிறந்தவன்.

பொ. ரை: மனச்சாட்சிக்கும் மெய்யனாகி, வாயாலும் மெய்யே பேசக்கூடுமானால் அப்படிப்பட்டவன் தவத்தையும் தானத்தையும் ஒருங்கே செய்யக் கூடியவர்களுக்கும் சிறந்தவனாவான்.

வி-ம்: மனமும் சொல்லும் இரண்டும் சேர்ந்து ஒரே காலத்தில் வாய்மை காப்பது மிகவும் கடினமான காரியம். உள்ளபடி சொன்னால் பிறருக்குத் தீங்கு வருவதை அஞ்சி, சில சமயங்களில் 'பொய்மையும் வாய்மையிடத்ததாம் புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்' என்பதற்கிணங்க பொய் சொல்ல வேண்டியிருக்கும். அந்தச் சமயத்தில் மனம் வாய்மையைக் கருதி, வாய் பொய்யைச் சொல்லுகிறது. அப்படிச் செய்யாமல் தீமை வருமென்று மனம் சொல்லுவதை

மதிக்காமல் உள்ளபடியே சொல்லி விட்டால் மனச் சாட்சி பொய்யாகிவிட, நாக்கு வாய்மையைச் சொல்லுகிறது. இந்த இரண்டு சங்கடங்களும் இல்லாதபடி மனச்சாட்சியும் பொய் யாகாமல் சொல்லும் சொற்களும் பொய்யில்லாமல் வாய்மை காப்பவர்கள் மிகவும் அருமை. அப்படிப்பட்டவர் கள் தவம் தானம் முதலிய எல்லா அறங்களையும் ஏககாலத் தில் செய்யக் கூடியவர்களைக் காட்டிலும் சிறந்தவர்கள்.

ஆகையால் மனத்தாலும் வாக்காலும் பொய் சொல்லா திருப்பதைக் காட்டிலும் சிறந்த அறம் வேறில்லை. ஏன் எனில் :

**296. பொய்யாமை யன்ன புகழில்லை யெய்யாமை
யெல்லா வறமுந் தரும்.**

ப. ரை : பொய்யாமை அன்ன புகழ் இல்லை. எய்யாமை எல்லா அறமும் தரும் = பொய் சொல்லாதிருத்தலைப் போன்ற புக ழுண்டாக்குவது வேறொன்றும் இல்லை. (வேறு) முயற்சி இல் லாமலேயே எல்லா தர்மங்களையும் கொடுக்கும்.

பொ. ரை : பொய் சொல்லாதிருப்பதை விட கீர்த்தி தரக்கூடி யது வேறொன்றுமில்லை. வேறு முயற்சிகள் செய்து பாடு படாமலேயே எல்லா தர்ம பலன்களையும் தரும்.

வி-ம் : 'எல்லா அறமுந்தரும்' என்பது எல்லா அறங்களின் பயனையும் அதுவே தரும் என்ற பொருளுடையது. புகழையும் எல்லா அறங்களின் பயனையும் தரும் என்பதனால் இம்மைக் கும் மறுமைக்கும் அதுவே போதும் என்பதைக் குறிப்ப தாகும். இங்கே 'பொய்யாமை' என்பது 'மனத்தொடு வாய்மை மொழிதல்' என்பதையே குறிக்கும். வெறும் வாய்மையல்ல.

ஆகையினால் பொய்யாமையைக் கடைப் பிடித்தாலே போதும். வேறு அறம் செய்ய வேண்டாம் :

**297. பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.**

ப. ரை : பொய்யாமை பொய்யாமை ஆற்றின் பிற அறம் செய் யாமை செய்யாமை நன்று = பொய் சொல்லாதிருத்தல் பொய்த்துப் போகாமல் கடைப்பிடித்தால் வேறு தர்மங் களைச் செய்யாதிருப்பதே – செய்யாதிருப்பதே – நல்லது.

பொ. ரை : பொய் சொல்லா அறத்தைத் தவறின்றிக் காத்தால் வேறு அறம் ஒன்றும் செய்யாதிருப்பதே நல்லது.

வி - ம் : 'செய்யாமை செய்யாமை' என்ற அடுக்கு வலியுறுத்தச் சொன்னது. 'பொய்யாமை.......... எய்யாமை எல்லா அறமும் தரும்' ஆனதால் பொய்யாமையில் மற்ற எல்லா அறங்களும் அடங்கும்.

எல்லா அறங்களுக்கும் மனம் சுத்தமாக இருக்க வேண்டியதே முதன்மையானது. மனச்சுத்தமென்பது பொய்யாமையினுல் தான் வரும் :

**298. புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப் படும்.**

ப. ரை : புறம் தூய்மை நீரான் அமையும் அகம் தூய்மை வாய்மையான் காணப்படும் = உடலின் வெளிப்புறத்தின் சுத்தம் தண்ணீரால் பெறலாம் (உடலின் உட்புறமாகிய) மனச் சுத்தம் வாய்மையினுல் உண்டாக வேண்டியது.

பொ. ரை : உடலின் வெளிப் புறத்தை தண்ணீரால் சுத்தப் படுத்திக் கொள்ளலாம். உடலின் உட்புறமாகிய மனதைச் சுத்தப்படுத்த வாய்மைதான் வேண்டும்.

வி - ம் : உடலின் அழுக்கைப் போக்கத் தண்ணீர் போதும். ஆனுல் உள்ளத்தின் அழுக்கைப் போக்கச் சத்தியம்தான் வேண்டும்.

சான்ருேருக்கு வழிகாட்டி சத்தியந்தான் :

**299. எல்லா விளக்கும் விளக்கல்ல சான்ருேர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.**

ப. ரை : சான்ருேர்க்கு எல்லா விளக்கும் விளக்கு அல்ல; பொய்யா விளக்கே விளக்கு = மேலான அறிவுடையவர்களுக்கு மற்ற விளக்குகளெல்லாம் வழிகாட்டும் வெளிச்சமல்ல. பொய் சொல்லாமையே அவர்களுக்கு வழிகாட்டும் ஒளியாகும்.

பொ. ரை : உயர்ந்த அறிவுடைய மேலோர்க்கு வழிகாட்டுவது மற்ற விளக்குகள் அல்ல. சத்தியம்தான் அவர்களுக்கு வழி காட்டும் விளக்கு.

வி - ம் : சத்தியத்தை உணர்ந்து அது காட்டும் வழியில்தான் சான்ருேர்கள் நடப்பார்கள். உலக நடையின் அஞ்ஞான இருளை அவர்கள் சத்தியத்தின் ஒளி கொண்டுதான் கடப்பார்கள்.

சத்தியத்தைக் காட்டிலும் சரியான வழிகாட்டி வேறில்லை;

**300. யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும்
வாய்மையி னல்ல பிற.**

ப. ரை: யாம் மெய்யாக் கண்டவற்றுள் வாய்மையின் நல்ல பிற எனைத்தொன்றும் இல்லை = நாம் ஆராய்ந்தறிந்த உண்மைகளுக்குள் வாய்மையைக் காட்டிலும் நல்ல துணை வேறொன்றும் இல்லை.

பொ. ரை: நாம் அறிந்த உண்மைகளுக்குள் பொய் சொல்லாமை என்பதைக் காட்டிலும் நல்ல துணை வேறொன்றும் இல்லை.

வி-ம்: 'மெய்யாக் கண்டவை' என்பது கற்றும் கேட்டும் அனுபவித்தும் அறிந்த உண்மைகள். சத்தியத்தைக் கடைப்பிடிப்பதைக் காட்டிலும் உயர்ந்த அறிவே இல்லை யென்பது கருத்து.

அதி. 31—வெகுளாமை

['வெகுளாமை' என்பது 'கோபங்கொள்ளாதிருப்பது'. பொதுவாக கோபம் யாருக்குமே கூடாது. துறவறம் மேற்கொள்ளுகிறவன் மிகவும் எச்சரிக்கையாக கோபத்தை விலக்க வேண்டும் என்பதற்காக துறவறத்தில் சொல்லப்பட்டது.]

**301. செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பா னல்லிடத்துக்
காக்கினென் காவாக்கா லென்.**

ப. ரை: செல் இடத்து காப்பான் சினம் காப்பான். அல் இடத்தில் காக்கில் என் காவாக்கால் என் = செல்லக் கூடிய இடத்தில் (செலுத்தி விடாமல்) அடக்குகிறவன் தான் கோபத்தை அடக்கினவன். மற்ற இடத்தில் அடக்கினால் என்ன அடக்காவிட்டால் என்ன?

பொ. ரை: செல்லக்கூடிய இடத்தில் செலுத்திவிடாமல் கோபத்தை அடக்குகிறவன்தான் அதை அடக்கினவனாவான். மற்ற இடத்தில் அடக்கினாலென்ன அடக்காவிட்டால் தான் என்ன?

வி-ம்: தன்னைக் காட்டிலும் பலம் குறைந்தவனிடத்தில்தான் தன்னுடைய சினம் செல்லும். தன்னைக் காட்டிலும் பலம் மிகுந்தவனிடத்திலும் சமானமானவனிடத்திலும் செலுத்த முடியாது. செலுத்தக் கூடிய இடத்தில் செலுத்தி விடாமல்

அடக்குவதுதான் ஒருவன். தான் அதை அடக்கினதாகும். மற்ற இடங்களில் அந்தக் கோபம் தானாக அடங்குகிறதே யன்றி இவன் அடக்குகிறது ஒன்றுமில்லை.

செல்லும் இடமோ செல்லாத இடமோ எந்த இடத்திலும் சினம் தீங்கே செய்யும் :

302. செல்லா விடத்துச் சினந்தீது செல்லிடத்து
மில்லதனிற் றீய பிற.

ப. ரை: செல்லா இடத்து சினம் தீது. செல் இடத்தும் அதனின் தீய பிற இல் = செலுத்த முடியாத இடத்தில் சினம் தனக்குத் தீங்கு தரும். செலுத்த முடிகிற இடத்திலும் அதைக் காட்டிலும் தீமை செய்வது வேறொன்றும் இல்லை.

பொ. ரை: தன்னுடைய கோபத்தைச் செலுத்தக் கூடாத இடத்தில் செலுத்திவிட்டால் தனக்குத் தீமை உண்டாகும். செலுத்த முடிந்த இடத்தில் செலுத்தினால் அதைக்காட்டிலும் தீமை உண்டாக்குவது வேறொன்றும் இல்லை.

வி-ம்: செலுத்தக்கூடாத இடமாகிய தன்னிலும் பலசாலியிடம் கோபத்தைச் செலுத்தினால் தனக்குத் தீமை உண்டாகும். அந்தத் தீமை தாமதமாக வந்தாலும் வரலாம். ஆனால் செலுத்த முடிந்த இடமாகிய தன்னிலும் மெலிந்தவனிடத்தில் செலுத்தினால் உடனே மற்றவனுக்குத் தீமையும் தனக்குப் பழி பாவமும் உண்டாகும். அதனால் செல்லிடத்தில் சினங் காப்பதுதான் வெகுளாமையாகும்.

செல்லாத இடமானாலும் செல்லும் இடமானாலும் :

303. மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய
பிறத்த லதனான் வரும்.

ப. ரை: யார்மாட்டும் வெகுளியை மறத்தல்; தீய பிறத்தல் அதனால் வரும் = யாரிடத்திலும் கோபம் செலுத்துவதை மறந்துவிட வேண்டும்; தீமைகள் உண்டாகக் கூடிய காரணங்கள் அந்தக் கோபத்தினால் ஏற்படும்.

பொ. ரை: யாரிடத்திலும் கோபம் செலுத்துவதை விட்டுவிட வேண்டும்; ஏனெனில் தீமைகள் உண்டாகக் கூடிய காரணங்கள் கோபிப்பதால் உண்டாகும்.

வி-ம்: 'யார் மாட்டும்' என்பது கோபம் செலுத்தக்கூடிய இடமானாலும் சரி, செலுத்த முடியாத இடமானாலும் சரி, யாரி

டத்திலும் என்று குறிப்பது. 'தீய பிறத்தல்' என்பது தீமைகளுக்கெல்லாம் பிறப்பிடமாகிய பகைமைக் குணம்.

கோபத்தால் பகைமை பிறப்பது எப்படியென்றால் :

304. நகையு முவகையுங் கொல்லுஞ் சினத்திற்
பகையு முளவோ பிற.

ப. ரை: நகையும் உவகையும் கொல்லும் சினத்தின் பகையும் பிற உளவோ = சிரிப்பையும் மகிழ்ச்சியையும் அழித்து விடுகிற கோபத்தைக் காட்டிலும் பகைவன் வேறு உண்டா?

பொ. ரை: (முகம் மலர்ந்து) சிரிப்பதையும் (அகம் மகிழ்ந்து) சந்தோஷப்படுவதையும் அழித்து விடுகிற கோபத்தைக்காட்டிலும் பகைவனும் வேறு உண்டோ?

வி-ம்: பகைவனைக் கண்ட உடன் ஒருவனுடைய சிரிப்பும் மகிழ்ச்சியும் குறைந்து மறைந்துவிடும். அதைக் காட்டிலும் வேகமாக ஒருவனுக்குக் கோபம் உதித்த உடனேயே அவனுடைய சிரிப்பும் மகிழ்ச்சியும் மறைந்து விடும். அதனால் பகைவனைக் காட்டிலும் ஒருவனுடைய இன்பத்தைக் கெடுக்கக் கூடியது கோபம்.

தன்னுடைய கோபம் பிறருக்குத் துன்பம் செய்வதற்கு முன் முதலில் தன்னுடைய இன்பததைக் கொன்று விடுகிறது. அதனால் கோபம் உதித்த உடன் அதை அடக்கிவிட வேண்டும். இல்லாவிட்டால் :

305. தன்னைத்தான் காக்கிற் சினங்காக்க காவாக்காற்
றன்னையே கொல்லுஞ் சினம்.

ப. ரை: தன்னை தான் காக்கின் சினம் காக்க = ஒருவன் தன்னைத்தான் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்றால் கோபத்தை அடக்கவேண்டும்; காவாக்கால் சினம் தன்னையே கொல்லும் = அடக்காவிட்டால் அந்தக் கோபம் தன்னையே அழித்துவிடும்.

பொ. ரை: ஒருவன் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ள விரும்பினால் மனதில் கோபம் உதித்தால் உடனே அடக்கி விட வேண்டும். அடக்காவிட்டால் அக் கோபம் தனக்கே அழிவு செய்யும்.

வி-ம்: கோபம் உதித்த உடன் பகைவன் வந்துவிட்ட மாதிரி ஒருவனுக்கு தன்னுடைய சிரிப்பும் மகிழ்ச்சியும் அழிந்து

போகின்றன. அதை உடனே அடக்காவிட்டால் பகைவனைப் போன்ற அக்கோபம் மேலும் பகைவன் செய்யக் கூடிய அழிவுகளைச் செய்து விடும்.

அது மட்டுமல்லாமல்:

306. சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி யினமென்னு
மேமப் புணையைச் சுடும்.

ப. ரை: சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம் என்னும் ஏமப் புணையைச் சுடும் = கோபம் என்கிற சேர்ந்தவர்களையே கொன்று விடக் கூடிய நிமை இனத்தவர் என்று சொல்லக் கூடிய பாதுகாப்புத் துணைவர்களையும் புண்படுத்தி விலக்கி விடும்.

பொ. ரை: சேர்ந்தவர்களைக் கொன்றுவிடக் கூடிய கோபம், ஒருவனுக்கு அபாயகாலத்தில்பாதுகாப்பாக இருக்கக் கூடிய துணைவர்களையும் கடிந்து புண்படுத்தி விலக்கி விடும்.

வி-ம்: கோபம் எவனைச் சேருகிறதோ அவனைக் கெடுக்கும். அவனைக் கெடுப்பதற்கு அவனுக்குத் துணைவரக் கூடிய பந்து மித்திரர்களையும் சுடப் பேசி ஓட்டி விடும். கோபக்காரனுக்கு இனமாகப் பக்கத்திலிருந்து அறிவு சொல்லக் கூடிய சேமத் துணையான 'ஏமப்புணை' இருக்காது. 'சேர்ந்தாரைக் கொல்லி' என்பது கோபம் யாரிடம் போய்ச் சேருகிறதோ அவர்களைக் கொல்லும் என்றுவது அல்லது கோபத்தை யார் சேருகின்றார்களோ அவர்களைக் கொல்லும் என்றுவது பொருள் கொள்ளத் தக்கது.

ஆதலால் கோபத்தைப் பாராட்டுகின்றவனுக்குத் தப்பாமல் கெடுதி உண்டாகும்:

307. சினத்தைப் பொருளென்று கொண்டவன் கேடு
நிலத்தறைந்தான் கைபிழையா தற்று.

ப. ரை: சினத்தை பொருள் என்று கொண்டவன் கேடு நிலத்து அறைந்தான் கை பிழையாத அற்று = கோபத்தை ஒரு வல்லமை யென்று பாராட்டுகின்றவனுக்குக் கேடு வருவது, நிலத்தை ஓங்கி அறைகின்றவனுடைய கைக்குத் தப்பாமல் கேடு உண்டாவது போன்றது.

பொ. ரை: கோபத்தை ஒரு திறமையென்று பாராட்டுகிறவன் கெடுதி அடைவது, நிலத்தை ஓங்கி அறைந்தவனுடைய கை கெடுதி அடைவது எப்படித் தப்பாதோ அப்படித்தான்.

வி - ம்: நிலத்தில் ஓங்கி அறைகின்றதனால் நிலத்துக்கு உண்டாகும் தீமை ஒன்றுமில்லை. ஆனால் அறைகின்ற கைக்குத் தீமை நிச்சயம். அத்துடன் எவ்வளவுக்கெவ்வளவு வேகத்தோடு அறைகின்றானோ அவ்வளவுக் கவ்வளவு கேடுண்டு. அதுபோலக் கோபத்தைப் பாராட்டுகின்றவனுக்குக் கேடு வருவதும், எவ்வளவு அதிகக் கோபம் பாராட்டுகிறானோ அவ்வளவு அதிகமாகக் கேடு உண்டாவதும் தப்பாது.

எவ்வளவு துன்பம் நேரிட்டாலும் கோபிக்காமல் இருப்பதே முயலத் தக்க அறம்:

**308. இணரெரி தோய்வன்ன வின்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று.**

ப. ரை: இணர் எரி தோய்வு அன்ன இன்னா செயினும் புணரின் வெகுளாமை நன்று = கொழுந்து விட்டு எரிகிற நெருப்புச் சுடுவது போல (ஒருவன்) துன்பம் செய்தாலும் முடியுமானால் கோபிக்காமல் இருப்பதே நல்லது.

பொ. ரை: நெருப்புச் சுடர் சுடுவது போலத் துன்பம் செய்கிறவனிடத்திலும், கோபங் கொள்ளாதிருக்க முடியுமானால் அதுவே நல்லது.

வி - ம்: 'புணரின் வெகுளாமை நன்று' என்பது 'முடிந்தால்' கோபிக்காதிருப்பது நல்லது என்ற பொருள் தருவதால் அப்படித் துன்பம் செய்கிறவன் மேல் கோபங் கொள்ளாமலிருப்பது எளிதில் முடியாத காரியம். முடியுமானால் அதுவும் முயலத் தக்கது. நெருப்புச் சுடுவது போல் என்றது—நெருப்பு மனிதனைச் சுடும். மனிதன் நெருப்புக்கு ஒரு துன்பமும் செய்ய முடியாது. அதனால் ஒரு துன்பமும் தனக்குச் செய்யாதிருக்கிற மனிதனை நெருப்புதான் சுடுகிறது. அப்படித் தன்னால் ஒரு துன்பமும் அடையாத ஒருவன் தன்னைத் தேடி வந்து துன்பம் செய்தாலும் கோபங் கொள்ளாதிருப்பது மிகவும் அரிதான குணம்.

அந்த அருமையான குணம் கோபம் என்பதை மனதிலிருந்து அடியோடு களைந்தெறிந்து விட்டவர்களால் தான் முடியும். அப்படிப்பட்டவர்கள்:

**309. உள்ளிய தெல்லா முடனெய்து முள்ளத்தா
லுள்ளான் வெகுளி யெனின்.**

ப. ரை: உள்ளத்தால் உள்ளான் வெகுளி எனின் உள்ளிய எல்லாம் உடன் எய்தும் = ஒருவன் மனதாலும் கோபத்தை

நினைக்க மாட்டான் என்றால் அவன் நினைப்பதையெல்லாம் உடனே அடைவான்.

பொ. ரை : மனதில் கோபத்துக்கு இடங்கொடுக்காதவன் விரும்பினதை யெல்லாம் உடனே அடைவான்.

வி - ம் : கோபமே உதிக்காத மனம் வந்து விட்ட ஒருவனுக்கு எதுவும் கைகூடும். இம்மையில் மக்களெல்லாம் அவனை வணங்கி அவன் சொன்னதெல்லாம் செய்வார்கள். அவன் விரும்புகிற மறுமைப் பயன்களும் பேரின்பமும் சித்திக்கும்.

அதனால் கோபத்தை விட்டவனே உலக துன்பங்களில் விடுபட்டவனாவான் :

310 இறந்தா ரிறந்தா ரனையர் சினத்தைத்
துறந்தார் துறந்தார் துணை.

ப. ரை : இறந்தார் இறந்தார் அனையர் சினத்தை துறந்தார் துறந்தார் துணை = கோபம் மிகுந்தவர்கள் நெறி கடந்தவர்களுக்கு ஒப்பாவார்கள். கோபத்தை விட்டவர்கள் துறவிகளுக்கு ஒப்பாவார்கள்.

பொ. ரை : கோபம் மிஞ்சினவர்கள் துறவு நெறிகெட்டவர்களுக்குச் சமானமாவார்கள். கோபத்தை விட்டவர்களே துன்பங்களை விட்ட துறவிகளுக்குச் சமானம்.

வி - ம் : சினத்தைத் துறந்தவன்தான் துறவியாக முடியும். 'சினத்தைத் துறந்தார் துறந்தார் துணை' என்றதனால் துறவறத்தான் என்று சொல்லிக் கொள்ளாதவனும் கூட கோபத்தை விட்டவன் அவனுடைய துறவு மனத்தால் துறவிக்குச் சமானமாவான் என்பது வெளிப்படை. ஆகையினால் வெகுளாமை எல்லா மக்களுக்கும் நன்மை தரும்.

அதி. 32—இன்னுசெய்யாமை

[இன்னு செய்யாமை என்பது பிறருக்குத் தீங்கு செய்யாதிருத்தல். இது எந்த உயிருக்கும் தீங்கு செய்யாதிருப்பதையும் குறிக்குமென்றாலும் இந்த அதிகாரம் மற்ற மனிதர்களுக்குத் தீங்கு செய்யாதிருப்பதையே முக்கியமாகக் கொண்டது. துறவிக்கு இது கட்டாய விதி. இல்லறத்தானுக்கும் இது நல்லறம்.]

311. சிறப்பீனுஞ் செல்வம் பெறினும் பிறர்க்கின்னு
செய்யாமை மாசற்ரூர் கோள்.

ப. ரை: சிறப்பு ஈனும் செல்வம் பெறினும் பிறர்க்கு இன்னு செய்யாமை மாசு அற்ருர் கோள் = சிறப்புகள் தரக்கூடிய செல்வங்களைப் பெறுவதானாலும் மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாதிருப்பது குற்றமற்றவர்களுடைய கொள்கை.

பொ. ரை: சிறப்புகளெல்லாம் உண்டாகக் கூடிய செல்வம் கிடைப்பதானாலும் (அதற்காகவும்) பிறருக்குத் தீமைசெய்யாதிருப்பது குற்றமற்ற மனமுடையவர்களுடைய கொள்கை.

வி-ம்: 'சிறப்பீனுஞ் செல்வம்' என்பது துறவிகளுக்கு வீடு பெறுகின்ற செல்வமும் மற்றவர்களுக்குப் பொருட் செல்வமும் ஆகும். இந்தக் குறள் துறவிகளுக்கு மட்டும்தான் சொல்லப்படுகிறது என்ற நோக்கத்துடன் துறவிகளுக்குச் சிறப்பு தரும் செல்வங்களைச் சொல்ல வேண்டும் என்பதற்காக 'அணிமா' முதலிய அட்ட சித்திகளைச் சொல்வது சரியல்ல. துறவறத்தின் நோக்கமே பேரின்ப வீட்டையடைவது. யோக முயற்சிகளால் அட்ட சித்திகளையும் பெறலாம் என்ருலும் அவை சிறப்பீனும் செல்வங்களாகத் துறவறம் ஒத்துக் கொள்ளாது. சித்திகளெல்லாம் சிற்றின்ப இனத்தைச் சேர்ந்தவை. அதை அடைய வேண்டும் என்பதும் மாசற்ருர் கொள்கையாகாது. ஆதலால் இக்குறளுக்கு 'எப்படிப்பட்ட சிறப்புகளை உண்டாக்கக் கூடிய செல்வத்தை அடைவதாக இருந்தாலும் பிறருக்குத் தீமை செய்து அதை அடையக் கூடாது என்பது தூய மனமுடையவர்களுடைய கோட்பாடு' என்று பொருள் கொள்வதுதான் பொருத்தம். இது பொது அறிவேயன்றி துறவறத்துக்கென்பதல்ல.

சிறப்பீனும் செல்வம் பெறமட்டுமல்ல, பிறர் தமக்குத் தீங்கு செய்து விட்டாலும் அதற்குப் பிரதியாகக் கூட மாசற்ருர் தீங்கு செய்ய மாட்டார்கள்;

312. கறுத்தின்னு செய்தவக் கண்ணு மறுத்தின்னு
செய்யாமை மாசற்ருர் கோள்.

ப. ரை: கறுத்து இன்னு செய்த அக் கண்ணும் மறுத்து இன்னு செய்யாமை மாசற்ருர் கோள் = பகைமை கொண்டு துன்பம் செய்து விடுகிற அந்த மனிதனுக்கும் திருப்பித் தீங்கு செய்யாதிருப்பது. குற்றமற்ற மனமுடையவர்களின் கொள்கை.

பொ. ரை: ஒருவன் பகைமை கொண்டு தமக்குத் தீங்கு செய்துவிட்டாலும் அவனுக்குக் கூட, திருப்பித் தீங்கு செய்யாதிருப்பது குற்றமற்ற தூய மனமுடையவர்களின் கொள்கை.

வி-ம்: 'கோள்' என்பது விரதமாகக் காக்கப்படும் கொள்கை. 'மாசற்றார்' என்பது மனத்தின்கண் மாசற்றவர்கள்.

தமக்குத் தீங்கு செய்தவர்களுக்கும் கூடத் திருப்பித் தீங்கு செய்யக் கூடாது என்றால், தமக்குத் தீங்கொன்றும் செய்யாதவர்களுக்குத் தீங்கு செய்தால்:

313. செய்யாமற் செற்றார்க்கு மின்னாத செய்தபி
னுய்யா விழுமந் தரும்.

ப. ரை: செற்றார்க்கும் செய்யாமல் இன்னாத செய்த பின் உய்யா விழுமம் தரும் = பகைவர்களுக்கும் கூட (அவர்கள் ஒரு தீங்கும்) செய்யாதிருக்கும் போது அவர்களுக்குத் தீங்கு செய்து விட்டால் தப்பமுடியாத குற்றமுண்டாக்கும்.

பொ. ரை: பகைவர்களுக்கும் கூட அவர்கள் ஒரு தீங்கும் செய்யாதிருக்கிறபோது அவர்களுக்குத் தீங்கு செய்து விட்டால் அக் குற்றம் தப்ப முடியாத தீவினையை உண்டாக்கும்.

வி-ம்: 'செய்யாமல் செற்றார்க்கும்' என்பது 'ஒரு தீங்கும் செய்யாமலுள்ள பகைவர்களுக்கும்' என்ற பொருள் தருவது. பகைவர்கள் இருந்து, அவர்கள் தமக்குத் தீங்கு செய்யும்போது திருப்பித் தீங்கு செய்து விட்டாலும் அது பெரும் பாதகமாகாது என்று நினைக்கலாம். ஆனால் அவர்கள் ஒரு தீங்கும் செய்யாதிருக்கிறபோது அவர்கள் பகைவர்கள் என்ற குரோதத்துக்காக மட்டும் அவர்களுக்குத் தீங்கு செய்தால் அது பாவத்தினின்று தப்ப முடியாத குற்றமாகும்.

பகைவர்களானாலும் சரி, பகைமை இல்லாதவர்களானாலும் சரி தமக்கு ஒரு தீங்கு செய்து விட்டவர்களை மாசற்ற மனமுடையவர்கள் தண்டிப்பது எப்படியென்றால்:

314. இன்னாசெய் தாரை யொறுத்த லவர்நாண
நன்னயஞ் செய்து விடல்.

ப. ரை: இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்து விடல் = தீங்கு செய்தவர்களை தண்டிப்பது அவர்கள் வெட்கப்படும்படி அவர்களுக்கு நல்ல உதவிகளைச் செய்து விடுவது.

பொ. ரை: தீங்கு செய்வதை (மாசற்ற மனமுடையவர்கள்) தண்டிக்கிற விதம் எதுவென்றால், அந்தத் தீங்கு செய்தவர்கள் தாமே வெட்கப்பட்டு வருந்தும்படி அவர்களுக்கு நல்ல உதவிகளைச் செய்து விடுவது.

வி-ம்: 'செய்து விடல்' என்பதற்கு 'செய்து விடுவது' என்பது மட்டும் தான் கருத்து. 'செய்து' பிறகு அவர்களை 'விடல்' என்று பிரிப்பது அர்த்தமில்லாதது. தீங்கு செய்தவனுக்குத் திருப்பித் தீங்கு செய்யாமல் நன்மைகளைச் செய்தால் அவன் அதனால் நாணமடைந்து தான் செய்து விட்ட தீமைக்கு வருந்தி வெகு நன்றியுள்ளவனாக மாறிவிடுகிறான். பிறகு தாம் விட்டாலும் அவன் தம்மை விட மாட்டானே! ஆதலால் 'அவர்க்கு இனிய உவகைகளைச் செய்து அவ்விரண்டினையும் (விடல்) மறத்தல்' என்று பிரித்து விரித்துக் கொள்வது பயனற்றது.

தமக்குத் தீங்கு செய்தவர்க்கும் நன்மை செய்யக் கூடிய மேலான அறிவு இல்லாவிடினும், சாதாரண அறிவு கொண்டு பார்த்தாலும்:

315. அறிவினா னாகுவ துண்டோ பிறிதினோய்
தந்நோய்போற் போற்றாக் கடை.

ப. ரை: பிறிதின் நோய் தம் நோய் போல் போற்றாக்கடை அறிவினான் ஆகுவது உண்டோ = இன்னொரு உயிரின் துன்பத்தை தமக்கு வந்த துன்பத்தைப் போல் மதிக்க முடியாத இடத்தில் அறிவினால் பயன் உண்டோ?

பொ. ரை: இன்னொருவருடைய துன்பங்களைத் தமக்கு வந்த துன்பங்களைப் போல் உணர்ந்து பார்க்க முடியாதவர்கள் அறிவினால் அடையக் கூடிய பயன் என்ன? — ஒன்று மில்லை.

வி-ம்: 'போற்றாக் கடை' என்பதற்கு 'பாராட்டாவிட்டால்' அதாவது 'பாவிக்காவிட்டால்' என்பதுதான் பொருள். பிறிதொரு உயிரின் நோயைத் தனக்கு வந்த நோய் போல் பாவித்தால் உடனே துன்பம் செய்யாமலிருக்க வேண்டிய உணர்ச்சியும் துன்பத்தை நீக்க உதவ வேண்டிய உபாயங்களும் அவனவன் சூழ் நிலைக்குத் தக்கபடி உண்டாகும்.

அப்படிப் பிற உயிரின் துன்பம் தனக்குற்ற துன்பம் போல் பாவித்து உணர்ந்து பார்த்தால்:

316. இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை
வேண்டும் பிறன்கட் செயல்.

ப. ரை: இன்னா என தான் உணர்ந்தவை பிறன் கண் செயல் துன்னாமை வேண்டும் = தீங்கு தரும் என்று தான் உணர்கின்ற செயல்களை பிறருக்குச் செய்யும் குற்றத்தைச் சேராதிருக்க வேண்டும்.

பொ. ரை : திமை உண்டாக்கக் கூடியவை என்று தான் உணரு கின்ற எதையும் இன்னொருவருக்குச் செய்து விடாமல் இருக்க வேண்டும்.

வி - ம் : தீங்கு செய்யும் என்று உணர்ந்தபின் அப்படிப்பட்ட எதையும் ('துன்னுமை') நெருங்காமை வேண்டும் என்பது னுல் மனத்தாலும் வாக்காலும் செயலாலும் செய்யாதிருக்க வேண்டும். அது தான் அறிவினுல் ஆகுவது.

தீங்கு செய்யும் என்று உணர்கின்ற செயல்களை மட்டு மல்ல கண்ணியக் குறைவானது என்றதைக் கூட செய்யா திருப்பது 'இன்னு செய்யாமை' யின் தலை சிறந்த குணம் :

317. **எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானு**
மாணுசெய் யாமை தலை.

ப. ரை : எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கும் மனத்தான் ஆம்மாணு செய்யாமை தலை = எவ்வளவு சிறிதானுலும் எப் போதும் யாருக்கும் மனதில் கண்ணிய முள்ளதல்ல என்று தோன்றுகின்ற செயல்களைச் செய்யாதிருப்பது தலைசிறந்த குணம்.

பொ. ரை : எவ்வளவு சிறிய அளவிலும் கூட எப்போதும் யாருக் கானுலும் கண்ணிய மில்லாதது என்று மனதிற்படுகிற எதை யும் செய்யாமலிருப்பது மிகச் சிறந்த குணம்.

வி - ம் : 'மனத்தானும் மாணு' என்பது மாட்சிமையுடையன அல்ல வென்று மனம் சொல்லுகின்ற செயல்கள். மாணுச் செயல்கள் மாட்சிமை யில்லாத செயல்கள். அதாவது கண் ணியக் குறைவான செயல்கள். மாசற்ற மனமுடையவர்களி லும் மிகச் சிறந்தவர்களாக உள்ளவர்கள் பிறருக்குத் திமை யுண்டாக்கும் செயல்களை மட்டுமல்ல, பிறருக்குக் கண்ணி யக் குறைவுண்டாக்கும் என்ற செயல்களைக் கூட செய்ய மாட்டார்கள்.

அப்படியிருக்க

318. **தன்னுயிர்க் கின்னுமை தானறிவா னென்கொலோ**
மன்னுயிர்க் கின்னு செயல்.

ப. ரை : தன் உயிர்க்கு இன்னுமை தான் அறிவான் மன்னு யிர்க்கு இன்னு செயல் என் கொலோ = தன்னுடைய உயி ருக்குத் துன்பம் என்னவென்பதை அறிகின்ற ஒருவன், பிற உயிருக்குத் துன்பம் செய்வது ஏனே தெரியவில்லை.

பொ. ரை: தனக்குத் துன்பம் தருவது எது என்பதைத் தானே அறிந்து அதை விலக்க விரும்புகின்றவன் பிறருக்குத் துன்பம் செய்வது என்ன காரணத்தாலோ தெரியவில்லை.

வி-ம்: தனக்கு யாரும் எந்தத் துன்பமும் செய்யக் கூடாது என்று மட்டும் ஒவ்வொரு மனிதனும் விரும்புகிறானே, பிறருக்கு மட்டும் ஏன் துன்பம் செய்ய வேண்டும்?

யார், யாருக்குத் துன்பம் செய்தாலும் அதன் தீய பயனை அனுபவித்தே தீரவேண்டும்:

319. பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்.

ப. ரை: பிறர்க்கு இன்னா முன்பகல் செய்யின் தமக்கு இன்னா பின்பகல் தாமே வரும் = பிறருக்குத் துன்பம் முன்னால் செய்தால் தமக்குத் துன்பம் பின்னால் தாமாகவே வரும்.

பொ. ரை: பிறருக்குத் தீங்கு முன்னால் செய்தால் தமக்குத் தீங்கு பின்னால் கண்டிப்பாக வந்தே தீரும்.

வி-ம்: 'முற்பகல் பிற்பகல்' என்பன வற்றிற்கு முற்பகலாகிய காலை என்றும் பிற்பகலாகிய மாலை என்றும், அல்லது 'முதல் நாள் மறுநாள்' என்றும், அல்லது 'முன்பிறப்பு பின்பிறப்பு', என்றும் பொருள் செய்யலாம். ஆனால் இங்குள்ள கருத்து 'முன்னால் செய்தால் பின்னால் வரும்' என்பது மட்டும்தான்.

ஆகையினால்:

320. நோயெல்லா நோய்செய்தார் மேலவா நோய்செய்யார்
நோயின்மை வேண்டு பவர்.

ப. ரை: நோய் எல்லாம் நோய் செய்தார் மேல ஆம்; நோய் இன்மை வேண்டுபவர் நோய் செய்யார் = துன்பம் எல்லாம் துன்பம் செய்தவர்கள் மேலேயே வந்து விழும்; துன்பம் இல்லாமலிருக்க விரும்புகிறவர்கள் துன்பம் செய்ய மாட்டார்கள்.

பொ. ரை: துன்பங்களெல்லாம் துன்பங்களைச் செய்தவர்களுக்கே வந்து சேரும்; அதனால் தமக்குத் துன்பம் வரக் கூடாது என்று விரும்புகிறவர்கள் பிறருக்குத் துன்பம் செய்ய மாட்டார்கள்.

வி-ம்: 'செய்யார்' என்பது 'செய்யக் கூடாது' என்ற பொருளில் சொல்லப்பட்டது. தமக்குத் துன்பம் வரக்

கூடாது என்று விரும்புகிறவர்கள் பிறருக்குத் துன்பம் செய்யக் கூடாது என்பது கருத்து.

அதி. 33—கொல்லாமை

[கொல்லாமை என்பது எந்த நோக்கத்தைக் கொண்டும் பிற உயிரைக் கொன்று போக்காதிருப்பது. இது எல்லா மனிதர்களுக்கும் மிகச் சிறந்த பொது அறமாகும். துறவறத்தான் இதை விரதமாகக் காக்க வேண்டும். மற்றவர்கள் தற்காப்புக்காகக் கொன்றுவிட நேர்ந்தாலும் பரிகாரமுண்டு. ஆனால் துறவியானவன் தன்னுடைய உயிரைப் பாதுகாப்பதற்கென்று கூட பிற உயிரைக் கொல்லக் கூடாது என்பதனால் இது துறவறத்திற் சொல்லப்பட்டது.]

321. அறவினை யாதெனிற் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாந் தரும்.

ப. ரை: அறவினையாது எனில் கொல்லாமை; கோறல் பிறவினை எல்லாம் தரும் = புண்ணியச் செயல் எது என்றால் கொலை செய்யாதிருத்தல்; கொல்லுதல் மற்ற எல்லாப் பாவங்களையும் உண்டாக்கும்.

பொ. ரை: புண்ணியம் என்பது எதுவென்றால் உயிர்க் கொலை செய்யாதிருப்பது; கொலை செய்வது மற்றெல்லாப் பாதகங்களையும் தரக் கூடியது.

வி-ம்: கொலை செய்யும் மனமுடையவன் மற்ற எந்தப் பாதகத்தையும் செய்யத் தயங்கமாட்டான். அதனால் கொலை வினைப் 'பிறவினை எல்லாம் தரும்'.

கொல்லாமைதான் சிறந்த புண்ணியம் என்பது உலகம் கண்டறிந்த உண்மை:

322. பகுத்துண்டு பல்லுயி ரோம்புத னூலோர்
தொகுத்தவற்று ளெல்லாந் தலை.

ப. ரை: பகுத்து உண்டு பல் உயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாம் தலை = பிறருக்கும் பங்கு கொடுத்துச் சாப்பிட்டுப் பல உயிர்களையும் காப்பாற்றுவது. நூல்களை எழுதினவர்கள் திரட்டிச் சொல்லியிருக்கிற எல்லா அறிவுகளிலும் தலை சிறந்த அறிவு.

பொ. ரை: தனக்கு உள்ள உணவில் பிறருக்கும் பங்கு கொடுத்து, உலகிலுள்ள பல உயிர்களையும் காப்பாற்றும்

செய்கைதான் அறிவு நூல்களை எழுதினவர்கள் சேகரித்துக் கொடுத்திருக்கிற அறிவுகளிளெல்லாம் மிக உயர்ந்த அறிவு:

வி-ம்: 'தொகுத்தவற்றுளெல்லாம் தலை' என்பது இதுவரையும் உலகம் அறிந்த அனுபவங்களிலிருந்து 'சேகரிக்கப்பட்ட அறிவுகளிலெல்லாம் தலைசிறந்தது' என்ற பொருள் தருவது. 'பகுத்துண்டு' என்பதிலுள்ள 'உண்டு' என்ற பதத்தினால் 'உணவில் பங்கு கொடுத்து' என்று பொருள் தருகிறது என்றாலும் இந்த இடத்தில் உணவு ஒன்றில் மட்டும் பங்கு கொடுப்பது என்று அர்த்தமல்ல. ஒருவன் தனக்குள்ள உணவு முதலிய எல்லா வசதிகளிலும் அவைகள் இல்லாத மற்றவர்களுக்கும் பங்கு கொடுக்க வேண்டும் என்பதைக் குறிப்பதாம். 'பல்லுயிரோம்புதல்' என்பது மனிதரல்லாத மற்ற உயிர்களிடத்தும் ஜீவகாருண்யம் செய்வது.

இப்படி உலக அனுபவங்களிலிருந்து மேலோர்கள் எழுதிய நூல்களில் தொகுக்கப்பட்டிருக்கிற நல்லறிவுகளுக்குள்:

323. ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று.

ப. ரை: ஒன்றாக நல்லது கொல்லாமை; மற்று அதன் பின்சார நன்று பொய்யாமை = இணையற்றதான நல்ல குணம் கொல்லா விரதம், அதற்கு அடுத்ததாக நல்லது பொய் சொல்லாமை.

பொ. ரை: இணையற்ற நல்ல குணம் கொல்லா விரதம்; அதற்கடுத்த நல்ல குணம் பொய் சொல்லா விரதம்.

வி-ம்: உலகம் புண்ணியம் என்று போற்றுகின்ற அறிவுகளுக்குள் இணையற்றது எது வென்றால் எக்காரணம் பற்றியும் பிற உயிரைக் கொல்லாதிருப்பது. அதற்கு அடுத்தபடியாகப் போற்றத்தகுந்த சிறந்த குணம் பிறருக்குத் தீமை உண்டாக்கக் கூடிய எதையும் பேசி விடாமல் வாய்மை காப்பது. 'பொய்யாமை' என்பதற்கு வள்ளுவர் வகுத்துள்ள இலக்கணத்தை இங்கே நினைவு கொள்ள வேண்டும்.

கொலை சம்பந்தப்பட்ட எந்த மார்க்கமும் சன்மார்க்கமல்ல:

324. நல்லா றெனப்படுவ தியாதெனின் யாதொன்றுங்
கொல்லாமை சூழு நெறி.

ப. ரை: நல் ஆறு எனப்படுவது யாது எனில் யாது ஒன்றும் கொல்லாமை சூழும் நெறி = நல்ல வழி என்பது எது வென்

ருல், எந்த ஒரு உயிரையும் கொல்லாதிருப்பது சேர்ந்துள்ள வழிதான்.

பொ. ரை : நன்னெறி என்பது எது வென்ருல் எந்த உயிரையும் கொல்லக் கூடாது என்ற கொள்கை சூழ்ந்த நெறிதான்.

வி - ம் : சன்மார்க்க மென்பது கொலைக்குச் சம்பந்தப்படாத மார்க்கம். சமய நெறிகளிலும் கொலை சம்பந்தப்பட்ட நெறி சன்மார்க்கத்தைச் சேராது.

கொல்லா விரதம் கடைப்பிடிப்பவர்களே எல்லாரினும் புண்ணிய மடையக் கூடியவர்கள் :

**325. நிலையஞ்சி நீத்தாரு ளெல்லாங் கொலையஞ்சிக்
கொல்லாமை சூழ்வான் றலை.**

ப. ரை : நிலை அஞ்சி நீத்தாருள் எல்லாம் கொலை அஞ்சி கொல்லாமை சூழ்வான் தலை = உலக துன்பங்களுக்கு அஞ்சி பற்றற்றவர்களான எல்லாருக்குள்ளும் கொலை செய்வதற்கு அஞ்சி கொல்லாத விரதத்தை கடைப்பிடிக்கிறவனே மிகவும் சிறந்தவன்.

பொ. ரை : பிறவித்துன்பங்களுக்கு அஞ்சி, பற்றற்ற வாழ்க்கை மேற்கொண்டவர்கள் எல்லாரினும் கொலை செய்யப் பயப்பட்டு கொல்லா விரதத்தை கடைப்பிடிக்கிறவனே மிகச் சிறந்தவன்.

வி - ம் : 'நீத்தார்' என்பது உலகப் பற்றுகளை மனத்தால் விட்டவர்கள். உலகப் பற்றுகளை மனதிலிருந்து விலக்கி வாழ்வது துறவறத்துக்கு மட்டும் மானியமல்ல. இல்லறத்தில் இருந்து கொண்டும் பற்றுகளை மனதில் விலக்கி வாழ முடியும். ஆனுல் இல்லறத்தில் பற்றுகளை விலக்குவது, மனைவி மக்களின் பாசத்தால், எளிதில் முடியாது என்று எண்ணினவர்கள்தாம் துறவறத்துக்குப் போகிறவர்கள். அப்படித் துறவறத்துக்குப் போனவர்களிலும் பலர் யாகம் முதலான காரியங்களுக்காகக் கொலை செய்வதற்கு உடன்படுகிருர்கள். ஆதலால் துறவறத்திலுள்ளவர்களானலும் இல்லறத்திலுள்ளவர்களானலும் பிறவித் துன்பங்களுக்கு அஞ்சி பற்றற்றவர்களாக நடந்து கொள்ள விரும்புமவர்கள் எல்லாருக்குள்ளும் கொல்ல அஞ்சுகின்றவனே சிறந்தவன். அதனுல் 'நீத்தாருள்ளெல்லாம்' என்ருர். 'நீத்தார்' என்பது 'துறவிகள்' அல்ல. 'நீத்தார்' எல்லாரும் துறவு மனம் உள்ளவர்கள். ஆனுல் துறவிகள் எல்லாரும் 'நீத்த' மனம் உள்ளவர்களல்ல. 'நீத்தார்' என்பவர்கள் மனத்துறவு சித்தி பெற்று

விட்டவர்களே என்பது 'நீத்தார் பெருமை' என்ற அதிகாரத்தால் விளக்கப்பட்டிருக்கிறது.

நீத்த மனதுடன் கொல்லாமை கடைப்பிடிக்கிறவனுக்கு எமபயம் இருக்காது:

326. கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண் ணுங் கூற்று.

ப. ரை: கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ் நாள் மேல் உயிர் உண்ணும் கூற்று செல்லாது = கொல்லா விரதத்தைக் கடைப்பிடித்து நடக்கிறவனுடைய வாழ் நாள் மேல் உயிரை வதைத்துண்ணும் எமன் போகமாட்டான்.

பொ. ரை: கொல்லா விரதத்தைக் கடைப்பிடித்து நடந்து கொள்ளுகிறவனுடைய வாழ்நாள் மேல் உயிரைப் பதை பதைக்கச் செய்து மென்று தின்னுகின்ற எமன் வரமாட்டான்.

வி-ம்: ஒரு உயிரைக் கொல்லும்போது அந்த உயிரிருந்த உடல் பதைபதைத்துத் துடித்துத் தவிக்கின்றது. அது போலவே எமன் வந்து ஒருவனுடைய உயிரை வதைத்து மென்று தின்னுகின்றபோது அவனுடைய உடல் பதை பதைத்துத் துடித்துத் தவிக்கின்றது. பிற உயிரை நீக்க அதன் உடலைத் துடிக்க வைத்த துன்பங்கள் இவன் உயிர் நீங்கும்போது இவனுக்கு உண்டாகும். பிற உயிரைக் கொல்லக் கூடாது என்ற அறத்தை மேற்கொண்டவனுக்கு அந்த மரண துன்பங்கள் இருக்காது.

ஆகையினுல்:

327. தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை.

ப. ரை: தன் உயிர் நீப்பினும் தான் பிறிது இன் உயிர் நீக்கும் வினை செய்யற்க = தன்னுடைய உயிர் போவதானுலும் தான் இன்னொரு உடலின் அதற்கினிமையான உயிரைப் போக்கும் வேலையைச் செய்யக் கூடாது.

பொ. ரை: தன்னுடைய உயிர் போவதாயிருந்தாலும் தான் இன்னொரு உடலிலுள்ள அதற்கினிய உயிரைப் போக்குகிற கொலைச் செயலை செய்யக் கூடாது.

வி-ம்: இன்னொரு உயிரைக் கொல்லா விட்டால் தன்னுடைய உயிர் போய்விடும் என்று நினைக்கக் கூடிய தருணத்திலும்

கொலை பாதகத்தைச் செய்யக் கூடாது. அதாவது பகைமை பற்றி தன்னைக் கொன்றுவிடக் கூடியவன் என்று கருதி தான் அவனைக் கொன்றுவிட்டால் தன்னுயிருக்கு அபாயம் வராது என்று கொல்ல நினைப்பதும், தன்னுடைய உயிர் போய் விடும் போன்ற அபாயமான நோயுண்டாகி அதற்கு மருந்துக்காக இன்னொரு உயிரைக் கொலை செய்வதும், அல்லது தனக்கு வந்த நோய் நீங்கித் தனக்கு நன்மை வருமென்று கருதி வேறொரு உயிரைப் பலியாகக் கொல்லுவதும் முதலியன.

எதற்காகவானாலும் கொலை பாதகத்தைச் செய்து அதனால் வருகிற நன்மை எதுவானாலும் பாவமுள்ளதேயாகும். ஆதலால் :

328. நன்றாகு மாக்கம் பெரிதெனினுஞ் சான்றோர்க்குக்
கொன்றாகு மாக்கங் கடை.

ப. ரை : நன்று ஆகும் ஆக்கம் பெரிது எனினும் சான்றோர்க்கு கொன்று ஆகும் ஆக்கம் கடை = நன்மை உண்டாகும் செல்வம் பெரியதாகும் என்றாலும் மேலோர்கள் கொலை செய்து வரக் கூடிய நலங்களை இகழத்தக்கன வாகவே கருதுவார்கள்.

பொ. ரை : நன்மை உண்டாகுமென்றாலும் செல்வம் அதிகரிக்கும் என்றாலும் உயர்ந்த குணமுடையவர்கள் கொலை செய்து அதனால் வரக் கூடிய நன்மைகளை மிகவும் கேவலமாகத்தான் கருதுவார்கள்.

வி - ம் : 'நன்றாகு மாக்கம் பெரிதெனினும்' என்பது, துறவறம் மேற்கொண்டவனுக்கு 'நன்மை தரக்கூடிய சக்திகள் அதிகப்படுமென்றாலும்' என்றும் துறவு கொள்ளாத மற்றவர்களுக்கு 'நோய்கள் நீங்கி நலமுண்டாகுமென்றாலும்'. அல்லது 'வறுமை நீங்கிச் செல்வமுண்டாகுமென்றாலும்' என்றும் அவரவர் சூழ்நிலைக்குத் தக்கபடி பொருள் தரச் சொல்லப்பட்டது........இங்கே 'சான்றோர்' என்பதற்குத் 'துறவிகள்' என்று பொருள் செய்யக் கூடாது. ஏன் எனில் துறவறம் பூண்டவர்களெல்லாம் சான்றோரல்ல. அன்றியும் இந்தக் குறள் துறவறம் பூண்டவன் இனிமேல் சான்றோனாவதற்கு வேண்டிய விரத நிலையில் உள்ளவிடத்தில் சொல்லப்படுகிறது. விரதங்களை முடித்து ஞானம் உண்டாகி அதற்கிணங்க நடக்கும் போதுதான் சான்றோனாக முடியும். அத்துடன் துறவறம் மேற் கொள்ளாத இல்லறத்தானும் சான்றோனாக இருக்க முடியும். ஆதலாலும் 'சான்றோன்' என்பதற்குத் 'துறவி' என்ற பொருள் பொருந்தாது.

அதனால் கொலை சம்பந்தப்பட்ட எந்தத் தொழிலும் பாவ சம்பந்தமுள்ளது :

**329. கொலைவினைய ராகிய மாக்கள் புலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து.**

ப. ரை : புன்மை தெரிவார் அகத்து கொலை வினையர் ஆகிய மாக்கள் புலைவினையர் = இகழத்தக்கது எது என்பதை ஆராய்ந்தறியக் கூடியவர்களுடைய மனதில் கொலைத் தொழிலாளராகிய மனிதர்கள் ஈனமான தொழில் செய்கிறவர்கள்.

பொ. ரை : ஈனமான காரியம் எதுவென்பதை எண்ணிப் பார்க்கக் கூடியவர்களுடைய மதிப்பில் கொலை சம்பந்தமான தொழிலைச் செய்கிறவர்கள் சண்டாளத் தனமுள்ள கிழ் மக்களாகக் கருதப்படுவார்கள்.

வி - ம் : 'மாக்கள்' என்பது அறிவு வளர்ச்சி பெருத கீழ்நிலையிலுள்ளவர்கள். 'கொலை வினையர்' என்பது கொன்று கொண்டே இருப்பவர்களல்ல. கொலை சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். அதாவது கொல்லுவதற்குச் சம்மதமுள்ளவர்கள்.

கொலைப் பாவம் மறுமையிலும் தொடர்ந்து துன்பம் செய்யும் :

**330. உயிருடம்பி னீக்கியா ரென்ப செயிருடம்பிற்
செல்லாத்தீ வாழ்க்கை யவர்.**

ப. ரை : செயிர் உடம்பில் செல்லா தீ வாழ்க்கையவர் உயிர் உடம்பின் நீக்கியார் என்ப = நோய்கள் உடம்பிலிருந்து நீங்காமல் துன்பப்பட்டுக் கொண்டு இருக்கிறவர்கள் (முற்பிறப்பில்) உயிரை உடம்பிலிருந்து நீக்கினவர்கள் என்று சொல்லப்படுவார்கள்.

பொ. ரை : வியாதிகள் உடம்பிலிருந்து நீங்காமல் எந்நேரமும் துன்பப்பட்டுக் கொண்டே யிருக்கிறவர்கள் முற்பிறப்பில் உயிரை உடலிலிருந்து நீக்கும் கொலை செய்தவர்கள் என்று கருதப்படுகிறவர்கள்.

வி - ம் : என்னவிதமான வைத்தியம் செய்தாலும் வியாதிகள் நீங்காமல் துன்பப்பட்டுக் கொண்டே இருக்கிற வெகு நல்ல குணமுள்ளவர்களும் இருக்கிருர்கள். இவ்வளவு நல்லவர்கள் ஏன் இப்படித் துன்பப் படவேண்டுமென்று எண்ணுகிறபோது இவர்கள் போன பிறப்பில் கொலை பாதகம் செய்திருக்க

வேண்டுமென்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது என்பதைக் குறிக்க 'என்ப' என்றார்.

விரதம் முடிந்து விட்டது.

ஞானம்

[ஞானம் என்பது மேலான அறிவு. அது எல்லா மக்களும் அறிய வேண்டிய அறிவு. ஞானத்துக்கென்றே துறவு பூண்டு அதற்கென்றே விரதங்களைக் காத்து, அதையே சிந்தித்து, அதையே பேசி, ஞானமார்க்கத்திலேயே நிற்க வேண்டியவன் துறவியானதினால் இது துறவறத்தில் சொல்லப்பட்டது. ஞானம் என்பது துறவிகளுக்குத்தான் என்பதற்காக அல்ல. துறவு பூண்டும் ஞானம் சித்திக்காமற் போகலாம். இல்லறத்திலிருந்தும் ஞானம் பெறலாம். ஞானத்துக்கு முதலில் அறிய வேண்டியது நிலையாமை]

அதி. 34—நிலையாமை

[நிலையாமை என்பது, செல்வமும் இளமையும் உடலும் நிலையற்றன என்பதைப் பற்றியது.]

331. நில்லாத வற்றை நிலையின வென் றுணரும்
புல்லறி வாண்மை கடை.

ப. ரை : நில்லாதவற்றை நிலையின என்று உணரும் புல் அறிவாண்மை கடை = நிலையில்லாதவற்றை நிலையுள்ளன என்று நினைக்கிற சிறுமதி கீழ்க் கடையானது.

பொ. ரை : நிலையில்லாத பொருள்களை நிலையுள்ளவை போல நினைக்கிற அற்ப புத்தி இகழத் தக்கது.

வி - ம் : நிலையற்ற பொருள்கள் என்பதை அறிந்த பின்னும் அவற்றை நிலையுள்ளவை போல நினைத்துக் கொண்டு காரியங்களைச் செய்கிற கீழான புத்தி போக வேண்டும். அதன் பிறகுதான் ஞானத்தின் ஆரம்பம்.

அப்படி நிலையானவைகள் என்று மனிதர்கள் நினைக்கிற நிலையில்லாப் பொருள்கள் எவை என்றால் :

332. கூத்தாட் டவைக்குழாத் தற்றே பெருஞ்செல்வம்
போக்கு மதுவிளிந் தற்று.

ப. ரை : பெரும் செல்வம் கூத்தாட்டு அவை குழாத்து அற்று போக்கும் அது விளிந்த அற்று = பெரிய செல்வம் வருவது

கூத்தாட்டம் பார்க்கக் கூடுகின்ற கூட்டத்தைப் போன்றது; அது போவதும் அக்கூட்டம் கலைவது போன்றது.

பொ. ரை: பெருஞ் செல்வம் வந்து சேர்வது, கூத்தாட்டம் பார்க்கச் சேருகின்ற கூட்டத்தைப் போன்றது; அது தொலைந்து போவதும் அந்தக் கூட்டம் கலைந்து போவதைப் போன்றது.

வி-ம்: கூத்தாட்டம் பார்க்க வருகிறவர்கள் பல இடங்களிலிருந்து ஒவ்வொருவராக வந்து பெருங் கூட்டமாகக் கூடுவது போல, செல்வம் சேரும்போது பல வழிகளில் சிறுகச் சிறுகச் சேர்ந்து பெருஞ் செல்வமாகும். கூத்தாட்டம் முடிந்த உடன் கூட்டம் குபீலென்று கலைந்து விடும். அது போலவே செல்வமும் போகும்போது ஒருமிக்கப் போய்விடும்.

செல்வம் நிலையற்றதாகையால் செல்வம் இருக்கிறபோதே தர்மங்களைச் செய்துவிட வேண்டும்:

333 அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயல்.

ப. ரை: செல்வம் அல்கா இயல் பிற்று; அது பெற்றால் ஆங்கே அல்குப செயல் = பொருட் செல்வம் நிலைக்காத இயல்புடையது; அது கிடைத்தால் அப்போதே நிலையுள்ளதான தர்மம் செய்ய வேண்டும்.

பொ. ரை: பணச் செல்வம் ஒரு இடத்தில் தங்காத இயல்புடையது. அதைப் பெற்றுள்ள போதே உடன் தங்கி உதவக் கூடிய புண்ணியங்களைச் செய்துவிட வேண்டும்.

வி-ம்: செல்வம் நிலையில்லாதது. ஆனால் அதைக் கொண்டு செய்கிற தானதர்மங்களால் வரும் புண்ணியம் நிலைத்திருந்து உயிருக்கு உதவும். செல்வம் உள்ள போது செய்யும் புண்ணியம் செல்வம் போய் விட்ட பின்பும் தான் போகாமல் உடனிருந்து பயன் தரும். ஆனதால் அதை 'அல்குப' என்றார். 'அற்குதல்' என்பதும் 'அல்குதல்' என்பதும் ஒன்றே.

நிலையானது என்று மக்கள் நினைக்கிற நிலையற்ற பொருள் செல்வம் மட்டுமல்ல; மனிதனுடைய இளமையும் நிலையற்றது:

334. நாளென வொன்றுபோற் காட்டி யுயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்.

ப. ரை: உணர்வார் பெறின் நாள் என ஒன்றுபோல் காட்டி உயிர் ஈரும் வாள் அது = உணர்ந்து அறியக் கூடியவர்கள் இருந்தால். நாள் என்ற அது, ஒன்றைப் போலவே பல நாள்களைக் காட்டி உயிரைத் தேய்த்து அறுக்கின்ற ஈர் வாளாகும்.

பொ. ரை: உணர்ந்து அறியக் கூடியவர்களுக்கு, நாள் என்பது ஒன்றைப் போலவே அடுத்தடுத்துப் பல நாள்களாகத் தோன்றி, சிறுகச் சிறுக உயிரை அறுத்து விடுகிற இரம்பமாகும்.

வி-ம்: மனிதருக்கு வினைத் தெரிந்ததிலிருந்து ஒரு நாளைப் போலவே மறு நாளும் தோன்றுகின்றது. ஆனால் ஒவ்வொரு நாளும் இளமை குறைந்து, கொஞ்சங் கொஞ்சமாக மரணம் நெருங்கி வருவதை அவர்கள் உணர்வதில்லை. மரமறுக்கும் இரம்பத்தினுடைய கூரிய பற்கள். ஒன்று போல ஒன்று ஒன்றன் பின் ஒன்றாக வந்து சிறுகச் சிறுக மரத்தைத் தேய்த்துப் பிளந்து விடுகின்றன. இரம்பத்தினுடைய ஒரு பல் மரத்தின் மீது உராய்ந்து விட்டுப் போன உடன் ஓரளவு மரம் தேய்ந்து விடுகிறது. அது போல மனிதனுக்கு ஒரு நாள் வந்து போன உடன் அவன் உயிர் ஓரளவு தேய்ந்து விடுகிறது.

அதனால் உடலும் நிலையற்றது. இளமை மாறி சிறுகச் சிறுக உயிர் தேய்ந்து மரணம் வந்து விடுமுன்னால்:

335. நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படும்.

ப. ரை: நாசெற்று விக்குள் மேல் வாரா முன் நல்வினை மேல் சென்று செய்யப்படும் = நாக்கை ஒடுக்கி விக்கல் மேலே வருவதற்கு முன்னால் புண்ணியங்களைச் செய்ய முந்திக் கொள்ளவேண்டும்.

பொ. ரை: பேச்சு வாராதபடி நாக்குக் குளறி, மேல்மூச்சு வருவதற்கு முன்னால் புண்ணிய காரியங்களைச் செய்ய முந்திக் கொள்ள வேண்டும்.

வி-ம்: உடல் நிலையற்றதாகையால் மரணம் வருமுன் புண்ணியங்களைத் தேடிக் கொள்ள வேண்டும். நாக்கு ஒடுங்குவதும் மேல் மூச்சு விக்குவதும் மரணத்தின் அறிகுறிகள். 'மேற்சென்று' என்பதற்கு 'அதற்கு முன்னால் சென்று' என்பது பொருள்.

புண்ணியங்களைச் செய்வதில் தாமதம் கூடாது என்பது ஏனென்றால்:

**336. நெருந லுளனொருவ னின்றில்லை யென்னும்
பெருமை யுடைத்திவ் வுலகு.**

ப. ரை: நெருநல் உளன் ஒருவன் இன்று இல்லை என்னும் பெருமை உடைத்து இவ்வுலகு = நேற்று இருந்த ஒருவன் இன்றைக்கு இல்லை என்னும் பெரிய இயல்புடையது இந்த உலகம்.

பொ. ரை: நேற்று இருந்த ஒருவன் இன்றைக்கு இல்லாமற் போனான் என்னும் பெரிய இயல்புடையது இவ்வுலக வாழ்வு.

வி-ம்: 'பெருமை' என்பது கண்டறிய முடியாத அருவமாகிய வல்லமை.

அப்படி இந்த உலக வாழ்வு நிலையற்றதாக இருப்பது தெரிந்தும் கூட:

**337. ஒருபொழுதும் வாழ்வ தறியார் கருதுப
கோடியு மல்ல பல.**

ப. ரை: ஒரு பொழுதும் வாழ்வது அறியார் கருதுப கோடியும் அல்ல பல = ஒரு நாளைக்குக் கூட உயிரோடிருப்பதை அறிய முடியாதவர்கள் நினைப்பது ஒரு கோடி அல்ல, பல கோடி எண்ணங்கள்.

பொ. ரை: ஒரு நாள் முழுவதும் கூட உயிரோடிருப்பார்கள் என்பது நிச்சயமில்லாத மனிதர்கள் எண்ணுகிற எண்ணங்கள் ஒரு கோடி இரண்டு கோடியல்ல; பற்பல கோடிகள்.

வி-ம்: எந்தக் கணத்திலும் மரணம் வந்து மறைந்து போக வேண்டிய நிலையில்லா வாழ்க்கையுள்ள மனிதன் கோடானு கோடி எண்ணங்களை எண்ணித் திட்டம் போடுகிறானே என்பது குறித்து 'ஒரு பொழுதும் வாழ்வதறியார்' என்றார்.

ஒரு உடலுக்கும் அதன் உயிருக்கும் உள்ள தொடர்பு சிறிது காலத்துக்குத்தான்:

**338. குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
யுடம்பொ டுயிரிடை நட்பு.**

ப. ரை: உடம்பொடு உயிர் இடை நட்பு குடம்பை தனித்து ஒழிய புள் பறந்த அற்றே = உடம்புக்கும் உயிருக்கும் இடையிலுள்ள தொடர்பு முட்டையின் ஓடு தனியாகிவிட அதிலிருந்த பறவை பறந்து போய் விடுவதைப் போன்றதே.

பொ. ரை: உடலுக்கும் உயிருக்கும் உள்ள சம்பந்தம் முட்டையின் ஓட்டை விட்டு விட்டு. அதிலிருந்த பட்சி பறந்து விடுவதைப் போன்றதுதான்.

வி-ம்: கருப் பையிலிருந்து வெளியான போது முட்டையின் ஓடும் அதனுள்ளிருந்த பறவைக்குஞ்சும் பிரிக்க முடியாதபடி ஒன்றாகவே இருந்தன. ஆனால் முட்டையிலிருந்து குஞ்சு வெளிப்பட்ட பின் அந்த முட்டை ஓட்டைப் பார்த்தால் குஞ்சுக்கும் ஓட்டிற்கும் யாதொரு சம்பந்தமும் இருந்ததாகவே தெரிவதில்லை. அது போலவே உடலை விட்டு விட்டு உயிர் போவதும்.

உயிர் பிரிந்த பின்பு அந்த உடல் அழிந்து விடுகிறது. அந்த உடல் அழிந்தாலும் அதிலிருந்து பிரிந்த உயிர் அழிவதில்லை. அந்த உயிர் இந்த உடலோடு கூடியிருந்தபோது செய்த புண்ணிய பாவங்களுக்குத் தகுந்தபடி இன்னொரு உடலிற் புகுந்து கொள்ளும். அதனால் உயிருக்குச் சாவில்லை.

339. உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு.

ப. ரை: சாக்காடு உறங்குவது போலும்; உறங்கி விழிப்பது போலும் பிறப்பு = சாவு என்பது தூங்குவதைப் போன்றது; தூங்கி விழிப்பது போன்றது பிறப்பு.

பொ. ரை: உயிருக்குச் சாவு என்பது தூக்கம் போன்றது; தூங்கி விழிப்பது போன்றது இன்னொரு பிறப்பு.

வி-ம்: உயிர் அழிவற்றதாயினும் உடல்நிலையில்லாதது. அந்த நிலையாமையை உணர்ந்து இந்த உடல் இருக்கிற போதே புண்ணியங்களைச் செய்தால் இந்த உடலை விட்டு அந்த உயிர் பிரிந்த பின்பு அதற்கு இதைக் காட்டிலும் நல்ல உடல் கிடைக்கும். அல்லது பிறவாமை கிடைப்பினும் கிடைக்கும்.

இப்படி ஒரு உடலிலும் நிலை கொள்ளாமல் வெவ்வேறு உடல்களில் மாறி மாறிப் புகுந்து கொண்டிருக்கிற உயிருக்கு ஒரு நிலையான இடம் எப்போது கிடைக்குமோ?

340. புக்கி லமைந்தின்று கொல்லோ வுடம்பினுட்
டுச்சி லிருந்த வுயிர்க்கு.

ப. ரை: உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு புக்கு இல் அமைந்தின்று கொல்லோ = உடம்புக்குள் ஒன்டுக் குடியிருந்த உயிருக்கு நிலையான ஒரு வீடு அமையவில்லையோ!

பொ. ரை: உடம்புக்குள் சிறிது காலம் ஒண்டுக் குடிபோல் இருந்து, போய்விடுகிற உயிருக்கு சாசுவதமான ஒரு வீடு கிடைக்கவில்லையோ!

வி-ம்: பல உடம்புகளுக்குள் புகுந்து ஒவ்வொரு உடம்பிலும் சிறிது சிறிது காலமே தங்கியிருந்து ஓடிப் போகிறதே இந்த உயிர்! அது ஏன் அப்படி ஓடி விடுகிறது என்பதை ஆராய்ந்து பார்த்தால் என்றைக்கும் தங்கியிருப்பதற்குத் தகுதியான ஒரு வீட்டைத் தேடுவதற்காக ஒவ்வொரு உடலாகப் புகுந்து புகுந்து பார்த்துக் கொண்டு, அப்படிப்பட்ட வீடு கிடைக்காமல் அலைகிறதோ என்று தோன்றுகிறது.

அதி. 35—துறவு

[துறவு என்பது மனத்துறவு. துறவறம் மேற்கொண்டவனுக்கென்று இது வரையிலும் சொல்லப்பட்ட விரதங்களும் 'நிலையாமை' அறிவும் இந்த மனத்துறவை உண்டுபண்ணத் தான். துறவறம் மேற்கொண்ட உடனேயே மனத்துறவு வந்து விடாது. இதுவரை சொல்லப்பட்டவை புறத்துறவு தான். இதுதான் மனத்துறவு. மனத்துறவு கைகூடிய பின்பே பிறப்பறுத்தலுக்குத் தகுதி வரும்.]

**341. யாதனின் யாதனி னீங்கியா னோத
லதனி னதனி னிலன்.**

ப. ரை: யாதனின் யாதனின் நீங்கியான் அதனின் அதனின் நோதல் இலன் = எதிலிருந்து எதிலிருந்து நீங்குகிறானோ அதிலிருந்து அதிலிருந்து துன்பம் அடைய மாட்டான்.

பொ. ரை: எந்த எந்தப் பற்றுகளை விடுகிறானோ அந்த அந்தப் பற்றினால் வருந் துன்பங்கள் அவனுக்கு இல்லையாகும்.

வி-ம்: ஒருவன் எந்தெந்த ஆசைகளை விட்டு விடுகிறானோ அந்தந்த ஆசையினால் உண்டாகும் துன்பங்களும் அவனை விட்டு விடும். 'நீங்குதல்' இங்கே மனத்தால் நீங்குதல்.

ஆசைகளை விட்டவனே பிறவித் துன்பங்களிலிருந்து விடுதலை பெறுவான். ஆதலால் துன்பங்களிலிருந்து விடுபட வேண்டுமானால்:

**342. வேண்டினுண் டாகத் துறக்க துறந்தபி
னீண்டியற் பால பல.**

ப. ரை: வேண்டின் உண்டாகத் துறக்க; துறந்தபின் ஈண்டு இயல்பால பல = (துன்பங்களிலிருந்து விடுபட) வேண்டு

மானால் மிகுதியாகப் பற்றுகளை விட்டு விடு; பற்றுகளை விட்டு விட்டபின் இங்கே அடைய வேண்டியவைகள் பல இருக்கின்றன.

பொ.ரை: துன்பங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் பற்றுகளை முற்றிலும் விட்டுவிட வேண்டும்; விட்ட பிறகுதான் பல நன்மைகள் கிடைக்கும்.

வி-ம்: 'உண்டாகத் துறக்க' என்பது 'மிகுதியாக விட்டொழிக' என்ற பொருள் தருவது. இங்கே பிறப்பறுக்கும் நோக்கமுடைய துறவு மனத்தைக் குறிப்பதால் 'முற்றிலும் விட்டொழிக' என்று பொருள் தரும்.

அப்படி ஆசைகளை முற்றிலும் விட்டொழிப்பது மிகவும் கடினமானதுதான். அதற்காக:

343. அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு.

ப. ரை: ஐந்தன் புலத்தை அடல் வேண்டும்; வேண்டிய எல்லாம் ஒருங்கு விடல் வேண்டும் = ஐந்து புலன்களையும் அடக்கப் போராட வேண்டும்; (அப்புலன்கள்) விரும்புகின்ற ஆசைகளையெல்லாம் ஒருமிக்க விட்டொழிக்க வேண்டும்.

பொ. ரை: ஐந்து இந்திரியங்களையும் ஒடுக்க அவற்றோடு போராட வேண்டும்; அந்த இந்திரியங்கள் விரும்புகின்ற எல்லா ஆசைகளையும் ஒருமிக்க விட்டொழிக்க வேண்டும்.

வி-ம்: இந்திரிய ஆசைகளை ஒடுக்குவது இலேசான காரியமல்ல. அவைகளுடன் ஓயாது போராட வேண்டும். அதனால் 'அடல் வேண்டும்' என்றார்.

அப்படிப் போராடிப் போராடி ஆசைகளை ஒடுக்கி எந்தப் பொருளிலும் பற்றில்லாமல் இருக்கப் பழக வேண்டும். அதுதான் மனத்துறவு:

344. இயல்பாகு நோன்பிற்கொன் றின்மை யுடைமை
மயலாகு மற்றும் பெயர்த்து.

ப. ரை: நோன்பிற்கு இயல்பு ஒன்று இன்மை ஆகும்; உடைமை மற்றும் பெயர்த்து மயல் ஆகும் = துறவறத்துக்கு ஒழுங்கு ஒரு உடைமையும் இல்லாதிருப்பதாகும்; உடைமை இருந்தால் அது துறவை விட்டு மறுபடியும் ஆசைப்படுவதாகும்.

பொ. ரை: துறவறத்தின் முறையே எந்த ஒரு பொருளையும் உடைமையாக வைத்துக் கொள்ளாமல் இருப்பது; உடைமை

என்பது இருந்தால் அது துறவறத்தைக் கெடுத்து மீண்டும் விட்டுவிட்ட ஆசைகளில் ஈடுபடுத்துவதாகும்.

வி - ம்: துறவியானவன் 'தன்னுடையது' என்று ஒரு பொருளிலும் பற்று வைக்காமல் இருக்கவேண்டும். எந்தப் பொருளில் பற்று வைத்தாலும் அது துறவு நிலையைக் கெடுத்து விடும்.

துறவிக்கு அவனுடைய சொந்த உடம்பின்மேல் கூட பற்றிருக்கக் கூடாதே! :

345. மற்றுந் தொடர்ப்பா டெவன்கொல் பிறப்பறுக்க லுற்றார்க் குடம்பு மிகை.

ப. ரை: பிறப்பு அறுக்கல் உற்றார்க்கு உடம்பும் மிகை; மற்றும் தொடர்ப்பாடு எவன் கொல்! = பிறப்பை அறுத்துவிடும் முயற்சியிலுள்ள துறவிக்கு உடம்புகூட பாரம்; அப்படியிருக்க வேறு தொடர்புகள் எதற்காகவோ!

பொ. ரை: பிறவாதிருக்க வேண்டுமென்ற முயற்சிகளில் ஈடுபட்டுள்ள துறவிக்கு அவனுடைய தேகமே கூட அவனுக்கு பாரம்; அப்படியிருக்க வேறு உடைமைகள் எதற்கோ தெரியவில்லை!

வி - ம்: பிறப்பில்லாத நிலையை அடைவதற்கு வேண்டிய சாதனைகளைச் செய்வதற்கு உடம்பு இன்றியமையாதது. அப்படிப்பட்ட உடம்பும் கூட துறவிக்கு ஒரு பாரம். ஏனெனில் உடம்பும் அதனோடு சேர்ந்த துன்பங்களும் இனிமேல் வரக்கூடாது என்பதுதான் துறவியின் நோக்கம். ஆகையினால் உடம்பின் மீதும் பற்று வைக்கக் கூடாது. இந்த உடம்பை இனிப் பிறவாதிருக்க வேண்டிய சாதனைகளைச் செய்ய ஒரு கருவியாக மட்டும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதிலும் பற்று வைக்கக் கூடாது.

அப்படி உடம்பினிடத்திலும் பற்றில்லாமல் இருப்பது கைகூடினால் :

346. யானெனை தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க் குயர்ந்த வுலகம் புகும்.

ப. ரை: 'யான்' 'எனது' என்னும் செருக்கு அறுப்பான் வானோர்க்கு உயர்ந்த உலகம் புகும் = 'நான்', 'என்னுடையது' என்ற அகங்காரங்களை ஒழித்துவிட்டவன் தேவர்களுக்கும் மேலான உலகத்தைச் சேர்வான்.

பொ. ரை: 'நான்', 'என்னுடையது' என்ற அகங்கார எண்ணங்களை மனதிலிருந்து ஒழித்து விட்டவன் தேவர்கள் வசிக்

கும் உலகத்துக்கும் மேலான இடத்துக்குப் போய்ச் சேர்வான்.

வி-ம்: 'வானோர்க் குயர்ந்த உலகம்' என்றதனால் பேரின்ப வீடு தேவலோகத்துக்கும் மேலானது. வானுலகத்திலுள்ளவர்களாகச் சொல்லப்படுகிற தேவர்களும் மனிதர்களைக் காட்டிலும் அதிகமான சுக போகங்களை அனுபவிக்கிறவர்களேயல்லாமல் வேறல்லர். 'யான்', 'எனது' என்ற செருக்கறுத்த மனிதர்கள் தேவர்களைக் காட்டிலும் உயர்ந்த பதவியை அடைவார்கள் என்பது கருத்து.

யான் எனது என்ற பற்றுகளை விட்டாலல்லாமல் பிறவித் துன்பங்களிலிருந்து விடுதலையடைய முடியாது:

347. பற்றி விடாஅ விடும்பைகள் பற்றினைப்
பற்றி விடாஅ தவர்க்கு.

ப. ரை: பற்றினை பற்றி விடாஅதவர்க்கு இடும்பைகள் பற்றி விடாஅ = (யான் எனது என்ற) பற்றுகளை விடாமல் பற்றிக்கொண்டிருக்கிறவர்களைத் துன்பங்களும் விடாமல் பற்றிக்கொண்டிருக்கும்.

பொ. ரை: யான் எனது என்ற அகங்காரங்களை விடாமல் பிடித்துக் கொண்டிருக்கிறவர்களைப் பிறவித் துன்பங்களும் விடாமல் பிடித்துக் கொண்டிருக்கும்.

வி-ம்: 'விடாஅதவர்க்கு' என்பது 'விடாதவரை' என்ற பொருளில் நிற்பது.

பற்றுகளையெல்லாம் விட்டொழித்த பிறகுதான் துறவறத்தின் பலன் நெருங்கும்:

348. தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்.

ப. ரை: தீர துறந்தார் தலைப்பட்டார்; மற்றையவர் மயங்கி வலைப்பட்டார் = (பற்றுகளையெல்லாம்) முற்றிலும் விட்டொழித்தவர்கள் துறவு நிலை அடைந்தவர்கள்; மற்றவர்கள் மயங்கிப் பிறவித் துன்பங்களில் சிக்கிக் கொண்டவர்கள்.

பொ. ரை: பற்றுகளையெல்லாம் மிச்சமின்றி அடியோடு விட்டவர்களே துறவு நிலை கைகூடினவர்கள்; மற்றவர்கள் ஆசைகளில் மயங்கி பிறவித் துன்ப வலைக்குள் சிக்கிக் கொண்டவர்களாவார்கள்.

வி-ம்: பற்று என்பது துளிகூட இல்லாமற் போனபிறகுதான் பிறவாமையை நாட அருகதையுள்ளவனாக முடியும். துளி ஆசை இருந்தாலும் அது பிறவிக்குக் காரணமாகும். இதைப் பற்றிய உண்மைகளை ஆன்ம தத்துவ நூல்களில் ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

பற்றுகளை விட்ட பிறகுதான் பிறப்பறுத்தல் சித்திக்கும்:

**349. பற்றற்ற கண்ணே பிறப்பறுக்கு மற்று
நிலையாமை காணப் படும்.**

ப. ரை: பற்று அற்ற கண்ணே பிறப்பு அறுக்கும்; மற்று நிலையாமை காணப்படும் = பற்றுகளை விட்ட நிலையே பிறப்பை ஒழிக்கும்; இல்லாவிட்டால் நிலையற்றதான பிறப்புதான் வரும்.

பொ. ரை: ஆசைகளையெல்லாம் விட்டுவிட்ட நிலையே மறு பிறப்பை ஒழிக்கும்; இல்லையானால் மீண்டும் நிலையற்ற பிறவி தான் வரும்.

வி-ம்: 'கண்' என்பது 'இடம்' என்ற பொருள் தந்து நிலையைக் குறிப்பது. 'கண்ணே' என்பதற்கு 'உடனே' என்ற பொருள் கொள்ளக் கூடாது. ஏனெனில் பற்றற்ற மனதை அடைந்தவன், தான் உயிர்விடும் வரையில் அந்த நிலையைக் காக்க வேண்டும். பற்றற்ற நிலை கடைசி வரையிலும் கலையாமலிருக்க மெய்ப் பொருளை உணர்ந்து மீண்டும் பற்றுகள் வந்து விடாதபடி அவாவின்மை பெற்றுவிட வேண்டும். ஆதலால பற்றற்ற உடனேயே பிறப்பறுத்தல் கிடைத்துவிடாது. உடலை விட்டு உயிர் பிரியும் போது பற்றற்ற நிலை இருந்தால் தான் அந்த உயிருக்கு மறு பிறப்பு இருக்காது.

பற்றுகளை முற்றத் துறப்பது மிகவும் கடினமானது. பற்றுகள் விடுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்றால்:

**350. பற்றுக பற்றற்றான் பற்றினை யப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.**

ப. ரை: பற்று விடற்கு பற்றற்றான் பற்றினை பற்றுக; அப் பற்றைப் பற்றுக = பற்றுகளை விடுவதற்குப் பற்றற்றவனாகிய பகவானைப் பற்றிக் கொள்க; அப்பற்றையே தொடர்க.

பொ. ரை: ஆசைகளினின்று விடுபடுவதற்கு ஆசைகளே இல்லாதவனாகிய பகவானுடைய தொடர்பைப் பிடித்துக் கொள்க; அதை விட்டு விடாமல் பின்பற்றுக.

வி-ம்: பற்றற்ற நிலைமையான பிறப்பில்லாமை வேண்டுமானால் பற்றற்றவனாக வேண்டும். அப்படிப் பற்றற்றவன் ஆவதற்குப் பற்றற்ற ஒருவனுடைய துணை வேண்டும். ஒரு பற்றும் இல்லாதவன் யாரென்று சிந்தனை செய்து பார்த்தால் பகவான் ஒருவன்தான் பற்றற்றவன் என்று தெரியவரும். அந்த அறிவைப் பிடித்துக்கொள்க. அந்த அறிவை இடைவிடாது தொடர்ந்தால் உலகப் பற்றுகள் விட்டுவிடும்.

அதி. 36—மெய்யுணர்தல்

[மெய்யுணர்தல் என்பது மெய்யான பொருள் எது என்று அறிவினால் ஆராய்ந்து அந்த மெய்ப் பொருளை உயிர் உணர்வது. உயிர் உணர்வது என்பது ஆன்மா அனுபவிப்பது. அறிவு மெய்ப் பொருளை ஆராய்ந்து சொல்லும். அத்துடன் அறிவின் வேலை முடிந்தது. அதன் பின் அந்த மெய்ப் பொருளை உணர வேண்டியது உயிரின் வேலை. அந்த உணர்ச்சி நிலைத்தால் பிறப்பின்மை கைகூடும். அந்த மெய்யான பொருள் எது என்று ஆராய்வதையும், ஆராய்ந்து அறிந்த மெய்ப் பொருளை இடையறாது அனுபவிக்க வேண்டுமென்பதும் இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகின்றன.]

351. பொருளல் லவற்றைப் பொருளென் றுணரு
மருளானு மாணாப் பிறப்பு.

ப. ரை: பொருள் அல்லவற்றை பொருள் என்று உணரும் மருளான் மாணா பிறப்பு ஆம் = மெய்ப் பொருள் அல்லாதவைகளை மெய்ப் பொருளாக உணர்ந்து விடுகிற மயக்கத்தால் கீழான பிறவி வந்து விடும்.

பொ. ரை.: (நித்தியமான பொருள் எதுவென்று ஆராயாமல்) சத்தியம் அல்லாதவற்றை பகவான் என்று உணர்ந்து விட்டால் கீழான பிறவி வந்துவிடும்.

வி-ம்: பிறப்பறுக்க வேண்டுமென்று உலகப் பற்றுகளையெல்லாம் விட்டு விட்டுப் பற்றற்ற மெய்ப் பொருளான பகவானுடைய பற்றை பற்றிக் கொண்டு அதைத் தொடர வேண்டிய துறவி, மெய்ப் பொருள் அல்லாத ஒன்றை பகவான் என்று பற்றி மயங்கி உணர்ந்து விட்டால் பிறப்பறுப்பதும் கெட்டு இப்போதுள்ள பிறவியைக் காட்டிலும் கீழான பிறப்பு வந்து விடும். 'மாணாப் பிறப்பு' என்பது மனிதப் பிறப்பினும் மட்டமான பிறப்பு வந்தாலும் வந்து விடும் என்பதைக் குறிப்பது.

மெய்ப் பொருளாகிய பகவானை அறிய ஆராயும்போது பல திரிபுகளும் ஐயங்களும் உண்டாகும். 'திரிபு' என்பது 'விபரீதம்'. 'ஐயம்' என்பது 'சந்தேகம்'. விபரீதம் என்பது ஒன்றைவேறென்றாக எண்ணி விடுவது. சந்தேகம் என்பது, இதுவா அதுவா அல்லது இதுவும் அதுவும் அல்லாத வேறொன்றா என்று நிச்சயிக்க முடியாமலிருப்பது. ஆதலால் முதலில் 'திரிபு' என்ற விபரீத புத்திபால் மெய்ப் பொருளை விட்டு பொய்ப் பொருளை பகவான் என்று நினைத்துவிடக் கூடாது. 'மயக்கம்', 'திரிபு', 'விபரீதம்', 'மருள்' என்ற பதங்கள் எல்லாம் ஒரே பொருள் தரும் சொற்கள். மனம் வாக்கு, காயங்களுக்கு அப்பாற்பட்ட மெய்ப் பொருளை உணர முயன்ற துறவி சிறு சிறு தெய்வங்களை மெய்ப் பொருள் என்று மயங்கிவிடக் கூடாது என்பது கருத்து.

ஆதலால்:

352. இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி
மாசறு காட்சி யவர்க்கு.

ப. ரை: மருள் நீங்கி மாசு அறு காட்சியவர்க்கு இருள் நீங்கி இன்பம் பயக்கும் = மயக்கம் இல்லாமல் குற்றமற்ற பார்வை உள்ளவர்களுக்கு அறியாமை நீங்கி பேரின்பம் உண்டாகும்.

பொ. ரை: மயங்கித் திரிபாக எண்ணி விடாமல் குற்றமற்ற நோக்கத்தோடு மெய்ப் பொருளை அறிகின்றவர்களுக்கு அஞ்ஞானம் நீங்கி, பிறப்பில்லாத பேரின்பம் கைகூடும்.

வி - ம்: 'இருள்' என்பது 'நரகம்' அல்ல. இருள் என்பது அஞ்ஞானம். விபரீத புத்தியாகிய இருள் நீங்கினால் ஞான இன்பம் உதயமாகும் என்பது கருத்து.

விபரீதம் நீங்கி உதயமாகும் ஞானத்தில் சந்தேகம் இல்லை யென்பதையும் ஆய்ந்து தெளிந்து தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அதனால்:

353. ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து.

ப. ரை: ஐயத்தின் நீங்கி தெளிந்தார்க்கு வையத்தின் வானம் நணியது உடைத்து = சந்தேகத்தை விட்டுத் தெளிந்து விட்டவர்களுக்கு பூலோகத்தைக் காட்டிலும் வானுலகம் அருகில் உள்ளதாகும்.

பொ. ரை: சந்தேகத்தை விட்டுத் தெளிவடைந்தவர்களுக்கு இந்த உலகத்தைக் காட்டிலும் பேரின்ப உலகம் சமீபமாகும்.

வி-ம்: சந்தேகத்தையும் விட்டுத் தெளிந்தவர்களுக்கு பேரின்ப வீடு கிடைப்பது எளிதாகி விடும் என்பது கருத்து. முன்னே 'மருள்' என்ற 'விபரீதம்' நீங்க வேண்டும் என்ருர். இங்கே 'ஐயம்' என்ற 'சந்தேகம்' நீங்க வேண்டும் என்ருர். ஆதலால் 'திரிபு', 'ஐயம்' என்ற இரண்டும் நீங்கி விட்டால் மெய்ப் பொருளைப் பற்றிய அறிவு தெளிந்து விடும். அப்படித் தெளிந்தவர்கள் பிறவாமை பெறுவது சுலபம்.

விபரீதமும் சந்தேகமும் நீங்கி மெய்ப் பொருள் எது என்பதை அறிந்து விட்டாலும் போதாது. பேரின்பத்தை அடைவதற்கு அறிந்த மெய்ப் பொருளை உயிர் அனுபவிக்க வேண்டும்:

354. ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு.

ப. ரை: ஐ உணர்வு எய்தியக் கண்ணும் மெய்யுணர்வு இல்லாதவர்க்கு பயம் இன்று = மெய்ப் பொருளான இறைவனைப் பற்றிய அறிவை அடைந்து விட்டாலும் மெய்ப் பொருளை அனுபவிக்கும் தன்மை இல்லாதவர்க்குப் பயன் கிடைக்காது.

பொ. ரை: இறைவனை அறிந்து விட்டாலும் அந்த மெய்ப் பொருளை அனுபவித்து உணராதவர்களுக்குப் பயன் கிடைக்காது.

வி-ம்: ஐயந்திரிபுகளை விட்டு, மெய்ப் பொருளை அறிந்து கொண்டவர்களானாலும் அவர்கள் பகவானை ஆன்ம உணர்ச்சியோடு சேர்த்து அனுபவிக்கா விட்டால் பேரின்பப் பலனை அடைய முடியாது....... உடம்பு நிலையாமையை அறிந்து, பற்றுகளையும் விட்டு, ஐயம் திரிபுகள் நீங்கி மெய்ப் பொருள் எது என்பதையும் தெரிந்து, கூர்மையான உணர்ச்சிகளும் உள்ளவர்கள் பல பேர் உண்டு. ஆனால் அவர்கள் எல்லோரும் மெய்ப் பொருளான பகவானை ஆன்ம உணர்ச்சியோடு அனுபவிப்பதில்லை. அப்படி அனுபவிக்க வேண்டுமென்றுதான் பூசை என்றும், பக்தி என்றும், நிஷ்டை யென்றும், யோகம் என்றும் பல முயற்சிகளைச் செய்கிருர்கள். இந்த அனுபவ உணர்வு அதிகமாக இருக்க வேண்டுமென்றுதான் துறவு மேற்கொள்வது. ஆதலால் துறவியானவன் மெய்ப் பொருளை இடைவிடாது அனுபவித்துக் கொண்டிருப்பதுதான் மெய்யுணர்வு. அது இல்லாத துறவிக்கு பிறப்பறுத்தல் என்னும் பயன் கிடைக்காது.

மெய்ப் பொருளாகிய பகவானை விபரீதம் சந்தேகம் என்பன இல்லாமல் ஆராய்ந்து அறிந்து அதனுடன் ஒன்றுபட்டது போல் உணர்ந்து அனுபவித்துக் கொண்டிருப்பதுதான் பிறப்பறுக்கும் வழி. ஆனால் அந்த மெய்ப் பொருள் எது என்று ஆராய்வது எப்படியென்றால் :

355. எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

ப. ரை : எப்பொருள் எத்தன்மைத்து ஆயினும் அப் பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு = எந்தப் பொருள் எப்படிப்பட்டதாகத் தோன்றினாலும் அப் பொருளிலுள்ள எது மெய்யாக உள்ளது என்று கண்டுபிடிப்பதுதான் அறிவு.

பொ. ரை : எந்தப் பொருள் எப்படி நமக்குத் தோற்றமளித்தாலும் அந்தப் பொருளில் எது அழியாமல் என்றுமிருக்கக் கூடியது என்று கண்டுபிடிப்பது தான் மெய்ப் பொருளை ஆராயக் கூடிய அறிவு.

வி - ம்: நாம் பார்க்கின்ற பல பொருள்களும் அவைகளுடைய உருவத்திலும் நிறத்திலும் குணத்திலும் எப்படிக் காணப்பட்டாலும் ஆராய்ந்து பார்க்கும்போது அவற்றின் அந்தரங்க உண்மைகள் வேறாக இருக்கின்றன. உதாரணமாக மிக வெண்மையாகவும் மிகவும் உறுதியுள்ளதாகவும், மிக்க பளபளப்புள்ளதாகவும் காணப்படுகிற ஒரு வயிரக் கல்லை ஆராய்ந்து பார்க்கும் போது அது ஒரு வெறும் கரித்துண்டு தான் எனறு தெரியவருகிறது. அதைப் போலவே மனிதனுடைய உடல் பல அற்புத சக்திகள் உள்ளதாக இருப்பதைப் பார்க்கிறோம். அப்படிப்பட்ட உடல் ஒரு நாள் அந்த சக்திகளையெல்லாம் இழந்து விட்டு வெறும் பிணமாகி விடுகிறது. அந்த உடலை ஆராயும்போது அது மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்ற ஐந்து பூதங்களின் சேர்க்கை தான் என்று தெரிகிறது. அந்த ஐந்து பூதங்களும் எப்படிச் சேர்ந்தன, ஏன் சேர்ந்தன, அவற்றைச் சேர்த்து வைத்தது யார், சாகும் வரையிலும் அந்த உடலுக்குள் இருந்து கொண்டு பல விஷயங்களைப் பேசிக் கொண்டும் பல காரியங்களையும் செய்து கொண்டும் இருந்தது எது, என்றெல்லாம் ஆராயும் போதுதான் நம் கண்ணுக்குத் தோற்றமளித்துக் கொண்டிருந்த அந்த உடல் மெய்ப் பொருள் அல்ல வென்பதும் அந்த உடலுள்ளிருந்து அதை ஆட்டி வைத்த உயிர்தான் மெய்ப் பொருள் போலவும் தென்படுகின்றது. அந்த உயிர் தான் மெய்ப் பொருளா என்று மேலும் ஆராயும்போது பல சந்தேகங்களும் விபரீதங்களும் உண்டாகும். அந்த சந்தேக

விபரீதங்களை விட்டுப் பார்த்தால் மெய்ப் பொருள் அறியப் படும்.

இப்படி ஆராய்ந்து மெய்ப் பொருளை அறிவதற்குக் கல்வி யும் பயிற்சியும் வேண்டும்:

356. கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி.

ப. ரை: கற்று ஈண்டு மெய்ப்பொருள் கண்டார் மற்று ஈண்டு வாரா நெறி தலைப்படுவர் = (மெய்ப் பொருளை ஆராய்ந்தறி யும் வழிகளைக்) கற்று இந்தப் பிறப்பில் (மெய்ப் பொருளா கிய) பகவானை உணர்ந்து கொண்டவர்கள் மறுபடியும் இந்த உலகத்துக்கு வராமலிருக்கக் கூடிய தன்மையை அடைவார் கள்.

பொ. ரை: (மெய்ப் பொருளை ஆராயும் வழிகளைக்) கற்று இந்தப் பிறப்பில் மெய்ப் பொருளை உணர்ந்தவர்களே மறு படியும் இந்த உலகத்தில் பிறவாதிருக்கும் நிலைமையை அடைவார்கள்.

வி-ம்: 'கற்று' என்பதற்கு 'எப்பொருள் எத்தன்மைத்தாயி னும் அப் பொருள் மெய்ப்பொருள் காணும் அறிவினைக் கற்று' என்பது பொருள். கற்றல் என்பது நூல்களில் படித் தும், கேள்வியால் அறிந்தும், பயிற்சியால் உறுதியடைந்தும் உள்ள நிலை.

அப்படி கற்கும் முறை எதுவென்றால்:

357. ஓர்த்துள்ள முள்ள துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு.

ப. ரை: ஓர்த்து உள்ளம் உள்ளது உணரின் ஒரு தலையாய் பேர்த்து பிறப்பு உள்ள வேண்டா = (கல்வி கேள்விகளால்) பேர்த்து பிறப்பு உள்ள வேண்டா = (கல்வி கேள்விகளால்) உள்ள பொருளை ஆராய்ந்து மனமானது (என்றைக்கும்) உள்ள பொருளை உணர்ந்து அனுபவித்தால் உறுதியாக மறுபடியும் பிறப்பதை எண்ண வேண்டாம்.

பொ. ரை: கல்வி கேள்விகளால் ஆராய்ந்து, மனமானது என் றைக்கும் உள்ளதான அழிவில்லாப்பொருளை அறிந்து அதை அனுபவித்தால் நிச்சயமாக மறு பிறப்பை நினைக்க வேண் டியதில்லை.

வி-ம்: 'ஓர்த்து' என்பதற்கு கல்வியும் கேள்வியும் சேர்ந்து ஆராய்ந்து என்பது பொருள். 'உள்ளது' என்பது 'என்

றைக்கும் உள்ளது'. ஒவ்வொரு பொருளாக 'இது என்றைக் கும் உள்ளதா'. 'இது அழிவில்லாததா' என்று ஆராய்ந்து கொண்டே போனால் என்றைக்கும் 'உள்ளது' எது வென்பது புலப்படும். அதுதான் மெய்ப்பொருள். அதை உணர்ந்து அனுபவிக்க வேண்டும். அது முடிந்தால் பிறப்பில்லை.

மேலும் பிறப்பின்மை பெறுவதற்கு :

358. பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னுஞ்
செம்பொருள் காண்ப தறிவு.

ப. ரை : பிறப்பு என்னும் பேதமை நீங்க சிறப்பு என்னும் செம் பொருள் காண்பது அறிவு = பிறப்பு என்கிற அறியாமை நீங்குவதற்கு (எல்லாவற்றிலும்) சிறந்தது எனப்படுகிற செம்மையான மெய்ப் பொருளை கண்டுபிடிக்கக் கூடிய அறிவு தான் (ஓர்த்த) அறிவாகும்.

பொ. ரை : பிறப்பு என்ற அஞ்ஞானத்திலிருந்து விடுபடுவதற்கு எல்லாவற்றிலும் சிறந்த பொருளான மெய்ப் பொருளைக் கண்டு பிடிக்கும் அறிவுதான் கல்வி கேள்விகளால் ஆராய்ந்து அறிய வேண்டிய அறிவாகும்.

வி - ம் : 'சிறப்பு என்னும் செம்பொருள்' என்பது 'அதை விடச் சிறந்தது இல்லை என்னத் தகுந்த செம்மையான பொருள்' அதுதான் மெய்ப் பொருளாகிய பகவான். நாம் அறிந்த ஒவ்வொரு பொருளையும் 'இதை விடச் சிறந்தது எது' என்று ஆராய்ந்து, அதை விடச் சிறந்ததை வைத்துக் கொண்டு 'அதை விட இன்னும் சிறந்தது எது' என்ற முறையில் அறிந்து கொண்டே போனால் எல்லாவற்றிலும் சிறந்ததாக, அதை விடச் சிறந்தது ஒன்றும் இல்லை என்று சொல்லத் தகுந்த 'செம்பொருள' தென்படும். அதை அறிந்து அனுபவித்தால் பிறப்பென்னும் பேதைமை நீங்கும்.

ஆதலால் பிறப்பறுக்க விரும்புகிறவர்கள் அதற்காகச் சேரவேண்டிய இடமாகிய மெய்ப் பொருளை முதலில் கண்டு பிடித்து அதை அனுபவிக்கப் பழக வேண்டும் :

359. சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்.

ப. ரை : சார்பு உணர்ந்து சார்பு கெட ஒழுகின் மற்று அழித்து சார்தரும் நோய் சார்தரா = சேர வேண்டிய இடத்தை உணர்ந்து, சேரக் கூடிய (பற்றுகளை) நீக்கி நடந்து கொண்டால் (அந்த ஒழுக்கம் பிறவிக்குக் காரணமாக உள்ள) மற்

றத் தொடர்புகளை அழிந்துவிட, (அவற்றால்) சேரக் கூடிய பிறவி நோய்கள் சேரமாட்டா.

பொ. ரை: சேர விரும்பும் இடமாகிய மெய்ப் பொருளை உணர்ந்து, சேர்ந்துள்ளதும் சேரக்கூடியனவுமான பற்றுகளை ஒழித்து. தவ ஒழுக்கத்தில் நின்றால் அந்த ஒழுக்கம் பிறவியின் காரணங்களை அழித்துவிடுவதால் இனி வரக்கூடிய பிறவித் துன்பங்கள் சேரமாட்டா.

வி - ம்: பகவானை ஆராய்ந்தறிந்து அந்த பகவானுடைய உணர்விலேயே இருந்து கொண்டு பற்றுகள் பற்றிக் கொள்ளாமல் பார்த்துக் கொண்டால் பிறவியின் காரணமாகிய வினைப் பயன்கள் அழிந்துவிடும். வினைகள் மூன்று பகுதிகளாகச் சொல்லப்படும். முற்பிறப்புகளில் செய்த வினைகளின் தொகுதிக்கு 'சஞ்சித கர்மம்' என்று பெயர். அந்த வினை மூட்டையின் ஒரு சிறு பகுதியினால் இந்த பிறப்பு வந்தது. அந்த வினைப் பகுதிக்கு 'பிராரப்த கர்மம்' என்பது பெயர் இனி இந்தப் பிறவியில் செய்யும் வினைகளுக்கு 'ஆகாமிய கர்மம்' என்று பெயர். இந்த 'ஆகாமிய' வினை முற்பிறப்புகளின் வினைகளின் மூட்டையான சஞ்சிதகர்மத்தோடு சேரும். இந்த இரண்டும் சேர்ந்தவினை மூட்டையிலிருந்து ஒரு பகுதி இனி வரும் பிறப்புக்குப் 'பிராரப்த' வினையாகும். பிராரப்த கர்மம் அந்தந்த பிறப்போடு தீர்ந்து விடும். சஞ்சித கர்மமும் ஆகாமிய கர்மமும் சேர்ந்து தான் மறுபிறப்புகளைத் தருகின்றன. மெய்ப் பொருளாகிய பகவானை உணர்ந்து, அந்த பகவானோடு கலந்து நின்று, பற்றுகளை ஒழித்து விட்ட துறவிக்கு அவனுடைய தவ வலிமை சஞ்சித கர்மத்தை அழித்துவிடும். அதைத்தான் 'மற்றழித்து' என்பது குறிக்கிறது. பற்றுகளையெல்லாம் அறவே ஒழித்து விட்டதால் 'ஆகாமியம்' இல்லை. எனவே பிறப்பின் காரணங்கள் அழிந்து விடுகின்றன. இன்னும் இதற்கான விவரங்களை யோக ஞான நூல்களில் ஆராய்ந்து கொள்ள வேண்டும்.

சுருங்கச் சொன்னால் மெய்ப் பொருளை உணர்வதும் பிறப்பறுப்பதும் எப்போது கைகூடுமென்றால்:

360. காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னாமங் கெடக்கெடு நோய்.

ப. ரை: காமம் வெகுளி மயக்கம் இவை மூன்றன் நாமம் கெட நோய் கெடும் = ஆசை, கோபம், அறியாமை என்ற இந்த மூன்றின் பெயரே அற்றுப் போனால் பிறப்பும் அற்றுப் போகும்.

பொ. ரை: விருப்பு, வெறுப்பு, (மெய்ப் பொருளை) அறியாமை என்ற இந்த மூன்று குற்றங்களும் அறவே இல்லாமற் போனவனுக்குப் பிறவித்துன்பமும் இல்லாமற் போகும்.

வி-ம்: விருப்பு, வெறுப்பு, அஞ்ஞானம் என்ற மூன்று குற்றங்களும் நீங்கினால் மற்றெல்லாக் குற்றங்களும் நீங்கி விடும். அதன் பிறகு மெய்யுணர்வும் பிறவாமையும் சித்திக்கும். 'நாமம் கெட' என்பது நிர்மூலமாக அழிந்து மறைந்து போவது. 'நோய்' என்பது பிறவியாகிய துன்பம்.

அதி. 37—அவாவறுத்தல்

['அவா அறுத்தல்' என்பது ஆசைகளை அடியோடு நீக்குவது. விரதங்களையெல்லாம் காதது, நிலையாமை கண்டு, பற்றுகளை விட்டு, மெய்ப் பொருளை உணர்ந்து, பிறப்பறுக்கும் நிலைமைக்கு வந்துவிட்ட துறவியையும் அவன் விட்டு விட்ட பற்றுகள் வந்து வந்து ஆசை மூட்டும். அதற்கு இடங் கொடுத்து விடாமல் வெகு எச்சரிக்கையாக இருக்க வேண்டும். துளி ஆசை வந்துவிட்டாலும் பிறப்பு வந்துவிடும்.]

361. அவாவென்ப வெல்லா வுயிர்க்குமெஞ் ஞான்றுந்
தவாஅப் பிறப்பீனும் வித்து.

ப. ரை: எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாஅ பிறப்பு ஈனும் வித்து அவா என்ப = எல்லா உயிர்களுக்கும் எந்தக் காலத்திலும் தவறாமல் பிறப்பை உண்டாக்கக் கூடிய விதை ஆசைதான் என்று சொல்லப்படும்.

பொ. ரை: எல்லா உயிர்களுக்கும் எந்தக் காலத்திலும் நிச்சயமாகப் பிறவியைத் தரக்கூடிய மூல காரணம் ஆசைதான் என்று அறிந்தவர்கள் சொல்லுவார்கள்.

வி-ம்: 'எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாஅ' என்றது, ஆசைதான் பிறப்புண்டாக்குவது என்ற நிச்சயத்தை உணர்த்துவதற்கு. 'தவா' என்பது 'தப்பாமல்' என்ற பொருள் தருவது. ஆசை என்ற விதையிலிருந்துதான் பிறப்பு என்ற முளை முளைக்கிறது. ஆசையில்லாவிட்டால் விதை இல்லை. விதை இன்றி முளையுமில்லை. பின் விரிகின்ற பிறப்புத் துன்பங்களுமில்லை.

ஆசையில்லாமை பெற்றாலன்றி பிறவாமை பெற முடியாது:

362. வேண்டுங்கால் வேண்டும் பிறவாமை மற்றது
வேண்டாமை வேண்ட வரும்.

ப. ரை: வேண்டுங்கால் பிறவாமை வேண்டும்; மற்று அது வேண்டாமை வேண்ட வரும் = (துறவியானவன்) விரும்பினால் பிறவாமையை விரும்புவான்; அதுவும் விரும்பாமையை விரும்பினால்தான் கிடைக்கும்.

பொ. ரை: துறவு பூண்டவன் எதன் மீதாவது ஆசை கொண்டால் பிறவாமை பெறுவதன் மீதுதான் ஆசை கொள்ள வேண்டும்; ஆனால் அதுவும்கூட ஆசையில்லாமையின் மீது ஆசை வைத்தால்தான் கிடைக்கும்.

வி-ம்: 'பிறவாமை பெறவேண்டும்' என்ற ஆசை இருந்தாற் கூட பிறப்புதான் வரும். பிறவாமை வராது என்பதற்காக 'மற்று அது வேண்டாமை வேண்ட வரும்' எனப்பட்டது.

எந்தப் பொருளிலும் ஆசை வைக்காதிருப்பதைப் போன்ற செல்வம் வேறில்லையென்பது பிறப்பறுப்பதற்கு மட்டுமல்ல; எல்லா உலக விவகாரங்களுக்கும் பொருந்தும்:

363. வேண்டாமை யன்ன விழுச்செல்வ மீண்டில்லை
யாண்டு மஃதொப்ப தில்.

ப. ரை: வேண்டாமை அன்ன விழு செல்வம் ஈண்டு இல்லை; யாண்டும் அஃது ஒப்பது இல் = ஆசையில்லாதிருப்பதைப் போன்ற சிறந்த செல்வம் இந்த உலகத்தில் இல்லை. வேறு எந்த உலகத்திலும் அதற்கு இணையான செல்வம் இருக்காது.

பொ. ரை: எதிலும் ஆசை வைக்காதிருப்பதைப் போன்ற குறைவற்ற செல்வம் இந்த உலகத்தில் நாம் கண்டதில்லை; வேறு எந்த உலகத்திலும் அதற்கிணையான செல்வம் இருக்க முடியாது.

வி-ம்: துறவிக்கு மட்டுமல்ல மற்றவர்களுக்கும்கூட எதிலும் மோகம் வைக்காத குணம் எவ்வளவு நன்மைகளைச் செய்து துன்பமில்லாத மன அமைதியைத் தருகிறது என்பது உலகம் அறிந்த உண்மை. இந்த உண்மைதான் மற்ற உலகங்களிலும் இருக்கும் என்ற உறுதியான நம்பிக்கையைக் காட்டுவது 'யாண்டும் அஃதொப்பதில்' என்பது. 'விழுச் செல்வம்' என்பது குறைவற்ற செல்வம்.

மாசற்ற நிலைமை பெறவேண்டுமென்பதே துறவறத்தின் நோக்கம். அப்படியானால்:

364. தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது
வாஅய்மை வேண்ட வரும்.

ப. ரை: தூஉய்மை என்பது அவா இன்மை; மற்று அது வாஅய்மை வேண்ட வரும் = மாசில்லாத நிலைமை என்பது மனதில் ஆசையில்லாதிருப்பது; அதுவும் பொய்யாமையை விரும்பினால்தான் வரும்.

பொ. ரை: பரிசுத்தத் தன்மை என்பது மனதில் ஆசை என்ற அழுக்கு இல்லாதிருப்பது; அந்த ஆசையில்லாத பரிசுத்தத் தன்மையும் சத்தியமாக விரும்பினால்தான் கைகூடும்.

வி-ம்: மனதில் ஆசையில்லாத பரிசுத்தமான துறவு சத்தியத்தைக் கடைப் பிடிப்பவர்களுக்குத்தான் கைகூடும். அதாவது வேடத்தால் மட்டும் துறவிருந்து பயனில்லை. துறவறத்தின் சத்தியங்களை மனமார காக்கின்றவர்களுக்குத்தான் மனம் தூய்மை பெறும். அவர்கள் பெயரளவில் துறவிகள் அல்லாவிடினும் சரி.

ஏன் எனில்:

365. அற்றவ ரென்பா ரவாவற்றார் மற்றையா
ரற்றாக வற்ற திலர்.

ப. ரை: அற்றவர் என்பார் அவா அற்றார்; மற்றையார் அற்றாக அற்றது இலர் = துறந்தவர் என்பவர்கள் ஆசைகளைத் துறந்தவர்கள்; மற்றவர்கள் அப்படியாகத் துறந்துவிட்டது ஒன்றுமில்லை.

பொ. ரை: ஆசைகளை விட்டு விட்டவர்கள்தாம் பற்றுகளை விட்டுத் துறந்தவர்களாவார்கள்; மற்றவர்கள் அப்படியாக விட்டு விட்டது ஒன்றுமில்லை.

வி-ம்: ஆசைகளை விட்டவர்களே உண்மையான துறவிகளாவார்கள். மற்றவர்கள் போலித் துறவிகள்தாம். பற்றியிருந்த பொருள்களை யெல்லாம் விட்ட பின்னும் மனதில் அவற்றின்மீது ஆசை இருந்தால் அவன் துறந்தவனல்ல. அதனால் 'அற்றாக அற்றதிலர்' என்றார். 'அற்றது இலர்' என்றதனால் 'துறந்தது ஒன்றுமில்லை' என்ற பயனைத்தான் தரும் என்பது கருத்து.

துறவு மேற்கொண்டவர்கள் அந்தத் துறவறத்தின் பயனை அடைய முடியாமற் போவதன் காரணம் மனதில் ஆசைக்கு இடங்கொடுத்து ஏமாந்து போவதனால்தான்; ஆகையினால்:

366. அஞ்சுவ தோரு மறனே யொருவனை
வஞ்சிப்ப தோரு மவா.

ப. ரை: ஒருவனை வஞ்சிப்பது ஓரும் அவா; அஞ்சுவது ஓரும் அறனே = ஒருவனை ஏமாற்றிவிடுவது ஆசைதான்; அதற்கு அஞ்சுவதுதான் துறவறம்.

பொ. ரை: ஒருவனை அவனறியாதபடி ஏமாரச் செய்து விடுவது ஆசைதான்; அதற்கு அஞ்சி எச்சரிக்கையாக இருக்க வேண்டியதுதான் துறவியின் தர்மம்.

வி-ம்: துறந்தார்க்கு மட்டுமின்றிப் பொதுவாகவே எல்லா மனிதர்களையும் வஞ்சனையாக ஏமாற்றி அவர்களைத் தீய வழிகளில் இழுத்துச் செல்வது ஆசைதான் என்பது தோன்ற 'ஒருவனை' என்றார். 'ஓரும்' என்பது உறுதியைக் குறிக்கும் அசைச் சொல். இங்கே 'அறம்' என்றது 'துறவியின் அறம்'.

பிறவாதிருக்கக் கருதி துறவறம் மேற்கொண்டவன் ஆசைகளை யெல்லாம் மனதிலிருந்து விலக்கி விடுவதை மட்டும் பார்த்துக்கொண்டால் போதும்:

367. அவாவினை யாற்ற வறுப்பிற் றவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்.

ப. ரை: அவாவினை ஆற்ற அறுப்பின் தவா வினை தான் வேண்டும் ஆற்றான் வரும் = ஆசை என்பதனை முற்றிலும் அறுத்து விட்டால் துன்பமற்ற நிலையான பிறவாமை என்பது, அது வரவேண்டிய முறையில் தானே வரும்.

பொ. ரை: ஆசைகளின் தொடர்பை முற்றிலும் அறுத்தொழித்து விட்டால் கேடற்ற நிலைமை (என்னும் பிறவாமை) தானாகவே வரவேண்டிய முறையில் வந்து சேரும்.

வி-ம்: 'தான் வேண்டு மாற்றான்' என்பதற்கு 'தவாவினை தான்வரவேண்டிய முறையில்' என்று பொருள் கொள்ள வேண்டும். 'துறந்தவன் தான் வேண்டுகிறபடி' என்று பொருள் கொள்ளக்கூடாது. அப்படிப் பொருள் கொண்டால் முன்னால் 'வேண்டாமை வேண்ட வரும்' என்றது அடிபட்டுப் போகும். ஆசைகளை முற்றிலும் விட்டுவிட வேண்டிய தன் கடமையைத் துறவி தான் செய்வானாகில் பிறவாமை என்பது அவனிடம் சேரவேண்டிய தன் கடமையைத் தானே செய்யும்.

பிறப்பறுத்தல் ஒருபுறமிருக்க, வெறும் மனத் துன்பங்கள் இல்லாமல் இருப்பதற்காகவேனும் எல்லாரும் ஆசைகளை விலக்க வேண்டும்:

368. அவாவில்லார்க் கில்லாகுந் துன்பம.: துண்டேற்
றவாஅது மேன்மேல் வரும்.

ப. ரை: அவா இல்லார்க்குத் துன்பம் இல்லாகும்; அ.:து உண்டேல் தவா அது மேன்மேல் வரும் = ஆசை இல்லாதவர்களுக்குத் துன்பமும் இல்லையாகும்; ஆசை இருந்தால் தவருமல் துன்பம் மேலும் மேலும் வந்து கொண்டே இருக்கும்.

பொ. ரை: ஆசை இல்லாதவர்களுக்குத் துன்பமும் இல்லை; ஆசை இருந்தால் நிச்சயமாகத் துன்பங்கள் அடிக்கடி வந்து கொண்டே யிருக்கும்.

வி-ம்: துறந்தார்க்கு மட்டுமின்றி ஆசையில்லாத யாருக்கும் துன்பமிருக்காது என்பது தோன்ற 'அவா இலார்க்கு இல்லாகும் துன்பம்' என்ருர்.

துறவறத்தான் ஆசைகளை விட்டால் குறைவற்ற இன்பமுள்ள மோட்சத்தை அடைவான் என்பது ஒருபுறமிருக்க, இந்த உலகத்தில் துறவிகள் அல்லாத மற்றவர்களுக்கும்கூட:

369. இன்ப மிடையரு தீண்டு மவாவென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.

ப. ரை: அவா என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் ஈண்டும் இன்பம் இடையருது = அவா என்கின்ற துன்பங்களிலெல்லாம் (கொடிய) துன்பமானது இல்லாமற் போனுல் இந்த உலகத்திலும் இன்பம் குறையாதிருக்கும்.

பொ. ரை: ஆசை என்கிற துன்பங்களிலெல்லாம் கொடிய துன்பம் இல்லாமற் போனுல் இந்த உலகத்திலும் இன்பம் இடைவிடாது அனுபவிக்கலாம்.

வி-ம்: எல்லாத் துன்பங்களுக்கும் காரணம் அவா. அதை ஒழித்துவிட்டால் இந்த உலகத்திலேயே மோட்ச இன்பத்தை அனுபவிக்கலாம் என்பது தோன்ற 'ஈண்டும் இன்பம் இடையருது' என்ருர். அதனுல் துறவிகள் அல்லாதவர்களும் ஆசையற்று வாழ்வார்களானுல் துன்பம் இருக்காது என்பது கருத்து.

ஆசைகளை அடக்கி விடுவது மிகவும் கடினம். அடக்கிவிட்டால் அதுவே முத்தி நிலை:

370. ஆரா வியற்கை யவாநீப்பி னந்நிலையே
பேரா வியற்கை தரும்.

ப. ரை: ஆரா இயற்கை அவா; நீப்பின் அந்நிலையே பேரா இயற்கை தரும் = அடங்காத இயல்புடையது ஆசை; (அதை) நீக்கிவிட்டால் அந்த நிலைதான் மாறாத தன்மையைத் தரும்.

பொ. ரை: எவ்வளவு கிடைத்தாலும் திருப்தியடையாத சுபாவமுள்ளது ஆசை; அதை நீக்கிவிட்டால் அந்த நிலைதான் முத்தி நிலை.

வி-ம்: 'பேரா இயற்கை' நிலை பெயராத தன்மை; அதாவது பிறந்து இறந்து உழலாத 'பிறவாமை'. துறவறத்திற்குச் சொல்லப்பட்ட விரதமும் ஞானமும் ஆசைகள் முற்றிலும் அற்றுப் போகிற தன்மையை அடைவதற்கே. அதை அடைந்து விட்டால் துறவறத்தின் நோக்கம் முற்றுப் பெறும்.

அதி. 38—ஊழ்

['ஊழ்' என்பது பழைய வினைகளின் பயன். அதாவது முற்பிறப்புகளில் செய்த நல்வினை தீவினைகளின் பயன். இல்லறம் துறவறம் என்ற இரண்டு வழிகளையும் விரித்துரைத்து, இல்லறத்தான் 'வையத்து வாழ்வாங்கு வாழ்ந்தால் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்' என்றும், துறவறத்தான் 'ஆரா இயற்கை அவா நீப்பின் பேரா இயற்கை தரும்' என்றும் பிறவித் துன்பங்களிலிருந்து விடுபட்டுப் பேரின்பம் அடைவார்கள் என்பதை விளக்கினார். அப்படி விடுதலை பெறாத உயிர்கள் 'உறங்குவது போலும் சாக்காடு; உறங்கி விழிப்பது போலும் பிறப்பு' என்றபடி மீண்டும் மீண்டும் பிறப்பார்கள். அப்படிப் பிறக்கும் போது முன் பிறப்பில் செய்த (ஆகாமிய) வினைகளும் அதற்கு முன்னுள்ள பிறவிகளில் செய்து சேர்ந்துள்ள (சஞ்சித) வினைகளும் அந்த உயிரைத் தொடர்கின்றன. அதனால் அந்த வினைகளுக்குத் தக்கபடி இந்தப் பிறப்பில் சுகதுக்கங்கள் அமைகின்றன. இந்தப் பிறப்பிலும் வீடு பெறும் முயற்சிகளைச் செய்யலாம். இந்தப் பிறப்பில் முன்னைய நல்வினை தீவினைகளுக்குத் தக்கபடி தான் செல்வமோ வறுமையோ அமையும். அப்படிச் செல்வம் வருகிற போது மகிழ்ந்து மயங்கி விடாமலும் வறுமை வருகிறபோது துன்பப் பட்டுக் குலைந்து போகாமலும் இருக்க வேண்டும் என்று எச்சரிக்கை செய்வது இந்த அதிகாரம்.]

371. ஆகூழாற் றோன்று மசைவின்மை கைப்பொருள்
போகூழாற் றோன்று மடி.

ப. ரை: கைப்பொருள் ஆகு ஊழால் அசைவு இன்மை தோன்றும்; போகு ஊழால் மடி தோன்றும் = செல்வம் ஆகத் தகுந்த நல்வினையினால் சோர்வில்லாத ஊக்கம் உண்டாகும்; (செல்வம்) போக வேண்டிய தீவினையினால் சோர்வு உண்டாகும்.

பொ. ரை: செல்வம் வரவேண்டிய நல்வினைப் பயனால் சோர்வில்லாத ஊக்கம் உண்டாகும்; கையிலுள்ள செல்வம் போக வேண்டிய தீவினைப் பயனால் (அதைத் தடுக்க முடியாதபடி) சோர்வு உண்டாகி விடும்.

வி-ம்: செல்வம் சேர வேண்டிய நல்வினைப் பயன்கள் வரும் போது ஊக்கமும் உற்சாகமும் தாமாகவே வரும்; உள்ள செல்வத்தை இழந்துவிட வேண்டிய தீவினை வரும் போது சோம்பலும் தளர்ச்சியும் தாமாகவே வந்துவிடும். 'ஆகூழ்' என்பது ஆகும் ஊழ்—நல்வினை; 'போகூழ்' என்பது போகும் ஊழ் – தீவினை.

உடலைப் பற்றிய உழைப்பும் ஊக்கமும் மட்டுமல்ல; அறிவைப் பற்றிய தெளிவும் விரிவும் கூட வினைப் பயனுக்குத் தக்கபடி மாறும்:

372. பேதைப் படுக்கு மிழவூ ழறிவகற்று
மாகலூ முற்றக் கடை.

ப. ரை: இழவு ஊழ் (உற்றக் கடை) அறிவு பேதைப்படுக்கும்; ஆகல் ஊழ் உற்றக் கடை (அறிவு) அகற்றும் = இழவை தரக்கூடிய தீவினை வரும்போது அறிவைக் கெடுத்து விடும். ஆக்கம் தரக்கூடிய நல்வினை வரும்போது அறிவை விரிவாக்கும்.

பொ. ரை: கைப்பொருளை இழக்க வேண்டிய தீவினைப் பயன் வரும் போது அது அறிவைக் கெடுத்து விடும்; செல்வம் வர வேண்டிய நல்வினைப் பயன் வரும்போது அறிவை அதிகப் படுத்தும்.

வி-ம்: தீவினைப் பயன், உள்ள அறிவையும் குறைத்துக் கெடுத்துவிடும்; நல்வினைப் பயன் புதுப்புது யோசனைகளைக் கொடுத்து அறிவை அதிகப் படுத்தும்.

கைப்பொருள் நஷ்டமாவதைத் தடுக்கவும் பொருள் வருவாயை அதிகப்படுத்தவும் வேண்டிய உபாயங்களைப்படித்து வைத்திருந்தாலும் அந்த அறிவு தீவினைப் பயன்கள் வரும் போது உதவுவதில்லை:

373. நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்தன்
னுண்மை யறிவே மிகும்.

ப. ரை : நுண்ணிய நூல் பல கற்பினும் மற்றும் தன் உண்மை அறிவே மிகும் = நுட்பமான நூல்கள் பலவற்றைப் படித்தறிந்திருந்தாலும் (தீவினை வரும் போது) பின்னும் அவனுக்கு பழைய அறிவு தான் முன்னால் வரும்.

பொ. ரை : (ஒரு பொருள் கைகூடுவதற்கென்று அதற்கான) பல நுட்பமான நூல்களைப் படித்து வேண்டிய உபாயங்களை அறிந்து வைத்திருந்தாலும் (தீவினைப் பயன்கள் வரும் போது. படித்தறிந்த அறிவு தருணத்தில் உதவாமல்) முன்னிருந்த தன்னுடைய சாதாரண அறிவுதான் முன்னால் வந்து நிற்கும்.

வி - ம் : 'நுண்ணிய நூல் பல' என்பது பொது அறிவுக்கான ஞான நூல்கள் மட்டுமல்ல. கைப்பொருளை ஆக்கவும் அதனைக் காக்கவும் வேண்டிய நுட்பமான அறிவுகளைத் தரக் கூடிய பல நூல்கள் என்றும் கொள்ள வேண்டும்.

கற்றறிந்த அறிவுகள் தருணத்தில் தவறிப் போகாமல் தெளிந்த அறிவுடையவர்களாக இருந்தாலும்கூட செல்வம் கிடைத்துவிடுமென்பது நிச்சயமில்லை. ஏனெனில் :

374. இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு.

ப. ரை : உலகத்து இயற்கை இரு வேறு; திருவேறு, தெள்ளியர் ஆதலும் வேறு = உலகத்தின் இயல்பு வேறு வேறான இரண்டு விதங்கள்; செல்வம் வேறு, தெளிந்த அறிவுடையவர்களாக இருப்பதும் வேறு.

பொ. ரை : உலகத்தில் ஒன்றுக்கொன்று பொருத்தமில்லாத இரண்டு உண்மைகள் இருக்கின்றன; செல்வமுள்ளவர்களாக இருப்பது வேறு, தெளிந்த அறிவுடையவர்களாக இருப்பதும் வேறு.

வி - ம் : செல்வத்துக்கும் அறிவுக்கும் சம்பந்தமே உலகத்தில் காணப்படுவதில்லை. அறிவில்லாத பலர் செல்வமுள்ளவர்களாக இருப்பதையும் தெளிந்த அறிவுடைய பலர் ஏழைகளாக இருப்பதையும் பார்க்கிறோம்.... தீவினைப் பயன்கள் வரும்போது கற்ற கல்வியும் மறந்து போய்விடும் என்று முன்னே சொல்லப்பட்டது. இந்தக் குறளில், கற்ற கல்விகள் மறக்காமல் தெளிந்த அறிவு இருந்தாலும் கூட செல்வத்துக்

கான முயற்சிகள் ஊழ்வினையினால் பயனற்றனவாகிவிடும் என்று சொல்லப்படுகிறது.

எப்படியெனில், பழவினைகளின் பயனாக:

375. நல்லவை யெல்லாஅந் தீயவாந் தீயவு
நல்லவாஞ் செல்வஞ் செயற்கு.

ப. ரை: செல்வம் செயற்கு நல்லவை எல்லாம் தீய ஆம்; தீயவும் நல்ல ஆம் = செல்வம் உண்டாக்குவதற்கு நல்ல முயற்சிகள் எல்லாம் கெட்டுப் போவதும் உண்டு; கெட்ட முயற்சிகள் பயன் தருவதும் உண்டு.

பொ. ரை: செல்வம் சம்பாதிப்பதற்கு (கல்வியறிவுடன்) நல்ல வழிகளில் செய்யப்படுகிற முயற்சிகள் கெட்டுப் போகின்றன; தீய வழிகளில் செய்யப்படுகிற முயற்சிகள் பலன் கொடுக்கின்றன.

வி-ம்: கல்வியறிவுடன் நல்ல மனிதர்கள் நீதியான வழிகளில் முயன்றாலும் செல்வம் கிடைப்பதில்லை. கல்வியில்லாமலும் கூட தீயவர்கள் நீதியற்ற வழிகளில் செய்கிற முயற்சிகள் நல்ல பலனைத் தந்துவிடுகின்றன. அதுதான் ஊழ்வினைகளின் பயன் எனப்படுவது.

அதுமட்டுமல்ல. நல்ல வழிகளில் முயல்கின்றவர்களுக்காலும் தீய வழிகளில் முயல்கின்றவர்களுக்கானாலும் செல்வம் என்பது அவர்கள் விரும்பும் போது வந்துவிடுவதும் இல்லை, வெறுக்கும்போது விலகிப் போய்விடுவதும் இல்லை:

376. பரியினு மாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகா தம.

ப. ரை: பால் அல்ல பரியினும் ஆகாவாம்; தம உய்த்து சொரியினும் போகா = தம்பால் வந்து சேர விதியில்லாத பொருள்கள் எவ்வளவு விரும்பினாலும் வரமாட்டா; தம்மிடம் இருக்க வேண்டிய விதியுள்ள பொருள்களைக் கொண்டு போய்க் கொட்டிவிட்டாலும் போகமாட்டா.

பொ. ரை: தமக்கு வந்து சேரவேண்டிய நல்வினை இல்லாத பொருள்களில் எவ்வளவு ஆசைவைத்து முயன்றாலும் அவை கிடைத்துவிடமாட்டா; தமக்குச் சொந்தமாக இருக்க நல்வினையால் கிடைத்த பொருள்களை வேண்டாமென்று எங்கேனும் கொண்டுபோய்க் கொட்டிவிட்டாலும் அவை மீண்டும் தம்மிடமே வந்து சேர்ந்துவிடும்.

வி-ம்: 'பால்' என்பது ஊழ்வினை. 'பரிதல்'—மிகுந்த ஆசை கொள்ளல். 'ஆகாவாம்' என்பது 'உண்டாகமாட்டா' என்ற பொருள் கொடுப்பதால் 'பரியினும்' என்பதற்கு 'காதல் கொண்டு விரும்பினாலும்' என்பது பொருள்.

மிகுந்த செல்வத்தை அடைந்துவிட்டாலும் அதனால் உண்டாகக் கூடிய இன்பங்களைச் சரியாக அனுபவிப்பதற்கும் நல்வினை வந்து உதவ வேண்டும்.

377. வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது.

ப.ரை: கோடி தொகுத்தார்க்கும் வகுத்தான் வகுத்த வகை அல்லால் துய்த்தல் அரிது = கோடிக்கணக்கில் செல்வத்தைச் சேர்த்தவர்களுக்கும் விதிக்கின்றவன் விதித்த விதத்துக்குமேல் அனுபவிப்பது முடியாது.

பொ.ரை: கோடி கோடியாகச் செல்வத்தைச் சம்பாதித்துச் சேர்த்துவிட்டவர்களும் கூட விதிக்கக் கூடிய (தெய்வமாகிய) ஊழ்வினை விதிக்கிற அளவுக்கும் விதத்துக்கும் அதிகமாக அந்தச் செல்வத்தை அனுபவித்துவிட முடியாது.

வி-ம்: செல்வம் கிடைப்பதற்குமட்டுமின்றி அதை அனுபவிப்பதற்கும் பிரத்யேகமான நல்வினை இருக்க வேண்டும். 'வகுத்தான்' என்பது வகுக்கும் அதிகாரியான ஊழ் என்னும் தெய்வம். 'வகுத்த வகை' என்பது, ஊழ்வினைக்குத் தக்கபடி வகுத்திருக்கிற அளவும் அதை அனுபவிக்கும் விதமும்.

பாடுபட்டுச் சேகரித்த ஏராளமான செல்வத்திலும் கூட ஊழ்வினை விதித்த அளவுக்குத்தான் அனுபவிக்க முடியும் என்பது மட்டுமல்லாமல் ஏராளமான செல்வத்தைச் சேகரித்து அதில் துளிகூட அனுபவிக்காமல் அப்படியே விட்டுவிட்டு இறந்து போகிறவர்களும் உண்டு:

378. துறப்பார்மற் றுப்புர வில்லா ருறற்பால
வூட்டா கழியு மெனின்.

ப.ரை: உறல் பால ஊட்டா கழியும் எனின் துப்புரவு இல்லார் துறப்பார் = வரவேண்டிய தீவினைகள் வந்து உண்பிக்காமல் செய்யுமானால், அனுபவிக்க நல்வினையில்லாதவர்களாக (பெருஞ் செல்வத்தை அப்படியே) விட்டுப் பிரிந்து போவார்கள்.

பொ. ரை : வரவேண்டிய தீவினைகள் வந்து, (அடைந்துள்ள செல்வத்தை) அனுபவிக்க முடியாமல் காலம் கடந்து விடுமானால் (பெற்ற செல்வத்தை) அனுபவிக்க வேண்டிய நல்வினையில்லாதவர்களாக (அந்தப் பெருஞ் செல்வத்தை அப்படியே) விட்டுப் பிரிந்து விடுவார்கள்.

வி - ம் : பெருஞ் செல்வத்தைச் சேகரிக்கவும் நல்வினை வேண்டும். அதை அனுபவிக்கவும் நல்வினை வேண்டும். சேகரித்த செல்வத்தை அனுபவிப்பதற்கு வேண்டிய நல்வினைப் பயன் வருவதற்குள் தீவினைப் பயன்கள் வரவேண்டிய காலமாக இருந்துவிட்டால் அவ்வளவு செல்வத்திலும் சிறிதளவு கூட அனுபவிக்காமல் அப்படியே விட்டுவிட்டு உயிர் துறந்து விடுவதும் உண்டு என்பது கருத்து. 'துறப்பார் மன்' என்பதற்குத் 'துறவறம் மேற்கொள்ளுவார்கள்' என்பது பொருளல்ல. அப்படியே 'விட்டுப் பிரிந்து விடுவார்கள்' என்பது பொருள். 'மன்' என்ற அசை இரக்கக் குறிப்பைக் காட்டுவதால் 'துறப்பார் மன்' என்பதற்கு அவ்வளவு செல்வத்தையும் அப்படியே விட்டு விட்டு 'உயிர் துறப்பார்கள்' என்பது கருத்து.

அனுபவித்தே தீரவேண்டிய வினைப் பயன்களின் இன்ப துன்பங்களில் மயங்கிக் குலைந்து போகாமல் இருக்க வேண்டும் :

379. நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவ தெவன்.

ப. ரை : நன்று ஆம்கால் நல்லவா காண்பவர் அன்று ஆம் கால் அல்லல் படுவது எவன் = நன்மை உண்டாகும் போது மகிழ்ச்சி காண்கின்ற மக்கள் நன்மை அல்லாதது உண்டாகும்போது துன்பப் படுவது ஏன் ?

பொ. ரை : நன்மை வரும்போது இன்பப்படுகிற மனிதர்கள் தீமை வருகிறபோது மட்டும் துன்பப்பட்டுத் தவிப்பது எதற்காக ?

வி - ம் : அவரவர்கள் செய்த நல்வினைப் பயனாக நன்மை வருகிறது. அதைப் போலவே தீவினையின் பயனாக தீமை வருகிறது. நன்மை வரும்போது இன்பத்தில் மயங்கி விடாமல் இருந்தால் தீமை வருகிறபோது துன்பத்தில் தவிக்காமலிருக்க முடியும். இந்தப் பிறவியில் ஒருவன் அனுபவித்தே ஆகவேண்டிய பகுதிகளான வினைப் பயன்களைத்தான் இங்கே 'ஊழ்' என்று சொல்லப்படுவது. [அதைத்தான் 'பிராரப்த கர்மம்' என்பார்கள். முன் 'செய்த கர்மங்களில் ஒரு பகுதி

யாகிய 'பிராரப்த கர்ம'த்தோடு பிறப்பு வந்து விட்டது.] அதைத் தவிர்க்கமுடியாது. இனி இந்தப் பிறப்பில் இன்ப துன்பங்களில் கலங்கிவிடாமல் நல்ல காரியங்களைச் செய்தால் அடுத்த பிறவி துன்பம் குறைந்ததாகவோ அல்லது பிறவாமையோ கிடைக்கலாம். 'ஊழ்' என்பது பழவினைகள் எல்லாவற்றையும் குறிக்கும். அதாவது 'சஞ்சிதம்' 'பிராரப்தம்' என்ற இரண்டும் சேர்ந்தது ஊழ்வினை. இருந்தாலும் இந்த அதிகாரத்தில் சொல்லப்படுவது 'பிராரப்த கர்மம்' என்பதை மட்டுந்தான்.

ஆதலால் இந்தப் பிறப்பில் இனிவரும் பிறவியின் துன்பங்களைக் குறைத்துக் கொள்ளுவதற்கான முயற்சிகளைச் செய்யலாம் என்றாலும் இந்தப் பிறவியில் அனுபவிக்க வேண்டிய இன்ப துன்பங்களைக் குறைக்கவோ மாற்றவோ முடியாது:

380. **ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று**
சூழினுந் தான்முந் துறும்.

ப. ரை: ஊழில் பெரு வலி யாவுள? மற்றொன்று சூழினும் தான் முந்து உறும் = பழவினைகளைக் காட்டிலும் அதிக வல்லமை உடையன என்ன இருக்கின்றன? அதை மாற்றி விட வேறு என்ன சூழ்ச்சி செய்தாலும் அதுதான் முன்னால் வந்து நிற்கும்.

பொ. ரை: (இந்தப் பிறப்பில் அனுபவிக்க வேண்டுமென்று முன்பே விதிக்கப்பட்டு விட்ட) பழவினைகளைக் காட்டிலும் அதிக வல்லமையுள்ளவை எவை இருக்கின்றன? அதை மாற்ற வேறு என்ன உபாயத்தைச் செய்தாலும் அதுதான் முன்னால் வரும்.

வி-ம்: நல்ல கதி பெறவேண்டுமென்கிற இல்லறத்தானுக்காயினும் பிறவாமையை நாடுகின்ற துறவறத்தானுக்காயினும் இந்தப் பிறப்பில் அனுபவித்துத் தீர வேண்டிய (பிராரப்த) வினைப் பயன்களை விலக்கவே முடியாது. ஆகையினால் அவைகளில் விருப்பு வெறுப்பு இல்லாமல் இனிவரும் நல்ல கதிக்கான அறங்களை முயலவேண்டும் என்பது கருத்து.

அறத்துப்பால் முற்றும்.

[illegible]

2. பொருட்பால்

'பொருள் பால்' என்பது பொருளைப் பற்றிய அறிவுகள். பொருள் என்பது உலக வாழ்க்கையில், மனிதன் அனுபவிக்க விரும்பும் இன்பங்களுக்கெல்லாம் ஆதாரமான செல்வப் பொருளும் அதன் தொடர்புள்ள பிறவும்.

ஊழ்வினையினால் பிறவியை அடைந்துவிட்ட மனிதன் இப்போதுள்ள பிறவியில் நல்ல முறையில் வாழ்க்கை நடத்தினால் இந்தப் பிறவிக்குப் பின் நல்லகதி அடையலாம் என்பதற்கு இரண்டு அறவழிகள் சொல்லப்பட்டன. அவைகள் இல்லறம் துறவறம் என்பன. இந்த இரண்டு வழிகளில் துறவறத்தை மேற்கொள்ளுகின்றவன் ஆன்ம விசாரணையோடு புலன்களை ஒடுக்கி, ஆசைகளை நீக்கி, தனக்குள் தானே வாழ வேண்டியவனதால் அவனுக்குப் பொருளைப் பற்றியோ அதுபற்றிய மற்ற விஷயங்களைப் பற்றியோ தொடர்பு இல்லை. ஆனால் இல்லறத்தான் அப்படியல்ல. உலக சமுதாயம் நன்றாக நடந்து வருவதற்கான எல்லாப் பொறுப்புகளும் இல்லறத்தானைச் சேர்ந்தவை. வெகுசிலரே தவிர உலகத்திலுள்ள எல்லா மக்களும் இல்லறம் நடத்துகிறவர்களே. மக்கள் சமுதாயம் நன்றாக நடைபெறுவதற்கு இல்லறத்தான் அறிய வேண்டிய அறிவுகளும் செய்யவேண்டிய நன் முயற்சிகளும் விலக்க வேண்டிய தீமைகளும் பலப்பல இருக்கின்றன. அவைகளையெல்லாம் விரிவாக விளக்குவது இந்த 'பொருட்பால்'.

'பொருட்பால்'—'அரசியல்'. 'அங்கவியல்', 'ஒழிபியல்' என்ற மூன்று பகுதிகளாகச் சொல்லப் படுகிறது. 'அரசியல்' என்பது அரசன் அறியவேண்டிய அறிவுகளும் அரசாட்சி நடத்த வேண்டிய முறையும். 'அங்கவியல்' என்பது அரசனுக்கு அங்கங்களாக இருக்கவேண்டிய மந்திரிகள் முதலான உறுப்பினர்களின் இலக்கணமும் அரசாட்சிக்கு வேண்டிய படை, அரண் முதலிய பாதுகாப்புகளின் இலக்கணமும். 'ஒழிபியல்' என்பது 'அரசியல்', 'அங்கவியல்' என்ற இரண்டு பகுதிகளிலும் சொல்லப்படாத பிற அறிவுகள்.

அரசியல், அங்கவியல் என்ற இரண்டு பகுதிகளும் அரசனைக் குறித்தனவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. இலக்கியப் பாகுபாட்டிற்காக அப்படிச் சொல்லப்பட்டிருக்கிற தன்றி வேறல்ல. பொருட்பாலில் உள்ள ஒவ்வொரு குறளும் இல்லறவாசியாகிய ஒவ்வொரு குடித்தனக்காரனுக்கும் சொல்லப் பட்டது. குடித்தனக்காரர்கள் எல்லாருக்கும் முதன்மையான குடித்தனக்காரன் அரசன். ஆனதனால் அரசனுக்குச் சொல்லுகின்ற நீதிகள் இல்லறத்தான் ஒவ்வொருவனுக்கும் பொருந்

தும். மேலும் பொருட்பாலில் அரசனுக்கும் அமைச்சனுக்கும் தூதனுக்கும் யுத்தவீரனுக்கும் இன்னும் பிற அங்கத்தினர்க்கும் என்று குறிப்பிட்டுச் சொல்லுகின்ற நீதிகளுடன் இடையிடையே பொதுமக்களையும் குறிப்பனவாக விரவியெழுதப் பட்டிருக்கிற விதம் மிகவும் விரும்பத்தக்கது. அதனால் ஒவ்வொரு இல்லறத்தானும் அரசனாகவும் அமைச்சனாகவும் தூதனாகவும் வீரனாகவும் பிறராகவும் தன்னைக் கருதிக்கொள்ளத் தூண்டுகின்ற நோக்கத்துடன் அரசியலும் அங்கவியலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. இனி 'ஒழிபியல்' என்பது அரசியலிலும் அங்கவியலிலும் சொல்லப்பட்டவைகள் 'ஒழிந்த பிற நீதிகள்' என்பதனாலேயே அது அரசனையும் அரசின் அங்கத்தினர்களையும் நீக்கி மற்றவர்களுக்கு மட்டும் சொல்லப் பட்டதாகவும் எண்ணிவிடக்கூடாது. ஒழிபியலில் உள்ளவைகள் அனைத்தும் அரசனுக்கும் அரசாங்கத்தினர்க்கும் சொல்லப் பட்டவைகளே யாகும். ஆதலால் பொருட்பாலில் உள்ள எல்லா அறிவும் எல்லா இல்லறத்தானுக்கும் பொதுவாகும்.

1— அரசியல்

[அரசு இயல் என்பது அரசன் அல்லது அரசாங்கத்தின் தலைவன் என்பவனுக்குப் பொருந்தியிருக்க வேண்டிய இயல்புகள். இயல்புகள் என்றால், இருக்க வேண்டிய அமைவுகள்]

அதி. 39—இறைமாட்சி

['இறைமாட்சி' என்பது அரசனுக்கு அமைய வேண்டிய சிறப்புகள். 'இறை' என்பது 'இறைவன்' என்பதன் குறுகல். இறைவன் என்றால் எல்லாருக்கும் மேலானவன் என்பது பொருள். எல்லாருக்கும் மேலானவன் கடவுள். உலகத்திலுள்ள எல்லாருக்கும் மேலானவனாகிய கடவுள் உலகிலுள்ள மக்களையெல்லாம் பாதுகாத்து, பாரபட்சமில்லாமல் அவரவர்களுடைய தகுதிக்கு ஏற்றபடி நீதி செலுத்துகிறான். அதைப்போல ஒரு நாட்டிலுள்ள எல்லா மக்களையும் பாதுகாத்து பாரபட்சமில்லாமல் நீதி பரிபாலனம் செய்கிறவன் அரசன். அதனால் கடவுள் செய்யும் காரியங்களைச் செய்யும் பிரதிநிதியாக அரசனை மதிப்பது ஆன்றோர் வழக்கு. பரம்பரை உரிமையினால் பதவிக்கு வரக்கூடிய அரசர்கள் இல்லாவிட்டாலும் எந்த நாட்டிலும்—அந்த நாட்டின் அரசாட்சி எந்த முறையில் நடப்பதானாலும்,—அதற்கு ஒரு தலைவன் இருந்தே ஆக வேண்டும். அந்தத் தலைவனே அந்நாட்டின் இறை. அவனுக்கு இருக்க வேண்டிய சிறப்புகளைச் சொல்வது 'இறைமாட்சி'.]

381. படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு

ப. ரை: படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறும் உடையான் அரசருள் ஏறு = சேனை, குடி மக்கள், செல்வம், நண்பர்கள், மந்திரிகள், தற்காப்புக் கோட்டை என்று சொல்லப்படும் ஆறும் அமையப் பெற்றவன் அரசர்களுக்குள் சிறந்தவன்.

பொ. ரை: படைவலிமையும் ஜனக் கட்டும் செல்வச் சிறப்பும் நல்ல மந்திரிகள் சபையும் அயல் நாட்டரசர்களின் நட்பும் கோட்டை கொத்தளங்களும் ஆகிய இந்த ஆறும் சரியாக அமையப் பெற்ற அரசனே சிறப்புடையவன்.

வி-ம்: படை என்பது நிலையான சேனை. அதாவது யுத்தம் இல்லாத காலங்களிலும் இருந்து கொண்டேயிருக்க வேண்டிய படை பலம். குடி என்பது குடிமக்களின் தொகை. அதாவது ஆள்பலம். கூழ் என்பது பொருளாதார பலம். அமைச்சு என்பது நல்ல மந்திரிகள் பலர் உள்ள தொகை. நட்பு என்பது அயல்நாட்டு மன்னர்களின் நல்லுறவு. அரண் என்பது பொதுவாக எல்லாத் தற்காப்பு வசதிகளையும் சிறப்பாகக் கோட்டையையும் குறிக்கும். இந்த ஆறும் இருந்தால் தான் சரியான அரசாகும்.

இந்த ஆறும் அரசாட்சிக்கு அமைய வேண்டிய புற உறுப்புகள். இவற்றை தனித்தனியே பின்னால் விளக்கப்படும். இவற்றிற்கு அதிபதியான அரசனுக்கு இருக்க வேண்டிய குணச் சிறப்புகள் முதலில் சொல்லப்படுகின்றன. அவைகள் என்னவெனில்:

382. அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு
மெஞ்சாமை வேந்தற் கியல்பு.

ப. ரை: அஞ்சாமை, ஈகை, அறிவு, ஊக்கம் இந்நான்கும் எஞ்சாமை வேந்தற்கு இயல்பு = அச்சமில்லாத தன்மை, ஏழைகளுக்குக் கொடுத்தல், அரசியல் அறிவு, விடாமுயற்சி இந்த நான்கும் குறையாமல் இருப்பது அரசனுக்கு இலக்கணம்.

பொ. ரை: பயமில்லாத தன்மை, ஏழைகளுக்கு இரங்கி தானம் கொடுத்தல், அரசாட்சிக்கு வேண்டிய சட்டதிட்ட அறிவு, விடா முயற்சி ஆகிய இந்த நான்கும் நிறைந்திருக்க வேண்டியது அரசனுக்கு வேண்டிய தகுதி.

வி-ம்: 'அஞ்சாமை' என்பது தைரியம் அல்ல. , தைரியம் அப்போதைக்கு ஆவேசத்தினால் உண்டாவது. அது உடனே தோன்றி உடனே மறையும். ஆனால் அஞ்சாமை என்பது

அமைதியான அறிவினால் உண்டாகி எப்போதும் இருப்பது. ஈகை என்பது ஏழைமக்களுக்கு உதவிசெய்தல். 'வறியார்க்கு ஒன்று ஈதலே ஈகை' என்று முன்னாலேயே ஈகையை வரையறுத்துச் சொல்லப்பட்டிருப்பதால் ஏழைகளைத் தவிர பிறருக்குக் கொடுப்பதை இங்கே குறிக்காது. 'அறிவு' என்பது அரசியல் ஞானம் என்பதையே குறிக்கும்.

மேற்சொன்ன நான்கு தகுதிகளும் அரசனிடத்தில் அவன் வாழ்க்கையில் பொதுவாக அமைந்திருக்க வேண்டிய குணங்கள். இந்தப் பொது அறிவுகளுக்கு மேல் எந்த நேரத்திலும் அரசன எச்சரிக்கையோடு காக்க வேண்டிய குணங்கள் சில உண்டு. அவையாவன :

383. தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று
நீங்கா நிலனாள் பவற்கு.

ப. ரை : தூங்காமை கல்வி துணிவுடைமை இம் மூன்றும் நிலன் ஆள்பவர்க்கு நீங்கா=விழிப்போடிருத்தல், கற்றுக்கொண்டேயிருத்தல், உடனுக்குடன் ஆலோசனை நடத்தித் தீர்மானித்தல் ஆகிய இந்த மூன்றும் நாட்டை ஆள்கின்ற அரசனுக்கு எந்நேரமும் நீங்காமல் இருக்க வேண்டும்.

பொ. ரை : (அரசாட்சி காரியங்களில் அயர்ந்து போகாமல்) விழிப்போடிருப்பது. (அப்போதைக் கப்போது அறிய வேண்டியவற்றை) கற்றுக் கொண்டே இருப்பது. (செய்ய வேண்டிய ஆலோசனைகளைச் செய்து உடனுக்குடன் நடக்க வேண்டிய காரியத்தை) நிச்சயிப்பது. ஆகிய இந்த மூன்று குணங்களும் நாட்டை ஆளுகின்ற மன்னனிடத்தில் எந்த நேரத்திலும் நீங்காதிருக்க வேண்டும்.

வி-ம் : 'தூங்காமை' என்பது கண்ணும் கருத்துமாக இருப்பது. 'கல்வி' என்பது பொதுவாகக் கற்க வேண்டிய கல்வியல்ல. தினந்தினம் அப்போதைக்கப்போது அரசியல் நிலைமையை அறிந்து கொள்ள வேண்டியவற்றை அறிவது. 'துணிவுடைமை' என்பது மாறுகின்ற நிலைமைகளுக்குத் தக்கபடி உடனுக்குடன் ஆலோசித்து தீர்மானம் செய்வது. 'துணிவுடைமை' என்பதற்கு இங்கே 'ஆண்மையுடைமை' என்பது பொருள் அல்ல.

அரசன் முதன்மையாகக் கருத வேண்டிய நெறி முறை என்னவென்றால் :

384. அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா
மான முடைய தரசு.

ப. ரை: அறன் இழுக்காது அல்லவை நீக்கி மறன் இழுக்கா மானம் உடையது அரசு = (தன்னுடைய) தர்மங்களில் தவறு செய்து விடாமல் (நாட்டில்) தர்மமல்லாத குற்றங்களை நீக்கி, (கண்டிப்பு தண்டிப்புகளிலும் பகைவரிடத்திலும்) தன் வீரத்துக்குக் குறைவு வராமல் மானமுள்ளவனாக இருப்பவன் அரசன்.

பொ. ரை: தன்னுடைய தர்மங்களில் தவறி விடாமல் நடந்து கொண்டு, குடிமக்களிடை அதர்மங்கள் ஏற்பட்டால் அவற்றை நீக்கி, ஆண்மைக்குக் குறைவு வராதபடி மானத்தோடு இருப்பவனே அரசன்.

வி-ம்: முதலில் தான் தர்மம் தவறாத ஒழுக்கமுள்ளவனாக இருக்க வேண்டும். பிறகு தன் நாட்டில் அதர்மம் நேர்ந்தால் அதை உடனுக்குடன் நீக்க வேண்டும். அப்படி அதர்மங்களை நீக்கும்போது கண்ணியக் குறைவான தண்டனைகள் செய்து தன் பெருமைக்குக் குறைவு வந்து விடாதபடி மானமாக நடந்து கொள்ள வேண்டும். 'மறன்' என்பது குற்றவாளிகளையும் பகைவரையும் கடியும்போது காட்டுகின்ற ஆண்மையும் அஞ்சாமையும் சேர்ந்த ஆற்றல்.

இந்த அறநினைவுகளுடன்:

385. இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு.

ப. ரை: இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த வகுத்தலும், வல்லது அரசு = நீதி நடத்துவதும், (செல்வத்தைப்) பெருக்குவதும், (சேகரித்த செல்வத்தை) சேமித்து வைப்பதும், (சேமித்த செல்வத்தைத் திட்டமிட்டு) பகிர்ந்து செலவு செய்வதும் ஆகியவற்றை திறமையோடு செய்யக் கூடியவன் அரசன்.

பொ. ரை: நீதிபரிபாலனம் செய்வதையும் நாட்டின் செல்வத்தை அதிகப்படுத்துவதையும் செல்வம் சிர்குலையாதபடி சேமிப்பதையும் சேமித்த செல்வத்தைத் திட்டமிட்டுப் பகிர்ந்து செலவு செய்வதையும் திறமையுடன் செய்யத் தக்கவனே அரசன்.

வி-ம்: 'இயற்றல்' என்பதற்கு தொழில்களை இயற்றுவது என்பது பொருளல்ல. அரசியற்றலுக்கு முதற் கடமையான நீதிபரிபாலனத்தை 'நடத்துதல்' என்பது பொருள். 'ஈட்டல்' என்பதிலேயே பொருள் வருவாய்க்குத் தகுந்த எல்லா முயற்சிகளும் அடங்கியிருக்கின்றன. ஆதலால் 'இயற்றல்' என்பதற்கு 'பொன்வரும் வழிகளை உண்டாக்குவது' என்பது அர்த்தமல்ல. 'அரசியற்றுதல்' என்பதுதான் பொருள்.

மேற் சொன்ன அறவொழுக்கத்தையும் கடமைகளையும் அறிந்த அரசன் இனி, தன் குடிகளிடத்திலும் மந்திரிகள் முதலானவர்களிடத்திலும் நடந்து கொள்ள வேண்டிய விதம் எப்படியிருக்க வேண்டுமென்றால் :

386. காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம்.

ப. ரை : காட்சிக்கு எளியன்; கடும் சொல்லன் அல்லனேல் மன்னன் நிலம் மீக் கூறும் = (நேராக முறையீடு சொல்லிக் கொள்ள) எளிதில் காணக் கிடைப்பவனாகவும், (அப்படிக் கண்டு குறை சொல்லிக் கொள்ளும்போது) கடுமொழிகள் பேசாதவனாகவும் இருப்பவனானால் அந்த மன்னனுடைய நாட்டை உலகம் புகழும்.

பொ. ரை : குறை சொல்லிக் கொள்ள விரும்புகின்றவர்கள் எளிதில் காணக்கிடைப்பவனாகவும் குறை சொல்லிக் கொள்ளுகிறவர்களிடத்தில் கடுமையான சொற்களைப் பேசாதவனாகவும் இருந்தால் அந்த மன்னனுடைய நாடு எல்லாராலும் புகழப்படும்.

வி - ம் : முறையிடவும் குறை கூறிக் கொள்ளவும் தன்னைக் காணவருகின்றவர்கள் சொல்லிக் கொள்ளுவதைக் கடிந்து பேசி விடாமல் காது கொடுக்க வேண்டும் என்பது வெகு முக்கியம் என்பதற்காகக் 'கடுஞ் சொல்லன் அல்லனேல்' எனப்பட்டது. சொன்னதை விசாரித்தறிந்து அதற்கான நன்மைகளைச் செய்வது உடனே முடியாவிட்டாலும் கடுமொழி பேசிவிடாமல் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அரசன் புகழுக்குரியவன்.

எளிதில் காணக் கிடைப்பவனாகவும் கடுஞ்சொல் பேசாதவனாகவும் இருந்தாலே, அந்த அரசன் புகழத்தக்கவனாகிறான். அத்துடன் இனிய சொல்லுடையவனாகவும் உடனே குறை தீர்ப்பவனாகவும் இருந்து விட்டால்:

387. இன்சொலா லீத்தளிக்க வல்லாற்குத் தன்சொலாற்
றான்கண் டனைத்திவ் வுலகு.

ப. ரை : இன் சொலால் ஈத்து அளிக்க வல்லாற்கு இவ்வுலகு தன் சொலால் தான் கண்ட அனைத்து = இனிமையான சொற்கள் பேசி (குறை தீர்த்து விட) உதவி கொடுத்து. (முறை தீர்த்துக்) காப்பாற்றத் திறமையுள்ள அரசனுக்கு இந்த உலகம் அவன் சொன்னபடி அவன் நினைத்ததை யெல்லாம் செய்யும்.

பொ. ரை: இனிய வார்த்தைகள் பேசி, (குறை சொல்லிக் கொண்டவர்களுக்கு) உதவி கொடுத்து, (முறை சொல்லிக் கொண்டவர்களுக்குப்) பாதுகாப்பளிக்க வல்லவனுகிய அரசன் சொல்லுகிறபடி, அவன் விரும்பினதையெல்லாம் உலகத்தார் செய்வார்கள்.

வி-ம்: மன்னனிடத்தில் குடிமக்கள் குறை சொல்லவும் முறை சொல்லவும் வருவார்கள். குறை சொல்லுவது என்பது, தங்களுக்குள்ள குறைகளைச் சொல்லுவது. அதாவது உணவின்மை, உடையின்மை, தொழிலின்மை, வீடின்மை, முதலிய இல்லாமைகளைச் சொல்லிக்கொள்வது. முறை சொல்லுவது என்பது தங்களுக்கு யாராவது அநீதி செய்து விட்டாலும் செய்வதாகப் பயமுறுத்தினுலும் அதைச் சொல்லிக் கொள்வது. குறை சொன்னவர்களுக்கு உடனே வேண்டியதைக் கொடுப்பதையும் முறை சொன்னவர்களுக்குப் பாதுகாப்பு அளித்து பயத்தைப் போக்குவதையும் முறையே 'ஈத்து', 'அளிக்க' என்னும் பதங்களில் அடக்கியிருக்கிறார். 'உலகு' என்பது உலகத்தின் பகுதியான 'அந்த நாட்டு மக்கள்' என்ற அளவுக்குத்தான் பொருள் தரும்.

குடிமக்களின் குறைகளை அவர்கள் வந்து சொல்லிக் கொள்ள வேண்டிய அவசியமில்லாமல் தானுகவே யாராருக்கு என்ன குறை என்பதை அறிந்து அரசன் பாதுகாப்பளிக்க வேண்டும். அப்படிப்பட்ட அரசனை:

388. முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்.

ப. ரை: முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப்படும் = (தானுகவே) தரமறிந்து நீதி நடத்தி, (குடிகளைக்) காப்பாற்றும் அரசன் மக்களுக்கு இறைவனுக சிறப்பிக்கப் படுவான்.

பொ. ரை: (தானுகவே விசாரித்தறிந்து அவரவர்கள் தரத்துக்குத் தக்கபடி) நீதி செய்து குடிகளைப் பாதுகாக்கிற அரசனை மக்கள் தெய்வம் போல் கருதி வணங்குவார்கள்.

வி-ம்: 'முறை செய்து' என்பது குடிகள் தன்னிடத்தில் வந்து சொல்லிக் கொள்ளாமலேயே அவர்களுடைய குறைகளைத் தானுகவே தினந்தினம் விசாரிக்க வேண்டிய 'தன் முறைப்படி அறிந்து செய்வது'. இறைவனுகிய கடவுள் மக்களை அவர்கள் தன்னிடம் சொல்லிக் கொள்ளாமலேயே தன் கருணையினல் காப்பாற்றுகிருன். அதைப் போல மன்னவனும் குடிகளைக் காப்பாற்றுவதைத் தன்னுடைய கடமை

யாகச் செய்கிறவன். அதனால் அரசனைக் கடவுளுக்குச் சமானமாகக் கருதுவது உலக வழக்கு.

கடவுளுக்குச் சமானமாக மதிக்கப்பட்டாலும் மன்னன் கடவுளல்ல, மனிதன் தான். அதனால் குடிகளைப் பாதுகாக்க வேண்டிய கடமைகளில் தவறு ஏற்படலாம்; அதை எடுத்துக் காட்டி யாரேனும் இடித்துக் கூறினால் :

389. செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன்
கவிகைக்கீழ்த் தங்கு முலகு.

ப. ரை : செவி கைப்ப சொல் பொறுக்கும் பண்புடை வேந்தன் கவிகைக்கிழ் உலகு தங்கும் = காது கசக்கும்படி (இடித்துக் கூறும்) சொற்களைப் பொறுத்துக் கொள்ளும் பெருங் குணமுள்ள அரசனுடைய குடையின் கீழே உலகம் தங்கியிருக்கும்.

பொ. ரை : (குற்றங் கண்டு சீர் திருத்தும் எண்ணத்துடன் இடித்துக் கூறுகின்றவர்கள்) காது கசக்கும்படியாகக் கண்டித்துப் பேசினாலும் அதைப் பொறுத்துக் கொள்ளுகிற உயர்ந்த குணம் உள்ள அரசனுடைய ஆட்சியின் கீழ் மக்கள் விருப்புடன் தங்கி வாழ்வார்கள்.

வி - ம் : 'செவி கைப்ப' என்பதற்கு 'மனம் மிகவும் வருத்தமடையும்படி' என்பதுதான் கருத்து. 'கவிகைக் கீழ் தங்கும் உலகு' என்றால் அந்த மன்னனுடைய ஆட்சியின் கீழ் வாழ மக்கள் விரும்புவார்கள்.

நல்ல அரசனுக்கு இருக்க வேண்டிய சிறப்புகள் அனைத்தும் அடியிலுள்ள நான்கு குணங்களுக்குள் அடங்கும் :

390. கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு
முடையானாம் வேந்தர்க் கொளி.

ப. ரை : கொடை, அளி, செங்கோல், குடி ஓம்பல் நான்கும் உடையான் வேந்தர்க்கு ஒளி ஆம் = கொடுக்கும் குணம், இரக்கம், நடுநிலை தவறாமை, குடிகளுடைய உடலுக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பளித்தல் ஆகிய நான்கும் உள்ள அரசன் மற்ற அரசர்களுக்கெல்லாம் வெளிச்சம் ஆவான்.

பொ. ரை : உதார குணம், ஜீவகாருண்யம், நீதி தவறாமை, குடிகளின் உடலுக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்பளிக்கக் கூடிய ஆற்றல் ஆகிய நான்கும் அமைந்த அரசன் மற்ற அரசர்களுக்கு வழி காட்டும் வெளிச்சமாவான்.

வி-ம்: 'வேந்தர்க் கொளி' என்பது அரசாட்சி செய்யும் இனத்திற்கெல்லாம் வழி காட்டும் கலங்கரை விளக்குப் போன்றவன்.

அதி. 40—கல்வி

['கல்வி' என்பது எல்லா மனிதர்களும் எழுதவும் படிக்கவும் கணக்குப் பார்க்கவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதையும், மனிதன் அறியவேண்டிய அறிவுகள் எல்லையற்றனவாகையால் கூடிய மட்டும் புதுப்புது நூல்களைப் படித்து நல்லறிவுகளைச் சேகரித்துக் கொண்டே இருக்க வேண்டுமென்பதையும் கூறுவது. இது எல்லா மக்களுக்கும் பொது.]

391. கற்க கசடறக் கற்பவை கற்றபி
ணிற்க வதற்குத் தக.

ப. ரை: கசடு அற கற்க; கற்பவை கற்றபின் அதற்குத் தக நிற்க = குற்றங்கள் நீங்குவதற்காகக் கல்வி கற்க வேண்டும்; கற்க வேண்டியதைக் கற்ற பிறகு கற்றறிந்ததற்குத் தகுந்தபடி நடந்து கொள்ள வேண்டும்.

பொ. ரை: (மனிதப் பிறவிக்கு இயல்பாகவுள்ள) குற்றங்கள் நீங்குவதற்காக கல்வி கற்க வேண்டும். அந்த நோக்கத்துக்குத் தகுந்த நூல்களைப் படித்துக் கற்றுக் கொண்ட பின் அந்த நூல்களால் அறிந்து கொண்ட நல்லறிவுக்கு ஏற்றபடி நடந்து கொள்ள வேண்டும்.

வி-ம்: மனிதப் பிறவிக்கு இயல்பாக உள்ள அறியாமை, கெட்ட ஆசைகள் முதலிய கசடுகள் (குற்றங்கள்) நீங்குவதற்காகத்தான் கல்வி கற்க வேண்டும். அந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு, குறிப்பிட்ட நூல்களைத் தான் படிக்க வேண்டும். குற்றமான எண்ணங்களும் ஆசைகளும் நீங்குவதற்கென்று குறிப்பிட்டுக் கற்ற நூல்களில் சொல்லப்பட்டபடி வாழ்க்கையில் நடந்து கொள்ள வேண்டும். அதுதான் கல்வியின் பயன். இங்கே குறிக்கப்படுகிற 'கல்வி' மனிதப் பண்புகளை வளர்த்து ஒழுக்கமுள்ள வாழ்க்கை நடத்த உதவுகின்ற 'கல்வி' மட்டும்தான். கலைக் கல்விகளோ தொழிற் கல்விகளோ இதில் அடங்கினவைகள் அல்ல. ஏன் எனில் 'நிற்க அதற்குத்தக' என்று வேறு எந்தக் கல்வியோடும் சேர்த்துச் சொல்ல முடியாது.

கல்வியின் முக்கிய நோக்கம் கசடற வாழ்க்கை நடத்துவதற்கான நல்லறிவுகளைக் கற்றுக் கொள்வதாகும். அப்படி கற்றுக் கொள்வதற்கு வழிகாட்டுகின்ற:

392. எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டும்
கண்ணென்ப வாழு முயிர்க்கு.

ப. ரை: எண் என்ப ஏனை எழுத்து என்ப இவ்விரண்டும் வாழும் உயிர்க்கு கண் என்ப = கணக்கெண்ணுதல் என்பதும் மற்றும் எழுத்தறிதல் என்பதும் ஆகிய இந்த இரண்டும் வாழ வேண்டிய மனித உயிர்க்கு கண்கள் என்று சொல்லப்படும்.

பொ. ரை: கணக்கெண்ண அறிதல் எனப்படுவதும் எழுத்தறிதல் எனப்படுவதும் ஆகிய இந்த இரண்டும் மனிதன் நல்வாழ்வு நடத்துவதற்கு கண்களாகும்.

வி - ம்: 'உயிர்' என்பது 'மனிதன்' என்ற பொருளில் நிற்பது. 'வாழும் உயிர்' என்பது 'நல்வாழ்வு நடத்த விரும்பும் மனிதன்' என்ற பொருள் தருவது.

எண்ணும் எழுத்தும் கண்களாவதால்:

393. கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

ப. ரை: கண் உடையர் என்பவர் கற்றோர்; கல்லாதவர் முகத்து இரண்டு புண் உடையர் = கண்ணுள்ளவர்கள் என்று சொல்லத் தக்கவர்கள் கற்றவர்கள்; கல்வி கற்காதவர்கள், முகத்தில் இரண்டு புண்கள் உள்ளவர்களே (போல்வார்)

பொ. ரை: கண்ணுள்ளவர்கள் என்று சொல்லத் தகுதியுடையவர்கள் (எண்ணும் எழுத்தும்) கற்றவர்களே; (எண்ணும் எழுத்தும்) கல்லாதவர்கள் முகத்தில் இரண்டு புண்கள் உள்ளவர்கள்.

வி - ம்: எண்ணும் எழுத்தும் கற்றவர்கள் முகத்தில் இருக்கும் கண்களே வழியறியும் கண்களாகும்; கல்லாதவர்கள் முகத்திலுள்ள கண்கள் துன்பம் தரும் புண்களேயாகும். கற்றவர்களுடைய கண்கள் தாம் காணும் பொருள்களையும் செயல்களையும் அறிவோடு அனுபவிக்கக் கருவிகளாக உதவுகின்றன. ஆதலால் அவை தமக்கு ஏற்படுத்தப்பட்ட காரியங்களைச் செய்கின்றன. அதனால் அவைகள் கண்களே. ஆனால் கல்வியறிவில்லாதவருடைய கண்கள் தாம் பார்க்கின்ற பொருள்களையோ செயல்களையோ சரியாக அறிந்துகொள்ள முடிவதில்லை. அதனால் கல்லாதவர்களைப் பிறர் ஏளனம் செய்து அவமதிக்கலாம். அதனால் கல்லாதவர்க்குத் துன்பமுண்டாகும். மேலும் கற்றவர்களுக்கு உலகத்தார் செய்கிற சிறப்புகளையும் கொடுக்கிற பரிசுகளையும் பார்க்கும் போதெல்லாம் தாமும் கற்கவில்லையே என்ற கவலையுண்டா

கலாம். இப்படிப் பல வழிகளில் பிறரைப் பார்க்கப் பார்க்கத் தமக்குத் துன்பத்தை உண்டாக்கக் காரணமாக இருப்பதால் அவர்களுடைய கண்கள் புண்களுக்குச் சமானம் எனப் பட்டது.

'கல்வி' என்பது 'புலமை' அல்ல. ஒழுங்கான வாழ்க்கை நடத்துவதற்கு வேண்டிய அறிவுக்காகக் கற்பதே கல்வி. புலமை என்பது, பல நூல்களைப் படித்து அவற்றிலுள்ள இலக்கிய இலக்கண நுணுக்கங்களை அறிந்து அவற்றை விளக்கவும் போதிக்கவும் கூடிய திறமை. அந்தத் திறமை மட்டும் கல்வியின் பயனைத் தந்துவிடாது. திறமை மிகுந்த புலமை மட்டும் எதற்காகும் என்றால்:

394. உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரித
லனைத்தே புலவர் தொழில்.

ப. ரை: உவப்ப தலைக் கூடி உள்ள பிரிதல் அனைத்தே புலவர் தொழில் = மகிழ்ச்சி உண்டாகும்படி ஒருங்கு கூடி வருத்தம் உண்டாகும்படி பிரிந்து போவதாகிய அவ்வளவே புலவர்கள் செய்யும் வேலை.

பொ. ரை: (தாமும் பிறரும்) மகிழும்படியாக ஒன்று சேர்ந்து, (தாமோ பிறரோ அல்லது தாமும் பிறருமோ) வருத்தமடையும்படி பிரிந்து போகிற அவ்வளவுதான் புலவர்கள் செய்யும் வேலை.

வி-ம்: புலமைத் திறமைகளைக் காட்டவென்று ஒன்று கூடுகின்ற புலவர்கள், கூடும்போது எல்லாரும் மகிழும்படியாகத்தான் அளவளாவிக் கொள்வார்கள். பின் ஒரு கருத்து வேற்றுமை உண்டானால் அவரவர்கள் தம்முடைய புலமைத் திறத்தைக் காட்டி ஒருவரையொருவர் வெல்லும் நோக்கத்துடன் வாதப் பிரதிவாதங்கள் செய்ய நேரும். அதனால் மனத்தாபம் உண்டாகும். ஆகையினால் அங்கே கூடும் போதிருந்த மகிழ்ச்சி பிரியும்போது இருப்பதில்லை. அதனால் வெறும் புலமைக்காக மட்டும் படிக்கிற படிப்பு, தர்க்கம் செய்யத்தான் உதவும் என்பது கருத்து.

கல்லாதவர்கள் செல்வச் சிறப்புகள் மிகுந்தவர்களானாலும் பல காரியங்களுக்கும் கற்றவர்களின் தயவை நாட வேண்டியவர்களே, ஆகையால்:

395. உடையார்முன் இல்லார்போ லேக்கற்றுங் கற்றார்
கடையரே கல்லா தவர்.

ப. ரை: ஏக்கு அற்றும் உடையார் முன் இல்லார் போல் கற்றார் கடையரே கல்லாதவர் = ஒரு குறைச்சலும் இல்லா விட்டாலும் செல்வம் உடையவர்கள் முன்னால் ஏழைகள் நிற்பது போல, கற்றவர்கள் வாசலிலே நிற்க வேண்டியவர் கள் கல்லாதவர்கள்.

பொ. ரை: எந்தவிதமான ஏக்கமும் இல்லாவிடினும், பணக் காரர்களுக்கு முன்னால் ஏழைகள் இரந்து நிற்பது போல, கற்றவர்கள் வாசலில் நிற்க வேண்டியவர்களே கல்லாதவர் கள்.

வி – ம்: 'ஏக்கு' என்பது ஒரு பொருள் இல்லையென்ற 'ஏக் கம்'. பணமில்லாதவன் பணக்காரனுக்கு முன்னால் ஏங்கி நிற் பதுபோலப் பணமிருந்தும் படிப்பில்லாதவன் படித்தவனு டைய வாசலில் ஒருவித ஏக்கமில்லாமலும் காத்திருக்க வேண்டியவனே.

ஆதலால் ஒவ்வொருவரும் கல்வி கற்கவேண்டும். கல்வி என்பது எல்லையற்றது. எவ்வளவு கற்றால் போதும் என்று எண்ணமுடியாது:

396. தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.

ப. ரை: தொட்ட அனைத்து மணல் கேணி ஊறும்; மாந்தர்க்கு கற்ற அனைத்து அறிவு ஊறும் = தோண்டிய அளவுக்கு மணல் கிணற்றில் நீர் ஊறும்; (அதுபோல்) மனிதர்கள் கற் கின்ற அளவுக்கு அறிவு உண்டாகும்.

பொ. ரை: எவ்வளவுக் கெவ்வளவு தோண்டுகின்றோமோ அவ் வளவுக் கவ்வளவு மணல் கேணியில் நீர் ஊறும்; அதுபோல எவ்வளவுக் கெவ்வளவு கல்வி கற்கிறோமோ அவ்வளவுக் கவ் வளவு அறிவு உண்டாகும்.

வி – ம்: மணற் கேணி என்பது ஆற்று மணலில் பறிக்கும் ஊற்றுப் பள்ளம்.

அப்படி அறிவு ஊறுவதற்கு எந்தெந்த நூல்களைக் கற்க வேண்டும் எவ்வளவு காலம் கற்க வேண்டும் என்றால்:

397. யாதானு நாடாமா லூராமா லென்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு.

ப. ரை: யாதானும் நாடு ஆமால் (யாதானும்) ஊர் ஆமால் ஒருவன் சாம் துணையும் கல்லாத ஆறு என்? — எந்த நாடும்

சொந்த நாடாகுமாதலால் எந்த ஊரும் சொந்த ஊராகுமாதலால் ஒருவன் தான் சாகிற வரைக்கும் (புதுப்புது நூல்களை) கற்றுக் கொண்டே இருக்காதது ஏன்?

பொ. ரை: எந்த நாடும் சொந்த நாடாகும்படியும் எந்த ஊரும் சொந்த ஊராகும்படியும் (புதுப்புது அறிவுநூல்களை) ஒருவன் தான் சாகிறவரைக்கும் கற்றுக்கொண்டே இருப்பதற்கென்ன?

வி - ம்: நிரம்பக் கற்றவர்கள் எந்த நாட்டிலும் எந்த ஊரிலும் தம்முடைய சொந்த நாட்டிலிருப்பது போலவும் சொந்த ஊரில் இருப்பது போலவும் சிறப்படைவார்கள். ஆதலால் சொந்த நாட்டு அறிவு நூல்களைக் கற்று முடித்து விட்டாலும் பிறநாட்டு அறிவு நூல்களையும் கற்கலாம். அப்படி உலகிலுள்ள பலநாட்டு நூல்களையும் கற்க ஒருவனுடைய ஆயுள் போதாது. ஆதலால் சாகிற வரைக்கும் கற்பதற்குக் கல்வி இருக்கிறது. 'யாதானும் நாடாமால்' என்பதில் பிறநாட்டு மொழிகளையும் கற்பது சிறப்புண்டாக்கும் என்பது அடங்கியிருக்கிறது. ஏன் எனில் தன் தாய் மொழியை மட்டும் கற்றவனுக்கு அது வழங்குகிற தன்னுடைய நாட்டிலுள்ள 'யாதானும் ஊராகும்'. ஆனால் 'யாதானும் நாடாமால்' என்பது ஒரு மொழிமட்டும் அறிந்தவர்களுக்குப் பொருந்தாது.

அப்படித் தன் ஆயுள் முழுவதும் நல்லறிவை நாடி கற்றுக் கொண்டே இருக்கக் கூடிய ஒருவனுக்கு:

398. ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவற்
கெழுமையு மேமாப் புடைத்து.

ப. ரை: ஒருவற்கு ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமையும் ஏமாப்பு உடைத்து = ஒருவனுக்கு ஒரு பிறப்பில் அவன் கற்ற கல்வி எழு பிறவிகளுக்கும் பாதுகாப்பளிப்பதை உடையதாகும்.

பொ. ரை: ஒருவன் ஒரு பிறப்பில் கற்றுக் கொள்ளும் நல்லறிவு அவனுக்கு இனிமேல் வரக்கூடிய எழு பிறவிகளுக்கும் பாதுகாப்பாக இருக்கும்.

வி - ம்: அந்த நல்லறிவு எழு பிறவிகள் வரைக்கும் அவனுடைய உயிரோடு கலந்திருந்து அவனுடைய நல்வாழ்விற்கு உதவும்.

கல்வியினால் பெற வேண்டிய நல்லறிவு எதுவென்றால்:

399. தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்.

ப. ரை: கற்று அறிந்தார் தாம் இன்புறுவது உலகு இன்புற கண்டு காமுறுவர் = (கற்க வேண்டிய நூல்களைக்) கற்று (அறிய வேண்டியதை). அறிந்தவர்கள் தாம் இன்பமடைவதைப் போலவே உலகிலுள்ள மக்களெல்லாம் இன்பம் அடைவதைக் கண்டு மகிழ்வார்கள்.

பொ. ரை: கற்க வேண்டியதைக் கற்று அறிய வேண்டியதை அறிந்தவர்கள் தாம் அடையும் இன்பங்களை உலகிலுள்ள எல்லாரும் அடைவதைக் காண ஆசைப்படுவார்கள்.

வி - ம்: 'கற்கக் கசடற; கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக' என்றபடி கற்க வேண்டியதைக் கற்று அறிய வேண்டியதை அறிந்து, அதற்கிணங்க நிற்கிறவர்கள், தாம் அடைகிற இன்பத்தை உலகிலுள்ள எல்லா மக்களும் அடைய வேண்டுமென்று ஆசைப்படுவார்கள். ஆதலால் உலகத்திலுள்ள எல்லாரும் இன்புற்று வாழ வேண்டுமென்று விரும்பக் கற்றுக் கொள்வதே கல்வியின் நோக்கம்.

ஆதலால் உலகத்தில் பல இன்பங்களையும் அடைய உதவுகிற செல்வங்களுக்குள் சிறந்த செல்வம் எது வென்றால்:

400. **கேடில் விழுச்செல்வங் கல்வி யொருவற்கு**
மாடல்ல மற்றை யவை.

ப. ரை: ஒருவற்கு கேடு இல் விழுச் செல்வம் கல்வி; மற்றையவை மாடு அல்ல = ஒருவனுக்கு அழியாத சிறந்த செல்வம் கல்வி; மற்ற செல்வங்கள் அப்படி தன்னிடம் நிலைக்க மாட்டா.

பொ. ரை: ஒருவனுக்கு அழியாததும் சிறப்புள்ளதுமான செல்வம் கல்வியறிவுதான்: மற்றச் செல்வங்கள் அப்படிப்பட்டவை யல்ல.

வி - ம்: 'கேடில்' என்பது யாராலும் அழிக்கவோ அபகரிக்கவோ முடியாதது. 'விழுச் செல்வம்' என்பது 'குற்றமற்ற செல்வம்'. மற்ற செல்வங்கள், தான் பாடுபட்டு சம்பாதிக்காததாகவும் குற்றமுள்ள வழிகளில் வந்ததாகவும் இருக்க முடியும். ஆனல் கல்வியறிவாகிய செல்வம் தன்னுடைய சொந்த முயற்சியால் குற்றம் நீங்க வந்த செல்வம். மேலும் கல்விச் செல்வம் சம்பாதித்தவனை விட்டு நீங்காது. பிறருக்குக் கொடுத்தாலும் குறையாது. கொடுக்கக் கொடுக்க வளம் பெறும். பொருட் செல்வம் சம்பாதித்தவனிடத்தில் நிலைக்கு மென்பது நிச்சயமில்லை; பிறருக்குக் கொடுத்தால் குறைந்து போகும். கொடுக்கக் கொடுக்க இல்லாது போய் விடும். 'மாடு' என்பதற்கு 'இடம்' என்று பொருள்.

'மாடல்ல' என்பதற்கு 'ஒரு இடத்திலும் தங்குவதல்ல' என்பது பொருள்.

அதி. 41—கல்லாமை

['கல்லாமை' என்பது 'கல்வி கற்காதிருத்தல்'. பொதுவாக கல்வியில்லாதவனுடைய வாழ்க்கை சிறப்படையாது என்பதும் குறிப்பாக கல்வியில்லாதவன் சபைக்கு உதவாதவன் என்பதும் சொல்லப் படுகிறது.]

401. அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல்.

ப. ரை: நிரம்பிய நூல் இன்றி கோட்டி கொளல் அரங்கு இன்றி வட்டு ஆடி அற்றே = நிறைந்த கல்வி இல்லாமல் சபையில் பேசுவது தாயக்கட்டம் இல்லாமல் தாயம் ஆடுவதைப் போன்றதே.

பொ. ரை: பல நூல்களைப் படித்து நிரம்பிய கல்வியறிவில்லாதவன் ஒரு சபையில் பேசுவது தாயக் கோடுகள் இல்லாமல் தாயம் ஆடுவதைப் போன்றதே யாகும்.

வி - ம்: 'அரங்கு' என்றது சதுரங்கம், சொக்கட்டான், தாயம் முதலிய விளையாட்டுகளுக்காக வரையப்படுகிற கோடுகளமைந்த கட்டம். 'வட்டு' என்பது அந்த விளையாட்டுக்காகத் தரையில் உருட்டுகின்ற கருவி. தாயக் கட்டங்கள் இல்லாமல் கருவியை மட்டும் உருட்டினால் எந்தக் காயை எங்கே வைப்பது, ஏன் வைப்பது என்ற வரையறை இருக்காது. அதுபோல கல்வியறிவில்லாதவன் சபையில் பேசினால் எதை எந்த இடத்தில் சொல்லுவது, ஏன் சொல்லுவது, எவ்வளவு சொல்லுவது என்ற வரையறை இல்லாமல் வெறும் குழப்பமாகத் தானிருக்கும்.

கல்வியறிவில்லாதவன் சபையில் பிரசங்கம் செய்யவே ஆசை கொள்ளக் கூடாது. அப்படி ஆசைப் பட்டால்:

402. கல்லாதான் சொற்கா முறுதன் முலையிரண்டு
மில்லாதாள் பெண்காமுற் றற்று.

ப. ரை: கல்லாதான் சொல் காமுறுதல் முலை இரண்டும் இல்லாதாள் பெண் காமுற்ற அற்று = கல்வியில்லாதவன் சொற்பொழிவு செய்ய ஆசை கொள்வது இரண்டு முலைகளும்

இல்லாத ஒருத்தி பெண்மைக்கு ஆசை கொள்வது போன்றது.

பொ. ரை : கல்வியறிவில்லாதவன் பிரசங்கம் செய்ய ஆசை கொள்வது இரண்டு முலைகளும் இல்லாத ஒரு பெண் பெண்மை நடத்த ஆசைப்படுவதைப் போன்றது.

வி - ம் : இரண்டு முலைகளும் இல்லாத பெண், பெண்ணாக இருந்தாலும் காம இன்பத்துக்கு முலைகள் உதவக் கூடிய இன்ப உணர்ச்சிகள் இருக்கா. தாய்மைக்கு வேண்டிய தன்மையும் இருக்காது, அவளைக் கண்ட பிறர் ஆசைப்படக் கூடிய அழகும் அமையாது. அதுபோல கல்வியறிவு இல்லாதவன் பேசுவதும் பேச்சாக இருந்தாலும் அதில் அனுபவம் இருக்காது, அறிவு இருக்காது, பிறருக்கு இன்பமும் இருக்காது, யாரும் அதை விரும்பவும் மாட்டார்கள்.

அதனால் கல்வியறிவில்லாதவர்கள் கற்றறிந்தவர்கள் சபையில் பேசாமல் இருப்பதே மிகவும் நல்லது :

403. கல்லா தவரு நனிநல்லர் கற்றார்முற்
சொல்லா திருக்கப் பெறின்.

ப. ரை : கற்றார் முன் சொல்லாது இருக்கப் பெறின் கல்லாதவரும் நனி நல்லர் = கற்றவர்கள் முன்னால் பேசாமல் இருக்க முடியுமானால் கல்லாதவர்களும் மிகவும் நல்லவர்கள்.

பொ. ரை : கற்றவர்கள் சபையில் வாயை மூடிக் கொண்டு இருப்பார்களானால் கல்லாதவர்களும் மிகவும் நல்லவர்கள்.

வி - ம் : கல்வியில்லாதவர்கள் கற்றவர்களுக்கு முன்னால் பேசாமல் இருக்கிற வரையில் வெகு நல்லவர்களே. பேச ஆரம்பித்துவிட்டால் அவர்களுடைய மூடத்தனத்தைக் கண்டு அருவருக்க நேரும். அதனால் அவர்கள் நல்லவர்கள் அல்லாமை வெளிப்பட்டுவிடும்.

கற்றவர்கள் கூடியுள்ள சபைகளில் பிரசங்கம் செய்ய வேண்டும் என்ற ஆசைக்காகச் சில சமயங்களில் கல்வியறிவில்லாதவர்கள் கற்றவர்களிடம் கேட்டு மிகநல்ல கருத்துக்களை எழுதிப் பாடம் செய்துகொண்டு, அதைப் பிரசங்கம் செய்வதுண்டு. அப்படிப் பேசினாலும் :

404. கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யார்.

ப. ரை : கல்லாதான் ஒட்பம் கழிய நன்று ஆயினும் அறிவுடையார் கொள்ளார் = கல்லாதவன் (பிறர் சொன்னதைப் பாடம்

செய்து கொண்டு பேசுகின்ற பேச்சிலுள்ள) அறிவு மிகவும் நன்ருக இருந்தாலும் அறிவுடையவர்கள் (அவனைக் கற்ற வனுக) ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

பொ. ரை: சொந்தக் கல்வியில்லாதவன் பிறர் சொன்னதை மனப்பாடம் செய்து கொண்டு மிகநல்ல அறிவுரைகளைப் பிரசங்கம் செய்தாலும் அறிவுடையவர்கள், அவனைக் கற்ற வனுக ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

வி-ம்: 'ஒட்பம்' என்பது 'அறிவுள்ள பதங்களை'க் குறிக் கிறது. 'கல்லாதான்' என்பது 'தானே நூல்களைப் படித்து ஆராய்ந்து உணராதவன்'. 'கொள்ளார்' என்பது 'அவனைக் கற்றவனுகக் கொள்ள மாட்டார்கள்.'

தானே கற்றுணராத ஒருவன் கற்றவனைப்போல் பாசாங்கு செய்து மிக உயர்ந்த கருத்துகளைப் பிரசங்கம் செய்தாலும் அவனுடைய கல்லாமை வெகு எளிதில் வெளியாகிவிடும். எப்படியெனில்:

405. கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்.

ப. ரை: கல்லா ஒருவன் தகைமை தலைப்பெய்து சொல் ஆட சோர்வுபடும் = (சொந்தக்) கல்வியறிவு இல்லாத ஒருவன் (பாசாங்கு செய்த) தன்மை அவனை நெருங்கி அவனேடு பேசும்போது கெட்டுப்போகும்.

பொ. ரை: கல்லாத ஒருவன் கற்றவனைப் போல் பாசாங்கு செய்த தன்மை அவனுடன் நெருங்கிப் பேசும்போது வெளி யாகி விடும்.

வி-ம்: பிறர் சொல்லிக் கொடுத்ததைப் பாடம் செய்து வைத் துக் கொண்டு, தானே கற்று விட்டவன் போல, சபையில் பிர சங்கம் செய்துவிட முடியும். ஆனல் கற்றவர்கள் அவனுடன் நெருங்கிப் பேசும்போது அவன் தானே கற்றறிந்தவன் அல்ல வென்பது வெளிப்பட்டுவிடும். எப்படி யென்ருல் அவன் சொன்ன உயர்ந்த கருத்துக்கள் எந்த நூலில் யார் சொன்னது என்பதைக் கேட்டால் அவன் சொல்ல முடியாது. மேலும் வேறுவித சந்தேகங்களைக் கேட்டாலும் அவன் விளக்க முடியாது. அதனல் பிரசங்கத்தை விட்டுத் தனியே அவனுடன் பேச்சுக் கொடுத்தால் அவன் கல்லாதவன் என் பதைக் கண்டு கொள்ள முடியும்.

கல்வியில்லாதவர்கள் ஆலோசனைக்கோ அறிவு சொல்லவோ பயன்பட மாட்டார்கள்; அவர்கள் சபையில் இருந்தும் இல்லாததற்குச் சமானமே :

**406. உளரென்னு மாத்திரைய ரல்லாற் பயவாக்
களரனையர் கல்லா தவர்.**

ப. ரை : கல்லாதவர் உளர் என்னும் மாத்திரையர் அல்லால் பயவா களர் அனையர் = கல்வியில்லாதவர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு மாத்திரமே அல்லாமல், பயனளிக்காத களர் நிலத்துக்கு ஒப்பாவார்கள்.

பொ. ரை : கல்வியில்லாதவர்கள் பெயரளவுக்கு (ஒரு சபையில்) இருக்கிறார்கள் என்பதற்கு மட்டுந்தான் ஆவார்கள்; மற்றபடி அவர்கள் ஒன்றுக்கும் உதவாத களர் நிலத்துக்குச் சமானமே யாவார்கள்.

வி-ம். களர் நிலம் என்பது பயிரிடுவதற்குப் பயன்படாத நிலம். அந்த நிலத்தின் உவர் மண்ணை நீக்கி, உரம் போட்டுப் பண்படுத்தினால் விளைச்சல் உண்டாகும். அதைப் போலவே மனிதனுடைய மனதில் நல்ல அறிவுகள் தாமாக உதிக்கா. அந்த மனதிலுள்ள அறியாமையை நீக்கக் கல்வி என்ற உரம் போட்டால் நல்ல பலன் கொடுக்கும். ஆதலால் கல்வியில்லாதவர்கள் களர் நிலத்துக்குச் சமானம் எனப்பட்டது.

கல்வியில்லாதவர்கள் எவ்வளவு அழகுள்ளவர்களாக இருந்தாலும் அவர்களுடைய அழகு :

**407. நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று.**

ப. ரை . நுண்மாண் நுழை புலம் இல்லான் எழில் நலம் மண் மாண் புனைபாவை அற்று = நுட்பமாகிய சிறந்த (நூல்களில்) நுழைந்து (ஆராய்ந்த) அறிவு இல்லாதவனுடைய அழகின் சிறப்பு மண்ணினால் திறமையாகச் செய்யப்பட்ட பொம்மையைப் போன்றது.

பொ. ரை : நுட்பமாகிய சிறந்த நூல்களில் நுழைந்து ஆராய்ந்த கல்வியறிவு இல்லாதவனுடைய அழகின் சிறப்பு மண்ணைக் கொண்டு, திறமையாகச் செய்யப்பட்ட பொம்மையைப் போன்றது.

வி-ம் : வியக்கத்தக்க கலைத் திறமையினால் செய்யப்பட்டுக் கண்ணைக் கவரக் கூடிய அழகுடையதானாலும் ஒரு மண்

பதுமை சுயமாக உணரவோ இயங்கவோ முடியாதது. அது போல மிக நல்ல அழகமைந்தவர்களானாலும் கல்வி யறிவில் லாதவர்கள் சொந்தமாக உணரவோ செயலாற்றவோ முடி யாது. ஆதலால் பயனற்றவர்கள்.

கல்வியில்லாதவர்களிடத்தில் செல்வம் இருந்தாலும் அத னல் உலகத்துக்குப் பயனில்லை:

408. நல்லார்கட் பட்ட வறுமையி னின்னாதே
கல்லார்கட் பட்ட திரு.

ப. ரை: கல்லார் கண் பட்ட திரு நல்லார் கண் பட்ட வறுமை யின் இன்னாதே = கல்லாதவர்களிடத்தில் அகப்பட்ட செல் வம் கற்றவர்களிடத்தில் ஏற்பட்ட ஏழ்மைத் தனத்தைக் காட்டிலும் பயனற்றது.

பொ. ரை: கல்வியில்லாதவர்களிடத்தில் அகப்பட்ட செல்வம் கற்றவர்களிடத்தில் ஏற்பட்ட தரித்திரத்தைக் காட்டிலும் பயனற்றது.

வி-ம்: கல்வியறிவில்லாதவர்கள் செல்வ முள்ளவர்களாக இருப்பது கற்றறிந்தவர்கள் ஏழைகளாக இருப்பதைக் காட் டிலும் பயனற்றது. அதாவது கல்வியறிவுள்ளவர்கள் மிகவும் ஏழைகளாக இருக்கும்போது கூட பிறருக்குத் தம்மாலான உதவியைச் செய்வார்கள். ஆனல் கல்வியறிவில்லாதவர்கள் மிக்க பணக்காரர்களாக இருந்தாலும் பிறருக்குப் பயன் பட மாட்டார்கள். ஆகையால் கல்லாதார் செல்வத்தைக் காட்டி லும் கற்றவரின் வறுமையே சிறப்புடையது. இங்கே 'இன் ஞது' என்பதற்கு 'இனிமையற்றது' என்ற பொருளோடு நிற்பது. 'இன்னது' என்பதற்கு 'துன்பம்' என்று பொருள் கொள்ளக் கூடாது. 'இன்னது' என்பதற்கு 'இனிமை பயவா தது' என்பதுதான் நேரான பொருள். 'துன்பம்' என்பது இரண்டாம் பக்ஷமாக எதிர்மறையில் ஏற்பட்ட பொருள். அந்தப் பொருள் இங்கே பொருந்தாது.

ஆகையினல் கல்விதான் மனிதனுக்கு மேன்மை கொடுப் பது. கல்லாமை கீழ்மை கொடுக்கும்:

409. மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்ருர் அனைத்திலர் பாடு.

ப. ரை: கல்லாதார் மேல் பிறந்தார் ஆயினும் கீழ் பிறந்தும் கற்ருர் அனைத்து பாடு இலர் = கல்வியில்லாதவர்கள்

மேலான சாதியிற் பிறந்தவர்கள் ஆனாலும் கீழான சாதியில் பிறந்தும் கற்றவர்களைப் போன்ற பெருமை உள்ளவர்கள் அல்ல.

பொ. ரை : சாதியால் (செல்வத்தால்) மேலான பிறப்புடையவர்களானாலும் கல்வியறிவில்லாதவர்கள், சாதியால் (செல்வத்தால்) கீழான பிறப்புடையவர்களாக இருந்தும் கல்வியறிவுள்ளவர்களைப்போல் பெருமை அடைய மாட்டார்கள்.

வி - ம் : கல்லாமை மேலான பிறப்புள்ளவனையும் கீழானவனாகச் செய்து விடும்.

கல்லாமை உள்ளவரையிலும் மனிதனுக்கு மிருகத் தன்மையே மிகுந்திருக்கும். கல்விதான் மனிதனை விலங்குகளிலிருந்து வேறாக்கி வைப்பது.

410. விலங்கொடு மக்க ளனைய ரிலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்.

ப. ரை : இலங்கு நூல் கற்றாரோடு ஏனையவர் விலங்கொடு மக்கள் அனையர் = (அறிவு) விளங்குகின்ற நூல்களைக் கற்றவர்களோடு (கல்லாத) மற்றவர்கள் விலங்குகளையும் மக்களையும் ஒப்பாவார்.

பொ. ரை : அறிவை விளங்க வைக்கின்ற நூல்களைக் கற்றவர்களோடு கல்லாத மற்றவர்களை ஒப்பிட்டுப் பார்ப்பது மனிதர்களோடு விலங்குகளை ஒப்பிட்டுப் பார்ப்பது போலத்தான்.

வி - ம் : அறிவு நூல்களைக் கற்றவர்களுக்கும் கல்லாதவர்களுக்கும் உள்ள வேற்றுமை, மனிதருக்கும் மிருகங்களுக்கும் என்ன வேற்றுமையோ அந்த வேற்றுமைதான். இலங்கு நூல் கற்றவன் மனிதத்தன்மை அடைந்தவன். அதைக் கற்காதவன் மிருகத்தன்மையிலேயே உள்ளவன்.

அதி. 42—கேள்வி

['கேள்வி' என்பது காதினால் கேட்டு அடையும் அறிவு. பல நூல்களைப் படிப்பதனால் அறிவுண்டாகும் என்றாலும் மேலான அறிவு பெறுவதற்கு வெறும் புத்தகப் படிப்பு மட்டும் போதாது. பல அறிஞர்கள் சொல்லுகின்ற அறிவுரைகளை நிரம்பக் கேட்க வேண்டும். தாமாக நூல்களைப் படித்தறிய எழுத்தறிவு இல்லாதவர்களும் கூட, கேள்வியினால் மட்

டும் நல்லறிவு பெற முடியும். அதனால் 'கேள்வி'யும் கல்வியின் பயனைத் தரும். அறிஞர்கள் உலக நலத்தைக் கோரி 'தாமின்புறுவது உலகின்புறக் காண' வேண்டி, தாமாக அறிவுரைகள் சொல்லுவதையும், நாமாக அறிஞர்களை நாடி சொல்லச்செய்து கேட்டுக்கொள்வதும் சேர்ந்தது 'கேள்வி'.]

411. செல்வத்துட் செல்வஞ் செவிச்செல்வ மச்செல்வஞ்
செல்வத்து ளெல்லாந் தலை.

ப. ரை : செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் அச்செல்வம் செல்வத்துள் எல்லாம் தலை = செல்வங்களுக்குள் சிறந்த செல்வம் நல்ல அறிவுரைகளைக் கேட்டல்; அந்த இன்பம் மற்ற எல்லாச் செல்வ இன்பங்களிலும் சிறந்தது.

பொ. ரை : மக்கள் விரும்பி அடையத் தகுந்த செல்வங்களில் சிறந்த செல்வம் கேள்வி இன்பம்; அந்த இன்பம் மற்ற செல்வ இன்பங்களுக்கெல்லாம் சிறந்தது.

வி - ம் : ஒருவன் தானே கற்றவனாக இருந்தாலும் தான் கல்லாத பல நூல்களிலுள்ள அறிவைப் பிறர் சொல்லக்கூடும். வெவ்வேறு அறிஞர்கள் இவன் அறியாத வெவ்வேறு நூல்களிலிருந்து புதுப்புது அறிவுரைகளைச் சொல்லக்கூடும். மேலும் இவன் கற்ற நூலையே வெவ்வேறு அறிஞர்கள் வெவ்வேறு அனுபவங்களுடன் விளக்கக் கூடும். அப்படிப்பட்ட அறிவுரைகளைக் கேட்கும் போது இவனுக்கு மிகச் சிறந்த இன்ப முண்டாகும். 'செல்வம்' என்பது இங்கே பொருட்செல்வம் அல்ல. 'பாக்கியம்', 'இன்பம்' என்ற அர்த்தங்களில் பிரயோகிக்கப் பட்டிருக்கிறது.

அறிவு இன்பமனுபவிப்பதற்கும் ஆன்மா உணர்ச்சி பெறுதற்கும் 'கேள்வி'யைப் போல் உதவக்கூடியது வேறில்லை. அந்த உண்மையை அறிந்தவர்கள், அறிவாளிகள் சொல்லும் நல்லுரைகளில் பரவசப்பட்டு அந்த இன்ப உணர்ச்சியில் பசித் துன்பத்தைக்கூட மறந்து விடுவார்கள் :

412. செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கு மீயப் படும்.

ப. ரை : செவிக்கு உணவு இல்லாத போழ்து வயிற்றுக்கும் சிறிது ஈயப்படும் = காதுக்கு உணவாகிய கேள்வி இல்லாமல் நின்று போனபோதுதான் வயிற்றுக்கும் சிறிதளவு உணவு கொடுக்கப்படும்.

பொ. ரை: (கேட்டு அனுபவித்துக் கொண்டிருந்த) செவிக்குணவாகிய கேள்வி இல்லாமல் நின்றுவிட்ட போதுதான் வயிற்றுக்கும் சிறிது உணவு கொடுக்கப்படும்.

வி-ம்: நல்ல கேள்வியில் ஈடுபட்டு அதை அனுபவித்துக் கொண்டிருக்கிறவர்களுக்குப் பசியும் மறந்து போகும். அந்தக் கேள்வி நின்ற பிறகுதான் பசித் துன்பத்தை அவர்கள் உணர்வார்கள். அதன் பிறகும் கேள்வி நின்றுபோய் விட்டதே என்ற ஏக்கத்தில் உணவருந்த வேண்டிய மிகவும் இன்றியமையாத காரியத்தையும் விருப்பமில்லாமல் செய்வார்கள் என்பதற்காக 'சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்' எனப்பட்டது. 'வயிற்றுக்கும்' என்றது 'மிகமுக்கியமான வயிற்றுப் பசிக்கும்' என்பதைக் குறிக்க. 'ஈயப்படும்' என்பது பசிப்பிணி கட்டாயப்படுத்துவதால் 'கொடுக்கப்படும்'.

கேள்வியில் ஈடுபட்டு அதை ரசித்துக் கொண்டிருக்கிறவர்கள் பசியை மறந்து விடுவார்கள் என்பது மட்டுமல்ல. மிகவும் ஆசை மூட்டக்கூடிய மிக உயர்ந்த உண்டிகளை அவர்கள் முன் வைத்தாலும் அப்போது அவர்கள் அவற்றைப் பொருட்படுத்த மாட்டார்கள் :

413. செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி
ஞன்றுரோ டொப்பர் நிலத்து.

ப. ரை: செவியுணவின் கேள்வியுடையார் நிலத்து அவி உணவின் ஆன்றாரோடு ஒப்பர் = செவியுணவாகிய கேள்வியில் ஈடுபட்டிருக்கிறவர்கள் உலகத்திலுள்ள மனிதர்களேயானாலும் அவித்து சமைக்கப்பட்ட உணவுகளில் தேவர்களுக்கு ஒப்பானவர்கள்.

பொ. ரை: செவியுணவாகிய கேள்வியில் லயித்திருக்கிறவர்கள் இந்த உலகத்தில் இருக்கும் மனிதர்களே யானாலும் அவித்துப் பக்குவம் செய்யப்பட்ட உணவுகள் விஷயத்தில் வானுலகத்திலுள்ள தேவர்களைப் போல்தான் இருப்பார்கள்.

வி-ம்: தேவர்களும் முன்னோர்களுமாகிய ஆன்றோருக்குப்பூசனை செய்கிறபோது மிகவும் உயர்ந்தனவாக சுவை மிகுந்த உணவுகளைப் பலவித பக்குவங்கள் செய்து பரப்பி வைத்து அவற்றை அந்த ஆன்றோர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டிப் படைப்பு செய்கிறோம். ஆனால் அந்த ஆன்றோர்கள் அவற்றை உண்டு விடுவதில்லை. படைக்கப்பட்ட உணவுகள் பரப்பப்பட்டபடியே இருக்கின்றன. அது போல கேள்வியில் லயித்திருக்கிறவர்களுக்கு முன்னால் எவ்வளவு சுவையுள்ள உணவு வகைகளை வைத்தாலும் அவை அப்படியே

இருக்கும். அவர்களுடைய மனம் கேள்வியை விட்டு உணவு களின் மீது செல்லாது. அதனால் அவர்கள் இவ்வுலகத்தில் உள்ளவர்களானாலும் வானுலகத்திலுள்ள ஆன்றோருக்கு ஒப் பாகிறார்கள். மேலும் ஞான உரைகளைக் கேட்பது அறிவை அதிகப்படுத்தி ஆன்ம உணர்ச்சியை அனுபவிக்கச் செய்வ தால் அவர்களுடைய மனம் இந்த தூல உலகத்தை விட்டு சூக்கும உலகத்தில் சஞ்சரிப்பதாலும் அவர்கள் தேவர்களுக் குச் சமானமாகிறார்கள்.

கேள்வி அத்துணைச் சிறப்புடையது. அதனால் எல்லாரும் கேள்வி முயலவேண்டும். எழுதப் படிக்கத் தெரியாதவர்களும் கூட கேள்வியினால் சிறந்த ஞானத்தைப் பெறலாம்:

414. கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற்
கொற்கத்தி னூற்றாந் துணை.

ப. ரை: கற்றிலன் ஆயினும் கேட்க அஃது ஒருவற்கு ஒற்கத் தின் ஊற்றாம் துணை = ஒருவன் (எழுதப் படிக்கக்) கல்லாத வனாக இருந்தாலும் கேட்க வேண்டும்; அந்தக் கேள்வி ஞானம், அறிவு, தடுமாறுகிற காலங்களில் உறுதியளிக்க உதவியாகும்.

பொ. ரை: ஒருவன் எழுதப்படிக்கத் தெரியாதவனாக இருந்தா லும் பாதகமல்லை; அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டாலே போதும்; அந்தக் கேள்வி ஞானம் புத்தி தடுமாற்ற முண் டாகிற சமயங்களில் அவனுக்கு நல்ல யோசனை சொல்லு கிற துணையாகும்.

வி-ம்: 'கற்றிலனாயினும்' என்பது தானாகவே அறிவு நூல் களைப் படித்துணர எழுத்தறிவு இல்லாதவனானாலும்.

நல்ல அறிவுகளை யார் சொல்லக் கேட்டாலும் அந்தக் கேள்வியறிவு சமயத்துக்கு உதவும். அதிலும் ஒழுக்கத்தாற் சிறந்த உத்தமர்கள் வாயால் சொல்லக் கேட்பது எப்போ தும் மனதிலிருந்து கஷ்ட காலத்தில் கைகொடுக்கும். ஏனெ னில் அவர்கள் அறிவுரை மிக நல்ல உபதேசமாக இருப்ப தோடு அவர்களும் மிக நல்லவர்களாக நடப்பதைக் கண்டு மற்றவர்கள் சொன்னதைக் காட்டிலும் அவர்கள் சொன்னது மனதில் பதிந்திருக்கும்; அதனால்:

415. இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே
யொழுக்க முடையார்வாய்ச் சொல்.

ப. ரை : ஒழுக்கம் உடையார் வாய் சொல் இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே = ஒழுக்கமுடையவர்கள் சொல்லி ஒருவன் கேட்ட அறிவுரை அவனுடைய கால் வழுக்கி விட்ட போது (அவன் கையிலுள்ள) ஊன்று கோல் போன்றதே.

பொ. ரை : நல்லொழுக்கமுள்ளவர்களிடம் கேட்ட அறிவுரை ஒருவனுக்கு அவனுடைய கால் சறுக்கி விட்ட சமயத்தில் அவன் கையிலுள்ள ஊன்றுகோல் போல விழுந்து விடாத படி காக்கும்.

வி - ம் : 'ஒழுக்கமுடையார்' என்பது 'கசடறக் கற்பவை கற்றபின் அதற்குத் தக நிற்கின்ற' சீலமுள்ளவர்கள். கல்வி நிறைந்தும் பேசும் திறமை மிகுந்தும் ஒழுக்க மில்லாதவர்கள் உண்டு. அவர்களும் நல்லுரைகள் பேசலாம். அவற்றைக் கேட்பதிலும் நன்மை யுண்டு. இங்கே குறிப்பது கல்வியும் பேசும் திறமையும் நல்லொழுக்கமும் ஆகிய மூன்றும் சேர்ந்த சீலமுடையவர்களைப் பற்றியே. அவர்களுடைய வாய்ச் சொல் மிகவும் பரிசுத்த முடையவைகளாக இருக்கும்.

எவர் சொன்னாலும் எப்படிச் சொன்னாலும் எப்போது சொன்னாலும் எங்கே சொன்னாலும் நல்ல விஷயங்களை நிரம்பக் கேட்பது நல்லது:

416. எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு
மான்ற பெருமை தரும்.

ப. ரை : எனைத்தானும் நல்லவை கேட்க அனைத்தானும் ஆன்ற பெருமை தரும் = எவ்வளவானாலும் நல்ல அறிவுரைகளைக் கேட்க வேண்டும். அவ்வளவுக்கு மிகுந்த பெருமை தரும்.

பொ. ரை ; எவ்வளவானாலும் நல்ல அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டே இருக்கவேண்டும்; அவ்வளவுக் கவ்வளவு பெருமை உண்டாகும்.

வி - ம் : 'எனைத்தானும்' என்பது 'எப்படியாவது', 'எவ்வளவானாலும்' ஒரே விஷயத்தைப் பற்றி 'எத்தனை' தடவையானாலும்' என்ற பொருள்களை யெல்லாம் குறிப்பது.

அறிவுரைகளைக் கேட்டுக் கேட்டு நல்ல விஷயங்களே காதில் ஒலித்துக்கொண்டிருக்கிறதனால் :

417. பிழைத்துணர்ந்தும் பேதைமை சொல்லா ரிழைத்துணர்ந்
தீண்டிய கேள்வி யவர்.

ப. ரை: இழைத்து உணர்ந்து ஈண்டிய கேள்வியவர் பிழைத்து உணர்ந்தும் பேதைமைசொல்லார் = (நுணுக்கமாக) ஆராய்ந்து உணர்ந்து, சேகரிக்கப்பட்ட கேள்வி ஞானம் உள்ளவர்கள் உணர்ச்சி தவறுதலாகக் கூட அறிவில்லாத சொற்களைச் சொல்லிவிட மாட்டார்கள்.

பொ. ரை: அடிக்கடி பல நல்லுரைகளைக் கேட்டு அவற்றை எண்ணி யெண்ணி உணர்ந்து சேகரித்த கேள்வி ஞானமுள்ளவர்கள் நினைவு தவறுதலாகக் கூட மூடத் தனமாகப் பேசி விட மாட்டார்கள்.

வி-ம்: 'இழைத்து' என்பது 'அறிவைத் தீட்டி' என்ற பொருள் தருவது. அதாவது புத்தியைக் 'கூர்மைப்படுத்தி' என்பது. கற்ற அறிவைக் காட்டிலும் கேட்ட அறிவு மனதில்; எப்போதும் மிதந்து நிற்கு மாதலாலும் 'ஒழுக்க முடையார் வாய்ச்சொல்' வழுக்கி விழாதபடி காக்கு மாதலாலும் கேள்வி ஞானம் மிகுந்தவர்கள், நினைவு தவறுதலாகக் கூட குற்றமான சொற்களைப் பேச மாட்டார்கள்.

கேள்வி ஞானம் அவ்வளவு பெருமை தரும். ஆதலால் அறிவுரைகளை இடைவிடாது கேட்டுக் கொண்டே இருக்க வேண்டும். அதுதான் செவியினால் அடையும் பயன். இல்லையானால்:

418. கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவி.

ப. ரை: கேள்வியால் தோட்கப்படாத செவி கேட்பினும் கேளா தகையவே = (அறிவுரைகளைக்) கேட்பதால் துளைக்கப்படாத காதுகள் ஓசைகளைக் கேட்கக் கூடியவைகளாக இருந்தாலும் கேளாத (செவிட்டுக்) காதுகளைப் போன்றவைகளேயாகும்.

பொ. ரை: கேள்வியறிவு புகுந்து புகுந்து தொளைக்கப்படாத காதுகள் ஓசைகளைக் கேட்கக் கூடியவைகளாக இருந்தாலும் செவிட்டுக் காதுகளுக்குச் சமானமே.

வி-ம்: 'கேள்வியால் தோட்கப்படாத செவி' யாவது, கேள்வியறிவு உள்ளே போய்ச் சேர வழியில்லாத செவி. பல நல்லுரைகளைக் கேட்டுக் கேட்டுத் தொளை விழுந்தால்தான் கேள்வியறிவு சேரும்.

சீலத்திலும் அறிவிலும் சிறந்தவர்கள் சொல்லுகின்ற அறிவுரைகளை, பக்தி சிரத்தையோடு காது கொடுத்துக் கேட்கிறவர்களுக்கு விநய குணமும் உண்டாகும்:

419. நுணங்கிய கேள்விய ரல்லார் வணங்கிய
வாயின ராத லரிது.

ப. ரை: நுணங்கிய கேள்வியர் அல்லார் வணங்கிய வாயினர் ஆதல் அரிது = பணிவு தணிவுடன் அறிவுரைகளைக் கேட்டுக் கொள்ளுகிறவர்கள் அல்லாதவர்கள் வணக்கமுள்ள சொல்லுடையவர்கள் ஆவது கடினம்.

பொ. ரை: கேள்வி ஞானத்தை விநய விருப்பத்துடன் கேட்டுக் கொள்ளுகிறவர்கள் அல்லாதவர்கள் பணிவான சொற்களைப் பேசக் கூடியவர்கள் ஆவது கடினம்.

வி-ம்: வணங்கி கேட்டுக் கொள்ளாதவர்கள் வணக்கத்தோடு பேசவும் முடியாது. 'நுணங்கிய' என்பதற்கு இங்கே 'நுட்பமாகிய' என்பது பொருளல்ல. 'பணிவாகிய' என்பது பொருள்.

ஆதலால் அறிவை வளர்த்து ஆன்ம உணர்ச்சிக்கு ஆக்கம் தருகிற செவியுணவாகிய கேள்விச் சுவைகளை ரசிக்கப் பழக வேண்டும். அதையறியாமல் உடலை வளர்த்து உயிரோடு இருப்பதற்கு உதவுகின்ற வாயுணவு தருகிற நாக்குச் சுவைகளை மட்டும் ரசித்துக் கொண்டிருப்பது மனிதப் பண்புடையதல்ல:

420. செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்க
ளவியினும் வாழினு மென்.

ப. ரை: செவியின் சுவை உணரா வாயுணர்வின் மாக்கள் அவியினும் வாழினும் என் = செவியுணவாகிய கேள்விச் சுவைகளை உணரமாட்டாமல் வாயுணவின் சுவைகளை மட்டும் உணரக் கூடிய மனிதப் பிறவிகள் இறந்தாலும் இருந்தாலும் என்ன?

பொ. ரை: செவியுணவாகிய கேள்விச் சுவைகளை அனுபவிக்கப் பழகாமல் (வெறும்) வாயுணவின் நாக்கு ருசிகளை மட்டும் அனுபவிக்கிற மனிதப் பிறவிகள் இறந்தாலென்ன இருந்தாலென்ன?

வி-ம்: 'மாக்கள்' என்பது மனிதப் பண்புகள் இல்லாத மாந்தர்கள்.

அதி. 43—அறிவுடைமை

['அறிவுடைமை' என்பது ஒருவன் கல்வியினாலும் கேள்வியினாலும் சேகரித்துக் கொண்ட அறிவுகளை ஆராய்ந்து, தன்

வாழ்க்கைக்குப் பயன்படுத்திக் கொள்ளுவது. அதாவது வாழ்க்கையில் நேரிடுகின்ற சூழ் நிலைக்குத் தகுந்தபடி சொந்த அறிவோடு நடந்து கொள்வது.]

421. அறிவற்றங் காக்குங் கருவி செறுவார்க்கு
முள்ளழிக்க லாகா வரண்.

ப. ரை: அறிவு அற்றம் காக்கும் கருவி; செறுவார்க்கும் உள் அழிக்கலாகா அரண் = அறிவுதான் தீங்குகளைத் தடுக்கும் கருவி. பகைவர்களாலும் உள்ளே புகுந்து அழிக்க முடியாத கோட்டை.

பொ. ரை: அறிவுதான் (ஒவ்வொரு மனிதனுக்கும்) தீங்குகளை விலக்கக் கூடிய ஆயுதம்; (அது) பகைவர்களாலும் உள்ளே புகுந்து அழிக்க முடியாத கோட்டை.

வி-ம்: 'காக்கும் கருவி' என்பது 'தடுக்கும் கருவி' அல்லது 'விலக்கும் கருவி'. 'செறுவார்க்கும்' என்றது 'பகைவர் இருந்தால் அவர்களுக்கும்' என்ற பொருள் தருவது. ஒவ்வொரு மனிதனுக்கும் வாழ்க்கையில் எவ்வளவோ துன்பங்கள் வரலாம். அந்தத் துன்பங்கள் வராமல் தடுப்பது தான் அறிவுடைமை. அந்த அறிவுடைமை ஒவ்வொருவனுக்கும் கோட்டையைப்போல் பாதுகாப்பளிப்பது. சாதாரண கோட்டையைப் பகைவர்கள் அழித்துவிட முடியும். ஆனால் அறிவாகிய கோட்டையை அப்படி அழிக்க முடியாது. ஏன் எனில் அது உள்ளத்தின் உள்ளேயிருக்கிற கோட்டையானதால் அதை யாரும் அணுகவே முடியாது.

அறிவுடைமை தீங்கு வருவதைத் தடுத்துப் பாதுகாப்பளிப்பது. எப்படியெனில்:

422. சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ
நன்றின்பா லுய்ப்ப தறிவு.

ப. ரை: சென்ற இடத்தால் செலவிடா. தீது ஒரீஇ நன்றின்பால் உய்ப்பது அறிவு = (மனதை. அது) போன இடத்துக்கெல்லாம் போகவிடாமல் தீய இடங்களை விலக்கி நல்ல இடங்களுக்குச் செலுத்துவதுதான் அறிவு.

பொ. ரை: மனம், போன போக்கெல்லாம் அதைப் போக விடாமல், தீய காரியங்களுக்குப் போவதைத் தடுத்து நல்ல காரியங்களுக்குப் போகச் செய்வதுதான் அறிவுடைமை.

வி-ம்: ஒருவனுடைய அறிவுடைமை அவனுக்குத் தீமை வருவதையும் தடுக்கும், அவன் பிறருக்குத் தீமை எண்ணுவதையும் விலக்கும். அதைப் போலவே அவனுக்கு நன்மை எது என்பதையும் காட்டும், பிறருக்கு நன்மை செய்யவும் தூண்டும். 'ஒரிஇ' என்பது 'ஒருவி' என்பதன் விகாரம். ஒருவி-விலக்கி. உய்ப்பது—செலுத்துவது.

மனதை அது போன போக்கெல்லாம் போகவிடாமல் தீமைக்குப் போவதைத் தடுத்து, நன்மைக்குப் போகச் செய்வதைப் போலவே, காதில் விழுந்ததையெல்லாம் மனம் நம்பிவிடாதபடி காதில் விழுந்தவற்றுள் எது மெய் எது பொய் என்று கண்டு கொள்ளச் செய்வதும் அறிவு தான்:

423 எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

ப. ரை: எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு = எந்தப் பொருளைப் பற்றி யார் யார் (எப்படி எப்படி) சொன்னாலும் அவற்றைக் கேட்டு அந்தப் பொருளின் உண்மை என்னவென்று கண்டு கொள்வது அறிவுடைமை.

பொ. ரை: எந்த விஷயத்தைப் பற்றி யார் யார் எப்படி எப்படியெல்லாம் சொன்னாலும் அவற்றைக் கேட்டு அவற்றுள் எது உண்மை என்பதைக் கண்டறியச் செய்வது தான் அறிவு.

வி-ம்: ஒரே விஷயத்தைப் பற்றி பலபேர் பலவிதமாகச் சொல்லுவார்கள். அவற்றிலுள்ள உண்மையைக் கண்டறிவதுதான் அறிவு.

ஒருவன் பிறரிடத்தில் தான் கேட்ட விஷயங்களிலுள்ள உண்மையை அறிவதற்கு மட்டுமன்றித் தான் பிறருக்குச் சொல்லுகிற விஷயத்தைச் சரியாகச் சொல்லவும் அவர்கள் சொல்லுவதைச் சரியாகப் புரிந்து கொள்ளவும் கூட அறிவுடைமை இருக்க வேண்டும்:

424. எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்
நுண்பொருள் காண்ப தறிவு.

ப. ரை: எண் பொருளவாக செல சொல்லி, தான் பிறர் வாய் நுண் பொருள் காண்பது அறிவு = (ஒருவன் தான் பிறருக்குச் சொல்லுவதை அவர்களுக்கு) எளிதில் பொருள் விளங்கும்படி ஏற்றுக் கொள்ளும்படி சொல்லி, தான் பிறர்

சொல்லுவதின் உட்கருத்தைப் புரிந்து கொள்ளுவதும் அறிவினால் தான்.

பொ. ரை : *தான் சொல்லுவதைப் பிறர் சுலபமாக அறிந்து கொள்ளும்படி விளங்கச் சொல்லி, பிறர் சொல்லுவதில் (அவர்கள் சொல்லுவது எளிதில் விளங்கும்படியாக இல்லாமலிருந்தாலும்) உள்ள கருத்தைத் தெரிந்து கொள்ளச் செய்வது அறிவு.*

வி - ம் : *தான் சொல்லுவதைத் தெளிவாகச் சொல்லுவதும் பிறர் சொல்லுவது—சொல்லத் தெரியாமையால்—தெளிவாக இல்லாவிட்டாலும் அதன் கருத்தை அறிந்து கொள்ளுவதும் ஆகிய இரண்டுக்கும் அறிவுடைமை வேண்டும். 'நுண்பொருள்' என்பது 'சாரம்'. 'எண் பொருளவாக' என்பது 'எளிதில் பொருள் விளங்கும்படியாக'.*

பிறருக்குச் சொல்லுவதிலும் பிறர் சொல்லுவதை அறிந்து கொள்வதிலும் மாத்திரமின்றி, பிறரோடு நடந்து கொள்வதிலும் அறிவுடைமை வேண்டும் :

425. உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு.

ப. ரை. *உலகம் தழ்இயது ஒட்பம்; அறிவு மலர்தலும் கூம்பலும் இல்லது = உலகத்தாரைத் தழுவி நடந்து கொள்வது நல்லதுதான்; (ஆனால்) அறிவுடைமை என்பது (அடிக்கடி) விரிவதும் மூடிக் கொள்வதும் உள்ளதல்ல.*

பொ. ரை : *உலகத்தாரோடு சமயோசிதம் போல் ஒத்து நடந்து கொள்வது நன்மைதான்; ஆனால் அறிவுடைமை என்பது வேளைக்கு வேளை மாறுவதல்ல.*

வி - ம் : *அறிவுடைமை என்பது திடமான புத்தி. சமூக நலத்துக்காக உலகத்தாரோடு, சூழ்நிலைக்குத் தக்கபடி விட்டுக் கொடுத்து நடந்து கொண்டாலும் திரமான சொந்த அறிவு அடிக்கடி மாறிவிடாது. 'மலர்தலும் கூம்பலும்' என்பது தாமரை மலர் சூரியனைக் கண்டபோது மலரும், அவன் மறைந்து விட்டபோது கூம்பும். அது போல் கண்ட போது ஒரு விதமும் காணாத போது ஒரு விதமுமாக அறிவுடைமை மாறாது. ஆனாலும் உலகத்தாரைத் தழுவியே நடந்து கொள்ளும்.*

அதனால் பொதுமக்களின் போக்கு, தனது சொந்தக்கருத்துகளுக்கு மாறுபட்டதாக இருக்கிற காலங்களிலும் சமூக சமா

தானத்தைக் கருதி உலகத்தாருடன் முரண்படாமல் நடந்து கொள்வது அறிவுடைமை :

426. எவ்வ துறைவ துலக முலகத்தோ
டவ்வ துறைவ தறிவு.

ப. ரை : உலகம் எவ்வது உறைவது உலகத்தோடு அவ்வது உறைவது அறிவு = உலகத்தார் எப்படி இருக்கிறார்களோ உலகத்தாரோடு அப்படி இருப்பது அறிவுடைமை.

பொ. ரை : பொதுமக்களின் போக்கு எப்படி இருக்கிறதோ அதை அனுசரித்து அவர்களுடன் ஒட்டி நடந்து கொள்வது அறிவுடைமை.

வி - ம் : அப்படி உலகத்தோடு ஒட்டி நடந்து கொள்வதால் என்ன நன்மையென்பதையும் ஒட்டி நடக்காவிட்டால் என்ன தீமையென்பதையும் அறியக் கூடிய தன்மையினால் :

427. அறிவுடையா ராவ தறிவா ரறிவிலா
ரஃதறி கல்லா தவர்.

ப. ரை : அறிவுடையார் ஆவது அறிவார்; அறிவிலார் அஃது அறிகல்லாதவர் = அறிவுடையவர்கள் பின்னால் வரக் கூடிய விளைவுகளை (முன்னால்) அறிவார்கள்; அறிவில்லாதவர்கள் அப்படி அறிய முடியாதவர்கள்.

பொ. ரை : அறிவுடையவர்கள் எதனால் எது நேரிடும் என்பதை முன்னால் அறியக் கூடியவர்கள்; அறிவிலார் அப்படி அறிய முடியாது.

வி - ம் : பின்னால் வரக் கூடியதை முன்னால் ஆலோசித்து உணரக் கூடியதுதான் அறிவுடைமை; அப்படி ஆலோசியாமை அறிவின்மை.

ஆலோசிக்க வேண்டியதை ஆலோசிப்பது மட்டுமல்லாமல் அஞ்ச வேண்டியதற்கு அஞ்ச வேண்டியதும் அறிவுடைமை :

428. அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ
தஞ்ச லறிவார் தொழில்.

ப. ரை : அஞ்சுவது அஞ்சாமை பேதைமை; அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில் = அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமலிருப்பது அறிவில்லாமை; அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவது அறிவுடையார் கடமை.

பொ. ரை: பயப்பட வேண்டியதற்கு பயப்படாதிருப்பது முட்டாள்தனம்; பயப்பட வேண்டியதற்கு பயப்படுவது அறிவுடையவர்களின் கடமை.

வி-ம்: அஞ்ச வேண்டியதற்கு அஞ்சாமல் எதிர்ப்பது தைரியமல்ல — முட்டாள்தனம்; அஞ்ச வேண்டியதற்கு அஞ்சுவது கோழைத்தனமல்ல - அறிவுடைமை.

சிந்திக்க வேண்டியதைச் சிந்தித்து அஞ்ச வேண்டியதற்கு அஞ்சி நடக்கும் அறிவுடையவர்கள் எதிலும் எச்சரிக்கையாக இருப்பார்கள். ஆனதால்:

429. எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை
யதிர வருவதோர் நோய்.

ப. ரை: எதிரதா காக்கும் அறிவினார்க்கு அதிர வரும் நோய் இல்லை = முன்னாலேயே பாதுகாப்பு செய்து கொள்ளும் அறிவுடையவர்களுக்கு (அவர்கள்) திடுக்கிடும்படியான துன்பம் வராது.

பொ. ரை: எச்சரிக்கையோடு நடந்து கொள்ளும் அறிவுடையவர்களுக்குத் திடுக்கிடும்படியான துன்பம் வராது.

வி-ம்: எல்லாருக்கும் துன்பம் வருவதுண்டு. அறிவில்லாதவர்கள் துன்பம் வரக்கூடிய காரணங்களை உணர்ந்து எச்சரிக்கை கொள்ளத் தெரியாதவர்கள். அதனால் அவர்களுக்குத் துன்பம் வந்தால் திடுக்கிட்டுக் குலைந்து போவார்கள். ஆனால் 'அறிவுடையார் ஆவது அறிவார்'களானதால் துன்பத்தை எதிர்பார்த்து எச்சரிக்கையாக அதை விலக்க முயல்வார்கள். அந்த முயற்சி தவறிவிட்டாலும் வந்த துன்பம் அவர்களைக் குலைத்துவிட முடியாது.

துன்பம் வந்தாலும் அறிவுடையவர்கள் சமாளித்துக்கொள்வார்கள். ஆகையால் அவர்களுடைய வாழ்க்கை குறைவற்றதாக இருக்க முடியும்:

430. அறிவுடையா ரெல்லா முடையா ரறிவிலா
ரென்னுடைய ரேனு மிலர்.

ப. ரை: அறிவுடையார் எல்லாம் உடையார்: அறிவு இலார் என் உடையரேனும் இலர் = அறிவுள்ளவர்கள் எல்லாம் உள்ளவர்கள்; அறிவு இல்லாதவர்கள் என்ன இருந்தாலும் ஒன்றுமில்லாதவர்கள்.

பொ. ரை: அறிவுடையவர்கள் (மற்ற எது இல்லாவிட்டாலும்) எல்லாம் இருப்பவர்களாவார்கள்; அறிவு இல்லாதவர்கள் மற்ற என்ன இருந்தாலும் ஒன்றும் இல்லாதவர்களே.

வி-ம்: அறிவு ஒன்று மட்டும் இருந்தால் மற்ற எல்லா செல்வங்களையும் செய்து கொள்ள முடியும். மற்ற எல்லா செல்வங்களும் இருந்தாலும் அறிவு ஒன்று மட்டும் இல்லையானால் ஒரு நன்மையும் அடைய முடியாது.

அதி. 44—குற்றங்கடிதல்

['குற்றம் கடிதல்' என்பது குற்றங்களை நீக்குவதும் விலக்குவதும் கண்டிப்பதும் ஆகிய மூன்றையும் குறிப்பது. ஒவ்வொரு மனிதனும் தன்னிடத்தில் உள்ள குற்றங்களை அறிந்து அவற்றை நீக்க வேண்டும். பிறகு மீண்டும் குற்றங்கள் வந்துவிடாமல் விலக்க வேண்டும். அதன் பிறகு தன்னைச் சேர்ந்தவர்களிடத்திலுள்ள குற்றங்களைக் கண்டிக்க வேண்டும்.]

431. செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார்
பெருக்கம் பெருமித நீர்த்து.

ப. ரை: செருக்கும் சினமும் சிறுமையும் இல்லார் பெருக்கம் பெருமித நீர்த்து = அகங்காரமும் கோபமும் அற்பத்தனமும் இல்லாதவர்களுடைய செல்வம் பெருமை கொள்ளத் தகுந்தது.

பொ. ரை: கர்வமும் கோபமும் சின்னத் தனமும் இல்லாதவர்களுடைய செல்வப் பெருக்கம் பெருமை கொள்ளத் தக்கது.

வி-ம்: பெருக்கமான செல்வத்தோடு இருப்பவர்கள் பல பேருண்டு. ஆனால் கர்வமும் கோபமும் அற்பத்தனமும் ஆகிய மூன்று குற்றங்களும் இல்லாதவர்களுடைய செல்வந்தான் பெருமை கொள்ளத் தக்கது. 'சிறுமை' என்பது 'சிறுமனப்பான்மை'.

அத்துடன்:

432. இவறலு மாண்பிறந்த மானமு மாணா
வுவகையு மேத மிறைக்கு.

ப. ரை: இவறலும் மாண்பு இறந்த மானமும் மாணா உவகையும் இறைக்கு ஏதம் = அளவு கடந்த ஆசையும் கண்ணியமில்லாத தன் மதிப்பும் பெருமையில்லாத மகிழ்ச்சியும் தலைவனுக்குக் குற்றமானவைகள்.

பொ. ரை : பேராசையும், பெருந்தன்மை யில்லாத தன் மதிப்பும், சிறுமை தரக்கூடிய களிப்பும் தலைவனுக்குக் குற்றமானவை.

வி - ம் : 'இவறல்' என்பது 'பேராசை'. 'மாண் பிறந்த மானம்' என்பது 'பெருந் தன்மைக்கு ஒவ்வாத கௌரவம்'. 'மாணா உவகை' என்பது குற்றமான காரியங்களைச் செய்தோ செய்யச் சொல்லியோ மகிழ்ச்சி காட்டுவது. 'இறைக்கு' என்பது 'தலைவனுக்கு'. நாட்டின் தலைவனாகிய அரசனுக்கும் குடும்பத் தலைவனுக்கும் பொருந்தும்.

. சிறிதளவு குற்றம் இருந்தாலும் தீமை தரும். ஆகையால் :

**433. தினைத்துணையாங் குற்றம் வரினும் பனைத்துணையாக்
கொள்வர் பழிநாணு வார்.**

ப. ரை : பழி நாணுவார் தினைத்துணையாம் குற்றம் வரினும் பனைத்துணையாக் கொள்வர் = பழியை அஞ்சுகின்றவர்கள் தம்மீது தினையளவு குற்றம் வந்தாலும் அதைப் பனையளவாக எண்ணி வருந்துவார்கள்.

பொ. ரை : பழிக்குப் பயப்படுகின்றவர்கள் தம் மீது தினையளவு குற்றம் வந்தாலும் அதைப் பனையளவாக எண்ணி வருந்துவார்கள்.

வி - ம் : 'பழி நாணுவார்' என்பது 'பாவத்துக்கு பயப்படுகின்றவர்கள்'. அறிந்தோ அறியாமலோ செய்து விடுகிற குற்றங்களே பாவங்களுக்குக் காரணமாகித் தீவினைப் பயன்களை உண்டாக்கிக் கெடுதி தருவதால் :

**434. குற்றமே காக்க பொருளாகக் குற்றமே
யற்றந் தருஉம் பகை.**

ப. ரை : குற்றமே அற்றம் தருஉம் பகை; (ஆதலால்) குற்றமே பொருளாகக் காக்க = குற்றந்தான் கேடு தரும் பகையாளி; (ஆகையினால்) குற்றத்தையே தான் குறிப்பாகத் தடுக்க வேண்டும்.

பொ. ரை : (ஒருவனுடைய) குற்றந்தான் (அவனுக்குத்) துன்பங்களைச் செய்கிற பகையாளி; (ஆகையினால்) குற்றத்தைத்தான் குறிப்பாக நீக்க வேண்டும்.

வி - ம் : ஒருவனுடைய முதல் பகை அவனுடைய குற்றங்களே. அதனால் மற்றப் பகைவர்களை ஒழிக்க நினைக்கு முன் குற்றங்

கள் என்ற பகையை ஒழிக்க வேண்டும். இந்தப் பகை அற்றுப் போனால் மற்றப் பகைகளும் அற்றுப் போகும்.

குற்றம் செய்து விட்டால் துன்பம் வந்தே தீரும். ஆகையால் குற்றம் வராமல் எச்சரிக்கையாக இருந்து கொண்டேயிருக்க வேண்டும். இல்லையானால் :

435. வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்.

ப. ரை : வரு முன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும் = (குற்றம்) வருவதற்கு முன்னால் அதை விலக்காதவனுடைய வாழ்க்கை நெருப்புக்கு முன்னாலிருந்த வைக்கோல் போர் போல அழிந்து விடும்.

பொ. ரை : ஒரு குற்றம் வருவதற்கு முன்னால் எச்சரிக்கையோடு விலக்க வழிதேடிக் கொள்ளாதவனுடைய வாழ்க்கை நெருப்புக்கு அருகிலுள்ள வைக்கோல் போர் போல அழிந்து விடும்.

வி -ம் : வைக்கோல் போருக்குப் பக்கத்தில் நெருப்பு வர நேர்ந்தால் வெகு சாக்கிரதையாக இருக்க வேண்டும். வைக்கோலை நெருப்பு தீண்டிவிட்டால் அதன் பிறகு அதைக் காப்பாற்றுவது கடினம். அதுபோல் குற்றங்கள் ஒருவனுடைய வாழ்க்கையில் சேருவதற்கு முன்னால், முன் குறளில் சொன்னபடி 'குற்றமே பொருளாகக் காக்க' வேண்டும். 'வை' என்ற ஒரே எழுத்துக்கு 'வைக்கோல்' என்று அர்த்தம். 'தூறு' என்றால் 'குவியல்'. 'வைத்தூறு' என்பது 'வைக்கோல் போர்'.

அப்படித் தன்னிடத்தில் குற்றங்கள் நெருங்காமல் பார்த்துக் கொண்டு அதன் பின் தன்னைச் சேர்ந்த மற்றவர்கள் குற்றங்களையும் கண்டிக்க வேண்டும். இல்லையானால் தன்னைச் சேர்ந்தவர்களுடைய குற்றத்தாலும் தனக்குத் தீமை வரும் :

436. தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி
னென்குற்ற மாகு மிறைக்கு.

ப. ரை : தன் குற்றம் நீக்கி பிறர் குற்றம் காண்கிற்பின் இறைக்கு என் குற்றம் ஆகும் = தன்னுடைய குற்றங்களை (முதலில்) நீக்கிக் கொண்டு பிறருடைய குற்றத்தை (அவர்கள்) காணச் செய்தால் தலைவனுக்கு என்ன குறைச்சல் வரும்.

பொ. ரை : தன்னிடத்தில் குற்றமில்லாமல் பார்த்துக் கொண்டு அதன் பிறகு மற்றவர்களுடைய குற்றங்களைச் சுட்டிக் காட்டி அவைகளையும் நீக்கினால் தலைவனுக்கு ஒரு குறைச்சலும் வராது.

வி - ம் : 'காண்கிற்பின்' என்பது 'காணச் செய்தால்'. 'என் குற்றமாகும் இறைக்கு' என்பதிலுள்ள 'குற்றம்' என்ற பதத்திற்கு 'தப்பிதம்' என்ற பொருள் அல்ல. 'குறைவு' என்று கொள்ள வேண்டும்.

குற்றம் வராமல் காப்பதே வாழ்க்கையில் குறைவு வராமல் இருக்க மூலகாரணம். ஆகையினால் குடும்பத் தலைவனும் அரசனும் கவனிக்க வேண்டிய முதல் வேலை தன்னிடத்திலும் தன் ஆட்சிக்கு உட்பட்ட பிறரிடத்திலும் குற்றங்கள் இல்லாதபடி கவனித்துக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் :

437. செயற்பால செய்யா திவறியான் செல்வ
முயற்பால தன்றிக் கெடும்.

ப. ரை : செயற்பால செய்யாது இவறியான் செல்வம் உயற்பாலது அன்றி கெடும் = (குற்றங்களை நீக்க) செய்ய வேண்டியதைச் செய்யாமல் அசட்டையாக இருந்து விடுகிறவனுடைய செல்வ வாழ்க்கை தப்பாமல் கெட்டுப் போகும்.

பொ. ரை : (தன்னிடத்திலும் தன்னைச் சேர்ந்தவர்களிடத்திலும் குற்றம் இல்லாமலிருக்க) செய்ய வேண்டியவைகளைச் செய்வதில் கவனிப்பில்லாமல் இருந்து விடுகிறவனுடைய நல் வாழ்வு நிச்சயமாகக் கெட்டுப் போகும்.

வி - ம் : 'இவறியான்' என்பது 'அசாக்ரதையாக இருப்பவன்'. 'செல்வம்' என்பது இங்கே பொருட் செல்வத்தை மட்டும் குறிப்பதல்ல. செல்வமும் செல்வாக்குமுள்ள சிறப்புகளெல்லாம் சேர்ந்த 'நல்வாழ்வு' என்பதைக் குறிப்பது.

தன் குற்றமானாலும் தன்னைச் சேர்ந்த பிறர் குற்றமானாலும் அதைக் கடிந்து நீக்குவதில் தாட்சண்யமோ கவனக் குறைவோ கூடாது :

438. பற்றுள்ள மென்னு மிவறன்மை யெற்றுள்ளு
மெண்ணப் படுவதொன் றன்று.

ப. ரை : பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும் எண்ணப்படுவது ஒன்று அன்று = மிகவும் விரும்புகின்றோம் என்று (குற்றங்கடிவதில்) அசட்டையாக இருப்பது எதனோடும் சேர்க்கப்படுவதொன்று அல்ல.

பொ. ரை: மிகவும் பிரியப்படுகிறோம் என்பதற்காக நீக்கவேண்டிய குற்றத்தை நீக்காமல் அசட்டை செய்வது எதனோடும் சேர்ந்ததல்ல.

வி-ம்: ஒரு குற்றமான பழக்கத்தில் மிக்கப் பற்றுடையவர்களாக இருக்கிறோம் என்பதற்காகவாவது குற்றம் செய்கிற வேறொருவன் நமக்குப் பற்றுடையவனாக இருக்கிறான் என்பதற்காகவாவது குற்றத்தைக் கடியாமல் அசட்டையாக இருந்துவிடக் கூடாது. 'எற்றுள்ளும் எண்ணப்படுவதொன்று அன்று'—எந்த அறிவோடும் சேர்ந்ததல்ல. 'எண்ணப்படுவது' என்பது 'சேர்த்துக் கணக்கெண்ணப்படுவது.' அது ஒன்றிலும் சேராதது என்று தள்ளி விடத்தக்கது. 'இவறன்மை' என்பது 'அசாக்கிரதை'.

தன் குற்றம் நீக்கவும் பிறர்குற்றம் தடுக்கவும் ஒருவன் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றால்:

439. வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை.

ப. ரை: எஞ்ஞான்றும் தன்னை வியவற்க; நன்றி பயவா வினை நயவற்க = ஒரு நாளும் தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளக் கூடாது; நன்மை உண்டாக்காத எந்தச் செயலையும் பாராட்டக் கூடாது.

பொ. ரை: (தன்னைக் குற்றமற்றவனாக மதித்துக் கொண்டு) ஒரு நாளும் தன்னைத் தானே மெச்சிக் கொள்ளக் கூடாது; நல்லதல்லாத எந்தச் செயலையும் சிலாகிக்கக் கூடாது.

வி-ம்: தான் செய்கிற காரியங்கள் குற்றமற்றவை என்று எண்ணிக்கொண்டு தன்னைத் தானே மெச்சிக் கொள்ளுகிறவன் ஒரு நாளும் தன் குற்றத்தை உணரமாட்டான். தன்னைச் சேர்ந்தவர்கள் நன்மையற்ற காரியத்தைத் திறமையோடு செய்துவிட்டாலும் அதைப் பாராட்டி சிலாகிக்கக் கூடாது. ஏனெனில் அதனால் அவர்கள் குற்றத்தை அவர்கள் உணர மாட்டார்கள்.

குற்றங்களுக் கெல்லாம் மூல காரணம் நீதியற்ற ஆசைகளே. அந்த அறியாமையை நீக்கிவிட்டால்:

440. காதல காத லறியாமை யுய்க்கிற்பி
னேதில வேதிலார் நூல்.

ப. ரை: காதல காதல் அறியாமை உய்க்கில் பின் ஏதிலர் நூல் ஏது இல = ஆசைப்பட்டதை யெல்லாம் அடைய

விரும்புவது என்ற அறியாமையை நீக்கிவிட்டால் அதன்பின் பகைவர்களின் சூழ்ச்சிகள் காரணம் இல்லாதவைகளாகி விடும்.

பொ. ரை: ஆசைப்பட்டதை யெல்லாம் அடைய விரும்புகிற அறியாத் தனத்தை நீக்கிவிட்டால் அதன்பின் பகைமை என்பதன் காரணமே இல்லாமற் போய்விடும்.

வி-ம்: 'ஏது இல' = 'காரணம் இல்லாதவை'. குற்றங்களுக்கு மூலகாரணம் நியாயமல்லாத ஆசைகளே. ஆனதால் அவற்றை நீக்கிவிட்டால் துன்பம் செய்யக்கூடிய பகைமைகளுக்குக் காரணமே இருக்காது. 'குற்றமே அற்றந் தரூஉம் பகை' என்று முன்னே சொல்லப்பட்டதால் குற்றம் நீங்கினால் பகையும் நீங்கிவிடும்.

அதி. 45—பெரியாரைத்துணைக்கோடல்

[பெரியாரைத் துணைக்கோடல். (கோள் + தல் = கோடல். 'கோள்' என்பது 'கொள்' என்பதன் நீட்டல். அதனால் 'கோடல்' என்பது 'கொள்ளுதல்' என்பதே). பெரியாரைத் துணை கொள்ளுவது என்பது—அறிவிலும் அனுபவத்திலும் ஆற்றலிலும் நம்மைக் காட்டிலும் பெரியவர்களாக இருப்பவர்களை நமக்குத் துணைவர்களாக இருக்கச் செய்து கொள்வது.]

441. அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்.

ப. ரை: அறன் அறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை திறன் அறிந்து தேர்ந்து கொளல் = தர்மங்களை அறிந்து முதிர்ந்த அறிவுடையவர்களுடைய நட்பை தகுதியை அறிந்து தேடிக் கொள்ள வேண்டும்.

பொ. ரை: நம்மைக் காட்டிலும் தர்மங்களை அறிந்தவர்களாகவும் அனுபவம் முதிர்ந்தவர்களாகவும் திறமை உள்ளவர்களாகவும் இருக்கிற பெரியவர்களுடைய சிநேகத்தை, அவர்கள் தகுதியை அறிந்து தீர்மானித்து, சம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

வி-ம்: 'திறனறிந்து' என்பதற்கு யார் யாருடைய நட்பு எந்த எந்தக் காரியங்களுக்கு உதவும் என்ற திறங்களை அறிந்து என்பது பொருள். 'தேர்ந்து கொளல்' என்பது ஆராய்ந்து பொறுக்கி அடைந்து கொள்வது.

அறனறிந்து மூத்த அறிவுடையார் எப்படிப்பட்டவர்கள், அவர்களுடைய நட்பினால் நாம் அடையக் கூடிய நன்மைகள் என்ன, என்றால்:

**442. உற்றநோய் நீக்கி யுறுஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்.**

ப. ரை: உற்ற நோய் நீக்கி உறுமை முன் காக்கும் பெற்றியார்; பேணி கொளல் = (பெரியார் எனப்படுவோர்) வந்துள்ள துன்பத்தை நீக்கி (இனி வரக் கூடிய துன்பங்கள்) வராமலிருக்க, முன்னாலேயே தடுத்துவிடக் கூடிய தன்மையுள்ளவர்கள். (அதனால் அவர்கள் நட்பை) விரும்பித் தேடி அடைய வேண்டும்.

பொ. ரை: (பெரியார் எனப்படுவோர் பிறருக்கு) வந்துவிட்ட துன்பத்துக்கு உடனே பரிகாரங்களைச் செய்து அதை நீக்கி விட்டு, இனி வரக்கூடிய துன்பங்கள் வராதபடி முன்னெச்சரிக்கையான ஏற்பாடுகளையும் செய்யக் கூடிய திறமையுள்ளவர்கள்; அதனால் அவர்களுடைய நட்பைத் தேடி அடைய வேண்டும்.

துன்பம் வந்தபோது மட்டும் என்றில்லாமல் எப்போதும் அந்தப் பெரியார்களுடைய நட்பு நமக்கிருக்கவும் அவர்கள் நம்முடைய நலத்தைக் காக்கக் கூடிய பொறுப்புடைய துணையாகவும் இருக்கப் பெற்றால்:

**443. அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்.**

ப. ரை: பெரியாரை பேணி தமராக் கொளல் அரியவற்றுள் எல்லாம் அரிதே = பெரியவர்களை விரும்பி யடைந்து. அவர்கள் நமக்குத் துணைவர்களாவதை அடைந்தால் அது கிடைப்பதற்கு அருமையான பாக்கியங்களிலெல்லாம் அருமையானதே.

பொ. ரை: நாம் பெரியவர்களுடைய நட்பை விரும்பியடைந்து (அத்துடன் அவர்களும் நம்முடைய நன்மைகளைக் கருதி எப்போதும் அறிவு சொல்லக் கூடிய பொறுப்புள்ள) துணைவர்களாகப் பெறுவது பெறுவதற்கரிய பாக்கியங்களிலெல்லாம் பெரியது.

வி—ம்: பெரியார்களை நாம் நத்தியடைந்து அவர்களும் நமக்குத் 'தமர்' ஆகிவிட்டால் அது மிகவும் அருமையான சம்பத்து என்பது கருத்து. 'தமர்' என்பது வேண்டிய சமயத்

தில் தக்க ஆலோசனை செய்து துணை புரியக் கூடிய உறவுள்ளவர்கள்.

'உற்ற நோய் நீக்கி உறுமை காக்கக் கூடிய' பெரியார்கள் நமக்குத் தமராகக் கிடைத்து ஆலோசனைகள் சொல்வது மட்டுமல்லாமல் நமக்காக அவர்கள் நம் காரியங்களை நடத்துவதும் கிடைத்தால் :

**444. தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்
வன்மையு ளெல்லாந் தலை.**

ப. ரை : தம்மில் பெரியார் தமரா ஒழுகுதல் வன்மையுள் எல்லாம் தலை = தம்மிலும் பெரியவர்கள் தமக்குத் துணைவராக இருப்பது வலிமை களிலெல்லாம் சிறந்த வலிமை.

பொ. ரை : ('அறனறிந்து மூத்த அறிவில்') தம்மைக் காட்டிலும் பெரியவர்கள் தமக்குத் துணையாகக் காரியங்களை நடத்துவது (தமக்குள்ள மற்ற) எல்லா வலிமைகளிலும் சிறந்த வல்லமை.

வி - ம் : 'தமரா ஒழுகுதல்' என்பது 'துணைவராக வேலை செய்வது' என்ற பொருள் தருவது.

எல்லாரும் எப்போதும் எந்தக் காரியத்துக்கும் தம்மினும் பெரியவர்களுடைய ஆலோசனைகளைத் துணை கொண்டுதான் நடக்க வேண்டும். என்றாலும் குறிப்பாக ஒரு அரசன் 'அறனறிந்து மூத்த அறிவுடைய' பெரியாருடைய ஆலோசனையும் ஒத்துழைப்பும் இல்லாமல் எதையும் செய்யக் கூடாது :

**445. சூழ்வார்கண் ணாக வொழுகலான் மன்னவன்
சூழ்வாரைச் சூழ்ந்து கொளல்.**

ப. ரை : சூழ்வார் கண்ணாக ஒழுகலால் மன்னவன் சூழ்வாரை சூழ்ந்து கொளல் = ஆலோசனை சொல்லுகின்ற துணைவர்களே தனக்கு வழிகாட்டும் கண்களாக நடக்க வேண்டியவனதால் அரசன் தனக்கு ஆலோசனை சொல்லக் கூடியவர்களை, தான் ஆலோசனை செய்து துணைவர்களாக்கிக் கொள்ள வேண்டும்.

பொ. ரை : ஆராய்ந்து அறிவு சொல்லக் கூடியவர்களே அரசனுக்கு வழிகாட்டும் கண்கள் போல உதவ வேண்டியவர்களானதால் அப்படிப்பட்ட ஆலோசனைக்காரர்களை ஒரு அரசன் (அவர்கள் பெரியார்களா என்பதை) ஆராய்ந்து தனக்குத் துணைவர்களாக்கிக் கொள்ள வேண்டும்.

வி - ம் : அறிஞர்களைக் கேட்டு ஆலோசனை செய்யாமல் அரசன் தன் அரசாட்சியை நடத்தவும் முடியாது, நடத்தவும் தகாது. ஆகையால் அப்படிப்பட்ட ஆலோசனைகளுக்கு 'அறனறிந்து மூத்த அறிவுடையார்' களாகவும், 'உற்றநோய் நீக்கி உறாமை முற்காக்கும் பெற்றியார்'களாகவும் உள்ள பெரியாரைத் துணைவர்களாகக் கொள்ள வேண்டும். இங்கே சொல்லப்படுவது அரசனுக்கு அங்கமாகச் சேர்த்துக் கொள்ளும் அமைச்சரை அல்ல. அமைச்சர் அரசனுக்குப் பெரியவர்கள் அல்ல. அவர்கள் அரசனுக்குக் கீழ்ப்பட்டவர்கள். அரசனுக்கும் பெரியவர்களான 'தம்மிற் பெரியார்' களைத்தான் இங்கே குறிப்பது.

அறிவும் ஆற்றலும் மிகுந்தவர்களான பெரியோர்களுடைய சகவாசமுள்ள ஒருவனுக்குப் பகைவர்களால் ஒரு துன்பமும் வராது :

446. தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்.

ப. ரை : தக்கார் இனத்தனாய் தான் ஒழுக வல்லானை செற்றார் செயக்கிடந்தது இல் = மேலோர்கள் இனத்தைச் சேர்ந்தவனாகத் தானும் (மேலான முறையில்) நடந்து கொள்ளக் கூடியவனை பகையாளிகள் துன்புறுத்தச் செய்யக் கூடியது ஒன்றுமில்லை.

பொ. ரை : (அறினறிந்து மூத்த அறிவுடைய) பெரியார் இனத்தைச் சேர்ந்து, தானும் அவர்களை யொட்டி நடந்து கொள்ளக் கூடியவனுக்குப் பகையாளிகள் செய்யக் கூடிய துன்பம் ஒன்றுமிருக்காது.

வி - ம் : பெரியாரைத் துணைகொண்டு அவர்கள் தனக்குத் தமராக இருக்க அவர்கள் சொல்லுகிற அறவழியில் நடந்து கொள்ளுகிறவனுக்குப் பகைவரே இருக்க மாட்டார்கள். இருந்தாலும் பெரியோர் சகவாசத்தால் இவன் நடந்து கொள்ளுகிற மாதிரியில் இவனுக்குத் தீங்கு செய்யும் நினைப்பும் பகைவருக்கு மிகவும் குறைந்து போய்க் கடைசியில் இல்லாமலே போகலாம்.

ஏன் என்றால் :

447. இடிக்குந் துணையாரை யாள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்.

ப. ரை : இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே கெடுக்கும் தகைமையவர் = (குற்றம் கண்ட உடன்) இடித்துக் கூறும்

(பெரியோரைத்) துணையாக உடையவர்களை யார்தாம் கெடுக்கும் தன்மையுள்ளவர்கள் ?

பொ. ரை : (குற்றம் வராதபடி அப்போதைக்கப்போது) இடித்துக் கூறி அறிவு சொல்லும் (பெரியாரை) துணையாகக் கொண்டுள்ளவர்களைக் கெடுக்கும் தன்மை யாருக்கு வரும் ?

வி - ம் : பெரியோர்களைத் துணைகொண்ட ஒருவனுக்கு அப்பெரியவர்கள் அப்போதைக் கப்போது இடித்துக் கூறி நல்ல போதனைகளைச் செய்து கொண்டேயிருப்பதால் அவனிடத்தில் குற்றம் இருக்காது. அதனால் பிறர் அவனுக்குக் கெடுதி செய்யத் தூண்டுகிற காரணமே இல்லாது போய்விடும். அதனால் அவனை 'யாரே கெடுக்குந் தகைமையவர்' ? யாருமில்லை.

இடித்துக்கூறும் அறிவும் ஆற்றலும் பொறுப்பும் உள்ள பெரியாருடைய துணையுள்ளவர்களை யாரும் கெடுக்க மாட்டார்கள். அப்படிப்பட்ட துணைவர்கள் இல்லாவிடில் :

448. இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பா ரிலானுங் கெடும்.

ப. ரை : இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன் கெடுப்பார் இலானும் கெடும் = இடித்துக் கூறும் துணைவர்கள் இல்லாமல் பாதுகாப்பற்றவனான ஒரு அரசன் கெடுப்பவர்கள் இல்லாவிட்டாலும் (தானே) கெட்டுப் போவான்.

பொ. ரை : இடித்துக் கூறி அறிவு சொல்லும் பெரியாரைத் துணை கொள்ளாத பாதுகாப்பற்ற அரசன் கெடுப்பவர்கள் இல்லாவிடினும் தானே கெட்டுப் போவான்.

வி - ம் : பெரியாரைத் துணை கொள்ளாமல் இருப்பதே கேடு தரும் காரணம். 'மன்னவன்' என்ற பதத்தினால் இது அரசனுக்கு மட்டும் சொல்லப்பட்டதாக எண்ணிவிடக் கூடாது. 'அரசியல்' என்பதற்காக இடையிடையே மன்னவனையும் குறிப்பிட்டுச் சொன்னாலும் இது எல்லாருக்கும் ஒத்ததுதான்.

பெரியவர்களுடைய நட்பு வியாபாரத்துக்கு மூலதனம் போல் ஒருவனுடைய வாழ்க்கைக்கு மூலபலம் தருவது :

449. முதலிலார்க் கூதிய மில்லை மதலையாஞ்
சார்பிலார்க் கில்லை நிலை.

ப. ரை : முதல் இலார்க்கு ஊதியம் இல்லை; மதலையாம் சார்பு இலார்க்கு நிலைஇல்லை = முதல் பணம் இல்லாதவர்களுக்கு

ஆதாயம் இல்லை; குழந்தையாகத் தம்மை அணைப்பவர்கள் இல்லாதவர்களுக்கு நல்ல நிலைமை இருக்காது.

பொ. ரை : மூலதனம் இல்லாத வியாபாரிக்கு இலாபம் இல்லை; அதுபோல, குழந்தையை அணைத்து அறிவு சொல்வது போலத் தம்மை ஆதரித்து அறிவு சொல்லக் கூடிய பெரியார்களுடைய துணையில்லாதவர்களுக்கு நல்ல நிலைமை இருக்காது.

வி - ம் : ஒரு குழந்தையை அதன் தாயானவள் அணைத்து அன்பு செய்து அவசியமானபோதெல்லாம் கண்டித்து அறிவு சொல்லி, குழந்தையின் சேமத்தில் எப்போதும் கண்ணுங் கருத்துமாகக் காவல் புரிவாள். அந்தக் குழந்தையும் தனக்கு ஒரு குறைவந்த போதெல்லாம் தாயிடத்தில் ஓடி ஆறுதலடையும். அப்படிப் போல, பெரியார்கள் தம்மைத் துணை கொண்டவர்களுடைய சேமத்தில் எப்போதும் நாட்டமுள்ளவர்களாக இருப்பார்கள். துணை கொண்டவர்களும் தமக்கு ஒரு துன்பம் வந்தபோதெல்லாம் அப்பெரியாரிடம் போய்ப் பரிகாரம் தேடிக் கொள்வார்கள். அதுதான் 'மதலையாம் சார்பு'. வியாபாரிக்கு நஷ்டம் வந்தால் மூலதனம் காப்பாற்றும். குழந்தைக்குத் துன்பம் வந்தால் தாய் அணைப்பாள். அப்படி நமக்குக் கஷ்டம் வந்தால் பெரியவர்கள் துணை கைகொடுக்கும்.

அப்படிப்பட்ட பெரியாரைத் துணை கொண்டு, அவர்களுடைய தொடர்பு விட்டுப் போகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டும் :

> **450. பல்லார் பகைகொளலிற் பத்தடுத்த தீமைத்தே**
> **நல்லார் தொடர்கை விடல்.**

ப. ரை : நல்லார் தொடர்கை விடல் பல்லார் பகை கொளலில் பத்தடுத்த தீமைத்தே = நல்லவர்கள் தொடர்பு விட்டுப் போவது பல பேரைப் பகைவராக்கிக் கொள்வதைக் காட்டிலும் பத்துமடங்கு தீமை உண்டாக்கும்.

பொ. ரை : தமக்குத் துணைவராக உள்ள பெரியார்களாகிய நல்லவர்களுடைய உறவு விட்டுப் போகும்படி நடந்து கொள்வது, பல பேரைப் பகைத்துக் கொள்ளுவதைக் காட்டிலும் பத்து மடங்கு தீமை உண்டாக்கக் கூடியது.

வி - ம் : 'தொடர் கைவிடல்' என்பது நாமாக விட்டு விடுவதோ அல்லது அவர்கள் நம்மை விட்டுவிடும்படி நாம் நடந்து கொள்வதோ ஆகிய இரண்டையும் குறிப்பது. 'பத்தடுத்த'

என்பது சரியாகப் பத்துப்பங்கு என்பதற்கல்ல. 'பல்லார்' 'பத்தடுத்த' என்பதெல்லாம் வெறும் மிகுதியைக் குறிப்பதற்கே கூறப்பட்டவை.

அதி. 46—சிற்றினஞ்சேராமை

[சிறு + இனம் + சேராமை = சிற்றினஞ் சேராமை. அறிவிலும் குணத்திலும் ஒழுக்கத்திலும் இழிவானவர்களே சிற்றினத்தார். அவர்களுடன் சேராமல் இருக்க வேண்டும். 'தக்கார் இனம்' என்று முன் சொல்லப்பட்டபடி பெரிய இனமாகிய பெரியாரைத் தேடி அவர்களுடைய நட்பை அடைய வேண்டும். அதனால் பல நன்மைகள் வரும். பெரிய இனத்தோடு சேருவதில் எவ்வளவு கவனம் செலுத்த வேண்டுமோ அவ்வளவு கவனத்தோடு சிறு இனத்துடன் சேர்ந்துவிடாமல் இருக்க வேண்டும். ஏனெனில் சிற்றினச் சேர்க்கையால் பல தீமைகள் வரும் என்பது எச்சரிக்கை.]

451. சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான்
சுற்றமாச் சூழ்ந்து விடும்.

ப. ரை: பெருமை சிற்றினம் அஞ்சும்; சிறுமைதான் சுற்றமா சூழ்ந்துவிடும் = பெருந்தன்மை சிறிய இனத்தவரை அஞ்சும்; சிறிய தன்மைதான் (அவர்களை) சுற்றத்தாராக சுற்றிக் கொள்ளும்.

பொ. ரை: பெருந்தன்மை சிற்றினத்தவரை அஞ்சி விலகுவது; சிறு தன்மைதான் அவர்களைத் தன் சுற்றத்தாராகச் சுற்றிக் கொள்வது.

வி - ம்: பெருமையடைய விரும்புகிறவர்கள் தீயகுணமுள்ள சிற்றினத்தைச் சேர அஞ்சி விலகி விடவேண்டும்; சிறுமையடைய அஞ்சாதவர்கள்தாம் அவர்களை உறவினர்களாகக் கொண்டு சுற்றிக் கொள்ளுவார்கள் - என்பது கருத்து. 'சூழ்ந்து விடும்' என்பது 'நெருங்கிச் சுற்றிக் கொள்ளும்' என்பது பொருள். 'சூழ்தல்' என்ற பதத்துக்கு வேறு பொருளான 'எண்ணுதல்' அல்லது 'ஆராய்தல்' என்ற பொருள் இங்கே பொருந்தாது.

சிற்றினத்தைச் சேரக்கூடாது என்பது எதற்காகவென்றால்:

452. நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
கினத்தியல்ப தாகு மறிவு.

ப, ரை: நீர் நிலத்து இயல்பால் திரிந்து அற்றாகும்; மாந்தர்க்கு அறிவு இனத்து இயல்பது ஆகும் = தண்ணீரானது (அது ஊறுகின்ற) நிலத்தின் தன்மையினால் (தன்னுடைய தன்மையில்) மாறுதலடைந்து (அந்த நிலத்தின்) தன்மையைப் போல் ஆகிவிடும்; (அது போல) மனிதர்களுக்கு (அவர்கள் பழகுகின்ற) இனத்தின் தன்மையதாக அவர்களுடைய அறிவு மாறும்.

பொ. ரை: தண்ணீரானது அது சேர்ந்திருக்கிற நிலத்தின் தன்மையினால் தன்னுடைய இயல்பான தன்மையில் மாறுதலடைந்து அந்தந்த நிலத்திலுள்ள மண்ணின் சாரத்துக்குத் தகுந்தபடி இருக்கும்; அதுபோல மனிதர்களுக்கு அவர்கள் சேர்ந்து பழகுகின்றவர்களுடைய குணத்துக்குத் தக்கபடி தம்முடைய இயல்பான அறிவும் மாறிவிடும்.

வி - ம்: (இயற்கையாகத் தண்ணீருக்கு மணம், நிறம், சுவை, நோயுண்டாக்கும் தன்மை முதலிய எதுவும் இல்லை. ஆனால் அது எந்த மண்ணோடு சேர்ந்திருக்கிறதோ அந்த மண்ணுக்குத் தகுந்தபடி மணம், நிறம், சுவை, நோயுண்டாக்கும் அசுத்தம் முதலியவை அதனுடன் கலந்து தண்ணீரின் இயல்பு மாறிவிடுகிறது. அதைப் போல மனிதர்கள் எந்த இனத்தோடு நெருங்கிப் பழகுகின்றார்களோ அந்த இனத்தின் வழக்க ஒழுக்கங்களுக்குத் தகுந்தபடி அவர்களுடைய இயல்பான குணங்களும் மாறிவிடும். சுத்தமான தண்ணீர் அது சேர்ந்துள்ள நிலத்தின் இயல்பால் குடித்தாலும் அல்லது குளித்தாலும் நோயுண்டாக்கக் கூடியதாக கெட்டுப் போகும். அதைப் போல் சிற்றினத்தாருடன் சேர்ந்த நல்லவர்களும் பிறருக்குத் தீங்கு செய்கிறவர்களாக மாறிவிடக் கூடும்.

நம்முடைய மனம் சரியாக இருந்தால் நாம் யாரோடு சேர்ந்தால் என்ன என்று எண்ணிவிடக் கூடாது. ஏனெனில்:

453. மனத்தானா மாந்தர்க் குணர்ச்சி யினத்தானா
மின்னா னெனப்படுஞ் சொல்)

ப: ரை: மாந்தர்க்கு உணர்ச்சி மனத்தான் ஆம்; இன்னான் எனப்படும் சொல் இனத்தான் ஆம் = மனிதர்களுக்கு உணருந்தன்மை மனத்தினால்தான் உண்டாகிறது; (ஆனால்) இவன் இப்படிப்பட்டவன் என்று உலகத்தாரால் மதிக்கப்படுவது (அவனவன் பழகுகின்ற) இனத்தினால் உண்டாவது.

பொ. ரை: மனிதர்களுக்கு அறிவு (அவரவர்களுடைய) மனதினால் உண்டாகிறது தான். (ஆனால்) இவன் இப்படிப்பட்ட

வன் என்று ஊரார் சொல்லும் சொல் (அவனவன் பழகு கின்ற) இனத்தினால் தான் உண்டாகும்.

(வி-ம்: ஒவ்வொருவருக்கும் அவருடைய அறிவு அவருடைய மனதைச் சேர்ந்ததுதான். ஆனால் அவருக்குப் பிறர் கொடுக்கிற மதிப்பும் மதிப்பில்லாமையும் அவர் எந்த இனத்தோடு நெருங்கிப் பழகுகின்றாரோ அதை யொட்டித்தான் உண்டாகும். ஏன் என்றால் அவருடைய மனப்பண்பை மற்றவர்கள் அறியமுடியாது. ஆனால், அவர் சேர்ந்துள்ள இனப்பண்பு எல்லாருக்கும் தெரியும். அதனால் நல்ல மனமுடைய ஒருவர் கெட்ட செய்கைகளுடையவர்களோடு சேர்ந்திருந்தால் அவரையும் அந்தக் கெட்டவர்களோடு சேர்த்துத்தான் உலகம் மதிப்பிடும். அதேபோல் கெட்ட மனமுடைய ஒருவர் நல்ல செய்கைகள் உள்ளவர்களோடு சேர்ந்தே இருந்தால் அவரையும் நல்லவராகத்தான் உலகம் மதிக்கும்.

ஒருவருடைய மனதைச் சேர்ந்ததான சொந்த அறிவு எப்படிப்பட்டதானாலும் அதை அவர் சேர்ந்திருக்கும் இனம் சிறுகச் சிறுக மாற்றிவிடும்?

454. மனத்து ளதுபோலக் காட்டி யொருவற்
கினத்துள தாகு மறிவு.

ப. ரை: ஒருவற்கு அறிவு மனத்து உளது போல காட்டி இனத்து உளது ஆகும் = ஒருவனுக்கு அவனுடைய அறிவு தன்னுடைய மனத்திலுள்ள சொந்த அறிவு போலவே நினைக்கச் செய்து (கடைசியில் அவன் பழகும்) இனத்தின் அறிவாகவே முடியும்.

பொ. ரை: ஒருவன் தான் செய்கிறதெல்லாம் தன் மனதிலுள்ள சொந்த அறிவினால் செய்வதாகவே எண்ணும்படி ஏமாற்றிக்கொண்டேயிருந்து கடைசியில் அது அவனுடைய சேர்க்கையின் அறிவாகவே முடியும்.

வி-ம்: ஒருவன் தான் செய்வதெல்லாம் தன்னுடைய சொந்த அறிவினால் செய்வதாகவே எண்ணிக் கொண்டாலும் சிறுகச் சிறுக அவனுடைய சொந்த அறிவு மாறுபட்டுக் கடைசியில் அது அவனுடைய சகவாசத்தின் அறிவாகத்தான் இருக்கும். 'காட்டி' என்பதற்கு 'ஏமாற்றி' அல்லது 'மயக்கி' என்பது பொருள்.

இனத்தின் அறிவினால் ஒருவருடைய மனத்தின் அறிவு மாறுபட்டுப் போகும். ஆனதனால்:

455. மனந்தூய்மை செய்வினை தூய்மை யிரண்டு
மினந்தூய்மை தூவா வரும்.

ப. ரை: மனம் தூய்மை செய்வினை தூய்மை இரண்டும் இனம் தூய்மை தூவாவரும் = மனம் குற்றமற்றதாக இருப்பதும், செய்கை குற்றமற்றதாக இருப்பதும் ஆகிய இரண்டும் (சேர்க்கையான) இனம் குற்றமற்றதாக இருப்பதைப் பற்றியதாகத்தான் இருக்கும்.

பொ. ரை: ஒருவனுடைய மனம் சுத்தமாக இருப்பதும் செய்கை சுத்தமாக இருப்பதும் ஆகிய இரண்டும் அவன் கூடிப் பழகுகின்ற இனம் சுத்தமாக இருந்தால்தான் கிடைக்கும்.

வி-ம்: 'தூவா வரும்' என்பதற்கு 'காரணமாக வரும்' என்பது பொருள்.

நெருங்கிச் சகவாசம் செய்கிற இனம் தூயதாக இல்லாவிட்டாலும் தம்முடைய மனம் கெடாமல் இருக்கிறவர்களும் உண்டு என்றாலும் அது காரியங்களுக்குப் பயனற்றது. எப்படியென்றால்:

456. மனந்தூயார்க் கெச்சநன் றாகு மினந்தூயார்க்
கில்லைநன் றாகா வினை.

ப. ரை: மனம் தூயார்க்கு எச்சம் நன்று ஆகும்; இனம் தூயார்க்கு நன்று ஆகா வினை இல்லை = (இனம் சுத்தமில்லாமல்) மனம் மட்டும் சுத்தமாக இருப்பவர்களுக்கு அதனால் பின்னால் பெறக்கூடிய மிச்சங்கள் (பயன்) நல்லதாக இருக்கும்; (ஆனால் மனம் சுத்தமாக இல்லாவிட்டாலும்) இனம் சுத்தமாக உள்ளவர்களுக்கு நன்றாக முடியாத காரியமே இல்லை.

பொ. ரை: (இனம் சுத்தமானதாக இல்லாமலும்) மனம் மட்டும் சுத்தமாகவே இருக்கக் கூடியவர்களுக்கு அதனால் பின்னால் பெறக்கூடிய பலன்கள் நல்லனவாகவே இருக்கும். (ஆனால் மனம் சுத்தமாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் சகவாசம் செய்கிற) இனம் சுத்தமானதாக உள்ளவர்களுக்கு நன்மையாக முடியாத காரியமே இல்லை.

வி-ம்: மனம் மட்டும் குற்றமற்றதாக இருப்பவர்களுக்கு அதனால் பின்னால் நன்மைகள் உண்டு. ஆனால் அவர்கள் சேர்ந்துள்ள இனம் குற்றமுள்ளதாக இருப்பதால் அவர்களுக்கு செல்வாக்கு இருக்காது. அதனால் அவர்கள் காரியங்களில் வெற்றி பெறுவது கடினம். ஆனால் மனம் குற்றமுள்ளவர்களாக இருக்கிறவர்களானாலும் அவர்கள் சேர்ந்துள்ள இனம் குற்றமற்றதாக இருந்தால் அவர்கள் செல்வாக்குள்ளவர்களாக எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியும். 'எச்சம்' என்பதற்கு 'பின்னால் பெறக்கூடிய மிச்சம்' என்பது தான்

நேரான பொருள். அதிலிருந்துதான் சிற்சில இடங்களில் 'எச்சம்' என்பதற்கு 'பெற்று மிச்சமாக விட்டுப் போகிற மக்கட் பேறு' என்று பொருள் கொள்வது. 'எச்சம்' என்பதற்கு 'மக்கட் பேறு' என்பது நேரான பொருள் அல்ல. ஆதலால் 'எச்சம்' என்ற சொல் வருகிற எல்லா இடங்களிலும் 'மக்கட் பேறு' என்று பொருள் கொள்வது பொருத்தமற்றது.

ஒருவன் நெருங்கிப் பழகுகின்ற இனம் சுத்தமுள்ளதாக இல்லாவிட்டாலும் அவனுடைய மனம் மட்டும் சுத்தமாகவே இருந்தால் அதனால் அவனுக்கு (எச்சம் நன்றாகும்) பின்னால் நல்ல பலன் உண்டு என்று சொல்லப்படுவது என்னவென்றால் :

457. மனநல மன்னுயிர்க் காக்க மினநல
மெல்லாப் புகழுந் தரும்.

ப. ரை: மனநலம் மன் உயிர்க்கு ஆக்கம்; இனநலம் எல்லா புகழும் தரும் = (இனம் நல்லதல்லாமலும் ஒருவன்) மனம் மட்டும் நல்லதாக இருந்தால் (அது) அழிவற்ற உயிருக்கு வலிமை; (ஆனால்) இனம் நல்லதாக இருந்தால் எல்லாச் சிறப்புகளையும் தரும்.

பொ. ரை: (இனம் நல்லதாக இல்லாமலும்) மனம் மட்டும் நல்லதாக இருந்தால் அது ஆன்மாவுக்கு பலம்; (ஆனால் மனம் நல்லதாக இருந்தாலும் இல்லாவிட்டாலும் ஒருவன் சேர்ந்துள்ள) இனம் நல்லதாக இருந்தால் எல்லாச் சிறப்புகளும் உண்டாகும்.

வி - ம்: மனம் நல்லதாக இருப்பதனால் ஆன்ம சக்திகள் பெறுவதற்கு மட்டும் உதவும். ஆனால் அத்துடன் இனநலமும் இருந்தால் வாழ்க்கை பல சிறப்புகள் உள்ளதாகும்.

ஆகையினால் :

458. மனநல நன்குடைய ராயினுஞ் சான்றோர்க்
கினநல மேமாப் புடைத்து.

ப. ரை: மனநலம் நன்கு உடையர் ஆயினும் சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து = மனத்தூய்மை நன்றாக உள்ளவர்களாக இருக்கும் மேலோர்களுக்கும் கூட (அவர்கள் பழகும்) இனம் நல்லதாக இருப்பது பாதுகாப்புள்ளதாகும்.

பொ. ரை; மனச் சுத்தம் நன்றாக அமையப்பெற்றவர்களாக இருக்கும் மேலான குணமுள்ளவர்களுக்கும் கூட (அவர்கள்

சகவாசம் செய்கிற) இனம் சுத்தமுள்ளதாக இருப்பது (அவர்களுடைய மனநலத்துக்கும் சான்றாண்மைக்கும்) பாதுகாப்பு உள்ளதாகும்.

வி-ம் : மனநலமும் சான்றாண்மை எனப்படும் மேலான குணமும் கெடாமல் இருப்பதற்குக்கூட இனநலம் காவலாக இருக்கும். 'ஏமாப்பு' என்பது 'காவல்'.

இந்தப் பிறப்பில் சிற்றினம் சேராமல் நன்றாக வாழ வேண்டும், புகழ்பெறவேண்டும் என்ற இம்மை இன்பங்களைக் கருதாமல், மறுமையைப் பற்றியும் பேரின்பத்தைப் பற்றியும் கருதுகிறவர்களுக்கும் கூட :

459. மனநலத்தி னாகு மறுமைமற் றஃது
மினநலத்தி னேமாப் புடைத்து.

ப.ரை : மனநலத்தின் ஆகும் மறுமை; மற்று அஃதும் இனநலத்தின் ஏமாப்பு உடைத்து = மனம் நல்லதாக இருந்தால் மறுபிறப்பு நல்லதாகும்; ஆனால் அதுவும் இனம் நல்லதாக இருப்பதனால் வலிமை உடையதாகும்.

பொ. ரை : மனம் நல்லதாக இருந்தால் மறுபிறப்பு நல்லதாக இருக்கும்; ஆனால் அதுவும்கூட இனம் நல்லதாக இருந்தால் தான் உறுதிப்படும்.

வி-ம் : ஒருவன் மறுபிறப்பு நல்லதாக அடைவதற்கு மனம் மட்டும் நல்லதாக இருந்தால் போதும். ஆனால் அவனுடைய சேர்க்கை இனம் நல்லதாக இருந்தால்தான் அதுவும் நிச்சயமாகும். ஏனெனில் சகவாசம் நல்லதாக இருந்தால் தான் உயிர் பிரிகின்ற காலத்திலும் மனம் நன்றாகவே இருக்கக் காரணம் உண்டு. கடைசி காலத்தில் நல்லமனம் இருந்தால் தான் நல்ல மறுபிறப்பு கிடைக்கும். சிற்றினத்தின் சகவாசம் உள்ளவனுக்கு அந்திய காலத்திலும் மனம் சுத்தமாக இருப்பது கடினம். நல்ல சகவாசமுள்ளவனுக்கு அவ்வளவு கடினமல்ல.

இம்மைக்கானாலும் சரி மறுமைக்கானாலும் சரி :

460. நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி
னல்லற் படுப்பதூஉ மில்.

ப. ரை : நல் இனத்தின் ஊங்கும் துணை இல்லை; தீ இனத்தின் (ஊங்கும்) அல்லல் படுப்பதூஉம் இல் = நல்ல இனத்தைக்

காட்டிலும் சிறந்த துணையும் இல்லை; தீய இனத்தைக் காட்டிலும் மிகுந்த துன்பம் தருவதுவும் இல்லை.

பொ. ரை: நல்ல சகவாசத்தைக் காட்டிலும் (இன்பம் தரக்கூடிய) துணையும் இல்லை; சிற்றினச் சகவாசத்தைக் காட்டிலும் துன்பம் தரக்கூடிய பகையும் இல்லை. ஆதலால் சிற்றினம் சேராமை வேண்டும்.

அதி. 47—தெரிந்துசெயல்வகை

[ஒவ்வொருவரும் தாம் தொடங்கப் போகும் எந்த வேலையையும் நன்றாக ஆராய்ந்து, அதன் பலாபலன்களைத் தெரிந்து கொண்டு, அதன் பிறகுதான் அந்த வேலையில் இறங்க வேண்டும் என்பதையும் அதன் வகையைச் சேர்ந்த அறிவையும் சொல்லுவது 'தெரிந்து செயல் வகை'.]

461. அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு
மூதியமுஞ் சூழ்ந்து செயல்.

ப. ரை: அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல் = (ஒரு வேலையைத் தொடங்குமுன்) அதற்காகும் செலவுகளையும், அதனால் ஆகக் கூடிய நன்மைகளையும் அவ்வேலை முடிந்தபின் அதன் வழியாகப் பின்னால் வரக் கூடிய பயனையும் ஆராய்ந்து செய்ய வேண்டும்.

பொ. ரை: ஒரு வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னால் அதற்குச் செய்ய வேண்டிய செலவுகளையும். அந்த வேலையினால் அடையக் கூடிய நன்மையையும் அந்தவேலை முடிந்தபின் அதன் வழியாகப் பின்னால் வரக்கூடிய பலாபலன்களையும் ஆராய்ந்து கொண்டு அதன்பின் அக்காரியத்தில் இறங்க வேண்டும்.

வி - ம்: 'வழிபயக்கும் ஊதியம்' என்பது, ஒரு காரியத்தை உடனே வெற்றிகரமாக முடித்து விட்டாலும் பின்னால் அதன் வழியாகத் தீமை வரக்கூடியதாகவும் இருக்கலாம். அதனால் பின்னாலும் ஆதாயமுள்ளதாகவே இருக்குமா என்பதையும் இப்போதே ஆராய வேண்டும் என்பதைக் குறிப்பது.

அந்த ஆராய்ச்சிக்கான ஆலோசனைகளை ஒருவன் தான் மட்டும் தனியே செய்து தீர்மானித்து விடுவது போதாது:

462. தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும்பொருள் யாதொன்று மில்.

ப. ரை: தெரிந்த இனத்தோடு தேர்ந்து எண்ணி செய்வார்க்கு அரும் பொருள் யாது ஒன்றும் இல் = (எந்தத் தொழிலையும், அந்தத் தொழிலை) தெரிந்த இனமானவர்களோடு, அவர்களைத் தேடியடைந்து, அவர்களுடன் கலந்து எண்ணி (அதன் பிறகு) செய்கிறவர்களுக்கு முடியாத வேலை யாதொன்றும் இல்லை.

பொ. ரை: (எந்த வேலையை ஆரம்பிப்பதாக இருந்தாலும் அந்த வேலையைப் பற்றி) தெரிந்தவர்களான மனிதர்களைத் தேடியடைந்து அவர்களுடன் ஆலோசனை செய்து. அதன்பின் அதைச் செய்கிறவர்களுக்கு. முடியாத காரியம் ஏதொன்றும் இல்லை.

வி-ம்: 'தேர்ந் தெண்ணல்' என்பது 'தேடிப் பிடித்து அவருடன் எண்ணுதல்'. அதாவது 'தெரிந்த இனத்தை' தேர்ந்தெடுத்து அவர்களுடன் ஆலோசித்தல். ஏன் எனில் தெரிந்தவர்களாகச் சொல்லிக் கொள்ளுகிற எல்லாரும் சரியாகத் தெரிந்தவர்களாக இருக்க மாட்டார்கள். அதனால் அவர்களுக்குள்ளும் தேர்ந்தெடுத்து ஆலோசிக்க வேண்டும்.

அப்படித் தெரிந்தவர்களோடு ஆலோசிக்காமல் எந்தத் தொழிலையும் அவசரப்பட்டு ஆரம்பித்துவிடக் கூடாது:

**463. ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை
ஊக்கா ரறிவுடை யார்.**

ப. ரை: அறிவுடையார் ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை ஊக்கார் = அறிவுள்ளவர்கள் ஆதாயத்தைக் கருதி முதலை இழந்துவிடக்கூடிய வேலையைத் தொடங்க மாட்டார்கள்.

பொ. ரை: அறிவுடையவர்கள் அதிக செல்வத்துக்கு ஆசைப் பட்டு உள்ளதையும் இழந்து விடக்கூடிய காரியத்தை அவசரப்பட்டு ஆரம்பித்து விடமாட்டார்கள்.

வி-ம்: 'ஊக்கார்' என்பது 'உணர்ச்சி வேகத்தில் அவசரப் பட்டு செய்து விடமாட்டார்கள்' என்ற பொருளுடையது.

எந்தக் காரியத்தையும் உணர்ச்சி வேகத்தில் அவசரப் பட்டு ஆரம்பித்துவிடக் கூடாது என்பது மட்டுமல்ல; அத்துடன்:

**464. தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு
மேதப்பா டஞ்சு பவர்.**

ப. ரை: இளிவு என்னும் ஏதப்பாடு அஞ்சுபவர் தெளிவு இல்லதனை தொடங்கார் = ஏமாளித்தனம் என்ற குற்றத்துக்கு அஞ்சுகிறவர்கள் (தம் அறிவுக்குத்) தெளிவாகத் தெரியாத வேலையைத் தொடங்க மாட்டார்கள்.

பொ. ரை: 'ஏமாந்து போனவன்' என்ற கெட்ட பெயர் வாங்கிவிடக் கூடாதென்று பயப்படுகிறவர் தம் அறிவுக்குத் தெளிவாக விளங்காத எந்த வேலையையும் (பிறர் சொல்வதை மட்டும் கேட்டு) ஆரம்பித்துவிட மாட்டார்கள்.

வி - ம்: 'இளிவு' என்பது 'இளிச்சவாயன்' என்ற கருத்துடையது. 'அவன் பேச்சைக் கேட்டு நஷ்டமடைந்தான்' 'இவன் பேச்சைக் கேட்டு நஷ்டமடைந்தான்' என்று பிறர் இளித்துப் பேசுவார்களே என்ற அச்சமுள்ளவர்கள் தமக்கே தெளிவாகத் தெரியாத காரியத்தில் இறங்கமாட்டார்கள்.

ஆகையினால் எந்தக் காரியத்தைத் தொடங்குவதானாலும்:

465. வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு.

ப. ரை: வகை அற சூழாது எழுதல் பகைவரை பாத்தி படுப்பதோர் ஆறு = (செய்ய விரும்புகிற காரியத்தைப் பற்றிய) வகைகளைத் திர ஆராயாமல் (செய்யத்) தொடங்குவது பகைவர்களைப் பாத்தி கட்டிப் பயிர் செய்வதற்கு ஒரு வழி.

பொ. ரை: செய்ய நினைக்கிற காரியத்தைப் பற்றிய எல்லா நுணுக்கங்களையும் திர ஆராயாமல் செய்யத் தொடங்குவது பகைவர்களைப் பாத்தி கட்டிப் பயிர் செய்வதற்கான ஒரு வழி.

வி - ம்: 'பகைவர்' என்பதற்கு இங்கே பகைவரான மனிதர்கள் என்பது மட்டும் பொருளல்ல. இடையூறு செய்யக் கூடிய மனிதர்களும் வேறு இடையூறுகளும் சேர்ந்தது. திர ஆலோசிக்காமல் ஒரு காரியத்தைத் தொடங்கிவிட்டால் பல இடையூறுகள் உற்பத்தியாகும் என்பதுதான் கருத்து. பகைவர்களைப் பற்றியும் அவர்களோடு செய்ய வேண்டிய போரைப் பற்றியும் இங்கே பேச்சில்லை. 'அரசியலில்' சொல்லப்பட்டிருப்பது என்பதற்காக அப்படிப் பொருள் செய்யக் கூடாது. 'எழுதல்' என்பதற்கு இங்கே 'படையெடுத்தல்' என்பது பொருளல்ல. 'தொடங்குதல்' என்பதுதான் பொருத்தமான பொருள். இது படையெடுப்புக்கும் ஆகும்.

'வகையறச் சூழ்வது' என்ற ஆராய்ச்சி என்னவென்றால்:

466. செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்.

ப. ரை: செய்தக்க அல்ல செய கெடும் செய்தக்க செய்யாமை யானும் கெடும் = (உடனே) செய்யத் தகாத செயல்களைச் செய்வதாலும் கெடுதி உண்டு; (உடனே) செய்ய வேண்டிய செயல்களைச் செய்யாமல் இருந்து விடுவதனாலும் கெடுதி உண்டு.

பொ. ரை: செய்யத் தகாத காரியத்தை நினைத்த உடனே செய்வதாலும் தீமை உண்டு; உடனே செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யாமல் ஒத்திப்போடுவதாலும் தீமை உண்டாகும்.

வி - ம்: வகையற ஆராயாமல் ஒரு காரியத்தைத் தொடங்கி விடக் கூடாது என்று முன்னால் சொன்னதைத் தொடர்ந்து அப்படி ஆராய்ந்து பார்த்ததில் உடனே செய்யத் தகாது என்று தெரிந்தால் தொடங்காமல் விட்டுவிட வேண்டும். செய்யத் தகுந்தது என்று தெரிந்தால் உடனே தொடங்கி செய்துவிட வேண்டும் என்பது கருத்து.

வகையற ஆராயாமல் எந்தக் காரியத்தையும் தொடங்கி விடக் கூடாது; ஆகையினால்:

467. எண்ணித் துணிக கருமந் துணிந்தபி
னெண்ணுவ மென்ப திழுக்கு.

ப. ரை: எண்ணி கருமம் துணிக; துணிந்தபின் எண்ணுவம் என்பது இழுக்கு = ஆராய்ந்தபின் காரியத்தைத் தொடங்க வேண்டும்; தொடங்கிவிட்ட பிறகு ஆராயலாம் என்பது குற்றம்.

பொ. ரை: (வகையற) ஆராய்ந்த பின்புதான் காரியத்தை ஆரம்பிக்க வேண்டும்; ஆரம்பித்துவிட்டு ஆராய்ந்து கொள்ளலாம் என்பது குற்றம்.

வி - ம்: உடனே செய்ய வேண்டிய காரியமா என்பதை ஆராய்ந்த பிறகுதான் அக்காரியத்தை ஆரம்பிக்க வேண்டும். ஆரம்பித்துவிட்டு நடக்க நடக்க ஆராய்ந்து கொள்ளலாம் என்பது கூடாது.

உடனே செய்ய வேண்டிய காரியம் என்று தீர்மானித்த பின் அதை எப்படியாவது செய்து முடிக்க வேண்டும் என்பதற்கான வழிகளை மிகவும் வருந்தியாவது தேடிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால்:

468. ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று
போற்றினும் பொத்துப் படும்.

ப. ரை: ஆற்றின் வருந்தா வருத்தம் பலர் நின்று போற்றினும் பொத்து படும் = (காரியத்தைச் செய்து முடிக்கும்) வழியை (ஆராய்வதில்) வருந்தி முயலாமல் (காரியத்தைத் தொடங்கியபின் இடையில் வருகின்ற) துன்பங்களை பல துணைவர்கள் கூடி நின்று காத்தாலும் அந்தக் காரியம் பொத்தல் உள்ளதாகும்.

பொ. ரை: ஒரு காரியத்தைச் செய்து முடிக்கும் உபாயங்களை அக்காரியத்தை ஆரம்பிக்கு முன்னாலேயே வருந்தியாயினும் தேடிக் கொள்ளாமல் காரியத்தை ஆரம்பித்தபின் இடையில் வருகிற துன்பங்களை பல துணைவர்கள் சேர்ந்து நின்று தடுத்தாலும் அந்தக் காரியம் குறையுள்ளதாகத் தான் முடியும்.

வி - ம்: 'பொத்துப்படும்' என்பதற்கு 'பொத்தல் உள்ளதாகும்' என்பது பொருள். இங்கே 'குறையுள்ளதாகும்' என்ற கருத்தைத் தருவது.

ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டிய ஆலோசனைகளெல்லாம் பூர்த்தியாகி, அந்தக் காரியம் வெற்றி பெறும் என்று தெரிந்த பிறகும் அந்த வெற்றியினால் பிறருக்கு உண்டாகக் கூடிய நன்மை தீமைகளையும் அவர்களுடைய தராதரத்தையும் கூட ஆலோசிக்க வேண்டும். காரியம் வெற்றிகரமாக முடியும் என்பது மட்டும் போதாது. அதனால் பின் விளையக் கூடிய நன்மை தீமைகளையும் இப்போதே ஆலோசிக்க வேண்டும். அதைத்தான் இந்த அதிகாரத்தின் முதற் குறளில் 'வழிபயக்கும் ஊதியமும் சூழ்ந்து செயல்' என்று குறிப்பிட்டது:

469. நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர்
பண்பறிந் தாற்றாக் கடை.

ப. ரை: நன்று ஆற்றலுள்ளும் அவரவர் பண்பு அறிந்து ஆற்றாக்கடை தவறு உண்டு = (ஒரு காரியத்தை) நன்றாகச் செய்து முடிப்பதிலும் (அதனால் பாதிக்கப்படக் கூடிய) அவரவர்களுடைய தகுதியை அறிந்து செய்யாவிட்டால் அதுவும் குற்றமாகும்.

பொ. ரை: ஒரு காரியம் வெற்றியாக முடிவதாக இருந்தாலும் (அந்த வெற்றியால் பாதிக்கப்படக் கூடியவர்கள் இருந்தால்) அவரவர்களுடைய தகுதியைப் அறிந்து அதற்கேற்றபடி செய்யாவிட்டால் அதுவும் குற்றமாகும்.

வி-ம்: ஒரு காரியத்தைச் செய்யப் புகுந்தால் அந்தக் காரியத்தைச் செய்து முடிக்கத் துணை புரிந்தவர்களும் இருப்பார்கள்; இடையூறு செய்தவர்களும் இருப்பார்கள். காரியம் வெற்றியடைந்த பின் அந்த வெற்றி வெறியினால் துணை புரிந்தவர்களை அவரவர்கள் தகுதிக் கேற்ப பாராட்டாமலும் இடையூறு செய்தவர்களுக்கு அவரவர்கள் தகுதிக்கு மீறிய தண்டனை செய்வதாகவும் இருக்கக் கூடாது.

எதைச் செய்தாலும் அதனால் பழிவருமா என்பதைத்தான் சிறப்பாக ஆராய்ந்து செய்ய வேண்டும்:

470. எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு
கொள்ளாத கொள்ளா துலகு.

ப. ரை: எள்ளாத எண்ணி செயல் வேண்டும்; தம்மொடு கொள்ளாத உலகு கொள்ளாது = (பழியான காரியம் என்று உலகம்) இகழாதவற்றை ஆராய்ந்து (அதன் பிறகு) செய்ய வேண்டும்; தமக்கு ஒத்துக் கொள்ளாதவை உலகத்துக்கும் ஒத்துக் கொள்ளாதவை.

பொ. ரை: இதனால் இகழ்ச்சி வருமா என்பதை ஆராய்ந்து. உலகம் இகழாத காரியங்களைச் செய்ய வேண்டும்; மேலும் தமக்குத் தீங்கானவை என்று நாம் விலக்குகிற காரியங்கள் பிறருக்கும் தீங்கானவை என்று அவற்றை விலக்க வேண்டும்.

வி-ம்: செய்கின்ற காரியம் உலகத்தாரால் இகழப்படாததா என்பதை எண்ணிப் பார்த்துப் பின் அதைச் செய்ய வேண்டும். மேலும் தமக்குத் தீங்குள்ளவை என்று தாம் விலக்குகிற காரியங்களைத் தாம் பிறருக்குச் செய்தால் அவர்களுக்குத் தீங்கு வருமே என்பதையும் எண்ணி அப்படிப்பட்ட காரியங்களைச் செய்யாமல் விலக்க வேண்டும்.

அதி. 48—வலியறிதல்

['வலியறிதல்' என்பது 'வலிமையை அறிந்து கொள்ளுதல்'. ஒரு காரியத்தைத் தொடங்கு முன், அதைப்பற்றி அறிய வேண்டியவற்றையெல்லாம் ஆராய்ந்து தெரிந்து கொண்டபின்னும் அந்தக் காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றல் தனக்கு இருக்கிறதா என்று தன்னுடைய பலத்தையும் காரியத்தின் பலத்தையும் இடையூறுகளின் பலத்தையும் அளந்து அறிந்து கொள்ள வேண்டும். 'வலி' என்பது 'வலிமை'.]

**471. வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந்
துணைவலியுந் தூக்கிச் செயல்.**

ப. ரை: வினைவலியும் தன் வலியும் மாற்றான் வலியும் துணை வலியும் தூக்கி செயல் = (தான் செய்யக் கருதும்) காரியத்தின் வலிமையையும் (தனக்கும் எதிரிக்கும்) துணை வரக் கூடியவர்களுடைய வலிமையையும் சீர்தூக்கி (அளந்து அறிந்து கொண்டு) செய்யவேண்டும்.

பொ. ரை: (தான் செய்யக் கருதுகின்ற) வேலையின் கடினத்தையும் தனக்குள்ள சக்தியையும் (அந்த வேலையைக் கெடுக்கக் கூடிய எதிரி இருந்தால்) எதிரியின் பலத்தையும் (தனக்கும் எதிரிக்கும்) துணைவரக் கூடியவர்களுடைய பலத்தையும் நிறுத்து அளந்து கொண்டு (அதன்பிறகு அதைச்) செய்ய வேண்டும்.

அப்படி சீர்தூக்கிப் பார்த்து:

**472. ஒல்வ தறிவ தறிந்ததன் கட்டங்கிச்
செல்வார்க்குச் செல்லாத தில்.**

ப. ரை: ஒல்வது அறிவது; அறிந்ததன் கண் தங்கி செல்வார்க்கு செல்லாதது இல் = (தம்மால்) செய்ய முடியும் என்ற அளவை அறிந்து கொள்வது; அறிந்து கொண்ட அந்த அளவோடு நின்று கொண்டு (அதில்) இறங்குகின்றவர்களுக்கு முடியாதது ஒன்றுமில்லை.

பொ. ரை: (தம்முடைய சக்திக்கு) எவ்வளவு முடியும் என்பதை அறிந்து கொள்ள வேண்டும்; அப்படி அறிந்து கொண்ட அந்த அளவுக்குள் நின்று கொண்டு காரியத்தை நடத்துகின்றவர்களுக்கு நடக்காதது ஒன்றுமில்லை.

அப்படி அளந்து அறிந்து கொள்ளாமல்:

**473. உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.**

ப. ரை: தம் உடை வலி அறியார் ஊக்கத்தில் ஊக்கி இடைக்கண் முரிந்தார் பலர் = தம்முடைய வல்லமையை அளந்து அறிந்து கொள்ளாமல் (வெறும்) உள்ளக் கிளர்ச்சியினால் (ஒரு வேலையைத்) தொடங்கி இடையில் தோல்வி யடைந்தவர்கள் பலர்.

பொ. ரை: தம்முடைய சக்தியை அளந்து அறிந்து கொள்ளாமல் வெறும் ஆவேசத்தில் ஒரு காரியத்தை ஆரம்பித்து

(அதை முடிக்க முடியாமல்) இடையில் விட்டு கெட்டுப் போனவர்கள் உலகத்தில் பலராவர்.

வி - ம்: 'உடைத்தம்' என்பது 'தம்முடை' என்பதைத் திருப்பி வைத்ததுதான். 'முரிந்தார்' என்பதற்கு 'காரியத்தையும் முடிக்காமல் தாமும் கஷ்ட நஷ்டங்களால் கெட்டுப் போனவர்கள்' என்பது பொருள்.

ஆகையினால்:

474. அமைந்தாங் கொழுகா னளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்.

ப. ரை: அமைந்தாங்கு ஒழுகான் அளவு அறியான் தன்னை வியந்தான் விரைந்து கெடும் = (தனக்கு) அமைந்துள்ள அளவோடு செய்யாமல் (தன்னுடைய வல்லமையும் காரியத்தின் வலிமையுமாகியவற்றின்) அளவை அறிந்து கொள்ளாமல் (தன்னுடைய வல்லமையை மிகைபட மதிப்பிட்டு) தன்னைத் தானே புகழ்ந்து கொள்ளுகிறவன் விரைவில் கெட்டுப் போவான்.

பொ., ரை: தனக்கு அமைந்துள்ள சக்திக்குத் தகுந்தமட்டில் செய்யாமல் (தனக்குள்ள பலத்தையும் செய்யவேண்டிய காரியத்தின் பலத்தையும்) அளந்தறியாமல் (தன்னுடைய வல்லமையை அதிகமாக மதிப்பிட்டுக் கொண்டு) தன்னைத் தானே பெருமை பேசிக் கொள்ளுகிறவன் வெகு சீக்கிரத்தில் கெட்டுப் போவான்.

வி - ம்: 'ஒழுகான்' என்பதற்கு இங்கே 'செய்யான்' என்பது மட்டுந்தான் பொருள். 'தன்னை வியந்தான்' என்பதற்கு 'தன்னுடைய வல்லமையை மிகைபட எண்ணிப் பெருமை பேசிக் கொள்பவன்' என்பது பொருள்.

தனக்கு அமைந்துள்ள சக்திக்கு மீறிய காரியத்தைச் செய்வது எப்படிப்பட்டதென்றால்:

475. பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்.

ப. ரை: பீலிபெய் சாகாடும் அப்பண்டம் சால மிகுத்து பெயின் அச்சு இறும் = மயில் தோகையை ஏற்றிய வண்டியும் அந்த பண்டத்தை மிகவும், அதிகமாக ஏற்றினால் அச்சு முரிந்துவிடும்.

பொ. ரை: மயில் தோகையை பாரமேற்றிய வண்டியானாலும் அந்த மயில்தோகையை அளவுக்கு மீறி வண்டியில் ஏற்றினால் அதன் அச்சு ஒடிந்து போகும்.

வி-ம்: 'பீலி' என்பது 'மயிலிறகு'. 'சாகாடு' என்பது வண்டி. மயிலிறகு வெகு இலேசானது. அதைக்கூட அளவுக்கு மீறி பாரமேற்றினால் வண்டியின் அச்சு ஒடிந்துபோகும்.

தன்னுடைய சக்தியின் அளவைக் கடந்தால் அபாயம் உண்டு:

476. நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும்.

ப. ரை: நுனி கொம்பர் ஏறினார் அஃது இறந்து ஊக்கின உயிர்க்கு இறுதி ஆகிவிடும் = (ஒரு மரத்தின்) நுனிக் கிளைக்கு ஏறினவர்கள் அதைக் கடந்து இன்னும் ஏற முயன்றால் உயிருக்கு முடிவு வந்து விடும்.

பொ. ரை: ஒரு மரத்தின் நுனிக் கொம்புக்கு ஏறினவர்கள் அதைக் கடந்து பின்னும் ஏற முயன்றால் உயிருக்கு முடிவு வந்து விடும்.

வி-ம்: 'இறந்து' என்பதற்கு 'கடந்து' என்பது பொருள். 'ஊக்குதல்' என்பது 'முயலுதல்'.

எந்தக் காரியத்தையும் ஒருவன் தன்னுடைய சக்திக்கு மீறிச் செய்தால் கேடுண்டு; அதனால் தானம் செய்வதிலும் கூட தன்னுடைய தகுதிக்கு மீறி செய்யக்கூடாது:

477. ஆற்றி னளவறிந் தீக வதுபொருள்
போற்றி வழங்கு நெறி.

ப. ரை: ஆற்றின் அளவு அறிந்து ஈக: அது பொருள் போற்றி வழங்கும் நெறி = (தானம் கொடுப்பதிலும் உன்னுடைய) ஆற்றலின் அளவை அறிந்து கொடு; அப்படிச் செய்வது பொருளைக் காத்துச் செலவு செய்யும் வழி.

பொ. ரை: (தானம் கொடுப்பதிலும்) உன்னுடைய பொருளாதாரத்தின் அளவை அறிந்து (அதற்குத் தகுந்தபடி) கொடு: அதுதான் செல்வத்தைப் பாதுகாத்துப் பயன்படுத்திக் கொள்ளும் வழி.

ஏனென்றால் வருவாய்க்கு மிஞ்சி செலவு செய்யக்கூடாது:

**478. ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை.**

ப. ரை: ஆகு ஆறு அளவு இட்டிதாயினும் போகு ஆறு அகலாக் கடை கேடில்லை = (பொருள்) ஆகின்ற வழி குறுகலாக இருந்தாலும் (அது) போகின்ற வழி (ஆகின்ற வழியை விட) அகலமாகாமல் இருந்தால் கெடுதி இல்லை.

பொ. ரை: ஒருவனுடைய வரும்படி குறைவாக இருந்தாலும் (பாதகமில்லை) செலவு மட்டும் வரவுக்கு மிஞ்சாமல் இருந்தால் துன்பம் வராது.

வி-ம்: வரவுக்கு மிஞ்சி செலவு செய்கிறவனுக்குத் துன்பம் வந்தே தீரும். 'இட்டிது' என்பது 'குறுகலானது'.

தன்னுடைய சக்திக்கு மீறிய வாழ்க்கை நடத்தினால்:

**479. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்.**

ப. ரை: அளவு அறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல இல்லாகி தோன்றா கெடும் = (தன்னுடைய வரவு செலவின்) அளவை அறிந்து (அதற்குத் தக்கபடி) வாழ்க்கை நடத்தாதவனுடைய சிறப்பான வாழ்க்கை, உள்ளது போலத் (தோன்றி) இல்லாததாகி மீண்டும் தலைகாட்ட முடியாமல் மறைந்து விடும்.

பொ. ரை: (தன்னுடைய செல்வ நிலையின்) அளவை அறிந்து, வருவாய்க்குத் தக்கபடி செலவு செய்யாமல் அளவுக்கு மீறிய வாழ்க்கை நடத்துகிறவனுடைய (ஆடம்பர) வாழ்வு (செல்வங்கள்) உள்ளது போலத் (தோற்றமளித்து) திடீரென்று (செல்வம்) இல்லாததாகி மறுபடியும் தலைதூக்க முடியாதபடி கெட்டுப் போகும்.

வி-ம்: 'உளபோல் இல்லாகி' என்பதற்கு 'செல்வம் உள்ளது போல இருந்து திடீரென்று செல்வம் இல்லாததாகி' என்பது பொருள். 'இல்லாகி' என்பதும் 'கெடும்' என்பதும் வாழ்க்கைக்கேயன்றி மனிதருக்கல்ல.

ஆதலால் உபகாரம் செய்வதாக இருந்தாலும் தன்னுடைய சக்திக்கு மீறியதாகச் செய்து கெட்டுப் போகக் கூடாது. அதுதான் வலியறிந்து வாழ்தல்:

**480. உளவரை தூக்காத வொப்புர வாண்மை
வளவரை வல்லைக் கெடும்.**

ப. ரை: உளவரை தூக்காத ஒப்புரவாண்மை வளவரை வல்லைக் கெடும் = உள்ள அளவை அளந்து செய்யாத நாராளத்தனாலும் செல்வத்தின் அளவு விரைவில் சிதைந்து விடும்.

பொ. ரை: தன்னிடத்திலுள்ள செல்வத்தின் அளவை கணக்குப் பார்க்காமல் செய்கிற உபகாரச் செலவுகளாலும் உள்ள செல்வம் விரைவில் இல்லாது போகும்.

வி-ம்: 'தூக்குதல்' அளவிடுதல்.

அதி. 49—காலமறிதல்

['காலமறிதல்' என்பது எந்தக் காரியத்தைச் செய்வதானாலும் அதற்கு ஏற்ற பருவகாலத்தை அறிந்து அப்போது செய்ய வேண்டும் என்பது.]

481. பகல்வெல்லுங் கூகையைக் காக்கை யிகல்வெல்லும்
வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

ப. ரை: கூகையை காக்கை பகல் வெல்லும்; இகல் வெல்லும் வேந்தர்க்கு பொழுது வேண்டும் = ஆந்தையைக் காக்கை பகற் பொழுதில் வென்றுவிடும்; (அதைப்போல) அரசருக்குத் தம் எதிரிகளை வெல்லுவதற்கு தக்க காலம் வேண்டும்.

பொ. ரை: (அச்சம் மிகுந்து வலிமை குறைந்த) காக்கை (அதனிலும் அச்சம் குறைந்து வலிமை மிகுந்ததான) ஆந்தையைப் பகற்பொழுதில் வென்றுவிடும். அதைப் போல பகைவர்களை வெல்லுவதற்கு அரசன் அதற்கேற்ற காலத்தை அறிந்து அதைச் செய்ய வேண்டும்.

வி-ம்: 'வேந்தன்' என்ற பதத்தினால் இந்த அதிகாரம் அரசனுக்கு மட்டும் சொல்லப்பட்டதென்று எண்ணிவிடக் கூடாது. 'வேந்தன்' என்ற இடத்தில் 'குடும்பத் தலைவன்' என்பதை வைத்துப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு குடும்பமும் ஒரு சிறு அரசாட்சிக்குச் சமானம்.

எந்தக் காரியத்துக்கும் அதற்கேற்ற பருவம் உண்டு. அதை அறிந்து செய்தால்:

482. பருவத்தோ டொட்ட வொழுக றிருவினைத்
தீராமை யார்க்குங் கயிறு.

ப. ரை: பருவத்தோடு ஒட்ட ஒழுகல் திருவினை தீராமை ஆர்க்கும் கயிறு = பருவ காலத்தை ஒட்டி காரியம் செய்வது

செல்வம் நம்மை விட்டுச் செல்லாதிருக்கும்படி அதைக்கட்டி வைக்கும் கயிறு.

பொ. ரை: ஏற்ற காலத்தை அறிந்து அந்தந்தக் காரியத்தை அந்தந்தக் காலத்தில் செய்யத் தெரிவது திருமகள் கடாட்சம் நம்மை விட்டு நீங்காமலிருக்கச் செய்கிற உபாயம்.

வி-ம்: 'ஆர்க்கும்' என்பது 'கட்டுகின்ற' என்ற பொருள் தருவது.

பருவ காலத்தை அறிவது யுத்தத்திற்கு மட்டுமல்ல. எந்தக் காரியத்தையும் செய்து முடிக்க அதற்கு வேண்டிய மற்றக் கருவிகள் எல்லாம் கைவசம் இருந்தாலும் காலமும் வேண்டும்:

483. அருவினை யென்ப வுளவோ கருவியாற்
காலம் அறிந்து செயின்.

ப. ரை: காலம் கருவியான் அறிந்து செயின் அருவினை என்ப உளவோ = பருவ காலம் என்பது (மிக நல்ல) கருவியான தால் அதை அறிந்து காரியத்தைச் செய்தால் செய்ய முடியாத காரியங்களும் உண்டோ.

பொ. ரை: ஒரு காரியத்தைச் செய்து முடிக்க வேண்டிய சாதனங்களுக்குள் தகுந்த காலம் என்பதும் மிக நல்ல சாதன மானதால் அதை அறிந்து காரியத்தைச் செய்தால் முடியாத காரியம் ஒன்றுமில்லை.

வி-ம்: 'கருவியான்' என்பதற்கு 'கருவி ஆனதனால்' என்பது பொருள். காரியங்களைச் செய்ய வேண்டிய கருவிகளாகிய பிற உபாயங்களைப் பற்றி இங்கே பேச்சில்லை:

தகுந்த காலத்தின் வாய்ப்பறிந்து செய்தால் மிகவும் அரிய காரியங்களையும் சாதிக்கலாம்:

484. ஞாலங் கருதினுங் கைகூடுங் காலம்
கருதி இடத்தாற் செயின்.

ப. ரை: காலம் கருதி இடத்தான் செயின் ஞாலம் கருதினும் கைகூடும் = காலத்தை அறிந்து வாய்ப்பறிந்து செய்தால் உலகம் முழுவதையும் வசப்படுத்தக் கருதினாலும் முடியும்.

பொ. ரை: (பொருத்தமான) காலத்துக்குக் காத்திருந்து வாய்ப்பு வந்ததை அறிந்து செய்தால் உலக முழுவதையும் வசப்படுத்த விரும்பினாலும் அது கைகூடும்.

வி-ம்: 'ஞாலங் கருதினுங் கைகூடும்' என்பதற்கு 'மிகப் பெரிய காரியத்தையும் செய்து முடிக்கலாம்' என்ற அளவுக்குத் தான் பொருள் கொள்ள வேண்டும். 'இடத்தான்' என்பதற்கு 'வாய்ப்பறிந்து' என்பது மட்டும் தான பொருள். 'இடம்' என்பதற்கு 'தக்க சந்தர்ப்பம்' என்பது ஒரு அர்த்தம். 'இடமறிதல்' என்று தனியே ஒரு அதிகாரம் சொல்லியிருப்பதால் நிலப்பரப்பின் இடத்தைப் பற்றி இங்கு பேச்சில்லை.

ஆகையினல் அரிய காரியங்களைச் செய்து முடிக்கும் ஆற்றலுடையவர்கள் ஒரு காரியத்தைச் செய்ய அதற்கேற்ற காலம் வாய்க்கிற வரையிலும் காத்திருப்பார்கள்:

485. காலங் கருதி யிருப்பர் கலங்காது
ஞாலங் கருது பவர்.

ப. ரை: ஞாலம் கருது பவர் காலம் கருதி கலங்காது இருப்பர் = உயர்ந்த காரியத்தைச் செய்ய நினைக்கிறவர்கள் ஏற்ற காலத்தை எதிர்பார்த்து கலங்காமல் இருப்பார்கள்.

பொ. ரை: அரிய காரியங்களைச் செய்யக் கூடியவர்கள் தக்க காலம் வாய்க்கிற வரையிலும் பதட்டமில்லாமல் அமைதியாக இருப்பார்கள்.

வி-ம்: 'ஞாலம்' என்பது இங்கே 'உயர்வு' என்ற பொருளைக் குறிப்பது.

தக்க காலத்திற்காகப் பதற்றமின்றிக் காத்திருப்பது எப்படிப் போன்றதெனில்:

486. ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர்
தாக்கற்குப் பேருந் தகைத்து.

ப. ரை: ஊக்கம் உடையான் ஒடுக்கம் பொரு தகர் தாக்கற்கு பேரும் தகைத்து = ஊக்க முள்ளவன் (காலங் கருதி) ஒடுங்கியிருப்பது. சண்டையிடுகிற ஆட்டுக்கிடா தாக்குவதற்காகப் பின்னல் போவதை ஒத்தது.

பொ. ரை: ஊக்கமுடையவன் (காலங் கருதி கலங்காது) அடங்கியிருப்பது சண்டையிடுகிற ஆட்டுக்கடா எதிரியைத் தாக்கப் பின்புறமாக நகருவதை ஒத்தது.

வி-ம்: 'தகர்' என்பது 'ஆட்டுக்கடா'. சண்டையிடும்போது மெள்ள மெள்ளப் பின்னுக்குப் போய் அதன் பிறகு வேகமாய்ப் பாய்ந்து தாக்கும்.

காலத்தைக் கருதுகின்ற திறமை சாலிகள் யாராவது தமக்குப் பகைமை காட்டிவிட்டாலும் :

487. பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த்
துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

ப. ரை : ஒள்ளியவர் பொள்ளென ஆங்கே புறம் வேரார்; காலம் பார்த்து உள் வேர்ப்பர் = திறமையுள்ளவர்கள் சட்டென்று உடனே தங்கள் கோபத்தை காட்டி விடமாட்டார்கள்; காலத்தைக் கருதி கோபத்தை மனதுக்குள் அடக்கிக் கொள்வார்கள்.

பொ. ரை : (புத்திசாலிகள் தமக்குப் பிறர் பகைமையான காரியம் செய்துவிட்டாலும்) சட்டென்று அப்போதே தம்முடைய கோபத்தை வெளியில் காட்டி விடாமல் மனதுக்குள்ளேயே அடக்கிக் கொள்வார்கள்,

வி . ம் : 'பொள்ளென' என்பது 'சட்டென்று' என்ற விரைவு குறிப்பது. 'வேர்த்தல்' – 'கோபித்தல்'.

பகைவர்களை நேராகக் கண்டு விட்டாலும் காலம் தவறி ஒன்றும் செய்துவிடக் கூடாது :

488. செறுநரைக் காணிற் சுமக்க விறுவரை
காணிற் கிழக்காந் தலை.

ப. ரை : இறுவரை காணில் கிழக்கு ஆம் தலை செறுநரை காணில் சுமக்க=வெல்லக்கூடிய இறுதிக் காலம் தம்முடைய அறிவுக்குத் தெரிகிற வரையிலும் பகைவர்களைக் கண்டால் (கோபத்தை) பொறுத்துக் கொள்ள வேண்டும்.

பொ. ரை : (பகைவர்களை) வெல்லத் தகுந்த இறுதிக் காலம் தம்முடைய அறிவுக்குப் புலனாகிற வரையிலும் பகைவர்களைக் கண்டால் கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டும்.

வி - ம் : 'சுமக்க' என்பதற்குப் 'பணிக' என்று பொருள் கொள்ளக் கூடாது. அப்படிப் பணிவது மானமும் அறிவும் அற்ற வஞ்சகம் ஆகும். 'சுமக்க' என்பதற்கு நல்ல பொருள் 'சுமந்து கொள்க' அல்லது 'பொறுத்துக் கொள்க' என்பதே. 'ஆத்திரப் படுவதை அடக்கிக் கொள்ள வேண்டும்' என்பதே இங்கு 'சுமக்க' என்று சொல்லப்படுவது. 'காணிற் கிழக்காந் தலை' என்பதற்கு 'காண்பதற்கு உதயமாகும் வரையிலும்' என்பது பொருள். 'கிழக்காதல்' - கிழக்கே சூரிய ஒளி உதிப்பது போல் 'தெரிவது'. 'தலை' என்பது

'வரைக்கும்' என்ற எல்லைப் பொருள் தரும் இடைச்சொல். அதனால் 'காணில் கிழக்காம் தலை' என்பதற்கு. 'தன் அறிவுக்குத் தென்படுகிற வரைக்கும்' என்பது பொருள்.

ஒரு காரியத்தைச் செய்யத் தகுந்த காலத்தை நோக்கிக் காத்திருக்கும்போது தான் எதிர்பார்த்த கால அளவுக்கு முன்னாலேயே தக்க வாய்ப்பு வந்து விட்டால் அப்போது தாமதிக்கக் கூடாது:

489. எய்தற் கரிய தியைந்தக்கா லந்நிலையே
செய்தற் கரிய செயல்.

ப. ரை: எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே செய்தற்கு அரிய செயல் = கிடைப்பதற்கு அருமையான வாய்ப்பு நேர்ந்து விட்டால் அப்போதே (பிறகு) செய்ய முடியாததைச் செய்துவிட வேண்டும்.

பொ. ரை: கிடைப்பதற்கு அருமையான சந்தர்ப்பம் கிடைத்து விட்டால் அப்போதே பின்னால் செய்ய முடியாத காரியத்தைச் செய்துவிட வேண்டும்.

வி-ம்: எதிர்பாராதபடி கால வசதி வாய்த்து விட்டால் அப்போதே செய்து விடவேண்டும். இல்லையானால் பின் 'செய்தற்கரியது' ஆகிவிடும். முன்னமேயே கருவிகளை யெல்லாம் சேகரித்துக் கொண்டு காலத்துக்காகக் காத்திருந்தவன் ஆனதால் எதிர்பாராதபடி வாய்ப்புக் கிடைத்ததை நழுவ விட்டு விடாமல் உடனே செய்து முடிக்க வேண்டும்.

காலத்துக்காகக் காத்திருப்பதும் காலம் நேர்ந்தால் உடனே காரியம் செய்வதும் எப்படியிருக்க வேண்டும் என்றால்:

490. கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்
குத்தொக்க சீர்த்த விடத்து.

ப. ரை: கூம்பும் பருவத்து கொக்கு ஒக்க; மற்று சீர்த்த இடத்து அதன் குத்து ஒக்க = (காலங் கருதி) ஒடுங்கியிருக்க வேண்டியபோது கொக்கைப் போல அசைவில்லாமல் இருக்க வேண்டும்; சரியான காலம் வாய்த்தபோது அந்த கொக்கின் கொத்துதலைப்போல் உடனே செய்து விடவேண்டும்.

பொ. ரை: காலங்கருதி ஒடுங்கியிருக்க வேண்டிய வரையிலும் ஒருகொக்கு தன் இரையைக் கொத்த அசையாமல் வாடி

இருப்பதைப் போல் கலங்காமல் இருக்க வேண்டும்; தக்க சமயம் வாய்த்த உடனே அந்த கொக்கு தன் இரையை நறுக்கென்று கொத்திக் கொள்வது போல் சட்டென்று செய்து விட வேண்டும்.

வி-ம்: 'ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கு' என்பது போலத் தக்க சமயம் வருகிறவரையிலும் அடங்கியிருக்க வேண்டும். சமயம் வாய்த்த உடன் கொக்கு கொத்துவதைப் போல் விரைவாகச் செய்து விட வேண்டும்.

அதி. 50—இடனறிதல்

['இடனறிதல்' என்பது ஒரு காரியத்தைச் செய்ய அதற்கேற்றதான இடத்தை அறிந்து அதன் பிறகே காரியத்தைத் தொடங்க வேண்டும் என்பது. 'வலியறிதல்,' 'காலமறிதல்,' 'இடமறிதல்' என்ற மூன்றும் ஒன்றுக்கொன்று குறைந்ததல்ல. காரியம் தொடங்குமுன் இந்த மூன்றையும் அறிந்து கொள்ள வேண்டும். ஏக காலத்தில் மூன்றைப் பற்றியும் சொல்ல முடியாததற்காக ஒவ்வொன்றாகச் சொல்லப்பட்டது.]

491. தொடங்கற்க வெவ்வினையு மெள்ளற்க முற்று
மிடங்கண்ட பின்னல் லது.

ப.ரை: முற்றும் இடம் கண்டபின் அல்லது எவ்வினையும் தொடங்கற்க; எள்ளற்க = முடிக்கத் தகுந்த இடம் அறிந்த பின் அல்லாமல் எந்தக் காரியத்தையும் தொடங்கக்கூடாது; (இதை) இகழ்ந்து விடக் கூடாது.

பொ.ரை: தகுந்த இடத்தை அறிந்து கொள்ளாமல் எந்தக் காரியத்தையும் ஆரம்பித்து விடக்கூடாது என்பதை அலட்சியம் செய்யாதே.

வி-ம்: 'முற்றும் இடம்' என்பது 'காரியம் முடியத் தகுந்த இடம்.' 'தொடங்கற்க எவ்வினையும்' என்றதனால் இது அரசன் போர் புரிவதற்காகவும் எதிரியை 'மடக்கும்' இடம் அறிவதற்காகவும் மட்டும் சொல்லப்பட்டதல்ல. மன்னன் போர் புரிவதற்கும் இதில் கூறப்பட்ட அறிவுகள் பொருந்துவன. என்றாலும் இது எல்லாருக்கும் எல்லாக் காரியத்துக்கும் உதவக்கூடிய பொது அறிவாகத்தான் சொல்லப்பட்டது. குறிப்பாகப் போரைப் பற்றியும் சேனையைப் பற்றியும் சொல்லும் போதெல்லாம் சந்தேகத்துக்கு இடமில்லாத பதங்களையே உபயோகிப்பது வள்ளுவர் வழக்கம்.

எப்படிப்பட்ட வல்லமை உள்ளவர்களானாலும் தமக்குப் பாதுகாப்பு இல்லாத இடத்தில் காரியத்தைத் தொடங்கலாகாது :

492. முரண்சேர்ந்த மொய்ம்பி னவர்க்கு மரண்சேர்ந்தா மாக்கம் பலவுந் தரும்.

ப. ரை : முரண் சேர்ந்த மொய்ம்பின் அவர்க்கும் அரண் சேர்ந்து ஆம் ஆக்கம் பலவும் தரும் = பலவிதமான வல்லமைகள் உள்ள அவர்களுக்கும் பாதுகாப்புள்ள இடத்தைச் சேர்வதனால் வரக்கூடிய வலிமை பல நன்மைகளையும் தரும்.

பொ. ரை : பலவிதமான திறமைகள் உள்ளவர்களுக்கும் பாதுகாப்புள்ள இடத்தைச் சேர்வதனால் கிடைக்கக் கூடிய பலம் அனேக நன்மைகளைத் தரும்.

வி - ம் : 'அரண்' என்பது இங்கே 'கோட்டை' அல்ல. தம்முடைய 'கோட்டை' என்றால் அதைப் பற்றி அறிய வேண்டிய 'இடனறிதல்' ஒன்றுமில்லை. 'அரண் சேர்ந்து' என்றிருப்பதால் சொந்த அரணைப் 'போய்ச் சேர' வேண்டியதில்லை. தன்னுடைய சொந்த இடமல்லாத பிற இடங்களில் ஒரு காரியத்தை முயல நேர்ந்தால் அப்போது தனக்குப் பாதுகாப்புள்ள இடமா என்பதை அறிந்து கொண்டு தான் காரியம் தொடங்க வேண்டும் என்பதைப் பற்றித் தான் இங்கே சொல்லப்படுகிறது. 'முரண் சேர்ந்த மொய்ம்பு' என்பதற்கு 'மாறுபட்ட வல்லமைகள்' அதாவது 'பலவிதமான சாமர்த்தியங்கள்' என்பது பொருள். அரசனை மட்டும் கருதும் போது 'முரண் சேர்ந்த மொய்ம்பு' என்பதற்குப் 'பலவிதமான ஆயுத பலமும் சேனை பலமும் உள்ள வல்லமை' என்பதும் பொருளாகும்.

இடத்தின் விசேடத்தால் யாருக்கும் அவர்களுடைய ஆற்றல் அதிகப்படும் :

493. ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து போற்றார்கட் போற்றிச் செயின்.

ப. ரை : போற்றார்கண் போற்றி இடனறிந்து செயின் ஆற்றாரும் ஆற்றி அடுப = இடையூறு செய்யக் கூடியவர்களால் (இடையூறு வராதபடி) பாதுகாப்பான இடம் அறிந்து (அங்கே காரியம்) செய்தால் ஆற்றல் இல்லாதவர்களும் (காரியத்தைச்) செய்து முடித்து வெற்றியடைவார்கள்.

பொ. ரை : (காரியத்தைக் கெடுத்து விடக் கூடிய) எதிரிகள் வரமுடியாத பாதுகாப்புள்ள இடத்தை அறிந்து (அங்கிருந்து கொண்டு) காரியத்தைச் செய்தால் திறமையில்லாதவர்களும் (காரியத்தைச்) செய்து வெல்வார்கள்.

வி - ம் : 'ஆற்ருர்' = வல்லமை இல்லாதவர்கள்', 'ஆற்றி' = 'செய்து'; 'அடுப' = 'வெல்வார்கள்'; 'போற்ருர்' = 'விரும்பாதவர்கள்', 'போற்றி' = 'பாதுகாப்புச் செய்து கொண்டு.'

சரியான இடத்தை அடைந்து அங்கிருந்து கொண்டு, காரியத்தைச் செய்தால் இடையூறு செய்ய நினைப்பவர்கள் இருந்தாலும் அவர்களுடைய எண்ணம் பலிக்காது :

494. எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

ப. ரை : இடனறிந்து துன்னியார் துன்னிச் செயின் எண்ணியார் எண்ணம் இழப்பர் = தக்க இடத்தை ஆராய்ந்தறிந்து அதைச் சேர்ந்தவர்கள் (அந்த இடத்தை விட்டு விடாமல்) அதைச் சேர்ந்து இருந்தே காரியம் செய்வார்களானல் (அதற்கு இடையூறு செய்ய) எண்ணினவர்கள் அவ்வெண்ணத்தை இழப்பார்கள்.

பொ. ரை : (பாதுகாப்பான) இடத்தை அறிந்து அதைச் சேர்ந்தபின் அதை விட்டு விலகி விடாமல் அதைச் சேர்ந்திருந்தே காரியம் செய்தால் அக்காரியத்தைக் கெடுக்க எண்ணினவர்கள் அந்த எண்ணத்தை விட்டு விடுவார்கள்.

வி - ம் : 'துன்னுதல்' என்பது 'சேர்தல்'. 'இடனறிந்து துன்னியார் துன்னிச் செயல்' என்பது 'ஆராய்ந்து தக்க இடம் என்பதை அறிந்து சேர்ந்தபின் அந்த இடத்தை ஒட்டியே வேலை செய்ய வேண்டும்' என்பது.

இடம் விட்டுப் பெயர்ந்தால் தோல்வியுண்டாகும்; எப்படிப் போல் என்ருல் :

495. நெடும்புனலுள் வெல்லு முதலை யடும்புனலி
னீங்கி னதனைப் பிற.

ப. ரை : நெடும் புனலுள் முதலை வெல்லும்; புனலின் நீங்கின் அதனை பிற அடும் = ஆழமான தண்ணீரில் முதலை (எதையும்) வெல்லும்; தண்ணீரை விட்டு நீங்கி விட்டால் அதை மற்றப் பிராணிகள் (எவையும்) வென்று விடும்.

பொ. ரை: ஆழமான தண்ணீரில் இருக்கிறவரை முதலையானது மற்ற எந்தப் பிராணியையும் வென்றுவிடும்; ஆனால் தண்ணீரை விட்டு நீங்கி விட்டால் அந்த முதலையை மற்ற எந்தப் பிராணியும் வென்றுவிடும்.

வி-ம்: 'அடும்' என்பதற்கு 'வெல்லும்' என்பது பொருள்.

உயிருள்ள பிராணிகளுக்கு மட்டும்தான் இடம் முக்கியம் என்பதல்ல. கருவிகளும் கூட ஒரு இடத்துக்குப் பயன்படக் கூடியது வேறொரு இடத்துக்கு உதவாது:

496. கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு
நாவாயு மோடா நிலத்து.

ப. ரை: கால்வல் நெடும் தேர் கடல் ஓடா; கடல் ஓடும் நாவாயும் நிலத்து ஓடா = உறுதியான சக்கரங்களுள்ள நீண்ட தேர்கள் கடலில் ஓடமாட்டா; கடலில் ஓடுகின்ற படகுகளும் நிலத்தில் ஓடமாட்டா.

பொ. ரை: உறுதியான சக்கரங்களுள்ள வண்டிகள் கடலில் ஓடமாட்டா; கடலில் ஓடுகின்ற படகுகளும் நிலத்தில் ஓடமாட்டா.

வி-ம்: 'தேர்' என்பது 'இரதம்' 'வண்டி' முதலிய வாகனங்களின் பொதுப் பெயர்.

அஞ்சாமைதான் எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாக முடிப்பதற்குத் துணையாவது. அந்த அஞ்சாமை குறையாமல் இருப்பதற்கும் இடவசதி இன்றியமையாதது:

497. அஞ்சாமை யல்லாற் றுணைவேண்டா வெஞ்சாமை
யெண்ணி யிடத்தாற் செயின்.

ப. ரை: அஞ்சாமை அல்லால் துணை வேண்டா; எண்ணி இடத்தால் செயின் எஞ்சாமை = (எந்தக் காரியத்தையும் வெல்லுவதற்கு) அச்சமற்ற தன்மையைத் தவிர வேறு துணை வேண்டியதில்லை; ஆராய்ந்து எண்ணி (தகுந்த) இடத்தைச் சேர்ந்து (காரியத்தைச்) செய்தால் (அது அஞ்சாமை) குறையாதிருப்பதாகும்.

பொ. ரை: (எந்தக் காரியத்தையும் வெற்றிகரமாக முடிப்பதற்கு) அஞ்சாமை இருந்தாற் போதும். வேறு துணை வேண்டியதில்லை; சரியான இடத்தைச் சேர்ந்து அதிலிருந்து கொண்டு காரியம் செய்தால் அந்த அஞ்சாமை குறையாமலிருக்கும்.

வி-ம்: 'அஞ்சாமை யல்லாற் றுணை வேண்டா' என்பது யாருக்கும் அவனவனுடைய அச்சமற்ற மன உறுதிதான் முக்கியமான துணை என்பதை வலியுறுத்துவதற் கேயன்றி வேறில்லை. பாதுகாப்பான இடத்தைச் சேர்ந்தவனுக்கு அச்ச மில்லாத தன்மை குறையாமல் இருக்கும் என்பது 'எஞ் சாமை'. 'எஞ்சுதல்' – 'குறைதல்'.

சொற்ப பலமுள்ளவனானாலும் அவன் சரியான பாதுகாப் புள்ள இடத்தில் இருக்கும் போது அவனை மிகுந்த பலமுள்ள வனும் வெல்ல முடியாது:

498. சிறுபடையான் செல்லிடஞ் சேரி னுறுபடையா
னூக்க மழிந்து விடும்.

ப. ரை: சிறுபடையான் செல் இடம் சேரின் உறு படையான் ஊக்கம் அழிந்து விடும் = குறைந்த பரிவாரமுள்ள ஒருவன் தகுந்த இடத்தைச் சேர்ந்திருந்தால் மிகுந்த பரிவாரங்கள் உள்ள ஒருவன் அவனை (வெல்லக் கருதும்) முயற்சி கெட்டுப் போகும்.

பொ. ரை: குறைந்த சாதனங்களுள்ளவனானாலும் ஒருவன் பாதுகாப்பான இடத்தைச் சேர்ந்திருந்தால் அவனிலும் மிகுந்த சாதனங்கள் உள்ளவனும் அவனை வெல்ல நினைக்கும் முயற்சி கெட்டுப்போகும்'

வி-ம்: 'படை' என்பது துணை பலமான 'பரிவாரம்' 'சாதனம்' அல்லது 'சேனை' என்று பொருள் படும். அரசன் அல்லது சேனாதிபதியை மட்டும் கருதுகிற போது 'படை' என்பதற்கு 'சேனை' என்ற பொருள் கொள்ளலாம்.

யாரானாலும் எதற்காக வானாலும் அவரவர்களுக்குப் பல முள்ளதாகும் சொந்த இடத்தை விட்டு விட்டு பழக்கமில்லாத புது இடங்களுக்குப் போய் துன்பத்தில் மாட்டிக் கொள்ளக் கூடாது:

499. சிறைநலனுஞ் சீரு மிலரெனினு மாந்த
ருறைநிலத்தோ டொட்ட லரிது.

ப. ரை: சிறை நலனும் சீரும் இலர் எனினும் மாந்தர் உறை நிலத்தோடு ஒட்டல் அரிது = பாதுகாப்பு வசதிகளும் மற்ற சிறப்புகளும் இல்லாதவர்களானாலும் மக்கள் தம்முடைய சொந்த இடத்தை விட்டு விலகாமல் இருப்பதே சிறப் புடையது.

பொ. ரை: பாதுகாப்பும் மற்ற வசதிகளும் இல்லாதவர்களானாலும் யாரும் தம்முடைய சொந்த இடத்தை ஒட்டியே இருந்து காரியம் செய்வது அருமையான செய்கை.

வி-ம்: புதிதாகப் பாது காப்பும் மற்ற வசதிகளையும் செய்து கொள்ள எண்ணிச் சொந்த இடத்தை விட்டு விட்டு அயலிடங்களில் போய் சிக்கிக்கொள்ளாமலிருப்பது மிக நல்லது. 'ஒட்டல் அரிது' என்பது 'ஒட்டிக் கொண்டிருப்பது அருமையான காரியம்'. 'அரிது' என்பதற்கு 'மிகவும் நல்லது' என்ற பொருள் கொள்ள வேண்டும். 'மாந்தர்' என்ற பதத்தினுல் இது பொதுவாக மக்களுக்கெல்லாம் சொல்லப்பட்டது, என்பதும் அரசனுக்கோ சேனைத் தலைவனுக்கோ மட்டும் சொல்லப்பட்டது அல்லவென்பதும் நிச்சயம்.

மாந்தர் தம்முடைய சொந்த இடத்தை விட்டுப் பழக்கமில்லாத இடங்களிற் சென்று அகப்பட்டுக் கொள்ளக் கூடாது என்பதற்கு உதாரணம்:

500. காலாழ் களரி னரியடுங் கண்ணஞ்சா
வேலாண் முகத்த களிறு.

ப. ரை: கால் ஆழ் களரில் கண்ணஞ்சா வேல் ஆள் முகத்த களிறு நரி அடும் = கால் பதிந்து கொள்ளுகிற சேற்று நிலத்தில் வேல்போன்ற தந்தங்களையுடைய முகத்ததாகிய எதற்கும் அஞ்சாத யானையை நரி வென்று விடும்.

பொ. ரை: கால் புதைந்து கொள்ளும் சதுப்பு நிலத்தில் (போய் சிக்கிக்கொண்டால்) வேல்களைப் போன்ற தந்தங்களுள்ள முகமுடையதாகி எதற்கும் பயப்படாத யானையை ஒரு நரி கூட வென்று விடும்.

வி-ம்: யானை பெரும் பலமுடையது. நரி அற்ப பலமுடையது. யானை தனக்குப் பழக்கமில்லாத சேற்றில் கால் புதைந்து சிக்கிக் கொண்டால் நரி அதைச் சித்ரவதை செய்து விடும். 'கண்ணஞ்சா' என்பது ஒரே சொல். 'சிறிதும் பயமில்லாத' என்ற பொருள் உள்ளது. வேல்– ஆள்– முகத்த– களிறு = வேல் போன்ற தந்தங்களை முகத்தில் உடைய யானை.

அதி. 51—தெரிந்துதெளிதல்

['தெரிந்து தெளிதல்' என்பதற்கு 'ஆராய்ந்து நம்புதல்' என்பது பொருள். அதாவது ஒருவன் தனக்காகத் தன்னுடைய காரியங்களைச் செய்கிற துணைவர்களை ஆராய்ந்து அறிந்து கொண்டு அதன் பிறகுதான் அவர்களிடம் நம்

பிக்கை வைக்க வேண்டும் என்பது. இது அரசனுக்கு மட்டும் சொன்னதல்ல. காரியக்காரர்களை நியமித்துக் கொள்ள வேண்டிய நிலைமையிலுள்ள எல்லாருக்கும் சொல்லப்பட்டது.]

501. அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
திறந்தெரிந்து தேறப் படும்.

ப. ரை: அறம் பொருள் இன்பம் உயிரச்சம் நான்கின் திறம் தெரிந்து தேறப்படும் = (ஒருவனிடத்தில் நம்பிக்கை வைக்கு முன் அவன்) தர்மங்களை மதித்து நடக்கும் தன்மை, பொருள் சம்பாதிக்கும் வழி, விரும்புகின்ற இன்பங்கள், (சமயம் நேர்ந்தால்) உயிருக்கு அஞ்சாமல் உதவுவானா என்பது, ஆகிய நான்கின் விவரங்களை ஆராய்ந்து கொண்டு நம்ப வேண்டும்.

பொ. ரை: ஒருவனிடத்தில் நம்பிக்கை வைத்து விடுவதற்கு முன்னால் அவன் அறங்களை மதித்து நடக்கக்கூடியவனா, நல்ல வழியில் பொருள் சம்பாதித்து வாழ்க்கை நடத்துகிறவனா, குற்றமான இன்பங்களை விரும்பாதவனா, அபாயம் நேர்ந்தால் உயிருக்கு அஞ்சும் கோழைத்தனம் இல்லாதவனா, என்ற நான்கையும் தெரிந்துகொண்டு நம்பிக்கை கொள்ள வேண்டும்.

வி-ம்: இங்கே அரசியல் சூழ்ச்சிகளான 'உபதை'களைக் கொண்டு வந்து குழப்புவது பயனற்றது. வள்ளுவர் இந்தக் குறளில் கையாண்டிருக்கிற பதங்களும் இந்த அதிகாரத்தில் பின்னுலுள்ள குறள்களின் போக்கும் அவற்றிலுள்ள சொல்லாட்சியும் உபதைகளைப் பற்றிப் பேசுகின்ற 'வடநூற் பொருண்மைக்கு' முற்றிலும் வேறானது. கவனித்துப் பார்த்தால் இந்த அதிகாரத்திலுள்ள எந்தக் குறளிலும் அரசனுக்கோ அரசியலுக்கோ சம்பந்தப்பட்ட ஒரு சொல்லைக் கூடக் காணமுடியாது.

அறம் பொருள் இன்பம் உயிரச்சம் என்ற நான்கையும் தீர ஆராய்ந்த பிறகுதான் ஒருவனை நம்ப வேண்டும் என்பது அனுபவத்தில் மிகவும் கடினமானது. அதனால் அந்த ஆராய்ச்சியைச் சுருக்கமாக்கி:

502. குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு
நாணுடையான் கட்டே தெளிவு.

ப. ரை: குடிப்பிறந்து குற்றத்தின் நீங்கி வடு பரியும் நாணுடையான்கட்டே தெளிவு = (நல்ல) குடியிற் பிறந்தவனாகவும், குற்

றம் (இதுவரை) செய்யாதவனாகவும், குற்றங்கள் செய்து விடக் கூடாதென்று (எப்போதும்) கூசுகின்றவனாகவும் இருப்பவனிடத்தில்தான் நம்பிக்கை (வைக்க வேண்டும்).

பொ. ரை: நல்ல குடும்பத்திற் பிறந்தவனாகவும் இதுவரைக்கும் குற்றங்களில் சம்பந்தப்படாதவனாகவும் இனிமேலும் குற்றம் செய்ய அஞ்சுகிறவனாகவும் இருக்கிறவனிடத்தில் தான் நம்பிக்கை வைக்க வேண்டும்.

வி-ம்: 'நாணுடையான்' என்பது 'பழிபாவங்களுக்கு அஞ்சுகிறவன்' என்ற பொருள் தருவது. 'கட்டு' என்பது 'இடத்தில்' என்ற பொருள் உள்ளது. 'குடிப்பிறப்பு' என்பது சாதியைக் குறிப்பதல்ல. 'நல்ல குடும்பப் பிறப்பு' என்பது பொருள்.

குடிப்பிறப்பும் குற்றங்களுக்குக் கூசுகின்ற இயல்பும் கல்வியைப் பொறுத்தவையல்ல. ஒருவனிடத்தில் நம்பிக்கை வைப்பதற்கு அவன் கல்வியிற் சிறந்தவனாக இருந்தால் மட்டும் போதாது. ஏனென்றால்:

503. அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கா
லின்மை யரிதே வெளிறு.

ப. ரை: அரிய கற்று ஆசு அற்றார் கண்ணும் தெரியுங்கால் வெளிறு இன்மை அரிது = அரிய நூல்களைச் கற்று ஐயம் நீங்கினவர்களிடத்திலும் ஆராய்ந்து பார்க்கும்போது, மனம் பொருந்தாமை இல்லாதிருப்பது கடினம்.

பொ. ரை: அருமையான நூல்களைக்கற்று ஐயம் திரிபுகள் இல்லாதவர்களிடத்திலும், ஆராய்ந்து பார்க்கும் போது நம்பத் தகாமை இல்லாதிருப்பது அபூர்வம்.

வி-ம்: 'ஆசு' என்பது 'ஐயம் திரிபு முதலான கல்விக் குற்றம்'. 'வெளிறு' என்பதற்கு, 'மனப் பொருத்தமில்லாமை' என்பது பொருள். அதாவது 'நம்பத் தகாமை'.

குற்றமே இல்லாத மனிதர்களாகப் பார்த்துத்தான் நம்ப வேண்டும் என்பது முடியாத காரியம். எப்படிப்பட்டவர்களிடத்திலும் குணமும் உண்டு குற்றமும் உண்டு. ஆகையினால்:

504. குணநாடிக் குற்றமு நாடி யவற்றுண்
மிகைநாடி மிக்க கொளல்.

ப. ரை : குணம் நாடி குற்றமும் நாடி அவற்றுள் மிகை நாடி மிக்க கொளல் = குணத்தை ஆராய்ந்து குற்றத்தையும் ஆராய்ந்து அவற்றுள் எது அதிகம் என்பதை ஆராய்ந்து அதிகமானது எதுவோ அதைக் கொள்ள வேண்டும்.

பொ. ரை : ஒருவனுடைய நல்ல குணத்தை ஆராய்ந்து அவனுடைய கெட்ட குணத்தையும் ஆராய்ந்து அவற்றுள் எது அதிகம் என்பதை அறிந்து எது அதிகமோ அதைக் கொண்டு (தீர்மானிக்க வேண்டும்)

வி - ம் : எல்லாருக்கும் நல்ல குணமும் உண்டு, கெட்ட குணமும் உண்டு. நல்லகுணம் அதிகமாக உள்ளவனை நல்லவனாகவும் கெட்டகுணம் அதிகமாக உள்ளவனைக் கெட்டவனாகவும் கொள்ள வேண்டும். 'குணம்' என்பது 'நல்லகுணம்'. 'குற்றம்' என்பது இங்கே 'தீய குணம்'.

அந்த குணத்தை எப்படி அறிய முடியும் என்றால் :

505. பெருமைக்கு மேனைச் சிறுமைக்குத் தத்தங்
கருமமே கட்டளைக் கல்.

ப. ரை : பெருமைக்கும் ஏனை சிறுமைக்கும் தம் தம் கருமமே கட்டளைக்கல் = (நல்ல குணம் என்ற) பெருமைக்கும் (கெட்ட குணம் என்ற) சிறுமைக்கும் அவரவர்களுடைய செய்கைகளே மாற்றறியும் உரைகல்.

பொ. ரை : (நல்ல குணமுடையவர்கள்) என்ற பெருமைக்கும் (கெட்ட குணமுடையவர்கள் என்ற) சிறுமைக்கும் அவரவர்களுடைய செய்கைகளே மாற்றறியும் உரை கல்லாகும்.

வி - ம் : யாரையும் அவனுடைய செய்கைகளாலேயே குணமுள்ளவனா குற்றமுள்ளவனா என்பதை எளிதில் அறிந்து கொள்ள முடியும். அதைக் கொண்டே அவனை நம்பலாமா கூடாதா என்பதைத் தீர்மானிக்கலாம். இந்தக் குறளில் 'பெருமை', 'சிறுமை' என்பன முன் குறளில் உள்ள 'குணம்', 'குற்றம்' என்பவைகளேயன்றி வேறல்ல.

குணம், குற்றம், பெருமை, சிறுமை என்பதெல்லாம் அருள் குணமாகிய அன்புள்ளவராக இருப்பதையும் இல்லாததையும் பொறுத்ததே. ஆகையினால் அன்பில்லாதவர்களிடத்தில் நம்பிக்கை வைத்து விடக்கூடாது :

506. அற்றாரைத் தேறுத லோம்புக மற்றவர்
பற்றிலர் நாணார் பழி.

ப. ரை: அற்றாரை தேறுதல் ஓம்புக; மற்று அவர் பற்று இலர் பழி நாணார் = அன்பற்றவர்களை நம்பிவிடுவதை விலக்குக; ஏனெனில் அவர்கள் (யாரிடத்திலும்) பற்றுடையவர்களாக இருக்கமாட்டார்கள்; பழியான செயல்களைச் செய்யவும் கூசமாட்டார்கள்.

பொ. ரை: அன்பில்லாதவர்களை நம்பிவிடுவதை விலக்க வேண்டும்; ஏனெனில் அவர்கள் யாரிடத்திலும் பற்றுடையவர்களாக நடந்துகொள்ள மாட்டார்கள்; பழிபாவங்களுக்கும் அஞ்சமாட்டார்கள்.

வி-ம்: 'அற்றார்' என்பதற்கு 'சுற்றமில்லாதவர்கள்' என்று பொருள் செய்வது சரியல்ல. சுற்றத்தார் இல்லாதவர்கள் என்பதனாலேயே 'பற்றிலர்' என்றும் 'பழி நாணார்' என்றும் தீர்மானிப்பது உண்மைக்கும் நியாயத்துக்கும் ஒவ்வாது. பின் 'அற்றார்' என்பது யாரை? 'அற்றார்' என்பது சாதாரணமாக 'இல்லாதவர்கள்' அல்லது 'ஏழைகள்' என்று பொருள் தருவது. அந்தப் பொருள் கொண்டாலும் 'ஏழை' என்பதற்காகமட்டும் ஒருவனை நம்பக்கூடாது என்பதும் உண்மைக்கும் நியாயத்துக்கும் உகந்ததல்ல. ஆகையினால் இந்த இரண்டு பேரையும் தவிர வேறு 'அற்றாரை'த்தான் ஆசிரியர் கருதியிருக்க வேண்டும். அதைத் திருவள்ளுவர் உரைகளைக்கொண்டுதான் தீர்மானிக்க வேண்டும். 'அற்றார்' என்பது யார் யார் என்பதை இரண்டு இடங்களில் ஆசிரியர் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அவையாவன: 'அருள் அற்றார் அற்றார் மற்றாதல் அரிது' என்று 'அருளுடைமை' என்ற அதிகாரத்திலும் 'அற்றவர் என்பார் அவா அற்றார்' என்று 'அவாவறுத்தல்' என்னும் அதிகாரத்திலும் சொல்லியிருக்கிறார். இந்த இரண்டில் பின்னால் சொல்லப்பட்டதற்கு எந்தவிதமான பற்றும் இல்லாதவனாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமானதாலும் 'மற்று அவர் பற்று இலர் நாணார் பழி' என்பதில் பற்றுள்ளவனாக இருக்க வேண்டும் என்பது கட்டாயமாகிறதாலும் இரண்டாவதாகச் சொல்லப்பட்ட அற்றார் என்பது இங்கே இசையாது. ஆகையினால் 'அருள் குணம் இல்லாதவர்கள் தாம் அற்றார். அவர் மற்ற எதற்கும் பயனற்றவர்கள்' என்று பொருள் தரச் சொன்ன 'அருளற்றார் ,அற்றார் மற்றாதல் அரிது' என்பதிலுள்ள 'அற்றார்'தான் இங்கே சொல்லப்படுவது. 'அருளற்றார் அற்றார்' என்பது துறவறத்துக்கு 'அருளுடைமை' வேண்டிச் சொன்னது. அது 'அன்புடைமை' அல்லவென்று நினைத்துவிட இடமில்லை. எப்படியெனில் அருள் என்பதே 'அன்பீன் குழவி' என்று 'பொருள் செயல்வகை' அதிகாரத்தில் சொல்லுகிறார். அன்புக் குணந்தான் அருள் குணம்.

மேலும் அன்புள்ளவர்களுக்குத்தான் பெருமை வரும் என்பதை 'அன்புற்றமர்ந்த வழக்கென்ப வையத்து இன்புற்ருர் எய்தும் சிறப்பு' என்று 'அன்புடைமை' என்ற அதிகாரத்தில் சொல்லியிருப்பதாலும் இதற்கு முந்தின குறளில் 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் கருமமே கட்டளைக் கல்' என்பதனுலும் 'அற்ருர்' என்பதற்கு இந்த இடத்தில் அன்புக் குணம் அற்றவர்கள் என்பது தான் பொருந்தும். 'மற்று' என்பது இங்கே 'ஏன்எனில்' என்ற பொருள் தருவது.

அன்பு இல்லாதவர்களை நம்பிவிடக் கூடாது என்பது மட்டும் அல்ல. நாம் யாரிடத்தில் அன்பு வைத்திருக்கிருேமோ அவர்களையும் கூட அந்த பிரியம் மட்டும் காரணமாக முக்கியமான காரியங்களுக்கு நம்பிவிடக் கூடாது :

**507. காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாந் தரும்.**

ப. ரை : காதன்மை கந்தா அறிவறியார் தேறுதல் பேதைமை எல்லாம் தரும் = பிரியம் காரணமாக அறிய வேண்டியதை அறியாதவர்களை நம்பி விடுதல் முற்றிலும் அறிவில்லாத் தனம்.

பொ. ரை : நமக்குப் பிரியமானவர்கள் என்ற காரணத்துக்காக அறிய வேண்டியதை அறியாதவர்களை நம்பி (ஒரு காரியத்தை அவர்களிடம்) விடுவது முழுதும் மூடத்தனமானது.

வி - ம் : வெவ்வேறு காரணத்துக்காக நாம் வெவ்வேறு மனிதர்களிடத்தில் பிரியமுள்ளவர்களாக இருக்கலாம். அதற்காக அவர்கள் அறியாத ஒரு காரியத்தை அவர்களிடம் விட்டுநம்பி விடக் கூடாது. 'அறிவறியார்' என்பது 'அறிவில்லாதவர்கள்' அல்ல. குறிப்பிட்ட காரியத்துக்கு அறிய வேண்டியதை அறியாதவர்கள் என்பதுதான் பொருள். 'கந்து' என்பது 'காரணம்'. 'கந்தா' என்பது 'கந்தாக' என்பதன் குறைவு. 'பற்றுக் கோடாக' அதாவது 'அது காரணமாக' என்ற பொருள் தருவது.

ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல் ஒருவரை நம்பி, காரியங்களை ஒப்படைத்து விடுவதனுல் பல துன்பங்கள் வரும் :

**508. தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை
தீரா விடும்பை தரும்.**

ப. ரை : தேரான் பிறனை தெளிந்தான் வழிமுறை தீரா இடும்பை தரும் = ஆராயாமல் இன்னொருவனை நம்பி விடுகிறவனுடைய வாழ்க்கையின் நடைமுறை ஓயாத் துன்பம் தரும்.

பொ. ரை: ஆராய்ந்து அறியாமல் இன்னொருவனை நம்பிவிடுகிற இயல்புடையவனுடைய வாழ்க்கை நெடுகத் துன்பமுள்ளதாகவே இருக்கும்.

வி-ம்: 'வழிமுறை' என்பது குடும்பத்தைக் குறிப்பதல்ல. ஆனால் 'வாழ்க்கையின் வழிமுறை'யைக் குறிப்பது.
ஆகையினால்:

509. தேறற்க யாரையுந் தேராது தேர்ந்தபிற்
றேறுக தேறும் பொருள்.

ப. ரை: யாரையும் தேராது தேறற்க; தேர்ந்த பின் தேறும் பொருள் தேறுக = யாரையும் ஆராய்ந்து அறியாமல் நம்பிவிடக் கூடாது; ஆராய்ந்து அறிந்து கொண்டபின் (அவனிடம் நம்பி ஒப்படைக்கக் கூடிய) காரியத்தை நிச்சயம் செய்க.

பொ. ரை: யாரையும் ஆராய்ந்தறியாமல் நம்பிவிடக் கூடாது; ஆராய்ந்து (நம்பத் தகுந்தவனு என்பதை) அறிந்தபின் அவனிடம் நம்பிவிடக் கூடிய வேலையை நிச்சயம் செய்ய வேண்டும்.

வி-ம்: நம்பத் தகுந்தவர்கள் என்று ஆராய்ச்சியில் அறியப்பட்டவர்களும் எல்லாரும் எல்லாக் காரியத்துக்கும் தகுதியுள்ளவர்களாக இருக்க முடியாது. ஆகையினால் யாரிடத்தில் எந்தக் காரியத்தை ஒப்படைக்கலாம் என்பதையும் எண்ணித் தீர்மானிக்க வேண்டும்.

ஒருவனுடைய குணகுணங்களைத் தீர ஆராய்ந்த பிறகுதான் அவனிடத்தில் நம்பிக்கை வைக்க வேண்டும் என்பது மட்டுமல்ல:

510. தேரான் றெளிவுந் தெளிந்தான்கண் ணையுறவுந்
தீரா விடும்பை தரும்.

ப. ரை: தேரான் தெளிவும் தெளிந்தான் கண் ஐயுறவும் தீரா இடும்பை தரும் = தெரியாதவனை நம்பிவிடுவதும் நம்பின பின் அவனை ஐயப்படுவதும் ஓயாத துன்பம் தரும்.

பொ. ரை: ஆராய்ந்து தெரிந்து கொள்ளாமல் ஒருவனை நம்பிவிடுவதும் நம்பின பின் அவனிடத்தில் சந்தேகம் கொள்ளுவதும் ஓயாமல் துன்ப முண்டாக்கும்.

வி-ம்: சந்தேகத்துக்கு இடமில்லாமல் ஆராய்ந்து தெரிந்து கொண்டுதான் நம்பிக்கை வைக்க வேண்டும். அப்படி நம்பின பின் இடையிடையே சந்தேகங் கொள்ளுவது ஏன்? சந்தேகிப்பது தீமையுண்டாக்கும்.

அதி. 52—தெரிந்துவினையாடல்

[‘தெரிந்து வினையாடல்’ என்பது ஒருவேலையை அந்தவேலை தெரிந்தவனைச் செய்யச் செய்தல். ‘ஆடல்’ என்பது ‘ஆள் தல்’. ‘ஆள்தல்’ என்பது ‘ஆட்சி செய்வது’ அதாவதுவேலை தெரிந்தவனிடத்தில் வேலையை ஒப்படைத்து ‘மேற்பார்வை செய்வது’. இதுவும் அரசனுக்கு மட்டும் சொல்லப்பட்ட தல்ல. எல்லாருக்கும் பொது.]

511. நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த
தன்மையா னாளப் படும்.

ப. ரை: நன்மையும் தீமையும் நாடி நலம் புரிந்த தன்மையான் ஆளப்படும் = (ஒரு காரியத்தின்) நன்மையையும் தீமையை யும் அறிந்து நன்ருக (முன்னே காரியங்களைச்) செய்திருக் கிற பழக்கமுள்ளவனைக் கொண்டு செய்விக்க வேண்டும்.

பொ. ரை: காரியத்தின் நன்மை தீமைகளை அறிந்தவனாக, ஏற் கனவே அப்படிப்பட்ட காரியங்களைச் செய்திருக்கிற பழக்க முள்ளவனைக் கொண்டு காரியத்தைச் செய்விக்க வேண்டும்.

வி-ம்: ‘தன்மையான் ஆளப்படும்’, ‘தன்மையானைக் கொண்டு ஆளப்படும்’ என்பதாம். ‘நலம் புரிந்த தன்மை’ என்பது முன் நன்ருகச் செய்து முடித்திருக்கிற ‘அனுபவம்’.

நன்மையும் தீமையும் நாடுகின்ற வினையாளன் யாரென்ருல்:

512. வாரி பெருக்கி வளம்படுத் துற்றவை
யாராய்வான் செய்க வினை.

ப. ரை: வாரி பெருக்கி வளம் படுத்து உற்றவை ஆராய்வான் வினை செய்க = (செல்வ) வருவாய்க்கான வழிகளை அதிகப் படுத்தி, செல்வ நிலைமையை வளமுள்ளதாக்கி (அந்நிலை கெடாமல் இருப்பதற்குத்) தக்க பாதுகாப்புகளை ஆராய்ந் தறியக் கூடியவன் காரியம் செய்யட்டும்.

பொ. ரை: வரும்படிக்கான வழிகளை அதிகப்படுத்திப் பொருளா தார நிலைமையைப் பலமுள்ளதாக்கி அந்த பலம் குறைந்து போகாமல் இருப்பதற்கான யோசனைகளை ஆராயக் கூடிய வன் காரியம் செய்ய வேண்டும்.

வி-ம்: ‘உற்றவை’—‘தக்கவைகள்’. ‘வாரி பெருக்கவும் வளம் படுக்கவும் தக்கவைகள்’.

அப்படி நன்மைகளைச் செய்து வைப்பதற்குக் காரியக் காரன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டுமென்ருல்:

513. அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு.

ப. ரை: அன்பு அறிவு தேற்றம் அவாவின்மை இந்நான்கும் நன்கு உடையான் கட்டே தெளிவு = (நம்மிடத்தில்) அன்பு, (காரியத்தைப் பற்றிய) அறிவு, (அதைச் செய்து முடிக்கும்) மன உறுதி, (தன்னல) ஆசையில்லாத தன்மை இந்த நான்கும் நன்ருக அமைந்தவனை (நமக்காகக் காரியம் செய்ய) தேர்ந்தெடுக்க வேண்டும்.

பொ. ரை: நம்மிடத்தில் அபிமானம், குறிப்பிட்ட காரியத்துக்கு வேண்டிய அறிவு, அதைச் செய்து முடிக்கும் திறமை, நமக்காக அவனிடத்தில் வருகிற பணத்தின் மேல் ஆசை கொள்ளாத குணம் ஆகிய இந்த நான்கும் நன்ருகப் பொருந்தினவனை நம்முடைய காரியங்களைப் பார்க்க நிச்சயிக்க வேண்டும்.

வி-ம்: இங்கே அன்பு, அறிவு, தேற்றம், அவாவின்மை என்ற பதங்களுக்குப் பொதுவாக உள்ள பொருள்களைக் கொள்ளக் கூடாது. குறிப்பிட்ட தலைவனிடத்தில் அன்பு, குறிப்பிட்ட காரியத்துக்கு வேண்டிய அறிவு, அதற்கு வேண்டிய திறமை, அதில் கிடைக்கிற ஆதாயத்தில் தான் ஆசை கொள்ளாத தன்மை என்று கொள்ள வேண்டும்.

மற்றதெல்லாம் அமைந்தாலும் குறிப்பிட்ட காரியத்துக்குக் குறிப்பிட்ட காரியத் திறமை அமைவது கடினம்:

514. எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான்
வேருகு மாந்தர் பலர்.

ப. ரை: எனை வகையான் தேறியக் கண்ணும் வினை வகையான் வேருகும் மாந்தர் பலர் = எந்தெந்த விதத்தில் (ஆராய்ந்து) தேர்ந்தெடுத்தாலும் காரியம் செய்கிற வித்த்தில் தவறிவிடுகிற மக்கள் பலராவர்.

பொ. ரை: எப்படியெல்லாம் ஆராய்ந்து தேர்ந்தெடுத்தாலும் (குறிப்பிட்ட) காரியத்தின் வகையறிந்து செய்ய முடியாதவர்களே அதிகம்.

வி-ம்: 'வினை வகையான் வேருகும் மாந்தர்' என்பது அந்த வேலையின் விதத்துக்கு ஒவ்வாத மக்கள் என்பது பொருள். காரியஸ்தனுக இருப்பதற்கு வேண்டிய மற்றத் தகுதிகளெல்லாம் இருந்தாலும் குறிப்பிட்ட வேலைக்கு குறிப்பிட்ட திறமையுள்ளவர்கள் கிடைப்பது கடினம் என்பது கருத்து.

ஆகையினுல் மற்றத் தகுதிகளைக் கண்டு மயங்கி விடாமல்:

515. **அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்**
சிறந்தானென் றேவற்பாற் றன்று.

ப. ரை: அறிந்து ஆற்றி செய்கிற் பாற்கு அல்லால் சிறந்தான் என்று வினைதான் ஏவல் பாற்று அன்று = வேலையை அறிந்தவனாகி (இடையூறுகளை) தாங்கிச் செய்து முடிக்கக் கூடியவனுக்கு அல்லாமல் ஒரு வேலை (அவனுக்குள்ள) மற்றச் சிறப்புகளைக் கருதி ஏவத் தகுந்ததல்ல.

பொ. ரை: ஒருவன் ஒரு குறிப்பிட்ட வேலையை அறிந்தவனாகவும் அதைச் சமாளித்து முடிக்கக் கூடியவனாகவும் இருந்தால் அல்லாமல் அவனுக்குள்ள வேறு சிறப்புகளைக் கருதி அந்த வேலையைச் செய்ய அவனை ஏவக் கூடாது.

வி - ம்: 'ஆற்றிச் செய்கிற்பான்' என்பதற்கு 'ஆற்றலோடு செய்து முடிக்கிறவன்' என்பது பொருள்.

ஆதலால்:

516. **செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ**
டெய்த வுணர்ந்து செயல்.

ப. ரை: செய்வானை நாடி வினை நாடி காலத்தோடு எய்த உணர்ந்து செயல் = வேலை செய்கிறவனை ஆராய்ந்து, வேலையை ஆராய்ந்து, காலத்துக்குப் பொருந்தினவற்றை அறிந்து செய்ய வேண்டும்.

பொ. ரை: (ஒரு வேலையைச் செய்வதற்கு நாம் ஏவ நினைக்கிற) வேலையாளனை ஆராய்ந்து, (அதன்பின்) அந்த வேலையை (அவன் செய்வானா என்பதை) ஆராய்ந்து, இந்த சமயத்தில் (அவனைக் கொண்டு அதைச் செய்வது) பொருந்துமா என்பதை அறிந்து செய்ய வேண்டும்.

வி - ம்: 'காலத்தோடு எய்த உணர்ந்து' என்பது குறிப்பிட்ட வினையாளன் குறிப்பிட்ட ஒரு இடத்துக்கு அப்போது போவது நன்மையா என்பதை அறிவது. வினையாளன் திறமையுள்ளவனாக இருந்தாலும் நமக்காகக் காரியம் செய்ய அவன் போக வேண்டிய இடத்திலுள்ளவர்களுக்கும் அவனுக்கும் அந்த சமயத்தில் ஏதாவது மனத் தாங்கல் இருந்தாலும் நம்முடைய காரியம் கெட்டு விடும், என்பது போன்றவைகளையும் சிந்திக்க வேண்டும் என்பது கருத்து. இங்கே சொல்லப்படுகிற 'காலத்தோடு' என்பது முன் சொன்ன 'காலமறிதல்' என்றதோடு சேர்ந்தது அல்ல. இந்த சமயத்துக்கு இவன் தகுந்தவனா என்று காலத்தோடு பொருத்திப்

பார்க்க வேண்டும் என்பது தான் 'காலத்தோடெய்த உணர்ந்து' என்று இங்கே சொல்லப்படுவது.

திறமைகள் இருந்தாலும் எல்லாக் காரியங்களையும் எல்லாரும் செய்துவிட முடியாது. சில காரியங்களைச் சில காரணங்களுக்காகச் சிலர் தான் செய்ய முடியும். ஆகையினால் :

517. இதனை யிதனா லிவன்முடிக்கு மென்றாய்ந்
ததனை யவன்கண் விடல்.

ப. ரை : இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து அதனை அவன் கண் விடல் = இந்த வேலையை இந்தக் காரணத்தால் இவன் முடிப்பான் என்று ஆராய்ந்தறிந்து அந்த வேலையை அவனிடத்தில் விட்டுவிட வேண்டும்.

பொ. ரை : இந்தக் காரியத்தை இன்னின்ன காரணத்தால் இவன் செய்து முடிக்கத் தகுந்தவன் என்பதை ஆராய்ந்தறிந்து அந்தக் காரியத்தை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும்.

வி - ம் : 'இதனால்' என்பது 'இந்தக் கருவியினால்' என்ற பொருள் தருவதல்ல. 'இந்தக் காரணத்தால்' என்பதுதான் பொருள்.

அப்படி ஆராய்ந்து ஒரு வேலையை ஒருவனிடம் ஒப்படைத்த பின் அந்த வேலையின் முழுப் பொறுப்பையும் அவனிடம் விட்டுவிட வேண்டும் :

518. வினைக்குரிமை நாடிய பின்றை யவனை
யதற்குரிய னாகச் செயல்.

ப. ரை : வினைக்கு உரிமை நாடிய பின்றை அவனை அதற்கு உரியனாக செயல் = காரியத்தை முடிப்பதற்கு வேண்டிய தகுதியை ஆராய்ந்து ('அதனை அவன்கண்') விட்டபின்பு அவனை அதற்குப் பொறுப்பாளியாகச் செய்ய வேண்டும்.

பொ. ரை : (இதனை இதனால் இவன் செய்யுமென்று) காரியம் செய்யத் தகுந்தவன் என்பதை ஆராய்ந்த பிறகு அவனையே அதற்குப் பொறுப்பாளியாக்கி விட வேண்டும்.

வி - ம் : 'அதற்குரியனாகச் செயல்' என்பது அந்தக் காரியத்தை முடிக்க வேண்டிய எல்லாப் பொறுப்புகளையும் அவற்றிற்கான அதிகாரத்தையும் அவனிடம் ஒப்படைத்து விடுவது.

அப்படி அதற்குரியன் ஆக்கியபின் இடையிடையே குறுக்கிட்டு ஆலோசனை சொல்லியோ அதிகாரம் செலுத்தியோ அவனுக்கு அருவருப்புண்டாக்கக் கூடாது. ஏன் எனில் :

519. வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக
நினைப்பானை நீங்குந் திரு.

ப. ரை : வினைக்கண் வினையுடையான் கேண்மை வேறாக நினைப்பானை திரு நீங்கும் = வேலையின் நடுவில் அந்த வேலைக்கு (உரிமை) உடையவனாக (அதைச் செய்து கொண்டு) இருக்கிறவனுடைய அன்பு மாறும்படி நடந்து கொள்ளுகிறவனை விட்டு அவன் பெருமை நீங்கி விடும்.

பொ. ரை : வேலை நடந்துகொண்டிருக்கும் பொழுது அந்த வேலைக்குப் பொறுப்பாளியாக அதைச் செய்துகொண்டிருக்கிறவனுடைய உறவு கெட்டுப் போகும்படி குறுக்கிடுகின்ற எசமானனுடைய சிறப்பு நீங்கி விடும்.

வி - ம் : வேலை நடந்துகொண்டிருக்கும் பொழுது மத்தியில் அடுத்தடுத்து குறுக்கிட்டால் அந்த வேலையைப் பொறுப்போடு செய்துகொண்டிருக்கிற வினையாளனுடைய நல்லுறவு கெட்டுப் போகும். அதனால் வேலையும் கெட்டுப் போகும். அதனால் நஷ்டமும் உண்டாகும் என்பது பொருள். ‘வினைக் கண்’ என்பதற்கு ‘வேலை நடக்கும் பொழுது இடையில்’ என்பது பொருள். ‘நினைப்பானை’ என்பதற்கு ‘மனதில் நினைப்பானை’ என்பது அல்ல; ‘செய்வானை’ என்பது இங்கே பொருள். ‘திருநீங்கும்’ என்பது ‘அந்த வேலையில் வெற்றி கிடைக்காது மேலும் நஷ்டமுண்டாகும்’ என்பது கருத்து.

பொறுப்பாளியாக வேலை பார்க்கிறவனுக்கு அதிருப்தி உண்டாக்கக் கூடாது. அதை எல்லாரும் கவனிக்க வேண்டுமென்றாலும் ஒரு அரசன் அதை மிகவும் கவனிக்க வேண்டும். ஏனெனில் தனி மனிதன் கவனிக்காவிட்டால் அவனுக்கும் அவனுடைய குடும்பத்துக்கும் மட்டுந்தான் கெடுதி. அரசன் கவனிக்காவிட்டால் நாட்டுக்கே கெடுதி யுண்டாகும் :

520. நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான்
கோடாமை கோடா துலகு.

ப. ரை : வினை செய்வான் கோடாமை உலகு கோடாது; மன்னன் நாள்தோறும் நாடுக = வேலை செய்கிறவன் மனங் கோணாமல் இருந்தால் உலக நடை கோணலில்லாமல் நடக்கும்; இதை மன்னவன் நாள்தோறும் கருத வேண்டும்.

பொ. ரை: (நாட்டின்) காரியங்களைச் செய்கிறவர்கள் அதிருப்தி அடையாமல் இருந்தால் நாட்டின் நலம் கெடாது: இதை அரசன் தினந்தோறும் கவனிக்க வேண்டும்.

வி-ம்: அரசாங்கத்தின் ஊழியர்கள் அதிருப்தியடையாமல் இருந்தால் அந்த நாட்டின் நலங்கள் கெடாமலிருக்கும். அதை அரசாங்கத் தலைவன் தினந் தினம் கவனித்து வேலை பார்க்கிறவர்களுக்கு மனக்குறையில்லாமல் செய்ய வேண்டும் என்பது கருத்து. 'உலகு' என்பது அந்த மன்னவனுக்குட்பட்ட 'உலகப் பகுதி'யாகிய 'அவனுடைய நாடு'. 'கோடுதல்' என்பதற்கு 'வெறுப்படைதல்', 'கெட்டுப் போதல்' என்பன பொருள்கள். இது குறிப்பாக அரசனுக்குச் சொல்லப்பட்ட எச்சரிக்கையானாலும் சிப்பந்திகளை நியமித்து வேலை வாங்குகிற எல்லாருக்கும் பொருந்தும்.

அதி. 53—சுற்றந்தழால்

['சுற்றந்தழால்' என்பது 'சுற்றம் தழுவுதல்', 'உறவினர்களை ஆதரித்தல்' என்பது பொருள். இது அரசனுக்கு மட்டுமின்றி எல்லாருக்கும் பொதுவான நற்குணம். 'சுற்றத்தார்' என்பது குடும்ப வழியில் சொந்தக்காரர்கள் மட்டும் அல்ல. உறவினரும் நண்பருமாக ஒருவனைச் சுற்றியிருப்பவர்கள்.]

521. பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல்
சுற்றத்தார் கண்ணே யுள.

ப. ரை: பற்று அற்ற கண்ணும் பழைமை பாராட்டுதல் சுற்றத்தார் கண்ணே உள = தொடர்ச்சி விட்டுப்போன காலத்திலும் பழைய உறவைக் கொண்டாடுதல் சுற்றத்தாரிடத்தில் தான் உண்டு.

பொ. ரை: (அடிக்கடி கண்டு களிக்கிற) தொடர்ச்சி விட்டுப் போனாலும் பழைய உறவுகளைக் கொண்டாடும் இயல்பு சுற்றத்தார்களிடத்தில்தான் உண்டு.

வி-ம்: 'பற்று' என்பதற்கு இங்கே 'தொடர்பு' என்பது பொருள். 'செல்வம்' அல்ல. 'பழைமை' என்பது 'பழைய உறவுகள்'. 'கண்' என்பது இங்கே 'காலம்', 'இடம்' என்ற இரண்டு பொருள்களை முறையே தருவது. நெடுங்காலமாக சந்திப்பு விட்டுப் போனாலும் அல்லது இதுவரையிலும் ஒருவரையொருவர் சந்தித்ததே இல்லையானாலும் 'இன்னார் இன்ன முறையில் நம் இருவருக்கும் உறவானவர்' என்று வெகு பழைய உறவைச் சொல்லிக் கொண்டாலும் உடனே

ஒருவருக்கொருவர் உறவினர் என்று பாராட்டிக் கொள்வது இயல்பு. அதைத்தான் 'பழைமை பாராட்டுதல்' என்ருர்.

அடிக்கடி சந்திக்கிற தொடர்ச்சி விட்டுப் போனாலும் மனதில் அன்பு விட்டுப் போகாமல் இருந்தால் :

522. விருப்பருச் சுற்ற மியையி னருப்பரு
வாக்கம் பலவுந் தரும்.

ப. ரை : விருப்பு அரு சுற்றம் இயையின் அருப்பு அரு ஆக்கம் பலவும் தரும் = விருப்பம் அற்றுப் போகாத உறவாக அமையுமானல் அரும்புதல் அற்றுப் போகாத நன்மைகள் பலவற்றையும் தரும்.

பொ. ரை : (சந்திப்பு விட்டுப் போனாலும் ஒருவரையொருவர்) விரும்புவது விட்டுப் போகாத உறவினராக இருந்தால் அரும்புதல் மாருத (மரம் துளிர் விடுவது போல்) பல நன்மைகளை உண்டாக்கும்.

வி - ம் : அன்பு விட்டுப் போகாத உறவு ஈரம் அற்றுப் போகாத மரத்துக்குச் சமானம். ஈரம் இருக்கிற வரை மரத்தில் புதுப் புது துளிர்கள் முளைத்துக் கொண்டேயிருக்கும். அதைப் போல் அன்பு விட்டுப் போகாத உறவினால் புதுப்புது இன்பங்கள் இருந்து கொண்டேயிருக்கும்.

உற்ருர் உறவினரோடு குலவி மகிழாதவனுடைய வாழ்க்கை எவ்வளவு செல்வம் நிறைந்ததானாலும் பயனற்றது :

523. அளவளா வில்லாதான் வாழ்க்கை குளவளாக்
கோடின்றி நீர்நிறைந் தற்று.

ப. ரை : அளவளாவு இல்லாதான் வாழ்க்கை கோடு இன்றி குளவளா நீர் நிறைந்த அற்று = உறவினர்களோடு குலவுதல் இல்லாதவனுடைய வாழ்க்கை (செல்வம் நிறைந்ததானாலும்) கரையில்லாத குளத்தில் நீர் நிறைந்ததைப்போன்றது.

பொ. ரை : குலவி மகிழ உற்ருர் உறவினர்கள் இல்லாதவனுடைய வாழ்க்கை (செல்வம் நிறைந்த தானாலும்) கரையில்லாத ஏரியில் நீர் நிறைந்ததை ஒக்கும்.

வி - ம் : கரையில்லாத குளத்தில் நிரம்புகிற நீர் குளத்தில் தங்கி விவசாயத்துக்கோ வேறு உருப்படியாகும் காரியத்துக்கோ உதவாமல் பல பக்கங்களிலும் வழிந்தோடி வீணாகப் போய்விடும். அதைப் போல அளவளாவும் பந்து மித்திரர்

கள் இல்லாதவனுடைய வாழ்க்கை (செல்வம் நிறைந்தாலும்) யாருக்கும் பயன்படாது. மேலும் குளத்துக்குக் கரையிருப்பது தண்ணீருக்குப் பாதுகாப்பு; அதைப் போல் பந்து மித்திரர்கள் சூழ்ந்திருப்பது ஒருவனுடைய வாழ்க்கைக்குப் பாதுகாப்பு. 'நீர் நிறைந்த அற்று' என்பதனால் வாழ்க்கை செல்வம் நிறைந்ததானாலும் என்பதை சேர்த்துப் பொருள் கொள்ள வேண்டும்.

செல்வத்தின் பயன்களைச் சரியாக அடைய வேண்டுமானால் :

524. சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்.

ப. ரை : செல்வம்தான் பெற்றத்தால் பெற்றபயன் சுற்றத்தால் சுற்றப்பட ஒழுகல்=செல்வத்தை ஒருவன் பெற்றதனால் அடையக் கூடிய பயன் சுற்றத்தார் தன்னைச் சுற்றிக் கொண்டிருக்கும்படியாக நடந்து கொள்வதுதான்.

பொ. ரை : ஒருவன் செல்வம் பெற்றவனாக இருப்பதன் பயன் உற்றார் உறவினர்கள் தன்னைச் சூழ்ந்திருக்கும்படியாக நடந்து கொள்வதேயாகும்.

வி-ம் : 'சுற்றத்தால் சுற்றப்படல்' என்பது நிரம்ப உற்றார் உறவினர்கள் உள்ளவனாக இருத்தல்.

செல்வம் பெற்றவன் பந்துமித்திரர்கள் எப்போதும் தன்னைச் சூழ்ந்திருக்கும்படியாக நடந்து கொள்வது எப்படியென்றால் :

525. கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப் படும்.

ப. ரை : கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய சுற்றத்தால் சுற்றப்படும் = நன்கொடை கொடுப்பதும் இனிய சொற்கள் பேசுவதும் உள்ளவனாக இருந்தால் அடுக்கடுக்கான பல சுற்றத்தார்களால் சூழப்படுவான்.

பொ. ரை : வெகுமதிகளைக் கொடுப்பதும் இனிமையான வார்த்தைகளைப் பேசுவதும் செய்தால் ஒருவன் அணியணியாகவுள்ள சுற்றத்தார்களால் சூழப்பட்டவனாகி விடுவான்.

வி-ம் : 'கொடுத்தல்' என்பது கேட்டதைக் கொடுப்பது மட்டுமல்ல. தானாகவும் பிறருக்குக் கொடுப்பது.

கொடைக் குணமும் இனிய வார்த்தைகளும் உள்ளவனாக இருப்பதோடு ஒருவன் கோபமில்லாதவனாகவும் இருந்தால்:

526. பெருங்கொடையான் பேணான் வெகுளி யவனின்
மருங்குடையார் மாநிலத் தில்.

ப. ரை: பெரும் கொடையான் வெகுளி பேணான் அவனின் மருங்குடையார் மாநிலத்து இல் = பெரிய கொடையாளியாகவும் கோபத்தைப் பாராட்டாதவனாகவும் உள்ள அவனைக் காட்டிலும் சுற்றத்தால் சூழப்பட்டுள்ளவர்கள் இந்தப் பெரிய உலகத்தில் இல்லை.

பொ. ரை: பெரிய கொடையாளியாகவும் கோபம் கொள்ளாதவனாகவும் உள்ளவனைக் காட்டிலும் பக்கபலம் உள்ளவர்கள் இந்தப் பெரிய உலகத்தில் இல்லை.

வி-ம்: 'பெருங்கொடை' என்பது பெரிய தொகையான கொடையைக் குறிப்பதல்ல. 'பலபேருக்குக் கொடுத்தல்' என்பதைக் குறிப்பது. 'மருங்கு' என்றால் 'பக்கம்' அல்லது 'சுற்றிலும்' என்பது. 'மருங்குடையான்' என்பது 'தன்னைச் சுற்றிலும் பக்கபலமாக உள்ள துணைப்பெருக்கம் உள்ளவன்' என்பது பொருள். கோபத்தைப் பற்றி இங்கெதற்குச் சொல்லப்பட்டது என்றால், கொடைக் குணத்தால் பலபேர் உறவினர்களாக வந்து சேருவார்கள் என்பதையும் கோபம் இல்லாதவனாக இருந்தால் சேர்ந்தவர்கள் பிரிந்து போகாமல் இருப்பார்கள் என்பதையும் குறிக்க.

துணைவர்கள் பெருக்கம் எப்படிப் பட்டவர்களுக்கு அதிகமாக இருக்குமென்றால்:

527. காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு
மன்னநீ ரார்க்கே யுள.

ப. ரை: காக்கை கரவா கரைந்து உண்ணும்; ஆக்கமும் அன்ன நீரார்க்கே உள = காகம் மறைக்காமல் கரைந்து (ஓசை காட்டி மற்ற காகங்களையும் கூவி) உண்ணும்; (அதைப் போல) ஆள்பலமும் அப்படிப்பட்ட குணமுடையவர்களுக்கே உண்டாகும்.

பொ. ரை: காகம் (உணவைக் கண்ட உடனே தனக்கு மட்டும் என்று மறைக்காமல்) கரைந்து கத்தி (மற்ற காகங்களையும் அழைத்து) உண்ணும்; அதைப்போல துணைவர் பெருக்கமும் காக்கையைப்போலப் பிறரையும் அழைத்து அவர்களுக்கும் கொடுத்துத் தம் செல்வத்தை அனுபவிக்கும் இயல்புடையவர்களுக்கே உண்டாகும்.

வி-ம் : 'ஆக்கம்' என்பதற்கு இந்த இடத்தில் 'ஆள்பலம்' என்று பொருள். 'நீர்' என்பது 'குணம்' அல்லது 'இயல்பு'.

சாதாரண மக்கள் தங்கள் சுற்றத்தாரைக் கூட்டமாகக் கூட்டி எல்லாரும் சரிசமமாக விருந்துண்டு குலவி மகிழலாம். ஆனால் ஒரு அரசன் தன் சுற்றமான துணைவர்களை அழைத்து அளவளாவும்போது அவரவர்களுடைய தகுதிக்குத்தக்கபடி வரிசை செய்ய வேண்டும் :

528. பொதுநோக்கான் வேந்தன் வரிசையா நோக்கி
னதுநோக்கி வாழ்வார் பலர்.

ப. ரை : வேந்தன் பொது நோக்கான் வரிசையா நோக்கின் அது நோக்கி வாழ்வார் பலர் = அரசன் (தன் துணைவர்கள் எல்லாரையும்) ஒரே மாதிரியாக மதிக்காமல் (அவர்களுடைய தகுதியின்) வரிசைப்படி மதித்தால் அதை எதிர் நோக்கி (அவனோடு சுற்றமாக) இருப்பவர்கள் பலர்.

பொ. ரை : ஒரு அரசன் தன் சுற்றமாகிய துணைவர்கள் எல்லாரையும் ஒரே மாதிரியாகக் கருதிவிடாமல் அவரவர்களுடைய பதவிக்குத் தக்கபடி வரிசை நடத்த வேண்டும். அதை விரும்பியே அரசனுடன் உறவாக ஒட்டியிருப்பவர்கள் அநேகர்.

வி-ம் : 'வரிசையா நோக்கின்' என்பது அவரவர்கள் அந்தஸ்துக்குத் தக்கபடி வெகுமதி கொடுத்து ஆதரித்தல்.

ஒருவனுக்குத் துணையாக இருப்பவர்கள் சில சமயங்களில் அவனை விட்டுப் பிரிந்து போய் விடுவதும் உண்டு :

529. தமராகித் தற்றுறந்தார் சுற்ற மமராமைக்
காரண மின்றி வரும்.

ப. ரை : தமராகி தன் துறந்தார் சுற்றம் அமராமை காரணம் இன்றி வரும் = சுற்றத்தினராக இருந்து. தன்னை விட்டுப் பிரிந்து போகிறவர்களுடைய உறவு பொருந்தாமற் போவது (தன்னிடம்) காரணமில்லாமலும் ஏற்படும்.

பொ. ரை : தனக்குச் சுற்றமாக இருந்து உறவு பொருந்தாமல் தன்னைவிட்டுப் பிரிந்து போகிறவர்களும் உண்டு. (அப்படிப் பிரிந்து அவர்களே போய் விடுவது) தன்னிடத்தில் ஒரு குற்றமும் இல்லாமலும் நிகழ்வதுண்டு.

வி-ம் : சுற்றமாக இருந்த ஒருவன் சமயத்தில் தனக்கு உதவியற்றவனைப் பிரிந்து போய் விடுவதுண்டு. அதற்குக் காரணம் ஒரு குற்றமும் தன்னிடம் இல்லாமலும் இருக்கலாம்.

அப்படிப்பட்டவனுடைய சுற்றம் பொருந்தாது. விட்டுவிட வேண்டியதுதான் என்பது கருத்து.

அப்படிப் பிரிந்து போன ஒருவன் ஏதாவது காரணங் கருதி மீண்டும் தன்னிடம் வந்தால் :

530. உழைப்பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன்
இழைத்திருந் தெண்ணிக் கொளல்.

ப. ரை : உழை பிரிந்து காரணத்தின் வந்தானை வேந்தன் இழைத்து இருந்து எண்ணி கொளல்=தன்னை விட்டுப் பிரிந்து போய் (மறுபடியும்) ஒரு காரணத்தைக் கொண்டு தன்னிடம் வருகிறவனை அரசன் நுட்பமாகவும் நிதானமாகவும் ஆராய்ந்து எண்ணிப்பார்த்துத் தான் (சேர்த்துக்) கொள்ள வேண்டும்.

பொ. ரை : (தன்னிடம் உறவாக இருந்து, தான் ஒரு குற்றமும் செய்யாதிருக்கத்) தன்னை விட்டுப் பிரிந்து போன ஒருவன் ஏதாவது ஒரு காரணத்துக்காக மீண்டும் தன்னிடம் (சேர) வந்தால் அரசனானவன் நுணுக்கமாகவும் அமைதியுடனும் ஆராய்ந்து எண்ணித்தான் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

வி - ம் : திடீரென்று பிரிந்து போய், திடீரென்று மறுபடியும் சேர வருகின்றவனை ஆலோசிக்காமல் ஒரு அரசன் உடனே சேர்த்துக் கொள்ளக் கூடாது என்பது கருத்து. மற்றவர்களை விட இது ஒரு அரசனுக்கே குறிப்பாகச் சொல்லப்படுவது. ஏன் எனில் தனக்குத் துணைவனாக இருந்த ஒருவன் காரணமின்றித் தன்னைவிட்டுப் பிரிந்திருந்து, திடீரென்று மீண்டும் தன்னோடு உறவு கொண்டாட வந்தால் அதில் தன் பகையரசர்களுக்கு உளவாக வந்த சதி இருந்தாலும் இருக்கலாம். அதனால் அவனை 'இழைத்து, இருந்து, எண்ணி, கொளல்' வேண்டும்.

அதி. 54—பொச்சாவாமை

['பொச்சாவாமை' என்பதற்கு 'மறந்து விடாமை' என்பது பொருள். வாழ்க்கையின் இன்பங்களில் ஒருவன் தன்னுடைய கடமைகளையும் நன் முயற்சிகளையும் மறந்து அசாக்ரதையாக இருந்து விடக் கூடாது என்பதைச் சொல்லுவது. எல்லாருக்கும் பொது அறிவு.]

531. இறந்த வெகுளியிற் றீதே சிறந்த
வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு.

ப. ரை: சிறந்த உவகை மகிழ்ச்சியில் சோர்வு இறந்த வெகுளியின் தீதே=மிக நல்ல இன்பங்களின் களிப்பில் (கடமைகளை) மறந்து விடுவது அளவு கடந்த கோபத்தைக் காட்டிலும் தீமை உண்டாக்கக் கூடியது.

பொ. ரை: குற்றமற்ற இன்பங்களின் களிப்பினாலும் மயங்கிக் கடமைகளை மறந்து விடுவது அளவுகடந்த கோபத்தைக் காட்டிலும் தீமை உண்டாக்கிவிடக் கூடியது.

வி-ம்: அளவு கடந்த கோபம் பிறருக்கு அபாயமுண்டாக்கி விடலாம். சந்தோஷ மயக்கத்தினால் கடமைகளை மறந்து சோர்ந்து விடுவது தனக்கே அபாய முண்டாக்கி விடக்கூடியது. மகிழ்ச்சி மிகுவதும் கோபம் மிகுவதும் வெறி கொடுக்கும் இயல்புள்ளவை. மகிழ்ச்சி வெறியில் கடமைகளை மறந்து விடுவது கோப வெறியில் கொடுமை செய்து விடுவதைக் காட்டிலும் தீமை உண்டாக்கக் கூடியது. 'இறந்த' என்பதற்கு 'எல்லை கடந்த' என்பது பொருள். 'சிறந்த உவகை மகிழ்ச்சி' என்பது 'சிறப்பான வெகு நியாயமான வழியில் அனுபவிக்கிற இன்பங்களால் வரும் மகிழ்ச்சி'. குற்றமற்ற இன்ப மகிழ்ச்சியிலும் தர்மங்களை மறந்துவிடக் கூடாது என்பது கருத்து.

கடமைகளை மறந்து மகிழ்ச்சியில் மயங்கி விட்டால்:

532. பொச்சாப்புக் கொல்லும் புகழை யறிவினை
நிச்ச நிரப்புக்கொன் றாங்கு.

ப. ரை: நிச்ச நிரப்பு அறிவினை கொன்றாங்கு பொச்சாப்பு புகழை கொல்லும்=நித்திய வறுமை அறிவை அழித்து விடுவது போல (கடமைகளை) மறந்திருப்பது புகழை அழித்து விடும்.

பொ. ரை: நித்திய தரித்திரம் ஒருவனுடைய அறிவுகளையெல்லாம் கெடுத்து விடுவதைப் போல (நித்தமும் அனுபவிக்கிற இன்பங்களின் மகிழ்ச்சியினால் தர்மங்களை) மறந்து விடுவது ஒருவனுடைய கீர்த்தியைக் கெடுத்து விடும்.

வி-ம்: 'நிச்சம் நிரப்பு' என்பது 'நித்தம் தரித்திரம்' என்பதாம். 'நிரப்பு' என்பதற்கு 'வறுமை' என்பது பொருள்.

கடமைகளை மறந்து களிப்பில் இருந்து விட்டால் உள்ள புகழ் போய்விடும் என்பது மட்டும் அல்ல; அப்படிப்பட்ட யாரும் உலகத்தில் புகழ் அடைவதே இல்லை:

533. பொச்சாப்பார்க் கில்லை புகழ்மை யதுவுலகத்
தெப்பானூ லோர்க்குந் துணிவு.

ப. ரை: பொச்சாப்பார்க்கு புகழ்மை இல்லை; அது உலகத்து எப்பால் நூலோர்க்கும் துணிவு=(கடமைகளை) மறந்து விடுகிறவர்களுக்குப் புகழ் அடையும் தகுதி இல்லை; அது உலகத்தின் எந்தப் பகுதியிலும் உள்ள அறிவு நூல் உடையவர்களுக்கும் முடிவான உண்மை.

பொ. ரை: கடமைகளை மறந்து களிப்பில் மயங்கினவர்கள் யாரும் கீர்த்தியடையத் தகுந்தவர்கள் அல்ல; இது உலகத்திலுள்ள எந்த நாட்டிலுமுள்ள அறிவாளிகள் அனைவரும் கண்ட உண்மை.

வி-ம்: 'புகழ்மை' என்பது 'புகழுடையும் தன்மை'. 'பால்' என்பது 'பகுதி'. 'உலகத்து எப்பால் நூலோர்க்கும்' என்பது 'உலகத்தின் எந்தப் பகுதியிலும் உள்ள நூலோர்க்கும்' என்பதாகிறது. அதனால் 'எல்லா நாடுகளிலும் எல்லா மொழிகளிலும் எந்தக் கொள்கைக்காகவும் நூல்களை எழுதினவர்கள் எல்லாருக்கும்' என்று பொருள் தர நிற்பது.

களிப்பில் மயங்கிக் கடமைகளை மறந்தவர்களை வேறு யாரும் கெடுக்காவிட்டாலும் அந்தக் களிப்பே கெடுத்துவிடும்:

534. அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

ப. ரை: அச்சம் உடையார்க்கு அரண் இல்லை; ஆங்கு பொச்சாப்பு உடையார்க்கு நன்கு இல்லை=அச்சம் உள்ளவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை; அதுபோல கடமைகளை மறந்தவர்களுக்கு நல்வாழ்வு இல்லை.

பொ. ரை: பயம் உள்ளவர்களுக்கு (அவர்கள் எவ்வளவு பாதுகாப்பான இடத்திலிருந்தாலும் அவர்களுடைய பயமே அவர்களைக் குலைத்து விடுமாகையால்) அவர்களுக்குப் பாதுகாப்பே இல்லை; அதுபோல களிப்பினால் கடமைகளை மறந்திருப்பவர்களுக்கு (அந்த களிப்பே அவர்களைக் கெடுத்து விடுமாகையால்) நல்வாழ்வே இல்லை.

வி-ம்: 'அரணில்லை' என்பது 'அரணால் பயனில்லை' என்பதாம். 'நன்கு' என்பது 'நல்வாழ்வு'.

இன்பங்களில் மயங்கிக் கடமைகளை மறந்தவனுக்கு ஏன் நல்வாழ்வு இருக்காது என்றால்:

535. முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை
பின்னூ றிரங்கி விடும்.

ப. ரை: இழுக்கியான் முன்னுறக் காவாது தன் பிழை பின் ஊறு இரங்கிவிடும் = (தன் கடமைகளை களிப்பால்) மறந்து விடுகிறவன் (தனக்கு வரப் போகிற துன்பங்களை) முன்னால் தடுத்துக் கொள்ள முடியாதவன்; (அந்த) தன் குற்றத்தால் பின்னால் துன்பங்களில் வருந்துவான்.

பொ. ரை: இன்ப காலத்தில் தன் கடமைகளை மறந்து விடுகிறவன் பின்னால் வரக்கூடிய துன்பங்களை உணர்ந்து முன் எச்சரிக்கையுடன் இருக்கமாட்டான். அந்த அவனுடைய மறதிக் குற்றத்தால் பின்னால் துன்பங்கள் வந்தே தீரும். அதனால் அவன் நொந்தே போவான்.

வி-ம்: 'இழுக்குதல்' என்பதற்கு 'மறந்து விடுதல்' என்பதும் ஒரு அர்த்தம். 'இரங்கிவிடும்' என்பதிலுள்ள 'விடும்' என்பது 'துன்பப்பட்டே தீரவேண்டும்' என்ற நிச்சயத்தைக் குறிப்பது.

மகிழ்ச்சியுள்ள காலங்களில் கடமைகளை மறந்து விடுவதனால்தான் உலகத்தில் பல பேருக்குப் பலவிதமான துன்பங்கள் வந்து விடுகின்றன. அதனால்:

536. இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை
வாயி னதுவொப்ப தில்.

ப. ரை: யார் மாட்டும் என்றும் இழுக்காமை வழுக்காமை வாயின் அது ஒப்பது இல் = யாரிடத்திலும் எப்போதும் (கடமைகளை) மறந்து விடாமலிருப்பது தவறுமல் இருக்க முடிந்தால் அதற்கு ஈடானது ஒன்றுமில்லை.

பொ. ரை: யாரிடத்திலும் (அவர்களுக்குச் செய்ய வேண்டிய) கடமைகளைச் செய்வதை எப்போதும் மறந்து விடாமல் இருக்கும் குணம் (ஒருவனுக்கு) வாய்க்குமானால் அதற்கு ஈடான (மேன்மை) வேறொன்றும் இல்லை.

வி-ம்: 'யார் மாட்டும்' என்பது சிறியார்—பெரியார்; ஏழை—பணக்காரன், கற்றவன்—கல்லாதவன் என்பன போன்ற ஏற்றத் தாழ்வுகளைக் கருதாமல் 'எல்லாரிடத்திலும்' என்ற தைக் குறிப்பது. 'எப்போதும்' என்பது மகிழ்ச்சி காலத்தில் மறந்து போவது மட்டுமின்றி 'எந்தக் காலத்திலும்' என்பதைக் குறிப்பது.

இப்படி யாரிடத்தும் எப்போதும் கடமைகளை மறக்காமல் இருப்பவன் எந்தக் காரியத்தையும் அதனால் செய்துவிட முடியும்:

537. அரியவென் ருகாத வில்லைபொச் சாவாக்
கருவியாற் போற்றிச் செயின்

ப. ரை: பொச்சாவா கருவியான் போற்றி செயின் அரிய என்று ஆகாத இல்லை = மறவாமை என்ற கருவியினல் கவனத்தோடு செய்தால் கடினம் என்று முடியாதது ஒன்றுமில்லை.

பொ. ரை: கடமைகளை மறந்து விடாமல் இருப்பது என்ற ஆயுதத்தைக் கொண்டு கவனத்துடன் செய்தால் முடியாத காரியம் என்பது ஒன்றுமில்லை.

வி-ம்: 'பொச்சாவாமை கருவியான்' என்பது 'மறவாமையே ஒரு கருவி' என்று சொன்னது. முன் 'காலமறிதல்' என்ற அதிகாரத்தில் காலமறிதலே ஒரு கருவி என்பதை 'கருவியான் காலமறிந்து செயின்' என்றதைப் போல்.

மறந்து விடாமல் இருக்க வேண்டுமென்ருல் எதை மறந்து விடாமல் இருப்பது? :

538. புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்.

ப. ரை: புகழ்ந்தவை போற்றி செயல் வேண்டும்; செய்யாது இகழ்ந்தார்க்கு எழுமையும் இல் = (முன்னே செய்து பிறரால்) புகழப்பட்ட நல்ல காரியங்களை (மறந்து விடாமல்) கருத்தோடு செய்து கொண்டேயிருக்கவேண்டும்; அப்படிச் செய்யாது மறந்து விடுகிறவர்களுக்குப் பின்வரும் ஏழு பிறவிகளிலும் நன்மை இல்லை.

பொ. ரை: (முன், தான் செய்து பிறரால் புகழப்பட்ட) நல்ல காரியங்களை மறந்துவிடாமல் அதே சிந்தனையாக மீண்டும் மீண்டும் செய்து வரவேண்டும்; அப்படிச் செய்யாமல் (புகழ்ந்த காரியங்களை) மறந்து விடுகிறவர்களுக்கு அதனல் வரக்கூடிய புண்ணியமும் நல்ல மறுமைப் பயனும் இல்லாமற் போய்விடும்.

வி-ம்: 'புகழ்ந்தவை' என்பது புகழுக்குரிய காரியங்கள் என்று மேலோர்களால் சொல்லப்பட்டு, தானும் உணர்ந்து முன்னே செய்ததனல் தனக்கும் புகழுண்டாக்கி இப்போது அடைந்துள்ள மகிழ்ச்சிக்குக் காரணமாக இருந்த நல்ல காரியங்கள். நல்ல இன்பங்களை அடைந்து மகிழ்ச்சியுடன் இருக்கின்றவன் அந்த மகிழ்ச்சியில் மயங்கிக் கடமைகளையும் நன் முயற்சிகளையும் மறந்துவிடக் கூடாது என்று இந்த அதிகாரத்தின் முதற் குறளில் சொல்லப்பட்டது. அதை நினைப்

பூட்டி, முன் புகழ்தந்து இன்பங்களுக்குக் காரணமாக இருந்த நல்ல காரியங்களை மறந்து விடக் கூடாது என்பது வலியுறுத்தப்படுகிறது. 'புகழ்ந்தவை' என்று இறந்த காலத்திற் சொல்லப்படுவதால் முக்காலத்துக்கும் பொதுவான நீதி நூல்கள் சொல்லுகின்ற பற்பல புகழ்ச்சிக் குரிய காரியங்களை குறிக்காது. 'எழுமை' என்றது 'மறுமைப் பிறவிகள்'.

இப்படி நல்ல காரியங்களைச் செய்து அதனால் அடைந்த மகிழ்ச்சியிலும் பெருமையிலும் மயங்கிக் கடமைகளை மறந்து கெட்டுப் போனவர்கள் பலர் உண்டு :

539. இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து.

ப. ரை : தாம் தம் மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்துஇகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக= தாம் தம்முடைய மகிழ்ச்சியில் பெருமை யடைகின்ற பொழுது (மகிழ்ச்சியினால் புகழ்தந்த காரியங்களை) மறந்து விட்டதனால் கெட்டுப் போனவர்களை நினைக்க வேண்டும்.

பொ. ரை : ஒருவன் தான் தன்னுடைய சந்தோஷத்தில் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்தில் (அப்படிப்பட்ட மகிழ்ச்சியினால் தம்முடைய கடமைகளை) மறந்து கெட்டுப் போனவர்களுடைய சரித்திரங்களை எண்ணிப் பார்க்க வேண்டும்.

வி-ம் : 'இகழ்ச்சி' என்பதற்கு இங்கே 'மறதி' என்று பொருள். நல்ல காரியங்களால் புகழும் மகிழ்ச்சியும் வரும். அந்த மகிழ்ச்சியிலும் சிறப்பிலும் மயங்கி மேலும் செய்ய வேண்டிய நன் முயற்சிகளை மறந்து விட்டால் கெடுதி வரும்.

பொதுவாக மறதிக்கு இடம்கொடுக்காமல் எந்தக் காரியத்தையும் சிந்தனை விடாமல் எண்ணிக் கொண்டிருந்தால் எண்ணியபடி முடிக்கலாம் :

540. உள்ளிய தெய்த லெளிதுமன் மற்றுந்தா
னுள்ளிய துள்ளப் பெறின்.

ப. ரை : உள்ளியது எய்தல் எளிது; மற்றும் தான் உள்ளியது உள்ள பெறின்= எண்ணினதை (எண்ணினபடி) அடைதல் எளிது; ஆனால் தான் எண்ணினதை (அடிக்கடி) எண்ணிக் கொண்டே யிருக்கப் பெற்றால்தான்.

பொ. ரை: நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பது சுலபம்; ஆனால் (நினைத்து மறந்து விடாமல்) நினைத்ததை நினைத்துக் கொண்டே இருக்க முடியுமானால்தான்.

வி-ம்: நினைத்ததை நினைத்தபடி முடிக்கலாம் என்பது நல்ல காரியங்களையும் நல்ல வழிகளையும் பற்றித்தான் சொல்லப் படுவது. தீய ஆசைகளையும் தீய வழிகளில் நினைத்தபடி முடித்துக் கொள்ளலாம் என்று நினைத்து விடக்கூடாது.

அதி. 55—செங்கோன்மை

['செங்கோன்மை' என்பது 'செங்கோல் நடத்தும் தன்மை'. அதாவது அரசன் செம்மையான முறையில் அரசாட்சி நடத்தும் விதம். இது அரசனுக்கே குறிப்பாகச் சொல்லப்படுவது.]

541. ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந்
தேர்ந்துசெய் வஃதே முறை.

ப. ரை: ஓர்ந்து, கண்ணோடாது இறை புரிந்து, யார் மாட்டும் தேர்ந்து செய்வஃதே முறை = (ஒரு வழக்கை) பொறுமையுடன் கேட்டு, ஒரு கட்சியில் அன்பு செலுத்திவிடாமல், நடுவு நிலைமை காத்து யாரிடத்திலும் விசாரித்தறிந்து, தீர்ப்பு செய்கிற அதுதான் செங்கோல் முறை.

பொ. ரை: வழக்கை நிதானமாகக் கூர்ந்து கேட்டு, பாரபட்சம் இல்லாமல், நடுவு நிலைமை காத்து, (அதைப் பற்றி விசாரிக்க வேண்டியவர்கள்) யாராக இருந்தாலும் அவர்களை விசாரித்துப் பின் தீர்ப்புச் செய்வதே செங்கோல் முறை.

வி-ம்: 'இறை புரிதல்' என்பது இறைவனுடைய தன்மையைச் செய்தல். இறைவனாகிய கடவுள் உலகத்திலுள்ள எல்லா உயிர்களையும் சமமாகக் காக்கிறான் என்பதைப் போல அரசன் தன் ஆட்சிக்கு உட்பட்ட எல்லாரையும் சரி சமமாகக் காக்க வேண்டும்.

நல்ல அரசாட்சி இல்லையானால் குடிகளிடத்தில் செழிப்பும் பிற நலங்களும் இருக்க முடியாது. அது எப்படிப் போல் என்றால்:

542. வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி.

ப. ரை: உலகெல்லாம் வான் நோக்கி வாழும்; குடி மன்னவன் கோல் நோக்கி வாழும் = உலகத்திலுள்ள உயிர்களெல்லாம்

மழையை எதிர்நோக்கி வாழ்கின்றன ; (அதைப்போல்) ஒரு நாட்டின் குடிகளெல்லாம் அரசனுடைய ஆட்சியை எதிர் நோக்கி வாழ்கின்றார்கள்.

பொ. ரை : உலகத்திலுள்ள உயிர்களின் நல்வாழ்வு மழையைப் பொறுத்தது ; அதைப்போல் ஒரு நாட்டின் குடிமக்களுடைய நல்வாழ்வு அந்த நாட்டின் அரசாட்சியைப் பொறுத்தது.

வி-ம் : மழை தவறினால் உயிர்கள் தவிக்கும் ; அரசாட்சி தவறினால் குடிகள் தவிப்பார்கள்.

அறிவு வளர்வதற்கும் அறங்கள் நடப்பதற்கும் கூட அரசாட்சிதான் ஆதாரம் :

543. அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய்
நின்றது மன்னவன் கோல்.

ப. ரை : அந்தணர் நூற்கும் அறத்துக்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல் = அந்தணர்களுடைய அறிவு நூல்களுக்கும் தர்மங்களுக்கும் ஆதரவாக நிற்பது அரசாட்சி.

பொ. ரை : அந்தணர்கள் (ஓதும் வேதம் முதலிய ஞான) நூல்களின் அறிவு மக்களிடையே பரவுதற்கும் நாட்டில் அறங்கள் சரியாக நடப்பதற்கும் ஆதரவாக இருப்பது அரசாட்சி.

வி-ம் : 'அந்தணர் நூற்கும்' என்பதற்கு, அந்தணர்கள் அந்தண்மைக்காக ஓதுகின்ற நூல்களும் பிறருக்கு விளங்குவதற்காக அவர்கள் அப்போதைக்கப்போது எழுதுகின்ற நூல்களும் சேர்ந்தது. அந்தணர் யார் என்றால் அதற்கு இலக்கணம் வள்ளுவரே வகுத்துவிட்டபடி 'அந்தணர் என்போர் அறவோர் மற்றெவ்வுயிர்க்கும் செந்தண்மை பூண்டு ஒழுகலான்'. அந்த அந்தணர்கள் போற்றுகின்ற நூல்களும் எழுதுகின்ற நூல்களும் 'அந்தணர் நூல்'.

அறிவையும் அறங்களையும் தான் ஆதரிப்பதோடு குடிமக்களின் அன்பையும் ஆதரவையும் அடைகின்ற அரசனே உலகம் போற்றத் தக்கவன் :

544. குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்ன
னடிதழீஇ நிற்கு முலகு.

ப. ரை : குடிதழீஇ கோல் ஓச்சும் மாநில மன்னன் அடிதழீஇ உலகு நிற்கும் = (தன்னுடைய) குடிமக்களின் கருத்தை ஒட்டி அரசாட்சி நடத்தும் பெருநில மன்னவனுடைய பாதங்களைத் தழுவிக்கொண்டு உலகம் நிற்கும்.

பொ. ரை: தன்னுடைய குடி மக்களின் கருத்தை அனுசரித்து அரசாட்சி நடத்தும் பெரிய நாட்டின் மன்னனுடைய பாதங்களிற் பணிந்து அந்நாட்டு மக்கள் வணங்கி நிற்பார்கள்.

வி - ம்: 'மாநில மன்னன்' பெரிய நாட்டின் அரசன். பெரிய நாட்டுக்கு மன்னன் என்ற மமதை கொண்டு தன் இச்சைப் படி அதிகாரம் செய்யாமல் குடிகளின் விருப்பங்களை அறிந்து அதற்கிணங்கி அரசாட்சி நடத்துகிற மன்னன் குடி தழுவி கோல் ஓச்சும் மாநில மன்னன்.

நீதி நெறி தவறாமல் அரசாட்சி நடத்துகின்ற மன்னவனுடைய நாட்டில் பஞ்சம் இருக்காது:

545. இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட
பெயலும் விளையுளுந் தொக்கு.

ப. ரை: பெயலும் விளையுளும் தொக்கு இயல்புளி கோல் ஓச்சும் மன்னவன் நாட்ட = மழை பெய்வதும் விளைவுகளும் சேர்ந்து, முறையோடு அரசாட்சி நடத்துகின்ற அரசனுள்ள நாட்டில் இருக்கும்.

பொ. ரை: நீதி நெறி முறைப்படி அரசு நடத்துகிற மன்னவனுள்ள நாட்டில் மழை பெய்வதும் விளைவுகளும் சேர்ந்து இருக்கும்.

வி - ம்: 'பெயலும் விளையுளும் தொக்கு' என்பது, மழை பருவ காலங்களில் தவறாமல் பெய்யுமானதால் அதற்கேற்றபடி அந்தப் பருவத்து விளைபொருள் தவறாமல் விளையும் என்பது கருத்து. அப்படி மழையும் விளைவும் சேராதிருப்பது எது வென்றால் பருவ காலத்தில் மழை இல்லாமலிருப்பதும் பருவம் தவறி மழை பெய்வதும். பருவத்தில் மழையில்லாவிடில் பயிரிடுவது முடியாது. பருவம் தவறி மழை பெய்தால் இருக்கிற பயிர்களையும் அழித்து விடும்.

ஒரு அரசனுக்கு வல்லமையும் மற்றச் சிறப்புகளும் வருவது ஆயுத பலத்தால் அல்ல:

546. வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉங் கோடா தெனின்.

ப. ரை: வென்றி தருவது வேல் அன்று; மன்னவன் கோல்; அதூஉம் கோடாது எனின் = வெற்றி தருவது வேலாயுதம் அல்ல; (பின் எது வென்றால்) அரசனுடைய ஆட்சி முறை; அதுவும் அந்த ஆட்சி முறை கோணாவில்லாமல் இருந்தால் தான்.

பொ. ரை: ஒரு அரசனுக்குச் சிறப்புகளை உண்டாக்குவது அவனுடைய ஆயுத பலம் அல்ல; பின் எது வென்றால் அவனுடைய ஆட்சி முறை; அதுவும் அந்த ஆட்சி முறை நீதி நெறி தவறாத செங்கோலாக இருந்தால்தான்.

வி-ம்: ஒரு அரசன் நீதி நெறி தவறாத அரசு நடத்தினால் அவனுடைய வெற்றிகளுக்கு ஆயுத பலம் வேண்டியதில்லை; தற்காப்புக்காக அரசனுக்கு ஆயுத பலம் அவசியமென்றாலும் அவனுக்குச் சிறப்புகள் உண்டாக்குவது ஆயுத பலம் அல்லவென்பது தெளிவு. இங்கே 'வென்றி' என்று சொல்லப்படுவது போரின்கண் அடையும் 'வெற்றி' அல்ல. அப்படிப் பொருள் கொண்டால் இந்தக் குறளுக்கு உயிராக உள்ள 'வேல் அன்று' என்ற சொற்றொடர் உயிரற்றுப் போய்விடும். ஆதலால் வென்றி என்பது அரசனுடைய செல்வ பலம், துணைபலம், குடிகளின் ஆதரவு, அன்னிய அரசரின் நன்மதிப்பு முதலியவைகள் சேர்ந்த வல்லமையான 'கொற்றம்' என்ற பொருளைத் தருவது. 'கொற்றம்' என்பது 'வல்லமை'.

முறை தவறாமல் அரசாளும் மன்னவன் குடிமக்களையெல்லாம் பாதுகாக்கிறான். அவனை அவனுடைய முறை தவறாக் குணமே பாதுகாக்கிறது:

**547. இறைகாக்கும் வையக மெல்லா மவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்.**

ப. ரை: வையகமெல்லாம் இறை காக்கும்; முட்டா செயின் அவனை முறைகாக்கும் = உலகத்தையெல்லாம் அரசன் காக்கிறான்; அதை முரணில்லாமல் செய்வானாகில் (அப்படிச் செய்யும்) அரசு முறையே அவனைக் காக்கும்.

பொ. ரை: தன் நாட்டின் மக்களையெல்லாம் காப்பவன் மன்னவன்; முட்டில்லாதபடி அரசு செய்தால் அம்மன்னவனைக் காப்பது அவனுடைய நல்ல அரசாட்சி முறையே.

வி-ம்: 'வையக மெல்லாம்' என்பது 'நாட்டையும் நாட்டிலுள்ள மக்கள் எல்லாரையும்' என்பதைக் குறிப்பது. 'முட்டாச் செயின்' என்பதற்கு 'இறைகாக்கும் தன்மைக்கு முரணில்லாமல் செய்தால்' என்று பொருள். 'முட்டு' என்பது முரண்.

'இறை காக்கும்' தன்மை எதுவென்றால் பாரபட்சமின்றி நீதி செலுத்திக் குற்றங்களைத் தண்டித்துக் குணங்களைப் பாதுகாப்பது. அப்படிச் செய்யாவிட்டால்:

548. எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன்
றண்பதத்தாற் றானே கெடும்.

ப. ரை: எண்பதத்தான் ஓரா முறை செய்யா மன்னவன் தண் பதத்தால் தானே கெடும்=எண்ணப்பட்ட தன்னுடைய பதவிக்கு ஏற்றபடி ஆராய்ந்து நீதி செலுத்தாமல் அரசன் இரக்கம்காட்டி விட்டாலும் கூட கெட்டுப் போகும்.

பொ. ரை: தன் பதவிக்கு எண்ணப்பட்ட தன்மையோடு (குற்றங் குறைகளை) விசாரித்து நீதி நடத்தாமல் ஒரு அரசன் இரக்கம் காட்டிவிடுவதனாலேயும் கூட (செங்கோன்மை) கெட்டுப் போகும்.

வி-ம்: 'எண்பதம்' என்பது இங்கே 'எளிய பதம்' அல்ல, 'எண்ணப்பட்ட பதம்'. 'ஓரா' என்பது 'ஓர்ந்து' என்ற பொருளில் நிற்கிறது. 'ஓர்ந்து முறை செய்யா' என்பது 'ஆராய்ந்து தண்டிக்க வேண்டியதை தண்டித்து நீதி செய்யாமல்' என்ற பொருள் தருவது. 'தண்பதம்' என்பதற்கு 'தாழ்ந்த நிலை' என்பது பொருளல்ல. 'தண்ணளி' என்பது பொருள். 'தண்ணளி' என்றால் 'இரக்கம்'. 'தண்பதத்தாற்றானே' என்பதற்கு 'இரக்க குணத்தினாலேயே' என்பது அர்த்தம். 'கெடும்' என்பதற்கு செங்கோல் முறை 'கெட்டுப் போகும்' என்று பொருள். தண்டிக்க வேண்டியவர்களை தண்டிக்காமல் இரக்கம் காட்டி விட்டாலும் செங்கோன்மை கெட்டுப்போகும் என்பது கருத்து.

குற்றம் செய்தவர்களைத் தண்டிக்காமல் இரக்கம் காட்டுவது செங்கோல் மன்னன் தன் கடமையில் தவறுவதாம்.

549. குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்.

ப. ரை: குடி புறங்காத்து ஓம்பி குற்றம் கடிதல் வடு அன்று வேந்தன் தொழில்=குடிகளுக்குப் பிறர் துன்பம் செய்யாதபடி தீமைகளைத் தடுத்துப் பாதுகாப்பளிப்பதற்காக குற்றங்களை தண்டிப்பது தவறல்ல; அது அரசனுடைய வேலை.

பொ. ரை: குடிகளுக்குப் பிறர் துன்பம் செய்யாதபடி தீமைகளைத் தடுத்துப் பாதுகாப்பளிப்பதற்காகக் குற்றம் செய்கிறவர்களை தண்டிப்பது தவறன்று; அதுதான் அரசன் செய்ய வேண்டிய வேலை.

வி-ம்: குடி புறங்காத்து ஓம்புவதற்காகக் குற்றங்கடிதல் தவறல்ல; அதுதான் அரசனுடைய கடமை—என்பது கருத்து.

'காத்து' என்பதற்கு 'தடுத்து' என்றும் 'ஓம்பி' என்பதற்கு 'பாதுகாப்பைக் கருதி' என்றும் பொருள் கொள்ள வேண்டும்.

கொலைக் குற்றம் செய்கிறவர்களை அகற்றி விடுவதும் செங்கோன்மையைச் சேர்ந்ததேயாகும் :

550. கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனொடு நேர்.

ப. ரை : கொலையின் கொடியாரை வேந்து ஒறுத்தல் பைங்கூழ் களைகட்டதனொடு நேர் = கொலை செய்யும் கொடியவர்களை அரசன் அப்புறப்படுத்துவது பயிர்களுக்குக் களை பறிப்பதோடு ஒத்தது.

பொ. ரை : கொலை செய்யும் பாதகர்களை அரசன் அகற்றிவிடுவது, பயிர்களுக்குக் களையெடுப்பதற்குச் சமானம்.

வி - ம் : 'வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்தல்' என்று வலிந்து பதங்களைச் சேர்த்து 'கொடியவர்களையெல்லாம் கொன்றுவிட வேண்டும்' என்று பொருள் கொள்ளுவது திருவள்ளுவருடைய கருத்துகளுக்கு முற்றிலும் விரோதமானது. மேலும் தீ வைப்பவர், விஷம் கொடுப்பவர், ஆயுதங்களால் கொலை செய்பவர், திருடர், வழி பறிப்பவர், கொள்ளையடிப்பவர், பிறர் மனைவியிடம் விபசாரம் செய்பவர் ஆகிய இவர்களெல்லாம் கொன்றுவிடத்தக்க கொடியார் என்று குறிப்பது திருக்குறளின் பெருமைக்குத் தீங்கானது. கொலை செய்தவனைக் கொன்று விடுவதில் குற்றமில்லை என்பதைச் சொல்லவும் கூசி 'கொன்றுவிடுதல்' என்பதைச் சொல்லாமல்' ஒறுத்தல்' என்று சொல்லுகின்றார். 'ஒறுத்தல்' என்பது கொல்லுவது என்பது அல்ல, சமயோசிதம் போல் 'தண்டிப்பது' என்ற பொருளே தருவது. கொலைக்குக் கொலை சரியான தண்டனை யென்று திருவள்ளுவர் சொல்லவும் கூசினார் என்பதை அனுமானிக்க இடமிருக்கிறது. ஆதலால் 'வேந்து கொடியாரைக் கொலையின் ஒறுத்து' என்று பதங்களைக் கூட்டிக் கொன்றுவிடத்தான் வேண்டும் என்று பொருள் கொள்வது திருவள்ளுவருடைய கருத்தாக இருக்க முடியாது. 'களையெடுப்பது' என்ற உபமானத்திலும்கூட களைகளைப் பயிர்களுக்கிடையிலிருந்து அப்புறப்படுத்துவது காரியமேயல்லாமல் அவற்றை அழிக்கவேண்டுமென்பது காரியமல்ல. பிடுங்கி எறியப்பட்ட களை பயிரில்லாத வேறு இடத்தில் விழுந்து அங்கே உயிரோடிருந்து விடுவதைப் பற்றிக் களை பறித்தவன் கவலைப்பட மாட்டான்.

அதி. 56—கொடுங்கோன்மை

['கொடுங்கோன்மை' என்பது கொடுமையுள்ள அரசாட்சி. இது செங்கோன்மைக்கு எதிரிடையானது. 'செங்கோன்மையை' விரும்பச் சொன்னது. 'கொடுங்கோன்மை'யை விலக்கச் சொல்வது.]

551. கொலைமேற் கொண்டாரிற் கொடிதே யலைமேற்கொண் டல்லவை செய்தொழுகும் வேந்து.

ப. ரை: அலை மேற்கொண்டு அல்லவை செய்தொழுகும் வேந்து கொலை மேற் கொண்டாரின் கொடிதே = (குடிகளை) துன்பப் படுத்துதலை மேற்கொண்டவனாக (அரசு முறைக்குத்) தகாத வற்றைச் செய்வதே தொழிலாக உள்ள அரசன் கொலைத் தொழிலை மேற்கொண்டவர்களைக் காட்டிலும் கொடியவன்.

பொ. ரை: குடிகளைத் துன்பப்படுத்திக் கொண்டு அரசனுக்குத் தகாத காரியங்களைச் செய்து வாழும் வேந்தன், கொலை காரர்களைக் காட்டிலும் கொடியவன்.

வி-ம்: கொலைகாரனிடத்திலிருந்து தப்பித்துக்கொள்ள முடியும். ஆனால் கொடுங்கோல் மன்னன் தப்பித்துக்கொள்ள விட மாட்டான். அதனால் அவனைக் காட்டிலும் இவன் கொடியவன்.

கொடுங்கோல் அரசன் 'அலைமேற்கொள்வது' எப்படியென்றால் நினைத்தபோதெல்லாம் காரணமில்லாமல் பொருள் கேட்பான்:

552. வேலொடு நின்றா னிடுவென் றதுபோலுங் கோலொடு நின்றா னிரவு.

ப. ரை: கோலொடு நின்றான் இரவு வேலொடு நின்றான் இடு என்பது போலும் = அரசாட்சி அதிகாரமுள்ளவன் (திடீரென்று) பொருள் கேட்பது வேலொடு (மறைந்து) நின்ற வழிப்பறிக்காரன் (திடீரென்று தோன்றி) 'உள்ளதையெல்லாம் கொடு' என்று (பயமுறுத்திக்) கேட்பதைப் போன்றது.

பொ. ரை: அரசாட்சியின் பலங்களோடு கூடிய கொடுங்கோல் மன்னவன் தன் குடிகளிடத்தில் திடீரென்று பொருள் கேட்பது, ஆயுதபலத்தோடு மறைந்து நின்ற வழிப்பறிக்காரன் திடீரென்று தோன்றி 'உள்ளதையெல்லாம் போடு' என்று கேட்பதற்குச் சமானம்.

வி-ம்: 'கோலொடு' என்பது 'அதிகார பலத்தோடு' என்பதையும் 'வேலொடு' என்பது 'ஆயுத பலத்தோடு' என்பதையும் குறிப்பன. 'இரவு' என்பது 'கேட்பது' என்ற அளவோடு மட்டும் இங்கே பொருள் தரும்.

நியாயமின்றி பொருள் கேட்பது மட்டுமல்ல, விசாரணையின்றி ஆட்சி செய்வதும் கொடுங்கோலாகும்:

553. நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ
னாடொறு நாடு கெடும்.

ப. ரை: நாள் தொறும் நாடி முறைசெய்யா மன்னவன் நாடு நாள் தொறும் கெடும் = ஒவ்வொரு நாளும் ஆராய்ந்து நீதி நடத்தாத மன்னவனுடைய நாடு நாளுக்கு நாள் சீர் கெடும்.

பொ. ரை: தினந்தோறும் (விசாரிக்க வேண்டியவற்றை) விசாரித்து நியாயம் வழங்காத (கொடுங்கோல்) மன்னவனுடைய நாடு நாளுக்கு நாள் சீர்கெட்டுப் போகும்.

வி-ம்: 'நாடொறும்' என்பதற்கு 'ஒவ்வொரு நாளும்' என்றும் 'நாளுக்கு நாள்' என்றும் முறையே பொருள் கொள்ளல் சிறப்பு. 'நாடொறும் நாடு கெடும்' என்பதற்கு நாடோறும் நாடிழக்கும்' என்பது நல்ல பொருள் அல்ல.

மேலும் மந்திரிகளுடன் கலந்து ஆலோசிக்காமல் தன் இச்சைப்படி அதிகாரம் செலுத்துவதும் கொடுங்கோன்மை; அதனால்:

554. கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச்
சூழாது செய்யு மரசு.

ப. ரை: கோல் கோடி சூழாது செய்யும் அரசு கூழும் குடியும் ஒருங்கி இழக்கும் = ஆட்சி முறைக்கு மாறாக (அமைச்சர்களுடன் கலந்து) ஆராயாமல் (தன் இச்சைப்படி) ஆட்சி செய்யும் அரசன் தன்னுடைய செல்வங்களையும் குடிமக்களுடைய ஆதரவையும் ஒருமிக்க இழந்து விடுவான்.

பொ. ரை: அரசுக்குரிய முறை கெட்டு, அமைச்சர்களுடன் ஆலோசனை செய்யாமல் தன்னிச்சைப்படி ஆட்சி செய்கின்ற (கொடுங்கோல்) அரசன் தன்னுடைய செல்வச் சிறப்பையும் குடிமக்களின் அபிமானத்தையும் ஒருமிக்க இழந்து விடுவான்.

வி-ம்: 'கோல் கோடி' என்பது 'முறை கெட்டு' என்ற பொருள் தருவது. 'சூழாது செய்தல்' – மந்திரிகளுடன்

ஆலோசிக்காமல் 'யதேச்சாதிகாரம் செய்தல்'. குறிப்பான ஒரு கொடுமை செய்யாவிடினும் 'சூழாது செய்தலே' கொடுங்கோல் என்பது குறிப்பு. 'கூழ்' என்பது வரிப்பணத் தால் வரும் செல்வம். குடிகளுடைய ஆதரவு இல்லாததால் வரி கொடுக்க மறுப்பார்கள் என்பதாம்.

சூழாது செய்யும் அரசன் கூழுங் குடியும் ஒருங்கிழப்பது எப்படி வரும் என்றால் :

555. அல்லற்பட் டாற்றா தழுதகண் ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை.

ப. ரை : அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தை தேய்க்கும் படை = (கொடுங்கோன்மையால்) துன்பப்பட்டு, பொறுக்க முடியாமல் (குடிமக்கள்) அழுது வடிக்கும் கண்ணீர் அல்லவா செல்வத்தை அழித்து விடும் பகையாளி?

பொ. ரை : கொடுங்கோல் ஆட்சியினால் துன்பப்பட்டு, பொறுக்க முடியாமல் குடிமக்கள் அழுது வடிக்கிற கண்ணீரே அந்த ஆட்சியின் செல்வத்தை அழித்து விடக்கூடிய ஆயுதம்.

வி - ம் : 'தேய்க்கும்' என்பதற்கு 'சிறுகச் சிறுகத் தேய்த்து அழித்து விடும்' என்ற பொருள். 'கூழுங் குடியும் ஒருங் கிழக்கும்' என்று முன் சொன்னதனால் இங்கே 'தேய்க்கும்' என்பதற்குக் 'குறைக்கும்' என்ற பொருள் கூடாது.

ஆகையினால் :

556. மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை அஃதின்றேல்
மன்னாவா மன்னர்க் கொளி.

ப. ரை : மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை; அஃது இன்றேல் மன்னர்க்கு ஒளி மன்னாவாம் = அரசர்க்குப் பொருந்த வேண்டியது செங்கோன்மை; அது இல்லாவிடில் அரசர்க்கு ஒளிகள் வந்து சேரமாட்டா.

பொ. ரை : அரசர்களுக்கு அமைய வேண்டியது செங்கோல் நடத்தும் பெருமை. அது இல்லையானால் அவர்களுக்குக் கீர்த்திகள் சேர்ந்த பிரகாசம் உண்டாகாது.

வி - ம் : செங்கோன்மை பல நற்குணங்கள் சேர்ந்தது. ஒவ்வொரு நற்குணமும் மன்னனுக்கு ஒரு கீர்த்தியுண்டாக்கும். அதனால் 'ஒளிகள் மன்னாவாம்' என்று பன்மையிற் சொல்

லப் பட்டது. 'மன்னுதல்' என்பதற்கு 'சேர்தல்' என்ற பொருள். புகழ்ச்சிக்குப் பொருத்தமற்ற மன்னன் கொடுங் கோல் மன்னரோடு சேர்க்கப் படுவான்.

கொடுமைகள் செய்து, தான் குடிகளைத் துன்பப் படுத்தாத வன் ஆனாலும் குடிகளுக்கு ஒரு துன்பம் வந்து விட்ட போது அவர்களுக்குப் பச்சாத்தாபம் காட்டாமல் சும்மா இருந்து விட்டால் அதுவும் கொடுங்கோன்மையோடு கூட்டப்படும்:

557. துளியின்மை ஞாலத்திற் கெற்றற்றே வேந்த
னளியின்மை வாழு முயிர்க்கு.

ப. ரை: துளி இன்மை ஞாலத்திற்கு எற்று அற்றே வேந்தன் அளிஇன்மை வாழும் உயிர்க்கு = மழையில்லாமை உலகத் துக்கு எப்படியோ அப்படியாகும் அரசனுடைய இரக்க மின்மை (அவன் நாட்டில்) வாழும் மக்களுக்கு.

பொ. ரை: உலகத்துக்கு மழையில்லாமை எப்படியோ அப் படிப்பட்டது அரசனுடைய அன்பின்மை அவனுடைய குடி களுக்கு.

வி-ம்: பஞ்சம் வந்து தவிக்கின்ற உலகத்துக்கு மழையில்லை யானால் உயிர்கள் மடிந்து விடும். அதைப் போல் துன்பம் வந்து தவிக்கின்ற குடிகளுக்கு அரசனுடைய அன்பில்லை யானால் அவர்கள் மனம் ஒடிந்து விடும். முன் 'செங் கோன்மை' என்ற அதிகாரத்தில் 'வான் நோக்கி வாழும் உல கெல்லாம் மன்னவன் கோல் நோக்கி வாழும் குடி' என்ற குறளின் கருத்தே 'கொடுங்கோன்மை'க்காக எதிர் மறை யில் சொல்லப்பட்டிருக்கிறது.

குடிகளுடைய உடலுக்கும் உடைமைக்கும் பாதுகாப்பு அளிக்காத அரசும் கொடுங்கோலாட்சியே யாகும்; அந்த ஆட்சியில் பணக்காரனாக இருப்பதைக் காட்டிலும் பிச்சைக் காரனாக இருப்பதே மேல்:

558. இன்மையி னின்னா துடைமை முறைசெய்யா
மன்னவன் கோற்கீழ்ப் படின்.

ப. ரை: முறை செய்யா மன்னவன் கோல் கீழ் படின் இன்மை யின் உடைமை இன்னாது = காவல் செய்யாத அரசனுடைய ஆட்சியின் கீழ் இருந்தால், இல்லாதவனாக இருப்பதைக் காட் டிலும் உடையவனாக இருப்பது துன்பமுள்ளது.

பொ. ரை: (அரசன் செய்ய வேண்டிய முறையாகிய) காவல் செய்யாத மன்னவனுடைய ஆட்சியின் கீழ் இருந்தால் ஏழை

யாக இருப்பதைக் காட்டிலும் செல்வமுடையவனாக இருப்பது துன்பம் உண்டாக்கக் கூடியது.

வி-ம்: அரசன் செய்ய வேண்டிய முறை காவல். அதனால் தான் அரசனுக்குக் 'காவலன்' என்று பெயர். அரசனுடைய முதற்கடமையான பாதுகாப்பு இல்லாத ஆட்சியில் ஏழையைக் காட்டிலும் செல்வமுடையவனுக்கே துன்பங்கள் வரும் என்பது வெளிப்படை. மன்னவனுடைய 'முறை' என்பதில் பல கடமைகள் சேரும். அவற்றுள் முதற்கடமை குடிகளுக்குப் பாதுகாப்பளிக்கும் 'காவல்'. அதனால் 'முறை' என்பதற்கு இங்கே 'காவல்' என்ற சிறப்புப் பொருள் கொள்ளப்பட்டது.

குடிகளையும் அவர்களுடைய உடைமைகளையும் காக்க வேண்டியதைப் போலவே ஒரு அரசன் தர்மங்களையும் காக்க வேண்டும். அதுவும் இறை (அரசன்) செய்யவேண்டிய முறை. அப்படிக்கின்றி முறை கெட்ட அரசனுள்ள நாட்டில்:

**559. முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி
யொல்லாது வானம் பெயல்.**

ப. ரை; மன்னவன் முறை கோடி செய்யின் வானம் உறை கோடி பெயல் ஒல்லாது = மன்னவன் முறை தவறி செய்தால் வானம் (தன் இயல்பான) பெருமை தவறி மழை பெய்ய இணங்காது.

பொ. ரை: மன்னவன் தன்னுடைய முறை தவறி ஆட்சி நடத்தினால் (அவனுடைய நாட்டில்) வானமும் தன்னுடைய பெருமையான முறையில் தவறி மழை பொழிய இணங்காது.

வி-ம்: முறைகேடான ஆட்சி செலுத்தும் மன்னவனுடைய நாட்டில் தர்மங்கள் நடைபெறு வானதால் வானமும் வெறுப்படைந்து, தன் பெருமைக்கு மாறாக அங்கே மழை பொழிய மறுத்து விடும் என்பது கருத்து. 'உறை கோடி' என்பதற்கு 'பெருமை தவறி' என்பது பொருள். வானத்தின் பெருமை என்னவெனில் 'கைம்மாறு வேண்டாத கடப்பாடாக மாரி' வழங்குவது. இயல்புக்கு விரோதமான ஆட்சி செய்யும் மன்னவனுடைய நாட்டிற்கு இயற்கையும் விரோதமாகிவிடும் என்பது குறிப்பு.

வானமும் வருத்தமுற்று மழை பொழிய மறுத்து விடுகிற அந்த நாட்டில் ஆகாரமும் கிடைக்காது. அறங்களும் நடக்காது:

**560. ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர்
காவலன் காவா னெனின்.**

ப. ரை: காவலன் காவான் எனின் ஆபயன் குன்றும் அறு தொழிலோர் நூல் மறப்பர்=காக்க வேண்டிய அரசன் காவா விட்டால் அந்த நாட்டில் பசுவினால் கிடைக்கக் கூடிய நன்மை கள் குறையும். ஆறு தொழில்களைச் செய்ய வேண்டியவர்கள் அத் தொழில்களுக்கான நூல்களை மறந்து விடுவார்கள்.

பொ. ரை: (தன்முறையால் அறங்களைக்) காக்கக் கடமை யுள்ள அரசன் (அவற்றைக்) காவா விடில் (அவனுடைய நாட்டில்) பசுவினத்தால் பெறக்கூடிய நன்மைகள் குறையும். (நாகரிக மக்களிடை நடக்க வேண்டிய) ஆறு தொழில்களும் அவற்றிற்கான நூல்களும் மறந்து விடப்படும்.

வி-ம்: 'ஆபயன்' என்பது ஆவினத்தால் பெறத் தக்க பலன் கள். 'ஆ' என்பது பசு முதலிய கால்நடைப் பிராணிகளுக் குப் பொதுப் பெயர். ஆவினம் மனிதருக்கு உதவும் பயன்கள் என்னவெனில்: ஏர் உழுதல், வண்டியிழுத்தல் முதலிய தொழில்களுக்கான பலவித உழைப்புகளும், பால் தயிர் நெய் முதலிய உணவுகளுமாம். 'ஆபயன்' குன்றினால் மனி தன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத உணவுகள் குன் றும். அப்படி உணவு குறைந்து விட்ட நாட்டில் அறிவு முயற்சி களும் ஆன்ம முயற்சிகளும் தான தருமங்களும் கூடவே குறைந்து மறைந்து விடும். அதைத்தான் 'அறு தொழிலோர் நூல் மறப்பர்' என்றது. அந்த ஆறு தொழில்கள் எவை யெனில்; கல்வி கற்றல். பிறருக்குக் கல்வி கற்பித்தல், பொது நலத்துக்கான பெரு முயற்சிகளைச் செய்தல். அந்த முயற்சி களுக்கு உதவி புரிதல், அந்க நன் முயற்சிகளுக்காக நன் கொடை கொடுத்தல். அவற்றிற்காக நன் கொடை வசூலித் தல். இந்த ஆறு பிரிவுகளுக்குள் சமூகத்தில் நடக்கின்ற எல்லா அறிவு முயற்சிகளும் அன்பு முயற்சிகளும் அடங்கி விடும். இந்த ஆறு செயல்களையும் முறையே ஓதல். ஓதுவித் தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்று குறிப்பது தமிழிலக்கிய மரபு. இங்குள்ள 'ஈதல்' என்பது 'பிச்சை கொடுப்பது' அல்ல. 'இரத்தல்' என்பதும் 'பிச்சை வாங்கு தல்' அல்ல. பின் என்னவெனின் பொது நலக் காரியத்துக் காக தானம் கொடுப்பதும் தானம் வாங்குவதுமே யாகும். அப் பொதுநல காரியங்கள் வேள்வி செய்வதும் வேள்வி செய்ய உதவி செய்வதும். 'வேள்வி' என்பதற்கு 'பிறநல மான காரியம்' என்ற பொருளைத்தான் தமிழிலக்கியங் களும் திருவள்ளுவரும் கருதுவது. இந்த ஆறு தொழில்களை யும் செய்யக் கடமைப் பட்டவர்கள் அந்தணர்கள் என்பது வாழையடி வாழையாக பண்டைத் தமிழர்கள் நெடுங்கால மாக ஒத்துக் கொண்ட கருத்து.

இக்காலத்தில் பழைய நிலைமைகள் இல்லாததால் இந்த ஆறு தொழில்களையும் செய்ய வேண்டிய 'அந்தணர் நூல் மறப்பர்' என்று சொல்லும்போது ஒத்துக் கொள்ள முடியாதது போல் தோன்றலாம். மேலும் 'அந்தணர்' என்ற பதம் யாரைக் குறிப்பது என்பதைப்பேசும் போது ஏற்படுகிற விவாதங்களால் இதைச் சிலர் மறுக்கவும் மனந்துணியலாம். ஆனால் 'அந்தணர்' என்ற பதத்தைப் பற்றிய தர்க்கங்களுக்காக அந்த ஆறு தொழில்களையும் அவற்றின் நோக்கங்களையும் மறுப்பது அநீதியாகும். அத்துடன் திருவள்ளுவருடைய திருக்குறளுக்குத் திருவள்ளுவர் கருதியிருக்கக் கூடிய உரை செய்ய வேண்டுமேயன்றி மனம் போனபடிக்கெல்லாம் நம்முடைய கருத்துகளை அவர் வாயில் திணிக்கக் கூடாது. அந்தணர்களையும் அவர்களுடைய நூலையும் வள்ளுவரே வாழ்த்துகின்றபோது அதை மற்றவர்கள் எப்படி மறுக்க முடியும்? முந்திய அதிகாரத்தில் 'அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய் நின்றது மன்னவன் கோல்' என்பதில் அந்தணரையும் அவர்கள் நூலையும் அறத்தையும் வள்ளுவர் எப்படி மதிக்கிறார் என்பது மிகவும் தெளிவாகிறது. 'செங்கோன்மை'க்குச் சொன்ன அதே கருத்தைத்தான் இங்கே 'கொடுங்கோன்மை'க்கு எதிர் மறையிற் சொல்லுகிறார். கொடுங்கோலன் நாட்டில் 'அந்தணர் நூலும் அறங்களும் மறக்கப்படும்' என்பது தான் 'அறுதொழிலோர் நூல் மறப்பர்' என்பது. 'நூல்' என்ற பதத்தை உபயோகிக்கிற இடங்களிலெல்லாம் 'அறிவு நூல்', 'ஞான நூல்', 'அற நூல்', 'நீதி நூல்' என்ற பொருளில் தான் திருவள்ளுவர் எடுத்தாளுகின்றார். நூல் என்ற பதத்திற்கு 'வேதங்கள்' என்ற பொருளை ஒத்துக் கொள்ளாவிட்டாலும் அது அறிவு நூலையும் நீதி நூலையும்தான் குறிக்குமேயன்றி வேறு நூல்களைக் குறிக்காது. 'அறு தொழில்' என்பதும் வள்ளுவர் கருத்தின்படி அறிவுடையவர்கள் செய்ய வேண்டிய மேற் சொன்ன ஆறு காரியங்களையேயன்றி வேறு தொழில்களைக் குறிக்காது. 'காவலன் காவான் எனின்' என்பது அரசன் வெறும் ஆயுத பலத்தைக் கொண்டு தன் நாட்டைக் காப்பது மட்டும் அல்ல. 'வேலன்று வென்றி தருவது மன்னவன் கோல் அதுவும் கோடாதெனின்' என்றபடி அறங்களைக் காப்பதே அரசனுடைய முக்கிய அலுவல். அந்த அறங்கள் இந்த ஆறு தொழில்களில் அடங்கும் — என்பதே வள்ளுவர் கருத்து.

அதி. 57—வெருவந்தசெய்யாமை

['வெரு வந்த செய்யாமை' என்பது 'பிறர் தன்னைக் கண்டு அஞ்சி நடுங்கும் படியான பயங்கரமான காரியங்களைச் செய்யாதிருப்பது'. 'வெருவுதல்' என்றால், 'மிக்க

பயங்கொள்ளல்' என்பது பொருள். பொதுவாகக் குடிகள் நடுங்கும்படி அரசன் நடந்து கொள்ளக் கூடாது என்பதும் சிறப்பாக அரசன் குற்றம் செய்தவர்களைத் தண்டிப்பதில் மக்கள் நடுங்கும் படியான பயங்கர தண்டனைகளைச் செய்யக் கூடாது என்பதும்.]

561. தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா
லொத்தாங் கொறுப்பது வேந்து.

ப. ரை: தக்காங்கு நாடி தலைச் செல்லா வண்ணத்தால் ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து=(குற்றம் செய்தவர்களை) தக்கபடி ஆராய்ந்து (மறுபடியும் அவர்கள் அந்த குற்றத்தில்) சேராதிருப்பதற்காக ஒத்த அளவில் தண்டிப்பது வேந்தனுடைய தன்மை.

பொ. ரை: (குற்றவாளிகளை தண்டிக்கும் பொழுது) குற்றத்தைத் தக்கபடி விசாரித்து, (மீண்டும் அவர்கள் அந்த குற்றத்தில்) போய்ச் சேராதிருப்பதற்காக ஒத்த அளவோடு (அதிகப்படாமல்) தண்டிப்பதுதான் வேந்தனுடைய தன்மை.

வி-ம்: வேந்தன் குற்றவாளிகளைத் தண்டிப்பது, மறுபடியும் அக்குற்றத்தைச் செய்யாமலிருக்கும்படி அவர்களுக்கு புத்தி வரச் செய்வது தான் நோக்கமாக இருக்க வேண்டும். அந்த அளவுக்குத்தான் தண்டிக்க வேண்டும் என்பது கருத்து. 'தலைச் செல்லல்' என்பது 'போய்ச் சேர்தல்'. 'தலைச் செல்லா வண்ணத்தால்' என்பது மறுபடியும் அந்த குற்றத் தில் போய்ச் சேராதிருக்கும்படி—என்பதாம்.

பலமாகக் கண்டித்தாலும் இலேசாக தண்டிக்க வேண்டும்:

562. கடிதோச்சி மெல்ல வெறிக நெடிதாக்க
நீங்காமை வேண்டு பவர்.

ப. ரை: ஆக்கம் நெடிது நீங்காமை வேண்டுபவர் கடிது ஓச்சி மெல்ல எறிக=செல்வமும் செல்வாக்கும் நெடுநாளைக்கு நீங்காமலிருக்க விரும்புகிறவர்கள் (தாம் தண்டிக்க வேண்டியவர்களை) வேகமாக ஓங்கினாலும் மெல்ல அடிக்க வேண்டும்.

பொ. ரை: தம்முடைய செல்வமும் சிறப்பும் நெடுநாளைக்குத் (தம்மை விட்டு) நீங்கிவிடாமல் இருக்க விரும்பினால் (தாம் தண்டிக்க வேண்டியவர்களை) பலமாகக் கண்டித்தாலும் இலேசாக தண்டிக்க வேண்டும்.

வி-ம்: 'ஓச்சுதல்' என்பது 'ஓங்குதல்'. 'எறிதல்' என்பது 'அடித்தல்'; இங்கே 'தண்டித்தல்' என்ற பொருள் தருவது.

இலேசான தண்டனைகள் செய்யாமல் கடூரமான தண்டனைகள் நடத்தினால் :

563. வெருவந்த செய்தொழுகும் வெங்கோல னாயி
னொருவந்த மொல்லைக் கெடும்.

ப. ரை : வெருவந்த செய்து ஒழுகும் வெம் கோலன் ஆயின் ஒருவந்தம் ஒல்லை கெடும்=குடிகளை நடுங்கச் செய்து ஆட்சி புரியும் கொடுங்கோலனாக இருந்தால் அவன் நிச்சயமாக விரைவில் கெட்டுப் போவான்.

பொ. ரை : குடிகள் நடுங்கும்படியாக ஆட்சிபுரியும் கொடுங்கோல் நடத்துகிற மன்னன் நிச்சயமாக வெகு சீக்கிரம் கெட்டுப் போவான்.

வி - ம் : 'ஒழுகும் வெங்கோலன்' என்பது 'ஆட்சிபுரியும் வெங்கோலன்'. எப்படி யென்றால் :

564. இறைகடிய னென்றுரைக்கு மின்னாச்சொல் வேந்த
னுறைகடுகி யொல்லைக் கெடும்.

ப. ரை : இறை கடியன் என்று உரைக்கும் இன்னாச் சொல் வேந்தன் உறைகடுகி ஒல்லை கெடும்='அரசன் கடூரமானவன்' என்னும் தீய சொல்லுக்கு (ஆளாகும்) வேந்தனுடைய (ஆட்சி) காலம் குறுகி விரைவில் கெட்டுப் போவான்.

பொ. ரை : 'அரசன் கொடியவன்' என்று (குடிகள் நொந்து கொள்ளும்) கெட்ட பெயரை அடையும் மன்னனுடைய அரசாட்சிக் காலம் குறைந்து விரைவில் கெட்டுப் போவான்.

வி - ம் : 'உறை' என்பது இங்கே 'ஆயுள் காலம்' என்று பொருள் தருவது. 'உறை கடுகி ஒல்லைக் கெடும்' என்றால் 'ஆட்சியின் ஆயுள் காலம் குறைந்து விரைவில் அரசிழந்து போவான்'— என்று பொருளாகும்.

'அரசன் கொடியவன்' என்ற கெட்ட பெயர் வரக் காரணங்கள் எவை யென்றால் :

565. அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம்
பேஎய்கண் டன்ன துடைத்து.

ப. ரை : அரும் செவ்வி இன்னா முகத்தான் பெரும் செல்வம் பேஎய் கண்டன்னது உடைத்து = (ஏதாவது சொல்லிக் கொள்ள அவனைக் காண விரும்புகின்றவர்கள்) காண்பதற்கு

அரியனாகி, காண முடிந்தாலும்) இனிமையில்லாத முகத்த வனாக இருப்பவன் மிகுந்த (ஆடை ஆபரண) அழகுடைய வனாக இருந்தாலும் அவனைக்காண்பது ஒருபேயைக் கண்டது போன்ற தன்மையுடையது.

பொ. ரை: காணக் கிடைப்பதே அபூர்வமாகி, (காணக் கிடைத் தாலும் எப்போதும்) கடுகடுத்த முகம் காட்டுகிறவனாக உள்ள வன் எவ்வளவு ஆடை ஆபரண அலங்காரமுள்ளவனானாலும் அவனைக் காண்பது ஒரு பேயைக் கண்டது போன்றதுதான்.

வி-ம்: 'செவ்வி' என்பது காணத்தக்க 'சமயம்'. 'அருஞ் செவ்வி' என்றால் 'காணத்தக்க சமயம் அருமையான' என்று அர்த்தம். 'பெருஞ் செல்வம்' என்பதற்கு இங்கே, 'பெரிய ஐசுவரியம்' என்பது பொருளல்ல; 'மிகுந்த அழகு' அதா வது 'மிகுந்த அலங்காரம்' என்பது பொருள். 'செல்வம்' என்ற பதத்திற்கு 'அழகு' என்பதும் ஒரு அர்த்தம். இந்த இடத்தில் அதுதான் பொருத்தமானது. 'இன்னா முகத்தான்' ஆனதனால் அவனுக்கு இயற்கையான முக அழகு இல்லை. பின் அரச செல்வத்தினால் வரக்கூடிய செயற்கை அழகான ஆடை ஆபரண அலங்காரங்கள் தாம். ஆகையினால் 'பெருஞ் செல்வம் பேஎய் கண்டன்ன துடைத்து' என்பதற்கு 'மிகுந்த அலங்கரிப்புகள் இருந்தாலும் பேயைக் கண்டது போலத் தான்' என்பதுதான் பொருள்.

காணக் கிடைப்பது அரிதானாலும் பாதகமில்லை; இனிய முகம் காட்டாவிடினும் தொலைந்து போகட்டும்; அதற்கு மேலும்:

566. கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ
நீடின்றி யாங்கே கெடும்.

ப. ரை: கடும் சொல்லன் கண் இலன் ஆயின் நெடுஞ் செல்வம் நீடு இன்றி ஆங்கே கெடும் = கடுமையான பேச்சும் தாட் சண்யமில்லாத தன்மையும் உள்ளவனானால் அவனுடைய மிகப் பெரிய செல்வச் சிறப்புகளும் நெடுநாளைக்கு இருக்க முடியாதபடி விரைவில் அழிந்து போகும்.

பொ. ரை: கடூரமான வார்த்தைகளும் தயவு தாட்சண்யமில் லாத குணமும் உள்ளவனாயின் அவனுடைய செல்வமும் (செல்வாக்கும்) எவ்வளவு பெரியதாக இருந்தாலும் நெடு நாளைக்கு இருக்காது விரைவில் அழிந்து போகும்.

வி-ம்: 'நெடுஞ் செல்வம்' என்பது 'பெரிய செல்வமானா லும்' என்ற பொருள் தருவது. 'செல்வம்' என்பதற்கு

இங்கே வெறும் 'பொருட் செல்வம்' என்பது மட்டும் அர்த்த மல்ல. பொருள், செல்வாக்கு, கீர்த்தி எல்லாம் சேர்ந்தது.

வெருவந்த செய்யும் வேந்தன் காணக் கிடைக்காதவனாக வும் கண்டாலும் கடுகடுத்த முகத்தோடு பேயைக் கண்டது போலிருப்பான். அத்துடன் கடூரமான சொல்லுடையவனாக வும் தயவு தாட்சண்ணிய மில்லாமலும் இருப்பான். அத் துடன் நிற்காமல் :

567. கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த
னடுமுரண் டேய்க்கு மரம்.

ப. ரை : கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன் அடு முரண்தேய்க்கும் அரம் = கடூரமான சொற்களும் அளவு கடந்த தண்டனையும் அரசனுடைய வெற்றி வல்லமைகளைத் தேய்த்து விடக் கூடிய அரம்.

பொ. ரை : கடூரமான வார்த்தைகளும் (பேசி, கண்ணோட்ட மில்லாவிட்டாலும் நியாயமான அளவோடும் தண்டிக்காமல்) அளவுக்கு மீறிய தண்டனையும் செய்தால் அது அவ்வேந்த னுடைய வெற்றி பலங்களைத் தேய்த்துக் குறைத்துவிடக்கூடிய அரம் போன்றது.

வி - ம் : 'கையிகந்த' என்பது 'அளவு கடந்த' என்ற அர்த்த முள்ள ஓரேபதம். 'அடுமுரண்' என்பது 'வெற்றி தரக்கூடிய பலம்'. அடுதல்—வெல்லுதல். முரண்—வல்லமை. 'தேய்க் கும் அரம்' என்பதற்கு 'தேய்த்துத் தேய்த்து ஒடித்துவிடக் கூடிய அரம்' என்பது பொருள்.

அப்படி 'அடுமுரண்' ஆகிய வெற்றி தரும் சக்திகள் கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்து குறைந்துகொண்டுவர :

568. இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறிற் சிறுகுந் திரு.

ப. ரை : இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றி சீறின் திருசிறுகும் = (குற்றம், குற்றவாளி என்ற) இனத்துக்கு ஒத்தபடி எண்ணாத அரசன் (தன்னுடைய) கோபத்துக்கு ஒத்தபடி மூர்க்கத்தனமாக நடந்தால் அவனுடைய சிறப்பு கள் சுருங்கிவிடும்.

பொ. ரை : (குற்றத்தின் இனம், குற்றம் செய்தவருடைய இனம் ஆகிய) இனத்தின் அளவாக ஆராயாமல், ஒரு வேந் தன் தன்னுடைய கோபத்தின் அளவாக மிதமிஞ்சி தண்டனை செய்தால் அவனுடைய பலம் சுருங்கி விடும்.

வி-ம்: மன்னவன், குற்றம் எப்படிப்பட்டது என்பதையும் அதைச் செய்து விட்டவனுடைய தரத்தையும் ஆராய வேண்டும். குற்றத்துக்குத் தகுந்தபடியும் குற்றம் செய்து விட்டவன் வேறு காரணங்களால் சலுகைக்கு உரியவனுக இருந்தால் அதையும் கவனிக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் அவனுடைய கோபம் போன போக்காக தண்டித்துவிடக் கூடாது. 'ஆற்றின்' என்பதற்கு 'தகுந்த அளவில்' என்பது பொருள். 'திரு' என்பது 'சிறப்புகள்'.

இப்படியாக வெருவந்த செய்யும் மன்னனுடைய சிறப்பும் பலங்களும் குறைந்து போவதால் திடீரென்று மக்களின் ஆதரவில்லாமல் அழிந்து விடுவான் :

569. செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன்
வெருவந்து வெய்து கெடும்.

ப. ரை: சிறை செய்யா வேந்தன் வெருவந்து செரு வந்த போழ்தில் வெய்து கெடும் = (வெருவந்த காரியங்களால் வரக்கூடிய கேடுகளை அறிந்து) முன்னெச்சரிக்கை செய்து கொள்ளாத அரசன் வெருவந்த காரியங்களையே செய்து கொண்டிருந்து (அதனுல் அவன்மேல் குடிகளுக்குப்) பிணக்கு வருகிற பொழுது சடுதியில் கெட்டுப் போவான்.

பொ. ரை: (குடிகள் நடுங்கும்படியான வெருவந்த செயல்களால் பின்னுல் விளையக் கூடிய திமைகளை அறிந்து) எச்சரிக்கை கொள்ளாமல் வெருவந்த காரியங்களைச் செய்து கொண்டிருக்கும் வேந்தன் (அதனுல் குடிகள் அவனுடன் பிணங்கி,) எதிர்ப்பு வந்து விடுகிற சமயத்தில் உடனே கேடடைவான்.

வி-ம்: எச்சரிக்கையின்றி பயங்கரமான தண்டனைகளை விதித்து ஆட்சி செய்கிற வேந்தன் 'இறை கடியன் என்றுரைக்கும் இன்னுச் சொல்'லினுல் குடிகளுடைய ஆதரவை கொஞ்சங்கொஞ்சமாகஇழந்து, பின் அவர்களுக்குப் பிணக்கம் வந்து உடனே கெட்டுப் போவான் என்பது கருத்து. 'செரு' என்பதற்கு இங்கே குடிகளுடைய 'எதிர்ப்பு' அல்லது பிணக்கம் என்ற அளவில்தான் பொருள். அன்னியர்கள் 'படையெடுப்பு' அல்லது 'யுத்தம்' என்ற பொருள் கொள்ள இடமில்லை. 'சிறை செய்யா' என்பதற்கு 'அரண் செய்து கொள்ளாத' என்பது பொருளல்ல. 'எச்சரிக்கை செய்து கொள்ளாத' என்பது தான் பொருள்.

மூடர்களைக் கொண்டு நடத்தப்படும் பயங்கரமான அரசாட்சியைக் காட்டிலும் பொறுக்கக் கூடாத பாரம் பூமிக்கு வேறில்லை :

**570. கல்லார்ப் பிணிக்குங் கடுங்கோ லதுவல்ல
தில்லை நிலக்குப் பொறை.**

ப. ரை : கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது நிலக்குப் பொறை இல்லை = (அரசியல் முறை) கல்லாத மூடர்களைக் கொண்டு (மக்களைத்) துன்பப்படுத்தும் (வெருவந்த) கடுங்கோல் ஆட்சியைவிட பூமிக்கு பாரம் வேறில்லை.

பொ. ரை : அரசு முறை அறியாத மூடர்களைக் கொண்டு நடத்தப்படும் துன்பமான அரசாட்சியைவிட பூமிக்குப் பெரிய பாரமான சுமை வேறில்லை.

வி - ம் : வெருவந்த தண்டனைகள் செய்து கடுங்கோல் நடத்துகிறவர்கள் அரசனாயினும் அரசாங்க அதிகாரிகளாயினும் அவர்கள் பூமிக்குப் பாரம் என்பதைக் குறிக்க, 'கல்லார்ப் பிணிக்கும்' எனப்பட்டது. 'கல்லார்ப்' என்று 'ப' கரம் இரட்டித்திருப்பதால் 'கல்லாரை' என்பது பொருளாகும். அதனால் 'கொண்டு' என்பதை வருவித்துக் கொண்டு பொருள் கொள்ள வேண்டும். 'கல்லார்ப் பிணிக்கும்' என்றால் 'கல்லாரைக் கொண்டு பிணிக்கும்' என்பது பொருள். 'பிணிக்கும்' என்பது 'நோய் செய்யும்' அதாவது 'துன்பப்படுத்தும்' என்ற பொருள் தருவது. 'நிலத்துக்கு பாரம்' என்பது 'அந்த நாட்டிலுள்ள குடிகளுக்குத் துன்பம்' என்ற கருத்தைக் கொடுப்பது.

அதி. 58—கண்ணோட்டம்

['கண்ணோட்டம்' என்பது 'தாட்சணியம்'. நட்பு, உறவு, நன்றி, கருணை, ஒப்புரவு ஆகியவற்றின் காரணமாக ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு நடக்கும் குணத்துக்கு 'கண்ணோட்டம்' என்று பெயர். கண்ணோட்டம் என்பது கண் + ஓட்டம் என்று பிரிக்கப்படும். கண்ணானது ஒருவரைக் கண்ட உடனே கருத்து அவரிடத்தில் ஓடி பரிவு கொள்வது. இது சிறப்பாக பழகின மனிதர்களைக் குறிப்பது. இது எல்லாருக்கும் பொதுவான நற்குணம்.]

**571. கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை
யுண்மையா னுண்டிவ் வுலகு.**

ப. ரை : கண்ணோட்டம் என்னும் கழிபெரும் காரிகை உண்மையான் இவ்வுலகு உண்டு = தாட்சணியம் என்னும் மிகப் பெரிய அழகு இருப்பதனால் இவ்வுலகம் இருந்து வருகிறது.

பொ. ரை: தாட்சணியம் என்ற மிகப் பெரிய நற்குணம் (மக்களுக்குள்) இருப்பதனால் தான் இந்த உலகம் இருந்து வருகின்றது.

வி-ம்: 'காரிகை' என்பது அழகு. இங்கே 'அழகான குணம்' என்ற பொருளைத் தருவது.

கண்ணோட்டம் இருப்பதனால் தான் உலகம் இருக்கிறது என்பது எதனாலென்றால்:

**572. கண்ணோட்டத் துள்ள துலகியல் அ:திலா
ருண்மை நிலக்குப் பொறை.**

ப. ரை: உலகியல் கண்ணோட்டத்து உள்ளது அ:திலார் உண்மை நிலக்குப் பொறை=உலக வாழ்வு நடந்து வருவது தாட்சணியம் என்ற குணத்தில் அடங்கியுள்ளது; அது இல்லாதவர்கள் உண்மையில் பூமிக்குச் சுமையானவர்கள்.

பொ. ரை: உலக வாழ்க்கை நடைபெறுவது தாட்சணியம் என்ற குணத்தினால்; அந்த குணம் இல்லாத மனிதர்கள் உண்மையாகவே பூமிக்கு பாரமானவர்கள்.

வி-ம்: உலக மக்களுக்குள் தாட்சணிய குணம் இல்லாதவர்கள் வெகு சொற்பம். அவர்கள் பூமிக்கு பாரம். ஆனால் அந்த குணம் உள்ளவர்களும் சில சமயங்களில் இல்லாமல் நடப்பதும் உண்டு. அது கூடாது என்பது கருத்து.

தாட்சணியம் இல்லாத வாழ்க்கை இயற்கைக்கு ஒத்ததல்ல: உலகத்துக்கும் பயனற்றது:

**573. பண்ணென்னும் பாடற் கியைபின்றேற் கண்ணென்னுங்
கண்ணோட்ட மில்லாத கண்.**

ப. ரை: பாடற்கு இயைபு இன்றேல் பண் என்னும்; கண்ணோட்டமில்லாதகண், கண் என்னும் = பாடுவதற்கு இசையாவிட்டால் பாட்டு என்னத்திற்கு?; தாட்சண்யம் இல்லாத விடத்து கண் என்னத்திற்கு!

பொ. ரை: பாடுவதற்குப் பொருந்தாத பாட்டு என்னத்திற்காகும்? அது போல தாட்சணியம் இல்லாத பார்வை என்னத்திற்காகும்?

வி-ம்: கேட்பதற்கு இனிமையாக இருக்கும்படி, பதங்களை நீட்டவும், குறுக்கவும், நிரவல் செய்யவும் இராக தாளங்களுக்கு இசையாத பாட்டு பயனற்றது. அதுபோல, கண்ணால்

நோட்டம் பார்த்து, பிறருடைய தாரதம்மியத்தை உணர்ந்து அதற்கு ஏற்றபடி குறைத்தோ கூட்டியோ சலுகை காட்ட உதவாத கண் பயனற்றது. 'இல்லாத கண்' என்பதிலுள்ள 'கண்' என்பது 'இடம்' என்ற பொருளில் நிற்பது. அதனால் 'இல்லாத கண்' என்பதற்கு 'இல்லாத இடத்து' என்பது பொருள். 'பண்' என்பது இங்கே 'பாலை', 'யாழ்' முதலிய நூற்று மூன்று பண்களாகிய சங்கித நுணுக்கங்களையோ அல்லது 'பண்ணல்' என்ற பதத்துக்குப் பொருள்களான 'எடுத்தல்', 'படுத்தல்' முதலியவற்றையோ குறிப்பதல்ல; 'பண்' என்பதற்கு 'பதங்கள் சேர்ந்த பாட்டு' என்பது மட்டும் தான் பொருள்.

பார்க்கிறபோதே மக்களையும் அவர்களுடைய நிலைமைகளையும் உணர்ந்து கொள்ள உதவா விட்டால்:

**574. உளபோன் முகத்தெவன் செய்யு மளவினாற்
கண்ணோட்ட மில்லாத கண்.**

ப. ரை: அளவினான் கண் ஓட்டமில்லாத கண் முகத்து உள போல் எவன் செய்யும் = அளந்தறியும் தன்மையோடு (சுற்று முற்றும்) பார்வையைச் செலுத்தி (நிலைமைகளை அறிந்து கொள்ள) கண்ணின் ஓட்டமில்லாத கண்கள் முகத்தில் இருப்பன போல் இருந்து என்ன நன்மை செய்யும்?

பொ. ரை: அளந்து அறியக் கூடிய தன்மையோடு எல்லாப் பக்கங்களிலும் பார்வையை ஓட்டி நிலைமையை ஆராய்ந்து அறிந்துகொள்ளச் செய்யாத கண்கள் முகத்தில் இருப்பது போல் இருந்து என்ன பயன்?

வி - ம்: 'அளவினான்' என்பதற்கு 'ஆராயும் தன்மையால்' என்பது பொருள். விஷயங்களை ஆராய்ந்து அறியச் செய்யும் கருவி கண். அந்த வேலையைச் செய்யத்தான் கண் முகத்தில் இருக்கிறது. முகத்தில் கண்ணிருந்தும் ஆராய்ந்தறியும் நோட்டத்தோடு சுற்று முற்றும் கண் ஓடாவிட்டால் விஷயங்களின் தராதரத்தை அறிய முடியாது. அதனால் கண்ணோட்டம் என்ற தாட்சணியம் ஏற்படாது.

கண்ணின் சிறப்பே கண்ணோட்டம் தான்:

**575. கண்ணிற் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
புண்ணென் றுணரப் படும்.**

ப. ரை: கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃது இன்றேல் புண் என்று உணரப்படும் = கண்களுக்கு அழகு தருவது (கண்

டதை உணர்ந்து) தாட்சண்யம் காட்டுவது தான்; அது இல்லையானல் கண்கள் புண்களாகத்தான் கருதப்படும்.

பொ. ரை: கண்களுக்குச் சிறப்புத் தருவது (கண்ட மனிதரின் தரமறிந்து) தாட்சண்யம் காட்டுவதுதான்; அப்படி இல்லையானல் அக்கண்கள் (தரமறியும் தன்மையில்லாமல் துன்பம் செய்யும்) புண்களேயாகும்.

வி-ம்: 'அணிகலம்' என்பது 'அழகு தரும் ஆபரணம்'. கண்ணுக்கு ஆபரணம் ஒன்றும் அணிவதில்லையானதால் 'அழகு தருவது' என்ற அளவுக்கு மட்டும் இங்கே பொருள் கொண்டு, 'அழகு' என்பதற்கு 'சிறப்பு' என்று பொருள் செய்ய வேண்டும். 'புண்' என்பது உடலில் குழியான திறப்பிடமாகி ஊன்நீர் வடியும் இடமெல்லாம் புண். 'கண்' தன்னுடைய காரியமாகிய 'கண்ணோட்டம்' செய்யாவிடில் நோய் கொண்டு நீர் வடியும் குழிதான் என்பது கருத்து.

மேலும், ஓட்டமில்லாத கண்ணுள்ள மனிதன் இடம்விட்டு நகர முடியாத மரத்துக்குச் சமானம்:

576. மண்ணோ டியைந்த மரத்தனையர் கண்ணோ
டியைந்துகண் ணோடா தவர்.

ப. ரை: கண்ணோடு இயைந்து கண் ஓடாதவர் மண்ணோடு இயைந்த மரத்து அனையர் = கண்ணோடு பொருந்தியிருந்தும் (துருவிப் பார்த்து ஆராய்ந்தறியப் பலவிடங்களுக்கும்) ஓடாத கண்களையுடையவர்கள், மண்ணோடு பொருந்தி (இடம் விட்டுப் பெயர்ந்து செல்ல முடியாத) மரத்துக்கு ஒப்பாவர்.

பொ. ரை: கண்ணிருந்தும் கண்ணை ஒட்டி ஆராய்ந்தறிய முடியாதவர்கள் நிலத்தில் (முளைத்த இடத்தைவிட்டு நகர முடியாது) சடமாக இருக்கும் மரத்துக்குச் சமானமாவார்கள்.

வி-ம்: மரம் முளைத்த இடத்தைத் தவிர மற்ற இடங்களை அறியாது. ஓடாத கண்களை உடையவனும் தன்னைத் தவிர மற்றவர்களுடைய நிலைமையை அறியமாட்டான்.

ஆகையால்:

577. கண்ணோட்ட மில்லவர் கண்ணிலர் கண்ணுடையார்
கண்ணோட்ட மின்மையு மில்.

ப. ரை: கண்ணோட்டம் இல்லவர் கண் இலர்; கண் உடையார் கண்ணோட்டம் இன்மையும் இல் = தாட்சணியம் இல்லாதவர்கள் (பிறரைக் கண்டறிய) கண்ணில்லாதவர்கள்; (கண்

டறியக் கூடிய) கண்ணுடையவர்களிடத்தில் தாட்சணிய குணம் இல்லாதிருப்பதும் இல்லை.

பொ. ரை: தாட்சணிய குணம் இல்லாதவர்கள் பிறருடைய தராதரத்தைப் பார்க்க முடியாத குருடர்கள்; ஆராய்ந்தறியக் கூடிய கண்களையுடையவர்கள் தாட்சணியம் இல்லாமல் நடந்து கொள்ளமாட்டார்கள்.

வி-ம்: ஒரு மனிதரைக் கண்ட உடனேயே அவர் இன்ன உறவுடையவர் அவருக்கு இன்ன சலுகைகாட்ட வேண்டும் என்று அவரிடத்தில் அனுதாப எண்ணம் ஓடவேண்டும். அதுதான் 'கண்ணோட்டம்'. அது செய்ய முடியாத கண் குருட்டுக் கண். நல்ல கண் அதைச் செய்யத் தவறாது என்பது கருத்து.

ஆனால் கண்டவர்களுக்கெல்லாம் கண்டபடி தாட்சணியம் காட்டினால் நியாயங்கள் தவறி, காரியங்கள் கெட்டுப் போகாதா என்றால் அது உண்மைதான். தாட்சணியத்தால் பல சங்கடங்கள் வரத்தான் செய்கின்றன. காரியங்கள் கெடாமல் தாட்சணியமும் காட்டுவது மிகவும் கடினமானது. காரியம் கெடாமல் கண்ணோட்டமும் செய்கிறவர்கள் மிகப் பெரியவர்கள். அவர்களுக்கு:

**578. கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க்
குரிமை யுடைத்திவ் வுலகு.**

ப. ரை: கருமம் சிதையாமல் கண்ணோட வல்லார்க்கு இவ்வுலகு உரிமை உடைத்து = காரியம் கெட்டுப் போகாமல் தாட்சணியம் காட்டக் கூடிய திறமையுள்ளவர்களுக்கு இந்த உலகம் மிகவும் கடமைப்பட்டதாக இருக்கிறது.

பொ. ரை: காரியமும் கெட்டுப் போகாமல் தாட்சணியமும் காட்டி உபகாரம் செய்யக் கூடிய வல்லமையுள்ள (மகான்களுக்கு) இந்த உலகம் மிகவும் கடமைப்பட்டிருக்கிறது.

வி-ம்: காரியம் கெடாமல் தாட்சணியம் காட்டிப் பரோபகாரம் செய்வது மிகவும் கடினமான காரியம்தான். என்றாலும் அப்படிக் கருமமும் கெடாமல் கண்ணோட்டமும் செய்து வழி காட்டிய மகான்கள் பலபேர் இருந்திருக்கிறார்கள்; (இனிமேலும் இருக்க முடியும்) அவர்களுடைய சரித்திரப் பெருமையினால் தான் உலகத்தில் தாட்சணிய குணம் விளங்கி வருகிறது. அதனால் அப்படிப்பட்ட வல்லார்க்கு உலக மக்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்களாகவே இருக்க வேண்டும். ஆகையினால் கருமம் சிதைவதாக இருந்தாலும் கூடுமான வரையில் ஒவ்வொரு மனிதனும் பிறருக்கு தாட்சணியம் காட்டித்தான் ஆகவேண்டும் என்பது திருக்குறளின் நோக்

கம். இந்த அதிகாரம் முழுவதும் எல்லா மக்களுக்கும் பொதுவாக என்றே சொல்லப்பட்டுள்ளது. அரசனுக்கு மட்டும் அல்லவென்பது அதிலுள்ள பதங்களும் பொருளும் நிச்சயமாகக் காட்டுகின்றன. இதை அரசனுக்கு மட்டும் சொன்னதாகக் கொண்டு பொருள் செய்தால் சரியான பொருள் சொல்ல முடியாமல் தடுமாற வேண்டியிருப்பதுடன் இந்த அதிகாரத்தின் ஜிவன் போன்ற இக்குறளின் பயன் சிதைந்துவிடும்.

கண்ணோட்டம் என்பது தமக்கு வேண்டிய மனிதருக்கு தாட்சணியம் காட்டுவதுதான். என்றாலும் மேலான குணமுள்ளவர்கள் தமக்கு வேண்டாதவர்களாக, தாம் தண்டிக்க வேண்டியவர்களுக்கும் கூட தாட்சணியம் காட்டுவார்கள் :

**579. ஒறுத்தாற்றும் பண்பினார் கண்ணுங்கண் ணோடிப்
பொறுத்தாற்றும் பண்பே தலை.**

ப. ரை : ஒறுத்து ஆற்றும் பண்பினார் கண்ணும் பொறுத்து ஆற்றும் பண்பே தலை = தண்டனை கொடுக்க வேண்டிய தகுதியுடையவர்கள் இடத்திலும் தாட்சணியம் காட்டிப் பொறுத்துக் கொண்டு உதவி செய்வதே உயர்ந்த குணம்.

பொ. ரை : (தமக்கு ஒரு தீங்கு செய்து) தாம் தண்டனை செய்ய வேண்டியவர்களிடத்திலும்கூட தாட்சணியம் காட்டி பொறுத்துக் கொண்டு அவர்களுக்கு மேலும் உதவி செய்வதே மிகச் சிறந்தது.

வி - ம்: 'ஒறுத்தாற்றும் பண்பினார்' என்பதிலுள்ள 'பண்பு' என்பதற்குத் 'தகுதி' என்பது பொருள். 'பொறுத்தாற்றும் பண்பே' என்பதிலுள்ள 'பண்பு' என்பதற்கு 'குணம்' என்பது பொருள். 'ஒறுத்தாற்றும் பண்பினார்' என்றது 'தாம் தண்டிக்க வேண்டிய தகுதியுடையவர்'களை, தம்மை ஒறுக்கின்றவர்களையல்ல.

தாட்சணியத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் பரோபகாரமான காரியம் செய்வதால் தமக்கு அபாயம் வரும் என்றாலும் அதைப் பொருட்படுத்த மாட்டார்கள் :

**580. பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க
நாகரிகம் வேண்டு பவர்.**

ப. ரை : நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் நஞ்சு பெயக் கண்டும் உண்டு அமைவர் = நன்மை உண்டாக்கக்கூடிய தாட்சணியத்தை விரும்புகின்றவர்கள் விஷத்தை ஊற்றிக் கொடுப்

பதை (தாமே கண்ணுரக்) கண்டபின்னும் அதை உண்டுவிட சம்மதிப்பார்கள்.

பொ. ரை : நன்மை உண்டாக்கத் தகுந்ததாஞல், தாட்சணியத்தை விரும்புகின்றவர்கள், தம்முடைய கண்ணுக்கு முன்ஞல் விஷத்தை ஊற்றிக் கொடுத்தாலும் அதை உண்டு விட சம்மதிப்பார்கள்.

வி - ம் : தாட்சணியத்துக்குக் கட்டுப் பட்டவர்கள் தாம் செய்கிற காரியத்தால் பிறருக்கு நன்மையுண்டாகும் என்று கண்டால், தம்முடைய கண்ணுக்கு முன்ஞல் விஷத்தை ஊற்றிக் கொடுத்து அதை உண்ணச் சொன்ஞலும் உண்டு விடச் சம்மதிப்பார்கள். 'நயத்தக்க' என்பதற்கு 'நன்மை பயக்கத் தக்க' என்பது பொருள். 'நாகரிகம்' என்பது 'தாட்சணியம்'. 'நஞ்சுண்டமைவர்' என்பதற்கு 'நஞ்சை உண்டு விடவும் சம்மதிப்பார்கள்' என்பது பொருள். 'நஞ்சை உண்டு விட்ட பின்னும் அவரோடு மேவியிருப்பர்' என்பது பொருந்தாது. ஏன் எனில் நஞ்சை உண்டவன் உடனே இறந்து போவான். உடனே இறக்காவிட்டாலும் நோயுற்று உணர்ச்சியிழந்து மயக்கமடைந்து விடுவான். அதஞல் 'பின்னும் அவரோடு மேவியிருத்தல்' முடியாத காரியம். மேலும் தாட்சணியத்துக்காகப் பிறர் கொடுக்கும் நஞ்சை உண்டு விடுவார்கள் என்ரே, உண்ண வேண்டும் என்ரே சொல்ல வந்ததல்ல. பிறருக்கு நன்மை பயக்கக்கூடிய காரியங்களுக்காக, விஷத்தைக் கொடுத்தாலும் அதை உண்டு உயிர் விடக்கூடிய தியாகத்துக்கும் தயங்க மாட்டார்கள் என்பதை மட்டும் சொல்லுவது இந்தக் குறள்.

அதி. 59—ஒற்ருடல்

[ஒற்று + ஆள்தல் = ஒற்ருடல். ஒற்றர்களைக் கொண்டு காரியங்களை ஆள்வது. ஒற்றர்கள் என்பவர்கள் துப்பறிந்து வந்து சொல்லும் வேவுகாரர்கள். இது குறிப்பாக அரசனுக்குச் சொல்லப்படுவது. ஒரு அரசன் தன்னுடைய நாட்டிலும் அயல் நாடுகளிலும் சென்று உளவறிந்து வரும் இரகசியச் சேவகர்கள் மூலமாக அப்போதைக்கப்போது அரசாட்சிக்கு வேண்டிய விஷயங்களை அறிந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றியது.]

581. ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந்
தெற்றென்க மன்னவன் கண்.

ப. ரை : ஒற்றும் உரைசான்ற நூலும் இவை இரண்டும் மன்னவன் கண் தெற்றென்க = ஒற்றுக்கேட்பதும் (அரசியல்) நீதி

களிற் சிறந்த நூல்களும் ஆகிய இவை இரண்டும் அரசனுக்கு (இரண்டு) கண்களாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

பொ. ரை: வேவுகாரர்கள் மூலமாக அவ்வப்போது விஷயங்களை அறிவதும் சிறந்த அரசியல் நூல்களை ஆராய்ந்து கொள்வதும் ஆகிய இவை இரண்டும் அரசனுக்கு இரண்டு கண்கள் என்பதைத் தெளிவாக அறிய வேண்டும்.

வி-ம்: 'உரை சான்ற நூல்' என்பது அரசியல் சட்டதிட்ட நீதி நூல்கள். 'தெற்றெனல்' என்பது 'தெளிவாக அறிவது'.

ஒற்றர்கள் மூலமாக அரசன் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்கள் என்னவென்றால்:

**582. எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும்
வல்லறிதல் வேந்தன் றொழில்.**

ப. ரை: எல்லார்க்கும் நிகழ்பவை எல்லாம் எஞ்ஞான்றும் வல் அறிதல் வேந்தன் தொழில் = எல்லா மக்களிடத்தும் நிகழ்கின்ற எல்லாவற்றையும் எப்போதும் உடனுக்குடன் அறிய வேண்டியது அரசனுடைய வேலை.

பொ. ரை: (தன் நாட்டிலும் அயல் நாடுகளிலும்) எல்லாரிடத்திலும் நடக்கிற எல்லா நிகழ்ச்சிகளையும் உடனுக்குடன் அறிந்து கொள்ள வேண்டியது அரசனுடைய கடமை.

வி-ம்: 'எல்லார்க்கும் நிகழ்பவை எல்லாம்' என்பது உலகத்திலுள்ள எல்லா மனிதர்களுக்கும் அவர்களைப் பற்றிய எல்லா நிகழ்ச்சிகளையும் என்பது கருத்தல்ல. தன் அரசாட்சிக்கு வேண்டிய அளவில் தான் அறிந்துகொள்ள வேண்டிய எல்லாரைப் பற்றியும் அவர்களுடைய செயல்களைப் பற்றியும் என்ற அளவுக்குத்தான் கொள்ள வேண்டும். 'வல்லறிதல்'—'விரைவாக அறிதல்'.

ஒற்றர்கள் மூலமாக அப்போதைக்கப்போது விஷயங்களை அறிந்து கொள்ளாவிட்டால்:

**583. ஒற்றினா னொற்றிப் பொருடெரியா மன்னவன்
கொற்றங் கொளக்கிடந்த தில்.**

ப. ரை: ஒற்றினான் ஒற்றி பொருள் தெரியா மன்னவன் கொளக் கிடந்த கொற்றம் இல் = ஒற்றர்களைக் கொண்டு உளவுகளை (உடனுக்குடன்) தெரிந்து கொள்ளாத அரசன் அடையக் கூடிய வெற்றி ஒன்றுமில்லை.

பொ. ரை : ஒற்றர்கள் மூலமாக (தனக்கு வேண்டிய) சேதிகளை அப்போதைக் கப்போது இரகசியமாக அறிந்துகொள்ளாத அரசன் எந்தக் காரியத்திலும் வெற்றியடைய முடியாது.

வி-ம் : 'ஒற்றி' என்றால் யாருக்கும் தெரியாதபடி 'இரகசியமாகக் கேட்டு' என்று பொருள். 'கொற்றம்' என்பது யுத்தத்தில் அடையும் வெற்றியல்ல. பொதுவாகக் காரியங்களை வெற்றிகரமாக நடத்தும் பெருமைக்குக் 'கொற்றம்' என்று பெயர்; யுத்த வெற்றியும் அந்தக் கொற்றத்துள் அடங்கும்.

அரசன் ஒற்றர்கள் மூலமாக யார் யாரைப் பற்றிய சேதிகளை உடனுக்குடன் அறிந்துகொள்ள வேண்டும் என்றால் :

584. வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங்
கனைவரையு மாராய்வ தொற்று.

ப. ரை : தம்வினை செய்வார், சுற்றம், வேண்டாதார் என்றாங்கு அனைவரையும் ஆராய்வது ஒற்று = தம்முடைய காரியங்களைச் செய்கிறவர்கள், தம்முடைய உற்றார் உறவினர்கள், தம்மை விரும்பாதவர்கள் என்ற முறையில் எல்லாரையும் (வேவுகாரர்கள் மூலமாக) ஆராய்ந்துகொள்வதுதான் ஒற்றுடல் என்பது.

பொ. ரை : (ஒரு அரசன் தன்னுடைய நாட்டில் அங்கங்கே) தன்னுடைய பிரதிநிதிகளாக அரசாங்க காரியங்களைச் செய்கிறவர்கள் (சரியாக நடந்து கொள்ளுகிறார்களா என்பதையும்) தனக்கு நட்பாக உள்ளவர்கள் (நட்பு கெடாமல் இருக்கிறார்களா என்பதையும்) தன்னை விரும்பாதவர்களாகப் பகைமை கொண்டு யாராவது தீங்கு செய்ய முயல்கின்றார்களா என்பதையும் அறிந்துகொள்ள வேண்டிய முறையில் எல்லாரைப் பற்றியும் வேவுகாரர்கள் மூலமாகத் தெரிந்து கொள்வதுதான் ஒற்று கேட்டறிதல்.

வி-ம் : 'ஒற்று' என்பதற்கு இங்கே 'ஒற்றன்' என்பது பொருளல்ல. அரசன் 'ஒற்று கேட்டல்' என்பது பொருள். 'ஆராய்தல்' என்பதற்கு ஒற்றர்கள் சொல்வதைக் கொண்டு 'அரசன் ஆராய்தல்'.

உளவறிந்து வரக்கூடிய ஒற்றனுடைய இலக்கணம் என்னவென்றால் :

585. கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு
முகாஅமை வல்லதே யொற்று.

ப. ரை: கடாஅ உருவொடு கண்ணஞ்சாது யாண்டும் உகாமை வல்லதே ஒற்று = யாரும் ஐயப்பட முடியாத மாறு வேடத்தோடு அச்சமில்லாமல் எங்கும் சென்று (தான் இன்னான் என்பதை) வெளிப்படுத்திவிடாமல் (உளவறிந்து வரக்கூடிய) தன்மை உள்ளவனே ஒற்றன்.

பொ. ரை: தன்னை யாரும் சந்தேகிக்க முடியாதபடி மாறுவேடத்துடன் பயமில்லாமல் எங்கும் சென்று (தான் இன்னான் என்பதையும் தான் வந்த காரியம் இன்னதென்பதையும்) வெளிப்படுத்தி விடாமல் (உளவறிந்து) வரக்கூடியவனே ஒற்றனாவான்.

வி-ம்: 'உகாமை' என்பது மனதிலுள்ளதைச் சொல்லாதிருப்பது மட்டுமல்ல. தான் புனைந்துள்ள 'கடாஅ உருவு' உகாமையும் சேர்ந்தது. 'கடுத்தல்' என்றால் ஐயப்படுதல். 'கடா' என்றால் 'ஐயப்பட முடியாத' என்று பொருள். ஒற்றனானவன் இடத்துக்கும் காலத்துக்கும் தக்கபடி வெவ்வேறு வேடங்களில் அங்கங்கே அச்சமின்றிச் சென்று இரகசியங்களை அறிந்துவரக் கூடியவனாக இருக்க வேண்டும்.

சந்தேகிக்க முடியாதபடி வேடந்தாங்கிச் செல்வதோடு தான் அறிய வந்த விஷயங்களில் சம்பந்தப்படாதவன் போல பாவனை காட்டி உண்மைகளைக் கண்டறிய வேண்டும்:

586. துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந்
தென்செயினுஞ் சோர்வில தொற்று.

ப. ரை: துறந்தார் படிவத்தராகி இறந்து ஆராய்ந்து என் செயினும் சோர்வு இலது ஒற்று = பற்றற்றவர்கள் போல நடந்து கொண்டு (அறிய வேண்டியவற்றைத்) தீர ஆராய்ந்து (யார்) என்ன செய்தாலும் சோர்ந்து (தான் வந்த காரியத்தை வெளியிட்டு) விடாமலிருப்பவர்களே ஒற்றர்கள்.

பொ. ரை: (தாம் ஆராய்ந்தறிய வந்த இரகசியங்களில்) பற்றற்றவர்களைப் போல தோற்றமளித்து (விஷயங்களைத்) தீர விசாரித்து அறிந்து கொண்டு. யாராவது (சந்தேகித்து) என்ன பயமுறுத்திக் கேட்டாலும் ஏமாந்து போய்த் தம் இரகசிய வேலையை வெளியிட்டு விடாமல் இருக்கக் கூடியவர்களே ஒற்றர்கள்.

வி-ம்: 'துறந்தார் படிவத்தராகி' என்பதற்கு 'துறவிகளைப் போல் வேடம் பூண்டு' என்பது பொருளல்ல. ஏன் எனில் 'கடாஅ உருவொடு' என்று முன்னைய குறளில் சொன்ன நிலையே சமயத்துக்கு ஏற்றபடி சந்தேகிக்க முடியாத வேடங்களுடன் போய் உளவறிய வேண்டும் என்று சொல்லப்பட்டு

விட்டது. பின்னும் துறவிகள் வேடத்தில் போக வேண்டும் என்பதில் அர்த்தமில்லை. மேலும் 'இறந்தாராய்ந்து' என்பதற்கு 'உள்புகுதற்கரிய இடங்களிலெல்லாம் உள்புகுந்து ஆராய்ந்து' என்பது பொருளல்ல. ஏனெனில் முன்னைய குறளில் 'யாண்டும்' என்றதிலேயே எல்லா இடங்களுக்கும் போய் என்ற கருத்து அடங்கிவிட்டது. 'இறந்து' என்பதற்கு 'எல்லை கடந்து சென்று' என்று பொருள் கொள்ளக் கூடாது. 'இறந்து' என்பதற்கு 'முடிய' அல்லது 'நிர' என்பது இங்கே பொருள். 'இறந்தாராய்ந்து' என்பதற்குத் 'நிர விசாரித்தறிந்து' என்பது பொருள். ஒற்றனைவன் தான் ஆராய்ந்து உளவறிய வந்த விஷயத்துக்குச் சம்பந்தப் படாதவனைப் போல பாவனை செய்து கொண்டு, தான் அறிய வந்த விஷயத்தின் நுணுக்கங்கள் எல்லாவற்றையும் நிர ஆராய்ந்து கொள்ள வேண்டும் என்பது இக்குறளின் கருத்து.

அப்படிப் பற்றற்றவனைப் போல் பாவனை செய்து உடனே அறிந்து கொள்ள முடியாத இரகசியங்களைத் திறமையுள்ள கேள்விகளைப் போட்டு அவற்றிற்கு வரும் விடைகளைக் கொண்டு இரகசியமான விஷயங்களையும் அறிய வேண்டும் :

587. மறைந்தவை கேட்கவற் றாகி யறிந்தவை
யையப்பா டில்லதே யொற்று.

ப. ரை : மறைந்தவை கேட்கவற்றாகி அறிந்தவை ஐயப்பாடு இல்லதே ஒற்று = (தானே அறிந்து கொள்ள முடியாதபடி) மறைந்திருக்கும் இரகசியங்களைக் கேள்விகள் போட்டு அறிந்து கொள்ளும் வல்லமையுள்ளவனாகி, அறிந்த மட்டிலும் ஐயத்துக்கு இடமில்லாதபடி தெரிந்துவரக் கூடியவனே ஒற்றனாவான்.

பொ. ரை : தனக்குப் புலப்படாத இரகசியங்களைக் கேள்விகள் போட்டுத் தெரிந்து கொள்ளக்கூடிய வல்லமையுள்ளவனாகி தெரிந்த மட்டிலும் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி தெரிந்து வரக் கூடியவனே சரியான ஒற்றனாவான்.

வி- ம் : 'கேட்க வற்றாகி' என்பதற்குக் 'கேட்டறிய வல்லவனாகி' என்பது பொருள். அறிய முடியாத இரகசியங்களை மறைமுகமான கேள்விகளைப் போட்டு அதன் மூலமாக அறிந்து கொள்ள மிக்கத் திறமை வேண்டுமாதலால் 'கேட்க வற்றாகி' என்றார்.

ஒற்றன் அப்படி யெல்லாம் ஆராய்ந்து உளவறிந்து வந்து சொல்லுகிற சேதிகளையும் கூட தலைவன் உடனே நம்பிவிடாமல் அவற்றின் உண்மைகளை இன்னொரு ஒற்றன் மூலமாக விசாரிக்க வேண்டும் :

588. ஒற்றொற்றித் தந்த பொருளையு மற்றுமோர்
ரொற்றினா லொற்றிக் கொளல்.

ப. ரை: ஒற்று ஒற்றி தந்த பொருளையும் மற்றும் ஓர் ஒற்றினால் ஒற்றி கொளல் = ஒரு ஒற்றன் துப்பறிந்து வந்து சொன்ன சேதிகளையும் இன்னொரு ஒற்றனைக் கொண்டு அறிந்து வரச் செய்து அதன் பிறகு ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பொ. ரை: ஒரு ஒற்றன் உளவறிந்து வந்து சொன்ன விஷயங்களையும் வேறொரு ஒற்றனைக் கொண்டு அதே விஷயங்களை ஆராய்ந்து வரச்செய்து, அதன் பிறகே தலைவன் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

வி-ம்: ஒற்றன் எவ்வளவு ஆராய்ந்து அறிந்து வந்தாலும் அரசன் தான் ஆராயாமல் எதையும் உடனே நம்பிவிடக் கூடாது என்பது கருத்து.

அப்படி ஒரே விஷயத்தைப்பற்றி உளவறிந்துவர மூன்று ஒற்றர்களை தனித்தனியே ஏவி அரசன் உண்மையான நிலையை அறிய வேண்டும்:

589. ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர்
சொற்றொக்க தேறப் படும்.

ப. ரை: ஒற்று ஒற்று உணராமை ஆள்க; உடன் மூவர் சொல் தொக்க தேறப்படும் = ஒரு ஒற்றனை இன்னொரு ஒற்றன் அறியாதபடி ஏவ வேண்டும்; ஒரே வேலைக்கு மூன்று ஒற்றர்களை (தனித்தனியே) ஏவி (அம் மூவரும் தனித்தனியே) சொல்லுவதைச் சேர்த்துப் பார்த்து பிறகு தீர்மானிக்க வேண்டும்.

பொ. ரை: (உளவுகளை அறிந்துவர அனுப்பப்படுகிற) ஒரு ஒற்றன் இன்னொரு ஒற்றனை அறியாதபடி அரசன் பார்த்துக் கொள்ள வேண்டும்; அப்படி ஒரே காரியத்தை அறிந்து வர மூன்று ஒற்றர்களைத் தனித்தனியே அனுப்பி, அம்மூவரும் அறிந்து வந்து தனித்தனியே சொல்லுவதைச் சேர்த்து ஒன்றொடொன்றை ஒத்துப் பார்த்துப் பிறகு அரசன் தீர்மானம் செய்து கொள்ள வேண்டும்.

வி-ம்: 'உடன்மூவர்' என்பது ஒரே காரியத்தை உளவறிய தனித்தனியே அனுப்பப்படும் மூன்று ஒற்றர்கள். 'தொக்க' என்பது 'தொகுத்து ஆராய்ந்த முடிவு'.

ஒற்றர்களை இரகசியமாகவும் தனித்தனியாகவும் ஆள்வது மட்டுமன்றி அவர்களைப் பாராட்ட வேண்டுமானாலும் இரகசியமாகவே அரசன் பாராட்ட வேண்டும்:

590. சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற்
புறப்படுத்தா னாகு மறை.

ப. ரை: ஒற்றின்கண் சிறப்பு அறிய செய்யற்க; செய்யின் மறை புறப்படுத்தான் ஆகும் = ஒற்றர்களுக்குச் சிறப்பு செய்வதைப் பிறர் அறியும்படி செய்யக் கூடாது; செய்தால் உளவுகளை வெளிப்படுத்தினவன் ஆவான்.

பொ. ரை: (அரசன் தன்னுடைய) ஒற்றர்களைப் பாராட்டிச் சிறப்புகள் செய்தால் அதைப் பிறர் அறியும்படி பகிரங்கமாகச் செய்யக் கூடாது; அப்படிச் செய்தால் இரகசியங்களை பகிரங்கப்படுத்துவதாக முடியும்.

வி-ம்: ஒற்றர்களுக்கும் அரசனுக்கும் உள்ள தொடர்புகளை யாரும் அறியாதபடி காக்க வேண்டுமாதலால், திறமையுள்ள ஒற்றர்களைப் பாராட்டுவது கூட யாருக்கும் தெரியக் கூடாது. அரசாங்கத்தைச் சேர்ந்த மற்ற அலுவலாளர்களைப் பகிரங்கமாக அரசன் பாராட்டிப் பரிசுகள் வழங்கலாம். ஆனால் உளவறியும் இரகசிய வேலை செய்கிற ஒற்றர்களிடத்தில் அப்படிச் செய்யக் கூடாது. ஒரு ஒற்றனைப் பாராட்டுவது இன்னொரு ஒற்றனுக்குக் கூடத் தெரியக்கூடாது—என்பது கருத்து.

அதி. 60—ஊக்கமுடைமை

['ஊக்கம் உடைமை' என்பது காரியத்தைச் செய்து முடிக்க முடியும் என்ற நம்பிக்கையும் செய்து முடிக்க வேண்டும் என்ற துடிப்பும் கூடிய மனக் கிளர்ச்சியுடையவராக இருப்பது. இது எல்லாருக்கும் வேண்டியது.]

591. உடைய ரெனப்படுவ தூக்கமஃ தில்லா
ருடைய துடையரோ மற்று.

ப. ரை: உடையர் எனப்படுவது ஊக்கம்; அஃது இல்லார் மற்று உடையது உடையரோ = ஒருவரை உடையவர் என்று சொல்ல ஊக்கம் உடையவராக இருப்பதுதான்; இது இல்லாதவர்கள் வேறு என்ன உடையவர்களாக இருந்தாலும் உடையவர்கள் ஆவார்களா? (ஆகமாட்டார்கள்.)

பொ. ரை: ஊக்கம் உடையவர்களைத்தாம் (ஒன்றை) உடையவர்களாகச் சொல்லத்தகும்; ஊக்கம் இல்லாதவர்கள் மற்ற எது உடையவர்களாக இருந்தாலும் உடையவர்கள் ஆக மாட்டார்கள்.

வி-ம்: ஊக்கமுடைமை இருந்தால், மற்றெல்லா உடைமைகளும் உண்டாகும்; அது இல்லாமல் மற்ற எது இருந்தும் பயனில்லை என்பது கருத்து:

**592. உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்.**

ப. ரை: உள்ளம் உடைமை உடைமை; பொருள் உடைமை நில்லாது நீங்கிவிடும் = ஊக்கமுள்ள உள்ளம் இருப்பது தான் (ஒருவருக்கு) அவருடைய உடைமை; வெறும் பொருள் உடைமை நிலையற்றது; இல்லாமற் போய்விடும்.

பொ. ரை: மனவலிமை தான் ஒருவருக்கு சொந்த உடைமையாகும்; பொருள் உடைமை அவருடன் நிற்கக் கூடியதல்ல; அவரை விட்டு பிரிந்துவிடக் கூடியது.

வி-ம்: மனச் செல்வம் உடலோடு சேர்ந்தது: ஒருவரைவிட்டு ஒரு போதும் நீங்காது. பணச் செல்வம் மனதைப் போல் எப்போதும் உடனிருக்கக் கூடியதல்ல.

பொருளுடைமையைக் காட்டிலும் ஊக்கமுடைமை நீங்காத செல்வம் என்பதை எப்படி நிச்சயிக்கிறோம் என்றால்:

**593. ஆக்க மிழந்தேமென் றல்லாவா ரூக்க
மொருவந்தம் கைத்துடை யார்.**

ப. ரை: ஊக்கம் ஒருவந்தம் கைத்து உடையார் ஆக்கம் இழந்தேம் என்று அல்லாவார் = ஊக்கம் உண்மையாகத் தம்மிடத்தில் உள்ளவர்கள் செல்வத்தை இழந்துவிட்டோமே என்று துன்புற்றுத் தவிக்கமாட்டார்கள்.

பொ. ரை: உண்மையாக ஊக்கம் உடையவர்கள் தமக்குள்ள பொருள் செல்வத்தையெல்லாம் இழந்துவிட்டாலும் அதற்காக வருத்தப்பட மாட்டார்கள்.

வி-ம்: பொருட்செல்வம் வருவதும் போய்விடுவதும் சகசம். ஊக்கம் என்ற மனத் திட்பம் உடையவர்கள், முன் குறளில் சொல்லப்பட்ட நிலைபெற்று நீங்காத செல்வமாகிய ஊக்கம் இருப்பதனால் நிலையற்ற நீங்கும் செல்வமாகிய பணச்

செல்வம் போய்விட்டதைப் பற்றி வருந்தமாட்டார்கள். 'ஒருவந்தம்' என்றால் 'உண்மையாக' அல்லது 'நிச்சயமாக' என்பது பொருள். 'அல்லாத்தல்' என்பது 'மிக்க வருத்தமடைவது'. 'அல்லாவார்' என்பது 'வருத்தப்படமாட்டார்கள்'.

உண்மையான ஊக்கமுடையவர்கள் செல்வத்தை இழந்துவிட்டாலும் வெகு விரைவில் மீண்டும் அதை அடைவார்கள். எப்படியெனில், அவர்கள் உண்மையான ஊக்கமுடையவர்களானதால் செல்வம் தானே அவர்களைத் தேடி அடையும்:

594. ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா
ஊக்க முடையா னுழை.

ப. ரை: அசைவு இலா ஊக்கம் உடையான் உழை ஆக்கம் அதர்வினாய் செல்லும் = அசைதல் இல்லாத ஊக்கம் உடையவனிடத்திற்கு செல்வம் வழி கேட்டுக்கொண்டு போய்ச் சேரும்.

பொ. ரை: உறுதியான ஊக்கம் உடையவன் இருக்கிற இடத்தை நாடி செல்வம் வழி விசாரித்துக் கொண்டு அவனிடம் தானாகவே போய்ச் சேரும்.

வி-ம்: 'அதர்' என்பது 'வழி'. 'வினாய்' என்பது 'வினவி'. ஊக்கம் உடைமையே ஒருவனுடைய செல்வத்துக்கும் செல்வாக்குக்கும் காரணமானதால் திடமான ஊக்கமுடையவனுக்கு நிச்சயமாகச் செல்வம் கிடைக்கும் என்பது கருத்து.

செல்வமோ மற்றச் சிறப்புகளோ யாருக்கும் அவரவருடைய ஊக்கம் எவ்வளவோ அவ்வளவுக்குத்தான் கிடைக்கும்:

595. வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

ப. ரை: வெள்ளத்து அனைய மலர் நீட்டம்; மாந்தர் தம் உள்ளத்து அனையது உயர்வு = தண்ணீர் அளவுக்குத் தகுந்தபடி தாமரை மலர்களின் தண்டுகள் நீளும்; (அதுபோல்) மக்களுடைய உள்ளத்தின் ஊக்கத்துக்குத் தகுந்தபடி அவர்களுடைய சிறப்புகள் உயரும்.

பொ. ரை: தண்ணீருடைய அளவுக்குத் தகுந்தபடி தாமரை மலர்களின் தாள்கள் நீளும்; அதைப்போல மனிதர்களுடைய ஊக்கத்தின் அளவுக்குத் தக்கபடி அவர்களுடைய சிறப்புகள் உயரும்.

வி-ம்: 'உள்ளத்தனையது உயர்வு' என்றதில் 'உயர்வு' என்பது செல்வத்தை மட்டும் குறிப்பதல்ல. 'உயர்ந்தவன்' என்று சொல்லத்தகுந்த வேறு சிறப்புகளையும் குறிப்பது. அதனால் ஒரு மனிதனுக்கு எவ்வளவுக்கெவ்வளவு ஊக்கம் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு செல்வம் வரும் என்பது மட்டுமன்றி அவனுடைய ஊக்கம் எவ்வளவுக்கெவ்வளவு நல்ல காரியங்களிற் செல்லுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவு உயர்ந்த மனிதன் என்ற பெருமையும் உண்டாகும் என்பது கருத்து.

ஆதலால் ஒவ்வொரு மனிதனும் உயர்ந்த காரியங்களுக்கே ஊக்கமுடையவனாக இருக்க வேண்டும்:

**596. உள்ளுவ தெல்லா முயர்வுள்ளன் மற்றது
தள்ளினுந் தள்ளாமை நீர்த்து.**

ப. ரை: உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்; மற்றது தள்ளினும் தள்ளாமை நீர்த்து = (ஊக்கத்தோடு) எண்ணுவதையெல்லாம் உயர்ந்த செயல்களாகவே எண்ண வேண்டும்; (உயர்ந்ததல்லாத) மற்றது விலக்கினாலும் விலக்க முடியாத தன்மையுள்ளது. (அதற்கு ஊக்கமுயற்சி வேண்டியதில்லை.)

பொ. ரை: ஊக்கம் கொள்ளவேண்டியதெல்லாம் உயர்வான நல்ல காரியங்களுக்காகத்தான்; உயர்ந்ததல்லாத கீழான எண்ணத்திற்கு ஊக்கமே வேண்டியதில்லை. ஏனெனில் அது விலக்கினாலும் விலக்க முடியாதபடி இயல்பாகவே நம்மிடத்தில் இருக்கிறது.

வி-ம்: இக்குறள் அரசனுக்கு மட்டும் சொன்னதாகக் கொண்டு, ஒரு அரசன் தன்னுடைய உயர்வையே கருதவேண்டும் என்பது வள்ளுவர் கருத்துக்குச் சிறிதும் பொருந்தாது. மேலும் அப்படிக் கொள்வது பயனற்றது. மனித சுபாவத்தில் கீழ்த்தரமான ஆசைகளும் அவற்றிற்கான துடிப்புகளும் நிறைந்திருக்கின்றன. எவ்வளவு தள்ளினாலும் அவை தள்ளமுடியாத தன்மையுள்ளவை. அவைகளை எண்ண ஊக்கமோ முயற்சியோ வேண்டியதில்லை. மேலும் அவற்றால் ஒருவனுக்கு உயர்வு கிடைக்காது. உயர்வு கொடுக்கக் கூடியவை நல்ல காரியங்களே. அவற்றைச் செய்யத்தான் ஊக்கமும் முயற்சியும் மேற்கொள்ள வேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு உயர்வான காரியங்களை எண்ணுகின்றோமோ அவ்வளவுக்கவ்வளவு பெருமை கிடைக்கும் என்று முன் குறளில் சொல்லப்பட்டதனால் 'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல்' என்று இங்கே வலியுறுத்துகிறார்.

ஊக்கமுடையவர்கள் இடையூறுகளுக்கு அஞ்சிவிட மாட்டார்கள் :

597. சிதைவிடத் தொல்கா ருரவோர் புதையம்பிற்
பட்டுப்பா டூன்றுங் களிறு.

ப. ரை : களிறு புதை அம்பில் பட்டு பாடு ஊன்றும் ; உரவோர் சிதைவு இடத்து ஒல்கார் = யானை (தன் தேகத்தில்) புதைந்த அம்பினால் புண்பட்டபின் உறுதியாக எதிர்த்து நிற்கும் ; அதுபோல ஊக்கமுடையவர்கள் (தம்முடைய முயற்சிகளில்) தோல்வி வந்து விட்டால் பின்வாங்கிவிட மாட்டார்கள்.

பொ. ரை : யானையானது தன்னுடைய தேகத்தில் அம்பு புதைந்து புண்பட்டபின் முன்னிலும் அதிக உறுதியோடு எதிர்க்கும் ; அதுபோல ஊக்கமுடையவர்கள் நம்முடைய முயற்சிகளில் ஒரு நஷ்டம் வந்து விட்டால் அதற்காகப் பின் வாங்கி விடாமல் முன்னிலும் ஊக்கத்தோடு முயல்வார்கள்.

வி - ம் : புண்பட்ட யானை முன்னிலும் வேகமாக எதிர்க்கும் ; அதுபோல் ஊக்கமுடையவர்கள் தோல்வி வந்து விட்டால் பின்னும் உறுதியோடு முயல்வார்கள். 'பாடூன்றும்' என்பதற்கு 'பலமாக எதிர்த்து முன்னேறும்' என்பது பொருள்.

அப்படிப்பட்ட ஊக்கமில்லாதவர்கள் சமூகத்தில் சிறப்புடையவர்கள் என்ற பெருமித இன்பம் அடைய முடியாது :

598. உள்ள மிலாதவ ரெய்தா ருலகத்து
வள்ளிய மென்னுஞ் செருக்கு.

ப. ரை : உள்ளம் இலாதவர் உலகத்து வள்ளியம் என்னும் செருக்கு எய்தார் = ஊக்கம் இல்லாதவர்கள் உலகத்தில் 'நாம் நல்லவர்' என்ற இன்பக் களிப்பை அடைய மாட்டார்கள்.

பொ. ரை : ஊக்கம் இல்லாதவர்கள் நல்லவர்கள் என்ற (புகழினால் வரக்கூடிய) இன்பத்தை அடைய மாட்டார்கள்.

வி - ம் : உயர்வான காரியங்களை எண்ணி அதில் ஊக்கம் கொண்டவர்களை உலகம் புகழ்ந்து பெருமைப் படுத்தும். அந்தப் பெருமையினால் அவர்கள் மனதில் 'நாம் நல்ல காரியங்களைச் செய்தோம்' என்ற ஒரு மகிழ்ச்சி உண்டாகும். ஊக்கமில்லாதவர்களை அப்படி உலகம் பாராட்டாது. அதனால் அவர்களுக்கு அந்த இன்பமும் கிட்டாது. ஆகையால் 'உல

கத்து வள்ளியம் என்னும் செருக்கு எய்தார்' என்று சொல்லப்பட்டது. 'செருக்கு' என்பதற்கு இங்கே 'களிப்பு' அல்லது 'பெருமிதத்தின் இன்பம்' என்பது பொருள்.

ஊக்கம் என்பது வெறும் மன வலிமையேயன்றி உடல் வலிமை அல்ல:

599. பரியது கூர்ங்கோட்ட தாயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின்.

ப. ரை: பரியது கூர்ங் கோட்டது ஆயினும் யானை புலி தாக்குறின் வெரூஉம் = பருத்ததாகவும் கூர்மையான (தந்தக்) கொம்புகளை உடையதாகவும் இருந்தாலும் யானையானது புலியின் தாக்குதலுக்கு அஞ்சும்.

பொ. ரை: மிகப் பெரிய தேகமும் கூர்மையான தந்தங்களும் உள்ளதாக இருந்தும் ஒரு யானை புலியின் தாக்குதலுக்கு பயப்படும்.

வி-ம்: புலியைக் காட்டிலும் பருத்ததாகவும் பலமுள்ளதாகவும் இருந்தும் ஊக்கத் துடிப்பில்லாததால் யானை புலிக்கு அஞ்சுகின்றது. ஆகையினால் வெல்லுவது ஊக்கமேயன்றி உடலின் வலிமை அல்ல.

ஆகையினால்:

600. உரமொருவற் குள்ள வெறுக்கைய: தில்லார்
மரமக்க ளாதலே வேறு.

ப. ரை: ஒருவற்கு உரம் உள்ள வெறுக்கை; அஃது இல்லார் மரம்; மக்கள் ஆதலே வேறு = ஒருவனுக்கு வலிமை என்பது மன வலிமைதான்; அது இல்லாதவர்கள் மரம்: மக்கள் என்ற பெயர்தான் வேறு.

பொ. ரை: ஒருவனுக்கு பலம் என்பது மனோபலம்தான்; அந்த மனோபலம் இல்லாதவர்கள் மரத்துக்குச் சமானம்; மனிதர்கள் என்ற பெயர்தான் வித்யாசம்.

வி-ம்: 'உள்ள வெறுக்கை' என்பது 'மனஉறுதி'. 'மரம்' உள்ளம் என்ற ஒன்று இல்லாதது. அதனால் 'உள்ள வெறுக்கை' இல்லாதவர்களை 'மரம்' என்றார்.

அதி. 61—மடியின்மை

['மடி இன்மை' என்பது 'சோம்பல்' இல்லாதிருத்தல். 'மடி' என்றால் 'சோம்பல்' உள்ளத்தில் ஊக்கமிருந்தும் உட

லின் சோம்பலால் வாழ்க்கை கெடுவதுண்டு. ஊக்கத்தை உழைப்பில் செலுத்த வேண்டும் என்பது. இது எல்லாருக்கும் பொது.]

601. குடியென்னுங் குன்று விளக்க மடியென்னு
மாசூர மாய்ந்து கெடும்.

ப. ரை: குடி என்னும் குன்று விளக்கம் மடி என்னும் மாசு ஊற மாய்ந்து கெடும் = உயர்ந்த குடி என்ற குறையாத ஒளி, சோம்பல் என்ற குற்றம் சேர்ந்தால் அழிந்து மறைந்து போகும்.

பொ. ரை: குறைவற்ற பெருங்கீர்த்தியுள்ள (செல்வம் மிகுந்த) குடித்தனமும் சோம்பல் என்ற குற்றம் அங்கே புகுந்து விட்டால் பிரகாசம் கெட்டு மறைந்து போகும்.

வி - ம்: 'குன்று விளக்கம்' என்பது குறையாத செல்வச் சிறப்பும் புகழும் சேர்ந்த ஒளி. 'கெடும்' என்பதற்கு இங்கே 'மறையும்' என்பது பொருள்.

ஆகையினால் குடித்தனம் கெடாமல் இருக்க, சோம்பலுக்கு இடங் கொடாமல் இருக்க வேண்டும்:

602. மடியை மடியா வொழுகல் குடியைக்
குடியாக வேண்டு பவர்.

ப. ரை: குடியை குடியாக வேண்டுபவர் மடியை மடியா ஒழுகல் = தாம் பிறந்த குடித்தனம் (கெட்டுப் போகாமல்) குடித்தனமாக இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் சோம்பலை ஒழித்து வாழ்க்கை நடத்த வேண்டும்.

பொ. ரை: தாம் பிறந்த குடித்தனம் (ஒளியிழந்து மறைந்து) கெட்டுப் போகாமல் இருக்க வேண்டுமென்று விரும்புகிறவர்கள் சோம்பலை ஒழித்துக் கடமைகளைச் செய்தொழுக வேண்டும்.

வி - ம்: 'மடியை மடியா ஒழுகல்' என்றால் 'மடியை மடித்து ஒழுகல்'. அதாவது 'சோம்பலைத் தொலைத்து நடந்து கொள்ளுதல்'. 'மடியா' என்பது 'மடித்து' என்ற பொருளில் நிற்பது. 'மடித்தல்' என்றால் 'தொலைத்தல்' அல்லது அழித்தல்.

அப்படி நடந்து கொள்ளாவிட்டால்:

603. மடிமடிக் கொண்டொழுகும் பேதை பிறந்த
குடிமடியுந் தன்னினு முந்து.

ப. ரை: மடி மடிக்கொண்டு ஒழுகும் பேதை பிறந்த குடி தன்னினும் முந்து மடியும்=சோம்பலை மடியில் கட்டிக் கொண்டு இருக்கிற அறிவில்லாதவன் பிறந்த குடித்தனம் அவனுக்கு முன்னால் அழிந்து விடும்.

பொ. ரை: சோம்பேறித்தனம் மிகவும் உள்ளவனான ஒரு மூடன் பிறந்த குடித்தனம், அவன் இறந்து போவதற்கு முன் (அவன் காண அவனால்) கெட்டுப் போகும்.

வி-ம்: சோம்பல் இல்லாத பல முன்னோர்களுடைய உழைப்பினால் பெருமையடைந்துள்ள ஒரு குடித்தனம் ஒரு சோம்பேறி பிறந்தால் அது அவனுடைய ஆயுள் காலத்திற்குள் கெட்டுப் போய்விடும். அவன் மடிவதற்குமுன் அக்குடித் தனத்தின் பெருமை மடிந்துபோகும் என்பது கருத்து.
அது எப்படியென்றால்:

604. குடிமடிந்து குற்றம் பெருகு மடிமடிந்து
மாண்ட வுஞற்றி லவர்க்கு.

ப. ரை: மடி மடிந்து மாண்ட உஞற்று இலவர்க்கு குடி மடிந்து குற்றம் பெருகும்=சோம்பலினால் ஒடுங்கி, குடித்தனத்துக்கு சிறப்புண்டாக்கிய காரியங்களைச் செய்யாதவர்களுக்கு அவர்களுடைய குடித்தனத்தின் பெருமை கெட்டுப் போவதோடு குற்றமும் பெருகும்.

பொ. ரை: சோம்பலில் ஒடுங்கி, குடித்தனத்துக்குப் பெருமையுண்டாக்கிய காரியங்களைச் செய்யாமலிருப்பவர்களுக்கு அவர்களுடைய குடித்தனத்தின் பெருமை கெட்டுப் போகும் என்பது மட்டுமல்ல; அவர்கள் குற்றவாளிகளும் ஆவார்கள். (அந்த குற்றத்துக்காக அவர்களுக்குத் தனியான தண்டனையும் வரும்.)

வி-ம்: 'மாண்ட' என்பதற்கு குடும்பத்துக்குப் பெருமை தந்த வழக்கமான காரியங்கள். 'உஞற்றல்'—'செய்தல்'. சோம்பேறி பிறந்த குடித்தனம் அவனால் கெட்டுப் போகும் என்பது மட்டுமன்றி அவனுக்குப் பாவமும் பழியும் வரும். அந்தக் குற்றங்களுக்கான தண்டனையும் பின்னால் வரும்.

நல்ல வாழ்க்கை நடத்த விரும்புகிறவர்கள் விலக்க வேண்டிய குற்றங்களுள் சோம்பல் ஒன்று. அக்குற்றங்களாவன:

605. நெடுநீர் மறவி மடிதுயி லுன்கும்
கெடுநீரார் காமக் கலன்.

ப. ரை: நெடுநீர், மறவி, மடி, துயில் நான்கும் கெடும் நீரார் காம கலன் = (காரியம் செய்வதில்) காலம் நீட்டுவது, கடமைகளை மறந்திருப்பது, சோம்பல், (மிகுந்த) தூக்கம் ஆகிய நான்கும் கெட்டுப்போகும் தன்மையுள்ளவர்கள் மிகவும் ஆசையோடு விரும்புகின்ற ஆபரணங்கள்.

பொ. ரை: காரியத்தில் தாமதம், கடமைகளை மறந்திருத்தல், சோம்பல், மிகுந்த தூக்கம் ஆகிய நான்கும் கெட்டுப் போகிறவர்கள் மிகவும் ஆவலோடு விரும்புகின்ற ஆபரணங்கள்.

வி - ம்: 'கெடு நீரார்' என்பதற்கு 'இறந்து போகும் இயல்புடையவர்கள்' என்பது பொருளல்ல. வாழ்க்கையில் கெட்டுப் போகும் தன்மையுள்ளவர்கள் என்பது பொருள். 'கலன்' என்பதற்கு 'மரக்கலம்' என்பது பொருளல்ல. 'ஆபரணங்கள்' என்பது பொருள். 'காமம்' என்பது 'மிகுந்த ஆசை'.

எவ்வளவு சிறப்புடையவர்களானாலும் சோம்பலுள்ளவர்கள் அந்தச் சிறப்பின் பயனை அடைய முடியாது :

606. படியுடையார் பற்றமைந்தக் கண்ணு மடியுடையார்
மாண்பய னெய்த லரிது.

ப. ரை: படி உடையார் பற்று அமைந்த கண்ணும் மடி உடையார் மாண் பயன் எய்தல் அரிது = உலகத்தாரின் நன்மதிப்பு உள்ளவர்களானாலும் சோம்பல் உடையவர்கள் (அந்த மதிப்பினால் அடையக் கூடிய) பெரும் பயனை அடைய முடியாது.

பொ. ரை: உலக மக்களின் அபிமானம் கிடைத்தாலும் சோம்பலுடையவர்கள் அதனால் அடையக் கூடிய பெரும் பயன்களை அடைவது முடியாது.

வி - ம்: 'படியுடையார் பற்று' என்பது ஒருவனுடைய கல்வி, ஒழுக்கம், திறமை முதலிய பல நற்குணங்களுக்காகப் பொது மக்கள் அவனைப் பாராட்டுதல். அதைப் பெற்றவனாக இருந்தாலும் அவன் சோம்பல் உள்ளவனாக மட்டும் இருப்பானானால் மற்ற எல்லாக் குணங்களும் பயனற்றவையாகும். பிறர் அவனிடத்தில் வைத்த நம்பிக்கையும் மதிப்பும் வீணாகும். சோம்பல் இல்லாதவனானால் அந்தப் பொது மக்களின் நன்

மதிப்பால் அவன் 'பெரிய பயன்களை' அடைய முடியும் என்பதற்காக 'மாண் பயன்' என்றார்.

பொதுமக்களின் நன் மதிப்பைப் பெற்றும் சோம்பேறித் தனத்தால் காரிய முயற்சியில்லாதவர்கள் 'மாண் பயன்' அடையாமற் போவதுடன் அவமானமும் அடைவார்கள் :

607. இடிபுரிந் தெள்ளுஞ்சொற் கேட்பர் மடிபுரிந்து
மாண்ட வுஞற்றி லவர்.

ப. ரை: மடிபுரிந்து மாண்ட உஞற்று இலவர் இடி புரிந்து எள்ளும் சொல் கேட்பர் = சோம்பலை விரும்பி சிறந்த காரியங்களைச் செய்யத் தவறியவர்கள் (பலர்) இடித்துக் கூறும் இகழ்ச்சிகளைக் கேட்பார்கள்.

பொ. ரை: சோம்பலை மேற்கொண்டதால் (பொதுமக்கள் எதிர் பார்த்த) சிறந்த காரியத்தைச் செய்யத் தவறியவர்கள் (படியுடையார் பற்றை இழந்து) இடித்துப் பேசும் வசை மொழிகளைக் கேட்க வேண்டிய அவமதிப்புக்கு ஆளாவார்கள்.

வி-ம்: பொதுமக்கள் மிகவும் பற்று வைத்து எதிர்பார்த்த காரியத்தைச் செய்யத் திறமையிருந்தும் வெறும் சோம் பேறித்தனத்தால் செய்யாமல் இருந்து விட்டவனை பொது மக்கள் அவமதித்துப் பேசுவார்கள் என்பது கருத்து.

சோம்பேறித் தனத்தால் பொதுக் காரியத்தைச் செய்யத் தவறினல் ஊரார் அவமதிப்பதோடு முடியும். ஆனல் சொந் தக் குடும்ப காரியங்களைச் செய்வதில் சோம்பினல் :

608. மடிமை குடிமைக்கட் டங்கிற்றன் னொன்னார்க்
கடிமை புகுத்தி விடும்.

ப. ரை: குடிமைக்கண் மடிமை தங்கின் தன் ஒன்னார்க்கு அடிமை புகுத்தி விடும் = குடும்ப காரியங்களில் (எப்போதும்) சோம் பல் கொண்டால் (அக்குற்றம்) தன்னுடைய பகைவர்களுக்கு அடிமையாக்கி விடும்.

பொ. ரை: ஒருவன் தன் குடும்ப காரியங்களில் எப்போதும் சோம்பலுள்ளவனாக இருப்பானாகில் (அக்குற்றம்) அவனை அவனுடைய பகைவர்களுக்கு அடிமையாக்கி விடும்.

வி-ம்: தன்னுடைய குடும்ப காரியங்களை. சோம்பல் காரண மாகச் செய்யாமல் இருந்து விட்டால் கடைசியில் பிறருக்கு ஏவல் செய்து பிழைக்க வேண்டிய நிலைமை வந்து விடும் என்

பது கருத்து. 'மடிமை குடிமைக்கண் தங்கின்' என்பதனுல் சோம்பேறித்தனம் குடும்ப காரியங்களில் 'நீடித்து தங்கி விட்டால்' என்பது பொருள். ஏதேனும் சில சமயங்களில் சோம்பி விட்டாலும் குற்றமில்லை. ஆனுல் குடும்பத்தில் தங்கி விடக் கூடாது என்பது குறிப்பு.

சோம்பலில்லாமல் உழைக்கிறவன் கெட்டுப்போன குடித் தனத்தையும் ஈடேற்ற முடியும் :

609. குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன்
மடியாண்மை மாற்றக் கெடும்.

ப. ரை : குடியாண்மையுள் வந்த குற்றம் ஒருவன் மடியாண்மை மாற்ற கெடும் = குடித்தனத்துக்கு வந்து விட்ட குறைகள் (அக்குடும்பத்தில்) ஒருவன் சோம்பலை மாற்றி, சுருசுருப்பாக உழைப்பானுகில் தீர்ந்து விடும்.

பொ. ரை : ஒரு குடும்பத்துக்கு வந்து விட்ட பல துன்பங்களும் (அக்குடும்பத்திலுள்ள) ஒருவன் சோம்பலுக்கு இடங்கொடாமல் உழைத்தால் தீர்ந்து போகும்.

வி - ம் : 'குடியாண்மை' என்பதை ஒரே பதமாகக் கொள்ள வேண்டும். குடும்பத்தில் பிறந்த பல பேருடைய குற்றங் களால் வந்து விட்ட குறைகளையும் சோம்பல் இல்லாமல் உழைக்கின்ற ஒரு தனி மனிதனுல் நீக்க முடியும் என்பது கருத்து.

சோம்பலுக்கு இடங் கொடுக்காமல் அரசு நடத்துகிற மன்னவன் ஏக காலத்தில் இம்மை மறுமை இரண்டிலும் நன்மையடையக் கூடியவன் :

610. மடியிலா மன்னவ னெய்து மடியளந்தான்
றாஅய தெல்லா மொருங்கு.

ப. ரை : மடி இலா மன்னவன் அடியளந்தான் தாஅயது எல்லாம் ஒருங்கு எய்தும் = சோம்பல் இல்லாத மன்னவன் இரண்டு அடிகளால் திருமால் அளந்த மண்ணையும் விண்ணையும் ஒருங்கே அடைவான்.

பொ. ரை : சோம்பல் இல்லாமல் அரசாட்சி செய்கிற மன்னவன் திருமால் அளந்த பூலோகத்தையும் தேவலோகத்தையும் ஏககாலத்தில் அடைவான்.

வி - ம் : சோம்பலற்ற அரசன் பூலோக நலங்களையும் தேவ லோக இன்பத்தையும் அவனுடைய சோம்பலற்ற தன்மை

யினாலேயே அடைவான். அவனுக்கு இம்மை மறுமை இரண்டும் கிடைக்கும் என்பதும் பொருந்தும். இம்மை இன்பம் வேண்டுமானாலும் மறுமை இன்பம் வேண்டுமானாலும் ஒருவன் சோம்பலற்றவனாக உழைக்க வேண்டும் — என்பது கருத்து.

அதி. 62—ஆள்வினையுடைமை

[' ஆள்வினை ' என்றால் ' உடல் முயற்சி '. ' ஆள்வினையுடைமை ' என்பது உடல் முயற்சி உடையவனாக இருத்தல். அதாவது ' விடாமுயற்சி '. இது எல்லாருக்கும்வேண்டியது.]

611. அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்.

ப. ரை : அருமை உடைத்து என்று அசாவாமை வேண்டும்; முயற்சி பெருமை தரும் = (செய்து முடிக்க) அரிய காரியம் என்று அசந்து போகாதிருத்தல் வேண்டும்; (மீண்டும் முயற்சி செய்தால்) அம்முயற்சி வெற்றி தரும்.

பொ. ரை : (ஒரு காரியத்தைச் செய்யப் புகுந்து அது கைகூடாவிட்டால்) செய்வதற்கு முடியாத காரியம் என்று தளர்ந்து விடாமல் இருக்க வேண்டும்; மீண்டும் மீண்டும் முயற்சி செய்தால் வெற்றி கிடைக்கும்.

வி - ம் : விடாமுயற்சி உடையவர்களுக்கு நிச்சயமாக வெற்றி கிடைக்கும். ' பெருமை ' என்பதற்கு இங்கே ' வெற்றி ' என்பது பொருள். அசாவுதல் — தளர்தல்.

ஒரு காரியத்தை ஆரம்பித்தபின் இரண்டொரு முயற்சிகளில் அது முடியாவிட்டாலும் விட்டுவிடக் கூடாது. மீண்டும் மீண்டும் முயல வேண்டும் :

612. வினைக்கண் வினைகெட லோம்பல் வினைக்குறை
தீர்ந்தாரிற் றீர்ந்தன் றுலகு.

ப. ரை : வினை குறை தீர்ந்தாரின் உலகு தீர்ந்தன்று; வினைக்கண் வினை கெடல் ஓம்பல் = ஒரு காரியத்தை (முடிக்காமல்) குறையாக இருக்கும் போது விட்டுவிடுகிறவர்களை உலகத்தாரும் விட்டுவிடுவார்கள்; (ஆதலால்) காரியத்தைச் செய்யப் புகுந்தபின் (அது முடிவடையாமல்) குறையாக இருக்கும்போது விட்டு விடக்கூடாது.

பொ. ரை : ஒரு காரியத்தைச் செய்து விடுவதாக அதைத் தொடங்கி (அதை முடிக்காமல்) காரியத்தை இடையில் விட்டு விடுகிறவனை உலகத்தாரும் கைவிட்டு விடுவார்கள்; ஆதலால் காரியத்தைத் தொடங்கியபின் அதை இடையில் விட்டு விடக் கூடாது.

வி-ம் : 'வினைக்குறை தீர்ந்தாரிற் றீர்ந்தன்று உலகம்' என்றால் 'காரியத்தைப் பகுதியிலே விட்டு விடுகிறவனை மற்றவர்களும் விட்டுவிடுவார்கள்'. அவனுக்கு மறுபடியும் வேலை கொடுக்க அவனை நம்பமாட்டார்கள். 'வினைகெடல்' என்பதிலுள்ள 'கெடல்' என்பதற்குக் 'குறைதல்' என்பது பொருள். 'ஓம்பல்' என்பதற்கு 'செய்யக் கூடாது' என்பது பொருள்.

உலகத்தில் சிறந்த காரியங்கள் நடந்தேறுவதெல்லாம் விடாமுயற்சியினால் தான் :

613. தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே
வேளாண்மை யென்னுஞ் செருக்கு.

ப. ரை : வேளாண்மை என்னும் செருக்கு தாளாண்மை என்னும் தகைமைக்கண் தங்கிற்றே = (உலகத்தில்) உபகாரம் என்ற பெருமை, விடாமுயற்சி என்னும் பெருங்குணத்தில் தான் அடங்கியுள்ளது.

பொ. ரை : உலகத்தில் உபகாரம் செய்வதன் சிறப்பெல்லாம் விடாமுயற்சி உள்ளவர்களிடத்தில் தான் உள்ளது.

வி-ம் : உலகத்தில் பெரிய நன்மைகளைச் சாதித்தவர்களுடைய பெருமையெல்லாம் விடாமுயற்சி என்ற பெருங்குணத்தினால் தான் என்பது கருத்து. 'தாளாண்மை' என்பது 'விடாமுயற்சி'. வேளாண்மை—உபகாரம்.

விடாமுயற்சி இல்லாதவன் ஒரு உபகாரமும் செய்ய முடியாது :

614. தாளாண்மை யில்லாதான் வேளாண்மை பேடிகை
வாளாண்மை போலக் கெடும்.

ப. ரை : தாளாண்மை இல்லாதான் வேளாண்மை பேடிகை வாளாண்மை போல கெடும் = விடாமுயற்சி இல்லாதவன் உபகாரியாக இருக்க முயலுவது பயங்கொள்ளி ஒருவன் வாளேந்தி பகைவரை வெல்ல முயல்வதைப்போல, பயனற்றதாகும்.

பொ. ரை : விடாமுயற்சியில்லாதவன் உபகாரியாக இருக்க முடியும் என்பது பயங்கொள்ளியான பேடி ஒருவன்

வாளேந்தி, பகைவரை வெல்லமுடியும் என்பதைப் போன்று பயனற்றதாகும்.

வி-ம்: விடாமுயற்சி இல்லாதவன் காரியத்தைக் கண்டு மலைத்து விடுவான். பேடியானவன் எதிரியைக் கண்டு நடுங்கி விடுவான். ஆகையால் விடாமுயற்சியற்றவன் மேற்கொண்ட உபகாரமும் பேடி ஏந்திய வாளும் பயனற்றவையாகும்.

பிறருக்கு உபகாரியாக இருக்கக் கூடியவனுடைய அடையாளம் என்னவென்றால்:

615. இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர்
துன்பந் துடைத்தூன்றுந் தூண்.

ப. ரை: இன்பம் விழையான் வினை விழைவான் தன் கேளிர் துன்பம் துடைத்து ஊன்றும் தூண் = இன்பங்களுக்கு ஆசைப்படமாட்டான; காரியம் செய்து முடிக்கவே ஆசைப் படுவான்; (அப்படிப்பட்டவன்) தன்னுடைய உற்றார் உறவினரின் துன்பங்களைப் போக்கி அவர்களைத் தாங்கி நிற்கும் தூண் போன்றவன்.

பொ. ரை: சுகபோகங்களில் ஆசை கொள்ளமாட்டான். காரியங்களைச் செய்து முடிக்கவே ஆசையுள்ளவன்; அப்படிப் பட்டவன் தன்னுடைய பந்து மித்திரர்களின் துன்பங்களைப் போக்கி அவர்களை ஆதரிக்கும் சுமைதாங்கி போன்றவன்.

வி-ம்: 'ஊன்றுதல்' – 'தாங்குதல்'. கேளிர் – நண்பர்களும் உறவினர்களும் சேர்ந்த தொகுதி.

ஆதலால் ஓயாது முயன்று காரியங்களைச் செய்ய வேண்டும்; இல்லாவிட்டால்:

616. முயற்சி திருவினை யாக்கு முயற்றின்மை
யின்மை புகுத்தி விடும்.

ப. ரை: முயற்சி திருவினை ஆக்கும்; முயற்று இன்மை இன்மை புகுத்திவிடும் = முயற்சி செல்வத்தைப் பெருகச் செய்யும்; முயற்சி இல்லாமை (இருக்கிற செல்வத்தைக் குறைத்துக் கடைசியில்) வறுமையில் தள்ளி விடும்.

பொ. ரை: முயற்சி செய்கிறவர்களுக்குச் செல்வம் அதிகமாகும்; முயற்சி செய்யாதவர்களுக்கு உள்ள செல்வம் குறைந்து வறுமை வந்துவிடும்.

வி - ம் : 'முயற்சி', 'முயற்று' என்ற இரண்டும் ஒரே பொருளுள்ளவை.

ஏன் என்றால் :

617. மடியுளாண் மாமுகடி யென்ப மடியிலான்
றாளுளா டாமரையி னாள்.

ப. ரை : மடி மாமுகடி உளாள்; மடியிலான் தாள் தாமரையினாள் உளாள் என்ப = (முயற்சியற்ற) சோம்பேறியிடத்தில் பெரியவளாகிய மூதேவி குடியிருப்பாள் (என்றும்) சோம்பலில்லாதவனுடைய விடாமுயற்சியில் தாமரையாளாகிய திருமகள் வீற்றிருப்பாள் என்றும் மேலோர்கள் சொல்லுவார்கள்.

பொ. ரை : முயற்சியில்லாத சோம்பேறியிடத்தில் மூத்தவளாகிய மூதேவி தங்கியிருப்பாள் என்றும் சோம்பலில்லாதவனுடைய விடாமுயற்சியில் தாமரையாளாகிய செல்வமகள் வீற்றிருப்பாள் என்றும் (அறிவறிந்த மேலோர்கள்) சொல்லுவார்கள்.

வி - ம் : 'மாமுகடி'—மூத்தவளாகிய மூதேவி; 'தாளுளாள்' என்றால் 'தாளாண்மையில் உளாள்' என்பது. 'தாளாண்மை'- 'விடாமுயற்சி'. 'என்ப'—'என்று சொல்லுவார்கள்'.

ஆகையினால் அறிவுடையவன் முயற்சியில்லாமலிருப்பது பெரிய குற்றமாகும் :

618. பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை யின்மை பழி.

ப. ரை : பொறி இன்மை யார்க்கும் பழியன்று; அறிவறிந்து ஆள்வினை இன்மை பழி = அறிவு இல்லாதிருப்பது யாருக்கும் குற்றமாகாது: ஆனால் அறிய வேண்டியதை அறிந்தவனாக இருந்தும் முயற்சி இல்லாமல் இருப்பது குற்றம்.

பொ. ரை : புத்தி கூர்மை இல்லாதிருப்பது யாருக்கும் குற்றமல்ல; ஆனால் புத்தி கூர்மை இருந்தும் முயற்சியில்லாமல் (சோம்பி) இருப்பது குற்றம்.

வி - ம் : 'பொறி' என்பதற்கு 'விதி' என்று பொருள் செய்யக் கூடாது. 'பொறி' என்பதற்கு இங்கே 'அறிவு' என்பது தான் பொருள்.

எப்படி முயற்சி செய்தாலும் ஒரு காரியம் முடியாமலேயே போய்விடலாம். ஆனாலும் நாம் முயற்சி செய்யாமல் இருந்து விடக் கூடாது :

619. தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்.

ப. ரை: தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சி தன் மெய் வருத்தக் கூலிதரும் = தெய்வாதீனமாக (ஒருகாரியம்) கை கூடாமற் போகும் என்றாலும், முயற்சி செய்வதால் தேக உழைப்பின் அளவுக்காவது பயன் தரும்.

பொ. ரை: தெய்வ சகாயம் இல்லாததால் ஒரு காரியம் செய்து முடிக்க முடியாமற் போகலாம். ஆனாலும் எவ்வளவுக் கெவ்வளவு முயற்சி செய்கிறோமோ அவ்வளவுக்கவ்வளவு உடல் உழைத்த பலனாவது இல்லாமற் போகாது.

வி-ம்: எவ்வளவு முயன்றும் ஒரு காரியம் முடியாமற் போகிற போது அது மனித முயற்சிக்கு மீறியதாகத் தெரிகிறது. அப்போதுதான் தெய்வ சகாயம் இல்லாமல் காரியம் முடியவில்லை என்று எண்ண வேண்டியிருக்கிறது. அதைத்தான் 'தெய்வத்தான் ஆகாதெனினும்' என்று குறிக்கின்றார். 'மெய்வருத்தக் கூலி' என்பது சரீர உழைப்பின் பலன், காரியம் முடியாவிட்டாலும் முயற்சிகளால் சரீரம் உழைத்தாக வேண்டும். அந்த உழைப்பு நல்ல பயிற்சி தருகிறது. அந்த பயிற்சி வீண் போகாது.

அப்படிப்பட்ட விடாமுயற்சியின் பயனாக:

620. ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்.

ப. ரை: உலைவு இன்றி தாழாது உஞற்றுபவர் ஊழையும் உப்பக்கம் காண்பர் = மனக்கலக்கம் இல்லாமல் விடாமல் முயற்சி செய்கிறவர்கள் ஊழ்வினைகளையும் முதுகுகாட்டப் பார்த்து விடுவார்கள்.

பொ. ரை: மனங் கலங்காமல் இடைவிடாது முயற்சி செய்கிறவர்கள் ஊழ்வினைகளையும் முதுகு காட்டி ஓடச் செய்து விடுவார்கள்.

வி-ம்: 'உப்பக்கம்' என்றால் 'முதுகு'. 'உப்பக்கம் காண்பது' என்றால் 'தோல்வியடைந்து முதுகு காட்டி ஓடப்பார்ப்பது'. மனந்தளராமல் இடைவிடாது முயற்சி செய்கின்றவர்கள் ஊழ்வினைகளையும் வென்று விடுவார்கள். ஊழ்வினையை வெல்ல முடியுமா என்றால் 'பிராரப்தவினைகளைத் தவிர' மற்ற 'சஞ்சித' கர்மங்களையும் 'ஆகாமிய' கர்மங்களையும் வெல்ல முடியும் என்று முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் பிராரப்த கர்மங்களால் அனுபவிக்க வேண்டிய

துன்பங்களையும் இவர்கள் இன்பமாக அனுபவிக்கக் கூடிய வர்களானதால், துன்பப்படுத்த வந்த அந்த வினைகளும் தோல்வியடையும். அதனாலும் 'ஊழையும் உப்பக்கங் கண்டு' வெல்கிறார்கள்.

அதி. 63—இடுக்கணழியாமை

['இடுக்கண்' என்பது 'இடையூறு'. 'அழியாமை' என்பது 'மனம் வலிமை அழிந்து போகாமை'. 'இடுக்கணழி யாமை' என்பது மனித வாழ்க்கையில் நேரிடுகின்ற பல இடையூறுகளால் துன்புற்று மனமுடைந்து போகாதிருக்கும் உறுதி. இது எல்லாருக்கும் பொது.]

621. இடுக்கண் வருங்கா னகுக வதனை
யடுத்தூர்வ தஃதொப்ப தில்.

ப. ரை: இடுக்கண் வருங்கால் நகுக; அதனை அடுத்து ஊர்வது அஃது ஒப்பது இல் = இடையூறு வருங்காலத்தில் சிரித்து விடுக; அதை (இடையூறை) வென்று அடக்க அதைப்போன் றது (சிரிப்பதைப் போன்றது) வேறொன்றும் இல்லை.

பொ. ரை: இடையூறு வருகிறபோது சிரிக்க வேண்டும்; அத் துன்பத்தை வென்று அடக்கக் கூடியது அப்படிச் சிரித்து விடு வதைப் போன்றது வேறில்லை.

வி - ம்: 'அடுத்து' என்பது 'அடுதல்' என்ற தொழிற் பெயரை ஒட்டியது. 'அடுதல்' என்றால் 'வெல்லுவது'. ஆத லால் 'அடுத்து' என்பதற்கு இங்கே 'வென்று' என்பது பொருள். 'ஊர்வது' என்பது 'அடக்கி நடத்துவது'. இடை யூறு வந்தபோது சிரிக்கப் பழகிக் கொண்டால் துன்பம் அதி கப்படாதபடி மனதை அடக்கியாள முடியும் என்பது கருத்து.

அறிவுடையார் எவ்வளவு இடையூறுகள் வந்தாலும் மன உறுதியினால் அவற்றை வென்று விடுவார்கள்:

622. வெள்ளத் தனைய விடும்பை யறிவுடையா
னுள்ளத்தி னுள்ளக் கெடும்.

ப. ரை: வெள்ளத்து அனைய இடும்பை அறிவுடையார் உள்ளத் தின் உள்ள கெடும் = கடலைப் போன்ற துன்பமும் அறிவுடை யவர்கள் மனதில் நினைத்த உடன் மறைந்து போகும்.

பொ. ரை: சமுத்திரத்தைப் போன்ற மிகப் பெரிய துன்பமும் அறிவுடையவர்கள் மன உறுதியினால் மறைந்துவிடும்.

வி-ம்: 'வெள்ளம்' என்றால் 'கடல்'. துன்பம் என்பது மனதைப் பற்றியது. ஆதலால் மன உறுதியினால் அறிவாளிகள் எவ்வளவு இடுக்கண் வந்தாலும் துன்பப்படாமலிருப்பார்கள் — என்பது கருத்து.

அறிவாளிகள், தாம் துன்பப்படாமல் இருப்பது மட்டுமல்லாமல்:

623. இடும்பைக் கிடும்பை படுப்ப ரிடும்பைக்
கிடும்பை படாஅ தவர்.

ப. ரை: இடும்பைக்கு இடும்பை படாஅதவர் இடும்பைக்கு இடும்பைபடுப்பர்=இடையூறுகளுக்காகத் துன்பப்படாதவர்கள் இடையூறுகளுக்கே துன்பம் உண்டாக்குவார்கள்.

பொ. ரை: துன்பப்படுத்த வரும் இடையூறுகளைக் கண்டு துன்பப்படாத மன உறுதியுள்ள அறிவாளிகள், அவர்களிடம் வந்த இடையூறுகளே துன்பப் படும்படியாகச் செய்து விடுவார்கள்.

வி-ம்: இவர்களைத் துன்பப்படுத்த வந்த இடையூறுகளைக் கண்டு இவர்கள் கலங்காமல் சிரித்து மகிழ்வதால் அதைக் கண்ட அந்த இடையூறுகள் தம்முடைய காரியம் பலிக்காமையால் துன்பப்படும் என்பது கற்பனை.

எப்படியென்றால்:

624. மடுத்தவா யெல்லாம் பகடன்ன னுற்ற
விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.

ப. ரை: மடுத்தவாய் எல்லாம் பகடு அன்னான் உற்ற இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து=இடையூறுகள் நிரம்ப வந்த போதெல்லாம் பொதிமாடு போல அவற்றைத் தாங்கி (முன்னேற) வல்லவனுக்கு வந்த இடையூறுகள் துன்பமடையும்.

பொ. ரை: இடையூறுகள் அதிகரித்தாலும் பாரம் இழுக்கும் மாடுபோல ஊன்றி நிற்கக் கூடிய உறுதியுடையவனிடம் வந்த துன்பங்களே துன்பமடையும்.

வி-ம்: 'பகடு' என்பது 'பாரம் இழுக்கும் பொதி மாடு'. 'மடுத்தல்' — 'நிரம்புதல்'. பாரம் இழுக்கும் மாடு பாரம் குறைவாக இருக்கும்போது வெகு மெதுவாகச் சென்றாலும் பாரம் அதிகமான பிறகும் மேடான இடத்தில் ஏற வேண்டி வந்தாலும் அதற்கென்று தனி முயற்சி செய்து முக்கி இழுத்து

விடும். அப்படிப் போல, உழைப்புக்கு அஞ்சாதவர்கள் துன்பம் வருகிறபோதெல்லாம் அதற்கென்று தனி முயற்சியோடு துன்பங்களை வென்று விடுவார்கள்.

அதற்கென்று தனி முயற்சி செய்யாமல் எப்போதும் துன்பங்களுக்குக் கலங்காமல் இருப்பவர்களும் உண்டு.

625. அடுக்கி வரினு மழிவிலா னுற்ற
விடுக்க ணிடுக்கட் படும்.

ப. ரை: அழிவிலான் உற்ற இடுக்கண் அடுக்கி வரினும் இடுக்கண்படும் = மனங்கலங்காத இயல்புடையவனிடத்துக்கு வருகின்ற துன்பங்கள் அடுத்தடுத்து வந்தாலும் (அத்துன்பங்கள்) துன்பத்தில் சிக்கிக் கொள்ளும்.

பொ. ரை: மனம் அழியாத உறுதியுடையவனுக்கு வருகின்ற துன்பங்கள் அடுத்தடுத்து எத்துணை வந்தாலும் அவனைத் துன்புறுத்திவிட முடியாது. துன்பங்களே துன்பப்பட வேண்டியதுதான்.

வி-ம்: முன் குறளில் சொல்லப்பட்ட 'பகடு' போன்ற உழைப்பாளி துன்பம் வந்த பிறகுதான் அதற்கென்று முயன்று ஊன்றி நின்று மனம் அழிந்து விடாமல் வெல்லுவான். இங்கே சொல்லப்படும் 'அழிவிலான்' எந்த சமயத்தில் துன்பம் வந்தாலும் எவ்வளவு அடுத்தடுத்து அணியணியாகப் படையெடுத்து வந்தாலும் அதற்கென்று ஒரு முயற்சியும் இல்லாமலும் பொதிமாடு போல முக்கி முரண்டி சமாளிக்க வேண்டிய சங்கடம் இல்லாமலும் துன்பங்களால் பாதிக்கப்படாமல் இருப்பான் என்பது கருத்து.

அழிவில்லா மனமுடைய பெருமைதான் அது. அழிவில்லா மனம் எதுவென்றால் :

626. அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென்
றோம்புத றேற்றா தவர்.

ப. ரை: பெற்றேம் என்று ஓம்புதல் தேற்றாதவர் அற்றேம் என்று அல்லல் படுபவோ = ஒரு பொருளை அடைந்து விட்டோம் என்று செருக்கி மகிழ்ந்து விடாதவர்கள் ஒரு பொருளை இழந்துவிட்டோம் என்பதற்காகத் துன்பப்படுவார்களா?

பொ. ரை: ஒரு பொருளைப் பெற்றுவிட்டதற்காகப் பெருமை கொண்டு கர்வம் பாராட்டாதவர்கள் ஒரு பொருளை இழந்து விட்டதற்காக மட்டும் துன்பப்படுவார்களா? (மாட்டார்கள்)

வி-ம்: வெற்றியில் அகங்கரிக்காதவன் தோல்வியிலும் துன்பமடையமாட்டான். அப்படிப்பட்டவன் தான் 'அழிவிலான்' எனப்படுவது. 'ஓம்புதல்'—தன்னைத் தானே பாராட்டிப் பெருமை கொள்வது. 'தேற்ருதவர்' — 'விரும்பாதவர்' அல்லது 'செய்யாதவர்'.

துன்பம் வருகிறபோது மனம் அழியாமல் இருக்கச் செய்கிற அறிவு எதுவென்ருல்:

627. இலக்க முடம்பிடும்பைக் கென்று கலக்கத்தைக்
கையாருக் கொள்ளாதா மேல்.

ப. ரை: உடம்பு இடும்பைக்கு இலக்கம் என்று கலக்கத்தை கையாரு கொள்ளாதாம் மேல் = மனித உடம்பு துன்பத்துக்கு, வந்தடையும் இடம் என்பதை உணர்ந்து துன்பத்துக்கு அயர்ந்து போகாமல் இருப்பது தான் மேலான அறிவு.

பொ. ரை: மனிதனுடைய உடம்பு துன்பங்களுக்கு இலக்கான இடம் (என்பது இயற்கை). அதை உணர்ந்து, துய்பம் வருகிற போது தளர்ந்து விடாமல் இருக்கிற அறிவுதான் மேலான அறிவு.

வி-ம்: 'கையாறு' — என்பதற்கு 'தளர்ந்து செயலற்றுப் போதல்' என்பது பொருள்.

ஆகையினுல்:

628. இன்பம் விழையா னிடும்பை யியல்பென்பான்
றுன்ப முறுத லிலன்.

ப. ரை: இன்பம் விழையான் இடும்பை இயல்பு என்பான் துன்பம் உறுதல் இலன் = இன்பங்களில் ஆசை வைக்காமல் துன்பம் வருவது இயற்கைதான் என்று எண்ணுகின்றவன் துன்பத்திஞல் நொந்து போகமாட்டான்.

பொ. ரை: இன்பங்களில் மோகங் கொள்ளாமல், துன்பம் வருவது சகசம்தான் என்று எண்ணுகிறவன் துன்பத்தால் பாதிக்கப்படமாட்டான்.

வி-ம்: 'உறுதல்' என்பது 'ஊறு அடைதல்'. அதாவது நொந்து போதல். 'விழைதல்' என்ருல் 'மிக்க ஆசை கொள்ளல்'.

இன்பம் விழையாமலிருப்பதும் துன்பத்தில் நோகாமலிருப்பதும் எப்படியென்ருல்:

629. இன்பத்து ளின்பம் விழையாதான் றுன்பத்துட்
டுன்ப முறுத லிலன்.

ப. ரை: இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள் துன்பம் உறுதல் இலன் = இன்பம் வந்த காலத்தில் மகிழ்ச்சி யில் களித்து விடாமல் இருக்கக் கூடியவன் துன்பம் வந்த காலத்திலும் துன்பத்தால் வருத்தம் அடைய மாட்டான்.

பொ. ரை: நன்மை வருகின்றபோது மகிழ்ச்சியில் மயங்கி விடாமல் இருக்கக்கூடியவன் தீமை வரும்போதும் தீமை யினால் மனம் நொந்து போகமாட்டான்.

வி-ம்: 'விழைதல்' என்பதற்கு இங்கே 'களிப்பு' என்பது பொருள். அதாவது மகிழ்ச்சியில் மயங்கிப் போவது. 'உறு தல்' என்பது 'ஊறு அடைவது'. அதாவது 'நோய்கொள் வது'.

இன்பத்தில் மயங்காமலிருந்தால் துன்பம் பாதிக்காது. அப்படியிருப்பது சிறந்த குணம். அதைக் காட்டிலும் சிறந்த குணம் உண்டு. யாதெனில்:

630. இன்னாமை யின்ப மெனக்கொளி னாகுந்தன்
ஒன்னார் விழையுஞ் சிறப்பு.

ப. ரை: இன்னாமை இன்பம் என கொளின் தன் ஒன்னார் விழையும் சிறப்பு ஆகும் = துன்பத்தையே இன்பமாகக் கொண்டு அனுபவிக்கக் கூடியவனுக்கு, அது அவனுடைய பகைவர்களும் பாராட்டத்தக்க பெருமையாகும்.

பொ. ரை: துன்பத்தையே இன்பமாக அனுபவிக்கக் கூடிய வனுக்கு, அது அவனுடைய பகைவர்களும் பாராட்டத் தகுந்த பெருமையாகும்.

வி-ம்: 'விழையும்' என்பதற்கு இங்கே 'புகழ்ந்து பாராட் டும்' என்பது பொருள்.

அரசியல் முற்றிற்று.

---

2. அங்கவியல்

இதுவரையிலும் சொல்லப்பட்ட 'அரசியல்' என்பது, ஒரு அரசனோ அல்லது ஒரு குடும்பத் தலைவனோ தானே நேரடி யாக நடந்து கொள்ள வேண்டிய மாதிரியைப் பற்றியும் கவ னித்துக் கொள்ள வேண்டிய விஷயங்களைப் பற்றியும் குறிப் பது. இனி அரசனுக்கோ இல்லறத் தலைவனுக்கோ அமைய வேண்டிய ஆலோசனைத் துணைவர்கள், காரியக்காரர்கள், கருவிகள் முதலிய உறுப்புகளைப் பற்றிச் சொல்லுவது 'அங்க இயல்'.

அதி. 64—அமைச்சு

['அமைச்சு' என்றால் ஆலோசனை சொல்லும் மந்திரிகளின் தொகுதி. பல அமைச்சர்கள் சேர்ந்தது 'அமைச்சு'. இது சிறப்பாக அரசனுக்கு இன்றியமையாத மந்திரிகளைப் பற்றியது. என்றாலும் ஆலோசனை கேட்கத் தகுதியுடைய எல்லாருக்கும் பொருந்தும்.]

631. கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு.

ப. ரை: கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்டது அமைச்சு = (காரியத்தை முடிப்பதற்கு வேண்டிய) கருவிகளையும், பருவ காலத்தையும், அதற்கான செயல்களையும், அவற்றைச் செய்து முடிக்கக் கூடிய உபாயங்களையும் நன்றாக அறிந்தவர்களே மந்திரிகள்.

பொ. ரை: காரியத்தைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய சாதனங்களையும் அந்தக் காரியத்தைச் செய்யத்தக்க பருவ காலத்தையும் அதற்காக வேண்டிய செயல் நுணுக்கங்களையும் அவற்றிற்கான தந்திரங்களையும் நன்றாக அறிந்து சொல்லக் கூடியவர்களே மந்திரிகள்.

வி-ம்: வெவ்வேறு காரியத்துக்கு வெவ்வேறு கருவியும் காலமும் செய்கையும் தந்திரங்களும் வேண்டியிருக்கும். அவற்றையெல்லாம் நன்றாக அறிந்தவர்களே மந்திரிகள் என்பது கருத்து. இதை, கம்பன் மந்திரப் படலத்தில் 'காலமும் இடனும் ஏற்ற கருவியும் தெரியக்கற்ற' என்று மந்திரியின் இயல்பைச் சொல்லும் பாடலால் தெரியலாம். 'மாண்ட' என்பதற்கு 'நன்றாக அறிந்த' என்பது பொருள். 'அருவினை' என்பது எல்லாருக்கும் தெரியாத அருமையான வேலை. அதாவது 'தந்திரம்' புத்தி கூர்மையுள்ளவன் பெரிய காரியங்களையும் ஒரு சிறு தந்திரத்தால் சாதித்துவிட முடியும்.

கருவி, காலம், செய்கை, தந்திரம் முதலியவற்றில் சிறந்த அறிவுடையவர்களாக இருப்பதோடு தங்களுடைய திறமைகளிலும் சிறப்புடையவர்களாக இருக்க வேண்டும். அச்சிறப்புகளாவன:

632. வன்கண் குடிகாத்தல் கற்றறித லாள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு.

ப. ரை: வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினையோடு ஐந்துடன் மாண்டது அமைச்சு = மன உறுதி, குடிப்பிறப்

பின் கண்ணியங்காத்தல், கல்வியறிவுடைமை, விடாமுயற்சி, இவற்ருேடு ஐந்து தந்திரங்களும் சேர்ந்த சிறப்புடையது தான் மந்திரிகளின் தன்மை.

பொ. ரை: தைரியம், குடிப்பிறப்பின் மானம், கல்வியறிவு, விடாமுயற்சி ஆகிய இவற்ருேடு பஞ்ச தந்திரங்களின் அறிவும் சேர்ந்த பெருமையுள்ளதே சிறப்பான மந்திரிகளின் தகுதிகள்.

வி-ம்: 'குடி காத்தல்' என்பது 'குடி மக்களைக் காப்பது' அல்ல. அது அரசனுடைய வேலை. மந்திரி 'குடி காத்தல்' என்பது தன்னுடைய குடிப் பிறப்பின் பெருமையைக்காத்துக் கொள்வது. இதைக் கம்பன் மந்திரப் படலத்தில் மந்திரிகளின் தன்மைகளைச் சொல்லும் போது 'பிறப்பின் மேன்னப் பெரியவர் அரியநூலுங் கற்றவர் மானம் நோக்கின் கவரிமா அனைய நீரார்' என்றதிற் காணலாம். 'வன்கண்' என்பதும் கம்பன் அதே இடத்தில் 'தம்முயிர்க் குறுதி எண்ணுர் தலைமகன் வெகுண்ட போதும் வெம்மையைத் தாங்கி நீதிவிடாது நின்றுரைக்கும் வீரர்', என்று சொல்லுவதையே குறிக்கும். இனி, 'ஐந்துடன் மாண்டது அமைச்சு' என்பதற்குப் பொருள் செய்யாமல் முன்னைய குறளில் சொல்லப்பட்ட 'கருவியும், காலமும், செய்கையும், செய்யும் அருவினையும்' என்ற நான்கையும் ஒன்ருகச் சேர்த்து ஒரு எண்ணுகக் கொண்டு அந்த ஒன்ருேடு 'வன்கண், குடி காத்தல், கற்றறிதல், ஆள்வினை' என்ற நான்கையும் கூட்டி அவை சேர்ந்த 'ஐந்துடன்' என்று பொருள் சொல்லப்படுகிறது. அது சரியல்ல. ஐந்துடன் என்பதற்கு 'ஐந்து தந்திரங்கள் என்பது பொருள். முன் குறளில் சொல்லப்பட்ட 'அருவினை' என்பது இதில் 'ஐந்து அருவினைகளுடன்' என்று விரிக்கப்பட்டிருக்கிறது. அவை மந்திரிக்கு வேண்டிய 'பஞ்ச தந்திரங்கள்'. வன்கண், குடிகாத்தல், கற்றறிதல், ஆள்வினை ஆகிய திறமைகளுடன் பஞ்ச தந்திரங்களின் அறிவும் சேர்ந்து விளங்குமாளுல் அது சிறப்புடைய அமைச்சு—என்பது இக்குறளின் கருத்து.

மந்திரிகளுக்கு இருக்க வேண்டிய பஞ்ச தந்திரங்களின் அறிவு என்னவெனில்—தீய உறவுகளை நீக்குதல், நல்ல உறவுகளைப் பாதுகாத்தல், பகையானவர்களையும் நட்பாக்கிக் கொள்ளல், பொருள் கொடுத்துக் காரியங்களை முடித்துக் கொள்ளல், ஆராய்ந்து காரியம் செய்தல் ஆகியவை. இவற்றுள் முதல் மூன்றும் மிக முக்கியமானவையாக அவற்றைச் சொல்லுகிருர்:

633. பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப்
பொருத்தலும் வல்ல தமைச்சு.

ப. ரை: பிரித்தலும் பேணிக் கொளலும் பிரிந்தார்ப் பொருத் தலும் வல்லது அமைச்சு = தீய நட்புகளை நீக்குவதும், நல்ல நட்புகளைப் பாதுகாப்பதும், பிரிந்து போன நல்ல உறவு களை மீண்டும் சேர்த்து வைப்பதும் ஆகியவற்றைச் செய்யத் திறமையுள்ளவர்கள் மந்திரிகள்.

பொ. ரை: அரசனுக்கும் அரசாட்சிக்கும் தீங்கு செய்யக் கூடிய சகவாசங்களை நீக்குவதையும் நன்மையான சகவாசங்கள் கெட்டுப் போகாமல் பாதுகாப்பதையும் அந்த நல்ல சகவா சங்கள் பிரிந்து விட்டால் அவற்றைச்சேர்த்து வைப்பதையும் செய்யத் திறமையுள்ளவர்களே மந்திரிகளாவார்கள்.

வி-ம்: பிரித்தல், பேணிக் கொளல், பிரிந்தார்ப் பொருத்தல் என்ற மூன்றும் வடமொழியில் மித்ரபேதம், சுகிர்லாபம், சந்தி விக்ரகம் என்று சொல்லப்படும் பஞ்ச தந்திரங்களைச் சேர்ந்த மூன்று தந்திரங்களுக்கு நேரானவைகளே. ஆனாலும் அவற்றிற்கு வழக்கமாகச் சொல்லப்படுகிற அர்த்தங்களுக்கு இடமில்லாதபடி வள்ளுவர் அவற்றை மிகவும் சுத்தமான பொருளில் சொல்லியிருக்கிறார். 'பிரித்தல்' என்பது, தம் பகைவர்களுக்குள் பிளவுண்டாக்குதல் எனினும் பொருந்தும்.

மேலும்:

634. தெரிதலும் தேர்ந்து செயலு மொருதலையாச்
சொல்லலும் வல்ல தமைச்சு.

ப. ரை: தெரிதலும் தேர்ந்து செயலும் ஒருதலையாச் சொல்ல லும் வல்லது அமைச்சு = (செய்ய வேண்டியதைத்) தெரிந் திருப்பதும், (தெரிந்திராவிட்டால்) ஆராய்ந்து தெரிந்து கொண்டு அதன்பிறகு செய்வதும் ஆலோசனை முடிவைத் தீர் மானமாகச் சொல்லுவதும் ஆகிய திறமைகள் உடையவர் களே மந்திரிகள்.

பொ. ரை: (செய்யவேண்டிய காரியத்தையும் அதன் பலா பலன்களையும்) தெரிந்தவர்களாக இருப்பதும் (ஏற்கனவே தெரிந்திருந்தது போதா விட்டாலும் வேண்டிய மட்டிலும்) ஆராய்ந்து தெரிந்துகொண்டு அதன் பிறகு அதைச் செய்வ தும் நிச்சயமான ஒரே யோசனை சொல்லுவதும் ஆகிய திறமைகள் உள்ளவர்களே மந்திரிகளாகத் தக்கவர்கள்.

வி-ம்: 'ஒரு தலையாச் சொல்லல்' என்பது – இப்படியும் அப் படியுமாக மழுப்பலில்லாமல் கண்டிப்பான ஒரே யோசனை சொல்லுவது. அதைத்தான் கம்பன் 'ஒருமையே மொழியும் நீரார்' என்று மந்திரிகளைப் பற்றிச் சொல்லுவது. 'தேர்ந்து செயலும்' என்பது வடமொழிப் பஞ்ச தந்திரங்களில் ஒன் றாகிய 'அசம்பிரேட்ச காரியத்வம்' என்பதன் கருத்தை

ஒட்டியது. 'அசம்பிரேட்ச காரியத்வம்' என்பது ஆராயாமல் காரியம் செய்யக்கூடாது என்பது. அதற்கு நேரான பொருள், ஆராயாமல் செய்வது என்றிருந்தாலும், 'ஆராயாமல் செய்வதை விலக்கல்' என்பதுதான் கருத்து. இனி பஞ்ச தந்திரங்களில் மிச்சமுள்ளதான 'அர்த்தநாசம்' என்பதற்கு நேராக இங்கே ஒன்றும் சொல்லப்படவில்லையென்றாலும் முன்னே குறிப்பிட்ட 'ஐந்துடன்' என்பதற்கு 'ஐந்து தந்திரங்களுடன' என்று தான கொள்ளவேண்டும். பொருள் செலவு செய்து காரியத்தை முடிப்பதாகிய 'அர்த்தநாசம்' என்ற தந்திரம் வெறும் சமயோசித காரியம் ஆனதால் அதை 'தெரிதலும்' என்பதில் அடக்கி விட்டார் போலும்.

மந்திரி என்பவன் வெறும் தந்திரங்கள் அறிந்தவனாக இருப்பது மட்டும் போதாது :

635. அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந்
திறனறிந்தான் றேர்ச்சித் துணை.

ப. ரை : அறன் அறிந்து ஆன்று அமைந்த சொல்லான் எஞ் ஞான்றும் திறன் அறிந்தான் தேர்ச்சி துணை = தர்மங்களை உணர்ந்து, அறிவு நிறைந்து, பொருத்தமான யோசனை சொல்லக்கூடியவனாக, எப்போதும் (தன்னுடைய அரசனுடைய) வல்லமைகளின் கணக்குகளை அறிந்தவனாக இருப்பவனே ஆலோசனைக்குத் தகுந்த துணைவனாவான்.

பொ. ரை : தர்மாதர்மங்களைச் சீர்தூக்கி, நிறைந்த அறிவுடன் பொருத்தமான யோசனை சொல்லுகிறவனாகவும் (தன்னுடைய அரசனுடைய) சக்திகளை எந்த நேரத்திலும் கணக்கறிந்தவனாகவும் உள்ளவனே சரியான மந்திரியாவான்.

வி - ம் : 'எஞ்ஞான்றும் திறனறிந்தான்' என்பதற்கு 'எந்த நேரத்திலும் தன் அரசனுடைய திறன்களை அறிந்திருப்பவன்' என்பது பொருள். அதாவது ஒரு மந்திரியானவன் தன்னுடைய அரசனுடைய பொருள்பலம், படைபலம், குடிபலம், பாதுகாப்புப் பலம் முதலிய எல்லா பலங்களின் கணக்குகளையும் எந்த நிமிஷத்திலும் நன்றாக அறிந்தவனாக இருக்க வேண்டும் — என்பது. 'தேர்ச்சித் துணை' என்றால் கலந்து 'ஆலோசிக்கத் துணை'. 'அறனறிந்து' என்பதற்கு 'அரசனால் செய்யப்படும் அறங்களை அறிந்து' என்பது பொருளல்ல. நீதி நெறி அறங்களை மந்திரி அறிந்தவனாக இருக்க வேண்டும் என்பது பொருள்.

நூல்களின் போதனைக்கு ஒத்துக் கொள்வதான புத்தி கூர்மையுள்ள ஆலோசனைகள் உள்ள மந்திரிகள் எப்படிப்பட்ட சூழ்ச்சிகளையும் வென்று விடுவார்கள் :

636. மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

ப. ரை: நூலோடு மதிநுட்பம் உடையார்க்கு அதிநுட்பம் முன் நிற்பவை யாஉள = நூல்களின் ஆராய்ச்சியோடு பொருந்திய புத்தி கூர்மையுள்ளவர்களுக்கு, அவர்களை மிஞ்சக் கூடிய சூழ்ச்சிகளாக அவர்களுக்கு முன் எதிர்த்து நிற்கக் கூடியவை எவை இருக்கின்றன?

பொ. ரை: (முன்னோர்கள் எழுதி வைத்துள்ள) நூல்களுக்கு ஒத்ததாகத் தம்முடைய சொந்த யோசனைகளையும் சேர்த்துள்ளவர்களை எதிர்த்து வெல்லக்கூடிய சூழ்ச்சிகள் என்ன இருக்கின்றன?

வி-ம்: 'நூலோடு மதிநுட்பம்' என்பது 'சுருதியோடு ஒத்ததான யுக்தி' என்பதாம். ஒருவனுடைய சொந்த யோசனை முன்னோர்கள் எழுதி வைத்துள்ள அறநூல்களுக்கும் அறிவு நூல்களுக்கும் ஒத்ததாக இருக்குமானால் அது எதையும் வெல்லத் தகுந்ததாகும். அதனால் தன்னுடைய சொந்த யோசனை (யுக்தி), நூல்களுக்குப் பொருந்துகிறதா என்பதை ஆராய வேண்டும் என்பது கருத்து.

சுருதியும் யுக்தியும் பொருந்தினால் மட்டும் போதாது. அத்துடன் அது அனுபவத்துக்கும் பொருந்துமா என்பதையும் ஆலோசிக்க வேண்டும்:

637. செயற்கை யறிந்தக் கடைத்து முலகத்
தியற்கை யறிந்து செயல்.

ப. ரை: செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல் = (மதி நுட்பம் நூலோடு பொருந்தி) செய்யத்தகுந்த காரியம் என்று அறிந்த பிறகும் உலகத்தின் நிலைமையை அறிந்து அதைச் செய்யவேண்டும்.

பொ. ரை: செய்ய நினைக்கிற ஒரு யோசனை சுருதிக்கும் பொருத்தமாக இருப்பதை அறிந்த பிறகும் அது அப்போதுள்ள உலகப்போக்குக்கு ஒத்துக் கொள்ளுமா என்பதையும் ஆராய்ந்து செய்ய வேண்டும் (என்ற அறிவுள்ளவனே மந்திரி).

வி-ம்: ஒரு காரியம் சுருதிக்கும் யுக்திக்கும் பொருந்தினாலும் அனுபவத்துக்கும் பொருந்துகிறதா என்பதை அறிந்தே அதைச் செய்ய வேண்டும் — என்பது கருத்து. 'உலகத் தியற்கை' என்பது 'உலகநடை' அதாவது பொதுமக்களின் அபிப்பிராயத்தின் போக்கு. 'இயற்கை' என்பதற்கு இங்கே 'நடப்பு' என்பது பொருள். அதாவது 'அனுபவம்'.

நூலறிவு (சுருதி) மதிநுட்பம் (யுக்தி) உலகத்தியற்கை (அனுபவம்) ஆகிய எதையும் அரசன் அறியாதவனுக இருந்து விட்டாலும் நல்ல யோசனைகளை வலியுறுத்திச் சொல்ல வேண்டியது அமைச்சனுடைய கடமை :

638. அறிகொன் றறியா னெனினு முறுதி
யுழையிருந்தான் கூறல் கடன்.

ப. ரை : அறிகொன்று அறியான் எனினும் உறுதி கூறல் உழை யிருந்தான் கடன் = அறிய வேண்டிய ஒன்றை (அரசன்) அறி யாதவனுனாலும் உறுதியான யோசனைகளை வலியுறுத்திச் சொல்ல வேண்டியது அருகிலிருக்கும் அமைச்சனுடைய கடமை.

பொ. ரை : அறிய வேண்டிய எதையும் அறியாதவனுக அரசன் இருந்தாலும் உறுதியான யோசனைகளைச் சொல்ல வேண்டி யது பக்கத்தில் இருந்து கொண்டிருக்கும் மந்திரியின் கடமை.

வி - ம் : 'அறிகொன்று' என்பது 'அறிதக்க ஒன்று' என்பதன் குறைவு. 'உழை' என்ருல் 'அருகே'. 'உறுதி' என்பது 'உறுதியான யோசனை'.

சுருதி, யுக்தி, அனுபவம் ஆகிய மூன்றுக்கும் ஒத்ததாகும் ஆலோசனைகளை ஆராய்ந்து சொல்லத் தெரியாமல் தவருக யோசனை சொல்லிவிடக் கூடிய மந்திரி இருப்பது கெடுதி யுண்டாக்கும் :

639. பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ
ரெழுபது கோடி யுறும்.

ப. ரை : பக்கத்துள் பழுது எண்ணும் மந்திரியின் எழுபது கோடி தெவ்வோர் உறும் = (அரசனுக்குப்) பக்கத்தில் தவருன யோசனை சொல்லும் (ஒரு) மந்திரி இருப்பது எழுபது கோடி பகைவர்கள் இருப்பதை ஒக்கும்.

பொ. ரை: தப்பான ஆலோசனை சொல்லக் கூடிய ஒரு மந்திரி அரசனுக்குப் பக்கத்திலிருப்பது எழுபது கோடி பகைவர்கள் இருப்பதற்குச் சமானம்.

வி - ம்: ஒரு துர் மந்திரி இருந்தாலும் அதனுல் அரசனுக்கு எண்ணிறந்த பகைவர்கள் உண்டாகி விடுவார்கள் என்பது கருத்து. பகைவரே இல்லாத அரசனுக்கும் தவருன யோசனை சொல்லக் கூடிய மந்திரியால் அனேக பகைவர்கள் ஏற்பட்டு விடுவார்கள். 'தெவ்வோர்' — பகைவர். 'எழுபது கோடி'

என்பது வெறும் மிகுதியைக் காட்டச் சொன்னது. 'உறும்' என்பதற்கு 'ஒக்கும்' என்று பொருள்.

பழுதெண்ணும் மந்திரி இருந்தால் பகைவர்கள் ஏற்படு வார்கள். திறமையில்லாத மந்திரிகள் இருந்தால் காரி யங்கள் கெட்டுப் போகும். ஆகையினுல் இந்த இரண்டு இனத்தையும் நீக்க வேண்டும் :

640. முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர்.

ப. ரை : முறை பட சூழ்ந்தும் திறப்பாடு இலா அதவர் முடி விலவே செய்வார் = சரியான முறைப்படி ஆராய்ந்தும் திறமை இல்லாதவர்கள் (காரியம்) முடியாதபடியே செய்து விடுவார்கள்.

பொ. ரை : (ஒரு காரியத்துக்கு வேண்டிய ஆலோசனைகளை யெல்லாம்) சரியான முறையில் செய்து தீர்மானித்திருந்தும் காரியம் செய்யும் திறமையில்லாத மந்திரிகள் அதுமுடி யாதபடியே கெடுத்து விடுவார்கள்.

வி - ம் : 'முறைப்படச் சூழ்ந்தும்' என்ருல் 'முன்னே சொன்ன முறைப்படி. சுருதி. யுக்தி. அனுபவம் முதலியவற் றுக்கு ஒத்தபடியும் கருவி, காலம் முதலியவற்றிற்கு ஒத்த படியும் ஆராய்ந்தும் கூட' என்பது பொருள்.

அதி. 65—சொல்வன்மை

['சொல் வன்மை' என்பது சொல்ல வேண்டியதை நன்ருகச் சொல்லத் தெரிந்த 'பேசுந் திறமை'. இது எல்லாருக்கும் வேண்டியது.]

641. நாநல மென்னு நலனுடைமை யந்நலம்
யாநலத் துள்ளதூ உமன்று.

ப. ரை : நாநலம் என்னும் நலன் உடைமை; அந்நலம் யாநலத்து உள்ளதூஉம் அன்று = நாக்கு நல்லது என்னும் பெருமை தான் ஒருவனுக்கு உடைமையாகும்; அதிலுள்ள நன்மை வேறு எந்த நற்குணத்திலும் உள்ளதும் அல்ல.

பொ. ரை : நாக்கு நல்லதாக உள்ளவன் எனப்படும் குணந்தான் ஒருவனுக்குச் செல்வம்; அதனுல் வரக்கூடிய நன்மைகளும் வேறு எந்த நற்குணத்திலும் இல்லை.

வி-ம்: 'நாநலம்' என்பது நல்லனவற்றையே நன்ருகச் சொல்லும் திறமை. நாநலத்தால் வரக்கூடிய நன்மை வேறு எந்த நலத்தாலும் வராது என்பது உண்மையானதால்:

642. ஆக்கமுங் கேடு மதனுல் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

ப. ரை: ஆக்கமும் கேடும் அதனுல் வருதலால் சொல்லின்கண் சோர்வு காத்து ஓம்பல்=நன்மையும் தீமையும் அதனுல் (சொல்லினுல்) வருவதனுல் சொல்லில் குற்றம் வந்து விடாத படி கருத்தோடு காத்துக் கொள்ள வேண்டும்.

பொ. ரை: நன்மையும் தீமையும் சொல்லினுல் வருவதால் பேசும்போது குற்றமான சொற்களைச் சொல்லிவிடாதபடி கவனத்தோடு பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

வி-ம்: நல்ல வார்த்தைகளைச் சொன்னுல் நன்மை வரும்; கெட்ட வார்த்தைகளைச் சொன்னுல் கெடுதிவரும் என்பது நிச்சயம். நல்ல வார்த்தைகளைச் சொல்லி நன்மை தேடிக் கொள்ள முடியாவிட்டாலும் ஒவ்வொருவரும் கெட்ட வார்த்தைகளைச் சொல்லிவிடாமல் பார்த்துக் கொண்டால் கெடுதி வராமலாவது காத்துக் கொள்ளலாம். ஆகையினுல் நல்ல வார்த்தைகளைச் சொல்லுவதைக் காட்டிலும் கெட்ட வார்த்தைகளைச் சொல்லி விடாமல் எச்சரிக்கையாக இருப்பதே முக்கியம். அதனுல் தான் 'சொல்லின் கண் சோர்வு காத்து ஓம்பல்' என்ருர்.

கெட்ட சொற்களைச் சொல்லி விடாமலிருப்பதுதான் முக்கியம் என்ருலும் நல்ல சொற்களை நல்லமுறையில் சொல்லக் கூடிய சொல்வன்மை இருக்க வேண்டுமென்பதை புறக்கணித்துவிடக்கூடாது; அச் சொல்வன்மை என்னவென்ருல்:

643. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

ப. ரை: கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்=(காதில்) கேட்கிறவர்களை வசப்படுத்தும் தன்மைகள் உள்ளதாகவும் பகைவரும் விரும்பத்தக்கதாகவும் பேசுவதுதான் சொல்வன்மை எனப்படுவது.

பொ. ரை: கேட்பவர்களை வசிகரிக்கக் கூடியதாகவும் பகைவர்களும் கேட்டு மகிழ்ச்சி கொள்ளக் கூடியதாகவும் பேசுவது தான் சொல்வன்மை எனப்படுவது.

வி-ம்: 'கேட்டார்ப் பிணித்தல்' என்பது, கேட்டவர்களுடைய மனதைக் கவர்ந்து அவர்களை வசப்படுத்தி ஒத்துக்கொள்ளச் செய்வது. 'கேளாரும் வேட்ப' என்பது, தனக்குப் பகையானவர்களும் அதைக் கேட்பதில் மகிழ்ச்சியடையும்படி இனிமையாகப் பேசுவது. கேளார்=பகைவர்.

அப்படிப் பேசுவதற்கு அறிய வேண்டியது என்னவெனில்:

644. திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில்.

ப. ரை: சொல்லை திறன் அறிந்து சொல்லுக; அதனின் ஊங்கு அறனும் பொருளும் இல் = (எந்த சொல்லையும் அந்த) சொல்லின் பொருட்பயனை அறிந்து சொல்ல வேண்டும்; அதைக் காட்டிலும் தர்மமானதும் ஆதாயமுள்ளதும் வேறில்லை.

பொ. ரை: எந்தச் சொல்லைச் சொன்னாலும் அந்தச் சொல்லின் அர்த்தத்தையும் அதனாலுண்டாகும் பயனையும் ஆலோசித்துச் சொல்லவேண்டும்; அப்படிப் பேசுவதைக் காட்டிலும் நியாயமானதும் இலாபகரமானதும் வேறில்லை.

வி-ம்: 'திறனறிந்து' என்பதற்கு, 'தம்முடைய திறத்தையும் கேட்பவர் திறங்களையும்' என்பது பொருளல்ல. சொல்லின் திறனறிந்து சொல்ல வேண்டும் என்பது பொருள். சொல்லின் திறனறிதலாவது – இன்ன சொல்லை இன்ன சமயத்தில் சொன்னால் இன்ன அர்த்தமுண்டாக்கும், அதனால் இன்ன பயன் ஏற்படும் என்று நிதானிப்பது.

சொற்களின் திறன் அறிவதோடு தேர்ந்தெடுத்த சொற்களைப் பேச வேண்டும். அதாவது ஒரே பொருளைக் குறிக்கும் பல சொற்களுண்டு. அவற்றுள் குறிப்பிட்ட பொருளைக் கொடுக்க, மாற்று அர்த்தம் உண்டாக இடமில்லாதபடி சிறந்த சொல்லைப் பொறுக்கி உபயோகிக்க வேண்டும்:

645. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

ப. ரை: பிறிது ஓர் சொல் அச் சொல்லை வெல்லும்சொல் இன்மை அறிந்து சொல்லை சொல்லுக=இன்னொரு சொல் அந்தச் சொல்லைக் காட்டிலும் சிறந்த சொல்லாக இல்லை என்பதை அறிந்து சொல்லைச் சொல்ல வேண்டும்.

பொ. ரை: சொல்லப் போகிற சொல்லைக் காட்டிலும் இன்னொரு சொல் சிறந்ததாக இல்லாதபடி சொற்களைப் பொறுக்கிச் சொல்ல வேண்டும்.

வி - ம் : சொன்னபிற்பாடு 'அப்படிச் சொன்னதைக் காட்டிலும் இப்படிச் சொல்லியிருந்தால் நல்லது' என்று நினைக்கும்படியாகப் பேசிவிடக் கூடாது என்பது கருத்து. 'பிறிதோர் சொல்' என்பது 'மாற்றுருடைய மறுதலைச் சொல்' அல்ல. 'வேருெரு சொல்' என்பது தான் பொருத்தம். ஏனெனில் மாற்றுருடைய மறுதலைச் சொல்லை முற் கூட்டி யாரும் அறிய முடியாது. மாற்ருர் சொல்லப் போவது தாம் சொல்லுவதை வெல்ல முடியாதபடி இருக்கும்படி தாம் பேச வேண்டும் என்பது முடியாத காரியம்.

தர்க்கம் பேச நேர்ந்தாலும் இனிமையாகப் பேசவேண்டும். எதிர் வாதத்தையும் அமைதியாகக் கேட்க வேண்டும் :

646. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்ருர் கோள்.

ப. ரை : வேட்ப தாம் சொல்லி பிறர் சொல் பயன் கோடல் மாட்சியின் மாசற்ருர் கோள் = பிறர் விரும்பும் படியாகத் தாம் சொல்லி, பிறர் சொல்லுவதும் பயனுடையதாக இருந்தால் அதை ஏற்றுக் கொள்வதும் (தர்க்கப்) பெருமையில் குற்றமற்றவர்களின் கொள்கை.

பொ. ரை : தாம் சொல்ல வேண்டியதைப் பிறர் விரும்பும்படி இனிமையாகச் சொல்லி, பிறர் சொல்லுவது பயனுள்ளதாக இருந்தால் அதை ஒப்புக் கொள்வதும் (தர்க்கம் பேசுவதின்) சிறப்பில் குற்றமற்றவர்களுடைய கொள்கை.

வி - ம் : தாம் பேசுவது பிறருக்கு மகிழச்சியுண்டாக்கும்படி குற்றமற்றதாக இருக்க வேண்டும். பிறர் பேசுவது எப்படியிருந்தாலும் அப்பேச்சில் நியாயம் இருந்தால் அதை ஒத்துக் கொண்டு மீண்டும் வேட்ப மறுமொழி சொல்ல வேண்டும் என்பது கருத்து. 'மாட்சியின் மாசற்ருர்' என்பது 'சொல் வன்மையின் மாட்சியில் மாசற்ருர்' என்பதாகும். 'கோள்' என்பது 'கொள்கை'.

தர்க்கத்தில் வெற்றி பெறக்கூடிய தகுதிகள் எவையென்ருல் :

647. சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

ப. ரை : சொலல் வல்லன் சோர்வு இலன் அஞ்சான் அவனை இகல் வெல்லல் யார்க்கும் அரிது = (மேற் சொன்ன முறையில்) பேசும் திறமையுள்ளவனுகவும், (சொல்ல வேண்டி

யதை) மறந்து போகாமல் சொல்லக் கூடியவனாகவும், (எதிர் வாதத்துக்கு) அஞ்சாதவனாகவும் இருக்கிற அவனை தர்க்கத்தில் வெல்லுவது யாருக்கும் முடியாதது.

பொ. ரை: (முன்னே சொன்ன விதத்தில்) பேசவல்லவனாகவும் சொல்ல வேண்டியதை மறந்து தடுமாறாதவனாகவும் (எதிர் வாதம் பேசுகிறவன் எப்படிப் பேசினாலும்) அதற்கு அஞ்சாதவனாகவும் இருக்கிற அவனை வாதத்தில் வெல்லுவது யாருக்கும் முடியாது.

வி-ம்: 'சொலல் வல்லன்' என்பது 'கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும் வேட்ப' மொழிதலும், சொல்லின் திறனறிந்து சொல்லலும் முதலாகிய முன்சொன்ன 'சொல் வன்மை உள்ளவன்' என்பதாம். 'அஞ்சான்' என்பது 'எதிர் வாதத்தின் உருட்டல் மருட்டல்களுக்கு' அஞ்சாதவன். அவையஞ்சாமை யுள்ளவன்.

வாதிக்கப் பேசினாலும் வேறு வகையிற் பேசினாலும் எப்போதும் இனிமையாகப் பேசவேண்டும். அதுதான் நாநலம். அப்படி இனிமையாகப் பேசுகிறவன் எதைச் சொன்னாலும் யாரும் செய்வார்கள்:

648. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

ப. ரை: நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின் ஞாலம் தொழில் விரைந்து கேட்கும் = எப்போதும் இனிமையாகவே பேசவல்லவர்களை உடையோமானால் உலகத்தார் அவர்கள் (சொல்லுகின்ற) வேலையை உடனே கேட்பார்கள்.

பொ. ரை: எப்போதும் (யாருடன் எதற்காகப் பேசினாலும்) இனிமையாகவே பேசக் கூடியவர்கள் இருந்தால், உலகத்தார் அவர்கள் சொன்ன வேலையை உடனே செய்வார்கள்.

வி-ம்: எதற்காக யாரிடத்தில் பேசினாலும் எப்போதும் இனிமையாகவே கேட்டார் மகிழும்படிப் பேசக் கூடியவர்கள் மிகவும் அருமை. அதனால் 'நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்' என்றார். 'நிரந்து' என்பதற்கு 'நிரந்தரமாக' அல்லது 'எப்போதும்' என்று பொருள். இந்தக் குறளுக்கு 'தொழில் நிரந்து இனிது சொல்லுதல் வல்லார்ப் பெறின்' என்று பதங்களைக் கூட்டி 'நிரந்து' என்பதற்கு 'நிரல்படக் கோத்து' என்றெல்லாம் பொருள் செய்யப் புகுவது முற்றிலும் தவறு.

எதைச் சொன்னாலும் கேட்பவர் அருவருக்கும்படி நீட்டித்துப் பேசாமல், சுருங்கச் சொல்லி விளங்க வைக்க வேண்டும். நீட்டிப் பேசுகிறவன் சொல்வன்மையுள்ளவன் ஆகமாட்டான்.

649. பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்ரு தவர்.

ப. ரை: மன்றம் மாசற்ற சில சொல்ல தேற்ருதவர் பல சொல்ல காமுறுவர் = சபையில் குற்றமற்றதாக சில வார்த்தைகளைக் கூடப் பேசத் தெரியாதவர்கள் தாம் (நெடு நேரம்) பலப்பல பேச ஆசை கொள்ளுகிறவர்கள்.

பொ. ரை: சபையில் குற்றமற்ற வார்த்தைகளில் சுருக்கமாகப் பேசத் தெரியாதவர்களே பல வார்த்தைகளை நெடுநேரம் பேச ஆசைப்படுகிறவர்கள்.

வி-ம்: நல்ல சொல்வன்மையுள்ளவர்கள் ஒரு சபையில் பேசும்போது குற்றமற்றனவாகிய சில வார்த்தைகளில் சொல்ல வேண்டியதை விளங்கச் சொல்லிவிடுவார்கள். பேசத் தெரியாதவர்கள் பற்பல வார்த்தைகளைக் கொட்டியும் விளக்க முடியாமல் தடுமாறுவார்கள். அதனல் அவர்கள் நெடுநேரம் பேச ஆசை கொள்ளுவார்கள் என்பது கருத்து.

நன்ருகத் தெரிந்த விஷயங்களையும் பிறர் அறிய சொல்லத் தெரியாதவர்கள் பயனற்ற மனிதர்கள்.

650. இணருழ்த்து நாரு மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

ப. ரை: கற்றது உணர விரித்து உரையாதார் இணர் ஊழ்த்தும் நாரு மலர் அனையர் = கற்றறிந்ததைப் பிறர் புரிந்து கொள்ளும்படி விளக்கிச் சொல்லத் தெரியாதவர்கள் கொத்துக் கொத்தாகப் பூத்தும் மணமில்லாத மலர்களை ஒத்தவர்கள்.

பொ. ரை: படித்தறிந்ததை மற்றவர்கள் புரிந்துகொள்ளும்படி விளக்கிச் சொல்லத் தெரியாதவர்கள் கொத்துக் கொத்தாகப் பூத்தும் வாசனையில்லாத மலர்களுக்குச் சமானமானவர்களே.

வி-ம்: நல்ல மணமுள்ள மலர்கள் சிலவே பூத்தாலும் அவற்றின் மணம் அக்கம் பக்கமெல்லாம் பரிமளிக்கும். அந்த மணத்தை பலபேர் அனுபவிப்பர். அதுபோல் சொல்வன்மையுள்ளவர்கள் சில வார்த்தைகளே சொன்னாலும் பல பேர் அதனல் பயனடைவர். ஆனல் வாசனையில்லாத மலர்கள் எவ்வளவு

அதிகமாகப் பூத்தாலும் அவற்றை மதிப்பவர்கள் இல்லை. அதுபோல் சொல்வன்மையில்லாதவர்கள் எவ்வளவு அதிகமாகப் பேசினாலும் அதை யாரும் மதிக்கமாட்டார்கள். அதனால் யாருக்கும் பயனும் இல்லை—ஆகையினால் யாருக்கும் சொல்வன்மை வேண்டும்.

அதி. 66—வினைத்தூய்மை

['வினைத்தூய்மை' என்பது 'காரிய சுத்தம்'. அதாவது நாம் செய்ய நினைக்கும் காரியம் குற்றமற்றதா என்பதை அறிந்து கொண்டு, பிறகு அதைச் செய்ய வேண்டும் என்பது. இது எல்லாருக்கும் நல்லறிவு.]

**651. துணைநல மாக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய வெல்லாந் தரும்.**

ப. ரை : துணைநலம் ஆக்கம் தரூஉம் வினைநலம் வேண்டிய எல்லாம் தரும் = துணைவர்கள் நல்லவர்களாக இருந்தால் செல்வச் சிறப்புகள் கிடைக்கும்; (ஆனால்) செய்யப் புகும் காரியம் நல்லதாக இருந்தால் நாம் விரும்புகிற எல்லாம் கிடைக்கும்.

பொ. ரை : துணைவர்கள் நல்லவர்களா என்பதை கவனித்து ஒரு காரியத்தைச் செய்தால் காரிய வெற்றியும் செல்வமும் அடைய முடியும்; ஆனால் செய்யப் புகும் காரியம் குற்றமற்ற நல்ல காரியமா என்பதைக் கவனித்துச் செய்தால் காரிய வெற்றி மட்டுமல்ல; விரும்பத் தகுந்த எல்லாம் கிடைக்கும்.

வி-ம் : காரியம் குற்றமானதாக இருந்தாலும் நல்ல துணைவர்களின் உதவியால் வென்று பொருளும் சம்பாதித்து விடலாம்; ஆனால் காரியக் குற்றத்தால் வருகிற பழியும் பாவமும் நீங்காது. செய்கின்ற காரியம் குற்றமற்றதாக இருந்தால் துணையில்லாமலும் காரியத்தை வெல்லலாம்; அத்துடன் புகழும் புண்ணியமும் உண்டு. அதனால் எல்லா நன்மைகளும் வரும்.

ஆகையினால் புகழும் புண்ணியமும் இல்லாத எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது.

**652. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை.**

ப. ரை : புகழொடு நன்றி பயவா வினை என்றும் ஒருவுதல் வேண்டும் = புகழும் நன்மையும் உண்டாக்காத காரியங்களை எப்போதும் விலக்க வேண்டும்.

பொ. ரை: (செய்கிறவனுக்குப்) புகழையும் (எல்லாருக்கும்) நன்மையையும் உண்டாக்காத காரியங்களை எக்காலத்திலும் விலக்க வேண்டும்.

வி-ம்: இக்குறளுக்கு 'தம்மரசனுக்கு இம்மைக்கட் புகழும் மறுமைக்கண் அறமும் பயவாத வினைகளை அமைச்சர்க்கு எக்காலத்திலும் ஒழிதல் வேண்டும்' என்று பொருள் கொள்வது முற்றிலும் தவறு. ஏன் எனில், இந்த அதிகாரம் மந்திரிகளைப்பற்றியது அல்லவென்பதை இதிலுள்ள எல்லாக் குறள்களும் சொல்லும். அன்றியும் 'அங்கவியலில்' உள்ள ஒவ்வொரு அதிகாரமும் அமைச்சனுக்கு மட்டும் சொன்னதல்ல. பிறருக்கும் சொல்லப்பட்டது. மேலும் 'வினைத் தூய்மை' அரசனும் எண்ண வேண்டும் என்பதுதான் இங்கு சொல்லப்படுவது. அரசனுக்காக அமைச்சர் மட்டும் எண்ணுவதற்கல்ல.

புகழும் நன்மையும் வரக்கூடிய காரியங்களைச் செய்ய முடியாவிட்டாலும், உள்ள புகழை அழித்துப் பழி உண்டாக்கும் காரியங்களைச் செய்து விடாமலாவது இருக்க வேண்டும்:

653. ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை
யாஅது மென்னு மவர்.

ப. ரை: ஆஅதும் என்னுமவர் ஒளி மாழ்கும் செய்வினை ஓஒதல் வேண்டும் = (மேலும் சிறப்புடையவர்கள்) ஆவோம் என்பவர்கள் (உள்ள) புகழை அழிக்கக்கூடிய காரியத்தை விலக்குதல் வேண்டும்.

பொ. ரை: மேலும் மேலும் புகழ் உள்ளவர்களாக விரும்புகிறவர்கள் இருக்கிற புகழைத் தொலைத்து விடக்கூடிய காரியங்களை (கவனத்தோடு) விலக்க வேண்டும்.

வி-ம்: 'ஆஅதும்' என்பது 'ஆகுதும்' என்பதன் விவகாரம். 'ஓஒதல்' என்பது 'ஒவுதல்' என்பதன் விகாரம். 'மாழ்கும்' என்றால் 'மாளச் செய்யும்' என்று பொருள்.

என்ன துன்பம் வந்து விட்டாலும் பழி வரக்கூடிய காரியங்களைச் செய்து விடாமல் இருப்பதுதான் அறிவுடைமை:

654. இடுக்கட் படினு மிளிவந்த செய்யார்
நடுக்கற்ற காட்சி யவர்.

ப. ரை: நடுக்கற்ற காட்சியவர் இடுக்கண் படினும் இளிவந்த செய்யார் = தடுமாற்றமில்லாத அறிவுடையவர்கள் வறுமையுற்று துன்பமடைந்தாலும் இகழப்பட்ட காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.

பொ. ரை : உறுதியான அறிவுடையவர்கள் தரித்திரமடைந்து துன்பப்படுகிற காலத்திலும் இழிவான காரியங்களைச் செய்துவிட மாட்டார்கள்.

வி-ம் : 'இளி வந்த' என்பதற்கு 'இழிவானது என்று உலகம் தீர்மானித்துவிட்ட' என்பது பொருள்.

இளிவந்த காரியத்தின் அறிகுறி என்ன வென்றால் :

655. எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல்
மற்றன்ன செய்யாமை நன்று.

ப. ரை : எற்று என்று இறங்குவ செய்யற்க; செய்வானேல் மற்று அன்ன செய்யாமை நன்று = 'ஐயோ' என்று (யாரும்) வருத்தமடையக்கூடிய எதையும் செயயக் கூடாது; (தவறிச்) செய்து விட்டாலும் மறுபடியும் அப்படிச் செய்யாதிருப்பது நல்லது.

பொ. ரை : 'ஐயோ இதை ஏன் செய்தாய்' என்று யாரும் துன்பப் படும்படியான எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது; தவறிச் செய்து விட்டாலும் மறுபடியும் அப்படிப்பட்டதைச் செய்யாமலிருக்க வேண்டும்.

வி-ம் : 'எற்று என்று இரங்குதல்' என்பதற்கு 'ஐயோ' 'அப்பா', 'ஆ', 'அம்மா' என்பன போன்ற தீனக்குரல் கிளப்புதல் என்று பொருள். இப்படிப்பட்ட குரல்கள் துன்பம் உண்டான போதுதான் கிளம்பும். அப்படிப்பட்ட பரிதாபக் குரல் கிளம்பும்படியான வற்றைச் செய்யாதிருக்க வேண்டும் என்பது. யாருக்கும் துன்பமுண்டாக்கும் எதையும் செய்யக் கூடாது என்பதற்காக. வினைத் தூய்மை என்பது அதுதான். 'மற்றன்ன செய்யாமை நன்று' என்பதற்கு, மறுபடியும் செய்யத் தகாது என்று நினைக்கச் செய்கிற எல்லாக் காரியங்களும் வினைத் தூய்மைக்கு விரோதமானது என்பது கருத்து. 'எற்றென்றிரங்குவ' என்பது 'செய்தவனே இரங்குதல்' அல்ல. துன்பப்பட்டவர்களும் அதைப் பார்த்த பிறரும் இரங்குவது. இரங்குதல் இங்கே 'வருந்துவது' அல்லது 'அழுவது' என்ற பொருள் தருவது.

நித்தம் நடக்கக் கூடிய இப்படிப்பட்ட வினைத்தூய்மை இல்லாத நிகழ்ச்சிகளை விலக்குவதோடு ஆன்றோர்கள் பழி பாவம் என்று சொல்லுகிற காரியங்களை எவ்வளவு வறுமையுள்ள காலத்திலும் கூடச் செய்யலாகாது :

656. ஈன்றாள் பசிகாண்பா ளாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை.

ப. ரை: ஈன்றாள் பசி காண்பான் ஆயினும் சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க=பெற்றதாய் பசியால் வாடுவதைக் கண்ட காலத்திலும் மேலோர்கள் பழியென்று சொன்ன காரியங்களை செய்யக் கூடாது.

பொ. ரை: பெற்று வளர்த்த தாயானவள் உணவின்றிப் பசியால் வருந்துகின்றபோதும் கூட (அவளுக்கு உணவு கொடுக்கவும்) பெரியோர்கள் பழிவரும் என்று சொல்லிய பாவ காரியத்தைச் செய்யக் கூடாது.

வி - ம்: 'பழிக்கும் வினை' என்பது 'பழியானது என்று விலக்கச் சொன்ன காரியம்.'

பழியான காரியங்களால் எவ்வளவு செல்வம் வருவதானாலும் அதை விரும்பாமலிருப்பதுதான் சான்றோர் விரும்பும் வினைத் தூய்மை:

657. பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்றோர்
கழிநல் குரவே தலை.

ப. ரை: பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர் கழி நல்குரவே தலை=பழியை மேற்கொண்டு அடைகிற செல்வத்தைக் காட்டிலும் (பழியற்ற) சான்றோனாக மிகுந்த வறுமையோடிருப்பதே மேல்.

பொ. ரை: பழியான தீய காரியங்களைச் செய்து அதனால் செல்வம் அடைவதைக் காட்டிலும் (பழிபாவமில்லாத) நல்லவனாக மிகுந்த ஏழையாக இருப்பதே மேலானது.

வி - ம்: வினைத் தூய்மையைக் கருதுகின்ற மேலோர்கள் எவ்வளவு ஏழைகளாக இருந்தாலும் பழியான பாவங்களைச் செய்து அதனால் வரக்கூடிய செல்வத்தை வெறுப்பார்கள் என்பது கருத்து. 'கழி' என்றால் 'மிகுந்த'.

பழியான காரியங்களால் நன்மை வந்தாலும் கடைசியில் துன்பந்தான் மிஞ்சும்:

658. கடிந்த கடிந்தொரார் செய்தார்க் கவைதாம்
முடிந்தாலும் பீழை தரும்.

ப. ரை: கடிந்த கடிந்து ஒரார் செய்தார்க்கு அவைதாம் முடிந்தாலும் பீழை தரும்=(பழியான காரியங்கள் என்று அறநூல்களால்) கண்டிக்கப்பட்டுள்ள காரியங்களை, தாமும் கண்டித்து விலக்கி விடாமல் செய்கிறவர்களுக்கு அந்தக் காரியங்கள் வெற்றியாக முடிந்தாலும் துன்பமே உண்டாகும்.

பொ. ரை: (பெரியோர்களாலும் நீதி நூல்களாலும் பழியானவைகள் என்று) வெறுத்து விலக்கப்பட்ட காரியங்களை நாமும் வெறுத்து விலக்கிவிட வேண்டும். அப்படி விலக்காமல் செய்தால் அந்தக் காரியங்கள் வெற்றிகரமாக முடிந்தாலும் பின்னால் அதனால் நிச்சயமாகத் துன்பம் வரும்.

வி-ம்: 'கடிந்த' என்பது ஆன்றோர்களும் அறநூல்களும் 'வெறுத்த' என்ற பொருள் தருவது. பழிபாவமான காரியங்களால் உடனே நன்மை வந்தாலும், முடிவில் தீமைதான் உண்டாகும் என்பது கருத்து.

வினைத் தூய்மையின்றி வினைத் தீமையினால் வருகின்ற செல்வம் வந்த வழியே தொலைந்து போய்விடும்:

**659. அழக்கொண்ட வெல்லா மழப்போ மிழப்பினும்
பிற்பயக்கு நற்பா லவை.**

ப. ரை: அழ கொண்ட எல்லாம் அழ போம்; நற்பால் அவை இழப்பினும் பின் பயக்கும்=பிறர் அழ அவர்களிடமிருந்து பறித்துக் கொண்டதெல்லாம் பறித்தவர்கள் அழ. போயொழிந்து விடும்; (அப்படியின்றி) நல்ல வழியில் வந்த செல்வம் தாம் இழந்து விட்டாலும் பின்னால் தமக்கு வந்துதவும்.

பொ. ரை: பிறரைத் துன்பப்படுத்தி அவர்கள் அழ அழ அவர்களிடமிருந்து பறித்த செல்வமெல்லாம் (அதைப் போலவே) தம்மைப் பிறர் துன்பப்படுத்தி தாம் அழ அழப் போயொழிந்து விடும்; (ஆனால் யாரையும் துன்புறுத்தாமல்) நல்ல வழியில் சம்பாதித்த செல்வத்தை ஒருவன் இழந்து விட்டாலும் மீண்டும் அவனிடம் வந்து சேர்ந்து விடும்.

வி-ம்: 'பிற் பயக்கும்' என்பதற்குப் 'பின்னால் வந்து சேரும்' என்றும் அல்லது 'பின்னால் வரக்கூடிய நன்மைகளைத் தரும்' என்றும் பொருள் கொள்ளலாம். பின்னால் வரக்கூடிய நன்மை 'புண்ணியம்'. அதனால் இக்குறளுக்கு—பிறரைத் துன்பப்படுத்தி சம்பாதிக்கின்ற செல்வமெல்லாம் சம்பாதித்தவனைத் துன்பப்படும்படிச் செய்துவிட்டு அவனையும் நீங்கிப் போய் விடும். நல்வழியில் சம்பாதிக்கிறவன் செல்வத்தை இழந்து விட்டாலும் வினைத்தூய்மையால் அவனுக்குத் துன்பம் வராது—என்பது கருத்து.

துன்பப்படுத்திச் சம்பாதிக்கிற செல்வம் எப்படிப் போன்றது என்றால்:

**660. சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட்
கலத்துணீர் பெய்திரீஇ யற்று.**

ப. ரை: சலத்தால் பொருள்செய்து ஏமார்த்தல் பசு மண் கலத்துள் நீர் பெய்து இரீஇ அற்று=தீய காரியங்களால் செல்வம் சேர்த்து சேமித்தல் பச்சை மண் பாண்டத்தில் தண்ணீரை ஊற்றி பத்திரப்படுத்துவதைப் போன்றது.

பொ. ரை: பழிதரும் காரியங்களைச் செய்து பணம் சம்பாதித்துப் பூட்டி வைத்துச் சேமிப்பது, வேக வைக்காத பச்சை மண் பாண்டத்தில் தண்ணீரை ஊற்றி மூடி வைப்பதைப் போன்றது.

வி - ம்: 'பசு மட்கலம்' சூளையிலிட்டு வேகவைக்காத பச்சை மண் பாண்டம். 'ஏமார்த்தல்'—பத்திரப்படுத்தல். 'இரீஇ' என்பது 'இருவி' என்பதன் விகாரம். 'இருவி' என்பது 'கெட்டிப்படுத்துவது' என்ற பொருளுள்ளது. இங்கு 'பத்திரப்படுத்தி வைப்பது' என்று பொருள் தருவது. பச்சை மண் பாண்டத்தில் தண்ணீர் ஊற்றி மூடி வைத்தால் அத்தண்ணீர் அந்தப் பாண்டத்தையும் கரைத்து விட்டுத் தானும் ஒழுகிப் போய்விடும். அது போல் தீய காரியத்தால் சேர்த்த பொருள். சேர்த்தவனையும் கெடுத்து விட்டு. தானும் அவனிடம் தங்காது போய்விடும் என்பது கருத்து.

அதி. 67—வினைத்திட்பம்

['வினைத்திட்பம்' என்பது மேற்கொண்ட காரியத்தைச் செய்து முடிக்கும் மன உறுதி. அதாவது காரியத்தில் 'வைராக்யம்' இது எல்லாருக்கும் வேண்டியது.]

661. வினைத்திட்ப மென்ப தொருவன் மனத்திட்ப
மற்றைய வெல்லாம் பிற.

ப. ரை: வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம் மற்றைய எல்லாம் பிற = காரிய உறுதி என்பது ஒருவனுடைய மன உறுதிதான், மற்றன எல்லாம் வேறு.

பொ. ரை: காரிய வலிமை என்பது ஒருவனுடைய மன வலிமை தான். மற்ற வலிமைகளெல்லாம் அதற்குப் பிற்பட்டனவே யாகும்.

வி - ம்: 'திட்பம்' என்பது உறுதி. மனோபலம் தான் காரியத்தை முடிக்கும் பலம். அந்த பலம் இல்லாமல் மற்ற எந்த பலம் இருந்தும் பயனில்லை என்பது கருத்து.

அந்த மன வலிமை என்னவென்றால்:

662. ஊறொரா லுற்றபி னொல்காமை யிவ்விரண்டி
னாறென்ப ராய்ந்தவர் கோள்.

ப. ரை: ஆய்ந்தவர் கோள் ஊறு ஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறு என்பர் = ஆராய்ந்து அறிந்தவர்கள் (வினைத்திட்பம் என்று) கொள்ளுவது (எதுவென்றால்) துன்புறுத்தும் காரியங்களை விலக்குவது, துன்பம் தமக்கு வந்தால் தளர்ந்து விடாமலிருப்பது ஆகிய இந்த இரண்டும் சேர்ந்த ஒழுக்கம் என்று சொல்லுவார்கள்.

பொ. ரை: ஆராய்ந்து அறிந்தவர்களுடைய வினைத்திட்பக் கொள்கை என்னவென்றால்; பிறருக்குத் துன்பம் விளைக்கக் கூடிய காரியங்களைச் செய்யாதிருப்பதும் தமக்குத் துன்பம் வந்தால் தளர்ந்து விடாமலிருப்பதும் ஆகிய இந்த இரண்டு குணங்களும் சேர்ந்த ஒழுக்கம்தான் என்று சொல்லுவார்கள்.

வி-ம்: 'கோள்'—கொள்கை. 'ஒரால்' என்பது 'ஒருவுதல்'—விலக்குதல் என்ற பொருளுடையது. 'ஒல்குதல்' தளர்ந்து பின்வாங்குதல். பிறருக்குத் துன்பந்தரும் தீவினைகளை விலக்குவதும் தமக்கு எவ்வளவு துன்பம் வந்தாலும் தளராமல் காரியம் செய்வதும் ஆகிய இரண்டும் சேர்ந்த வைராக்யம் தான் வினைத் திட்பம்.

மேற்கொண்ட காரியத்தில் வரக்கூடிய துன்பங்களுக்குப் பின்வாங்காமல் காரியத்தை எப்படியாவது முடிப்பதே வினைத் திட்பம்:

663. கடைக்கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி
னெற்றா விழுமந் தரும்.

ப. ரை: கடை கொட்க செய் தக்கது ஆண்மை; இடை கொட்கின் எற்றா விழுமம் தரும் = (மேற் கொண்டு செய்யப் புகுந்த காரியத்தின்) முடிவு காண்கிற வரை பூர்த்தியாகச் செய்வது தான் மன உறுதி: காரியத்தின் இடையிடையே (காரியத்தை விட்டு) மாறுவது தீராத துன்பங்களை உண்டாக்கும்.

பொ. ரை: மேற்கொண்ட காரியத்தை, அது பூர்த்தியடைகிற வரை இடையில் விடாமல் செய்து முடிப்பது தான் (வினைத் திட்பம் என்னும்) ஆற்றல்; இடையிடையே அதைவிட்டு மாறுபட்டால் தீராத துன்பங்கள் உண்டாகும்.

வி-ம்: 'கொட்கல்' என்பதற்கு 'கண்ணுக்குப் புலனாக வெளிப்படுதல்' என்றும் 'மாறுபடுதல்' என்றும் இரண்டு

அர்த்தங்கள் உண்டு. அந்த இரண்டு பொருளிலும் முறையே உபயோகிக்கப்பட்டிருக்கிறது. காரியத்தை ஒரே மூச்சில் வைராக்யத்தோடு செய்து முடிப்பது தான் வினைத்திட்பம். இடையிடையே விட்டு விட்டு மாறி மாறிச் செய்வதனால் காரியம் பூர்த்தியாகாமையோடு காரியத்தைக் கெடுத்து விடக் கூடிய பல துன்பங்களும் உண்டாகும் என்பது கருத்து. இக்குறளுக்குக் காரியங்களை மறைத்துச் செய்யவேண்டும் என்றும் காரியத்தின் இடையே யாருக்கும் புலப்படக் கூடாதென்றும் பொருள் செய்வது பொருந்தாது. இங்கே காரிய உறுதியைப் பற்றித்தான் சொல்ல வந்ததேயன்றி மறைத்துச் செய்ய வேண்டிய தந்திரங்களைப் பற்றிப் பேச்சில்லை. இந்த அதிகாரம் பொது அறிவாகச் சொல்லப்பட்டிருப்பதை மறந்து இது மந்திரிகளுக்கு மட்டும்தான் என்று கொண்டதால் அந்தக் குழப்பம் உண்டாகிறது.

எடுத்த காரியத்தை முடித்து விடுவதாக வாயால் சொல்லுவது சுலபம். சொன்னபடி முடிப்பது கடினம். சொன்னபடி செய்து முடிக்க வினைத்திட்பம் வேண்டும் :

664. சொல்லுதல் யார்க்கு மெளிய வரியவாஞ்
சொல்லிய வண்ணஞ் செயல்.

ப. ரை : சொல்லுதல் யார்க்கும் எளிய; சொல்லிய வண்ணம் செயல் அரியவாம் = (செய்து முடிப்பேன் என்று) சொல்லுவது எல்லார்க்கும் எளிது; ஆனால் சொன்னபடி செய்து முடிப்பது அருமை.

பொ. ரை : காரியத்தைச் செய்து முடித்து விடுவதாகச் சொல்லுவது எல்லாருக்கும் சுலபமானது. சொன்னபடி செய்வது தான் கடினம்.

வி-ம் : எதையும் செய்து முடித்து விடுவதாகச் சொல்லுவது யாருக்கும் சுலபம்; ஆனால் சொன்னபடி செய்து முடிக்க வினைத்திட்பம் என்ற வைராக்யம் வேண்டும் என்பது கருத்து.

மிகவும் கடினமான காரியங்களையும் சொன்னபடி செய்து முடிக்கக் கூடிய வைராக்யத்தை எங்கே காணலாம் என்றால் :

665. வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தன்க
ணூறெய்தி யுள்ளப் படும்.

ப. ரை : வேந்தன் கண் ஊறு எய்தி வீறு எய்தி மாண்டார் வினைத் திட்பம் உள்ளப்படும் = ஒரு அரசனிடத்தில் துன்பங்

களை அடைந்து (அவற்றைப் பொறுத்துக் கொண்டு அவனை எதிர்த்து) வெற்றியடைந்து புகழ் பெற்றவர்களுடைய மன வலிமை போற்றப்பட வேண்டியது.

பொ. ரை: கொண்ட கொள்கைக்காக அரசனையும் எதிர்த்து அவனால் பல துன்பங்களை அடைந்தும் சகித்துக் கொண்டு கொள்கையில் வெற்றி பெற்றுக் கீர்த்தியடைந்தவர்களுடைய மன வைராக்யத்தைப் போற்ற வேண்டும்.

வி-ம்: இந்தக் குறள் வினைத் திட்பம் என்னும் தூய மன உறுதியை எடுத்துக் காட்டும் கண்ணாடி போன்றது. வினைத் திட்பம் என்பது 'ஊறு ஒரால் உற்றபின் ஒல்காமை இவ்விரண்டின் ஆறு' என்று அதன் இலக்கணம் சொல்லப்பட்டது. அதாவது பிறருக்குத் துன்பம் செய்யாமல், தனக்கு வருகிற துன்பங்களுக்குத் தளராமல், கொண்ட காரியத்தை முடிப்பது தான் வினைத் திட்பம் என்று முன்னே சொல்லப்பட்டது. அதை விளக்குவது இந்தக் குறள். ஒரு அரசனையும் எதிர்த்துப் பல துன்பங்களை அடைந்தும் தான் ஒரு துன்பமும் செய்யாமல் (அரசன் தன்னுடைய பதவிக்குள்ள பலவிதமான சக்திகளையும் கொண்டு துன்புறுத்தியும் அவற்றைச் சகித்துக் கொண்டு) தம் கொள்கையை நிலை நிறுத்திப் புகழடைந்த மகான்கள் உண்டு. அவர்களிடத்தில் இந்த வினைத் திட்பம் என்ற மன வைராக்யத்தைக் காணலாம். அது வணங்கத் தக்கது என்று சொல்லுவது இந்தக் குறள்.... இந்த அதிகாரம் அமைச்சனுக்கு மட்டுந்தான் சொல்லப் பட்டதாகக் கொண்டு விட்டதால் இந்த அருமையான குறளின் பொருள் சீர் குலைக்கப்பட்டு வந்திருக்கிறது.

அப்படிப்பட்ட தூய வினைத் திட்பமுள்ள மகான்கள் நினைத்ததை நினைத்தபடி முடிக்கக் கூடியவர்கள்:

666. எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

ப. ரை: எண்ணியார் திண்ணியராகப் பெறின் எண்ணிய எண்ணியாங்கு எய்துப = எண்ணுகின்றவர்கள் மன உறுதி யுடையவர்களாக இருந்தால் அவர்கள் எண்ணியவற்றை எண்ணியபடி அடைவார்கள்.

பொ. ரை: காரியத்தைச் செய்ய எண்ணுகிறவர்கள் வைராக்ய முடையவர்களாக இருந்தால் எண்ணிய காரியங்களை எண்ணியபடி செய்து முடிப்பார்கள்.

வி-ம்: மிகச் சிறந்த நல்ல காரியங்களைப் பற்றித்தான் இங்கே சொல்லப்படுகிறது. சூழ்ச்சிகளால் முடிகிற சுயநலக்

காரியங்களல்ல. பலருக்கும் பயன் படக் கூடிய வினைத்திட்பமையுள்ள நல்ல காரியங்களைச் செய்து முடிக்க மிகுந்த மன உறுதி வேண்டும் என்பது தான் இக்குறளின் கருத்து.

சிறந்த காரியங்களைச் செய்து முடிக்கத் தக்க திண்ணிய மனமுடைய பெரியவர்கள் உருவத்தில் சிறியவர்களாகவும் உடல் வலிமையில் குறைந்தவர்களாகவும் இருக்கலாம். அப் பெரியவர்களை உருவத்தைக் கொண்டு அளந்து விடக் கூடாது:

**667. உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணி யன்னா ருடைத்து.**

ப. ரை: உருள் பெரும் தேர்க்கு அச்சாணி அன்னார் உடைத்து; உருவு கண்டு எள்ளாமை வேண்டும் = உருளுகின்ற பெரிய தேருக்குக் கடையாணி போன்றவர்களை (இந்த உலகம்) உடையது: (அவர்களை) உருவத்தைக் கண்டு இகழ்ந்து விடக் கூடாது.

பொ. ரை: உருளுகின்ற பெரிய தேருக்குக் கடையாணியைப் போன்ற (சிறிய உருவமும் மன உறுதியும் உள்ள) மகான்கள் இவ்வுலகத்தில் உண்டு; அவர்களை அவர்களுடைய உருவத்தைக் கண்டு இகழ்ந்து விடக்கூடாது.

வி-ம்: பெரிய இரதத்தை அது உருளும்போது கவிழ்ந்து விடாதபடி காப்பது சிறிய அழகில்லாத வடிவமுடைய – ஆனால் மிக்க உறுதியுள்ள – கடையாணிகள். அதைப் போல் உருண்டு கொண்டிருக்கிற இந்த உலகத்தின் அற வாழ்க்கை கவிழ்ந்து விடாமல் காக்கக் கூடிய மகாத்மாக்கள் இந்த உலகத்தில் உண்டு: அவர்கள் உருவம் அழகற்றதாக இருக்கலாம். அதனால் அவர்களை இகழ்ந்து விடக்கூடாது. ஏனெனில் அவர்கள் தாம் அரும் பெரும் தர்மங்களை எண்ணியது எண்ணியாங்கு முடிக்கும் திண்ணிய வினைத் திட்பமுடைய வைராக்ய சிலர்கள். அவர்களைப் போற்ற வேண்டும்.

அந்த மகாத்மாக்களைப் பின்பற்றி நல்ல தர்மமான காரியங்களுக்காக நாம் உழைக்க வேண்டும்:

**668. கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது
தூக்கங் கடிந்து செயல்.**

ப. ரை: கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது தூக்கம் கடிந்து செயல் = (குற்றமற்றது என்று) தெளிவாகக் கண்ட காரியத்தில் தளர்ச்சியின்றி ஓயாது உழைக்க வேண்டும்.

பொ. ரை: (நல்ல காரியம் என்று) தெளிவாகத் தெரிந்த காரியத்தைப் பூர்த்தி செய்ய உறுதியுடன் ஓய்வின்றி உழைக்க வேண்டும்.

வி-ம்: 'கண்ட' என்றால் 'ஆராய்ந்து அறிந்த' என்பது. 'தூக்கம் கடிந்து' என்பதற்கு 'ஓயாமல்' அல்லது 'இடைவிடாமல்' என்பது பொருள்.

நல்ல காரியம் என்பதோடு பல பேருக்கு நன்மையுண்டாக்கும் என்ற காரியமாக இருந்தால்:

669. துன்ப முறவரினுஞ் செய்க துணிவாற்றி
யின்பம் பயக்கும் வினை.

ப. ரை: துன்பம் உற வரினும் இன்பம் பயக்கும் வினை துணிவாற்றி செய்க = துன்பப்பட நேர்ந்தாலும் (பலருக்கு) இன்பம் உண்டாக்கக் கூடிய காரியத்தைத் துணிந்து செய்ய வேண்டும்.

பொ. ரை: துன்பப்பட நேரிட்டாலும் (பின் வாங்காமல்) பல பேருக்கு நன்மையுண்டாக்கக் கூடிய காரியத்தை வைராக்கியத்தோடு செய்ய வேண்டும்.

வி-ம்: 'இன்பம் பயக்கும் வினை' என்பது தனக்கு மட்டும் இன்பம் பயக்கும் வினை அல்ல. அதைத் துணிவுடன் செய்யச் சொல்லி உபதேசிக்க வேண்டியதில்லை. பலபேருக்கு இன்பம் பயக்கும் வினை தான் இங்கே சொல்லப்படுவது. ஏன் எனில் 'வேந்தன் கண் ஊறெய்தி வீறெய்தி மாண்ட வினைத் திட்பமும்' 'உருள் பெருந்தேர்க்கு அச்சாணி யன்னார்', 'திண்ணியராக எண்ணியது எண்ணியாங்கு எய்துவதும்' தர்மம் மிகுந்த பொது இன்பக் காரியங்களே யன்றி, சுய இன்பக் காரியங்களல்ல.

ஆகையினால்:

670. எனைத்திட்ப மெய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு.

ப. ரை: எனைத்திட்பம் எய்திய கண்ணும் வினைத் திட்பம் வேண்டாரை உலகு வேண்டாது = வேறு என்ன வல்லமைகள் அமைந்தாலும் காரிய உறுதியை விரும்பாதவர்களை உலகத்தார் விரும்ப மாட்டார்கள்.

பொ. ரை: வேறு என்ன திறமைகள் கிடைத்தாலும் காரிய வைராக்யம் இல்லாதவர்களை உலகத்தார் மதிக்க மாட்டார்கள்.

வி-ம்: 'எய்தியக் கண்ணும்' என்பது 'அடைந்தாலும்' என்ற பொருள் தருவது. அதனால் 'என்னென்ன வசதிகள் தாமாக வாய்த்தாலும்' என்பது பொருள். அதனால் காரிய வைராக்கியம் உள்ளவர்கள் அந்தக் கொள்கையினால் மற்ற வசதிகளையெல்லாம் இல்லாவிட்டாலும் உண்டாக்கிக் கொள்வார்கள். அந்த வைராக்கியம் இல்லாதவர்கள் எவ்வளவு திடமான வசதிகள் தாமாக வந்தடைந்தாலும் பயனடைய மாட்டார்கள் என்பது கருத்து.

அதி. 68—வினைசெயல்வகை

['வினைசெயல்வகை' என்பது காரியங்களைச் செய்யும் விதம். அதாவது எந்தெந்த காரியத்தை எப்படிச் செய்ய வேண்டும் என்று அந்தந்த காரியத்தின் தராதரத்தை ஆராய்ந்து சமயோசிதமாகச் செய்வது. இது எல்லாருக்கும் பொது.]

671. சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுட் டங்குதல் தீது.

ப. ரை: சூழ்ச்சி முடிவு துணிவு எய்தல்; அத்துணிவு தாழ்ச்சியுள் தங்குதல் தீது = ஆலோசனையின் பயன் (காரியத்தைச் செய்ய) தீர்மானம் செய்வது; அந்த தீர்மானம் தாமதத்தில் நின்று விடக்கூடாது.

பொ. ரை: ஆலோசனை செய்வதன் நோக்கம் (ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமா வேண்டாமா என்று) தீர்மானிப்பதற்காகத்தான்; செய்யத் தீர்மானித்த பிறகு அந்தக் காரியத்தை தாமதிக்க விடக்கூடாது.

வி-ம்: 'முடிவு' என்பது 'பயன்' அல்லது 'நோக்கம்'. 'துணிவு' என்பது 'நிச்சயிப்பது'. ஒரு காரியத்தை எவ்வளவு நிதானமாக வேண்டுமானாலும் ஆலோசனை செய்யலாம். ஆலோசனை செய்து நிச்சயித்த பிறகு தாமதிக்கக் கூடாது – என்பது கருத்து.

ஆனால் எல்லாக் காரியத்தையும் நிச்சயித்த உடனே செய்து விட முடியாது:

672. தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க
தூங்காது செய்யும் வினை.

ப. ரை: தூங்கி செயற்பால தூங்குக; தூங்காது செய்யும் வினை தூங்கற்க = பொறுத்துச் செய்ய வேண்டிய காரியத்

தைப் பொறுத்துச் செய்ய வேண்டும்; உடனே செய்ய வேண்டிய காரியத்தை தாமதிக்கக் கூடாது.

பொ. ரை: நிதானமாகச் செய்ய வேண்டிய காரியத்தை நிதானமாகச் செய்ய வேண்டும்; உடனே செய்ய வேண்டிய காரியத்தில் தாமதம் கூடாது.

வி-ம்: 'தூங்குதல்' என்பது 'தாமதித்தல்'. தாமதித்துச் செய்ய வேண்டிய காரியத்தில் அவசரம் கூடாது; அவசரமாகச் செய்ய வேண்டியதில் தாமதம் கூடாது — என்பது கருத்து.

ஆனாலும் தாமதமாகச் செய்ய நினைத்த ஒரு காரியத்தை உடனே செய்து முடித்துக்கொள்ள வாய்ப்புக் கிடைத்தால் அதை விட்டுவிடக் கூடாது:

**673. ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்காற்
செல்லும்வாய் நோக்கிச் செயல்.**

ப. ரை: ஒல்லும் வாய் எல்லாம் வினை நன்றே; ஒல்லாக்கால் செல்லும் வாய் நோக்கி செயல்=வாய்ப்பு கிடைத்தபோதெல்லாம் காரியத்தைச் செய்து விடுவது நல்லது; வாய்ப்பு கிடைக்காவிட்டால் (வாய்ப்புக்காக) காத்திருந்து நிதானித்துச் செய்ய வேண்டும்.

பொ. ரை: (தூங்கிச் செய்ய நினைத்த காரியத்தையும் எதிர்பாராத) நல்ல சந்தர்ப்பம் வாய்த்துவிட்டால் உடனே செய்வது தான் நல்லது; அந்தவாய்ப்பு இல்லாதபோது (முன் எண்ணியபடி) வாய்ப்புக்காகக் காத்திருந்து (தூங்கிச்) செய்ய வேண்டும்.

வி-ம்: இந்தக் குறளுக்கு 'இயலுமிடத்தெல்லாம் போராற் செய்தல் நன்று' என்று பொருள் கொள்வது மிகவும் தவறானது. போரைப் பற்றிய பேச்சுக்கு இங்கே இடமேயில்லை. சிறிதும் பொருத்தமில்லாமல் சாம, பேத, தான. தண்டம் என்ற உபாயங்களை வலிந்து இழுத்து வந்து பொருள் செய்வது இந்த அதிகாரத்தின் நோக்கத்தைக் குலைப்பதாகும். ....தாமதித்துச் செய்ய நினைத்த காரியத்துக்கும் உடனே செய்ய வாய்ப்புக் கிடைத்தால் தாமதிக்காமல் செய்துவிட வேண்டும் என்பதுதான் இக்குறளின் கருத்து.

உடனே செய்துவிட வேண்டியதானாலும் சரி, நிதானித்து வாய்ப்பு வந்தபின் செய்வதானாலும் சரி, செய்ய வேண்டிய காரியத்தைப் பூர்த்தியாகச் செய்து முடித்துவிட வேண்டும். மிச்சம் விட்டுவைக்கக் கூடாது; ஏனென்றால்:

674. வினைபகை யென்றிரண்டி னெச்ச நினையுங்காற்
தீயெச்சம் போலத் தெறும்.

ப. ரை: நினையுங்கால் வினை பகை என்ற இரண்டின் எச்சம் தீ எச்சம் போல தெறும் = நினைத்துப் பார்த்தால் மேற் கொண்ட காரியம், ஒருவருடன் பகைமை. இந்த இரண்டும் மிச்சம் விட்டு வைத்தால் மிச்சம் விட்ட நெருப்புத் துணுக்கு போலப் பின்னால் துன்பம் உண்டாக்கும்.

பொ. ரை: எண்ணிப் பார்த்தால், தொடங்கிய காரியத்தைப் பூர்த்தி செய்யாமல் மிச்சம் விட்டுவைப்பதும் பகைமையைத் தீர்த்து விடாமல் மிச்சம் விட்டு வைப்பதும் ஆகிய இந்த இரண்டும் (நெருப்பை அணைக்கும் போது முற்றிலும் அணைத்து விடாமல்) ஒரு துணுக்கு மிச்சம் விட்டதைப் போல, பின்னால் பெருகி துன்பத்தை உண்டாக்கும்.

வி-ம்: நெருப்பை அணைக்கும்போது ஒரு பொறி அணையாமல் மிஞ்சவிட்டாலும் அது விரைவில் பெருந் தணலாகி அபாயம் உண்டாக்கும். அது போல தொடங்கிய ஒரு வேலையில் பெரும் பகுதியையும் முடித்துவிட்டு ஒரு வெகு சிறு பகுதியை மிச்சம் விட்டிருந்தாலும் அது பூர்த்தியான பகுதியையும் பலனற்றதாக்கி முற்றிலும் கெட்டுப் போகலாம். அதைப் போலவே ஒருவருடன் சிறிது பகைமை இருந்தாலும் ஒன்று அவரை வென்று பகைமையைத் தீர்த்துவிட வேண்டும். அல்லது நட்பாகிப் பகைமை இல்லாமல் செய்து விட வேண்டும். இல்லையானால் சிறு பகையும் பின்னால் பெரிய அபாயமுண்டாக்கி விடலாம். ஆகையினால் ஆரம்பித்த காரியத்தில் மிச்சம் விடாமல் பூர்த்தி செய்துவிட வேண்டும் என்பது கருத்து.

ஒவ்வொரு காரியத்தையும் அதன் தரத்துக்குத் தக்கபடி இடம் பொருள் ஏவல்களை அறிந்து செய்வது தான் செயல் வகை:

675. பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்து
மிருடீர வெண்ணிச் செயல்.

ப. ரை: பொருள், கருவி, காலம், வினை இடனொடு ஐந்தும் இருள் தீர எண்ணி செயல் = (எந்தக் காரியத்தையும் அந்தக் காரியத்தின்) நோக்கம், அதற்கு வேண்டிய கருவிகள், செய்யத் தகுந்த காலம், செய்ய வேண்டிய செயல் நுணுக்கம், தகுந்த இடம் ஆகிய ஐந்தையும் தெளிவாக ஆராய்ந்து கொண்டுச் செய்ய வேண்டும்.

பொ. ரை : செய்ய நினைக்கும் காரியத்தின் நோக்கம், அதற்கு வேண்டிய சாதனங்கள், செய்யத் தகுந்த பருவ காலம், செய்ய வேண்டிய காரிய நுணுக்கம், தகுந்த இடம் ஆகிய ஐந்து விஷயங்களையும் சந்தேகத்துக்கு இடமில்லாதபடி ஆராய்ந்து அறிந்து கொண்ட பிறகுதான் செய்ய வேண்டும்.

வி - ம் : 'வினை செயல் வகை' என்னும் இந்த அதிகாரத்தில் சொல்லப்படுகிற அறிவு மக்கள் செய்ய விரும்பும் எல்லாக் காரியங்களையும் செய்ய வேண்டிய வகையில் ஆலோசித்துச் செய்ய வேண்டும் என்பதற்காக. அந்த அறிவு ஒரு அரசன் செய்ய நேரிடக் கூடிய போருக்கும் பொருந்தும். ஆனாலும் இங்கே போரைப் பற்றிய பேச்சுக்கு இடமில்லை. போர் செய்து கொண்டிருப்பது ஒன்றுதான் அரசனுடைய வேலையல்ல. ஆகையினால் இக்குறளுக்குப் போர் செய்வதை எண்ணிப் பொருள் கொள்வது முற்றிலும் தவறு. பொருள், கருவி, செயல், காலம், இடம் என்ற ஐந்தையும் எல்லாக் காரியத்திலும் எண்ணிச் செய்ய வேண்டும் என்பதுதான் இக்குறளின் அர்த்தம். 'கருவி' என்பது 'யுத்த தளவாடங்கள்' அல்ல. ஆயுதம், பணம், ஏவலாள் முதலிய சாதனங்கள் சேர்ந்தது 'கருவி'. இங்குள்ள 'பொருள்' என்பதற்குச் செலவாகும் பணம் அல்லது வரக்கூடிய செல்வம் என்பது அர்த்தமல்ல. 'பொருள்' என்பதற்கு இங்கே செய்யப்புகும் காரியத்தின் 'நோக்கம்' என்பது அர்த்தம். ஏன் எனில் செலவுக்கு வேண்டிய பணமும் 'கருவி' என்ற 'சாதனங்களில்' அடங்கியது.

பொருள், கருவி, காலம், செயல் இடம் என்ற ஐந்தும் பொருந்திய பிறகும் :

676. முடிவு மிடையூறு முற்றியாங் கெய்தும்
படுபயனும் பார்த்துச் செயல்.

ப. ரை : முடிவும் இடையூறும் முற்றியாங்கு எய்தும் படுபயனும் பார்த்து செயல்= (செய்யப் புகும் காரியம்) முடியுமா என்பதையும் அதற்குள்ள இடையூறுகளையும், காரியம் முடிந்த உடன் அடையக் கூடிய நன்மைகளையும் ஆராய்ந்து கொண்டு, பின் செய்ய வேண்டும்.

பொ. ரை : (மற்ற எல்லா வசதிகளும் இருந்தாலும் மேற்கொள்ளும் காரியம்) முடிவுறுமா அல்லது எதிர்பார்க்கிற இடையூறுகளால் கெட்டுப் போகுமா, கெடாமல் முடிந்தாலும் அதனால் உடனே வரக்கூடிய பலன்கள் பட்டகஷ்டங்களுக்குத் தகுந்தனவாக இருக்குமா என்பனவற்றையும் ஆராய்ந்து கொண்டு செய்யவேண்டும்.

வி - ம்: 'முற்றியாங்கு' என்பது 'முடிந்த உடன்' என்ற பொருள் தருவதால் காரியம் முடிந்தாலும் உடனே வரக் கூடிய பயன் நல்லதா தீயதா, பெரிதா சிறிதா என்பனவற்றை ஆராயவேண்டும் என்பது.

இந்த ஆலோசனைகளையெல்லாம் செய்துவிட்டுக் காரியத்தில் இறங்கினாலும் எந்தக் காரியத்தையும் அந்தக் காரியத்தில் பழக்கமுள்ளவனை வசப்படுத்திக் கொண்டு செய்ய வேண்டும்:

**677. செய்வினை செய்வான் செயன்முறை யவ்வினை
யுள்ளறிவா னுள்ளங் கொளல்.**

ப. ரை: செய்வினை செய்வான் செயல்முறை அவ்வினை உள் அறிவான் உள்ளம் கொளல் = காரியத்தைச் செய்கிறவன் செய்ய வேண்டிய முறை (என்னவென்றால்) அந்தக் காரியத்தின் உளவுகளை அறிந்தவனுடைய கருத்தை வசமாக்கிக் கொள்ள வேண்டியதே.

பொ. ரை: ஒரு காரியத்தைச் செய்ய மேற்கொண்டவன் செய்ய வேண்டிய (முதற்காரியம்) என்னவென்றால், அந்தக் காரியத்தில் (பழக்கமுள்ளவனாக) அதன் அந்தரங்கங்களை அறிந்த ஒருவனுடைய நட்பை அடைந்து (அவனுடைய ஒத்தாசையுடன்) காரியம் செய்வது.

வி - ம்: 'அவ்வினை உள்ளறிவான் உள்ளங்கொளல்' என்றது, எல்லாரும் எல்லாக் காரியத்தையும் செய்துவிட முடியாது. ஒவ்வொரு காரியத்துக்கும் அதன் உளவறிந்த அனுபவசாலிகள் உண்டு. அப்படிப்பட்டவர்களுடைய அனுபவ அறிவைச் சொந்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்பது கருத்து.

ஒரு காரியத்தின் உளவுகளை அறிந்தவனைக் கொண்டு அந்த காரியத்தை முடித்துக் கொள்வது எப்படிப் போல் என்றால்:

**678. வினையான் வினையாக்கிக் கோட னனைகவுள்
யானையால் யானையாத் தற்று.**

ப. ரை: வினையான் வினை ஆக்கிக் கோடல் நனை கவுள் யானையால் யானையாத்த அற்று = (ஒரு காரியத்தை முடிக்க அதன் உளவுகளை அறிந்த) காரியக்காரனுடைய அனுபவத்தை நம்முடையதாக்கிக்கொள்வது, மதத்தால் நனைந்த கபோலத்தையுடைய (பழகின) யானையைக் கொண்டு புது யானையைக் கட்டிப் பிடித்துக் கொள்வதைப் போன்றது.

பொ. ரை: காரியத்தின் அந்தரங்கங்களை அறிந்த அநுபவக் காரனுடைய காரிய அறிவை நமதாக்கிக் கொள்வது பழகின யானையைக் கொண்டு பழகாத காட்டானையைக் கட்டி விடுவது போன்றது.

வி-ம்: 'நனைகவுள் யானை' என்பது 'பழகின யானை'. எப்படியென்றால் யானைக்குள்ள கன்ன மதம் கபோலமதம் பீஜமதம் என்ற மும்மதங்களில் கபோல மதம் என்பது இயற்கையாகக் காட்டிலுள்ள யானைக்கு இருக்காது. காட்டை விட்டு நாட்டில் மனிதரிடத்தில் அடங்கியிருக்கிற யானைக்குத்தான்—அதனுடைய மதம் இயற்கையான வழிகளில் வெளியாக முடியாததால்—கபோல மதம் அதிகமாக வெளியாகும் என்பது விலங்கின சாத்திரம். ஆதலால் 'நனைகவுள்' என்ற உடனேயே மனிதரிடத்தில் 'பழகின யானை' என்று பொருளாகும்.

பகைவர்கள் இருந்தால் அந்தப் பகைமையை ஒழிப்பதற்கும் சிறந்த வினை செயல் வகை எதுவென்றால்:

679. நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே
ஒட்டாரை யொட்டிக் கொளல்.

ப. ரை: நட்டார்க்கு நல்ல செயலின் ஒட்டாரை ஒட்டிக் கொளல் விரைந்ததே = (பகைவரை வெல்ல) நண்பர்களுக்கு நல்ல உதவிகளைச் செய்வதைக் காட்டிலும் பகைவர்களை நண்பர்கள் ஆக்கிக் கொள்வது சிறந்தது.

பொ. ரை: பகைவர்களை வெல்லுவதற்கு நண்பர்களுக்கு [illegible] களுடைய உதவியை நாடி அவர்கள்) [illegible] செய்து கொள்வதைக் காட்டிலும் பகைவர்களை நண்பர்களாக்கிக் கொள்ளுவது சிறந்தது.

வி-ம்: 'ஒட்டாரை ஒட்டிக் கொளல்' என்பதற்குத் [illegible] வரோடு ஒட்டாரை' என்று பொருள் செய்வது [illegible] பெருமையைப் படுத்தாது. மேலும் அப்படி [illegible] செய்யப் படுவதற்கு இடமில்லை; பயனும் இல்லை. [illegible] வெல்லுவதற்காகப் பல பேரை நட்பு சேர்த்து [illegible] களுடைய தயவுக்காக அவர்கள் முதல் [illegible] அவர்களுக்கு விருப்பமான நன்மைகளைச் [illegible] செய்வதைக் காட்டிலும் பகைவர்களிடம் [illegible] கொள்வது வெகு விரைவில் பயனளிக்கத் [illegible] இக்குறளின் கருத்து.

பகைவன் தனக்குத் தீங்கு செய்ய [illegible] பெரும்பகை [illegible] குறைந்த படைஞர்களை [illegible]

நாசம்டையாமல் சமயோசிதம் கருதி பணிந்து விடுவதே நல்ல வினை செயல்வகை :

680. உறைசிறியா ருண்ணடுங்க லஞ்சி குறைபெறிற்
கொள்வர் பெரியார்ப் பணிந்து.

ப. ரை : உறை சிறியார், உள் நடுங்கல் அஞ்சி பெரியார்ப் பணிந்து குறை பெறின் கொள்வர் = குறைந்த வலிமையுள்ளவர்கள் தம்மைச் சேர்ந்தவர்கள் நடுங்குவதற்காக அஞ்சி, தம்மினும் பெரிய வலிமையுள்ளவர்களிடம் பணிந்து அதனால் பிறர் குற்றம் சொன்னாலும் ஏற்றுக் கொள்வார்கள்.

பொ. ரை : இடம் பொருள் ஏவல்களில் குறைந்தவர்கள், தம்மைச் சேர்ந்தவர்கள் நடுங்குவதற்காகப் பயந்து தம்மினும் இடம் பொருள் ஏவல் முதலியவற்றில் பெரியவர்களாக இருப்பவர்களுக்குப் பணிந்து (சமாதானம் செய்து கொண்டு) அதற்காகப் பிறர் குறை சொன்னாலும் ஏற்றுக் கொள்வார்கள்.

வி - ம் : 'உறை' என்பது 'பெருமை'. இங்கே இடம் பொருள் ஏவல்கள் உடைய 'பலம்' என்பதைக் குறிப்பது. 'பெரியார்' என்பது தம்மினும் பலத்தில் பெரியவர்கள். தம்மைச் சேர்ந்தவர்களுக்கு அழிவுண்டாக்கக் கூடாதென்பதற்காகப் பணிந்து சமாதானம் செய்து கொள்வது குற்றமாகாது. அதுதான் சமயோசிதமாக முன் சொன்னபடி 'பொருள், கருவி, காலம், வினை, இடனொடு ஐந்தும் இருள்தீர எண்ணிச் செயல்' ஆகும்—வினை செயல் வகை—என்பது கருத்து.

அதி. 69—தூது

['தூது' என்பது, ஒரு நாட்டின் அரசன் இன்னொரு நாட்டின் அரசனுக்குத் தம்முடைய இரண்டு நாடுகளுக்குமுள்ள உறவுகளைக் கருதி செய்தியனுப்புகின்ற 'மந்திரி'. இது அரசாட்சிக்கு இன்றியமையாத அங்கம்.]

681. அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம்
பண்புடைமை தாதுரைப்பான் பண்பு.

ப ரை : அன்பு உடைமை, ஆன்ற குடிப்பிறத்தல், வேந்து அவாம் பண்பு உடைமை, தூது உரைப்பான் பண்பு = தன் அரசனிடத்தில் அன்புள்ளவனாகவும் நல்ல குடும்பத்தில் பிறந்தவனாகவும் அரசர்கள் விரும்பத் தகுந்த பழக்க வழக்கங்கள்

உள்ளவனுகவும் இருக்க வேண்டியது தூது சென்று பேசக் கூடியவனுடைய தகுதி.

பொ. ரை : தன்னைத் தூதாக அனுப்புகிறவனுக்கு அன்புள்ள வனுகவும் குற்றமற்ற குடும்பத்தைச் சேர்ந்தவனுகவும் அர சர்கள் விரும்பத் தகுந்த பழக்க வழக்கங்கள் உள்ளவனுக வும் இருக்க வேண்டியது தூது சென்று வேற்றரசரிடம் பேச வேண்டியவனுடைய தகுதி.

வி - ம் : 'ஆன்ற குடிப் பிறத்தல்' என்பது 'பெருமையுள்ள பரம்பரையைச் சேர்ந்தவனுக இருப்பது, 'பிறத்தல்' என் பது 'பிறப்பு'. 'வேந்து' என்பது 'பிற வேந்தர்கள்' என்ற தொகைப் பெயர், 'அவாம்' என்பது 'அவாவும்' என் பதின் குறைவு. தன் அரசனிடத்தில் அன்புள்ளவனுகவும் நம் பத் தகுந்த இனத்தைச் சேர்ந்தவனுகவும் அரசர்களிடத்திலும் அரசவையிலும் நடந்து கொள்ள வேண்டிய முறைமை தெரிந் தவனுகவும் உள்ளவனே தூது செல்லத் தகுந்தவன் என்பது கருத்து.

முக்கியமாகத் தூதனுக்கு இருக்கவேண்டிய சிறப்புகள் எவையென்றால் :

682. அன்பறி வாராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க்
கின்றி யமையாத மூன்று.

ப. ரை : தூது உரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று அன்பு, அறிவு, ஆராய்ந்த சொல்வன்மை=தூது சொல்லக் கூடிய வர்களுக்கு இருக்க வேண்டிய இன்றியமையாத மூன்று தகுதி கள் (என்னவெனில் தூது சொல்லப் போகிற காரியத்தில்) ஆர்வம் (அந்த காரியத்தைப் பற்றிய) அறிவு (அதைச் சொல்லும்போது) நன்ருக ஆலோசித்துப் பேசக்கூடிய நாவன்மை ஆகியவைகளே.

பொ. ரை : தூது சென்று பேசுகின்றவர்களுக்கு அமையவேண் டிய அத்தியாவசியமான தகுதிகள் என்னவெனில் (தாம் தூது சொல்லப் போகிற காரியத்தில்) ஆர்வம், (பேசப் போகிற விஷயத்தைப் பற்றிய) அறிவு, (பேசும் போது) நன்ருக ஆலோசித்துப் பொறுக்கி யெடுத்த சொற்களைப் பேசும் நாநலம் ஆகிய மூன்றுமே.

வி - ம் : இங்கே 'அன்பு' என்பது முன் குறளில் சொல்லப் பட்ட 'அன்புடைமை' அல்ல. இங்கே 'அன்பு' என்பதற்கு குறிப்பிட்ட காரியத்தில் 'ஆர்வம்' என்பது பொருள். 'அறிவு' என்பதற்கும் குறிப்பிட்ட தூது காரியத்தைப்பற்றிய அறிவு. தூது போகின்ற காரியத்தில் ஆர்வமும் அதைப் பற்றிய

பூரண அறிவும் சொல்வன்மையும் ஆகிய மூன்றும் வேண்டும் என்பது கருத்து.

இன்றியமையாத இந்த மூன்று தகுதிகளுடன் நல்ல அரசியல் நீதிநூல்களில் வல்லவனாகவும் இருப்பது தூதுப் பேச்சில் வெற்றி தரும்:

683. நூலாரு ணூல்வல்ல னாகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு.

ப. ரை: வேலாருள் வென்றி வினை உரைப்பான் பண்பு நூலாருள் நூல் வல்லன் ஆகுதல் = வேலேந்திய அரசர்களிடம் சென்று வெற்றிகரமாகத் தூது வந்த காரியத்தைப் பேசக் கூடியவனுக்குத் தகுதி, நீதிநூல்களை விவாதிக்கிறவர்களுக்கிடையில் நீதிநூல்களிலும் வல்லவனாகப் பேசுவது.

பொ. ரை: வேற்றரசர்களிடம் தூது சென்று, வந்த காரியத்தை வெற்றிகரமாகப் பேசக்கூடியவனுக்கு இருக்க வேண்டிய திறமை, நீதிநூல்களைப்பற்றி (அவ் வேற்றரசனுடைய மந்திரிகளுடன்) விவாதிக்கும்போது (எதிர் வாதம் செய்ய) நீதி நூல்களிலும் நிபுணனாகப் பேசத் தெரிந்திருப்பது.

வி - ம்: 'வேலாருள்' என்பதற்கு 'அரசர்களிடத்தில்' என்பது மட்டும் தான் பொருள். 'வேல்' என்பது வெறும் அடைமொழிதான். 'வென்றி வினையுரைப்பான்' என்பது 'தான் வந்த நோக்கத்திற்கு வெற்றி கிடைக்கும்படி காரியத்தைப் பேசுகின்றவன்' என்பது பொருள். 'நூல் வல்லனாகுதல்' என்பது 'நூல் வல்லமையுடன் பேசுதல்' என்பது. முன் சொன்ன மற்றத் தகுதிகளோடு நீதி அறிவும் சட்ட ஞானமும் நிறைந்திருப்பது தூதனுக்குச் சிறப்பு என்பது கருத்து.

இதுவரையிலும் சொல்லப்பட்ட தகுதிகள் எல்லாம் சேர்ந்தவனாக இருப்பதை அறிய முடியாவிடினும் குறைந்த பட்சமாக:

684. அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன்
செறிவுடையான் செல்க வினைக்கு.

ப. ரை: அறிவு, உருவு, ஆராய்ந்த கல்வி, இம் மூன்றன் செறிவு உடையான் வினைக்கு செல்க = (தூது போகும் காரியத்துக்கு வேண்டிய) அறிவு, மதிப்பிற்குரிய தோற்றமுள்ள உருவம், ஆராய்ந்து கற்ற கல்வி, இந்த மூன்றும் அதிகமாக உள்ளவன் தூது போகட்டும்.

பொ. ரை: தூது போகும் காரியத்துக்கு வேண்டிய சமயோசித அறிவு, யாரும் மதிக்கத் தகுந்த கம்பீரமான உருவம், ஆராய்ச்சியுள்ள படிப்பு இந்த மூன்றும் யாரிடத்தில் அதிகமாக இருக்கிறதோ அவன் தூது காரியத்திற்குப் போகட்டும்.

வி-ம்: 'செறிவுடையான்' என்பதற்கு 'அதிகமாக உள்ளவன்' என்பது பொருள். 'செறிவு' என்பதற்கு 'சேர்ந்திருத்தல்' என்றும் 'மிகுதியாக இருத்தல்' என்றும் பொருள். இங்கே 'மிகுதியாக இருத்தல்' என்பதுதான் பொருத்தமானது. தூதனுக்கு இருக்க வேண்டுமென்ற விரும்பத்தகுந்த எல்லாத் தகுதிகளும் பொருந்தியவன் கிடைக்காவிட்டாலும் தன் மந்திரிகளுக்குள் சமயோசித அறிவு, வசிகரமான உருவம், ஆழ்ந்தறிந்த கல்வி இந்த மூன்றும் யாரிடத்தில் அதிகமாக இருக்கிறதோ அவனைத் தூதனாக அனுப்ப வேண்டும் என்பது கருத்து.

இதுவரை சொன்னது அரசன் யாரைத் தூதனாகத் தேர்ந்து அனுப்ப வேண்டும் என்பது. இனி, தூது போகிறவன் வேற்றரசர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பது:

**685. தொகச்சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி
நன்றி பயப்பதாம் தூது.**

ப. ரை: தொக சொல்லி, தூவாத நீக்கி, நக சொல்லி, நன்றி பயப்பதாம் தூது = (சொல்ல வேண்டியதை) ஒழுங்கு படக் கோர்த்துச் சொல்லி, (சொல்லத் தகாத) குற்றமான பேச்சுகளை விலக்கி, (சொல்ல வேண்டியதையும்) மகிழ்ச்சி யுண்டாக்கும்படிச் சொல்லி நல்லபயன் உண்டாகச் செய்பவனே தூதன்.

பொ. ரை: வேற்றரசரிடம் சொல்லவேண்டியதை ஒழுங்காகக் கோத்துச் சொல்லி, சொல்லத்தகாத குற்றமான செய்திகளைச் சொல்லிவிடாமல், கேட்கும் வேற்றரசனுக்கு மகிழ்ச்சி உண்டாகும்படிப் பேசி, நன்மை உண்டாக்குகிறவனே தூதன்.

வி-ம்: 'நன்றி பயப்பது' என்பது தன்னுடைய அரசனுக்கு மட்டும் நன்மை உண்டாக்குவதல்ல. எல்லாருக்கும் நன்மையுண்டாக்குவது. சொல்ல வந்ததைச் சுருக்கமாகக் கோத்துச் சொல்லி, கோபமோ துன்பமோ உண்டாக்கக்கூடியவற்றைச் சொல்லிவிடாமல் இனிமையாகப் பேசி, நல்ல பலன்களை உண்டாக்குவது தூது—என்பது கருத்து.

மேலும், சொல்ல வேண்டியதை அஞ்சாமலும் ஏற்றுக் கொள்ளத்தக்க விதமாகவும் சமயத்துக்கு ஏற்றபடி சொல்ல வேண்டும்:

686. கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற்
றக்க தறிவதாந் தூது.

ப. ரை: கற்று. கண் அஞ்சான், செல சொல்லி, காலத்தால் தக்கது அறிவதாம் தூது = நிலைமையை உய்த்தறிந்து, யாரைக் கண்டும் அஞ்சாமல், விளங்கும்படிச் சொல்லி காலத்துக்கு ஏற்றபடி நடந்து கொள்ளத் தெரிந்திருப்பது தான் தூதனுடைய தகுதி.

பொ. ரை: போன இடத்திலுள்ள நிலைமையை அறிந்து, யாரிடத்தும் அஞ்சாமல், சொல்ல வேண்டியதை விளங்கச் சொல்லி; சமயோசிதமாக நடந்து கொள்ளத் தெரிந்திருப்பதுதான் தூது.

வி-ம்: 'கற்று' என்பதற்கு முன்னே சொல்லப்பட்டு விட்ட 'ஆராய்ந்த கல்வி' அல்ல. இங்கே 'கற்று' என்பதற்கு 'அங்குள்ள நிலைமையை அறிந்து' என்பது பொருள். 'கண்ணஞ்சான்' என்றால் 'யாரிடத்தும் எவ்விடத்தும் பயப்படாதவனாக' என்பது பொருள். 'காலத்தாற்றக்கது' என்பது சமய சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி'. வேற்றரசன் நிலைமைகளை உணர்ந்து, யாருக்கும் அஞ்சாமல், விளங்கச் சொல்லி சமய சந்தர்ப்பங்களுக் கேற்றபடி நடந்து கொள்ளத் தெரிவது தூதனுடைய இலக்கணம்—என்பது கருத்து.

சமயத்துக்கு ஏற்றபடி நடந்து கொள்ள வேண்டுமென்பது, தான் வந்த காரியத்தை விட்டுவிட்டு மற்றவர்கள் சொன்னதை ஒத்துக் கொள்வதல்ல. பின் என்னவெனில்:

687. கடனறிந்து காலங் கருதி யிடனறிந்
தெண்ணி யுரைப்பான் றலை.

ப. ரை: கடன் அறிந்து, காலம் கருதி, இடன் அறிந்து எண்ணி உரைப்பான் தலை = தன்னுடைய கடமைகளை உணர்ந்து காலத்தையும் கருதி, இடத்தையும் அறிந்து அவற்றிற்குத் தகுந்தபடி நிதானித்துப் பேசுகிறவனே சிறந்த தூதன்.

பொ. ரை: (தான் மேற் கொண்டு வந்திருக்கும் காரியத்தில் தனக்குள்ள) கடமைகளையும் (விட்டுவிடாமல்), காலத்தையும் இடத்தையும் அறிந்து அவற்றிற்குத் தக்கபடி சிந்தித்துப் பேசுகின்றவனே தூதன்.

வி-ம்: காலத்தையும் இடத்தையும் அனுசரித்து, தான் தூது வந்த கடமைகளை விட்டுக் கொடுக்காமல் எண்ணிப் பேசுவது தான் தூதனுக்குச் சமயோசித அறிவு—என்பது கருத்து.

கடமை கெடாமல் சமய சந்தர்ப்பங்களுக் கேற்றபடி தூது பேசுவதற்கு வேண்டிய குணங்கள் எவையென்ருல் :

**688. தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு.**

ப. ரை : தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின் வாய்மை வழி உரைப்பான் பண்பு = குற்றமற்ற எண்ணம், தனக்குத்தானே (ஆலோசனை சொல்லும்) துணைவனுதல், உடனுக்குடன் தகுந்த திர்மானம் செய்து கொள்ளும் திறமை, இந்த மூன்றும் சேர்ந்த தன்மை உடையவனுக இருப்பது தூதனுடைய சிறப்பு.

பொ. ரை : சுத்தமான எண்ணம், தனக்குத்தானே ஆலோசனை சொல்லிக் கொள்ளும் துணைவனுகும் தன்மை, அப்போதைக் கப்போது சமயோசிதமான செயல் முறையை நிச்சயித்துக் கொள்ளும் திறமை, இந்த மூன்றும் சேர்ந்து உள்ளவனே தூதனுகத் தகுதியுள்ளவன்.

வி - ம் : 'தூய்மை' என்பது தன்னுடைய கடமைக்கும் நியாயங்களுக்கும் துரோகம் எண்ணுத பரிசுத்த குணம். 'துணைமை' என்பது தனக்குத்தானே ஆலோசனை சொல்லும் துணைவனுவது. அதாவது எதிர்பாராத சிக்கல்கள் ஏற்பட்டால் அதை சமாளிக்க வேண்டிய ஆலோசனை கேட்டுக் கொள்ளத் தன்னைச் சேர்ந்தவர்கள் அங்கே இல்லாமையால் தானே ஆலோசித்துக் கொள்ளும் திறமையுள்ளவனுக இருப்பது. 'துணிவுடமை' என்பது அந்த சொந்த துணைமையைக் கொண்டு எதிர்பாராமல் ஏற்பட்ட சிக்கலுக்கு என்ன செய்வது என்பதை உடனுக்குடன் தீர்மானிப்பது. 'வழியுரைப்பான்' என்பது 'வழி சென்று சேதி சொல்லுபவன்'. அதாவது 'தூது சென்று பேசுகிறவன்.' 'வாய்மை' என்பதற்கு இங்கே 'வாய்த்தவனுக இருத்தல்' என்பது பொருள். சுத்தமான எண்ணம், சொந்த யோசனை, தானே காரியத் திர்மானம் செய்யும் திறமை இந்த மூன்றும் ஒருங்கே உள்ளவனே சரியான தூதன் – என்பது கருத்து.

அப்படி எதிர்பாராத சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுத் தன் அரசன் சொல்லியனுப்பிய ஆலோசனைகளை மாற்றித், தன் சொந்த ஆலோசனையின்படி ஒரு தீர்மானம் செய்துகொண்டு பேச நேரிடும்போது தன் கட்சிக்குக் கெடுதியாகச் சொல்லி விடாதபடி வெகு எச்சரிக்கையோடு பேச வேண்டும் :

**689. விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம்
வாய்சேரா வன்க ணவன்.**

ப. ரை: வடுமாற்றம் வாய்சேரா வன்கண் அவன் விடு மாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் = குற்றமான பேச்சை வாய் தவறியும் பேசாத உறுதியுள்ளவனே சொல்லியனுப்பிய செய்தியை வேற்றரசர்க்குச் சொல்லத் தகுதியுடையவன்.

பொ. ரை: (சந்தர்ப்பங்களை யொட்டி அரசன் சொல்லிவிட்டதற்கு மேல் தான் ஏதேனும் சொல்ல வேண்டி நேரிட்டால்) குற்றமானவற்றை வாய் தவறிக்கூட சொல்லி விடாதிருக்கும் உறுதியுடையவனே வேற்றரசரிடம் தூது போகத் தகுதியுள்ளவன்.

வி-ம்: 'விடுமாற்றம்' — 'சொல்லியனுப்பிய சேதி'. 'வடுமாற்றம்' – தான் வந்த தூது காரியத்துக்குக் குற்றம் உண்டாக்கி விடக் கூடிய பேச்சுகள். தன்னுடைய அரசன் சொல்லியனுப்பின காரியத்துக்குப் பழுது செய்துவிடக் கூடிய வார்த்தைகளைச் சொல்லிவிடாதபடி உறுதியான எச்சரிக்கை யுள்ளவனே தூதனுகத் தகுந்தவன் — என்பது கருத்து.

சுருக்கமாகச் சொன்னால்:

690. இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற்
குறுதி பயப்பதாந் தூது.

ப. ரை: இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு உறுதி பயப்பதாம் தூது = தனக்கு மரணம் வருவதானாலும் மிச்சம் விடாமல் எல்லா வழிகளிலும் முயன்று தன்னுடைய அரசனுக்கு நன்மை உண்டாக்கி வைப்பதுதான் தூது.

பொ. ரை: தனக்கு மரணம் வருவதானாலும் தன்னாலான எல்லா முயற்சிகளையும் மிச்சமில்லாமல் செய்து, தன்னுடைய அரசனுடைய நன்மையை நாடுகின்றவன்தான் சரியான தூதன்.

வி-ம்: 'எஞ்சாது' என்பதற்கு 'எந்த முயற்சியையும் மிச்சமாக விடாமல்' என்பது பொருள். ஏதாயினும் ஒரு வழியில் முயன்றால் தன் அரசனுக்கு நன்மை உண்டாகும் என்று அறிந்து, ஆனால் அந்த வழியில் தனக்கு அபாயம் வருமென்று அறிந்தாலும் அந்த வழியையும் மிச்சம் விடாமல் எல்லா வழிகளாலும் தன் அரசனுடைய நன்மையை நாடுகிறவனே நல்ல தூதன் என்பது கருத்து.

அதி. 70—மன்னரைச் சேர்ந்தொழுகல்

['மன்னரைச் சேர்ந்து ஒழுகல்' என்பது அரசர்களிடத்தில் நடந்துகொள்ள வேண்டிய முறை. இது குறிப்பாகத் தூதனுக்கும் பொதுவாக அரசரிடத்திற் காரியம் உள்ள மற்றவர்

களுக்கும் சொல்லப்படுவது. முற்காலத்திற் போல முடி மன்னர்கள் இக்காலத்தில் இல்லையென்றாலும் முடி மன்னரைப் போன்ற நிலையிலிருந்து நிர்வகிக்கும் தனி மனிதர்கள் எக்காலத்திலும் இருப்பார்கள். அவர்களைச் சேர்ந்தொழுகவும் இந்த அறிவு.]

691. அகலா தணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்.

ப. ரை: இகல் வேந்தர்ச் சேர்ந்து ஒழுகுவார் அகலாது அணுகாது தீகாய்வார் போல்க = வலிமையுள்ள (பதவி வகிக்கும்) அரசர்களிடத்தில் நெருங்கிப் பழக வேண்டியவர்கள் அதிகமாக விலகியிருக்காமலும் மிகவும் அருகிற் போய் விடாமலும் நெருப்பினருகில் குளிர்காய்கின்றவர்களைப் போல் நடந்து கொள்ள வேண்டும்.

பொ. ரை: பலம் பொருந்திய பதவியிலிருக்கும் அரசர்களிடத்தில் நெருங்கிக் காரியம் பேசவேண்டியவர்கள், அந்த அரசர்களுக்கு அதிக தூரத்தில் விலகி இல்லாமலும் மிகவும் பக்கத்தில் போய்விடாமலும், குளிர்காய்கின்றவர்கள் நெருப்புக்கு அருகில் இருப்பது போல் நடந்து கொள்ள வேண்டும்.

வி-ம்: 'இகல் வேந்தர்' என்பதற்கு 'வலிமையுள்ள பதவியை வகிக்கும் அரசர்' என்று பொருள். 'இகல்' என்பதற்கு இங்கே 'வலிமை' என்ற பொருள்தான் கொள்ள வேண்டும். அதனால் வலிமையுள்ள பதவி வகிக்கும் வேந்தர். குளிர் காய்கின்றவர்கள் அதிக தூரத்தில் இருந்தால் சூடு உறைக்காது. மிகவும் நெருங்கி விட்டாலும் சுட்டுவிடும். அது போல வேந்தனுக்கு அதிக தூரத்தில் இருந்தால் அவன் சொல்லுவது கேளாது. குறிப்பறியவும் முடியாது. மிகவும் நெருங்கினாலும் மரியாதைக் குறைவென்று கோபித்துக் கொள்வான். அதனால் அகலாமலும் அணுகாமலும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

அத்துடன் அரசன் பிரியப்படுகிறதிலெல்லாம் தூதனோ மற்றவர்களோ தாமும் பிரியம் காட்டி விடக் கூடாது:

692. மன்னர் விழைப விழையாமை மன்னரான்
மன்னிய வாக்கந் தரும்.

ப. ரை: மன்னர் விழைப விழையாமை மன்னரான் மன்னிய ஆக்கம் தரும் = அரசர் ஆசைப்படுவதில் (தாமும்) ஆசைப் படாமலிருப்பது அரசனால் பாராட்டப் படுகிற பெருமையைத் தரும்.

பொ. ரை : (அரசர்களோடு இருக்கும் பொழுது) அரசர் ஆசைப்படுகிற விஷயங்களில் எல்லாம் (அவர்களோடு) தாமும் ஆசைகாட்டாமல் இருப்பது மன்னரால் பாராட்டப் பட்டுப் பல நன்மைகளை உண்டாக்கும்.

வி - ம் : அரசனுடன் பழகும்போது, அவன்விரும்பிச் செய்கிற எதையும் கூடவே நாமும் செய்துவிடக் கூடாது. அதாவது அரசன் அங்குள்ள ஒரு பழத்தை உண்டால், ஒரு மலரை எடுத்து முகர்ந்தால், தன் மீது வாசனைத் திரவியங்களைத் தடவிக் கொண்டால், இன்னும் இவை போன்றனவற்றைச் செய்தால் அவனுடன் தாமும் அவற்றைச் செய்ய ஆசைப் படக் கூடாது என்பது கருத்து. 'மன்னிய' என்பதற்கு 'சிறப்பித்த' அல்லது 'பாராட்டப்பட்ட' என்பது பொருள். 'மன்னரால் மன்னிய ஆக்கம்' என்பது 'அரசரால் பாராட் டப்படுவதனால் வரக்கூடிய நன்மைகள்'.

மன்னர்களோடு பழகும்பொழுது அடக்குவதற்குக் கடின மான காரியங்களையும் அடக்கிக் கொண்டு அருவருப்புக்கு இடங்கொடுக்காமல் நடந்து கொள்ள வேண்டும் :

693. போற்றி னரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கு மரிது.

ப. ரை : போற்றின் அரியவை போற்றல்; கடுத்தபின் தேற்று தல் யார்க்கும் அரிது = அடக்குவதற்கு அரிதாகிய ஆசைகளை யும் அடக்கிக் காத்துக் கொள்ள வேண்டும்; (அரசன்) ஐயப் பட்டுவிட்டால் அதை மாற்றுவதற்கு யாராலும் முடியாது.

பொ. ரை : அடக்கிக் கொள்வதற்குக் கடினமான பழக்கங்களை யும் அடக்கி எச்சரிக்கையாக நடந்து கொள்ள வேண்டும்; அல்லாமல் (மன்னர்) சந்தேகப்படும்படி நடந்து கொண் டால் (அதனால் அரசனுக்குண்டாகும் கோபத்தை) மாற்று வது யாராலும் முடியாது.

வி - ம் : 'போற்றின் அரியவை' என்பது 'பெரிய பிழைகள்' அல்ல. அடக்குவது கடினமான சிறு சிறு கெட்ட பழக்கங் கள். அதாவது பல மனிதர்களுக்குச் சிற்சில துர்ப் பழக்கங் களும் அங்க சேஷ்டைகளும் இருப்பதுண்டு. துர்ப்பழக்கத் துக்கு உதாரணமாகப் மூக்குப்பொடி போடுகிற பழக் கத்தை வைத்துக் கொள்வோம். அந்தப் பழக்கம் இடம் காலம் அறியாமல் அடக்கமுடியாதபடி பொடி போடத் தூண் டும். அதை அரசனுக்கு முன்னால் அடக்கிக் கொள்ள வேண் டும். அங்க சேஷ்டைகளாவன கண்ணடித்தல், கைகொட் டல், சிரித்தல் முதலியன. இவற்றை அடக்கிக் கொள்வது

கடினமாகத்தானிருக்கும். ஆனாலும் அரசனுக்கு முன் அடக்கிக் கொள்ள வேண்டும். இல்லையானால் சந்தேகத்துக்கும், கோபத்துக்கும் இடமுண்டாகிவிடும். பிறகு மாற்றுவது கடினம் — என்பது கருத்து. 'போற்றுதல்' என்பதற்கு 'அடக்கிக் கொள்ளுதல்' என்பது பொருள். 'கடுத்தல்' — 'சந்தேகித்தல்' அல்லது 'கோபித்தல்'.

இப்படிப்பட்ட கெட்ட பழக்கங்களில் மிகவும் முக்கியமாக அடக்கிக் கொள்ள வேண்டியவை எவையென்றால் :

**694. செவிச் சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக
லான்ற பெரியா ரகத்து.**

ப. ரை : ஆன்ற பெரியார் அகத்து செவிச் சொல்லும் சேர்ந்த நகையும் அவித்து ஒழுகல்=மிகவும் பெரிய (பதவி வகிக்கும்) அரசர்கள் இருக்குமிடத்தில் காதோடு பேசுவதையும் அதைச் சேர்ந்து சிரிப்பதையும் அடியோடு விலக்கி நடந்து கொள்ள வேண்டும்.

பொ. ரை : மிகப் பெரிய பதவியிலுள்ளவர்களான அரசர்களுக்கு அருகில் யாரோடும் இரகசியம் பேசுவதையும் அதையொட்டிச் சிரிப்பதையும் அடியோடு விலக்கி நடந்து கொள்ள வேண்டும்.

வி - ம் : 'சேர்ந்த நகை' என்பது செவிச் சொல்லோடு சேர்ந்த சிரிப்பு. அரசர்கள் இருக்குமிடத்தில் வேறு யாரோடும் இரகசியம் பேசிச் சிரிப்பது, முன் குறளில் சொல்லப்பட்டபடி அரசருடைய சந்தேகத்துக்கும் கோபத்துக்கும் காரணமாகும். 'கடுத்தபின் தேற்றுதல் யார்க்கும் அரிது' ஆகிவிடும் — என்பது கருத்து. 'ஆன்ற பெரியார்' என்பதற்கு இங்கே அதிகாரத்தை ஒட்டி 'மிக்க பெரிய பதவி வகிக்கும் அரசன்' என்பது பொருள்.

அரசவையிலாவது அல்லது பிறர் உள்ள இடத்திலாவது அரசர்களுக்கு ஏதேனும் ஒரு விஷயத்தைச் சொல்லும்போது அவர்கள் அதைச் சரியாக அறிந்து கொள்ளாமலும் கவனக்குறைவாகவும் இருந்து விடலாம். அந்த குற்றத்தைப் பிறரறிய சுட்டிக்காட்டுவதும் மன்னரைச் சேர்ந்தொழுகும் ஒழுக்கமாகாது :

**695. எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை
விட்டக்காற் கேட்க மறை.**

ப. ரை : எப்பொருளும் ஓரார், தொடரார் மற்று அப்பொருளை விட்டக்கால் மறை கேட்க=எந்த ஒரு பொருளையேனும் அர

சன் அறிந்து கொள்ளாமலோ (அல்லது சொல்லுவதை கவனத்துடன் கேட்காமலோ இருந்து விட்டால் அதைப்பற்றி (சபையில் கேட்காமல் பேச்சு முடிந்து) விட்ட பிறகு மறை வாகத் தனித்துக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

பொ. ரை: ஏதேனும் ஒரு விஷயத்தைப் பற்றி அரசனிடம் சபையில் சொல்லும் போது, அதை அவன் சரியாக அறிந்து கொள்ளாமலோ அல்லது கவனமாகத் தொடர்ந்து கேட்கா மலோ போய்விட்டால் அதைப் பற்றிச் சபையில் சொல்லா மல், பேச்சு முடிந்து விட்ட பிறகு மறைவாகத் தனித்துக் கேட்க வேண்டும்.

வி-ம்: 'எப்பொருளும்' என்பதற்கு இங்கே 'ஏதேனும் ஒரு பொருளை' என்று கொள்ள வேண்டும். 'ஓரார்' — 'அறி யார்'. 'தொடரார்' – 'தொடர்ந்து கவனமாகக் கேளார்'. 'மறை கேட்க' – 'மறைவாகக் கேட்க வேண்டும்'. சொல்லு வதை மன்னன் புரிந்து கொள்ளாவிட்டாலும் கவனமாகக் கேட்கத் தவறினாலும் அதைப்பற்றி சபையில் குற்றஞ் சாட் டாமல் பின்பு தனியாகக் கேட்டுக் கொள்ள வேண்டும் என் பது கருத்து.

அப்படித் தனியாக அரசனிடம் பேசும் பொழுது:

696. குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில
வேண்டுப வேட்பச் சொலல்.

ப. ரை: குறிப்பறிந்து. வெறுப்பில காலம் கருதி. வேண்டுப வேட்ப சொலல் = குறிப்பினால் உணர்ந்து (அரசனுக்குக் கோபமில்லாத சமயம் பார்த்து (அரசனை அணுகி) அவன் கேட்டபின் (சொல்ல வேண்டியதை) அவனுக்கு மகிழ்ச்சி உண்டாகும்படி சொல்ல வேண்டும்.

பொ. ரை: குறிப்பினால் உணர்ந்து. அரசன் கோபமாக இல் லாத சமயம் பார்த்து. அவனிடம் அணுகி, அவன் கேட்ட பின்பு சொல்ல வேண்டியதை அவனுக்கு மகிழ்ச்சி உண் டாகும்படி விநயமாகச் சொல்ல வேண்டும்.

வி-ம்: 'வெறுப்பில' என்பது செய்யுள் இலக்கணத்துக்காக எதுகை நோக்கி முதலடியின் கடைசியில் இருக்கிறது. அதை 'காலம் கருதி' என்பதன் முன்னால் வைத்துப் பொருள் கொள்ள வேண்டும். அரசனிடத்தில் பேச விரும்பினால் அவ னுக்குக் கோபமில்லாத சமயமா என்பதைக் குறிப்பினால் அறிந்து கொண்டு. அவனிடம் சென்று. போன உடனே பேச ஆரம்பித்து விடாமல். அவன் விசாரிக்கிற வரையிலும்

பொருந்து. அதன் பிறகு சொல்ல வேண்டியதை அவனுக்கு மகிழ்ச்சியுண்டாக்கும்படி விநயமான முறையில் சொல்ல வேண்டும்—என்பது கருத்து.

அப்படி அரசன் கேட்ட பிறகு பேசும் பொழுதும் அரசன் கேட்கிறதையெல்லாம் சொல்லிவிடக் கூடாது. காரியத்துக்கு வேண்டிய அளவோடு, விரும்பத் தக்கவைகளை மட்டுந்தான் சொல்ல வேண்டும் :

697. வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங்
கேட்பினுஞ் சொல்லா விடல்.

ப. ரை: வேட்பன சொல்லி வினையில எஞ்ஞான்றும் கேட்பினும் சொல்லா விடல் = (காரியத்துக்குப் பொருத்தமாக) விரும்பத் தக்கவைகளைச் சொல்லி காரியம் அல்லாத எதையும் (அரசன்) கேட்டாலும் சொல்லாமல் விட்டுவிட வேண்டும்.

பொ. ரை: (பேசுகின்ற காரியத்துக்கு சம்பந்தப்பட்ட) விரும்பத் தக்கவைகளை மட்டும் சொல்லி, காரியம் அல்லாத எதையும் அரசன் கேட்டாலும் சொல்லி விடாமல் பேச வேண்டும்.

வி-ம்: 'வேட்பன'—காரியத்துக்கு உதவக் கூடியவையாக விரும்பத்தக்கவை. 'வினையில' காரியத்தைக் கெடுத்து விடக் கூடிய, சம்பந்த மற்றவை. 'எஞ்ஞான்றும்' என்பதற்கு இங்கே 'எப்படிப்பட்டதானாலும்' என்று பொருள். காரியத்துக்கு வேண்டியதை மட்டும் சொல்லி, காரியத்துக்கு ஒத்துக்கொள்ளாத எதையும் கேட்டாலும் சொல்லக் கூடாது என்பது கருத்து.

அரசர்களுடன் பழகும்போது அவர்களுடைய பதவிக்குச் செலுத்த வேண்டிய மரியாதையோடு நடந்து கொள்ள வேண்டும் :

698. இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற
வொளியோ டொழுகப் படும்.

ப. ரை: இளையர் இன முறையர் என்று இகழார் நின்ற ஒளியோடு ஒழுகப்படும் = (அரசர்) வயதில் இளையவரென்றும் உறவு முறையுள்ளவரென்றும் அசட்டை செய்து விடாமல் உள்ள பதவியை ஒட்டி நடந்து கொள்ள வேண்டும்.

பொ. ரை: அரசன் வயதில் இளையவனாக இருக்கிறான் என்றாவது, நெருங்கிய சொந்தக்காரனாக இருக்கிறான் என்றாவது அசாக்ரதையாக இருந்துவிடாமல், அவனுக்குள்ள பதவிக்குத் தகுந்த வணக்கம் காட்டி நடந்து கொள்ள வேண்டும்.

வி-ம்: 'இன முறையர்' என்பதற்கு 'உறவினர்' என்பது பொருள். நெருங்கிய சொந்தக்காரனும் அரசனோடு பழகும் போது சொந்தக்காரன் என்பதை ஒதுக்கிவிட்டு மன்னனுக்குச் செய்ய வேண்டிய மரியாதைகளோடு நடந்து கொள்ள வேண்டும் என்பது கருத்து. 'இகழ்தல்' அசட்டையாக இருந்து விடுதல். 'நின்ற ஒளியோடு'—'அப்போதுள்ள அரச பதவியோடு ஒட்ட'. 'இகழார்' என்பது 'இகழாராக' என்று 'இகழாமல்' என்ற பொருள் தருவது.

அரசன் நம்மோடு மிகவும் பிரியத்துடன் பழகினாலும் அதனால் மயங்கி அவனிடம் தவறான முறையில் நடந்து கொள்ளக் கூடாது:

**699. கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார்
துளக்கற்ற காட்சி யவர்.**

ப. ரை: துளக்கு அற்ற காட்சியவர் கொளப்பட்டேம் என்று எண்ணி கொள்ளாத செய்யார் = தடுமாற்றம் இல்லாத அறிவுடையவர்கள் (அரசனால்) நாம் (நண்பராகக்) கொள்ளப் பட்டுவிட்டோம் என்று எண்ணி, தகுதிக்கு ஒத்துக் கொள்ளாத எதையும் செய்துவிடமாட்டார்கள்.

பொ. ரை: தெளிந்த அறிவுடையவர்கள் (அரசன் தம்முடன் எவ்வளவு சரசமாகப் பழகினாலும்) நாம் அரசனுக்கு மிகவும் பிரியமுள்ளவர்கள் ஆகிவிட்டோம் என்று எண்ணிக் கொண்டு அரசனுடன் தகாத முறையில் நடந்து கொள்ளமாட்டார்கள்.

வி-ம்: 'துளக்கு'—கலக்கம். 'காட்சி'—அறிவு. அரசன் ஒருவரிடத்தில் மிகவும் சரசமாக இருந்தாலும் அதற்காக அரசனிடம் நடந்து கொள்ள வேண்டிய முறை தவறிவிடக் கூடாது என்பது கருத்து.

மிகவும் நெருங்கிய பழக்கமுள்ளவர்களானாலும் அரசனிடம் முறைதவறி நடந்தால் கெடுதி உண்டாகும்:

**700. பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங்
கெழுதகைமை கேடு தரும்.**

ப. ரை: பழையம் என கருதி பண்பு அல்ல செய்யும் கெழுதகைமை கேடு தரும் = அரசனுக்கு நாம் பழைய நண்பன் என்று எண்ணிக் கொண்டு முறையல்லாத காரியத்தைச் செய்யும் உரிமை கெடுதி உண்டாக்கும்.

பொ. ரை : அரசனுக்கு நாம் நெடுநாளைய நண்பராச்சே என்று எண்ணிக் கொண்டு முறை தவறி நடந்து கொள்ளும் உரிமை கெடுதியுண்டாக்கும்.

வி-ம் : 'கெழுதகைமை'—உரிமை பாராட்டுதல். எவ்வளவு பழகியிருந்தாலும் அரசனிடம் முறை தவறி நடந்து கொள்ள யாருக்கும் உரிமையில்லை. தவறினால் தீங்கு வரும்—என்பது கருத்து.

அதி. 71—குறிப்பறிதல்

['குறிப்பறிதல்' என்பது இன்னொருவனுடைய மனக் குறிப்பை அவன் வாயாற் சொல்லாமல் அவனுடைய முகத்தைப் பார்த்தே அறிந்து நடக்கக் கூடிய திறமை. இது பொதுவான அறிவு.]

701. கூறாமை நோக்கிக் குறிப்பறிவா னெஞ்ஞான்று
மாறாநீர் வையக் கணி.

ப. ரை : கூறாமை நோக்கி குறிப்பு அறிவான் மாறாநீர் வைய்க்கு எஞ்ஞான்றும் அணி=வாயால் சொல்ல முடியாமலிருக்கிற (ஒருவனுடைய நிலைமையைக்) கண்டு, அவனுடைய மனக் குறிப்பை அறிந்து கொள்ளக் கூடியவன் வற்றாத நீர் சூழ்ந்த உலகத்துக்கு எந்தக் காலத்திலும் ஒரு ஆபரணம்.

பொ. ரை : வாயால் சொல்ல முடியாத நிலைமையிலிருக்கிற இன்னொருவனுடைய மனக் குறிப்பை அறிந்து அதன்படி நடக்கக்கூடியவன் வற்றாத கடல் சூழ்ந்த இந்த உலகத்தில் எப்போதும் ஒரு விலையுயர்ந்த பொருளாக மதிக்கத் தகுந்தவன்.

வி-ம்: வாயாற் சொல்ல முடியாத- நிலைமையைக் கண்டு, குறிப்பறிந்து நடக்கக் கூடியவன் எப்போதும் வற்றாத கடலைப் போல எப்போதும் சிறப்பிக்கத் தக்கவன் என்பது கருத்து. 'அறிவான்' என்பதற்கு 'அறிந்து நடக்கிறவன்' என்று கொள்ள வேண்டும். 'அணி' என்பது 'சிறப்பான பொருள்'. 'வைய்க்கு' என்பது 'வையகத்துக்கு' என்பதன் குறைவு.

பார்வையினாலேயே இன்னொருவனுடைய மனதிலுள்ளதையெல்லாம் அறிந்து கொள்ளக் கூடியவர்கள் மிகவும் அபூர்வம். ஆனாலும் அப்படிப்பட்டவர்கள் உண்டு. அவர்களை :

702. ஐயப் படாஅ தகத்த துணர்வானைத்
தெய்வத்தோ டொப்பக் கொளல்.

ப. ரை: அகத்தது ஐயப்படாது உணர்வானை தெய்வத்தோடு ஒப்ப கொளல்= (இன்னொருவனுடைய) மனதில் உள்ளதையெல்லாம் சந்தேகத்துக் கிடமில்லாமல் உள்ளபடி அறியக் கூடியவனை தெய்வத்துக்கு ஒப்பாக மதிக்க வேண்டும்.

பொ. ரை: இன்னொருவன் மனதிலுள்ளதை (அவன் வாயாற் சொல்லாமல்) சந்தேகத்துக் கிடமில்லாமல் உள்ளபடி அறிந்து கொள்ளக்கூடிய ஒருவனைத் தெய்வத்துக்குச் சமானமாகத்தான் மதிக்க வேண்டும்.

வி-ம்: இன்னொருவனுடைய மனதிலுள்ளதை அவன் சொல்லாமல், அவனுடைய முகக் குறிகளாலேயே அறிந்து கொள்வது சாதாரண மனிதர்களால் முடியக் கூடியதல்ல. ஆனால் அப்படி அறிந்து கொள்ளக் கூடியவர்கள் உலகத்தில் உண்டு. அவர்கள் எப்படி அறிகிறார்கள் என்றால் அதை நாம் கண்டறிய முடியவில்லை. அதனால் அவர்கள் ஏதோ ஒரு தெய்வ சக்தியினால்தான் அறிகிறார்கள் என்பதை விட வேறு ஒன்றும் சொல்ல முடியவில்லை. தெய்வ சக்தி நம்முடைய மன, வாக்குக் காயங்களுக்கு எட்டாதது. அதோடுதான் இதையும் சேர்க்க வேண்டும்.

அப்படி, இன்னொருவனுடைய அகத்திலுள்ளதை ஐயப்படாமல் அறியக் கூடிய தெய்வத்தோடு ஒப்பானவர்கள் கிடைப்பது மிகவும் கடினம். ஆனால் கண் பார்வையினாலேயே குறிப்பறிந்து நடக்கிறவர்கள் பலர் உண்டு. அப்படிப்பட்டவர்களை தமக்குத் துணைவர்களாகக் கொள்ள வேண்டும்:

**703. குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள்
யாது கொடுத்துங் கொளல்.**

ப. ரை: குறிப்பில் குறிப்பு உணர்வாரை யாது கொடுத்தும் உறுப்பினுள் கொளல் = (ஒருவனுடைய) குறிகளிலிருந்து (அவன்) கருத்தை அறியக் கூடியவர்களை, எதை வேண்டுமானாலும் கொடுத்துத் துணைவருள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

பொ. ரை: ஒருவனுடைய குறிகளிலிருந்தே அவனுடைய கருத்தை அறியக் கூடியவர்களை என்ன வேண்டுமானாலும் கொடுத்துத் துணைவர்களாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

வி-ம்: 'குறிப்பு' என்பது 'குறிகள்'. "கருத்து" என்ற இரண்டு அர்த்தங்களில் முறையே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. 'உறுப்பினுள்' என்பது 'பக்கபலமாக உதவும் அங்கத்தினராகிய சிப்பந்திகளுக்குள்' என்பது. அர

சனுக்கு மந்திரி, தூதன், பிரதானிகள் முதலானவர்கள் உறுப்புகள். மற்றவர்களுக்கு நண்பர்கள், காரியஸ்தர்கள் வேலையாட்கள் முதலானவர்கள் உறுப்புகள். 'யாது கொடுத்தும்' என்பதற்கு 'என்ன வெகுமதி கொடுத்தும்' என்றும் அல்லது 'என்ன சம்பளம் கொடுத்தும்' என்றும் கொள்ளலாம்.

எந்தக் காரியத்துக்கும் குறிப்பறியும் துணைவர்கள் பக்கத்தில் இருப்பதைப்போல் மற்றவர்கள் உதவ மாட்டார்கள் :

**704. குறித்தது கூறுமைக் கொள்வாரோ டேனை
யுறுப்போ ரனையரால் வேறு.**

ப. ரை : கூறுமை குறித்தது கொள்வாரோடு ஏனை உறுப்போர் அனையரால் வேறு = வாயால் சொல்லாமலேயே நோக்கமறிந்து நடந்து கொள்ளக் கூடியவர்களுக்கு (அப்படி அறிந்து நடக்கத் தெரியாத) மற்ற துணைவர்கள் ஒப்பு ஆவார்களா? (ஆகமாட்டார்கள்) அவர்கள் வேறுபட்டவர்கள்.

பொ. ரை : வாயால் சொல்லாமலேயே நோக்கமறிந்து நடந்து கொள்ளும் துணைவர்களுக்கு மற்ற துணைவர்களும் சமம் ஆகி விடுவார்களா? ஆகமாட்டார்கள் : அவர்கள் வேறு; இவர்கள் வேறு.

வி-ம் : 'அனையரால்' என்பது 'அனையராதல்' என்பதன் குறைவு. வாயால் சொல்லக் கூடாத சமயத்தில் நோக்கமறிந்து அதற்கிணங்க நடந்து கொள்ளக்கூடிய (நண்பரோ, மந்திரிகளோ, வேலையாட்களோ) துணைவர்களுக்கு, அப்படி நடக்கத் தெரியாதவர்கள் இணையாவார்களா? என்பது கருத்து.

ஒருவனுடைய மனதில் நினைப்பதை அவன் அதை வாயால் சொல்லாமல் இன்னொருவன் எப்படி அறியமுடியும் என்றால் :

**705. குறிப்பிற் குறிப்புணரா வாயி னுறுப்பினு
ளென்ன பயத்தவோ கண்.**

ப. ரை: குறிப்பில் குறிப்பு உணராவாயின் கண் உறுப்பினுள் என்ன பயத்தவோ ! = (இன்னொருவனை) குறிப்பாகப் பார்த்த உடன் (அவனுடைய) நோக்கத்தைக் கண்டு கொள்ள முடியாவிட்டால் உடலின் உறுப்புகளில் கண்கள் இருந்து பயன் என்னவோ !

பொ. ரை : ஒருவனைக் குறிப்பாகப் பார்ப்பதனாலேயே அவனுடைய நோக்கத்தை உணர்ந்து கொள்ள முடியாவிட்டால் உட

லின் உறுப்புகளுள் கண்கள் இருப்பதனல் பயன் என்னவோ தெரியவில்லை.

வி-ம்: 'குறிப்பு' என்பது 'குறிப்பாகப் பார்ப்பது', 'உள்ளக் குறிப்பு' என்ற இரண்டு அர்த்தங்களையும் முறையே தருவது. உற்றுப் பார்த்து உண்மைகளைக் கூர்ந்து அறிவதற்காகத்தானே கண் நமக்கு அங்கமாக இருக்கிறது. அந்த வேலையை அது செய்யாவிட்டால் கண் இருந்து பயனென்ன? — என்பது கருத்து.

இன்னெருவரைப் பார்ப்பதனலேயே அவருடைய மனநிலையைக் கண்கள் எப்படி அறிந்துவிட முடியும் என்ருல்;

706. அடுத்தது காட்டும் பளிங்குபோ னெஞ்சங்
கடுத்தது காட்டும் முகம்.

ப. ரை: அடுத்தது காட்டும் பளிங்கு போல் நெஞ்சம் கடுத்தது முகம் காட்டும்=தன்னை அடுத்த பொருள்களின் தன்மையை உள்ளபடி காட்டுகின்ற கண்ணுடி போல (ஒருவனுடைய மனதில் மிகுந்துள்ளதை (அவனுடைய) முகம் காட்டும்.

பொ. ரை: அதன் எல்லைக்குள் அடுத்த பொருள்களின் வடிவத்தை ஒரு கண்ணுடி பிரதிபிம்பமாகக் காட்டுவது போல் ஒருவனுடைய மனதில் மிகுந்துள்ள உணர்ச்சியை அவன் முகம் காட்டிவிடும்.

வி-ம்: 'நெஞ்சம் கடுத்தது' என்பது அந்த சமயத்தில் மனதில் மிகுந்து மேலெழுந்து நிற்கிற உணர்ச்சி. முகம் ஒருவனுக்கு அப்போதுள்ள உணர்ச்சியைக் கண்ணுடி போல் காட்டிவிடும் என்பது கருத்து. நாம் நேராகப் பார்க்க முடியாத பொருள்களையும் கண்ணுடி மூலமாகக் காணலாம். அது போல ஒருவனுடைய உள்ளத்தின் நிலையை நேராக அறிய முடியாவிட்டாலும் அவனுடைய முகத்தில் காணலாம்.

முகத்தைப் பார்த்து அவனுடைய உள்ளத்தில் உள்ளதையெல்லாம் அறிந்துவிட முடியுமா என்ருல், உள்ளத்திலுள்ள எண்ணங்களின் நுணுக்கங்களையெல்லாம் அறிய முடியாவிட்டாலும் அவன் உள்ளத்தில் அப்போது கடுத்துள்ளதான இன்பத்தையோ துன்பத்தையோ நிச்சயமாக அவன் முகம் காட்டிவிடும்:

707. முகத்தின் முதுக்குறைந்த துண்டோ வுவப்பினுங்
காயினுந் தான்முந் துறும்.

ப. ரை: முகத்தின் முதுக்குறைந்தது உண்டோ? உவப்பினும் காயினும் தான் முந்து உறும்=முகத்தைக் காட்டிலும் (உள்

ளத்தின் நிலையை) அறியுந்தன்மையுள்ளது வேறு (ஒரு உறுப்பு) உண்டா? (மனம்) மகிழ்ச்சியடைந்தாலும் வெறுப்படைந்தாலும் அதை முகம் தான் முதலில் அறியும்.

பொ. ரை: (மனதில் கடுத்ததை) முகத்தைக் காட்டிலும் அறியக் கூடிய உறுப்பு வேறொன்று உண்டா? (இல்லை); மனம் மகிழ்ச்சியடைந்தாலும் வெறுப்படைந்தாலும் அதை முகந் தான் முதலில் அனுபவிக்கும்.

வி-ம்: 'முதுக் குறைதல்' என்பது 'அறிதல்' மனதிலுதிக்கும் இன்பத்தையோ துன்பத்தையோ முதலில் அறிந்து அனுபவிப்பது முகம் தான். அதனால் முகம் தான் மனதின் நிலைமையை உடனே காட்டவல்லது. 'உவத்தல்'—'மகிழ்தல்'. 'உறும்' என்பது 'அடையும்' அல்லது 'அனுபவிக்கும்' என்ற பொருளுள்ளது.

ஒருவனுடைய முகத்தைப் பார்த்த உடனேயே அவன் சந்தோஷமாக இருக்கிறானா வெறுப்பாக இருக்கிறானா என்பது தெரிந்துவிடும். அதன்பின் அங்குள்ள சூழ்நிலைகளையும் சேர்த்து அவனுடைய முகத்தைக் கூர்ந்து கவனித்தால் அவன் உள்ளக் குறிப்பை அறிய முடியும்:

708. முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி
யுற்ற துணர்வார்ப் பெறின்.

ப. ரை: அகம் நோக்கி உற்றது உணர்வார் முகம் நோக்கி நிற்க பெறின் அமையும் = (ஒருவனுடைய) உள்ளத்தை உணர்ந்து அதில் உற்ற கருத்தை அறியக் கூடியவர்கள் (அவனுடைய) முகத்தை (சிறிது நேரம்) பார்த்துக் கொண்டிருக்கப் பெற்றால் (அவர்களுக்கு) அது போதும் (குறிப்பறிய).

பொ. ரை: ஒருவனுடைய மனதிலுள்ளதை உணர்ந்து அதிலுற்ற குறிப்பை அறியக் கூடியவர்களுக்கு அவனுடைய முகத்தைச் சிறிது நேரம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருக்கக் கிடைத்தால் அது போதும் (குறிப்பறிவதற்கு).

வி-ம்: 'உற்றது' என்பதற்கு 'உற்ற குறை' என்பது பொருளல்ல. மனதில் 'உற்றதை' என்பது பொருள். 'பெறின்' என்பதை 'முக நோக்கி நிற்கப் பெறின்' என்று கூட்ட வேண்டும். 'முகம் நோக்கி நிற்க' என்றால் 'முகத்தைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டேயிருக்க' என்பது பொருள். 'நிற்க' என்பது சாவதானத்தைக் குறிப்பது. 'அமையும்' என்பது 'போதும்' என்ற பொருள் தருவது. பார்வையைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளக் கூடிய

வர்கள் (வாயாற் சொல்லாமல்) தம்மை ஒரு காரியம் செய்ய எதிர் பார்க்கிற ஒருவனுடைய முகத்தைச் சிறிது நேரம் கூர்ந்து பார்த்துக் கொண்டிருப்பார்களானால் அவனுடைய பார்வையிலிருந்தும் முகக் குறிகளிலிருந்தும் அவனுடைய குறிப்பை அறிந்து கொள்வார்கள் என்பது கருத்து.

கண்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தெரிந்தவர்கள், தம்முடைய பார்வையினாலேயே ஒருவனை அறிந்துவிடுவார்கள் :

709. பகைமையுங் கேண்மையுங் கண்ணுரைக்குங் கண்ணின்
வகைமை யுணர்வார்ப் பெறின்.

ப. ரை : கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின் பகைமையும் கேண்மையும் கண் உரைக்கும் = கண்ணினுடைய தத்துவத்தையும் பயனையும் அறிந்தவர்கள் உண்டானால் அவர்களுக்குப் பகைவன் யார் நண்பன் யார் என்பதை அவர்களுடைய கண்ணே சொல்லி விடும்.

பொ. ரை : கண்ணின் இயல்பையும் அவற்றை உபயோகப் படுத்திக் கொள்ளும் வகைகளையும் அறிந்தவர்கள் இருந்தால் பகைவனையும் நண்பனையும் அவர்களுடைய கண்ணே அவர்களுக்குச் சொல்லிவிடும்.

வி - ம் : 'கண்ணின் வகைமை உணர்வார்ப் பெறின்' என்பதனால் கண்ணின் வகைமையை உணர்ந்து அதைப் பயன்படுத்திக் கொள்ளுகிறவர்கள் மிகவும் அபூர்வம் என்பது கருத்து. 'கண்ணின் வகைமை' என்பது கண்ணைப் பற்றிய உண்மைகள் எல்லாம் சேர்ந்தது. 'கண்ணுரைக்கும்' என்பது பிறருடைய கண் அல்ல. கண்ணின் வகை தெரிந்து அதை உபயோகிக்கிறவனுடைய கண். இது எல்லாருக்கும் பொதுவான அறிவு. ஆகையால் அரசரையும் அமைச்சரையும் புகுத்திப் பொருள் செய்யக் கூடாது.

ஆகையினால் கூரிய அறிவிருந்தால் கண்ணைக் கொண்டே பல விஷயங்களையும் அறிந்து கொள்ளலாம் :

710. நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்காற்
கண்ணல்ல தில்லை பிற.

ப. ரை : காணும்கால் நுண்ணியம் என்பார் அளக்கும் கோல் கண் அல்லது பிற இல்லை = எண்ணிப் பார்த்தால் கூரிய அறிவுடையவர்கள் என்பவர்கள் (எதையும்) அளந்தறிய உபயோகப்படுத்த வேண்டிய கருவி (அவர்களுடைய) கண்ணைத் தவிர வேறில்லை.

பொ. ரை : ஆராய்ந்து பார்த்தால் கூர்மையான அறிவுடையவர்கள் என்பவர்கள், எதையும் அளந்தறிய (உபயோகப் படுத்த வேண்டிய) கருவி அவர்களுடைய கண்களேயல்லாமல் வேறில்லை.

வி - ம் : 'அளக்கும் கோல்' – நீட்டத்தை அளக்கும் கோல். இங்கே 'கருவி' என்ற பொருள் தருவது. கூர்ந்த அறிவுடையவர் தம்முடைய கண் பார்வையினாலேயே எதையும் அறிந்துவிடலாம், இந்த அதிகாரம் பிறருடைய 'குறிப்பறிதல்' என்பதனால் 'பிறரை அளந்தறியும் கருவி' என்று கொள்ளத் தகும்.

அதி. 72—அவையறிதல்

['அவையறிதல்' என்பது ஒரு சபையில் பேசுகின்றவன் அந்த 'சபையின் தரத்தை அறிந்து, அதற்குத் தக்கபடிப் பேச வேண்டும்' என்பது. இது பிரசங்கம் செய்கிற எல்லாருக்கும் பொது.]

711. அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்.

ப. ரை : சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர் அவை அறிந்து ஆராய்ந்து சொல்லுக = சொற்களைத் தொகுத்துப் பேசுவதையறிந்து குற்றமில்லாமற் பேச (விரும்புகிறவர்கள்) சபையை அறிந்து ஆலோசனையோடு பேச வேண்டும்.

பொ. ரை : சொற்களை அடுக்கிப் பிரசங்கம் செய்யத் தெரிந்தவர்கள் தாம் பேசுவது குற்றமில்லாமல் இருக்க விரும்பினால் சபையை அறிந்து கொண்டு (அதற்கேற்ற) ஆலோசனையோடு பேச வேண்டும்.

வி - ம் : 'அவையறிந்து' என்பது சபையில் கூடியிருக்கிறவர்கள் தம்மைக் காட்டிலும் அறிவிலும் அனுபவத்திலும் மிகுந்தவர்களா, சமானமானவர்களா, குறைந்தவர்களா என்பதை அறிந்து பேசுவது. 'தூய்மையவர்' என்பதற்கு 'தூய்மை உள்ளவர்கள்' என்று கொள்ளக் கூடாது. ஏன் எனில் 'தூய்மை உள்ளவர்களுக்கு' இதைச் சொல்லவே வேண்டியதில்லை. ஆதலால் 'தூய்மையவர்' என்பதற்கு 'தூய்மையை விரும்புகிறவர்கள்' என்று கொள்ள வேண்டும். 'தூய்மை' என்பதற்கு 'குற்றமற்றது' என்று பொருள். சபையை அறியாமல் பேசுவது குற்றம் என்பது கருத்து.

அப்படிக் குற்றமற்றதாக இருக்கும்படி பேச வேண்டும் என்பதோடு பேசுவதை சபையோர் ரசித்துக் கேட்கிறார்

களா, பேசுவது பயன்படக் கூடியதா என்பதையும் கவனித்துப் பேச வேண்டும் :

712. இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி
னடைதெரிந்த நன்மை யவர்.

ப. ரை : சொல்லின் நடை தெரிந்த நன்மையவர் இடை தெரிந்து நன்கு உணர்ந்து சொல்லுக = சொற்பொழிவை நடத்தத் தெரிந்து அதனுல் நன்மையுண்டாக விரும்புகிறவர்கள் (பிரசங்கத்தின்) இடையிடையே (சபையோரின் ஆர்வத்தைத்) தெரிந்து கொண்டு அதற்கிணங்க நன்ருக உணர்ந்து பேச வேண்டும்.

பொ. ரை : பிரசங்கத்தைக் கொண்டுசெலுத்தத் தெரிந்தவர்கள் தம்முடைய பேச்சினுல் நல்ல பலன் உண்டாக வேண்டுமென்று விரும்பினுல் பேச்சின் இடையிடையே சபையோரின் உத்ஸாகத்தை அறிந்து கொண்டு அதற்குத் தக்கபடி நன்ருக உணர்ந்து பேச வேண்டும்.

வி - ம் : 'நடை தெரிதல்' என்பது நடத்தி முடிக்கத் தெரிதல். 'இடை தெரிந்து' என்பது பிரசங்கத்தின் இடையிடையே சபையை தெரிந்து என்பதாம். சபையோர் ஆர்வத்தோடு கேட்டால் தான் பிரசங்கத்தால் நல்ல பலனுண்டு. சபையோர் இன்பத்தோடு கேட்காமல் ஒருவரோடொருவர் பேசிக் கொண்டும் கேளாது எழுந்து போய்க் கொண்டும் இருப்பதை உணராமல் பிரசங்கம் செய்து கொண்டே இருந்தால் என்ன பயன்? ஆகையினுல் அப்படிப் பேசுவதும் குற்றமாகும் என்பது கருத்து.

ஆகையினுல் :

713. அவையறியார் சொல்லன்மேற் கொள்பவர் சொல்லின்
வகையறியார் வல்லதூஉ மில்.

ப. ரை : அவை அறியார் சொல்லல் மேற்கொள்பவர் சொல்லின் வகை அறியார்; வல்லதூஉம் இல் = சபையை அறிந்து கொள்ளாமல் சொற்பொழிவைச் செய்கிறவர்கள் பேசும் விதத்தை அறிந்தவர்களும் அல்ல; (அப்படிப் பேசுவது) ஒரு திறமையும் அல்ல.

பொ. ரை : சபையை அறிந்து கொள்ளாமல் பிரசங்கம் செய்கிறவர்கள் பேசத் தெரிந்தவர்களும் அல்ல; அது ஒரு சாமர்த்தியமும் அல்ல.

வி - ம் : 'அவையறியார்' என்பதற்கு முன் இரண்டு குறள்களிலும் சொல்லப்பட்டபடி சபையின் தரத்தையும் இடை

யிடையே சபையோர் தாம் சொல்வதை ரசிக்கிருர்களா என்பதையும் அறியாமல்—என்று பொருள். 'அறியார்' என்பது 'அறியாராகி' என்று விரிவது. 'வல்லதூஉம் இல்' என்பதற்கு – 'எவ்வளவு நல்ல பேச்சாளனுக இருந்தாலும் சபையறியாமல் பேசிக் கொண்டே போவது ஒரு சாமர்த்தியமும் அல்ல' என்பது கருத்து.

அவையறிந்து பேசுவது என்பது என்னவென்ருல் :

714. ஒளியார்முன் ஞெள்ளிய ராதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணங் கொளல்.

ப. ரை : ஒளியார் முன் ஒள்ளியர் ஆதல்; வெளியார்முன் வான் சுதை வண்ணம் கொளல் = அறிவாளிகளுக்கு முன்ஞல் அவர்களைவிட அறிவாளி என்னும்படி ஆகவேண்டும்; (அறிவிற் குறைந்த) வெள்ளை மனிதர்களுக்கு முன்ஞல் அவர்களைவிட மிகவும் வெண்மையான சுண்ணும்பு போன்ற வெள்ளைத் தனம் உள்ளவர்கள் ஆக வேண்டும்.

பொ. ரை : அறிவாளிகள் கூடியுள்ள சபையில் அவர்களைக் காட்டிலும் அறிவாளியென்று புகழுடையப் பேச வேண்டும்; அறிவு குறைந்த சாதாரண மக்கள் கூடியுள்ள இடத்தில் அவர்களைக் காட்டிலும் சாதாரண மனிதனுகப் பேச வேண்டும்.

வி- ம் : 'ஒளி' என்ருல் 'அறிவு'. 'ஒளியார்' என்பது 'அறிவுடையார்'. 'ஒள்ளியார்' என்ருல் 'மிக்க அறிவுடையார்'. 'வெளியார்' என்பது 'வெள்ளைத் தனம் உடையவர்கள்'. 'வான் சுதை வண்ணம்' என்பது 'அதைவிட அதிக வெள்ளைத் தனம் காட்டக் கூடிய (சுத்த வெள்ளைச் சுண்ணும்பு நிறம்). ஆகையால் அறிவாளிகள் மத்தியில் அவர்களைவிட அறிவாளி என்னும் கல்வித் திறமை காட்டியும் பாமர மக்கள் மத்தியில் அவர்களைவிடப் பாமரன் போன்ற எளிய முறையிலும் பேச வேண்டும் என்பது கருத்து.

அறிவாளிகளுக்கு முன்ஞல் பேசும் போது அவர்களைவிட அறிவாளி என்று புகழுடையும் ஆர்வத்தோடு பேசவேண்டும் என்றதனுலேயே தன்னிலும் முதிர்ந்த அறிவும் அனுபவமும் உள்ளவர்கள் கூடியுள்ள சபையில் அடக்கம் கெட்டுப் பதட்டம் காட்டிவிடக் கூடாது ;

715. நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருள்
முந்து கிளவாச் செறிவு.

ப. ரை : முதுவருள் முந்து கிளவாச் செறிவு நன்று என்றவற்றுள்ளும் நன்றே – (தன்னைவிட அறிவிலும் அனுபவத்திலும்)

முதிர்ந்தவர்கள் கூடிய சபையில் (அவர்கள் விரும்புவதற்கு) முன்னால் பேசக் கிளம்பி விடாமல் இருக்கிற அடக்கம் நல்ல குணங்கள் எல்லாவற்றிலும் நல்ல குணம்.

பொ. ரை : தன்னை விட (அறிவிலும் அனுபவத்திலும்) முதிர்ந்தவர்கள் நிறைந்திருக்கிற சபையில், அவர்கள் விரும்புவதற்கு முன் பேச முற்படாமலிருக்கிற அடக்கம் நல்ல குணங்களுக்குள்ளும் நல்ல குணம்.

வி - ம் : 'முந்து கிளவாச் செறிவு' என்பது எல்லாருக்கும் முன்னாற் பேசத் தானே கிளம்பிவிடாமல் இருக்கும் அடக்கம். 'செறிவு' – அடக்கம். ஒளியார் முன் ஒள்ளியனாகப் பேசத் தெரிந்திருந்தாலும் தன்னிலும் முதிர்ந்த அறிவுடையார் கூடிய சபையில் தன்னுடைய திறமையைக் காட்டிக் கொள்ளப் பதட்டப்படாமல் அடக்கமுடையவனாக இருப்பது மிகச் சிறந்த நற்குணம் – என்பது கருத்து.

அப்படி பதட்டம் காட்டுவது ஒழுக்கம் கெட்டதாகும் :

716. ஆற்றி னிலைதளர்ந் தற்றே வியன்புல
மேற்றுணர்வார் முன்ன ரிழுக்கு.

ப. ரை : வியன்புலம் ஏற்று உணர்வார் முன்னர் இழுக்கு ஆற்றின் நிலை தளர்ந்த அற்றே = விரிந்த கல்வியறிவுள்ள (பேச்சை) கேட்டு உணரக் கூடியவர்கள் கூடியுள்ள சபையில் (பதட்டம் காட்டுகிற) குற்றத்தைச் செய்வது ஒழுக்கத்தில் தவறியதை ஒக்கும்.

பொ. ரை : விரிந்த கல்வியறிவுள்ள பிரசங்கத்தைக் கேட்டு அனுபவிக்க வல்ல (முதுவர்கள்) கூடிய சபையில் (முந்து கிளத்தப் பதட்டம் காட்டுகிற) குற்றம் ஒழுக்கத்தில் தவறுவதே யாகும்.

வி - ம் : 'ஆறு' என்பது 'நல்லொழுக்கம்'. 'நிலைதளர்தல்' – நன்னெறியில் நின்ற நிலை தவறுதல். 'வியன்புலம்' என்பது சபையில் பேச விரும்புகிறவனுடைய 'விரிவான அறிவு.' விஸ்தாரமான கல்வியறிவைக் காட்டப் பேச விரும்புகிறவனுடைய பிரசங்கத்தை ரசித்து வாழ்த்தக் கூடிய முதியோர் கூடிய சபையில் 'முந்து கிளத்தல்' போன்ற தவறுகள் செய்வது ஒழுக்கம் கெட்ட குணம் – என்பது கருத்து.

கற்றறிந்த முதியோர்கள் கூடிய சபையில் பதட்டமில்லாமல் அடங்கியிருந்து, பேச வேண்டிய தருணம் வந்தபோது கல்வித் திறத்தைக் காட்டிப் பேசினால் அதனால் மேன்மையுண்டாகும் :

717. கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச்
சொற்றெரிதல் வல்லா ரகத்து.

ப. ரை: கசடு அற சொல் தெரிதல் வல்லார் அகத்து கற்றறிந்தார் கல்வி விளங்கும்=குற்றமில்லாமல் பேசுவதை தெரிந்து கொள்ள வல்லவர்கள் கூடிய சபையில் (பேசினுல்,) கற்றறிந்தவர்களுடைய கல்வித் திறம் சிறப்படையும்.

பொ. ரை: பிரசங்கம் செய்கிறவர்கள் குற்றமில்லாமல் பேசுகிருர்களா என்பதைத் தெரிந்து அனுபவிக்கக் கூடியவர்களுடைய சபையில் பேசினுல்தான் பேசுகின்றவனுடைய கல்வியறிவின் பெருமை பிரகாசமடையும்.

வி-ம்: பேச்சின் சுத்தத்தை அறியக் கூடியவர்கள் உள்ள சபையில் பேசிப் பழகினுல்தான் கல்வித் திறம் நாளுக்கு நாள் வளர்ந்து கீர்த்தியுண்டாகும் என்பது கருத்து.

பிரசங்கத்தின் திறமையைத் தெரியக் கூடியவர்கள் சபையில் பேசினுல் கல்வித் திறம் நாளுக்கு நாள் வளர்வது எப்படி யென்ருல்:

718. உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன்
பாத்தியு ணீர்சொரிந் தற்று.

ப. ரை: உணர்வது உடையார் முன் சொல்லல் வளர்வதன் பாத்தியுள் நீர் சொரிந்த அற்று= உணரும் தன்மை உள்ளவர்கள் முன்னுல் பேசுவது, வளரும் பயிர் உள்ள பாத்தியில் தண்ணீர் பாய்ச்சுவதைப் போன்றது.

பொ ரை: உணர்ந்து அனுபவிக்கும் தன்மையுள்ளவர்களுக்கு முன்னுல் பிரசங்கம் செய்வது, வளரும் பயிருள்ள பாத்திக்கு நீர் பாய்ச்சுவதைப் போன்றது.

வி-ம்: உணர்ச்சியுடையவர்களுக்கு முன் நின்று பேசினுல் அவர்கள் ரசிக்க வேண்டிய சமயங்களில் ரசித்து, அப்போதைக்கப்போது ஆமோதித்து, தலையசைத்து, கை தட்டி, சிரித்து, உத்ஸாக மூட்டுவார்கள். அதனுல் நாளுக்கு நாள் பிரசங்கத் திறமையும் கல்வித் திறமும் வளர்ந்து சீரும் சிறப்பும் உண்டாகும் – என்பது கருத்து.

ஆகையினுல் கல்வியறிவு நிறைந்த பேச்சுத் திறமையை 'உணர்வதுடையார் முன்னும்' — 'சொற்றெரிதல் வல்லார் அகத்தும்' காட்ட வேண்டுமே யன்றி மற்றவர்களுக்கு முன்னுல் காட்டவே கூடாது:

719. புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு
ணன்கு செலச்சொல்லு வார்.

ப. ரை: நல் அவையுள் நன்கு செல சொல்லுவார் புல் அவையுள் பொச்சாந்தும் சொல்லற்க = நல்ல சபையில் நன்ருக ஏற்றுக் கொள்ளும்படி சொல்லக் கூடியவர்கள், மட்டமான சபைகளில் (அவற்றை) மறந்தாற் போலும் கூடச் சொல்லக் கூடாது.

பொ. ரை: (கல்வியாளர்களும் உணர்ச்சி யுடையவர்களும் அடங்கிய) நல்ல சபைகளில் கேட்பவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி, கல்வியறிவோடு பேசத் தெரிந்தவர்கள் (கல்வியும் உணர்ச்சியும் இல்லாத) மட்டமான கூட்டங்களிலும் (அதே கல்வித் திறமுள்ள பேச்சை) மறந்தாற் போற் கூட. பேசி விடக் கூடாது.

வி - ம்: கல்வியும் உணர்ச்சியும் உள்ளவர்களிடம் பேசுகின்ற உயர்ந்த கருத்துகளடங்கிய பேச்சுகளை அவற்றை அறியவும் உணரவும் முடியாத பாமரர்கள் கூட்டத்தில் பேசவே கூடாது. அதுதான் 'அவையறிதல்'—என்பது கருத்து.

கல்வியறிவு நிறைந்த பேச்சுகளைக் கல்லாதவர்கள் முன் பேசுவது சபையறிந்து பேசுவதாகாது. மேலும் அது வீணுகப் போகும்:

720. அங்கணத்து ளுக்க வமிழ்தற்ருற் றங்கணத்த
ரல்லார்முற் கோட்டி கொளல்.

ப. ரை: அங்கணத்துள் உக்க அமிழ்து அற்ருல் தம் கணத்தர் அல்லார் முன் கோட்டி கொளல் = (உயர்ந்த கல்வியறிவை, கல்வியில்லாதவர்கள் கூடிய கூட்டத்தில் பேசுவது) சாக்கடையில் ஊற்றிய அமிர்தத்தை ஒக்கும் ஆனதனுல் தம்முடைய இனமல்லாத (கல்வியறிவு இல்லாத) சபையில் அதைப் பேசக் கூடாது.

பொ. ரை: உயர்ந்த கல்வியறிவுள்ள கருத்துகளை அவற்றை அனுபவிக்கக் கூடிய கல்வியறிவில்லாதவர்கள் முன்னுல் பேசுவது, சாக்கடையில் அமிர்தத்தை ஊற்றுவதற்குச் சமானமாகும். ஆனதால் தம்முடைய இனமான கற்றறிந்தார் அல்லாதவர்கள் கூட்டத்தில் (அவற்றைப்) பேசக் கூடாது.

வி - ம்: 'கோட்டி' என்பது 'கூட்டம்'. மிக உயர்ந்த கருத்துகளை, அவற்றை அறிய முடியாதவர்களிடம், பேசுவது மிக உயர்ந்த பொருளாகிய அமிர்தத்தை, சாக்கடையில் ஊற்றுவ

தாகும். இந்த இரண்டும் வீணனவை. மேலும் இடத்தை அறியாமல் செய்யும் குற்றங்கள். ஆகையினுல் அவை யறிந்து பேசவேண்டும். 'கொளல்' என்பதற்கு 'கொள் ளக்கூடாது' என்று எதிர் மறைப் பொருள் கொள்ள வேண்டும். எதையும் கல்வியறிவில்லாதவர்கள் கூட்டத்தில் பேசவே கூடாது என்பது இக்குறளின் நோக்கமல்ல. கல்வித் திறமையைக் கல்லாதார் முன் காட்டுவது வீண் என்பது தான் நோக்கம். ஏனெனில் 'ஒளியார் முன் ஒள்ளிய'ராகவும் 'வெளியார் முன் வான் சுதை வண்ணத்தோடும்' பேச வேண்டும் என்று முன்னே சொல்லப்பட்டிருக்கிறது.

அதி. 73—அவையஞ்சாமை

['அவையஞ்சாமை' என்பது சபையில் பயந்து தடுமாறி விடாமல் பேசுவது. கல்வியறிவிற் சிறந்திருந்தாலும் சபை யில் கூச்சமில்லாமல் பேசுவதற்குப் பழக்கமும் திறமையும் வேண்டும். 'அச்சம்' என்பது இங்கே கூச்சப்பட்டு வாய் குளறுவதைக் குறிப்பது. அவை யஞ்சாது பேசத் தெரிவது, சபைகளில் பிரசங்கம் செய்ய விரும்பும் எல்லாருக்கும் வேண்டியது.]

721. வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின்
றொகையறிந்த தூய்மை யவர்.

ப. ரை: வகை அறிந்து வல் அவை வாய் சோரார் சொல்லின் தொகை அறிந்த தூய்மையவர்=சபையின் தன்மையை அறிந்துகொண்டு, வல்லவர்கள் கூடியுள்ள சபையில் வாய் தடுமாருமல் பேசுகின்றவர்களே சொற்களைத் தொகுத்துக் குற்றமில்லாமல் பேசத் தெரிந்தவர்க ளாவார்கள்.

பொ. ரை: (சபை, கற்ருர் சபையா கல்லாதவர்கள் சபையா என்ற) வகையை அறிந்துகொண்டு, கற்றறிந்த வல்லவர் கள் சபை என்பதை அறிந்தும் அந்தச் சபையில் வாய் தடு மாருமல் பேசத் தெரிந்தவர்களே குற்றமற்ற முறையில் சொற்களைத் தொகுத்துப் பிரசங்கம் செய்யத் தெரிந்தவர் கள்.

வி—ம்: எந்தச் சபையில் பேசினுலும் சபைக் கூச்சம் வருவ துண்டு. ஆனுலும் சபையின் தன்மையை அறிந்தபின் அந்த சபை, தன்னைவிட கல்வியறிவிலும் பேச்சுத் திறமையிலும் குறைந்தவர்கள் அடங்கிய சபையென்று தெரிந்தால் அச் சம் வராமலிருக்கலாம். ஆனல் சபையிலுள்ளவர்கள் தனக்கு ஒப்பும் உயர்வும் உள்ள வல்லவர்கள் கூடிய சபையாக இருப்

பதை அறிந்தால் அப்போதுதான் அச்சம் வரும். அதனால் தான் 'வல்லவை வாய்சோரா' தவர்களே 'சொல்லின் தொகையறிந்த தூய்மையவர்' என்றார். 'வாய் சோர்தல்' – 'வாய் குளறுதல்', 'தூய்மையவர்' என்பது பேசுவதில் 'குற்றமற்றவர்கள்'.

கற்றவர்களுக்கு முன்னால் அச்சமில்லாமல் பேசத்தெரிந்த வர்கள்தாம் கற்றவர்களாக மதிக்கப்படுவார்கள் :

722. கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற்
கற்ற செலச்சொல்லு வார்.

ப. ரை: கற்றார் முன் கற்ற செலச் சொல்லுவார் கற்றாருள் கற்றார் எனப்படுவர் = கற்றவர்களுக்கு முன்னால் தாம் கற்றதை (தடுமாற்றமின்றி) கேட்போர் ஒப்புக்கொள்ளும்படி யாகச் சொல்லத் தெரிந்தவர்களே கற்றவர்களுக்குள் கற்றவ ராக மதிக்கப்படுவார்கள்.

பொ. ரை: கற்றறிந்தார் சபையில் தாம்கற்றதைத் தடுமாற்ற மின்றி விளங்கச் சொல்லத் தெரிந்தவர்கள்தாம் கற்றவர் களால் கற்றவராக மதிக்கப்படுவார்கள்.

வி - ம்: எவ்வளவு கற்றவர்களானாலும் கற்றவர்கள் சபையில் பேசக் கூசித் தடுமாறுகிறவர்களைக் கற்றவர்களாக கற்றவர் கள் மதிக்கமாட்டார்கள். கற்றவர்கள் அல்லாதவர்களுக் கிடையில் தடுமாற்றமின்றிப் பேசுவது சுலபம். கற்றார் சபை யில் அப்படிப் பேசுவதுதான் திறமை – என்பது கருத்து.

சபைக் கூச்சம் இல்லாமல் பேசக் கூடியவர்கள் மிகவும் அருமை :

723. பகையகத்துச் சாவா ரெளிய ரரிய
ரவையகத் தஞ்சா தவர்.

ப. ரை: பகையகத்து சாவார் எளியர்; அவையகத்து அஞ் சாதவர் அரியர் = யுத்தகளத்தில் அஞ்சாமல் இறக்கத் துணி வுள்ளவர்கள் பலபேர் உண்டு; (ஆனால்) சபையில் அஞ்சாது பேசக் கூடியவர்கள் மிகவும் அருமை.

பொ. ரை: போர்க்களத்தில் பகைவர்களுக்கு அஞ்சாமல் உயிரைவிடக் கூடியவர்கள் அபூர்வமல்ல; ஆனால் சபையில் அச்சமில்லாமல் பேசக்கூடியவர்கள் அபூர்வம்.

வி - ம்: போர்க்களத்தில் ஆயுதக் கொடுமைகளால் வரக்கூடிய துன்பங்களையும் ஏற்றுக் கொண்டு உயிரையும்விட பயப்

படாதவர்கள் பலபேருண்டு. ஆனல் வேறு யாரும் துன்பமோ பயமுறுத்தலோ செய்யாத கற்றவர்கள் கூடிய ஒரு சபையில் தாங்களே பயந்து நடுங்கித் தடுமாருமல் பேசக் கூடியவர்கள் வெகு சொற்பம்—என்பது கருத்து.

சபைக்கு அஞ்சாமல் பேச வேண்டும் என்பதனைலேயே முறை தவறிப் பேசுவதாவது விதண்டாவாதம் பேசுவதாவது அல்ல; பின் சரியான அவையஞ்சாமை எதுவென்ருல் :

**724. கற்ருர்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற
மிக்காருண் மிக்க கொளல்.**

ப. ரை : கற்ருர் முன் கற்ற செலச் சொல்லி, தாம் கற்ற மிக்காருள் மிக்க கொளல் = கற்றவர்களுக்கு முன்னல் தாம் கற்றதைக் கூசாமல் சபை ஏற்றுக்கொள்ளும்படிச் சொல்லி, தாம் கற்றுள்ளதைவிட அதிகமாகக் கற்றவர்களிடம் அவர்கள் அதிகமாகத் தெரிந்திருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

பொ. ரை : கற்றவர்கள் சபையில் தாம் கற்றதைச் சபை ஏற்றுக்கொள்ளும்படி அஞ்சாமல் பேசுவதும் தம்மைவிட அதிகமாகக் கற்றவரிடத்தில் (விவாதிக்கநேரின்) அவர்கள் அதிகமாகக் கற்றுள்ளதை ஏற்றுக்கொள்வதும் தான் (அவையஞ்சாமை).

வி-ம் : 'தாம் கற்ற மிக்காருள் மிக்க கொளல்' என்பதற்கு, 'தம்மினும் அதிகமாகக் கற்றவரிடத்தில் மிக்க பொருள்களை அம்மிக்க கற்ருரிடத்தில் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது மட்டும் அர்த்தமல்ல. 'தம்மைக் காட்டிலும் அதிகமாகக் கற்றிருப்பதை அறிந்து அதைக் கூசாமல் சபையில் ஒப்புக்கொள்ள வேண்டும்' என்பது பொருள்.

அப்படி, கற்ருர் சபையில் விவாதிக்க நேரிட்டால் எதிர்வாதம் சொல்லும்போது, மட்டுமரியாதை அளவறிந்து பதில் சொல்ல வேண்டும் :

**725. ஆற்றி னளவறிந்து கற்க வவையஞ்சா
மாற்றங் கொடுத்தற் பொருட்டு.**

ப. ரை : அவை அஞ்சா மாற்றம் கொடுத்தல் பொருட்டு ஆற்றின் அளவு அறிந்து கற்க = (கற்றறிந்தார் சபையில் விவாதம் வந்தால்) சபைக்கு அஞ்சாமல் (தம்முடன் விவாதிக்கிறவருக்கு) எதிர் மொழி சொல்லுவதற்காக ஒழுங்கு முறைக்கு ஒத்த அளவில் தம்முடைய கல்வியறிவை (அழுத்தமாகப்) பேச வேண்டும்.

பொ. ரை: சபையில் தர்க்கம் செய்ய நேரிட்டால் சபைக்கு அஞ்சாமல் தம்முடன் தர்க்கம் செய்கிறவருக்கு எதிர்வாதம் சொல்லுவதற்காக, (சொல்ல வேண்டிய) ஒழுங்கு முறை கெடாதபடி அளவறிந்து (தம் கல்வித்திறத்தை அழுத்தமாகப்) பேச வேண்டும்.

வி-ம்: இக்குறளுக்கு 'வேற்று வேந்தர் சபையில் அஞ்சாது உத்தரம் சொல்லுவதற்காக அமைச்சர்கள் சொல்லிலக்கண நெறியால் அளவை நூலை கற்க வேண்டும்' என்று பொருள் செய்வது முற்றிலும் தவறு. இது அமைச்சருக்கென்று சொல்லப்படுவதல்ல. சபையில் பேசுகிற எல்லாருக்கும் பொது. 'ஆற்றின் அளவு' என்பது 'ஒழுங்கு நெறியின் அளவு'. 'கற்க' என்பதற்கு 'சொல்லுக' என்பது பொருள். சபையில் விவாதிக்கிற போது எதிர் வாதம் செய்கிறவருக்குச் சரியான பதிலை அழுத்தமாகச் சொல்லுவதற்குக் கண்டிப்பான பதங்களைப் பேசலாம். ஆனால் தர்க்கத்தின் ஒழுங்கு முறை கெடாதபடி, சொல்ல வேண்டிய அளவறிந்து சொல்ல வேண்டும். சபைக்கு அஞ்சாமல் பேச வேண்டும் என்பதற்காக முறை தவறி, மட்டற்ற வார்த்தைகளைப் பேசிவிடக் கூடாது என்பது கருத்து.

அப்படி ஒரு சபையில் அச்சமில்லாமல் விவாதிக்க முடியாதவர்கள் எவ்வளவு நூல்களைப் படித்திருந்தாலும் என்ன பயன்?:

**726. வாளொடென் வன்கண்ண ரல்லார்க்கு நூலொடெ
ணுண்ணவை யஞ்சு பவர்க்கு.**

ப. ரை: வன்கண்ணர் அல்லார்க்கு வாளொடு என்? நுண் அவை அஞ்சுபவர்க்கு நூலொடு என்? = மன உறுதியுள்ளவர்கள் அல்லாதவர்களுக்கு வாளோடு என்ன வேலை? நுட்பமான அறிவுடையவர்கள் கூடியுள்ள சபையைக் கண்டு அஞ்சுகின்றவர்களுக்கு கல்வி நூல்களோடு என்ன வேலை?

பொ. ரை: தைரியம் இல்லாதவர்கள் வாளெடுத்து என்ன பயன்? அதைப்போல் கற்றவர்கள் சபையில் அஞ்சாமல் பேசத் தெரியாதவர்கள் பல நூல்களைப் படித்திருந்தும் என்ன பயன்?

வி-ம்: வாளேந்திய வீரனுக்குப் பெருமை போர்க்களத்தில் பகைவர்களுக்கு அஞ்சாமல் எதிர் புரிவது. அதைப் போல் நூல்களைக் கற்றவனுக்குப் பெருமை தருவது, கற்றோர் அவைக்களத்தில் அஞ்சாமல் எதிர்வாதம் செய்கிறவனுக்குத் தக்க பதில் கொடுப்பது—என்பது கருத்து.

எப்படியென்றால்:

**727. பகையகத்துப் பேடிகை யொள்வா ளவையகத்
தஞ்சு மவன்கற்ற நூல்.**

ப. ரை: அவையகத்து அஞ்சும் அவன் கற்ற நூல் பகைய கத்து பேடிகை ஒள்வாள் = சபையில் (எதிர்வாதம் செய்கிற வனுக்கு) அஞ்சுகின்ற அவன் படித்தபடிப்பு, போர்க்களத்தில் ஒரு பேடி தன் கையிற் பிடித்த கூரிய வாளுக்குத்தான் ஒப்பா கும்.

பொ. ரை: கற்றவர்கள் கூடிய சபையில் எதிர்வாதம் பேசுகிற வனுக்கு அஞ்சுகிறவன் கற்ற கல்வி, பகைவர்கள் வந்துவிட் டால் (அஞ்சி நடுங்கிவிடும்) பேடியின் கையிலுள்ள கூரிய வாளுக்குத்தான் சமமாகும்.

வி - ம்: பேடியின் கையில் எவ்வளவு நல்ல ஆயுதம் இருந்தா லும் அது பிறரைக் காக்கவும் பயன்படாது, தன்னையே காக்க வும் பயன்படாது. அப்படிப்போல எதிர்மாற்றம் கொடுக்க பயப்படுகிறவன் எவ்வளவு நூல்களை வெகு நன்ருகக் கற் றிருந்தாலும் அக் கல்வி பிறருக்கும் பயன்படாது, தனக்கும் பயன்படாது. 'ஒள்வாள்' என்பது 'சிறந்த வாள்'. அத ஞல் வாளின் தன்மைகளில் சிறந்ததாக உறுதியும் கூர்மை யும் பளபளப்பும் உள்ள வாள் என்பது பொருள். வாள் என் பது ஆயுதத்தைக் குறிக்கும் இனப் பெயர். ஆகையால் பகைவரைக் கண்டு நடுங்கிவிடுகிற பேடியிடம் எப்படிப்பட்ட சிறப்புடைய ஆயுதம் இருந்தாலும் தன்னையே காத்துக் கொள்ள உதவாது. அதைப்போல் எத்தனை நூல்களை எப்படி யெப்படி ஐயந்திரிபறக் கூர்ந்து கற்றிருந்தாலும் சபையில் எதிர்வாதம் பேசுகிறவனுக்குப் பயந்து விடுகிறவன் கற்ற கல்வி, தன்னுடைய பெருமையைக் காத்துக் கொள்ள உத வாது.

ஆகையினல்:

**728. பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு
ணன்கு செலச்சொல்லா தார்.**

ப. ரை: நல் அவையுள் நன்கு செல சொல்லாதார் பல்லவை கற்றும் பயமிலரே = நல்ல சபையில் நன்ருகக் (கேட்பவர் கள்) புரிந்து கொள்ளும்படி சொல்லத் தெரியாதவர்கள் பல நூல்களைச் கற்றிருந்தாலும் பயனற்றவர்களே (யாவார்கள்)

பொ. ரை: நல்லவர்கள் கூடியுள்ள சபையில் (அச்சமில்லா மல்) எதிர்வாதம் பேசுகிறவர்களும் ஏற்றுக் கொள்ளும்படி நன்ருகப் பேசத் தெரியாதவர்கள் பல நூல்களைப் படித்திருந் தாலும் பயனற்றவர்களே யாவார்கள்.

வி - ம் : 'நல் அவை' — அஞ்சவேண்டாத நல்லவர்கள் கூடிய சபை. பல்லவை, — பலவற்றை. எவ்வளவு படித்தவர்களானாலும் தர்க்கத்துக்குப் பயந்து, சொல்ல மாட்டாமல் தடுமாறுகிறவர்கள் பயனற்றவர்கள் என்பது கருத்து;

கற்றவர் கூடிய சபையில் பயத்தால் பேசத் தடுமாறுகின்ற படித்தவர்களைக் காட்டிலும் படிப்பே இல்லாதவர்கள் மேல்:

**729. கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து
நல்லா ரவையஞ்சு வார்.**

ப. ரை : கற்றறிந்தும் நல்லார் அவை அஞ்சுவார் கல்லாதவரின் கடை என்ப = கல்வியறிவு இருந்தும் நல்லவர்கள் கூடியுள்ள சபையில் அஞ்சுகின்றவர்கள் கல்வியில்லாதவர்களை விட கீழானவர்கள் என்று சொல்ல வேண்டும்.

பொ. ரை : கல்வியறிவு இருந்தும் நல்லவர்கள் நிறைந்த சபையில் பேச முடியாதபடி அஞ்சுகின்றவர்கள் படிப்பே இல்லாதவர்களை விட மட்டமானவர்கள் என்று சொல்ல வேண்டும்.

வி - ம் : கல்வி மிகுந்தவனிடத்திலிருந்து உலகம் எதிர்பார்க்கக் கூடிய காரியம் அவனுடைய கல்வியறிவு உலகத்துக்குப் பயன்படும்படி அவன் பிறருக்குச் சொல்ல வேண்டும் என்ற ஒன்றுதான். ஏனெனில் நாளெல்லாம் அவன் கல்வி கற்றுக் கொண்டேயிருந்தவன். ஆனதால் கல்லாதார் செய்யும் வேறு எந்தக் காரியத்துக்கும் பயிற்சியில்லாததால் அவன் தகுதியற்றவன். கற்ற கல்வியையும் சபையில் சொல்ல முடியாமல், கல்லாதார் செய்யக் கூடிய மற்றெந்தக் காரியத்துக்கும் கூட பயனற்றவனாக இருப்பதால் அவன் 'கல்லாதவரிற் கடையன்' என்பது கருத்து.

ஆகையினால் :

**730. உளரெனினு மில்லாரொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.**

ப. ரை : களன் அஞ்சி கற்ற செல சொல்லாதார் உளர் எனினும் இல்லாரோடு ஒப்பர் = சபையைக் கண்டு அஞ்சி, தாம் கற்ற கல்வியைப் பிறருக்குத் தெரியும்படி சொல்லாதவர்கள் இருந்தும் இல்லாதவர்களுக்கு ஒப்பாவார்.

பொ. ரை : சபைக் கூச்சத்தால் தாம் கற்ற கல்வியைப் பிறருக்குப் பயன்படும்படி சொல்ல முடியாதவர்கள் இருந்தும் இல்லாததற்குச் சமானமே.

வி-ம்: 'உளரெனினும் இல்லாரோ டொப்பர்' என்பதற்கு 'சபையில் இருந்தும் இல்லாதவர்களுக்குச் சமானம்' என்று தான் பொருள் கொள்ள வேண்டும். இறந்து போனவர் களுக்குச் சமானம் என்பது சரியல்ல.

அதி. 74—நாடு

[மக்கள் சமுதாயம் இன்பமான வாழ்க்கை நடத்த ஒரு நாட்டில் இயற்கை வளங்களும் கலகமனம் இல்லாத குடி களும் நல்ல அரசாட்சியும் அமையவேண்டும் என்ற பொது அறிவை இந்த அதிகாரம் புகட்டுகின்றது.]

731. தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச்
செல்வருஞ் சேர்வது நாடு.

ப. ரை: தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்வு இலா செல்வரும் சேர்வது நாடு = தள்ள முடியாத (உணவுப் பொருள்கள்) விளையக்கூடிய வயல்களும் (அந்த வயல்களில் பாடுபட்டு பயிர் செய்யத்) தக்க உழவாளிகளும் குற்றமற்ற செல்வர் களாகிய (வணிகரும்) சேர்ந்துள்ளது (நல்ல) நாடு.

பொ. ரை: வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுப் பொருள் கள் விளையக்கூடிய் நிலங்களும் அந்த நிலங்களில் பாடுபடத் தக்க உழவாளிகளும் குற்றமற்ற வழியில் செல்வத்தை வளர்க்கக் கூடிய வணிகரும் சேர்ந்துள்ளது நல்ல நாடு.

வி-ம்: 'தள்ளா'— தள்ள முடியாத; அதாவது இன்றியமை யாத. 'தக்கார்' என்பது விளைநிலங்களில் பாடுபடத் தக் கார் என்பதுதான் பொருத்தம். அறவோர்களைப் பற்றியும் ஆன்ம ஞானிகளைப் பற்றியும் இங்கே பேச்சில்லை. 'தாழ் விலா செல்வர்' என்பது 'குறையாத செல்வர்' அல்ல. குற்றமற்ற வழியில் செல்வம் சம்பாதிக்கிறவர்கள் என்பது பொருள். அவர்கள் வணிகர்கள், ஒரு நாட்டிற்கு நேர்மை யான முறையில் செல்வம் பெருகுவது அந்த நாட்டின் வியா பாரப் பெருக்கத்தால்தான். உணவுப் பொருள்கள் மனித னுடைய முதல் தேவை. அதற்கு விளைநிலம் அத்யாவசிய மானது. விளைநிலத்தில் பாடுபட விவசாயிகள் வேண்டும். விளை பொருள்களை நாட்டின் பல பகுதிகளுக்குப் பகிர்ந்தளிக் கவும் அந்த நாட்டில் விளையாப் பொருள்களை வேறு நாடுகளி லிருந்து வாங்கி வரவும் குற்றமற்ற முறையில் செல்வமுண் டாக்கும் வியாபாரிகள் வேண்டும். இவைகளே ஒரு நாட் டிற்கு அடிப்படையான தேவைகள் என்பது கருத்து.

தள்ளமுடியாத உணவுப் பொருள்கள் விளைகின்ற நிலங்களும் எளிதில் விளைச்சல் தரக்கூடிய வளமுள்ளனவாக இருக்க வேண்டும் :

732. பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா லாற்ற விளைவது நாடு.

ப. ரை : பெரும் பொருளால் பெட்டக்கது ஆகி அரும் கேட்டால் ஆற்ற விளைவது நாடு=பல பொருள்களும் கிடைக்க வளப்பமுள்ளதென்று யாரும் விரும்பிவரக் கூடியதாகவும் அதிக துன்பப்படாமல் மிகுந்த விளைச்சல் தரக்கூடியதாகவும் உள்ளது நல்ல நாடு.

பொ. ரை : பல பொருள்களும் கிடைக்கக் கூடிய வளமான நாடென்று யாரும் விரும்பி நாடி வரக் கூடியதாகவும் குறைந்த உழைப்பில் மிகுந்த விளைச்சல் தரக்கூடியதாகவும் உள்ளதே நல்ல நாடு.

வி - ம் : ‘பெரும் பொருள்’ என்பது உணவுப் பொருள்கள் அல்லாத பண்டங்களும் கிடைக்கத் தக்க வளப்பம். ‘அருங்கேடு’ என்பதற்கு ‘குறைந்த பாடு’. அதாவது குறைந்த உழைப்பு. ‘அருங்கேட்டால் ஆற்ற விளைவது’ என்றால் ‘குறைந்த உழைப்பில் மிகுந்த விளைச்சல் தருவது’ என்பதே பொருள். ‘கேடு’ என்பதற்கு இங்கே ‘பாடு’ என்பது பொருள்.

இந்த இயற்கை வளங்களோடு நாட்டின் பொதுநலத்துக்கான பொறுப்புகளை உணர்ந்து அரசாட்சிக்கு பலம் தரக்கூடிய மனப்பான்மையும் குடிமக்களுக்கு இருக்க வேண்டும் :

733. பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற் கிறையொருங்கு நேர்வது நாடு.

ப. ரை : பொறை ஒருங்கு மேல் வருங்கால் தாங்கி இறைவற்கு இறை ஒருங்கு நேர்வது நாடு=பல பொறுப்புகள் ஒருமிக்க எதிர்பாராமல் வந்து விட்டாலும் அவற்றைத் தாங்கி அரசனுக்கு அதற்கு வேண்டிய வழக்கமில்லாத அதிக வரிப்பணங்களைக் கொடுக்க சம்மதிக்கிற குடிமக்களை உடையது நல்ல நாடாகும்.

பொ. ரை : பல பொறுப்புகள் ஒருமிக்கத் திடீரென்று வந்து விட்டாலும் அந்தப் பொறுப்புகளின் பாரத்தைத் தாங்கி, அவற்றைச் சமாளிக்க வேண்டியதற்காக வழக்கமில்லாத புது வரிகளையும் மற்ற உதவிகளையும் ஒருங்கே அரசனுக்குக் கொடுக்கச் சம்மதிக்கிற குடிமக்களை உடைய நாடே நல்ல நாடு.

வி-ம்: 'பொறை' என்பது 'பொறுப்பான பாரம்'. 'மேல் வருதல்'—எதிர் பாராமல் வந்து விடுவது. 'நேர்வது—கொடுக்க சம்மதிப்பது—அதாவது 'பொறை ஒருங்கு'க்கு வேண்டிய 'இறையொருங்கு' தரத் தயங்காமல் உதவுவது. 'குடிமக்கள்' என்பதை வருவித்துக் கொள்ள வேண்டும். எதிர் பாராமல் நாட்டின் பொது நலத்துக்கு வந்துவிடக்கூடிய விபத்துகளைச் சமாளித்து, அதற்கு வேண்டிய ஒத்துழைப்புகளைத் தயங்காமல் அரசனுக்கு உதவுகின்ற குடிமக்கள் உள்ள நாடுதான் நல்ல நாடு—என்பது கருத்து.

அப்படிப்பட்டப் பொறுப்புகளை உண்டாக்கக் கூடிய காரணங்களில் முக்கியமானவைகள் யாவையெனில்:

**734. உறுபசியு மோவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு.**

ப. ரை: உறு பசியும் ஓவா பிணியும் செறு பகையும் சேராது இயல்வது நாடு=மிகுந்த உணவுப் பஞ்சமும் ஓயாத தொத்து நோய்களும் அன்னியர்களின் படையெடுப்பும் வராமல் நடத்தப்படுகிற நாடே நல்ல நாடு.

பொ. ரை: நீடித்த உணவுப் பஞ்சமும் தொத்து வியாதிகளும் பகைவர்களின் படையெடுப்பும் வராதபடி நடத்தப்படுகிற நாடே நல்ல நாடு.

வி-ம்: 'உறுபசி' என்றால் 'பெரும் பசி'. ஒரு நாட்டிற்குப் பெரும்பசியாவது நீடித்த பஞ்சம். 'ஓவாப் பிணி'—தொத்து வியாதிகள். 'செறுபகை'—யுத்தத்துக்குப் படையெடுத்து வரும் பகைவர்கள். இந்த மூன்றும் வந்து விடாதபடி எச்சரிக்கையுடன் நடத்தப்படும் நாடே நன்னாடு என்பது கருத்து.

இப்படிப்பட்ட துன்பமுள்ள பொறுப்புகள் வராதபடி எச்சரிக்கையாக இருப்பதற்கும், வந்துவிட்டால் சமாளித்துக் கொள்வதற்கும் குடிமக்களுக்குள் ஒற்றுமைக் குறைவும் கலக மனப்பான்மையும் அராஜகமும் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்:

**735. பல்குழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு.**

ப. ரை: பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்து அலைக்கும் கொல் குறும்பும் இல்லது நாடு=பல கட்சிகளும், நாட்டைப் பாழாக்கிவிடக் கூடிய உடனிருப்பவர்களின் பகைமையும், அரசாட்சியை அலைக்கழிக்கும் கொலைகாரர் களின் (அராஜகக்) குறும்புகளும் இல்லாத நாடே நல்லது.

பொ. ரை : குடிகளுக்குள் பல கட்சிகளும், நாட்டைப் பாழாக்கி விடக் கூடிய உடனிருக்கும் துரோகிகளும், அரசாங்கத்தை அலைக்கழிக்கும் இரகசியக் கூட்டங்களின் கொலை மிகுந்த அராஜகமும் இல்லாதது நல்ல நாடு.

வி-ம் : 'உட்பகை' என்பது மனதினுள் பகைமையை மறைத்துக் கொண்டு நண்பரைப் போலவே உடனிருந்து நாட்டைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடிய துரோகிகள். 'வேந்தலைக்கும் கொல் குறும்பு' என்பது அரசனால் கண்டுபிடிப்பது மிகவும் கடினமாகும்படி இரகசியமான இடங்களில் இருந்து கொண்டு கொலைகளைச் செய்யும் சிறு கூட்டம். அவர்களைக் கண்டு பிடித்துத் தண்டிக்க முடியாமல் அரசாங்கம் அவர்களை எந் நேரமும் தேடுவதிலேயே அலைய வேண்டியிருப்பதால் 'வேந்து அலைக்கும்' எனப்பட்டது. பல கட்சிகளும் நாட்டைக் கெடுக்கும் நயவஞ்சகரும் அராஜகக் கொலைக் கூட்டங்களும் நாட்டில் இல்லாதபடி கவனித்துக் கொள்ள வேண்டியது குடிகளின் பொறுப்பு என்பது கருத்து.

உள் நாட்டிலுள்ள பல கட்சிகளாலும் உட்பகையாலும் வேந்தலைக்கும் கொல்குறும்பாலும் துன்பமில்லாமலிருந்தும் பிற நாட்டாரால் அழிவுகள் நேர்ந்து விட்டாலும் அவற்றைச் சரி செய்து கொள்ளத்தக்க இயற்கை வளங்கள் இருக்க வேண்டும் :

**736. கேடறியாக் கெட்ட விடத்தும் வளங்குன்றா
நாடென்ப நாட்டிற் றலை.**

ப. ரை : கேடு அறியா கெட்ட இடத்தும் வளம் குன்றா நாடு நாட்டின் தலை என்ப = (தன்னளவில்) ஒரு கெடுதி வராமல் நடந்து கொள்வதோடு (பிறரால் ஏதேனும்) கெடுதி உண்டாகி விட்டாலும் (அதைச் சரி செய்து கொள்ள வேண்டிய) இயற்கை வளங்கள் குறையாமல் இருக்கிற நாடே மற்ற நாடுகளுக்கெல்லாம் மேலானது என்று சொல்ல வேண்டும்.

பொ. ரை : (தன்னைப் பொறுத்த வரையிலும்) ஒரு கெடுதிவர இடமில்லாதிருப்பதோடு (பிறரால் கெடுதி செய்யப்பட்டு) அழிவுகள் வந்துவிட்ட காலத்திலும் (அவற்றை சமாளித்துக் கொள்ளும்படி) இயற்கை வளங்களில் குறைவில்லாமல் இருக்கிற நாடே எல்லா நாடுகளிலும் சிறந்த நாடு என்று சொல்ல வேண்டும்.

வி-ம் : முன் குறளில் சொல்லப்பட்ட உள் நாட்டுத் தீமைகள் இல்லாமலிருப்பதோடு பிற நாட்டவரால் யுத்தம் நேர்ந்து அயல் நாடுகளுடன் போக்கு வரவு தடைப்பட்ட காலத்திலும் பிற நாடுகளின் உதவியில்லாமலும் சமாளித்துக் கொள்ளக்

கூடிய குறைவற்ற வளங்கள் உள்ளதாக இருக்க வேண்டும் என்பதற்காக 'கெட்ட விடத்தும் வளங்குன்று' என்றது. செயற்கை நலங்கள் எவ்வளவு செய்து கொண்டாலும் ஆபத்துக்கு உதவக்கூடிய இயற்கை வளங்களும் அமைந்திருந்தால்தான் நல்லது என்ற கருத்துள்ளது. அதனால் செயற்கையும் இயற்கையும் சேர்ந்த நாடே தலைசிறந்த நாடு.

அந்த இயற்கை வளங்கள் என்னவென்றால்:

737. இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும்
வல்லரணு நாட்டிற் குறுப்பு.

ப. ரை: இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் வல் அரணும் நாட்டிற்கு உறுப்பு = (மழை நீர் ஊற்று நீர் ஆகிய) இரண்டு வகை நீர் வளமும் அதற்கு வாய்ப்பான மலை வளமும் மலையிலிருந்து வருவதாகும் ஆற்று வளமும் வலிமையுள்ள பாதுகாப்புகளும் ஒரு நாட்டிற்குச் (சிறப்பளிக்கும்) அங்கங்கள்.

பொ. ரை: மழைநீர், கிணற்றுநீர் என்ற இருவகை நீர்வளமும் அதற்கு வாய்ப்பு தரும் மலைவளமும் மலையிலிருந்து ஓடிவரும் நதிவளமும் வல்லமையுள்ள பாதுகாப்புகளும் ஒரு நாட்டிற்குச் சிறப்பு தரக்கூடிய அங்கங்கள்.

வி--ம்: 'வாய்ந்த மலை' என்பது நீர் வளத்தை உண்டாக்க 'வாய்ந்த மலைவளம்'. மழை பெய்வதற்கு மலைகள் மிகவும் உதவி செய்யக் கூடியவை என்ற இயற்கை உண்மையைக் குறிப்பது. 'வல்லரண்' என்பது பலமான பாதுகாப்பு. அதாவது பல கோட்டை கொத்தளங்களும் அவற்றிலுள்ள படை வீரர் முதலிய பலவும் சேர்ந்த நாட்டின் பாதுகாப்பு. அத்துடன் செறிந்த காடுகளும் மலை அமைப்பும் பாதுகாப்புக்கு அரண் தருவனவாக அமையும் சிறப்பையும் குறிக்கும்.

தொகுத்துச் சொல்லுமிடத்து ஒரு நாட்டிற்கு முக்கியமாக அமைய வேண்டிய சிறப்புகள் ஐந்து; அவையாவன:

738. பிணியின்மை செல்வம் விளைவின்ப மேம
மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து.

ப. ரை: பிணி இன்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம், இவ்வைந்து நாட்டிற்கு அணி என்ப = நோயின்மை, நிறைந்த செல்வம், (உணவுப் பொருள்களின்) விளைச்சல், இன்ப நிகழ்ச்சிகள், பாதுகாப்பு இந்த ஐந்தும் ஒரு நாட்டிற்கு அழகு செய்வனவாகும்.

பொ. ரை: நோய் தராத (நீரும் காற்றும் உள்ள) இயல்பும் பொருளாதார பலமும், விளை பொருள்களின் மிகுதியும், (கல்வியினாலும் கலைகளாலும் அனுபவிக்கக்கூடிய) இன்ப நிகழ்ச்சிகளும், (மக்களுடைய உயிருக்கும் உடைமைகளுக் கும்) பாதுகாப்பும் ஆகிய இந்த ஐந்தும் ஒரு நாட்டிற்கு அமைய வேண்டிய சிறப்புகள்.

வி - ம்: நோயின்மை, மிக்க செல்வம், நல்ல விளைச்சல், (கலை, விழாக்களின்) இன்பம், பாதுகாப்பு இந்த ஐந்தும் எவ்வள வில் சேர்ந்திருக்கின்றனவோ அவ்வளவுக்கு நாடு சிறப்புடை யது என்பது. 'ஏமம்' என்பது 'காவல்'. இந்தக் காவல் முன் சொல்லப்பட்ட நாட்டிற்கான பாதுகாப்பல்ல. உள் நாட்டி லும் ஒவ்வொரு மனிதனும் கொலை, கொள்ளை, திருட்டு முத லிய பயமில்லாமல் வாழத்தக்க நிம்மதி. இது அரசாட்சி யின் காவலும் அக்கம் பக்கத்திலுள்ள மக்களின் நற்குணமும் சேர்ந்த பாதுகாப்பு. பெரும்பாலும் மக்கள் நல்லவர்களாக இல்லாத நாட்டில் வெறும் அரசன் காவல் மட்டும் அச்ச மின்றி வாழக் கூடிய 'ஏமம்' தராது.

பொதுவாக, மக்களுடைய நல்வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் எந்த நாட்டில் அதிக துன்பப்படாமல் கிடைக் குமோ அதுதான் நல்ல நாடு:

**739. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளந்தரு நாடு.**

ப. ரை: நாடா வளத்தன நாடு என்ப; நாட வளம் தரும் நாடு நாடல்ல=தேடியலைந்து துன்பப்படாமல் (வாழ்க்கைக்கு வேண்டிய) நலங்களைத் தரக்கூடிய நாடுகளே நல்ல நாடுகள் எனப்படும்; (அப்படியின்றித்) தேடியலைந்து பாடுபட்டால் தான் வாழ்க்கை நலங்கள் கிடைக்கும் என்ற நாடு நாடல்ல.

பொ. ரை: தேடியலைந்து கஷ்டப்படாமல் வாழ்க்கை வசதிகள் கிடைக்கக் கூடிய பிரதேசங்களே நாடுகள் எனப்படும்; அப் படியின்றி கஷ்டப்பட்டுத் தேடித்தான் வாழ்க்கை வசதிகளைச் செய்து கொள்ள வேண்டிய இடம் நல்ல நாடல்ல.

வி - ம்: 'வளம்' என்பது இயற்கை வளங்களும் செயற்கை வளங்களும் சேர்ந்த செழுமை. வாழ்க்கைக்கான வசதிகள் எளிதில் கிடைக்கக் கூடிய இடங்களே மக்கள் வசிக்கத் தகுந்த நாடுகள்; வாழ்க்கை வசதிகளுக்குப் பிரயாசைப்பட வேண்டிய இடம் வசிக்கத் தகுந்ததல்ல என்பது கருத்து.

வருந்தித் தேடாமல் எல்லா வசதிகளும் எளிதில் கிடைக் கக் கூடியனவாக ஒரு நாட்டில் அமைந்திருந்தாலும்:

**740. ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
வேந்தமை வில்லாத நாடு.**

ப. ரை: ஆங்கு அமைவு எய்திய கண்ணும் வேந்து அமைவு இல்லாத நாடு பயம் இன்றே=அப்படி (எல்லா வளங்களும் எளிதிற் கிடைக்கும்படி) அமைந்த இடத்தும் அரசு (நல்லதாக) அமையப் பெருத நாடு பயன் இல்லாததே (யாகும்).

பொ. ரை: அப்படி, எல்லா வாழ்க்கை வசதிகளும் சுலபமாகக் கிடைக்கக் கூடியதாக அமைந்திருந்தாலும் நல்ல அரசாட்சி அமையாத நாடு பயனற்றது.

வி-ம்: 'ஆங்கு' என்பது முன்னே சொல்லப்பட்ட 'அப்படி'. 'எய்தியக் கண்ணும்' – எய்திய போதும். 'வேந்து' – அரசு. 'வேந்தமை வில்லாத நாடு' என்பதற்கு 'வேந்தனோடு மேவுதல் இல்லாத் நாடு' என்ற பொருள் கொள்வது தவறு. வேந்தனும் குடிகளும் ஒருவருக்கொருவர் 'அருளோடும் அன்போடும்' நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் பற்றிய எதுவும் இங்கு கருதப்பட்டதல்ல. ஒரு நாட்டில் எவ்வளவு வளங்கள் இருந்தும் நல்ல அரசனோ அரசாட்சியோ அமையா விட்டால் பயனில்லை என்பதுதான் இங்கே சொல்லப்படுவது.

அதி. 75—அரண்

['அரண்' என்பது 'காவல் உள்ள இடம்'. இந்த அதிகாரத்தில் சொல்லப்படுவது காவல் உள்ள இடமாகிய கோட்டை. சாதாரண காலங்களில் நாட்டின் மூலதனத்தையும் ஆயுத பலங்களையும் சேமிக்கவும், படையெடுப்பு வந்தால் அரசனுக்கும் அவனைச் சேர்ந்தவர்களுக்கும் தற்காப்புக்காகவும் எப்போதும் காவலுள்ள பலமான கட்டிடம். அரசாங்கத்துக்கு இன்றியமையாத உறுப்புகளில் கோட்டையும் ஒன்று.]

**741. ஆற்று பவர்க்கு மரண்பொரு ளஞ்சித்தற்
போற்று பவர்க்கும் பொருள்.**

ப. ரை: ஆற்றுபவர்க்கும் அரண் பொருள்; அஞ்சி தற்போற்றுபவர்க்கும் பொருள்=பிற நாட்டின் மேல் படையெடுப்பவர்களுக்கும் கோட்டை (இன்றியமையாத) பொருள்; (பிற நாட்டார் படையெடுப்புக்கு) அஞ்சித் தம்மைக் காத்துக் கொள்பவர்களுக்கும் (கோட்டை இன்றி யமையாத) பொருள்.

பொ. ரை: இன்னொரு நாட்டின் மீது படையெடுப்பவர்களுக்கும் கோட்டை அவசியமான பொருள்; இன்னொருவர் படை

யெடுத்து வந்துவிட்டால் அதற்கஞ்சித் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியவர்களுக்கும் அது அவசியமான பொருள்.

வி-ம்: 'ஆற்றுபவர்க்கும்' என்பது—போர் ஆற்றுபவர்க்கும், 'தற்போற்றுதல்'—தற்காப்பு செய்து கொள்ளல். படையெடுப்பதற்காலும் தற்காப்புக்காலும் அரசனுக்கு கோட்டை இருக்க வேண்டும்—என்பது கருத்து.

ஒரு கோட்டையைச் சுற்றிலுமுள்ள அமைப்புகள், இயற்கையாலும் செயற்கையாலும் பகைவர்கள் எளிதில் நெருங்கிவிட முடியாதனவாக இருக்க வேண்டும்.

742. மணிநீரு மண்ணு மலையு மணிநிழற்
காடு முடைய தரண்.

ப. ரை: மணிநீரும் மண்ணும் மலையும் அணி நிழல் காடும் உடையது அரண்=ஆழமான நீருடைய அகழியும், மண்திடல்களும், மலைகளும், செறிவான நிழலுள்ள காடுகளும் (சுற்றிலும்) உள்ளதாக இருப்பது கோட்டை.

பொ. ரை: ஆழமான நீருள்ள அகழியும், மண் திட்டுகளும், மலைகளும், மரமடர்ந்த காடுகளும் சூழ்ந்ததாக இருப்பது கோட்டை.

வி-ம்: மணிநீர்—ஆழமான நீர். அணி நிழல் காடு—அடுக்கிய நிழலுள்ள காடு. அதாவது மரம் அடர்ந்த காடு. ஒரு கோட்டையைச் சுற்றிலும் பகைவர் எளிதில் நெருங்க முடியாதபடி ஆழமான நீருள்ள அகழியோ, மண் திடல்களோ, மலைகளோ, அடர்ந்த காடுகளோ இருக்க வேண்டும். இவற்றுள் எல்லாம் சேர்ந்ததாகவும் இருக்கலாம், இரண்டு மூன்று சேர்ந்ததாகவும் இருக்கலாம். ஆனால் இந்த நான்கில் ஒன்றாவது இருந்தே தீரவேண்டும்—என்பது கருத்து.

கோட்டையின் சுற்றிலுமுள்ள அமைவுகள் அப்படியாக, இனி கோட்டையின் சுவர்கள் எப்படியிருக்க வேண்டுமென்றால்:

743. உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி
னமைவர ணென்றுரைக்கு நூல்.

ப. ரை: உயர்வு, அகலம், திண்மை, அருமை இந்நான்கின் அமைவு அரண் என்று நூல் உரைக்கும்=உயரமும் அகலமும் உறுதியும் (தந்திரமான எந்திர) அருமைகளும் ஆகிய

இந்த நான்கின் சேர்க்கை கோட்டையின் கட்டிடம் என்று நூல்கள் சொல்லும்.

பொ. ரை: கோட்டையின் சுவர்கள் (எளிதில் ஏற முடியாத) உயரமும், (வீரர்கள் தாராளமாக நின்று நடந்து காவல்புரிய வசதியுள்ள) அகலமும் (துளைத்துவிட முடியாத) உறுதியும் (பகைவர்கள் அறிய முடியாத) அருமையான எந்திர இரகசியங்களும் ஆகிய இந்த நான்கும் பொருந்தியதாக இருப்பது கோட்டை என்று அதைப்பற்றிய நூல்கள் சொல்லும்.

வி-ம்: 'அருமை' என்பது இரகசியமான எந்திரப் பொறிகளும் மறைவிடங்களும் சேர்ந்த நுட்பமான தந்திரஅமைப்புகள். மிக்க உயரம், அகலம், உறுதி, தந்திர அமைப்புகள் ஆகிய நான்கும் சேர்ந்திருந்தால்தான் அது கோட்டை என்பது கருத்து. கோட்டையின் வெளியில் சுற்றியிருக்க வேண்டும் என்று முன் குறளில் சொல்லப்பட்ட அகழி, மண், மலை, காடு, இவற்றில் ஒன்றுமட்டும் இருந்தாலும்போதும். ஆனால் கோட்டையைப் பொறுத்த மட்டில் உயரம், அகலம், உறுதி, அருமைகள் என்ற நான்கும் சேர்ந்திருக்க வேண்டும்.

அத்துடன் காவலுக்கும் எளிதான அமைப்புகள் இருக்க வேண்டும்:

744. சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை
ஊக்க மழிப்ப தரண்.

ப. ரை: சிறுகாப்பின் பேர் இடத்தது ஆகி உறு பகை ஊக்கம் அழிப்பது அரண்=குறுகிய காவலிடமும் பெரிய உள்ளிடமும் உடையதாகி, நெருங்கிவரும் பகைவர்களின் முயற்சிகளைக் கெடுத்து விடக் கூடியது கோட்டை,

பொ. ரை: காவல் புரிய வேண்டிய இடம் குறுகலாகவும் உள்ளே அகன்ற இடமுள்ளதாகவும், கிட்டி வருகின்ற பகைவர்கள் கோட்டையைப் பற்றிக் கொள்ளச் செய்கின்ற முயற்சிகளையெல்லாம் கெடுத்துவிடக் கூடியதாகவும் இருக்க வேண்டும் கோட்டை.

வி-ம்: 'சிறுகாப்பு' என்பது சில பேரே இருந்து கொண்டும் எதிரியின் பெருஞ் சேனையையும் தடுத்து நிறுத்தும் வசதியான 'குறுகிய இடம்'. அதாவது சிறிய வாயில். 'பேரிடம்' என்பது சிறு காப்புக்குப் பின்னால் பெருஞ்சேனையும் நிரம்பிய சாதனங்களும் இருக்கின்ற கோட்டையின் உள்ளிடம்.

பகைவர்கள் நெருங்க முடியாதபடி அவர்களுடைய ஊக்கத்தை அழித்துவிடக் கூடியதாக இருப்பதோடு:

**745. கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார்
நிலைக்கெளிதா நீர தரண்.**

ப. ரை : கொளற்கு அரிதாய் கொண்ட கூழ்த்து ஆகி அகத்தார் நிலைக்கு எளிதாம் நீரது அரண் = (பகைவர்கள்) கைப்பற்றுவதற்கு முடியாதபடி, நிறைந்த உணவுப் பொருள்கள் உள்ளதாகி, உள்ளேயிருப்பவர்கள் வசிப்பதற்கான வசதிகள் மலிந்ததாக இருக்கக் கூடியதே கோட்டை.

பொ. ரை : பகைவர்களால் கைப்பற்ற முடியாதபடி, உணவுப் பொருள்கள் வேண்டிய மட்டும் உள்ளதாயும், உள்ளே இருக்கிறவர்களுக்கு (வெளியே உள்ள பகைவர்கள் எவ்வளவு காலம் முற்றுகையிட்டாலும் அதைப் பொருட்படுத்தாமலிருக்கும்படி) வேண்டிய எல்லா வசதிகளும் நிறைந்ததாக உள்ளதே கோட்டை.

வி - ம் : 'கொளற்கரிதாய்' என்பதற்குப் பகைவர்கள் வசப்படுத்த முடியாமல் இருப்பதற்கு, என்று கொண்டு அதற்காக நெடுங்காலத்துக்கு வேண்டிய உணவுப் பொருள்களும் மற்ற வசதிகளும் நிறைந்துள்ளதாக இருக்க வேண்டும் என்பது கருத்து. 'கொண்ட'—நிறைந்த. 'கூழ்'—உணவுப் பொருள்கள். 'நீரது'—தன்மையுள்ளது.

அத்துடன் போரும் முற்றுகையும் இல்லாத காலத்திலும் கூட :

**746. எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு
நல்லா ளுடைய தரண்.**

ப. ரை : எல்லா பொருளும் உடைத்தாய் இடத்து உதவும் நல் ஆள் உடையது அரண் = (முற்றுகையில்லாத காலத்திலும்) எல்லா தளவாடங்களும் உள்ளதாகி அந்தந்த இடத்துக்குத் தகுதியான நல்ல ஆள்களும் உள்ளதாக இருப்பது கோட்டை.

பொ. ரை : (சண்டையில்லாத காலங்களிலும் கூட முற்றுகை இருப்பது போலவே எதிர்த்து நிற்பதற்கு அவசியமான) எல்லா தளவாடங்களும் உள்ளதாக, அந்தந்த வேலைக்கு அந்தந்த சமயத்தில் உதவக்கூடிய பயிற்சியுடைய தகுந்த ஆள் பலமும் உள்ளதாக இருப்பது தான் கோட்டையாகும்.

வி - ம் : 'இடத்துதவும்' என்பதற்கு 'அந்தந்த இடம் அந்தந்த சமயம்' என்று பொருள். அதாவது 'வேண்டிய வேலைக்கு வேண்டிய சமயத்தில்' என்பது. 'நல்லாள்' என்பது 'தகுதியான ஆள்' அதாவது அந்தந்த வேலையிற் பயிற்சியுள்ள ஆட்கள். எல்லாப் பொருள்களும் எல்லா வேலைகட்கும்

பயிற்சி பெற்ற நல்ல ஆள் பலமும் நிரந்தரமாக, கோட்டையில் எப்போதும் இருக்க வேண்டும் என்பது கருத்து.

யுத்தம் மூண்டு முற்றுகை ஏற்பட்டால்:

747. முற்றியு முற்று தெறிந்து மறைப்படுத்தும்
பற்றற் கரிய தரண்.

ப. ரை: முற்றியும் முற்றுது எறிந்து மறைப்படுத்தும்; பற்றற்கு அரியது அரண் = முற்றுகையிட்டாலும் நெருங்க முடியாதபடி பகைவர்களை ஓடச் செய்து (உள்ளிருக்கிறவர்களை பகைவர்கள் காண முடியாதபடி) மறைவிடங்கள் உள்ளதும் (பகைவரால்) கைப்பற்ற முடியாததும் கோட்டை.

பொ. ரை: பகைவர்கள் வந்து முற்றுகையிட்டாலும் நெருங்கி வந்து முற்றுகையில் வெற்றி பெற முடியாதபடி அவர்களை (உள்ளிருக்கிறவர்கள்) ஓடும்படி செய்யவும் (உள்ளிருக்கிறவர்கள் எங்கிருந்து ஆயுதப் பிரயோகம் செய்கிறார்கள் என்பதை முற்றுகையிட்டவர்கள் அறியமுடியாதபடி) மறைக்கக் கூடியதுமாகப் பகைவர்களால் வசப்படுத்த முடியாத உபாயங்கள் உள்ளதே கோட்டை என்பது.

வி-ம்: 'முற்றுதெறிந்து மறைப்படுத்தும்' என்பதை 'முற்றுது—எறிந்தும்—அறைப்படுத்தும்' என்று பிரித்து 'அகத்தோரை அவர் தெளிந்தோரை விட்டுக் கிழறுத்துத் திறப்பித்தும்' என்று பொருள் செய்வது முற்றிலும் குற்றமும் குழப்பமும் உள்ளது. பகைவர்கள் நெருங்கவே முடியாதபடி துரத்திவிட்ட சமயத்தில் அவர்கள் உள்ளிருக்கிறவர்களுக்குப் பழக்கமானவர்களை கோட்டைக்குள் அனுப்பி கோட்டைக்குள் இருக்கிறவர்களைத் துரோகம் செய்யத் தூண்ட முடியும் என்பது சிறிதும் எண்ணத் தகாதது. முற்றுகையிட்ட பகைவர்கள் கோட்டையை நெருங்க முடியாதபடி உள்ளிருக்கின்ற வீரர்கள் மறைவிடங்களி லிருந்துகொண்டு ஆயுதப் பிரயோகம் செய்து, பகைவர்களை ஓட்டிவிடக் கூடிய அமைப்புகள் உள்ளதுதான் கோட்டை, என்பது இக்குறளின் கருத்து.

ஒருக்கால் முற்றுகையிட்டவர்கள் நெருங்கி வந்து கோட்டைக்குள் புகுந்து விட்டாலும்:

748. முற்றாற்றி முற்றி யவரையும் பற்றாற்றிப்
பற்றியார் வெல்வ தரண்.

ப. ரை: முற்று ஆற்றி முற்றியவரையும் பற்றியார் பற்றாற்றி வெல்வது அரண் = முற்றுகையை ஆற்றலுடன் நடத்தி

(கோட்டைக்குள் புகுந்துவிட) முடிந்த பகைவர்களையும் (கோட்டையைப்) பற்றியுள்ளவரான (அதன் உள்ளிருக்கும்) வீரர்கள் பிடித்துக் கொண்டு வெற்றியடையத் தகுந்த அமைப்புகள் உள்ளது கோட்டை.

பொ. ரை: முற்றுகையைத் திறமையுடன் நடத்தி, கோட்டைக்குள் புகுந்துவிட முடிந்தவர்களையும் உள்ளிருக்கும் வீரர்கள் பிடித்து அடக்கிவிடத் தகுந்த இரகசிய அமைப்புகள் உள்ளதாக இருப்பது கோட்டை.

வி-ம்: 'முற்று ஆற்றி முற்றுதல்'—முற்றுகையை நடத்தி வெற்றியுடன் முடிப்பது. அதாவது முற்றுகையில் வென்று கோட்டைக்குள் நுழைவது. 'பற்றுற்றி வெல்வது'—பிடித்துக் கொண்டு தோற்கச் செய்வது. பகைவர்கள் உள்ளே புகுந்து விட்டாலும் அவர்களைப் பிடித்து வசப்படுத்திவிடக் கூடிய தந்திர அமைப்புகள் கோட்டைக்குள் இருக்கவேண்டும் என்பது கருத்து. 'பற்றுற்றிப் பற்றியார் வெல்வது அரண்' என்பதற்கு 'தன்னைப் பற்றிய அகத்தோர் தாம் பற்றிய இடம் விடாதே நின்று பொருது வெல்வதே அரணாவது' என்று பொருள் கொள்ளுவதில் கோட்டைக்கு ஒரு சிறப்புமில்லை. ஆகையால் அது பொருளல்ல. கோட்டையின் அமைப்புகளும் அதிலுள்ள தந்திரப் பொறிகளும் பகைவர் உள்ளே நுழைந்து விட்டாலும் அவர்களை மடக்கிவிடத் தக்கனவாக இருக்க வேண்டும் என்பதுதான் கருத்து.

உள்ளே நுழைந்து விட்டவர்களைப் (பற்றுற்றி வெல்லுவது) பிடித்துக் கொள்ள முடியா விட்டாலும்:

**749. முனைமுகத்து மாற்றலர் சாய வினைமுகத்து
வீறெய்தி மாண்ட தரண்.**

ப. ரை: முனை முகத்து மாற்றலர் சாய வினை முகத்து வீறு எய்தி மாண்டது அரண் = (உள்ளே புகுந்து விட்டவர்களோடு) போரில் முனைய வேண்டிவந்தால் பகைவர்கள் ஒருமிக்க மடியும்படியான (எந்திர தந்திர) வேலைப்பாடுகள் அமைந்துள்ள பெருமையுடையதான மாட்சிமையுள்ளதே கோட்டை.

பொ. ரை: (உள்ளே புகுந்துவிட்ட பகைவர்களைப் பற்றிக் கொள்ளத் தவறிவிட்டாலும்) போர்புரிய வேண்டி நேரிட்டால் பகைவர்கள் (ஒருமிக்கக்) கவிழ்ந்து விடக்கூடிய தந்திர எந்திரங்களின் வேலைப்பாடுகள் அமைந்த பெருமையுள்ளதாக விளங்கக் கூடியதே கோட்டையாகும்.

வி-ம்: 'முனை முகத்து'—போர் முனைந்த விடத்து. 'வினை முகத்து வீறு'—வேலைத் திறங்களின் பெருமை. பகைவர்கள் கோட்டைக்குள் புகுந்து அவர்களுடன் போர் புரிய நேர்ந்தாலும் அவர்களை எளிதில் சாய்த்துவிடக்கூடிய பொறிகள் நிறைந்த வேலைப்பாடுகளே ஒரு கோட்டைக்குச் சிறப்பளிப்பவை என்பது கருத்து. 'வினை முகத்து வீறெய்தி மாண்டது அரண்' என்பதற்கு 'பகைவர் தொடங்கிய போரினை அறிந்து எய்தல், எறிதல், குத்துதல், வெட்டுதல் என்ற இவை முதலாகிய வினைகள்' என்று பொருள் செய்வது எவ்விதத்தும் பொருந்தாது. ஏன் எனில் இந்தச் செயல்களெல்லாம் போர் வீரர்களின் செயல்களே யன்றி கோட்டை செய்யக்கூடியவையல்ல. ஆகையால் 'அரண் வீறெய்தி மாண்டதாக' இருப்பதற்கு இவை பயனற்றவை. இந்த அதிகாரத்தில் சொல்லப்படுவதெல்லாம் கோட்டையின் இலக்கணத்தைப் பற்றியதே யன்றி போர்வீரர்களைப் பற்றியதல்ல,

கடைசியாக இதுவரை சொல்லப்பட்ட எல்லாச் சிறப்புகளும் அமைந்ததாகக் கோட்டை இருந்தாலும் ஏதாவது காரணத்தால் அதை அன்னியர்கள் வசப்படுத்திக் கொள்ள நேர்ந்து விட்டாலும் அக்கோட்டையின் பொறிகள் அமைந்துள்ள தந்திரங்களையும் மற்றுமுள்ள இரகசியங்களையும் அவர்கள் பயன்படுத்திக்கொள்ள முடியாததாகவும் இருக்க வேண்டும்:

750. எனைமாட்சித் தாகியக் கண்ணும் வினைமாட்சி
யில்லார்க ணில்ல தரண்.

ப. ரை: எனை மாட்சித்து ஆகிய கண்ணும் வினைமாட்சி இல்லார் கண் இல்லது அரண்=எப்படிப்பட்ட (பொறிகளமைந்த) சிறப்புகளுடையதாக இருந்தாலும் (அந்தப் பொறிகளின்) வேலைப்பாடுகளின் (இரகசியங்களை) அறியாதவர்களுக்குப் பயனில்லாததாக இருப்பதே கோட்டை.

பொ. ரை: எப்படிப்பட்ட (எந்திர தந்திர இரகசியங்கள் அமைந்த) பெருமை யுள்ளதாக இருந்தாலும் (அந்த எந்திர தந்திரங்களைப்பற்றிய வேலைகளின் உளவுகளின் அறிவு) இல்லாதவர்கள் (அந்த சாதனங்களைப் பயன்படுத்திக் கொள்ள) இல்லாமற் போகக்கூடியதே கோட்டையாகும்.

வி-ம்: 'எனைமாட்சி' என்பது முன்குறளில் சொல்லப்பட்ட 'வினை முகத்து வீறெய்தி மாண்ட' மாட்சி. 'வினைமாட்சி' என்பது அதிலுள்ள 'வினைமுகத்து' மாட்சி. இந்தக் குறளிலும், 'வினைமாட்சி இல்லார் கண்' என்பதற்கு 'வினை செய்தற் கண் மாட்சியில்லாதார் மாட்டு' என்று பொருள்

கொண்டு, கோட்டையின் உள்ளிருக்கும் வீரர்களுடைய 'வாளா இருத்தல், அளவிறந்து செய்தல்.........முதலியவற்ருல் கோட்டையின் மாட்சிகளால் பயனில்லை' என்று பொருள் செய்வதும் முன் சொன்னது போன்ற குற்றம். இந்தக் குறளில் சொல்லப்படுவதும் கோட்டையின் சிறப்பைப் பற்றியே யன்றி வீரர்களின் சிறப்பில்லாமையைப் பற்றியன்று.......... பகைவர்கள் கோட்டையைப் பிடித்துக் கொண்டாலும் அதிலுள்ள இரகசியங்களை அவர்கள் பயன்படுத்திக் கொள்ள முடியாதபடி கோட்டையின் அமைப்புகள் இருக்க வேண்டும் என்பது தான் கருத்து.

அதி. 76—பொருள்செயல்வகை

['பொருள் செயல் வகை' என்பது செல்வத்தைச் சம்பாதிக்க வேண்டிய முறை, அவசியம், முதலியவைகளைப் பற்றியது. இங்கே 'பொருள்' என்பது பணத்தைக் குறிக்கும். இது எல்லாருக்கும் பொதுவாகும்.]

**751. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்.**

ப. ரை: பொருள் அல்லவரை பொருளாக செய்யும் பொருள் அல்லது பொருள் இல்லை=பொருட்படுத்தத் தக்கவர்கள் அல்லாதவர்களையும் பொருட்படுத்தச் செய்கின்ற செல்வத்தைவிட (மக்கள் தேட வேண்டிய) உடைமை (வேருென்றும்) இல்லை.

பொ. ரை: மதிக்கத் தகாதவர்களையும் மதிக்கச் செய்கிற செல்வத்தை விட மக்கள் தேட வேண்டிய உடைமை வேருென்றும் இல்லை.

வி - ம்: 'பொருள்' என்பது மதிப்பு, செல்வம், உடைமை என்ற அர்த்தங்களில் முறையே உபயோகப்படுத்தப்பட்டிருக்கிறது. மனிதருக்கு மதிப்புண்டாக்குவது பணத்தைத் தவிர வேருென்றுமில்லை — என்பது கருத்து.

ஏன் என்ருல் அதை அனுபவத்தில் கண்ணுரப் பார்க்கிருேம்:

**752. இல்லாரை யெல்லாரு மெள்ளுவர் செல்வரை
யெல்லாருஞ் செய்வர் சிறப்பு.**

ப. ரை: இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை எல்லாரும் சிறப்பு செய்வர்=செல்வம் இல்லாதவர்களை எல்லாரும்

இகழ்வார்கள்; செல்வர்களை எல்லாரும் பெருமைப் படுத்து வார்கள்.

பொ. ரை: பணமில்லாதவர்களை எல்லாரும் அலட்சியம் செய் வார்கள்; பணம் உள்ளவர்களை எல்லாரும் பெருமைப் படுத்துவார்கள்.

வி-ம்: 'எள்ளுவர்' – 'மதிக்காமல் நடந்து கொள்வார்கள்' என்ற அளவுக்குத்தான் இகழ்ச்சி. பணமில்லாதவர்களின் குணமும் கல்வியும் ஒழுக்கமும் உயர்ந்ததாக இருந்தாலும் பிறர் மதிக்க மாட்டார்கள்; பணமுள்ளவர்களுடைய குண மும் கல்வியும் ஒழுக்கமும் மட்டமானவைகளாக இருந்தா லும் அவர்களை மதித்து மரியாதை செய்வார்கள் – என்பது கருத்து.

அது மட்டுமல்ல:

753. பொருளென்னும் பொய்யா விளக்க மிருளறுக்கு
மெண்ணிய தேயத்துச் சென்று.

ப. ரை: பொருள் என்னும் பொய்யா விளக்கம் எண்ணிய தேயத்து சென்று இருள் அறுக்கும் = செல்வம் என்னும் அணையாத விளக்கு நினைத்த தேசத்துக்குப் போனாலும் (அதை உடையவனுக்கு அங்கே) இருட்டை நீக்கும்.

பொ. ரை: செல்வம் என்ற தப்பாத ஒளி (அதை உடையவன்) விரும்புகின்ற எந்த தேசத்துக்கு அவன் போனாலும் அங்கே (அவனுக்கு வழிகாட்டவும் அந்த தேசத்தார் அவனை மதிக்க வும்) பிரகாசம் உண்டாக்கும்.

வி-ம்: 'பொய்யா விளக்கம்' என்றால் நிச்சயமான வெளிச் சம். 'இருளறுக்கும்' என்பது 'அறியாமையை நீக்கும்.' விளக்கோடு இருட்டில் போகின்ற ஒருவனுக்கு அவ்விளக்கு அவனுக்கு இருளை நீக்கி வழிகாட்டும். அத்துடன் அவன் விளக்கோடு வருவதும் பிறருக்குத் தெரிய அவனிடம் அந்த விளக்கின் பிரகாசம் இருக்கும். அதுபோல் பணம் உள்ள வனுக்கு அவன் எந்த அன்னிய தேசத்திற்குப் போனாலும் அவனிஷ்டப்படி இருக்கவும் அங்குள்ளவர்கள் அவனை மதிக்க வும் பணம் தப்பாமல் உதவும் என்பது கருத்து.

செல்வம் இருந்தால் எல்லாரும் மதிப்பார்கள். எந்த நாட் டிற்கு வேண்டுமானாலும் இஷ்டம்போல் சென்று பெருமை யடையலாம் என்பதோடு அந்த செல்வம் நல்ல வழியில் சம் பாதிக்கப்பட்டதாக இருந்தால்:

754. அறனீனு மின்பமு மீனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்.

ப. ரை: தீது இன்றி வந்த பொருள் திறன் அறிந்து அறன் ஈனும், இன்பமும் ஈனும்=குற்றமற்ற வழியில் வந்த செல்வம் (அந்த குற்றமற்ற தன்மையின்) தகுதியறிந்து தர்மத்தை உண்டாக்கும்; இன்பத்தையும் உண்டாக்கும்.

பொ. ரை: குற்றமற்ற வழியில் சம்பாதிக்கப்பட்ட செல்வம் (அந்த குற்றமற்ற தன்மைக்குத் தக்கபடி) தர்ம பலன்களை உண்டாக்கும்; இன்பங்களை அனுபவிக்கவும் உதவும்.

வி-ம்: 'திறனறிந்து' — 'தன்மை' — அல்லது தகுதியை அறிந்து'. 'இன்பமும் ஈனும்' என்றது 'அறம் மட்டுமல்ல இன்பங்களையும் உண்டாக்கும்' என்று வலியுறுத்துவதற்காம். நல்ல வழியில் சம்பாதிக்கப்பட்ட செல்வம் மறுமை நலத்துக்கும் இம்மை இன்பத்துக்கும் உதவும் என்பது கருத்து.

நேர்மையையும் அறத்தையும் அதன் இன்பத்தையும் கருதி, தீதின்றி பொருள் சம்பாதிக்கிற நல்லவர்கள்:

755. அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்.

ப. ரை: அருளொடும் அன்பொடும் வாரா பொருளாக்கம் புல்லார்; புரள விடல்=கருணையோடும் அன்போடும் வராத செல்வப் பெருக்கத்தை (நல்லவர்கள்) ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்; (எல்லாரும் அதை) விலக்க வேண்டும்.

பொ. ரை: அருள் வழியிலும் அன்பு வழியிலும் வராத செல்வப் பெருக்கத்தை (அறனறிந்த நல்லவர்கள்) ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் (அதனால் அதை யாரும்) விலக்க வேண்டும்.

வி-ம்: 'அருளொடும் அன்பொடும் வாரா' என்றது 'அருளோ அன்போ இல்லாமல்' என்ற பொருள் தருவது. அருள்வேறு அன்பு வேருகக் கொள்ளக் கூடாது. வலியுறுத்தச் சொல்லப்பட்ட அடுக்கு வார்த்தை. அருளாவது அன்பாவது இல்லாமல் வருகிற செல்வம் 'திறனறிந்து தீதின்றி வந்த பொருள்' ஆகாது. அதனால் அதை விலக்க வேண்டும் என்பது கருத்து. 'வாரா' என்பது 'சம்பாதிக்காத' என்ற பொருள் தருவது. இந்தக் குறள் அரசருக்கு மட்டும் சொன்னதாகக் கொள்ளக் கூடாது.

ஒரு அரசனுக்குத் 'தீதின்றி வரும்' செல்வம் எதுவென்றால்:

756. உறுபொருளு முல்கு பொருளுந்தன் ஞென்ஞர்த்
தெறுபொருளும் வேந்தன் பொருள்.

ப. ரை : உறு பொருளும் உல்கு பொருளும் தன் ஒன்னார்த் தெறு பொருளும் வேந்தன் பொருள் =(அரசனுகிய உரிமையினுல்) கிடைத்த (பொக்கிஷச்) செல்வமும். வரிப்பணமும், தன்னேடு பொருந்தாதவர்களைத் தண்டித்து (அபராதமாக வசூலிக்கும் பணமும்) அரசனுடைய செல்வம்.

பொ. ரை : (அரசுரிமையினுல் அரண்மனையையும் பொக்கிஷத்தையும் சேர்ந்ததாக) கிடைக்கின்ற செல்வமும். வரிகள் மூலமாக வருகின்ற பணமும், தன் நாட்டில் குற்றம் செய்கிறவர்களுக்கு அபராதம் விதித்து அதன் வழி வருகின்ற பணமும் அரசனுக்கு (பொருள் செயல் வகைகளான) வருவாய்கள்.

வி - ம் : 'உறு பொருள்' என்பதற்கு 'உடையாரின்மையிற்ருனே வந்துற்ற பொருள்' என்றும் அதற்கு விளக்கமாக 'நெடுங்காலம் நிலத்தின்கட் கிடந்து, பின் கண்டெடுத்ததும் தாயத்தார் பெருததும்' என்றும் சொல்லுவது சிறிதும் பொருத்தமில்லாதது. ஏன் எனில் இந்த அதிகாரத்தில் சொல்லப்படுவது ஒவ்வொருவரும் தீமையற்ற வழிகளில் பொருள் சம்பாதிக்க வேண்டும் என்பது. அந்த முறையில் ஒரு அரசனுக்கு நியாயமான செல்வ வருவாய்கள் எவை என்பதை இந்தக் குறள் சொல்லுகிறது. புதையலாக இருந்து கண்டெடுக்கப்படுகிற செல்வம் ஒரு வேந்தனுடைய வருவாய்களில் சேர்ந்தது அல்ல. ஒவ்வொரு அரசனுக்கும் புதையல்கள் கிடைத்துக் கொண்டிருக்காது. புதையல்களும் சொந்தக்காரர்கள் இல்லாத அநாதைச் செல்வமும் ஏதோ சில நாடுகளில் எப்போதாவது கிடைக்கலாம். அப்படி கிடைத்தாலும் அது அரசனுக்குப் போய்ச் சேருமென்று சொல்ல முடியாது. ஆதலால் அது அரசன் முயற்சியால் நல்ல வழியில் சம்பாதிக்க வேண்டிய பொருள் செயல் வகையைச் சேராது....
'தன் ஒன்ஞர்த் தெறு பொருள்' என்பதற்குப் 'பகைவரைத் திறையாகக் கொள்ளும் பொருள்' என்று அர்த்தம் செய்வதும் பொருத்தமற்றது. ஏனெனில் ஒரு அரசனுக்கு எப்போதும் பகைவர்கள் இருந்து கொண்டிருக்க முடியாது. அத்துடன் 'செறுபகையும் சேராது இயல்வது நாடு' என்று முன்னுலேயே சொல்லப்பட்டிருப்பதால் பகைவரே இல்லாத நாடுகளும் இருக்கலாம். பகைவர்கள் இருந்தாலும் அந்தப் பகைவர்களுடன் போர் புரிந்து அவர்களை அடிமைப்படுத்தி கப்பம் வசூலிக்கிற காரியம் அடிக்கடி நடக்கக்கூடியதுமல்ல. மேலும் பகைவேந்தர்கள் இருவர் போரிட்டாலும் இருவரில் ஒருவர் தான் வெற்றிபெற்றுத் 'தெறு பொருள்' வாங்க முடியும்.

ஆதலால் இந்தத் திறைப்பண வருமானம் வேந்தர்கள் நல்ல வழியில் சம்பாதிக்கிற பொருள்செயல் வகைக்குப் பொது வகையாகக் கொள்ள நியாயமே இல்லை. ஆதலால் அது அர்த்தமல்ல. 'ஒன்னார்' என்பதற்கு 'பொருந்தாதவர்கள்' என்பதுதான் முதல் அர்த்தம். 'தன் ஒன்னார்' என்றால் 'தன்னுடன் பொருந்தாதவர்கள்' என்பது அர்த்தம். அதாவது 'தன் அரசியல் நீதிகளுடன் பொருந்தாதவர்கள்' என்று மட்டும் அர்த்தம் கொள்ள வேண்டும். அப்படியானால் 'தன் ஒன்னார்த்தெறு பொருள்' என்பதற்குத் 'தன்னுடைய அரசியல் நீதிகளுக்குப் பொருந்தாத குற்றங்களைச் செய்கிற தன் குடிகளை தண்டிக்கிற முறையில் அபராதமாக வசூலிக்கப்படும் பொருள்' என்பதுதான் அர்த்தம். அரச உரிமையால் தனக்கு வருகின்ற பொக்கிஷப் பணமும், வரிப்பணமும், குற்றவாளிகளுக்கு விதிக்கும் அபராதப் பணமும் அரசனுக்கு நியாயமான வருவாய்கள் — என்பது கருத்து.

மனிதர்களுக்குள் ஜீவகாருண்யம் பரவி, சமுதாயம் சமாதானத்துடன் நடைபெறுவதற்கும் மக்களுடைய பொருளாதார நிலை நன்றாக இருக்கவேண்டும் :

757. அருளென்னு மன்பீன் குழவி பொருளென்னுஞ்
செல்வச் செவிலியா லுண்டு.

ப. ரை : அன்பு ஈன் அருள் என்னும் குழவி பொருள் என்னும் செல்வச் செவிலியால் உண்டு = அன்பு என்பதிலிருந்து பிறக்கின்ற அருள் என்னும் குழந்தை செல்வம் என்கின்ற வல்லமை வாய்ந்த செவிலித் தாயால் வளரும்.

பொ. ரை : அன்பிலிருந்து பிறக்கின்ற 'அருள்' என்னும் சிசு, செல்வம் என்ற சக்தியுள்ள செவிலித் தாயால் வளர்ந்து வாழும்.

வி-ம் : 'அன்பு' என்பது நெருங்கிய சுற்றத்தாரிடம் இயல்பாகவே எல்லா மனிதருக்கும் உள்ள பிரியம். அந்தப் பிரியம் சுற்றத்தாரல்லாத மற்ற மக்களுக்கும் காட்டப்படுகிறபோது அது 'அருளாக' விரிகின்றது. அந்த அருள் குணத்தைச் செலுத்த சுற்றத்தாரல்லாதவர்களுக்கும் உதவிகளைச் செய்ய வேண்டும். அப்படி உதவி செய்யப் பணம் இருந்தால்தான் முடியும். ஆகையினால் 'அருள்' என்ற குழந்தையைப் பெற்ற தாய் அன்புதான் — என்றாலும் பணம் என்ற சக்திவாய்ந்த செவிலித்தாய் இருந்தால்தான் அந்தக் குழந்தை செழித்து வளர்ந்து வாழ்வு பெறும். இல்லையானால் இடையில் அக்குழந்தை இளைத்து நலிந்து இறந்து போனாலும் போகலாம்.

அப்படி அருள் குணம் சிதையாமலிருந்தால் சமுதாயம் நன்றாக நடக்கும். ஆதலால் பொருள் வேண்டும் என்பது கருத்து.

தன் கையில் பொருள் உடையவன் அரிய காரியத்தையும் எளிதாகச் செய்து முடிக்கலாம் :

758. குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை.

ப. ரை : தன் கைத்து ஒன்று உண்டாக செய்வான் வினை, குன்று ஏறி யானைப் போர் கண்ட அற்று = தன் கையில் (அந்த பொருள் என்ற) ஒன்றை வைத்துக் கொண்டு செய்கிறவனுடைய காரியம், குன்றின் மேல் ஏறிக்கொண்டு யானையுடன் போர் செய்வதை ஒத்தது.

பொ. ரை : தன் கையில் பணம் என்ற ஒன்றை வைத்துக் கொண்டு ஒரு முயற்சி செய்கிறவனுடைய காரியம் உயரமான இடத்தில் இருந்து கொண்டு யானையுடன் போர் செய்வதை ஒக்கும்.

வி - ம் : 'யானைப் போர் கண்டற்றால்' என்பதற்கு 'யானைப் போர் செய்வது போன்றது' என்று பொருள். 'காண்டல்' என்பதற்கு 'செய்தல்' என்பது இங்கே பொருள். 'காவிரி கரை கண்ட சோழன்', 'திருக்குறளுக்கு உரைகண்டவர் பரிமேலழகர்' என்பனவற்றிலுள்ள 'கண்ட' என்ற பதத்துக்கு 'செய்த' என்று பொருள் உள்ளது போல். 'யானைப் போர்' என்பது 'யானையும் யானையும்' போர் புரியச் செய்வது தான் ஆகுமேயன்றி யானையுடன் மனிதன் போர் புரிவது ஆகுமா என்ற ஐயம் உதிக்கலாம். யானைகளை அவை இருக்கும் இடங்களிற் சென்று வேல் கொண்டு எறிந்து கொல்லவும் வெல்லவும் முயன்று மறப்பயிற்சி பெறுவது சேர நாட்டு வீரர்களின் வழக்கம். அதை ஒட்டியே 'கான முயலெய்த அம்பினில் யானை பிழைத்த வேலேந்தல் இனிது' என்றும், 'கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியா நகும்' என்றும் 'படைச்செருக்கு' என்ற அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் குறளுக்கு 'தன் கையில் பொருள் வைத்துக் கொண்டு ஒரு காரியத்தைச் செய்வது, மலையின் மீது இருந்து கொண்டு யானையும் யானையும் சண்டையிடுவதைப் பார்ப்பது போன்றது' என்று பொருள் செய்வதில் உபமான உபமேயங்களுக்குப் பொருத்தமில்லை; சிறப்பும் இல்லை. ஆதலால் தன் கைப்பணத்தை வைத்துக் கொண்டு ஒரு காரியத்தில் இறங்குகிறவன் காரியத்தை முடிப்பான், காரியம் முடியாவிட்டாலும் கடனுக்கும் கஷ்டத்துக்கும் உள்ளாக மாட்டான். எப்படிப் போல் என்

ருல், ஒரு உயரமான இடத்திலிருந்து கொண்டு யானையை வெல்ல முயல்கின்றவன் யானையை வெல்லவோ கொல்லவோ முடியும். முடியாவிட்டாலும் யானை உயரமான இடத்துக்கு ஏற முடியாதாகையால் யானையினுல் அவனுக்கு ஒரு அபாயமும் வராது—என்பது கருத்து. 'போர்' என்பதற்கு இங்கே வெல்ல முயலும் 'போராட்டம்' என்ற அளவுக்குத்தான் பொருளேயல்லாமல் சமமாக அணிவகுத்து நின்று போர் புரிவதல்ல.

அப்படி, பொருளுடையவன் எந்தக் காரியத்தையும் எளிதாகச் செய்து முடிக்கலாம் ஆகையினுல் :

> **759. செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கு**
> **மெஃகதனிற் கூரிய தில்.**

ப. ரை : பொருளை செய்க; செறுநர் செருக்கு அறுக்கும் எஃகு அதனில் கூரியது இல் = செல்வத்தை சம்பாதியுங்கள்; பகைவர்களுடைய இறுமாப்பை ஒழிக்கக்கூடிய ஆயுதம் அதைவிட கூர்மையுள்ளது வேறொன்றும் இல்லை.

பொ. ரை : செல்வத்தைச் சம்பாதிக்க வேண்டும்; ஏனென்ருல் பகைவர்களுடைய கர்வத்தை அடக்குவதற்கு அதைக் காட்டிலும் தகுந்த ஆயுதம் வேறு ஒன்றுமில்லை.

வி - ம் : 'செறுநர்'—பகைவர்; 'எஃகு'—ஆயுதம். செல்வத்தை ஒவ்வொரு மனிதனும் தனக்குச் சேகரித்துக் கொள்ள வேண்டும். ஏனென்ருல் செல்வ பலம் உள்ள ஒருவனுக்கு அவனுடைய பகைவர்கள் (இருந்தால்) தீங்கு செய்யத் துணிய மாட்டார்கள் என்பது கருத்து.

அந்தச் செல்வம் நல்லவழியில் அருளொடும் அன்பொடும் சம்பாதிக்கப்பட்டதாக இருந்தால் பகைவர்களுடைய பயமும் இல்லாமல் அறங்களைச் செய்து இன்பங்களையும் அனுபவிக்கலாம் :

> **760. ஒண்பொருள் காழ்ப்ப வியற்றியார்க் கெண்பொரு**
> **ளேனை யிரண்டு மொருங்கு.**

ப. ரை : ஒள் பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு ஏனைய இரண்டும் ஒருங்கு எண் பொருள்=நல்ல செல்வத்தை மிகுதியாக சம்பாதித்துக் கொண்டவர்களுக்கு (அறம், பொருள், இன்பம் என்ற மூன்றில் மிச்சமுள்ள) மற்ற இரண்டும் சேர்ந்து எளிதில் கிடைக்கும்.

பொ. ரை: (அருளோடும் அன்பொடும் வருவதாகிய) நல்ல வழியில் சம்பாதிக்கப்பட்ட செல்வம் நிரம்ப உள்ளவர்களுக்கு (அறம், பொருள், இன்பம் என்று சொல்லப்பட்ட வாழ்க்கை லட்சியங்களுக்குள் பொருள் கிடைத்துவிட்டதால்) மற்ற இரண்டு லட்சியங்களாகிய அறமும் இன்பமும் ஏக காலத்தில் எளிதில் கை கூடும்.

வி-ம்: மனித வாழ்வின் லட்சியப் பொருள்களாக கொள்ளப்பட்டன அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு. அவற்றுள் வீடு என்று சொல்லப்படும் பேரின்ப வீடாகிய முத்தி. (மோக்ஷம்) என்பதை சொல்லால் விளக்க முடியாததாக விட்டுவிட்டு அறம், பொருள், இன்பம் என்ற மூன்றை மட்டும் திருக்குறள் விவரிக்கிறது. அந்த மூன்றுள் 'பொருள்' என்னும் செல்வத்தை நல்ல வழியில் சம்பாதித்துவிட்டவனுக்கு அறங்களைச் செய்வதும் இன்பங்களை அனுபவிப்பதும் வெகு சுலபம் என்பது கருத்து. எண் பொருள் = எளிய பொருள்.

அதி. 77—படைமாட்சி

['படைமாட்சி' என்பது 'சேனையின் பெருமை'. பகைவர்களே இல்லாமல் போர் புரிய வேண்டிய அகத்தியம் இல்லாவிட்டாலும், ஒரு அரசுக்கு நிலையான ஒரு சேனை இருந்து கொண்டேயிருக்க வேண்டும் என்பதையும், அந்த சேனை அதன் உறுப்புகளான எல்லாப் பிரிவுகளும் உள்ளதாகவும் கெம்பீரமானதாகவும் தகுந்த தளபதிகள் அமைந்ததாகவும் இருக்க வேண்டுமென்பதையும் இவ்வதிகாரம் வற்புறுத்துகின்றது. இது அரசனுக்கு வேண்டிய அறிவு.]

761. உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாந் தலை.

ப. ரை: உறுப்பு அமைந்து ஊறு அஞ்சா வெல்படை வேந்தன் வெறுக்கையுள் எல்லாம் தலை = அங்கங்களெல்லாம் அமைந்து, இடையூறுகளுக்கு அஞ்சாமல் (முன்னேறி) வெல்லக் கூடிய சேனை, அரசனுடைய செல்வங்களி ளெல்லாம் சிறந்தது.

பொ. ரை: (ஒரு சேனைக்கு வேண்டிய) எல்லாப் பிரிவுகளும் அமைந்ததாக, இடையூறுகளுக்கு அஞ்சாமல் முன்னேறி வெல்லக் கூடிய ஒரு சேனை, அரசனுக்குள்ள எல்லா செல்வங்களிலும் சிறந்த செல்வம்.

வி-ம்: 'உறுப்பமைந்து' என்பது — யானைப் படை, குதிரைப் படை, தேர்ப் படை, காலாட்படை என்ற பல உறுப்புகளைக் குறிப்பது. (இக் காலத்துக்கு வேண்டியபடி எண்ணினால் ஆகாயப்படை, 'பாரசூட்' படை, 'மோட்டார்' படை முதலியனவும் பிறவும் உறுப்புகளாகும்) 'வெறுக்கை'— 'உடைமை' அல்லது 'ஆஸ்தி'. எல்லாப் பகுதிகளும் பொருந்தியதாக எப்படிப்பட்ட எதிர்ப்புகளுக்கும் அஞ்சாமல் முன்னேறக் கூடிய, நிலையாக உள்ள சேனைதான் அரசாட்சிக்கு முதன்மையான தேவை என்பது கருத்து.

எப்படிப்பட்ட இடையூறுகளுக்கும் அஞ்சாமல் வெல்லக் கூடிய தைரியம் உள்ளதாக இருப்பதற்கு அந்த சேனை என்ன செய்யவேண்டும் என்றால்;

762. உலைவிடத் தூறஞ்சா வன்கண் டொலைவிடத்துத்
தொல்படைக் கல்லா லரிது.

ப.ரை: உலைவு இடத்து ஊறு அஞ்சா வன்கண் தொலைவு இடத்து தொல் படைக்கு அல்லால் அரிது= (அழிவுண்டாக்கும்) போர் நேரிடும்போது துன்பங்களுக்கு அஞ்சாத மன வலிமை, போர் இல்லாத காலத்தில் போர்ப் பயிற்சியில் பழகிக் கொண்டேயிருக்கிற சேனைக்கு அல்லாமல் (மற்றவர்களுக்கு) இருக்க முடியாது.

பொ.ரை: யுத்தம் மூண்டு விட்டபோது துன்பங்களுக்கு அஞ்சாமல் போர் புரியக் கூடிய தைரியம், யுத்தம் இல்லாத (சமாதான) காலங்களிலும் யுத்தப் பயிற்சி செய்து கொண்டேயிருக்கிற சேனைக் கல்லாமல் மற்றவர்களுக்கு வராது.

வி-ம்: உலைவிடத்து — யுத்தம் புரியும் போது. 'தொலை விடத்து' என்பது அந்த 'யுத்தம் தொலைவிடத்து' என்ற பொருள் தருவது. அதாவது 'யுத்தம் இல்லாத காலத்தில்' என்பதாம். தொலைவு — இல்லாமை. 'தொல் படை' — பழகும் படை. 'தொல்லுதல்' என்பதற்கு 'பழகுதல்' அல்லது 'பயிற்சி செய்தல்' என்பது அர்த்தம். யுத்தத்தில் துன்பங்களுக்குப் பயப்படாமலிருக்கத் தகுந்த மன உறுதி, யுத்தம் இல்லாத காலத்திலும் யுத்தப் பயிற்சிகளை இடைவிடாது செய்து கொண்டே யிருக்கிற சேனைக்குத்தான் இருக்கும் — என்பது கருத்து. இந்தக் குறளுக்கு ''தான் சிறிதாயவழியும் அரசற்குப் போரின் கண் உலைவு வந்தால் தன் மேலுறுவதற்கு அஞ்சாது நின்று தாங்கும் வன்கண்மை அவன் முன்னோரைத் தொடங்கிவரும் படைக்கல்லது உளதாகாது'' என்ற பொருள் வெறும் குழப்பம்.

போர் புரிவதற்கென்றே பயிற்சி பெறுதவர்கள் எவ்வளவு திரளாகக் கூடினாலும் அக் கூட்டம் சேனையாகாது. எப்படிப் போல் என்றால் :

763. ஒலித்தக்கா லென்னு முவரி யெலிப்பகை
நாக முயிர்ப்பக் கெடும்.

ப. ரை : உவரி எலிப்பகை ஒலித்தக்கால் என் ஆம்? நாகம் உயிர்ப்பக் கெடும் = கடல் போன்ற எலிகளின் கூட்டம் (பகைமை பேசி) கூச்சல் போட்டால் என்ன ஆகிவிடும்? ஒரு நாகப் பாம்பு சீறினால் உடனே (அந்த எலிக் கூட்டம்) கலைந்து ஓடிவிடும்.

பொ. ரை : கணக்கற்ற எலிகள் சமுத்திரம் போல் கூடி பகைமை பேசி யுத்தக் கூச்சல் போட்டாலும் அதனால் என்ன பயன்? ஒரு நாகப்பாம்பு ஒரு சீற்றம் சீறினாலும் அத்துணை பெரிய எலிக் கூட்டமும் உடனே கலைந்து ஓடிவிடும்.

வி - ம் : 'நாகம் உயிர்ப்ப' என்பது நல்ல பாம்பு சிறுவது. கெடும் — ஒழிந்துவிடும். எண்ணற்ற எலிகள் கடல் போலக் கூடி ஓசை செய்தாலும் ஒரு நல்ல பாம்பு சீறின உடனே அவை பயந்து கலைந்து ஓடிவிடும். அதுபோல் யுத்தப் பயிற்சி யில்லாதவர்கள் எவ்வளவு பெருங் கூட்டமாகக் கூடி யுத்த முழக்கம் செய்தாலும் யுத்தப் பயிற்சியுள்ள ஒரு சிலருக்கு முன் நிற்க முடியாது என்பது கருத்து.

ஆகையால் ஒரு நாட்டில் நிலையான மூலபல சேனை எப் போதும் இருக்க வேண்டும். அது யுத்தமில்லாவிட்டாலும் யுத்தப் பயிற்சிகளைப் பழகிக் கொண்டே இருக்க வேண்டும். அந்த யுத்தப் பயிற்சியும் அதனால் உண்டாகும் மன உறுதி யும் என்ன வென்றால் :

764. அழிவின் றறைபோகா தாகி வழிவந்த
வன்க ணதுவே படை.

ப. ரை : அழிவு இன்றி, அறை போகாது ஆகி, வழி வந்த வன்கணதுவே படை = கட்டுக் கலையாமல், பகைவருக்கு இடங் கொடுத்துப் பணிந்து போகாததாகி பழக்கத்தால் வருகின்ற மன வலிமை உள்ளதே சேனை.

பொ. ரை : அணிவகுப்புக் கலையாமலும் பகைவருடைய வஞ்ச கத்துக்கு உட்பட்டு பணிந்து விடாமலும் பழக்கப்படுகிற மன உறுதி உடையதே சேனை எனப்படும்.

வி-ம்: 'அழிவு' என்று இங்கே சொல்லப்படுவது எதிர்ப்புக் கஞ்சி அணிவகுப்பு 'சிதைந்து தாறு மாருகப் போவது'- 'அறை போதல்'—விட்டுக் கொடுத்துப் பணிந்து விடுவது. 'வழி வந்த வன்கண்'—பழக்கப் படுத்துவதால் வருகிற மன உறுதி. இங்கே 'வழி' என்பதற்கு வழக்க ஒழுக்கப் பயிற்சி என்பது பொருள். ஆகையால் இங்கே சொல்லப்படுகிற 'வன்கண்மை' யுத்தப் பயிற்சிகளால் உண்டாகிற மன வலிமை. பிறப்பினுல் வரக்கூடியதைப் பற்றி இங்கே பேச்சில்லை. கட்டுக் கலேயாமலும் பணிந்து விடாமலும் இருக்கப் பயிற்சி கொடுக்கப்பட்ட மனவலிமை உடையதே சேனை- என்பது கருத்து.

அப்படி, கட்டுக் கலேயாமலும் அடிபணியாமலும் நிற்கப் பழக்கப் படுவதனுல் உண்டாகும் பயன் என்ன வென்ருல்:

765. கூற்றுடன்று மேல்வரினுங் கூடி யெதிர்நிற்கு
மாற்ற லதுவே படை.

ப. ரை: கூற்று உடன்று மேல் வரினும் கூடி எதிர் நிற்கும் ஆற்றலதுவே படை = எமனே கூட கோபத்தோடு படையெடுத்து தம்மேல் வந்தாலும் (அணி வகுப்புக் கலேயாமல்) சேர்ந்து எதிர்த்து நிற்பதைச் செய்யக் கூடியதே சேனை.

பொ. ரை: எமனே சினங் கொண்டு தம்மீது படையெடுத்து வந்தாலும்கூட அணிவகுப்புக் கலேயாமல் சேர்ந்து எதிர்த்து நிற்பதான காரியத்தை ஆற்றக் கூடியதே சேனை.

வி-ம்: உடன்று—சினங் கொண்டு. 'கூடி' என்பதற்கு 'நெஞ்சொத்து' என்று பொருள் கொள்வது முற்றிலும் தவருனது. 'கூடி' என்பதற்கு 'ஒன்ருகச் சேர்ந்து நின்று' என்பதுதான் பொருள். எமனே சினங்கொண்டு படையெடுத்து வந்தாலும் கூட, கட்டுக் கலேயாமல் சேர்ந்து எதிர்த்து நிற்கக் கூடிய பழக்கம் உள்ளதுதான் சேனை—என்பதும் அதனுல் அணி வகுப்புக் கலேயாமல் கூடி நிற்பதே சேனைக்கு ஆற்றல் என்பதும் கருத்து.

ஒரு சேனைக்குச் சிறப்புண்டாக்கும் காரணங்கள் நான்கு. அவையாவன:

766. மறமான மாண்ட வழிச்செலவு தேற்ற
மெனநான்கே யேமம் படைக்கு.

ப. ரை: மறம், மானம், மாண்ட வழிச்செலவு, தேற்றம் என நான்கே படைக்கு ஏமம் = அச்சமில்லாமை, (வீரத்துக்குத்

தகாத காரியங்களைச் செய்து விடக் கூடாதென்று) பழி பாவங்களுக்குக் கூசுகின்ற மானம், (பார்த்தவர்கள் அச்சமும் மதிப்பும் அடையும்படியாக அணி வகுத்துக் கட்டுப்பாடான) வழி நடை, (எந்த சண்டையை எப்படி நடத்துவது என்ற) தெளிவு என்ற இந்த நான்கே ஒரு சேனைக்குப் பெருமை தரும் காப்புகள்.

பொ. ரை : அச்சமற்ற தன்மை, வீரத்துக்குத் தகாத பழிபாவங்களைச் செய்துவிடக் கூடாதென்ற மானமுடைமை, பார்த்தவர்கள் மதிக்கும்படியாக அணிவகுப்புடன் கெம்பீரமான வழி நடை, மேற்கொண்ட போரை நடத்த வேண்டிய திட்டத்திலும் முறையிலும் தெளிவான அறிவு, ஆகிய இந்த நான்குமே ஒரு சேனையின் பெருமைக்குக் காவலாக உள்ளவை.

வி-ம் : 'மறம்' என்பது உயிரை வாங்கவோ அல்லது உயிரைக் கொடுக்கவோ அஞ்சாத தன்மை. 'மானம்' ஆண்மைக்குத் தகாத காரியங்களைச் செய்து விடக் கூடாதென்ற நாணுடைமை. அதாவது நிரபராதிகள், அஞ்சினோர், அடிபணிந்தவர், குழந்தைகள், பெண்கள், கிழவர்கள் முதலியவர்களைத் துன்புறுத்தல் முதலிய மானமற்ற காரியங்களைச் செய்யாமை. 'மாண்ட வழிச் செலவு' என்பதற்கு 'முன் வீரராயினோர் சென்ற நன்னெறிக்கட்சேறல்' என்று பொருள் கொள்வது மிக்கத் தடுமாற்றமானது. ஏனெனில் 'மானம்' என்பதிலேயே அந்த 'நன்னெறி' அடங்கி விட்டது. பகைவர்களும் பார்த்த உடன் பயந்து விடக்கூடிய கம்பீரமான வழிநடையைத்தான் இங்கே 'மாண்ட வழிச் செலவு' என்று சொல்லுகிறார். 'தேற்றம்' என்பது சேனைக்குள்ள தேற்றமேயல்லாது அரசனுக்குள்ள தேற்றம் அல்ல. சேனைக்குத் தன் செயல் முறையில் தெளிவான திட்டமிருக்க வேண்டும். என்பதுதான் இங்கே 'தேற்றம்' என்று சொல்லப்படுவது. அஞ்சாமை, வீரமற்ற காரியங்களைச் செய்யக் கூசுதல், கெம்பீரமாக அணிவகுத்த வழிநடை, செயல் முறையில் தெளிவான திட்டம் இந்த நான்கும்தான் சேனைக்குப் பெருமை தரக்கூடியவை – என்பது கருத்து.

அந்த தேற்றம் என்பது என்னவென்றால் :

767. தார்தாங்கிச் செல்வது தானை தலைவந்த
போர்தாங்குந் தன்மை யறிந்து.

ப. ரை : தலைவந்த போர்தாங்கும் தன்மை அறிந்து தார்தாங்கி செல்வது தானை = அப்போதைக்கு நேரிட்டுள்ள போரை நடத்த வேண்டிய விதத்தை அறிந்து (அதற்குத் தகுந்தபடி) அணிவகுத்துச் செல்லத் தெரிந்தது சேனை.

பொ. ரை: (போர் மூண்டு விட்ட காலத்தில்) அப்போதைக்கப் போது ஏற்படுகிற நிலைமைக்குத் தக்கபடி (மாற்றி மாற்றி) வியூகம் வகுத்துக்கொண்டு பகைவர் மேற் செல்லத் தெரிந்துள்ளதே சேனை.

வி-ம்: யுத்தத்தில் எதிரிகளுடைய முயற்சிகளை அறிந்து அவற்றிற்கேற்றவாறு உடனுக்குடன் போர் முறையை மாற்றி, அந்தந்த நிலைமைக்கு வேண்டியபடி படை வகுத்துக் கொள்வது 'தார்தாங்குதல்'. அப்படிச் செய்துகொள்ளத் தெரிந்திருப்பதுதான் முன் சொன்ன 'தேற்றம்', என்பது கருத்து.

ஒரு சேனைக்குப் பலம் கொடுப்பதற்கு அதிலுள்ள வீரர்களுக்குத் தனித்தனியே உள்ள திறமையை விட அவர்கள் எல்லாரும் ஒரு முகமாகச் சேர்ந்து செய்கிற படைப்பழக்கப் பண்புகளே முக்கியம்:

768. அடற்றகையு மாற்றலு மில்லெனினுந் தானை
படைத்தகையாற் பாடு பெறும்.

ப. ரை: அடல்தகையும் ஆற்றலும் இல்எனினும் தானை படைத் தகையால் பாடுபெறும்=போர் புரிவதற்கு வேண்டிய தன்மையும் திறமைகளும் (படை வீரர்களுக்கு) இல்லாவிட்டாலும், சேனை அதன் படைப் பயிற்சிகளின் தன்மையினல் (மட்டுமே) பெருமை பெற்றதாகும்.

பொ. ரை: போர் புரிவதற்கு வேண்டிய மன உறுதியும் மற்றத் திறமைகளும் (சேனையில் உள்ளவர்களுக்கு) இல்லாவிட்டாலும் கூட, ஒரு சேனையானது அதிலுள்ளவர்களுடைய கட்டுப்பாடான படைக்குணத்தால் மட்டுமே வலிமை பெறும்.

வி-ம்: 'அடல்தகை' என்பது போர் புரிவதற்கு வேண்டிய மன வலிமை. 'ஆற்றல்' என்பது போர்த் துன்பங்களைத் தாங்கக் கூடிய உடல் வலிமை. 'படைத்தகை' என்பது – யுத்தம் இல்லாத காலங்களிலும் இடைவிடாத யுத்தப்பயிற்சி, கட்டுக் கலையாதிருத்தல், எதிரிக்கு இடங்கொடாமை, 'கூற்றுடன்று மேல் வரினும் கூடி எதிர் நிற்றல்' முதலிய சேனைத் தன்மைகள். 'பாடுபெறும்' என்பதற்கு இங்கே வலிமை பெறும் என்பது பொருள். ஒரு சேனையிலுள்ள போர்ச் சேவகர்களுக்கு மன வலிமையும் தேகவலிமையும் குறைவாக இருந்தாலும் கூட, சேனைக்குரிய கட்டுப்பாடான தன்மையே அதற்கு வலிமை தரக்கூடியது – என்பது கருத்து.

அந்த 'படைத் தகைமை' இருப்பதோடு படைத் தகைமையைக் கெடுக்கக் கூடிய அடியிலுள்ள மூன்று குறைகளும் இல்லாதிருக்கவும் வேண்டும். அக்குறைகளாவன:

769. சிறுமையுஞ் செல்லாத் துனியும் வறுமையு
மில்லாயின் வெல்லும் படை.

ப. ரை: சிறுமையும் செல்லா துனியும் வறுமையும் இல் ஆயின் படை வெல்லும்= (படை வீரர்களுக்குத் தகாத) சின்னத் தனங்களும் மனதை விட்டு நீங்காமல் இருந்து கொண்டே யிருக்கக்கூடிய வருத்தமும் (ஊதியம், தளவாடம் முதலியவை குறைவான) வறுமையும் இல்லாத சேனை வெற்றி பெறும்.

பொ. ரை: (படைவீரர்களுக்கு இருக்கத் தகாத) அற்பத் தனங் களும் (ஏதாவது காரணத்தால் தம்மரசனிடம் வருத்த முற்று) மனதில் இருந்து கொண்டிருக்கும் மனத்தாபமும் (ஊதியம், உணவு, உடை, ஆயுதங்கள் முதலியவை குறை வான) தரித்திரமும் இல்லாவிட்டால் தான் சேனை வெற்றி பெறும்.

வி - ம்: 'சிறுமை' என்பதற்கு எண்ணிக்கை குறைவு என்றும், படைவீரர்கள் சேனையை 'விட்டுப் போதல்' என்றும் பொருள் கொள்வது சரியல்ல. படைவீரர்கள் நிரம்பியுள்ள சேனையைப் பற்றித்தான் இங்கே சொல்லப்படுகிறது என் பது 'வெல்லும்படை' என்பதனல் நிச்சயமாகி விட்டது. ஆகையால் அந்த சேனைக்கு அற்பச் செயல்களின் ஆசை இருக்கக் கூடாது, என்பது தான் 'சிறுமை இல்லாயின்' எனப்படுவது. 'செல்லாத்துனி' என்பது மனதினின்றும் போகாமல் இருந்துகொண்டே யிருக்கும் 'மனக்குறை'. அதா வது தமக்குள்ள குறைகளை அரசனிடம் விண்ணப்பித்தும் அவற்றை அவன் நீக்காததால் உள்ள மனக்குறை. வறுமை என்பது போஷணைக் குறைவு, தளவாடக் குறைவு, முதலிய தரித்திரங்கள். ஒரு அரசன் தன்னுடைய சேனையை, கண்ணி யக் குறைவான பழக்கமில்லாததாகவும், எவ்வித மனக் குறையும் இல்லாததாகவும், சௌகரியக் குறையில்லாததாக வும், இருக்கப் பார்த்துக்கொள்ள வேண்டுமென்பது கருத்து.

முடிவாக, மேற்சொன்ன அமைவுகளெல்லாம் இருந்தாலும் சேனதிபதியும் தளகர்த்தர்களும் திறமையுள்ளவர்களாக அமையாவிட்டால் சேனை பயனற்றதாகும்.

770. நிலைமக்கள் சால வுடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி யில்.

ப. ரை: நிலைமக்கள் சால உடைத்து எனினும் தலை மக்கள் இல்வழி தானை இல்=போர்ச் சேவகர்கள் மிகுதியாக உள்ள தாக இருந்தாலும் தலைவர்கள் (சரியாக) அமையா விட்டால் சேனை (இருந்தும்) இல்லாததாகும்:

பொ. ரை : போர் வீரர்கள் எண்ணிக்கையில் மிகுந்ததாக உள்ள தானாலும் சரியான தளகர்த்தர்கள் இல்லாத சேனை பயனற்ற தாகும்.

வி - ம் : நிலைமக்கள் — படைவீரர்கள். தலைமக்கள் — சேனாதிபதி, உபசேனாதிபதி முதலிய அதிகாரிகள். சேனை எவ்வளவு பெரி யதானாலும் தக்க படைத்தலைவர்கள் இல்லாவிடில் பயனற்ற தாகும் என்பது கருத்து.

அதி. 78—படைச்செருக்கு

['படைச் செருக்கு' என்பது படை வீரனுடைய பெருமை. அதாவது படை தொடுப்பதற்கு முன் எச்சரிக்கை செய்தல், எதிர்ப்பவரையன்றி முதுகிட்டவர்கள் மேல் எய்யாமை, தன் அரசனுக்காக உயிர் விடுவதில் மகிழ்ச்சி, முதலிய வீரத் தன்மைகள். இது போர் வீரர்களைக் கருதிச் சொல்லப்படு வது.]

771. என்னைமுன் னில்லன்மின் றெவ்விர் பலரென்னை
முன்னின்று கன்னின் றவர்.

ப. ரை : தெவ்விர்! என் ஐமுன் நில்லன்மின்; என் ஐமுன் நின்று கல் நின்றவர் பலர்=பகைவர்களே! என் அரசனை எதிர்த்து நிற்க வேண்டாம்; என் அரசனை எதிர்த்து நின்று (இறந்து போய்) கல் நாட்டப் பெற்றவர் பலர்.

பொ. ரை : பகைவர்களே! என் அரசனை எதிர்த்துப் போர் செய்ய வேண்டாம். எச்சரிக்கிறேன். ஏனெனில் என் அர சனை எதிர்த்து நின்ற பலரும் மாண்டொழிந்து கல் நாட்டப் பெற்றார்கள்.

வி - ம் : 'ஐ' என்ற தனி யெழுத்துக்கு 'அரசன்' அல்லது 'தலைவன்' என்று பொருள். 'கன்னின்றவர்' என்பது போரில் கொல்லப்பட்டு கல்நாட்டப் பெற்றவரைக் குறிப் பது. போரில் உயிர் துறந்த ஒவ்வொரு வீரனுக்கும் ஞாபகச் சின்னமாக ஒவ்வொரு கல்லை அவன் இறந்த இடத்தில் நட்டு வைப்பது பண்டைய வழக்கம். போர் வீரன், தான் படை தொடுக்கு முன்னால் பகைவர்களுக்கு எச்சரிக்கை செய் வான் — என்பது கருத்து.

அத்துடன் ஒரு வீரன், தனக்கு அஞ்சி ஓடுகிறவன் மேல் ஆயுதப்பிரயோகம் செய்து வெல்வதைக் காட்டிலும் தன்னை எதிர்ப்பவனிடம் தோல்வியுறுவதையே மேலாகக் கருது வான் :

**772. கான முயலெய்த வம்பினில் யானை
பிழைத்தவே லேந்த லினிது.**

ப. ரை: கானம் முயல் எய்த அம்பினில் யானை பிழைத்த வேல் ஏந்தல் இனிது = காட்டில் (அஞ்சி ஓடுகிற) முயலின் மீது குறி தவருமல் பாய்ச்சின அம்பைக் கையில் பிடித்திருப்பதை விட (எதிர்த்து வரும்) யானையின் மீது செலுத்திக் குறிதவறிப் போன வேலாயுதத்தைக் கையில்வைத்திருப்பது (வீரனுக்கு) இனிமையானதாகும்.

பொ. ரை: கானகத்தில் (அஞ்சி ஓடுகின்ற) முயலைக் குறிதவருமல் அடித்து விட்ட அம்பைக் கையில் வைத்திருப்பதை விட (பயமின்றி எதிர்க்கவல்ல) யானையைத் தாக்கிக் குறி தவறி விட்ட வேலாயுதத்தை உடையவனுக இருப்பது வீரனுக்கு இனிமையாகும்.

வி-ம்: 'அம்பு' என்பது தூரத்திலிருந்து வில்லில் தொடுத்துப் பாய்ச்சுகிற ஆயுதம். 'வேல்' என்பது வெகு சமீபத்திலிருந்து தன் கையிற் பிடித்துக்கொண்டு எதிரியைக் குத்துகின்ற ஆயுதம். தூரத்திலிருந்து அம்பு விடுவதில் தனக்கு அபாயம் இல்லை. தைரியமும் வேண்டியதில்லை. பக்கத்திலிருந்து வேல் கொண்டு தாக்குதல் அபாயம் மிக்கது. அதற்கு தைரியமும் அதிகம் வேண்டும், வெகு சிறிய பிராணியாகவும் மனிதனுக்கு ஒரு தீங்கும் செய்யாததாகவும் பயந்து வெகு வேகமாக ஓடிவிடக் கூடியதுமான ஒரு முயலின் மீது தூரத்திலிருந்து குறி தவருமல் அம்பு விடுவது வெகு திறமையுள்ள காரியம் என்ருலும், அதைக் காட்டிலும் வெகு பலம் பொருந்தியதும் மனிதனை நொடிக்குள் மடித்து விடக் கூடியதுமான ஒரு யானையை அதனருகிற் சென்று வேலினுல் குத்த முயல்வது, அஞ்சாமையும் ஆண்மையும் வேண்டிய வீரச் செயல் ஆகும். அது போல் பலவீன முள்ளவர்களாகவும் பயந்து ஓடுகிறவர்களாகவும் உள்ளவர்கள் மீது படை தொடுப்பதைக் காட்டிலும் பலமுள்ள எதிரிகளைத் தாக்குவதையே வீரன் தனக்குப் பெருமையாகக் கருதுவான் என்பது கருத்து.

வீரனுக்கு ஆண்மை யென்பதும் ஆற்றலென்பதும் போர் புரிவதும் பிறரைக் கொன்று விடுவதும் அல்ல. பின் எதை ஆண்மையாகவும் ஆற்றலாகவும் வீரன் மதிப்பான் என்ருல்:

**773. பேராண்மை யென்ப தறுகண்ணென் றுற்றக்கா
லூராண்மை மற்றத னெஃகு.**

ப. ரை: தறுகண் பேராண்மை என்ப; ஒன்று உற்றக்கால் ஊராண்மை மற்று அதன் எஃகு—அச்சமின்மையே சிறந்த

ஆண்மை எனப்படும்; ஒரு கட்டாயம் ஏற்பட்டபோது (போர் புரிந்து வெல்லும்) ஆற்றல் அதற்கு ஒரு கருவி.

பொ. ரை: ஆண்மைக்குச் சிறப்பு அச்சமற்ற தன்மையே எனப் படும்; ஒரு அவசியம் நேரிடும் போது போர் புரிந்து, கொண்டுசெலுத்தி வெல்லுவது அந்த பேராண்மைக்கு ஒரு கருவியே யாகும்.

வி-ம்: 'தறுகண்' என்பது அச்சமில்லாமை. 'ஒன்று உற்றக் கால்' என்பது 'ஒரு நெருக்கடி ஏற்பட்டு அதனால் போர் நேரிட்டால் மட்டும்' என்பதைக் குறிப்பது. ஊராண்மை— ஊர்கின்ற ஆண்மை: அதாவது துன்பங்களைப் பொறுத்து காரியத்தைக் கொண்டு செலுத்தும் திறமை. அச்சமற்ற தன்மையே சிறந்த ஆண்மை; அவசியம் ஏற்பட்டால் மட்டும் யுத்தமும் புரிவது அந்த ஆண்மைக்கு ஒரு கருவி – என்பது கருத்து. அதிகாரத்தை ஒட்டி 'ஊராண்மை' என்பதற்குப் 'போர் செய்யும் படைச் செருக்கு' என்று பொருள் கொள்ள வேண்டும்.

பேராண்மையின் ஊராண்மையுடைய வீரன், தன்னிலும் வலிமை மிகுந்தவர்களை வெல்லுவதையே விரும்பி அவ் வெற்றியில் மகிழ்ச்சியடைவான்:

**774. கைவேல் களிற்றொடு போக்கி வருபவன்
மெய்வேல் பறியா நகும்.**

ப. ரை: கைவேல் களிற்றொடு போக்கி வருபவன் மெய்வேல் பறியா நகும்=கையில் இருந்த வேலாயுதத்தை ஒரு யானை யோடு போக விட்டு விட்டுத் திரும்பி வருகின்றவன் தன் உட லில் இருந்த வேறொரு வேலை இழுத்தெடுத்துக் கொண்டு மகிழ்ந்து சிரிப்பான்.

பொ. ரை: தன் கையிற் பிடித்திருந்த வேலாயுதத்தை ஒரு யானையின்மீது பாய்ச்சி, (உடலிற் பதிந்த வேலொடு அந்த யானை ஓடிவிட) யானையோடு விட்டுவிட்டுத் திரும்பி வந்த வீரன் தன் முதுகிற் கட்டியிருக்கும் (ஆயுதப் பொதியி லிருந்து) வேறொரு வேலை இழுத்தெடுத்துக் கொண்டு வேறு யானையைத் தாக்க விரும்பி மகிழ்ச்சி காட்டுவான்.

வி-ம்: 'கைவேல்' என்பது கையிலிருந்த வேல். 'மெய்வேல்' என்பது தன்முதுகிற் கட்டியிருந்த வேல். 'மெய்வேல்' என்ப தற்கு, அவனுக்குத் தெரியாமல் அவன் மார்பிற் பாய்ந்து அங்கேயே இருந்துகொண்டிருந்தவேல், என்று கொள்ளும் படி 'சின மிகுதியால் வேலிடை போந்ததறிந்திலன்' என்று பொருள் கொள்வது மிகவும் தவறானது. வேல் என்பது கைப்

பிடி, நீண்டு கூரிய முனையுடையதாக மிக்க கனமுள்ள ஆயுதம். கையிற் பிடித்துக் கொண்டே யானை போன்ற மிருகங்களை யும் எதிரிகளையும் குத்திக் கொல்ல உபயோகப்படுத்தப் படுகிற ஆயுதம். அப்படிப்பட்ட ஒரு வேல் ஒரு மனிதனுடைய மார்பிற் பாய்ந்து அங்கேயே தங்கியிருப்பதையும் அவன் அறியாமல் யானையின் மீது தன் கைவேலைப் பாய்ச்சி, போர் செய்து கொண்டிருந்து விட்டுப் பின் அந்த வேல் தன்மார்பில் பாய்ந்திருப்பதை அறிந்து மகிழ்ந்தான் என்பது அறிவுக்குச் சிறிதும் பொருந்தாது. 'களிற்றொடு போக்கல்' என்பதற்கு 'களிற்றினதுயிரைக் கொடு போமாறு விடுதல்' என்று பொருள் செய்வதும் சரியல்ல. வேல், யானையின் உடலிற் பாய அந்த யானை தோல்வியுற்று அஞ்சி வேலோடு ஓடிவிட – வேலும் அந்த யானையோடு போய்விட – என்றுதான் பொருள் கொள்ள வேண்டும் – படைச் செருக்குடைய வீரன் தன் கையிலிருந்த வேலாயுதத்தை ஒரு யானையின்மீது பாய்ச்சி, வேலோடு யானையை ஓடச் செய்துவிட்டுத் திரும்பி வந்து வேறுயானையைத் தாக்கத் தன் முதுகிற் கட்டிவைத்திருக்கும் ஆயுதங்களிலிருந்து வேறொரு வேலை இழுத்தெடுத்துக் கொண்டு மகிழ்வான் – என்பது கருத்து. மிகுந்த வலிமை யுடைய யானைக்கும் அஞ்சாமல் அதன் அருகிற்சென்று எதிர்த்து, தன் கையிலுள்ள வேல் கொண்டு அதைக்குத்தி வெல்லுவான் என்று, படைச்செருக்கின் அச்சமற்ற தன்மை யைக் காட்டவே இது சொல்லப்பட்டது.

அந்த அச்சமற்ற தன்மைக்கு இலக்கணம் என்னவென்றால்:

775. விழித்தகண் வேல்கொண் டெறிய வழித்திமைப்பி
னோட்டன்றோ வன்க ணவர்க்கு.

ப. ரை: வேல் கொண்டு எறிய விழித்த கண் அழித்து இமைப் பின் வன்கண்ணவர்க்கு ஓட்டு அன்றோ? = வேலாயுதத்தைக் கொண்டு குத்தினால் விழித்த கண்ணை மாற்றி இமை கொட்டி னாலும் (அது) அஞ்சாமை யுடையவர்களெனப்படும் வீரர் களுக்குத் தோல்வியுற்றுப் புறமுதுகு காட்டி ஓடுவதற்கு ஒப் பாகுமல்லவா?

பொ. ரை: வேலாயுதத்தைக் கொண்டு குத்தினால் திறந்த கண்களை மூடிச் சிமிட்டிவிட்டாலும், அது அச்சமற்றவர்கள் என்று சொல்லப்படும் (படைச் செருக்குடைய) வீரர்களுக் குத் தோல்வியுற்று முதுகிட்டு ஓடுவதற்குச் சமானமான தல்லவா?

வி-ம்: 'விழித்த கண்' என்பதற்குப் 'பகைவரை வெகுண்டு நோக்கிய கண்' என்று பொருள் செய்யக்கூடாது. இந்த அதி

காரம் போர் செய்வதைப் பற்றியதல்ல. போர் வீரனுடைய இலக்கணங்களை மட்டும் சொல்லுவது. 'ஓட்டு' என்பதற்கு 'போரில் புறங்கொடுத்து ஓடுவது' என்பது அர்த்தம் – அச்சமில்லாத போர் வீரன் தன்னை ஒருவன் வேலாயுதத்தைக் கொண்டு குத்தினாலும் விழித்த கண் சிமிட்டமாட்டான்; அப்படிச் சிமிட்டுவதைத் தோல்வியுற்று ஓடுவதற்குச் சமானமாக எண்ணுவான் என்பது கருத்து.

மேலும், படைச் செருக்குடைய போர்வீரன் எதிரியின் ஆயுதங்கள் தன்னுடைய முகத்திலும் மார்பிலும் புண்ணுண்டாக்கும்படி நேராகப் போர் புரிவானேயன்றி தன் அள்ளைப் புறங்களிலோ முதுகிலோ புண்ணுண்டாக்கும்படி முகத்தைத் திருப்புவதோ முதுகைக் காட்டுவதோ செய்யமாட்டான். முகத்திலும் மார்பிலும் அன்றி மற்ற இடங்களில் எதிரியின் ஆயுதங்கள் படவிடுவதைத் தனக்குப் பெருங் குற்றமாகக் கருதுவான்; தப்பித் தவறி முன்புறத்திலன்றி மற்ற இடங்களில் புண்ணுண்டாக நேர்ந்து விட்டால்:

**776. விழுப்புண் படாதநா ளெல்லாம் வழுக்கினுள்
வைக்குந்தன் னாளை யெடுத்து.**

ப. ரை: தன் நாளை எடுத்து, விழுப்புண் படாத நாள் எல்லாம் வழுக்கினுள் வைக்கும் = (படைச் செருக்குடையவன்) தான் போர் செய்த நாட்களை எண்ணிப் பார்த்து (அவற்றுள் முகத்திலும் மார்பிலும் படாமல்) வேறு இடங்களில் புண்பட்ட நாள்களைக் குற்றம் செய்துவிட்ட நாட்களாக கணக்கிடுவான்.

பொ. ரை: படைச் செருக்குடைய வீரன், தான் போர் புரிந்த நாட்களை எண்ணிப் பார்த்து. அவற்றுள் குற்றமற்ற புண்களாகிய முகப்புண் மார்புப் புண் இவைகளல்லாது வேறு இடங்களிற் புண்பட்ட (நாட்கள் இருக்குமானால்) அந்த நாட்களை, தனக்கு மாசுண்டாக்கிய நாட்களாக மதிப்பிடுவான்.

வி-ம்: 'நாளை எடுத்து' என்பது 'போர் செய்த நாட்களை எண்ணிப் பார்த்து' என்பதாம். 'வழுக்கினுள் வைக்கும்' என்பது 'குற்றங்களோடு சேர்க்கும்' என்ற பொருள் தர நிற்பதனால் 'விழுப்புண் படாத நாளெல்லாம்' என்பதற்கு விழுப்புண்களாகிய மார்பிலும் முகத்திலும் பட்ட புண்களல்லாமல் வேறிடங்களில் புண்பட்டுவிட்ட நாட்களையெல்லாம்– என்று பொருள் கொள்ள வேண்டும். அப்படியின்றி, ஒரு வீரன் தினந்தினம் விழுப்புண் படவேண்டுமென்று விரும்புவான் என்றும் அப்படி விழுப்புண் படாத நாட்களையெல்லாம் வீணாகக் கழிந்துபோன நாட்களாகக் கணக்கிடுவான் என்றும் பொருள் கொள்வது சரியல்ல. ஏன் எனில் படைச் செருக்

குடைய வீரன் சண்டை இல்லாத சமாதான காலத்தைச் சிறிதும் விரும்பாதவன் என்று அர்த்தமுண்டாகிவிடும். அப்படியானுல் 'அச்சமற்ற தன்மைதான் பேராண்மை, அவசியம் ஏற்பட்டால் போர் புரிவது அந்த பேராண்மையின் கருவி' என்ற பொருளில் 'பேராண்மை யென்ப தறுகண் ஒன் றுற்றக் கால் ஊராண்மை மற்றதன் எஃகு' என்ற குறள் பயனற்றதாகிவிடும். ஆதலால் படைச் செருக்குடைய வீரன் தான் போர் புரிந்த நாட்களை எண்ணிப் பார்த்து, அவற்றுள் விழுப் புண் அல்லாத வேறு புண்பட்ட நாட்கள் இருந்தால் அந்த நாட்களைத் தனக்கு மாசுண்டாக்கிய நாட்களாக மதிப்பான் – என்பது கருத்து.

அப்படிப்பட்ட வீரர்களைச் சிறப்பித்துப் பாராட்ட வேண்டும். ஏனெனில் அவர்கள் :

777. சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார்
கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

ப. ரை : சுழலும் இசை வேண்டி வேண்டா உயிரார்; கழல் யாப்பு காரிகை நீர்த்து = (தம்முடைய பெயரையும் சரித்திரத்தையும்) சுற்றிக்கொண்டிருக்கும்படியான புகழை விரும்பி உயிரை விரும்பாதவர்களுடைய காலில் வீர கண்டாமணி கட்டுவது அழகு தரக்கூடியது.

பொ. ரை : (தம்மைப் பற்றிய சரித்திரத்தில்) புகழ் சூழ்ந்திருக்க வேண்டும் என்பதை விரும்பி, உயிரின் மேலுள்ள ஆசையை விட்டுவிடக்கூடியவர்களுக்கு வீர கண்டை பூட்டுவது பெருமை தரத் தக்கது.

வி - ம் : 'வேண்டா உயிரார்' என்பது 'உயிரை வேண்டாதார்' என்ற பொருள் தருவது. 'கழல் யாப்பு' என்பது அந்த வீரர்களுக்கு அரசனும் மற்றவர்களும் வீரகண்டாமணிகளை அணிவித்துச் சிறப்புச் செய்வது. நல்ல காரியத்தைச் செய்தவர்கள் என்ற புகழ், தம்முடைய பெயரையும் சரித்திரத்தையும் சூழ்ந்திருக்க வேண்டு மென்பதையே மதித்து உயிரையும் மதிக்காத வீரர்களைப் போற்ற வேண்டும் – என்பது கருத்து.

அப்படிப்பட்ட வீரர்கள், அரசன் தமக்கு வீரக்கழல் பூட்ட வேண்டும் என்பதைக் கருதி காரியம் செய்பவர்கள் அல்ல. வீரக்கழல் பரிசு கொடுக்காமல் அரசன் தம்மைக் கடிந்து வருத்தப் படுத்தி விட்டாலும்கூட :

778. உறினுயி ரஞ்சா மறவ ரிறைவன்
செறினுஞ்சீர் குன்ற லிலர்.

ப. ரை : உறின் உயிர் அஞ்சா மறவர் இறைவன் செறினும் சீர் குன்றல் இலர்=அவசியம் ஏற்பட்டபோது உயிருக்காக அஞ்சாத படைவீரர்கள் அரசன் சினந்து தீமை செய்துவிட்டாலும் ஒழுங்கு குறைய மாட்டார்கள்.

பொ. ரை : சமயத்தில் உயிர் கொடுக்கவும் அஞ்சாத வீரர்கள் அரசன் தமக்கு வருத்த முண்டாக்கி விட்டாலும் தம் கடமையில் குறைந்துவிட மாட்டார்கள்.

வி-ம் : 'உறின்' என்பது அரசனுக்கோ நாட்டிற்கோ அபாயம் வரக்கூடிய 'சமயம் நேரிட்டால்' என்பதைக் குறிப்பது. 'செறினும்' என்பது 'வருத்த முண்டாகும்படி நடந்துவிட்டாலும்' என்ற பொருள் தருவது. சமயத்துக்கு உயிரையும் வெறுத்துப் புகழை விரும்புகிற வீரர்கள் தமது அரசன் தமக்கு வருத்த முண்டாகும்படி நடந்து விட்டாலும் தம் கடமையிற் குறைய மாட்டார்கள் என்பது கருத்து.

தனக்குத் தீங்கு செய்த அரசனுக்காக ஒருவன் உயிர் விடுவது சரியல்லவென்று அவன் மீது குற்றம் சொல்வாருண்டோவெனில் :

779. இழைத்த திகவாமைச் சாவாரை யாரே
பிழைத்த தொறுக்கிற் பவர்.

ப. ரை : இழைத்தது இகவாமை சாவாரை யாரே பிழைத்தது ஒறுக்கிற்பவர்=செய்து கொடுத்த சபதத்தை மீறக்கூடாது என்பதற்காக உயிர் கொடுக்கிறவர்களை யார் தான் குற்றம் செய்ததாக இகழ்வார்கள்.

பொ. ரை : ('அரசனுக்காக உயிரையும் கொடுப்பேன்' என்று தாம்) செய்து கொடுத்துள்ள சத்திய சபதத்தை மீறக்கூடாது என்பதற்காகவே உயிரையும் துறக்கக்கூடிய வீரர்களை யாரும் குற்றம் கூறி ஏளனம் செய்ய மாட்டார்கள்.

வி-ம் : 'இழைத்தது' என்பது தான் படை வீரனைச் சேர்ந்த போது 'அரசனுக்கும் நாட்டிற்கும் துரோகம் செய்யாமல் போர் நேர்ந்தால் உயிரையும் விடுவேன்' என்று 'செய்து கொடுத்த வாக்குறுதி' அரசன் தவறு செய்துவிட்டாலும் தான் செய்துகொடுத்த சபதத்தைக் காப்பாற்றுவதற்காக உயிரையும்விடக் கூடியவர்களை யார் குற்றங் கூறி ஏளனம் செய்ய முடியும்?—என்பது கருத்து.

அரசன் நாட்டைக்காக்கும் அதிபதியானதால் அவனுக்காக உயிர் விடுவது நாட்டிற்காக உயிர் கொடுப்பதாகும். அதனல் அப்படிப்பட்ட மரணம் மிகவும் விரும்பத்தக்கது :

780. புரந்தார்கண் ணீர்மல்கச் சாகிற்பிற் சாக்கா
டிரந்துகோட் டக்க துடைத்து.

ப. ரை: புரந்தார் கண் நீர் மல்க சாகில் பின் சாக்காடு இறந்து
கோள் தக்கது உடைத்து = நாட்டைக் காக்கும் அரசர் கண்
களில் நீர் பெருகும்படி (நாட்டிற்காக) உயிர் விட்டால்
அந்தச் சாவு மிகவும் கெஞ்சிக் கேட்டாவது அடையத் தக்கது.

பொ. ரை: நாட்டைக் காக்கும் அரசர்கள் அழுது கண்ணீர்
விடும்படியாக உயிர் விடப் பெற்றால் அப்படிப்பட்ட மரணம்
பிறரைக் கெஞ்சிக் கேட்டாயினும் அடையத் தகுந்தது.

வி-ம்: 'புரந்தார் கண் நீர் மல்க' என்றால் அரசன் அழுது
கண்ணீர் வடிப்பது. அரசன் அழுது துக்கப்படுவதென்றால்
நாடு முழுதும் துக்கப்படுவதாகும். அப்படி நாடு முழுதும் துக்
கப்படும்படி பொது நலத்துக்காக உயிர் விடுவது மிகவும்
போற்றத்தக்கது என்பது கருத்து.

அதி. 79—நட்பு

['நட்பு' என்பது மக்கள் ஒருவருக்கொருவர் ஒத்தாசை
யாக அன்புடன் நெருங்கிய பழக்கமுள்ளவர்களாக இருப்
பது. இந்த அதிகாரம் நல்லவர்களுடைய நட்பினால் அடை
யக்கூடிய நன்மைகளைப்பற்றியும் உயர்ந்த நட்பின் பெருமை
யையும் பற்றிச் சொல்லுவது. இது எல்லா மனிதர்களுக்
கும் பொது.]

781. செயற்கரிய யாவுள நட்பி னதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

ப. ரை: நட்பின் செயற்கு அரிய யா உள: அதுபோல் வினைக்கு
அரிய காப்பு யா உள = நட்பைப் போல செய்து கொள்ள
வேண்டிய சிறப்புடையவைகள் எவை? காரியத்துக்கு
அதைப் போன்ற பாதுகாப்பும் எவை உண்டு?

பொ. ரை: சினேகத்தைப் போல, தேடிச் செய்து கொள்ள
வேண்டிய சிறப்புடையது வேறு என்ன இருக்கிறது?
அதைப்போலக் காரியத்துக்குப் பாதுகாப்பளிக்கக் கூடிய
தும் வேறு என்ன இருக்கிறது?

வி-ம்: 'அரிய' என்பது 'சிறந்த' என்ற பொருளில் நிற்
கிறது. 'செயற்கரிய' என்பதற்கு 'தேடிச் செய்து

கொள்ள வேண்டியவற்றுள் சிறந்த’ என்று பொருள் கொள்ள வேண்டும் — நட்பைக் காட்டிலும் தேடிக் கொள்ள வேண்டிய சிறந்தது வேறில்லை. காரியங்களுக்கு அதைப் போன்று துணை செய்வதும் வேறில்லை — என்பது கருத்து.

அப்படி நட்பினரைத் தேடிக் கொள்ளுவதிலும் நற்குண முடையவர்களுடைய நட்பை அடைய வேண்டும் :

782. நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு.

ப. ரை : நீரவர் கேண்மை பிறை நிறை நீர; பேதையார் நட்பு மதிபின் நீர=குணமுடையவர்களின் நட்பு பிறைச் சந்திரன் வளர்வதைப் போன்றது; மூடர்களுடைய நட்பு முழுமதி தேய்வதைப் போன்றது.

பொ. ரை : நல்லவர்களுடைய சினேகம் பிறைச் சந்திரனைப் போல் நாளுக்கு நாள் வளரும்; மூடர்களுடைய சினேகம் பூரணசந்திரன் நாளுக்கு நாள் தேய்வதைப் போல் கொஞ் சங் கொஞ்சமாகக் குறைந்து விடும்.

வி - ம் : ‘நீர்’ என்றால் ‘குணம்’. ‘குணம்’ என்று தனியே சொன்னால் அது நல்ல குணத்தையே குறிக்கும் — நல்ல குண முடையவர்களுடைய நட்பு நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே யிருக்கும்; மூடர்களுடைய நட்பு நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகும் — என்பது கருத்து.

அது எப்படிப் போல் என்றால் :

783. நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு.

ப. ரை : பண்புடையாளர் தொடர்பு பயில் தொறும், நவில் தொறும் நூல் நயம் போலும்=நல்ல குணமுடையவர்களு டைய நட்பு பழகப் பழகப், படிக்க படிக்க ஒரு நல்ல நூலின் இனிமை (அதிகமாகத் தெரிவது) போன்றது.

பொ. ரை : நல்ல குணமுடையவர்களுடைய நட்பு பழகப் பழக இன்பம் அதிகரிக்கும்; (எப்படிப் போலென்றால்) படிக்கப் படிக்க ஒரு நயமான நூலின் சிறப்பு அதிகரிப்பது போல்.

வி - ம் : ‘நூல் நயம்’ என்றதனால் நல்ல நயமுள்ள நூலையே குறிக்கும். நல்ல குணமுள்ள ஒரு மனிதனை நல்ல நயமுள்ள நூலுக்கு ஒப்பாகச் சொல்லப் படுகிறது. ஒரு நயமுள்ள

நூலைப் படிக்குந் தோறும் அதிலுள்ள சிறந்த கருத்துகள் புதிது புதிதாகப் புலப்பட்டு இன்பமும் நன்மையும் பயப்பதைப்போல் ஒரு நல்ல மனிதருடன் பழகுந்தோறும் அவருடைய சிறந்த பண்புகள் புதிது புதிதாக புலப்பட்டு இன்பமும் நன்மையும் பயக்கும் – என்பது கருத்து.

நல்லவர்களுடைய சகவாசம் வெறும் சிரிப்பும் களிப்புமாக மட்டும் இருக்காது. பின் எப்படியென்றால் :

784. நகுதற் பொருட்டன்று நட்டன் மிகுதிக்கண்
மேற்சென் றிடித்தற் பொருட்டு.

ப. ரை : நட்டல் நகுதல் பொருட்டு அன்று ; மிகுதிக் கண் மேற் சென்று இடித்தல் பொருட்டு = (ஒருவரோடொருவர்) நட்பாக இருப்பது (இனிமையான பேச்சுகள் பேசி மகிழ்ந்து) சிரிப்பதற்காக மட்டும் அல்ல; தவறு செய்யும் போது வலியச் சென்று (குற்றத்தைத் தடுக்க ஒருவரை யொருவர்) இடித்துக் கூறுவதை (முக்கிய) நோக்கமாகக் கொண்டது.

பொ. ரை : ஒருவரோடொருவர் நட்பாக இருப்பது, தம்முள் இன்பமான விஷயங்களைப் பேசி மகிழ்ந்து சிரித்துக் கொண்டிருப்பதற்காக (மட்டும்) அல்ல; (ஒருவர் ஒரு) குற்றம் செய்யும் போது (மற்றவர் அதை எடுத்துக் காட்டி) இடித்துக் கூறித் தீமையை விலக்குவதையே முக்கிய நோக்கமாகக் கொண்டது.

வி - ம் : 'நகுதற் பொருட்டன்று' என்பதற்கு 'சிரித்துக் களிப்பதற்கு மட்டும் அல்ல' என்று பொருள் கொள்ள வேண்டும். ஏன் எனில் உயர்ந்த பண்புடைய நண்பர்களிடையேயும் மகிழ்ச்சியும் சிரிப்பும் இருக்கலாம். ஆனால் சிரிப்பும் களிப்புமே நோக்கமாக உள்ள பண்பிலா நட்புகள் போல இருக்காது என்பது குறிப்பு. 'மிகுதி' என்பதற்கு 'குற்றம்' என்பது பொருள். 'மேற் சென்று' என்பதற்கு 'பொறுப்போடு வலியச் சென்று' என்பது பொருள் – நட்பு கொள்வது வெறும் களியாட்டங்களுக்காக மட்டும் அல்ல; குற்றம் கண்டபோது வலியச் சென்று இடித்துக் கூறி திருத்துவதே நட்பின் பயன் – என்பது கருத்து.

உண்மையான நட்பு ஒருவரையொருவர் அடிக்கடி சந்தித்து சல்லாபிப்பதனால் மட்டும் உண்டாவதல்ல. பின் எதனால் என்றால் :

785. புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா
னட்பாங் கிழமை தரும்.

ப. ரை: புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான் நட்பாம் கிழமை தரும் = (நட்பு) பொருந்துவது (அடிக்கடி கூடிப்) பழகுவதை வேண்டுவதல்ல; உணர்ச்சிதான் நட்பு என்ற உரிமையைக் கொடுப்பது.

பொ. ரை: நட்பு பொருந்துவது அடிக்கடி சந்தித்துப் பழகுவதைப் பொறுத்ததல்ல; ஒத்த உணர்ச்சியிருந்தால் அதுவே நட்பின் உரிமையை உண்டாக்கும்.

வி-ம்: 'புணர்ச்சி' என்பதற்குப் 'பொருத்தம்' என்பது பொருள். 'பழகுதல்'—சந்தித்து சல்லாபிப்பது. 'உணர்ச்சி'— ஒருவரை யொருவர் விரும்புகிற ஒத்த உணர்ச்சி. நட்புப் பொருந்துவது அடிக்கடி கூடிப் பழகுவதால் மட்டும் உண்டாவது அல்ல: ஒருவரையொருவர் விரும்பும் ஒத்த உணர்ச்சி தான் அந்த உரிமையை உண்டாக்கும் — என்பது கருத்து.

உணர்ச்சி பொருந்தாமல் கூடிக் குலவிவிடுவதால் மட்டும் உண்டாகிற நேசம் நட்பாகாது. ஏன் எனில்:

786. முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்
தகநக நட்பது நட்பு.

ப. ரை: முகம் நக நட்பது நட்பு அன்று; நெஞ்சத்து அகம் நக நட்பது நட்பு = முகமும் முகமும் மகிழ உறவு கொள்வது நட்பல்ல; நெஞ்சின் உள்ளமும் உள்ளமும் மகிழ்ந்து கொள்ளும் படி இசையும் உறவே நட்பு.

பொ. ரை: முகமும் முகமும் மகிழ்ந்து உறவு கொண்டாடுவது மட்டும் நட்பு ஆகிவிடாது; நெஞ்சிலுள்ள உள்ளமும் உள்ளமும் விரும்பி மகிழும்படிப் பொருந்துகின்ற உறவே நட்பாகும்.

வி-ம்: 'நெஞ்சத் தகம்' என்றால் 'மனதின் உட்புறம்'. அதனால் மனதில் மேலாக மகிழ்ந்தாலும் போதாது. முழு மனமும் உள்ளூற விரும்பி மகிழ வேண்டும் — முகமும் முகமும் குலவும் உறவு வெறும் அறிமுகம்தான் ஆகும்; முழுமனமும் உள்ளூற விரும்பி மகிழும் உறவுதான் நட்பாகும் — என்பது கருத்து.

அப்படி 'நெஞ்சத்து அகம் நகப்' பொருந்திய நட்பின் தன்மை என்னவென்றால்:

787. அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க
ணல்ல லுழப்பதா நட்பு.

ப. ரை: அழிவினவை நீக்கி ஆறு உய்த்து அழிவின் கண் அல்லல் உழப்பதாம் நட்பு = தீங்குண்டாக்கும் செயல்களிலிருந்து

விலக்கி, நல்ல வழிகளில் செலுத்தி, தீங்கு நேர்ந்துவிட்டால் உடனிருந்து துன்பத்தை அனுபவிப்பதுதான் நட்பு.

பொ. ரை: (நண்பன்) தீமை தரக்கூடிய வழிகளிற் செல்லும் போது அவற்றினின்றும் அவனை விலக்கி, நல்ல மார்க்கத்தில் செல்லச் செய்து, அவனுக்கு ஒரு துன்பம் நேரிட்டபோது உட னிருந்து அத்துன்பத்தில் பங்கு கொள்வதுதான் நட்பு.

வி-ம்: 'அழிவினவை' என்பது அழிவு தரக்கூடியவை. 'ஆறுய்த்து'—'நன்னெறியின் போகச் செய்து'—அழிவு தரக்கூடிய வழிகளிலிருந்து நண்பனை விலக்கிவிட்டு நல்ல வழியைக் காட்டி, அப்படி காட்டப்பட்ட நல்ல வழியிற் செல்லாமல் அவன் அழிவினவையே செய்து துன்பம் வந்து விட்டால், தான் சொன்னபடி அவன் நடக்கவில்லை யென்ப தற்காகக் கைவிட்டு விடாமல் தானும் அவனுக்கு வந்த துன் பங்களை உடனிருந்து அனுபவிப்பதுதான் நட்பு—என்பது கருத்து.

ஒரு துன்பம் வந்து விட்டபோது சரியான நண்பன் எப்படி உதவுவான் எனில்:

788. உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே
யிடுக்கண் களைவதா நட்பு.

ப. ரை: உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு = இடையிற் கட்டிய ஆடை நழுவிவிட்ட ஒரு வனுடைய கை (தானாகவே உடனே சென்று மானங்காக்க) உதவுதல் போல் (நண்பனுக்கு ஒரு துன்பம் என்ற) உடனே ஓடி, துன்பத்தை நீக்குவதுதான் நட்பு.

பொ. ரை: இடையிற் கட்டிய ஆடை நழுவிவிட்ட ஒருவருடைய கை அவரறியாமலும் உடனே ஆடையை அணைத்து மானங் காப்பதைப் போல நண்பனுக்குத் துன்பம் வந்து விட்டதை அறிந்த அக்கணமே (அவன் கேளாமலும் தானே ஓடி) துன் பத்தை நீக்குவது தான் நட்பாகும்.

வி-ம்: 'உடுக்கை'—இடையிற் கட்டிய ஆடை. 'இழத்தல்' என்பதற்கு இங்கே 'நழுவுதல்' என்பது பொருள். ஆங்கே — அப்போதே. ஆடை நெகிழ்ந்த அக்கணமே ஒருவனுடைய கை தானாகச் சென்று உதவுதல் போல, துன்பம் வந்து விட் டதை அறிந்த அக்கணமே தானாக ஓடி துன்பம் நீங்க உதவு கின்றவனே நண்பன் – என்பது கருத்து.

அப்படிப்பட்ட உதவிகளை சலிப்பில்லாமல் சமயம் நேர்ந்த போதெல்லாம் செய்வதே தலைசிறந்த நட்பு:

789. நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனிற் கொட்பின்றி
யொல்லும்வா யூன்று நிலை.

ப. ரை: நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனில் கொட்பு இன்றி ஒல்லும்வாய் ஊன்றும் நிலை=நட்பு என்பதற்குச் சிறப்பான இருப்பிடம் எது என்றால் மனம் கோணாமல் முடிந்தபோதெல்லாம் ஓடி உதவும் தன்மை.

பொ. ரை: சிநேகம் என்பதற்கு உச்சமான இடம் எதுவென்றால், மனங்கோணாமல் முடிந்த மட்டிலும் நண்பனுக்கு உதவி அவனைத் தாங்குகின்ற தன்மைதான்.

வி-ம்: 'வீற்றிருக்கை'—சிறந்த இடம். 'கொட்பு' என்பது 'மனம் மாறுதல்'. 'ஊன்றுவது'—உதவி செய்து தாங்கி நிற்பது. 'நிலை—குணம் அல்லது தன்மை. நட்பு என்பதன் உச்சம் எதுவென்றால் நேர்ந்தபோதெல்லாம் முடிந்த மட்டிலும் உதவிகளைச் செய்து நண்பனை ஆதரிக்கும் தன்மையே—என்பது கருத்து.

அப்படிப்பட்ட உயர்ந்த இனமான நண்பர்கள், தாம் ஒருவருக்கொருவர் செய்யும் உதவிகளை விளம்பரப் படுத்திக் கொள்ள மாட்டார்கள்; ஏனெனில்:

790. இனைய ரிவரெமக் கின்னம்யா மென்று
புனையினும் புல்லென்னு நட்பு.

ப. ரை: இவர் எமக்கு இனையர் யாம் இன்னம் என்று புனையினும் நட்பு புல்லென்னும்=இவர் எமக்கு இப்படிப்பட்டவர் (இவருக்கு) நாம் இப்படிப்பட்டவர் என்று அழகுபடச் சொன்னாலும் நட்பின் பெருமை குறையும்.

பொ. ரை: (நண்பர்கள் ஒருவரைப்பற்றி யொருவர் பிறரிடத்தில்) இவர் எமக்கு இப்படிப்பட்ட அன்பர், இவருக்கு நாம் இத்தகைய அன்புடையோம் என்று அழகான முறையிற் சொல்லிக் கொண்டாலும் அது நட்பின் பெருமைக்குக் குற்றமாகும்.

வி-ம்: நண்பர்கள் ஒருவரைப்பற்றி யொருவர் தங்களுடைய உறவின் சிறப்பைப்பற்றி இன்னொருவரிடம் அலங்காரமாகச் சொல்லிக் கொண்டாலும் அது நட்பின் பெருமையைக் குறைத்து காட்டும்—என்பது கருத்து.

அதி. 80—நட்பாராய்தல்

['நட்பாராய்தல்' என்பது, நமக்கு நண்பராக்கிக் கொள்ள நாம் விரும்புகின்றவர்களுடைய குண நலத்தை நன்ருக ஆராய்ந்து, அவர் குற்றமற்றவர் என்பதை அறிந்து கொண்ட பின்பே அவரை நண்பராக நம்பிக்கை வைக்க வேண்டும் என்பது. இது எல்லாருக்கும் பொது.]

**791. நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு.**

ப. ரை: நட்பு ஆள்பவர்க்கு நட்டபின் வீடு இல்லை; நாடாது நட்டலிற் கேடு இல்லை=நட்பைக் கையாளுகின்றவர்களுக்கு (ஒருவரை) நட்பாகக் கொண்டபின் (அவரை) விட்டு விடுவது இல்லை; (அதனுல்) ஆராய்ந்தறியாமல் (தீயவர்களுடன்) நட்பு கொண்டு விடுவதைப் போன்ற குற்றம் வேறில்லை.

பொ. ரை: நட்பை அனுசரித்து நடக்கின்றவர்களுக்கு (ஒருவருடன்) நட்பு கொண்டபின் (அவரை) விட்டு விடுவது என்பது முடியாத காரியம்; அதனுல் ஆய்ந்தோய்ந்து பார்க்காமல் (தீயவர்களுடன்) நட்பு கொண்டு விடுவதைப் போன்ற குற்றமான காரியம் வேறில்லை.

வி-ம்: 'நட்பாள்பவர்' – நட்பின் முறையை அனுசரித்து நடப்பவர்கள். 'வீடு' – விடுபடுவது. 'நாடாது நட்டலின் கேடில்லை' என்பதிலுள்ள 'கேடில்லை' என்ற பதத்திஞல் 'தீயவர்களோடு' என்பதை வருவித்துக்கொள்ள வேண்டும். நட்பின் முறையை அனுசரிப்பவர்கள் நட்பானபின் விட்டுப் பிரியக் கூடாது; அதனுல் ஆராயாமல் தீயவர்களுடன் நட்பு கொண்டு விட்டால் அது தீராத துன்பந்தரும் – என்பது கருத்து.

ஆகையினுல்:

**792. ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாந் துயரந் தரும்.**

ப. ரை: ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான் கேண்மை தான் சாம் கடைமுறை துன்பம் தரும்=ஆராய்ந்தறிந்து (நண்பரை) தீர்மானித்துக் கொள்ளாதவனுடைய (தீய) உறவு அவன் சாகும் கடைசி காலம் வரையிலும் துயரம் உண்டாக்கும்.

பொ. ரை : ஆராய்ந்தறிந்து நண்பரைத் தேர்ந்தெடுத்துக்கொள்ளாதவன் (ஆராயாமல் செய்துகொள்ளும் தீய) நட்பு அவன் சாகும் கடைசி காலம் வரை துன்பம் தரும்.

வி - ம் : 'ஆய்ந்து' என்பது 'ஆராய்ச்சி செய்து' என்றும், 'தேர்ந்தெடுத்து' என்றும் இரண்டு பொருள்களில் முறையே உபயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. அதனால் 'ஆய்ந்து ஆய்ந்து கொள்ளாதான்' என்பதற்கு 'ஆராய்ந்து நண்பரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளாதவன்' என்று பொருள். 'கடை முறை தான்சாம் துயரம் தரும்' என்று கொண்டு 'முடிவிற்றான் சாதற் கேதுவாய துன்பத்தினைத் தன் மாற்றார் விளைக்க வேண்டாமற்றானே விளைக்கும்' என்று பொருள் செய்வது நல்லதல்ல. ஆராய்ந்து தேர்ந்தெடுக்காமல் தீயவர் நட்பு கொண்டு விட்டால் (நட்பாள்பவர்க்கு விடில்லை என்பதனால்) அந்த நட்பு சாகும்வரையிலும் துன்பம் தரும் - என்பது கருத்து.

நண்பரை 'ஆய்ந்து ஆய்ந்து கொள்வது' என்னவென்றால் :

793. குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா
வினனு மறிந்தியாக்க நட்பு.

ப. ரை : குணனும் குடிமையும் குற்றமும் குன்றா இனனும் அறிந்து நட்பு யாக்க=(ஒருவருடைய) நல்ல குணத்தையும் (அவருடைய) குடிப் பிறப்பையும் (அவருக்குள்ள) குற்றங்களையும் (அவர்) எப்போதும் பழகிவரும் (அவருக்கு) இனமானவர்களுடைய தன்மையையும் (ஆராய்ந்து) அறிந்து நட்பு கொள்ளுக.

பொ. ரை : (ஒருவருடன் நட்பு கொள்ளு முன் அவருடைய) நற்குணத்தையும் அவருடைய குடும்பத்தின் தன்மையையும் அவருக்குள்ள குற்றங்களையும் அவர் விடாமற் பழகி வரும் சகவாசங்களையும் ஆராய்ந்து அறிந்து கொண்ட பின் நட்பு கொள்ள வேண்டும்.

வி - ம் : 'குன்றா இனனும்' என்பதற்கு 'இடைவிடாத சகவாசம்' என்பது பொருள். 'நிலத்தியல்பால் நீர்திரிந்தற்றாகும்; மாந்தர்க்கு இனத்தியல்பதாகும் அறிவு' என்றபடி ஒருவனுடைய இயற்கைக் குணமும் குடிப்பிறப்பும் எப்படியிருந்தாலும் அவன் இடைவிடாது பழகிவரும் சகவாசத்திற்கிணங்க அவனுடைய செயல்கள் இருக்கும் என்பதனால் ஒருவனுடைய சகவாசங்களையும் அறிய வேண்டும் என்பதுதான்

இங்கே சொல்லப்படும் 'குணம்', 'இனம்' என்பன 'குணன்', 'இனன்' என்று 'ம'கரத்துக்கு 'ன'கரம் போலியாக உள்ளன – ஒருவருடைய நற்குணங்களையும் அவருடைய குடும்பத்தையும் அவருடைய குற்றங் குறைகளையும் அவர் இடைவிடாது பழகும் சகவாசங்களையும் அறிந்து நட்பு கொள்ள வேண்டும் – என்பது கருத்து.

மேற்சொன்ன எல்லாவற்றையும் ஆராய்ந்தறிய முடியா விட்டாலும்:

**794. குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக்
கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.**

ப. ரை: குடிப்பிறந்து தன்கண் பழி நாணுவானை கொடுத்தும் நட்பு கொளல் வேண்டும் = நல்ல குடியிற் பிறந்து, தனக்குப் பழிபாவம் வரக்கூடாது என்று அஞ்சுகிறவனை, விலைகொடுத்தாயினும் நண்பனாகக் கொள்ள வேண்டும்.

பொ. ரை: நல்ல குடும்பத்திற் பிறந்தவனாகவும் தன் மட்டில் பழி பாவங்களுக்கு அஞ்சுகிறவனாகவும் இருப்பவனை விலை கொடுத்தாயினும் நட்பாக்கிக் கொள்ள வேண்டும்.

வி-ம்: நல்ல குடிப்பிறப்பு, பழிக்கஞ்சும் தன்மை, ஆகிய இரண்டினுள் பல நற்குணங்களும் அடங்குமாதலால் இவ்விரண்டும் உள்ளவன் நட்புக்கு மிகவும் தகுதியுடையவன். 'தன் கண் பழிநாணுவானை' என்றதனால் அவன் குற்றம் குறைந்துள்ளவனாக இருப்பானாதலால் அவனுடைய சகவாசங்களைப் பற்றி ஆராய வேண்டியதில்லை, என்பதும் பெறப்படும்– நல்ல குடும்பத்திற் பிறந்தவனாகவும் பழிபாவத்துக்கு அஞ்சுபவனாகவும் உள்ளவனை எப்படியாவது நட்பாக்கிக் கொள்ள வேண்டும் – என்பது கருத்து.

மேலும் 'நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக் கண் மேற்சென்று இடித்தற் பொருட்டு' என்று முன் சொன்னபடி:

**795. அழச்சொல்லி யல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்.**

ப. ரை: அல்லது இடித்து அழச்சொல்லி வழக்கு அறியவல்லார் நட்பு ஆய்ந்து கொளல் = குற்றத்தை எடுத்துக்காட்டி இடித்துக் கூறி (குற்றத்தை உணர்ந்து நாமே அழும்படி இதமாகப்) பேசி நியாயத்தை அறிவிக்க வல்லவர்களுடைய நட்பை தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும்.

பொ. ரை: குற்றத்தை எடுத்துக் காட்டி இடித்துரைத்து (நம் குற்றத்தை நாமே உணர்ந்து) வருந்தும்படி (நல்ல முறையிற்) பேசி நியாயவாதம் செய்து (அறிவுறுத்த) வல்லவர்களுடைய நட்பை நிச்சயமாக்கிக் கொள்ள வேண்டும்.

வி - ம்: 'அல்லது' என்பது 'நல்லது அல்லாதது', அதாவது குற்றம்; 'வழக்கறிதல்' என்பது 'நியாயத்தை விளக்கிக் கூறுதல்'. 'அழ' என்பதற்கு 'வருத்தப்பட' என்ற அளவில் தான் பொருள். 'ஆய்ந்து கொளல்' – தீர்மானித்துக் கொள்வது – குற்றத்தை உணரும்படி இதமான முறையில் இடித்துக் கூறி, திருத்த வல்லவர்களுடைய நட்பை நிச்சயமாக்கிக் கொள்ள வேண்டும் – என்பது கருத்து.

அப்படி, குற்றம் நிகழ்ந்து கெடுதி வந்துவிடுகிற சமயங்களில்தான் உண்மையான நண்பர்களை அளந்தறிய முடியும்:

796. கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை
நீட்டி யளப்பதோர் கோல்.

ப. ரை: கேட்டினும் ஓர் உறுதி உண்டு; கிளைஞரை நீட்டி அளப்பதோர் கோல் = துன்பத்திலும் ஒரு பயன் உண்டு; (அது) நண்பர்களை நேராக அளந்து விடக்கூடிய ஒரு அளவு கோல்.

பொ. ரை: துன்பகாலத்திலும் ஒரு பலன் உண்டு; (அந்தப் பலன் என்னவென்றால்) நண்பர்களைச் சரியாக அளந்தறிய (அந்தத் துன்பகாலம்) தகுந்த கருவியாகும்.

வி - ம்: உறுதி – பயன். நீட்டி – கோணலின்றி நேராக. அதனால் 'நீட்டியளப்பது' என்பதற்கு 'சரியாக அளப்பது' என்று பொருள். 'கேட்டினும்' என்பதற்கு 'துன்பம் வந்து விட்ட காலத்திலும்' என்பது பொருள். துன்பம் வந்து விட்ட சமயந்தான் நண்பர்களைச் சரியாக அளந்தறிய உதவும் - என்பது கருத்து.

அப்படித் துன்பம் வந்தகாலத்தில் அளந்து பார்த்து, அந்த அளவையில் தேறாதவர்களை நண்பர்களாகக் கொள்ளாமல் விட்டு விடுவது:

797. ஊதிய மென்ப தொருவற்குப் பேதையார்
கேண்மை யொரீஇ விடல்.

ப. ரை: பேதையார் கேண்மை ஒரீஇ விடல் ஒருவற்கு ஊதியம் என்ப = (அப்படிப்பட்ட) மூடர்கள் நட்பை விலக்கி விடல் ஒருவனுக்கு ஆதாயமானது எனப்படும்.

பொ. ரை: (துன்ப காலத்தில் உதவாத) மூடர்களுடைய உறவை விலக்கி விடுவது ஒருவனுக்கு இலாபமான காரியம் என்று சொல்லப்படும்.

வி-ம்: 'பேதையார்' என்பதற்கு வெறும் 'மூடர்கள்' என்பது இங்கே பொருளல்ல. 'துன்ப காலத்தில் உதவாத மூடர்கள்' என்பது உள்ளர்த்தம். (அது முன்னுள்ள குறளாலும் பின்வரும் குறளாலும் விளங்கும்) 'ஒரீஇ விடல்' என்பது 'ஒருவி விடல்' என்பதன் மாற்றுருவம். 'ஒருவுதல்' என்பது 'விலக்கி விடுவது'. துன்ப காலத்தில் உதவாதவர்களை நட்பாகக் கொண்டு விடாமல் விலக்கி விடவேண்டும். அது இலாபமேயன்றி நஷ்டமல்ல — என்பது கருத்து.

துன்பகாலத்தில் உதவாதவர்களை நட்பாகக் கொண்டு விடாமல் நாம் விலக்கி விடவேண்டும் என்பது மட்டும் போதாது, அவர்களாக மறுபடியும் வந்தாலும் நட்பாக ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஏன் எனில்:

798. உள்ளற்க வுள்ளஞ் சிறுகுவ கொள்ளற்க
வல்லற்க ணாற்றறுப்பார் நட்பு.

ப. ரை: உள்ளம் சிறுகுவ உள்ளற்க; அல்லல்கண் ஆற்று அறுப்பார் நட்பு கொள்ளற்க=உள்ளத்தைக் குறுக்கிவிடக் கூடிய அற்பச் செயல்களை நினைக்கவும் கூடாது; (அது போல்) துன்ப காலத்தில் ஆறுதல் சொல்லக்கூட இல்லாது போனவர்களுடைய நட்பை மனதிலும் கொள்ளக் கூடாது.

பொ. ரை: மனதைக் குறுக்கிவிடக்கூடிய அற்பச் செயல்களை நினைப்பதும் தகாது; ஆகையினால் துன்ப காலத்தில் அருகிருந்து ஆறுதல் சொல்லக் கூட இல்லாது போனவர்களை நட்பாக மனதிலும் கொள்ளக் கூடாது.

வி-ம்: 'ஆற்று அறுப்பார்' — ஆறுதல் இல்லாது செய்பவர்கள். அற்பச் செயல்களை மனதிலும் நினைக்கக் கூடாது என்பதைப் போல துன்ப காலத்தில் ஆறுதல் சொல்லவும் இல்லாது போனவர்களை நட்பாக மனதிலும் நினைக்கக் கூடாது — என்பது கருத்து.

துன்பகாலத்தில் விட்டுப் போனவர்களை மனதிலும் கூட நட்பாக நினைக்கக் கூடாது என்பது ஏன் என்றால்:

799. கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை யடுங்காலை
உள்ளினு முள்ளஞ் சுடும்.

ப. ரை: கெடும் காலை கைவிடுவர் கேண்மை அடும்; காலை உள்ளினும் உள்ளம் சுடும்=கெடுதி வரும் சமயத்தில் கைவிடுகிறவர்களுடைய உறவு அழிவு உண்டாக்கும்; (குளிர்ந்த) காலை நேரத்தில் நினைத்தாலும் மனம் கொதிக்கும்.

பொ. ரை: துன்பகாலத்தில் கைவிடுகின்றவர்களுடைய உறவு அழிவையே உண்டாக்கும்; குளிர்ச்சி மிகுந்த நேரமாகிய காலை வேளையில் அவர்களை நினைத்தாலும் மனம் கொதிக்கும்.

வி - ம்: கெடுங்காலை—கெடுதி வந்த காலத்தில். 'அடுங்காலை' என்பதை, அடும் + காலை என்று பிரித்து 'அடும்' என்பதை 'கேண்மை'யோடு கூட்டி 'கேண்மை அடும்' என்று கொள்ள வேண்டும். 'காலை' என்பதற்குக் 'காலை வேளை' என்று பொருள் கொள்ள வேண்டும். அவ்வாறன்றி 'அடுங்காலை உள்ளினும் உள்ளம் சுடும்' என்று வைத்துக் கொண்டு அதற்கு 'தன்னைக் கூற்றடுங் காலத்து ஒருவன் நினைப்பினும் அந்நினைத்த உள்ளத்தைச் சுடும்' என்று பொருள் கொள்வது முற்றிலும் குற்றமானது. ஏன் எனில் ஒருவனை எமன் வந்து அடும்போது, மரண அவஸ்தையிலுள்ள அவன் கஷ்ட காலத்தில் தன்னைக் கைவிட்டவனை நினைப்பான் என்பதும் அப்போது அவன் மனம் சுடும் என்பதும் சிறிதும் பொருந்தாது. எமன் வந்து இழுக்கிற காலம், மனமும் தன்னினைவும் அற்றுப் போன காலம். கஷ்டம் வந்த சமயத்தில் கைவிடுகின்றவர்கள் உறவு அழிவுண்டாக்கும். அவர்களைக் குளிர்ந்த நேரத்தில் நினைத்தாலும் மனங் கொதிப்படையும்—என்பது கருத்து.

ஆகையினால் ஆராய்ந்து நட்பு கொள்ள வேண்டும். ஆராயாமல் ஒருவருடன் உறவு கொண்டு விட்டாலும்:

800. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து
மொருவுக வொப்பிலார் நட்பு.

ப. ரை: மாசற்றார் கேண்மை மருவுக; ஒன்று ஈத்தும் ஒப்பிலார் கேண்மை ஒருவுக=குற்றமற்றவர்களுடைய நட்பை விடாது வைத்துக் கொள்க; பொருத்தமில்லாதவர்களுடைய நட்பை ஏதேனும் ஒன்றைக் கொடுத்தாயினும் விலக்கி விடுக.

பொ. ரை: குற்றமற்றவர்களுடைய நட்பை விட்டு விடாது அணைத்துக்கொள்ள வேண்டும். பொருத்தமற்றவர்களுடைய உறவை செலவு செய்தாகிலும் விலக்கிவிட வேண்டும்.

வி - ம்: 'மருவுக' என்றால் 'தழுவிக் கொள்க' என்று அர்த்தம். அதாவது விட்டு விலகக் கூடாது என்பதாம். 'ஒருவுக'

என்ருல் 'நீக்குக' என்று அர்த்தம். 'ஈத்தும்' என்பது 'ஈந்தும்' என்பதன் வலித்தல். ஆராய்ந்துதான் நட்பு கொள்ள வேண்டும். ஆராய நேரமில்லாமல் உறவாகி விட்டாலும் குற்றமற்றவர்களுடைய நட்பை வைத்துக் கொண்டு பொருத்தமற்ற உறவுகளை நீக்கிவிட வேண்டும் — என்பது கருத்து.

அதி. 81—பழைமை

['பழைமை' என்பது புதிதாக ஆராய்ந்து, நட்பாகக் கொள்ளுவதோ, அல்லது தள்ளுவதோ செய்ய வேண்டிய தற்கு இடமில்லாதபடி, முன்னுலேயே நீண்ட நாளாகத் தன் குடும்பத்துக்கு நண்பர்களாக இருந்துவரும் 'பழைய நண்பர்கள்'. இவர்கள் தள்ளிவிட முடியாதவர்கள். அதனுல் அவர்கள் அந்தச் சிறப்பை இழந்துவிடாதபடி நடந்து கொள்ள வேண்டுமென்பதையும், அவர்கள் உரிமையை மிகப்படுத்தித் தவறு செய்து விட்டாலும் அவர்களைத் தள்ளிவிடக் கூடாதென்பதையும் இந்த அதிகாரம் சொல்லுகிறது. எல் லாருக்கும் பொது.]

801. பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

ப. ரை: பழைமை எனப்படுவது யாது எனின் யாதும் கிழமையை கிழ்ந்திடா நட்பு=பழைய உறவு எனப்படுவது எது என்ருல் எந்த உரிமையையும் கெடுத்து விடாமல் நடந்து கொள்ளும் நட்பாகும்.

பொ. ரை: பழைமையான உறவு என்று சொல்லப்படுவது எப்படி இருக்க வேண்டும் என்ருல் (தமக்களிக்கப்பட்டுள்ள) எந்த உரிமையையும் கெடுத்துக் கொள்ளாமல் நடந்து கொள்ளும் நட்பாம்.

வி-ம்: 'கிழமை' என்பது 'சலுகை', அல்லது 'செல்வாக்கு'. 'யாதும் கிழமை' என்பது 'எந்த சலுகையையும்' என்பதாம். 'கீழ்ந்திடா' என்பதற்கு 'கெடுத்துவிடாத' என்று பொருள். பழைமை பற்றி உறவாக இருப்பவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டுமென்ருல் பழைமையினுல் அவர்களுக்கிருந்து வருகிற எந்தச் சலுகையையும் தவறுன முறையில் பிரயோகப்படுத்தி விடாமலிருக்க வேண்டும் — என்பது கருத்து.

ஏன் எனில்:

802. நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்
குப்பாதல் சான்றோர் கடன்.

ப. ரை: நட்பிற்கு உறுப்பு கெழுதகைமை; அதற்கு உப்பாதல் சான்றோர் கடன் = நண்பர்கள் என்பதற்கு அடையாளம் (ஒருவரிடம் ஒருவர் கொண்டாடும்) உரிமை; அந்த உரிமைக்கு இனிமைதர நடந்து கொள்வது நல்லவர்களுடைய கடமை.

பொ. ரை: சினேகர் என்பதற்கு அடையாளம் ஒருவரிடம் ஒருவர் கொண்டாடும் உரிமை. அந்த உரிமையைக் கெடுத்து விடாமல் இனிமையாக நடந்து கொள்ள வேண்டியது நல்லவர்களுடைய கடமை.

வி-ம்: 'உறுப்பு' – இலக்கணம். கெழுதகைமை – உரிமை. உப்பு – சுவை. நட்புக்கு அடையாளம், ஒருவரிடம் ஒருவர் கொண்டாடும் சலுகைகள். அச்சலுகைகளைக் கெடுத்து விடாமல் நடந்து கொள்ள வேண்டியதை நல்லவர்கள் தம் கடமையாகக் கவனித்துக் கொள்ள வேண்டும் – என்பது கருத்து.

பழைமை நட்பின் தன்மையான உரிமையினால் ஒருவருடைய காரியத்தை இன்னொருவர் கேளாமல் செய்வதுண்டு. அதுதான் பழைமையின் உரிமை. அதை ஒப்புக் கொள்வதும் பழைமையின் கடமை. இல்லாவிட்டால்:

803. பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை
செய்தாங் கமையாக் கடை.

ப. ரை: கெழுதகைமை செய்தாங்கு அமையாக் கடை பழகிய நட்பு எவன் செய்யும்? = உரிமை பற்றி (ஒருவர் இன்னொருவருக்காக ஒரு காரியத்தை) செய்தபடி ஒத்துக் கொள்ளா விட்டால் நெடுநாள் பழகிய நட்பு என்ன பயனைச் செய்யும்?

பொ. ரை: (பழைமை நட்பின்) உரிமையினால் ஒருவர் இன்னொருவருக்காக ஒரு காரியத்தைச் (செய்து விட்டால் அதை) செய்தபடி (ஒத்துக் கொள்வதுதான் பழைமையின் கடமை) ஒத்துக் கொள்ளாவிட்டால் பழகிய நட்பு என்பது என்ன பயனுடையதாகும்?

வி-ம்: 'செய்தாங்கு' – செய்தபடியே. 'அமையாக் கடை' – ஒத்துக் கொள்ளாவிடில். நெடுநாள் பழகிய 'பழைமை' நண்பர்கள் உரிமை பற்றி ஒருவருக்காக மற்றவர் செய்துவிடும் காரியத்தை அப்படியே ஒத்துக் கொள்ள வேண்டும் – என்பது கருத்து.

அப்படி ஒருவருக்காக மற்றொருவர், கேளாமலேயே ஒரு காரியத்தைச் செய்து விடும்போது அந்தக் காரியம் நன்றாக முடிந்து விட்டால் :

804. விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற் கேளாது நட்டார் செயின்.

ப. ரை : நட்டார் கெழுதகையால் கேளாது செயின் விழை தகை யான் வேண்டி இருப்பர் = நண்பர்கள் (பழைமை பற்றிய) உரிமையினால் தம்மைக் கேளாது (தம்முடைய காரியத்தைச்) செய்தால் அது விரும்பத்தக்க தன்மையாக முடியுமானால் மகிழ்ந்திருப்பார்கள்.

பொ. ரை : பழைமையின் உரிமையினால் நண்பர்கள் (தம்முடைய காரியத்தை) தம்மைக் கேளாமல் செய்தால் அக்காரியம் நன்றாக முடிந்துவிட்டால் (அப்படிக் கேளாது செய்ததை யும்) விரும்பி மகிழ்வார்கள்.

வி - ம் : 'விழை தகையான்' என்பதற்கு 'விரும்பும் விதமாக முடிந்தால்' என்பது பொருள். 'செயின்' என்பது 'செய்து விட்டால்' என்ற பொருளில்நிற்பது. ஆகையினால் 'கேளாது செய்வது விழையப்படும் தன்மையுள்ளது' என்று பொருள் செய்யக் கூடாது. பழைமையான நண்பர்கள் உரிமையினால் ஒருவர் காரியத்தை இன்னொருவர் கேட்காமல் செய்வார். அப்படிச் செய்தால் அது இலாபமுள்ளதாகி முடியுமானால் சந்தோஷப்படுவது சகஜம்தான் — என்பது கருத்து.

ஆனால் அப்படிக் கேளாது செய்த காரியம் நன்மையாக முடியாமல் தீமையாக முடிந்து விட்டால் அப்போதுதான் பழைமை என்பதை மதித்துப் பொறுமை காட்ட வேண்டும் :

805. பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க நோதக்க நட்டார் செயின்.

ப. ரை : நட்டார் நோதக்க செயின் பேதமை ஒன்றோ பெரும் கிழமை என்று உணர்க = பழைமைபற்றிய நண்பர்கள் துன்ப முண்டாக்கத்தக்க காரியங்களைச் செய்து விட்டால் அறி யாமை என்ற ஒன்றுக்கு மட்டுமல்ல மிகுந்த உரிமையுடைய வர்கள் என்பதையும் உணர்ந்து (பொறுத்துக்) கொள்க.

பொ. ரை : பழைமைபற்றிய நண்பர்கள் (உரிமை கொண்டு கேளாமல்) துன்பம் தரத்தக்க காரியங்களைச் செய்து விட் டால் அதை அறியாத்தனத்தால் செய்து விட்டதாக என்று

வது ஒன்றோ டல்லாமல் அவர்கள் மிக்க உரிமை யுடையவர் கள் என்பதையும் கருதி பொறுத்துக் கொள்ள வேண்டும்.

வி-ம்: 'ஒன்றோ' என்பதற்கு 'ஒன்று மட்டுமா' என்பது பொருள். நெருங்கிய நண்பர்கள் நம்மைக் கேளாமல் நமக் காகச் செய்த ஒரு காரியம் நமக்குத் துன்பமுள்ளதாக நேர்ந்து விட்டால் (கோபித்துக் கொள்ளாமல்), தெரியாத் தனத்தால் செய்திருப்பார்கள் என்று மட்டுமின்றி அவர்கள் நமக்காகக் காரியம் செய்ய உரிமையுள்ளவர்கள் என்பதை யும் உணர்ந்து பொறுத்துக் கொள்ள வேண்டும் – என்பது கருத்து.

ஏன் எனில்:

806. எல்லைக்க ணின்றார் துறவார் தொலைவிடத்துந்
தொல்லைக்க ணின்றார் தொடர்பு.

ப. ரை: எல்லைக்கண் நின்றார் தொல்லைக்கண் நின்றார் தொடர்பு தொலைவு இடத்தும் துறவார் = (பழைமை நட்பின்) வரை யறிந்து நடக்கின்றவர்கள் பழைமை பற்றிய நண்பர்களை, (அவர்களால்) சேதம் வந்து விட்டாலும் கைவிட மாட்டார் கள்.

பொ. ரை: பழைமையான நட்பு என்பதன் பெருமையை மதித் துக் கட்டுப்பட்டு நடந்து கொள்ளுகிறவர்கள், பழைமையான நண்பர்களை, அவர்களால் தமக்கு ஒரு நஷ்டம் வந்து விட்டா லும் கைவிட்டுவிட மாட்டார்கள்.

வி-ம்: தொலைவு – நஷ்டம். தொல்லை – பழைமை. எல்லைக் கண் நிற்றல் – உட்பட்டு நடத்தல். பழைய நட்பு என்பதன் உரிமைகளுக்கு உட்பட்டு நடப்பவர்கள் பழைமை நண்பர் களால் துன்பம் வந்து விட்டாலும், உறவை விட்டுவிட மாட் டார்கள் – என்பது கருத்து.

பழைமை பற்றிய நண்பர்கள் அறியாத் தனத்தால் கேளா மல் செய்து விடுகிற காரியங்களால் நஷ்டம் வந்தாலும் பொறுத்துக் கொள்வார்கள் என்பதுமட்டும் அல்லாமல் பழைமை நண்பர்கள் வேண்டுமென்றே கஷ்டம் உண்டாக்கி விட்டாலும் கூட:

807. அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின்
வழிவந்த கேண்மை யவர்.

ப. ரை: அழிவந்த செய்யினும் அன்பின் வழிவந்த கேண்மை யவர் அன்பு அறார் = (பழைமை பற்றிய நண்பர், வேண்டு

மென்றே) அழிவு தரத்தக்கவைகளைச் செய்து விட்டாலும் வழிவழியாக அன்பு பற்றித் தொடர்ந்து வந்த நண்பர்கள் அன்பை அறுத்துவிட மாட்டார்கள்.

பொ. ரை: பழைமை பற்றிய நண்பர்கள், வேண்டுமென்றே அழிவு தரக்கூடிய காரியத்தைச் செய்து விட்டாலும் வாழையடி வாழையாக அன்பினால் தொடர்ந்து வரும் நட்புடையவர்கள் அன்பற்று நடந்து கொள்ள மாட்டார்கள்.

வி-ம்: அன்பின் வழிவந்த கேண்மை – அன்பு காரணமாக பல காலமாகத் தொடர்ந்து வந்த நட்பு. அன்பு பற்றிப் பரம்பரையாகத் தொடர்ந்து வரும் நண்பர்கள் ஒருவருக்கொருவர் வேண்டுமென்றே தீங்கு செய்து விட்டாலும் அன்பற்றுப் போகக்கூடாது – என்பது கருத்து.

நட்பின் பெருமையை மதிக்கின்றவர்கள், தமக்கு நெடு நாளாக நட்பாக உள்ளவர்களைப் பற்றி யாராவது குறை கூறி இழிவாகப் பேசினாலும் அதற்குக் காது கொடுக்க மாட்டார்கள். அப்படிப்பட்டவர்கள், தம்முடைய பழைய நண்பர்கள் தமக்கு 'அழிவந்த' தவறு செய்து விட்டால்:

808. கேளிழுக்கங் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கு
நாளிழுக்க நட்டார் செயின்.

ப. ரை: கேள் இழுக்கம் கேளா கெழுதகைமை வல்லார்க்கு நட்டார் செயின் நாள் இழுக்கம்=தமது நண்பர்களைப் பற்றி (பிறர்) குற்றம் கூறுவதைக் (காது கொடுத்துக்) கேட்கவும் விரும்பாத நட்பிற் சிறந்தவர்கள், (தம்முடைய) நண்பர்கள் தமக்குத் தவறு செய்து விட்டால் (அதைத் தம்முடைய) கெட்டகாலம் (என்றுதான் பொறுத்துக் கொள்வார்கள்).

பொ. ரை: பழகிய நண்பர்களைப் பற்றிப் பிறர் குற்றம் கூறுவதைக் கேட்கவும் விரும்பாத நட்புக் குணத்தில் சிறந்தவர்கள், தமது நண்பர்கள் குற்றம் செய்து விட்டால் அதைத் தம்முடைய பொல்லாத காலம் என்று பொறுத்துக் கொள்வார்கள்.

வி-ம்: 'கெழுதகைமை' என்பதற்கு இங்கே 'நட்பு' என்பது பொருள். 'கெழுதகைமை வல்லார்க்கு' என்பதற்கு 'நட்புக் குணத்தில் சிறந்தவர்களுக்கு' என்பது பொருள். 'நட்டார் செயின்' என்பதை 'நட்டார் இழுக்கம் செயின்' என்று கொள்ள வேண்டும். அப்படிக் கொள்ளாமல் 'நட்டார் இழுக்கம் செயின் நாள்' என்று கொண்டு, அதற்கு 'அவர் பிழை செய்வாராயின் அது பயன்பட்ட நாளாம்' என்று பொருள் செய்வது அறிவுக்கும் பொருந்தாது, நியாயத்துக்கும் விரோ

தம். பிழை செய்த நாளை பயன்பட்ட நாள் என்று எப்படிச் சொல்லுவது? அப்படிப் பொருள் செய்துவிட்டு, அதிலுள்ள நியாய விரோதத்தை, சரிப்படுத்த 'செய்து போந்துழி யல்லது அவ்வுரிமை வெளிப்படாமையின், செய்யாதன நாளல்லவாயின. இதனாற் பிழை பொறுத்தற் சிறப்புக் கூறப் பட்டது' என்று குழப்ப வேண்டியிருக்கிறது. நட்புக் குணத் திற் சிறந்தவர்கள் தம்முடைய நண்பர்களைப் பற்றிப் பிறர் குற்றம் கூறுவதைக் கேட்கவும் விரும்பமாட்டார்கள். நண் பர்கள் குற்றம் செய்து விட்டாலும் அதைத் தம்முடைய பொல்லாத காலமென்று எண்ணிப் பொறுத்துக் கொள் வார்கள் – என்பது கருத்து.

நெடு நாளாகப் பழகி வரும் பழைமை நண்பர்கள் உரிமை பற்றி, குற்றம் செய்துவிட்டால் அவர்களை அதற்காக விட்டு விடாமல் இருப்பது போற்றத் தக்க பெருங்குணம்:

809. கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை
விடாஅர் விழையு முலகு.

ப. ரை: கெடா அ வழிவந்த கேண்மையார் கேண்மை விடா அர் உலகு விழையும் = உறவு கெடாமல் பழகி வரும் பழைய நண்பர்களுடைய உறவை (குற்றம் செய்தாலும்) விட்டு விடாதவர்களை உலகம் விரும்பும்.

பொ. ரை: உறவு கெடாமல் பல காலமாகப் பழகி வரும் நண் பர்களுடைய தொடர்பை அவர்கள் குற்றம் செய்து விட் டாலும் விட்டு விடாமல் நட்பு பாராட்டுகின்றவர்களை உலகத் தார் பாராட்டுவார்கள்.

வி-ம்: 'கெடா அ வழி' என்பது 'கெடுதலில்லாத முறை'. முறைமை கெடாது பழகி வந்த பழைய நண்பர்கள் குற்றம் செய்தாலும் அவர்களை விட்டு விடாமல் இருப்பது மிகவும் பாராட்டத் தக்கது – என்பது கருத்து.

பழைமையுள்ள நண்பர்கள் தவறு செய்தாலும் விட்டு விடக்கூடாது என்பதற்காகத் தொடர்ந்து உறவு காட்டினால் மட்டும் போதாது. பின் என்ன செய்ய வேண்டுமென்றால்:

810. விழையார் விழையப் படுப பழையார்கட்
பண்பிற் றலைப்பிரியா தார்.

ப. ரை: பழையார் கண் பண்பின் தலைப் பிரியாதார் விழையார் விழையப் படுப = பழைமையான நண்பர்களிடத்தில் (அவர்

கள் குற்றம் செய்துவிட்ட பின்னும் முன்போலவே) அன்பு விடாமல் தொடர்ந்து நடந்து கொள்பவர்கள், விரும்பாதவர் களும் விரும்பத் தகுந்தவர்கள்.

பொ. ரை : பழைய நண்பர்கள் குற்றம் செய்து விட்டாலும் அவர்களிடத்தில் எப்போதும் போல அன்பாகவே நடந்து கொள்ளுகின்றவர்களைப் பகைவர்களும் பாராட்டுவார்கள்.

வி-ம் : தலைப்பிரிதல் = விட்டு விடுதல், நண்பர்கள் குற்றம் செய்து விட்டாலும் அவர்களிடத்தில் அன்பு விடாமல் நடந்து கொள்ளுபவர்கள் பகைவர்களாலும் பாராட்டப்படுவார்கள் — என்பது கருத்து.

அதி. 82—தீநட்பு

['தீநட்பு' என்பது, தீமை உண்டாக்கக் கூடிய நட்புகள். இன்னின்ன தன்மை யுடையவர்களுடைய நட்புகளை விலக்க வேண்டும் என்று சொல்லப்படுகிறது. இங்கே கவனிக்க வேண்டியது என்ன வெனில்: 'நட்பு' என்ற அதிகாரத்தால் ஒவ்வொருவருக்கும் நண்பர்கள் இருக்க வேண்டியது விரும் பத் தக்கது என்றும் அந்த நண்பர்கள், அறிவுறுத்தித் துணை செய்யக் கூடிய நல்லவர்களாக அமைய வேண்டும் என்ப தும் சொல்லப்பட்டது. அடுத்த அதிகாரமாகிய 'நட்பாராய் தல்' என்பதில் மக்களை ஆராய்ந்தறிந்து நல்லவர்களுடைய நட்பைக் கொள்ள வேண்டுமென்றும் தீயவர்கள் நட்பைத் தள்ள வேண்டுமென்றும் சொல்லப்பட்டது. ஆனால் நெடு நாளாகப் பழகி விட்ட பழைமையுள்ள நண்பர்களை அவர் கள் தவறு செய்தாலும், தள்ளிவிடவும் முடியாது என்பதனால் ஆராய வேண்டிய அவசியமில்லை யென்பது முன் அதிகாரத் திற் சொல்லப்பட்டது. இனி இந்த அதிகாரத்தில் தான் ஆராய்ந்து விலக்க வேண்டிய நட்புகளைப் பற்றிச் சொல்லப் படுகிறது.]

811. பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை
பெருகலிற் குன்ற லினிது.

ப. ரை : பருகுவார் போலினும் பண்பு இலார் கேண்மை பெரு கலின் குன்றல் இனிது = குடிப்பவர்களுக்குக் கள் களிப்புண் டாக்குவதைப் போன்று களிப்புண்டாக்கினாலும் (நட்புக்கு வேண்டிய) நற்குணம் இல்லாதவர்களுடைய உறவு அதிகப் படுவதைக் காட்டிலும் குறைந்து போவது நல்லது.

பொ. ரை : குடியர்களுக்குக் கள்ளைப் போல, ஆர்வப் போதை தரக் கூடிய உறவாக இருந்தாலும், அவர்கள் நட்பிற்குரிய

நற்குண மில்லாதவர்க ளென்பதை அறிந்தால், அவர்களுடைய உறவு வளர விடுவதைக் காட்டிலும் தளர விடுவது நல்லது.

வி-ம்: 'பருகுவார் போலினும்' என்பதற்கு 'தண்ணீர் குடிப்பதைப் போன்ருலும்' என்று பொருள் கொள்வதிற் சிறப்பில்லை. 'கள் குடிப்பதைப் போன்ருலும்' என்று கொள்வது தான் பொருத்தமானது. கள்ளானது அதைக் குடித்தவர்களுக்கு மேலும் மேலும் விரும்பும்படி போதை கொடுப்பது. அதைப் போல் சிலர் மேலும் மேலும் விரும்பும்படியான காரியங்களைச் செய்யலாம். ஆனுலும் அவர்கள் நட்பாகக் கொள்ளத்தக்க பண்புடையவர்கள் அல்லாதவராக இருந்தால் அவர் உறவை வளரவிடுவது தீமை பயக்கும். சிறுகச் சிறுகக் குறைத்து விடுவதே நல்லது – என்பது கருத்து.

அப்படி அறிந்து விலக்கி விடவேண்டிய பண்பிலா உறவுகள் எவை என்பதை ஆராய்வோம்: முதலாக, ஒரு சுயநலமான பயனை மட்டும் கருதி நட்பாட வருகிறவர்களை விலக்க வேண்டும்:

812. உறினட் டறிஞெருஉ மொப்பிலார் கேண்மை
பெறினு மிழப்பினு மென்.

ப. ரை: உரின் நட்டு அறின் ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை பெறினும் இழப்பினும் என் = தாம் ஒரு பயனுறும் போது நட்பு கொண்டாடி, அது தீர்ந்தவுடன் விலகி விடுகின்ற பொருத்தமற்றவர்களுடைய நட்பை அடைந்தா லென்ன இழந்தாலென்ன?

பொ. ரை: ஒரு நன்மை வேண்டும் போது நட்பு கொண்டாடி. அது இல்லாதபோது விட்டுப்போய் விடுகிற தகுதியற்றவர்களுடைய நட்பு இருந்தாலென்ன போனுலென்ன?

வி-ம்: ஒப்பிலார் – நட்புக்குத் தகுதியற்றவர்கள். ஒரு இலாபத்தைக் கருதி மட்டும் நட்பு கொண்டாடி, அது தீர்ந்த உடன் விலகி விடுகிறவர்கள் நட்புக்குத் தகுதியுடையவர்கள் அல்ல– என்பது கருத்து.

ஏன் எனில்:

813. உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது
கொள்வாருங் கள்வரு நேர்.

ப. ரை: உறுவது சீர்தூக்கும் நட்பும் பெறுவது கொள்வாரும் கள்வரும் நேர் = தமக்கு வரும் பயனைக் கருதி நட்பு கொண்

டாடுகிறவர்களும் வாங்குகின்ற பொருளைக் கருதி (காதல் கொண்டாடும்) வேசியரும் கள்வர்களும் தம்முள் ஒப்பான வர்கள்.

பொ. ரை: இலாபத்தைக் கருதி நண்பரைப் போல் நடிக்கிற வர்களும் பணத்தைக் கருதி காதல் உள்ளவர்களைப் போல நடிக்கிற வேசியரும் திருடுவதற்காக யோக்கியர் போல் நடிக்கிற கள்வரும் ஆகிய மூவரும் ஒரே மாதிரியானவர்கள்.

வி-ம்: சுயநலத்தைக் கருதி அப்போதைக்கு மட்டும் நட்பு கொண்டாடுகிறவர்கள் வேசையர்க்கும் கள்வருக்கும் சம மானவர்கள் — என்பது கருத்து.

மேலும், அபாயம் வந்தபோது அருகிருந்து உதவாதவர் களுடைய தொடர்பையும் விலக்கவேண்டும்; அவர்கள் நமக் குத் தீங்கு செய்தவர்கள் அல்லாவிட்டாலும்; நட்பாக நம்பத் தக்கவரல்ல :

814. அமரகத் தாற்றறுக்கும் கல்லாமா வன்னார்
தமரிற் றனிமை தலை.

ப. ரை: அமர் அகத்து ஆற்று அறுக்கும் கல்லா மா அன்னார் தமரின் தனிமை தலை=யுத்த களத்தில் ஒட்டம் அற்றுப் போகிற பயிற்சி யில்லாக் குதிரையைப் போன்றவர்கள் நண்பராக இருப்பதைக் காட்டிலும் (நாம்) தனியே இருப் பது மேல்.

பொ. ரை: யுத்த களத்தில், செலுத்திய திசையில் செல்லும் பயிற்சியில்லாத குதிரையைப் போல் நெருக்கடியான சம யத்தில் நினைக்கிற உதவிக்கு உதவாதவர்களுடைய நட்பு இருப்பதை விட இல்லாதிருப்பது மேல்.

வி-ம்: 'அமரகத்து' என்றால் 'போர்க்களத்தில்' என்பது பொருள். இந்த சொல்லால் போர் நேரிடுகின்ற போது வந்து உதவாத நட்பு அரசர்களையும் குறிப்பது இக்குறள். 'ஆற்றறுத்தல்'—ஒட்டத்தை அறுத்து விடல். 'கல்லாமா'— பயிற்சியில்லாத குதிரை. 'கல்லா மா அன்னார்' என்ற உப மானத்தால் சமயத்தில் ஓடியாடி வேண்டிய உதவி செய்யத் தெரியாதவர்களையும் நண்பராக நம்பிவிடக் கூடாது என்ப தாம். ஏனெனில் அவர்களை நம்பியிருந்தால் அபாயத்தில் சிக்கிக் கொள்ள நேரும். அவர்கள் இல்லாதிருந்தால் பிறரை நம்பியிருந்து மோசம் போகாமல், தம்மால் முடிந்ததை மட்டும் தாம் செய்து கொள்ளலாம். சமயத்துக்கு உதவாத வர்களையும் நண்பராக எண்ணி விடுவது கூடாது — என்பது கருத்து.

நமக்கு வேண்டிய சமயத்தில் அவர்களாக உதவி செய்யத் தெரியாதவர்களைக் காட்டிலும் உதவி செய்வதாக ஒப்புக் கொண்டு சமயத்துக்கு வராமல் இருந்து விடுகிறவர்கள் இன்னும் தகுதியற்றவர்கள் :

815. செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை
யெய்தலி னெய்தாமை நன்று.

ப. ரை : ஏமம் செய்து சாரா சிறியவர் புன்கேண்மை எய்தலின் எய்தாமை நன்று = பாதுகாப்புக்கு (வருவதாக ஏற்பாடு) செய்திருந்தும் வராத இழிகுணமுள்ளவர்களுடைய ஈனமான நட்பை அடைவதைவிட அடையாமலிருப்பது நல்லது.

பொ. ரை : பாதுகாப்புக்கு வருவதாக வாக்குறுதி செய்தும் வராமலிருந்து விடுகிற இழி குணத்தாரின் அற்ப சகவாசத்தை அடைவதைவிட அடையாதிருப்பது நல்லது.

வி-ம் : இந்தக் குறள் பொதுவாக எல்லா மக்களுக்கும் சிறப்பாக ஒருவருக் கொருவர் யுத்த காலத்தில் உதவி செய்வதாக உடன்படிக்கை செய்து கொள்ளும் அரசர்களுக்கும் உதவுவது. 'ஏமம் செய்து' என்பதற்கு 'ஒருவருக்கொருவர் பாதுகாப்பு என்பதை செய்தும்' என்பது பொருள். 'சாராச் சிறியவர்' – (ஒப்பந்தப்படி) வந்து சேராத அற்பர்கள். ஒருவருக்கொருவர் பாதுகாப்பளிப்பதாக ஒத்துக் கொண்டிருந்தும் வந்து சேராதவர்களுடைய நட்பு இருப்பதைவிட இல்லாமையே நல்லது – என்பது கருத்து.

அத்துடன் முட்டாள்களுடன் நெருங்கிப் பழகுவதும் விலக்க வேண்டியது :

816. பேதை பெருங்கெழீஇ நட்பி னறிவுடையா
ரேதின்மை கோடி யுறும்.

ப. ரை: பேதை பெரும் கெழீஇ நட்பின் அறிவுடையார் ஏதின்மை கோடி உறும் = அறிவில்லாதவனுடைய நெருங்கிய தொடர்பைவிட அறிவுடையவர்களுடைய பகைமை கோடி பங்கு நல்லது.

பொ. ரை : மூடனுடன் நெருங்கிய உறவுள்ளவனாக இருப்பதைவிட அறிவாளியுடன் மனத்தாபமுள்ளவனாக இருப்பது கோடி மடங்கு நல்லது.

வி-ம் : பேதை – முழுமூடன். கெழீஇ – கெழுவி: கெழுவி – நெருங்கி. ஏதின்மை – பகைமை. மூடனுடன் நெருங்கிய

நட்பு என்பது, அவனைக் கருதி அவன் விருப்பப்படி நடந்து அறிவைக் குறைத்துக் கொள்வது. அறிவாளியுடன் பகைமை என்பது, அறிவாளியைக் கருதி அவனை வெல்ல அவனைக் காட்டிலும் அறிவுள்ளவனாக முயலச் செய்வது. அதனால் மூடனுடைய நட்பைவிட அறிவாளியின் பகைமை நல்லது – என்பது கருத்து.

மூடர்களுடைய உறவைவிட விலக்க வேண்டிய உறவு எது வெனில் :

**817. நகைவகைய ராகிய நட்பிற் பகைவராற்
பத்தடுத்த கோடி யுறும்.**

ப. ரை : நகை வகையராகிய நட்பின் பகைவரால் பத்து அடுத்த கோடி உறும் = இகழ்ச்சிக்குரிய இனத்துடன் நட்பு வைப்பதைவிட பகைவர்களால் பத்து கோடி பங்கு நன்மை வரும்.

பொ. ரை : நிந்தனைக்குரிய வகையிற் சேர்ந்தவர்களுடைய நட்பைவிட பகைவர்களால் பத்து கோடி மடங்கு நன்மை உண்டு.

வி - ம் : 'நகை வகையர்' என்பது 'ஏற்கெனவே நிந்தனைக்கு ஆளாகி இகழப்பட்டு நிற்பவர்' அதாவது கொலை, கொள்ளை, விபசாரம் முதலிய நிந்திக்கத் தக்க குற்றமுள்ளவர்கள். நிந்தனைக்குரிய பழிகாரருடைய சகவாசம் பகைவர்களைவிட அளவுகடந்த தீமை உண்டாக்கும் – என்பது கருத்து.

காரியத் திறமையற்றவர்களையும் நமக்காக ஒரு காரியம் செய்யக்கூடிய நண்பராகக் கொள்ளக் கூடாது. அப்படிப்பட்டவர்கள் நமக்குத் தீங்கு செய்ய நினைப்பவர்களல்லாவிட்டாலும் காரிய அளவுக்கு அவர்கள் நம்பிவிடத்தக்கவர்களல்ல. அவர்கள் உறவு உடனே விலக்க வேண்டியதல்லாவிட்டாலும் சிறுகச் சிறுகவேனும் கைவிடத் தக்கது :

**818. ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை
சொல்லாடார் சோர விடல்.**

ப. ரை : ஒல்லும் கருமம் உடற்றுபவர் கேண்மை சொல்லாடார் சோரவிடல் = செய்யக் கூடிய காரியத்தைக் கெடுத்துவிடுகிறவர்களுடைய நட்பை சொல்லாமல் விட்டுவிட வேண்டும்.

பொ. ரை: முடியக்கூடிய எளிய காரியத்தையும் முடியாமற் செய்து விடக்கூடிய திறமையற்றவர்களுடைய நட்பை பேசாமல் விட்டுவிட வேண்டும்.

வி - ம்: 'உடற்றுபவர்' என்பதற்கு 'முடியாததாக நடிப்பவர்' என்ற பொருள் சரியல்ல. உடற்றுபவர் – கெடுத்து விடுகிறவர்கள். இங்கே 'உடற்றுபவர்' என்பதற்கு வேண்டுமென்று கெட்ட எண்ணத்துடன் கெடுப்பவர்கள் என்பது பொருளல்ல. பின் என்னவெனில், பேசத் தெரியாமல் பேசி, செய்யத் தெரியாமல் செய்து, கோபதாபங்களைக் காட்டி, நமக்காக நட்புரிமையில் முன்னின்று நம் காரியத்தைக் கெடுத்து விடுகிற சுபாவமுள்ளவர்கள். அவர்கள் கெட்டவர்களோடு சேர்ந்தவர்கள் அல்லவெனினும் முடியக்கூடிய காரியமும் முடியாமற் போகும். அவரைக் குறை கூறியும் பயனில்லை. அதனால் செய்யக்கூடிய காரியத்தைச் செய்ய முடியாதபடி குழப்பிவிடும் இயல்புடையவர்கள் நட்பை, பேசாமல் நழுவவிட வேண்டியது தான் – என்பது கருத்து. 'சொல்லாடார் சோரவிடல்' என்றால் குறைகூறாமல் தளரவிட வேண்டும் என்பது.

சொல்வது ஒன்று செய்வது வேறொன்றாக நடப்பவர்களுடைய நட்பும் விலக்கத்தக்கது:

819. கனவினு மின்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு.

ப. ரை: வினைவேறு சொல்வேறு பட்டார் தொடர்பு கனவிலும் இன்னாது = செய்கை வேறு சொல் வேறான நடத்தையுள்ளவர்களுடைய தொடர்பு கனவிற்கூட துன்பமானது.

பொ. ரை: செய்வது ஒன்று சொல்வது வேறு என்ற நடத்தையுள்ளவர்களுடைய சம்பந்தம் கனவிற்கூட துன்பமுண்டாக்கும்.

வி - ம்: செய்கைக்கும் சொல்லுக்கும் சம்பந்தமில்லாமல் நடந்து கொள்ளுகிறவர்களுடைய சம்பந்தம் நனவோ கனவோ எப்போதும் துன்பமானது – என்பது கருத்து.

இப்படி ஆராய்ந்து பார்த்து நட்புக்குத் தகாதவர்களாக விலக்கிவிட வேண்டியவருள் மிகவும் முக்கியமானவர்கள் யாரென்றால்:

820. எனைத்துங் குறுகுதலோம்பன் மனைக்கெழீஇ
மன்றிற் பழிப்பார் தொடர்பு.

ப. ரை: மனை கெழீஇ மன்றில் பழிப்பார் தொடர்பு எனைத்தும் குறுகுதல் ஓம்பல் = விட்டுக்குள் (தனியே) குலவிப் பேசி விட்டு (வெளியில்) பலர் கூடியுள்ள இடத்தில் பழித்துப் பேசுகிறவர்களுடைய உறவு சிறிதளவேனும் பக்கம் நெருங்குவதை விலக்க வேண்டும்.

பொ. ரை: தனித்திருக்கும் போது ரகசியமாக குலவிப் பேசி விட்டு, பலபேர் கூடிய இடத்தில் பழித்துப் பேசுகிறவர்களுடைய உறவு கொஞ்சங்கூட நெருங்க விடக்கூடாது.

வி-ம்: கெழீஇ – கெழுவி. கெழுவி – ஆசையோடு நெருங்கிப் பேசி; மன்று – சபை; குறுகுதல் – கிட்டி நெருங்குதல்; ஓம்பல் – நீக்குதல். அறையில் புகழ்ந்துவிட்டு அம்பலத்தில் இகழ்ந்து பேசுகிறவர்களைத் துளிகூட அருகில் நெருங்கவிடக் கூடாது – என்பது கருத்து.

அதி. 83—கூடாநட்பு

['கூடா நட்பு' என்பது 'கூடவே கூடாத' உறவு. இது வரையிலும் – 'இருந்தும் பயனற்ற நட்பு', 'இல்லாதிருப்பது நல்லது என்னும் நட்பு', 'இருந்தால் தீமை வரும் என்று சொல்லத் தகுந்த நட்பு', 'மூடர்கள் நட்பு', 'திறமையற்றவர்கள் நட்பு' என்று பலவித குணமுள்ளவர்களைப் பற்றிச் சொல்லப்பட்டது, இவர்களெல்லாம் நமக்குத் தீங்கு செய்வதற்காக நட்பு கொள்ள வருகிறவர்கள் அல்ல. இப்படிப் பட்டவர்களால் தீங்கு வரலாம் என்பது உலக அனுபவம் ஆனதனுல் இவர்களை நாமாக நீக்கி விடுவது நல்லது என்பதே 'தீ நட்பு' என்ற முந்திய அதிகாரத்தில் சொல்லப்பட்டது. இனி தீங்கு செய்வதற்கென்றே நட்பு போல் பாசாங்கு செய்யவரும் பகைவர்களைப் பற்றிச் சொல்வது 'கூடாநட்பு' என்ற இவ்வதிகாரம். முன் அதிகாரத்தில் சொல்லப்பட்டவர்களை சிலகாலமாவது அவர்களுடன் கலந்து உறவாடிய பின் நீக்கி விடலாம். ஆனுல் இவ்வதிகாரத்தில் சொல்லப்படுகிறவர்களுடன் சிறிது கூட மனங்கலந்து நம்பி ஏமாந்து போகாமல் எச்சரிக்கை கொள்ள வேண்டும்.]

821. சீரிடங் காணி னெறிதற்குப் பட்டடை
நேரா நிரந்தவர் நட்பு.

ப. ரை: நேரா நிரந்தவர் நட்பு சீரிடம் காணின் எறிதற்கு பட்டடை = பகைவராக இருந்து, கலந்துகொள்ள வருபவருடைய உறவு, தக்க சமயம் கிடைத்தால் நசுக்கி விடுவதற்குப் பட்டடை (என்று எச்சரிக்கை கொள்க).

பொ. ரை : பகைவராக இருந்தவர் திடீரென்று கலந்து நட்பாட வந்தால், அது தக்க சமயம் பார்த்து (நம்மை) நசுக்குவதற் குப் பட்டடைக் கல் (லென்று எச்சரிக்கை கொள்ள வேண் டும்),

வி--ம் : சிரிடம் – சீரான சமயம். அதாவது – தகுந்த இடமும் காலமும் சேர்ந்த வாய்ப்பு. 'நேரா நிரந்தவர்' என்பது 'நேராராக இருந்து நிரந்தவர்' என்பதாம். நேரார்–பகைவர், நிரத்தல் – உறவு கலத்தல். பகைவராக இருந்த ஒருவன் திடீ ரென்று நெருங்கி நட்புகொண்டாட வருவது, சமயம் பார்த்து நசுக்கிவிடக் கருதித்தான் என்று எச்சரிக்கை கொள்ள வேண்டும் – என்பது கருத்து.

அப்படிப்பட்டவர்கள் மிகவும் அன்புடையவர்கள் போல நடிப்பார்கள். ஆனாலும் நம்பிவிடக் கூடாது. ஏன் எனில் :

822. இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும்.

ப. ரை : இனம் போன்று இனம் அல்லார் கேண்மை (இனம் போன்று இனமல்லா) மகளிர் மனம் போல வேறுபடும்= நண்பரைப் போல் (நடிக்கும்) நண்பரல்லாத (பகைவர் களின்) உறவு, மனைவி போல நடிக்கும் மனைவியல்லாத வேசி யரின் மனம் போல் (கலவாமல்) வேறுபட்டே இருக்கும்.

பொ. ரை : நண்பரைப் போன்று நடிக்கும் நண்பரல்லாத பகை வருடைய நட்பு, மனைவியைப் போலவே நடிக்கும் மனைவியல் லாத வேசியரின் மனம் போல வேறு நோக்க முள்ளதாக இருக்கும்,

வி - ம் : இந்தக் குறளுக்கு 'இனம் போன்று இனமல்லார் கேண்மை இனம் போன்று இனமல்லா மகளிர் மனம் போல் வேறு படும்' என்று வைத்துக் கொண்டு தான் பொருள் செய்ய வேண்டும். வெறும் 'மகளிர் மனம்போல் வேறுபடும்' என்று கொண்டு 'பெண்பாலார் மனம் போல் வேறுபடும்' என்று பொருள் கொள்வது பெண் குலத்துக்குப் பிழை செய் வதாகும். அது திருவள்ளுவர் பெண்மைக்குத் தந்திருக்கிற பெருமைகளை மறுப்பதாகும். இங்கே 'வேறுபடும்' என் பதற்கு 'வேறுபட்ட வஞ்சக நோக்க முடையது' என்ற குற்றமுள்ள மனத்தைக் குறிப்பது. நண்பரைப் போல் அன்பு காட்டி நடிக்கும் பகையாளியின் மனம் மனைவியைப் போல் காதல் காட்டி நடிக்கும் வேசியின் மனம் போல் அன்பிற் கும் காதலுக்கும் வேறுபட்ட வஞ்சக நோக்கமுள்ளதாகவே இருக்கும் – என்பது கருத்து.

பகைவர்கள் எவ்வளவு அன்புகாட்டி நட்பு கொண்டாட வந்தாலும் அது நல்ல எண்ணத்தோடு வந்ததாக இருக்காது. என்பதை உணர வேண்டும் :

823. பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல
ராகுதன் மாணார்க் கரிது.

ப. ரை : பல நல்ல கற்றக் கடைத்தும் மாணார்க்கு மனம் நல்லர் ஆகுதல் அரிது = பல நன்மைகளைப் பேசி உறவாடினாலும் பகைவர்களுக்கு எண்ணம் நல்லதாக இருப்பது முடியாது.

பொ. ரை : மகிழ்ச்சியுண்டாகும்படி பல நல்ல வார்த்தைகளைப் பேசி உறவாடினாலும் (திடீரென்று நட்பு கொண்டாட வரும்) பகைவர்களுடைய எண்ணம் நல்லதாக இருக்குமென்பது முடியாத காரியம் (என்பதை உணர வேண்டும்).

வி-ம் : பல நல்ல — அநேக நல்ல வார்த்தைகள். கற்றல் — சொல்லுதல். மாணார் — பகைவர். அரிது - இல்லை. இக்குறள் பகைவர்களை நட்பாக ஏற்றுக் கொண்டு ஏமாந்து விடக் கூடாது என்ற எச்சரிக்கை செய்வது. அதனால் இங்குள்ள 'கற்றல்' என்ற சொல்லுக்கு 'நூல்களைக் கற்றல்' என்பது அர்த்தமல்ல. பகைவர்கள் எவ்வளவு இனிமையாகப் பேசி மகிழ்வித்து நட்பாட வந்தாலும் அவர்கள் நல்ல எண்ணத் தோடு வந்திருக்க முடியாது என்பதை உணர வேண்டும் — என்பது கருத்து.

அப்படிப்பட்ட வஞ்சகர்கள் இனிய வார்த்தைகளைப் பேசு வார்கள் என்பது மட்டுமன்றி :

824. முகத்தி னினிய நகாஅ வகத்தின்னா
வஞ்சரை யஞ்சப் படும்.

ப. ரை : முகத்தின் இனிய நகாஅ அகத்து இன்னா வஞ்சரை அஞ்சப்படும் = முகத்தளவில் இனிமையாக சிரித்து மனதில் தீங்கு கருதும் வஞ்சரை அஞ்ச வேண்டும்.

பொ. ரை : மனதில் தீங்கு செய்ய நினைத்துக் கொண்டு முகத் தளவில் இனிமையாகச் சிரிக்கின்ற கபடமுள்ள பகைவரை அச்சமின்றி நட்பாக நம்பிவிடக் கூடாது.

வி-ம் : பகைவர்கள் எவ்வளவு நல்ல வார்த்தைகளைப் பேசினா லும் அவர்களுடைய எண்ணம் நல்லதாக இருக்காது என் பதை உணர வேண்டுமென்று முன் குறளிற் சொல்லப்பட்ட கருத்தைத் தொடர்ந்து இது சொல்லப்படுகிறது. ஆதலால்

'அகத்தின்னு வஞ்சர்' என்பது பகைவரென்று முன்னலேயே அறியப்பட்டவர்களைக் குறிக்கும். பகைவர்கள் எவ்வளவு சிரித்த முகத்தோடு உறவாட வந்தாலும் அவர்களை நம்பி விடக் கூடாது – என்பது கருத்து.

ஏன் என்ருல் :

825. மனத்தி னமையா தவரை யெனைத்தொன்றுஞ்
சொல்லினுற் றேறற்பாற் றன்று.

ப. ரை : மனத்தின் அமையாதவரை எனைத்தொன்றும் சொல்லினுல் தேறல் பாற்று அன்று = மனத்திற்குப் பொருந்தாதவரை (பகைவரை) எப்படிப்பட்ட பேச்சாலும் நம்பி விடுவது தகுதியுடையது அல்ல.

பொ. ரை : மனதிற்கு ஒவ்வாதவராகிய பகைவரை அவர்கள் எவ்வளவு நல்ல வார்த்தைகள் பேசினுலும் அந்த பேச்சைக் கொண்டு அவர்களை நம்பி விடுவது நல்லதல்ல.

வி - ம் : 'எனைத் தொன்றும் சொல்லினுல்' – எப்படிப்பட்ட பேச்சாலும். தேறல் – நம்புதல். பாற்று – தகுதி. பகைவர்கள் எவ்வளவு இனிமையாகப் பேசி நட்பு கொள்ள வந்தாலும் அந்த பேச்சைக் கொண்டு அவர்களை நம்பிவிடக் கூடாது – என்பது கருத்து.

சிறிது கவனம் செலுத்திஞல் பகைவர்கள் இனிமையாகப் பேசி நட்பாட வந்ததன் நோக்கத்தைக் கண்டுகொள்ளலாம் :

826. நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ
லொல்லை யுணரப் படும்.

ப. ரை : நட்டார் போல் நல்லவை சொல்லினும் ஒட்டார் சொல் ஒல்லை உணரப் படும் = நண்பர்களைப் போல நல்ல பேச்சையே பேசினுலும் பகைவர்களுடைய பேச்சின் நோக்கத்தை எளிதில் கண்டு கொள்ள முடியும்.

பொ. ரை: நண்பர்களைப் போல் நன்மைகளையே பேசினுலும் பகைவர்களுடைய பேச்சின் உட்கருத்தை எளிதில் அறிந்து கொள்ள முடியும்.

வி - ம் : ஒட்டார் – பகைவர். ஒல்லை – விரைவில். உணரப் படும் – அறிந்து கொள்ள முடியும். நண்பர்களைப் போலவே நன்மையான விஷயங்களை இனிமையாகப் பேசினுலும் பகைவர்களுடைய பேச்சின் நோக்கத்தை எளிதில் கண்டு கொள்ளலாம் (கவனம் செலுத்திஞல்) – என்பது கருத்து.

சமயம் பார்த்து நம்மை நசுக்கிவிட எண்ணி நட்பாட வரும் கபட எண்ணமுள்ள பகைவர்கள், நன்மையான விஷயங்களை வெகு இனிமையாக, சிரித்த முகத்துடன் பேசுவார்கள் என்பதுமட்டுமின்றி, மிக்க வணக்கமாகவும் பேசுவார்கள். அந்த வணக்கத்தை:

**827. சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந்
தீங்கு குறித்தமை யான்.**

ப. ரை: வில் வணக்கம் தீங்கு குறித்தமையான் ஒன்னார்கண் சொல் வணக்கம் கொள்ளற்க = வில் வளைங்குவது தீமை செய்வதைக் குறியாகக் கொண்டது, அதனால் பகைவர்களிடமிருந்து வருகின்ற சொற்கள் வணக்க முடையனவாக இருப்பதை நன்மையாகக் கொள்ளக் கூடாது.

பொ. ரை: வில் வணங்குவது தீமை செய்வதையே குறியாகக் கொண்டது போல, பகைவர்களுடைய சொல் வணக்கமுடையதாக இருப்பதும் தீமை செய்வதையே குறியாகக் கொண்டதாக இருக்குமானதால் அதை நம்பிவிடக் கூடாது.

வி-ம்: சமயம் பார்த்து பாணத்தைப் பாய்ச்சித் துன்பம் செய்வதற்கே வில் வணங்குகிறது. அது போல் சமயம் பார்த்து துன்பம் செய்யக் கருதியே பகைவனுடைய சொல்லும் வணங்கும் என்பதை உணர்ந்து எச்சரிக்கை கொள்ள வேண்டும் – என்பது கருத்து.

அப்படிப்பட்ட பகைவர்களுடைய சொல் வணங்குவது மட்டுமல்லாமல், அவர்களுடைய உடலும் வணங்கி, அவர்களுடைய கைகளும் கூம்பித் தொழும். கண்ணீரும் விடுவார்கள். ஆனாலும்:

**828. தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா
ரழுதகண் ணீரு மனைத்து.**

ப. ரை: ஒன்னார் தொழுத கைஉள்ளும் படை ஒடுங்கும்; அழுத கண்ணீரும் அனைத்து = பகைவர்கள் தொழுவதற்குக் கூப்பிய கைகளுக்குள்ளும் கொலைக்கருவி மறைந்திருக்கும்; (அவர்கள்) அழுது உகுக்கின்ற கண்ணீரும் அதைப் போன்றது.

பொ. ரை: பகைவர்கள் தொழுவதற்குக் கூப்புகின்ற கைகளுக்குள்ளேயும் கொலைக் கருவி மறைந்திருக்கும். அவர்கள் அழுது வடிக்கின்ற கண்ணீரிலும் அதைப்போலவே கெட்ட எண்ணம் மறைந்திருக்கும்.

வி-ம்: தொழுத கை – கூப்பிய கைகள். படை – கொன்று விடத்தக்க ஆயுதம். ஒடுங்கும்–மறைக்கப்பட்டிருக்கும். திங்கு

செய்யக் கருதியே நட்பு கொண்டாட வரும் பகைவர்கள் வணங்கித் தொழுதாலும் அழுது கண்ணீர் வடித்தாலும் கூட நம்பி விடக் கூடாது. ஏனெனில் அவர்கள் தொழுத கைகளுக் குள்ளேயும் கொலைக் கருவியை மறைத்து வைத்துக் கொண் டிருப்பார்கள். அவர்கள் கண்ணீரும் வஞ்சகமுள்ளது – என் பது கருத்து.

அவர்கள் தொழுவதும் அழுவதும் மட்டுமல்லாமல் நம்மை மிகைபடப் புகழ்ந்தும் தம்மை மிகைபட இகழ்ந்தும் பேசுவார்கள். அதை நம்பி நட்புக்கு இடங் கொடுத்து விட் டால் :

829. மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து
நட்பினுட் சாப்புல்லற் பாற்று.

ப. ரை : தம் மிகச் செய்து எள்ளுவாரை நகச் செய்து நட்பின் உள் சா புல்லல் பாற்று = தம்மை (த்தாமே) அதிகப்படியாக இகழ்ந்து கொள்ளுகிற (பகை) வர்களை (அதனால்) மகிழ்ந்து; நட்பாகக் கொண்டால் அது உள்ளுக்குள் சாவைத் தழுவிக் கொள்ளுகிற தன்மையானது.

பொ. ரை : தம்மைத்தாமே அதிகப்படியாக இகழ்ந்து கொண்டு (நம்மைப் புகழ்ந்து) பேசுகிற வஞ்சகரை (அப்பேச்சில்) மகிழ்ந்து அவரை நட்பாகக் கொண்டு விட்டால், அது தற் கொலை செய்து கொள்ளுவதற்கு ஒப்பாகும்.

வி - ம் : 'தம்மிகச் செய்து எள்ளுதல்' – அதிகப்படியாக தம்மை இகழ்ந்து கொள்ளல். நகச் செய்து – நகுதல் செய்து – மகிழ்ந்து. உள் சா புல்லல் – மனமறிந்து மரணத்தைத் தழுவிக் கொள்ளல். பாற்று – பான்மையானது. நட்பின் – நட்டால். நட்பின் + உள் சாப்புல்லல் என்று பிரிக்க வேண் டும். அவ்வாறன்றி 'நட்பினுள் நகச் செய்து சாப்புல்லற் பாற்று' என்று கொண்டு 'தாமும் அந்நட்பின் கண்ணே நின்று புறத்தின்கண் அவர் மகிழும் வண்ணஞ் செய்து அகத்தின்கண் அது சாம் வண்ணம் பொருந்தற் பான்மை யுடைத்து அரச நீதி' என்று பொருள் செய்வது மிகவும் தடுமாற்றமுடையது. இது அரசனுக்கு மட்டும் சொன்ன தல்ல. நம்மை வஞ்சிக்கத் தம்மைத் தாமே அதிகப்படியாக இகழ்ந்து கொள்ளுகிற பகைவர்கள் பேச்சில் மகிழ்ந்து அவரை நட்பாக நம்பிவிட்டால் அது தற்கொலை செய்து கொள்வதற்குச் சமானம் – என்பது கருத்து.

அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் என்ன செய்ய வேண்டு மென்றால் :

**830. பகைநட்பாங் காலம் வருங்கால் முகநட்
டகநட் பொரீஇ விடல்.**

ப. ரை: பகை நட்பு ஆம் காலம் வருங்கால் முகம் நட்டு அக நட்பு ஒரீஇ விடல்=பகைவன் நட்பு கொள்ள வரும் சமயம் நேர்ந்தால் முகத்தளவில் நட்பு கொண்டாடி மன நட்பை விலக்கிவிட வேண்டும்.

பொ. ரை: பகைவன் நட்பு கொண்டாட வருகிற சமயங்களில் முகத்தளவில் நண்பனாகவே நடந்துகொண்டு, மனதில் அவனை நண்பனாக நம்பி விடுவதை விலக்க வேண்டும்.

வி-ம்: 'முகம் நட்டல்' என்பது நண்பர்களுக்குள் இருக்கத் தக்க வெளி உபசரிப்புகள், செய்தல். அதாவது வரவேற்பது, பேசுவது, சிரிப்பது, அனுதாபம் கொள்வது முதலிய புறச் செயல்கள். 'அகநட்பு' என்பது மனமார நண்பனென்று நம்பி விடுவது. பகைவனாக இருந்த ஒருவன் நம்மிடம் நட்பு காட்ட வந்தால் அது எச்சரிக்கை கொள்ள வேண்டிய விஷயம்; அவனை நண்பனாக நம்பிவிடக் கூடாது. ஆனாலும் உபசரிப்புகளில் குறையக் கூடாது – என்பது கருத்து.

அதி. 84—பேதைமை

['பேதைமை' என்பது 'முட்டாள்தனம்'. இது நல்ல காரியங்களை விட தீய காரியங்களை விரும்பும் கெட்ட குணம். அந்த குணமுள்ளவர்கள் விலக்கத் தக்கவர்கள்.]

**831. பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண்
டூதியம் போக விடல்.**

ப. ரை: பேதைமை என்பது ஒன்று யாது எனின் ஏதம் கொண்டு ஊதியம் போகவிடல்=முட்டாள்தனம் எனப்படும் ஒன்று எதுவென்றால் குற்றத்தைப் பிடித்துக் கொண்டு குணத்தை விட்டு விடுதல்.

பொ. ரை: முட்டாள்தனம் என்று சொல்லப்படுவது எதுவென்றால் தீமையைப் பிடித்துக் கொண்டு நன்மையை விட்டுவிடுதல்.

வி-ம்: ஏதம் – தீமை. ஊதியம் – நன்மை. குற்றத்தைப் பிடித்துக் கொண்டு குணத்தை விட்டு விடுவது முட்டாள்தனம் – என்பது கருத்து.

நல்லதை விட்டு விட்டுக் கெட்டதைப் பிடித்துக் கொள்வது சாதாரண முட்டாள்தனம். முட்டாள் தனத்திலெல்லாம் மிகுந்த முட்டாள் தனம் எது வென்ருல் :

832. பேதைமையு ளெல்லாம் பேதைமை காதன்மை
கையல்ல தன்கட் செயல்.

ப. ரை: பேதைமையுள் எல்லாம் பேதைமை கையல்லதன் கண் காதன்மை செயல் = முட்டாள்தனத்தி லெல்லாம் மிகுந்த முட்டாள்தனம் எதுவென்ருல் தீமையான காரியத்தில் தீராத ஆசை கொண்டு (அதற்காக முயற்சிகளைச்) செய்வது.

பொ. ரை: முட்டாள்தனத்தி லெல்லாம் அதிகப்பட்ட முட்டாள் தனம் எதுவென்ருல் கெட்ட காரியத்திலேயே அதிக ஆசை கொண்டு நடப்பது.

வி-ம்: 'காதன்மை' – மிகுந்த ஆசை. காதன்மை செயல் – அதிக ஆசை கொண்டு அதற்கான முயற்சிகளைச் செய்வது. முட்டாள்களிலெல்லாம் முட்டாளான முழு முட்டாள் கெட்ட காரியத்தைத்தான் விடாப்பிடியாக அதிக ஆசையோடு செய்வான் – என்பது கருத்து.

முட்டாளின் தன்மைகள் எவையென்ருல் :

833. நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும்
பேணாமை பேதை தொழில்.

ப. ரை: நாணாமை, நாடாமை, நாரின்மை, யாதொன்றும் பேணாமை பேதை தொழில் = (குற்றம் செய்யக்) கூசாமை, (நன்மை தீமைகளை) ஆராயாமை, அன்பில்லாமை, எந்தக் கொள்கையையும் கடைப்பிடிக்காமை, (இதுதான்) முட்டாளின் நடத்தை.

பொ. ரை: பழிபாவங்களுக்குக் கூசாமை, நன்மை தீமைகளை ஆராயாமை, அன்பில்லாமை, எந்தக் கொள்கையையும் கடைப்பிடித்துக் காரியம் செய்யாமை இவைகள் உள்ளது முட்டாளின் நடத்தை.

வி-ம்: நாணுதல் – குற்றம் செய்யக் கூசுதல். நாடுதல் – நன்மை தீமைகளை ஆராய்ந்து காரியம் செய்தல். நார் – அன்பு. பேணுதல் – பண்புள்ள கொள்கைகளைக் கடைப்பிடித்து நடந்து கொள்ளல். பழிபாவங்களைக் கூசாமல் செய்தல், ஆலோசிக்காமல் காரியம் செய்தல், அன்பில்லாமல்

நடந்து கொள்ளல், கொள்கைகளை அலட்சியம் செய்தல் இவை நான்கும் சேர்ந்தது தான் முட்டாளின் செயல்கள் – என்பது கருத்து.

முட்டாள்தனம் என்பது படிப்பில்லாமையினால் உண்டாவதுமல்ல. படித்தறிந்ததனால் மட்டும் போவதுமல்ல. நன்றாகப் படித்தறிந்தவர்களிடத்தும் முட்டாள் தனம் உண்டு. அவர்கள் :

834. ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப்
பேதையிற் பேதையா ரில்.

ப. ரை: ஓதி உணர்ந்தும் பிறர்க்கு உரைத்தும் தான் அடங்கா பேதையின் பேதையார் இல் = கற்று உணர்ந்தும் பிறருக்குச் சொல்லியும் தான் (கற்றுணர்ந்தபடி) அடங்கி நடக்காத முட்டாளைவிட முட்டாள்தனமுள்ளவர்கள் வேறில்லை.

பொ. ரை: பல நூல்களைக் கற்றிருந்தும், கல்வியின் பயனை உணர்ந்திருந்தும், கல்வியறிவைப் பிறருக்கு உபதேசம் செய்தும் தான் அடங்கி நடக்காத முட்டாளைப் போன்ற முட்டாள்கள் வேறில்லை.

வி - ம்: கல்வியின் பயன் 'கற்றுணர்ந்து அடங்கல்' என்றபடி கற்று, உணர்ந்து, அடங்குதல். 'அடங்குதல்' என்பது தீய ஆசைகளை அடக்கி நடந்து கொள்ளல். கற்றிருந்தும், கல்வியின் பயனை உணர்ந்திருந்தும், அவற்றைப் பிறருக்குப் போதித்தும்கூட, தான் அடங்கி நடக்காத முட்டாளே மற்ற முட்டாள்களைக் காட்டிலும் பெரிய முட்டாள் – என்பது கருத்து.

முட்டாள்தனம் எந்தப் பாவத்தையும் கூசாமலும் ஆராயாமலும், அன்பில்லாமலும், தர்மங்களைக் கருதாமலும் செய்து விடுமானதால் :

835. ஒருமைச் செயலாற்றும் பேதை யெழுமையுந்
தான்புக் கழுந்து மளறு.

ப. ரை: பேதை, எழுமையும் தான் புக்கு அழுந்தும் அளறு ஒருமை செயலாற்றும் = முட்டாளானவன், (இனிவரும்) ஏழு பிறவிகளிலும் தான் கிடந்து துன்பப்பட வேண்டிய நரகத்தை (இந்த) ஒரு பிறவியிலேயே உண்டாக்கிக் கொள்வான்.

பொ. ரை: முட்டாளானவன் அவனுக்கு இனிமேல் வரக்கூடிய ஏழு பிறவிகளிலும் தான் கிடந்து துன்பப்பட வேண்டிய

நரகத்தை இந்த ஒரு பிறவியிலேயே உண்டாக்கிக் கொள்வான்.

வி-ம்: எழுமை—ஏழு பிறப்புகள். ஒருமை—ஒரு பிறப்பு. அளறு—நரகம். செயலாற்றும்—செய்து முடிப்பான். முட்டாள் இனிமேல் வரக்கூடிய ஏழு பிறப்புகளிலும் தனக்கு நரகவேதனை தரக்கூடிய பாவங்களை இந்த ஒரு பிறப்பிலேயே செய்து விடுவான்—என்பது கருத்து.

முட்டாளானவன் தனக்குத் தெரியாத காரியங்களையும் தெரிந்ததாகச் சொல்லிப் பிறருடைய காரியங்களையும் கெடுத்து வைப்பான்:

836. பொய்படு மொன்றோ புனைபூணுங் கையறியாப்
பேதை வினைமேற் கொளின்.

ப. ரை: கையறியா பேதை வினை மேற்கொளின் பொய்படும் ஒன்றோ புனை பூணும் = செய்யத் தெரியாத முட்டாள் ஒரு காரியத்தை (செய்யத் தெரியுமென்று) மேற்கொண்டால் அது பொய்யாகும் என்ற ஒன்றோடு போகாமல் (அந்தக் காரியமும்) சிக்காகிவிடும்.

பொ. ரை: செய்யத் தெரியாத முட்டாள் செய்யத் தெரிந்ததாக காரியத்தை மேற்கொள்வான். அதனால் அவன் செய்யத் தெரியும் என்று சொன்னது பொய்யாவது ஒன்றோடல்லாமல் அந்த காரியமும் மற்றவர்களும் செய்ய முடியாதபடி சிக்குண்டாகிக் கெட்டு விடும்.

வி-ம்: கையறியா—செய்யத் தெரியாத. 'புனை பூணும்' என்பதற்கு 'தளை பூணும்' என்பது பொருளல்ல. 'புனையல் கொள்ளும்' என்பது பொருள். அதாவது 'பின்னிக் கொள்ளும்' அல்லது 'சிக்காகி விடும்'. முட்டாளானவன் தனக்குச் செய்யத் தெரியாததை யெல்லாம் தெரிந்ததாக மேற்கொள்வான். அதனால் அவன் செய்யத் தெரியுமென்றது பொய்யாகிவிடுவது ஒன்றோடு மட்டுமா முடியும்? அந்தக் காரியமே சிக்கலடைந்து கெட்டுப் போகும்—என்பது கருத்து.

ஒரு முட்டாள் பெரும் பணக்காரனாகி விட்டாலும்:

837. ஏதிலா ராரத் தமர்பசிப்பர் பேதை
பெருஞ்செல்வ முற்றக் கடை.

ப. ரை: பேதை பெரும் செல்வம் உற்றக்கடை ஏதிலார் ஆர தமர் பசிப்பர் = முட்டாள் பெரிய செல்வத்தை அடைந்தால் அயலார் பசியார, சுற்றத்தார் பசியோடு இருப்பார்கள்.

பொ. ரை: முட்டாள் ஒருவன் பெருஞ்செல்வம் அடைந்தாலும் அயலார்களே வயிறார உண்ண, உறவினரும் நட்பினரும் பசியோடிருப்பார்கள்.

வி-ம்: ஏதிலார் — நட்பும் உறவும் அல்லாதவர்கள். தமர் — நட்பும் உறவும் உள்ளவர்கள். முட்டாளுக்குப் பெரும்பணம் வந்து விட்டாலும் அது மற்றவர்களுக்குத்தான் உதவுமேயல்லாது உற்றார் உறவினர்களுக்கு உதவாது — என்பது கருத்து.

முட்டாளுடைய பெருஞ்செல்வம் அக்கம் பக்கத்திலுள்ள உற்றார் உறவினர்களுக்கு ஒரு சிறிதும் உதவாமல் அயலார்களுக்கு விருந்திட்டு ஆடம்பரங்கள் நடத்தவே உதவும் என்பது மட்டுமன்றி அவன் கையில் பொருள் கிடைத்த போது:

838. மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன்
கையொன் றுடைமை பெறின்.

ப-ரை: பேதை தன் கை ஒன்று உடைமை பெறின் மையல் ஒருவன் களித்த அற்று = முட்டாளானவன் தன் கையில் பொருள் அடைந்து விட்டால் பைத்தியக்காரன் கள்ளுண்டதைப் போலத்தான்.

பொ. ரை: முட்டாளின் கையில் பொருளும் கிடைத்து விட்டால் அது பைத்தியம் பிடித்த ஒருவன் கள்ளையும் குடித்து விட்டது போலத்தான் இருக்கும்.

வி-ம்: மையல் — பைத்தியம். களித்தல் — குடித்து வெறித்தல். முட்டாள் கையில் பணமும் கிடைத்து விட்டால் பைத்தியக்காரன் கள்ளையும் உண்டு விட்டால் எப்படியோ அப்படி வெறி மிகுந்த காரியங்களையே செய்வான் — என்பது கருத்து.

முட்டாள்களின் வெறிபிடித்த செயல்கள் சிற்சில சமயங்களில் வெகு இனிமையுள்ளனவாகவும் நல்லவைகளாகவும் கூட இருக்கும். ஆனாலும்:

839. பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட்
பீழை தருவதொன் றில்.

ப. ரை: பேதையார் கேண்மை பெரிது இனிது (செய்யினும்) பிரிவின் கண் பீழை தருவதொன்று இல் = முட்டாள்களின் உறவு மிகுந்த இன்பமானதாக இருக்கும் போதும் கூட அவர்களை விட்டுப் பிரிவது துன்பம் தரக்கூடியதல்ல.

பொ. ரை: முட்டாள்களின் உறவினால் மிகுந்த இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருக்கிற சமயங்களிலும் அவர்களை விட்டுப் பிரிவது துன்பம் தரக்கூடியதல்ல.

வி-ம்: இக்குறளுக்கு 'பின் பிரிவு வந்துழி அஃதிருவர்க்கும் தருவதொரு துன்பமில்லை. ஆதலால் பேதையாயினர் தம்முள் கொண்ட நட்பு மிக இனிது' என்று பொருள் கொள்வது சரியல்ல. இது பேதைக்கும் பேதைக்கும் உள்ள நட்பைச் சொல்லுவதல்ல. ஒரு பேதையோடு மற்றவர்கள் உறவு கொண்டிருந்து அப்போது அது இன்பந் தரத்தக்கதாக இருப்பினும் பேதையை விட்டுப் பிரியும்போது மற்றவர்க்கு பிரியும் வருத்தமே இருக்காது என்று சொல்லுவது. மேலும் 'பிரிவதனுல் துன்பம் தருவதில்லை என்பதனுல் இன்பமானது' என்பதும் சரியல்ல. ஏனெனில் 'துன்பம் தராததெல்லாம் இன்பம் தரும்' என்ற பொருள் உண்டாகிறது. புளிக்காததெல்லாம் இனிப்பானது என்பது போல் ஆகிவிடும். முட்டாள்களின் உறவு இன்பமளிப்பதானுலும் விட்டுப் பிரிவதில் நஷ்டமில்லை - என்பது கருத்து.

நல்லவர்கள் முட்டாள் சகவாசத்தை அசுத்தமாகக் கருதுவார்கள்:

840. கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்ருற் சான்ருேர்
குழாஅத்துப் பேதை புகல்.

ப. ரை: சான்ருேர் குழா அத்து பேதை புகல் கழாஅக்கால் பள்ளியுள் வைத்தற்று = அறிவாளிகள் சபைக்குள் முட்டாள் புகுவது கழுவாத (அசுத்தமுள்ள) காலை சுத்தமான இடத்தில் வைப்பது போன்றது.

பொ. ரை: அறிவாளிகள் கூடியுள்ள சபையில் ஒரு முட்டாள் புகுவது கழுவாத அசுத்தமுள்ள காலை சுத்தமான இடத்தில் வைத்ததுபோல் கருதப்படும்.

வி-ம்: குழாஅம் = குழாம் - கூட்டம். கழாஅக் கால் - கழுவாத கால் - அசுத்தத்தோடு கூடிய கால். பள்ளி - படுக்கை, மடைப்பள்ளி, பள்ளிக் கூடம், தேவாலயம் முதலான பரிசுத்தமாக உள்ள இடங்கள். அறிவாளிகள் கூடிய சபைக்குள் ஒரு முட்டாள் வருவது அந்த சபையை அசுத்தப்படுத்துவது போலக் கருதப்படும்.

அதி. 85—புல்லறிவாண்மை

['புல்லறிவாண்மை' என்பது அறிவில்லாத ஒருவன் மிக்க அறிவுடையவனுகத் தன்னை எண்ணிக் கொள்ளுகிற அற்ப புத்தி. அற்ப புத்தியையும் அற்ப புத்தியுடையவர்களையும் விலக்க வேண்டும்.]

841. அறிவின்மை யின்மையு ளின்மை பிறிதின்மை
யின்மையா வையா துலகு.

ப. ரை: இன்மையுள் இன்மை அறிவு இன்மை; பிறிதின்மை உலகு இன்மையா வையாது = இல்லாமையிலும் இல்லாமை அறிவில்லாமை; மற்ற இல்லாமைகளை உலகம் இல்லாமையாக நிந்திப்பதில்லை.

பொ. ரை: தரித்திரத்திலும் தரித்திரம் அறிவில்லா தரித்திரம்; மற்றவை இல்லாத தரித்திரத்தை உலகம் குற்றமாக இகழ்வதில்லை.

வி-ம்: 'வையாது உலகு' என்பதை 'வைக்காது உலகு' என்று கொண்டு, 'உலகம் கொள்ளாது' என்று பொருள் செய்வதில் சிறப்பில்லை. 'வைதல் செய்யாது உலகம்' என்று கொண்டு, 'உலகம் குற்றமாக நிந்திக்காது' என்று பொருள் கொள்ளல் சிறப்புடையது. ஏன்எனில் எல்லா இல்லாமைகளையும் உலகம் இல்லாமையாகத்தான் கொள்ளுகிறது. ஆனால் அறிவில்லாமை ஒன்றைத்தான் உலகம் குற்றமாக வைது நிந்திக்கிறது. மற்ற எது இல்லாதிருப்பதிலும் குற்றமில்லை; அறிவில்லாமல் இருப்பதைத்தான் உலகம் குற்றமாக நிந்திக்கும் — என்பது கருத்து.

அறிவில்லாதவன் மனமார ஒருவருக்கு எதையும் கொடுத்துவிட மாட்டான். தப்பித் தவறிக் கொடுக்க நேர்ந்துவிட்டாலும் அது:

842. அறிவிலா னெஞ்சுவந் தீதல் பிறிதியாது
மில்லை பெறுவான் றவம்.

ப. ரை: அறிவிலான் நெஞ்சு உவந்து ஈதல் பெறுவான் தவம் பிறிது யாதுமில்லை = அறிவில்லாதவன் மனம் மகிழ்ந்து ஒன்றைக் கொடுத்துவிடுவது வாங்கிக் கொள்கிறவன் செய்த புண்ணியமேயன்றி வேறொன்றுமில்லை.

பொ. ரை: அறிவில்லாதவன் மனமார ஒருவனுக்கு ஒன்றைக் கொடுத்து விட்டால், அது வாங்கிக் கொண்டவன் செய்த புண்ணியமே யன்றி வேறொன்றுமல்ல.

வி-ம்: தவம் — புண்ணியம். அறிவில்லாதவன் ஒரு பொருளை ஒருவனுக்கு மனமகிழ்ந்து தரமாட்டான்; தந்தால் அது வாங்கிக் கொண்டவனுடைய நல்ல காலமே யல்லாமல் அறிவிலான் மனமறிந்து செய்த காரியமாக இருக்காது — என்பது கருத்து.

அறிவில்லாதவன் பிறருக்கு நன்மை செய்ய மாட்டான் என்பது மட்டுமல்ல. தனக்குத்தானே பல தீமைகளை உண்டாக்கிக் கொள்வான்:

843. அறிவிலார் தாந்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்குஞ் செய்த லரிது.

ப. ரை: அறிவு இலார் தாம் தம்மை பீழிக்கும் பீழை செறுவார்க்கும் செய்தல் அரிது = அறிவில்லாதவர்கள் தாமே தம்மைத் துன்பப்படுத்திக் கொள்ளுவதைப் போன்ற துன்பத்தை, தம்முடைய பகைவர்களுக்கும்கூட செய்ய முடியாது.

பொ. ரை: அறிவில்லாதவர்கள் தாமே தமக்குச் செய்து கொள்ளுகிற துன்பத்தைப் போல் தாம் தம்முடைய பகையாளிக்கும் கூட செய்ய முடியாது.

வி-ம்: 'செறுவார்க்கும் செய்தலரிது' என்பதற்கு 'பகைவர்களுக்கும் செய்ய முடியாது' என்றும் 'பகைவர்களாலும் செய்ய முடியாது' என்றும் பொருள் கொள்ளலாம். எனினும் முன்னையதே இங்கே சிறப்புடையது. அறிவில்லாதவன் தனக்குத் தான் உண்டாக்கிக் கொள்ளுகிற துன்பத்தைப் போல் அவன் தன்னுடைய பகையாளிகளுக்குக்கூட உண்டாக்க முடியாது — என்பது கருத்து.

அறிவின்மை மேற்கொள்ளும் புல்லறிவாண்மை எதுவென்ருல்:

844. வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு.

ப. ரை: வெண்மை எனப்படுவது யாது எனின் யாம் ஒண்மை உடையம் என்னும் செருக்கு = அறிவில்லாமை என்று சொல்லப்படுவது எது என்ருல் நாம் அறிவுடையோம் என்னும் இறுமாப்பு.

பொ. ரை: அறியாமை எனப்படுவது எதுவென்ருல் நாம் எல்லாம் தெரிந்தவர் என்று எண்ணிக் கொள்ளுகிற அகங்காரம்.

வி-ம்: வெண்மை — அறிவின்மை. ஒண்மை — அறிவுடைமை. புல்லறிவாண்மைக்கு அடையாளம் எல்லாம் தெரிந்ததாக எண்ணிக் கொள்ளுகிற கர்வம்.

எல்லாம் தெரிந்ததாக எண்ணும் செருக்கினுல் புல்லறிவாளன் தனக்குச் சிறிதும் பழக்கமில்லாத காரியங்களையும் தெரிந்ததாக மேற்கொள்வான். அதனுல்:

845. கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉ மையந் தரும்.

ப. ரை: கல்லாத மேற்கொண்டு ஒழுகல் கசடு அற வல்லதூஉம் ஐயம் தரும் = (புல்லறிவாளன் தனக்குப்) பயிற்சியில்லாத காரியத்தை (தெரியுமென்று) ஏற்றுக்கொண்டு நடப்பதனுல் (அவன்) ஐயந்திரிபறப் பயிற்சி பெற்றுச் செய்யத் தெரிந்துள்ள காரியத்திலும் பிறர் அவனை சந்தேகிக்க இடமுண்டாக்கும்.

பொ. ரை: புல்லறிவாளன் தனக்குப் பழக்கமில்லாத வேலைகளையும் பழக்கமுள்ளவன் போல் மேற்கொண்டு கெடுத்து விடுவான். அதனுல் அவன் நன்ருகப் பழகி திறமையோடு செய்யத் தெரிந்துள்ள வேலையிலும் அவனைப் பிறர் சந்தேகிக்க இடமுண்டாகும்.

வி-ம்: கல்லாத – பயிற்சி பெருத. கசடற வல்லதூஉம் – குற்றமின்றி நிச்சயமாக செய்யக்கூடியதும் – புல்லறிவாளன் தனக்குப் பழக்கமில்லாத வேலைகளையும் தெரிந்ததாக மேற்கொண்டு, செய்ய முடியாமல் திண்டாடுவான். அதனுல் அவனுக்கு நன்ருகத் தெரிந்த வேலைக்கும் அவனை யாரும் நம்பமாட்டார்கள் – என்பது கருத்து.

புல்லறிவாளன் தனக்குத் தெரியாததைத் தெரிந்ததாகச் சொல்லி மேற்கொண்டுவிட்டுப் பின் அந்தப் பொய்யை மறைப்பதற்காக வெவ்வேறு குற்றங்களைச் செய்வான். அதனுல்:

846. அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற்
குற்ற மறையா வழி.

ப. ரை: புல்லறிவு அற்றம் மறைத்தலோ! தம் வயின் குற்றம் மறையா வழி = அற்ப புத்திக்காரர்கள் (தமக்குத் தெரியாததைத் தெரிந்ததாக மேற்கொண்டு அந்தப் பொய்யை) மறைக்க முயலும் விதமோ! (எப்படி முடியுமென்ருல்) தம்மிடத்திலுள்ள மற்ற குற்றங்களும் மறைக்க முடியாமற் போவதற்கே வழியாகும்.

பொ. ரை: புல்லறிவாளர்கள் (தமக்குத் தெரியாத வேலையைத் தெரிந்ததாக மேற்கொண்டு விட்டுப்பின் அந்தப்) பொய்யை மறைக்க முயலும் விதமோ. அவர்களிடத்திலுள்ள மற்ற எல்லாக் குற்றங்களும் வெளிப்பட்டு விடுவதற்கே மார்க்கமாகும்.

வி-ம்: இக்குறளுக்கு 'புல்லறிவாளர்கள் தங்கண் நிகழும் குற்றங்களை அறிந்து கடியாராயின் ஆடையால் அற்றம் மறைத்தாராகத் தம்மைக் கருதுதலும் புல்லறிவாம்' என்று பொருள் செய்வது முற்றிலும் தவருனது. அற்ப புத்தியுள்ள

வன் தான் செய்த ஒரு குற்றத்தை மறைக்க முயலும்போதே தன்னிடமுள்ள எல்லாக் குற்றங்களும் வெளியாகும்படி நடந்து கொள்வான் – என்பது கருத்து.

புல்லறிவாளன் சிறந்த அறஉரைகளை அலட்சியம் செய்வான்; தன்னறிவே சிறந்ததாகப் பெருமை பேசிக் கொள்வான் :

847. அருமறை சோரு மறிவிலான் செய்யும்
பெருமிறை தானே தனக்கு.

ப. ரை : அறிவிலான் அருமறை சோரும்; தானே தனக்கு பெரும் இறை செய்யும் = அறிவில்லாதவன் அருமையான மெய்யறிவுகளைக் கொள்ளமாட்டான்; தானே தனக்கு மிகுந்த பெருமை செய்து கொள்வான்.

பொ. ரை : புல்லறிவாளன் நூல்களில் சொல்லப்படும் அருமையான மெய்யறிவு போதனைகளை விட்டுவிடுவான்; (தன்னறிவே சிறந்ததாகத்) தானே தனக்குப் பெருமை செய்து கொள்வான்.

வி - ம் : அருமறை – மெய்யறிவு. சோர்தல்–விட்டுவிடல். இறை செய்தல் – சிறப்புச் செய்தல். 'இறை' என்பதற்கு 'துன்பம்' என்ற பொருள் கொண்டு, 'தானே தனக்குப் பெரும் இறை செய்யும்' என்பதற்கு 'தானே தனக்கு மிக்க வருத்தத்தைச் செய்து கொள்ளும்' என்று பொருள் செய்வது நல்லதல்ல. ஏனெனில் தனக்குத்தானே வருத்த முண்டாக்கிக் கொள்வான் என்ற கருத்தை 'அறிவிலார் தாம் தம்மை பீழிக்கும் பீழை செறுவார்க்கும் செய்தல் அரிது' என்று முன்பே சொல்லிவிட்டார். ஆதலால் 'புல்லறிவாளன் ஞான நூல்களிற் சொல்லப்பட்டுள்ள மெய்யறிவை ஏற்றுக் கொள்ளமாட்டான்; தன் அறிவே உயர்ந்ததென்று தன்னைத்தானே சிறப்பித்துக் கொள்வான்' என்பது கருத்து.

மெய்ஞ்ஞான நூல்களிலுள்ள நல்லறிவை அலட்சியம் செய்வது மட்டுமல்ல; அந்த நல்லறிவைப் பிறர் சொன்னாலும் :

848. ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர்
போஒ மளவுமோர் நோய்.

ப. ரை : ஏவவும் செய்கலான் தான் தேறான் அவ்வுயிர் போஒ மளவும் ஓர் நோய் =(பிறர்) சொன்னாலும் செய்யமாட்டான், தானாகவும் அறிய மாட்டான். அந்த உயிர் போகிறவரை ஒரு நோய் போன்றது.

பொ. ரை : தெரிந்தவர்கள் சொன்னாலும் கேட்கமாட்டான். தானாகவும் தெரிந்து கொள்ளமாட்டான். அப்படிப்பட்ட (புல்லறிவாளன்) உயிர்போகிற வரை (தனக்கும் பிறருக்கும்) துன்பம் உண்டாக்கிக் கொண்டே இருப்பான்.

வி - ம் : ஏவுதல் – செய்யச் சொல்லுதல். தேறான் – தெரிந்து கொள்ளமாட்டான். நோய் – துன்பம். பிறர் சொல்வதையும் கேட்கமாட்டான், தானாகவும் அறியமாட்டான். அவன் சாகும் வரை எல்லாருக்கும் துன்பமே – என்பது கருத்து.

ஞான நூல்களிலுள்ள மெய்யறிவை ஒத்துக் கொள்ளவும் மாட்டான். அதையறிந்த பிறர் சொல்வதையும் கேட்க மாட்டான், தானாகவும் அறிய மாட்டான். ஆனால் பிறருக்கு உபதேசம் செய்யத் துணிவான்; அதன் பயன் என்னவாகுமென்றால் :

849. காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான்
கண்டானாந் தான்கண்ட வாறு.

ப. ரை : தான் காணான் காணாதாற் காட்டுவான்; காணாதான் தான் கண்ட ஆறு கண்டான் ஆம் =(நல்லறிவை)தான் காணாதாகிய (புல்லறிவாளன்) ஒன்றும் அறியாதவனுக்கு அறிவு காட்டுவான்; (அதனால்) அந்த அறியாதவனும் புல்லறிவாளனாகிய இவன் கண்ட அறிவையே கண்டவனாகி விடுவான்.

பொ. ரை : நல்லறிவுகளைத் தானே அறியாதவனாகிய புல்லறிவாளன் ஒன்றும் அறியாத ஒருவனுக்கு அறிவு சொல்லுவான்; (அது எப்படி முடியுமென்றால்) அந்த ஒன்றுமறியாத (நிரபராதியும்) இந்த புல்லறிவாளனுக்குள்ள அற்ப புத்தியுள்ளவனாகவே ஆகிவிடுவான்.

வி - ம் : புல்லறிவாளன், ஒன்றுமறியாத நிரபராதிகளுக்குப் புத்தி சொல்லப் புகுந்து அந்த ஒன்றுமறியாதவரும் தன்னைப் போலவே (அருமறை சோர்தல், ஏவவும் செய்யாமை, தானும் தேறாமை, முதலிய துர்க் குணங்களுள்ள) அகந்தையுள்ளவராகும்படிக் கெடுத்து வைப்பான் – என்பது கருத்து.

அது மட்டுமல்ல; புல்லறிவாளன் என்னும் அற்பன், உலகத்தில் அறிவிற் சிறந்தவர்களாக இருந்தவர்கள் அனுபவித்துச் சொல்லியதால் உலகத்தார் ஏற்றுக் கொண்டு நடக்கும் எந்த நம்பிக்கையையும் ஒத்துக்கொள்ள மாட்டான். அதனால் அவன் :

**850. உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத்
தலகையா வைக்கப் படும்.**

ப. ரை: உலகத்தார் உண்டு என்பது இல் என்பான்; வையத்து அலகையா வைக்கப்படும் = உலகமக்கள் 'உண்டு' என்பதை 'இல்லை' என்பான்; (அவன்) உலகத்தில் ஒரு பேயாக எண்ணப்படுவான்.

பொ. ரை: (புல்லறிவாளன்) உலகத்தார் உண்டு என்று சொல்லுவதை இல்லையென்று மறுப்பான்; அவன் உலகத்தை மருட்டும் ஒரு பேயாகக் கருதப்படத் தக்கவன்.

வி-ம்: 'உண்டென்பது இல் லென்பான்' என்பது என்னவென்ருல்: கடவுள் உண்டு என்றும் பாவ புண்ணியம் உண்டு என்றும் சொல்லுவதைப் போன்றனவற்றை யெல்லாம் மறுப்பான். 'அலகை' என்பது பேய். அது மக்களுடைய மனத்தில் தோன்றி அச்சத்தை உண்டாக்குகிற அருவம். அதை நினைத்தாலும் அச்சமும் அருவருப்பும் உண்டாகும். பெரியோர்கள் வழிவழியாக உணர்ந்து சொல்லி, உலகத்தார் உண்டென்று நம்புகின்ற நல்லறிவுகளை மறுப்பவன் புல்லறிவாளன். அவன் ஒரு பிசாசுக்குச் சமமானவன் என்பது கருத்து.

அதி. 86—இகல்

['இகல்' என்பது ஒருவரிடத்தில் இன்னொருவர் கொண்டுள்ள மனக்குறை. கருத்து வேற்றுமையினுல் இன்னொருவரிடம் மனத்தாபம் அடைந்து அதனுல் மனதுக்குள்ளேயே வைத்துக்கொண்டிருக்கும் குரோதம். பகைமை வளர்வதற்கும் மற்றும்பல துன்பங்களுக்கும் மூலகாரணமான 'இகல்' எனப்படும் குரோதத்தை எல்லாரும் விலக்க வேண்டும் என்பது இவ்வதிகாரம்.]

**851. இகலென்ப வெல்லா வுயிர்க்கும் பகலென்னும்
பண்பின்மை பாரிக்கு நோய்.**

ப. ரை: இகல் என்ப எல்லா உயிர்க்கும் பகல் என்னும் பண்பின்மை பாரிக்கும் நோய் = மனத்தாபம், என்பதுதான் எல்லா உயிர்களுக்கும் பகைமை என்ற குணக் கேட்டை மூட்டி வளர்க்கிற நோய்.

பொ. ரை: மனத்தாபம் என்பதுதான் எல்லா மனிதர்களுக்கும் 'விரோதம்' என்ற அன்பின்மையை உண்டாக்கிப் பெருகச் செய்கிற ஒரு வியாதி.

வி-ம்: பகல்—பகுத்து வைப்பது. அதாவது பிரித்துவைக்கும் பகைமை. பண்பின்மை—குணமின்மை. பாரித்தல்—பெருகச் செய்தல். வியாதியானது உடலுக்குள் இருந்து கொண்டு அவயவங்களுக்குப் பல துன்பங்களை உண்டாக்குவது போல் மனத்தாபமென்பது மனதில் இருந்துகொண்டு மக்களுக்குள் விரோதத்தை வளர்த்துப் பல துன்பங்களை உண்டாக்குவது, என்பது கருத்து. 'எல்லா உயிர்க்கும்' என்பது எல்லா மனிதருக்கும் என்பதைத்தான் குறிக்கும். விலங்குகள் முதலிய மற்ற உயிர்களைக் குறிக்காது. ஏன் எனில் மற்றப் பிராணிகளுக்குள் பகைமை என்பது கருத்து வேற்றுமைப்பட்டு அதனுல் வருவதல்ல. மற்றப் பிராணிகளுக்குள் பகைமை இருப்பது இயற்கையாகவே உண்டாகும் பிறவிக் குணம்.

மனத்தாபம் என்னும் நோய் மனதிலிருந்தால் யார் மீது மனத்தாபம் வைத்திருக்கிருேமோ அவனுக்குத் தீங்கு செய்யத் தூண்டிக் கொண்டேயிருக்கும். அவன் நம்மிடத்தில் பகைமை பாராட்டாதவனுக இருந்தாலும் நாம் அவனிடத்தில் கொண்டு விட்ட இகல் அவனுக்குத் தீங்கு செய்யவே தூண்டும். அதற்கு இடங்கொடாமல்:

852. பகல்கருதிப் பற்ருசெயினு மிகல்கருதி
யின்னுசெய் யாமை தலை.

ப. ரை: பகல் கருதி பற்ரு செயினும் இகல் கருதி இன்ன செய்யாமை தலை=பகைமை காரணமாகப் பற்றற்ற (தீங்கான) காரியங்களைச் செய்தாலும், மனத்தாபம் காரணமாகத் துன்பம் செய்யாமலிருப்பது உயர்ந்த குணம்.

பொ. ரை: பகைவனை தண்டிக்க வேண்டி அவனுக்குத் தீங்கு செய்து விட்டாலும், மனத்தாபத்துக்காக ஒருவனுக்குத் துன்பம் செய்யாதிருக்கும் குணம் மிகவும் உயர்ந்தது.

வி-ம்: பகைவன் நமக்குத் திங்கு செய்வதைத் தடுக்கவும் அவனை அடக்கவும் அவனுக்குத் திங்கு செய்வதற்கு நியாயமிருக்கலாம். ஆனுல் நமக்கு ஒரு திமையும் செய்யாத ஒருவனுக்கு நாம் அவனிடத்தில் கொண்டுள்ள குரோதத்துக்காக அவனுக்குத் துன்பம் உண்டாக்குவது நியாயமல்ல. ஆனுல் பெரும்பாலும் மனிதர்கள். வெறும் மனத்தாபத்தினுல் மட்டும் பிறருக்குத் தீங்கு செய்கிருர்கள். சிறந்த குணமுடையவர்கள்தாம் அப்படி வெறும் மனத்தாபத்துக்காகப் பிறருக்குத் தீங்கு செய்யாமல் இருப்பார்கள்—என்பது கருத்து.

மனத்தாபத்தைக் கருதி பிறருக்குத் தீங்கு செய்யாமலிருக்கிற சிறந்த மனிதர்களுக்கும் கூட, தம்முடைய மனதில் ஒரு மனத்தாபம் உண்டாகி விட்டால் அதை நீக்குவது கடினம். நீக்கி விட்டால் :

**853. இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத்
தாவில் விளக்கந் தரும்.**

ப. ரை : இகல் என்னும் எவ்வ நோய் நீக்கின் தவல் இல்லாத் தா இல் விளக்கம் தரும் = மனத்தாபம் என்னும் நீக்க முடியாத நோயை நீக்கி விட்டால் (அச் செயல்) தப்பாமல் குறைவற்ற புகழுடைய நல் வாழ்வைக் கொடுக்கும்.

பொ. ரை : தீராத வியாதியைப் போல, நீக்குவது கடினமான மனத்தாபத்தை நீக்கி விட்டால், அது நிச்சயமாகக் குற்றமற்ற புகழுடைய நல்வாழ்வை உண்டாக்கும்.

வி - ம் : எவ்வ நோய் — தீராத ரோகம். தவல் இல்லா — தப்பாத. தா — குற்றம். இகல் என்னும் மாச்சரியத்தை மனதிலிருந்து நீக்குவது மிகவும் கடினம். அதை நீக்கி விட்டவனுக்கு நிரந்தரமான புகழும் நல்வாழ்வும் நிச்சயம் — என்பது கருத்து.

மனத்தாபம் என்பது தீராத நோய் மட்டுமல்ல; மனிதருக்குள் மனத்தாபத்தைப் போலத் துன்பம் தருவதும் வேறில்லை. அதை நீக்கினவர்களுக்குப் புகழுடைய நல் வாழ்வு கிடைக்குமென்பது மட்டுமின்றி :

**854. இன்பத்து ளின்பம் பயக்கு மிகலென்னுந்
துன்பத்துட் டுன்பங் கெடின்.**

ப. ரை : இகல் என்னும் துன்பத்துள் துன்பம் கெடின் இன்பத்துள் இன்பம் பயக்கும் = மனத்தாபம் என்னும் துன்பங்களிலெல்லாம் (கொடிய) துன்பம் ஒழிந்து போனால் அது இன்பங்களிலெல்லாம் சிறந்த இன்பத்தை உண்டாக்கும்.

பொ. ரை : துன்பங்களிலெல்லாம் கொடிய துன்பமாகிய மனத்தாபம் என்னும் துன்பம் இல்லையானால் இன்பங்களிலெல்லாம் சிறந்த இன்பம் உன்டாகும்.

-ம் : கெடின் — ஒழிந்து போனால். 'துன்பத்துள் துன்பம்' என்று சொன்னது எதனை லென்றால், மற்றத் துன்பங்கள் அவை நிகழும்போதுதான் மனதை வருத்தப்படுத்தும். மனத்தாபம் என்ற துன்பம் ஒரு துன்ப நிகழ்ச்சியும் இல்லாத

காலத்திலும் மனதில் இருந்து கொண்டு எந்நேரமும் வருத்தப்படுத்திக் கொண்டேயிருக்கும் - என்பதனால். மிகப் பெரிய துன்பமாகிய மனமாச்சரியம் இல்லாது போனால் அதை விடப் பெரிய இன்பம் இல்லை - என்பது கருத்து.

இகல் என்னும் மனத்தாபம் எல்லா மனிதர்களுடைய மனதிலும் உதிக்கக் கூடிய தீய குணம். அந்த மனத்தாபத்திலிருந்து தான் கோபம் பிறந்து கொடுமைகள் நடக்கின்றன. ஆதலால் அந்த மனத்தாபத்துக்கு மனதில் இடங் கொடுக்காவிட்டால் :

855. இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே
மிகலூக்குந் தன்மை யவர்.

ப. ரை: இகல் எதிர் சாய்ந்து ஒழுக வல்லாரை மிகல் ஊக்கும் தன்மையவர் யாரே = மனத்தாபத்துக்கு இடங் கொடுக்காமல் அதற்கெதிராக ஒதுங்கி நடக்கும் வல்லமையுடையவர்களைக் கோபங் கொள்ளத் தூண்டி விடக் கூடியவர் யார்?

பொ. ரை: மனத்தாபத்துக்கு மனதில் இடங் கொடுக்காமல் அதற்கு எதிராக ஒதுங்கி நடக்கத் திறமையுள்ளவர்களுக்குக் கோபமூட்டக் கூடியவர்கள் யாருமில்லை.

வி - ம்: எதிர் சாய்தல் - எதிராக ஒதுங்குதல். மிகல் - கோபித்தல். ஊக்கல் - தூண்டுதல். 'யாரே மிகலூக்குந் தன்மையவர்' என்பதற்கு 'வெல்லக் கருதும் தன்மையுடையார் யாவர்?' என்பது பொருளல்ல. மனத்தாபத்துக்கு இடங் கொடுக்காத மனமுடையவர்களுக்கு யார் என்ன செய்தாலும் கோபமே வராது - என்பது கருத்து.

மனத்தாபத்துக்கு மனதில் இடங் கொடுக்காமல் நடந்து கொள்வதே மிகச் சிறந்தது. ஆனால் அப்படி மனதிலும் இகலுக்கு இடம் கொடாமலிருப்பது மிகக் கடினம். ஆனாலும் மனதில் ஒரு மனத்தாபம் வந்து விட்டாலும் அதை மீற விடாமல் அடக்க வேண்டும். அடக்காவிட்டால் அது கோபமூட்டும். அதனால் :

856. இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலும் கெடலு நணித்து.

ப. ரை: இகலின் மிகல் இனிது என்பவன் வாழ்க்கை தவலும் கெடலும் நணித்து = மனத்தாபத்தினால் கோபங் கொள்வதை இனிதாக எண்ணுகின்றவனுடைய வாழ்க்கை துன்பத்தையும் அழிவையும் விரைவில் அடைந்து விடும்.

பொ. ரை: மனத்தாபத்தை (அடக்காமல்) அதை மிகச்செய்து கோபங் கொள்ளுவதை நல்லதென்று கொண்டு விடுகிறவனுடைய நல்வாழ்க்கை விரைவில் துன்பமும் நாசமும் அடைந்து விடும்.

வி-ம்: 'மிகல் இனிதென்பவன்' – கோபம் கொள்வதை நல்லதெனக் கொள்பவன். மனத்தாபத்தை அடக்காமல் மிஞ்ச விட்டுக் கோபங் கொள்ளுகிறவன் துன்பத்தையும் நாசத்தையும் விரைவில் அடைவான் – என்பது கருத்து.

மனத்தாபத்தை மிஞ்ச விட்டுக் கோபங் கொள்ளுகிறவன் கெடுதலடைவான் என்பது எதனுல் என்றுல்:

857. மிகன்மேவன் மெய்ப்பொருள் காணு ரிகன்மேவ
லின்ன வறிவி னவர்.

ப. ரை: இகல் மேவல் இன்ன அறிவினவர் மிகன் மேவல் மெய்ப் பொருள் காணுர் = மனத்தாபம் அடைந்து விட்டதால் அறிவு கெட்டுப் போனவர்கள் (மனத்தாபம் மிஞ்சி) கோபம் கொண்டு விடுவதால் உண்மைகளைக் காணமாட்டார்கள்.

பொ. ரை: மனத்தாபம் அடைந்து விட்டதனுல் அறிவு கெட்டுப் போனவர்கள் அந்த மனத்தாபம் மிஞ்சும் போது கோபம் வந்து விடுவதனுல் எந்த விஷயத்திலும் உண்மைகளை அறிய முடியாதவர்களாகி விடுகிருர்கள்.

வி-ம்: இன்ன அறிவினவர் – கெட்டுப்போன அறிவினவர். மேவல் – அடைதல். 'இகல் மேவல்', 'மிகல் மேவல்' என்பனவற்றிற்கு 'இகல் அடைந்ததால்', 'மிகல் அடைந்ததால்' என்று பொருள் கொள்ள வேண்டும். 'மெய்ப் பொருள்' என்பதற்கு இங்கே 'உண்மையை' என்பது மட்டுந்தான் அர்த்தம். மனத்தாபத்தால் அறிவு கெடும்; மனத்தாபம் மிகுந்து கோபிப்பதால் நிதானம் போய்விடும். அதனுல் உண்மைகளை அறிய முடியாது – என்பது கருத்து.

ஆகையினுல்:

858. இகலிற் கெதிர்சாய்த லாக்க மதனை
மிகலூக்கி னூக்குமாங் கேடு.

ப. ரை: இகலிற்கு எதிர்சாய்தல் ஆக்கம்; அதனை மிகல் ஊக்கின் கேடு ஊக்கும் ஆம் = மனத்தாபத்துக்கு (இடங் கொடுக்காமல்) ஒதுங்கி விடுதல் நல்வாழ்வு; அதனை மிஞ்ச விட்டுக் கொண்டால் கேடுண்டாகும்; ஆம் (அது உண்மை.)

பொ. ரை : குரோதத்திற்கு மனதில் இடங்கொடுத்து விடாம லிருப்பது சேமம்; அதற்கு (இடங்கொடுப்பதுடன்) அதனை மிஞ்ச விட்டுக் கோபங் கொண்டால் கேடுண்டாகும் என்பது நிச்சயம்.

வி - ம் : 'ஆக்கம்' — சௌக்யம். ஊக்கும் — உண்டாக்கும். குரோதத்துக்கு மனதில் இடங் கொடுக்காமல் ஒதுங்கி விடுவதே நல்லது; அதற்கு இடங் கொடுத்து மிஞ்ச விட்டால் கேடுண்டாவது நிச்சயம் — என்பது கருத்து.

நன்மை வருவதும் தீமை வருவதும் இந்த குரோத மனப் பான்மை இல்லாததையும் இருப்பதையும் பொறுத்ததே:

859. இகல்காணா னாக்கம் வருங்கா லதனை
மிகல்காணுங் கேடு தரற்கு.

ப. ரை : ஆக்கம் வருங்கால் இகல் காணான்; கேடு தரற்கு அதனை மிகல்காணும் = நல்வாழ்வு வரும்போது (ஒருவன்) குரோதமுள்ளவனாக இருந்திருக்க மாட்டான்; கேடு வருவதற்கு அது மிகுந்தவனாக இருப்பான்.

பொ. ரை : ஒருவனுக்கு நல்வாழ்வு வருவது அவனிடத்தில் குரோத புத்தி இல்லாத காலத்தில் தான்; கேடு வரும்போது அது மிகுந்திருக்கும்.

வி - ம் : நல்வாழ்வு வர வேண்டுமானால் குரோத புத்தி இல்லாதிருக்க வேண்டும்: நாசம் வர வேண்டுமானால் அது மிகுந்திருக்க வேண்டும் — என்பது கருத்து.

சுருங்கச் சொன்னால் ;

860. இகலானா மின்னாத வெல்லா நகலானா
நன்னய மென்னுஞ் செருக்கு.

ப. ரை : இன்னாத எல்லாம் இகலான் ஆம்; நன்னயம் என்னும் செருக்கு நகலான் ஆம் = துன்பம் என்பவை யெல்லாம் மனத் தாபத்தால்தான் உண்டாகின்றன; நல்ல பயன் என்ற பெருமை மகிழ்வு குணத்தால் வருவது.

பொ. ரை : எல்லாத் துன்பங்களும் உண்டாவது குரோதத் தால்; எல்லா நல்ல பலன்களின் பெருமை வருவது மகிழ்ச்சி யுண்டாக்கும் அன்பு குணத்தால்தான்.

வி - ம் : நகல் — இன்பமுண்டாக்கும் நட்புக் குணம். நன்னயம் — நல்ல நயம் — நல்ல பயன்கள். துன்பங்களெல்லாம்

வருவது குரோத குணத்தினுல்; இன்பங்களெல்லாம் வருவது இனிய நட்புக் குணத்தினுல் – என்பது கருத்து.

அதி. 87—பகைமாட்சி

['பகைமாட்சி' என்பது, தன் பகைவர்களுக்கு மாட்சிமை (வெற்றிச் சிறப்பு) தரக்கூடியனவாக ஒருவனிடத்திலுள்ள குறைபாடுகள். இன்னின்ன குறைபாடுகள் உள்ளவர்களை பகைவர்கள் எளிதில் வென்று விடுவார்கள் என்பது.]

861. வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா
மெலியார்மேன் மேக பகை.

ப. ரை: மெலியார் மேல் மேக பகை ஓம்பா வலியார்க்கு மாறு ஏற்றல் ஓம்புக=(உன்னைவிட) மெலியார் மேல் உள்ள பகைமையைக் கருத்தில் மிகுத்து காக்காமல் (உன்னைவிட) வலிமையுள்ளவர்களுக்கு எதிரடி கொடுப்பதைக் கருதுவாயாக.

பொ. ரை: (உன்னை விட) வலிமை குறைந்தவர் மேல் உனக்குண்டான பகைமையை அதிகம் பாராட்டாமல் (உன்னைக் காட்டிலும்) வலிமை மிகுந்தவராக (உன்னைத் தாக்க வருகின்றவருக்கு) எதிரடி கொடுப்பதற்கு உன் வலிமையை வளர்த்துக் கொள்வாயாக.

வி-ம்: 'மேக' என்பது 'மிகுந்த' என்ற பொருள் தருவது. ஓம்பா – மனதிற் கொள்ளாமல். ஓம்புக – கருதி வளர்ப்பாயாக. இந்தக் குறளுக்கு 'தம்மின் வலியார்க்குப் பகையாயெதிர்தலை ஒழிக; ஏனைய தம்மின் மெலியார்க்குப் பகையாதலை ஒழியாது விரும்புக' என்று பொருள் செய்வது தமிழ் மரபின் 'ஆண்மை', 'வீரம்' என்பதற்கு மிகவும் இழுக்குண்டாக்குவதாம். 'மாறேற்றல்' என்பதற்கு 'மறுப்பு கொடுத்தல்' அல்லது 'எதிர்த்துத் தடுத்தல்' என்பது பொருள். அதனுல், நீ யாரையும் அடிக்கப் போகாமல், உன்னை அடிக்க வருகிறவனுக்கு உன் தற்காப்பைக் கருதி (முதலடி இல்லாமல்) எதிரடி கொடுக்க உன்னை பலப்படுத்திக் கொள்ள வேண்டும் – என்பதும் பெறப்படுகிறது. உன்னைக் காட்டிலும் பலம் குறைந்தவர்கள் மேல் உனக்குண்டான பகையைப் பாராட்டாமல் உன்னைவிட பலமுள்ளவர்களாக உன்னைத் தாக்கக் கூடியவர்கள் உண்டானுல் அவர்களை எதிர்த்து அடித்து வெல்ல உன் பலத்தைப் பெருக்கிக் கொள்வதில் கவனம் செலுத்துக – என்பது கருத்து.

தம்மினும் வலியாரை எதிர்த்து நிற்க ஆற்றல் தேடிக் கொள்வது பெருமையும் திறமையும் ஆகும். தம்மினும் மெலியாரை வென்று விடுவது வெறும் அன்பற்ற காரியம். மெலியார் யாவரெனில் :

862. அன்பில னான்ற துணையிலன் றான்றுவ்வா
னென்பரியு மேதிலான் றுப்பு.

ப. ரை : அன்பு இலன், ஆன்ற துணை இலன், தான் துவ்வான் ஏதிலான் துப்பு என்பரியும்=அன்பு இல்லாதவன் தக்க துணையில்லாதவன் (அதனால்) வலிமையற்றவனாக இருப் பவன். (ஆகையால்) அவன் பகைவனுடைய வலிமையை எப்படி எதிர்த்துத் தடுப்பான்?

பொ. ரை : அன்பில்லாதவனாக (இருப்பதால் பகைவர் உள்ள வனாகவும்) தக்க துணைவர் இல்லாதவனாகவும் ஆகிவிடுகிறான். அதனால் வலிமையற்றவனாக உள்ள (மெலியான்) பகைவரு டைய பலத்தை எப்படி சமாளிப்பான்?

வி - ம் : ஆன்ற – தக்க. துவ்வான் – துப்பற்றவன் – அதாவது வலிமையில்லாதவன். பரிதல் – விலக்குதல். ஏதிலான் – பகைவன். அன்பில்லாதவனாக இருப்பதால் பகைவர் உள்ள வனாகவும் துணைவர் இல்லாதவனாகவும் ஆகிவிடுகிறவன் வலிமையற்றவன். அவன் எப்படித் தன் மேல் வருகிற பகை வனை எதிர்த்து நிற்க முடியும்? – என்பது கருத்து.

பகைவருக்கு எளியவனாகிவிடக் கூடிய மெலியானுடைய தன்மை இன்னும் என்னவெனின் :

863. அஞ்சு மறியா னமைவில னீகலான்
றஞ்ச மெளியன் பகைக்கு.

ப. ரை : அஞ்சும் அறியான் அமைவு இலன் ஈகலான் பகைக்கு தஞ்சம் எளியன் = அச்சமுள்ளவனாகவும் தருணத்துக்கு வேண்டியதை அறிய முடியாதவனாகவும் நிதானம் இல்லாத வனாகவும், கொடைக்குணம் இல்லாதவனாகவும் உள்ளவன் பகைவருக்கு அடி பணிந்து விட வேண்டிய (அளவுக்கு) வலிமையற்றவன்.

பொ. ரை : அஞ்சுகின்ற இயல்புள்ளவனாகவும் சமயோசித அறி வில்லாதவனாகவும் நிதானமில்லாதவனாகவும், கொடை மன மில்லாத லோபியாகவும் உள்ளவன் பகைவர்களிடம் அடி பணிந்துவிட வேண்டிய மிக்க பலவீனன்.

வி - ம் : அமைவு – நிதானம். 'ஈகலான்' என்றது பிறருக்குக் கொடுக்கும் தாராள குணம் இருந்தால் பணச் செலவிலாவது துணைபலம் தேடிக் கொள்ள முடியும் என்பதைக் குறிப்பதற்காக. தஞ்சம் – அடைக்கலம் புகுதல். அச்சமுள்ளவனாகவும் சமயத்துக் கேற்ற அறிவில்லாதவனாகவும் அத்துடன் கொடைக் குணம்கூட இல்லாதவனாகவும் இருக்கிறவன் பகைவருக்கு அடிபணிய வேண்டியவனே – என்பது கருத்து.

மேற் சொன்ன குறைகள் உள்ளவன் தானாகவே பகைவரிடம் பணிந்துவிட வேண்டியவன். மேற் சொன்ன குற்றங்கள் இல்லாவிடினும் பகைவர்கள் எளிதாக வென்றுவிடத் தக்க பலக் குறைவு எது வென்றால் :

**864. நீங்கான் வெகுளி நிறையில னெஞ்ஞான்றும்
யாங்கணும் யார்க்கு மெளிது.**

ப. ரை : நீங்கான் வெகுளி நிறை இலன் எஞ்ஞான்றும் யாங்கணும் யார்க்கும் எளிது=விட்டுப் பிரியாத சினம் உள்ளவனாகவும் (அதனால் சொல்லிலும் செயலிலும்) அளவு இல்லாதனாகவும் இருக்கிறவன் எப்போதும் எந்த இடத்திலும் யாராலும் எளிதாகத் தோற்கடித்துவிடத் தக்கவன்.

பொ. ரை : எப்போதும் கோபமுள்ளவனாகவும் (சொல்லிலும் செயலிலும்) அளவு கடந்த (பதற்றமுள்ள) வனாகவும் இருக்கிறவன் எப்போதும் எந்த இடத்திலும் யாருக்கும் தோற்றுப் போகக் கூடிய பலவீனமுள்ளவன்.

வி - ம் : 'நிறை' என்பது சொல்லிலும் செயலிலும் அளவு கடந்து விடாதபடி காத்துக்கொள்ளும் குணம். சதாகாலமும் கோபமுள்ளவனாகவும். சொல்லிலும் செயலிலும் பதட்டமுள்ளவனாகவும் இருப்பவன் எப்போதும் எங்கும் யாரிடத்திலும் தோல்வியடைவான் – என்பது கருத்து.

எப்பொழுதும் கோபமே உள்ளவனாகச் சொல்லிலும் செயலிலும் அளவு கடந்து நடப்பவனை வெல்லுவது யாருக்கும் சுலபம். இவன் வேறு குற்றமில்லாதவனாக இருக்கலாம். வெறும் கோபப் பதட்டத்தால் தோற்று விடுகிறவன். இவனை வென்று விட்டவர்களுக்கு வென்று விட்டதைத் தவிர வேறு மகிழ்ச்சிக்குக் காரணமில்லாமற் போகலாம். இதைவிட வென்றவர்கள் ஒரு நல்ல காரியத்தைச் செய்துவிட்டதாக இன்பங் கொள்ளும்படி நடந்து கொள்பவன் யாரெனில் :

**865. வழிநோக்கான் வாய்ப்பன செய்யான் பழிநோக்கான்
பண்பிலன் பற்றார்க் கினிது.**

ப. ரை: வழி நோக்கான் வாய்ப்பன செய்யான் பழி நோக்கான் பண்பு இலன் பற்ருர்க்கு இனிது = (நீதி நெறி) முறைகளை கருதிப் பார்க்காதவனுகவும் தகுதியுள்ள காரியங்களைச் செய்யாதவனுகவும் பழிக்கு அஞ்சாதவனுகவும் நல்ல குணம் இல்லாதவனுகவும் உள்ளவனை வெல்வது (அவனுடைய) பகைவர்களுக்கு இனிமையான காரியம்.

பொ. ரை: நீதி நெறி முறைகளை மதிக்காதவனுகவும் நியாயத்துக்கு ஒத்த காரியங்களைச் செய்யாதவனுகவும் பழி பாவங்களுக்கு அஞ்சாதவனுகவும் நற்குண மில்லாதவனுகவும் உள்ள ஒருவனைத் தோற்கடிப்பதில் அவனுடைய பகைவர்கள் மகிழ்ச்சி கொள்வார்கள்.

வி-ம்: வழிநோக்கான் – நீதி முறைகளைக் கருதி அவற்றிற்கு ஒட்டி நடக்காதவன். பழி நோக்கான் – பழி பாவங்களைக் கருதி அவற்றிற்கு ஒதுங்கி நடக்காதவன். 'வழி', 'பழி' என்ற சொற்களுடன் தனித்தனியே சேர்ந்துள்ள 'நோக்கான்' என்ற ஒரே பதம் இரண்டு நேர்மாருன பொருள்களைத் தருவது குறிக்கத் தக்கது. பற்ருர் – பகைவர். நீதிகளை மதிக்காமலும், தகுதியுள்ளவற்றைச் செய்யாமலும் பழிகளுக்கு அஞ்சாமலும் நல்ல குணம் இல்லாமலும் உள்ளவனை வெல்வதை நல்ல காரியம் செய்வதாக அவனுடைய பகைவர்கள் இன்பமடைவார்கள் – என்பது கருத்து.

ஒருவனுக்குப் பகைவர்கள் ஏற்படுவதற்கு முக்கியமான காரணங்கள் எவையெனில்:

866. காணுச் சினத்தான் கழிபெருங் காமத்தான்
பேணுமை பேணப் படும்.

ப. ரை: காணு சினத்தான் கழி பெரும் காமத்தான் பேணுமை பேணப்படும் = காரணம் காணுமல் கோபிக்கிறவனும் மிகப் பெரும் காமஇச்சை கொண்டவனும் 'பகைமை' என்பதனுல் விரும்பப் படுகிறவர்கள்.

பொ. ரை: கண்மூடித்தனமாகக் கோபங் கொள்கிறவனும் மிதமிஞ்சிய காம இச்சையுள்ளவனும் 'பகைமை' என்னும் தீமையினுல் கொண்டாடப்படுகின்றவர்கள்.

வி-ம்: காணுச் சினம் – எண்ணிப் பார்க்காத சினம். பேணுமை – பகைமை. பேணப்படும் – போற்றப்படும். நியாயமற்ற கோபமும் அளவற்ற காமஇச்சையும் பகைமையை உண்டாக்கிப் போற்றுகின்ற தீமைகள் – என்பது கருத்து.

பகைவர்களை உண்டாக்குகிற முக்கிய காரணங்கள் கோபமும் காமமும்தான் என்றாலும் அவற்றை விட பகைவர்களுக்கு ஆத்திரமூட்டுகின்ற துர்க்குணம் எதுவெனில் :

867. கொடுத்துங் கொளல்வேண்டு மன்ற வடுத்திருந்து
மாணாத செய்வான் பகை.

ப. ரை : மன்ற அடுத்திருந்து மாணாத செய்வான் பகை கொடுத்தும் கொளல் வேண்டும் = மிகவும் நெருங்கினவனாக இருந்து கொண்டு, கெடுதி செய்கிறவனுடைய பகைமையைப் பொருள் கொடுத்தாயினும் கொள்ள வேண்டும்.

பொ. ரை : மிகவும் நெருங்கினவனாக இருந்துகொண்டே கெடுதி செய்கின்றவனைப் பொருள் செலவு செய்தாயினும் பகைவனாக வெல்ல வேண்டும் (என்று நினைப்பார்கள்.)

வி - ம் : மாணாத — தீமை தரும் காரியங்கள். மன்ற — மிகவும். அடுத்துக் கெடுக்கக் கூடியவனை பணச் செலவு செய்தாவது முறியடிக்க விரும்பப்படும் — என்பது கருத்து.

பொதுவாகப் பகைவர்களை உத்ஸாகப் படுத்தும்படியாக ஒருவனிடத்திலுள்ள குறைகள் ஏவை யென்றால் :

868. குணனிலனாய்க் குற்றம் பலவாயின் மாற்றார்க்
கினனிலனா மேமாப் புடைத்து.

ப. ரை : குணன் இலனாய் குற்றம் பல ஆயின் இனன் இலனாம்; (அது) மாற்றார்க்கு ஏமாப்பு உடைத்து = நல்ல குணம் இல்லாதவனாகப் பல குற்றங்கள் உள்ளவனாகவும் இருந்தால் அவன் துணைவர்கள் இல்லாதவனாகி விடுகிறான் (அது அவனுடைய) பகைவர்களுக்குக் களிப்புண்டாக்குவது.

பொ. ரை : ஒருவன் நல்ல குணம் இல்லாதிருப்பதோடு பல குற்றங்கள் உள்ளவனாகவும் இருந்தால் அவனுக்குத் துணைவர்கள் இருக்கமாட்டார்கள். அதுதான் பகைவர்களுக்கு (அவன் மேல் பாய) மிக்கக் களிப்புண்டாக்குவது.

வி - ம் : ஏமாப்பு — மிகுந்த களிப்பு. ஒருவன் நல்ல குணமில்லாதவனாக இருந்தாலும் குற்றம் செய்யாதவனாகவாவது இருந்தால் அவனுக்கு அனுதாபம் காட்டுகிறவர்கள் இருப்பார்கள். குற்றம் செய்து விட்டாலும் இரண்டொரு குற்றமானாலும் பாதகமில்லை. ஆனால் நல்ல குணமும் இல்லாமல் அதிகப்படியான குற்றங்களைச் செய்கிறவனாகவும் இருந்து விட்டால் அவனுக்கு அனுதாபம் காட்டக் கூடிய துணைவர்களே இருக்க

மாட்டார்கள். அதனால் அவனுடைய பகைவர்கள் அவனைக் கெடுப்பதில் மிக்க ஊக்கம் கொள்வார்கள் – என்பது கருத்து.

இதைக் காட்டிலும் பகைவர்களுக்கு இன்னும் அதிக இன்பம் தருவது :

869. செறுவார்க்குச் சேணிகவா வின்ப மறிவிலா
வஞ்சும் பகைவர்ப் பெறின்.

ப. ரை : அறிவு இலா அஞ்சும் பகைவர்ப் பெறின் செறுவார்க்கு சேண் இகவா இன்பம் =(பகைவருக்கு இடங்கொடாதிருக்கத் தகுந்த) நல்லறிவுகள் இல்லாமல் (அத்துடன் எதிர்க்க வல்ல தைரியமும் இல்லாமல்) அச்சமுள்ள பகைவர் உண்டானால் அவர்களுடன் போர் தொடுக்கிறவர்களுக்கு இடையரு இன்பம்.

பொ. ரை : (பகைமையை விலக்கவோ அல்லது வெல்லவோ வேண்டிய) நல்லறிவும் இல்லாமல் (பகைவரை எதிர்க்கக் கூடிய தைரியமும் இல்லாது) அச்சமும் உள்ளவர்கள் கிடைத்தால் அவர்களுடன் போர் புரிய எண்ணுகிறவர்களுக்கு அளவற்ற இன்பம்.

வி - ம் : செறுவார் – போர் புரிவோர். சேண் இகவா – உயர்வு நீங்காத, அதாவது குறையாத. பகையற்றிருக்க அறிவும் இல்லாமல், பகையுடன் அச்சமுமுள்ளவராக இருப்பவர்களோடு போர் புரிவதில் அவருடைய பகைவர்கள் அளவற்ற இன்பங் கொள்ளுவார்கள் – என்பது கருத்து.

சுருங்கச் சொன்னால் பகைமை இல்லாமலிருக்கவோ அல்லது பகைவரை வெல்லவோ மூன்று விஷயங்கள் முக்கியம். அந்த மூன்றும் இல்லாதவன் சிறப்படைய முடியாது. என்னவெனில் :

870. கல்லான் வெகுளுஞ் சிறுபொரு ளெஞ்ஞான்று
மெல்லானை யொல்லா தொளி.

ப. ரை: கல்லான், வெகுளும், சிறு பொருள் ஒல்லானை எஞ்ஞான்றும் ஒளி ஒல்லாது = (பகைமையை விலக்கும் நல்லறிவுகளை) கற்க மாட்டான். கோபிப்பான். சிறு அளவு பொருளும் (பிறருக்குக் கொடுக்க) இசைய மாட்டான். அப்படிப்பட்டவனைப் (பகைவரை வெல்லக் கூடிய) பெருமை ஒரு போதும் அடையாது.

பொ. ரை : (தன் மேல் பகைவர் வராதிருக்க வேண்டிய) அறிவுகளை கற்றுக் கொள்ளாமலும், எந்நேரமும் கோபம் உள்ளவ

ளுகவும், யாருக்கும் ஒரு பொருளைக் கொடுத்து விட மனம் வராதவனுகவும் உள்ள ஒருவனுக்குப் (பகைவரை சமாளிக்கக் கூடிய) பெருமை ஒரு நாளும் வராது.

வி-ம்: நல்லறிவு உள்ளவனுக இருந்தால் பகைவரை விலக்க லாம். கோபம் இல்லாதவனுக இருந்தால் பகைவர் ஏற்படா மல் இருக்கலாம். தாராளமாகப் பொருள் கொடுக்கும் மன மிருந்தாலாவது பகைவரை சமாளிக்கத் துணை தேடிக்கொள் ளலாம். இந்த மூன்றும் இல்லாதவன் பகைவரை வென்று புகழ்பெற முடியாது. இந்தக் குறளுக்கு 'நீதி நூலைக் கல்லா தானேடு பகைத்தலான் வரும் எளிய பொருளை மேவாதானை எஞ்ஞான்றும் புகழ் மேவாது' என்று பொருள் செய்வது கருத்தற்றது. நல்லறிவு கற்காமல் வெறும் கோபம் மட்டும் உள்ளவனுகவும், செலவு செய்ய மனமில்லாதவனுகவும் இருக் கிறவன் பகைவரை வெல்லும் பெருமையடைய முடியாது-என்பது கருத்து.

அதி. 88—பகைத்திறந்தெரிதல்

['பகைத்திறம் தெரிதல்' என்பது பகைமை என்பதன் தன்மையை ஆராய்ந்தறிதல். அதாவது பகையே இல்லா திருப்பதே நல்லது என்பதையும் பகை நேர்ந்துவிட்டாலும் பகைவரின் தன்மைகளை அறிந்து, தற்காப்பு சக்திகளை பலப் படுத்தி, சமயோசிதமாக நடந்து, பகை இல்லாமற் செய்து கொள்ள வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்வது.]

871. பகையென்னும் பண்பி லதனை யொருவ
னகையேயும் வேண்டற்பாற் றன்று.

ப. ரை: பகை என்னும் பண்பு இல் அதனை ஒருவன் நகையே யும் வேண்டல் பாற்று அன்று = பகை என்னும் நன்மை இல்லாத அதனை ஒருவன் விளையாட்டாகவும் கூட விரும்புதல் தக்கதல்ல.

பொ. ரை: பகை என்னும் நன்மையற்ற அது, யாரும் விளை யாட்டாகக் கூட விரும்பத் தக்கது அல்ல.

வி-ம்: நகையேயும்—கேலியாகக் கூட. விளையாட்டாகக் கூட பகையை விரும்பக் கூடாது—என்பது கருத்து.

விலக்க முடியாதபடி பகைமை நேர்ந்து விட்டாலும்:

872. வில்லே ருழவர் பகைகொளினுங் கொள்ளற்க
சொல்லே ருழவர் பகை.

ப. ரை: வில் ஏர் உழவர் பகை கொளினும் சொல் ஏர் உழவர் பகை கொள்ளற்க = வில்லை ஆயுதமாக உடைய வீரர்களுடைய பகையை உண்டாக்கிக் கொண்டாலும் சொல்லை ஆயுதமாக உடைய செல்லுஞ் சொல்லுடையவருடைய பகையை உண்டாக்கிக் கொள்ளக் கூடாது.

பொ. ரை: வில்லேந்திப் போர் புரியும் படை வீரருடன் பகைத்துக் கொண்டாலும் செல்வாக்குடைய அறிஞர்களுடன் பகைத்துக் கொள்ளக் கூடாது.

வி-ம்: ஏர் – ஆயுதம். உழவர் – ஆயுதத்துடன் தொழில் புரிவோர். ஆயுத வலிமை கொண்டு தாக்கவல்ல போர் வீரர்களைப் பகைத்துக் கொண்டாலும் அறிவின் வலிமை கொண்டு தாக்க வல்ல செல்வாக்குடையவர்களைப் பகைத்துக் கொள்வதை விலக்க வேண்டும் – என்பது கருத்து.

வில்லே ருழவரைப் பகைப்பதிலும் கூட:

873. ஏமுற் றவரினு மேழை தமியனாய்ப்
பல்லார் பகைகொள் பவன்.

ப. ரை: தமியனாய் பல்லார் பகை கொள்பவன் ஏமுற்றவரினும் ஏழை = தனியனாக இருந்து கொண்டு பல பேரை (எதிர்த்துப்) பகைமை காட்டுகிறவன் பைத்தியம் பிடித்தவரைவிட அறிவு கெட்டவன்.

பொ. ரை: தனியாக இருந்து கொண்டு பலபேரைப் பகைத்துக் கொள்ளுகிறவன் பைத்தியக்காரனைவிட புத்தி கெட்டுப் போனவன்.

வி-ம்: தமியன் – தனியன். பல்லார் – பலபேர். ஏம் – பித்தம். ஏமுற்றவர் – பித்தம் பிடித்தவர். ஒண்டியாக இருந்து கொண்டு பல பேரை எதிர்ப்பது பைத்தியத்தைவிட புத்தி கெட்டத்தனம் – என்பது கருத்து.

பகைவரே இல்லாமலிருப்பதுதான் நல்லது. அது முடியாமற் போய் பிறர் நம்மிடம் பகைமை பாராட்ட நேர்ந்தாலும்:

874. பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடையாளன்
றகைமைக்கட் டங்கிற் றுலகு.

ப. ரை: பகை நட்பாக் கொண்டு ஒழுகும் பண்பு உடையாளன் தகைமை கண் உலகு தங்கிற்று = பகைவரையும் நட்பாக்கிக் கொண்டு நடந்து கொள்ளும் குணம் உடையவனுடைய பெருந் தகைமையில் தான் உலகம் (நன்மை யுறுவது) அடங்கியுள்ளது.

பொ. ரை: பகைவரையும் நண்பராக்கிக் கொண்டு நடந்து கொள்ளும் குணம் உடையவனுடைய பெருந்தன்மையில் தான் உலக நலம் அடங்கியிருக்கிறது.

வி - ம்: தன்னிடம் பகைமை பாராட்டுகின்றவர்களையும் நண்பராக்கிக் கொள்வதற்குப் பல நல்ல குணங்களும் சொல்லும் செயலும் அமைய வேண்டும். அந்த குணங்களும் சொல்லும் நடத்தையும் தாம் சமுதாயத்தில் நல்லுறவையும் மக்கள் நல்வாழ்வையும் காப்பது. அதனால் பகைவரையும் நட்பாக்கிக் கொண்டு நடக்கும் பெருந்தன்மையில் உலக நலம் தங்கியிருக்கிறது — என்பது கருத்து. (இது அரசனுக்கு மட்டும் சொல்லப்பட்டதாக வைத்துக் கொண்டு 'வேண்டிய வழிப் பகையை வேறுபடுத்தித் தனக்கு நட்பாகச் செய்து கொண்டு ஒழுகும் இயல்பினையுடைய அரசனது பெருமையுள்ளே அடங்கிற்று இவ்வுலகு' என்று பொருள் செய்வது சரியல்ல. இது எல்லா மக்களுக்கும் பொது அறிவு.)

எல்லா மனிதர்களும் பகைமையை நீக்கிப் பகைவரையும் நட்பாக்கிக் கொள்வதே நல்லது. அதிலும் துணைபலம் இல்லாமல் தனியனாக இருக்கிற ஒருவன் இதை மிகவும் கவனிக்க வேண்டும்:

875. தன்றுணை யின்றாற் பகையிரண்டாற் றானொருவ
னின்றுணையாக் கொள்கவற்றி னொன்று.

ப. ரை: தான் ஒருவன், தன் துணை, இன்றால் பகை, இரண்டால் அவற்றின் ஒன்று இன் துணையா கொள்க = தனியனாக இருக்கும் ஒருவன் (போர் மூண்டால்) தனக்கு ஒரு துணை, இல்லாவிட்டால் பகைவன் (ஆகிய இந்த) இரண்டில் ஒன்றை தனக்கு இனிய துணையாக்கிக் கொள்ள வேண்டும்.

பொ. ரை: (துணை வலிமை இல்லாமல்) தனியனாக இருக்கின்ற ஒருவன் (போர் மூண்டு விட்டபோது தனக்குத்) துணைவரோ, இல்லாவிட்டால் (அப்போதுற்ற) பகைவரோ, (ஆகிய இந்த) இரண்டில் ஒன்றை தனக்கு இனிய உதவியாக்கிக் கொள்ள வேண்டும்.

வி - ம்: இந்தக் குறளுக்கு 'தனக்குதவுந் துணையோ வெனில் இல்லை; நலிவு செய்யும் பகையோ வெனின் இரண்டு; அங்ஙனமாய் நின்ற வழி ஒருவனாகிய தான் அப்பகை இரண்டனுள் பொருந்திய தொன்றை அப்பொழுதைக்கு இனிய துணையாகச் செய்து கொள்க' என்று பொருள் செய்வதில் கருத்தே இல்லை; மேலும் குற்றமுடையதாகும். எப்படியெனில்: 'பகையோ வெனின் இரண்டு' என்று சொல்ல இரண்டு பகைவர்கள் யார்? அப்படியே வைத்துக் கொண்டு

இரண்டு பகைவர்கள் எதிர்த்தால் அவ்விருவரில் ஒருவரை 'இன்றுணையாக் கொள்ள' வேண்டும் என்பதானுல், பகைவர் இரண்டுக்கு மேற்பட்டு மூன்று, நான்கு, ஐந்து எனப் பெருகி யிருந்தால் என்ன செய்வது? ஆதலால் அது பொருளல்ல. தனியனுக இருக்கின்ற ஒருவன், ஒன்று துணை தேடிக்கொண்டு பகைவரை எதிர்க்க வேண்டும், இல்லாவிட்டால் பகைவனையே நட்பாக்கிக் கொள்ளச் சமாதானம் செய்துகொள்ள வேண்டும் — என்பது கருத்து.

பகைவரை நட்பாக்கிக் கொள்வதா, அல்லது எதிர்ப்பதா என்பதைத் தீர்மானிக்க வேண்டியது எப்போதென்றுல்:

876. தேறினுந் தேரு விடினு மழிவின்கட்
டேருன் பகாஅன் விடல்.

ப. ரை: தேறினும் தேருவிடினும் அழிவின்கண் தேருன் பகான் விடல் =(பகைவனை நட்பாக்கிக் கொள்ளத்) தீர்மானித்தாலும் தீர்மானிக்காவிட்டாலும் (அதைப் போர் மூளும் முன்னுல் செய்யாமல் போர் மூண்டு) அழிவு வரக்கூடிய சமயத்தில் (பகைவனை) நட்பாக நம்புவதா பகை தொடர்வதா என்பதை ஆலோசித்துக் கொள்ளலாம் என்பதை விட்டுவிட வேண்டும்.

பொ. ரை: பகைவனை நட்பாக்கிக் கொள்வதை நிச்சயிப்பதா அல்லவா என்பதை (போர் மூளுவதற்கு முன்னுல் ஆலோசிக்க வேண்டும். போர் மூண்டு) சேத முண்டாகும் சமயத்தில் பகைவனுடன் கூடுவதா போரிடுவதா என்பதை எண்ணித் தயங்கக் கூடாது.

வி-ம்: தேறுதல் — தீர்மானித்தல். அழிவு — சேதம். பகையை உறவாக்கிக் கொள்ளும் ஆலோசனையைப் போர் புரியத் தொடங்கு முன்னுல் செய்து தீர்மானித்துக் கொள்ள வேண்டும். போர் தொடுத்து தோல்வி வரும் சமயத்தில் அதையெண்ணித் தயங்கக் கூடாது என்பது கருத்து.

யாரும் தம்முடைய பலவீனத்தைப் பிறர் அறியும்படிச் செய்யக் கூடாது:

877. நோவற்க நொந்த தறியார்க்கு மேவற்க
மென்மை பகைவ ரகத்து.

ப. ரை: நொந்தது அறியார்க்கு நோவற்க; பகைவர் அகத்து மென்மை மேவற்க =(நீ) வறுமை யடைந்து விட்டதை, அதை

அறியாதவர்களிடத்தில் (நீயாக) சொல்லக் கூடாது; (அதைப் போல) மெலியனாய்ப் போய் விட்டதை பகைவருக்குக் காட்டிக் கொள்ளக் கூடாது.

பொ. ரை: நீ ஏழையாகி விட்டதைப் பற்றித் தெரியாதவனுக்குத் தெரியப்படுத்தக் கூடாது. அதைப் போல நீ பலவீனனாகப் போய்விட்டா யென்பதை பகைவர்களிடம் காட்டிக் கொள்ளக் கூடாது.

வி-ம்: நொந்தது—நொந்து போய் விட்டதை, அதாவது ஏழையாகி விட்டதை. நோவற்க — ஏழ்மையை காட்டிக் கொள்ளாதே. பகைவர் அகத்து—பகைவருக் கிடையில் அதாவது பகைமை இருக்கும் வரையிலும். பணக்காரனாக இருந்து ஏழையாகி விட்டவன் அதை அறியாதவனிடத்தில் சொல்லிவிட்டால் முன்னிருந்த மதிப்பிருக்காது. அதுபோல வலிமை குறைந்து இருப்பதை பகைவன் அறிந்து கொள்ளும் படிச் செய்துவிட்டால் பகைவனுக்கு அச்சமற்றுப் போகும். அதனால் வருமையடைந்து விட்டதை அதை அறியாதவனுக்கு சொல்லக் கூடாது; பலவீனமடைந்து விட்டதை, பகைவரிடம் காட்டிக் கொள்ளக் கூடாது—என்பது கருத்து.

ஆதலால் பகைவர்களால் துன்பம் அடைந்து விடாமல் இருக்க வேண்டுமானால்:

878. வகையறிந்து தற்செய்து தற்காப்ப மாயும்
பகைவர்கட் பட்ட செருக்கு.

ப. ரை: வகை அறிந்து தற் செய்து தற்காப்ப பகைவர் கண் பட்ட செருக்கு மாயும்= (இது வரையும் சொல்லப்பட்ட) முறையை அறிந்து, ஒருவன் தன்னை வலிமையுள்ளவனாகச் செய்து, தன்னுடைய பாதுகாப்பைச் செய்து கொண்டால் பகைவர்களிடம் உள்ள இறுமாப்பு அழிந்து போகும்.

பொ. ரை: இதுவரை சொல்லப்பட்ட பகைத்திறம் தெரிந்து ஒருவன் தன்னை பலப்படுத்தி, தற்காப்பு செய்து கொண்டால் அவனுடைய பகைவர்களிடம் உள்ள துணிச்சல் ஒழிந்து விடும்.

வி-ம்: வகையறிந்து—பகைத்திறத்தின் வகைகளையும் அவற்றைச் சமாளிக்க வேண்டிய முறைகளையும் அறிந்து. தற்செய்தல்—தன்னை பலப்படுத்திக் கொள்வது. பகைத் திறங்களை அறிந்து, தன்னை பலப்படுத்தித் தற்காப்பு செய்து கொண்டால் தன்னை வெல்ல நினைக்கும் பகைவருடைய ஆணவம் அழிந்து விடும்—என்பது கருத்து.

பகைமைய நட்பாக்கிக் கொள்வதாலும் அல்லது அதை வெல்வதாலும் பகைமை முற்றுவதற்கு முன் செய்ய வேண்டும். எப்படிப் போல் என்றால்:

879. இளைதாக முண்மரம் கொல்க களையுநர்
கைகொல்லுங் காழ்த்த விடத்து.

ப. ரை: முள் மரம் இளைதாக கொல்க, காழ்த்த இடத்து களையுநர் கை கொல்லும்=முள் மரம் முதிராமல் இருக்கும் போதே (அதை) களைந்து விட வேண்டும்; முதிர்ந்து விட்டபோது அதைக் களைகின்றவர்களுடைய கையை அது வெட்டிவிடும்.

பொ. ரை: முள் மரத்தை அது சிறு செடியாக இருக்கும் போதே பிடுங்கி அழித்துவிட வேண்டும்; முதிர்ந்த மரமாகி விட்டால் அதை வெட்டப் போகிறவர்களுடைய கையையே அது கிழித்து விடும்.

வி-ம்: காழ்த்தல்—முதிர்தல். முள்மரத்தை அது செடியாக இருக்கும் போதே அழித்து விடுவது எளிது; அதை முதிர விட்டு விட்டால் பின் அதை வெட்டும்போது வெட்டுகின்றவனுடைய கைக்கே கேடுண்டாகும். அதைப் போல பகையை ஆரம்பத்திலேயே இல்லாமற் செய்து விட வேண்டும்; முற்ற விட்டால் தீமை உண்டாகும்—என்பது கருத்து.

ஆரம்பத்திலானாலும் சரி, பின்னாலானாலும் சரி, நட்பாக்கும் முறையிலானாலும் சரி, போர் முறையிலானாலும் சரி, பகையை நீக்கியே தீரவேண்டும். இல்லையானால்:

880. உயிர்ப்ப வுளரல்லர் மன்ற செயிர்ப்பவர்
செம்மல் சிதைக்கலா தார்.

ப. ரை: செயிர்ப்பவர் செம்மல் சிதைக்கலாதார் உயிர்ப்ப உளரல்லர்=பகைவர்களுடைய (வலிமையின்) தருக்கை அழித்து விடாதவர்கள் (கவலையின்றி) இளைப்பாறி இருக்க முடியாது.

பொ. ரை: பகைவர்களுடைய கொட்டத்தை அடக்கிவிடாதவர்கள் நிம்மதியாக வாழ முடியாது.

வி-ம்: உயிர்ப்பு—நிம்மதியுடன் இளைப்பாறுதல். செம்மல்—வலிமையினால் உண்டாகும் இறுமாப்பு. சிதைத்தல்—அழித்தல். தன்னை வென்று விடக்கூடிய வலிமையோ, கோபமோ உள்ள பகை இருக்கிற வரைக்கும் ஒருவனுக்கு நிம்மதி இல்லை—என்பது கருத்து.

அதி. 89—உட்பகை

[உள்பகை — 'உட்பகை'. என்பது ஒரு வீட்டிலோ அல்லது நாட்டிலோ உள்ளிருக்கின்றவர்களே பகையாக இருந்து குடும்பத்திற்கோ குடிகளுக்கோ கேடு வரக் கூடிய காரியங்களுக்கு உடந்தையாக 'உள்ளத்தில் பகைமை, வெளித் தோற்றத்தில் உறவு' உடையவர்கள். இவர்களை எச்சரிக்கையாக இருந்து விலக்க வேண்டும் என்பது.]

**881. நிழனீரு மின்னாத வின்னா தமர்நீரு
மின்னாவா மின்னா செயின்.**

ப. ரை: நிழல் நீரும் இன்னாத இன்னா; தமர் நீரும் இன்னா செயின் இன்னாவாம் = (வசிக்கின்ற) இடமும் (பழக்கமான) நீரும் கூட நோயுண்டாக்கினால் தீயவைகளே: (அது போல) உடனிருக்கும் தம்மவரின் இயல்பும் துன்பம் செய்தால் தீயவர்களே.

பொ. ரை: வசிக்கின்ற இடமும் பழக்கமான தண்ணீரும் கூட நோயுண்டாக்குமானால் அவை (விலக்க வேண்டிய) தீமைகளே; அதைப் போல உடனிருந்து பழகும் உறவினரின் நடத்தையும் துன்பம் செய்வதாக இருந்தால் (அவர்களும் விலக்க வேண்டிய) தீயவர்களே.

வி - ம்: நிழல் நீரும் — நிழலும் நீரும் — வசிக்கும் இடமும் பழகிய நீரும், இன்னா — நோய், துன்பம். பிறந்த ஊரும் பழகிய நீரும் கூட உடம்புக்கு ஒத்துக் கொள்ளாவிட்டால் விட்டு விலக வேண்டும்; உடனிருக்கும் உறவினர்களானாலும் தீமை செய்கிறவர்களை விலக்க வேண்டும் — என்பது கருத்து.

கூடவே இருந்து கொண்டு தீமை கருதுகின்ற உட்பகை, வெளியிலுள்ள பகையை விட மிக்கக் கேடு செய்யக் கூடியது. ஆதலால்:

**882. வாள்போல் பகைவரை யஞ்சற்க வஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு.**

ப. ரை: வாள்போல் பகைவரை அஞ்சற்க; கேள் போல் பகைவர் தொடர்பு அஞ்சுக = வாள் போன்ற (அயலாக உள்ள) புறப்பகைவர்களுக்கு அஞ்ச வேண்டாம்; நண்பரைப் போல (உடனிருக்கும்) உட்பகைவருடைய சேர்மானத்தை அஞ்சவேண்டும்.

பொ. ரை: வாள்போல (எதிராகப் போரிடும் போதன்றி மற்ற காலத்தில் துன்பம் செய்யாத) புறப் பகைவர்களுக்கு

பயந்து கொண்டே இருக்க வேண்டியதில்லை; ஆனால் (உட னிருந்து கொண்டே துன்பம் கருதுகின்ற) நண்பர் போன்ற அகப் பகைவருடைய சம்பந்தத்தைப்பற்றி எப்போதும் எச் சரிக்கையாக இருக்க வேண்டும்.

வி-ம்: வாள், தாக்கினாலன்றி புண்ணுண்டாக்காது. வாள் கொண்ட பகைவனும் எச்சரிக்கையின்றி தாக்கமாட்டான். ஆனால் கேள் போன்ற பகைவன் எப்போது என்ன துன்பம் உண்டாக்குவானோ அறிய முடியாது. அப்படிப்பட்ட உட் பகைத் தொடர்பு இல்லாதபடி எச்சரிக்கை கொள்ள வேண் டும். அதனால் நேரான பகைவரை அஞ்சுவதை விட மறை வான உட்பகையின் உறவைப்பற்றி எச்சரிக்கையாக இருக்க வேண்டும் – என்பது கருத்து.

ஆகையினால் :

883. உட்பகை யஞ்சித்தற் காக்க வுலைவிடத்து
மட்பகையின் மாணத் தெறும்.

ப. ரை: உட்பகை அஞ்சி தற்காக்க; உலைவு இடத்து மண் பகையின் மாண தெறும் = (உறவு போல்) உடனிருக்கும் பகைவரை அஞ்சி ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்ள வேண்டும்; (இல்லாவிடில்) அயர்ந்த காலத்தில் மண்பாண் டத்தை அறுத்தெடுக்கும் ஆயுதத்தைப்போல் (உட்பகைவர்) அடியோடு அறுத்து விடுவார்கள்.

பொ. ரை: உட்பகையை நீக்கித் தற்காப்பு செய்து கொள்ள வேண்டும்; இல்லாவிடில் ஏமாந்த சமயம் பார்த்து, குயவன் மண்பாண்டத்தை அறுத்தெடுக்கும் கருவிபோல உட்பகை அடியோடு அறுத்தழித்துவிடும்.

வி-ம்: உலைவு இடத்து — அயர்ந்த சமயத்தில். மாணத் தெறும் – அடியோடு அழித்து விடும். எச்சரிக்கையாக இருந்து உட்பகைவனுடைய தொடர்பை நீக்கித் தற்காப்பு செய்து கொள்ளாவிட்டால் அடியோடு அழிந்துவிட நேரும் – என்பது கருத்து.

நண்பனாக இருந்தும் கருத்து வேற்றுமைக்காகத் தோல்வி மட்டும் உண்டாக்கி வைக்க நினைக்கும் உட்பகையும் உண்டு. அப்படிப்பட்ட உட்பகையினால் :

884. மனமாணா வுட்பகை தோன்றி னினமாணா
வேதம் பலவுந் தரும்.

ப. ரை: மனம் மாணு உட்பகை தோன்றின் இனம் மாறு ஏதம் பலவும் தரும் = மனம் பொருந்தாமையினால் உடனிருப்பவனுடைய பகைமை உண்டானால் அது ஒருவனுடைய சுற்றத்தாரின் உதவி சிறக்காதபடிக்கான துன்பங்கள் பலவற்றையும் உண்டாக்கும்.

பொ. ரை: (ஒரே கட்சியில் இருந்தும்) கருத்து வேற்றுமையினால் ஒருவன் உட்பகைவன் ஆகிவிட்டால் அவனால் நம்முடைய சுற்றத்தாரின் துணைபலம் குறைந்து போகும்படியான துன்பங்கள் பலவும் உண்டாகும்.

வி - ம்: மனம் மாணு – மனம் வேறுபட்ட. இனம் மாறு–இனத்தவர் அதிகம் இல்லாமற் போகும்படி. ஏதம் – துன்பம். அபிப்பிராய வித்யாசத்துக்காகத் தோல்வி உண்டாக்க வேண்டுமென்று எண்ணுகின்ற தன் கட்சியைச் சேர்ந்த ஒருவனுடைய உட்பகையால் தன் கட்சிக்கு ஆள் பலம் குறைந்து விடும் – என்பது கருத்து.

மேற்சொன்ன 'மனம் மாணு உட்பகை' வெறும் நட்பு முறையில் சேர்ந்திருப்பவன். புறத்தே இருந்து வந்து போகின்றவன். இவனைக் காட்டிலும் அதிக தீமை யுண்டாக்கக்கூடிய வசதிகள் உள்ள உட்பகை:

**885. உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா
னேதம் பலவுந் தரும்.**

ப. ரை: உறன் முறையான் உட்பகை தோன்றின் இறல் முறையான் ஏதம் பலவும் தரும் = உறவு முறை உள்ளவனுடைய உட்பகை உண்டானால் அழிவு வரக்கூடிய தன்மையுள்ள துன்பங்கள் பலவும் உண்டாகும்.

பொ. ரை: உறவு முறை உள்ளவன் உட்பகை ஆகிவிட்டால் உயிருக்கே அபாயம் வரக்கூடிய துன்பங்களும் பல உண்டாகும்.

வி - ம்: 'இறல் முறையான்'—'மரணம் உண்டாக்கக் கூடிய இயல்புடைய' உறவு முறையுள்ளவன் வெறும் நண்பனைவிட நெருங்கிப் பழக உரிமையுள்ளவன் ஆனதால் மரணம் உண்டாக்கக் கூடிய துன்பங்களையும்கூட செய்துவிடலாம் – என்பது கருத்து. 'இறல் வரும்' என்று சொல்லாமல் 'இறல் முறையான்' என்றதனால் உயிருக்கும் அபாயம் நேரலாம், என்று ஏகதேசமாகச் சொல்லப்பட்டது குறிப்பிடத்தகுந்தது.

உறன் முறையானுடைய உட்பகையைவிட நிச்சயமாகத் தப்ப முடியாதபடி அழிவே உண்டாக்கக்கூடிய உட்பகை:

886. ஒன்றாமை யொன்றியார் கட்படி னெஞ்ஞான்றும்
பொன்றாமை யொன்ற லரிது.

ப. ரை: ஒன்றியார் கண் ஒன்றாமை படின் பொன்றாமை ஒன்றல் எஞ்ஞான்றும் அரிது = (ஒருவரே போல்) பிணைந்திருப்பவர்களிடம் உட்பகை உண்டாகிவிட்டால் அழிவில்லாமல் இருப்பது ஒருபோதும் முடியாது.

பொ. ரை: ஒன்றே போல் சேர்ந்திருக்கின்றவர்களுக்குள் உட்பகை வந்துவிட்டால் நாசமில்லாமல் இருப்பது ஒரு நாளும் முடியாது.

வி-ம்: ஒன்றாமை – உட்பகை. ஒன்றியார் – ஒரே மனம்போல் இருக்க வேண்டியவர்கள். உதாரணமாக அரசனும் அமைச்சனும், கணவனும் மனைவியும், சேனாதிபதியும் சேனையும் போன்றவர்கள். படின் – வந்துவிட்டால். பொன்றாமை – அழிவில்லாமை. ஒன்றாகச் சேர்ந்தே காரியம் செய்ய வேண்டியவர்களுக்குள் உட்பகை தோன்றிவிட்டால் அழிவது நிச்சயம் – என்பது கருத்து.

நாட்டுக்குள் மட்டுமல்ல வீட்டுக்குள்ளாயினும் உட்பகை தோன்றிவிட்டால்:

887. செப்பின் புணர்ச்சிபோற் கூடினுங் கூடாதே
யுட்பகை யுற்ற குடி.

ப. ரை: உட்பகை உற்றகுடி கூடினும் செப்பின் புணர்ச்சி போல் கூடாது = உட்பகை உள்ள குடித்தனம் சேர்ந்து வசித்தாலும் செப்புகள் (ஒன்றின் மீது ஒன்று) சேர்ந்திருப்பது போல ஒட்டாமல்தான் இருப்பார்கள்.

பொ. ரை: உட்பகை உள்ள குடும்பத்திலுள்ளவர்கள் ஒரே வீட்டில் சேர்ந்து வசித்தாலும் பாண்டங்கள் ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கப்பட்டிருந்தாலும் அவை ஒன்றோடொன்று ஒட்டாதிருப்பதுபோல் (குடும்பத்திலுள்ளவர்களுக்குள்) ஒற்றுமை இருக்காது.

வி-ம்: செப்பு – சிறு பாண்டம். உட்பகை உள்ள குடும்பத்தில் உள்ளவர்கள் ஒரே வீட்டில் சேர்ந்து வசித்தாலும் அடுக்குப் பானைகள் போல ஒருவரோடொருவர் ஒட்டாமல் தான் இருப்பார்கள் – என்பது கருத்து.

ஆதலால் அந்தக் குடித்தனம் எவ்வளவு செல்வமும் வலிமையும் உள்ளதானாலும்:

888. அரம்பொருத பொன்போலத் தேயு முரம்பொரு
துட்பகை யுற்ற குடி.

ப. ரை: உட்பகை உற்றகுடி அரம் பொருத பொன் போல பொருது உரம் தேயும் = உட்பகை அடைந்துவிட்ட குடும்பம் அரத்தால் அராவப்பட்ட இரும்பைப் போல (ஒருவரோ டொருவர்) மனம் கசந்து குடும்ப வலிமை தேய்ந்துவிடும்.

பொ. ரை: உட்பகை தோன்றிவிட்ட குடும்பம் (எவ்வளவு வலிமையுடையதானாலும்) அரத்தால் அராவப்பட்ட இரும் பைப் போல (அதிலுள்ளவர்கள் ஒருவரோடொருவர்) மாச் சரியம் கொண்டு சண்டையிட, சிறுகச் சிறுகத் தேய்ந்து (இறுதியில் முரிந்தும்) போய்விடும்.

வி-ம்: அரம் – இரும்பைத் தேய்க்கும் எஃகு ஆயுதம். உரம் – வலிமை. உட்பகை உண்டாகிவிட்ட குடும்பம் எவ்வளவு பல முடையதாக இருந்தாலும் அரத்தால் தேய்க்கப்பட்ட இரும் பைப்போல சிறுகச் சிறுக ஒற்றுமை குறைந்து உடைந்து போகும் – என்பது கருத்து.

உட்பகை என்ற மனத்தாபம் எவ்வளவு சிறியதாகத் தோன்றினும் உடனே நீக்க வேண்டும். இல்லாவிடில்:

889. எட்பக வன்ன சிறுமைத்தே யாயினு
முட்பகை யுள்ளதாங் கேடு.

ப. ரை: எள் பகவு அன்ன சிறுமைத்தே ஆயினும் உட்பகை கேடு உள்ளது ஆம் = எள்ளின் துண்டு போன்ற சிறியதாக இருந்தாலும் உட்பகை கேடு உண்டாக்கக் கூடியதே ஆகும்.

பொ. ரை: எள்ளின் துணுக்கு போல வெகு சிறியதேயானாலும் கூட உட்பகை நாசம் உண்டாக்கக் கூடியது ஆகும்.

வி-ம்: பகவு – பகுந்த துண்டு. எவ்வளவு சிறியதானாலும் உட் பகை நாசமே உண்டாக்கும் – என்பது கருத்து.

ஏன் எனில்:

890. உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்கருட்
பாம்போ டுடனுறைந் தற்று.

ப. ரை: உடம்பாடு இலாதவர் வாழ்க்கை குடங்கர் உள் பாம் போடு உடன் உறைந்த அற்று = மனப் பொருத்தம் இல்லாத வர்க்ள் சேர்ந்து வசிப்பது சிறு குடிசையில் பாம்போடு சேர்ந்து வசிப்பதை ஒக்கும்.

பொ. ரை: மனப் பொருத்தம் இல்லாதவர்கள் (உட்பகை உள்ளவர்கள்) சேர்ந்து வசிப்பது குறுகிய அறைக்குள் பாம்போடு வசிப்பதற்குச் சமானம்.

வி-ம்: உடம்பாடு – மன ஒற்றுமை. குடங்கர் – குறுகிய சிறு வீடு. வாழ்க்கை – சேர்ந்து வசிப்பது. உறைதல் – தங்கியிருப்பது. குறுகிய சிறு அறைக்குள் பாம்பும் மனிதனும் இருக்க நேர்ந்து விட்டால் எந்த நேரத்தில் பாம்பு கொத்திவிடுமோ என்று பயந்து கொண்டே இருக்க வேண்டும். மேலும் அயர்ந்த சமயத்தில் கொத்திவிடும். அப்படிப்போல் மனம் பொருந்தாத உட்பகை உள்ளவருடன் சேர்ந்திருப்பதும் அச்சமும் அபாயமும் உள்ளது – என்பது கருத்து.

அதி. 90—பெரியாரைப்பிழையாமை

['பெரியாரைப் பிழையாமை' என்பது பெரியவர்களுக்குப் பிழை புரியாதிருப்பது. அதாவது அறிவிலும் அனுபவத்திலும் ஆற்றலிலும் ஆன்ம உணர்ச்சியிலும் நம்மினும் பெரியவர்களை அவமதித்து நடந்து விடாமல் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பது.]

891. ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாந் தலை.

ப. ரை: போற்றுவார் போற்றலுள் எல்லாம் தலை ஆற்றுவார் ஆற்றல் (போற்ற) இகழாமை = (தமது நலத்தை) பாதுகாக்க விரும்புகிறவர்கள் பாதுகாத்துக் கொள்ள வேண்டிய (பொருள்கள்) எல்லாவற்றிலும் தலைசிறந்தது (எதுவென்றால்) தம்மினும் வல்லமையுள்ளவர்களுடைய காரியத்திறமையை (போற்றிக் கொள்ள) மறந்து போகாமலிருத்தல்.

பொ. ரை: (தம்முடைய நலங்களை) பத்திரப்படுத்த விரும்புகிறவர்கள் பத்திரப்படுத்திக் கொள்ள வேண்டிய (பொருள்கள்) எல்லாவற்றிலும் தலைசிறந்த பொருள் (எதுவென்றால்) தம்மினும் வல்லமையுள்ளவர்களுடைய திறமையை (பயன்படுத்திக் கொள்ளத்) தவறிவிடாமை.

வி-ம்: 'இகழாமை' என்பதற்கு 'அவமதிக்காமை' என்பது இங்கே பொருளல்ல. 'மறவாமை' அல்லது 'தவறாமை' என்பது பொருள். ஒருவன் கவனிக்க வேண்டிய விஷயங்களுள் தலைசிறந்த விஷயம் எதுவென்றால் தன்னிலும் வல்

லமையுள்ளவர்களுடைய திறமையைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிடாதிருத்தல் – என்பது கருத்து.

எப்போதும் எந்தக் காரியத்திலும் பெரியோரைக் கலந்து அவருடைய துணை பற்றி நடந்து கொள்ள மறந்து விடக் கூடாது என்றிருக்க, ஒருவன் பெரியோரை மதிக்காமலேயே நடந்து கொண்டால் :

892. பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாரால்
பேரா விடும்பை தரும்.

ப. ரை : பெரியாரை பேணுது ஒழுகின் பெரியாரால் பேரா இடும்பைதரும்=பெரியாரை மதிக்காமல் காரியங்களைச் செய்து விட்டால் (பின் அந்த) பெரியாராலும் நீக்க முடியாத துன்பம் உண்டாகிவிடும்.

பொ. ரை : பெரியவர்களை அலட்சியம் செய்துவிட்டு, காரியங்களைச் செய்தால் பிறகு அந்தப் பெரியாரே முயன்றுலும் மாற்ற முடியாத துன்பங்கள் வந்துவிடும்.

வி - ம் : ‘பேணுது’ என்பதற்கு ‘மதித்து ஆலோசனை கேட்டுக் கொள்ளாமல்’ என்பது பொருள். ‘பெரியாரால் பேரா இடும்பை தரும்’ என்பதற்கு, பெரியாரால் அவர்க்கு என்ஞான்றும் நீங்காத துன்பங்களைக் கொடுக்கும்’ என்பது அல்லபொருள். ‘பெரியாராலும் கூடப் பின் நீக்க முடியாத துன்பங்களைக் கொடுக்கும்’ என்பது பொருள். ஏன் எனில் தம்மை மதிக்கவில்லை என்பதற்காகப் பெரியவர்கள் பிறருக்குத் துன்பம் செய்யக் கூடியவர்களல்ல. ‘ஒழுகில்’ என்பதற்கு வெறும் ‘நடந்து கொண்டால்’ என்பது அர்த்தமல்ல. ‘காரியங்களைச் செய்து விட்டால்’ என்பது அர்த்தம். பெரியவர்களை மதித்து அவர்கள் ஆலோசனையைக் கேட்டுக் கொள்ளாமல் காரியங்களைச் செய்து விட்டால் பின்பு அந்தப் பெரியவர்களே முயன்றுலும் நீக்கமுடியாத துன்பங்கள் உண்டாகிவிடும் – என்பது கருத்து.

ஆகையினுல் :

893. கெடல்வேண்டிற் கேளாது செய்க வடல்வேண்டி
னுற்று பவர்க ணிழுக்கு.

ப. ரை : கெடல் வேண்டின் கேளாது செய்க; அடல் வேண்டின் ஆற்றுபவர்கண் இழுக்கு (செய்க) = (உன் காரியம்) கெட்டுப் போக வேண்டுமானுல் (பெரியாரைக்) கேளாது செய்க;

(உனக்கே) கேடுவர வேண்டுமானால் (உன்னிலும்) ஆற்றலுள்ளவர்களுக்கு (பெரியாருக்கு) தீங்கு செய்க.

பொ. ரை: உன் காரியம் கெட்டுப் போக வேண்டுமானால் (அதைப்பற்றி உன்னிலும் திறமை மிகுந்த பெரியாரிடம்) ஆலோசனை கேட்டுக் கொள்ளாமல் செய்க; உனக்கே கெடுதி வரவேண்டுமானால் (அப் பெரியாருக்குத்) துன்பம் செய்க.

வி-ம்: இந்தக் குறளுக்கு 'வேற்று வேந்தரைக் கோறல் வேண்டிய வழி அதனை அப்பொழுதே செய்யவல்ல வேந்தர் மாட்டுப்பிழையினை, தான் கெடுதல் வேண்டினானாயின் ஒருவன் நீதி நூலைக் கடந்து செய்க.' என்று பொருள் செய்திருப்பது வெறும் குழப்பமன்றி வேறில்லை. அது முற்றிலும் வேண்டாதன விரித்தல்—பெரியாரைக் கேளாது செய்தால் காரியம் கெடும். பெரியாருக்குத் தவறு செய்தால் உனக்கே கேடுவரும்—என்பது கருத்து.

பெரியாரைக் கேளாது செய்து காரியம் கெட்டுப் போனாலும் போகட்டும். ஆனால் பெரியாருக்குத் துன்பம் செய்து விடாமலாவது இருக்க வேண்டும். ஏனென்றால்:

894. கூற்றத்தைக் கையால் விளித்தற்றா லாற்றுவார்க்
காற்றாதா ரின்னா செயல்.

ப. ரை: ஆற்றுவார்க்கு ஆற்றாதார் இன்னா செயல் கூற்றத்தை கையால் விளித்த அற்று=வல்லமை உள்ளவர்களுக்கு வல்லமையற்றவர்கள் துன்பம் செய்வது எமனைக் கையைப் பிடித்து அழைப்பதை ஒக்கும்.

பொ. ரை: வல்லமையாற் பெரியாருக்கு வல்லமை இல்லாதவன் துன்பம் செய்வது எமனைக் கையைப் பிடித்துத் தன்னிடம் இழுப்பதற்குச் சமானம்.

வி-ம்: கையால் விளித்தல்—கையைப் பிடித்துத் தன்னிடம் அழைத்தல். அதாவது வற்புறுத்தி அழைத்தல். வலிமையிற் பெரியவர்களுக்குத் துன்பம் செய்வது மரணத்தை வலிய வருவித்துக் கொள்வதற்குச் சமானம்—என்பது கருத்து.

தேகபலம், ஆயுதபலம், அல்லது அதிகார பலம் முதலிய சாதாரண பலங்களால் பெரியாராக இருப்பவர்களுக்குத் துன்பம் செய்து விட்டாலும் ஒருக்கால் தப்பித்துக் கொள்ளலாம். ஆனால் ஆசைகளை வென்று குற்றமற்ற ஒழுக்கத்தால் ஆன்மபலம் பெற்றவர்களான பெரியாருக்குத் துன்பம் செய்தால்:

895. யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின்
வேந்து செறப்பட் டவர்.

ப. ரை: வெம் துப்பின் வேந்து செறப்பட்டவர் யாண்டுச் சென்று யாண்டும் உளராகார் = (துன்பம் தருவனவாகிய) ஆசைக் குற்றங்களை அடக்கியாளும் வேந்தராகிய பெரியாருக்குத் துன்பம் செய்கிறவர்கள் எங்கே போனாலும் எங்கும் வாழ முடியாது.

பொ. ரை: ஐம்புல ஆசைக் குற்றங்களையும் அடக்கியாளும் வேந்தராகிய பெரியாருக்கு வருத்தம் உண்டாக்குகிறவர்கள் எங்கே போனாலும் எங்கும் சுகமாக இருக்க முடியாது.

வி-ம்: வெம் துப்பு – வெம்மையாகிய குற்றங்கள் – அதாவது ஐம்புல ஆசைகளால் வரும் குற்றங்கள். வெம்மை – ஆசை. துப்பு – குற்றம். வெம் துப்பின் வேந்து – ஆசை குற்றங்களை வென்றவன், 'வேந்து' என்பதற்கு இங்கே 'அரசன்' என்பது பொருளல்ல. ஏன் எனில் இந்த அதிகாரத்தில் சொல்லப்படும் 'பெரியார்' என்பது 'அரசன்' அல்ல. அரசனுக்கும் பிறருக்கும் மேலான அசாதாரணமான அறிவும் ஆற்றலும் ஆன்ம பலமும் உள்ளவர்களைத் தான் 'பெரியார்' என்று குறிப்பிடுகின்றார். எப்படி எனில் பின்னால் வரும் ஒரு குறளில் 'ஏந்திய கொள்கையார் சீறின் இடை முறிந்து வேந்தனும் வேந்து கெடும்' என்பதனால் 'பெரியார்' என்பது 'வேந்தன்' அல்ல என்பது நிச்சயம். மேலும் ஒரு அரசனுக்குத் தீங்கு செய்துவிட்டவன் 'எங்கே போனாலும் எங்கும் தப்ப முடியாது' என்பது உண்மைக்குப் பொருந்தாது. ஒரு அரசனால் வெறுக்கப்பட்டவன் இன்னொரு அரசனிடத்தில் வரிசைகளும் சீரும் சிறப்புகளும் பெற்று கூட வாழ முடியும். ஆகையினால் இந்திரிய ஆசைக் குற்றங்களை வென்ற மகான்களுக்கு வருத்த முண்டாக்குகிறவர்கள் எங்கே போனாலும் தப்ப முடியாது – என்பது கருத்து. 'செறப்பட்டவர்' என்பது 'செறுகின்றவர்' என்ற பொருளில் உள்ள செய்வினைச் சொல். செயப்பாட்டு வினைச் சொல்லாகக் கொள்ள வேண்டியதில்லை. செறுகின்றவர் — துன்பம் செய்கின்றவர்கள்.

மகான்களுக்கு வருத்த முண்டாக்கி அதனால் உண்டாகும் வெப்பம் சாதாரண நெருப்பை விடக் கேடு செய்யும்:

896. எரியாற் சுடப்படினு முய்வுண்டா முய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்.

ப. ரை: எரியால் சுடப்படினும் உய்வு உண்டாம்; பெரியார்ப் பிழைத்து ஒழுகுவார் உய்யார் = நெருப்பினால் சுடப்பட்டு விட்டாலும் தப்பிப் பிழைத்துக்கொள்ளலாம்; ஆனால் (ஆன்ம பலமுள்ள) பெரியவர்களுக்குக் குற்றம் செய்து நடந்து கொள்ளுகிறவர்கள் தப்பித்துக் கொள்ள மாட்டார்கள்.

பொ. ரை: நெருப்பினால் சுடப்பட்டாலும் தப்பித்துக்கொள்ள லாம். ஆனால் (தவப் பெருமையுள்ள) மகான்களுக்குத் துன்பம் செய்து (அதனால் உண்டாகும் பாவத் தீயினால்) தொடரப்பட்டவர்கள் தப்பித்துக் கொள்ளவே முடியாது.

வி-ம்: சாதாரண நெருப்பு தேகத்தில் பட்ட அளவுக்குதான் சுடும். பட்ட இடத்தில்தான் புண்ணுண்டாகும். ஆனால் மகான்களுக்குத் துன்பம் செய்வதனால் உண்டாகும் தீவினை நெருப்பு எங்கு போனாலும் தேகம் முழுவதையும் சுற்றிக் கொண்டதாகி எரித்து விடும் என்பது கருத்து. இந்த அதிகாரத்தில் ஆன்ம பலமுள்ள 'பெரியார்கள்' என்பவர் துறவு பூண்ட தவசிகளாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. இல்லறத்தாரிலும் ஆன்மபலம் உள்ளவர்கள் உண்டு.

எவ்வளவு செல்வமும் சிறப்பும் உள்ளவர்களானாலும் மகான்களுடைய வருத்தத்துக்கு ஆளாவார்களாயின்:

897. வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னாந்
தகைமாண்ட தக்கார் செறின்.

ப. ரை: தகை மாண்ட தக்கார் செறின் வகைமாண்ட வாழ்க்கையும் வான் பொருளும் என் ஆம்? = தகைமையிற் சிறந்தவர்களாகிய மேன் மக்கள் வெறுத்தால் வகை வகையான சிறப்புகளுள்ள வாழ்வும் மிகுந்த செல்வமும் என்னத்திற்கு உதவும்?

பொ. ரை: மனிதத் தன்மையில் உயர்ந்த (ஆன்ம உணர்ச்சியில் உயர்ந்த) மேன் மக்கள் (ஒருவனை) வெறுப்பார்களானால் அவனுடைய விதம் விதமான சிறப்புகளுள்ள சுக வாழ்வும் அளவுகடந்த செல்வமும் என்னத்திற்கு ஆகும்?

வி-ம்: தகை – தகைமை; அதாவது பண்பு. தகை மாண்ட – பண்புகளில் உயர்ந்த. மனிதப் பண்புகளில் உயர்தல் என்பது ஆன்ம உணர்ச்சி பெறுவது. மற்ற உயிர்களைவிட மனிதனுக்குள்ள பண்புகளில் தலைசிறந்த பண்பு ஆன்ம உணர்ச்சி. ஆகையால் 'தகைமாண்ட தக்கார்' என்றால் ஆன்ம உணர்ச்சியில் சிறந்த மேன்மக்கள். அதாவது மகாத்மாக்கள். செறின் – வெறுத்தால். ஆன்ம பலத்தால் உயர்ந்த மேன்மக்களுக்குத் துன்பமுண்டாக்கி அவர்களால் வெறுக்

கப்பட்டவர்கள் எவ்வளவு சிறப்புகளும் செல்வமும் உள்ள வர்களானாலும் நாசமுறுவார்கள் — என்பது கருத்து.

ஆன்ம பலத்தால் உயர்ந்த பெரியார் தமக்குத் துன்பம் உண்டாக்கினவர்களுக்குத் தண்டனை செய்ய ஒரு முயற்சியும் செய்யாவிட்டாலும் அவர்கள் மனவருத்தமே அவர்களுக்குத் துன்பம் செய்தவர்களைக் கெடுத்துவிடப் போதுமானது:

898. குன்றன்னார் குன்ற மதிப்பிற் குடியொடு
நின்றன்னார் மாய்வர் நிலத்து.

ப. ரை: குன்று அன்னார் குன்ற மதிப்பின் நிலத்து நின்றன்னார் குடியொடு மாய்வர் = (கொள்கையிலும் குணத்திலும் அசைவில்லாத தன்மையினால்) மலையைப் போன்றவர்கள் (பெரியார்) குறைவாக எண்ணினால் (அவர்களுக்குப் பிழை செய்தவர்கள்) உலகத்தில் உயர்ந்து நின்ற பதவியிலுள்ளவர்களானாலும் குலத்தோடு அழிவார்கள்.

பொ. ரை: (கொள்கையிலும் குணங்களிலும் சலனமில்லாத தன்மையினால்) மலையைப் போன்றவர்களான மகான்கள் (மனம் நொந்து) குறைவாக எண்ணினாலும் (அவர்களுக்குத் துன்பம் செய்தவர்கள்) உலகத்தில் உயர்ந்து நின்றவர்களானாலும் குலத்தோடு அழிந்து போவார்கள்.

வி-ம்: குன்ற மதிப்பின் — குறைவாக எண்ணினால். நின்றன்னார் — வாழ்க்கையில் உயர்ந்து நின்றவர்கள். குடியொடு மாய்வர் — பூண்டற்றுப் போவார்கள். மலைபோன்ற மகான்கள் மனம் நொந்து குறைவாக எண்ணினாலும் அவர்களுக்குத் துன்பஞ் செய்தவர்கள் எவ்வளவு உயர்ந்த வாழ்க்கையிலிருந்தாலும் வம்சம் அற்று நாசமுறுவார்கள் — என்பது கருத்து.

மகான்கள் கோபமில்லாமல் மனம் நொந்து எண்ணினாலும் பெருஞ்செல்வத்தில் வாழ்ந்தவர்களும் நிர்மூலமாகி விடுவார்கள் என்றால் அப்படிப்பட்ட மகான்களுக்குக் கோபமும் வந்து விட்டாலோ:

899. ஏந்திய கொள்கையார் சீறி னிடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும்.

ப. ரை: ஏந்திய கொள்கையார் சீறின் வேந்தனும் இடைமுறிந்து வேந்து கெடும் = சிறந்த ஆன்ம ஒழுக்கமுடையவர்கள் (பெரியார்) கோபித்தால் அரசனும் அப்போதே வலிமை முறிந்தவனாகி அரசாட்சியை இழந்து விடுவான்.

பொ. ரை: உயர்ந்த ஆன்ம ஒழுக்கமுடைய மகான்கள் கோபித்துக் கொள்ள நேர்ந்து விட்டால் (கோபிக்கப்பட்டவன்) அரசனானாலும் கூட அப்போதே பலமிழந்தவனாகி அரசாட்சியையும் இழந்து விடுவான்.

வி-ம்: ஏந்திய — உயர்ந்த. கொள்கை — ஆன்ம உணர்ச்சியுள்ள ஒழுக்கம். இடை — அந்த சமயம். இடைமுறிந்து — அந்த சமயத்திலேயே முறிந்து. 'இடைமுறிந்து வேந்தனும் வேந்து கெடும்' என்பதற்கு 'இந்திரனும் இடையே தன் பதம் இழந்து கெடும்' என்று 'நகுடன் கதை'யை இங்கே இழுப்பது சிறிதும் பொருத்தமற்றது. இந்தக் குறள் இந்திரன் கதைக்காக எழுதப்பட்டதல்ல. பொதுவாகச் சொல்லப்பட்டது. வேந்தனாக இருந்தாலும் ஒருவன் பெரியாருக்குப் பிழை புரிந்து அப் பெரியாருடைய கோபத்துக்கு ஆளானால் உடனே பலம் முரிந்து அரசையும் இழப்பான் — என்பது கருத்து.

பெரியாருக்குப் பிழைபுரிந்தவன் அரசனானாலும் என்பது மட்டுமன்றி, அவனைக் காப்பாற்ற எவ்வளவு துணைவர்கள் உள்ளவனானாலும் அவன் தப்ப முடியாது; பெரியோர்கள் கோபிக்காவிட்டாலும் அவர்களுடைய வருத்தமே அழித்து விடும்:

900. இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்.

ப. ரை: சிறந்து அமைந்த சீரார் செறின் இறந்து அமைந்த சார்பு உடையராயினும் உய்யார் = உயர்ந்த அடக்கமுடைய நல்லொழுக்க முடையவர்கள் (துன்பப் படுத்தப்பட்டு) வருத்தமடைந்தால் (அவரைத் துன்புறுத்தியவர்கள்) அளவு கடந்த துணைவர்கள் உள்ளவர்களானாலும் தப்பமாட்டார்கள்.

பொ. ரை: உயர்ந்த புலன் அடக்கிய ஒழுக்கமுடையவர்கள் (துன்பப்படுத்தப்பட்டு) வருத்தமடைவார்களானால் (துன்பம் செய்தவர்கள்) எவ்வளவு துணைபலம் உள்ளவர்களானாலும் தப்ப முடியாது (அழிவார்கள்).

வி-ம்: அமைந்த சீரார் — அடக்கமுள்ள ஒழுக்கமுடையவர்கள்; அதாவது புலனடக்கி நடந்து கொள்ளக் கூடிய பெரியார். இறந்து — அளவிறந்து. புலனடக்கிய ஒழுக்கத்தில் சிறந்த பெரியவர்கள் மனம் நொந்தால் அவர்களுக்குத் துன்பம் செய்தவர்கள் எவ்வளவு துணைபலமும் படைபலமும் உள்ளவர்களானாலும் தப்பாமல் கெட்டுப் போவார்கள் — என்பது கருத்து.

அதி. 91—பெண்வழிச்சேறல்

['பெண் வழிச் சேறல்' என்பது பெண் சொன்ன வழியில் ஆண் நடத்தல். அதாவது மனைவி சொன்னபடி கணவன் செய்வது. காம ஆசைக்கு அடிமைப்பட்டு மனைவி, சொன்ன படியெல்லாம் கேட்பதும் அவளுக்கு அஞ்சி அடங்கி நடப் பதும் குடும்பத் தலைவனுக்குத் தகாது என்பதைப் பற்றிச் சொல்லுவது. இது எல்லாருக்கும் பொது. இங்கே, பெண் ஆணுக்கு அறிவு சொல்லக் கூடாதா, யோசனை சொல்லக் கூடிய திறமையும் உரிமையும் பெண்களுக்கு இல்லையா, என்பன போன்ற கேள்விகளுக்கு இடங்கொடுத்து விடக் கூடாது. வெறும் காம இன்பத்தைக் கருதி ஆண் பெண் ணுக்கு அடிமையாகி விடக்கூடாது என்பது மட்டும்தான் இதிற் சொல்லப்படுவது.]

901. மனைவிழைவார் மாண்பயனெய்தார் வினைவிழைவார்
வேண்டாப் பொருளு மது.

ப. ரை: மனை விழைவார் மாண் பயன் எய்தார்; வினை விழை வார் வேண்டா பொருளும் அது = மனைவியின் மீதுள்ள காம ஆசைக்காக அவள் விரும்பிய வழி நடக்கிறவர்கள் வாழ்க்கை யின் சிறந்த பயனை அடைய மாட்டார்கள்; காரியத்தை விரும்புகின்றவர்கள் விரும்பத்தகாத செயலும் அதுவாகும்.

பொ. ரை: மனைவியின் காம இன்பத்துக்காக, அவளுடைய விருப்பத்தின்படி நடக்கிறவர்கள் வாழ்க்கையின் சிறந்த பயன்களை அடைய மாட்டார்கள்; காரியத்தை விரும்புகிற வர்கள் விரும்பத்தகாத நடத்தையும் அதுவேயாகும்.

வி-ம்: மாண்பயன் – சிறந்த பயன்களாகிய அறம், பொருள், இன்பம், வீடு என்பன. காம ஆசைக்காக மனைவியின் சொற் படி நடக்கிறவர்கள் வாழ்க்கையின் சிறந்த பயன்களை அடைய முடியாது; காரியத்தில் வெற்றிபெற விருப்பமுள்ளவர்கள் அப்படிச் செய்யக்கூடாது – என்பது கருத்து.

மனைவி எதைச் சொன்னாலும் கேட்கக் கூடாது என்பதல்ல; பின் என்னவென்றால் :

902. பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர்
நாணாக நாணுத் தரும்.

ப. ரை: பேணாது பெண் விழைவான் ஆக்கம் பெரியது ஓர் நாண் ஆக நாணுத்தரும் = நியாயங்களைக் கருதாமல் பெண்

சொல்வதை யெல்லாம் விரும்பிச் செய்கிறவனுடைய வாழ்க்கை பெரிய ஒரு அவமானமாகத் தலை குனியச் செய்யும்.

பொ. ரை : ஆலோசிக்காமல் மனைவி சொன்னதை யெல்லாம் செய்ய விரும்புகிறவனுடைய வாழ்வு பெரிய அவமான முள்ள காரியமாகி தலைகுனியச் செய்யும்.

வி- ம் : பேணாது – கருதிப்பாராமல். ஆக்கம் – வாழ்வு. சொந்த ஆலோசனை இல்லாமல் மனைவி சொன்னதை யெல்லாம் கேட்கிறவனுடைய வாழ்க்கை அவனுக்கு அவமானத்தை உண்டாக்கித் தலைவணங்கச் செய்யும் – என்பது கருத்து.

சொந்த ஆலோசனை இல்லாமல் மனைவி சொன்னதை யெல்லாம் செய்து விடுகிறவன் பின்னால் தானே தலைகுனிய நேரும். இதைவிட, மனைவிக்குக் கீழ்ப்படிந்து அவளுடைய கட்டளைப்படி நடக்கிறவர்களும் உண்டு. அது :

903. இல்லாள்கட் டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்று
நல்லாரு ணாணுத் தரும்.

ப. ரை : இல்லாள் கண் தாழ்ந்த இயல்பு இன்மை எஞ்ஞான்றும் நல்லார் உள் நாணுத் தரும் = மனைவியிடத்தில் கீழ்ப்படிந்த முறை கெட்ட தன்மை எப்போதும் நல்லவர்களுக்கிடையில் வெட்கப்படச் செய்யும்.

பொ. ரை : மனைவிக்குக் கீழ்ப்படிகின்ற முறை கெட்ட தன்மை எப்போதும் நல்லவர்கள் மத்தியில் கூசச் செய்யும்.

வி - ம் : இயல்பு – முறைமை. மனைவிக்குக் கீழ்ப்படிந்து அவள் ஏவியபடி செய்கின்ற முறை கெட்டவன் நல்லவர்கள் சபையில் தலை குனிய வேண்டியவன் – என்பது கருத்து.

மனைவியின் காம இன்பத்துக்காகச் சொந்த புத்தியைவிட்டு அவள் சொன்னபடி யெல்லாம் செய்கிறவர்களைப் பற்றி இதற்கு முந்திய குறளில் சொல்லப்பட்டது. அதுமட்டுமல்லாமல் மனைவிக்குக் கீழ்ப்படிந்து ஏவல் செய்கிறவர்களும் உண்டென்பதை இந்தக் குறளில் சொல்லப்பட்டது. இதைவிட இன்னும் கீழ்த்தரமாக மனைவிக்கு அஞ்சி நடக்கிறவனும் உண்டு :

904. மனையாளை யஞ்சு மறுமையி லாளன்
வினையாண்மை வீறெய்த லின்று.

ப. ரை : மனையாளை அஞ்சும் மறுமை இலாளன் வினை ஆண்மை வீறு எய்தல் இன்று = மனைவியை அஞ்சுகின்ற மறுமைப்

பயன் இல்லாதவன் காரியம் செய்வது வெற்றி பெறுவது இல்லை.

பொ. ரை : மனைவிக்கு அஞ்சி அடங்குகின்ற மறுமைப் பயனும் இல்லாதவன் கையாளும் எந்த வேலையும் வெற்றி பெருது.

வி - ம் : ‘மனையாளை அஞ்சும்’ என்பது மனைவிக்கு அஞ்சி அடங்கி அவள் சொன்னபடி கேட்பது. ‘மறுமையிலாளன்’ என்பது ‘மறுபிறப்பு’ என்பதைப் பற்றி நினைக்கவே முடியாதவன். ‘இம்மை’ என்னும் இந்தப் பிறப்பில் நல்லறம் நடத்தி வாழ்ந்தவர்கள் ‘மறுமை’ என்ற அடுத்த பிறப்பில் நல்ல சுகபோகங்களுள்ளவர்களாக இருப்பார்கள் என்பது நம்பிக்கை. இந்தப் பிறப்பில் மனைவியின் காம சுகத்துக்காக அவளுக்கு அஞ்சி நடக்கின்றவன் சொந்த அறிவுள்ள ஆன்ம உணர்ச்சியோடு செய்யவேண்டிய அறங்கள் எதையும் செய்ய முடியாதவன் ஆகையால் அவன் நல்ல மறுபிறப்பை நினைக்கக் கூடத் தகுதியற்றவன் என்பதைக் குறிக்க ‘மறுமையிலாளன்’ எனப்பட்டது. திருவள்ளுவர் ‘நல்வினை’, ‘தீவினை’, ‘ஊழ்வினை’, ‘ஊழ்வினைப்பயன்’ என்பனவற்றை முற்றிலும் நம்பினவர். ஆதலால் இந்த ‘மறுமையிலாளன்’ என்பதற்கு வேறு எந்தப் பொருள் சொன்னுலும் அது திருவள்ளுவர் கருதிய பொருள் ஆகாது. வீறு = வெற்றி. மனையாளுக்குப் பயந்து அவள் சொன்னபடி நடக்கிறவன் இப்பிறப்பில் எந்தக் காரியத்திலும் வெற்றி பெற முடியாது; நல்ல அடுத்த பிறப்பைப் பற்றி நினைக்கவும் அருகனல்ல—என்பது கருத்து.

ஏன் என்ருல் :

905. இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று
நல்லார்க்கு நல்ல செயல்.

ப. ரை : எஞ்ஞான்றும் இல்லாளை அஞ்சுவான் நல்லார்க்கும் நல்ல செயல் அஞ்சும் = எப்போதும் மனைவிக்கு அஞ்சி நடக்கிறவன் நல்லவர்களுக்கு நல்லது செய்யவும் அஞ்சுவான்.

பொ. ரை : எல்லாக் காரியத்திலும் மனைவிக்குப் பயந்து நடக்கின்றவன், தக்கவர்களுக்கு நன்மை செய்யவும் பயப்படுவான்.

வி - ம் : நல்லார் — தக்கார். எப்போதும் மனைவிக்குப் பயந்து நடக்கிறவன் ஒரு நல்ல காரியமும் செய்யமுடியாது. அதனல் அவனுக்கு அறம் என்பதில்லை — என்பது கருத்து.

மிகவும் தக்கதான தர்மங்களைக் கூட மனைவியிடத்தில் தனக்குள்ள அச்சத்தினால் செய்ய முடியாதவன் எவ்வளவு செல்வமுடையவனாக இருந்தாலும் :

906. இமையாரின் வாழினும் பாடிலரே யில்லா
ளமையார்தோ ளஞ்சு பவர்.

ப. உரை : இல்லாள் அமை ஆர் தோள் அஞ்சுபவர் இமையாரின் வாழினும் பாடு இலர் = மனைவியினுடைய அழகு பொருந்திய தோளுக்கு அஞ்சி நடக்கிறவர்கள் தேவர்களைவிட (சிறந்த) வாழ்க்கையுள்ளவர்களானாலும் பெருமை இல்லாதவர்கள்.

பொ. உரை : மனைவியினுடைய அழகு பொருந்திய தோளில் (முயங்கும் காம இன்பத்தைக் கருதி) மயங்கி அவளுக்கு அஞ்சி நடக்கிறவர்கள், தேவர்களைவிடச் சிறந்த போக வாழ்க்கை உடையவர்களானாலும் சிறப்பற்றவர்களே ஆவார்கள்.

வி - ம் : அமை — அழகு. ஆர் — பொருந்திய. 'அமையார் தோள்' என்பது காம இன்பத்தை நினைப்பூட்ட, 'காம இன்பத்துக்காக முயங்கும் ஆசை தரக்கூடிய அழகுள்ள தோள்கள்' என்ற பொருளில் நிற்பது. மனைவியின் காம இன்பத்தைக் கருதி, அதற்காக அவளுக்கு அஞ்சி நடக்கிறவர்கள் தேவர்களைவிடச் சிறந்த சுகபோகங்களை அனுபவிக்கிறவர்களாக இருந்தாலும் சிறப்பற்றவர்களே; அவர்களுக்குப் புகழோ புண்ணியமோ இல்லை — என்பது கருத்து.

ஆகையினால், வெறும் ஆசையினாலாயினும் சரி, அல்லது ஆசையுடன் பணிவும் கூடியானாலும் சரி, அல்லது ஆசையும் பணிவும் அச்சமும் சேர்ந்தானாலும் சரி :

907. பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து.

ப. உரை : பெண் ஏவல் செய்து ஒழுகும் ஆண்மையின் நாண் உடை பெண்ணே பெருமை உடைத்து = பெண் கட்டளையிட்டபடி காரியம் செய்து நடக்கும் ஆண் பிள்ளையை விட நாணமுள்ள பெண்ணே சிறப்புடையவள்.

பொ. உரை : பெண்ணின் கட்டளைக்கு அடங்கிக் காரியம் செய்து வாழும் ஆண் பிள்ளையைவிட அடக்கமுள்ள பெண்பிள்ளையே சிறப்புடையவள்.

வி-ம்: நாண் — நாணம்=பெண்மைக்கு இயல்பாக உள்ள அடக்கம். ஆண் தன்மைக்குச் சிறப்புக் குணம் ஆளும் தன்மையாகிய ஆற்றல். 'ஆற்றல்' என்பது உடல் வலிமை, மனவலிமை இவற்றுடன் செயலாற்றும் திண்மை. பெண்மைக்குச் சிறப்புக் குணம் அன்பும் அடக்கமும் மிகுந்த மென்மை. பெண் ஏவல் செய்யும் ஆணுக்கு அந்தத் திண்மை இல்லை. ஆண் ஏவல் கொள்ளும் பெண்ணுக்கும் அந்த மென்மை இல்லை. 'நாணுடை' என்ற பதத்தால் 'நாண்' இல்லாத பெண் பெருமை உடையவளல்ல என்பது சொல்லாமல் அறியக் கிடக்கிறது. பெண்ணேவல் செய்யும் ஆணுக்கும் பெருமை இல்லை; ஆணேவல் கொள்ளும் பெண்மையும் பெருமை உடையதல்ல — என்பது கருத்து.

பெண்ணேவல் செய்கின்றவர்கள் திண்மையற்றவராகிவிடுவதினால்:

908. நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்
பெட்டாங் கொழுகு பவர்.

ப. ரை: நன்னுதலாள் பெட்ட ஆங்கு ஒழுகுபவர் நட்டார் குறை முடியார் நன்று ஆற்றார்=மனைவி விரும்புகிறபடியே நடக்கிறவர்கள் நண்பர்களுடைய துன்பத்தை நீக்கமாட்டார்கள் (வேறு எந்த) நல்ல காரியமும் செய்ய மாட்டார்கள்.

பொ. ரை: மனைவியின் இச்சைப்படியே எதையும் செய்கிறவர்கள் நண்பர்களுக்கு நேரிடும் துன்பங்களைக் கூட நீக்க முடியாது; வேறு எந்த நல்ல காரியமும் செய்ய முடியாது.

வி-ம்: நன்னுதல்—பெண். மனைவியின் விருப்பப்படியே நடக்கிறவர்கள் நண்பர்களுக்குச் சங்கடம் வந்துவிட்டாலும் உதவ மாட்டார்கள்; அவர்கள் எந்த நல்ல காரியத்துக்கும் தகுதியற்றவர்கள்—என்பது கருத்து.

பெண்ணேவல் செய்கின்றவர்கள் பிறருக்கு உதவி செய்ய முடியாதவர்கள் என்பது மட்டுமல்ல; அவர்களுடைய வாழ்க்கை அவர்களுக்கே உதவியற்றது:

909. அறவினையு மான்ற பொருளும் பிறவினையும்
பெண்ணேவல் செய்வார்க ணில்.

ப. ரை: அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும் பெண் ஏவல் செய்வார் கண் இல்=தர்ம காரியங்களும் அவற்றிற்கான பொருள் சம்பாதிப்பதும் (இவற்றைச் சேர்ந்த) மற்றக்

காரியங்களும் பெண் சொன்னபடி நடக்கிறவர்களிடத்தில் இருக்கமாட்டா.

பொ. ரை: அறச் செயல்களும் அவற்றுக்கு வேண்டிய பொருள் சம்பாதிக்கும் முயற்சியும் இவற்றை ஒட்டிவரும் மற்ற நன்மைகளும் பெண்ணேவல் செய்கிறவர்களிடம் இருக்க மாட்டா.

வி-ம்: பெண்ணேவல் செய்கிறவனுக்குச் சுதந்திரமாகிய சுதர்ம உணர்ச்சியே அற்றுப் போவதால் — அவனுக்கு, அறம் பொருள், இன்பம், விடு என்ற நான்கிலுள்ள இன்பம் என்ற காம உணர்ச்சி தவிர மற்ற மூன்று உணர்ச்சிகளும் இருக்க மாட்டா. ஆதலால்:

910. எண்சேர்ந்த நெஞ்சத் திடனுடையார்க் கெஞ்ஞான்றும்
பெண்சேர்ந்தாம் பேதைமை யில்.

ப. ரை: எண் சேர்ந்த நெஞ்சத் திடன் உடையார்க்கு பெண் சேர்ந்து ஆம் பேதைமை எஞ்ஞான்றும் இல் = சொந்த அறிவோடு கூடிய மன உறுதியுடையவர்களுக்கு மனைவியின் விருப்பம் சேர்ந்துதான் (எதையும் செய்யலாம்) என்ற மூடத்தனம் இருக்காது.

பொ. ரை: சொந்த அறிவின் ஆலோசனையுடன் மனோதிடமும் உள்ள (இருக்க வேண்டிய) ஆண்மக்களுக்கு மனைவியின் பேச்சைக் கேட்டுத்தான் எதையும் செய்வது என்ற மூடத் தனம் இருக்காது; (இருக்கக் கூடாது).

வி-ம்: எண் — எண்ணம்; அதாவது சொந்த அறிவு கொண்டு ஆலோசித்தல். நெஞ்சத்திடன் — மன உறுதி — ஆண்மைக்கு இயல்பாக இருக்க வேண்டிய திண்மை. 'பெண் சேர்ந்து ஆம் பேதைமை' — பெண்ணின் விருப்பம் சேர்ந்துதான் ஆக வேண்டும் என்ற அறியாமை. சொந்த அறிவும் ஆலோசனையும் சேர்ந்த மன உறுதி இருக்க வேண்டிய (இல்லறத் தலைவனாகிய) கணவனுக்கு, எந்தக் காரியத்தையும் மனைவி யின் இச்சைப்படிதான் செய்ய வேண்டுமென்று (காமம் பற்றிய) அறிவின்மை இருக்கக் கூடாது — என்பது கருத்து.

அதி. 92—வரைவின்மகளிர்

[வரைவு + இல் + மகளிர் — 'வரைவின் மகளிர்' என்பது வரைமுறை இல்லாமல் பணம் கொடுப்பவர் யாரானாலும் அவர்களுடைய காமத்துக்குத் தமது பெண்மையை விலைக்கு விற்கும் வேசியர். அவர்களுடைய இன்பத்தை நாடக்கூடாது என்பது இவ்வதிகாரம்.]

**911. அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத் தரும்.**

ப. ரை: அன்பின் விழையார் பொருள் விழையும் ஆய்தொடி யார் இன்சொல் இழுக்கு தரும்=அன்பினால் ஆசை கொள்ளாமல் பொருளுக்காக ஆசை காட்டுகின்ற ஆய்ந்தெடுத்த வளையல்களையணிந்த விலைமாதர்களுடைய இனிய வார்த்தைகள் (பின்னால்) துன்பம் தருவனவாகும்.

பொ. ரை: அன்பு காரணமாக ஆசை கொள்ளாமல் பணம் காரணமாகப் பாசாங்கு ஆசை காட்டும் விலைமாதர்களுடைய பேச்சு இனிமையாக இருந்தாலும் அதனால் பின்னால் துன்பமே வரும்.

வி-ம்: இழுக்கு – துன்பம் – பணவிரயம், நோய், குடும்பக் கேடு முதலிய பல துன்பங்கள். உள்ளன்பில்லாமல் வெறும் பணத்துக்காகப் பொய்யான நேசம் காட்டுகின்ற வேசியரின் பேச்சு எவ்வளவு இனிமையாக இருந்தாலும் பின்னால் துன்பமே தரும் – என்பது கருத்து.

ஆதலால்:

**912. பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்றூக்கி நள்ளா விடல்.**

ப. ரை: பயன் தூக்கி பண்பு உரைக்கும் பண்பு இல் மகளிர் நயன் தூக்கி நள்ளா விடல்=பெறக்கூடிய பொருட்பயனை அளந்து கொண்டு அதற்குத் தக்கபடி இனிமை பேசுகின்ற, உண்மைக் குணம் இல்லாத விலை மாதர்களுடைய நயமான திறமையின் உண்மையை ஆராய்ந்தறிந்து அவர்களுடைய நட்பு கொண்டுவிடாமல் விலக வேண்டும்.

பொ. ரை: அடையக் கூடிய பொருட்பயனின் அளவுக்குத் தக்கபடி ஆசைப் பேச்சுகளைப் பேசுகிற உண்மையில்லாத வேசியர்களுடைய வெகு சாமர்த்தியமான நடத்தையின் அந்தரங்கத்தை அறிந்து, அவர்களுடன் உறவு கொண்டு விடாமல் விலக வேண்டும்.

வி-ம்: பயன் தூக்கி – பயனை நிறுத்து அளந்து. பண்புரை – இனியஉரை. நயன் – நுட்பமாகிய திறமை. பெறக்கூடிய பணத்தின் அளவுக்குத் தக்கபடி அன்புரை பேசுகின்ற உண்மை இல்லாத வேசியரை அவர்களுடைய நுண்ணிய திறமைகளை அப்படியே நம்பி விடாமல் ஆராய்ந்து அவர்களுடன் உறவாகி விடாமல் விலக வேண்டும் – என்பது கருத்து.

வேசையரிடம் அடைகின்ற இன்பம் எப்படிப்பட்டதென்றால் :

913. பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி லேதில் பிணந்தழீஇ யற்று.

ப. ரை : பொருள் பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டு அறையில் ஏது இல் பிணம் தழீஇய அற்று=விலைமாதருடைய பொய்மையான புணர்ச்சி இருட்டு அறைக்குள் உணர்ச்சியற்ற பிணத்தைத் தழுவியதை ஒக்கும்.

பொ. ரை : பொருளுக்காகத் தம்மை விற்று விடுகிற வேசியரைப் புணரும் பொய்யான காமக் கலவி, இருட்டு வீட்டில் உயிரும் உணர்ச்சியுமற்ற பிணத்தைத் தழுவிப் புணர்வதற்குச் சமானமேயாகும்.

வி - ம் : முயக்கம் – புணர்ச்சி. ஏது இல் – திராணியில்லாத. அதாவது சிவனில்லாத. உயிரற்ற ஒரு பிணத்தை ஒருவன் எப்படித் தழுவிப் புரட்டி என்ன செய்தாலும் அது அத்தனைக்கும் சும்மா கிடக்கும். அதைப் போலவே ஒரு விலைமகளும் தனக்குப் பணம் கொடுக்கும் ஒருவன் எப்படித் தழுவிக் கட்டிப் புரண்டு என்ன வேண்டுமானாலும் செய்யத் தன் உடலை அவனிடம் விட்டுவிட்டு, ஒத்த எண்ணமோ, உணர்ச்சியோ, மனக்களிப்போ இல்லாதவளாக இருப்பாள். இருட்டறையிற் கிடக்கும் பிணத்தைப் பிணமென்று அறியாமல் தழுவுகின்றவன் அப்பிணம் உணர்ச்சியற்றிருப்பதை அறிய முடியாது. அதைப் போலவே ஒரு விலை மகளைக் காமத்தால் கண் இருண்டு புணருகின்ற ஒருவன், அவள் ஒத்த உணர்ச்சி இல்லாதவள் என்பதை அறிவதில்லை. ஆதலால் விலை மகளைத் தழுவுவது இருட்டறையிற் கிடக்கும் ஒரு பிணத்தை, அது பிண மென்பதை இருட்டில் அறியாமல், தழுவுவதற்கே ஒப்பானது – என்பது கருத்து.

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு பொருள்களுக்குள் அருட் பொருளாக விளங்கும் ஆண்டவனை நாடுவதே மனிதப் பிறவியின் மிகச் சிறந்த நோக்கம். அந்த நோக்கத்துடன் இல்லறம் நடத்துகின்றவர்கள் :

914. பொருட்பொருளார் புன்னலந் தோயா ரருட்பொரு ளாயு மறிவி னவர்.

ப. ரை : அருள் பொருள் ஆயுதம் அறிவின் அவர் பொருள் பொருளார் புல்நலம் தோயார்=அருள் என்ற பொருளைத்

தேடி ஆராய்கின்ற அறிவுள்ளவர்கள் செல்வம் என்ற பொருளை மட்டும் கருதுகின்ற விலை மாதருடைய சிறு இன்பத்தை (மனதாலும்) தீண்டமாட்டார்கள்.

பொ. ரை: அருட் செல்வமாகிய பேரின்பத்தை நாடுகின்றவர்கள், பொருட் செல்வத்தை மட்டும் கருதுகின்ற விலை மாதருடைய அற்ப சுகத்தை நினைக்கவும் மாட்டார்கள்.

வி-ம்: தோய்தல்—தீண்டுதல். புன்னலம்—புல்நலம்-புல்லிய நலம்—அற்பசுகம். அருட் செல்வமாகிய பேரின்பத்தை நாடுகிறவர்கள் மனைவியுடன் அனுபவிக்கும் நியாயமான காம இன்பத்தையும் சிற்றின்பமாகக் கருதுவார்கள். அப்படியிருக்க, வெறும் பணத்தை மட்டும் கருதி (மனைவியைப் போல மற்ற நலங்களைக் கருதாத இயல்புடைய) விலை மாதர்களுடைய அற்ப சுகத்தை அருட் பொருள் வேண்டுகிறவர்கள் மனத்தாலும் தீண்டமாட்டார்கள்—என்பது கருத்து.

அருட் செல்வமாகிய பேரின்பத்தைக் கருதாவிட்டாலும் வெறும் அறிவுடைமை என்பதற்காகவேனும்:

915. பொதுநலத்தார் புன்னலந் தோயார் மதிநலத்தின்
மாண்ட வறிவி னவர்.

ப. ரை: மதிநலத்தின் மாண்ட அறிவினவர் பொது நலத்தார் புல் நலம் தோயார்=புத்தி கூர்மையினால் சிறந்த அறிவாளிகள், எல்லாருக்கும் பொதுவாக (விலைக்கு விற்கவென்று) அழகு செய்து கொள்ளுகிறவர்களான (விலை மாதரின்) அற்பசுகத்தில் அகப்பட்டுக் கொள்ள மாட்டார்கள்.

பொ. ரை: புத்தி கூர்மையினாற் சிறந்த அறிவாளிகள் பொது மக்கள் (யாருக்கானாலும் விலைக்கு விற்க வென்றே தம்மை) அழகுபடுத்திக் கொள்ளும் விலை மாதருடைய அற்பசுகத்தில் அகப்பட்டுக் கொள்ளமாட்டார்கள்.

வி-ம்: பொதுநலத்தார் — நலத்தைப் பொதுவாக்குகிறவர்கள். நலம்—அழகு. தோய்தல் — அகப்பட்டுக் கொள்ளல். யாருக்கு வேண்டுமானாலும் தம்முடைய அழகை விலைக்கு விற்கிற விலைமகளிடத்தில் அடையும் இன்பம் ஒரு இன்பமா என்பதை நினைக்கக் கூடிய அறிவுடையவர்கள் அந்த அற்ப சுகத்தில் அகப்பட்டுக் கொள்ள மாட்டார்கள்—என்பது கருத்து.

அறிவிற் சிறந்தவர்கள் என்பது இல்லாவிட்டாலும் சாதாரண அறிவைக் கொண்டும் தம்முடைய உடல் நலத்தை காத்துக் கொள்ளக் கருதினாலும் கூட:

916. தங்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோள்.

ப. ரை : தம் நலம் பாரிப்பார் தகை செருக்கி புல் நலம் பாரிப்பார் தோள் தோயார் = தம்முடைய உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொள்ளுகிறவர்கள் அழகைக் கொண்டு மயக்கி அற்ப சுகத்தை (விலைக்கு விற்கக்கடை) பரப்புகின்ற விலை மாதரின் தோள்களைப் புணர மாட்டார்கள்.

பொ. ரை : தம்முடைய ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்ளுகிறவர்கள் அழகைக் கொண்டு மயக்கி அற்ப சுகத்தை விலைக்காகப் பரப்புகின்ற விலை மாதருடைய தோள்களைத் தழுவ மாட்டார்கள்.

வி - ம் : 'நலம்' என்பது இங்கே 'உடல் நலம்'. 'பாரிப்பார்' என்பது 'காத்துக் கொள்வார்', 'பரப்புகின்றவர்' என்ற இரண்டு அர்த்தங்களில் பிரயோகப் படுத்தப்பட்டிருக்கிறது. தோயார் – புணரார். தகை – அழகு. செருக்கி–மயக்கி. தகை செருக்கி – அழகால் மயக்கி. தம்முடைய தேக ஆரோக்கியத்தைக் காத்துக் கொள்ள விரும்புகிறவர்கள் அழகினால் மயக்கும் விலை மாதருடைய தோள்களைத் தழுவக் கூடாது – என்பது கருத்து.

அருட் செல்வத்தை விரும்பியாவது, அறிவைக் கருதியாவது, உடல் நலத்தைக் காக்கவாவது விலை மாதரிடம் மயங்கி விடாதபடி தம்முடைய மனதை அடக்கியாள முடியாத :

917. நிறைநெஞ்ச மில்லவர் தோய்வர் பிறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்.

ப. ரை : நெஞ்சில் பிற பேணி புணர்பவர் தோள் நிறை நெஞ்சம் இல்லவர் தோய்வர் = மனதில் (புணர்ச்சி இன்பம் அல்லாத) வேறு ஒன்றாகிய (பணத்தில் மட்டும்) ஆசை கொண்டு, புணருகின்ற விலைமாதருடைய தோள்களை மனதை அடக்க முடியாதவர்கள் தாம் தழுவுவார்கள்.

பொ. ரை : (கலவி இன்பத்துக்காக அல்லாமல்) வேறொன்றாகிய (பண ஆசைக்காகவே) புணருகின்ற விலை மாதருடைய தோள்களை, மனதை அடக்கும் திறமையில்லாதவர்கள் தாம் தழுவுவார்கள்.

வி - ம் : நிறை – காவல். நிறை நெஞ்சம் இல்லவர் – காவலுள்ள மனம் இல்லாதவர்கள், அதாவது தீய ஆசைகள் புகாதபடி காக்கப்படும் மனமில்லாதவர்கள். அவர்கள் மனமடக்கும்

திறமில்லாதவர்கள். விலைமாதரின் இயல்புகளையும் அவர்களுடைய உறவால் வரும் தீமைகளையும் எல்லாரும் அறிவார்கள். ஆனாலும் பலபேர் அவர்களை நாடுகின்றார்கள், அதற்குக் காரணம் தீய ஆசைகளை அடக்க முடியாமைதான். அதனால் – வெறும் பண ஆசைக்காகப் புணருகின்ற விலைமாதர் உறவை, காம வெறியால் மனதை அடக்கத் திறமையற்றவர்களே நாடுவார்கள் – என்பது கருத்து.

அப்படி மனதை அடக்க முடியாத காம ஆத்திரத்தினால் விலை மாதருடன் கூடி ஆத்திரத்தை அப்போதைக்குத் தீர்த்துக் கொண்டு போய் விடுகிறவர்களே பெரும்பாலோர். ஆனால் சிலர் எப்போதும் வேசியர் உறவே வாசமாக இருப்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு :

918. ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப
மாய மகளிர் முயக்கு.

ப. ரை : ஆயும் அறிவினர் அல்லார்க்கு மாய மகளிர் முயக்கு அணங்கு என்ப = ஆராயும் அறிவுள்ளவர்கள் அல்லாதவர்களுக்கு வஞ்சகமுள்ள வேசியரின் புணர்ச்சி (விடாமற் பிடித்துக் கொள்ளும்) ஒரு பேய் எனப்படும்.

பொ. ரை : பகுத்தறியும் தன்மை இல்லாதவர்களுக்கு வஞ்சகமுள்ள விலை மாதருடைய காம உறவு (விட்டுவிலக முடியாத) பேய்ப்பிடிப்பு போன்றது.

வி - ம் : 'அணங்கு' என்பது பிடித்தால் விடாது என்று சொல்லப்படுகிற ஒரு பெண் பேய். மாயமகளிர் – உடை நடை பாவனைகளில் பொய் மலிந்த மாயக் காரிகளான விலைமாதர். கொஞ்சமாவது பகுத்தறிவு உள்ளவர்கள், முன் குறளில் சொல்லப்பட்டது போல ஆத்திரத்தை அடக்க முடியாமல் வேசியருடன் கலந்து விட்டாலும் பின் விலகி விடுவார்கள். ஆனால் பகுத்தறிவு என்பதே சிறிதும் இல்லாதவரைத் தான் விலைமாதரின் உறவு விடாமல் பேய் போல் பிடித்துக் கொண்டிருக்கும் – என்பது கருத்து.

பாவங்களைச் செய்கிறவர்கள் அதற்காகத் தண்டனை யடைய நரகத்தில் அழுந்துவார்கள் என்று சொல்லப்படுகிறது. அந்த நரகம் எங்கே இருக்கிறதோ தெரியாது. ஆனால் ஒரு பாவமும் செய்யாமல் வெறும் பகுத்தறிவில்லாததற்காகப் பலர் நம் கண்ணுக்கு முன்னால் அழுந்துகிற நரகம் ஒன்றிருக்கிறது. அது எதுவென்றால் :

919. வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு.

ப. ரை: புரை இலா பூரியர்கள் ஆழும் அளறு வரைவு இலா மாண் இழையார் மென் தோள் = (வேறு) குற்றமில்லாத முட்டாள்கள் (வெறும் முட்டாள்தனத்துக்காக) அழுந்துகின்ற நரகம் (எதுவெனில்) வரை முறை இல்லாதவரும் அழகான ஆபரணங்களை அணிந்திருப்பவருமான விலைமாதர்களின் மென்மையான தோள்களேயாம்.

பொ. ரை: வேறு குற்றம் ஒன்றும் செய்யாமல் வெறும் பகுத்தறிவில்லாததற்காக, முட்டாள்கள் விழுந்து தவிக்கின்ற நரகம் எதுவென்றால், ஆபரணங்களால் தம்மை அலங்கரித்துக் கொண்டு வரை முறை இல்லாமல் (பணங்கொடுத்த யாரையும் புணர்கின்ற) விலை மாதரின் மென்மையான தோள்களைத் தழுவுவதேயாம்.

வி-ம்: புரை – குற்றம். பூரியர்கள் – அறிவில்லாக் கீழ்மக்கள். ஆழும் அளறு – அழுந்துகின்ற நரகம். விலை மாதரின் உறவால் வரும் தீமைகளைப் பகுத்தறிந்து அவர்கள் சம்பந்தத்தை விட்டொழிக்காத கீழ்மக்கள் நரகவேதனை அடைவார்கள் – என்பது கருத்து.

சுருங்கச் சொன்னால்:

920. இருமனப் பெண்டிருங் கள்ளுங் கவறுந்
திருநீக்கப் பட்டார் தொடர்பு.

ப. ரை: இருமன பெண்டிரும் கள்ளும் கவறும் திரு நீக்கப்பட்டார் தொடர்பு=இரண்டு மனமுடைய பெண்களும் (விலைமாதரும்), கள்ளும், சூதும் திருமகளால் நீக்கப்பட்டவர்களுடைய உறவுகள்,

பொ. ரை: இரண்டு மனமுள்ள விலை மாதரும், கள் குடியும், சூதாட்டமும் செல்வ மகளாகிய இலக்குமியால் விலக்கி விடப்பட்டவர்களுடைய உறவுகள்.

வி-ம்: 'இருமனம்' என்பது பணத்துக்காக ஒத்துக்கொள்வது ஒருமனம். பணம் கொடுத்தவன் குரூபியாகவோ, கிழவனாகவோ, நோயுள்ளவனாகவோ, இருந்தால் அவனை அருவருப்பது இன்னொரு மனம். கவறு – சூதாட்டம். திரு – திருமகளாகிய இலட்சுமி. செல்வ மகளின் அருளை இழந்து வறுமையடைந்து துன்பப்பட வேண்டியவர்களே விலை மாதர் உறவையும் கட் குடியையும், சூதாட்டத்தையும் விரும்புவார்கள் – என்பது கருத்து.

அதி. 93—கள்ளுண்ணாமை

['கள்ளுண்ணாமை' என்பதுபோதை கொடுத்து புத்தியை அழிக்கும் கள்ளைக் குடிக்காமலிருக்க வேண்டும் என்பது முன் அதிகாரத்தில் 'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திரு நீக்கப்பட்டார் தொடர்பு' என்றபடி. கள்ளுண்ணல் மிகவும் கேடுதரக் கூடியது.]

921. உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங்
கட்காதல் கொண்டொழுகு வார்.

ப. ரை: கள்காதல் கொண்டு ஒழுகுவார் எஞ்ஞான்றும் உட்கப் படாஅர்; ஒளி இழப்பர் = கள்ளாசை கொண்டுள்ளவர்கள் எக்காலத்திலும் மதிக்கப்படமாட்டார்கள்; உள்ள பெருமை களையும் இழந்து விடுவார்கள்.

பொ. ரை: கள்ளாசை கொண்டவர்கள் எக்காலத்திலும் பிற ரால் மதிக்கப்படமாட்டார்கள்; உள்ள பெருமைகளையும் (சிறுகச் சிறுக) இழந்துவிடுவார்கள்.

வி - ம்: உட்கப்படுதல் – மதிக்கப்படுதல். ஒளி இழத்தல்- பெருமைகளை இழத்தல். அதாவது குடும்பப் பெருமை, செல்வப்பெருமை, கல்விப் பெருமை, முதலிய சிறப்புகள் இழத்தல். கள்ளாசை கொண்டவர்களை யாரும் எக்காலத் திலும் மதிக்கமாட்டார்கள். அவர்க்குள்ள சிறப்புகளையும் இழந்துவிடுவார்கள் – என்பது கருத்து.

ஆகையினால்:

922. உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா
னெண்ணப் படவேண்டா தார்.

ப. ரை: உண்ணற்க கள்ளை; சான்றோரான் எண்ணப்பட வேண்டாதார் உணில் உண்க = கள்ளை உண்ண வேண்டாம்; மேன்மக்களால் மதிக்கப்பட வேண்டாதவர்கள் உண்டால் உண்ணட்டும்.

பொ. ரை: கள்ளைக் குடிக்க வேண்டாம்; (ஒழுக்கத்திலும் அறி விலும் உயர்ந்த) மேன்மக்களால் மதிக்கப்படுவதை வேண் டாதவர்கள் குடித்தால் குடிக்கட்டும்.

வி - ம்: நல்லவர்கள் மதிப்பைப் பெற வேண்டுமானால் கள் ளுண்ணக் கூடாது – என்பது கருத்து.

ஏனென்றால்:

**923. ஈன்றாள் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச்
சான்றோர் முகத்துக் களி.**

ப. ரை: ஈன்றாள் முகத்தேயும் களி இன்னாதால் மற்று சான்றோர் முகத்து என் = பெற்ற தாயின் கண்ணுக்கு முன்னாலும் குடிவெறி வெறுப்பு உண்டாக்கு மென்றால் மற்றும் மேன் மக்களுக்கு முன்னால் என்னவாயிருக்கும்?

பொ. ரை: குடித்து வெறித்தவனை, அவனைப் பெற்றெடுத்த தாய் பார்த்தாலும் வெறுப்பாள் என்றால் (ஒழுக்கத்தையே விரும்பும்) நல்லவர்கள் பார்த்தால் எப்படியிருக்கும்?

வி-ம்: களி – குடிவெறி. இன்னா – வெறுப்பு. முகத்தே – முகத்துக்கு முன்னால்; அதாவது கண்ணுக்கு முன்னால். தன் மகனுடைய எந்தக் குற்றத்தையும் சகித்துக் கொள்ளும் இயல்புடைய தாயும்கூட, குடித்து வெறித்து மானம் கெட நடந்து கொள்ளும் மகனைக் கண்டு அருவருப்படைவாள். அதனால் பெற்றெடுத்த தாய் பார்த்தாலும் அருவருப்புண்டாக்கும் குடிவெறியனை, சிறு சிறு குற்றங்களைக்கூட அருவருக்கின்ற நல்லவர்கள் பார்த்தால் மிகவும் அருவருப்படையமாட்டார்களா? – என்பது கருத்து.

குடிவெறியனைக் கண்டால் அவ்வளவு அருவருப்புண்டாவதற்குக் காரணம்:

**924. நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.**

ப. ரை: கள் என்னும் பேணா பெரும் குற்றத்தார்க்கு நாண் என்னும் நல்லாள் புறம் கொடுக்கும் = கள் குடித்தல் என்னும் விரும்பத்தகாத பெரிய குற்றத்தை உடையவர்களுக்கு 'நாணம்' என்ற நல்ல பெண் தன் முதுகைத்தான் காட்டுவாள்.

பொ. ரை: கள்ளைக் குடிப்பது என்ற மிகவும் விரும்பத்தகாத குற்றத்தைச் செய்கிறவர்களுக்கு 'நாணம்' என்னும் நல்ல பெண் (முகமெடுத்தும் பாராமல்) முதுகைக் காட்டுவாள்.

வி-ம்: 'பேணாப் பெருங்குற்றம்' என்றது கட்குடி மற்றெல்லாக் கொடிய குற்றங்களையும் செய்துவிடக்கூடிய வெறியை மூட்டுவதால். நாணத்தை 'நல்ல பெண்' என்றது, நாணம் என்பது குற்றமுள்ள எதையும் செய்யக் கூடாது என்று கூசச் செய்யும் நற்குணம் ஆனதனால். கள் குடித்தல் என்ற பெருங்குற்றத்தைச் செய்கிறவர்களுக்கு நாணம் என்பதே

இருக்காது. அவர்கள் மெய்ம்மறந்து நாணமற்று எதையும் செய்வார்கள் – என்பது கருத்து.

அப்படி, தம்மையே மறந்து விடக்கூடிய போதை தருகின்ற கள்ளை விலை கொடுத்து வாங்குவது :

**925. கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து
மெய்யறி யாமை கொளல்.**

ப. ரை : பொருள் கொடுத்து மெய்யறியாமை கொளல் கையறி யாமை உடைத்தே = பணத்தைக் கொடுத்து மெய்ம் மறதியை (மயக்கத்தை) வாங்குவது, செய்வது இன்னதென் பதை அறியாமை உள்ளதே (யாகும்.)

பொ. ரை : பணத்தைக் கொடுத்து மெய்ம் மறதியை வாங்கிக் கொள்வது, செய்யத்தக்கது எது (தகாதது எது) என்பதை அறியும் தன்மை இல்லாமையே ஆகும்.

வி - ம் : கையறியாமை – செய்வது இன்னதென்று அறியாமை. விலை கொடுத்து மெய்ம்மறதியை வாங்குவது வெறும் மடத் தனமேயாகும் – என்பது கருத்து.

அப்படி மெய்ம்மறந்து விடுகிற குடியர்கள் :

**926. துஞ்சினார் செத்தாரின் வேறல்ல ரெஞ்ஞான்று
நஞ்சுண்பார் கள்ளுண் பவர்.**

ப. ரை : துஞ்சினார் செத்தாரின் வேறு அல்லர்; கள் உண்பார் எஞ்ஞான்றும் நஞ்சு உண்பவர் = மெய்ம் மறதி அடைந்தவர் கள் செத்தவர்களுக்கு வேறுபட்டவர்கள் அல்லாதவர்கள்: கள்ளுண்பவர் அதை உண்டபோதெல்லாம் விடம் உண்டு செத்துப் போனவர்கள்.

பொ. ரை : மெய்ம்மறதி உற்றவர்கள் யாரானாலும் அவர்கள் உயிரற்ற பிணத்துக்கே சமானம்; (ஆகையினால்) கள்ளுண்டு மெய்ம்மறதி அடைகின்றவர்கள் (கள்ளை உண்ணுந்தோறும் உயிரைப் போக்கிப் பிணமாக்கிவிடுகிற) விடத்தைச் சாப் பிடுகிறவர்களே ஆகிறார்கள்.

வி - ம் : 'துஞ்சினார்' என்பதற்குத் 'தூங்குகின்றவர்கள்' என்று பொருள் செய்யக் கூடாது. 'மெய்ம் மறந்த சோர் வுற்றவர்கள்' என்பது பொருள். 'எஞ்ஞான்றும்' என் பதற்கு இங்கே வெறும் 'எப்போதும்' என்பது பொரு ளல்ல; 'கள்ளை உண்கிற போதெல்லாம்' என்பது பொருள். கள்ளை உண்டபோதெல்லாம் ஒருவன் பிணத்துக்

குச் சமானமாகிவிடுகிறுன். ஆதலால் – மெய்ம் மறந்த மயக்கமுற்றவர்கள் செத்த பிணத்துக்கே சமானம். உண்டவனை, செத்த பிணத்திற்குச் சமானமாக்கி விடுகிற கள்ளை உண்பது சாவதற்கு விடத்தை உண்பதற்கே சமானம் – என்பது கருத்து.

கள்ளை நிரம்பக் குடித்து விடுகிறவன் பிணம் போலச் செயலற்றவன் ஆகி விடுகிறுன். குறைத்துக் குடித்தாலும் அதை மறைத்துக் குடித்தாலும் கூட சொல்லும் செயலும் தடுமாறி :

927. உள்ளொற்றி யுள்ளூர் நகப்படுவ ரெஞ்ஞான்றுங்
கள்ளொற்றிக் கண்சாய் பவர்.

ப. ரை : கள் ஒற்றி கண் சாய்பவர் எஞ்ஞான்றும் உள் ஒற்றி உள்ஊர் நகப்படுவர் = கள்ளைக் குடித்து (நிதானமிழந்து) கண் சுழலுகின்றவர்கள் ஒவ்வொரு நாளும் வீட்டுக்குள் குடித்துவிட்டு நடுவூரில் சிரிக்கப்படுவார்கள்.

பொ. ரை : கள்ளைக் குடித்து நிதானமிழந்து கண் சுழலுகின்ற (இயல்புடைய) குடியர்கள் தினந்தினம் இரகசியமாக வீட்டுக்குள் குடித்துவிட்டு வீதியில் மானங் கெடுவார்கள்.

வி - ம் : கள் ஒற்றி - கள்ளைச் சேர்ந்து – அதாவது கள்ளைக் குடித்து. கண் சாய்தல் – கண் சுழலுதல். கண் சுழல்வது நினைவு தடுமாறியதற்கு அறிகுறி. உள் – வீட்டுக்குள். உள் ஒற்றி – வீட்டுக்குள் மறைவாகக் குடித்து. உள்ளூர் – ஊர் நடுவில், அதாவது வீதிகளில். குடிக்கும்போது யாருக்கும் தெரியக் கூடாதென்று வீட்டுக்குள் மறைவாகக் குடித்துப் பின் போதை ஏறி நிதானங்கெட்டு, விதிக்கு வந்து சந்தி சிரிக்க மானங் கெடுவார்கள் – என்பது கருத்து.

அப்படி ஊரார் சிரிக்க மான மிழந்ததை அந்தக் குடியர்கள் அறிய மாட்டார்கள். அதுமட்டுமன்றி போதை காலத்தில் அவர்கள் சொல்லுகின்ற அல்லது செய்கின்ற எதையும் அவர்கள் அறியார்கள். அதனுல் அவர்கள் அப்போது எதையும் சொல்லிவிட்டுப் பின் ‘எனக்குத் தெரியாதே’ என்பார்கள்: ஆதலால் :

928. களித்தறியே னென்பது கைவிடுக நெஞ்சத்
தொளித்ததூஉ மாங்கே மிகும்.

ப. ரை : களித்து அறியேன் என்பது கைவிடுக; நெஞ்சத்து ஒளித்ததூஉம் ஆங்கே மிகும் = ‘போதையினுல் அறியேன்’

என்று சொல்லச் செய்கிற கட்குடியை விட்டு விடுக; மனதில் மறைத்து வைத்த இரகசியங்களும் அப்படியே (போதையில்) வெளியாகிவிடும்.

பொ. ரை : 'போதையினால் தெரியாமற் சொல்லிவிட்டேன்' என்று சொல்லச் செய்கிற கள் குடியை விட்டொழிக்க வேண்டும்; மனதில் மறைத்து வைத்திருக்கிற இரகசியங்களும் அதைப் போலவே போதையில் வெளியாகி விடும்.

வி - ம் : களித்து — குடித்து மயங்கி. ஒளித்தது — மறைத்து வைத்துள்ள இரகசியம். குடிகாரன் குடித்த வெறியில் ஒரு குற்றமான வார்த்தையைச் சொல்லிவிட்டுப் போதை தெளிந்தபின் 'தெரியாமற் சொல்லிவிட்டேன்' என்று வருந்துவான். அப்படி, மனதிலுள்ள பிறருக்குத் தெரியத் தகாத இரகசியங்களையும் போதையில் சொல்லி வெளியிட்டு விடக் கூடிய குடிப் பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும் - என்பது கருத்து.

குடிப்பதை விட்டொழிக்க வேண்டும் என்ற புத்திமதியையும் ஒருவன் குடித்து வெறித்திருக்கும்போது சொல்லக் கூடாது; ஏனென்றால் :

**929. களித்தானைக் காரணங் காட்டுதல் கீழ்நீர்க்
குளித்தானைத் தீத்துரீஇ யற்று.**

ப. ரை : களித்தானை காரணம் காட்டுதல் கீழ்நீர்க் குளித்தானை தீத் துரீஇய அற்று = குடித்து மயங்கியிருக்கிறவனை (குடியை விட்டொழிக்கச் சொல்லி) காரணங்களை எடுத்துக் காட்டுவது ஆழ்ந்த நீரில் முழுகியிருப்பவனை தீவர்த்தியைக் கொண்டு தேடுவதை ஒக்கும்.

பொ. ரை : கள்ளுண்டு மயங்கியிருக்கும்போது அவனைச் சீர்திருத்த நியாயங்களைச் சொல்லுவது ஆழமான தண்ணீருக்குள் முழுகி மறைந்திருப்பவனை திப்பந்தத்தைக் கொண்டு தேடுவதற்குச் சமானம்.

வி - ம் : கீழ் நீர் — ஆழமான நீர். குளித்தல் — முழுகுதல். துரீஇயற்று — துருவியற்று. துருவுதல் — தேடுதல். கள்ளுண்ட மயக்கத்தில் முழுகியிருக்கிறவனுக்கு நீதிகளைச் சொல்லுவது ஆழமான நீரில் முழுகியிருப்பவனைத் தீவட்டி கொண்டு தேடுவதைப் போல பயனற்றது - என்பது கருத்து.

குடிப்பழக்க முள்ளவன் பிறருடைய உபதேசத்தால் சீர்திருந்தமாட்டான். அவன் சீர்திருந்த வேண்டுமானால் ஒரே

ஒரு வழிதான் உண்டு. அதுவும் நிச்சயமானதல்ல. அது என்னவென்றால் :

930. கள்ளுண்ணாப் போழ்திற் களித்தானைக் காணுங்கா லுள்ளான்கொ லுண்டதன் சோர்வு.

ப. ரை : கள் உண்ணா போழ்தில் களித்தானை காணுங்கால் உண்டதன் சோர்வு உள்ளான் கொல் = (கள்ளுண்ணும் பழக்கமுள்ள ஒருவன்) கள்ளை உண்ணாதிருக்கிற காலத்தில் கள்ளுண்டு மெய்ம் மறந்திருக்கும் வேறொருவனைப் பார்க்கும் போது கள்ளுண்டதனால் உண்டாகும் தள்ளாட்டத்தை எண்ணிப் பார்க்க மாட்டானா !

பொ. ரை : கள்ளுண்ணும் பழக்கமுள்ளவன், கள்ளை உண்ணாதிருக்கிற சமயத்தில், கள்ளுண்டு போதையினால் மெய்ம் மறந்து தள்ளாடுகிற வேறொருவனைப் பார்க்கும் போதாவது கள்ளுண்பதனால் தனக்கும் அந்த தடுமாற்றந்தானே என்பதைச் சிந்திக்க மாட்டானா ! (சிந்தித்தால் ஒருக்கால் திருந்தலாம்.)

வி-ம் : சோர்வு – மெய்ம் மறந்த தடுமாற்றம். கள்ளுண்ணும் பழக்கமுள்ளவன் கள்ளை உண்ணாதிருக்கிற ஒரு சமயத்தில் குடித்து வெறித்து மானமிழந்து தடுமாறுகின்ற வேறொருவனைப் பார்த்தாவது, தனக்கும் கள்ளுண்டால் அந்த கதிதானே என்பதை நினைத்துப் பார்த்தால் ஒருக்கால் அவனுகவே சீர்திருந்தலாம் – என்பது கருத்து.

அதி. 94—சூது

['சூது' என்பது சூதாட்டம். முன் 'இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும் திரு நீக்கப்பட்டார் தொடர்பு' என்றபடி சூதாட்டத்தால் சீரழிவும் வறுமையுமே வரும். ஆதலால் அதை விலக்க வேண்டும்.]

931. வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந் தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.

ப. ரை : வென்றிடினும் சூதினை வேண்டற்க; வென்றதூஉம் மீன் விழுங்கிய தூண்டில் பொன் அற்று = வெற்றிகிடைத்தாலும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது; அந்த வெற்றி மீன் விழுங்கிய இரும்புத் தூண்டில் முள்ளைப் போன்றது.

பொ. ரை: கெலிப்பு வந்தாலும் சூதாட்டத்தை விரும்பக் கூடாது; அந்த கெலிப்பு, மீன் (இரையென்று நம்பி) விழுங்கிய இரும்புத் தூண்டில் முள்ளை ஒத்தது.

வி-ம்: இரையில் மறைந்துள்ள தூண்டில் முள்ளை அறியாமல் மீன் அதை விழுங்கியதால் பிறகு அதன் உயிருக்கே அபாயம் வந்து விடுகிறது. அதைப்போல் சூதாட்டத்தில் கிடைக்கும் அற்ப வெற்றியில் அபாயம் மறைந்திருக்கிறது நிச்சயம்-என்பது கருத்து.

அபாயம் நிச்சயமென்பது எப்படியென்றால்:

932. ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ
னன்றெய்தி வாழ்வதோ ராறு.

ப. ரை: ஒன்று எய்தி நூறு இழக்கும் சூதர்க்கும் நன்கு எய்தி வாழ்வது ஓர் ஆறு உண்டாம் கொல் = ஒரு முறை வென்று நூறு முறை தோற்றுப் போகிற சூதாட்டக்காரர்களுக்குக் கூட நன்மையடைந்து வாழக் கூடிய ஒரு வழி உண்டா என்ன?

பொ. ரை: ஒருதரம் கெலித்து நூறு முறை தோற்றுப்போகிற சூதாட்டக்காரர்களுக்குக்கூட சுகமடைந்து வாழக்கூடிய மார்க்கமுண்டா என்ன? (இல்லவேயில்லை.)

வி-ம்: இலாபம் ஒரு பங்கானால் நட்டம் நூறு பங்கு உண்டாவது நிச்சயமான சூதாட்டத்தால் நன்மைகூட வருமா?-என்பது கருத்து.

சூதாட்டத்தால் நன்மை உண்டாகவே முடியாது என்பது மட்டுமல்ல; அது நாசமுண்டாக்காமல் விடாது. எப்படியெனில்:

933. உருளாய மோவாது கூறிற் பொருளாயம்
போஒய்ப் புறமே படும்.

ப. ரை: உருள் ஆயம் ஓவாது; கூறின் பொருள் ஆயம் போஒய் புறமே படும் = உருண்டு கொண்டே இருக்கும் சூதாட்டம் ஓயாது; சொல்லப் போனால், பொருள் வருவாய் முற்றிலும் தொலைந்து போன அப்புறம் தான் ஒழியும்.

பொ. ரை: சூதாட்டம் ஓயவிடாது; சொல்லப்போனால் பண வருவாய்க்கு வழியே இல்லாமல் (உள்ளதெல்லாம்) தொலைந்து போய் அதன் பிறகே ஓயும்.

வி-ம்: ஆயம் சூதாட்டம். உருள் ஆயம் – திரும்பத்திரும்ப ஆடச் செய்கிற சூதாட்டம். ஓவாது – ஓயாது. கூறின் – கூறு மிடத்து – சொல்லுமிடத்து. பொருள் ஆயம் – பண வருமானம். புறமே – அப்புறமே – அதன் பிறகே. படும்-ஒழியும். இந்தக்குறளுக்கு 'உருளுங் கவற்றின் கட்பட்ட ஆயத்தை இடைவிடாது கூறிச் சூதாடுமாயின் அரசனீட்டிய பொருளும் அவன் பொருள் வருவாயும் அவனை விட்டுப்போய்ப் பகைவர் கண்ணே தங்கும்' என்று பொருள் கொள்வது சிறிதும் பொருத்தமற்றது. சூதாட்டப்பழக்கமுள்ளவர்கள் 'ஒன்றெய்தி நூறு இழந்தாலும்' விடமாட்டார்கள். ஓயாது ஆடிக் கொண்டிருப்பார்கள். விடுவது என்று சொன்னால், அவர்கள் சூதாட்டத்திற்குப் பந்தயம் வைக்கப் பணம் வரக் கூடிய வழிகளெல்லாம் அடைபட்டு, உள்ளதெல்லாம்போய்த் தொலைந்த பிறகே ஓயும் – என்பது கருத்து. மேலும் இது அரசனுக்குமட்டும் சொன்னதல்ல.

அப்படிப் பணத்துக்கு வழியே இல்லாமல் சூதாட்டம் ஆட முடியாமல் ஓய்ந்துவிட்ட பிறகும் கூட சும்மா இருக்க விடாது. என்ன செய்யுமென்றால் :

934. சிறுமை பலசெய்து சீரழிக்குஞ் சூதின்
வறுமை தருவதொன் றில்.

ப. ரை: சிறுமை பல செய்து சீர் அழிக்கும்; சூதின் வறுமை தருவது ஒன்று இல் = (சூதாட்டம்) பல குற்றங்களை உண்டாக்கிச் சீரழியச் செய்து விடும்; சூதைவிட வறுமை தருவது வேறொன்றும் இல்லை.

பொ. ரை: (சூதாட்டம்) பல குற்றங்களுக்கு ஆளாக்கி வாழ்க்கையைச் சீரழித்துவிடும்; சூதாட்டத்தைக் காட்டிலும் மனிதனுக்கு தரித்திரத்தை உண்டாக்குவது வேறொன்றும் இல்லை.

வி-ம்: சிறுமை – குற்றம். செய்து – உண்டாக்கி. சிறுமை பல செய்து -பல குற்றங்களைச் சூதாடுகிறவனிடத்தில் உண்டாக்கி. பல குற்றங்களாவன: சூதாடப் பணம் அற்றுப் போனதனால் வீட்டிலுள்ள தட்டுமுட்டுகளையும் மனைவிமக்களுடைய உடைமைகளையும் விற்கச் செய்வதும், அப்படியும் பணமில்லையென்றால், பொய் சொல்லி வாங்கவும் திருடவும் கூடச் செய்துவிடும். அதனால் – பணமில்லாமல் சூதாட்டம் ஓய்ந்த பிறகும்கூட மறுபடியும் அந்த ஆசை தள்ளப் பல குற்றங்களைச் செய்யச் செய்து வாழ்க்கையைச் சீரழித்து விடும். சூதைவிட தரித்திரத்தைத் தருவது வேறொன்றுமில்லை – என்பது கருத்து.

அதனால் சூதாட்டத்தை விட்டொழிக்காவிடில் :

935. கவறுங் கழகமுங் கையுந் தருக்கி
யிவறியா ரில்லாகி யார்.

ப. ரை : கவறும் கழகமும் கையும் தருக்கி இவறியார் இல் ஆகியார் = சூதாடும் சேர்க்கையிலும் (சூதாடும்) பழக்கத்திலும் மிகுந்த ஆசை கொண்டவர்கள் வறுமையடைந்தே தீர்வார்கள்.

பொ. ரை : சூதாடும் சகவாசத்திலும் சூதாட்டப் பழக்கத்திலும் மிகுந்த ஆசை வைக்கிறவர்கள் தரித்திரமே அடைவார்கள்.

வி - ம் : கவறும் கழகம் — சூதாடும் கூட்டம். தருக்கி இவறியார் — மிகுந்த ஆசை கொண்டவர்கள். இல்லாகியார் — இல்லாதவர் ஆகிவிடுகிறவர்கள். 'இவறியார்', 'ஆகியார்' என்பவை இறந்த காலத்தில் இருந்தாலும் முக்காலத்தையும் குறிப்பன. சூதாட்டாக்காரரின் சகவாசத்தையும் சூதாட்டப் பழக்கத்தையும் விடாது பற்றுகிறவர்கள் கெட்டே போவார்கள் — என்பது கருத்து.

சூதாட்ட ஆசை விடாதவர்கள் இறுதியில் கெட்டுப் போவார்கள் என்பதுமட்டுமல்லாமல், கெடுவதற்கு முன்னும் :

936. அகடாரா ரல்ல லுழப்பர்சூ தென்னு
முகடியான் மூடப்பட் டார்.

ப. ரை : சூது என்னும் முகடியான் மூடப்பட்டார் அகடு ஆரார் அல்லல் உழப்பர் — சூதாட்டம் என்னும் மூதேவியால் மூடப்பட்டிருப்பவர்கள் வயிறார (உண்ண) மாட்டார்கள். துன்பத்தில் உழன்று கொண்டேயிருப்பார்கள்.

பொ. ரை : சூதாட்டம் என்ற மூதேவிக்குள் சிக்கிக் கொண்டவர்கள் வயிறார உண்ணமாட்டார்கள்; எந்நேரமும் (ஏதாவது) துன்பத்தால் கவலையுள்ளவர்களாகவே இருப்பார்கள்.

வி - ம் : முகடி — மூதேவி. மூடப்பட்டார் — வசப்படுத்தப்பட்டவர்கள். அகடு — வயிறு. உழத்தல் — துன்பத்தில் உழலுதல். சூதாட்டக் காரருக்கு உணவின் மேல் நினைவிருக்காது. உண்ண உட்கார்ந்தாலும் சூதாட்ட நினைப்பால் அவசரப்பட்டு அரை குறையாக உண்பதால் வயிறு நிரம்பாது. சூதாட்டத் தோல்விகளை நினைத்தும் பந்தயம் வைக்கப் பணம் வேண்டுமென்பதை நினைத்தும் எந்த நேரமும் துன்பப்பட்டுக் கொண்டே இருப்பார்கள் — ஆதலால் — சூதாட்டத்தில் ஈடு

பட்டவன் வயிறார உண்ணமாட்டான்; எப்போதும் விசனப் பட்டு, மூதேவி பிடித்தவனாகவே இருப்பான்—என்பது கருத்து.

இளம் பிராயத்தில் சூதாட்டம் பழகிவிட்டால் :

**937. பழகிய செல்வமும் பண்புங் கெடுக்கும்
கழகத்துக் காலை புகின்.**

ப. ரை : காலை கழகத்து புகின் பழகிய செல்வமும் பண்பும் கெடுக்கும் = இளம்பருவத்தில் சூதாடத் தொடங்கிவிட்டால் அது பரம்பரையாக உள்ள செல்வத்தையும் பெருங்குணங் களையும் அழிக்கும்.

பொ. ரை : இளம்பிராயத்தில் சூதாட ஆரம்பித்துவிட்டால், அது பல தலைமுறையாக உள்ள குடும்பச் சொத்துகளையும் நல்ல குணங்களையும் அழித்து விடும்.

வி - ம் : காலைபுகின் – வாழ்க்கையின் காலை வேளையில், அதாவது இளம் பிராயத்தில். புகின் – தொடங்கினால். இளம்பிராயத்தில் சூதாட்டத்தில் இறங்கிவிட்டவன் இளமையின் வேகத்துடன் பெரும் பந்தயங்கள் வைத்து விரைவில் குடும்ப சொத்துகளை அழித்து விடுவான். குடும்பத்தின் பெருந் தன்மைகளையும் இழந்து விடுவான். ஆதலால் – இளமையில் சூதாட்டம் பழகிவிட்டால் பல தலைமுறையாக இருந்துவந்த குடும்பச் செல்வமும் குடும்பப் பெருமையும் அழிந்து போகும் – என்பது கருத்து.

குடும்பச் சொத்துகளுடன் குணமும் கெட்டுப் போகும் என்பது எப்படியெனில் :

**938. பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத்
தல்ல லுழப்பிக்குஞ் சூது.**

ப. ரை : சூது, பொருள் கெடுத்து, பொய்மேற் கொளீஇ அருள் கெடுத்து அல்லல் உழப்பிக்கும் = சூதாட்டமானது செல்வத்தை இழக்கச் செய்து, பொய்களை மேற்கொள்ளச் செய்து, அருள் குணத்தையும் கெடுத்து, துன்பங்களில் வருந்தச் செய்யும்.

பொ. ரை : சூதாட்டம் (முதலில்) செல்வத்தை அழித்து (அதனால்) பொய்களைப் பேசச்செய்து (அதன்பின்) ஜீவகாருண்ய மில்லாத செயல்களையும் செய்யப் பண்ணி பல துன்பங் களில் உழலச் செய்துவிடும்.

வி - ம் : கொளீஇ – கொளுவித்து – கொள்ளுவித்து – கொள்ளச் செய்து. சூதாட்டத்தால் நிச்சயமாகச் செல்வம் போய்

விடும்; செல்வம் போய்விட்டால் பணத்துக்கு வழியின்றி பொய் பேசச் செய்யும்; பொய் பேசியதால் சச்சரவுண்டாக்கும். சச்சரவு முற்றி அடிதடி முதலிய ஜீவகாருண்யமற்ற காரியங்களையும் செய்துவிடப் பண்ணும் அதனால் வழக்குகளும் மற்ற தொல்லைகளும் உண்டாகும்.; ஆதலால் செல்வத்தை அழித்து, பொய்பேசச் செய்து, அன்பற்ற காரியங்களைச் செய்யப் பண்ணி பல தொல்லைகளில் வருந்தச் செய்து விடும் சூது — என்பது கருத்து.

வாழ்க்கையின் நலங்கள் எல்லாம் உள்ளவனாக உள்ள ஒருவன் சூதாட ஆரம்பித்துவிட்டால் அந்த நலங்கள் அவனுக்குப் பயன்படா :

939. உடைசெல்வ மூணொளி கல்வியென் றைந்து
மடையாவா மாயங் கொளின்.

ப. ரை : உடை, செல்வம், ஊண், ஒளி, கல்வி, என்ற ஐந்தும் ஆயம் கொளின் அடையா ஆம் — (நல்ல) உடை, (நிறைந்த) செல்வம், (வயிறார) உணவு, (நற்குணப்) பெருமை, கற்ற (கல்வி) என்ற ஐந்தும் சூதாட்டத்தை மேற்கொண்டால் பொருந்தமாட்டாதன ஆகும்.

பொ. ரை : நல்ல உடை, நிரம்பிய செல்வம், வயிறார உணவு, நற்குணப் பெருமை, கற்றகல்வி, என்ற ஐந்தும் சூதாட்டத்தில் இறங்கினவனுடன் சேர்ந்திருக்கமாட்டாதன ஆகி விடும்.

வி - ம் : அடையா ஆம் — (அவனைச்)சேராத பொருள்கள் ஆகி விடும் — அதாவது சொந்தமல்லாதவைகள் ஆகிவிடும். சூதாட்டத்தில் இறங்கி விட்டவனுக்கு நல்ல உடையில் ஆசையிருக்காது, செல்வத்தைப் போற்றும் எண்ணமிருக்காது, வயிறார உண்ண நிம்மதியிருக்காது, பெருமை குறையுமே என்ற நாணமிருக்காது, கற்றகல்விகளின் நினைவிருக்காது. ஆதலால் அவன் வீட்டில் உடையிருந்தாலும் செல்வமிருந்தாலும், உணவிருந்தாலும், குடும்பப் பெருமையிருந்தாலும் அவன் கல்விகற்றவனாக இருந்தாலும் இந்த ஐந்தும் அவனுக்குப் பயன்படாததால் அவனுடன் பொருந்தியிருப்பன அல்லாதன ஆகிவிடும் — என்பது கருத்து.

அந்த நலங்களெல்லாம் பொருந்தாவிடினும் சரி, போய் விட்டாலும் சரி, இன்னும் மேற் கொண்டு என்ன துன்பங்கள் வந்தாலும் சரி, சூதாட்டத்தின் ஆசை எளிதில் விடாது.

940. இழத்தொறூஉங் காதலிக்குஞ் சூதேபோற் றுன்ப
முழத்தொறூஉங் காதற் றுயிர்.

ப. ரை : இழத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம் உழத்தொறூஉம் காதற்று உயிர்=இழக்க இழக்க (ஆடுகிற வனுக்கு) ஆசை அதிகப்படுகிற சூதாட்டத்தைப் போல, நோய் அதிகரிக்க அதிகரிக்க உயிர் (உடலின் மீது) ஆசை கொள்ளும்.

பொ. ரை : தோற்கத் தோற்க சூதாடுகிறவனுக்கு சூதின் மேல் ஆசை அதிகரிக்கும்; அதைப் போலவே உடல் நோய் அதிகரிக்க அதிகரிக்க உயிருக்கு உடலின் மீதுள்ள ஆசையும் அதிகமாகும்.

வி - ம் : வலியுறுத்துவதற்காக உபமானத்தை உபமேயமாக்கிச் சொல்லப்பட்டிருக்கிறது. உடலுக்கு நோய் அதிகரித்து மரணம் நெருங்க நெருங்க, உயிருக்கு உடலின் மீதுள்ள பற்று அதிகப்படுகிறது; அதைப் போலவே சூதாட்டத்தில் தோல்வி அதிகரித்து தரித்திரம் நெருங்க நெருங்க சூதாட்டக்காரனுக்குச் சூதாட்டத்தின் மேலுள்ள பற்று அதிகரிக்கும். (இந்த இரண்டு பற்றுகளையும் விட்டொழிப்பது கடினம், விட்டொழிப்பதே நலம்.) — என்பது கருத்து.

அதி. 95—மருந்து

['மருந்து' என்பது உடலுக்கு நோய் வந்தால் அதைத் தீர்க்க வைத்தியம். இந்த அதிகாரம் நோய் வராமல் காத்துக் கொள்வதற்கு வேண்டிய பொது விதிகளையே முக்கியமாகச் சொல்லி, நோய் வந்துவிட்டால் நோய்களைத் தீர்ப்பதற்கென்றே படித்துப் பயிற்சியுள்ள வைத்தியனிடமே அதைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்பதையும் சொல்லுகிறது.]

941. மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர் (மி)
வளிமுதலா வெண்ணிய மூன்று.

ப. ரை : நூலோர் எண்ணிய வளிமுதலா மூன்றும் மிகினும் குறையினும் நோய் செய்யும்= நூல்களைக் கற்றறிந்த அறிஞர்கள் அனுபவித்துச் சொல்லியிருக்கிறபடி, காற்று முதலாகிய மூன்றும் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாக்கும்.

பொ. ரை : கற்றறிந்த அறிவாளிகள் ஆராய்ந்து அனுபவித்துச் சொல்லியிருக்கிறபடி காற்று, (நீர், சோறு) ஆகிய மூன்று உணவுகளும் அதிகப்பட்டாலும் குறைந்தாலும் வியாதியை உண்டாக்கும்.

வி-ம் : எண்ணிய – எண்ணி யெண்ணி ஆராய்ந்த. 'வளிமுதலா மூன்று' என்பதற்கு 'வாதம் முதலாகிய மூன்று' என்று கொண்டு வாதம், பித்தம், சிலேட்டுமம் என்று பொருள் கொள்ளலா மாயினும், அப்படிப் பொருள் கொள்வது 'மருந்து' என்ற அதிகாரத்துக்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றினும், திருவள்ளுவர் அந்தப் பொருளை எண்ணியிருக்கமாட்டார். ஏன் எனில் இந்த அதிகாரத்தில் சொல்லப்படுவது வாகட முறையைப்பற்றி அல்ல. வாகட நுணுக்கமே அறியாத ஒவ்வொரு மனிதனும் சாதாரண அறிவைக் கொண்டு, நோய் வராமலிருப்பதற்கு கவனித்துக் கொள்ள வேண்டிய உணவு கட்டுப்பாடு ஒன்றை மட்டும் சொல்லி, நோய் வந்து விட்டால் அதை அதற்கென்று படித்துள்ள வைத்தியனைக் கொண்டு பார்த்துக் கொள்ள வேண்டும் என்பதை மட்டும்தான் இவ்வதிகாரம் சொல்லுகிறது. அதனால் வாதம் பித்தம் சிலேட்டுமம் என்ற வைத்திய நுணுக்கச் சொற்களை இழுத்தால், பின் வாதம் என்பது என்ன, பித்தம் சிலேட்டுமம் என்பன என்ன, என்று விளக்க வேண்டியிருக்கும். ஆதலால் உணவைப்பற்றிய பொது அறிவை மட்டும் கவனித்தால் நோய் வராது. நோய் வந்து விட்டால் அது வந்ததற்குக் காரணம் வாதமா பித்தமா சிலேட்டுமமா என்பதைக் கண்டறிய வேண்டிய பொறுப்பை 'கற்ருன் கருதிச் செய்யல்' என்று பின்னுற் குறளில் சொல்லுகிறபடி வைத்தியனுக்கு விட்டுவிட வேண்டியது. ஆதலால் வாதபித்த சிலேட்டுமத்தை இங்கு சொல்லாமல் வெறும் உணவுகளை மட்டும் குறிக்கப் பொருள் கொள்வதே நல்லது. உயிர் வாழ்க்கைக்கு மிகவும் முக்கியமானது மூச்சு. மூச்சு வழியாக காற்றை உட் கொள்ளுகிருேம். அதற்கு அடுத்ததாக முக்கியமானது இரத்த ஓட்டம், இரத்த ஓட்டத்துக்காக நீரை உண்கிருேம். அதற்குப்பிறகு உடலுறுதி. உடல் வளத்துக்காக சோறு, கறி, காய் முதலிய பலவற்றை உண்கிருேம். இந்த மூன்றுஉணவுகளும் அளவோடு உண்ண வேண்டும். இவை மிகுந்தாலும் குறைந்தாலும்நோயுண்டாக்கும். அதனல் அறிவாளிகள் ஆராய்ந்து சொல்லியபடி காற்று. நீர், சோறு ஆகிய மூன்றும் மிகுந்தாலும் குறைந்தாலும் நோயுண்டாக்கும் – என்பது கருத்து.

நாம் உட்கொள்ள வேண்டிய காற்று, நீர், சோறு கறி வகை ஆகிய மூன்று உணவுகளுக்குள் மூச்சுக்காக உட் கொள்ளும் காற்றும் இரத்த ஓட்டத்துக்காக உட் கொள்ளும் நீரும் மூக்குக்கோ நாக்குக்கோ சுவை கொடுத்து ஆசை மூட்டுவதில்லை. அதனல் காற்றையும் நீரையும் அடுத்தடுத்தோ அளவுக்கு மீறியோ உட்கொள்ளுவதில்லை. ஆனல் உடல் வளத்துக்காக உட்கொள்ளும் காய், கறி, சோறு, பழம் பட்சணம் முதலிய உணவுகள்தாம் நாக்குக்கு ஆசை

மூட்டி, அடுத்தடுத்தும் அளவுக்கு மிஞ்சியும் உண்ணச் செய்கின்றவை. நோய்களுக்கெல்லாம் முக்கிய காரணம் அடுத்தடுத்து நாக்குக்குச் சுவை ஆசையால் வயிற்றை நிரப்புவதேயாகும். அதனால்:

942. மருந்தென வேண்டாவாம் யாக்கைக் கருந்திய
தற்றது போற்றி யுணின்.

ப. ரை: யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின் மருந்து என்ப வேண்டா ஆம்=உடல் வளர்ந்துக்காக உண்ணப்பட்டது சீரணித்து விட்டதை அறிந்து (மறுபடியும்) உண்டால் மருந்து என்பவைகள் வேண்டாதனவாகும்.

பொ. ரை: சரீர வளர்ச்சிக்காக அறுசுவைகளாக உண்ணப்படுகிறவைகளை, ஒருமுறை உண்டது முழுவதும் சீரணமாகிவிட்டதா என்பதை கவனித்துக்கொண்டு மறுமுறை உண்டால் மருந்துகளே வேண்டியதில்லை.

வி-ம்: யாக்கைக்கு அருந்தியது—(மூச்சுக்காகவும் இரத்த ஓட்டத்துக்காகவும் உட்கொள்ளப்படும் காற்றும் நீரும் அல்லாது) உடல் வளர்த்துக்காக வயிற்றை நிரப்புகின்ற தினிகள். அற்றது—இரைப் பையில் இல்லாது போனதை. அதாவது சீரணமானதை. போற்றி—மிகவும் கருதி. உடல் வளர்த்துக்காக ஒரு முறை உட்கொள்ளப்பட்ட வயிற்றுணவுகள் முற்றிலும் சீரணிக்கப்பட்டுவிட்டதா என்பதை அறிந்துகொண்டு அடுத்த முறை உண்டால் நோயும் வராது. மருந்தும் வேண்டியதில்லை—என்பது கருத்து.

ஆகையினால்:

943. அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு
பெற்றா னெடிதுய்க்கு மாறு.

ப. ரை: அற்றால் அளவறிந்து உண்க; அஃது உடம்பு பெற்றான் நெடிது உய்க்கும் ஆறு=ஆதலினால் (உண்டது சீரணிக்க வேண்டிய) கால அளவை அறிந்து (மீண்டும்) உண்ணுக; அஃது உடம்பை அடைந்தவன் அவ்வுடலை நீண்டகாலம் அனுபவிக்கும் வழி.

பொ. ரை: ஆகையினால் (ஒரு முறை உண்டதற்கும் மறுமுறை உண்பதற்கும் இடையிலிருக்க வேண்டிய கால) அளவை அறிந்துகொண்டு உண்ண வேண்டும்; அப்படிச் செய்வது (நல்வினைப் பயனாக) கிடைத்த மானிட உடம்பை நெடுங்காலம் பயன்படுத்திக் கொள்ளும் மார்க்கம்.

வி - ம் : அற்ருல் – அப்படித்தால் – ஆதலால். 'உடம்பு பெற்ருன்' என்பது 'பெறலரிய மனிதப் பிறவியைப்பெற்றதை' என்பதை உணர்த்த. ஒரு தரம் உண்பதற்கும் மறுதரம் உண்பதற்கும் இடையிலிருக்க வேண்டிய காலத்தை கவனித்து உண்டால் கிடைத்ததற்கரிய இந்த மானுட சரீரத்தின் பயனை கெடுங்காலம் அனுபவிக்கலாம் – என்பது கருத்து.

நோயின்றி வாழவும் நீண்ட ஆயுள் பெறவும் உணவுக் கட்டுப்பாடே முக்கியம். அந்த உணவு கட்டுப்பாட்டில் அடுத்தடுத்து உண்ணுமல் ஒரு முறை உண்டது முற்றிலும் சீரண மான பிறகே அடுத்த முறை உண்ண வேண்டும் என்பது முக்கியம். அத்துடன், இன்னும் கவனிக்க வேண்டிய உணவு கட்டுப்பாடு எதுவெனில் :

944. அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல
துய்க்க துவரப் பசித்து.

ப. ரை : அற்றது அறிந்து, மாறல்ல கடைப்பிடித்து, துவர பசித்து துய்க்க=உண்டது சீரணமாகி விட்டதை அறிந்து கொண்டு, (மறுமுறை உண்ண வேண்டும் என்பதோடு) உன் உடலுக்கு மாறுபடாத உணவுகளை ஆராய்ந்து நிச்சயம் செய்து கொண்டு (அவற்றைக்கூட) நன்ருகப் பசித்த பிறகே உண்ண வேண்டும்.

பொ. ரை : ஒரு முறை உண்டது முற்றிலும் சீரணமாகி விட்டதை அறிந்து கொண்டுதான் மறு முறை உண்ண வேண்டும் (என்பதுடன்) உன் உடம்புக்கு ஒத்துக் கொள்ளாதன அல்லாத உணவுகளை ஆராய்ந்து நிச்சயித்துக் கொண்டு, அவைகளைச் சாப்பிடுவதிலும் நன்ருகப் பசியெடுத்த பிறகே சாப்பிட வேண்டும்.

வி - ம் : 'அற்றதறிந்து' என்றதில் 'அற்றதை அறிந்தால் மட்டும் போதாது என்பது தொக்கியிருக்கிறது. 'மாறல்ல கடைப்பிடித்து' என்ருல் ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உடம்புக்கு ஒத்துக்கொள்ளாத உணவுகள் எவை என்பதை சற்று கவனம் செலுத்திஞல் எளிதில் அறிந்து கொள்ளலாம். அப்படி கவனித்து எது ஒத்துக்கொள்ளுவது எது ஒத்துக்கொள்ளாதது என்பதைக் கடைப்பிடிக்க வேண்டும். 'கடைப்பிடிப்பது' என்ருல் ஆராய்ந்து ஆராய்ந்து கடைசியாகப் பிடித்துக் கொள்வது. நாக்குக்குச் சுவை தருவதாக இருப்பினும் எல்லா உணவுகளும் எல்லாருக்கும் ஒத்துக் கொள்வதில்லை. அதை ஒவ்வொருவரும் அவரவருடைய அனுபவத்தைக் கொண்டுதான் தீர்மானித்துக் கொள்ள

வேண்டும். துவரப் பசித்து – நன்ருகப் பசியெடுத்து. ஒரு தாம் உண்ட உணவு முழுதும் சீரணமாகிவிட்டதை அறிந்தே மறுதரம் உண்ண வேண்டும் என்பதோடு தேகத்துக்கு ஒத்துக்கொள்ளாத உணவுகளை ஆராய்ந்து நீக்கிவிட்டு, ஒத்துக்கொள்ளுகிற உணவுகளையும் கூட நன்ருகப் பசித்த பிறகே உண்ண வேண்டும் – என்பது கருத்து.

அப்படி ஆராய்ந்து தேகத்துக்கு மாறுபாடில்லாத உணவை நன்ருகப் பசியெடுத்து உண்டாலும் :

945. மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி
னூறுபா டில்லை யுயிர்க்கு.

ப. ரை : மாறுபாடு இல்லாத உண்டி மறுத்து உண்ணின் உயிர்க்கு ஊறுபாடு இல்லை = உடம்புக்கு மாறுபடாத (ஒத்துக்கொள்ளுகிற) உணவுகளையும் அளவுக்கு அதிகப்படுவதை விலக்கி உண்டால் (உடலுக்கு நோய் வராது அதனல்) உயிருக்குத் துன்பம் இல்லை.

பொ. ரை : உடம்புக்கு மாறுபடாமல் ஒத்துக் கொள்ளுகிற உணவையும் சுவைக்காக ஆசைப்பட்டு மிதமிஞ்சி சாப்பிடுவதை விலக்கி அளவாக உண்டால் உடலுக்கும் நோய் வராது; உயிருக்கும் துன்பமில்லை.

வி - ம் : உண்டி மறுத்தல் – உண்டென சாப்பிடும் ஆசையை விலக்கல். 'உண்டென' – 'அதிகமாக'. உடலுக்கு நோய் வந்தால் துன்பப்படுவது உயிரே ஆதலால் 'உயிர்க்கு ஊறுபாடில்லை' எனப்பட்டது. உடம்புக்கு ஒத்துக்கொள்ளுவன என்று ஆராய்ச்சியால் கடைப்பிடித்த உணவுகளையும்கூட நாக்கு ருசிகளை மறுத்து அளவோடு உண்ணும் பழக்கமுடையவர்களுக்கு நோய் வராது – என்பது கருத்து.

உடம்புக்கு ஒத்துக் கொள்ளாதவைகளை நீக்கி, ஒத்துக் கொள்ளுகின்றவைகளையே உண்ண வேண்டும். அவற்றையும் அளவோடு உண்ண வேண்டும். அவைகளும் வயிற்றில் சீரணமாகிவிட்டதை உணர்ந்தால் மட்டும் போதாது. அதற்கு மேலும் :

946. இழிவறிந் துண்பான்க ணின்பம்போ னிற்கும்
கழிபே ரிரையான்க ணேய்.

ப. ரை : இழிவு அறிந்து உண்பான்கண் இன்பம் போல் கழிபேர் இரையான் கண் நோய் நிற்கும் = (மலமூத்திரக்) கழிவுகளை அறிந்து கொண்டு உண்பவனிடத்தில் (உடல் நலத்

தின்) மகிழ்ச்சி தங்குவதைப் போல் மேலும் மேலும் மிகுதியாக உண்பவனிடத்தில் நோய் தங்கும்.

பொ. ரை: மலசலக் கழிவுகளைக் கவனித்து, உணவோ நீரோ உண்கின்றவனிடத்தில் தேக ஆரோக்யம் குடிகொண்டிருக்கும்; அதைப் போலவே (மலசலக் கழிவை கவனிக்காமல்) மேலும் மேலும் உண்டு வயிற்றை அடைக்கிறவனிடத்தில் நோய் குடி கொண்டிருக்கும்.

வி-ம்: இழிவு — உடலிலிருந்து வெளிப்பட வேண்டிய கழிவுகள் — அதாவது மலமும் மூத்திரமும். 'இழிவறிந்து உண்பது' என்பது காலாகாலத்தில் மலங்கழிக்க வேண்டும் என்பதையும் அதன் நிலைமையையும் கவனித்து: அதாவது சரியான முறையில் சரியான அளவில் மலம் போயிற்று என்பதையும் அல்லது மலம் கழிவதில் தடையோ அளவுகடந்த முறையோ ஏற்பட்டால் அதையும், நீர் கழிவதில் துன்பமோ நிறமாற்றமோ இருந்தால் அதையும் கவனித்தால் அவற்றில் ஏதாவது குற்றம் காணப்பட்டால் எச்சரிக்கை கொண்டு அந்த நிலைமைக்குத் தக்கபடி அடுத்த உணவை மாற்றியோ, குறைத்தோ வைத்தியம் நாடியோ உண்பது யாருக்கும் எளிது. ஆதலால், மலமூத்திரக் கழிவுகளை கவனித்துக் கொண்டு உண்கிறவனுக்கு நோய் வராது. மலசலத்தைக் கழிக்காமலும் அவற்றை கவனிக்காமலும் மேலும் மேலும் ஆகாரத்தை வயிற்றில் அடைப்பவனுக்கு எந்நேரமும் ஏதாவது நோய் இருந்து கொண்டே இருக்கும் - என்பது கருத்து.

நாக்கின் உருசியினால் இரைக்கருவிகளின் சக்திக்கு மீறிய அளவுக்கு உண்பதினாலேயே நோய்கள் வருகின்றன. ஆதலால்:

947. தீயள வன்றித் தெரியான் பெரிதுண்ணின்
நோயள வின்றிப் படும்.

ப. ரை: தீஅளவு அன்றி தெரியான் பெரிது உண்ணின் அளவு இன்றி நோய் படும் = சீரணத் தீயின் அளவாக அல்லாமல் தெரியாமல் மிகுதியாக உண்டால் அளவில்லாத நோய்கள் உண்டாகும்.

பொ. ரை: சீரண சக்தியின் அளவாக உண்ணாமல், தெரியாத்தனமாக அளவு கடந்து உண்டால் அளவில்லாத நோய்கள் உண்டாகும்.

வி-ம்: 'தீ' என்பது சக்தி — இங்கே சீரண சக்தி. தெரியாத்தனமாக சீரணசக்திக்கு மீறி மிதமின்றி உண்பதனால் தான் பல நோய்களும் உண்டாகின்றன — என்பது கருத்து.

இதுவரையிலும் சொல்லப்பட்ட விதிகளை கவனித்து, உணவில் பத்தியமாக உண்பவர்களுக்கு நோய் வராது. உணவு குற்றத்தாலோ அல்லது வேறு குற்றங்களாலோ நோய்கள் வந்து விட்டால்:

948. நோய்நாடி நோய்முத லாடி யதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்.

ப. ரை: நோய்நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி, வாய்ப்பச் செயல் = நோயின் இயல்பை அறிந்து, அந்நோய் வந்த காரணத்தை அறிந்து அதைத் தீர்க்கவல்ல (மருத்துவன், இருக்கும் இடத்தை நாடி, செய்ய வேண்டிய முறையில் (மருத்துவம்) செய்ய வேண்டும்.

பொ. ரை: நோயை இன்னதென்று கண்டறிந்து, அந்நோய் வந்த காரணத்தையும் அறிந்து, அந்நோயைத் தீர்க்கத் தெரிந்த வைத்தியனிடத்தில் தக்க பரிகாரம் செய்ய வேண்டும்.

வி-ம்: 'வாய்' என்பதற்கு இங்கே 'இடம்' என்பது பொருள். 'அது தணிக்கும் வாய்' என்பதற்கு 'அந்நோயைத் தீர்க்கக் கூடிய இடம்' என்பது பொருள். அதாவது அந்நோயைத் தீர்க்கக் கூடிய 'வைத்தியனிடம்'. நோய் வந்து விட்டால் நினைத்தபடியெல்லாம் சொந்த வைத்தியம் செய்து விடாமலும் அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் சொல்லுகிறதை யெல்லாம் செய்து விடாமலும் நோயையும் அது வந்த காரணத்தையும் அறிந்து அதைத் தீர்க்க வல்ல வைத்தியனை நாடி அவனிடம் வேண்டியதைச் செய்து கொள்ள வேண்டும்—என்பது கருத்து.

அதற்கென்றே படித்துப் பயிற்சி பெற்றுள்ள வைத்தியனிடத்தில் நோயாளியை ஒப்படைத்து விட்டால் அதன் பிறகு ஆக வேண்டியது வைத்தியன் வேலை. அதாவது:

949. உற்றா னளவும் பிணியளவுங் காலமுங்
கற்றான் கருதிச் செயல்.

ப. ரை: உற்றான் அளவும் பிணி அளவும் காலமும் கற்றான் கருதி செயல் = நோய் உற்றவனுடைய (வயது. தேக வலிமை, முதலியவற்றின்) அளவையும் (அவனுக் குற்ற) நோயின் வலிமையையும் கால நிலைமையையும் மருத்துவத் தொழில் கற்றவன் ஆராய்ந்து, தக்கது செய்ய வேண்டியது.

பொ. ரை: நோயாளியின் (வயது, தேகபலம் முதலிய) அளவுகளையும் நோயின் வலிமையையும் அப்போதுள்ள கால

நிலைமையையும் தீர எண்ணிப் பார்த்து தக்கதுசெய்ய வேண்டியது வைத்தியத் தொழில் கற்றவனுடைய வேலை.

வி-ம்: நோயாளியன் வயது, அவனுடைய தேகத்தில் அப்போதுள்ள சக்தி முதலியவற்றைக் கருதி, இன்ன பரிகாரத்தைச் செய்ய இது தக்க காலமா என்பதையும் உணர்ந்து தகுந்த பரிகாரம் செய்ய வேண்டியது வைத்தியன் வேலை- என்பது கருத்து.

நோயாளியை வைத்தியனிடத்தில் ஒப்படைத்ததற்கு அப்பால்:

950. உற்றவன் தீர்ப்பான் மருந்துழைச் செல்வானென்
றப்பானாற் கூற்றே மருந்து.

ப. ரை: அப்பால் உற்றவன், தீர்ப்பான், மருந்து, உழைச்செல்வான் என்று நாற் கூற்றே மருந்து = (நோயாளியை வைத்தினிடம் ஒப்படைத்ததற்கு) அப்பால் நோயுற்றவன், அதைத் தீர்ப்பவன், மருந்து, நோயாளியின் அருகிருக்கும் துணை, என்ற நான்கு பகுதிகளும் சேர்ந்ததுதான் வைத்தியம்.

பொ. ரை: நோயாளியை வைத்தியனிடம் ஒப்படைத்த பிறகு நோயாளி, வைத்தியன், மருந்து, நோயாளியின் அருகிலிருக்க வேண்டிய துணை என்ற நான்கு பகுதிகளும் சேர்ந்ததே வைத்தியம்.

வி-ம்: உழைச் செல்வான் – நோயாளியின் அருகிலிருந்து அப்போதைக் கப்போது மருந்து கொடுத்தல், பத்தியம் கவனித்தல், முதலிய பணிகளைச் செய்து கொண்டு நோயாளிக்குத் துணையாக இருப்பவன். 'அப்பால் நாற்கூற்றே' என்றது 'அதன் பிறகு மற்றவர்கள் செய்ய வேண்டியது ஒன்றுமில்லை இந்த நான்கும் அதனதன் காரியத்தை கவனித்துக் கொள்ள வேண்டிய அவ்வளவேதான் வைத்தியம்' என்பதை வலியுறுத்துவதற்கு, நோயாளியை வைத்தியனிடம் ஒப்படைத்த பிறகு நோயாளி, வைத்தியன், மருந்து, சேவை செய்யும் துணை, இந்த நான்கும் சரியாக இருப்பதுதான் வைத்தியம் – என்பது கருத்து.

அங்கவியல் முற்றிற்று.

3. ஒழிபியல்

'ஒழிபியல்' என்பது ஒழிபு இயல். அதாவது மிச்சமுள்ளவைகளைப் பற்றியது. ஒழிபு – மிச்சம். இயல் – தன்மை. 'பொருட்பால்' பகுதியில் அரசியல், அங்கவியல் என்ற இரண்டிலும் சொல்லப்பட்டவை போக மிச்சமுள்ள விஷயங்கள் என்பது 'ஒழிபியல்'.

அதி. 96—குடிமை

['குடிமை' என்பது நல்ல குடிப்பிறப்பு. அதாவது நல்லஇனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதற்கு அடையாளம். இது சாதியைப் பற்றியது அல்ல. வெறும் ஒழுக்கத்தைப் பற்றியது.]

951. இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை யியல்பாகச்
செப்பமு நாணு மொருங்கு.

ப. ரை : செப்பமும் நாணும் ஒருங்கு இயல்பாக இற்பிறந்தார் கண் அல்லது இல்லை = ஒப்புரவும் பழிக்கு அஞ்சுதலும் சேர்ந்தாற் போல் வழக்கமாக நல்ல குடியிற் பிறந்தவர்களிடத்தில் அல்லாமல் (மற்றவரிடத்தில்) இருப்பதில்லை.

பொ. ரை : உபகாரக் குணமும் பழிபாவங்களுக்கு அஞ்சி நடக்கும் தன்மையும் சேர்ந்தாற்போல் வழக்கமாக நல்ல குடியிற் பிறந்தவர்களிடத்திலன்றி மற்றவர்களிடத்தில்இருப்பதில்லை.

வி - ம் : செப்பம் – ஒப்புரவு – உபகார குணம். செப்பமும் நாணமும் ஒருங்கே – என்பது உபகாரமும் பழிக்கஞ்சும் நடத்தையும் சேர்ந்திருக்க வேண்டும். அதுதான் நற்குடிப் பிறப்பின் அடையாளம். அதாவது சிலர் உபகாரம் செய்யும் தாராளமுள்ளவர்களாக இருக்கலாம். ஆனல் பழி பாவத்துக்கு அஞ்சாதவர்களாகவும் அந்த வழியில் சம்பாதித்த செல்வத்தால் உதவிகளைச் செய்கிறவர்களாகவும் இருப்பார்கள். இன்னும் சிலர் பழி பாவங்களுக்கு அஞ்சி நடக்கிறவர்களாக இருக்கலாம். ஆனல் அவர்களுக்கு உபகாரம் செய்யக் கூடிய தாராள குணம் இல்லாதிருக்கும். ஆகையினல் இந்த இரண்டும் ஒருங்கே இருக்கவேண்டும் எனப்பட்டது. 'இயல்பாக' என்பதற்கு இங்கே 'இயற்கையாக' என்பது பொருளல்ல. 'வழக்கமாக' அல்லது 'ஒழுக்கமாக' என்பது பொருள். பிறருக்கு உபகாரம் செய்வதும் பழிபாவங்களுக்கு அஞ்சி நடப்பதும் சேர்ந்திருப்பது நல்ல குடியிற் பிறந்தவர்களிடத்திலேதான் வழக்கமாக உண்டு. அதாவது பரோபகாரமும் பழிபாவங்களுக்கு அஞ்சி நடப்பதும் சேர்ந்த ஒழுக்கம் தான் நல்ல குடியிற் பிறந்ததற்கு அடையாளம் – என்பது கருத்து.

உபகாரம் செய்வது வாய்ப்பும் வசதியும் நேர்ந்த போது தான் எனினும் அவர்கள் எப்போதும் தப்பாமல் கவனித்துக் கொள்வது எவை யென்ருல் :

**952. ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று
மிழுக்கார் குடிப்பிறந் தார்.**

ப. ரை: குடிப்பிறந்தார் ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும் இழுக்கார் = நல்லகுடியிற் பிறந்தவர்கள் நல்லொழுக்கமும் உண்மையும் பழிக்கஞ்சுவதும் ஆகிய மூன்றும் தவறமாட்டார்கள்.

பொ. ரை: நல்ல குடியிற் பிறந்தவர்கள் நல்ல நடத்தை, சத்தியம், பழிபாவங்களுக்கு அஞ்சுதல் ஆகிய இந்த மூன்றிலும் தவறமாட்டார்கள்.

வி-ம்: இழுக்கு — தவறு. நல்ல குடியிற் பிறந்தவர்கள் தமது நடத்தை ஒழுக்க முடையதா, தாம் சொல்லுவதெல்லாம் சத்தியமா, தாம் செய்வதெல்லாம் பழிபாவம் வராத செய்கைகளா என்பதை எப்போதும் தவறாமல் கவனித்துக் கொள்வார்கள்—என்பது கருத்து.

உண்மையான குடிப் பிறப்புக்கு அடையாளம் என்னவெனில்:

**953. நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கு.**

ப. ரை: வாய்மை குடிக்கு நகை, ஈகை, இன்சொல், இகழாமை, நான்கும் வகை என்ப = உண்மையான குடிப்பிறப்புக்கு சிரித்த முகம், கொடுக்கும் குணம், இனிய சொற்கள், இகழ்ந்து பேசாமை ஆகிய நான்கும் இனத்தின் அடையாளங்கள் என்று சொல்லப்படும்.

பொ. ரை: உண்மையான நல்ல குடிப்பிறப்புக்கு சிரிப்பு தவழும் மலர்ந்த முகம், வேண்டியதைக் கொடுக்கும் தன்மை, இனிமையான சொற்கள், நிந்தனையான சொற்களைப் பேசாமை ஆகிய இந்த நான்கும் சொந்தமான இனக் குறிகள் எனப்படும்.

வி-ம்: வாய்மைக் குடி — உண்மையாகவே நல்ல குடி. இக்குறளுக்கு 'வறியார் சென்றுழி முகமலர்ச்சியும் உள்ளன கொடுத்தலும் இன்சொற் சொல்லுதலும் இகழாமையும்' என்று, பிச்சை கேட்பவர்களிடத்தில் இந்த நான்கு குணமும் காட்டுவார்கள் என்றும், 'இகழாமை' என்பதற்கு இல்லாரை எல்லாரும் எள்ளுவாராகலின்' யாசிப்பவரை இகழமாட்டார்கள் என்றும் பொருள் செய்வது சரியல்ல. உண்மையான நல்ல குடிப்பிறப்புள்ளவர்கள் தமக்கு ஒத்தார், உயர்ந்தார்,

தாழ்ந்தார் என்ற எல்லாரிடத்திலுமே மலர்ந்த முகத்துடனும், கொடுக்கும் குணத்துடனும், இனிய வார்த்தைகளுடனும் நிந்தனை பேசாமலும் எப்போதும் நடந்து கொள்வார்கள் — என்பது கருத்து.

நல்ல குடியிற் பிறந்தவர்கள் யாரோடும் முகமலர்ச்சியோடு, வேண்டியதைக் கொடுத்து, இனிமையாகப் பேசி, நிந்தனை சொல்லாமல் நடந்துகொள்வார்கள் என்பது மட்டுமல்ல:

954. அடுக்கிய கோடி பெறினுங் குடிப்பிறந்தார்
குன்றுவ செய்த லிலர்.

ப. ரை : அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர் = அடுக்கடுக்காக (பல) கோடி செல்வம் பெறுவதாக இருந்தாலும் நல்ல குடியிற் பிறந்தவர்கள் (பெருமைக்குக்) குறைவான காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.

பொ. ரை : கோடானுகோடி பணம் வருவதாக இருந்தாலும் குடிப்பிறந்தவர்கள் கண்ணியக் குறைவான காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.

வி - ம் : அடுக்கிய கோடி — கோடானுகோடி. எவ்வளவு செல்வம் வருவதாக இருந்தாலும் நல்ல குடியிற் பிறந்தவர்கள் கண்ணியக் குறைவான எதையும் செய்ய மாட்டார்கள் — என்பது கருத்து.

கோடானுகோடி 'வருவதாக' இருந்தால் மட்டுமல்ல, உள்ளது 'போய் விட்டாலும்' கூட:

955. வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பிற் றலைப்பிரித லின்று.

ப. ரை : வழங்குவது உள் விழ்ந்த கண்ணும் பழம்குடி பண்பில் தலைப்பிரிதல் இன்று = பிறருக்குக் கொடுக்கும் தன்மை (செல்வநிலை) சுருங்கி விட்ட காலத்திலும் பரம்பரையாகப் பெருமையுள்ள நல்ல குடும்பம் தன் நல்ல குணங்களை விட்டு விடாது.

பொ. ரை : பிறருக்குக் கொடுக்கக் கூடிய செல்வ நிலைமை மிகவும் குறைந்து விட்ட காலத்திலும், பரம்பரையாகப் பெருமையுள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தம்முடைய நற்குணங்களை விட்டுவிட மாட்டார்கள்.

வி - ம்: உள் வீழ்தல் – சுருங்குதல். கண் – காலம். வழங்குவது – பிறருக்குக் கொடுக்கக் கூடிய செல்வ பலம். பண்பு - பல நல்ல குணங்கள் சேர்ந்த பெருந்தன்மை. தலைப்பிரிதல் – விட்டு விடுதல். பரம்பரைத் தொடர்பாகப் பெருங் குணமுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் வறுமையடைந்து விட்டாலும் கண்ணியத்தை விட மாட்டார்கள் – என்பது கருத்து.

ஏழ்மை வந்துவிட்ட காலத்திலும் கூட நற்குடிப் பிறந்தவர்கள் கண்ணியம் தவறமாட்டார்கள், என்பது மட்டுமல்ல; தமக்குப் பிறர் ஒரு தீமை செய்து விட்டாலும் அந்த வெறுப்பினால் கூட:

956. சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்.

ப. ரை: மாசு அற்ற குலம் பற்றி வாழ்தும் என்பார் சலம் பற்றி சால்பு இல செய்யார் = குற்றம் அற்ற பரம்பரை (ஒழுக்கத்தைப்) பின்பற்றி வாழ்வோம் என்பவர் (ஒருவரிடம் தமக்குள்ள) வெறுப்பு காரணமாக பெருந்தன்மை இல்லாத காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.

பொ. ரை: குற்றமற்ற (தம்முடைய) இனமரபைப் பின்பற்றி வாழ விரும்புகிறவர்கள் (ஒருவர் மீது தமக்குள்ள) வெறுப்பின் காரணத்தால் முறை தவறிய காரியங்களைச் செய்து விட மாட்டார்கள்.

வி - ம்: சலம் – கோபம் அல்லது வெறுப்பு. சால்பு – நன்னெறிமுறை. 'சலம்பற்றி' – என்பதற்கு 'வறுமையுற்ற வழியும்' என்று பொருள் கொள்ளக் கூடாது. ஏன் எனில் 'சலம்' என்பதற்கு 'வறுமை' என்று பொருள் கொள்வது மிகவும் வலிந்து சுற்றிப் பிடிக்க வேண்டிய காரியம். மேலும் முந்திய குறளில் 'வழங்குவது உள் வீழ்ந்தக் கண்ணும்' என்று, வறுமை வந்து விட்டாலும் பழங்குடி பண்புகளை விட்டிடாது என்பதைச் சொல்லியிருப்பதால் இங்கும் அதையே சொல்லுவது 'கூறியது கூறல்' ஆகும். 'குலம்' என்பது 'நல்ல பரம்பரை' அல்லது நல்ல வம்சம். குற்றமற்ற நல்ல குடியிற் பிறந்து அந்த நல்ல குடியின் பெருமையைக் காக்க வேண்டுமென்ற விருப்பமுள்ளவர்கள், கோபத்தாலுண்டான வெறுப்பின் காரணத்தால் யாருக்கும் அநீதியான எதையும் செய்துவிட மாட்டார்கள் – என்பது கருத்து.

சாதாரண மக்கள் அநீதி செய்து விட்டால் அதை உலகம் பொருட்படுத்துவதில்லை. ஆனால் நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் சிறு குற்றம் செய்து விட்டாலும்:

957. குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போ லுயர்ந்து.

ப. ரை: குடிப்பிறந்தார் கண் குற்றம் விசும்பின் மதிகண் மறு போல் உயர்ந்து விளங்கும்=நல்ல குடியிற் பிறந்தவர்களிடத்திலுள்ள குற்றம் வானத்திலுள்ள சந்திரனிடத்திலுள்ள களங்கம் போல் எல்லாருக்கும் தெரியும்.

பொ. ரை: நல்ல இனத்தைச் சேர்ந்தவர்கள் தவறு செய்தால், அது ஆகாயத்தில் சந்திரனிடத்திலுள்ள களங்கத்தைப் போல உலகத்திலுள்ள எல்லாருக்கும் தெரியும்.

வி-ம்: உயர்ந்து விளங்கும்–உயரத்தில் இருப்பதால் நன்ருகத் தெரியும். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் குற்றம் செய்தால் அதை எல்லாரும் எளிதில் அறிந்து, அதனுல் அவர்களுடைய மதிப்பு குறையும்–என்பது கருத்து.

உயர்ந்த குடிப்பிறப்பு என்ற பெருமை வெறும் செல்வத்தால் மட்டும் வருவதல்ல. செல்வமிருந்தாலும் செல்வச் செருக்கில்லாமல் அன்புடையவர்களாக இருப்பதுதான் குடிப்பிறப்பெனப்படுவது. ஆதலால் செல்வமுடைய ஒருவன் அன்பற்றவனுக இருந்தால்:

958. நலத்தின்கணாரின்மை தோன்றி னவனைக்
குலத்தின்க ணையப் படும்.

ப. ரை: நலத்தின் கண் நார் இன்மை தோன்றின் அவனை குலத்தின் கண் ஐயப்படும்=(ஒருவன்) செல்வ நலங்களுடன் உள்ள காலத்தில் (அவனிடம்) அன்பு இல்லாமை காணப்பட்டால் அவன் நல்ல குடிப்பிறப்புடையவன் என்பது சந்தேகத்துக்கிடமானது.

பொ. ரை: ஒருவன் செல்வ நலங்களுடன் சுகமாக வாழும் போதும் அவனிடத்தில் அன்பில்லாத தன்மை இருக்கக் கண்டால், அவன் நல்ல குடிப்பிறப்பு உள்ளவன் அல்ல என்று சந்தேகிக்க இடமுண்டு.

வி-ம்: நார்–அன்பு. செல்வச் சிறப்புடன் பெரிய மனிதனுக வாழும் ஒருவன் அன்பற்றவனுக இருந்தால் அவன் பரம்பரைப் பெரிய மனிதனல்ல, இடைவெட்டுப் பெரிய மனிதனுகத்தான் இருப்பான்—என்பது கருத்து.

பெரிய மனிதனுக்கு அடையாளம் பணம் அல்ல; அன்பான நடத்தைதான். அந்த நடத்தைக்கு அடையாளம் இனிய

சொல் ஆதலால் ஒருவன் பரம்பரைப் பெரிய மனிதன் என்பதை :

**959. நிலத்திற் கிடந்தமை கால்காட்டுங் காட்டுங்
குலத்திற் பிறந்தார்வாய்ச் சொல்.**

ப. ரை: நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்; குலத்தில் பிறந்தார் வாய்ச் சொல் காட்டும்=விளைநிலத்திலுள்ள சாரத்தை (அதில் முளைக்கிற) முளைகளே காட்டிவிடும்; (அது போல்) நல்ல குலத்திற் பிறந்தவர்கள் என்பதை வாயிலிருந்து வெளி வரும் சொற்களே காட்டிவிடும்.

பொ. ரை: ஒரு விளைநிலத்திலுள்ள பூமி சாரத்தைஅந்த நிலத்திலிருந்து வெளியே கிளம்புகிற முளையே காட்டிவிடும்; அதைப்போல் ஒருவனுடைய குடிப்பிறப்பை அவன் வாயிலிருந்து வெளியே வருகிற வார்த்தைகளே காட்டி விடும்.

வி-ம்: 'கால்' – நிலத்தை விட்டு வெளிக்கிளம்பும் தானியப் பயிரின் 'முளை'. நிலத்தை விட்டு முளை கிளம்புகிற விதமும் செழுமையுமே அந்த நிலத்திலுள்ள பூசாரத்தைக் காட்டி விடும். அது போல ஒரு மனிதன் வாயிலிருந்து வெளிக் கிளம்புகிற வார்த்தையின் விதமும் வினயமுமே அவனுடைய இனத்தைக் காட்டிவிடும் – என்பது கருத்து.

நல்ல குடும்பத்திற் பிறந்தவர்கள் குடும்பத்தின் பழக்க வழக்கங்களால் அன்புடையவர்களாகவும் இன்சொல் உடையவர்களாகவும் இருப்பார்கள் என்பது பொது அனுபவம். அன்பில்லாதவனுகவும் இனிய சொல் இல்லாதவனுகவும் இருக்கிறவன், பெருஞ் செல்வமுடையவனுக இருந்தாலும் நல்ல இனத்தைச் சேர்ந்தவனுக மதிக்கப்பட மாட்டான். ஆனுல் இனிய சொல்லும் பணிவுமுள்ளவன் அவன் குடிப் பிறப்பு எப்படியிருந்தாலும் அந்தப் பணிவினுலேயே நல்ல இனமாகக் கொள்ளப்படுவான். அதனுல் :

**960. நலம்வேண்டி னாணுடைமை வேண்டுங் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு.**

ப. ரை: நலம் வேண்டின் நாண் உடைமை வேண்டும்; குலம் வேண்டின் யார்க்கும் பணிவு வேண்டுக=நல்வாழ்வு வேண்டுமென்ருல் பழிபாவத்துக்கு அஞ்ச வேண்டும்; நல்ல குலம் (என்ற பெருமை) வேண்டுமென்ருல் யாரிடத்தும் வணக்கம் வேண்டும்.

பொ. ரை: சுகவாழ்வு வேண்டு மென்ருல் பழி பாவங்களுக்கு அஞ்சி நடக்க வேண்டும்; நல்ல இனம் என்ற மதிப்பு வேண்டு

மென்றால் பிறரிடத்தில் வணக்கமுள்ளவனாக நடந்து கொள்ளும் தன்மை இருக்க வேண்டும்.

வி-ம்: நாணுடைமை — பழிபாவங்களைச் செய்யக் கூசும் நற்குணம். நலம் — நல்வாழ்வு. குலம் — விழுப்பம் அல்லது சிறப்பு. ஒருவன் பழிபாவங்களைச் செய்யாதிருந்தால் (இம்மையிலும், மறுமையை நம்பினால் மறுமையிலும்) துன்பம் வராமல் வாழலாம். அதாவது, பழிபாவங்களுக்கு அஞ்சுகிறவனுக்கு யாரும் துன்பம் செய்யமாட்டார்கள். அவனுக்கு அனுதாபம் காட்டி உதவியும் செய்வார்கள். (மறுமையிலும் பழிபாவம் செய்யாதவனுக்கு நல்வாழ்வுள்ள பிறவி கிடைக்கும்). ஆனால் உலகத்தில் சிறப்படைவதற்குப் பழிபாவங்களுக்கு அஞ்சி நடப்பது மட்டும் போதாது. வணக்கமும் விநயமும் வேண்டும். அதுதான் 'பணிவு' எனப்பட்டது. 'பணிவு' என்பதற்கு 'அந்தணர், சான்றோர், அருந்தவத்தோர், தம்முன்னோர், தந்தை தாய் என்றிவர் எல்லாருக்கும்' என்று 'பணியப்படுவார் யார் மாட்டும்' என்று மட்டும் பொருள் கொள்வது போதாது. மேலே சொல்லப்பட்டவர்களுக்குப் பணிவு காட்டுவது கடமையைச் சேர்ந்தது. குலனுடைமை என்ற பெருமையைச் சேர்ந்ததல்ல. பின் 'பணிவு' என்றது என்னவெனில் 'கீழோராயினும் தாழ உரை' என்றபடி யாருக்கும் பணிவாக நடந்து கொள்ளுதல், இங்கே 'பணிவு' என்பதற்கு, கீழ்ப்படிதல் அல்லது தன்னைத் தாழ்மையாக நினைத்து நடப்பது என்பது அர்த்தமல்ல. பின் 'பணிவு' என்பதற்கு. 'இனிய சொல்லும் விநயமும்' என்று அர்த்தம். அதனால், துன்பமற்ற வாழ்வு வேண்டுமென்றால் பழிபாவங்களைச் செய்யாதிருந்தால் போதும்; ஆனால் சிறப்பும் வேண்டுமென்றால் யாரிடத்திலும் (இனிய சொல்லும் விநயமுமாக) பணிவாக நடந்து கொள்ள வேண்டும் — என்பது கருத்து.

அதி. 97—மானம்

[மக்கள், தம்முடைய வாழ்க்கைக்கு உயர்ந்த நோக்கங்களாகக் கொண்டுள்ள கொள்கைகளுக்குக் குறைவு வந்துவிடக் கூடாது என்று எண்ணுகிற உணர்ச்சிக்கு 'மானம்' என்று பெயர். உதாரணமாக ஒரு வீரனுக்குத் தோல்வி அடையாமல் இருப்பது மானம்; ஒரு பெண்ணுக்குக் கற்பு கெடாமல் இருப்பது மானம்; ஒரு உபகாரிக்கு 'இல்லை' யென்று சொல்லாதிருப்பது மானம்; ஒரு சத்தியவானுக்குப் பொய் சொல்லாமல் இருப்பது மானம் என்பன போன்றவை. பொதுவாக 'மானம்' என்பது பிறர் பழிப்புக்கு

ஆளாகாமல் இருக்க வேண்டுமென்ற உணர்ச்சி. இது குடிப் பிறந்தார் என்பவருக்கு மட்டும் சொல்லப்பட்டதல்ல. எல்லா மனிதருக்கும் பொது.]

961. இன்றி யமையாச் சிறப்பின வாயினுங்
குன்ற வருப விடல்

ப. ரை : இன்றி அமையா சிறப்பின ஆயினும் குன்ற வருப விடல்=இல்லாமல் முடியாத (முக்கியமான) பொருள்களாக இருந்தாலும் (மதிப்பு) குறையும்படி வருவதானால் (அவற்றை) விட்டுவிட வேண்டும் (என்பது மான முடைமை)

பொ. ரை : இல்லாமல் தீராது என்னத் தகுந்த மிகவும் அவசிய மான பொருள்களானாலும், ஒருவனுடைய கண்ணியம் குறைந்துவிடக் கூடிய முறையில் வருவதானால் அவற்றை ஏற்றுக் கொள்ள மறுத்து விடுதலே மானமுடைமை.

வி - ம் : குன்ற – மதிப்பிற் குறைந்துவிட. எவ்வளவு அத்யா வசியமான மகிமையுள்ள பொருளானாலும் கண்ணியக் குறைவு உண்டாகும்படி வருவதானால் அதை மறுத்து விடு வதே மானமுடைமை – என்பது கருத்து.

'இன்றியமையாத' அத்யாவசியமான பொருள்களை, கண் ணியம் குறைய ஏற்றுக் கொள்ள மறுப்பது மட்டுமல்ல; மிகுந்த சிறப்புகள் வருவதானாலும் கண்ணியக் குறைவான காரியங்களைச் செய்யவும் மறுப்பதே மானம் :

962. சீரினுஞ் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்.

ப. ரை : சீர் ஒடு பேர் ஆண்மை வேண்டுபவர் சீரினும் சீர் அல்ல செய்யாரே=புகழோடு (மானம் என்னும்) பேராண் மையை விரும்புகிறவர்கள் செல்வம் வருவதாயினும் நேர்மை அல்லாத காரியங்களைச் செய்ய மாட்டார்கள்.

பொ. ரை : புகழோடு கூடிய மானத்தை விரும்புகிறவர்கள் செல்வம் வருவதானாலும் நேர்மையற்ற காரியங்களைச் செய்யமாட்டார்கள்.

வி - ம் : பேராண்மை – பெரிய ஆண்மை – ஆளும் தன்மை, அதாவது ஆற்றல். அதிகாரத்தை ஒட்டி இங்கே 'பேராண்மை' என்பதற்கு மானம் என்பது பொருள். எவ் வளவு செல்வச் சிறப்புகள் வருவதானாலும் நேர்மையில்லாத காரியங்களைச் செய்ய மறுப்பதே புகழுக்குரிய மான முடைமை – என்பது கருத்து.

செல்வம் உள்ளவர்களாக இருந்தாலும், இல்லாதவர்களாக இருந்தாலும் மானம் உடையவர்கள் எப்படி நடந்து கொள்வார்கள் என்றால் :

963. பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டு முயர்வு.

ப. ரை: பெருக்கத்து பணிதல் வேண்டும்; சிறிய சுருக்கத்து உயர்வு வேண்டும்=செல்வம் பெருகி இருக்கும்போது பணிவுடையவராக இருக்க வேண்டும்; குறைவாகிய வறுமையுள்ள காலத்தில் நிமிர்ந்து நிற்க வேண்டும். (என்பது மானமுடைமை).

பொ. ரை: செல்வம் நிறைந்தவர்களாக இருக்கும்போது யாரிடத்தும் பணிவுடையவர்களாக நடந்து கொள்ள வேண்டும்; சிறுமை தரக்கூடிய தரித்திரமுள்ளவர்களாக இருக்கும் போது (அதற்காகப் பணிந்து விடாமல்) நிமிர்ந்து நின்று சமாளிக்க வேண்டும் (என்பது மானமுடைமை).

வி-ம்: பெருக்கம் – செல்வப் பெருக்கம். பணிதல் – இன்சொல், இனிய முகம் உடையவராக வணங்கி நடத்தல். உயர்வு – பணமில்லாமையால் வரக்கூடிய தாழ்வு மனப்பான்மையை அடக்கி உயர்வு மனப்பான்மை கொள்ளல். சிறிய சுருக்கம் – சிறுமை உண்டாக்கிவிடக் கூடிய ஏழ்மை. செல்வமுடையவர்களாக இருக்கும் போது அகங்கரித்து விடாமல் யாரிடத்தும் பணிவாக நடந்து கொள்வதும், ஏழையாக இருக்கும் போது அதைக் கருதி யாருக்கும் அடிமைப் பட்டு விடாமலும் அஞ்சாமலும் கெஞ்சாமலும் இருப்பதும் மானமுடைமை – என்பது கருத்து.

மானம் என்பது செல்வப் பெருக்கத்தையும் செல்வச் சுருக்கத்தையும் பொருட்படுத்தாமல் கொள்கையை விடாமல் நிற்கின்ற உயர்ந்த நிலை. அந்த நிலையிலிருந்து தவறியவர்கள் :

964. தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை.

ப. ரை: மாந்தர் நிலையின் இழிந்த கடை தலையின் இழிந்த மயிர் அனையர்=மக்கள் (மானம் என்ற) நிலையிலிருந்து கீழே இறங்கிவிட்ட இடத்து தலையிலிருந்து கழன்று விட்ட மயிருக்கு ஒப்பானவர்கள்.

பொ. ரை: மனிதர்கள் மானம் என்ற உயர்ந்த நிலையிலிருந்து தவறிவிட்டால், தலையிலிருந்து வேரோடு விழுந்து விட்ட மயிருக்குச் சமானமாகி விடுவார்கள்.

வி - ம்: நிலை — மானம் என்ற உயர்ந்த இடம். தலை — மனிதனுடைய உறுப்புகளுள் உச்சமான உயர்ந்த இடம். அந்த உயர்ந்த இடத்தில் இருக்கிற மயிர் தலையிலேயே இருக்கிற வரைக்கும் அதற்கு நீவல், சீவல், வாசனைத் தைலம் முதலிய பராமரிப்புகள் உண்டு. ஆனால் அந்த மயிர் தலையை விட்டு கழன்று விட்டால் 'அது நம் தலையிலிருந்த மயிராயிற்றே' என்று யாரும் அதை மதித்துப் பத்திரப்படுத்த மாட்டார்கள். அது குப்பைக்குப் போக வேண்டியதுதான். அதைப் போல. மனிதன் மானம் என்ற உயர்ந்த நிலையில் நிற்கிற வரைக்கும் அவனுக்கு எல்லா மதிப்பும் உண்டு. மானத்தை விட்டுத் தவறிவிட்டால் அதன்பின் அவனை யாரும் மதிக்க மாட்டார்கள். ஆதலால் — மனிதர்கள் மானம் என்ற உயர்ந்த நிலையிலிருந்து தவறிவிட்டால் தலையிலிருந்து விழுந்துவிட்ட மயிருக்குச் சமானமாக மதிப்பிழந்து போவார்கள் — என்பது கருத்து.

மிகச் சிறிய மானக் குறைவான காரியத்தைச் செய்து விட்டாலும் மிகப் பெரிய மனிதர்களும் மதிப்பிழந்து போவார்கள்:

**965. குன்றி னனையாருங் குன்றுவர் குன்றுவ
குன்றி யனைய செயின்.**

ப. ரை: குன்றுவ குன்றி அனைய செயின் குன்றின் அனையாரும் குன்றுவர் = (மானக்) குறைவான காரியங்களில் குன்றி மணியளவு செய்தாலும் மலை போன்ற பெரிய மனிதரும் (பிறர் மதிப்பில்) குறைந்து போவார்கள்.

பொ. ரை: மானக் குறைவான காரியத்தை, குன்றிமணியளவு மிகச் சிறிதாகவேனும் செய்து விட்டால், மலை போன்ற மிகப் பெரிய மனிதரும் பிறருடைய மதிப்பில் குறைந்து போவார்கள்.

வி - ம்: குன்றுவ — மானம் குன்றுவ. 'குன்றின் அனையாரும்' என்பதற்கு 'குடிப்பிறப்பில் மலைபோல் உயர்ந்தோரும்' என்பது மட்டுமல்ல. குடிப்பிறப்பு, செல்வம், புகழ், முதலான எப்படிப்பட்ட சிறப்பினால் உயர்ந்தவராக இருந்தாலும் — என்பது பொருள். குன்றிமணியளவு சிறிய மானக் கேடான காரியத்தைச் செய்து விட்டாலும் மலையளவு பெரிய மதிப்புடைய மனிதர்களும் அம்மதிப்பிற் குறைந்துபோவார்கள் — என்பது கருத்து.

குன்றிமணியளவு மானக் குறைவு ஏற்பட்டாலும் மதிப்பு குறைந்துவிடும் என்றிருக்க, காலமெல்லாம் மானம் கெடும்படி, தம்மை அவமதிக்கின்றவர்களுக்கு அடங்கி வாழ்கின்றவர்களும் இருக்கின்றார்களே! அவர்கள் அப்படியும் உயிர் வாழ்வதை என்னென்பது? :

966. புகழின்றாற் புத்தேணாட் டுய்யாதா லென்மற்
றிகழ்வார்பின் சென்று நிலை.

ப. ரை: இகழ்வார் பின் சென்று நிலை புகழ் இன்று புத்தேள் நாட்டு உய்யாது; மற்று என்? = (தம்மை) இகழ்ந்து பேசுகிறவர்களுக்குப் பின்சென்று (மானம் விட்டு) உயிர் வாழ்வது புகழ் இல்லாதது; மோட்சத்துக்கும் கொண்டுபோய் சேர்க்காது; பின் எதற்காக?

பொ. ரை: தம்மை அவமதிக்கிறவர்களை நத்தி, அவர்களுக்கு அடங்கி மானத்தைவிட்டு உயிர் வாழ்வது புகழ்தரக் கூடியதும் அல்ல; (புண்ணியமாக) மோட்சத்துக்குக் கொண்டு போய் விடக்கூடியதும் அல்ல; பின் எதற்காக அப்படியும் மானத்தை விட்டு பலர் உயிர் வாழ்கின்றார்கள்?

வி-ம்: புத்தேள் நாடு – மோட்சம் அல்லது தேவலோகம். பின் செல்லல் – சொன்னபடி அடங்கி நடத்தல். நிலை=உயிர் நிலை; அதாவது உயிர் வாழ்தல் – பிழைப்பு நடத்தல், மனிதன் உயிர் வாழ்வதன் நோக்கம் இம்மை மறுமை இரண்டையும் கருதித்தான். இம்மையின் பயன் புகழடைய விரும்புதல். மறுமையின் பயன் இறந்தபின் நல்ல கதியடைய நம்புதல். தம்மை அவமதிக்கிறவர்களைத் துதித்துக் கொண்டு மானங்கெட்டு உயிர்வாழும் பிழைப்பு இந்த இரண்டுக்கும் உதவாது. ஆதலால் – தம்மை இகழ்வாரை நத்திக் கொண்டு மானத்தை விட்டு உயிர் வாழ்வதில் புகழும் இல்லை புண்ணியமும் இல்லை – என்பது கருத்து.

இகழ்வாருக்கு அடங்கி வாழ்கின்ற மானக் கேட்டை விட இன்னும் மானக்கேடாகப் பகைவரை நத்தி உயிர்வாழ்கின்றவர்களும் உண்டு. அவர்கள் :

967. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத னன்று.

ப. ரை: ஒருவன் ஒட்டார்பின் சென்று வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று=ஒருவன் (தன்னுடைய) உயிர் வாழ்வதை விட பகைவர்பின் சென்று (மானம்விட்டு)

அந்த நிலைமை ஏற்பட்ட உடனே இறந்து விட்டான் என்பது நல்லது.

பொ. ரை : ஒருவன் தன்னுடைய பகைவரிடத்தில் அடங்கி மானமின்றி வாழ்க்கை நடத்துவதை விட அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்ட போதே இறந்து போவது நல்லது.

வி - ம் : ஒட்டார் – பகைவர். இந்தக் குறளுக்கும் முன் குறளிற் சொல்லியபடியே 'இகழ்வார் பின்னே சென்று' என்று பொருள் தரும்படி ஒட்டார் என்பதற்கு 'இகழ்வார்' என்று பொருள் கொள்வது தவறு. முன் குறளில் சொல்லப்பட்ட 'இகழ்வார்' என்பவர் வெறும் அவமதிப்பாக பேசுவதும் நடப்பதும் மட்டும் செய்கிறவர்கள். இந்தக் குறளில் சொல்லப்படுகிற 'ஒட்டார்' என்பவர் அழித்துவிடவும் விரும்பக் கூடியவர்கள். 'இகழவார்பின் சென்று' வாழ்வதைக் காட்டிலும் 'ஒட்டார் பின் சென்று' வாழ்வது மிகவும் மானங் கெட்ட காரியம் என்பதைக் குறிக்கவே இறந்து போவது நல்லது என்றார். 'அந்நிலையே' என்பதற்கு அப்படி ஒரு நிலைமை உண்டானால் அப்பொழுதே என்பது பொருள். அதாவது பகைவனுக்கு அடங்கி அவன் சொன்னபடி கேட்டால்தான் உயிர் வாழலாம் என்ற நிலைமை ஏற்பட்டால் - என்பது குறிப்பு. 'எனப்படுதல் நன்று' என்றதனால் 'என்று உலகத்தாரால் புகழப்படுவது நல்லது' என்ற பொருள் தோன்றுவதால், அப்படி இறந்து போவது புகழத் தக்கது என்பது பொருள். ஆதலால் – ஒருவன் தன்னுடைய பகைவனுக்கு அடங்கி மானத்தை விட்டு உயிரோடிருப்பதைக் காட்டிலும் இறந்து போவது புகழுடையது – என்பது கருத்து.

மானம் கெட்ட பின் உயிர்வாழ்வது எதற்காக? சாகாதிருக்கவா? ;

968. மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து.

ப. ரை : பெருந்தகைமை பீடு அழிய வந்த இடத்து வாழ்க்கை ஊன் ஓம்பும் மருந்தோ = பெருந்தகைமையாகிய மானம் கெட்டழிய நேர்ந்த போது (உயிரை விடாமல்) வாழ்ந்திருப்பது உடலைப் பாதுகாக்கும் அமிழ்தமா!

பொ. ரை : மனிதருக்குப் பெருந்தகைமை தருகின்ற மானம் என்பது கெட்டுப் போனபின் உயிரை விட்டொழிக்காமல் வாழ்ந்திருப்பது ஊனுடலை அழியாதிருக்கச் செய்யக் கூடிய அமிர்தமா ?

வி-ம்: 'பெருந்தகைமை' என்பதற்கு அதிகாரத்தை ஒட்டி இங்கே 'மானம்' என்பது பொருள். பீடு – பெருமை. அழிய – கெட. பீடழிய – பெருமை கெட்டழிய. மருந்து – அழிவில்லாது இருக்கச் செய்யும் அமிர்தம். மானம் முற்றிலும் கெட்டொழிந்தபின் உயிரோடிருப்பது, உடலை அழியாதிருக்கச் செய்யும் அமிர்தமாகி விடுமா? ஒரு நாள் இறந்தே தீர வேண்டும். ஆதலால் மானம் அழிந்தபோதே இறந்து போவது மேல் – என்பது கருத்து.

அப்படி மானங்கெட நேர்ந்த உடன் உயிரை விட்டுவிடக் கூடியவர்களும் உண்டு. அவர்கள்:

969. மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்ன
ருயிர்நீப்பர் மானம் வரின்.

ப.ரை: மயிர் நீப்பின் வாழா கவரிமா அன்னார் மானம் வரின் உயிர் நீப்பர் =(தன் உடலிலுள்ள) மயிரை (யாராவது) நீக்கினால் (உடனே) உயிரை விட்டு விடுகிற கவரிமானைப் போன்றவர்கள் மானம் (கெட) வந்தால் உயிரை விட்டு விடுவார்கள்.

பொ.ரை: தன்னுடைய உடலின் மீதுள்ள மயிரை பிறர் நீக்கின உடனே தன் உயிரை விட்டு விடுகிற கவரிமானைப் போன்றவர்கள் மானிகள்; மானக்கேடு வந்தால் உடனே உயிரை விட்டு விடுவார்கள்.

வி-ம்: கவரிமா என்பது ஒரு வகை மான். அதன் உடல் முழுவதும் நீண்ட மயிர் அடர்ந்து இருக்கும். அந்த மயிரின் கொத்துதான் பெண்கள் 'சவரி' என்று கூந்தலில் முடிந்து கொள்வது. அந்த மான் அதன் மீதுள்ள மயிரைப் பிடுங்கினால் உடனே இறந்து போகும் இயல்புடையது. அதனால் – மயிரை நீக்கினால் உடனே உயிரை விட்டு விடுகிற கவரிமானைப்போல், மானக் கேடு உண்டானால் உடனே உயிரை விட்டு விடுகிற மனிதர்களும் உண்டு – என்பது கருத்து:

அப்படிப்பட்ட மானிகளின் சரித்திரம் போற்றத் தக்கது அதனால்:

970. இளிவரின் வாழாத மான முடையா
ரொளிதொழு தேத்து முலகு.

ப. ரை: இளி வரின் வாழாத மானம் உடையார் ஒளி உலகு தொழுது ஏத்தும்=மானக் குறைவு வந்தால் உயிரை விட்டு விடுகிற மானம் உடையவர்களுடைய புகழை உலகம் தொழுது வணங்கும்.

பொ. ரை: மானக்கேடு உண்டானல் உயிரைத் துறந்து விடு கிற மானிகளுடைய பெருமையை உலகம் வாழ்த்தி வணங் கும்.

வி - ம்: இளி — மானக்கேடு. ஒளி — புகழ். ஏத்தும் — வணங்கும். மானக்கேடு வந்தபோது உயிரைத் துறந்து விடுகிற மானி களுடைய கதையைப் பாராட்டி அவர்களே வணங்குவது உலக வழக்கு — என்பது கருத்து.

அதி. 98—பெருமை

['பெருமை' என்பது ஒருவன் தன்னுடைய காரியத் திறமையில் தனக்குள்ள தன்னம்பிக்கையினல் தன்னைச் சிறப்புள்ளவனுக எண்ணும் உணர்ச்சி. அதாவது அரிய காரி யங்களையும் செய்து முடிக்கத் தனக்கு வல்லமை உண்டு என்று உரிமையோடு பெருமை கொள்ளும் உணர்ச்சி.]

971. ஒளியொருவற் குள்ள வெறுக்கை யிளியொருவற்
க.:திறந்து வாழ்து மெனல்.

ப. ரை: உள்ள வெறுக்கை ஒருவற்கு ஒளி: அ.:து இறந்து வாழ்தும் எனல் இளி = தன்னம்பிக்கை ஒருவனுக்குப் புகழ் தரக்கூடியது; (ஆனல்) அதை அளவு கடந்து மேற்கொண்டு வாழலாம் என்பது குற்றம்.

பொ. ரை: ஒருவன் தன்னுடைய திறமையில் தன்னம்பிக்கை உள்ளவனுக இருப்பது புகழத்தக்கதுதான்; ஆனல் அதை அளவுக்கு மீறி மேற்கொண்டு வாழ நினைப்பது குற்றம்.

வி - ம்: 'உள்ள வெறுக்கை' என்பது அரிய காரியங்களைச் செய்ய முடியும் என்ற 'உள்ளத்திலுள்ள தன்னம்பிக்கை'. 'அ.:திறந்து வாழ்தும் எனல்' என்பதற்கு 'அச்செயலை ஒழித்து உயிர் வாழக் கடவேம் என்று கருதுதல்' என்று பொருள் கொள்ளக் கூடாது. பின் 'அதை அளவு கடந்து வாழ்க்கையில் கொண்டு செலுத்தலாம் என்று கருதுதல்' என்பது பொருள். இளி — குற்றம் — ஒருவனுக்கு அரிய பெரிய காரியங்களையும் செய்து விடலாம் என்ற தன்னம்பிக்கை இருப்பது மெச்சத் தகுந்ததுதான். ஆனல் அதை அளவு

கடந்து கொண்டு செலுத்தி வாழ்க்கை நடத்த முயல்வது குற்றம் – என்பது கருத்து.

இந்த உள்ள வெறுக்கை என்ற பெருமை உடையவர்கள் தாம் அரிய காரியங்களைச் செய்து சிறப்படைகிறார்கள். ஆதலால் :

972. பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

ப. ரை : எல்லா உயிர்க்கும் பிறப்பு ஒக்கும்; தொழில் செய் வேற்றுமையால் சிறப்பு ஒவ்வா = எல்லா மனிதர்களுக்கும் பிறப்பு ஒரே இயல்புடையது; (ஆனால்) காரியம் செய்கின்ற வேற்றுமையால் சிறப்புகள் (எல்லாருக்கும்) ஒரே மாதிரி இருக்கமாட்டா.

பொ. ரை: எல்லா மனிதர்களுக்கும் பிறப்பு ஒரே மாதிரிதான். ஆனால் அவரவர்கள் காரியம் செய்யும் திறமை வேறுபடுவதினால் சிறப்புகள் ஒரே மாதிரியாக இருக்கமாட்டா.

வி-ம் : உயிர் – மனிதர். 'செய்தொழில் வேற்றுமையால்' என்பது 'தொழில் செய் வேற்றுமையால்' என்பதாம். ஒரு தொழிலை அவரவர்கள் உள்ள வெறுக்கை என்னும் பெருமைக்குத் தக்கபடி வெவ்வேறு திறமையுடன் செய்வார்கள். அந்தத் திறமைக்குத் தக்கபடிதான் வெற்றி கிடைக்கும். அந்த வெற்றிக்குத் தக்கபடிதான் சிறப்பும் கிடைக்கும். ஆதலால் – பிறப்பினால் எல்லா மனிதர்களும் ஒத்தவர்களேயானாலும் அவரவர்கள் மனப் பெருமையினால் செய்து முடிக்கிற காரியத் திறமைக்குத் தக்கபடிதான் சிறப்புகள் கிடைக்கும் – என்பது கருத்து.

இந்த மனப் பெருமை என்பது சாதி, குலம், குடிப்பிறப்பு, செல்வம், கல்வி, முதலியவற்றைப் பற்றியது அல்ல :

973. மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்.

ப. ரை : மேல் அல்லார் மேல் இருந்தும் மேல் அல்லர்; கீழ் அல்லவர் கீழ் இருந்தும் கீழ் அல்லார் = மேலான தன்மையர் அல்லாதவர்கள் மேலான இடத்தில் இருந்தாலும் மேலானவர்கள் அல்ல; கீழான தன்மையர் அல்லாதவர்கள் கீழான இடத்தில் இருந்தாலும் கீழானவர்கள் அல்ல.

பொ. ரை : மேலான மனம் இல்லாதவர்கள் மேலான இடத்திலிருந்தாலும் மேலானவர்கள் ஆகிவிடமாட்டார்கள்; கீழான

மனம் இல்லாதவர்கள் கீழான இடத்தில் இருந்தாலும் கீழானவர்கள் ஆகிவிடமாட்டார்கள்.

வி-ம்: 'மேலிருந்தும்' என்பது உயர்ந்த குலம், உயர்ந்த குடிப்பிறப்பு, உயர்ந்த பதவி முதலிய எல்லாவித உயர்வுகளுக்கும் பொருந்தும். அதைப் போலவே 'கீழிருந்தும்' என்பதும், மனப் பெருமை இல்லாதவர்கள் எவ்வளவு உயர்ந்த இனத்தோடு சேர்ந்து இருந்தாலும் அவர்கள் சிறப்பற்றவர்களே; மனப்பெருமை உள்ளவர்கள் எவ்வளவு தாழ்ந்த இனத்தைச் சேர்ந்தவர்களானாலும் அவர்கள் சிறப்படைவார்கள் – என்பது கருத்து.

'பெருமை' என்ற தன்னம்பிக்கை சாதி, குலம், முதலிய சூழ்நிலைகளைப் பற்றியது அல்லவென்பது மட்டுமன்றி, பிற மனிதர்களுடைய உதவியால் அடையக் கூடியதும் அல்ல; பின் எப்படி என்றால் :

974. ஒருமை மகளிரே போலப் பெருமையுந்
தன்னைத்தான் கொண்டொழுகி னுண்டு.

ப. ரை : மகளிர் ஒருமையே போல பெருமையும் தன்னை தான் கொண்டு ஒழுகின் உண்டு = பெண்களுடைய கற்பைப் போலவே பெருமையும் தன்னைத்தான் காத்துக் கொள்வதனால் உண்டாவது.

பொ. ரை : பெண்களுடைய கற்பைப் போலவே பெருமை என்பதும் ஒருவன் தன்னைத் தானே காத்துக் கொள்வதனால் உண்டாவது.

வி-ம் : ஒருமை – ஒரே இடத்தில் மனம் செலுத்தல். 'மகளிர்' என்ற சொல்லோடு சேர்ந்ததனால் இங்கே 'கற்பு' என்ற பொருள் தருவது. கொண்டொழுகல் – பாதுகாத்துக் கொண்டு நடந்து கொள்ளல். பெண்களின் கற்பு, பிறர் சொல்லி உண்டாவதுமல்ல, பிறரால் பாதுகாக்கப்படுவதுமல்ல. அதைப் போலவே பெருமை மனப்பான்மையும் பிறர் சொல்லி வருவதுமல்ல, பிறரால் காக்கப்படுவதுமல்ல. அதனால் பெண்களுடைய கற்புணர்ச்சியைப் போலவே பெருமை உணர்ச்சியும் தானே எண்ணி தானே காத்துக் கொள்ள வேண்டியது – என்பது கருத்து.

அப்படிப்பட்ட பெருமை உணர்ச்சியாகிய தற்காத்த தன்னம்பிக்கை உடையவர்கள் :

975. பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி
னருமை யுடைய செயல்.

ப. ரை: பெருமை உடையவர் ஆற்றின் அருமை உடைய செயல் ஆற்றுவார் = (மனப்) பெருமை உடையவர்கள் செய்வதற்கு அருமையான செயல்களையும் செய்து முடிப்பார்கள்.

பொ. ரை: தன்னம்பிக்கை என்ற மனப் பெருமை உடையவர்கள் மற்றவர்கள் செய்ய முடியாத காரியங்களையும் செய்து முடிப்பார்கள்.

வி - ம்: ஆற்றின் – செய்வதில். ஆற்றின் அருமையுடைய – செய்வதில் கடினமுடைய. தன்னம்பிக்கை என்ற மனப் பெருமை உடையவர்கள் அசாதாரணமான காரியங்களையும் செய்து முடிப்பார்கள் – என்பது கருத்து.

பெருமை மனப்பான்மை உடையவர்கள் தமக்குத் தெரியாத ஒன்றைத் தம்மினும் தெரிந்தவர்களைக் கேட்டும் காரியத்தைச் செய்துவிடுவார்கள். உண்மையான பெரியமனம் இல்லாமல், இருப்பதாக நினைத்துக்கொள்ளும் சிறிய மனமுடையவர்கள்:

976. சிறியா ருணர்ச்சியு ளில்லை பெரியாரைப்
பேணிக்கொள் வேமென்னு நோக்கு.

ப. ரை: பெரியாரை பேணிக் கொள்வேம் என்னும் நோக்கு சிறியார் உணர்ச்சியுள் இல்லை = (தம்மினும்) பெரியவர்களை அணுகி அறிந்து கொள்வோம் என்ற எண்ணம் (மனப் பெருமை இல்லாத) சிறு மனமுடையவர்களிடத்தில் இருக்காது.

பொ. ரை: தம்மினும் பெரியவர்களை நத்தி, (தமக்குத் தெரியாதவற்றைத் தெரிந்து) கொள்ளலாம் என்ற எண்ணம் சிறு மனமுடையவர்களிடத்தில் இருப்பதில்லை; (அது உண்மையாகவே பெருமை மனம் உடையவர்களிடத்தில் தான் உண்டு.)

வி – ம்: இந்தக் குறள் எதிர்மறையாக உண்மையான பெருமை மனம் உள்ளவர்களைப் பற்றிச் சொல்லுவது. ஆதலால் இதற்கு 'அப்பெற்றியராய பெரியாரை வழிபட்டு அவரியல்பினை யாம் கோடும் என்னும் கருத்து மற்றைச் சிறியாராயினார் மனத்தின் கண் உளதாகாது' என்று, பெருமையுடையவர்களை மற்றவர்கள் வழிபட வேண்டும் என்ற பொருள் கொள்வது போதாது. தம்மினும் அறிவிலும் ஆற்றலிலும் பெரியவர்களை அடைந்து அறிய வேண்டியவற்றை அறிந்து கொள்வோம் என்ற எண்ணம் உண்மையான

பெருமை மனம் இல்லாத சிறியாரிடம் இருக்காது. அ எண்ணம் உண்மையாகவே பெருமை மனம் உள்ளவர் டம் உண்டு—என்பது கருத்து.

உண்மையான பெருமை மனம் இல்லாதவர்களும் உடை வர்கள் போலச் சிறப்படைந்து விடுவதுண்டு. அவர்களுக் பெரியோரைப் பேணும் எண்ணம் இருக்காது என்பது ம மல்ல. தம்மைப் பிறர் சிறப்பிப்பதில் அவர்கள் மிகைப பெருமிதம் கொண்டு :

977. இறப்பே புரிந்த தொழிற்றுஞ் சிறப்புந்தான்
சீரல் லவர்கட் படின்.

ப. ரை : சிறப்பும்தான் சீர் அல்லவர் கண் படின் இறப் புரிந்த தொழிற்று ஆம்=சிறப்பும் கூட தகுதி அல்லாத களிடத்தில் சேர்ந்து விட்டால் (அது) அளவுக்கு மீறிய கா யங்களைச் செய்வதே தொழிலாகிவிடும்.

பொ. ரை : சிறப்பும் கூட, தகுதியற்றவர்களுக்கு வந்து வி டால் அது அதிக்கிரமங்களைச் செய்வதே வேலையாக இரு கும்.

வி - ம் : இறப்பு—அளவுக்கு மீறிய காரியம் — அதிக்கிரம படின் — உண்டானல். தகுதியற்றவர்களைப் பெருமையுடை வர்களாகக் கருதிப் பிறர் அவர்களுக்குச் சிறப்புச் செய் விட்டால் அதனுல் அவர்கள் அகங்கரித்து அதிக்கிரமமா காரியங்களையே செய்வார்கள் — என்பது கருத்து.

உண்மையாகவே பெருமை மனப்பான்மை உள்ளவர்களு கும் போலியாகப் (பெருமையுள்ளவர்கள் போல) சிறப் படைந்து விடுகிறவர்களுக்கும் உள்ள வேற்றுமை என்ன வென்றுல் ;

978. பணியுமா மென்றும் பெருமை சிறுமை
யணியுமாந் தன்னை வியந்து.

ப. ரை : பெருமை என்றும் பணியும்; சிறுமை தன்னை வியந்து அணியும்=பெருமை மனப்பான்மை எப்போதும் பணிவாக நடந்து கொள்ளும்; சிறுமை மனப்பான்மை எப்போதும் தன்னைத்தானே புகழ்ந்து மாலை சூட்டிக் கொள்ளும்.

பொ. ரை : உண்மையாகவே பெருமை மனமுள்ளவர்கள் எப் போதும் பிறருக்கு வணங்கிப் பணிவாக நடந்து கொள்வார் கள்; (போலிச் சிறப்புடைய) சிறுமை மனமுள்ளவர்கள் எப்

போதும் தம்மைத் தாங்களே மெச்சிப் புகழ் சூட்டிக் கொள் வார்கள்.

வி-ம் : உண்மையாகவே பெருமை உடையவர்கள் எப்போதும் பணிவாக நடந்து கொள்வார்கள்; போலிப் பெருமையுள்ள வர்கள் யாருக்கும் வணங்காமல் தங்களைத் தாங்களே மெச் சிக் கொள்வார்கள் – என்பது கருத்து.

மேலும் :

979. பெருமை பெருமித மின்மை சிறுமை
பெருமித மூர்ந்து விடல்.

ப. ரை : பெருமை பெருமிதம் இன்மை; சிறுமை பெருமிதம் ஊர்ந்து விடல்=பெருமைக் குணம் என்பது செருக்கு இல்லா திருப்பது; சிறுமைக் குணம் என்பது செருக்கையே நடத்தி விடுவது.

பொ. ரை : பெருமைக் குணம் என்பது அகங்காரமே இல்லா திருப்பது; சிறுமைக் குணம் என்பது அகங்காரமே நடத்தித் தீர்ப்பது.

வி-ம் : பெருமையுள்ளவர்கள் கர்வம் கொள்ளாமல் இருப் பார்கள்; சிறுமையுள்ளவர்கள் எந்தக் காரியத்திலும் கர் வமே செலுத்துவார்கள் – என்பது கருத்து.

அத்துடன் :

980. அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்.

ப. ரை : பெருமை அற்றம் மறைக்கும்; சிறுமைதான் குற்றமே கூறிவிடும்=பெருமைக் குணம் பிறருடைய குற்றங்களை வெளிப்படுத்தாது (குணங்களையே பாராட்டும்); சிறுமைக் குணம் (பிறருடைய குணங்களை விட்டு விட்டு) குற்றங் களையே முற்றிலும் கூறும்.

பொ. ரை : பெருமைக் குணமுடையவர்கள் பிறருடைய குற் றங்களை வெளிப்படுத்தாமல் (குணங்களையே பாராட்டிப் பேசுவார்கள்). சிறுமைக் குணமுடையவர்கள் பிறருடைய (குணங்களை விட்டு விட்டு) குற்றங்களை மட்டும் பேசித் தீர்த்துவிடுவார்கள்.

வி-ம் : அற்றம் – குற்றம். கூறிவிடும் – சொல்லித் தீர்க்கும் அதாவது ஒன்று விடாமல் எல்லாக் குற்றங்களையும் தூற்றிப்

பேசும். பெருமை மனமுள்ளவர்கள் பிறருடைய குற்றங்களை வெளிப்படுத்தி அவமதிக்க மாட்டார்கள். சிறுமை மனமுள்ளவர்கள் தாம் பிறருடைய குற்றங்களை மட்டும் சொல்லி அவமதிப்பார்கள் — என்பது கருத்து.

அதி. 99—சான்றாண்மை

[‘சான்றாண்மை’ என்பது ‘சால்பு உடைமை’. ‘சால்பு’ என்றால் நிறைவு. அதிலிருந்து ‘சான்றாண்மை’ என்பதற்கு ‘நிறைந்த குணம் உடைமை’ என்பது பொருள். எல்லா நற்குணங்களும் சேர்ந்த நிறைகுணமாகிய நிலைமையை மேற்கொண்டு ஆளும் தன்மையே ‘சான்றாண்மை’.]

981. கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு

ப. ரை : சான்றாண்மை மேற்கொள்பவர்க்கு கடன் அறிந்து நல்லவை எல்லாம் கடன் என்ப=சான்றாண்மை (என்னும் மிகப் பெரும்) குணத்தை மேற்கொண்டு நடப்பவர்களுக்கு இயல்பறிந்து நல்ல காரியங்கள் என்பன எல்லாம் கடமைகளே எனப்படும்.

பொ. ரை : சான்றாண்மை என்னும் மிகப் பெருங் குணத்தை மேற்கொண்டு நடப்பவர்களுக்கு (ஒரு காரியம் நல்லதா கெட்டதா என்ற) இயல்பை அறிந்து, (நல்ல காரியம் எனத் தெரிகிற) நல்ல காரியங்கள் எல்லாம் (கட்டாயமாகச் செய்ய வேண்டிய) கடமைகளாகும் என்று சொல்லப்படும்.

வி-ம் : கடனறிந்து — இயல்பறிந்து. ‘கடன்’ என்பதற்கு இங்கே ‘இயல்பு’ என்பது பொருள். ‘நல்லவை எல்லாம் கடன் என்ப’ என்பதற்கு ‘நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாயிருக்குமென்று சொல்லுவர் நூலோர்’ என்று பொருள் கொள்வது சரியல்ல. ‘நல்லவை என்று தமக்குத் தெரிகின்ற எல்லா நல்ல காரியங்களையும், செய்தே தீரவேண்டிய கடமைகளாகக் கருதுவார்கள் எனப்படும்’ என்பது பொருள். என்னவெனில்; சாதாரணமாக ஒரு நல்ல காரியத்தைச் செய்கிறவர்கள் வெறும் நல்ல காரியமாக மட்டும் நினைத்துச் செய்வார்கள். அல்லது சில பேருக்குத் தாம் செய்யக் கடமைப்பட்டிருந்தால் கடமையாகச் செய்வார்கள். எப்போதும் யாருக்கும் நல்லதே செய்ய வேண்டுமென்பதைக் கட்டாயக் கடமையாகக் கொள்ள மாட்டார்கள். ஆனால் சான்றாண்மை என்னும் பெருங்குணமுடையவர்கள் நல்லகாரியம் என்று தமக்குத் தெரிகிற எல்லாவற்றையும் எப்போதும் யாருக்கும் கடமையாகக் கருதியே செய்வார்

கள். ஆதலால் நல்லது என்று தெரிந்த எல்லாக் காரியங்களையும் கட்டாயமாகச் செய்ய வேண்டிய கடமைகளாகக் கருதுகின்ற பெருங் குணம் தான் 'சான்ருண்மை' எனப் படுவது—என்பது கருத்து.

சான்ருண்மை என்பது எப்போதும் எல்லா நல்ல காரியங்களையும் கடமையாகச் செய்வது என்ருல், அந்தச் சான்ருண்மையை மேற்கொள்கிறவர்களுக்குப் பிறருக்கு நல்லன செய்ய, நிரம்பச் செல்வம் வேண்டுமே எனில், சான்ருண்மைக்கு வேண்டியது செல்வச் சிறப்பல்ல. பின் என்னவெனில் :

982. குணநலஞ் சான்ருேர் நலனே பிறநல
மெந்நலத் துள்ளதூஉ மன்று.

ப. ரை : சான்ருேர் நலனே குணநலம்; பிறநலம் எந்நலத்து உள்ளதூஉம் அன்று = சான்ருேர்களுடைய செல்வமே குணச் சிறப்புதான், (அது இல்லாத) மற்றச் சிறப்புகள் எந்த நல்லதிலும் சேர்ந்தவையல்ல (என்பது சான்ருேர் கொள்கை.)

பொ. ரை : சான்ருேர்கள் விரும்பும் செல்வமே குணச் சிறப்பு தான்; அது இல்லாத மற்றெந்தச் சிறப்பும் எந்த நன்மையிலும் சேர்ந்ததாக அவர்கள் கருத மாட்டார்கள்.

வி - ம் : குணச் சிறப்பே சான்ருேர் விரும்பும் செல்வம்; அது இல்லாத மற்றச் சிறப்புகளை அவர்கள் பொருட்படுத்த மாட்டார்கள் — என்பது கருத்து.

சான்ருேருடைய குணச்சிறப்பிற்கு ஆதாரமான அறங்கள் ஐந்து. அவையாவன :

983. அன்புநா ணொப்புரவு கண்ணேட்டம் வாய்மையொ
டைந்துசால் பூன்றிய தூண்.

ப. ரை : அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணேட்டம், வாய்மையோடு ஐந்து சால்பு ஊன்றிய தூண் = அன்புடமை, பழிபாவங்களுக்கு அஞ்சுதல், உபகாரம், தாட்சணியம், உண்மையே பேசுதல் ஆகிய ஐந்தும் சான்ருண்மையைத் தாங்கி நிற்கும் தூண்கள்.

பொ. ரை : யாரிடத்தும் அன்புடமை, பழிபாவங்களைச் செய்யாமை, எல்லாருக்கும் உபகாரியாக இருத்தல், தாட்சணியம் காட்டுதல், சத்தியம் தவருமை ஆகிய ஐந்து கொள்கைகளும் சேர்ந்து, தாங்கி நிற்கிற பெரும் பொறுப்புதான் 'சான்ருண்மை' என்னும் பெருங்குணம்.

வி-ம்: அன்புடைமை, பழிபாவத்துக்கு அஞ்சுதல், பரோபகாரம், தாட்சணியம், சத்திய விரதம் ஆகிய ஐந்தும் சேர்ந்த பெருங்குணமே சான்ருண்மை — என்பது கருத்து.

சான்ருண்மை உடையவர்களாக வாழ்வது தவம் செய்வதைவிடச் சிறப்புடையது. எப்படியெனில்:

984. கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு.

ப. ரை: நோன்மை கொல்லா நலத்தது; சால்பு பிறர் தீமை சொல்லா நலத்தது = தவம் கொல்லா விரதம் என்ற சிறப்புடையது; சான்ருண்மை பிறருக்கு தீமை பயக்கக் கூடிய எதையும் வாயாலும் சொல்லாத விரதம் என்னும் சிறப்புடையது.

பொ. ரை: தவம் செய்வது, பிற உயிரைக் கொல்லாமை என்ற கொள்கையைச் சிறப்பாகக் கொண்டது; சான்ருண்மையோ பிறருக்குத் தீமை உண்டாகக் கூடிய எதையும் வாயாலும் சொல்லாமை என்ற கொள்கையைச் சிறப்பாகக் கொண்டது.

வி-ம்: நோன்மை — தவம். நலம் — சிறப்பு. சால்பு — சான்ருண்மை. 'பிறர் தீமை' என்பதற்குப் 'பிறருடைய குற்றம்' என்பது பொருளல்ல; 'பிறருக்குத் தீங்கு தருவதை' என்பது பொருள். தவம் என்ற அதிகாரத்தில் தவம் புரிவோர்க்கு இன்றியமையாத ஒழுக்கமாக 'உற்ற நோய் நோன்றல் உயிர்க்குறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு' என்றபடி, பிற உயிருக்குத் தீங்கு செய்யாதிருப்பதே தவத்திற்கு முக்கியம். பிறஉயிருக்குத் தீங்கு செய்யாமலிருப்பதைவிட அதிக பத்தியமாகக் காக்க வேண்டிய காரியம் பிறருக்குத் தீங்கு வரக்கூடிய எதையும் வாயாலும் சொல்லிவிடாமல் இருப்பது. ஆதலால் தவம் புரிவதைக் காட்டிலும் சான்ருண்மை சிரம சாத்தியத்தால் சிறப்புடையது. எண்ணம், சொல், செயல், ஆகிய மூன்றும் தீமையற்றதாக இருக்க வேண்டும் என்பதுதான் மனிதருக்கு உயர்ந்த நோக்கம். கொலை செய்யாமலிருப்பதில் செயல் ஒன்று மட்டும்தான் குற்றமற்றதாக இருக்கிறது. பிறருக்குத் தீமையான எதையும் வாயாலும் சொல்லாதிருப்பதில் செயலும் சொல்லும் தூய்மையாக இருப்பதுடன், சொல்லுக்கு முன்ஞல் மனம் எண்ணியிருந்தாலும் சொல்லை அடக்கியதால் மனதையும் அடக்கின பெருமை சேருகின்றது. எனவே கொல்லாமையை விரதமாகக் கொண்ட தவத்தைவிட, பிறருக்குத் தீங்கு செய்யக்கூடிய எதையும் வாயாலும் சொல்லாமையை

விரதமாகக் கொள்ளும் சான்றாண்மை சிறப்புடையது — என்பது கருத்து.

சான்றோருக்கு, பிறருக்குத் தீமை சொல்ல வேண்டிய அவசியமே இருக்காது. ஏனெனில் அவர்களுக்குப் பகைவர்களே இருக்கமாட்டார்கள். அவர்களிடம் பகைமை பாராட்டக் கூடிய பிறர் இருந்தாலும் :

985. ஆற்றுவா ராற்றல் பணித லதுசான்றோர்
மாற்றாரை மாற்றும் படை.

ப. ரை : ஆற்றுவார் ஆற்றல் பணிதல் அது சான்றோர் மாற்றாரை மாற்றும் படை=(தம்மினும்) வல்லமை உள்ளவர்களுக்குடைய வல்லமைக்கு வணக்கம் செய்கின்ற அந்தக் குணம் சான்றோர்கள், பகைவர்களையும் (பகைமையற்றவர்களாக) மாற்றிவிடும் கருவி.

பொ. ரை : தம்மினும் மிகுந்த சிறப்புடையவர்களுக்குப் பணிந்து மரியாதை காட்டுகின்ற அந்தக் குணம் சான்றோர்கள் பகைவர்களையும் நண்பர்களாக மாற்றி விடுகிற உபாயம்.

வி - ம் : இந்தக் குறளுக்கு 'ஒரு கருமத்தைச் செய்து முடிப்பாரதாற்றலாவது அதற்குத் துணையாவாரைத் தாழ்ந்து கூட்டிக் கொள்ளுதல்; இனிச் சால்புடையார் தம் பகைவரைப் பகைமை யொழிக்கும் கருவியும் அது' என்று பொருள் கொள்வது முற்றிலும் தவறானது. ஏனெனில் இப்படிச் செய்வது அரசியல் தந்திரம் ஆகுமேயன்றி சான்றாண்மை ஆகாது. 'ஆற்றுவார் ஆற்றல் பணிதல்' என்பது படையெடுத்து யுத்தகளத்தில் போர் புரிய வரும் பகைவர்களைக் கருதிச் சொல்லப்பட்டதல்ல. அவர்களும் மாற்றாரே எனினும் இங்கே சொல்லப்படுவது கல்வியிலோ, சொல்வன்மையிலோ, காரியத்திறமையிலோ தம்முடன் மாறு கொண்டவர்களிடத்தில் தம்மினும் மிகுந்துள்ள சிறப்புகளை வணங்கி ஏற்றுக் கொள்ளும் பணிதலே முக்கியம். 'பணிதல்' என்பதற்கு இங்கே 'தாழ்ந்து போதல்' என்பது மட்டும் பொருளல்ல. சான்றோர்கள் தம்முடன் மாறுபட்டவர்களிடத்திலுள்ள சிறப்புகளுக்கு வணக்கம் செலுத்தி ஏற்றுக் கொள்வார்கள். அச்செயல் அம்மாறுபட்டவர்களையும் நண்பராக மாற்றிவிடும் — என்பது கருத்து.

சான்றாண்மையுள்ளவர்கள் தம்முடைய பகைவர்களுடைய ஆற்றலுக்கும் சிறப்பளித்துப் பகைவரையும் பகைமை இல்லாதவர்களாக மாற்றி விடுவார்கள் என்பது மட்டுமல்ல.

தாம் தோற்று விட்டதையும் ஒப்புக் கொள்வார்கள். அப்படித் தோல்வியை ஒப்புக் கொள்ளுவதிலும் :

986. சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி
துலையல்லார் கண்ணுங் கொளல்.

ப. ரை : சால்பிற்கு கட்டளை யாது எனின் தோல்வி துலை அல்லார் கண்ணும் கொளல் = சான்றாண்மை என்ற (பொன் போன்ற) குணத்தின் மாற்றறியும் கட்டளைக்கல் எது வென்றால், தாம் தோற்று விட்டதை (தமக்கு) ஒப்பல்லாத (தாழ்ந்த) வரிடத்திலும் ஏற்றுக் கொள்வது.

பொ. ரை : சான்றாண்மை என்ற பொன் போன்ற குணத்தின் மாற்றறியும் உரைகல் எதுவென்றால், தம் தோல்வியைத் தமக்குச் சமானமல்லாத தாழ்ந்தவரிடத்திலும் ஒப்புக் கொள்வது.

வி- ம் : துலை – சமானம். துலையல்லார் – சமானம் அல்லாதவர்கள் – அதாவது தாழ்ந்தவர்கள். குலம், குடிப்பிறப்பு, செல்வம் முதலியவற்றில் தாழ்ந்தவர்கள். சான்றாண்மை உள்ளவர்கள் என்பதை, தம்மினும் தாழ்ந்தவர்களிடத்தில் தோற்றுப் போனாலும் அதைப் பகிரங்கமாக ஏற்றுக் கொண்டு அந்தத் தாழ்ந்தவருக்கும் வணங்குகின்ற தன்மையினால் அறிந்து விடலாம் – என்பது கருத்து.

தம்மினும் தாழ்ந்தவரிடத்திலும் தோல்வியை ஏற்றுக் கொள்கிறவர்கள் சான்றாண்மை உள்ள பொன்னானவர்களே. அந்தப் பொன்னாகிய சான்றாண்மையில் உயர்ந்த மாற்றுடையவர்கள் என்பதை எப்படி அறியலாம் என்றால் :

987. இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு.

ப. ரை : இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் சால்பு என்ன பயத்தது = தமக்குத் தீமை செய்தவர்களுக்கும் நன்மையே செய்யாவிட்டால் சான்றாண்மை என்ன பயனுடையது ?

பொ. ரை : தமக்குத் துன்பம் செய்தவர்களுக்கும் இன்பமே செய்யாவிடின் சான்றாண்மை என்ற பெருங் குணத்தினால் என்ன பயன் ?

வி -ம் : தீமை செய்தவர்களுக்குத் திருப்பித் தீமை செய்யாமலிருப்பது மட்டும் போதாது. தீமை செய்தவர்களுக்கும்

திருப்பி நன்மையே செய்வதுதான் சான்ருண்மை. இல்லை யானுல் அது பயனற்ற போலிச் சான்ருண்மைதான் - என்பது கருத்து.

சான்ருண்மை தரித்திரத்துக்கும் தளர்ந்து விடாது :

988. இன்மை யொருவற் கிளிவன்று சால்பென்னுந்
திண்மையுண் டாகப் பெறின்.

ப. ரை: சால்பு என்னும் திண்மை உண்டாக பெறின் இன்மை ஒருவற்கு இளிவு அன்று = சான்ருண்மை என்னும் வல்லமை உண்டாகப் பெற்ருல் (செல்வம்) இல்லாமை ஒருவனுக்கு இழிவானதல்ல.

பொ. ரை: சான்ருண்மை என்னும் வலிமை உடையவனுகிய ஒருவனுக்கு தரித்திரம் இகழ்ச்சி தரக்கூடியதல்ல.

வி-ம்: இன்மை - ஏழ்மை. இளிவு - இகழ்ச்சிக்குரியது. ஒருவன் சான்ருண்மை என்ற பெருங் குணத்தில் வலிமையுடையவனுக மட்டும் இருந்தால் அவன் மிக்க ஏழையாக இருந்தாலும் அவனை உலகம் இகழ்ந்து விடாது - என்பது கருத்து.

எவ்வளவு தரித்திரம் ஏற்பட்டாலும் என்ன துன்பம் வந்தாலும் சான்ருண்மைமாருத உத்தமர்கள் உண்டு. அவர்கள் :

989. ஊழி பெயரினுந் தாம்பெயரார் சான்ருண்மைக்
காழி யெனப்படு வார்.

ப. ரை : சான்ருண்மைக்கு ஆழி எனப்படுவார் ஊழி பெயரினும் தாம் பெயரார் = சான்ருண்மை (என்ற பெருங் குணத்துக்குக்) கடல் (போன்றவர்கள்) என்னப்பட்டவர்கள் யுகப் புரட்சி உண்டாகி (உலகமெல்லாம்) நிலை பெயர்ந்தாலும் தாம் (சான்ருண்மையில்) நிலை பெயர மாட்டார்கள்.

பொ. ரை: சான்ருண்மை என்னும் பெருங்குணம் நிரம்பிய சமுத்திரம் போன்றவர்கள் என்னத்தகுந்த பெரியோர்கள், யுக முடிவு ஏற்பட்டு உலகங்களெல்லாம் நிலை கலங்கினுலும் தாம் தம்முடைய சான்ருண்மையில் நிலை கலங்க மாட்டார்கள்.

வி-ம்: ஊழிபெயர்தல் - யுகாந்த காலத்தில் உலகம், சூரியன், சந்திரன் முதலிய கோளங்கள் இடம் விட்டு இடம்

பெயர்வதாக சாத்திரங்களில் சொல்லப்படுகிற காலம். 'சான்ருண்மைக்கு ஆழி எனப்படுவார்' — சான்ருண்மை நிரம்பியவர்கள். சான்ருண்மைக் குணம் நிரம்பியவர்கள் தம்முடைய சூழ்நிலையில் என்ன மாறுதல்கள் ஏற்பட்டாலும் குணத்தில் மாறமாட்டார்கள் — என்பது கருத்து.

குறையாத சமுத்திரம் போல, சான்ருண்மைக் குணம் குறையாத பெரியோர்கள் இருப்பதனுல்தான் :

990. சான்றவர் சான்ருண்மை குன்றி னிருநிலந்தான்
தாங்காது மன்னே பொறை.

ப. ரை : சான்றவர் சான்ருண்மை குன்றின் இரு நிலம் தான் பொறை தாங்காது மன்னே = சான்ரோர்கள் சான்ருண்மை என்னும் பெருங்குணத்தில் குறைந்தால் பெரிய உலகம் தான் (சுமந்து கொண்டிருக்கிற) பாரத்தைத் தாங்காது போலும்.

பொ. ரை : சான்ரோர்கள் தம்முடைய சான்ருண்மைக் குணத்தில் குறைந்தால் இப்பெரிய பூமி, தான் சுமந்து கொண்டிருக்கிற (சான்றவர்களல்லாத மற்றவர்) பெரும் பாரத்தைத் தாங்காது போலத் தோன்றுகிறது.

வி-ம் : சான்ருண்மை நிரம்பி, அப்பெருங் குணத்தில் எப்போதும் குறையாமலிருக்கிற மகான்கள் சிலரேயாயினும் இருப்பதனுல்தான் இந்தப் பெரிய உலகம் மற்றுள்ள மக்களடங்கிய பெரும் பாரத்தைச் சுமந்து கொண்டிருக்க முடிகிறது போலும் — என்பது கருத்து.

அதி. 100—பண்புடைமை

['பண்புடைமை' என்பது பதமுடைமை, அல்லது மென்மையுடைமை. அதாவது யாரும் எந்த நேரத்திலும் வந்து, தம்முடைய குறைகளைச் சொல்லிக்கொள்ள இடம் கொடுத்து அவர்களுடைய கஷ்ட நிஷ்டூரங்களைப் பரிவுடன் கேட்டுக் கூடுமான பரிகாரம் தேட உதவிபுரியும் தன்மை.]

991. எண்பதத்தா லெய்த லெளிதென்ப யார்மாட்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

ப. ரை : யார் மாட்டும் பண்புடைமை என்னும் வழக்கு எண் பதத்தால் எய்தல் எளிது என்ப = யாரிடத்திலும் பண்புடையவர்களாக நடந்து கொள்ளும் வழக்கம் (எது வென்ருல்)

மென்மையான நெகிழும் குணம் இருப்பதால் (யாரும்) எளிதாக அணுகக் கூடியவராக இருப்பது – என்று சொல்லப் படும்.

பொ. ரை: யாரிடத்திலும் பண்புடையவராக நடந்து கொள்ளும் நல்ல குணம் எது வென்றால், மிருதுவான இரக்கமுள்ள குணத்தால் யாரும் சுலபமாகத் தம்மிடம் அணுகக் கூடியவராக இருப்பது என்று சொல்லப்படுவது.

வி-ம்: எண் – எளிய – இலேசான – கடினமல்லாத. பதம் – இரக்கமுள்ளதன்மை. எய்தல் – அருகே செல்லல். வழக்கு – வழக்கம். இரக்கமுள்ள தன்மை உடையவராக இருப்பதால் யாரும் எளிதில் நெருங்கித் தம் குறைகளைச் சொல்லிக் கொள்ளத் தக்கவராக இருப்பதுதான் 'பண்புடைமை' – என்பது கருத்து.

இந்தப் 'பண்புடைமை' என்ற குணம் தான்:

992. அன்புடைமை யான்ற குடிப்பிறத்த லிவ்விரண்டும்
பண்புடைமை யென்னும் வழக்கு.

ப. ரை: அன்புடைமை, ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும் பண்புடைமை என்னும் வழக்கு = அன்புடையவர்கள் என்பது, உயர்ந்த குடியிற் பிறந்தவர்கள் என்பது ஆகிய இந்த இரண்டும் பண்புடைமை என்னும் வழக்கத்தினால்.

பொ. ரை: ஒருவன் அன்புடையவன் என்று சொல்லப்படுவதும் நல்ல குடியிற் பிறந்தவன் என்று போற்றப்படுவதும் ஆகிய இந்த இரண்டும் அவனிடத்தில் பண்புடைமை என்ற ஒழுக்கம் இருப்பதனால் தான்.

வி-ம்: 'அன்புடைமையும் ஆன்ற குடிப்பிறத்தலும் என்ற இரண்டும் சேர்ந்து இருந்தால் தான் பண்புடைமை' என்று பொருள் செய்யக் கூடாது. 'பண்புடைமை' என்ற ஒழுக்கமுள்ளவனைத்தான் அன்புடையவன் என்றோ, நல்ல குடிப் பிறப்புடையவன் என்றோ கொள்ளலாம் – என்பது கருத்து.

'ஆன்ற குடிப்பிறத்தல் பண்புடைமை என்னும் வழக்கு' என்றதனால் நல்லகுடி என்பது அக்குடியின் முன்னோர்கள் 'பண்புடைமை' உள்ளவர்கள் என்பதனால்தான். அந்த நல்ல குடியிற் பிறந்தவர்களும் அப்படியே பண்புடையவர்களாக இருந்தால்தான் அம் மூதாதைகளை ஒத்தவர்கள் ஆவார்கள். 'பண்புடைமை'யில் ஒத்தவர்களாக இல்லாமல் வெறும்:

993. உறுப்பொத்தன் மக்களொப் பன்றால் வெறுத்தக்க
பண்பொத்த லொப்பதா மொப்பு.

ப. ரை : மக்கள் உறுப்பு ஒத்தல் ஒப்பு அன்று; ஒப்பதாம் ஒப்பு வெறுத்தக்க பண்பு ஒத்தல்=(நல்ல குடியிற் பிறந்த) மக்கள் (தம் முன்னோர்களின்) அங்க அடையாளங்களில் ஒத்திருப்பது (சரியான) ஒப்பல்ல; சரியான ஒப்பு (எதுவென்றால்) தம் முன்னோர்களுடைய செல்வம் போன்ற 'பண்புடைமை' யில் ஒத்திருப்பதேயாகும்.

பொ. ரை : நல்ல குடியிற் பிறந்த மக்கள் (அந்த நல்ல குடியிற் பிறந்தவர்கள் என்பதற்கு அடையாளம்) தம்முடைய தாய் தந்தையர் அல்லது முன்னோர்களுடைய உருவம், நிறம், அங்கங்கள் முதலியவற்றில் ஒத்திருப்பது சரியான ஒப்பல்ல. சரியான ஒப்பு எதுவென்றால் அம்முன்னோர்களிடம் நிறைந்திருந்த செல்வமாகிய 'பண்புடைமை' என்ற குணத்தில் ஒத்திருப்பதேயாகும்.

வி-ம் : உறுப்பு ஒத்தல் – அவயவ அடையாளங்களில் ஒத்திருப்பது. அதாவது நிறம், முகச்சாயல் முதலியவைகளில் ஒப்புடைமை. 'மக்கள்' என்பதற்கு 'மனிதர்கள்' என்பது இங்கே பொருளல்ல. 'அந்த குடும்பத்தின் சந்ததியானவர்கள்' என்பது பொருள். 'வெறுத்தக்க' என்பது 'வெறுக்கைதக்க' என்பதன் குறைவு. வெறுக்கை–செல்வம். ஒப்பதாம் ஒப்பு–ஒப்புக் கொள்ளத் தக்க ஒப்பு–அதாவது சரியான ஒப்பு. நற்குடியிற் பிறந்த மக்கள் தம்முடைய முன்னோர்களின் உடல் உறுப்புகளின் அடையாளங்களில் (குடும்ப உறுப்புகளாகிய இடம், பொருள், ஏவல்களிலும்) அவர்களைப் போன்றவர்களாக இருந்து விடுவது சரியான ஒப்பல்ல. அந்த நற்குடிப் பரம்பரையின் சொத்துக்குச் சமமான 'பண்புடைமை' என்ற குணத்தில் அவர்களை ஒத்திருப்பதுதான் சரியான ஒப்பு–என்பது கருத்து.

'பண்புடைமை' என்பது எந்த நேரத்திலும் வந்து, பிறர் தம்முடைய குறைகளைச் சொல்லிக் கொள்ள இடம் கொடுத்துப் பரிவோடு கேட்பது. அப்படிப் பிறருடைய குறைகளைக் கேட்டதோடு நின்று விடாமல் :

994. நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு.

ப. ரை : நயனொடு நன்றி புரிந்த பயன் உடையார் பண்பு உலகு பாராட்டும்=இரக்கத்தோடு நன்மையும் செய்த பயன் உள்ள

வர்களுடைய பண்புக் குணத்தை உலகம் (எப்போதும்) பாராட்டும்.

பொ. ரை: இரக்கம் காட்டுவதோடு நின்று விடாமல், நன்மையும் செய்கிற பயனுள்ளவர்களுடைய பண்புடைமை குணத்தை உலகத்தார் எப்போதும் கொண்டாடுவார்கள்.

வி - ம்: நயன் – இரக்கம். 'நயனொடு நன்றி புரிந்த' என்பதற்கு 'நயனொடு மட்டும் நின்று விடாமல் நன்மையும் செய்த' என்பது பொருள். பயனுடையார் – பயனளிக்கக் கூடியவர்கள். பிறருடைய குறைகளைப் பரிவோடு கேட்பது மட்டுமல்லாமல் அவர்களுக்குத் தம்மாலான உதவிகளையும் செய்து பயன்படக் கூடிய பண்புடைமை உலகம் பாராட்டத் தக்கது – என்பது கருத்து.

பண்புடையவர்கள் அப்படிப் பிறருக்கு உதவி செய்யும் போது அவ்வுதவி பெறுகின்றவர்களை ஏளனமாக நினைத்து விட மாட்டார்கள்; எப்படியெனில்:

995. நகையுள்ளு மின்னா திகழ்ச்சி பகையுள்ளும்
பண்புள பாடறிவார் மாட்டு.

ப. ரை: பாடு அறிவார் மாட்டு பகை உள்ளும் பண்பு உள; நகை உள்ளும் இகழ்ச்சி இன்னாது = (பிறருடைய) துன்பங்களை அறியக்கூடிய பண்புடையவர்களிடத்தில் பகைமை உள்ளவர்களுக்கும் காட்டுகின்ற பண்புக் குணங்கள் உண்டு; (அதனால் அவர்களுக்கு) விளையாட்டிலும் கூட (மற்றவர்களை) இகழ்வது துன்பமான காரியம்.

பொ. ரை: பிறருடைய துன்பங்களை அறியக்கூடிய பண்புடையார் பகைவர்களுக்கும் பண்புடையவர்களாகவே நடந்து கொள்வார்கள்; ஆகையினால் விளையாட்டாகக் கூட, பிறரை இகழ்வது அவர்களுக்குத் துன்பமான செயல்.

வி - ம்: பாடறிதல் – பிறருடைய துன்பங்களை அறிதல். பண்புடையவர்கள் பிறருடைய கஷ்ட நிஷ்டுரங்களை அறியக் கூடியவர்கள்; பகைவர்களிடத்திலும் பரிவுடன் நடந்து கொள்வார்கள். அதனால் அவர்கள் யாரையும் விளையாட்டாகக் கூட அவமதிக்கமாட்டார்கள் – என்பது கருத்து.

அப்படிப்பட்ட பண்புடைமை என்ற நற்குணமுள்ளவர்கள் இருப்பதனால்தான்:

996. பண்புடையார்ப் பட்டுண் டுலக மதுவின்றேல்
மண்புக்கு மாய்வது மன்.

ப. ரை: பண்புடையார்ப் பட்டு உலகம் உண்டு; இன்றேல் அது மண் புக்கு மாய்வது=பண்புடையவர்களைப் பொறுத்து உலக (நலம்) இருக்கிறது. இல்லையானல் அது மண்ணிற் புதைந்து மறைய வேண்டியதுதான்.

பொ. ரை: பண்புடைய மனிதர்களைப் பெற்றிருப்பதனுல்தான் உலகத்தில் நல் வாழ்வு நடைபெற்று வருகின்றது; இல்லாவிட்டால் அந்த நல் வாழ்வு எனப்படுவது மண்ணில் புதைந்து மறைந்து போவதாம்.

வி-ம்: 'பண்புடையார்ப் பட்டு' என்று 'ப'கரம் இரட்டித்திருப்பதால் 'பண்புடையாரைப் பட்டு' என்பது சொற்றொடர். 'பண்புடையாரைப் பொறுத்து' அதாவது 'பண்புடையாரை உடைத்தாயிருப்பதனுல்' என்பது பொருள். பட்டு—பொறுத்து, அல்லது அடைந்து. பண்புடையவர்கள் பலர் இருப்பதனுலேதான் உலக வாழ்க்கை இனிதே நடைபெற்று வருகிறது. இல்லாவிட்டால் உலகம் வெறும் மண் தான்—என்பது கருத்து.

பெரும்பாலும் மனிதர்களிடத்தில் ஓரளவேனும் பண்புடைமை இருந்துதான் வருகிறது. அதனுற்றுன் உலகியல் நடந்து வருகிறது. ஆனுல் பண்பே இல்லாதவர்களும் உண்டு. அவர்கள் மனிதர்களோடு சேர்க்கப்படக் கூடியவர்கள் அல்ல. மிருகங்களோடு கூட சேர்க்கப்படாது. ஏனெனில் மிருகங்களிலும் கூட ஒன்றுக்கொன்று பரிவு காட்டுவதுண்டு. பின் இவர்கள் எதனேடு ஒத்தவர்களென்றுல்:

997. அரம்போலுங் கூர்மைய ரேனு மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

ப. ரை: மக்கள் பண்பு இல்லாதவர் அரம் போலும் கூர்மையரேனும் மரம் போல்வர்=மனிதருக்குள் பண்புக் குணம் இல்லாதவர்கள் அரம் போன்ற (புத்தி) கூர்மை உள்ளவர்களாக இருந்தாலும் மரத்தை ஒத்தவர்களே.

பொ. ரை: மனிதராகப் பிறந்தவருள் பண்புக்குணமே இல்லாதவர்கள், அரத்தைப்போலக் கூரிய அறிவுடையவர்களாக இருந்தாலும், அவர்கள் (பிறர் துன்பங்களை) உணர (முடியாத) மரத்துக்கே சமானமாவார்கள்.

வி-ம்: அரம்—தான் தேயாமல் பிற பொருள்களைத் தேய்த்துவிடக்கூடிய கூரிய பற்களையுடைய எஃகு ஆயுதம். 'அரம் போலும் கூர்மையர்' என்பது அரத்தைப் போலத் தமக்கு ஒரு தீங்கின்றி, பிறரை வென்றுவிடக்கூடிய கூர்மையான அறிவுடையவர்கள்—என்பதாகும். 'மரம் போல்வர்' மரத்

தைப் போல் பிற உயிர்களின் துன்பங்களை உணராதவர்கள். உயிர்களுக்குள் ஓரறிவு, இரண்டறிவு, மூன்றறிவு, நான் கறிவு, ஐந்தறிவு, என ஐந்து புலன்களின் அளவுக்குத் தக்க படி உயிர்கள் வேறுபடுகின்றன. மரம் ஒரே அறிவுடையது. அது தன்னுடைய வளர்ச்சியையும் தளர்ச்சியையும் தவிர மற்ற எந்தப் பொருளைப்பற்றியும் உணரும்தன்மையுள்ள தல்ல. மனிதன் ஐம்புல உணர்ச்சிகளோடு பகுத்தறிவு என்ற ஆருவது உணர்ச்சியும் உள்ளவன். அதனால் அவன்தான் பிற உயிரின் துன்பங்களை அதிகமாக உணரும் தன்மையுள்ளவன். பண்புடைமை என்பது பிறருடைய துன்பங்களை உணர்ந்து உதவுதல். அதனாற்றான் அது மனிதப் பண்புகளில் சிறப்பா கக் கருதப்படுகிறது. உயிருள்ள சீவன்களில் மரம் ஒன்று தான் தன்னைத் தவிர பிற எதையும் உணரும் தன்மையில்லா தது. அப்படிப் பிறருடைய துன்பங்களை ஒரு சிறிதும் உண ராத மனிதர்கள், கூரிய அறிவுடையவர்களானாலும் பிற ருடைய துன்பங்களுக்கு இரக்கப்பட்டு உதவும் பண்புடைமை இல்லாதவர்கள். உயிரிருந்தும் உணரும்தன்மை இல்லாத மரத்துக்கே சமான மாவார்கள் – என்பது கருத்து.

இப்படி மரம் போன்றவர்கள் பண்புக் குணமே இல்லாதவர் கள். இவர்கள் கூரிய அறிவிருந்தும் பிறருடைய துன்பங்களை உணராமல் அவர்களை அரம் போல் மேலும் துன்புறுத்துவார் கள். ஆனால் பண்புக் குணம் உடையவர்களோ தமக்குத் துன் பம் செய்கிறவர்களுக்கும் இரங்குவார்கள் ;

998. நண்பாற்று ராகி நயமில செய்வார்க்கும்
பண்பாற்று ராதல் கடை.

ப. ரை : நண்பு ஆற்றாராகி நயம் இல செய்வார்க்கும் பண்பு ஆற்றார் ஆதல் கடை=நட்பு செய்யாதவர்களாக (தமக்கு) அன்பில்லாத செயல்களைச் செய்கிறவர்களுக்கும் கூட, பண்பு (உடையவர்கள்) இரங்காமல் இருப்பது மிகவும் குறைவு.

பொ. ரை : தம்முடன் நட்பு செய்யாதவர்களாகித் தமக்குத் துன்பம் செய்கிறவர்களுக்கும் கூட, பண்புடையவர்கள் இரக் கம் காட்டாமல் இருப்பதில்லை.

வி - ம் : நயம் – அன்பு. பண்பு ஆற்றாதல் – பண்புள்ள செய்கை இல்லாதவராதல். பண்புடையவர்கள் தமக்கு நண்ப ரல்லாதவர்க்கும் தமக்குத் துன்பம் செய்து விட்டவர்களுக் கும் கூட இரக்கமுள்ளவர்களாக நடந்து கொள்ளத் தவற மாட்டார்கள் – என்பது கருத்து.

பண்புக் குணம் இருப்பதுதான் வாழ்க்கையின் மகிழ்ச்சி. பண்பு இல்லாதவர்களுக்கு இன்பமோ மகிழ்ச்சியோ இருக்காது. அப்படிப்பட்டவர்களுக்கு :

999. நகல்வல்ல ரல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன் றிருள்.

ப. ரை : நகல் வல்லர் அல்லார்க்கு மாஇரு ஞாலம் பகலும் பால் பட்டன்று; இருள் = (பண்புடைமையால்) மகிழ்ச்சியடைய வல்லவர்கள் அல்லாதவர்களுக்கு மிகப் பெரிய இந்த உலகம் பகற்காலமும் பகலோடு சேர்ந்ததல்ல; (பகலும்) இருள்தான்.

பொ. ரை : (பண்பின்மையால்) மகிழ்ச்சியுடன் வாழ முடியாதவர்களுக்கு இந்த மிகப் பெரிய உலகம் பகலும் பகலோடு சேர்ந்ததாக இருக்காது. இருட்டாகத் தான் இருக்கும்.

வி - ம் : பண்புடைமை இல்லாதவர்கள் பிறரோடு அளவளாவி மகிழ்ச்சியடைய முடியாதவர்கள். அதனால் அவர்கள் 'நகல் வல்லரல்லர்'. உலகம் மிகப் பெரியதாக பலவித காட்சிகளுடையதாக இருந்தும் அவர்கள் மகிழ்ச்சியற்றவர்களே என்பதை சுட்டிக் காட்ட 'மா இரு ஞாலம்' எனப்பட்டது. 'பால்பட்டதன்று' — அந்தப் பகுதியைச் சேர்ந்ததன்று. பண்புக் குணம் இல்லாதவர்கள் எந்த நேரத்திலும் மகிழ்ச்சியற்ற இருண்ட மனமும் முகமும் உடையவர்களாகத்தான் இருப்பார்கள் — என்பது கருத்து:

அப்படிப்பட்டவர்கள் பெருஞ் செல்வ முடையவர்களாக இருக்கலாம். அந்த செல்வம் :

1000. பண்பிலான் பெற்ற பெருஞ்செல்வ நன்பால்
கலந்தீமை யாற்றிரிந் தற்று.

ப. ரை : பண்பு இலான் பெற்ற பெரும் செல்வம் நன்பால் கலம் தீமையால் திரிந்த அற்று = பண்புடைமை இல்லாதவன் அடைந்த பெரிய செல்வம், நல்லபால் (அதை வைத்திருந்த) பாண்டத்தின் குற்றத்தால் கெட்டுப் போவதை ஒக்கும்.

பொ. ரை : பண்புடைமை (என்ற அளவளாவி மகிழும்) குணம் இல்லாதவனிடத்திலுள்ள பெருஞ் செல்வம், நல்லபால் (அதை வார்த்து வைத்திருக்கும்) பாத்திரத்திலுள்ள அசுத்தத்தால் கெட்டுப் போவதைப் போல் (யாருக்கும் பயன் படாது).

வி-ம்: 'பண்பில்லாதவன் யாரோடும் சல்லாபித்து மகிழ்ந்து பிறருடைய துன்பங்களை உணர்ந்து உதவி செய்யக் கூடியவனல்ல. அவன் எப்போதும் இருண்ட முகத்தோடிருப்பதால் அவனிடம் தாமாகப் போவாரும் இல்லை. அதனால் பண்பில்லாதவனிடத்தில் எவ்வளவு பெருஞ் செல்வம் இருந்தாலும் அது மாசுள்ள பாண்டத்திலுள்ள நல்லபால் கெட்டுப்போய் பயனற்றதாகி விடுவதைப் போல் யாருக்கும் உதவாது — என்பது கருத்து.

அதி. 101—நன்றியில் செல்வம்

['நன்றியில் செல்வம்' என்பது 'உதவி இல்லாத செல்வம்'. பெரும் செல்வத்தைச் சேர்த்து வைத்துத் தாமும் அனுபவிக்காமல் பிறருக்கும் உதவாமல் இருக்கிற உலோப குணம் கூடாதென்பது.]

1001. வைத்தான்வாய் சான்ற பெரும்பொருள் அஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்.

ப. ரை: வாய் சான்ற பெரும் பொருள் வைத்தான் அஃது உண்ணான் செத்தான் செயக் கிடந்தது இல்=விடு நிறைந்த மிகப் பெரிய செல்வத்தை வைத்துக் கொண்டிருந்தான்; தானும் உண்ணாமல் செத்துப் போனான்; அவன் செய்தது ஒன்றுமில்லை.

பொ. ரை: மிகப் பெரிய செல்வம் உடையவனாக இருந்தும் (பிறருக்கும் கொடுக்காமல்) தானும் அனுபவிக்காமல் செத்துப் போகிறவன், உலகத்தில் செய்தது ஒன்றுமில்லை (எனப் படுவது தான் நன்றியில் செல்வம்).

வி-ம்: வாய் சான்ற — விடு நிரம்பிய. நிறைந்த செல்வமுடையவனாக இருந்தும் பிறருக்கும் உதவாமல் தானும் அதை அனுபவிக்காமல் செத்துப் போகிறவன் உலகத்துக்கு ஒரு பயனும் இல்லாதவன் என்பது கருத்து.

அப்படிப்பட்ட மனிதன் மிகவும் தாழ்ந்த பிறவி:

1002. பொருளானா மெல்லாமென் றீயா திவறு
மருளானா மாணாப் பிறப்பு.

ப. ரை: பொருளான் எல்லாம் ஆம் என்று ஈயாது இவறும் மருளான் மாணா பிறவி ஆம்=செல்வத்தினால் எல்லாம் ஆகி விடும் என்று (அதைக்) கொடுக்காமல் உலோபம் செய்கிற அறிவு மயங்கினவன் சிறப்பற்ற பிறவி ஆனவன்.

பொ. ரை : பணமிருந்தால் போதும் என்று அதை எதற்காக வும் யாரிடத்தும் கொடுக்காமல் இறுக்கி வைத்துக் கொண்டு உலோபம் செய்கின்ற புத்தி கெட்டவன் மனிதருக்குள் சிறப் பற்ற பிறவியானவன்.

வி - ம் : 'ஈயாது' என்பதற்கு 'பிறருக்கு தானம் செய்யா மல்' என்பது மட்டும் பொருளல்ல. தனக்காகவும் கூடத் தன் கையிலிருப்பதைப் பிறரிடம் கொடுக்க மனம் வராமல் - என்பது பொருள். மருளான் — மருளுடையவன். 'மருளா னும் மாணாப்பிறவி' என்பதற்கு 'மயக்கத்தாலே ஒருவனுக்கு நிறைதலில்லாத பேய்ப் பிறப்புண்டாம்' என்பது சரியல்ல. தன் கையிற் பணம் இருந்தால் போதும் அதுவே எல்லா இன்பமும் என்று எண்ணுகின்ற உலோபி மக்களுக்குள் இகழத்தக்க பிறவி — என்பது கருத்து.

அப்படிப்பட்டவர்கள் சிறப்பற்ற பிறவிகள் என்பது மட்டு மல்ல. அவர்கள் பிறப்பு பூமிக்குப் பாரம் :

1003. ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்
தோற்ற நிலக்குப் பொறை.

ப. ரை : ஈட்டம் இவறிஇசை வேண்டா ஆடவர் தோற்றம் நிலக்கு பொறை = (பணத்தை) சேர்த்து வைப்பதில் பேராசை கொண்டு (செலவு செய்து) புகழை அடைய விரும் பாத மனிதர்கள் பிறப்பது பூமிக்கு பாரம்.

பொ. ரை : பணத்தைச் சேர்த்து வைப்பதில் மிகுந்த ஆசை கொண்டு, அதைச் செலவு செய்து புகழைத் தேடிக் கொள் ளாத மனிதர்கள் பிறப்பது வெறும் பூமி பாரம்தான்.

வி - ம் : ஈட்டம் — குவியல். இங்கே பணக் குவியல். இவறுதல் — மிகுந்த ஆசை கொள்ளுதல். இசை வேண்டா — புகழை அடைய ஆசை கொள்ளாத. புகழை அடைய வேண்டுமானால் பிறருக் குக் கொடுத்து, தான தர்மங்களைச் செய்ய வேண்டும். 'ஆட வர்' என்பது இங்கே பொதுப்பாலாக 'மனிதர்கள்' என்ற பொருள் தருவது. தோற்றம் — தோன்றுதல். செல்வத்தைச் சேர்ப்பதில் மட்டும் ஆசை கொண்டு, அந்த செல்வத்தினால் அடையக்கூடிய புகழைத் தேடும் ஆசையில்லாதவர்கள் பிறப்பது பூமிக்கு பாரமே யன்றி வேறில்லை — என்பது கருத்து.

மனித வாழ்க்கையின் பயன்கள் புகழும் புண்ணியமும். புண்ணியத்தை நம்பாவிட்டாலும் புகழையாவது தேடவேண் டும் இல்லாவிட்டால் :

**1004. எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா
னச்சப் படாஅ தவன்.**

ப. ரை: ஒருவரால் நச்சப்படாஅதவன் எச்சம் என்று என் எண்ணும் கொல்லோ = (கொடைக்குணம் இல்லாததால்) ஒருவராலும் விரும்பப் படாதவன் (தன் வாழ்க்கையின்) மிச்சம் என்று என்னத்தை எண்ணுவானோ (தெரியவில்லை).

பொ. ரை: (யாருக்கும் எதையும் கொடுத்ததில்லை என்பதால்) ஒருவராலும் விரும்பப்படாத (புகழற்ற) உலோபி தனக்குப் பின்னால் தன்னுடைய மிச்சமாக எதை எண்ணுவானோ தெரியவில்லை.

வி-ம்: நச்சப்படுதல் — விரும்பப்படுதல். எச்சம் — மிச்சம். ஒருவராலும் விரும்பப்படாதவனாகிய உலோபி, தான் இறந்த பின் தன்னைப்பற்றி உலகம் என்ன சொல்லும் என்பதை நினைப்பதில்லையே! — என்பது கருத்து.

செலவு செய்யாமல் சேர்த்து வைப்பதையே நோக்கமாக உள்ள உலோபி பிறருக்கு மட்டுமா? தனக்கும் பயனற்றவன்:

**1005. கொடுப்பதூஉந் துய்ப்பதூஉ மில்லார்க் கடுக்கிய
கோடியுண் டாயினு மில்.**

ப. ரை: கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய கோடி உண்டாயினும் இல் = பிறருக்குக் கொடுப்பதும் தாம் அனுபவிப்பதும் இல்லாதவர்களுக்கு அடுக்கடுக்காகப் பல கோடி செல்வம் இருந்தாலும் (ஒரு பயனும்) இல்லை.

பொ. ரை: பிறருக்குக் கொடுப்பதோ தாம் அனுபவிப்பதோ இரண்டுமில்லாதவர்கள், கோடி கோடியாக செல்வத்தைச் சேர்த்து வைத்தாலும் அவர்களுக்கு அதனால் ஒரு பயனுமில்லை.

வி-ம்: பிறருக்காகவோ தமக்காகவோ செலவே செய்ய மனம் வராமல் பணத்தைச் சேர்த்து வைப்பதில் மட்டும் ஆசையுள்ளவர்களுக்கு எத்தனை கோடி சேர்ந்தாலும் அதனால் அவர்களுக்கு ஒரு பயனுமில்லை — என்பது கருத்து.

அப்படிச் சேர்த்து வைப்பவனுக்கு அதனால், ஒரு பயனும் இல்லையென்பது மட்டுமல்ல, அப்படிப்பட்ட செல்வம் அவனுக்கும் மற்றவர்களுக்கும் வெறும் வேதனைதான் உண்டாக்கும்:

1006. ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றக்கார்க்கொன்
றீத லியல்பிலா தான்.

ப. ரை: தான் துவ்வான் தக்கார்க்கு ஒன்று ஈதல் இயல்பு இலாதான் பெரும் செல்வம் ஏதம் = தானும் அனுபவிக்காமல் தகுதியுடையவர்களுக்கும் ஒன்று தரக்கூடிய தன்மை இல்லாதவனுடைய பெரும் செல்வம் துன்பமே (தரும்).

பொ. ரை: தானும் அனுபவிக்காமல் தகுதியுடைய பிறருக்கும் எதையும் கொடுத்துவிட மனமில்லாமல் சேர்த்து வைக்கிறவனுடைய பெருஞ்செல்வம் வெறும் துன்பம்தான் உண்டாக்கும்.

வி - ம்: ஏதம் – துன்பம். சேர்த்து வைக்க, படும்துன்பமும், கள்ளர்களோ கொள்ளைக்காரர்களோ புகுந்து விடாமல் காக்கின்ற துன்பமும், அந்த நன்றியில்லாத பெருஞ்செல்வத்தைப் பற்றிப் பிறர் தன்னை இகழ்ந்து பேசுவதனாலுண்டாகும் துன்பமும். ஆதலால் தானும் அனுபவிக்காமல் ஏழைகளுக்கும் ஒரு சிறிதும் கொடுக்காமல் சேர்த்து வைக்கப்படும் பெருஞ்செல்வம் வெறும் துன்பத்துக்கே ஏதுவாகும் – என்பது கருத்து.

தானும் அனுபவிக்காமல் ஏழைகளுக்கும் கொடுக்காதவனுடைய செல்வம் அவனுக்கே துன்பமானது. சில பணக்காரர்கள் தாம் மட்டும் அனுபவித்து ஏழைகளுக்கு ஒரு சிறிதும் கொடுக்க மாட்டார்கள். அவர்கள் 'தாம் துய்த்து, தக்கார்க்கொன்று ஈதல் இயல்பிலாதார்' அப்படிப்பட்டவர்களுடைய செல்வமும் 'நன்றியில் செல்வமே'. அது எப்படிப் போல என்றால்:

1007. அற்றார்க்கொன் றாற்றாதான் செல்வ மிகநலம்
பெற்றா டமியண்மூத் தற்று.

ப. ரை: அற்றார்க்கு ஒன்று ஆற்றாதான் செல்வம் மிகநலம் பெற்றாள் தமியள் மூத்த அற்று = இல்லாதவர்களுக்கு ஒரு உதவி செய்யாதவனுடைய செல்வமானது மிகுந்த அழகுடைய பெண் ஒருத்தி, (மணந்து கொள்ளாமல்) தனியளாகவே இருந்து கிழவியாகி விடுகிற, அதைப் போன்றது.

பொ. ரை: ஏழைகளுக்கு உதவி செய்யாதவன் பெற்றுள்ள பெருஞ்செல்வம், வெகு அழகு பெற்ற ஒரு பெண் (அந்த அழகை அனுபவிக்கும் கணவனில்லாமல்) தனியாகவே இருந்து கிழவியாகி விடுவதைப் போன்றது.

வி - ம்: அற்றார் – பொருள் அற்றார் – ஏழைகள். ஆற்றாதான் – உதவாதவன். நலம் – அழகு – இளமை. மிகவும் இளமையும்

அழகும் உடைய ஒரு பெண், தன்னுடைய அழகின் அருமையை அவளே அனுபவிக்க முடியாது. அதை அனுபவிக்கத் தக்கான் கணவனே. கணவனோ மணந்து கொள்ளாவிட்டில் கிழட்டுப் பருவமடைந்து இளமையும் அழகும் அனுபவிப்பாரற்று வீணாகப் போய்விடும்; அப்படிப் போல, செல்வமுள்ள ஒருவன் அச் செல்வத்தின் அருமையை அவனே அனுபவிக்க முடியாது. அதை அனுபவிக்கத் தக்கார் ஏழைகளே. ஆதலால் ஏழைகளுக்கு உதவாத செல்வம் கணவனில்லாத பெண்ணின் அழகும் இளமையும் போல் வீணாகப் போவதேயாகும் – என்பது கருத்து.

தன்னை அடுத்தவர்களுக்கு உதவும் தன்மையில்லாதவனுடைய செல்வம் :

1008. நச்சப் படாதவன் செல்வ நடுவூரு
ணச்சு மரம்பழுத் தற்று.

ப. ரை : நச்சப் படாதவன் செல்வம் ஊர் நடுவுள் நச்சுமரம் பழுத்த அற்று= (உதவும் தன்மை இல்லாததால் பிறரால்) விரும்பப்படாதவன் செல்வமுடையவனாக இருப்பது, ஊரின் நடுவில் விஷமரம் பழங்கள் நிறைந்திருப்பதைப் போன்றது.

பொ. ரை : கொடைக்குணம் இல்லாததால் யாராலும் விரும்பப்படாதவன் செல்வம் நிறைந்தவனாக இருப்பது, நடு ஊரில் விஷமரம் பழம் நிறைந்ததாக இருப்பதைப் போன்றது.

வி - ம் : நச்சப்படுதல் – விரும்பப்படுதல். நச்சு – நஞ்சு – விஷம். நஞ்சுள்ள மரம் நடுஊரில் குலுங்கப் பழுத்திருந்தாலும் அதன் அருகிற் போகக் கூட யாரும் விரும்ப மாட்டார்கள்; அதைப் போல உதவியற்ற ஒருவன் எவ்வளவு செல்வமுடையவனாக இருந்தாலும் அவனிடம் யாரும் அணுகமாட்டார்கள் – என்பது கருத்து. இதற்கு நேர்மாறாக உபகாரியான ஒருவனிடம் எல்லாரும் போய் வேண்டியதை அடைவார்கள் என்று 'பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றால் செல்வம் நயனுடையான் கண் படின்' என்று 'ஒப்புர வறிதல்' என்ற அதிகாரத்தில் சொன்னது இங்கே குறிப்பிடத்தக்கது.

உபகாரக் குணமில்லாத உலோபியின் செல்வம் அவனுக்கும் உதவாது; அவனைச் சூழ்ந்திருப்பவர்களுக்கும் உதவாது:

1009. அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறர்.

ப. ரை : அன்பு ஒரீஇ தற்செற்று அறம் நோக்காது ஈட்டிய ஒண் பொருள் கொள்வார் பிறர்=அன்பை விலக்கி, தன்னைத்

தானே வருத்தி, தர்மமும் எண்ணாமல் சேர்த்துவைத்த மிகுந்த செல்வத்தை அடையப் போகிறவர்கள் (யாரோ) பிறர்.

பொ. ரை: அன்புச் செலவுகளுக்கும் செலவிடாமல் (தானும் உண்ணாததால்) தன்னையே துன்பப்படுத்திக் கொண்டு, தான தர்மத்தையும் கருதாமல் சேர்த்து வைக்கிற பெருஞ் செல்வத்தை அனுபவிக்கப் போகிறவர்கள் (அவனுமல்ல அவனைச் சேர்ந்தவர்களுமல்ல) யாரோ அன்னியர்கள்.

வி - ம்: அன்பு ஒருவி – அன்பை விலக்கி – அன்பு செய்யாமல். தற்செற்று – தன்னைச் செற்று – தன்னைத்தானே துன்புறுத்திக் கொண்டு. செறுத்தல் – துன்புறுத்தல்; அதிலிருந்து வினையெச்சம் 'செற்று'. ஒண் பொருள் – மிகுந்த செல்வம். தன்னிடம் அன்பு செலுத்திய சுற்றத்தார்களுக்கும் உதவாமல், தானும் சுகப்படாமல், தான தர்மமும் செய்யாமல் சேர்த்து வைக்கிற பெருஞ் செல்வத்தை அனுபவிக்கப் போகிறவர்கள் யாரோ அன்னியர்கள் –என்பது கருத்து.

அன்பர்களுக்கும் தம் சுகத்திற்கும் தான தர்மங்களுக்கும் செலவு செய்து வறுமை வந்து விட்டாலும்:

1010. சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனைய துடைத்து.

ப. ரை சீர் உடை செல்வர் சிறு துனி மாரி வறம் கூர்ந்த அனையது உடைத்து=(தமக்கும் பிறருக்கும் செலவிடும்) சீரான வாழ்க்கை உடைய செல்வர்களுடைய சிறிதுகால வறுமை, மேகமானது (சிறிது காலம்) நீரற்று இருப்பதை ஒத்த தன்மை உள்ளது.

பொ. ரை: (அன்பருக்கும், தமக்கும், அறங்களுக்கும் செலவு செய்து புகழத்தக்க) ஒழுங்கான வாழ்க்கையுடைய செல்வர்கள், சிறிது காலம் வறுமை யடைந்து விட்டாலும், அது மேகமானது சிறிது காலம் நீரற்ற நிலைமை மிகுந்து இருப்பதை ஒத்த இயல்புடையது.

வி - ம்: சீர் – ஒழுங்கு அல்லது புகழத்தக்க தன்மை. துனி – வறுமை. மாரி – மேகம். வறம் – நீரற்ற தன்மை. கூர்ந்து – மிகுந்து. மேகம் உலகத்துக்கு உபகாரி. அது தன்னிடத்திலுள்ள நீரை யெல்லாம் உலகத்துக்குக் கொட்டிக் கொடுத்து விட்டுச் சிலகாலம் உலகத்துக்குக் கொடுக்கத் தன்னிடம் ஒன்றுமில்லாது போய்விட்டது போல் சஞ்சரிக்கும். பிறகு வெகு விரைவில் கனமடைந்து மீண்டும் உலகத்துக்கு உதவும். அதுபோல, பயனுள்ள செல்வர்கள் தம்மிடத்திலுள்ள செல்

வத்தையெல்லாம் பிறருக்கு உதவி வறுமை யடைந்து விட்டாலும் மறுபடியும் செல்வமடைந்து மீண்டும் பிறருக்குப் பயனுள்ளவர்கள் ஆவார்கள். அதனுல் ஒழுங்குடைய செல்வர்கள் வறுமை யடைந்து விட்டாலும் விரைவில் வறுமை நீங்கி மீண்டும் பிறருக்கு உதவுவார்கள்—என்பது கருத்து.

அதி. 102—நாணுடைமை

['நாணுடைமை' என்பது, குற்றமான எதையும் செய்யக் கூசுவது. அதாவது பழியானது, பாவமுள்ளது என்று உலகம் இகழ்ந்துள்ள காரியங்களைச் செய்து விடாதபடி கவனித்துக் கொள்வது.]

1011. கருமத்தா ஞணுத ஞணுத் திருநுத
னல்லவர் நாணுப் பிற.

ப. ரை: கருமத்தால் நாணுதல் நாணு; திருநுதல் நல்லவர் நாணு பிற=(குற்றமான)காரியம் என்பதனுல் (அதைச் செய்யக்) கூசுவதுதான் நாணமுடைமை; அழகிய நெற்றியுள்ள பெண்களின் நாணம் என்பது வேறு.

பொ. ரை: (பாவமான காரியம்) என்பதனுல் (ஒரு காரியத்தைச் செய்யக்) கூசுவதுதான் நாணுடைமை; அழகான நெற்றியுள்ள பெண்களின் நாணம் என்பது வேறு.

வி-ம்: திருநுதல் நல்லவர்—பெண்கள். நாணு—நாணம்—கூச்சம். பழிபாவங்களைச் செய்யக் கூச்சப்படுவதுதான் நாணுடைமை எனப்படுவது; பெண்களின் கூச்சம் அல்ல—என்பது கருத்து.

மனிதருக்குள் சிறப்புத்தருவது இந்த நாணுடைமை தான்:

1012. ஊணுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல
நாணுடைமை மாந்தர் சிறப்பு.

ப. ரை: உயிர்க்கெல்லாம் ஊண், உடை, எச்சம் வேறல்ல; மாந்தர் சிறப்பு நாணுடைமை=மனிதர்க்கெல்லாம் உணவு, உடை, (முதலான) மற்றவைகளும் வேறு வேறல்ல; (ஆனுல்) மனிதருக்குச் சிறப்புத் தருவது (பழி பாவத்துக்கு அஞ்சும்) நாணுடைமைதான்.

பொ. ரை: எல்லா மனிதர்க்கும் உணவு, உடை முதலான மற்றவைகளும் வெவ்வேறு அல்ல; ஆனுல் சிறப்புகளில் வேறுபடுத்துவது நாணுடைமை தான்.

வி - ம் : உயிர்க்கெல்லாம் – மனித உயிர்க்கெல்லாம் – மனிதர்க் கெல்லாம். வேறல்ல – வேறு வேறல்ல. உண்பது, உடுப்பது முதலிய எல்லாவற்றிலும் எல்லா மனிதர்களும் ஒரே மாதிரிதான்; ஆனால் பழிக்கஞ்சும் சிறப்புக் குணத்தில் தான் வேறுபடுகிறார்கள் – என்பது கருத்து.

இந்த நாணுடைமை என்ற சிறப்புக் குணத்தினால்தான் மற்ற எல்லா நல்ல குணங்களும் சேர்ந்த சான்றாண்மை என்று முன்னே சொல்லப்பட்ட பெருங்குணம் உண்டாவது:

**1013. ஊனைக் குறித்த வுயிரெல்லா நாணென்னு
நன்மை குறித்தது சால்பு.**

ப. ரை : உயிரெல்லாம் ஊனை குறித்த; சால்பு நாண் என்னும் நன்மை குறித்தது = உயிர்களெல்லாம் உடம்பைப் பொறுத்தவை; சான்றாண்மை என்பது நாணுடைமை என்ற (பழிக்கஞ்சும்) நல்ல குணத்தைப் பொறுத்தது.

பொ. ரை : உயிர்களெல்லாம் உடம்பை ஆதாரமாகக் கொண்டு இயங்குவன; சான்றாண்மை என்ற பெருங்குணம் பழிக்கஞ்சும் நாணுடைமை என்னும் நல்ல குணத்தை ஆதாரமாகக் கொண்டது.

வி - ம் : நன்மை – நல்ல தன்மை – நற்குணம். எல்லா மனிதர்களும் தம் உடல் நலத்தையே முக்கியமாகக் கருதி வாழ்வார்கள். ஆனால் சான்றாண்மையை விரும்புகின்றவர்கள் பழிக்கஞ்சும் நாணுடைமை என்ற நற்குணத்தையே முக்கியமாகக் கருதி வாழ்வார்கள். அதனால் – உயிருக்கு இருப்பிடம் உடம்பு; சான்றாண்மைக்கு இருப்பிடம் நாணுடைமை – என்பது கருத்து.

பழிபாவத்துக்கு அஞ்சி நடக்கும் குணமாகிய நாணுடைமை இல்லாதவனுடைய வாழ்க்கை, எவ்வளவு சிறப்புடையதானாலும் சான்றோர்கள் அதை இன்பமாக மதிக்க மாட்டார்கள் :

**1014. அணியன்றோ நாணுடைமை சான்றோர்க் கஃதின்றேற்
பிணியன்றோ பீடு நடை.**

ப. ரை : சான்றோர்க்கு நாணுடைமை அணியன்றோ? அஃது இன்றேல் பீடுநடை பிணிஅன்றோ ? = சான்றோர்களுக்கு, (பழிபாவத்துக்கு அஞ்சும்) நாணுடைமைதான் அழகல்லவா ? அது இல்லாவிட்டால் (அவர்களுக்கு, மற்றவிதங்களில்) பெருமையுள்ள வாழ்க்கையானாலும் துன்பமேயல்லவா ?

பொ. ரை: சான்றாண்மையுள்ள மேன்மக்கள் பழிபாவத்துக்கு அஞ்சுகின்ற நாணுடைமையுள்ள குணத்தைத்தான் வாழ்க்கையின் அழகாகக் கருதுவார்கள். அந்த நாணுடைமை இல்லாத வாழ்க்கை, மற்ற விதங்களில் எவ்வளவு பெருமையுடையதானாலும், அதைத் துன்பமாகத்தான் கருதுவார்கள்.

வி- ம்: அணி – அழகு. பிணி – துன்பம். பீடுநடை – பெருமையுள்ள வாழ்க்கை. 'நாண் என்னும் நன்மை குறித்தது சால்பு' என்று முன் குறளில் சொல்லியபடி, சான்றோர்கள் நாணுடைமையுள்ள வாழ்க்கையைத்தான் இன்ப வாழ்க்கையாகக் கருதுவார்கள். அது இல்லாத வாழ்க்கை, எவ்வளவு சிறப்புடையதானாலும், அதைத் துன்பமாகத்தான் மதிப்பார்கள் – என்பது கருத்து.

சான்றாண்மைக்கு இருப்பிடமாகிய நாணுடைமைக்கே இருப்பிடம் எதுவென்றால்:

**1015. பிறர்பழியுந் தம்பழியு நாணுவார் நாணுக்
குறைபதி யென்னு முலகு.**

ப. ரை: பிறர் பழியும் தம் பழியும் நாணுவார் உலகு நாணுக்கு உறைபதி என்னும்=பிறருக்குப் பழி வருவதற்கும் தமக்குப் பழி வருவதற்கும் கூசுகின்றவர்களை உலகம் நாணுடைமைக்கு இருப்பிடம் என்று சொல்லும்.

பொ. ரை: பிறருக்கும் பழிவரக் கூடாதென்றும் தமக்கும் பழி வரக்கூடாதென்றும் அஞ்சி நடப்பவர்களை நாணுடைமை என்னும் நல்ல குணத்திற்கு இருப்பிடம் என்று உலகத்தார் பாராட்டுவார்கள்.

வி - ம்: உறைபதி – இருப்பிடம். தமக்கு மட்டுமன்றி யாருக்கும் பழிவரக் கூடாதென்று நடந்து கொள்ளுகிறவர்களே நாணுடைமை என்னும் குணத்தில் சிறந்தவர்கள் – என்பது கருத்து.

அப்படி நாணுடைமை என்னும் குணத்திற்கு உச்சமாகிய சான்றோர்கள் எப்படிப்பட்டவர்களெனில்:

**1016. நாண்வேலி கொள்ளாது மன்னோ வியன்ஞாலம்
பேணலர் மேலா யவர்.**

ப. ரை: மேலாயவர் நாண் வேலி கொள்ளாமல் வியன் ஞாலம் பேணலர்=சான்றாண்மையில் மேன் மக்கள் நாணுடைமை என்னும் பாதுகாப்பை விட்டு விட்டு அகன்ற உலகம் (கிடைப்பதானாலும்) விரும்ப மாட்டார்கள்.

பொ. ரை: சான்றாண்மையில் மேலானவர்கள் (சான்றாண்மைக்குப்) பாதுகாப்பாகிய நாணத்தை விட்டு விட்டு இந்தப் பெரிய உலகமே கிடைப்பதானாலும் விரும்பமாட்டார்கள்.

வி - ம்: நாண் வேலி — பழி புகுந்து விடாமல் பாதுகாக்கும் நாணுடைமை என்ற பாதுகாப்பு. பயிருக்கு வேலி எப்படிப் பாதுகாப்போ அப்படி சான்றாண்மைக்கு நாணுடைமை பாதுகாப்பு. கொள்ளாமல் — கொள்வதை அல்லாமல் — அதாவது பற்றிக் கொள்வதை விட்டு விட்டு. பேணலர் — விரும்ப மாட்டார்கள். நாணுடைமையை விட்டு விடுவதனால் உலகம் முழுவதும் கிடைக்கும் என்றாலும் அதைச் சான்றோர் விரும்ப மாட்டார்கள் — என்பது கருத்து. 'மன்னோ' — ஆச்சரியக் குறிப்புள்ள அசைச் சொல்.

நாணுடைமையை இழக்க நேரிட்டால் மேன்மக்கள்:

1017. நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா
ணாண்டுறவார் நாணாள் பவர்.

ப. ரை: நாண் ஆள்பவர் நாணால் உயிரை துறப்பர்; உயிர் பொருட்டால் நாண் துறவார் = நாணுடைமை மேற்கொண்டவர்கள் நாணுடைமை காரணமாக உயிரை விட்டு விடுவார்கள்; உயிரைப் பொருட்படுத்தி நாணத்தை விட்டுவிட மாட்டார்கள்.

பொ. ரை: நாணுடைமையை மேற்கொண்ட சான்றோர்கள் நாணத்துக்காக உயிரை விடுவார்களே யல்லாமல் உயிரைப் பெரிதாக எண்ணி நாணத்தை விட்டு விட மாட்டார்கள்.

வி - ம்: நாண் ஆள்பவர் — நாணுடைமையைக் கையாள்பவர் — மேற்கொண்டு நடப்பவர்கள். நாணுடைமையோடு வாழ்கின்ற சான்றோர்கள் நாணுடைமையை இழக்க நேர்ந்தால் உயிரை விடுவார்களே யன்றி நாணை விடமாட்டார்கள் — என்பது கருத்து.

ஆகையினால் ஒவ்வொரு மனிதனும்:

1018. பிறர்நாணத் தக்கது தானாணா னாயி
னறநாணத் தக்க துடைத்து.

ப. ரை: பிறர் நாணத்தக்கது தான் நாணான் ஆயின் அறம் நாணத்தக்கது உடைத்து = (ஒருவன்) மற்றவர்கள் பழியென்று மதிப்பதை, தான் செய்யக் கூசாவிட்டால் அவன் நடத்தும் அறம் (இல்லறமோ துறவறமோ) பழிக்கத்தக்க இயல்புடையது.

பொ. ரை: மற்றவர்கள் பழியென்று மதிக்கிற காரியத்தைத் தான் கூசாமற் செய்வானாயின் அவன் நடத்தும் வாழ்க்கை இல்லறமாயினும் சரி துறவறமாயினும் சரி, பழிப்புக்கு உரித்தானது.

வி-ம்: பிறர் நாணத்தக்கது – மற்றவர்கள் பழியானதென்று அருவருக்கத் தக்கது. மற்றவர்கள் பழி பாவமானது என்று கூசுகின்றதை ஒருவன் கூசாமற் செய்வானாயின் அவன் வாழ்க்கை பழிப்பிற்கிடமானது – என்பது கருத்து.

மற்றக் கொள்கைகளில் தவறிவிட்டாலும் நாணுடைமையில் தவறக் கூடாது; ஏன் எனில்:

1019. குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு
நாணின்மை நின்றக் கடை.

ப. ரை: கொள்கை பிழைப்பின் குலம் சுடும்; நாணின்மை நின்றக்கடை நலம் சுடும்=(எந்தக்) கொள்கையில் தவறினாலும் (அது) நல்ல குலம் என்ற பெயரைக் கெடுத்து விடும்; (ஆனால் நாணுடைமையில் தவறி) நாணில்லாமையில் தங்கி விட்டால் (அது குலநலத்தை மட்டுமல்ல மற்றெல்லா) நலங்களையும் கெடுத்து விடும்.

பொ. ரை: (ஒருவன் எந்த) ஒழுக்கத்தில் தவறிவிட்டாலும் (அது) அவன் நல்ல இனத்தைச் சேர்ந்தவன் என்ற பெயரைக் கெடுத்து விடும்; (ஆனால் அவன் நாணுடைமை என்ற ஒழுக்கத்தில் தவறி) நாணமின்மையில் இறங்கி விட்டானாயின் (அது அவன் குலப் பெருமையை மட்டுமல்ல) மற்ற எல்லாச் சிறப்புகளையும் கெடுத்து விடும்.

வி-ம்: அடும் – கெடுக்கும். குலம் சுடும் – குலத்தைக் கெடுக்கும். நலம் சுடும் – நலத்தைக் கெடுக்கும். எந்த ஒழுக்கம் தவறினாலும் குலப்பெருமை கெட்டுப் போகும்; அதிலும் நாணுடைமை என்ற ஒழுக்கம் தவறினால் குலப் பெருமையோடு மற்ற வாழ்க்கை நலங்களும் கெட்டுப் போகும் – என்பது கருத்து.

நாணுடைமை இல்லாதவர்களுடைய வாழ்க்கை சரியான மனித வாழ்க்கையல்ல; போலி வாழ்க்கை:

1020. நாணகத் தில்லா ரியக்க மரப்பாவை
நாணா லுயிர்மருட்டி யற்று.

ப. ரை: அகத்து நாண் இல்லார் இயக்கம் மரப்பாவை நாணால் உயிர் மருட்டிய அற்று=நெஞ்சத்தில் (பழிபாவங்களைச்

செய்யக் கூசுகின்ற) நாணம் இல்லாதவர்களுடைய செய்கைகள் மரத்தாற் செய்யப்பட்ட பதுமை கயிற்றினால் (ஆட்டப்பட்டு) உயிருள்ள மனிதனைப் போல் மயக்குவதை ஒத்தது.

பொ. ரை: மனதில் (பழிபாவங்களைச் செய்யக்கூசும்) நாணம் இல்லாதவர்கள் செய்கின்ற காரியங்களெல்லாம் உயிரற்ற மரப் பொம்மை சூத்திரக் கயிற்றினால் ஆட்டப்பட்டு உயிருள்ளது போல் நடிப்பதற்கே சமானம்.

வி - ம்: அகத்து நாண் இல்லார் – பழிபாவங்களுக்கு அஞ்சும் சொந்த அறிவு இல்லாதவர்கள். இயக்கம் – செய்கின்ற எல்லாக் காரியங்களும் சேர்ந்த நடமாட்டம். மருட்டல் – மயக்குதல். அதாவது ஒன்றை வேறொன்றாக எண்ணிவிடும் படியாகத் திரிபு உணர்ச்சி உண்டாக்குதல். பழி பாவங்களுக்கஞ்சும் நாணுடைமை இல்லாதவர்கள் யார் எதைச் சொன்னாலும் செய்து பிறர் ஆட்டுகின்றபடி யெல்லாம் ஆடுவார்கள். அதனால் மனதில் நாணமில்லாதவர்கள் கயிற்றினால் ஆட்டப்படுகிற பொம்மையைப் போலப் பிறர் ஏவியதை எல்லாம் கூசாமல் செய்வார்கள் – என்பது கருத்து.

அதி. 103—குடிசெயல்வகை

['குடி செயல்வகை' என்பது ஒருவன் தன்னுடைய குடித்தனத்தைச் சிறப்புடையதாகச் செய்யும் முறை.]

1021. கருமஞ் செயவொருவன் கைதூவே னென்னும்
பெருமையிற் பீடுடைய தில்.

ப. ரை: ஒருவன் 'கருமம் செய கைதூவேன்' என்னும் பெருமையின் பீடு உடையது இல் = ஒருவன் 'வேலை செய்யத் தயங்க மாட்டேன்' என்று சொல்லும் பெருமையைவிட சிறப்புடையது (குடி செயலுக்கு) வேறு இல்லை.

பொ. ரை: (குடித்தனத்தை மேன்மைப்படுத்த) ஒருவன் 'காரியம் செய்வதற்குப் பின்வாங்கமாட்டேன்' என்று உறுதி கொள்ளும் பெருமையைவிடச் சிறப்புடையது வேறொன்றுமில்லை.

வி - ம்: கருமம் செயல் – உழைப்பது. கைதூவல் – கைவிட்டுப் பின் வாங்குவது அல்லது தளர்ந்து விடுவது. ஒருவன் தன் குடித்தனத்தைச் சிறப்புடையதாக்க, அவன் 'உழைப்பதற்குச் சளைக்க மாட்டேன்' என்ற உறுதியுடையவனாக இருப்பதைவிடச் சிறந்த வழி வேறில்லை – என்பது கருத்து.

அந்த மன உறுதிக்குத் துணையாகக் காரிய வெற்றிக்கு வேண்டிய கருவிகள்:

1022. ஆள்வினையு மான்ற வறிவு மெனவிரண்டி
னீள்வினையா னீளுங் குடி.

ப. ரை: ஆள் வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையால் குடி நீளும் = முயற்சியும் தகுந்த அறிவும் என்ற இரண்டும் தொடர்ச்சியாக (இடைவிடாமல்) இருந்து காரியம் செய்தால் குடித்தனம் உயரும்.

பொ. ரை: விடாமுயற்சியும் விரிந்த அறிவும் ஆகிய இந்த இரண்டும் எப்போதும் சேர்ந்திருக்கக் காரியம் செய்தால் குடித்தனம் நாளுக்கு நாள் உயர்வடையும்.

வி-ம்: ஆள்வினை = முயற்சி. நீள்வினை சேர்ந்த ஆள்வினை — விடாமுயற்சி. ஆன்ற அறிவு—எந்தக் காரியத்தை முயல்கின்றோமோ அந்தக் காரியத்துக்கு வேண்டிய மிகுந்த அறிவு. விடாமுயற்சியும் அதற்கு வேண்டிய அறிவும் சேர்ந்து வேலை செய்தால் குடித்தனம் உயர்வடையும் — என்பது கருத்து.

அப்படித் தன் குடும்பத்தை மேன்மைப்படுத்த விடா முயற்சியுடனும் அறிவோடும் 'உழைப்பேன்' என்ற உறுதியுடையவனுக்குத்தான்:

1023. குடிசெய்வ லென்னு மொருவற்குத் தெய்வ
மடிதற்றுத் தான்முந் துறும்.

ப. ரை: குடி செய்வல் என்னும் ஒருவற்கு தெய்வம் மடி தற்று தான் முந்து உறும் = குடித்தனத்தை 'மேன்மையடையச் செய்வேன்' என்னும் (உறுதியுடைய) ஒருவனுக்கு, தெய்வம் ஆடையை இறுக்கிக் கட்டிக்கொண்டு தானாகவே முன்னால் வரும்.

பொ. ரை: 'குடித்தனத்தின் நிலைமையை உயர்த்துவேன்' என்ற உறுதி கொள்ளும் ஒருவனுக்கு (உதவி செய்யத்) தெய்வம் கச்சை கட்டிக் கொண்டு, தானே முன்வரும்.

வி-ம்: மடி — ஆடை. தற்றல்—இறுக்கிக் கட்டுதல். மடிதற்று— ஆடையை இழுத்துக் கட்டிக் கொண்டு. 'என் குடும்பத்தின் நிலைமையை உயர்த்துவேன்' என்று உறுதி கொள்ளும் ஒருவனுக்கு நிச்சயமாக தெய்வம் தானாகவே வந்து உதவி செய்யும் — என்பது கருத்து.

'என் குடித்தனத்தை மேன்மையடையச் செய்வேன்' என்று மனதில் உறுதி கொள்வதும் வாயால் சொல்வதும் மட்டும் போதாது. அப்படிப்பட்டவனுக்குத் தெய்வ சகாயம் கிடைத்து விடாது. நினைப்பதும் சொல்லுவதும் போலச் செய்கையும் வேண்டும். செய்தால் :

1024. சூழாமற் றானே முடிவெய்துந் தங்குடியைத்
தாழா துஞற்று பவர்க்கு.

ப. ரை : தம்குடியை தாழாது உஞற்றுபவர்க்கு முடிவு சூழாமல் தானே எய்தும் = தம்முடைய குடித்தனத்தின் (உயர்வுக் கான) காரியங்களைச் சோம்பாமல் செய்கின்றவர்களுக்கு வெற்றி, யோசனையின்றி தானாகவே வரும்.

பொ. ரை : தம்முடைய குடித்தனத்தின் உயர்வுக்கான முயற்சி களைத் தளராமல் செய்து கொண்டேயிருப்பவர்களுக்கு (குடும்பம் உயர்தல் என்ற நோக்கம்) தடையின்றி தானா கவே பூர்த்தியாகும்.

வி - ம்: தாழாது – தளராமல். குடியை – குடித்தனக் காரியங் களை. உஞற்றுபவர்க்கு–செய்பவர்க்கு. முடிவு – வெற்றி. தம் முடைய குடும்ப உயர்வுக்காகச் சோம்பலில்லாமல் உழைக் கிறவர்களுக்கு அந்த உயர்வு தானாகவே வரும் – என்பது கருத்து.

தன் குடும்பம் நல்ல நிலைமையில் இருக்க வேண்டுமென்று குற்றமான காரியங்களைச் செய்து விடாமல் நேர்மையான முறைகளில் உழைப்பவனை :

1025. குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்று முலகு.

ப. ரை : குற்றம் இலனாய் குடிசெய்து வாழ்வானை உலகு சுற்ற மாச் சுற்றும் = குற்றம் செய்யாதவனாக குடித்தனத்தைச் சிறப்படையச் செய்து வாழ்கின்றவனை உலகத்தார் தங்கள் உறவினனாகச் சூழ்ந்து கொள்வார்கள்.

பொ. ரை : குற்றமில்லாத வழியில் பாடுபட்டுத் தன் குடித் தனத்தை உயர்வடையச் செய்து வாழ்கின்றவனை உலகத் தார் உறவாக சூழ்ந்து கொண்டு (மகிழ்வார்கள்).

வி - ம்: குற்றமான காரியங்களைச் செய்து உயர்ந்த நிலை மைக்கு வந்து விடுகிறவர்களும் உண்டு. அவர்களை உலகம் பாராட்டாது. ஆதலால் குற்றமற்ற உழைப்பினால் குடும்

பத்தை மேன்மையான நிலைமைக்குக் கொண்டு வருகிற வனைத்தான் உலகம் மதித்து உறவு கொண்டாடும் – என்பது கருத்து.

அப்படிக் குற்றமற்ற உழைப்பினால் தன் குடும்பத்தை உயர்ந்த நிலைமைக்குக் கொண்டுவருகிற திறமையைத்தான்:

1026. நல்லாண்மை யென்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை யாக்கிக் கொளல்.

ப. ரை: ஒருவற்கு நல் ஆண்மை என்பது தான் பிறந்த இல் ஆண்மை ஆக்கிக் கொளல் = ஒருவனுக்கு நல்ல ஆண்மை என்று சொல்லப்படுவது (எதுவென்றால்) அவன் பிறந்த குடும்பத்தை ஆண்மையுடையதாகச் செய்து கொள்ளுதல்.

பொ. ரை: ஒருவனுக்குச் சிறப்பு தரும் வலிமை என்று சொல்லத்தக்கது எது வென்றால் அவன், தான் பிறந்த குடும்பத்தை வலிமையுள்ளதாகச் செய்து கொள்வதே.

வி - ம்: நல்லாண்மை – சிறந்த ஆண்மை. இல் – குடும்பம். ஆண்மை – வலிமை. இங்கே 'தன் இல்' என்று சொல்லாமல் 'தான் பிறந்த இல்' என்று சொன்னது குறிப்பிடத்தக்கது. ஒருவன் தானும் தன் மனைவி மக்களும் தனியே வாழ்ந்து சுகமடைவதும் சிறப்படைவதும் சுலபம். ஆனால் தான் பிறந்த குடும்பத்தில் தாய் தந்தை, உடன் பிறந்தார் முதலான பலபேர் இருப்பார்கள். அவர்களுக்கும் சேர்த்து நலங்களை உண்டாக்குவது எளிதல்ல. அதற்குத் திறமை மட்டும் போதாது, தன்னலமற்ற தியாகத் தன்மையும் வேண்டும். அதனால் – ஒருவனுக்குச் சிறப்பான திறமை எது வென்றால் தான் பிறந்த குடும்பத்தைக் குறைவற்றதாகச் செய்து வைப்பதே – என்பது கருத்து.

ஒரு குடும்பத்தில் பல பேர் பிறந்தாலும் அக்குடும்பத்தை வலிமை உள்ளதாகச் செய்து வைக்கும் ஆற்றல் எல்லாருக்கும் இருக்காது. அதனால்:

1027. அமரகத்து வன்கண்ணர் போலத் தமரகத்தும்
ஆற்றுவார் மேற்றே பொறை.

ப. ரை: அமர் அகத்து வன் கண்ணர் (மேற்றே) போல தமர் அகத்தும் பொறை ஆற்றுவார் மேற்றே = போர்க்களத்தில் அச்சமற்ற வீரர்கள் (மீதே) போல, குடும்பத்திலும் பொறுப்பெல்லாம் ஆற்றலுடையவர்கள் மீதே இருக்கும்.

பொ. ரை : போர்க் களத்தில் (வெற்றி பெறும் பொறுப்பெல்லாம்) தைரியமுள்ளவர்கள் மேலேயே இருப்பதைப் போல ஒரு குடும்பத்திலும் (அதை வலிமையுள்ளதாக்கும்) பொறுப்பெல்லாம் (அக் குடும்பத்தில்) திறமையுள்ளவர்கள் மேலேயே இருக்கும்.

வி - ம் : அமர் – போர் – யுத்தம். வன் கண்ணர் – தைரியசாலிகள். பொறை – பொறுப்பு – பாரம். மேற்றே – மேலேயே. தமர் – உறவினர்கள். அகம் – வீடு. தமரகம் – உறவினர்கள் உள்ள வீடு. அதிகாரத்தை ஒட்டி 'தமரகம்' என்பதற்கு 'ஒரு குடும்பம்' என்பது பொருள். ஒரு சேனையில் எண்ணிறந்த போர்ச் சேவகர்கள் இருந்தாலும் அவர்களிற் சிலரே அச்சமற்ற ஆற்றலுள்ளவர்களாக இருப்பார்கள். அந்தச் சேனையின் வெற்றி அவர்களைப் பொறுத்ததாகவே இருக்கும். அது போல, ஒரு குடும்பத்தில் பல பேர் பிறந்தாலும் அவருள் இரண்டொருவரே ஆற்றலுடையவர்களாக இருப்பார்கள். அந்தக் குடும்பத்தின் உயர்வு அவர்களுடைய பொறுப்பாகவே இருக்கும். ஆதலால் – போர்க்களத்தில் வெற்றி பெறும் பொறுப்பு, சேனையில் அஞ்சா நெஞ்சகர்களாக உள்ள சிலருடைய பொறுப்பாகவே இருப்பது போல, ஒரு குடும்பம் மேன்மை பெறுவது அக் குடும்பத்தில் வல்லமையுள்ளவர்களான இரண்டொருவர்களுடைய பொறுப்பாகவே இருக்கும் – என்பது கருத்து.

போர் முனையில் அஞ்சா நெஞ்சராய்ப் போர் புரிகின்றவர்களை விடக் குடும்பத்தை நடத்துகிறவர்களுக்குப் பொறுப்பு அதிகம். எப்படியெனில், போர் வீரர்களுக்குச் சண்டை நடக்கும் காலத்தில் மட்டும்தான் வேலை, ஆனால் குடும்பப் பொறுப்பை நடத்துகிறவனுக்கோ வெனில் :

**1028. குடிசெய்வார்க் கில்லை பருவ மடிசெய்து
மானங் கருதக் கெடும்.**

ப. ரை : குடி செய்வார்க்கு பருவம் இல்லை; மடி செய்து மானம் கருத கெடும் = குடித்தனப் பொறுப்பை நடத்துகிறவர்களுக்குப் பருவகாலம் என்பது இல்லை; (உழைப்பதற்கு) சோம்பலடைந்து பெருமையை கருதினால் (குடும்பம்) கெட்டுப் போகும்.

பொ. ரை : குடித்தனப் பொறுப்பை நடத்துகிறவர்களுக்கு வேலை செய்யப் பருவகாலம் என்பது இல்லை (எப்போதும் உழைப்புதான்;) அவர்கள் வேலைக்குச் சோம்பலுற்றாலும் (அல்லது) உழைப்புக்கு வெட்கப்பட்டாலும் குடும்ப நலம் கெட்டுப் போகும்.

வி - ம் : 'பருவம் இல்லை' என்பது 'எப்போதும் பருவம் தான்' என்பதற்கு. அதாவது இடையருது வேலை செய்ய வேண்டும் என்பதைக் குறிப்பது. 'மானம் கருத' என்பது 'உழைப்பது தன் பெருமைக்குக் குறைவு' என்று நினைப்பது. குடும்ப பாரத்தை வகிப்பவர்கள் இடையருத உழைப்பாளி களாக இருக்க வேண்டும்; உழைப்பது கண்ணியத்துக்குக் குறைவானது என்று கருதவும் கூடாது — என்பது கருத்து.

குடும்பத்தைத் தாங்குகின்றவன் அப்படி ஒய்வின்றி உழைக்க வேண்டியவன் ஆனதினுல் :

**1029. இடும்பைக்கே கொள்கலங் கொல்லோ குடும்பத்தைக்
குற்ற மறைப்பா னுடம்பு.**

ப. ரை : குடும்பத்தை குற்றம் மறைப்பான் உடம்பு இடும் பைக்கே கொள்கலம் கொல்லோ = குடும்பத்தை குற்றம் (வந்து விடாமல்) பாதுகாப்பவனுடைய உடம்பு துன்பத் திற்கே ஒரு பாண்டமோ என்னவோ !

பொ. ரை : (தான் பிறந்த) குடும்பத்துக்குத் தீங்கு வந்து விடாதபடி பாதுகாக்கிற ஒருவனுடைய உடம்பு துன்பங் களையே போட்டு வைக்கும் பாத்திரமோ என்னமோ தெரிய வில்லை.

வி - ம் : இடும்பை — துன்பம். மறைத்தல் — பாதுகாத்தல். தன் குடும்பத்துக்கு ஒரு குறைச்சல் வந்துவிடாதபடி பாதுகாக் கிறவன் எப்போதும் பல துன்பங்களைப் பொறுத்துக் கொண் டிருக்க வேண்டியவன் — என்பது கருத்து.

குடும்பத்தைக் குற்றம் மறைக்கும் பொறுப்பாளி இல்லாத குடும்பம் :

**1030. இடுக்கண்கால் கொன்றிட வீழு மடுத்தூன்று
நல்லா ளிலாத குடி.**

ப. ரை : அடுத்து ஊன்றும் நல் ஆள் இலாத குடி இடுக்கண் கால் கொன்றிட விழும் = (துன்பம் நேர்ந்தபோது) உடனே தாங்கி நிற்கக் கூடிய நல்ல திறமைசாலி இல்லாத குடித்த னம் அத்துன்பம் காலை முறித்துவிட (அக்குடும்பம்) விழுந்து விடும்.

பொ. ரை : (துன்பம்) நேர்ந்து விட்டால் உடனே அத்துன்பத் தைத் தாங்கி சமாளிக்க வல்ல திறமைசாலி இல்லாத ஒரு குடும்பம் துன்பத்தினுல் காலொடிந்ததாகி விழுந்து விடும்.

வி-ம்: இடுக்கண் — துன்பம். கால் கொன்றிட — காலை முறித்துவிட. நல்லாள் — நல்ல ஆள்—திறமையுடையவன் அல்லது சமர்த்தன். ஊன்றுதல் — தாங்கி நிற்றல். துன்பம் நேர்ந்தால் தாங்கி நின்று காக்கவல்ல சாமர்த்தியமுள்ளவன் இல்லாத ஒரு குடும்பம் அந்தத் துன்பத்தால் நிலைகெட்டுப் போகும் — என்பது கருத்து.

அதி. 104—உழவு

['உழவு' என்பது உணவு உற்பத்தி செய்யும் பயிர்த் தொழில். அத்தொழிலின் இன்றியமையாச் சிறப்பையும் அதைச் செய்யும் வேளாண்மைக்காரர்கள் குறிக்கொள்ள வேண்டிய முக்கியமான செயல்களையும் சொல்லுவது இந்த 'உழவு']

1031. சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனா
லுழந்து முழவே தலை.

ப. ரை: சுழன்றும் உலகு ஏர்ப் பின்னது; அதனால் உழந்தும் உழவே தலை = சுற்றிச் சுற்றிப் பார்த்தாலும் உலகத்தார் ஏர்த் தொழிலைப் பின்பற்றி உயிர் வாழ வேண்டியவர்களே; அதனால் பாடுள்ளதானாலும் உழவுத் தொழிலே தலை சிறந்தது.

பொ. ரை: எப்படியெல்லாம் சுற்றிச் சுற்றி எண்ணிப் பார்த்தாலும் உலகத்திலுள்ளவர்கள் உழவுத் தொழிலைப் பின்பற்றித்தான் உயிர் வாழ முடியும்; அதனால் உழைப்பு மிகுந்தானாலும் உழவுத் தொழிலே (எல்லாத் தொழில்களிலும்) மேலானது.

வி-ம்: சுழன்றும் — சுற்றிச் சுற்றிப் பார்த்தாலும்; அதாவது திருப்பித் திருப்பி ஆலோசித்தாலும், ஏர்ப்பின்னது — ஏரைப் பின்பற்றுவது. உழந்தும் — உழந்தாலும் — பாடுபட்டாலும். எப்படி யெப்படி யெல்லாம் எண்ணிப் பார்த்தாலும் உலகத்தார் உழவுத் தொழிலால் தான் உயிர்வாழ முடியும். அதனால் மிக்கப் பாடுள்ளதானாலும் உழவுத் தொழிலே மற்றெல்லாத் தொழில்களுக்கும் மேலானது — என்பது கருத்து.

அதனால்:

1032. உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.

ப. ரை: உழுவார் உலகத்தார்க்கு ஆணி; அஃது ஆற்றாது எழுவாரை யெல்லாம் பொறுத்து = உழுகின்றவர்கள் உலகத்

தார்க்குக் கடையாணி போன்றவர்கள். (ஏனென்றால்) அந்த உழுவதைச் செய்யாது மேலே இருக்கிற மற்ற எல்லாரையும் தாங்கி நிற்பதால்.

பொ. ரை : உழவுத் தொழில் செய்கிறவர்களே உலகத்திலுள்ள மக்களுக்குத் (தேருக்குக் கடையாணி போன்ற) ஆதாரம். ஏனென்றால் அந்த உழவுத் தொழிலைச் செய்யாமல் சமுதாயத்தின் மேல் பாகத்திலிருக்கிற மற்றெல்லா மக்களையும் உழவர்கள் தாங்கிக் கொண்டிருப்பதனால்.

வி - ம் : ஆணி – அச்சாணி – ஆதாரம். எழுவாரை – உயரத்தில் இருப்பவர்களை. உலகத்தார் எல்லாரும் சேர்ந்த சமுதாயம் என்ற கட்டுக் கோப்புள்ள தேரில், உழவுத் தொழில் செய்கிறவர்கள் சக்கரத்திலுள்ள அச்சாணி போல் அத்தேரின் அடிபாகத்தில் இருப்பவர்கள். மற்றத் தொழில் செய்கிறவர்களெல்லாம் தேரின் மேல் பாகத்தில் இருப்பவர்கள். அதனால் 'எழுவாரை' எனப்பட்டது. ஆதலால் உழவுத் தொழில் செய்யாமல் வேறு தொழில்களிலுள்ள மற்றெல்லாரையும் தாங்கிக் கொண்டிருப்பதனால் உழவர்கள் உலகத்தார்க்கெல்லாம் ஆதாரமானவர்கள் – என்பது கருத்து. (இந்தக் குறளின் பிற்பகுதியை 'அஃதாற்றார் தொழுவாரே யெல்லாம் பொறுத்து' என்று பாடபேதம் உள்ளதாகக் கொண்டு 'பிறர் தமக்குச் செய்யும் அவமதிப்புகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு அவர்களைத் தொழுவாரே யாவார்கள்' என்று பொருள் செய்வாருமுண்டு. அப்படிச் செய்வது சிறிதும் பொருந்தாது. ஏன் எனில் பெரும்பான்மையான மூலத்தின் பிரதிகளில் 'எழுவாரை யெல்லாம் பொறுத்து' என்பது தான் பாடம். மேலும், அப்படிக் கொண்டால் 'அச்சாணி' என்ற உபமானம் முற்றுப் பெறாமல் போய் விடுகிறது. அத்துடன் அடுத்த குறளில் இதே கருத்தை வெகு தெளிவாக 'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந் தொழுதுண்டு பின்செல் பவர்' என்று சொல்லுகிறார். திருவள்ளுவர் ஒரே அதிகாரத்தில் ஒரே கருத்தை இரண்டு முறை, அதுவும் அடுத்தடுத்த குறள்களில் சொல்லமாட்டார்.)

உழவுத் தொழில் செய்யாத மற்றெல்லா மனிதர்களுக்கும் உணவு கொடுத்து உயிர்வாழச் செய்கிறவர்கள் உழுது பயிரிடுகிறவர்களேயானதாலும் தமது உணவுக்கான பொருள்களைத் தாமே உற்பத்தி செய்வதாலும் :

1033. உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந்
தொழுதுண்டு பின்செல் பவர்.

ப. ரை : உழுது உண்டு வாழ்வாரே வாழ்வார்; மற்றெல்லாம் தொழுது உண்டு பின் செல்பவர் = உழவுத் தொழில் செய்து

(அதில் விளையும் தானியத்தை உண்டு) உயிர் வாழ்கின்றவர்களே (சரியான) வாழ்க்கை நடத்துகிறவர்கள். மற்றவர்களெல்லாம் பிறரை வணங்கி (அவர் கொடுப்பதை) உண்டு ஏவல் செய்து பிழைப்பவர்கள்.

பொ. ரை: உழவுத் தொழில் செய்து (தாமே உற்பத்தி செய்யும் உணவுப் பொருள்களை) உண்டு சீவிக்கின்றவர்களே சொந்த வாழ்க்கை நடத்துகிறவர்கள்; மற்றவர்களெல்லாம் பிறரை வணங்கி அவர் தயவால் உண்டு அடிமை வாழ்க்கை நடத்துகிறவர்களே.

வி-ம்: பின் செல்பவர் – பின் தொடர்ந்து ஏவல் செய்கிறவர்கள். உழவு வேலை செய்கிறவர்களே சொந்தச் சாப்பாடு சாப்பிட்டு சுதந்திரமாக வாழ்கின்றவர்கள். மற்றெல்லாரும் பிறர் தயவால் சாப்பிட்டு அடிமை வாழ்க்கை நடத்துகிறவர்களே – என்பது கருத்து.

ஏனென்றால் மற்ற எந்தத் தொழில் செய்கிறவர்களும் உழவுத் தொழில் செய்கிறவனிடத்துக்குத் தான் உணவுக்கு வந்தாக வேண்டும்:

1034. பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப
ரலகுடை நீழ லவர்.

ப. ரை: அலகுடை நீழலவர் பலகுடை நீழலும் தம்குடைக்கீழ் காண்பர்=தானியக் கதிரின் நிழலில் இருப்பவர் (மற்றப்) பலவிதமான குடை நிழலில் இருப்பவர்களையும் தம்முடைய குடையின் நிழலைத் தேடிவரச் செய்யக் கூடியவர்கள்.

பொ. ரை: தானியச் செல்வத்தை ஆட்சி புரிகின்ற உழவாளிகள் மற்றுள்ள பலவித செல்வங்களையும் ஆட்சி புரிகின்றவர்களை, தம்முடைய ஆட்சி நிழலை நாடி வரச் செய்கின்றவர்கள்.

வி-ம்: அலகு – தானியக் கதிர். குடை – ஆட்சி. நீழல் – நிழல் – ஆதரவு – செல்வம். காண்பர் – செய்வார்கள். 'பலகுடை நீழலும் தங்குடைக்கீழ்க் காண்பர்' என்பதற்கு 'பல வேந்தர் குடை நிழலதாகிய மண் (உலகம்) முழுதினையும் தம்மரசன் குடைக்கீழே காண்பர்' என்று பொருள் கொள்வது முற்றிலும் தவறு. இங்கே அரசரைப் பற்றியோ மண்ணைப் பற்றியோ பேச்சில்லை. ஆதலால் உழவுத்தொழில் செய்கின்றவர்கள் மற்றுள்ள பல தொழில்களைச் செய்கின்ற எல்லாரையும் தம்முடைய ஆதரவைத் தேடிவரச் செய்கிறவர்கள் – என்பது கருத்து.

மற்றவர்களெல்லாம் உழவாளரை நாடிப் போக வேண்டுமேயன்றி உழவாளர் பிறரை நாடிப் போக வேண்டியதில்லை. ஏனெனில் :

**1035. இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவர்.**

ப. ரை : கை செய்து ஊண் மாலையவர் இரவார்; கரவாது இரப்பார்க்கு ஒன்று ஈவர் = (தம்) கையால் உழைத்து உண்ணும் இயல்புடைய (உழவாளிகள்) பிறரிடம் போய்ப் பிச்சை கேட்க மாட்டார்கள்; (ஆனால்) கேட்பவர்களுக்கு ஒளிக்காமல் ஒன்றைக் கொடுப்பார்கள்.

பொ. ரை : சொந்த உழைப்பினால் சோறுண்ணும் இயல்புடைய உழவாளிகள் பிறரிடத்தில் பிச்சை கேட்க மாட்டார்கள்; ஆனால் கேட்பவர்களுக்கு இல்லையென்னாமல் சிறிதேனும் கொடுப்பார்கள்.

வி-ம் : கை செய்து – தம்முடைய கையினால் வேலை செய்து. மாலை – இயல்பு. கரவாது – ஒளிக்காமல் – இருப்பதை இல்லை யென்னாமல். ஒன்று ஈவர் – ஒன்றையாவது கொடுப்பார்கள்; அதாவது சிறிதேனும் உதவுவார்கள். தாமே பாடுபட்டு உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து உண்ணும் இயல்புடைய உழவுத் தொழிலாளர் பிறரிடத்தில் பிச்சை கேட்க மாட்டார் கள்; கேட்பவர்களுக்கு இல்லை யென்னாமல் சிறிதேனும் கொடுப்பார்கள் – என்பது கருத்து.

வேறு எந்தத் தொழில் நடக்காவிட்டாலும் மனித வாழ்க்கை நிலைகெட்டுப் போகாது. ஆனால் :

**1036. உழவினார் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம்
விட்டேமென் பார்க்கு நிலை.**

ப. ரை : உழவினார் கை மடங்கின் 'விழைவதூஉம் விட்டேம்' என்பார்க்கும் நிலை இல்லை = உழவாளிகள் கைத் தொழில் முடங்கினால் 'ஆசைப் படுவதையும் விட்டு விட்டோம்' என்பவர்களுக்கும் வாழ்க்கை இல்லை.

பொ. ரை : உழவுத் தொழில் நின்று விட்டால் 'ஆசைப்படுவதையும் விட்டுவிட்டோம்' என்று சொல்லுகிற துறவிகளுக்கும் வாழ வழியில்லை.

வி-ம் : கை – கைத்தொழில் – தொழில். மடங்கின் – முடங்கினால் – நின்று விட்டால். நிலை இல்லை – உயிரோடிருக்க வழி

இல்லை. 'விழைவதூஉம் விட்டேம் என்பார்க்கும்' என்றால் 'அனுபவிப்பதை விட்டுவிட்டது மட்டுமல்லாமல் ஆசைப்படுவதையும் விட்டு விட்டோம் என்று சொல்லக்கூடிய முற்றத் துறந்தவர்களுக்கும்' என்பது பொருள். துறவிகளுக்கும் அத்துறவு நிலையின் நோக்கத்தை முயல உடல் இருக்க வேண்டியது இன்றியமையாதது என்பதனால் துறவிகளும் ஓரளவேனும் உணவு கொள்ள வேண்டும். அந்த உணவு, துறந்தார்க்கு இல்லறத்தான் உதவுவது கடமை. உழவுத் தொழில் இல்லாவிட்டால் இல்லறத்தானுக்கும் உணவுக்கு வழியில்லை. அவன் துறவிக்கும் உதவ முடியாது. 'விட்டேமென்பார்க்கும்' என்பதிலுள்ள 'உம்' மையினால் 'மற்றவர்களுக்கும்' என்பது தானாகவே வருகின்றது. அதனால் உழவுத் தொழில் நின்று விட்டால் உலகத்தில் இல்லறமும் நடக்காது துறவறமும் நடக்காது — என்பது கருத்து.

அவ்வளவு இன்றியமையாத உழவுத் தொழிலில் நல்ல பயனை அடைவதற்கு, உழவாளிகள் என்னென்ன செய்ய வேண்டுமென்றால் முதலாக :

**1037. தொடிப்புழுதி கஃசா வுணக்கிற் பிடித்தெருவும்
வேண்டாது சாலப் படும்.**

ப. ரை: தொடி புழுதி கஃசா உணக்கின் பிடித்து எருவும் வேண்டாது சாலப்படும்=(உழவு செய்த நிலத்திலுள்ள) ஒரு பலம் உடைபட்ட மண் கால்பலம் ஆகக் காயவிட்டால் ஒரு பிடி எருவும்கூட வேண்டியதில்லாமலும் மிகவும் விளையும்.

பொ. ரை: உழுத நிலத்திலுள்ள உடைபட்ட மண் ஒரு பங்கு காற்பங்காகச் சுண்டும்படி ஆறவிட்டு (விதைத்தால்) கைப்பிடி எருவு கூட இல்லாமலும் மிகுந்த விளைச்சலுண்டாகும்.

வி-ம்: தொடி — ஒரு பலம். கஃசு — காற்பலம். படும் — உண்டாகும் — விளையும். 'தொடிப் புழுதி கஃசாவுணக்கின்' என்பது பலக்கணக்கிலோ வீசைக்கணக்கிலோ நிறுத்துப் பார்க்கச் சொன்னதல்ல. 'மிகவும் சுண்டிப் போகும்படியாக' என்பதற்காகச் சொன்னது. 'பிடித்தெருவும் வேண்டாது' என்று 'ஒரு பிடி எருக்கூட இல்லாமல்' என்பது, எருவே போட வேண்டாமென்பதற்காகச் சொன்னதல்ல. ஆறப்போடுவதன் சிறப்புக்காகச் சொன்னது. 'புழுதி' என்பது 'துகளான மண்' நிலத்திலுள்ள மண் புழுதியாகும்படி உழ வேண்டும். பலமுறை உழுது ஆற வைப்பதும் மேல். 'புழுதி' என்பதனால் உழுத நிலத்து மண் என்பது பெறப்படுகிறது. நிலத்தை உழுத பின் நன்றாக ஆறவிட்டு விதைத்தால் எருவில்லாமலும் நல்ல விளைச்சல் உண்டாகும் — என்பது கருத்து.

மேலும் கவனிக்க வேண்டியது என்னவெனில் :

1038. ஏரினு நன்றா லெருவிடுதல் கட்டபி
னீரினு நன்றதன் காப்பு.

ப. ரை: ஏரினும் நன்று எருவிடுதல் கட்டபின் நீரினும் நன்று அதன் காப்பு=நிலத்தை உழுதலை விட நல்லது எருப்போடுதல் (பயிர்முளைத்துக்) களையெடுத்த பின் நீர்பாய்ச்சுவதை விட நல்லது அதைப் பாதுகாப்பது.

பொ. ரை: (நிலத்திலுள்ள மண் நன்றாக ஆறும்படிப் புழுதிபட) உழுதலை கவனிக்க வேண்டும்; அதைவிட எருவிடுவதை கவனிக்க வேண்டும்; (பயிர் முளைத்து ஓரளவு வளர்ந்த பின்) களையெடுப்பதை கவனிக்க வேண்டும்; களையெடுத்த பின் (காலாகாலத்தில் நீர் பாய்ச்ச வேண்டும்); (காலாகாலத்தில்) நீர்பாய்ச்சுவதை விட (பயிருக்கு அழிவோ நோயோ வந்து விடாதபடி) பாதுகாக்க வேண்டும்.

வி-ம்: நன்றாக உழ வேண்டும்; நன்றாக எருப்போட வேண்டும்; அதைவிட நன்றாக நீர்பாய்ச்ச வேண்டும்; எல்லாவற்றிலும் நன்றாகப் பாதுகாக்க வேண்டும் — என்பது கருத்து.

பயிரைப் பாதுகாக்க வேண்டியது எல்லாவற்றிலும் முக்கியம் என்பதை, அப்பயிருக்கு உடையவன் தானே தினமும் நேராகக் கண்காணிக்க வேண்டும் :

1039. செல்லான் கிழவ னிருப்பி னிலம்புலந்
தில்லாளி னூடி விடும்.

ப. ரை: கிழவன் செல்லான் இருப்பின் நிலம் புலந்து இல்லாளின் ஊடி விடும்=நிலத்துக்கு உரியவன் தானே போய்ப் பார்க்காமல் இருந்தால் நிலம் வருத்தமடைந்து மனைவியைப் போலப் பிணங்கிவிடும்.

பொ. ரை: நிலத்துக்கு உடையவன் (நிலவளத்தை கவனித்துப் பயிரைப் பாதுகாக்க அடிக்கடி) நிலத்துக்குப் போகாமல் இருந்து விட்டால், அந்த நிலம் மனத்தாபமடைந்து மனைவியைப்போல் (உணவளிக்க) பிணங்கி விடும்.

வி-ம்: கிழவன் — சொந்தக்காரன். செல்லான் இருப்பின் — போகாதிருந்தால். புலந்து — வருத்தமடைந்து. ஊடி விடும் — பிணங்கி விடும். கணவன் மனைவியின் விருப்பத்தை அடிக்கடி விசாரித்து அவளுடைய நன்மைக்கான வற்றைச் செய்து மகிழ்ச்சியூட்டவேண்டும். அப்படிச் செய்யாத கணவனுக்கு அவள் சமைக்கவும் உணவளிக்கவும் பிணங்குவாள். அதைப்

போல, நிலத்துக்கு உடையவன் அடிக்கடி அதைப் பார்வையிட்டு அதற்கு வளம் ஊட்ட வேண்டும். இல்லாவிட்டால் அந்நிலம் அவனுக்கு உணவு கொடுக்கப் பிணங்கிவிடும். ஆதலால், நிலத்திற்குரியவன் அடிக்கடி அங்கே போகாமல் இருந்துவிட்டால் அந்த நிலம் மனைவியைப் போல் பிணங்கிக் கொண்டு அவனுக்கு உணவுப் பொருள் கொடுக்க மறுத்து விடும் — என்பது கருத்து.

நிலம் இருக்க, அதை உழுது நன்மையடையாமல் உணவுக்கு வழியில்லை யென்று சொல்லுகிறவர்களும் உண்டு. அப்படிப் பட்டவர்களை :

1040. இலமென் றசைஇ யிருப்பாரைக் காணி
னிலமென்னு நல்லா ணகும்,

ப. ரை : இலம் என்று அசைஇ இருப்பாரை காணில் நிலம் என்னும் நல்லாள் நகும் = (நிலத்தை வைத்துக் கொண்டு) பொருள் இல்லையே என்று சோம்பி இருப்பவர்களைக் கண்டால் நிலம் என்ற நல்லவள் நகைத்து ஏளனம் செய்வாள்.

பொ. ரை : நிலத்தை வைத்துக் கொண்டு, பணமில்லையே என்னும் சோம்பேறிகளைக் காணும்போது நிலமகளாகிய நல்லவள் சிரித்து ஏளனம் செய்வாள்.

வி - ம் : இலம் என்று — இல்லாதவராக இருக்கிறோமே என்று — ஏழையாக இருக்கிறோம் என்று. அசை - சோம்பல். அசைஇ - சோம்பி. நல்லாள் — உண வூட்டும் நல்லபெண். 'இலமென்று அசைஇ இருப்பாரை' என்பதிலுள்ள 'இருப்பாரை' என்ற சொல்லுக்கு 'இரப்பாரை' என்ற பாட பேதம் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த பாடபேதம் சிறிதும் பொருத்தமற்றது. ஏனெனில்: நிலம் உடையவர்களில் அதை உழுது பயிரிட்டு சுகப்படாமல் சோம்பேறிகளாக இருப்பவர்களைத்தான் நிலமகள் ஏளனம் செய்ய முடியும். ஒன்றுமில்லாமல் ஏழைகளாகப் பிச்சை யெடுப்பவர்களைக் கண்டு சிரித்து ஏளனம் செய்யலாமா? மேலும் சொந்த நிலமில்லாதவர்களை உழுது பயிரிடாத சோம்பேறிகள் என்று எப்படிச் சொல்லுவது? நிலத்துக்குச் சொந்தக்காரன் உண்டு என்பது முன்னைய குறளில் 'செல்லான் கிழவன் இருப்பின்' என்றதனுல் உறுதிப்படுகிறதே. ஆதலால் அந்த பாட பேதத்துக்குச் சலுகை காட்ட இடமே இல்லை. எனவே — நிலத்தை வைத்துக் கொண்டு, அதை உழுது பாடு படாத சோம்பேறிகள் 'உணவில்லையே', 'பணமில்லையே' என்பது இகழத்தக்கது — என்பது கருத்து.

அதி. 105—நல்குரவு

['நல்குரவு' என்றால் வறுமை, அதாவது தரித்திரம். ஏழையின் மனவேதனைகளை நினைப்பூட்டுவது இந்த அதிகாரம்.]

**1041. இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா தது.**

ப. ரை: இன்மையின் இன்னாதது யாது எனின், இன்மையின் இன்னாதது இன்மையே=வறுமையைப் போல் துன்பமுள்ளது எதுஎன்றால் வறுமையைப் போல் துன்பமுள்ளது வறுமையேதான்.

பொ. ரை: தரித்திரத்தைப் போல் கொடுமை செய்வது எது என்றால் தரித்திரத்தைப் போல் கொடுமை செய்வது தரித்திரமே தான்.

வி-ம்: இன்மை – ஏழ்மை. இன்னாதது – துன்பமுள்ளது – கொடுமை செய்வது. ஏழையாக இருப்பதைப் போன்ற துன்பம் வேறொன்றுமில்லை – என்பது கருத்து.

ஒன்றுமில்லாத ஏழைக்கு இந்தப் பிறப்பின் இன்பங்களை அனுபவிக்கவும் வழியில்லை; மறுபிறப்பை எண்ணவும் நிம்மதி இருக்காது:

**1042. இன்மை யெனவொரு பாவி மறுமையு
மிம்மையு மின்றி வரும்.**

ப. ரை: ஒரு பாவி இன்மை என இம்மையும் மறுமையும் இன்றி வரும் = ஒரு பாவியானவன் வறுமை என்ற பெயரோடு இம்மை (இன்பமும்) மறுமை (எண்ணமும்) இல்லாது போகச்செய்ய வரும்.

பொ. ரை: (ஒருவன் செய்த) ஒரு பாவம், தரித்திரம் என்ற பெயரால் இப்பிறப்பின் இன்பங்களையும் மறுபிறப்புக்கான எண்ணங்களையும் அவனுக்கு இல்லாமற் செய்துவிட வந்து சேரும்.

வி-ம்: இன்மை என–வறுமை என்பதாக. பாவி –பாவத்தின் உருவகம். 'மறுமையும் இம்மையும்' என்று, 'மறுமை' 'இம்மை'க்கு முன்னால் சொல்லப்பட்டிருப்பது எதுகைக்காக. ஒருவன் செய்த பாவத்தின் ஒரு பகுதிதான் 'வறுமை' என்ற பெயரால் வந்து அவனுக்கு இம்மைச் சுகமும் மறுமை நோக்கமும் இல்லாமற் கெடுத்து விடுவது – என்பது கருத்து.

எப்படி கெடுக்கிறதென்றால்:

**1043. தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக
நல்குர வென்னு நசை.**

ப. ரை: நல்குரவு என்னும் நசை தொல்வரவும் தோலும் தொகையாக கெடுக்கும்=வறுமை என்ற குற்றம் பழங் குடிப் பிறப்பையும் புகழையும் சேர்த்துக் கெடுத்து விடும்.

பொ. ரை: (குற்றங்களைச் செய்த பாவத்தின் பயனுகிய) தரித்திரம் என்ற குற்றம் (குறை) நல்ல குடிப் பிறப்பினுல் ஒருவனுக்குள்ள பெருமைகளையும் (அந்த நல்லகுடிக்கு இருந்து வரும்) புகழையும் ஏககாலத்தில் கெடுத்து விடும்.

வி-ம்: தொல் வரவு—பரம்பரையாக நல்ல குடும்பம் என்ற பெயர் படைத்த குடியிற் பிறந்த தன்மை. அதாவது அந்த நல்ல குடிக்குப் பரம்பரையாக இருந்து வரும் நல்லொழுக்கம், செல்வம் முதலிய சிறப்புகள் சேர்ந்த நிலைமை. தோல்—புகழ். நசை—குற்றம். குற்றம் செய்த பாவத்தின் பயனுக வந்ததால் நல்குரவு குற்றமாகச் சொல்லப்பட்டது—பாவத்தின் பயனுகிய வறுமை வந்து விட்டால் அது ஒருவனுக்கு நல்ல குடியிற் பிறந்ததனுல் கிடைத்த சிறப்புகளையும் அந்த குடும்பத்திற்கு இருந்து வரும் புகழையும் ஒருங்கே கெடுத்து விடும்—என்பது கருத்து.

வறுமை வந்து விட்டால் பரம்பரையாக 'நல்ல குடி' என்றிருந்த புகழ் கெடுவது எப்படியென்றுல்:

**1044 இற்பிறந்தார் கண்ணேயு மின்மை யிளிவந்த
சொற்பிறக்குஞ் சோர்வு தரும்.**

ப. ரை: இன்மை இல் பிறந்தார் கண்ணேயும் இளிவந்த சொல் பிறக்கும் சோர்வு தரும்=வறுமையானது (ஒழுக்கம் தவருத) நல்ல குடிப் பிறந்தவர்களிடத்திலும் கூட (அவர்களைப் பிறர்) பழிக்கத்தக்க பேச்சுகள் பிறக்கக்கூடிய தளர்ச்சியை உண்டாக்கி விடும்.

பொ. ரை: தரித்திரம் (வந்து விட்டால் ஒழுக்கத்தால் சிறந்த) நல்ல குடியிற் பிறந்தவர்களிடத்திலும் கூட, அவர்களைப் பற்றி இழிவான வதந்திகள் பிறக்கக் கூடிய பலவீனத்தை உண்டாக்கி விடும்.

வி-ம்: இளிவந்த—இகழத்தக்க, சொல் பிறத்தல்—அவதூறு பேச்சுகள் உண்டாதல். சோர்வு—ஒழுக்கம் தவறிவிடக் கூடிய பலக் குறைவு. வறுமை வந்து விட்டால் ஒழுக்கத்தாலுயர்ந்த நல்ல குடியிற் பிறந்தவர்களுக்கும் அவர்களைப்

பற்றி அபவாதப் பேச்சுகள் கிளம்பிவிடக் கூடிய பலவீன மான சூழ்நிலையை உண்டாக்கி விடும் — என்பது கருத்து.

ஒழுக்கம் தவருத பழக்க வழக்கமும் பரம்பரைக் குணமும் உள்ள நற்குடியிற் பிறந்தவர்களுடைய மனோதிடத்தையும் கூட வறுமை கெடுத்து விடும் என்ருல் மற்றுள்ள சாமானிய மனிதர்களைப்பற்றிக் கேட்பானேன்?:

1045. நல்குர வென்னு மிடும்பையுட் பல்குரைத்
துன்பங்கள் சென்று படும்.

ப. ரை: நல்குரவு என்னும் இடும்பையுள் பல்கு உரை துன்பங் கள் சென்று படும்=வறுமை என்னும் துன்பத்தில் பலவாகச் சொல்லப்படுகிற (எல்லா விதத்) துன்பங்களும் வந்து சேரும்.

பொ. ரை: தரித்திரம் என்ற ஒரு துன்பத்திஞல் பலவிதமாகச் சொல்லப்படுகிற மற்றெல்லாத் துன்பங்களும் வந்து சேரும்.

வி-ம்: பல்கு — பலவாகிய. பல்குஉரை — பலவிதங்களாக விரித்துரைக்கப்படுகிற, தரித்திரம் வந்து விட்டால் பொய், களவு, விபசாரம், கொலை முதலிய பலவிதமான குற்றங்களை யும் செய்து விட நேரும். அதனுல் — வறுமை என்ற ஒரு குறையினுல் பலவித குற்றங்களும் வந்து சேர்ந்து விடும் — என்பது கருத்து.

அப்படிப்பட்ட வறுமை உள்ளவராக இருந்தும், குற்றங்கள் ஒன்றும் செய்யாத மனவலிமையும் நல்லறிவும் உடையவர் களாக இருந்தாலும், ஏழைகள் என்பதனுல் அவர்களுக்கு செல்வாக்கு இருக்காது:

1046. நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்.

ப. ரை: நல் பொருள் நன்கு உணர்ந்து சொல்லினும் நல்கூர்ந் தார் சொல் பொருள் சோர்வு படும்=நல்ல அறிவை நன்ருக ஆராய்ந்து சொன்னுலும் ஏழைகள் சொல்லும் அறிவு வீணு கப் போய்விடும்.

பொ. ரை: நல்ல விஷயத்தை நன்ருக ஆராய்ந்த அனுபவத் தோடு சொன்னுலும் ஏழைகள் சொல்லும் விஷயம் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

வி-ம்: பொருள் — அறிவு — விஷயம். உணர்ந்து — ஆராய்ந்து அனுபவித்து. நல் கூர்ந்தார்—ஏழைகள். சோர்வுபடும் — மதிப்

பாரில்லாமல் போய்விடும். நன்ருக ஆராய்ந்த அனுபவத்தோடு சொன்னுலும்கூட ஏழைகள் சொல்லும் அறிவை யாரும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் – என்பது கருத்து.

வறுமையுள்ளவனை அவன் அறிவாளியாக இருந்தாலும் ஊரார் மதிக்க மாட்டார்கள் என்பது மட்டும் அல்ல :

1047. அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்
பிறன்போல நோக்கப் படும்.

ப. ரை : அறம் சாரா நல்குரவு ஈன்ற தாயானும் பிறன் போல நோக்கப் படும் = நல்வினைப்பயன் (சிறிதேனும்) சேராத வறுமை (உற்றவன்) பெற்ற தாயாலும் அயலான் போலக் கருதப்படுவான்.

பொ. ரை : புண்ணியப் பலன் சிறிதேனும் வந்து சேர்வதற்கில்லாத தரித்திரமுள்ளவன் பெற்றெடுத்த தாயாலும் அன்னியன் போல அசட்டை செய்யப்படுவான்.

வி-ம் : அறம் சாரா நல்குரவு – புண்ணியம் செய்திருந்த பயன் இல்லாத வறுமை. அதாவது உலகத்தில் பெரும்பாலும் மக்கள் நல்வினையும் செய்கிருர்கள், தீவினையும் செய்கிருர்கள். முற்றிலும் நல்வினையே செய்கிறவர்கள் வெகுசிலர். முற்றிலும் தீவினையே செய்பவரும் வெகு சிலர். நல்வினை அதிகமாகச் செய்பவர்களுக்குப் புண்ணியம் அதிகம். தீவினை அதிகமாகச் செய்பவர்களுக்குப் பாவம் அதிகம். பெரும்பாலும் மக்களுக்குப் பாவமும் புண்ணியமும் கலந்தே இருப்பதனுல் பாவத்தின் பயன் வரும்போது வறுமை அடைகிருர்கள். அது கடந்து புண்ணியப் பலன் வருகிறபோது வறுமை நீங்கி நலம் அடைகிருர்கள். ஆகையினுல் வறுமையும் வறுமையில்லாமையும் ஒவ்வொரு மனிதருக்கும் மாறி மாறி வரும். புண்ணியப் பயன் வருவதற்கு நல்வினையாகிய அறம் செய்திருக்க வேண்டும். அறமே செய்யாதவனுக்கு வந்து சேர்வதற்குப் புண்ணியப் பயனென்பதே இருக்காது. அதனுல் அவனுக்கு வந்த தரித்திரம் நீடித்ததாக இருக்கும். அதுதான் 'அறம் சாரா நல்குரவு' — நீடித்த வறுமை. வறுமை உள்ளவர்களுக்குப் பிறர் உதவி செய்வது இயல்பு. வறுமையுள்ளவர்களுக்குச் சிறிது காலம் உதவி செய்வதில் உற்ருர் உறவினர்க்குச் சலிப்பு வராது. ஆனுல் எப்போதும் வறுமை உள்ளவனுக்கு உதவி செய்வதில் நெருங்கிய உறவினர்களுக்கும் கூட அலுப்பும் அசட்டையும் வந்துவிடும். அதனுல் புண்ணியம் செய்த பயனே சிறிதும் இல்லாததால் எப்போதும் வறுமை உள்ளவனுகவே இருப்பவனை அவனைப் பெற்ற தாய்கூட அசட்டை செய்வாள் – என்பது கருத்து.

அப்படி எப்போதும் நீங்காத நித்திய தரித்திரம் உள்ளவனுக்கு ஒரு நாள் போவது ஒரு மலையாக இருக்கும்; அவன் தினந்தினம் எப்படி நடுங்குகிறான் என்றால் :

1048. இன்றும் வருவது கொல்லோ நெருநலுங்
கொன்றது போலு நிரப்பு.

ப. ரை: நெருநலும் கொன்றது போலும் நிரப்பு இன்றும் வருவது கொல்லோ = நேற்றும் (வந்து என்னைக்) கொன்று விடும்போல் (துன்பப்படுத்திய) வறுமை இன்றைக்கும் வருமோ.

பொ. ரை: 'நேற்றும் வந்து என்னைக் கொன்றுவிடும் போலத் துன்பப்படுத்திய தரித்திரம் இன்றைக்கும் வந்து விடுமோ' (என்று நித்திய தரித்திரமுள்ளவன் நடுங்குவான்).

வி - ம்: நெருநல் – நேற்று. நிரப்பு–வறுமை. நீங்காத வறுமையுள்ள ஒருவன் 'நேற்றும் வந்து என்னைக் கொன்று விடும் போலத் துன்பப்படுத்திய வறுமை இன்றைக்கும் வந்து விடுமோ' என்று நித்த நித்தம் நடுங்கிக் கொண்டேயிருப்பான் – என்பது கருத்து.

அப்படிப்பட்ட நித்திய தரித்திரனுக்கு நிம்மதியே இருக்காது :

1049. நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்
யாதொன்றும் கண்பா டரிது.

ப. ரை: நெருப்பினுள் துஞ்சலும் ஆகும்; நிரப்பினுள் யாது ஒன்றும் கண்பாடு அரிது = நெருப்பின் நடுவில் (இருந்து கொண்டு) தூங்கி விடவும் முடியும்; (ஆனால்) வறுமையில் இருந்து கொண்டு) ஓரளவு கூடத் தூங்க முடியாது.

பொ. ரை: நெருப்பின் மத்தியிலிருந்து கொண்டுகூட நித்திரை செய்து விடலாம்; ஆனால் தரித்திரத்தில் இருந்துகொண்டு கொஞ்சம் கூடத் தூங்க முடியாது.

வி - ம்: துஞ்சல் – தூங்குதல். யாதொன்றும் - சிறிதளவு கூட. கண்பாடு – கண் மூடுதல் – தூங்குதல். நெருப்பினிடை இருப்பவனுக்காவது நிம்மதி இருக்க முடியும்; ஆனால் வறுமையில் உள்ளவனுக்குத் துளி கூட நிம்மதி இருக்காது – என்பது கருத்து.

ஆகையினால் எப்போதும் ஏழைகளாகவே இருக்க நேர்ந்து விட்டவர்கள் என்ன செய்ய வேண்டுமென்றால் :

1050. துப்புர வில்லார் துவரத் துறவாமை
யுப்பிற்குங் காடிக்குங் கூற்று.

ப. ரை: துப்புரவு இல்லார் துவர துறவாமை உப்பிற்கும் காடிக்கும் கூற்று=(உயிர் வாழ்வதற்கு) வேண்டிய (இன்றியமையாத) பொருள்கள் இல்லாத (வறிய)வர்கள் அடியோடு (இல்லற) ஆசைகளை விட்டொழிக்காவிட்டால் (பிறர் வீட்டு) உப்புக்கும் புளித்த கஞ்சிக்கும் எமனாக (பிச்சையெடுக்க) வேண்டியதுதான்.

பொ. ரை: உயிர் வாழ்வதற்கு அத்யாவசியமான (உணவுக்கும்) வழியில்லாத, (நித்திய) தரித்திரர்கள் இல்லற ஆசைகளை முற்றிலும் விட்டொழித்துத் துறவறமாவது மேற்கொள்ள வேண்டும்; அப்படிச் செய்யாவிட்டால் பிறர் வீட்டு உப்பிற்கும் புளித்த கஞ்சிக்கும் கேடாக (பிச்சையெடுக்க) வேண்டியதுதான்.

வி-ம்: துவரத் துறவாமை—முற்றிலும் ஆசைகளை விட்டொழிக்காவிடில்—அதாவது பரம ஏழையானவன் ஆசைப்படுவது சிறிது உணவு, ஒரு பழந்துணி, ஒரு சிறு ஒதுங்குமிடம் இவைகளே. இந்த சொற்பத்தைக் கூட சம்பாதித்துக் கொள்ள முடியாத ஏழை அந்த சொற்ப ஆசைகளையும் கூட முற்றிலும் விட்டவனாகத் துறவறம் மேற் கொள்வது நல்லது. 'துப்புரவு இல்லார் துவரத் துறவாமை' என்றது வறுமையுள்ளவர்கள் தாம் துறவிகளாக வேண்டுமென்ற கருத்தில் சொல்லப் பட்டதல்ல. நீடித்த வறுமையினால் துன்பப்படுகிறவர்களில் அறிவுள்ளவர்களாவது துறவறம் மேற் கொள்வது நல்லது. ஏனெனில் துறவறம் மேற்கொண்டு விட்டால் மற்ற இல்லறத்தார் துறவிக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து ஆதரிப்பார்கள். அத்துடன் துறவறம் மேற் கொள்ளக் கூடிய நல்லறிவு இருந்தால் அது பாவத்தினால் வந்த வறுமைக்கும் பரிகாரமாகும்; ஆனால் அப்படி வறுமை காரணமாக இல்லற ஆசைகளை விட்டு விட்டுத் துறவறம் மேற்கொள்ளும் அறிவுடையார் இல்லை. அதனால், வாழ்க்கைக்கு வேண்டிய வசதிகள் சிறிதும் அடைய முடியாதபடி வறுமை என்ற பாவியினால் பிடிக்கப்பட்டவர்கள் துறவு மேற் கொள்வது நல்லது. அப்படிச் செய்யாததால் புளித்த கஞ்சிக்கும் உப்பிற்கும் கூடப் பிச்சையெடுக்க வேண்டியதுதான்—என்பது கருத்து. 'உப்பிற்கும் காடிக்கும்' என்றதனால் ஒரு வீட்டில் உப்பில்லாத காடியை வார்ப்பார்கள். அதற்கு உப்பிற்காக இன்னொரு வீட்டில் பிச்சை கேட்க வேண்டியிருக்கும் என்பதும் தோன்றும்.

அதி. 106—இரவு

['இரவு' என்பது இரத்தல்—பிச்சை கேட்பது. வறுமை மிகுந்து விட்டவர்கள் பிச்சை கேட்டுத்தான் உயிர்வாழ வேண்டியிருக்கிறது என்பதையும், பிச்சை கேட்பவர்களுக்கு இல்லையென்னுமல் கொடுக்க வேண்டியது மற்றவர்களுடைய கடமை என்பதையும் சொல்லுவது இந்த அதிகாரம்.]

**1051. இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்று.**

ப. ரை: இரத்தக்கார்க் காணின் இரக்க; கரப்பின் அவர் பழி தம்பழி அன்று = (பிச்சை கேட்கிறவர்கள்) பிச்சை கேட்கத் தக்க (செல்வ நிலையுள்ள)வர்களைக் கண்டால் பிச்சை கேட்கட்டும்; (அந்த செல்வ நிலையுள்ளர்கள்) இல்லை என்று மறைத்தால் அது அவர்களுக்குப் பாவம், பிச்சை கேட்டவர்கள் குற்றமல்ல.

பொ. ரை: பிச்சை கேட்கிறவர்கள், பிச்சை கேட்கத் தகுந்த (கொடுக்கத் தகுந்த) செல்வமுள்ளவர்களைக் கண்டு கேட்கட்டும்; அச்செல்வமுள்ளார் வைத்துக் கொண்டு இல்லையென்றால் அது அவர்களுக்குப் பாவமேயன்றி பிச்சை கேட்டவர்களுடைய குற்றமல்ல.

வி-ம்: 'இரத்தக்கார்' என்பது 'இரக்கத் தக்கார்' என்பதன் குறைவு. 'இரத்தக்கார்க் காணின்' என்பதற்கு 'உரையாமை முன்னுணரும் ஒண்மையுடையராய் மாற்றாது ஈவார்' என்று 'கேட்பதற்கு முன்னால் தாமே உணர்ந்து இரப்பவர்களுக்குக் கொடுக்கும் நல்லகுணமுள்ளவர்களைக் கண்டு இரக்க வேண்டும்' என்று பொருள் கொள்வது முற்றிலும் தவறு. ஏன் எனின் அப்படி இரப்பவர்கள் வாய்திறந்து கேட்கு முன் தாமே கொடுக்கக் கூடியவர்கள், கேட்டும் இல்லையென்று மறைக்கமாட்டார்கள். அப்படிப்பட்டவர்களைப் பற்றி 'கரப்பின் அவர் பழி' என்று சொல்ல இடமில்லை. மேலும் இரப்பவர்கள், தாம் கேட்பதற்கு முன் அவர்களாகக் கொடுக்கக் கூடிய மனமுடையவர்கள் என்று யாரை எப்படிக் கண்டு கொண்டு அதன் பிறகு கேட்க முடியும்? ஆதலால் 'இரத்தக்கார்க் காணின்' என்பதற்கு 'கொடுக்கக் கூடிய வசதிகள் உள்ளவர்கள் என்பதை அறிந்து' என்பதுதான் பொருள். அப்படி வசதி உள்ளவர்களை, அவர்களுடைய வீடு, வாசல், உடை, ஆபரணங்கள் முதலியவற்றால் மிகவும் எளிதாகக் கண்டு கொள்ளலாம். அப்படிச் செல்வம் உள்ளவர்களில் கொடுக்கக் கூடியவர்

களும் உண்டு. இல்லையென்று மறைக்கக் கூடியவர்களும் உண்டு. அவர்களைப்பற்றி 'கரப்பின் அவர்பழி தம் பழி யன்று' என்று சொல்லுவதும் பொருந்தும். 'அவர்பழி தம் பழி அன்று' என்பதிலுள்ள முதல் 'பழி'க்குப் 'பாவம்' என்றும் இரண்டாவது 'பழி'க்குக் 'குற்றம்' என்றும் பொருள் கொள்ள வேண்டும். எனவே - கொடுக்கக் கூடிய வசதியுள்ளவர்களைப் பார்த்து பிச்சை கேட்கலாம். அவர்கள் இல்லையென்ருல் அவருக்குத்தான் பாவம். கேட்பது குற்ற மல்ல — என்பது கருத்து.

அப்படிப் பிச்சை கொடுக்கக் கூடிய வசதிகள் உள்ளவர் களையே பார்த்துக் கேட்டாலும் :

1052. இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை
துன்ப முருஅ வரின்.

ப. ரை : இரந்தவை துன்பம் உருஅ வரின் ஒருவற்கு இரத்தல் இன்பம்=பிச்சை கேட்ட பொருள்கள் துன்பம் இல்லாமல் கிடைக்குமாளுல் ஒருவனுக்குப் பிச்சை கேட்பதும் இன்பம் தரக்கூடியதாகும்.

பொ. ரை: பிச்சை கேட்ட பொருள்கள் (கொடுப்பவருக்கோ வாங்குகிறவனுக்கோ) வருத்த முண்டாகாமல் கிடைக்கு மாளுல் பிச்சை யெடுப்பதும் ஒருவனுக்கு இன்பமுண்டாக் கக் கூடியதுதான். (ஆளுல் அப்படி கிடைப்பதில்லை).

வி — ம் : இரந்தவை — பிச்சை யெடுப்பவன் கேட்ட பொருள் கள். ஒருவன் பலரிடத்தில் பிச்சை கேட்பான்; வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு பொருளைக் கேட்பான். அதளுல் 'இரந்தவை' என்று பன்மையில் சொல்லப்பட்டது. 'துன் பம் உருவரின்' என்பதற்கு, பிச்சை கொடுப்பவருக்கோ அல் லது பிச்சை கேட்டவனுக்கோ வருத்தம் உண்டாகாதபடி என்று கொள்ள வேண்டும். கொடுப்பவருக்கு வருத்தம் எப் படியென்ருல், கொடுக்க மனமில்லாமல் கசந்து கொண்டு சங் கடத்தோடு கொடுப்பது. வாங்குகிறவனுக்கு வருத்தம் எப் படி யென்ருல் கொடுப்பவன் அவனை இகழ்ந்து பேசிப் பின் கொடுப்பது. எனவே — பிச்சை கொடுப்பவர்கள் மனக் கசப் போடாவது, பிச்சைக்காரனைத் திட்டாமலாவது கொடுப்பார் களாளுல் பிச்சை யெடுப்பதும் இன்பமாகத்தானிருக்கும் — என்பது கருத்து.

ஆளுல், மனச்சங்கடம் இல்லாமலாவது இகழாமலாவது இரப்பவர்களுக்குக் கொடுப்பவர்கள் வெகு சிலரே. அதளுல் இரப்பது இன்பமான காரியமல்ல. ஆளுலும் இல்லையென்று

மலும் இகழாமலும் ஏழைகளுக்கு உதவி செய்வது நம்கடமை யென்ற அறிவுடையவர்களும் உண்டு. அப்படிப்பட்டவர்களி டம் பிச்சை கேட்பது :

1053. கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின்
றிரப்புமோ ரேஎ ருடைத்து.

ப. ரை : கரப்பு இலா நெஞ்சின் கடன் அறிவார் முன் நின்று இரப்பும் ஓர் ஏஎர் உடைத்து=கள்ளம் இல்லாத நெஞ்சமுடையவராக (இரப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டியது) கடமை என்ற அறிவுடையவர்களுக்கு முன்னால் நின்று பிச்சை கேட்பதும் ஒரு அழகுடைய காட்சிதான்.

பொ. ரை : கபடமற்ற மனமுடையவராக (ஏழைகளுக்கு உதவி செய்ய வேண்டியது) தம் கடமை என்பதை அறிந்தவர்களுக்கு முன் நின்று பிச்சை கேட்பது ஒரு அழகான காட்சி தான்.

வி-ம் : கரப்பு — உள்ளதை ஒளிக்கும் கள்ளத்தனம். இரப்பு — இரப்பது. 'ஏஎர்' — 'ஏர்' என்பதன் நீட்டம். ஓசைக் குறைவைப் பூர்த்தி செய்ய நீண்டது. ஏர் — அழகு 'முன்னின்று இரப்பும் ஓர் ஏர்' என்றது, கடனறிந்த கொடையாளிக்கு முன்னால் ஏழை வந்து நின்ற உடன் வந்தவன் ஏழை என்பதை அறிந்து, அவனுக்கு, என்ன வேண்டுமென்பதைப் பரிவுடன் விசாரித்து, இல்லையென்னமலும் இகழாமலும் செய்ய வேண்டிய கடமையாக அந்தக் கொடையாளி உதவி செய்யும் காட்சி உலகத்தில் அடிக்கடி பார்க்க முடியாத அபூர்வ காட்சியானதால் அதை அழகான காட்சி என்றார். கபடமற்ற மனமுள்ளவராக இரந்தவர்களுக்குக் கொடுக்க வேண்டியது கடமை என்று அறிந்தவர்களிடம் பிச்சை கேட்பது ஒரு அழகான காட்சிதான் — என்பது கருத்து.

அப்படிப்பட்ட கள்ளமற்ற மனமுள்ள கடமை உணர்ந்தவர்களுக்கு :

1054. இரத்தலு மீதலே போலுங் கரத்தல்
கனவிலுந் தேற்றாதார் மாட்டு.

ப. ரை : கரத்தல் கனவிலும் தேற்றாதார் மாட்டு இரத்தலும் ஈதலே போலும் — (உள்ளதை இல்லையென்று) மறைப்பதைக் கனவிலும் அறியாதவர்களிடத்தில் (ஒருவன் வந்து) இரந்து கேட்பதும் (அவர்களுக்கு அவன்) கொடுப்பதே போன்றது (என்று அவர்கள் வரவேற்பார்கள்).

பொ. ரை : (வைத்துக் கொண்டு, கேட்பவர்களுக்கு இல்லை யென்னும் தன்மையைக் கனவிலும் அறியாதவர்களிடத்தில் (ஒருவன் சென்று) தானம் கேட்பதையும் (அவர்கள் அவன் தமக்கு தானம்) கொடுப்பதைப் போலவே (வரவேற்பார்கள்).

வி - ம் : தேற்றாதார் – அறியாதார். கனவிலும் தேற்றாதார் – துளிகூட அறியாதவர்கள். அதாவது துளிகூட இல்லாதவர்கள். 'இரத்தலும் ஈதலே போலும்' என்றால் கேட்பதும் கொடுப்பதே போல. அதாவது பிச்சை கேட்பவர்கள் வந்தால் அவர்கள் தமக்குப் புகழும் புண்ணியமும் கொடுக்க வந்தவர்கள் என்று கருதுவது. எனவே – பிச்சை கேட்பவர்களுக்கு இல்லை யென்று சொல்லும் வழக்கமே துளிகூட இல்லாதவர்கள், தாம் தானம் கொடுப்பதைத் தமக்குப் புகழையும் புண்ணியத்தையும் வாங்கிக் கொள்வதாகவே கருதுவார்கள் – என்பது கருத்து.

அப்படிக் கருதுகின்ற உத்தமர்கள் உலகத்தில் உண்டு. அதனாற்றான் :

> **1055.** கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின்
> றிரப்பவர் மேற்கொள் வது.

ப. ரை : கரப்பு இலார் வையகத்து உண்மையான் இரப்பவர்கண் இன்று மேற் கொள்வது = ஒளிக்காமல் கொடுப்பவர்கள் உலகத்தில் இருப்பதனால் (தான்) பிச்சை கேட்பவர்கள் (ஆலோசிக்காமல் எல்லாரிடத்திலும்) பிச்சை கேட்பது.

பொ. ரை : இல்லையென்னாமல் கொடுப்பவர்கள் உலகத்தில் (அங்கங்கே) இருப்பதனால்தான் பிச்சைக்காரர்கள் ஆலோசனையில்லாமல் (எல்லாரிடத்திலும்) பிச்சைகேட்டு விடுவது.

வி - ம் : உண்மையான் – உண்டு என்பதால் – இருப்பதால். 'கண்ணின்று' என்பதை 'கண் + நின்று' எனப் பிரித்து 'முன்னால் நின்று' என்று பொருள் கொள்ளக்கூடாது. 'கண் + இன்று' என்று பிரித்து, கண் இல்லாதவர்களாக' – அறிதல் இல்லாதவர்களாக என்று பொருள் கொள்ள வேண்டும். அதாவது உலகத்தில் இல்லையென்னாமல் கேட்டவுடன் கொடுக்கிறவர்கள் அங்கங்கே இருக்கிறார்கள். ஆனால் அந்த குணமுள்ளவர்கள் யாரென்பதைக் கேட்கு முன்னால் அறிய முடியாது, கேட்ட பிறகுதான் அறிய முடியும். அப்படி அறிந்து கொள்ள முடியாமல்தான் பிச்சை கேட்பவர்கள் கண்டவர்களிடத்திலெல்லாம் கண்மூடித்தனமாக பிச்சை

கேட்டு விடுகிறார்கள் என்பது அனுபவம். அதனால் – ஒளிக்காமல் கொடுப்பவர்கள் உலகத்தில் அங்கங்கே இருப்பதனால் தான் பிச்சை கேட்பவர்கள் அறியாத்தனமாக எல்லாரிடத்திலும் பிச்சை கேட்கிறார்கள் – என்பது கருத்து.

உதவி செய்யத் தக்க, செல்வமிலே உள்ளவர்களில் பிச்சைக்காரர்களுக்கு இல்லையென்னாமல் கொடுப்பவர்கள் வெகு சிலராக இருப்பதனால்தான் பிச்சைக்காரர்கள் யாரைக் கேட்கலாம் யாரைக் கேட்கக் கூடாது என்பதை அறியாமல் எல்லாரிடத்திலும் கேட்டு விடுகிறார்கள். ஆனால் செல்வமுள்ளவர்கள் எல்லாருமே ஒளிக்காமல் கொடுக்கக்கூடிய மனமுள்ளவர்களாக இருந்து விட்டாலோ :

1056. கரப்பிடும்பை யில்லாரைக் காணி னிரப்பிடும்பை
யெல்லா மொருங்கு கெடும்.

ப. ரை : கரப்பு இடும்பை இல்லாரை காணின் நிரப்பு இடும்பை எல்லாம் ஒருங்கு கெடும் = (வைத்துக் கொண்டு இல்லையென்று) மறைக்கும் குற்றம் இல்லாதவர்களை (உலகம்) பெற்றால் வறுமையின் துன்பங்கள் எல்லாம் ஒருமிக்க ஒழியும்.

பொ. ரை : வைத்துக்கொண்டு இல்லையென்று மறைக்கிற குற்றம் இல்லாதவர்களை உலகம் உடையதானால் வறுமையினால் வரும் எல்லாத் துன்பங்களும் உடனே ஒழிந்து போகும்.

வி - ம் : 'கரப்பிடும்பை' என்பதிலுள்ள 'இடும்பை'க்கு 'குற்றம்' என்பது பொருள். 'நிரப்பிடும்பை' என்பதிலுள்ள 'இடும்பை'க்குத் 'துன்பம்' என்பது பொருள். 'காணின்' என்பதற்கு இங்கே 'பார்த்தால்' என்பது பொருளல்ல. 'பெற்றால்' அல்லது 'உடைத்தாயிருந்தால்' என்பது பொருள். எனவே – உலகத்தில் செல்வமுள்ளவர்கள் எல்லாரும் இல்லையென்னாமல் கேட்டவர்களுக்குக் கொடுக்கக் கூடியவர்களாக இருந்து விட்டால், பிச்சையெடுக்க வேண்டிய துன்பமே இருக்காது – என்பது கருத்து.

எல்லாச் செல்வர்களும் அப்படி இல்லையென்னாது கொடுக்கக் கூடியவர்களாக இருப்பது உலகத்தில் முடியாத காரியம். அதனால் பிச்சையெடுக்கும் துன்பம் இருந்து கொண்டேதான் இருக்கிறது. எல்லாப் பணக்காரர்களும் இல்லையென்னாமல் கொடுப்பது முடியாதென்றாலும், கொடுக்கிறவர்களாவது திட்டாமல் வையாமல் கொடுப்பார்களானால் பிச்சை யெடுப்பதிலுள்ள துன்பம் குறைந்து :

**1057. இகழ்ந்தெள்ளா தீவாரைக் காணின் மகிழ்ந்துள்ள
முள்ளு ளுவப்ப துடைத்து.**

ப. ரை: இகழ்ந்து எள்ளாது உள்ளம் மகிழ்ந்து ஈவாரை காணின் உள்உள் உவப்பது உடைத்து = (இரப்பவரை) அவமதித்து இழிவாகப் பேசாமல் மனம் மகிழ்ந்து கொடுப்பவர்கள் உண்டானுல் உள்ளாகியிருக்கிற (இரத்தல்) உள்ளேயும் மகிழ்ச்சி உண்டு.

பொ. ரை: பிச்சை கேட்பவரை அவமதித்து இழிவாகப் பேசாமல் மனமகிழ்ச்சியுடன் (அவர்களுக்குக்) கொடுப்பவர்கள் இருந்தால் (பிச்சை கேட்பவர்கள்) உட்பட்டிருக்கிற பிச்சையெடுப்பதிலும் இன்பம் உண்டு.

வி-ம்: 'உள்ளம் மகிழ்ந்து' என்பது எதுகைக்காக 'மகிழ்ந்துள்ளம்' என்றிருக்கிறது. அதை 'இகழ்ந்து எள்ளாது உள்ளம் மகிழ்ந்து' என்று சேர்ப்பது சிறப்புடையது. எனெனில் 'உள்ளம் மகிழ்ந்து உவப்பதுடைத்து' என்பதில் ஒரே பொருளுள்ள 'மகிழ்ந்து', 'உவப்பது' என்பவை அடுத்தடுத்து இருப்பதில் அழகில்லை. 'உள்ளுள்' என்பதை 'உள்ளியதன் உள்' அல்லது 'உட்பட்டிருப்பதன் உள்' என்று கொள்வது மிகவும் சிறப்புடையது. 'உள்ளியதன் உள்' என்ருல் 'எண்ணியதனுள்' என்று பொருள்படும். அதாவது இரப்பவர்கள் எண்ணிவந்த இரத்தலில். 'உட்பட்டிருப்பதின் உள்' என்று கொண்டாலும் அதுவே. கேட்காமலும் பிச்சைக்காரர் வந்த உடன் கொடுப்பவர்கள் மிக மிகவும் அபூர்வம். கேட்டபின்னுவது உடனே கொடுக்கிறவர்கள் வெகு சிலர். பலமுறை கெஞ்சியபின் கொடுக்கிறவர்கள் அதைவிட சற்று அதிகம். ஆனுல் அவர்களுக்குள்ளும் அலட்சியம் காட்டாமல், இழிமொழிகளால் திட்டாமல். மனமுவந்து கொடுப்பவர்கள் மிகவும் அரிது. ஆகையினுல் இரப்பதில் மகிழ்ச்சியே கிடைப்பதில்லை. அதனுல் – பிச்சை கொடுப்பவர்களாவது அவமதிக்காமலும் 'வசை மொழிகளால் ஏசாமலும் மனமகிழ்ந்து கொடுப்பார்களானுல் பிச்சை கேட்பதில் உள்ள துன்பம் குறைந்து மகிழ்ச்சி கிடைக்கும் – என்பது கருத்து.

இரப்பவர்கள், தமக்கு மகிழ்ச்சியற்ற காரியமாகிய இரந்து கேட்பதைத்தான் செய்கிருர்கள் என்ருலும் அவர்கள் இல்லாவிட்டால் இந்த உலக வாழ்க்கை எப்படியிருக்குமென்ருல்:

**1058. இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞால
மரப்பாவை சென்றுவந் தற்று.**

ப. ரை: ஈர்ங்கண்மா ஞாலம் இரப்பாரை இல்லாயின் மரப்பாவை சென்று வந்து அற்று = ஈரமுள்ள இடமாகிய (இங்

தப்) பெரிய உலகம் இரப்பவர்களை (உடையதாக) இல்லாவிடில் (அதிலுள்ள மக்களின் வாழ்க்கை) மரப்பாவை (சூத்திரக் கயிற்ருல் இழுக்கப்பட்டு) வருவதையும் போவதையும் போன்றது (தான்).

பொ. ரை: ஈரமுள்ள இடமாகிய இவ்வுலகம் பிச்சை கேட்பவரையும் உடையதாக இல்லாவிட்டால் (அதிலுள்ள மனிதர்களின் செயல்கள் உயிரோ உணர்ச்சியோ இல்லாமல் சூத்திரக் கயிற்ருல் ஆட்டப்படும்) மரப்பொம்மைகள் வருவதையும் போவதையும் போன்றவையே.

வி-ம்: ஈர்ங்கண் – ஈரமுள்ள இடம். 'ஈரம்' என்ற சொல் 'ஈர்ம்' என்று மாறி ஈர்ம் + கண் இரண்டும் புணர்ந்து 'ஈர்ங்கண்' என்று வந்தது. கண் – இடம். 'ஈர்ங்கண் மாஞாலம்' என்றது நீர் சூழ்ந்ததாகப் பலவிதமான செடி கொடி மரங்களும் எண்ணிறந்த சீவராசிகளும் உள்ளதாகப் பரந்திருக்கின்ற பெருமையைக் குறிப்பிட்டு, அப்படிப்பட்ட உலகில் அறிவு படைத்த மனிதர்கள் கொடுப்பாரும் கொள்வாரும் இன்றி மரப்பாவைகள் போல் திரிகின்ற காட்சியை நினைப்பூட்ட. எனவே – இரப்பவர்களும் கொடுப்பவர்களும் இல்லாவிட்டால் இந்த உலகத்தில் மனிதர்களுடைய வாழ்க்கை சீவனற்ற பொம்மலாட்டத்தை ஒத்ததே – என்பது கருத்து.

மனிதருக்குப் புகழும் புண்ணியமும் வருவது பிறருக்குக் கொடுக்கும் குணத்தினுல்தான். அதனுலும் பிச்சை கேட்பவர்கள் இல்லாவிட்டால்:

**1059. ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண்
மேவா ரிலாஅக் கடை.**

ப. ரை: இரந்து கோள் மேவார் இலாக்கடை ஈவார்கண் என் தோற்றம் உண்டாம் = கேட்டு வாங்கிக் கொள்ளுவதை மேற்கொள்வார் இல்லாவிடத்து கொடுக்கிறவர்களுக்கு எப்படிப் பெருமை வரும்?

பொ. ரை: தானம் கேட்டு வாங்கிக் கொள்வதை மேற்கொள்ளுகிறவர்கள் இல்லாவிட்டால் கொடுக்கக் கூடியவர்களுக்கு (செல்வர்களுக்கு) எப்படிப் பெருமை உண்டாகும்?

வி-ம்: 'மேவார்' என்பது 'மேவுவார்' என்பதன் குறைவு. 'ஈவார்' என்ற பதத்திற்குச் சரியான எதுகையாக்க 'மேவார்' என்று குறுக்கப்பட்டது. இரந்து கோள் – இரந்து கேட்டு வாங்கிக் கொள்ளுவது. இலா அக்கடை – இலாக்கடை – இல்லாவிடில். தோற்றம் – சிறப்புடையவராக விளங்குவது – பெருமை. இரப்பவர்களுக்குக் கொடுப்பவர்களுக்குத்

தான் பெருமை வருகிறது. அந்தப் பெருமை புகழும் புண்ணியமும் என்று சொல்லப்படுவது. ஈவார் — என்பதற்கு கொடுக்கச் செல்வமுள்ளவர்கள் என்பது பொருள். எனவே — இரந்து கேட்டு வாங்கிக் கொள்ள யாரும் இல்லையென்றால் செல்வமுள்ளவர்களுக்குப் புகழோ புண்ணியமோ எப்படி வரும்? — என்பது கருத்து.

வறுமையினால்தான் இரக்கவேண்டி யிருக்கிறது. அந்த வறுமை பாவத்தினால் வருவது. அந்த பாவம் தமக்கும் வந்து விடாமலிருக்க, வசதியுள்ளவர்கள் இரப்பவர்களுக்குக் கொடுக்க வேண்டும்:

**1060. இரப்பான் வெகுளாமை வேண்டும் நிரப்பிடும்பை
தானேயுஞ் சாலுங் கரி.**

ப. ரை: இரப்பான் வெகுளாமை வேண்டும்; நிரப்பு இடும்பை தானேயும் சாலும் கரி = (உடையவர்கள் தம்மிடம் வந்து) இரப்பவனைக் கோபித்துக் கொள்ளக் கூடாது; (அதை உணர்த்துவதற்கு) இரப்பவன் வறுமையினால் படுகிற துன்பங்களே போதுமான உதாரணம்.

பொ. ரை: யாரும் தம்மிடம் வந்து இரப்பவனைக் கோபித்து (வெருட்டி) விடக் கூடாது. (அப்படிச் செய்வதால் அந்த இரப்பவனுக்குள்ளது போன்ற வறுமைப் பாவம் தமக்கும் வந்து விடலாம் என்பதை உணர்த்த) இரப்பவன் வறுமையினால் படுகிற துன்பங்களே போதுமான உதாரணம்.

வி-ம்: 'இரப்பான் வெகுளாமை வேண்டும்' என்பதற்கு இரப்பானை இரக்கப்படுகிறவர்கள் வெகுளாமை வேண்டும் என்றே பொருள் கொள்ள வேண்டும். ஏன் எனில் இரப்பவன் கெஞ்சிக் கேட்பவனே. அவன் கோபங் கொள்வான் என்று சொல்ல நியாயமில்லை. இரப்பவன்மேல் இரக்கப்பட்டவர்கள் கோபித்து வெருட்டி இல்லையென்பதுதான் நித்த நித்தம் நடப்பது. மேலும் 'உலகத்தில் இரப்பவர்கள் இருக்கத்தான் இருப்பார்கள். அவர்களுக்கு மற்றவர்கள் கொடுக்கத்தான் வேண்டும்' என்பதை வலியுறுத்த இந்த அதிகாரம் வகுக்கப்பட்டதே யன்றி, 'பணக்காரர்கள் பிச்சைக்காரர்களுக்கு இல்லையென்றுதான் சொல்லுவார்கள். அதற்காகப் பிச்சைக்காரர்கள் கோபித்துக் கொள்ளக்கூடாது' என்பதைச் சொல்வதற்கல்ல. அன்றியும் 'இல்லை யென்றால் இரப்பவன் கோபிக்கக் கூடாது' என்று பொருள் கொண்டால் அவன் படுகிற துன்பத்துக்கு அவனையே உதாரணமாக அவனுக்கே சொல்லுவதாகிறது. அது இலக்கியக் குற்றமாகிறது மட்டுமல்லாமல், பிச்சைக்காரன் தான்படும் துன்

பத்திலிருந்து தானே ஞான மடையக்கூடிய நிதானம் அவனுக்கு எப்படி வரும்? சாலும் – போதும். கரி – உதாரணம். ஆதலால் – தம்மிடம் வந்து பிச்சை கேட்பவனை யாரும் கோபித்து இல்லையென்று சொல்லக் கூடாது. ஏனெனில் அவன் வறுமையுற்று பிச்சை கேட்டு அலைகிற துன்பங்கள் தமக்கும் வந்து விடலாம் என்பதை அவனைப் பார்த்தே அறிந்து கொள்ள வேண்டும் – என்பது கருத்து.

அதி. 107—இரவச்சம்

['இரவச்சம்' என்பது இரப்பதற்கு அஞ்சுவது. அதாவது பிச்சை கேட்கக் கூசுவது. 'அச்சம்' என்பதற்கு இங்கே 'கூசி விலக்குவது' என்பது பொருள். மனிதன் பிச்சை கேட்பது மிகவும் மானக்கேடான காரியமானதால் ஏழையானவனும் கூடுமானவரையில் பிச்சை கேட்பதை விலக்கவே வேண்டுமென்கிற மானத்தையும், விலக்க முடியாமல் இரந்து கேட்கிறவர்களுக்கு 'இல்லை' என்று சொல்லுகிற செல்வர்களின் இழிவையும் கூறுவது இவ்வதிகாரம்.]

1061. கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு
மிரவாமை கோடி யுறும்.

ப. ரை: கரவாது உவந்து ஈயும் கண் அனார் கண்ணும் இரவாமை கோடி உறும் = ஒளிக்காமல் மனம் மகிழ்ந்து கொடுக்கும் கண் போன்றவர்களிடத்திலும் பிச்சை கேட்காதிருப்பது (கேட்பதை விட) கோடி மடங்கு பெறும்.

பொ. ரை : இல்லை யென்னாமல் கொடுக்கக் கூடிய கண் போன்ற (மிகச் சிறந்த)வர்களிடத்திலும் போய், பிச்சை கேட்காமலிருப்பது (பிச்சை கேட்டு எவ்வளவு வாங்கினாலும் அதை விட) கோடி மடங்கு நல்லது.

வி-ம்: கண்ணும் – இடத்திலும். உறும் – பெறும். இல்லையென்னாமல் மனமுவந்து கொடுக்கிறவர்களிடத்திலும் கூடப் பிச்சை கேட்காமலிருப்பதே மிகச் சிறந்த குணம் – என்பது கருத்து.

பிச்சை கேட்பது மிகவும் விலக்க வேண்டிய காரியம் என்பதை அறிந்தவர்களாகப் பிச்சை கேட்கக் கூசுகின்றவர்களிலும் பல பேர் பிச்சை வாங்கியேதான் பிழைக்க வேண்டியிருக்கிறதே என்பதை எண்ணும் போது:

1062. இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து
கெடுக வுலகியற்றி யான்.

ப. ரை: இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் உலகு இயற்றியான் பரந்து கெடுக=பிச்சை வாங்கித்தான் உயிர்வாழ வேண்டும் என்ருல் (அப்படி இந்த) உலகத்தைப் படைத்தவன் (பிச்சைக்காரரைப் போல்) அலைந்து கெட்டுப் போகட்டும்.

பொ. ரை: (பலர்) பிச்சையெடுத்தேதான் பிழைக்க வேண்டும் என்ருல் (அப்படிப்பட்ட நிலைமையுள்ள இந்த) உலகத்தை உண்டாக்கினவன் (யாரோ அவன் பிச்சைக்காரர்களைப் போல்) அலைந்து திரிந்து (பிச்சை கிடைக்காமல்) அழிந்து போகட்டும்.

வி-ம்: உலகியற்றியான் – உலகத்தை உண்டாக்கியான். 'இயற்றியான்' என்பதற்கு 'நடத்துகிறவன்' என்று பொருள் செய்து, 'உலகியற்றியான்' என்பதற்கு 'உலகியலை நடத்துகின்ற அரசன்' என்று கொண்டு. 'உலகு' என்பதற்கு உலகத்தின் ஒரு பகுதியாகிய 'நாடு' என்று கொண்டு – இந்தக் குறளுக்கு 'பிச்சை யெடுத்து உயிர் வாழ வேண்டியிருக்கும் மக்களுள்ள நாட்டின் அரசியலை நடத்தும் மன்னன் (அரசாட்சி) ஒழிந்து போகட்டும்' என்ற கருத்தைச் சொல்லுவதை ஒரு பேரறிஞரிடம் கேட்டதுண்டு. அப்படிப் பொருள் சொல்லுவது இப்போது உலகிலுள்ள சூழ்நிலைகளுக்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றினும் திருவள்ளுவர் அதை எண்ணியிருப்பாரா என்பதை ஆலோசிக்க வேண்டும். வள்ளுவருடைய கருத்து அதுவாக இருக்கலாமோ என்று அனுமானிக்கவும் கூட அகச்சான்றுகளில்லை. அகச் சான்றுகள், அப்படி வள்ளுவர் எண்ணியிருக்க முடியாது என்பதற்கே ஆதாரமாக உள்ளன. ஆதலால் இது பிச்சை யெடுப்பதின் துன்பங்களைக் காணும் பரிதாபத்தால் தெய்வத்தை நொந்து கொள்வதாகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே – மக்களிற் பலர் பிச்சை யெடுத்தே தான் உயிர் வாழ வேண்டிய நிலைமையை உலகத்தில் உண்டாக்கிய தெய்வம் தானும் பிச்சையெடுத்து நாசமாய்ப் போகட்டும் – என்பது கருத்து.

பிச்சையெடுக்க வேண்டிய நிலைமையை உலகத்தில் உன் உண்டாக்கியது மனிதனல்லவென்பது அறியக் கிடப்பதால் பாவத்தின் பயனுகிய தரித்திரத்தைப் பிச்சை யெடுத்து நீக்கி விட முடியுமா? :

1063. இன்மை யிடும்பை யிரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.

ப. ரை: இன்மை இடும்பை இரந்து தீர்வாம் என்னும் வன்மையில் வன்பாட்டது இல்=வறுமையின் துன்பத்திலிருந்து பிச்சை யெடுப்பதால் நீங்கி விடலாம் என்று எண்ணுவதை விட முரட்டுப் பிடிவாதமுள்ளது வேறில்லை.

பொ. ரை: தரித்திரத்தின் கொடுமையைப் பிச்சையெடுத்தே தீர்த்துவிடலாம் என்று நம்புவதை விட முரட்டுப் பிடிவாதமுள்ளது வேறொன்றுமில்லை.

வி-ம்: இன்மை இடும்பை — வறுமை நோய். வறுமைநோய் பாவத்தினால் வருவது என்று 'நல்குரவு' என்ற அதிகாரத்தில் 'இன்மை என ஒரு பாவி' என்றதனால் சொல்லப்பட்டது. ஆதலால் அது தீவினைப்பயன். அதை அனுபவித்துத் தான் தீர வேண்டும். இரந்து தீராது. ஆதலால் — வறுமை என்ற தீவினைப்பயனை இரப்பதனால் தீர்த்துக் கொள்ளலாம் என்று எண்ணினால் அது முரட்டுப் பிடிவாதம் — என்பது கருத்து.

வறுமை நோய் பாவத்தால் வருவது என்றும் அதை அநுபவித்தே தீரவேண்டுமே யன்றி பிச்சை யெடுப்பதால் தீர்ந்து விட முடியாதென்றும் நம்பி, பிச்சை கேட்க மனம் வராத மானிகள் உண்டு. அவர்களுடைய பெருமை:

1064. இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக்
காலு மிரவொல்லாச் சால்பு.

ப. ரை: இடம் இல்லாக் காலும் இரவு ஒல்லா சால்பு இடம் எல்லாம் கொள்ளா தகைத்தே = (பொருளுக்கு) வழியில்லாத காலத்திலும் பிச்சை கேட்க இசையாத பெருங்குணம் (வையகம் வானகம் முதலிய) எல்லா இடமும் (சேர்ந்தாலும்) கொள்ள முடியாத பெருமையுள்ளது.

பொ. ரை: (வருவாய்க்கு) வழியே இல்லாத காலத்திலும் கூடப் பிச்சை கேட்க இணங்காத பெருங்குணம் (அண்டங்களெல்லாம் அடங்கியிருக்கிற ஆகாயம் என்ற) எல்லா இடமும் சேர்ந்தாலும் போதாது என்னும்படி அவ்வளவு பெரியது.

வி-ம்: 'இடம்' — 'செல்வம்' — 'வெளியிடம்' என்ற இரண்டு அர்த்தங்களில் நிற்கிறது. சால்பு — உயர்குணம். வறுமைத் துன்பம் எவ்வளவு வந்து விட்டாலும் பிச்சையெடுக்க விரும்பாத பெருங்குணம் அளவிட முடியாத பெருமையுடையது — என்பது கருத்து.

ஆகையினால்:

1065. தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த
துண்ணலி னூங்கினிய தில்.

ப. ரை: தெள் நீர் அடு புற்கை ஆயினும் தாள் தந்தது உண்ணலின் ஊங்கு இனியது இல்=தெளிந்த நீர் போலக் காய்ச்சப்பட்ட கஞ்சியானாலும் (தன்) உழைப்பினால் கிடைத்ததை உண்பதை விட இனிமையானது வேறில்லை.

பொ. ரை: தெளிந்த நீரைப் போல் (உணவுப் பொருள் அதிகம் இல்லாமல்) சமைக்கப்பட்ட வெறும் கஞ்சியானாலும், தன்னுடைய சொந்த உழைப்பினால் சம்பாதிக்கப்பட்டதை உண்பதைக் காட்டிலும் இன்பமளிக்கக் கூடியது வேறில்லை.

வி - ம்: 'அடு' – அடுகிற –சமைக்கிற. புற்கை – கஞ்சி. தாள் – முயற்சி – உழைப்பு. தாள்தந்த – சொந்த முயற்சியினால் வந்த. ஊங்கு – அதைவிட. வெறும் சத்தில்லாத கஞ்சியானாலும் (பிச்சை வாங்காமல்) தன் சொந்த உழைப்பினால் சம்பாதித்து உண்பதைக் காட்டிலும் இன்பம் வேறொன்றுமில்லை– என்பது கருத்து.

ஏன் எனில் எவ்வளவு சிறிய பொருளுக்காகத் தானம் கேட்பதானாலும் அது சால்பைக் கருதுகிறவர்களுக்கு மானக் குறைவுதான்:

1066. ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்.

ப. ரை: 'ஆவிற்கு நீர்' என்று இரப்பினும் நாவிற்கு இரவின் இளி வந்தது இல் = 'பசு மாட்டிற்குத் தண்ணீர்' என்று இரந்து கேட்டாலும் நாக்கிற்கு இரந்து கேட்பதை விட இழிவானது வேறில்லை.

பொ. ரை: 'பசுமாட்டிற்குக் குடிப்பாட்டத் தண்ணீர் கொடுங்கள்'என்று கேட்டாலும், தானம் கேட்பதைவிட குறைவான காரியம் நாக்கிற்கு வேறெதும் இல்லை.

வி - ம்: இளி வந்தது – இழிவு உண்டாக்குவது. பசுமாடு மனிதனுக்குப் பல விதத்திலும் பயன் தருவது. அதனால் பசுவைத் தெய்வமாகக் கொண்டாடுவதும் உண்டு. அப்படிப்பட்ட பசுவின் தாகத்தைத் தீர்க்கவானாலும் வெகு சுலபமாக எங்கும் கிடைக்கிற தண்ணீருக்காகவும் கூட, ஒருவரிடம் போய்–'பசுமாட்டிற்குத் தண்ணீர் கொடுங்கள்' என்று தானம் கேட்டாலும், தானம் கேட்பதைவிட நாக்கிற்கு மானக் கேடான காரியம் வேறொன்றும் இல்லை – என்பது கருத்து.

பிச்சை கேட்பது அவ்வளவு இழிவான காரியம் என்பதைப் பிச்சை கேட்பவர்கள் நினைக்க முடிவதில்லை. ஏனெனில் அவர்களுடைய வறுமையின் கொடுமை அப்படிச் செய்ய விடுவதில்லை. பிச்சை கேட்பது மிகவும் இழிவான காரியம் என்பதை அறிந்து கூசுகிறவர்களும் பிச்சை கேட்க நேர்ந்து விடுகிறது. ஆனால் பொருள் வளம் உள்ளவர்கள் வறுமையின் கொடுமைகளையும் பிச்சை கேட்பவருடைய துன்பங்களையும் ஒரு சிறிதும் உணராமல் இரக்கமின்றி உள்ளதையும் இல்லையென்று சொல்லி விடுகிறார்களே! அப்படிப்பட்ட ஈரமில்லாதவர்களிடத்தில் :

1067. இரப்ப னிரப்பாரை யெல்லா மிரப்பிற்
கரப்பா ரிரவன்மி னென்று.

ப. ரை : 'இரப்பின் கரப்பார் இரவன் மின்' என்று இரப்பாரை எல்லாம் இரப்பன் = 'பிச்சை யெடுத்தாலும் (வைத்துக் கொண்டு இல்லையென்று) மறைக்கிறவர்களிடம் பிச்சை கேட்க வேண்டாம்' என்று பிச்சை யெடுப்பவர்களையெல்லாம் நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பொ. ரை : 'பிச்சை கேட்க நேர்ந்தாலும், வைத்துக் கொண்டு இல்லையென்று சொல்லுகிறவர்களிடம் பிச்சை கேட்க வேண்டாம்' என்று பிச்சை கேட்க எண்ணுகின்றவர்களையெல்லாம் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வி - ம் : கரப்பார் இரவன் மின் – கரப்பாரை இரவன்மின் – வைத்துக் கொண்டு இல்லையென்பவர்களிடம் பிச்சை கேட்க வேண்டாம். வைத்துக்கொண்டு இல்லையென்பவர்களை இரப்பவர்கள் எப்படி அறிய முடியும் என்ற கேள்வி பிறக்கிறது. இல்லையென்னும் இயல்புடையவர்களை இரப்பவர்கள் கண்டு கொள்ள முடியும் என்பதற்காக இது சொல்லப்பட்டதல்ல. முன் அதிகாரத்தில் 'கரப்பிலார் வையகத் துண்மையான் கண் இன்று இரப்பவர் மேற் கொள்வது' என்றபடி பெரும்பாலும் மனிதர்கள் இரப்பவர்களுக்கு இல்லையென்பவர்களேயானதால் கண் மூடித்தனமாக எதிர்ப்பட்டவர்கள் எல்லாரிடத்திலும் கேட்டு விடாமல் இல்லையென்னுமல் கொடுக்கக் கூடியவர்களை விசாரித்தறிந்து கொண்டு அவர்களிடம் போய் கேட்பது நல்லது – என்பதற்காகச் சொல்லப்பட்டது. எனவே – பிச்சையெடுக்க நேர்ந்தாலும் வைத்துக்கொண்டு இல்லையென்பவர்களிடம் போய்க் கேட்டு விடாமல் கொடுக்கும் மனமுள்ளவர்களை அறிந்து, கேட்பது நல்லது – என்பது கருத்து.

ஏன் என்றால் :

**1068. இரவென்னு மேமாப்பி றோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.**

ப. ரை : இரவு என்னும் ஏமாப்பு இல் தோணி கரவு என்னும் பார் தாக்க பக்கு விடும் = இரத்தல் என்னும் நங்கூரமில்லாத படகு (வைத்துக் கொண்டு இல்லையென்று) மறைக்கின்ற (கன்னெஞ்சராகிய) பாறையில் மோதினால் பிளந்து விடும்.

பொ. ரை : (வறுமை என்னும் துன்பக் கடலைக் கடந்துவிட நினைத்து வறுமையுற்றவன் ஏறிச் செலுத்துகிற) பிச்சை கேட்டல் என்னும் நங்கூரமில்லாத படகு (போன்ற மனம்) (வைத்துக் கொண்டே) இல்லையென்று சொல்லுகிற (கன்னெஞ்சராகிய) பாறையில் மோதினால் உடைந்து போகும்.

வி-ம் : ஏமாப்பு – பாதுகாப்பு. ஏமாப்பு இல் தோணி – பாதுகாப்பில்லாத தோணி. தோணிக்குப் பாதுகாப்பு என்பது அதன் வேகத்தையும் அது செல்லும் திசையையும் விரும்பியபடி அடக்கித் திருப்பும் கருவிகள். வறுமைத் துன்பங்களால் அலைக்கப்படும் மனம் பிச்சை கேட்க எண்ணியபின் யாரைக் கேட்கலாம் யாரைக் கேட்கக் கூடாதென்று மனதை அடக்கவும் திருப்பவும் திறனற்றுப் போய்விடும் என்பதைக் குறிப்பது. பார் – பாறை. பக்குவிடும் – உடைந்து போகும். இந்தக் குறள் பிச்சையெடுப்பதையே தொழிலாகக் கொண்டு எத்துணை பேர் இல்லையென்றாலும் எவ்வளவு பேர் இகழ்ந்து பேசினாலும் மானமற்றவர்களாக அலைகின்ற நாடோடிப் பிச்சைக்காரர்களைப் பற்றியதல்ல. பின் யாரைப் பற்றியதென்றால், இரவொல்லாச் சால்பை விரும்புகிறவர்களாக, வெறும் நீரைப் போன்ற கஞ்சியானாலும் தாம் சம்பாதித்த உணவே சிறந்தது என்று எண்ணுகின்ற மானிகள், வறுமையின் கொடுமை மிஞ்சிப்போய் விலக்க முடியாமல் எதையேனும் யாரிடத்திலாவது இலவசமாகக் கேட்க வேண்டிய நிலைமை நேரிட்டு விட்டால், எல்லாரையும் கேட்டுவிடக் கூடாது என்பதற்காகச் சொல்லப்பட்டது. அதனால் – வறுமையின் கொடுமையினால் பிச்சை கேட்கப் புகுந்த மானிகள், கடின சித்தமுடையவர்கள் வைத்துக் கொண்டே இல்லையென்று சொல்லும்போது, மனமுடைந்து போவார்கள் – என்பது கருத்து.

பிச்சை கேட்க மிகவும் கூசுகின்ற மானிகள் வந்து ஒன்றைக் கேட்டாலும் வைத்துக் கொண்டே இல்லையென்று சொல்லுகின்ற இரக்கமற்ற மனிதர்களைப் பற்றி என்னென்று சொல்வது :

1069. இரவுள்ள வுள்ள முருகுங் கரவுள்ள
வுள்ளதூஉ மின்றிக் கெடும்.

ப. ரை: இரவு உள்ள உள்ளம் உருகும்; கரவு உள்ள உள்ளதூஉம் இன்றி கெடும் = இரத்தலின் துன்பத்தை எண்ணினால் மனம் உருகுகின்றது. (அப்படியிருக்க) உள்ளதை இல்லையென்று சொல்லுவதை நினைக்கும் போது (இல்லையென்று சொல்லுகிற) உள்ள பொருள் (உண்மையாகவே) இல்லாது போய்விடும் (என்பதற்காகத்தான்).

பொ. ரை: (மானியான ஒருவன் வந்து) பிச்சை கேட்கும் பரிதாபத்தை நினைத்தாலே உள்ளம் உருக வேண்டிய நிலைமை இருக்க, ஒருவன் தன்னிடத்தில் உள்ளதை இல்லையென்று சொல்லுகிறானே! அதை நினைக்கிற போது அவன் வைத்துக் கொண்டு இல்லையென்று சொல்லுகிற பொருள் உண்மையாகவே அவனுக்கும் இல்லாமற் போய்விடத்தான் ஆகும்.

வி-ம்: உள்ளதூஉம் இன்றிக் கெடும் — உள்ளதும் இல்லாமலே தான் தொலைந்துவிடும். உதவிக்குத் தகுந்த பாத்திரனை ஒருவன் வந்து கெஞ்சிக் கேட்கும் போது மனமிரங்கிக் கொடுக்காமல், வைத்துக் கொண்டே இல்லையென்கிற பொருள் இல்லாமலேயே போகட்டும் — என்பது கருத்து.

பிச்சை கேட்கிற ஒரு மானியினுடைய பரிதாப நிலைமையை உணராமல், வைத்துக் கொண்டே இல்லையென்று சொல்லுகிறவர்களுடைய உயிரும் உணர்ச்சிகளும் அப்படிச் சொல்லும் போது எங்கேதான் போய்விடுமோ!:

1070. கரப்பவர்க் கியாங்கொளிக்குங் கொல்லோ விரப்பவர்
சொல்லாடப் போஒ முயிர்.

ப. ரை: இரப்பவர் சொல்லாடப் போஒம் கரப்பவர்க்கு உயிர் யாங்கு ஒளிக்கும் கொல்லோ = இரப்பவர்கள் (தம் குறைகளைச்) சொல்லிக் கொள்ளப் போகிற (வைத்துக்கொண்டே) இல்லையென்று சொல்லுகிறவர்களுடைய உயிர் எங்கே ஓடி ஒளித்துக் கொள்ளுமோ (தெரியவில்லை).

பொ. ரை: பிச்சை கேட்கிறவர்கள் தங்களுடைய துன்பங்களைச் சொல்லிக் கொள்ளப் போகிற (அந்த வைத்துக் கொண்டே) இல்லையென்கிறவர்களுடைய உயிர் எங்கே ஓடி ஒளித்துக் கொள்ளுகிறதோ தெரியவில்லை.

வி-ம்: உயிருடைய மனிதர்களுக்கு அடையாளம் பிறருடைய துன்பங்களைக் கேட்டவுடன் இரக்கப்படக்கூடிய உணர்ச்சியுள்ளவர்களாக இருப்பதேயாம். அந்த உணர்ச்சி இல்லாத

சமயத்தில் உயிர் இல்லாத மாதிரிதான். ஆதலால் — வைத்துக் கொண்டே இரந்து கேட்பவர்களுக்கு இல்லையென்று சொல்லுகிறார்களே அவர்களுடைய உயிர் இரக்கின்றவர்கள் குறைகளைச் சொல்லிக் கொள்ளும்போது எங்கே போய் மறைந்து கொள்ளுமோ தெரியவில்லை — என்பது கருத்து.

அதி. 108—கயமை

['கயமை' என்பது கீழ் மக்களின் தன்மை. மனித சமுதாயத்தின் நல்வாழ்விற்கு விரும்பத்தக்கனவாக இது வரையிலும் சொல்லப்பட்ட எந்த நற்குணமும் இல்லாத மிகவும் கீழ்த்தரமான மனிதர்கள் உண்டு என்பதைப் பற்றிச் சொல்லுவது இவ்வதிகாரம்.]

1071. மக்களே போல்வர் கயவ ரவரன்ன
வொப்பாரி யாங்கண்ட தில்.

ப. ரை: கயவர் மக்களே போல்வர்; அவரன்ன ஒப்பார் யாம் கண்டது இல் = கயவர் (யாரென்றால், அவர்கள்) மனிதர்களைப் போலவே இருப்பார்கள்; அவர்களைப் போன்ற ஒப்புமை உடையவர்கள் (வேறெவரையும்) நாம் பார்த்ததில்லை.

பொ. ரை: கயவர் (என்று சொல்லப்படுகிற கீழ்மக்கள்) மனிதர்களைப் போலவே இருப்பார்கள்; (ஆனால்) அந்தக் கயவர்களைப் போலவே இருப்பவர்கள் (வேறெவரும் உண்டோவெனில்) நாம் பார்த்தவரையிலும் ஒருவரும் இல்லை.

வி-ம்: வெளித்தோற்றத்தில் கயவர்கள் மற்ற மனிதர்களைப் போலவே காணப்படுவர்கள். ஆனால் அவர்களிடத்தில் மனிதத் தன்மையே இருக்காது. மனிதத் தன்மை இல்லையென்றால் வேறு என்ன தன்மை இருக்கும், என்றாலும் அதற்கும் சரியான உவமானம் சொல்ல முடியாது. 'அவரன்ன ஒப்பார் யாம் கண்டதில்' என்பதற்கு 'அவர்கள் மக்களை ஒத்தாற் போன்ற ஒப்பு வேறிரண்டு சாதிக்கண் யாம் கண்டதில்லை' என்று பொருள் கொள்வது சிறப்புடையதல்ல. 'அவர்களுக்குச் சரியான உவமானம் நம்மாற் சொல்ல முடியவில்லை' என்பது சிறந்த பொருள். அதாவது — கயவர்கள், இனத்தில் மனிதர்களோடு சேர்ந்தவர்களே; ஆனாலும் குணத்தாலும் செயலாலும் அவர்கள் யாரோடும் சேர்ந்தவர்கள் அல்ல — என்பது கருத்து.

கயவர்கள் மற்ற மனிதர்களைப் போலவே இருந்தாலும் அவர்கள் நல்லறிவே இல்லாதவர்கள். ஆனால் நல்லறிவு

உள்ளவர்களைவிட நிம்மதியுள்ளவர்களாக இருப்பார்கள். எப்படியெனில் :

1072. நன்றறி வாரிற் கயவர் திருவுடையர்
நெஞ்சத் தவல மிலர்.

ப. ரை : கயவர் நன்று அறிவாரின் திரு உடையர்; நெஞ்சத்து அவலம் இலர் = கீழ் மக்கள் நன்மை (தீமை)களை அறிந்தவர்களைவிட பாக்கியசாலிகள்; (எப்படியெனில்) நெஞ்சில் கவலையே இல்லாதவர்கள்.

பொ. ரை : கயவர்கள், நன்மை தீமைகளை ஆராயும் அறிவாளிகளைவிட பாக்கியசாலிகள்; (எப்படியெனில் அவர்கள் மனதில் நன்மை தீமைகளைப் பற்றிய) விசாரமே கிடையாது.

வி - ம் : நன்றறிவார் — நல்லதை அறிகிறவர்கள். அதனால் நல்லதைக் கொண்டு கெட்டதை விலக்கும் அறிவுடையவர்கள். திருவுடையார் — பாக்கியம் உள்ளவர்கள். அவலம் — கவலை. 'நெஞ்சத்து அவலமிலர்' என்றது பிறவிக் குணமாகவே அவர்களுக்கு பொறுப்புகளைப் பற்றிக் கவலையில்லை என்பதற்காக. நன்மை தீமைகளை ஆராய்ந்து நடக்கிறவர்களுக்கு, தீமை செய்துவிடக் கூடாது என்ற கவலை இருந்து கொண்டேயிருக்கும். அந்த கவலை இயல்பாகவே கயவர்களுக்கு இருக்காது. அதனால் தீய காரியங்களையும் நல்ல காரியங்களைப் போலவே கவலையற்றுச் செய்வார்கள். கவலையில்லாமல் வாழ்வது ஒரு பாக்கியமல்லவா ? அதனால் — கீழ் மக்கள் நன்மை தீமைகளைப் பற்றி ஆலோசிக்கிற அறிவாளிகளை விட அதிட்டசாலிகள்; ஏனெனில் அவர்கள் நெஞ்சில் இயற்கையாகவே நன்மை தீமைகளைப் பற்றிய கவலை கிடையாது — என்பது கருத்து.

கயவர்கள் மனிதப் பண்புகள் இல்லாமலும் மனிதர்களைப் போலவே இருக்கிறார்கள். நல்லறிவு இல்லாமலும் நல்லறிவுள்ள மனிதர்களை விட சந்தோஷமுடைய பாக்கியசாலிகளாக இருக்கிறார்கள்; அதுமட்டுமல்ல, அவர்களை மனிதர்களுக்கும் மேலான தேவர்கள் என்று கூட சொல்லிவிடலாம். ஏன் எனில் :

1073. தேவ ரனையர் கயவ ரவருந்தா
மேவன செய்தொழுக லான்.

ப. ரை: தாம் மேவன செய்து ஒழுகலான் கயவரவரும் தேவர் அனையர் = தாம் விரும்பியதெல்லாம் செய்து திரிதலால் (கீழ்மக்களான) கயவரும் தேவருக்கு ஒப்பானவர்கள்.

பொ. ரை: (மற்றெவரையும் மதிக்காமல்) தாம் இச்சைப்பட்டதையெல்லாம் செய்து திரிகிற காரணத்தால் கயவர் என்ற அவரும் தேவர்களுக்குச் சமானம் (என்று சொல்லி விடலாம்).

வி-ம்: மேவன – மேவப்படுவன – இச்சைப் படுவன. ஒழுகல் – நடத்தல். இங்கே 'ஒழுகல்' நடத்தைகளைக் குறிப்பதால் 'மேவன செய் தொழுகலான்' என்பதற்கு 'இச்சைப்பட்டதையெல்லாம் செய்து திரிவதால்' என்று பொருள் கொள்ளப்படும். தேவர் – தெய்வத்தன்மையுள்ள வானவர்கள். இந்த மண்ணுலகத்துக்கு மேலான விண்ணுலகங்கள் இருப்பதாகவும் அங்கே மனிதப் பிறவிகளை விடச் சிறந்த இயல்புடையவர்கள் இருப்பதாகவும் அவர்கள் மானிடர்களுக்குள்ள பிணி, மூப்பு, சாக்காடு என்பன இல்லாமல் மிக மேலான இன்பங்களை அனுபவிப்பவர்கள் என்றும் இலக்கியங்கள் கற்பிக்கின்றன. அவர்களைத்தாம் தேவர், விண்ணோர், வானவர் என்ற பல பெயர்களால் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடுவன. (தமிழ் இலக்கியங்கள் மட்டுமன்றி உலகிலுள்ள எல்லாப் பிறமொழி இலக்கியங்களிலும் இந்தத் 'தேவர்' என்பவர்களைப் பற்றிய கற்பனைகள் இருக்கின்றன.) இந்த விண்ணுலக வாசிகள் அடிக்கடி மண்ணுலகத்திற்கு வந்து மனிதர்கள் அறியாதபடி பல காரியங்களைச் செய்வார்கள். அப்படிச் செய்யும் காரியங்கள் மனித சமுதாயத்தின் சட்ட திட்டங்களுக்கு மீறியவைகளாக இருக்கும். ஆதலால் தேவர்கள் உலக நீதி நெறிகளுக்கு அடங்கி நடப்பவர்கள் அல்ல. அதைப் போல கீழ்மக்களாகிய கயவர்கள் சமூக நீதிநெறிகளை மதிக்காமல் தம்முடைய இச்சைப்படி எதையும் செய்கிறவர்கள். அதனல் – உலக நெறிகளை மதிக்காமல் தம்முடைய இச்சைப்படியே எதையும் செய்யும் இயல்பினல் கயவர்களும் தேவர்களுக்குச் சமானம் – என்பது கருத்து.

மனித சமூகத்தின் சட்டதிட்ட ஒழுக்கங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள் அல்ல என்பதற்காகக் கயவர்கள் தேவர்களோடு சேர்ந்தவர்கள் என்று ஏளனமாகச் சொன்னதன்றி கயவர்கள் தேவர்களை அறிந்தவர்களுமல்ல, விரும்புகிறவர்களுமல்ல. கயவர்கள் விரும்புகிறவர்கள் யாரெனில்:

**1074. அகப்பட்டி யாவாரைக் காணி னவரின்
மிகப்பட்டுச் செம்மாக்குங் கீழ்.**

ப. ரை: அகப்பட்டி ஆவாரை காணின் கீழ் அவரின் மிகப்பட்டு செம்மாக்கும் = அகந்தையான பட்டித்தன முள்ளவர்களைக் கண்டால் கீழ்மக்கள் (அந்தப் பட்டித்தனத்தில்) அவர்களை விட அதிகப்பட்டித்தனம் உள்ளவர்களாகி களித்து ஆவேசம் கொள்வார்கள்.

பொ. ரை: அகந்தை மிகுந்த போக்கிரிகளைக் கண்டால் கீழ் மக்களாகிய கயவர்கள் (அவர்களுடன் சேர்ந்து போக்கிரித் தனத்தில்) அவர்களுக்கும் மிஞ்சினவர்களாகக் கும்மாளம் போடுவார்கள்.

வி-ம்: அகம் — அகந்தை. பட்டியாவாரை — பட்டித்தனம் உள்ளவர்களை. 'பட்டித்தனம்' என்பது யாரையும் சட்டை பண்ணுமல் எந்தக் குற்றத்தையும் துணிந்து செய்வது. அதில் பிடிவாதம், பொய், திருட்டு, கொடுமை, முதலிய எதற்கும் கூசாமை என்ற பல தீய குணங்களும் சேர்ந்த காலித்தனம். செம்மாத்தல் — வெறிகொண்டது போல் மிகக் களிப்படைதல். கீழ் மக்களாகிய கயவர்கள் அடங்காப் பிடாரிகளான போக்கிரிகளைக் கண்டால் அவர்களுடன் சேர்ந்து கொண்டு போக்கிரித்தனத்தில் அவர்களை விட மிஞ்சினவர்களாகக் கொட்டமடிப்பார்கள் — என்பது கருத்து.

அப்படிப்பட்ட பட்டித்தனமே கயவர்களுடைய வேலை. அவர்களுக்கு ஒழுக்கம் என்பதே கிடையாது. இரண்டே சமயங்களில்தான் அவர்கள் ஒழுக்கமுள்ளவர் போல் அடங்கி நடப்பார்கள். அந்த இரண்டே சமயங்களாவன:

**1075. அச்சமே கீழ்கள தாசார மெச்ச
மவாவுண்டே லுண்டாஞ் சிறிது.**

ப. ரை: அச்சமே கீழ்களது ஆசாரம்; எச்சம் அவா உண்டேல் சிறிது உண்டாம் = அச்சம்தான் கீழ்மக்களை ஒழுங்காக நடந்து கொள்ளச் செய்யும்; மற்றபடி (ஏதேனும் ஒரு பொருளைப் பெற)ஆசை உண்டானல் (அதற்கென்று) சிறிது (நேரத்துக்கு அவர்களிடம்) ஒழுக்கம் உண்டாகும்.

பொ. ரை: (தம்மினும் வலிமையுள்ளவர்கள் தம்மைத் தண் டித்து விடுவார்கள் என்று) அஞ்சுகின்ற சமயங்களில்தான் கீழ்மக்கள் ஒழுங்காக நடந்துகொள்வார்கள். அது போக (யாரிடத்திலாவது ஒரு பொருளைப் பெற வேண்டுமென்று ஆசைப்படுகிற சமயத்திலும் (அப்பொருளைப் பெறுமளவும்) சிறிது ஒழுங்காக நடந்து கொள்வதும் உண்டு.

வி-ம்: ஆசாரம் — நியாயங்களுக்கு அடங்கி நடக்கும் ஒழுக் கம். எச்சம் — அஞ்சுகின்ற சமயங்களை விட்டு மிச்ச சமயங்

களில். 'அச்சம்' என்பதற்கு 'அரசனுல் ஏதம் வருமென்று அஞ்சும் அச்சமே' என்பது சரியான பொருள் அல்ல. அரச தண்டனை வரும் என்பதும் அச்சம்தான்; ஆனுல் கீழ்மக்கள் அரசாங்க தண்டனையைப்பற்றி கருதுவதேயில்லை. அதனுல் தான் அவர்கள் பட்டிகளாக எப்போதும் குற்றம் செய்வதிலேயே களிக்கிருர்கள். கீழ்மக்கள் அஞ்சுவது எப்போதென்ருல், தாம் குற்றம் செய்தால் அந்த இடத்திலேயே அடித்து உதைத்துத் துன்புறுத்தக் கூடிய தம்மினும் வலிமையுள்ளவர்கள் அருகில் இருக்கிற சமயங்களில்தான். மற்றும் பொருள் பறிக்க விரும்புகிற போதும் அடக்க ஒடுக்கத்துடன் யோக்கியர்கள் போல பாவனை செய்து ஆசாரமாக நடந்து கொள்வார்கள். 'அவாவுண்டேல் உண்டாம் சிறிது' என்பதனுல் கயவர்கள் தமக்கு ஒரு பொருள் வேண்டுமென்று ஆசைப்பட்டு அதைப் பெறுவதற்காகப் பிறரிடத்தில் ஒழுங்காக நடந்து கொள்வதும் கூட சிறிதுதான். ஏனெனில் தமக்கு வேண்டிய ஒரு பொருளை அடைவதிலும் கூட கயவர்கள் பெரும்பாலும் பிறரை மருட்டியும் உருட்டியும் பறிப்பார்களேயல்லாமல் அடங்கி ஒடுங்கி ஆசாரத்துடன் கேட்கமாட்டார்கள் என்பது தோன்ற 'சிறிது உண்டாம்' என்ருர். அதனுல் – கீழ் மக்கள் ஒழுங்காக நடந்து கொள்வதெல்லாம் பிறருக்கு அஞ்ச வேண்டிய சமயங்களில்தான். அதைத் தவிர பிறரிடத்தில் ஒரு நன்மை பெற விரும்புகிற சமயங்களிலும் கொஞ்சம் ஒழுங்காக நடந்து கொள்வதும் உண்டு – என்பது கருத்து.

கயவர்கள் ஒழுக்கமே இல்லாதவர்கள் என்பது மட்டுமல்ல, எந்த இரகசியத்தைச் சொல்லுவதற்கும் அவர்கள் நம்பத் தகாதவர்கள். ஏன் எனில்:

1076. அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்.

ப. ரை: தாம் கேட்ட மறை பிறர்க்கு உய்த்து உரைக்கலான் கயவர் அறைபறை அன்னர் = தாம் கேள்விப்பட்ட மறைக்க வேண்டிய சேதிகளைப் பிறருக்கு வலியச் சென்று சொல்லுகின்ற தன்மையால் கயவர்கள் அடிக்கப்படுகிற பறைக்கு ஒப்பானவர்கள்.

பொ. ரை: தம் காதில் விழுகிற இரகசியங்களை (பல இடங்களுக்கும் தாமே சென்று) வலியச் சொல்லும் குணத்தால் கயவர்கள் பறைசாற்றும் தமுக்குக்குச் சமானமானவர்கள்.

வி - ம்: உய்த்து உரைக்கலான் – பிறர் வேண்டாமலும் தாமே கொண்டுபோய் வெளியிடுதலால். கயவர்களிடத்தில், யாருக்கும் சொல்லக் கூடாதது என்ற ஒரு இரகசியத்தைச் சொன்னால் உடனே தண்டோரா போடுவதைப் போல் எல்லாரிடமும் சென்று தாமே வெளியிடுவார்கள் – என்பது கருத்து.

மேலும் கயவர்கள் தம்மிடத்திலுள்ள எதையும் யாருக்கும் நல்ல வழியில் துளிகூடத் தாமாகத் தரமாட்டார்கள்:

1077. ஈர்ங்கை விதிரார் கயவர் கொடிறுடைக்குங்
கூன்கைய ரல்லா தவர்க்கு.

ப. ரை: கொடிறு உடைக்கும் கூன் கையர் அல்லாதவர்க்கு கயவர் ஈர்ங்கை விதிரார் = கன்னத்திலடித்துப் (பல்லை) உடைக்கும் (விரல்கள் இறுக) மடக்கிய கையை உடையவர்கள் அல்லாதவர்களுக்குக் கயவர்கள் ஈரக்கையைக் கூட உதறமாட்டார்கள்.

பொ. ரை: தவடையில் அடித்துப் (பல்லை) உடைக்கக் கூடிய மடக்கிய கையுடையவர்களுக்கன்றி (மற்றயாருக்கும்) கயவர்கள் (தாம் உணவுண்ட) ஈரக்கையிலுள்ள (பருக்கையைக் கூட்) தெறிக்க மாட்டார்கள்.

வி - ம்: கொடிறு – கன்னம். கொடிறுடைத்தல் – கன்னத்திலடித்துப் பல்லை உடைப்பது. கூன்கை – விரல்களை இறுக மடக்கிய முட்டிக்கை. விதிரார்–தெறிக்கமாட்டார். கைவிரல்களை இறுக்கி மடக்கிக் கொண்டு தவடையில் அடித்துப் பல்லை உடைக்கக் கூடியவர்களுக்குத்தான் கயவர்கள் எதையும் கொடுப்பார்கள். மற்றவர்களுக்குத் தாம் உணவுண்ட ஈரக்கையிலுள்ள பருக்கையைக் கூடத் தெறிக்க மாட்டார்கள் – என்பது கருத்து.

அதுதான் மேன் மக்களுக்கும் கீழ் மக்களுக்கும் உள்ள நேர் மாறான வேற்றுமை; அதாவது:

1078. சொல்லப் பயன்படுவர் சான்றோர் கரும்புபோற்
கொல்லப் பயன்படுங் கீழ்.

ப. ரை: சொல்லப் பயன்படுவர் சான்றோர்; கரும்புபோல் கொல்லப் பயன்படும் கீழ் = சொன்ன உடனே கொடுக்கிறவர்கள் மேலோர்: கரும்பைப் போல் கசக்கினால்தான் கொடுப்பவர்கள் கீழோர்.

பொ. ரை: (வேண்டியதைச்) சொன்னவுடன் உதவி செய்கிறவர்கள் மேன் மக்கள். கரும்பை (ஆலையில் கொடுத்துப்) பிழி

வதைப் போல் நெருக்கினால் மட்டும் கொடுப்பவர்கள் கீழ் மக்கள்.

வி-ம்: 'கொல்ல' என்பதற்கு இங்கே 'துன்பப்படுத்த' என்ற அளவோடுதான் பொருள். குறைகளைச் சொல்லிக் கேட்டவுடன் கொடுப்பவர்கள் மேலோர்; (பல முறை கெஞ்சிக் கேட்டால் கொடுப்பவர்கள் நடுத்தரமான சாதாரண மக்கள்). எவ்வளவு கெஞ்சினாலும் கொடுக்காமல், பிடித்துக் கசக்கிப் பிழிந்து பிறர் பறித்துக் கொள்ள வேண்டியவர்கள் கீழ் மக்கள் — என்பது கருத்து.

தாமாக யாருக்கும் எதையும் கொடுக்கமாட்டார்கள் என்பது மட்டுமன்றிப் பிறர் நன்றாக வாழ்வதைக் கண்டாலும் கயவர் பொறுக்க மாட்டார்கள் :

1079. உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறர்மேல்
வடுக்காண வற்றாகுங் கீழ்.

ப. ரை: உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடு காண கீழ் வற்றும் = (மற்றவர்கள்) நல்ல உடை உடுப்பதையும் நல்ல உணவு உண்பதையும் கண்டால் கீழ் மக்கள் அவர்கள் மீது குற்றம் கண்டுபிடிக்க வல்லமையுள்ளவர்களாவார்கள்.

பொ. ரை: யாராவது நல்ல உடை உடுத்து நல்ல உணவு உண்டு சுகமாக இருப்பதைக் கண்டால் கயவர்கள் அவர்கள் மீது குற்றம் கண்டு பிடித்து (அவர்களைத்) தூற்றுவதற்குத் தம்முடைய திறமையைச் செலுத்துவார்கள்.

வி-ம்: வடு — குற்றம். 'வடுக்காண' என்பது குற்றம் கற்பிப்பது. என்ன குற்றம் என்றால், அவர்களுக்கு நல்ல உடையும் உணவும் தரக்கூடிய செல்வம் இன்னின்ன குற்றமான வழிகளில் சம்பாதிக்கப்பட்டது என்று புனைந்து சொல்வது. வற்று — வல்லமை. வற்றும் — வல்லமையுள்ளதாகும் — பிறர் நல்ல உடை தரிப்பதையும் நல்ல உணவு உண்பதையும் கண்டால் கயவர்கள் அவர்களிடம் குற்றங்களைக் கற்பித்துப் பழிப்புக்கு ஆளாக்க முயல்வார்கள் — என்பது கருத்து.

கயவர்கள் ஒரு நல்ல காரியத்துக்கும் உதவ மாட்டார்கள். பின் அவர்கள் எதற்கு உதவுவார்கள் என்றால் :

1080. எற்றிற் குரியர் கயவரொன் றுற்றக்கால்
விற்றற் குரியர் விரைந்து.

ப. ரை: கயவர் எற்றிற்கு உரியர் ஒன்று உற்றக்கால் விரைந்து விற்றற்கு உரியர் = கயவர்கள் எதற்காவார்கள்? ஏதேனும் சமயம் வாய்த்தால் உடனே தம்மை (தீய காரியங்களைச் செய்ய) விலைக்கு விற்றுவிடத்தான் ஆவார்கள்.

பொ. ரை: கயவர்கள் எதற்கு உதவுவார்கள்? ஏதேனும் சமயம் நேர்ந்தால் தீய காரியங்களைச் செய்யக் கூலிக்காரர்களாகத் தம்மை விலைக்கு விற்றுவிடத்தான் உதவுவார்கள்.

வி-ம்: வாய்த்த போதெல்லாம் பிறரிடத்தில் விலை வாங்கிக்கொண்டு, அவர்கள் ஏவுகின்ற எதையும் செய்யத் தம்மையே விற்று விடுவதற்கல்லாமல் வேறு எதற்கும் கயவர்கள் உதவ மாட்டார்கள் – என்பது கருத்து.

ஒழிபியலோடு பொருட்பாலும் முற்றிற்று.

3. காமத்துப்பால்

['காமத்துப்பால்' என்பது காமத்தைப் பற்றிய பகுதி. 'பால்' என்றால் 'பகுதி'. இதை 'இன்பத்துப்பால்' என்றும் சொல்லுவதுண்டு. மனிதர்கள் மக்களைப் பெற்று இல்லறம் நடத்தி, சமுதாயமாக இருப்பதற்குக் காரணமாக இருக்கிற ஆண் – பெண் புணர்ச்சியின் இயல்பைச் சொல்லுவது, இப் பகுதி. இது ஆண் தன்மைக்கும் பெண் தன்மைக்கும் இயற்கை யாக உள்ள ஆசையைப் பற்றியதால் இது 'காமத்துப்பால்' எனப்படும். (காமம் – ஆசை) இந்த ஆண் – பெண் ஆசை மற்ற எல்லா ஆசைகளிலும் வலிமையுள்ளதாகையால் இதனால் அடையும் இன்பமும் மற்ற எல்லா இன்பங்களிலும் மிகுந்த இன்பம் அளிப்பது. அதனால் இந்த காமம் இன்பம் என்றே சொல்லப்படுகிறது. உடலோடு பிறந்த இந்தக் காம ஆசை வளர்ந்து பருவமடைந்த ஒரு ஆணையும் ஒரு பெண்ணையும் புணர்ச்சிக்குத் தூண்டுகின்ற தன்மையையும், அப்படிப் புணர்ந்த அவ்விருவரும் ஒருவரை யொருவர் விட்டுப் பிரிய மனமில்லாமல் காதலித்து வாழ்க்கை நடத்தத் தொடங்கு வதையும், அப்போது அவர்கள் அனுபவிக்கும் இன்ப உணர்ச்சி களையும் சொல்லுவது இந்த 'காமத்துப்பால்' என்னும் 'இன் பப்பால்'.

பழங்காலத்தில் தமிழர்களுக்குள் ஒரு இளைஞனும் ஒரு இளம் பெண்ணும் எப்படி வாழ்க்கைத் துணைவர்கள் ஆனார்கள் என்ற சமுதாய வழக்கமும் இந்த 'காமத்துப் பால்' என்ற பகுதியில் ஓரளவு அறியக் கிடக்கிறது. சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், திருவள்ளுவர் காலத்தில், தமிழ் நாட் டில் இருந்திருப்பதாகத் தெரிகிற வழக்கப்படி, ஒரு இளைஞ னும் ஒரு இளம் பெண்ணும் இக்காலத்தில் நடப்பது போல் அவர்களுடைய பெற்றோர்களால் மணம் செய்விக்கப்பட்டு அதன் பிறகுதான் அவ்விருவரும் ஏகாந்தத்தில் சந்திப்பது என்பது இல்லை. அக்காலத்திலிருந்த வழக்கப்படி காமப் பருவ மடைந்த ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தாமாகவே கூட. ஒரு வரை யொருவர் சந்தித்து விரும்பி மகிழ்ந்து கொள்ளலாம். அதை அவர்களுடைய பெற்றோர்கள் (இவர்கள் மூலமாகவோ அல்லது ஊரார் மூலமாகவோ) அறிந்து அவ்விருவரையும் வாழ்க்கைத் துணைவர்களாக்கிவைப்பர். அப்படி ஒரு ஆணும் ஒரு பெண்ணும் தாமாகவே இரகசியமாக சந்தித்து ஒருவரை யொருவர் விரும்பிக் கொள்வதை 'களவியல்' என்றும், பிறகு அதைப் பெற்றோர்கள் அறிந்து, ஊரறிய மணம் செய்விப்பதை 'கற்பியல்' என்றும் பழைய இலக்கியங்கள் காட்டுகின்றன. 'களவியல்' என்பது களவாக (மறைவாக) ஒரு ஆணும் ஒரு பெண்ணும் சந்தித்து 'எனக்கு நீ - உனக்கு நான்' என்று

வாழ்க்கைப்பட நிச்சயித்துக் கொள்வது. 'கற்பியல்' என்பது அப்படிக் களவாக உறவு கொண்டுவிட்ட ஆணையும் பெண்ணையும் உறவினரும் ஊராரும் கூடிப் பகிரங்கமாக 'இவனுக்கு - இவள், இவளுக்கு - இவன்' என்று ஒப்புக் கொள்வது.

இக்காலத்தில் இந்த வழக்கம் தலைகீழாக மாறி 'கற்பியல்' நடந்த பிறகுதான் 'களவியல்' நடக்க முடியும். பழங்கால வழக்கப்படி 'களவியலுக்குப் பின் கற்பியல்' என்ற முறை நல்லதா அல்லது இக்கால வழக்கப்படி 'கற்பியலுக்குப்பின் களவியல்' என்ற முறை நல்லதா என்ற ஆராய்ச்சி இங்கே வேண்டியதில்லை. அந்தக் காலத்தில் அப்படி இருந்தது; இந்தக் காலத்தில் அப்படி இல்லை என்பதுதான் உள்ளது. காலப் போக்கினால் வழக்கங்கள் தாமாகவே மாறிவிடுகின்றன. அல்லது நாமாக மாற்றிவிடுகிறோம்.

காமப் பருவமடைந்த ஒரு இளைஞனும் ஒரு இளம் பெண்ணும் முதன் முதல் சந்திப்பதற்கான சமூக வழக்கங்கள் எப்படி மாறினாலும் ஆண் - இயல்பும், பெண் - இயல்பும், காம ஆசையின் வலிமையும், புணர்ச்சியின் இன்பமும், பிரிவின் துன்பமும், ஆகிய இவற்றின் இயல்புகள் என்றும் மாறுவதில்லை. அந்த மாறாத்தன்மையுள்ள காம இன்ப உணர்ச்சிகளைச் சொல்லுவது இக் காமத்துப்பால். இந்த காமத்துப் பாலின் அற்புதக் கற்பனையை சரியாக அனுபவிக்க வேண்டுமானால் உரையாசிரியர்கள் புகுத்தியிருக்கிற 'தலைமகன்', 'தலைமகள்', 'தோழி', 'பாங்கன்' முதலிய இடையூறுகளை முற்றிலும் நீக்கி விட்டுப் பொருள் காண வேண்டும். பிற்காலத்திய பிரபந்த வழக்கமாகிய இந்த தலைமகன், தலைமகள், தோழி, பாங்கன் என்ற பாத்திரங்கள் ஆசிரியர் எண்ணாத அனாவசியங்கள். அவைகள் படிப்பவர்களுக்குக் குழப்பம் உண்டாக்கி குறளின் சிறப்பைக் கெடுக்கும்.]

1. களவியல்

['களவியல்' (களவு + இயல்) என்பது, முன்னே சொன்னபடி காமப் பருவமடைந்த ஒரு ஆண் பிள்ளையும் ஒரு பெண் பிள்ளையும் பிறர் அறியாதபடி களவாக (இரகசியமாக) சந்தித்து ஒருவரை யொருவர் விரும்பிப் புணர்ந்து இன்பமடைவது. 'களவியல்', 'தகையணங்குறுத்தல்' என்ற அதிகாரம் முதலாக 'அலரறிவுறுத்தல்' என்றது ஈறாக ஏழு அதிகாரங்களாற் சொல்லப்படுகிறது.]

அதி. 109—தகையணங்குறுத்தல்

[தகையணங்குறுத்தல் — தகை + அணங்கு + உறுத்தல் — அழகு + ஆசை + மூட்டிவருத்துதல். பெண்ணின் அழகு ஆணுக்குக் காம ஆசையை உண்டாக்கி, துன்பப் படுத்துவது. இந்த அதிகாரத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் இயற்கைபாக எப்படி காம உணர்ச்சி ஆரம்பமா கிறது என்பது சித்தரிக்கப்படுகிறது. அதற்காக ஆண் சுபா வத்தை ஆணுகவும் பெண் சுபாவத்தைப் பெண்ணுகவும் உரு வாக்கி ,நிறுத்துகின்ருர். இயல்பாக காமப் புணர்ச்சியை விரும்பி, ஆண்தான் பெண்ணை நாடுவது என்பதையும் பெண் அதை ஏற்றுக்கொள்வது என்பதையும் இவ்வதிகாரம் சிறப் பிக்கிறது. 'காமத்துப்பால்' என்ற பகுதி, இதுவரையிலும் காம ஆசையை அனுபவித்தறியாத, காமப்பருவமடைந்த ஒரு உடல்வளம் சிறந்த இளைஞன் அவனைப் போலவே அது வரையிலும் காம உணர்ச்சிகளை அனுபவித்தறியாத காமப் பருவமடைந்த ஒரு அழகான இளம் பெண்ணை திடீரென்று சந்திப்பது போன்ற காட்சியில் துவங்குகிறது. அப்படி ஒரு பெண்ணைச் சந்தித்த இளைஞனுடைய மனதில் உதிக்கின்ற எண்ணங்களை இவ்வதிகாரம் சித்திரிக்கிறது.]

1081. அணங்குகொ லாய்மயில் கொல்லோ கனங்குழை
மாதர்கொன் மாலுமென் னெஞ்சு.

ப. ரை அணங்கு கொல்! ஆய்மயில் கொல்லோ! கனம் குழை மாதர் கொல்! என் நெஞ்சு மாலும்= (எதிரே காணப் படுகிற வடிவம்) தெய்வமா! சிறந்த மயிலா! (காதுகளில்) கனத்த குண்டலங்கள் உள்ள (தால்) (மானிடப்) பெண் தானோ! என் மனம் மயங்குகிறது.

பொ. ரை : (எதிரே காணப்படுகிற இந்த அழகான வடிவம்) ஒரு தேவதையோ! சிறந்த இனமாகிய ஒரு மயிலா! காது களில் கனத்த குண்டலங்கள் இருப்பதனால் ஒரு (மானிடப்) பெண்தானோ! (தீர்மானிக்க முடியாமல்) என்மனம் திகைக் கிறது.

வி-ம் : அணங்கு — தெய்வப் பெண். ஆய்மயில் — ஆய்ந் தெடுத்த மயில். அதாவது மயில் இனங்களிலெல்லாம் சிறந்த ஒரு இனமாகிய மயில். மாலும் — மயங்கும். என் மனதை மயக்குகின்ற இந்த அழகான வடிவம் ஒரு தேவ தையா! புது மாதிரியான ஒரு மயிலா! அல்லது ஒரு சாதா ரணப் பெண்தானோ! தெரியவில்லையே — என்பது கருத்து.

ஆம், அது ஒரு அழகான மானிடப் பெண்தான் அவளும் என்னைப் பார்க்கிறாள். அடடா! அந்தப் பார்வை என்னைக் குத்துகிறதே!

1082. நோக்கினா ணோக்கெதிர் நோக்குத ருக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து.

ப. ரை: நோக்கு எதிர் நோக்கினாள்; நோக்குதல் தாக்கு அணங்கு தானை கொண்ட அன்னது உடைத்து=(அவளைப் பார்த்த) என் பார்வைக்கு எதிர்பார்வை (அவள்) பார்த்தாள்; அந்தப் பார்வை (நான் பார்த்ததிலேயே என்னைத்) தாக்கிய (அவளுடைய) அழகு (இப்போது, தானே வேல்) ஆயுதத்தைக் கொண்டும் தாக்குவது போன்ற தன்மை யுடையதாக இருக்கிறது.

பொ. ரை: (அவளைப் பார்த்த) என் பார்வைக்கு எதிர் பார்வை யாக அவள் என்னைப் பார்த்தாள்; (அவளுடைய) பார்வை (முன்பு நான் அவளைப் பார்த்த உடனேயே நான் மயங்கி விடும்படி என்னைத்) தாக்கிய அவளுடைய அழகு (இப்போது அவளுடைய கண்ணாகிய வேல்) ஆயுதத்தையும் கொண்டு தாக்குவது போன்ற தன்மையுள்ளதாக இருக்கிறது.

வி-ம்: 'நோக்கினாள்' என்பதற்கு 'அழகுடையாள்' என்றா வது. 'என்னால் நோக்கப்பட்டவள்' என்றாவது பொருள் கொள்வது சரியல்ல. 'தாக்கணங்கு' – தாக்கிய அணங்கு – அதாவது, அவள் என்னைப் பார்ப்பதற்கு முன்னால் நான் அவளை முதலில் பார்த்த உடனேயே என்னைத் 'தாக்கி மயங்கச் செய்த அழகு' ('மாலும் என் நெஞ்சு' என்று முன் குறளில் சொல்லப்பட்டபடி). அணங்கு–அழகு. 'தானை' என்பது எல்லா ஆயுதங்களுக்கும் பொதுப் பெயர். இங்கே 'நோக்கு' என்று கண் பார்வையோடு சேர்ந்திருப்பதாலும் பெண்களின் கண்ணை வேலாயுதத்துக்கு ஒப்பாகச் சொல் வது தமிழ் வழக்கானதனாலும் இங்கே 'தானை' என்பதற்கு 'வேலாயுதம்' என்பதே பொருள். ஆதலால்–நான் அவ ளைப் பார்த்துக் கொண்டேயிருக்கிறபோது அவளும் என்னை நேராகப் பார்க்கிறாள்; அந்தப் பார்வை முன்பு அவளைக் கண்ட உடனேயே அவள் அழகினால் தாக்குண்டு மயங்கி யிருந்த என்னை இப்போது அந்த அழகு வேலாயுதத்தைக் கொண்டும் குத்துவதுபோல் இருக்கிறது – என்பது கருத்து.

அப்படி அவள் தன் பார்வையாகிய வேலைக் கொண்டு என்னைக் குத்தித் துன்புறுத்துவது, நான் இதுவரையிலும் அறியாத வேதனைகளை உண்டாக்கி என் உயிரே போய்விடும் போல் இருக்கிறது. அதனால்:

1083. பண்டறியேன் கூற்றென் பதனை யினியறிந்தேன்
பெண்டகையாற் பேரமர்க் கட்டு.

ப. ரை, கூற்று என்பதனை பண்டு அறியேன்; இனி அறிந்தேன்; பெண் தகையான் பேர் அமர் கட்டு = எமன் என்று சொல்லப்படுகிறதை இதுவரையிலும் கண்டதில்லை; இப்போது கண்டு கொண்டேன்; அது பெண்ணழகு என்பதாகப் பெரிய போர்க் கண்களை உடையது (என்று).

பொ. ரை: எமன் என்று சொல்லப்படுவது என்ன வென்பதை இதுவரையிலும் நான் அறிந்ததில்லை, இப்போது அறிந்து கொண்டேன்; அது பெண்ணழகு என்ற வடிவத்துடன் துன்ப முண்டாக்கும் பெரிய கண்களையுடையது – (என்று).

வி-ம்: பெண் தகை – பெண்மையின் அழகு. கட்டு – கண்களை உடையது. பேர் அமர் கட்டு – பெரிய அமர் உண்டாக்கும் கண்களை உடையது. அமர் – போர் – துன்பம். எமவாதனை என்ன என்பதை இதுவரையிலும் அறியேன்; (அந்த பெண் என்னைப் பார்த்த பார்வையினால்) இப்போது அறிந்து கொண்டேன். அந்த எமவாதனை என்பதும், பெண்ணின் அழகுடையதாகத் துன்பம் தரக்கூடிய பார்வையுள்ளதாகத் தான் இருக்கும். – என்பது கருத்து.

ஒரு தேவதை போலும் அபூர்வமான ஒரு மயில் போலும் இவ்வளவு அழகுடைய பெண்ணுக்கு, கண்கள் மட்டும் பிறரைத் துன்பப்படுத்துவனவாக இருப்பது ஏன்? அது பொருத்தமாக இல்லையே!:

1084. கண்டா ருயிருண்ணுந் தோற்றத்தாற் பெண்டகைப்
பேதைக் கமர்த்தன கண்.

ப. ரை: கண்டார் உயிர் உண்ணும் தோற்றத்தால் பெண் தகை பேதைக்கு கண் அமர்த்தன = பார்த்தவர்களுடைய உயிரை விழுங்கி விடுகிற தன்மையினால் பெண்மை அழகுள்ள இந்த ஒன்றுமறியாதவளுக்குக் கண்கள் (அவள் இயல்புக்குப் பொருந்தினவைகளாக இல்லாமல்) மாறுபட்டவைகளாக அமைந்திருந்தன.

பொ. ரை: (இவளுடைய கண்கள்) பார்த்தவர்களுடைய உயிரைக் கவர்ந்து விடுகிற காரணத்தால் பெண்ணழகு பொருந்திய இந்த அப்பாவியானவளுக்குக் கண்கள் மட்டும் அந்த சுபாவத்திற்குப் பொருத்த மில்லாதவைகளாக இருக்கின்றன.

வி-ம்: தோற்றத்தால் — தன்மையினால் — காரணத்தால். பேதை — ஒன்றும் அறியாத அப்பாவி — குற்றமற்றவள். பெண் தகை — பெண்மையழகு. அமர்த்தன — மாறுபட்டன; அதாவது விரோதமான இயல்புடையனவாக இருப்பன. இவ்வளவு அழகு வாய்ந்த குற்றமற்ற நல்ல பெண்ணுக்கு கண்கள் மட்டும் அவளுடைய சுபாவத்திற்கு விரோதமான சுபாவமுள்ளவைகளாக இருக்கின்றன; ஏனென்றால் அக்கண்கள் பார்த்தவர்களுடைய உயிரைத் தம்வசமாக்கி விழுங்கிவிடுகின்றன — என்பது கருத்து.

அப்படி அவளுடைய கண்கள் என்னைப் பார்த்த உடனே என் உயிர் அவள் வசமாக ஓடினதினால்தான் அவளை உயிரை இழுத்துக் கொள்ளுகிற கூற்றம் என்று எண்ணினேன். ஆனால் அவள் உண்மையில் கூற்றம் அல்லவென்று தெரிகிறது. முதலிற் பார்த்த உடனே என் உயிர் எமவாதனையடைந்தது. ஆனால் நிதானித்துப் பார்க்கிறபோது:

1085. கூற்றமோ கண்ணோ பிணையோ மடவர
ணோக்கமிம் மூன்று முடைத்து.

ப. ரை: கூற்றமோ! கண்ணோ! பிணையோ! இம் மூன்றும் மடவரல் நோக்கம் உடைத்து = எமனா! வெறும் கண்தானா! பெண் மானா! இந்த இளம் பெண்ணின் பார்வை இந்த மூன்றும் உள்ளதாக இருக்கிறது.

பொ. ரை: எமனா! வெறும் கண்ணா! பெண் மானா! (என்னென்று தீர்மானிப்பது!) இந்த இளம் பெண்ணின் பார்வையில் இந்த மூன்றின் தன்மைகளும் இருக்கின்றனவே!.

வி-ம்: அவள் இவனை எதிர்நோக்காகப் பார்த்தபோது இவனுக்கு வெகு வேகமாக எழுந்த காம ஆத்திரத்தால் இவன் உயிரே போய்விடும் போல துன்பப்பட்டதால் அவள் பார்வையை எமன் என்று எண்ணினான்; சற்று நிதானித்த பின் அது எமனல்ல, வெறும் பார்வைதான் என்று கண்டான். பின்னும் கவனிக்கிற போது அந்தப் பார்வை இவனை மருட்டுவதாக இல்லாமல் தான் மருள்வதாகி, பச்சாத்தாபம் கொள்ளவேண்டிய ஒரு பெண்மான் மருள்வது போலத் தோன்றியது. அதனால் தன் மனதில் படிப்படியாக உண்டான மாறுதல்களை நினைத்து வியக்கிறான் — இந்த இளம் பெண்ணின் பார்வையில் எமனைப் போல் உயிரைப் பறிக்கும் கொடுமையும், சாதாரண பார்வையின் இனிமையும், ஒரு பெண்மான் அஞ்சி மருள்வதைப் போன்ற தன்மையும் ஆகிய இந்த மூன்று தன்மைகளும் ஒருங்கே அமைந்திருக்கின்றனவே! — என்பது கருத்து.

இப்போது அவள் தன் கண்ணைச் சுருக்கிப் பார்க்கிறாள்! இந்தப் பார்வை, முன் அவள் பரக்க விழித்து நேராகப் பார்த்தபோது இருந்தது போல் துன்பப்படுத்துவதாக இல்லை:

1086. கொடும்புருவங் கோடா மறைப்பி னடுங்கஞர்
செய்யல மன்னிவள் கண்.

ப. ரை: கொடும் புருவம் கோடா மறைப்பின் இவள் கண் நடுங்கு அஞர் செய்யல=கோணிய புருவங்கள் (இன்னும் சிறிது) கோணி (கண்களைச் சற்றே இமைகள்) மறைத்தால் இவளுடைய பார்வை (முன்போல் எனக்கு) நடுங்கும்படியான துன்பத்தைச் செய்வதாக இல்லை.

பொ. ரை: வளைந்த புருவங்கள் இன்னும் வளைந்து இமைகள் கண்களைச் சிறிது மறைக்கும் இப்போது இவளுடைய பார்வை முன் போல் நான் அஞ்சி நடுங்கும்படியான துன்பத்தை உண்டாக்குவதாக இல்லை.

வி - ம்: கொடும்—வளைந்த. 'கோடா' என்பதை 'கோடி' என்று கொண்டு 'வளைந்து' என்று பொருள் செய்ய வேண்டும். மறைப்பின்—கண்களைச் சிறிது மறைப்பதால். அஞர்—துன்பம். இவள் கண்களைச் சுருக்கி என்னைப்பார்க்கிறபோது எனக்கு முன் போல அச்சமும் துன்பமும் உண்டாகவில்லை—என்பது கருத்து.

கண்ணைச் சுருக்கி இப்போது அவள் பார்க்கிற பார்வையினால் எனக்கிருந்த அச்சம் முழுதும் நீங்கி விட்டது. இனி அவளுடைய மேனியழகை அனுபவிக்கலாம்:

1087. கடாஅக் களிற்றின்மேற் கட்படா மாதர்
படாஅ முலைமேற் றுகில்.

ப. ரை: மாதர் படாஅ முலைமேல் துகில் கடாஅக் களிற்றின் மேல் கண் படாம்=இந்தப் பெண்ணின் சாயாத முலைகளின் மேல் ஆடை (படிந்திருப்பது) மதயானையின் மத்தகத்தின் மீது கட்படாம் படிந்திருப்பதைப் போல் (இருக்கிறது).

பொ. ரை: இந்தப் பெண்ணினுடைய (திரண்டு மதர்த்து) நிமிர்ந்திருக்கின்ற முலைகளின்மேல் அவளுடைய மேலாடை படிந்திருப்பது, மதமிகுந்த யானையின் மத்தகங்களின் மீது முகமூடிச் சீலை படிந்திருப்பதுபோல் (அழகாக) இருக்கின்றது,

வி - ம்: கடாஅக்களிறு—கடாக்களிறு—(கடாம் + களிறு—கடாக் களிறு). கடாம்—யானை மதம். களிறு—யானை. கட்

படாஅம் — கட்படாம் — (கண் + படாம்). கட்படாம் என்பது யானையின் கண்களை ஒட்டியதாக அதன் நெற்றியில் சூட்டப்படுகிற அலங்காரச் சீலை. மத்தகம் என்பது யானையின் தலையின் முன்புறத்தின் உச்சியில் இரண்டு கண்களுக்கும் நேராக மேலே திரண்டு குமிழ்களாக உள்ள இரண்டு புடைப்பான பகுதிகள். அவை மதம் அதிகமாக உள்ள யானையின் தலையில், ஒரு பந்தை இரண்டாகப் பகிர்ந்து இருபுறத்திலும் வைத்தன போன்று உருண்டு திரண்டு அகன்றவையாக இருக்கும். படாஅமுலை — படாத முலை- சாயாத முலை. அத்துடன் ஆடவன் கைபடாத முலையெனினும் பொருந்தும். அதனால் இவள் கன்னிப் பெண் என்பதும் கொள்ளக் கிடக்கிறது- இந்தப் பெண்ணினுடைய சாயாது மதர்த்த முலைகளின் மீது ஆடை படிந்திருப்பது மதமிகுந்த யானையின் மத்தகங்களின் மீது கண்சீலை படிந்திருப்பது போலக் கவர்ச்சியுள்ளதாக இருக்கிறது — என்பது கருத்து.

இவள் கன்னி பென்றே தோன்றுவதால், இவளைக் கலவிக்கு அழைப்பதில் குற்றமிருக்காது. அவளும் இணங்குவாள் என்றே அனுமானிக்கிறேன். அடடா! இப்படிப்பட்ட அழகைக் கண்டா நான் எமன் என்று நடுங்கி விட்டேன்! என்ன கோழைத்தனம் எனக்கு!:

1088. ஒண்ணுதற் கோஒ வுடைந்ததே ஞாட்பினு
ணண்ணாரு முட்குமென் பீடு.

ப. ரை: ஞாட்பினுள் நண்ணாரும் உட்கும் என் பீடு ஒண்ணுதற்கோ உடைந்ததே = போர்க்களத்தில் பகைவர்களும் அஞ்சுகின்ற என் வலிமை (இந்த) அழகான நெற்றியையுடைய பெண்ணுக்கா தோற்று விட்டது! (என்ன விந்தை

பொ. ரை: யுத்தகளத்தில் பகைவர்களும் பயப்படுகிற என் வலிமை, இந்த அழகான நெற்றியையுடைய பெண்ணுக்குத் தோற்று விட்டது (என்ன ஆச்சரியம்!)

வி-ம்: ஞாட்பு — போர். நண்ணார் — பகைவர். உட்குதல் அஞ்சுதல். போர்க்களத்தில் பகைவர்களை நடுங்கச் செய்கிற என் வலிமை அழகான இந்தப் பெண்ணைக் கண்டு நடுங்கி விட்டதே! (என்ன விந்தை) — என்பது கருத்து.

இப்படி என்னையும் நடுங்கச் செய்து விட்ட பெண்ணழகின் பெருமையை என்னென்று சொல்லுவேன்! இந்தப் பெண்மையின் இயற்கை அழகே இவ்வளவு சிறந்ததாயிருக்க:

1089. பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணியெவனோ வேதில தந்து.

ப. ரை: பிணை ஏர் மட நோக்கும் நாணும் உடையாட்கு ஏதில தந்து அணி எவனோ? = பெண் மான் போன்ற கள்ளமற்ற பார்வையும் நாணமும் உடையாளுக்குக் காரணமில்லாத ஆபரணங்கள் எதற்காகவோ?

பொ. ரை: பெண்மான் போன்ற வஞ்சகமற்ற பார்வையும் நாணமும் உடைய இந்தப் பெண்ணுக்கு அநுவசியமான ஆபரணங்கள் என்னத்திற்கோ? (தெரியவில்லை).

வி-ம்: பிணை — பெண்மான். ஏர் — ஒத்த. மடநோக்கு — கபடமற்ற பார்வை. அணி — ஆபரணம். ஏதில — காரணமற்றவை — அநுவசியமானவை — மான் போன்ற களங்கமற்ற பார்வையும் நாணமுமே பெண்ணுக்கு அழகுகளாக இருக்க அந்த அழகைக் கெடுக்கும் ஆபரணங்கள் எதற்கு? — என்பது கருத்து.

பார்த்த உடனே எனக்குக் காமத்தை ஏற்றி மயக்கம் உண்டாக்கி விட்ட இந்தப் பெண்ணழகு கள்ளா என்ன? கள்ளல்ல; ஏனென்றால்:

1090. உண்டார்க ணல்ல தடுநறாக் காமம்போற்
கண்டார் மகிழ்செய்த லின்று.

ப. ரை: அடுநறா உண்டார்கண் அல்லது காமம் போல் கண்டார் மகிழ் செய்தல் இன்று = அழிவு செய்யக் கூடிய கள் உண்டவர்களிடத்தில் அல்லாமல் காமத்தைப் போல் கண்டவர்களிடத்தில் களிப்பு உண்டாக்குவதில்லை.

பொ. ரை: தீமை தருகின்ற கள், அதை உண்டவர்களுக்கு மட்டும்தான் போதை தருகிறதேயல்லாமல் காமத்தைப் போலக் கண்டவர்களுக்குப் போதை தருவதில்லை.

வி-ம்: அடுநறா — அடுகின்ற நறா. அடுதல் - துன்பந் தருவது, அல்லது அழிவுண்டாக்குவது. நறா — கள். மகிழ் செய்தல் — களிப்புண்டாக்குதல் — மயக்கமுண்டாக்குதல். கள்ளும் ஒரு போதையுண்டாக்கும் பொருள். பெண் அழகும் போதையுண்டாக்கும் பொருள். ஆனால் கள் அதை உண்டவர்களுக்கு மட்டுந்தான் போதை தருகின்றது; பெண்ணழகு அதைக் கண்டவர்களுக்கெல்லாம் போதை தருகின்றது. மேலும் கள் (அடுகின்ற) அழிவுண்டாக்கும் மகிழ்ச்சி தருகின்றது. பெண்ணழகு குற்றமற்ற மகிழ்ச்சி தருகின்றது. அதனால் — கள்ளினால் உண்டாகும் போதை மகிழ்ச்சி, அதை உண்டால்தான்

வரும்; வந்தால் அழிவும் செய்யும். ஆனல் பெண்ணழகால் உண்டாகும் காம மகிழ்ச்சி பெண்ணைக் கண்டாலே வந்து விடும்; வந்தாலும் அழிவு செய்யாது, இன்பம் தரும் — என்பது கருத்து.

அதி. 110—குறிப்பறிதல்

['குறிப்பறிதல்' என்பது வெளியே காணப்படுகிற குறிகளால் உள்ளத்தின் விருப்பத்தை அறிவது. முன் அதிகாரத்தில் சொன்னபடி அழகான இளம் பெண்ணை சந்தித்த உடல் வளமுள்ள இளைஞன் காம உணர்ச்சி மிகுந்து அந்தப் பெண்ணைக் கலவிக்கு அழைக்க ஆசை கொண்டு, அவள் அதற்கு இணங்கக் கூடியவளா என்று அவளுடைய குறிப்புகளால் அறிதல்.]

1091. இருநோக்கிவளுண்க ணுள்ள தொருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து.

ப. ரை: இவள் உண்கண் இருநோக்கு உள்ளது; ஒரு நோக்கு நோய் நோக்கு: ஒன்று அந்நோய் மருந்து = இவளுடைய மையுண்ட கண்களில் இரண்டுவித பார்வைகள் இருக்கின்றன; ஒரு பார்வை காமநோய் உண்டாக்கும் பார்வை; இன்னொன்று அக்காமநோய்க்கு மருந்து.

பொ. ரை: இவளுடைய மையுண்ட கண்களில் (ஒன்றுக்கொன்று நேர்மாறான) இரண்டுவித பார்வைகள் இருக்கின்றனவே! ஒரு பார்வை எனக்குக் காமநோய் உண்டாக்கியது. இன்னொரு பார்வை அந்த காமநோய்க்கு மருந்தாக (நோயைத் தணிக்கக் கூடியதாக) இருக்கிறது.

வி - ம்: உண்கண் — உண்டகண்கள் — மையுண்ட கண்கள். நோய்—காமநோய். இவளுடைய கண்களில் இரண்டுவித பார்வைகள் இருக்கின்றன. ஒன்று எனக்குக்காமநோய் உண்டாக்கியது. இன்னொன்று அந்த நோயைத் தணிக்கிறது — என்பது கருத்து.

முன்பு அவள் என்னை எதிர்நோக்காகப் பரந்த பார்வையாகப் பார்த்தபோது எனக்கு எமவாதனை போன்ற நோயுண்டாக்கியது. இப்போது அவள் கண்ணைச் சுருக்கிப் பார்க்கிற இந்த இனிய பார்வை அந்த வேதனையைக் குறைக்கிறது. அதனால்:

1092. கண்களவு கொள்ளுஞ் சிறுநோக்கங் காமத்திற்
செம்பாக மன்று பெரிது.

ப. ரை: காமத்தில் செம்பாகம் கண்களவு கொள்ளும் சிறு நோக்கம்; பெரிது அன்று = காமத்திற்குச் செம்மையான பக்குவமுள்ளது கண்ணை மறைத்துக் கொள்ளும் சிறுபார்வை தான்; பெரிய பார்வை அல்ல.

பொ. ரை: காமத்தில் (காமநோயைத் தணிக்க) செம்மை யான பக்குவத்தை உடையது (அவளுடைய கண்ணைச் சுருக் கிய) இந்தச் சிறு பார்வைதான்; (முன் பார்த்த) பரந்த பார்வையல்ல.

வி-ம்: செம்பாகம் — செம்மையான பக்குவம். இப்போது அவள் கண்ணைச் சுருக்கிப் பார்க்கிற இந்தச் சிறு பார்வை தான் அவளுக்கும் என் மீது ஆசை உதித்திருக்கிறது என்பதைக் காட்டுகிறது. முன் பார்த்த பரந்த பார்வை யல்ல — என்பது கருத்து.

அவளுக்கும் காம ஆசை உண்டாகியிருக்கிறது என்பதை உறுதிபபடுத்த, அந்தச் சிறுபார்வை பார்த்த அவள்:

1093. நோக்கினா ணோக்கி யிறைஞ்சினா ளஃதவள்
யாப்பினு ளட்டிய நீர்.

ப. ரை: நோக்கினாள்; நோக்கி இறைஞ்சினாள்; அஃது அவள் யாப்பினுள் அட்டிய நீர் = (சிறு நோக்காகப்) பார்த்தாள்; பார்த்து விட்டுத் தலைகுனிந்து கொண்டாள்; அச்செய்கை (இருவர் உள்ளத்திலும் உண்டான) மனப் பொருத்தம் (என் னும் பயிருக்குள்) அவள் பாய்ச்சிய நீர் போன்றது.

பொ. ரை: (சிறு நோக்காகக் கண்ணைச் சுருக்கிக் கொண்டு) என்னைப் பார்த்தாள்; பார்த்து விட்டு உடனே தலை குனிந்து கொண்டாள்; அப்படிச் செய்தது, சம்மதம் என்றபயிருக்குள் அவள் நீர்ப்பாய்ச்சியது போல் ஆயிற்று.

வி-ம்: 'நோக்கினாள்' என்றது முன் குறளிற் சொல்லப் பட்ட 'கண்களவு கொள்ளும் சிறு நோக்கம் நோக்கினாள்' என்பது. இறைஞ்சுதல் — தலை குனிதல். யாப்பு — சம்மதிக் கும் மன ஒற்றுமை. அட்டுதல் — ஊற்றுதல். அவள் சிறு நோக்காக என்னைப் பார்த்து விட்டு உடனே தலைகுனிந்து கொண்டாள்; அது எங்களுக்குள் உடன்பாடு வளரத் தண் ணீர் விட்டது போன்றது — என்பது கருத்து.

அப்படித் தலைகுனிந்து கொண்ட அவள்:

1094. யானோக்குங் காலை நிலனோக்கு நோக்காக்காற்
றானோக்கி மெல்ல நகும்.

ப. ரை : யான் நோக்கும் காலை நிலன் நோக்கும் நோக்காக் கால் தான் நோக்கி மெல்ல நகும்.=நான் (அவளைப்) பார்க்கிறபோது (அவள்) நிலத்தைப பார்ப்பதும் (நான்) பார்க்காதபோது (அவள்) தான் என்னைப் பார்த்து மெதுவாகச் சிரிப்பாள்.

பொ. ரை : நான் (அவளைப்) பார்க்கிற போதெல்லாம் (அவள் தலைகுனிந்து கொண்டு) நிலத்தைப் பார்பபதும் (நான்) அவளைப பார்க்காத போதெல்லாம் அவள் என்னைப் பார்த்து புன்சிரிப்பு செய்வதுமானாள்.

வி - ம் : நான் அவளைப் பார்க்கிறபோதெல்லாம் அவள் நாணித் தலைகுனிந்து கொண்டு. நான் அவளைப் பார்ககாத போது அவள் என்னைப் பார்த்துப் புன சிரிப்புச் செய்வதானாள் – என்பது கருத்து.

சிறிது நேரம் அப்படிச் செய்த அவள் அதன் பிறகு :

1095. குறிக்கொண்டு நோக்காமை யல்லா லொருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

ப. ரை : குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண் சிறக்கணித்தாள் போல நகும்=குறிப்பாக (என்னைப்) பார்க்கவில்லையே அல்லாமல் ஒரு கண்ணின் கடைக்கண்ணால் (எங்கோ) பார்ப்பது போல் (என்னைப் பார்த்து) சிரிப்பாள்.

பொ. ரை : நேராக (அவள் என்னைப்) பார்க்கவில்லையே தவிர ஒரு கண்ணின் கடைக்கண்ணால் எங்கோ பார்க்கிறவள் போல் என்னைப்பார்த்து சிரிப்பாள்.

வி - ம் : சிறக்கணித்தல் – கடைக்கண்ணால் பார்ப்பது. முன் குறளில் 'மெல்ல நகும்' என்றதும் இந்தக் குறளில் 'நகும்' என்பதும் மனப் பொருத்தம் வளர்வதைக் காட்டுகின்றன – அவள் நேராக என்னைப் பார்க்கவில்லை யென்றாலும் கடைக் கண்ணால் பார்த்து மகிழ்வுடன் சிரித்தாள் – என்பது கருத்து.

முதலில் சிறு நோக்காகப் பார்த்தாள்; பிறகு நான் பார்க்கும்போதெல்லாம் தலைகுனிந்து கொண்டு, நான் பார்க்காத போது என்னைப் பார்த்து மெல்ல சிரிப்பதானாள். இப்போது எங்கேயோ பார்ப்பதுபோல் கடைக்கண்ணால் என்னைப் பார்த்து நன்றாகச் சிரித்து மகிழ்ச்சி காட்டுகிறாள். இதனால் அவள் புணர்ச்சிக்கு இசைவாள் எவ்றே தெரிகிறது. அதனால் அவளுடன் பேச எனக்கும் துணிவு உண்டாகிறது. கேட்டுப்பார்ப்போம் என்று அவளுடன் பேசினேன். அதற்கு அவள் பதில் சொன்ன விதம் :

**1096. உருஅ தவர்போற் சொலினுஞ் செருஅர்சொ
லொல்லை யுணரப் படும்.**

ப. ரை: உருஅதவர்போல் சொலினும் செருஅர்சொல் ஒல்லை உணரப்படும் = ஆசையில்லாதவர் போலப் பேசினாலும் வெறுப்பில்லாமல் பேசுவதிலிருந்து (ஆசை உடையவர் என்பதை) விரைவில் அறிந்து கொள்ள முடியும்.

பொ. ரை: விருப்பம் இல்லாதவர் போலப் பேசினாலும் வெறுப்பில்லாமல் பேசுகின்ற சொற்களிலிருந்து விருப்பம் இருக்கிறதென்பதை விரைவில் கண்டு கொள்ளலாம்.

வி-ம்: உருர் — காமம் உருதவர்கள். செருர் சொல் — செருராக சொல்லுவதால் — அதாவது கோபமில்லாமல் பேசுவதால். செறுதல் — சினத்தல் — வெறுத்தல். ஒல்லை — விரைவாக — உடனே. உண்மையாகவே விருப்பமில்லாதவர்கள் கோபமில்லாமல் பேசமுடியாது. அதனால் — விருப்பமில்லாதவர்கள் போலப் பதில் பேசினாலும் வெறுப்பில்லாமற் பேசுவதிலிருந்து விருப்பம் உள்ளவரென்பதை உடனே கண்டு கொள்ளலாம் — என்பது கருத்து.

அப்படி, நான் கேட்டதற்கு அவள் விருப்பமில்லாதவள் போலப் பதில் சொன்னாலும் கோபிக்கவில்லை. அதனால் அவளுக்கும் புணர்ச்சி விருப்பம் இருக்கிறதென்பது தெரிகிறது. இல்லையானால் என்னை வெறுத்துப் பேசிவிட்டுப் போய்விடமாட்டாளா? அதனால் எனக்கு இன்னும் துணிவுண்டாகிறது. புணர்ச்சிக்கு அழைத்துப் பார்ப்போம்:

**1097. செருஅச் சிறுசொல்லுஞ் செற்ருர்போ னேக்கு
முருஅர்போன் றுற்ருர் குறிப்பு.**

ப. ரை: செருஅ சிறு சொல்லும் செற்ருர் போல் நோக்கும் உருஅர்போன்று உற்ருர் குறிப்பு = கோபமில்லாத மறுப்புச் சொல்லும் கோபித்துக் கொள்வது போன்ற பார்வையும் (காமநோய்) அடையாதவர் போல (காட்டிக் கொள்ளும்) காமநோய் அடைந்துவிட்ட (பெண்களின்) அடையாளம்.

பொ. ரை: கோபமில்லாத மறுப்புச் சொற்களும் கோபித்தது போன்ற பார்வையும் (காம ஆசை) வராதவர்கள் போலக் (காட்டிக் கொள்ளுகிற) காம ஆசை வந்துவிட்ட (பெண்களின்) அடையாளம்.

வி-ம்: சிறு சொல் — நிந்திக்கும் சொல் — கண்டிக்கிற வார்த்தை இங்கே. தன்னைக் கலவிக்கு அழைக்கிற ஆண்பிள்ளைக்கு மறுப்புச் சொல்லும் வார்த்தைகள். உறுதல் —

நோயுறுதல். அதிகாரத்தையும் இடத்தையும் ஒட்டி இங்கே 'உறுதல்' என்பதற்குக் 'காமநோயுறுதல்' என்பது பொருள். அதைப் போலவே இடத்தை ஒட்டி 'உறார் போன்று உற்றார்' என்பதற்கு 'காமநோய் அடையாதவர் போல் காம நோய் அடைந்து விட்ட பெண்களின்' என்பது பொருள். அதனுல் – கோபமில்லாத சொற்களால் மறுத்துப் பேசுவதும் கோபித்துக் கொள்வது போல விழித்துப் பார்ப்பதும் காம ஆசை இல்லாதவர் போல் காட்டிக் கொள்ளுகிற காம நோய் உள்ள பெண்ணின் அடையாளம் – என்பது கருத்து.

அந்தப் பெண்ணியல்பை அறிந்து, அவளுடைய சிறு சொல்லுக்கும் கோபம் போன்ற பார்வைக்கும் பின்வாங்கிவிடாமல் நான் மீண்டும் அவளின்பத்தை நாடி அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்; சிறிது நேரத்தில் :

1098. அசையியற் குண்டாண்டோ ரேஎர்யா னோக்கப்
பசையினள் பைய நகும்.

ப. ரை : ஆண்டு அசையியற்கு ஓர் ஏர் உண்டு; யான் நோக்க பசையினள் பைய நகும்=அப்போது (அவள்) இணக்கத்திற்கு (அறிகுறியாக உண்டான) ஒரு அழகு (நிகழ்ச்சி) உண்டு; (என்னவெனில்) நான் பார்க்கும்போது (வெளிப்படையாக) அவள் ஆசையுள்ளவளாக மீண்டும் மெல்ல சிரித்தாள்.

பொ. ரை : அந்த சமயத்தில் (அவளுடைய) சம்மதத்திற்கு (அறிகுறியாக ஏற்பட்ட) ஒரு அழகான (நிகழ்ச்சி) உண்டு; (என்னவெனில்) நான் பார்க்கும்படியாக அவள் ஆசையோடு மீண்டும் மெல்ல சிரித்தாள்.

வி - ம் : அசையியற்கு - அசைத்தலுக்கு - பொருத்துவதற்கு அதாவது இணக்கத்திற்கு. இணக்கம்—சம்மதம். ஆண்டு – அந்த சமயத்தில். 'செறாச் சிறு சொல்லும் செற்றார் போல் நோக்கும்' கொண்டதைக் கண்டு நான் சிந்தனை செய்து கொண்டு காத்திருந்த சமயத்தில். பசை – ஆசை. ஏர் – அழகு. பைய – மீண்டும் – மெல்ல. அந்த சமயத்தில் அவளுடைய சம்மதத்தைக் காட்டும் அழகான அறிகுறியாக நான் பார்க்க அவள் மீண்டும் சிரித்தாள் – என்பது கருத்து.

அப்படிச் சிரித்துவிட்டு உடனே அவள் ஒன்றும் அறியாதவள் போல, சாதாரண முறையில் வெறும் பார்வையாகப் பார்த்தாள்; நானும் அப்படியே பார்த்தேன் ;

1099. ஏதிலார் போலப் பொதுநோக்கு நோக்குதல்
காதலார் கண்ணே யுள.

ப. ரை: ஏதிலார் போல பொது நோக்கு நோக்குதல் காதலார் கண்ணே உள=அயலார் போல வெறும் பார்வை பார்த்துக் கொள்வது காதல் உண்டாகி விட்டவர்களிடத்தில் உண்டு.

பொ. ரை: ஒருவரை யொருவர் அறியாதவர்கள் போல வெறும் பார்வை பார்த்துக் கொள்ளுகிற தன்மை (உண்மை யான) ஆசையுள்ளவர்களாகிவிட்ட (ஆண் — பெண் இரு) வர்களிடத்திலும் உண்டாகி விடுவது இயல்புதான்.

வி-ம்: ஏதிலார் — ஒருவரை யொருவர் முன் அறியாதவர்கள். பொது நோக்கு — கண்ணைச் சுருக்குதல், கண்ணடித்தல், கடைக்கண் பார்வை முதலியவை இல்லாத சாதாரண பார்வை; பெண்ணினுடைய சம்மதத்தை அறிவிக்க 'பசை யினள் பைய நகும்' என்ற குறிப்பை அறிந்தபின் — எங் களுக்குள் காதல் நிச்சயமாகி விட்டதால் நானும் அவளும் அதன்பின் ஒருவரை யொருவர் சாதாரண முறையில் பார்த் துக் கொண்டோம் — என்பது கருத்து.

அப்படிப் பார்த்துக் கொண்டபோது:

1100. கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்க ளென்ன பயனு மில.

ப. ரை: கண்ணொடு கண் இணை நோக்கு ஒக்கின் வாய்ச் சொற் கள் என்ன பயனும் இல=கண்களோடு கண்கள் இணைந்து பார்வை ஒத்துப் போனால் (அதன்பின்) வாய்ச் சொற்களால் ஒரு பயனும் இல்லை.

பொ. ரை: கண்களும் கண்களும் பொருந்தி, பார்வையில் ஒத்துக் கொண்டால் அதன் பிறகு பேச்சுக்கு அவசியமில்லை.

வி-ம்: நோக்கு ஒக்கின் — ஒரே கருத்தை வெளிப்படுத்தும் பார்வைகளாகி விட்டால். என்ன பயனுமில — வேண்டிய தில்லை — அனுவசியம். எங்கள் இருவருடைய கண்களும் ஒரே குறிப்புடையவைகளாக நாங்கள் ஒருவரை யொருவர் பார்த் துக் கொண்டபின் வாயால் கேட்க வேண்டிய அவசியமே இல்லாமல் புணர்ந்தோம் — என்பது கருத்து.

அதி. 111—புணர்ச்சி மகிழ்தல்

['புணர்ச்சி மகிழ்தல்' என்பது கலவி இன்பத்தைச் சொல்லி மகிழ்ச்சியடைவது. முன் அதிகாரத்திற் சொல்லிய படி ஒரு ஆணும் பெண்ணும் சந்தித்து, இயல்பாக உண்டான காம ஆசையினால் ஒருவரை யொருவர் விரும்பி மனங்கலந்து

புணர்ந்தார்கள். பலமுறை புணர்ந்தும் பிரிந்தும் அனுபவித்த காம இன்பத்தின் சிறப்பைப் புகழ்ந்து ஆண்பிள்ளை சொல்லி மகிழ்வது இந்த அதிகாரம். இது முழுதும் ஆண் சொல்லுவது. இந்த மகிழ்ச்சியைப் பெண் சொல்லுவதாக இல்லாததன் காரணம் கலவியின்பத்தை வெளியிற் சொல்லும் நாணமற்ற தன்மை இயல்பாகவே பெண்ணுக்கு இல்லை என்பதனால்.]

1101. கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள.

ப. ரை: கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஐம்புலனும் ஒண்தொடி கண்ணே உள = கண்ணாற் கண்டு, காதாற் கேட்டு, வாயால் உண்டு, மூக்கால் முகர்ந்து, உடலால் தீண்டி அறியக் கூடிய ஐந்து புலன்களின் (இன்பமும்) அழகிய வளையல்களையணிந்த பெண்ணிடத்திலே (தான்) உண்டு.

பொ. ரை: மேனியழகு என் கண்ணுக்கு இன்பமளிக்க, சொல்லின் இனிமை என் காதுக்கு இன்பமளிக்க, இதழ் சுவைப்பது என் வாய்க்கு இன்பமளிக்க, உடல் மணமும் மலர்மணமும் என் மூக்குக்கு இன்பமளிக்க, கட்டியணைப்பது என் உடலுக்கு இன்பமளிக்க ஐந்து இந்திரியங்களும் ஒரே காலத்தில் அனுபவிக்கக்கூடிய இன்பம் அழகிய வளையலணிந்த பெண்ணிடத்திலேதான் இருக்கிறது.

வி - ம்: உயிர்த்து – மூச்சுவாங்கி – மூக்கைக் குறிப்பது. உற்று-தீண்டி – பரிசித்து. கண், காது, வாய், மூக்கு, உடல் ஆகிய ஐந்து புலன்களும் ஏககாலத்தில் அதனதன் இன்பத்தை அடைவது பெண்ணைப் புணரும் போதுதான் — என்பது கருத்து.

இன்பம் அடைந்தது மட்டுமா! எனக்குண்டான துன்பமெல்லாம் போய்விட்டது. அவளால் உண்டான நோயை அவளே நீக்கி விட்டாள்.

1102. பிணிக்கு மருந்து பிறம னணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து.

ப. ரை: பிணிக்கு மருந்து பிற; அணி இழை தன் நோய்க்கு தானே மருந்து = (மற்ற) நோய்களுக்கு மருந்துகள் வேறு; அழகான ஆபரணங்களுடைய பெண் தான் உண்டாக்கிய நோய்க்குத் தானே மருந்து (ஆனாள்).

பொ. ரை: (மற்றகாரணங்களால் உண்டாகும்) வியாதிகளுக்கு (மற்ற வெவ்வேறு) மருந்துகள். ஆனால் அழகான ஆபரணங்

களை அணிந்த (இந்தப்) பெண் உண்டாக்கிய (என்) காம நோய்க்கு (இந்தப்) பெண்ணே மருந்தாகி (அந்நோயைத் தீர்த்து விட்டாள்).

வி-ம்: 'பிணிக்கு மருந்து பிற' என்பது மற்றவியாதிகளுக்கு அவற்றை உண்டாக்கிய காரணத்துக்கு நேர் மாறான மருந்து களைக் கையாள வேண்டும். அதாவது சூட்டால் வந்த நோய்க்குக் குளிர்ச்சி தரும் மருந்தும், குளிர்ச்சியால் வந்த நோய்க்குச் சூடுண்டாக்கும் மருந்தும் என்பதுபோல அந்தந்தக் காரணத்துக்கு மாறான மருந்து வேண்டும். அதுதான் 'மாற்று' என்பது. அப்படியிருக்க பெண்ணால் உண்டாகும் இந்தக், காம நோய்க்கு மட்டும் பெண்ணே மருந்தாகிறாள். அதனால் - மற்ற காரணங்களால் உண்டாகும் நோய்கள் அவற்றிற்கு மாற்றான மற்ற மருந்துகளால் தீரும்; ஆனால் பெண்ணால் உண்டாகும் காம நோய் அவளால்தான் தீரும் – என்பது கருத்து.

என்னுடைய ஐந்து புலன்களுக்கும் ஏககாலத்தில் இன்பம் தந்து எனக்குண்டான துன்பங்களையும் போக்கிவிட்ட இது வன்றோ பெரிய இன்பம்! இதைச் 'சிற்றின்பம்' என்றும் இதைவிடப் 'பேரின்பம்' வேறு எங்கேயோ கிடைக்கும் என்கிறார்களே! அந்த இன்பம் இந்த இன்பத்திற்கு இணையாகுமா?:

1103. தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொ
றாமரைக் கண்ணா னுலகு.

ப. ரை: தாம் வீழ்வார் மென் தோள் துயிலின் தாமரைக் கண்ணான் உலகு இனிது கொல்! = தாம் காதலிக்கின்ற பெண்ணின் மென்மையான தோள்களைத் தழுவிக் கொண்டு படுத் திருப்பதைவிட தாமரைக் கண்ணனாகிய திருமால் உலகம் இன்பமுள்ளதா என்ன!

பொ. ரை: தாம் காதலிக்கின்ற பெண்ணின் மிருதுவான தோள் களைத் தழுவிக்கொண்டு படுத்திருப்பதை விடத் திருமால் உலகமாகிய வைகுந்தம் அதிக இன்பம் தரக்கூடியதா? இருக் காது.

வி-ம்: வீழ்வார் - விழைவார் – விரும்புகின்றவர். 'வீழ்வார் மென்றோள்' என்றதனால் 'விரும்புகின்ற பெண்' என்பது பொருள். துயிலல் – தங்கியிருத்தல் என்ற அளவோடு கூடாது. ஏன் எனில் தூங்கி விட்டவன் இன்பத்தை அனுப விக்க முடியாது. தாமரைக் கண்ணன் – திருமால். தாமரைக் கண்ணன் உலகு – வைகுந்தம். இந்தக் குறளில் ஆழ்ந்த சிந் பொருள் தருவது. நித்திரை செய்தல் என்று செய்யக்

தனக்குரிய பொருள் இருக்கின்றது. அந்தப் பொருளைத்தான் திருவள்ளுவர் எண்ணியிருக்கிறார் என்று உறுதிப்படுத்த முடியாவிட்டாலும் 'திருவள்ளுவர் அந்தப் பொருளை ஏன் எண்ணியிருக்க முடியாது? எண்ணியிருக்கலாம்' என்ற உத்தியில் அதைப் பார்க்க வேண்டும். அது என்னவெனில்; 'தாமரைக் கண்ணான்' என்பதற்குக் குதர்க்கமாக அர்த்தம் செய்யாமல் தமிழிலக்கிய வழக்கை ஒட்டி அர்த்தம் செய்தால் 'திருமால்' என்றுதான் பொருள் கொள்ள வேண்டும். திருமாலைத் தவிர மற்றெவரையும் தமிழிலக்கியங்கள் கண்ணைச்செந்தாமரைக்கு ஒப்பிட்டுப் பெயர் சொல்வதில்லை. ஆகவே 'தாமரைக் கண்ணான் உலகு' என்பது 'வைகுந்தம்' என்பது உறுதிப்படுகிறது. திருவள்ளுவர் வைணவம், சைவம், பௌத்தம், சமணம், துவிதம், அத்துவிதம் என்பனவற்றில் எந்த ஒரு சமயத்திலும் தனிப் பற்றுடையவர் அல்ல. சமயப் பற்றுடையவர்கள் திருவள்ளுவரைத் தம்தம் மதத்தைச் சேர்ந்தவரென்று சொல்லிக் கொள்ள ஆசைப்பட்டாலும், உண்மையில் திருவள்ளுவர் எல்லா சமயங்களையும் சமநோக்குடன் மதித்தவர் என்பது தெளிவாகத் தெரிகிறது. அப்படிப்பட்ட வள்ளுவர் இங்கே 'தாமரைக் கண்ணான் உலகு' என்று வைகுந்தத்தைக் குறிப்பாகச் சொல்லி வைணவ சமயத்தை நினைப்பூட்டுவதேன்? என்ற கேள்வி பிறக்கின்றது. அந்தக் கேள்விக்குப் பின்வரும் ஆராய்ச்சி சரியான விடைதருவது போல் இருக்கின்றது. அதை எண்ணியே திருவள்ளுவர் இந்த இடத்தில் மட்டும் வைணவக் கோட்பாட்டை நினைவூட்டுவதாகவும் இருக்கலாம். என்னவெனில்; தமிழ் நாட்டில் நெடுங்காலமாக 'வேதாந்தம்', 'சித்தாந்தம்' என்ற இரண்டு சமயங்களும் அனுசரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. வேதாந்தம் என்பது சீவான்மாவும் பரமான்மாவும் இரண்டும் எப்போதும் ஒன்றுதான். ஆனால் மாய்கையினால் சீவான்மா தன்னுடைய பரமான்மாத்தன்மையை உணர்வதில்லை என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. சித்தாந்தம் என்பது சீவான்மா வேறு, பரமான்மா வேறு என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. இந்த சித்தாந்தத்தில் சைவ சித்தாந்தம் வேறு வைணவ சித்தாந்தம் வேறு. சைவசித்தாந்தம், 'பசு' என்ற சீவான்மா 'பாசம்' என்ற ஆசைகளை விட்டபின், 'பதி' என்ற பரமான்மாவாகிய சிவத்தோடு இரண்டறக் கலந்து போகலாம், என்று சொல்லுவது. ஆனால் வைணவ சித்தாந்தம், சீவான்மா எந்தக் காலத்திலும் பரமான்மாவுடன் இரண்டறக் கலந்து போகமுடியாது. ஆனால் பக்தி ஞான ஒழுக்கத்தால் பாசங்களை விட்டொழித்த சீவான்மா ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு வைகுந்தத்தில் பரமான்மாவாகிய நாராயணனுடைய திருமேனியைத் தழுவிக்கொண்டிருக்கும் மேலான இன்பத்தை அனுபவிக்கலாம் என்றும்,

அந்தக் குறிப்பிட்ட காலத்துக்குப் பின் மீண்டும் பிரிந்து பிறவியெடுக்க வேண்டும் என்றும் சொல்லுவது. வைணவ கோட்பாட்டின்படி .சீவான்மா பரமான்மாவைத் தழுவிக் கொண்டுதான் இன்புற முடியும், என்பதனுல்தான் வைண வப் பெரியார்கள் ஒருவரையொருவர் தழுவிக் கொள்ளும் (ஆலிங்கன சம்பிரதாயம்) வழக்கம் உண்டானது. ஆகவே வைணவக் கோட்பாட்டின்படி ஒருவன் அடையக் கூடிய மிகப் பெரிய இன்பம் (பேரின்பம்) எதுவென்ருல் அவனுடைய ஆன்மா வைகுந்தத்திலுள்ள நாராயணனை ஒரு குறிப்பிட்ட காலம் வரை தழுவிக் கொண்டிருக்கும் இன்பம். அப்படி நாராயணனைத் தழுவிக் கொண்டு காலந்தள்ளும் இன்பத்தை விடப் பெரிய இன்பம் தன் காதலியைத் தழுவிக் கொண்டு படுத்திருப்பது என்று புணர்ச்சியில் மகிழும் காதலன் சொல்லுகின்ருன். இது 'தாமரைக் கண்ணுன் உலகு தாம் வீழ்வார் மென்ருேள் துயிலின் இனிது கொல்' என்றதற்கு மிகவும் பொருத்தமாக அமைகிறது. அதனுல் – ஒருவன் தன் மனதிற்கினிய காதலியின் மென்மையான மேனியைத் தழு விக்கொண்டு படுத்திருப்பதைவிட வைகுந்த இன்பம் பெரி தாக இருக்க முடியாது – என்பது கருத்து.

என் காதலியைத் தழுவிக் கொண்டே இருப்பதை விட்டுப் பிரிய முடியவில்லையே! இவளிடத்தில் ஒரு அபூர்வமான சக்தி இருக்கிறது!:

1104. நீங்கிற் றெறூஉங் குறுகுங்காற் றண்ணென்னுந் தீயாண்டுப் பெற்ருளிவள்.

ப. ரை: நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண் என்னும் தீ இவள் யாண்டு பெற்ருள்! = விட்டுப் பிரிந்தால் சுடுகின்றதும் கிட்டி நெருங்கினுல் குளிர்ச்சி தருவதுமான நெருப்பை இவள் எங்கிருந்து அடைந்தாள்!

பொ. ரை: பிரிந்து விலகினுல் சுடுகின்றது; நெருங்கித் தொட் டால் குளிர்ச்சி தருகின்றது; இப்படிப்பட்ட நெருப்பு இவ ளுக்கு எங்கே கிடைத்தது!

வி-ம்: தெறுதல் — சுடுதல். சாதாரண நெருப்பு கிட்டப் போகப் போக சூடு அதிகரித்து தொட்டால் சுட்டுவிடும். எட்டப் போகப்போகச் சூடு குறைந்து குளிர்ச்சியாகும். ஆனுல் காமநெருப்புக்கு இடமான பெண்ணை விட்டு விலகி எட் டப்போகப்போகச் சூடு அதிகரிக்கிறது; கிட்டி நெருங்க நெருங்க சூடு குறைந்து அவளைத் தொட்டவுடன் குளிர்ச்சி தரு கிறது. இது மிகவும் வியக்கத்தக்க நெருப்பல்லவா? அதனுல்– விட்டு விலக விலக சூடு அதிகரிப்பதும் கிட்டி நெருங்க நெருங்க

குளிர்ச்சி தருவதுமான இந்தப் புதுமாதிரி நெருப்பு இவளுக்கு எங்கே கிடைத்தது! — என்பது கருத்து.

என் காதலியின் மேனியில் இந்த அதிசயமான நெருப்பு மட்டுமா இருக்கிறது; நான் விரும்பக் கூடிய எல்லாப் பொருள்களும் இருக்கின்றன :

1105. வேட்ட பொழுதி னவையவை போலுமே
தோட்டார் கதுப்பினா டோள்.

ப. ரை: தோடு ஆர் கதுப்பினள் தோள் வேட்ட பொழுதின் அவையவை போலுமே = பூவிதழின் அருமையுள்ள கன்னங்களையுடைய காதலியின் தோள்கள் (நான்) விரும்பின உடனே எவை எவைகளை நினைக்கிறேனோ அவை அவைகளைப் போலவே இன்பமளிக்கின்றன.

பொ. ரை: மலரின் இதழைப் போன்ற அருமையான (மணமும் மென்மையுமுள்ள) கன்னங்களையுடைய (என்) காதலியின் தோள்கள் (நான் மனதில்) விரும்பின உடனேயே (எந்தெந்த பொருள்களை விரும்பி நினைக்கிறேனோ) அந்தந்தப் பொருள்களைப் போலவே தோன்றி (அவைகள் தரக்கூடிய இன்பங்களைத் தரும்)

வி-ம்: 'தோட்டார் கதுப்பு' என்பதற்கு 'பூவிணையணிந்த தழைத்த கூந்தல்' என்பது நல்ல பொருள் அல்ல. தோடு-பூ. ஆர்—அருமை. கதுப்பு—கன்னம். 'தோட்டார் கதுப்பு'— பூவிதழ் போன்ற அருமையான கன்னம். பூவிதழின் அருமை- மணமும் மென்மையும். புணர்ச்சியில் (சுவைத்து) இன்பம் அடைதற்குக் கன்னங்களே முக்கியம், கூந்தலல்ல. வேட்ட பொழுதின் — விரும்பின உடனேயே. 'அவை அவை போலுமே' என்பது — காதலியின் கண்களைத் தாமரையென்று நினைத்தால் தாமரை போலவே இருக்கும். அல்லது குவளை, நீலோற்பலம் என்று நினைத்தாலும் அவை போலவே தோன்றும். கன்னத்தை மாம்பழமென்று சுவைத்தால் மாம்பழம் போலவே சுவை தரும். உதட்டைத் தேனென்று நினைத்தால் தேன் போலவே இனிக்கும். இப்படியாக எதை எதை எப்படியெப்படி நினைக்கிறேனோ அது அது அப்படி அப்படிப் போலவே இன்பம் தரும். 'தோள்' என்பது உடல் முழுவதையும் குறிக்கும். மலரிதழ் போன்ற அருமையுள்ள கன்னங்களையுடைய என் காதலியின் மேனி நான் அவளுடைய அங்கங்களில் எது எதை எது எதுவாக எண்ணி விரும்பினாலும் உடனே அது போலவே இன்பமளிக்கும் பெருமையுள்ளது — என்பது கருத்து.

அதுமட்டுமல்ல, என் காதலியின் மேனியை அமிர்தம் என்றே சொல்லவேண்டும். ஏனெனில் :

1106. உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலாற் பேதைக்
கமிழ்தி னியன்றன தோள்.

ப. ரை: உறுதோறு உயிர் தளிர்ப்ப திண்டலால் பேதைக்கு தோள் அமிழ்தின் இயன்றன = அடையுந்தோறும் உயிர் (புதுச்) செழிப்பு அடையும்படி திண்டுவதால் பெண்ணுக்குத் தோள்கள் அமிழ்தத்தினுல் செய்யப்பட்டிருக்கின்றன.

பொ. ரை : (அவள் தோள்களை நான்) அடையும் போதெல்லாம் என் உயிருக்கும் புதுப்புது செழிப்புகள் உண்டாகும்படி (அவளுடைய மேனி என் உடலைத்) தீண்டுவதால் அவளுடைய உடல் அமிழ்தத்தினுற் செய்யப்பட்டிருக்கிறது.

வி··ம் : உறுதோறு—தீண்டல் உறுதோறும். 'உறுதோறுயிர் தளிர்ப்பத் தீண்டலால்' என்பதை 'தீண்டல் உறுந்தோறும் உயிர் தளிர்ப்பதால்' என்ற முறையில் பொருள் கொள்ள வேண்டும். காதலியின் மேனி என் தேகத்தோடு சம்பந்தப் படுகிற ஒவ்வொரு தடவையும் புதுப்புது துடிப்பை உயிருக்கு உண்டாக்குவதால் - என்பது பொருள். தளிர்ப்ப - புதுப்புது துளிர்கள் விட. பேதை - பெண். அமிழ்து - அமிர்தம். அமிர் தம் என்பது ஓய்ந்துவிட்ட உயிரையும் மீண்டும் செழிக்கச் செய்யும் என்று சொல்லப்படுகிற அரிய பொருள். இயன் றன -·இயற்றப்பட்டன - செய்யப்பட்டன. என் காதலியின் தோள்களைத் தழுவுந்தொறும் என் உயிருக்குப் புதுப்புது சக்தி உண்டாவதால் அவளுடைய தோள்கள் அமிர்தத்தி னுல் செய்யப்பட்டன போலும் – என்பது கருத்து.

என் காதலியைத் தழுவுந்தொறும் என் உயிருக்குப் புதுப் புது சக்திகள் உண்டாவது மட்டுமல்லாமல் அவளை விட்டுப் பிரியாமல் அவளைத் தழுவிய முயக்கிலேயே நான் நெடு நேரம் இருப்பது என்னுடைய ஆன்மாவுக்கும் பேரின்பம் தரு கின்ற யோக நிலையில் இருப்பது போல் இருக்கிறது :

1107. தம்மி லிருந்து தமதுபாத் துண்டற்ரு
லம்மா வரிவை முயக்கு.

ப. ரை: அம்மா! அரிவை முயக்கு தம்மில் இருந்து தமது பாத்து உண்ட அற்று=என்ன வியப்பு! பெண்ணைத் தழுவி முயங்கிக் கிடப்பது (யோகியர்கள்) தம் உடம்பிலிருந்தே

ஒரு பகுதி (சத்தை) உணவாக உட்கொண்டு (உலகத்தை மறந்து) இருப்பதைப் போன்றதாக இருக்கிறதே!

பொ. ரை: என்ன ஆச்சரியம்! காதலியை இறுகத் தழுவிய படியே நெடுநேரம் மெய்ம்மறந்திருப்பது (யோகியர்கள்) தம்முடைய உடம்பிலிருந்தே ஒரு பகுதியை ஆகார சத்து களாக உட்கொண்டு (பல நாள் உடலையும் உலகத்தையும் மறந்து பேரின்ப நிலையில் இருப்பதைப் போன்றிருக் கிறதே!

வி-ம்: 'அம்மா! என்பது மிகுந்த வியப்பைக் காட்டவே சொல்லப்பட்டது. அதை 'அம் + மா' என்று பிரிக்கக் கூடாது. அப்படிப் பிரிப்பதனால் கிடைக்கிற பொருள் சிறிதும் சுவையும் பொருத்தமும் அற்றதாக இருப்பது வெளிப்படை. அரிவை - பெண். முயக்கு - தழுவிக் கொண்டே படுத்திருப் பது. 'தம்மிலிருந்து தமது பாத்துண்டற்று' என்பதற்கு - 'இன்பம் பயத்தற்கட் டமக்குரிய இல்லின்கணிருந்து உல கோர் தந்தாளான் வந்த பொருளைத் தென்புலத்தார் தெய் வம் விருந்தொக்கல் கட்குப் பகுத்துத் தங்கள் கூற்றை யுண்டாற்போலும்' என்று உரைகொள்வது மிகவும் தடு மாற்றமானது. ஒருவன் தன் வீட்டிலிருந்துகொண்டு தான் சம்பாதிப்பதைப் பிறருக்குப் பங்கிட்டபின் தன் பகுதியை உண்பது என்பது மிகப் பெரிய இன்பமென்று சொல்ல முடி யாது. அது இல்லற ஒழுக்கமேயன்றி இன்பத்துளெல்லாம் சிறந்த இன்பமாகச் சொல்லப்பட்டுள்ள காம இன்பத்துக்கு இணை சொல்லக் கூடிய ஒரு இன்பமாகாது. மேலும் தாம ரைக் கண்ணன் உலகத்தில் பெறக் கூடிய இன்பத்தைவிடச் சிறந்த இன்பம் என்றும், தூரத்தில் சுடுவதும் தொட்டால் குளிர்ச்சியாகவும் உள்ள அதிசயமான நெருப்பென்றும், எதை விரும்பி நினைத்தாலும் அதைப் போலவே இன்ப மளிப்பதென்றும், தீண்டும் போதெல்லாம் புத்துயிரளிக்கும் அமிழ்தமென்றும், காமஇன்பத்தைப் புனைந்துரைக்கும் திரு வள்ளுவர் ஒருவன் தன் வீட்டிலிருந்து தன் சோற்றைத் தின் பதற்கு ஒப்பாகக் கருதியிருக்க முடியாது. ஆதலால் யோக நிட்டர்கள் தம் உடலிலிருந்தே ஊறுகின்ற குண்டலிப் பால் என்று சொல்லப்படுகிற உணவுசத்தை உண்டு கொண்டே அன்ன ஆகாரமில்லாமல் பலநாள் உடலையும் உலகையும் முற்றிலும் மறந்திருப்பது போலவே உணவையும் உடலையும் மற்றவைகளையும் முற்றிலும் மறந்தவனாகக் காதலன் காதலி யைத் தழுவிய வண்ணமே நெடுநேரம் படுத்துக் கிடக்கிறான் என்பதை உணர்த்துகின்றது. எனவே, என்ன அதிசயம்! நான் என் காதலியைத் தழுவிய வண்ணமே மெய்ம் மறந்து நெடுநேரம் பசியின்றியும் படுத்திருப்பது யோகியர்கள் உண

வில்லாமல் பல நாள் உலகை மறந்து நிட்டையிலிருப்பது போன்றதாகவே இருக்கிறது - என்பது கருத்து.

அப்படி விட்டுப் பிரியாமல் கட்டித் தழுவிக் கொண்டே படுத்திருக்கும் இன்பத்தை நான் மட்டுமல்ல :

1108. வீழு மிருவர்க் கினிதே வளியிடை
போழப் படாஅ முயக்கு.

ப. ரை : இடைவளி போழ படாஅ முயக்கு விழும் இருவர்க்கு இனிதே=காற்றும் இடையிலே பிளவுண்டாக்கப் புகமுடியாத தழுவல் ஒருவரை யொருவர் காதலிக்கும் (ஆண் பெண்) இருவர்க்கும் இன்பம் தருவது.

பொ. ரை : இடையில் காற்று கூடப் புகுந்து பிளவுண்டாக்க முடியாதபடி இறுகத் தழுவிக் கொண்டிருப்பது ஒருவரை யொருவர் காதலிக்கின்ற (ஆண் - பெண்) இருவருக்கும் விருப்பமான இன்பம்.

வி- ம் : வளி - காற்று. படா - புகாத. காற்று கூட இடையிற் புகாதபடி இறுகத் தழுவிக் கொண்டிருப்பது காதலன் காதலி இருவருக்கும் விருப்பமான இன்பம் - என்பது கருத்து.

காற்றுகூட இடையிற் புகாதபடி இறுகக் கட்டியணைந்துக் கொண்டே இருப்பது எவ்வளவு விரும்பத்தக்க இன்பமானாலும் வெகுநேரத்துக்குப் பிறகாயினும் பிரிந்துதானே ஆக வேண்டும் :

1109. ஊட லுணர்த புணர்த லிவைகாமங்
கூடியார் பெற்ற பயன்.

ப. ரை : ஊடல் உணர்தல் புணர்தல் இவை காமங் கூடியார் பெற்ற பயன்=பிரிதல் (மறுபடியும்) காம உணர்ச்சி கொள்ளுதல் (மறுபடியும்) புணர்தல் இவை காமப் புணர்ச்சி யிற்கலந்த காதலர்கள் கண்ட பயன்.

பொ. ரை : (புணர்ந்தபின்) பிரிவதும் (பிரிந்திருக்கும்போது மீண்டும்) காம உணர்ச்சி பெறுவதும் (மீண்டும்) புணர்வதும் (ஆகிய இந்த முறை) காமத்திற் புணர்ந்த காதலர்களுடைய அனுபவம்.

வி - ம் : ஊடல் - பிரிதல். இந்த இடத்தில் 'ஊடல்' புணர்ந்தவர்கள் 'பிரிதல்' என்பதை மட்டும்தான் குறிப்பது. 'புணர்ச்சி இனிதாதற் பொருட்டு வேண்டுவதாய ஊடல்' என்ற பிணக்கம் இங்கே பொருளல்ல. 'உணர்தல்' என்பது

'அதனை அளவறிந்து நீங்குதல்' என்ற பொருள் தருவதல்ல. 'உணர்தல்' என்பதற்கு 'மறுபடியும் காம உணர்ச்சி கொள்ளுதல் என்பது இங்கே பொருள். ''புணர்தல்' என்பது மீண்டும் புணர்வதைக் குறிப்பது. 'பெற்ற பயன்' என்பதற்கு 'அறிந்த பலன்', அதாவது 'கண்ட அனுபவம்' என்பது பொருள். ஆதலால்-புணர்ந்தபின் பிரிவதும் பிரிந்திருக்கும்போது மீண்டும் காம உணர்ச்சியடைவதும் மீண்டும் புணர்வதும் ஆகிய இதுதான் காமப் புணர்ச்சியின் அனுபவம் – என்பது கருத்து.

நான் எத்துணை தரம் என் காதலியைப் பிரிந்து எத்துனை தரம் அவளைப் புணர்ந்தாலும் :

1110. அறிதோ றறியாமை கண்டற்றுற் காமஞ்
செறிதோறுஞ் சேயிழை மாட்டு.

ப. ரை : அறிதோறு அறியாமை கண்ட அற்று சேயிழை மாட்டு செறிதோறும் காமம்=(நல்லறிவை) கற்குந்தோறும் (அந்த அறிவு முன் நாம்) அறியாத அறிவாகவே காணப்படுவது போன்றது சிறந்த ஆபரணங்களை அணிந்த பெண்ணினிடத்தில் புணருந்தோறும் காம இன்பம்.

பொ. ரை : (நல்லறிவை) கற்கின்ற ஒவ்வொரு தரமும் (அந்த நல்லறிவு முன் நாம்) அறியாத அறிவாகவே தோன்றுவது போல உயர்ந்த ஆபரணங்களையணிந்த பெண்ணிடத்தில் புணர்ச்சி செய்கிற ஒவ்வொரு தரமும் முன் அனுபவிக்காத இன்பமாகவே இருக்கிறது இந்தக் காம இன்பம்.

வி-ம் : தோறும் – ஒவ்வொரு தடவையும். செறிதோறும் – புணருந்தோறும். நல்லறிவு நூல்களைத் திரும்பத் திரும்பப் படித்தாலும், நல்லறிவை மீண்டும் மீண்டும் கேட்டாலும், அல்லது அடிக்கடி நினைவுக்குக் கொண்டுவந்து உணர்ந்தாலும் அந்த அறிவு புதியதாகவே தோன்றுகின்றது. (ஏன் எனில் உடலின் இயல்பான தாமச குணத்தால் நல்லறிவை எத்துணை முறை அறிந்திருந்தாலும் மறந்து மறந்து போகிறோம்) அதைப் போலவே காம இன்பமும் பெண்ணை எத்துணை தரம் புணர்ந்தாலும் ஒவ்வொரு தரம் புணரும்போதும் அது முன் அறியாத புது இன்பமாகவே தோன்றுகிறது. அதனால் நல்லறிவை எத்துணை முறை கற்றாலும் ஒவ்வொரு முறையும் அது புதியதாகவே தோற்றுவதே போலப் பெண்ணை எத்துணைமுறை புணர்ந்தாலும் ஒவ்வொரு முறையும் புணர்ச்சி இன்பம் புதியதாகவே தோன்றுகிறது – என்பது கருத்து.

அதி. 112—நலம்புனைந்துரைத்தல்

['நலம் புனைந்துரைத்தல்' என்பது நலத்தைப் புனைந்து உரைப்பது. அழகை கற்பனையாக அலங்கரித்துச் சொல்லுவது. நலம் - அழகு. புனைந்துரைத்தல் - கற்பனையாக வருணித்துச் சொல்லுதல். புணர்ந்து பிரிந்தபின் புணர்ச்சியை நினைத்து மகிழ்ந்த காதலன் அப்புணர்ச்சி இன்பத்துக்குக் காரணமான காதலியை நினைத்து அவள் இல்லாத இடத்தில் அவளுடைய அங்கங்களின் சிறப்பை வருணித்துத் தானாக சொல்லிக் கொள்வது. இவ்வதிகாரம் ஆண்பிள்ளையின் காமம் எப்படியெல்லாம் பெண்ணை வருணிக்கச் செய்யும் என்பதைக் காட்டுவது.]

1111. நன்னீரை வாழி யனிச்சமே நின்னினு
மென்னீரள் யாம்வீழ் பவள்.

ப. ரை: அனிச்சமே! நன்னீரை; வாழி; யாம் வீழ்பவள் நின்னினும் மென் நீராள் = அனிச்ச மலரே! நீ நல்ல இயல்புடையாய்; வாழ்க; (ஆயினும்) நாம் விரும்பும் பெண் உன்னைவிட மென்மையான இயல்புடையவள்.

பொ. ரை: அனிச்சப் பூவே! (நீ மிகவும் மிருதுவான) நல்ல தன்மையுடைய (மலர் தான்) உன்னை வாழ்த்துகிறேன்; (ஆனாலும்) நான் விரும்பும் என் காதலி உன்னைக் காட்டிலும் மிருதுவான தன்மையுள்ளவள்.

வி-ம்: அனிச்சம் உலகத்திலுள்ள எல்லா மலர்களிலும் மென்மை மிகுந்ததென்று சொல்லப்படுகிற ஒருவகை மலர். நீர் - இயல்பு - சுபாவம். வீழ்பவள் - விழைபவள் - காதலிப்பவள். அனிச்சமே! நீ மிகவும் மிருதுவான மலர் என்பது உண்மைதான்; உன்னை வாழ்த்துகிறேன்; ஆனாலும் நான் புணர்ந்து மகிழும் என் காதலியின் மேனி உன்னைக் காட்டிலும் மிருதுவானது - என்பது கருத்து.

என்ன! என்னுடைய மனம் மலர்களைக் கண்டு இப்படித் தடுமாறுகின்றது! மனமே!:

1112. மலர்காணின் மையாத்தி நெஞ்சே யிவள்கண்
பலர்காணும் பூவொக்கு மென்று.

ப. ரை: நெஞ்சே! மலர்காணின் பலர்காணும் பூஇவள்கண் ஒக்கும் என்று மையாத்தி = மனமே! ஒரு மலரைப் பார்த்தால் பலபேர் காணும் அந்த மலர் இவளுடைய கண்ணுக்கு ஒப்பானதென்று மயங்குகிறாயே! (என்ன மடமை!)

பொ. ரை: மனமே! ஒரு பூவைப் பார்த்த உடனே பலர் காணப் (பொதுவில் பூத்திருக்கும்) அந்தப் பூ என் காதலியின் கண்ணுக்குச் சமானமாக இருக்கிறதென்று மயங்குகின்றாயே! (அவள் கண்ணுக்கு இந்தப் பூ சமானமாகுமா? என்ன அறியாமை உனக்கு!)

வி-ம்: மையாத்தல் - மயங்குதல். அங்கங்கே பூத்திருக்கும் மலர்களை யார் வேண்டுமானாலும் ஆசையோடு காணலாம், முகரலாம், கண்ணில் வைத்து ஒற்றிக் கொள்ளலாம், மார் போடணைத்துக் கொள்ளலாம். ஆனால் என் காதலியின் கண்களாகிய மலர்களை நான் ஒருவன் தான் ஆசையோடு பார்க்கலாம், முகரலாம், என் கண்ணோடு ஒற்றிக்கொள்ளலாம். மார்போடு அணைத்துக் கொள்ளலாம். அப்படிப்பட்ட அந்தப் பூவுக்கு மற்ற சாதாரணப் பூக்கள் ஒப்பாகும் என்று நினைப்பது வெறும் மயக்கந்தான் - ஆதலால் நெஞ்சே! பலபேர் காண வெளியிடங்களில் பூத்திருக்கும் மலரைப் பார்த்த உடனே அந்த மலர் என் காதலியின் கண்ணைப் போல் இருக்கிறதென்று நீ மயங்குவது அறியாமை - என்பது கருத்து.

என் காதலியின் அங்கங்களின் சிறப்பை என்னென்று சொல்லுவேன்!:

1113. முறிமேனி முத்த முறுவல் வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ ளவட்கு.

ப. ரை: அவட்கு மேனிமுறி; முறுவல் முத்தம்; நாற்றம் வெறி; உண்கண் வேல்; தோள் வேய் = அவளுக்கு மேனி நிறம் தளிர் நிறம்; பல் முத்து; மேனி மணம் வாசனை; மையுண்டகண் வேல்; தோள் மூங்கில்.

பொ. ரை: என் காதலியின் மேனியின் நிறம் தளிர்போன்றது; பற்கள் முத்துக்கள் போன்றவை; மேனியின் இயல்பான மணம் மிக்க வாசனையுள்ளது; மைதீட்டிய கண்கள் (நஞ்சூட்டிய) வேல்களைப் போன்றன; தோள்கள் (பளபளப்பிலும் வழவழப்பிலும்) மூங்கிலைப் போன்றவை.

வி-ம்: முறி – இலைத்தளிர். தமிழ் நாட்டில் பெண்களின் மேனியின் நிறத்தை மாந்தளிருக்கு ஒப்பிடுவது வழக்கம். என் காதலியின் உடல் நிறம் மாந்தளிர் போலவும், பற்கள் முத்துக்கள் போலவும், உடம்பு நல்ல வாசனையுள்ளதாகவும் மைதீட்டிய கண்கள் நஞ்சூட்டிய வேல்கள் போலவும், தோள்கள் பளபளப்பிலும் வழுவழுப்பிலும் மூங்கில் போலவும் இருக்கின்றன - என்பது கருத்து.

வெளியே பூத்திருக்கிற மலர்கள் என் காதலியின் கண்களுக்கு ஒப்பிடத்தக்கன அல்லவென்று நான் சொன்னது மிகையல்ல; அந்த மலரே ஒப்புக்கொள்ளும் :

**1114. காணிற் குவளை கவிழ்ந்து நிலனோக்கு
மாணிழை கண்ணொவ்வே மென்று.**

ப. ரை : குவளை காணின் மாணிழை கண் ஒவ்வேம் என்று கவிழ்ந்து நிலன் நோக்கும்=குவளை மலர்கள் (என் காதலியைக்) கண்டால் சிறந்த ஆபரணங்களையணிந்த அவளுடைய கண்களுக்கு ஈடாக மாட்டோம் என்று கண்டு நாணத்தால் கவிழ்ந்து நிலத்தைப் பார்க்கும்.

பொ. ரை : குவளை மலர்கள் என் காதலியைப் பார்த்தால் சிறந்த ஆபரணங்களை அணிந்துள்ள அவளுடைய கண்களுக்குத் தாம் இணையாக இல்லாமைக்கு வெட்கப்பட்டு, தலையைக் கவிழ்ந்து கொண்டு நிலத்தைப் பார்க்கும்.

வி - ம் : குவளை மலர் இயல்பாக நேரே ஆகாயத்தை நோக்கிப் பூத்திருக்கும் இயல்புடையது. அந்த மலர் அப்படி ஆகாயத்தை நோக்கி நிமிர்ந்திருப்பது, அது இன்னும் என் காதலியைப் பார்க்காததனால் தான். காணும் இயல்பில்லாத மலர் 'காணின்' என்றும், எண்ண முடியாத மலர் 'வெட்கப்படும்' என்றும், தலைகவிழ முடியாத மலர் 'கவிழும்' என்றும் சொல்லச் செய்வது காமம் — எனவே குவளை மலர் என் காதலியைப் பார்த்தால் அவளுடைய கண்ணின் அழகுக்குத் தான் இணையில்லாதிருப்பதை உணர்ந்து வெட்கித் தலை குனிந்து கொள்ளும் — என்பது கருத்து.

என் காதலியின் மிகவும் மெலிவான நுண்ணிய இடை வெகு சிறு பொருள்களையும் கூட தாங்காமல் ஒடிந்து விடுமோ என்று நான் அஞ்சிக் கொண்டேயிருக்கிறேன் :

**1115. அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப்பிற்கு
நல்ல படாஅ பறை.**

ப. ரை : அனிச்சப்பூ கால்களையாள் பெய்தாள் நுசுப்பிற்கு நல்ல பறை படாஅ = அனிச்சப் பூவையானாலும் காம்பு நீக்காமல் சூடினாளோ, (பிறகு) இடுப்பிற்கு நல்ல சொல் உண்டாகாது.

பொ. ரை : (மிகவும் இலேசான) அனிச்ச மலரையானாலும் அதன் காம்பை நீக்காமல் தலையில் சூடிக்கொள்வாளானால்

(அதன் பிறகு அவளுடைய) இடையைப் பற்றி நல்ல பேச்சு பிறக்காது (துன்பப் பேச்சுதான் பிறக்கும்)

வி-ம்: கால் களையாள் — காம்பு நீக்காமல். பெய்தாள் — சூடுவாளானால். பறை — சொற்கள். படா — உண்டாகா. கனமே இல்லாத அனிச்சப் பூவைக்கூட காம்பு நீக்காமல் தலையில் சூடிக் கொள்வாளானால் அந்த பாரத்தைத் தாங்கமாட்டாமல் அவளுடைய இடை ஒடிந்து போகும் — என்பது கருத்து.

என் காதலியின் முகம் சந்திரனைப் போலவே பிரகாசிக்கிறது. அதனால்:

**1116. மதியு மடந்தை முகனு மறியா
பதியிற் கலங்கிய மீன்.**

ப. ரை: மதியும் மடந்தை முகனும் அறியா மீன் பதியின் கலங்கின = சந்திரன் என்றும் பெண்ணின் முகமென்றும் (வேற்றுமை) அறியமாட்டாமல் நட்சத்திரங்கள் தம்முடைய இருப்பிடத்தைப் பற்றி திகைப்படைந்தன.

பொ. ரை: சந்திரனுக்கும் பெண்ணின் முகத்துக்கும் வேற்றுமை அறிந்து கொள்ள முடியாமல் வானத்திலுள்ள நட்சத்திரங்கள் தாம் இருக்க வேண்டிய இடத்தில் (மாறி விட்டோமோ என்று) குழப்பமடைந்தன.

வி-ம்: அறியா - அறியாமல். பதியின் - இருக்க வேண்டிய இடத்தைப் பற்றி. கலங்கின — திகைப்டைந்தன - குழப்பமடைந்தன. மீன் - விண் மீன்கள் - நட்சத்திரங்கள். வான சாத்திரப்படி இன்னின்ன நட்சத்திரம் சந்திரனுக்கு இந்த இந்த பக்கத்தில் இவ்வளவு இவ்வளவு தூரத்தில் இருக்க வேண்டும் என்பது விதி. அந்தந்த இடத்தை விட்டு அந்தந்த நட்சத்திரம் மாறுவதில்லை. சந்திரன் அருகிலில்லாத ஒரு சமயத்தில் என் காதலியின் முகத்தைக் கண்டு, அந்த நட்சத்திரங்கள் 'நாம் இருக்கவேண்டிய இடங்களை விட்டு மாறி விட்டோம் போல இருக்கிறது. மீண்டும் நம்முடைய இடத்துக்குப் போய்விடலாமா என்று திகைப்படைந்தன - என்பது கற்பனை (புனைந்துரை). 'பதியிற் கலங்கின' என்பதற்கு 'தம் நிலையினின்றும் கலங்கித் திரியா நின்றன' என்று நட்சத்திரங்கள் நிலை பெயர்ந்து விட்டதாக பொருள் செய்வது தவறு. ஆதலால் (என் காதலியின் முகத்தைப் பார்த்து) சந்திரனென்றும் பெண்ணின் முகமென்றும் வேற்றுமை அறிய முடியாமல் நட்சத்திரங்கள் தம்முடைய இடங்களை விட்டு நிலை பெயர்ந்து விட்டோமோ என்று திகைப்படைந்தன — என்பது கருத்து.

அப்படித் தம் இடத்தை விட்டு நிலைபெயர்ந்து விட்டோமோ என்று திகைப்படைந்து மீண்டும் இடத்தை மாற்றிக்கொள்ள எண்ணிய நட்சத்திரங்கள் உடனே சந்திரன் அல்ல, ஒரு பெண்ணின் முகம் என்று கண்டுகொண்டு விட்டன ; எப்படிக் கண்டு கொண்டன வென்ருல் :

1117. அறுவாய் நிறைந்த வவிர்மதிக்குப் போல
மறுவுண்டோ மாதர் முகத்து.

ப. ரை : அறுவாய் நிறைந்த அவிர் மதிக்குப் போல மாதர் முகத்து மறு உண்டோ=அறுபட்ட, (மூளியான) இடம் அதிகமாக உள்ள ஒளியையுடைய சந்திரனுக்கு (உள்ளது) போல பெண்கள் முகத்தில் களங்கம் உண்டா? (இல்லை)

பொ. ரை : பிரகாசத்தில் மூளியாக இருப்பதே அதிகமாக உள்ள சந்திரனுக்கு இருக்கிறது போலப் பெண்கள் முகத்தில் களங்கம் உண்டா? (இல்லை)

வி-ம் : அறுவாய் - குறைபட்ட இடம் - மூளி. ‘அறுவாய் நிறைந்த அவிர் மதி’ - மூளியாக இருப்பதே அதிகமான ஒளி மதி. அதாவது சந்திரன் ஒரு மாதத்தில் ஒரே ஒரு நாளில் தான் முழுமதியாக இருக்கிறது. மற்ற நாளெல்லாம் மூளியாகவே இருக்கிறது. அதனுல் மூளியே நிறைந்த மதி. மறு – சந்திரனுக்குள்ள களங்கம். அதனுல் – ஏறத்தாழ எப்போதும் மூளியாகவே இருக்கிறது சந்திரன். என் காதலியின் முகம் ஒரு போதும் மூளியாக இருக்காது. மேலும் சந்திரனுக்கு உள்ளதுபோல் என் காதலியின் முகத்தில் களங்கமும் இல்லை (அதனுல் மீன்கள் அறிந்து கொண்டன) என்பது கருத்து.

சந்திரனே ! நீ அனேகமாக எப்போதும் மூளியாகவே காணப்படுகிருய். அத்துடன் உன்னிடம் எப்போதும் நீங்காத களங்கம் இருக்கிறது. அதனுல் என் காதலியின் முகம்போலப் பிரகாசிக்க முடியாது; அப்படிப் பிரகாசிக்க முடியுமானுல் :

1118. மாதர் முகம்போ லொளிவிட வல்லையேற்
காதலை வாழி மதி.

ப. ரை : மதி ! மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல் காதலை வாழி = சந்திரனே ! நீ பெண்களின் முகம்போல் ஒளிவீச முடியுமானுல் (நீயும் ஒருவனுல்) காதலிக்கத்தக்க பொருளாவாய். (அதன் பிறகு நான் உன்னை) வாழ்த்துவேன்.

பொ. ரை: சந்திரனே! நீ பெண்களின் முகத்தைப்போல் பிரகாசிக்க முடியுமானால் (நீயும் ஒருவனால்) காதலிக்கப்படுவாய். (பிறகு நானும் உன்னை) வாழ்த்துவேன்.

வி - ம்: 'காதலை' என்பதற்கு 'நீயும் என் காதலையுடையையாதி' என்று பொருள்கொள்வது நல்லதல்ல. ஏனெனில் இதுவரையிலும் இந்தக் காதலன் தான் புணர்ந்த பெண்ணினிடத்தில் கொண்டுள்ளதாகச் சொல்லி வந்த காதலுக்கு மாசுண்டாகும். ஆதலால் – சந்திரனே! நீ பெண்களின் முகத்தைப்போல் பிரகாசிக்க முடியுமானால் நீயும் காதலிக்கத் தக்க ஒரு பெண் ஆவாய். பின் நானும் (நீ உன் காதலனோடு சுகமாக இன்பமனுபவிக்க) வாழ்த்துவேன் – என்பது கருத்து.

அப்படி நீ பெண்களின் முகம்போலப் பிரகாசிக்கும் வல்லமை பெற்று, உன்னை ஒருவன் காதலிக்க நேர்ந்தால் சந்திரனே! உனக்கு ஒரு புத்தி சொல்லுகிறேன். அதன்படி நீ நடந்து கொண்டால் என் காதலியை நான் விரும்புவது போல் உன்னையும் உன் காதலன் விரும்புவான். அந்தப் புத்தி என்னவெனில்:

1119. மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயிற்
பலர்காணத் தோன்றன் மதி.

ப. ரை: மதி! மலர் அன்ன கண்ணாள் முகம் ஒத்தி ஆயின் பலர் காண தோன்றல் = சந்திரனே! (நீ) மலர் போன்ற கண்களுள்ள (இந்தப்) பெண்ணின் முகம் போல் (ஒளிவிட வல்லை) ஆகிவிட்டால் (அதன் பிறகு இப்படிப்) பலபேர் (உன்னைப்) பார்க்கும்படியாக (நீ வெளியில்) வரக்கூடாது.

பொ. ரை: சந்திரனே! நீ மலர் போன்ற கண்களுள்ள என் காதலியின் முகம்போல (பிரகாசமுள்ள பெண்) ஆகிவிட்டால் அதன் பிறகு நீ இப்படிப் பலபேர் உன்னைப் பார்க்கும்படி வெளியே திரியக்கூடாது. (என் காதலியை) நானே பார்த்து மகிழ்வதற்கு அவள் வீட்டில் இருப்பது போல் நீயும் உன் காதலனே பார்த்து மகிழ, வெளியில் அலையாமல் இருக்க வேண்டும்.

வி - ம்: 'மலரன்ன கண்ணாள்' என்றது முன் சொன்ன 'மலர் காணின்மையாத்தி நெஞ்சே, இவள்கண் பலர்காணும் பூ ஒக்குமென்று' என்ற குறளை நினைப்பூட்டி, 'பலர்காண வெளியில் பூத்துக்கிடக்கின்ற மலர் போன்று அல்லாமல் நான் மட்டும் கண்டு மகிழ எனக்கே உரிமைப் பொருளான மலர் போன்ற' என்பதைக் குறிப்பது. நான் மட்டும் மகிழ

எனக்கே உள்ள என் காதலியைப் போல, உன் காதலன் மட்டும் மகிழ அவனுக்கே உரிய பொருளாக நீ ஒரு மறைவிடத்தில் இருக்க வேண்டும் என்பது விரிபொருள். 'தோன்றல்'— 'தோன்றக்கூடாது' என்று எதிர்மறைப் பொருளில் இருப்பது. 'முகம் ஒத்தியாயின்' என்பது 'முகத்தைப் போல் மூளி இல்லாமலும் களங்கமில்லாமலும் இருக்க முடிகிறபோது' என்ற குறிப்புடையது. சந்திரன் மூளியாகாமலும் களங்கமில்லாமலும் ஆகப் போவதும் இல்லை, பலர்காண ஆகாயத்தில் தோன்றாமல் இருக்கப் போவதும் இல்லை. அப்படி முடியவே முடியாத காரியங்களையும் முடிவன போன்றுபுனைந்துரைக்கச் செய்வது காமம். ஆதலால் – சந்திரனே! நீ மலர் போன்ற கண்களுள்ள என் காதலியின் முகம்போல் மூளியாகாமலும் களங்கமில்லாமலும் பிரகாசிக்க வல்லமையடைந்து விட்டால் அதன் பிறகு இப்படிப் பலபேர் காண நீ வெளியே திரியக்கூடாது – என்பது கருத்து.

சந்திரனே! உன்னைப்போல் ஓய்வே இல்லாமல் சுற்றிச் சுற்றித் திரிவதற்கு என்னுடைய காதலியின் மிகமிகவும் மிருதுவான பாதங்களால் முடியவே முடியாது; ஏனெனின் :

1120. அனிச்சமு மன்னத்தின் றூவியு மாத
ரடிக்கு நெருஞ்சிப் பழம்.

ப. ரை : அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர் அடிக்கு நெருஞ்சிப் பழம்=அனிச்ச மலரும் அன்னத்தின் சிறு மயிரும் கூட பெண்ணின் பாதத்திற்கு நெருஞ்சி முள்போல் உறுத்தும்.

பொ. ரை : (மிக்க மிருதுவான) அனிச்சப் பூவும், அன்னப் பறவையின் சிறு மயிரும்கூட என் காதலியின் பாதங்களை நெருஞ்சி முட்கள் போலத் துன்புறுத்திவிடும்.

வி - ம் : 'நெருஞ்சிப் பழம்' என்றது முதிர்ந்து பழுத்த நெருஞ்சிக்காய்தான் முள்ளாகக் குத்தும் என்பது. தூவி – பறவைகளின் கழுத்திலும் அடிவயிற்றிலும் உள்ள மிருதுவான மயிர். மிகவும் மிருதுவான அனிச்ச மலரும் அன்னப் பறவையின் சிறு மயிர்களும் கூட நெருஞ்சி முட்கள் போல உறுத்தக் கூடிய அவ்வளவு மிருதுவானவை என்னுடைய காதலியின் பாதங்கள் – என்பது கருத்து.

அதி. 113—காதற் சிறப்புரைத்தல்

['காதற் சிறப்புரைத்தல்' என்பது, புணர்ந்து பிரிந்திருக்கும் காதலர்கள் (ஆணும் பெண்ணும்) ஒருவர் மீதொருவருக்குள்ள அன்புமிகுதியை நினைத்துப் பிரிவாற்றாமையால்

தனித்தனியே தமக்குள் சொல்லிக் கொள்வது. ஆணும் பெண்ணும் சரிசமானமானவர்கள் என்பதைக் காட்டுவது போல் இந்த அதிகாரத்தில் சரிபாதி ஐந்து குறள்கள் ஆண் சொல்லுவதாகவும் மீதி ஐந்து குறள்கள் பெண் சொல்லுவதாகவும் அமைந்திருப்பது குறிக்கத்தக்கது.]

1121. பாலொடு தேன்கலந் தற்றே பணிமொழி
வாலெயி றூறிய நீர்.

ப. ரை: பணி மொழி வால் எயிறு ஊறிய நீர் பாலொடு தேன் கலந்த அற்றே = பணிவான சொற்களையுடைய காதலியின் வெண்மையான பற்களிடையே ஊறிய (இதழூறல்) நீர் பாலோடு தேன் கலந்தது போன்றதே.

பொ. ரை: நயமான வார்த்தைகளைப் பேசும் என் காதலியைப் (புணர்ந்த போது) அவளுடைய சுத்தமான பற்களிடையே ஊறிவந்த (நான் உண்ட வாயூறல்) நீர் பாலோடு தேன் கலந்தது போல் இருந்ததே!

வி-ம்: பணி – பணிவான – நயமான. வால் – வெண்மை – சுத்தம். எயிறு – பற்கள். பால் உணவுப் பொருள் மிகுந்தது. தேன் – சத்துப் பொருள் மிகுந்தது. அதனால் பாலும் தேனும் கலந்தது வெறும் சுவை தருவதற்கு மட்டுமல்ல; உணவூட்டமும் சக்தியும் தருவதற்கு என்பது குறிப்பு – அதனால் வார்த்தைகளை நயமாகப் பேசக் கூடிய என் காதலியை நான் புணர்ந்தபோது அவளுடைய சுத்தமான பற்களிடை ஊறி வந்த வாயூறலை நான் உண்டது, பாலும் தேனும் கலந்தது போல் உணவும் ஊக்கமும் தந்ததே! – என்பது கருத்து.

மேலும் அவளுக்கும் எனக்கும் உண்டாகிவிட்ட உறவு:

1122. உடம்பொ டுயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொ டெம்மிடை நட்பு.

ப. ரை: உடம்பொடு உயிரிடை என்ன (நட்பு) மற்று அன்ன நட்பு மடந்தையொடு எம்மிடை = உடம்போடு உயிருக்கு என்ன நட்போ அப்படிப்பட்ட நட்பே (இந்தப்) பெண்ணோடு எனக்குள்ள நட்பு.

பொ. ரை: உடம்போடு உயிருக்கு எப்படிப்பட்ட உறவோ அப்படிப்பட்ட உறவே இந்தப் பெண்ணோடு எனக்குள்ள உறவு.

வி-ம்: உடலைவிட்டுப் பிரிந்துபோக உயிர் விரும்புவதே இல்லை. உடம்பைவிட்டாலும் உயிருக்கு நிலை இல்லை. மீண்டும்

மீண்டும் உடலையே நாடும். இந்த உண்மை உடலின் தத்துவம், உயிரின் தத்துவம், ஆன்ம தத்துவம் ஆகிய மூன்று சாத்திரங்களுக்கும் பொருந்தும். அப்படி உயிராகிய நான் உடலாகிய என் காதலியைப் பிரிந்திருக்க முடியாது என்பது தோற்றம். 'மற்று' என்பது உறுதியைக் காட்டும் இடைச்சொல். ஆதலால் – உடலினிடத்தில் உயிருக்கு எவ்வளவு ஆசையோ அவ்வளவு ஆசை இந்தப் பெண்ணிடத்தில் எனக்கு – என்பது கருத்து.

என் உயிருக்கு அவள் உடல் போன்றவள் ஆனாலும் அவளை நான் என் உயிருக்கும் உயிராக மதிக்கின்றேன். அவளை நான் என் கண்ணுக்குள் வைத்துக் காக்கவேண்டும். அதனால்:

1123. கருமணியிற் பாவாய்நீ போதாயாம் வீழுந்
திருநுதற் கில்லை யிடம்.

ப. ரை: கருமணியின் பாவாய் நீ போதாய், யாம் விழும்
திருநுதற்கு இடம் இல்லை = (என் கண்ணின்) கருமணியில்
இருக்கிற பாவையே! நீ விலகு; நான் விரும்புகின்ற அழ
கான நெற்றியையுடைய பெண்ணுக்கு (அங்கே நீ இருப்ப
தனால்) இடம் இல்லாமலிருக்கிறது.

பொ. ரை: (என் கண்ணின்) கருமணியிலிருக்கின்ற பாவையே!
நீ தூரப்போ; நான் காதலிக்கின்ற இந்த அழகான நெற்றி
யளான பெண்ணுக்கு (நீ அங்கே இருப்பதனால்) இடமில்லா
மலிருக்கிறது.

வி-ம்: கண்ணில் மட்டுமல்ல, கண்ணின் கருவிழியிற்கூட
அல்ல. கருவிழியின் மணியிலும் ஒரு மூலையில் அல்ல. அந்தக்
கருமணியின் நடுவில் பாவை இருக்குமிடத்தில் தன் காத
லியை வைக்க விரும்புகிறான். பாவை என்பது கருப்பு முழியி
லுள்ள மணியின் மையம். போதாய் – போவாயாக. திரு
நுதல் – அழகான நெற்றி – பெண். அதனால் – என் கண்
ணின் கருமணியிலுள்ள பாவையே! நீ இருக்கிற இடத்தில்
என் காதலியை வைக்க விரும்புகிறேன் – என்பது கருத்து.

என் காதலி என் கண்ணின் பாவையாகிவிட்டாள் அதனால்:

1124. வாழ்த லுயிர்க்கன்ன ளாயிழை சாத
லதற்கன்ன ணீங்கு மிடத்து.

ப. ரை: ஆயிழை உயிர்க்கு வாழ்தல் அன்னாள்; நீங்கும்
இடத்து அதற்கு சாதல் அன்னாள் = தெரிந்தெடுத்த ஆபர
ணங்களை யணிந்த அப்பெண் என் உயிருக்கு வாழ்தல்

போன்றவள்; (அவள் என்னை விட்டுப்) பிரிகிறபோது அது என்னுயிருக்கு சாதல் போன்றது.

பொ. ரை: பொறுக்கியெடுத்த ஆபரணங்களை அணிந்தவளான என் காதலி (என்னுடன் இருக்கிற வரையிலும்) என் உயிருக்கு உயிரிருப்பது போன்றவள், (அவள்) பிரிந்து விடும் போது அந்த உயிர் நீங்கிவிடுவது போன்றவள்.

வி - ம்: உயிருக்கு வாழ்தல் – உயிரோடிருத்தல். முன் குறளில் காதலி அவனுடைய கண்ணுக்குப் பாவையாகி விட்டாள். கண்ணில் பாவை ஆடுகிற வரையிலுந்தான் உடலில் உயிர் இருப்பதற்கு அறிகுறி. பாவை நீங்கி விட்டால் உயிர் போய் விட்ட தென்பது நிச்சயம். அந்தக் கருத்தையும் உள்ளடக்கியதாக அமைந்துள்ளது குறிக்கத்தக்கது. ஆதலால் – என் காதலியின் தொடர்புதான் என் உயிர்: அத்தொடர்பு நீங்கினால் என் உயிர் போய்விடும் – என்பது கருத்து.

என் காதலியின் தொடர்பு பிரிக்க முடியாதது என்பது மட்டுமல்ல; அவளுடைய குண நலமும் மறக்க முடியாதது:

**1125. உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
ஒள்ளமர்க் கண்ணாள் குணம்.**

ப. ரை: ஒள் அமர் கண்ணாள் குணம் மறப்பின் மறப்பு அறியேன் யான் உள்ளுவன்=ஒளி மிகுந்து விரும்பத்தக்க கண்களுடைய காதலியின் நற்குணத்தை மறப்பிலும் மறக்க முடியவில்லை; எப்போதும் நினைத்துக் கொண்டிருக்கிறேன்.

பொ. ரை: பிரகாசமாக ஆசை மூட்டுகின்ற கண்களுள்ளவளான என் காதலியின் குணச் சிறப்பை மறந்தாற் போலும் கூட மறக்க முடிவதில்லை. எப்போதும் அதை நான் எண்ணிக் கொண்டேயிருக்கிறேன்.

வி - ம்: ஒள் – ஒளியுள்ள. அமர் – விருப்பமூட்டக்கூடிய. மறப்பின் – மறப்பிலும் – மறந்தாற் போலும். என் காதலியின் குண நலத்தை மறக்கவே முடிவதில்லை. எப்போதும் நினைத்துக் கொண்டேயிருக்கிறேன் – என்பது கருத்து.

இனி, காதலனைப் பிரிந்திருக்கும் காதலி தன் பிரிவாற்றாமையைத் தனக்குத் தானே சொல்லிக் கொள்ளுவது:

**1126. கண்ணுள்ளிற் போகா ரிமைப்பிற் பருவரார்
நுண்ணியரெங் காத லவர்.**

ப. ரை: கண் உள்ளில் போகார் இமைப்பின் பருவரார் என் காதலவர் நுண்ணியர்=கண்ணின் உள்ளேயும் போகமாட்டார்! இமைத்தால் துன்பமடைவது மில்லை! என் காதலர் நுண்மையான (திறமையுள்ள)வர்.

பொ. ரை: கண்ணுக்கு உள்ளேயும் போகாமல் (விழிக்கும் இமைக்கும் இடையில் இருந்து கொண்டு) இமைக்கும் போதும் (இமையடிபட்டுத்) துன்பமடையாமல் இருக்கிருரே! என் காதலர் நுட்பமான திறமை சாலி.

வி-ம்: கண்ணுக்கு உள்ளே இருந்தாலும் அல்லது கண்ணுக்கு வெளியே இருந்தாலும் இமைகொட்டும் போது தாக்காது. ஆனால் என் காதலரோ கண்ணுக்கு உள்ளேயும் போவதில்லை; இமைக்கு வெளியேயும் இருப்பதில்லை. கண்ணுக்கும் இமைக்கும் மத்தியிலேயே இருந்து கொண்டிருக்கிருர். நான் எத்தனையோ தடவை கண்ணை மூடி முழிக்கிறேன். மூடும் போதும் இமை அவரைத் தாக்குவதில்லை. முழிக்கும் போதும் தாக்குவதில்லை. பருவரார் – துன்பமடையார். நுண்ணியர்–திறமை சாலி – சமர்த்தர். அதனால் – கண்ணுக்கு உள்ளே போகாமல் கண்ணுக்கும் இமைக்கும் இடையில் இருந்து கொண்டே நான் கண்ணை இமைக்கும்போதெல்லாம் இமைகள் தம்மீது தாக்காதபடி இருந்து கொண்டிருக்கிற என்காதலர்! வெகு நுட்பமான சமர்த்தர் – என்பது கருத்து.

அவர் அப்படி என் கண்ணுக்கும் இமைக்கும் இடையிலேயே இருந்து கொண்டிருப்பதால்:

**1127. கண்ணுள்ளார் காத லவராகக் கண்ணு
மெழுதேங் கரப்பாக் கறிந்து.**

ப. ரை: காதலர் கண்ணுள்ளாராக கண்ணும் எழுதேம்; கரப்பாக்கு அறிந்து=காதலர் கண்ணில் இருக்கிறதனால் கண்ணுக்கு மையெழுதுவதும் இல்லை; (ஏனெனில் அது அவரை) மறைக்குமென்று எண்ணியதால்.

பொ. ரை: என் காதலர் என் கண்ணிலேயே இருந்துகொண்டிருப்பதால்தான் நான் கண்ணுக்கு மைதீட்டுவதும் இல்லை; ஏனென்ருல் மைதீட்டும் போது அவர் மறைந்து போவாரோ என்று எண்ணியதால்.

வி-ம்: கரப்பாக்கு – மறைதல். அறிந்து–எண்ணி–உணர்ந்து. காதலன் பிரிந்த நாளாகக் காமநோயால் அவள் வழக்கம் போல் தன்னை அலங்கரித்துக் கொள்ளுவதை விட்டு விட்டதைக் காட்டுவது இது. காதலர் என் கண்ணிலேயே இருப்பதால் கண்ணுக்கு மைதீட்டும் போது அவர் மறைந்து விடு

வாரோ என்று எண்ணி நான் கண்ணுக்கு மைதீட்டுவதை விட்டுவிட்டேன் — என்பது கருத்து.

என் காதலர் என் கண்ணில் மட்டுமா எப்போதும் இருக்கிறார்? என் நெஞ்சத்திலும் அப்படியே இருந்துகொண்டிருக்கிறார். அதனால்:

1128. நெஞ்சத்தார் காத லவராக வெய்துண்ட
லஞ்சுதும் வேபாக் கறிந்து.

ப. ரை: காதலர் நெஞ்சத்தாராக வெய்து உண்டல் அஞ்சுதும்; வேபாக்கு அறிந்து = என் காதலர் நெஞ்சில் இருப்பதனால் சூடான உணவுகளை உண்ண அஞ்சுகின்றேன்; ஏனெனில் அவரைச் சுட்டுவிடும் என்று எண்ணுவதால்.

பொ. ரை: என் காதலர் என்னுடைய நெஞ்சிலேயே இருந்து கொண்டிருப்பதால் சூடான எதையும் உண்ண அஞ்சுகின்றேன்; ஏனெனில் அது அவரைச் சுட்டு விடுமே என்று எண்ணுவதால்.

வி - ம்: வெய்து — சூடானவை. வேபாக்கு — சுட்டுவிடும் என்று. காதலன் பிரிந்த நாளாக அவள் காலாகாலத்தில் உணவு கொள்வதை மறந்துவிட்டாள். அன்னையோ தோழியோ பலமுறை அழைத்தாலும் போவதில்லை. வெகு நேரம் சென்றபின் ஆறிப்போன உணவுகளைச் சிறிது உண்பாள். அதனால் உணவின்மேல் நினைப்பே வருவதில்லையென்பதை இப்படிச் சித்தரித்துச் சொல்லுவது — என் காதலர் என் நெஞ்சிலேயே இருந்து கொண்டிருப்பதால் சூடான பதார்த்தங்களை உண்டால் அது அவரைச் சுட்டுவிடுமே என்று அஞ்சி, சுடச்சுட உண்பதை விட்டுவிட்டேன் — என்பது கருத்து.

என் காதலரைப் பிரிய மனமில்லாமல் அவரை எந்நேரமும் பார்த்துக் கொண்டேயிருக்கும் விருப்பத்தால் நான் கண்களை மூடுவதேயில்லை; அதற்காக:

1129. இமைப்பிற் கரப்பாக் கறிவ லனைத்திற்கே
யேதில ரென்னுமிவ் வூர்.

ப. ரை: இமைப்பின் கரப்பாக்கு அறிவல்; அனைத்திற்கே இவ்வூர் ஏதிலர் என்னும் = கண்ணை மூடினால் காதலர் மறைந்து விடுவார் என்று கருதினேன்; அதற்குத்தான் (அவரை) எனக்குத் தீங்கு செய்துவிட்டவரென்று இவ்வூரார் சொல்லுகிறார்கள்.

பொ. ரை: கண்ணை மூடினால் என் காதலர் கண்ணிலிருந்தும் மறைந்து விடுவாரோ என்று கருதி நான் கண்ணை இமைப்பது கூடச் செய்யாமல் விழித்தபடியே இருக்கிறேன்; அதற்காகத் தான் அவர் எனக்குத் தீமை செய்து விட்டவரென்று ஊரார் அவரை நிந்திக்கிறார்கள்.

வி-ம்: காதலனைப் பிரிந்தபின் அவளுக்குத் தூக்கமே வருவதில்லை. எப்போதும் விழித்துக் கொண்டேயிருக்கிறாள். அதைக் கண்ட தாய் தந்தையரும் ஊராரும் 'எவனையோ எண்ணிக் கொண்டு இவள் இப்படித் தூங்காமல் பேய் பிடித்தவள் போல் விழித்துக்கொண்டே இருக்கிறாளே' என்று ஏசுகின்றார்கள்; அது இப்படி மாற்றிச் சொல்லப்படுகிறது — அதனால் — கண்ணை மூடினால் என் காதலர் கண்ணிலிருந்தும் மறைந்து விடுவாரே என்று கருதி நான் உறங்குவதை விட்டு விட்டேன். அதற்காக என்னை இக்கோலமாக்கி விட்டாரே என்று எல்லாரும் அவர் எனக்குத் திங்கு செய்து விட்டதாகத் திட்டிக் கொண்டேயிருக்கிறார்கள் — என்பது கருத்து.

ஏன் ஊரார் அவரை இப்படி நிந்திக்க வேண்டும்? அவர் என்னைத் துறந்து விட்டா போய் விட்டார்?

1130. உவந்துறைவ ருள்ளத்து ளென்று மிகந்துறைவ
ரேதில ரென்னுமிவ் வூர்.

ப. ரை: என்றும் உள்ளத்துள் உவந்து உறைவர், இகந்து உறைவர், ஏதிலர், என்னும் இவ்வூர்=எப்போதும் என் உள்ளத்தில் மகிழ்ச்சியோடு தங்கியிருக்கும் என் காதலரை (அவர்) 'பிரிந்திருக்கிறார்' 'அன்பில்லாதவர்' என்று இந்த ஊரார் சொல்லுகிறார்களே! (என்ன அறியாமை!)

பொ. ரை: எப்போதும் என் மனதில் மகிழ்ச்சியோடு (நானும் மகிழும்படி) இருந்து கொண்டேயிருக்கிற என் காதலரை, அவர் என்னைப் பிரிந்து போய்விட்டாரென்றும் என் மீது அன்பில்லாதவர் என்றும் இந்த ஊரார் சொல்லுகின்றார்களே! (அவர்கள் அறியாதவர்கள்).

வி-ம்: இகந்து—பிரிந்து. ஏதிலர்—அன்பிலர். இவள் ஊண் உறக்கம் இல்லாமல் காதலனை எண்ணிக் காமத்துன்பங்களில் அவதிப்படுவதைக் கண்ட ஊரார்—'இப்படி இவளை யாரோ கெடுத்துவிட்டுப் போய்விட்டானே! அவன் உண்மையான அன்புடையவனாக இருந்தால் இவளைத் தனக்கு ('கற்பியல்' முறைப்படி) மணமுடித்துக் கொள்ளத்தக்க முயற்சிகள் செய்திருக்க மாட்டானா? அப்படிச் செய்து கொள்ளும் ஆசையில்லாதவனை நினைத்துக் கொண்டு இவள் இப்படித் துன்

பப்படுகிருளே !.... என்றெல்லாம் சொல்லுகிறதைக் குறிப்பது – எப்போதும் என் மனதில் மகிழ்ச்சியோடு இருந்து கொண்டு என்னையும் மகிழ்விக்கிற என் காதலர் என்னை விட்டுப் பிரிந்திருக்கிருர் என்றும் என் மீது காதலில்லாதவரென்றும் இந்த ஊரார் சொல்லுவது அறியாமையால் – என்பது கருத்து.

அதி. 114 –நாணுத்துறவுரைத்தல்

[‘நாணுத் துறவுரைத்தல்’ என்பது நாணத்தைத் துறந்து விட்டதை – அதாவது வெட்கத்தை விட்டுவிட்டதைச் சொல்லுவது. முன் அதிகாரத்தில் காதலனும் காதலியும் தனியே இருந்து கொண்டு ஒருவரை யொருவர் நினைத்துத் தம் காதலைப்பற்றி வெளியிற் சொல்ல வெட்கப்பட்டுக் கொண்டு தமக்குள்ளேயே சொல்லிக் கொண்டார்கள். அப்படிச் சில நாள் மறைவிலிருந்து காதலை நினைத்து தமக்கே சொல்லிக் கொண்டிருந்தவர்கள் மறுபடியும் களவாகப் புணர வாய்ப்பு கிடைக்காமல் காமம் மிகுந்து தம் காம விகாரத்தை வெட்கம் விட்டு வெளியிலும் காட்டிக் கொள்ளத் தொடங்கி விட்டார்கள் என்பதைச் சொல்லுவது இந்த அதிகாரம். இதில் பெரும் பகுதி காதலனும் சிறு பகுதி காதலியும் சொல்லுவது]

1131. காம முழந்து வருந்திணுர்க் கேம
மடலல்ல தில்லை வலி.

ப. ரை: காமம் உழந்து வருந்திணர்க்கு ஏமம் மடல் அல்லது வலி இல்லை=காம இன்பத்தை அனுபவித்து (பிரிந்து மறுபடியும் அது கிடைக்காமல்) வருந்துகிறவனுக்கு மடலூர்தலைவிட வலிமையுள்ள நன்மை தருவது வேறில்லை.

பொ. ரை: (பெண்ணைப் புணர்ந்து) காம இன்பத்தை அனுபவித்து (ப்பின் பெண்ணைப் பிரிந்திருந்து) வருந்துகின்ற ஒருவனுக்கு ஆறுதலளிப்பதற்கு மடலூர்வதை விடச் சிறந்தவழி வேறில்லை.

வி-ம்: உழந்து – அனுபவித்து. ஏமம் – நன்மை – ஆறுதல். ‘மடல்’ என்பது ‘மடல்மா’ – மடல்களால் அலங்கரிக்கப்பட்ட குதிரை. ஒரு ஆடவனும் ஒரு பெண்ணும் ‘களவாகப்’ புணர்ந்து பிரிந்தபின் அவர்கள் களவொழுக்கத்தை அறிந்த பெற்ருேர்கள் விரைவில் அவர்களுக்குள் ‘கற்பொழுக்கம்’ நடக்கும்படி இருவருக்கும் மணமுடித்து விடுவது வழக்கம்.

பெற்றோர்களுடைய சம்மதம் கிடைக்காமலோ அல்லது வேறு காரணத்தாலோ அந்தக் 'கற்பியல்' நடக்கத் தடை ஏற்படுமானால், அந்த ஆண் பிள்ளை தான் ஒரு பெண்ணைக் களவாகப் புணர்ந்து பிரிந்து காதல் கொண்டிருப்பதை ஊரா ருக்குத் தெரியப்படுத்துவதற்கு அறிகுறியாகத் தென்னை, பனை, ஈந்து, கமுகு முதலியவற்றின் பாளைகளால் அலங் கரிக்கப்பட்ட ஒரு குதிரை மீது ஊரிலுள்ள முக்கியமான வீதி களின் வழியே சவாரி போவான். அதைக்கண்ட ஊரின் நாட் டாண்மைக்காரர்கள், அவன் எந்தப் பெண்ணைக் காதலிக் கிறான் என்பதை அவனிடம் மறைவாகக் கேட்டறிந்து அந் தப் பெண்ணின் பெற்றோர்களுடன் பேசிக் 'கற்பியல்' மண முடிக்க ஏற்பாடு செய்வார்கள். அதுதான் 'மடலூர்தல்'. அப்படி மடலூர்வது மிகவும் அபூர்வமாகத்தான் நேரும். ஏன் எனில் 'களவாகக்' காதல் கொண்டு விட்ட இருவரை உடனே 'கற்பாக்கி' மணமுடித்து விடுவதுதான் வழக்கம். அது நடக்கத் தடை ஏற்படுகிற வெகு சில சமயங்களில்தான் மடலூர்வதைச் செய்ய நேரும். அதனால் மடலூர்வது ஒரு வெட்கம் கெட்ட காரியமாகவே கருதப்படும். எனவே அது 'நாணுத் துறவு' ஆகிறது — களவாகப் புணர்ந்து காம இன் பத்தை அனுபவித்துக் காதலியைப் பிரிந்து வருந்துகிற ஆண் பிள்ளைக்கு மடலூர்வதை விட வேறு வழியில்லை (நானும் அதைச் செய்ய வேண்டும் போலிருக்கிறது) — என்பது கருத்து.

1132. நோனா வுடம்பு முயிரு மடலேறு
நாணினை நீக்கி நிறுத்து.

ப. ரை: நோனா உடம்பும் உயிரும் நாணினை நீக்கி நிறுத்து மடல் ஏறும் = (காம நோயின் வருத்தத்தை) பொறுக்கா மல் (என்) உடலும் உயிரும் வெட்கத்தையும் விலக்கி நிறுத்திவிட்டு மடலேற விரும்பும்.

பொ. ரை: (காம நோயின் துன்பத்தைப்) பொறுக்க முடியா மல் என் உடலும் உயிரும் (எனக்குள்ள) வெட்கத்தையும் விலக்கி நிறுத்தி விட்டு மடலேற விரும்புகின்றன.

வி-ம்: நோனா — பொறுக்காத. 'நிறுத்து' என்பது 'நிறுத்தி' என்ற பொருள் தருவது. அவனுடைய உண்மையான விருப்ப மாகிய நாணுடைமையையும் மீறி, அவனை மடலேறுவதை எண்ணும்படி அவனுடைய உடலும் உயிரும் காமநோயால் துன்புறுவதைத், தானே சொல்லிக் கொள்ளுகிறான் — காம வேதனையைப் பொறுக்காமல் என் உடலும் உயிரும் வெட் கத்தை விட்டு மடலேறும்படி என்னைத் தூண்டுகின்றன — என்பது கருத்து.

ஐயோ! இந்தக் காமநோய் என்னை எவ்வளவு கெடுத்து விட்டது !:

**1133. நாணொடு நல்லாண்மை பண்டுடையே னின்றுடையேன்
காமுற்றா ரேறு மடல்.**

ப. ரை: பண்டு நாணொடு நல்லாண்மை உடையேன்; இன்று காமுற்றார் ஏறும் மடல் உடையேன் = முன் நாணத்தோடு நல்ல ஆண்மையுள்ளவனாக இருந்தேன்; இன்றைக்குக் காமம் அடைந்தவர்கள் ஏறுகின்ற மடல் உடையவனாக இருக்கிறேன்.

பொ. ரை: இதுவரையிலும் வெட்கமுள்ளவனாகவும் நல்ல ஆண்மையுள்ளவனாகவும் இருந்தேன். (அப்படிப்பட்ட நான் அந்த வெட்கத்தையும் ஆண்மையையும் விட்டுவிட்டு) இப்போது மடலேறுதலை எண்ணுகிறவனாக இருக்கிறேனே!

வி-ம்: பண்டு – முன் – இதற்குமுன் – இதுவரையிலும். நாண் – வெட்கம். ஆண்பிள்ளைக்கு நாணம், ஆண்மைக்குக் குறைவான காரியத்தைச் செய்யக் கூசுவது. தான் காதலிப்பவளும் தன்னிடம் காதலுள்ளவளுமான பெண்ணை அவளுடைய பெற்றோர்கள் உடனே தனக்கு மணமுடித்துக் கொடுக்காமல், தான் மடலேற வேண்டியிருக்கிற நிலைமை தன்னுடைய பெருமைக்கும் ஆண்மைக்கும் குறைவானது என்று கூசுகின்றான். ஏனெனில் இவன் தகுதியுடையவன் என்று அவர்கள் கருதியிருந்தால் இவன் மடலேற நினைக்க வேண்டிய அவசியமில்லை. அதனால் – இதுவரையிலும் மானமுள்ளவனாகவும் நல்ல ஆண்மையுள்ளவனாகவும் இருந்த நான் இப்போது அவைகளை விட்டுவிட்டு மடலேற வேண்டிய நிலையிலிருக்கிறேனே! – என்பது கருத்து.

என்ன செய்வது? நாணத்தையும் நல்லாண்மையையும் பார்த்தால் முடியுமா? மடலேறத்தான் வேண்டும் போலிருக்கிறது. ஏன் எனில்:

**1134. காமக் கடும்புன லுய்க்குமே நாணொடு
நல்லாண்மை யென்னும் புணை.**

ப. ரை: நாணொடு நல்லாண்மை என்னும் புணை காமக் கடும்புனல் உய்க்குமே? = நாணமும் நல்லாண்மையும் என்னும் தெப்பங்கள் காமம் என்னும் வேகமான ஆற்றைக் கடத்திக் கரையேற்றுமா?

பொ. ரை: (மடலேறக் கூசுகின்ற) வெட்கமும் நல்லாண்மையும் ஆகிய தெப்பங்களைக் கொண்டு காமநோய் என்னும்

வேகமான ஆற்று வெள்ளத்தைக் கடந்து கரையேற முடியுமா? (முடியாது ஆதலால் மடலேறத்தான் வேண்டும்)

வி-ம்: கடும்புனல் — கடுமையான நீர் — வேகமான நீர்ப் பெருக்கு — வேகமான ஆற்று வெள்ளம். 'உய்க்குமே' என்பது "உய்க்குமா?" என்ற கேள்வி. 'ஆ', 'ஏ', 'ஓ' மூன்றும் வினாவுக்கு ஈற்றெழுத்துக்களாகும். உய்த்தல் — ஈடேற்றல் — கரையேற்றல். புணை — தெப்பம் — படகு. இந்தக் குறளுக்கு 'நாணும் நல்லாண்மையுமாகிய புணைகளை என்னிற் பிரித்துக் காமமாகிய கடிய புனல் கொண்டு போகாநின்றது' என்று பொருள் கொள்வது சரியல்ல. ஏனெனில் புணைகளைப் புனல் கொண்டு போய்விட்டால் இவன் முழுகி இறந்து போவான். பிறகு மடலேற எண்ணுவது யார்? அதனால் — வெட்கத்தையும் நல்லாண்மையையும் கருதினால் காமவெள்ளத்தைக் கடக்க முடியுமா? (மடலேறினால்தான் முடியும் போலிருக்கிறது) — என்பது கருத்து.

அதனால் மடலேறுவதைப் பற்றியே நாள்தோறும் எண்ணி துயரப்பட வேண்டியவனாகிவிட்டேன்:

1135. தொடலைக் குறுந்தொடி தந்தாண் மடலொடு
மாலை யுழக்குந் துயர்.

ப. ரை: மாலை மடலொடு உழக்கும் துயர் தொடலை குறுந் தொடி தந்தாள் — மாலைக் காலங்களில் (காம மிகுதியால்) மடலேறுவதை நினைத்து குழம்பிக் கொண்டிருக்கும் துயரத்தை மேகலையும் அழகிய வளையல்களும் அணிந்தவளான அப்பெண் கொடுத்து விட்டாள்.

பொ. ரை: (நாள்தோறும்) மாலைக் காலத்தில் (காம மிகுதியால்) மடலேறுவதையே நினைத்துக் கலங்கிக் கொண்டிருக்கும் துன்பத்தை, (எனக்கு) மேகலாபரணமும் அழகான வளையல்களும் அணிந்தவளான என் காதலி தந்து விட்டாள்.

வி-ம்: தொடலை — தொங்கல்களுள்ள ஒரு ஆபரணம் — மேகலை. குறும் — அழகிய. தொடி — வளையல். குறுந்தொடி — அழகிய வளையல்களை யணிந்த பெண். உழக்கும் துயர் — இடைவிடாது அதிலேயே கிடந்து உழலுகின்ற துயரம். 'மாலை யுழக்கும் துயர்' — என்றது மாலைப் பொழுதிலே தான் காமநோய் அதிகப்படும் என்ற இயற்கையைக் குறிப்பது. தினந்தோறும் மாலை நேரத்தில் மடலேறுவதையே நினைத்துக் குழம்பிக் கொண்டிருக்கும் துன்பம் என் காதலி என்னுடன் இல்லாததால் வந்தது — என்பது கருத்து.

தினந்தினம் மாலைப் பொழுதில் மட்டுமா நான் இப்படி வருந்துகிறேன்?:

•

1136. மடலூர்தல் யாமத்து முள்ளுவேன் மன்ற
படலொல்லா பேதைக்கென் கண்.

ப. ரை: பேதைக்கு என்கண் படல் ஒல்லா; யாமத்தும் மன்ற மடல் ஊர்தல் உள்ளுவேன் = அப்பெண்ணுக்காக என் கண்கள் மூடுவதே இல்லை; (அதனால்) நடுச்சாமத்திலும்கூட மடலூர்தலை எண்ணுவேன்.

பொ. ரை: என் காதலிக்காக (ஏங்கி) என்னுடைய கண்கள் உறங்குவதேயில்லை; அதனால் நடுச்சாமத்திலும்கூட மடலேற எண்ணிக் கொண்டிருப்பேன்.

வி-ம்: கண்படல் – கண் மூடுதல் – உறங்குவது. 'மன்ற' என்பது 'கூட' என்ற பொருளில் நிற்கும் அசைச் சொல். பேதை – பெண் – என் காதலியை நினைத்து எனக்குத் தூக்கமே வருவதில்லை. அதனால் நடுச்சாமத்திலும்கூட மடலேற நினைக்கிறேன் – என்பது கருத்து.

நான் இப்படி வெட்கத்தையும் விட்டு மடலேற எண்ணுகிறேன். பெண்கள் அப்படி மடலேறுவதில்லையே!:

1137. கடலன்ன காம முழந்து மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்.

ப. ரை: கடல் அன்ன காமம் உழந்தும் மடல் ஏறு பெண்ணின் பெருந்தக்கது இல் = கடல் போன்ற அளவு காமத் துன்பத்தின் வருத்தமடைந்தாலும் மடலேறாத பெண்ணைவிட பெருந்தன்மையுள்ளது வேறில்லை.

பொ. ரை: சமுத்திரத்தைப் போன்ற அவ்வளவு காமவேதனை அடைந்தாலும் (ஆண் பிள்ளைகளைப்போல வெட்கங் கெட) மடலேறும் காரியத்தைச் செய்வதில்லை யென்னும் பெண்களின் இயல்பைக் காட்டிலும் பெருமையிற் சிறந்த குணம் வேறில்லை.

வி-ம்: உழந்தும் – வருத்தப்பட்டாலும். பெருந்தக்கது – பெருஞ்சிறப்புடையது. காமத்துன்பத்தை அடக்கியாளும் தன்மை ஆண்களைவிட பெண்களுக்கே அதிகம். அந்த இயற்கை வேறுபாட்டை நினைத்து அப்படிப்பட்ட இயல்பு தனக்கு இல்லையே என்று காதலன் கருதுகின்றான் – எவ்வளவு காமத்துன்பத்தையும் பெண்கள் அடக்கியாள்கின்றார்களே, அப்படி அடக்க முடியாமல் நான் மடலேற நினைக்

இறேனே; பெண்மையின் பெருமையே பெருமை! — என்பது கருத்து.

ஆண் பிள்ளையின் 'நாணுத்துறவு' இப்படியிருக்க, இனி பெண் பிள்ளையின் 'நாணுத் துறவு' எப்படியிருக்கிற தென்பதைப் பார்ப்போம். பெண் தனக்குத்தானே சொல்லிக் கொள்கிறாள் :

1138. நிறையரியர் மன்னளிய ரென்னாது காம
மறையிறந்து மன்று படும்.

ப. ரை : நிறை அரியர் மன் அளியர் என்னாது காமம் மறை இருந்து மன்றுபடும் = அடக்கத்தில் மிகுந்தவர்; மேலும் இரக்கப்படத்தக்கவர் என்றும் பாராமல் காமவேதனை மறைவிலிருந்து வெளியில் வந்து விட்டது.

பொ. ரை : (பெண்கள்) காமத்தை அடக்கிக்கொள்ளும் தன்மையில் மிகுந்தவர்கள் என்பதையும் இரக்கப்படத்தக்கவர்கள் என்பதையும் கூட மதிக்காமல் (இது வரைக்கும் என் மனத்திற்குள்ளேயே அடங்கி) மறைவாக இருந்த என் காமம் இப்போது வெளிப்படவும் ஆகிவிட்டது.

வி-ம் : நிறை — ஆசையை அடக்கும் திறமை. அரியர் — மிகுந்தவர். 'மன்' என்பது 'மேலும்' என்ற பொருளில் நிற்கும் அசை. மன்று — வெளி. காமத்தை அடக்கும் தன்மையில் பெண்கள் மிகுந்தவர்கள் என்பதையும் அத்துடன் இரக்கப்படத்தக்கவர்கள் என்பதையும் கருதாமல் இதுவரை என் மனதுக் குள்ளேயே அடங்கியிருந்த காமநோய் இப்போது என் நாணம் கெடும்படி பிறர் அறிய வெளிப்படத் தொடங்கி விட்டது — என்பது கருத்து.

அப்படி என்னையும் மீறி என் வெட்கத்தை விட்டு விடச் செய்த காமநோய் வீட்டிலுள்ளவர்கள் மட்டுமன்றி வீதியிலுள்ளவர்களும் அதை அறியும்படி செய்துவிட்டது :

1139. அறிகிலா ரெல்லாரு மென்றேயென் காம
மறுகின் மறுகு மருண்டு.

ப. ரை : எல்லாரும் அறிகிலார் என்றே என் காமம் மறுகின் மருண்டு மறுகும் = (தெருவில் உள்ளவர்கள்) எல்லாரும் அறியவில்லை என்று அதற்காகவே என் காமநோய் வீதியிற் போய் (காதலனுக்காக) பைத்தியம் பிடித்தது போல் சுற்று முற்றும் பார்த்துக் குழம்பும்.

பொ. ரை: (வீட்டிலுள்ளவர்களைத் தவிர வெளியிலுள்ள) எல்லாரும் (என் நிலையை) அறியவில்லை யென்றே (அவர்கள் அறியும்படி) என்னுடைய காமநோய் என்னை விதிக்குச் சென்று (காதலர் வரமாட்டாரா என்று) வெறிபிடித்தவளைப் போல் அங்குமிங்கும் பார்த்து தவிக்கச் செய்கிறது.

வி-ம்: மறுகு — வீதி — தெரு. மறுகும் — மனம் தவிக்கும். மருண்டு — மருள் கொண்டு — வெறி பிடித்து. ஊரிலுள்ள எல்லாருக்கும் தெரியவேண்டுமென்றே என் காமநோய் என்னைத் தெருவுக்குப் போய் காதலருக்காக எட்டியெட்டிப் பார்த்து பைத்தியம் பிடித்தவளைப் போல் தவிக்கச் செய்கிறது — என்பது கருத்து.

அப்படி நான் காதலருக்காகத் தெருவில் போய் எட்டி யெட்டிப் பார்ப்பதைக் கண்ட எல்லாரும் என்னைப் பரிகாசம் பண்ணுகிறார்கள்:

**1140. யாங்கண்ணிற் காண நகுப வறிவில்லார்
யாம்பட்ட தாம்படா வாறு.**

ப. ரை: யாம்பட்ட தாம்படா ஆறு அறிவில்லார் யாம் கண்ணிற்காண நகுப = நாம்பட்ட துன்பங்களைத் தாம்படாத காரணத்தால் அறிவில்லாதவர்கள் என் கண்ணுக்கு முன்னால் (என்னைப் பார்த்து) சிரிக்கிறார்கள்.

பொ. ரை: நான் படும் துன்பங்களைத் தாம் படாத காரணத்தால் (அத்துன்பங்களைப் பற்றிய) அறிவில்லாதவர்கள் எனக்குத் தெரியும்படி என்னைப் பார்த்து (ஏளனமாகச்) சிரிக்கிறார்கள்.

வி-ம்: அறிவில்லார் — என் துன்பத்தை அறியாதவர்கள். ஆறு — காரணம். — நான்படும் காம வேதனையைத் தாம் படாத காரணத்தால் என் துன்பங்களை அறியாமல் பல பேர் என் கண்ணுக்கு முன்னால் என்னைப்பார்த்துப் பரிகாசமாகச் சிரிக்கிறார்கள் — என்பது கருத்து.

அதி. 115—அலரறிவுறுத்தல்

['அலரறிவுறுத்தல்' என்பது காதலனும் காதலியும் ஒருவரை யொருவர் நினைத்துக் கொண்டு நாணத்தைத் துறந்தவர்களாக இருப்பதைக் கண்டு ஊரார் பரிகசித்து ஏளனம் செய்வது. காதலனுக்கும் காதலிக்கும் 'அறிவுறுத்துவது'. அதாவது, காதலி தன்னையே நினைத்துக் கொண்டு நாணுத் துறந்திருக்கிறாள் என்பதைக் காதலனும் காதலன் தன்னையே

நினைத்துக் கொண்டு நாணுந் துறந்திருக்கிருன் என்பதைக் காதலியும், ஊரார் பேசுகிற நிந்தனைப் பேச்சுகளால் அறிந்து, அவர்கள் இருவருடைய காதலும் உறுதிப்படுவதை உரைப்பது இந்த அதிகாரம். இதிலும் சரிசமானமாக ஐந்து குறள்கள் காதலன் பேச்சாகவும் மிதி ஐந்து குறள்கள் காதலி பேச்சாகவும் இருப்பது குறிக்கத்தக்கது.]

1141. அலரெழ வாருயிர் நிற்கு மதனைப்
பலரறியார் பாக்கியத் தால்.

ப. ரை: • அலர் எழ ஆர் உயிர் நிற்கும்; பாக்கியத்தால் அதனை பலர் அறியார் = (என் காதலியைப் பற்றி) பரிகாசப் பேச்சுகள் உண்டாகிவிட்டதனுல் (என்) அருமையான உயிர் இனி இருக்கும்; பாக்கிய வசத்தால் அதைப் பலபேர் அறியார்கள்.

பொ. ரை: (என் காதலியைப் பற்றி) பரிகாசப் பேச்சுகள் உண்டாகிவிட்டதாகத் தெரிவதனுல் இனி என் அருமையான உயிர் நிலைக்கும்; (என் உயிர் நிலைக்காது என்று நான் எண்ணியிருந்தது) பாக்கியவசத்தால் பலபேருக்குத் தெரியாது.

வி-ம்: அலர் எழ – அலர் எழுந்து விட்டதனுல் – பலர் அவளைப் பரிகாசம் பண்ணுகிருர்கள் என்பது எனக்குத் தெரிவதனுல் – என்பது பொருள். தனக்குக் களவாக இன்பம் தந்து பிரிந்துவிட்ட அப்பெண் தன்னை மறந்துவிட்டாளோ அல்லது தனக்குக் கிடைக்கமாட்டாளோ என்று ஏங்கி, அவள் கிடைக்காவிட்டால் இறந்துபோக எண்ணியிருந்த காதலன், அப்பெண் இவனையே நினைத்துக் கொண்டு 'யாம்பட்ட தாம் படாவாறு அறிவில்லார் யாம் கண்ணிற்காண நகுப' என்று முன் அதிகாரத்தின் கடைசி குறளில் சொல்லியபடி, பலபேர் சிரித்துப் பரிகாசம் பண்ணும்படியாக நாணத்தையும் விட்டு வீதிக்கு வந்து காதலனுக்காக வெறிபிடித்தவள் போலப் பார்க்கிருள் என்பதனை அறிந்து, நிச்சயமாக அவள் தனக்குக் கிடைப்பாள் என்று தேறி, இறந்து போக எண்ணியிருந்ததை விட்டு விட்டுப் பேசுகின்ற பேச்சு இது. தான் காதலித்த பெண் தனக்கு வாழ்க்கைத் துணையாகக் கிடைக்காவிடில் இளைஞர்கள் இறந்து போவதும் உண்டு என்ற பழந் தமிழ் நாட்டின் சரித்திரத்தையும் நினைப்பூட்டுவது இக்குறள். அப்படி இறந்துபோக இவன் எண்ணியிருந்ததைப் பிறர் அறியார் என்பதிலும் மகிழ்ச்சியடைகிருன். 'பலர் அறியார்' என்பது 'பிறர் அறியார்' என்ற பொருள் தருவது. என் காதலியைப் பற்றிப் பரிகாச நிந்தனைகள் பரவிவிட்டதாகத் தெரிகிறது. அதனுல் இனி என் உயிருக்குப் பயமில்லை;

அவள் என்னை மறந்திருந்தால் நான் இறந்து போக எண்ணி யிருந்தேன். நல்ல வேளையாக அப்படி நான் எண்ணியது பிறருக்குத் தெரியாது – என்பது கருத்து.

அந்தப் பெண் என்னிடத்தில் கொண்டுள்ள காதலின் அருமை, என்னை ஏளனம் செய்கிறவர்களுக்குத் தெரியாத தால் :

1142. மலரன்ன கண்ணா ளருமை யறியா
தலரெமக் கீந்ததிவ் வூர்.

ப. ரை : மலர் அன்ன கண்ணாள் அருமை அறியாது இவ்வூர் எமக்கு அலர் ஈந்தது = மலரைப் போன்ற கண்களையுடைய அப் பெண்ணின் அருமையை அறியாமல் இந்த ஊரார் எனக்கு ஏளனம் உண்டாக்கினார்கள்.

பொ. ரை : பூவைப் போன்ற கண்களையுடைய (எனக்கே உரிய வளான) அந்தப் பெண்ணின் அருமையான குணங்களை (காதலை) அறியாத இந்த ஊரார் (நான் என்னிடத்தில் காதலில்லாத ஒருத்தியை எண்ணிக் கொண்டு நாணம் விட் டலைவதாக) என்னைப்பற்றிப் பரிகாசம் செய்தார்கள்.

வி - ம் : 'மலரன்ன கண்ணாள்' என்பது முன் சொன்ன 'மலர் காணின் மையாத்தி நெஞ்சே இவள் கண் பலர் காணும் பூ ஒக்கும் என்று' என்ற குறளை நினைப்பூட்டி, 'இவள் எனக்கே உரியவள்' என்ற கருத்தைக் காட்ட நிற்பது. அருமை – அருமையான குணம். அந்த அருமையான குணம் என்ன வெனில் அவள் தன்னையன்றி வேறெவரையும் காதலிக்க மாட்டாள் என்ற குணம். – பூப்போன்ற கண்களையுடைய அப்பெண் என் மீது கொண்டுள்ள காதலின் அருமையை அறியாத இவ்வூரார் நான் காதலில்லாத ஒரு பெண்ணைக் கருதி நாணம் விட்டு அலைவதாகப் பரிகாசம் செய்தார்கள் – என்பது கருத்து.

அப்படி ஊரார் அறியாமல் பரிகாசம் செய்ததும் நன்மை தான் :

1143. உறாஅதோ வூரறிந்த கெளவை யதனைப்
பெறாஅது பெற்றன்ன நீர்த்து.

ப. ரை: ஊர் அறிந்த கெளவை பெறாது அதனை பெற்ற அன்ன நீர்த்து உறாதோ? = ஊரார் அறிந்து விட்ட இந்த பரிகாசப் பேச்சுகளால் கிடைக்காமலிருக்கிற (காதலியின் இன்பமா கிய) அதனைக் கிடைக்கப்பெற்று விட்டது போன்ற தன்மை யுடையது. அது தகாதோ? (தகும்).

பொ. ரை: ஊரிலுள்ளவர்களெல்லாம் (எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் உள்ள தொடர்பை அறியும்படிச் செய்துவிட்ட) இந்த ஏளனப் பேச்சுகளால், கிடைக்காமலிருக்கிற (அவளுடைய இன்பம்) அதனைக் கிடைக்கப் பெற்றுவிட்டது போன்று இருக்கிறது; (அதனால் இந்த ஏளனப் பேச்சுகள்) தகாததாகுமா? (தக்கது தான்.)

வி—ம்: பெருது அதனை — பெருமலிருக்கின்ற அந்தக் காதலி இன்பத்தை. கௌவை — நிந்திக்கும் பேச்சுகள் — ஏளனப் பேச்சுகள். நீர்த்து — தன்மையுடையது. எனக்கும் அந்தப் பெண்ணுக்கும் உள்ள காதல் ஊராருக்கெல்லாம் தெரியும்படிச் செய்துவிட்ட இந்தப் பரிகாசப்பேச்சுகளால், எனக்குக் கிடைக்குமோ என்று நான் ஏங்கியிருந்த அவளின்பம் கிடைத்துவிட்டதுபோல் நிச்சயப்படுகிறது. அதனுல் இந்த பரிகாசப் பேச்சு நல்லது தான் — என்பது கருத்து.

அதனுல் எவ்வளவுக் கெவ்வளவு பரிகாசம் பண்ணுகிருர்களோ அவ்வளக்கவ்வளவு நல்லது தான்:

1144. கவ்வையாற் கவ்விது காம மதுவின்றேற்
றவ்வென்னுந் தன்மை யிழந்து.

ப. ரை: காமம் கவ்வையால் கவ்விது; அது இன்றேல் தன்மை இழந்து தவ் என்னும் = காமம் என்பது பிறர் ஏளனம் செய்வதால் பற்று அதிகரிக்கிறது. அது இல்லையானுல் இயல்பை இழந்ததாக சப்பென்றிருக்கும்.

பொ. ரை: (எங்களுக்குள்ள) காதல் இந்தப் பரிகாசப் பேச்சுகளால் பலப்படுகிறது. அந்தப் பரிகாசப் பேச்சுகள் இல்லையென்ருல் காதல் என்பது தன்னுடைய சுபாவத்தை இழந்ததாகி, சுவையற்று சப்பென்றிருக்கும்.

வி-ம்: கவ்வை - ஏளனப் பேச்சு. கவ்விது - பற்றிக்கொள்ளப்படுவதாகிறது. 'தவ்' எனல் - சுவையற்றிருத்தல் - ஊரார் எங்களை இப்படி ஏளனம் செய்வதால் எங்களுடைய காதல் உறுதிப்படுகிறது. அந்த ஏளனப் பேச்சுகள் இல்லையென்ருல் காதல் என்பது அதன் இயல்பை இழந்து இன்பமற்றதாகிவிடும் — என்பது கருத்து.

எப்படி யென்ருல்:

1145. களித்தொறுங் கள்ளுண்டல் வேட்டற்ருற் காமம்
வெளிப்படுந் தோறு மினிது.

ப. ரை : களித்தொறும் கள் உண்டல் வேட்ட அற்று வெளிப் படும்தோறும் காமம் இனிது = (குடிகாரனுக்கு) போதை உண்டாகுந்தோறும் கள்ளுண்பதின்மேல் பின்னும் ஆசை யுண்டாவது போல் (எங்கள் காதலைப் பற்றிய) பரிகாசப் பேச்சுகள் வெளியாகுந்தோறும் (எனக்கு என் காதலியிடத் துள்ள) காம ஆசை பின்னும் இன்பம் உள்ளதாக (ஆசையை அதிகப்படுத்துகிறது.)

பொ. ரை : (குடிகாரனுக்கு) போதை உண்டாக உண்டாக கள்ளை மேலும் மேலும் குடிக்க ஆசை உண்டாவதுபோல் எங்கள் காதலைப் பற்றிய நிந்தனைப் பேச்சுகள் வெளியே பரவப்பரவ என் காதலியின் மேலுள்ள என் காம ஆசை மேலும் மேலும் அதிகப்பட்டு இன்பம் தருகிறது.

வி - ம் : களித்தொறும் – களிக்குந்தோறும் – போதை அடை யுந்தோறும். வேட்டற்று – விரும்புவதைப்போல். கள்ளுண்டு போதை கொண்டவனைப் பலபேர் இகழ்ந்து ஏளனம் செய் கிறார்கள். ஏளனம் செய்தாலும் அவனுடைய கள்ளாசை அதிகப்படுகிறதேயன்றி குறைவதில்லை – கள் குடியனுக்கு போதை ஏற ஏற அவனுக்குக் கள்ளின் மேலுள்ள ஆசை அதிகப்படுவதுபோல் எங்கள் காதலைப் பற்றி ஊரார் ஏளனம் பேசுவது அதிகரிக்க அதிகரிக்க என் காமமும் அதி கரித்து இன்பமூட்டுகின்றது – என்பது கருத்து.

இனி, பெண் தன்னைப் பற்றி அலர் உண்டாயிருப்பதை நினைத்துத் தனக்குள் சொல்லிக் கொள்வது :

1146. கண்டது மன்னு மொருநா ளலர்மன்னுந்
திங்களைப் பாம்புகொண் டற்று.

ப. ரை : கண்டது மன்னும் ஒரு நாள் அலர் மன்னும் திங்களை பாம்பு கொண்ட அற்று = (காதலரைக் கலந்து நான்) இன்பம் கண்டது என்னவோ ஒரே நாள் தான். ஆனால் ஏள னப் பேச்சுகளோ சந்திரனைப் பாம்பு பிடித்துக் கொண்டது போல் ஊரெல்லாம் அறியச் செய்து விட்டது.

பொ. ரை : (காதலரோடு கலந்து நான் இன்பம்) கண்டது என் னவோ ஒரே ஒரு நாள்தான்: (ஆனால் அதைப் பற்றிய) ஏளனப் பேச்சுகள் என்னவோ சந்திரனைப் பாம்பு பிடித்து விட்டது (கிரகணம்) போல் (எல்லாரும் அறியும்படி) ஆகி விட்டது.

வி - ம் : ‘கண்டது’ என்பதற்கு வெறும் ‘கண்ணால் கண் டது’ என்பது மட்டும் பொருளல்ல. ‘இன்பம் கண்டது’ அல்லது ‘சுகமடைந்தது’ என்ற பொருள் தருவது. ‘மன்னும்’ என்பது ‘என்னவோ’ என்பது போன்ற

இடைச்சொல். பாம்பு கொள்வது – இராகு என்னும் பாம்பு சந்திரனை விழுங்கி சந்திரக் கிரகணம் உண்டாவது என்ற ஐதிகம்; நான் காதலீருடன் கலந்து இன்பம் கண்டது ஒரே ஒரு நாள்தான். ஆனால் அதைப் பற்றிய ஏளனப்பேச்சு சந்திரனைக் கிரகணம் பிடித்ததுபோல் எல்லாருக்கும் தெரிவதாக்கிவிட்டது – என்பது கருத்து.

இவர்கள் என்னைப் பற்றி ஏளனம் பேசப்பேச என் காம நோய் அதிகரிக்கின்றது :

**1147. ஊரவர் கௌவை யெருவாக வன்னைசொன்
னீராக நீளுமிந் நோய்.**

ப. ரை : ஊரவர் கௌவை எருவாக அன்னை சொல் நீராக இந் நோய் நீளும் = ஊரார் ஏளனம் எருவாக என் தாயார் (இடித்துரைக்கும்) சொற்கள் நீராக இந்தக் காமநோய் வளர்கின்றது.

பொ. ரை : (என் உள்ளத்தில் முளைத்துவிட்ட காமப் பயிர்) ஊரார் பேசுகின்ற ஏளனப் பேச்சுகளை எருவாகவும் என் தாயார் இடித்துரைக்கும் சொற்களை நீராகவும் கொண்டு என் காமநோய் வளர்ச்சி யடைகின்றது.

வி - ம் : அன்னை சொல் - மகளைப் பற்றி ஊரார் ஏளனம் செய்வதை யறிந்து அன்னை மகளை இடித்துரைக்கும் சொற்கள் - ஊரார் பேசுகின்ற பரிகாசப் பேச்சுகளும் என்னுடைய அன்னை இடித்துரைக்கும் சொற்களும் என் காம நோயை அதிகப்படுத்துகின்றன – என்பது கருத்து.

இப்படி ஊராரும் அன்னையும் என்னை இகழ்ந்து ஏளனம் பேசி என் காதலைத் தணித்துவிட முடியுமா? அப்படி அவர்கள் நினைத்தால் அது எப்படிப் போன்றதென்றால் :

**1148. நெய்யா லெரிநுதுப்பே மென்றற்றாற் கௌவையாற்
காம நுதுப்பே மெனல்.**

ப. ரை : கௌவையால் காமம் நுதுப்பேம் எனல் நெய்யால் எரி நுதுப்பேம் என்ற அற்று = ஏளனம் செய்து காமத்தைத் தணித்துவிடுவோம் என்பது, நெய்யினால் நெருப்பைத் தணித்து விடலாம் என்பதற்கு ஒப்பாகும்.

பொ. ரை : பரிகாசம் செய்து காமத்தீயை அவித்துவிடலாம் என்று நினைப்பது, நெய்யை ஊற்றி நெருப்பை அவித்து விடலாம் என்று எண்ணுவதற்குத்தான் சமானம்.

வி - ம் : நுதுத்தல் - தணித்தல் - அடக்குதல். அலர் தூற்றுவதால் என் காதலைத் தணித்து விடலாமென்று நினைப்பது நெய்யை ஊற்றி நெருப்பைத் தணித்து விடலாமென்று நினைப்பதற்கு ஒப்பாகும்; (அதிகமாகுமேயன்றி தணியாது) – என்பது கருத்து.

இந்த ஏளனங்களுக்குப் பயந்து நான் என் காதலரை மறந்துவிட முடியுமா?:

**1149. அலர்நாண வொல்வதோ வஞ்சலோம் பென்றார்
பலர்நாண நீத்தக் கடை.**

ப. ரை : அஞ்சல் ஓம்பு என்றார் பலர்நாண நீத்தக் கடை அலர் நாண ஒல்வதோ=(யார் என்ன சொன்னாலும்) 'அச்சத்தை விடு' என்றவர் (காதலர்) பலபேர் (என்னைக்) கூசும்படி பிரிந்திருக்கிறார் என்பதனால் (பிறர் பேசும்) பரிகாசப் பேச்சு களுக்காக அஞ்சிவிடத் தகுமா? (தகாது).

பொ. ரை : (யார் என்ன சொன்னாலும் நானிருக்கிறேன்) 'நீ பயத்தை விடு' என்று சொன்ன என் காதலர் (இப்போது) பலபேர் என்னை பரிகாசம் பண்ணும்படியாக விட்டுப் பிரிந்திருக்கிறார் என்றதற்காக இந்தப் பரிகாசப் பேச்சுகளுக்குப் பயந்துவிடுவது தகுமா? (தகாது; நான் பயப்படமாட்டேன்)

வி - ம் : அலர்நாண வொல்வதோ - அலர் அஞ்சத்தக்கதா. இங்கே 'நாண' என்பதற்கு 'அஞ்ச' என்பது பொருள். அஞ்சல் ஓம்பு - அஞ்சுவதைத் தவிர். 'ஓம்பு' - என்பது 'தவிர்' அல்லது 'விடு' என்ற பொருள் தருவது. 'அஞ்சல்' என்பது எதிர்மறையில் கொண்டு 'அஞ்சாதிருத்தல்' என்ற பொருள்கொண்டு, 'ஓம்பு' என்பதற்கு 'அஞ்சாமலிருப்பதைக் காத்துக்கொள்' என்னினும் பொருந்தும். இரண்டு விதத்தாலும் பொருள் ஒன்றேதான். — 'நானிருக்கிறேன் நீ அஞ்சாதே' என்று சொன்ன என் காதலர் இப்போது என்னைப் பிரிந்திருப்பதால் நான் நாணுத் துறந்து ஏங்கியிருப்பதைக் கண்டு பலபேர் ஏளனம் செய்வதற்காக அஞ்சி அவரை மறந்துவிட முடியுமா? – என்பது கருத்து.

அவ்வளவு உறுதி கூறின அவர் என்னை அடைய வேண்டிய முயற்சிகளைச் செய்யாமலிருக்கமாட்டார். எப்படியும் வந்து சேருவார்:

**1150. தாம்வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங்
கௌவை யெடுக்குமிவ் வூர்.**

ப. ரை: காதலர் தாம் வேண்டின் நல்குவர்; இவ்வூர் யாம் வேண்டும் கௌவை எடுக்கும் = என் காதலர்தாம் விரும்புகிற போது வந்துதவுவார்; (அதுவரையிலும்) இவ்வூரார் நான் விரும்பும் ஏளனப் பேச்சுகளைப் பேசிக்கொண்டே தானிருப் பார்கள்.

பொ. ரை: என் காதலர் அவருக்கு விருப்பமான சமயத்தில் வந்து சேர்வார். அதுவரையிலும் இவ்வூரார் நான் விரும்பத் தக்கதான இந்த ஏளனப் பேச்சைப் பேசிக் கொண்டே இருக் கட்டும்.

வி - ம்: தாம் வேண்டின் — என்னை அடைய வேண்டிய முயற்சி களைச் செய்து அம்முயற்சிகள் வெற்றி பெறுவதற்குத் தக்க காலம் என்று 'அவர் கருதி விரும்புகிற சமயத்தில்'. நல்கு வர் — உதவுவார் — வந்துதவுவார். யாம் வேண்டும் கௌவை — இந்த அலர் தூற்றும் பேச்சுகள் அதிகரிக்க அதிகரிக்க அவர் என்னை அடைவதற்காகச் செய்யும் முயற்சிகளும் அதிகரிக் கும். அதனால் இந்த கௌவை எனக்கு மிகுந்த நன்மை பயக் கத்தக்கது. ஆகையினால் இது 'யான் விரும்புகின்ற கௌவை'....என் காதலர் தமக்கு உகந்த தருணத்தில் வந்து என் கவலையைத் தீர்ப்பார். அதுவரையிலும் இவ்வூரார் என்னை ஏளனம் செய்து கொண்டிருப்பது எனக்கு நல்லது தான் — என்பது கருத்து.

களவியல் முற்றிற்று.

2. கற்பியல்

'கற்பியல்' என்பது கல்யாணம் செய்து கொண்ட பின் காதலர்களின் இயல்பு. முன் சொல்லப்பட்ட 'களவியல்' என்ற பகுதி, ஒரு வாலிபனும் ஒரு யுவதியும் பிறருக்குத் தெரியாமல் களவாக ஒருவரையொருவர் சந்தித்துக் காமமுற்றுப் புணர்ந்து, பிரிந்து, மீண்டும் ஒருவரையொருவர் சந்திக்க முடியாமல் வருந்துவதைப் பற்றியது. அப்படி வருந்திக் கொண்டிருந்த இருவருக்குள் இருக்கும் காதலை உற்றாரும் பெற்றோரும் அறிந்து, அவ்விருவருக்கும் மணம் முடித்து விடுகிறார்கள். அப்படி மணந்து கொண்ட இருவரும் தமிழ் நாட்டின் பழைய வழக்கத்தின்படி தனிக் குடித்தனம் ஆரம்பிக்கிறார்கள். அந்த இளங் குடித்தனக் காரர்களின் கற்பொழுக்கத்தைச் சொல்லுவது 'கற்பியல்'. கற்பு என்பது கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் ஏகபோக உரிமை கொடுத்து அதற்கு உண்மையாக நடந்து கொள்ளும் விரதம். 'மணந்தார்' என்ற சொல் களவியலில் இல்லை. கற்பியலில்தான் பிரயோகப்படுத்தப்பட்டுள்ளது என்பதனால் 'கற்பு' என்பது மணந்து கொண்ட இருவருக்குமிடையே இருக்க வேண்டிய கட்டுப்பாட்டையே குறிக்கும்.

அதி. 116—பிரிவாற்றாமை

['பிரிவாற்றாமை' என்பது 'பிரிந்து போவதை சகிக்க முடியாமை'. இது கணவன் தன்னைவிட்டுப் பிரிந்து போவதைப் பொறுத்துக் கொள்ள முடியாத மனைவியின் மன நிலையைச் சொல்லுவது. தனிக் குடித்தனம் ஆரம்பித்துத் தன்னுடன் இன்ப வாழ்க்கை நடத்திக் கொண்டிருந்த கணவன் அரசாங்க அலுவலாக நாட்டுப் பணி செய்யவோ, பொருள் சம்பாதிக்கும் அலுவலாக வீட்டுப்பணியைக் கருதியோ வேற்றூருக்குப் போக வேண்டிய நிமித்தத்தால் மனைவியை விட்டுப் பிரிந்து போக அவளிடம் விடைபெறும்போது மனைவியின் 'பிரிவு ஆற்றாமை' சொல்லுவது இவ்வதிகாரம்.]

1151. செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்
வல்வரவு வாழ்வார்க் குரை.

ப. ரை : செல்லாமை உண்டேல் எனக்கு உரை; மற்றும் நின் வல் வரவு வாழ்வார்க்கு உரை = (பிரிந்து) போகாமல் இருப்பதானால் எனக்குச் சொல்லு; மற்றும் உன்னுடைய விரைவில் திரும்பி வருகிற பேச்சை (அது வரையிலும்) உயிரோடிருப்பவருக்குச் சொல்லு.

பொ. ரை: (என்னை விட்டுப் பிரிந்து) போகாதிருப்பதென்றால் என்னிடம் சொல்லுங்கள்; அதை விட்டுப், பிரிந்துபோய் "சீக்கிரம் வந்து விடுகிறேன்" என்று சொல்வதானால் (நீங்கள் திரும்பிவரும் வரை) உயிரோடிருக்கிறவர்களிடத்தில் வந்து சொல்லிக் கொள்ளுங்கள். (நான் அதுவரை உயிர் தரிக்கமாட்டேன்.)

வி-ம்: வல்வரவு — விரைந்து திரும்பிவருவது. இது தொழில் முறையால் பிரிந்து போகிற கணவன் 'விரைவில் திரும்பி வந்து விடுகிறேன், விடை கொடு' என்று சொல்லும் போது மனைவி கூறுவது — என்னை விட்டுப் பிரிந்து போகாமல் இருக்கிற பேச்சானால் என்னிடம் சொல்லுங்கள்; அதையன்றி விரைவில் வந்து விடுகிறேன் என்ற பேச்சை நீங்கள் வரும் வரை நான் உயிரோடிருந்தால் அப்போது சொல்லுங்கள் — என்பது கருத்து.

என் காதலருக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டு அவரைப் பிரிந்திருக்க என்னால் எப்படி முடியும்? அதனால் நான் அவர் பிரிந்து போவதற்குச் சம்மதிக்கக் கூடாது:

1152. இன்க ணுடைத்தவர் பார்வல் பிரிவஞ்சும்
புன்க ணுடைத்தாற் புணர்வு.

ப. ரை: அவர் பார்வல் இன்கண் உடைத்து; புணர்வு பிரவு அஞ்சும் புன்கண் உடைத்து = அவரைப் பார்த்துக் கொண்டிருப்பது (எனக்கு) இன்பம் உடையது; (பிரிந்து போக) இணங்குவது பிரிவினால் வரும் அச்சம் உண்டாக்கக் கூடிய துன்பம் உள்ளது.

பொ. ரை: அவரைப் பார்த்துக் கொண்டிருப்பதே எனக்கு இன்பம் உள்ளது; (அவர் பிரிந்து போக விடை கொடுக்க) இணங்குவது பிரிவினால் உண்டாகும் அச்சந்தரக்கூடிய துன்பம் உடையது (நானெப்படி விடை கொடுப்பேன்?)

வி-ம்: பார்வல் — பார்த்துக் கொண்டிருக்கக் கிடைப்பது. இன்கண் — இன்பம். புன்கண் — துன்பம். 'புணர்வு' என்பதற்கு இங்கே 'இணக்கம்' அல்லது 'சம்மதம்' என்பது பொருள். காமப் புணர்ச்சியைக் குறிப்பதாகப் பொருள் கொள்வது மிகவும் தவறு. இந்தக் குறளுக்கு — "தழையுங் கண்ணியுங் கொண்டு பின்னின்ற ஞான்று அவர் நோக்கு மாத்திரமும் புணர்ச்சி குறித்தமையான் நமக்கின்ப முடைத்தாயிருக்கும்; இன்று அப்புணர்ச்சி தான் நிகழா நிற்கவும் அது பிரிவரென்றஞ்சு மச்சத்தினை யுடைத்தாயிற்று. அவரன் பினிலைமையிது" என்று பொருள் செய்வது சிறிதும்

பொருத்தமோ விளக்கமோ இல்லாத குழப்பம். 'புணர்வு' என்ற சொல்லுக்குப் 'புணர்ச்சி' என்ற 'கலவி'யைப் பொருளாகக் கொண்டு விட்டதால் இந்தக் குழப்பம் — காதலரைப் பார்த்துக் கொண்டிருப்பதே எனக்கின்பம்; அவர் பிரிந்து போகு நான் இணங்குவது பிரிவினால் உண்டாகும் அச்சங்களை உண்டு பண்ணும். அதனால் நான் விடை கொடுக்க இணங்கமாட்டேன் — என்பது கருத்து.

அறிவாளிகளாக இருந்தாலும் கூட உண்மையான காதலுடைய பெண்கள் :

1153. அரிதரோ தேற்ற மறிவுடையார் கண்ணும்
பிரிவோ ரிடத்துண்மை யான்.

ப. ரை : பிரிவோர் இடத்து உண்மையான் அறிவுடையார் கண்ணும் தேற்றம் அரிது = பிரிந்து போகிற காதலர் இடத்தில் வைத்துள்ள உண்மையான கற்பினால் அறிவுடைய பெண்களுக்கும் (பிரிந்து) கலங்காமலிருக்கும் தன்மை முடியாத காரியம்.

பொ. ரை : பிரிந்து போகிறதாகச் சொல்லுகிற கணவனிடத்தில் (மனைவி) கொண்டுள்ள உண்மையான கற்பினால் அவள் அறிவுடைய பெண்ணாக இருந்தாலும் கணவனைப் பிரிந்திருப்பதில் வருத்தப்படாமல் தேறியிருப்பது முடியாத காரியம்.

வி - ம் : 'பிறிவோரிடத் துண்மையான்' என்பதை 'ஓரிடத்துப் பிரிவு உண்மையான்' என்று பிரிப்பது பொருளற்றது. தேற்றம் — மனம் தேறியிருத்தல். இக்குறள் கணவனைப் பிரிந்த கற்புடைய பெண் நிம்மதியாக இருக்கமாட்டாள் என்ற பெண்ணியல்பின் பெருமையைக் காட்டுவது. 'அறிவுடையார் கண்ணும்' என்பது அறிவுடைய பெண்களைப் பற்றிச் சொன்னது. கணவன் தன்னை விட்டுப் பிரிந்து போக வேண்டிய அவசியம் இருப்பதை உணரக்கூடிய அறிவுடைய பெண்களுக்கும் — என்பது பொருள். அறிவுடைமை முழுவதும் ஆண்களுக்குத்தான் உரிமை என்ற மனப்பான்மையுடன் பொருள் செய்து விட்டதால் இந்தக் குறளுக்கு 'பிரியேன் என்ற தஞ்சொல்லும் நம் பிரிவாற்றாமையும் அறிதலுடையாராகிய காதலர் கண்ணும் ஒரோ வழிப் பிரிவு நிகழ்தலான் அவர் சொல்லும் தலையளியும் பற்றி நம்மாட்டன்புடையரெனத் தேறும் தேற்றம் அரிதாயிருந்தது' என்று தெளிவற்ற பொருள் செய்யப்பட்டுள்ளது. உண்மையான் — உண்மைத் தன்மையினால். 'உண்மைத் தன்மை' என்பது 'கற்பு'. கணவனிடத்தில் கொண்டுள்ள உண்மையான கற்

புணர்ச்சியினால் அறிவுடைய பெண்களுக்கும் கூட, கணவனைப் பிரிந்து நிம்மதியாக இருப்பதென்பது முடியாது – என்பது கருத்து.

அதனால் கணவன் பிரிந்து போவதற்கு இணங்காமல் மறுத்துப் பேசுவது கற்புடைய பெண்ணுக்குக் குற்றமல்ல:

1154. அளித்தஞ்ச லென்றவர் நீப்பிற் றெளித்தசொற்
தேறியார்க் குண்டோ தவறு.

ப. ரை :– அளித்து அஞ்சல் என்றவர் நீப்பின் தெளித்த சொல் தேறியார்க்கு தவறு உண்டோ = அன்புடன் ஆதரவளித்து (நானிருக்கிறேன்) அஞ்ச வேண்டாம் என்று மணந்தவர் என்னை விட்டுப் பிரிந்தால் (அதற்காக) மறுத்துப் பேசுவதை மேற் கொண்டவர்க்குக் குற்றம் உண்டா? (இல்லை)

பொ. ரை : அபயம் கொடுத்து 'நானிருக்கிறேன் நீ பயப்பட வேண்டாம்' என்று சொன்னவர் (இப்போது) 'பிரிந்து போகிறேன்' என்றால் அதற்காக அவரை மறுத்துப் பேசத் துணிந்து விட்டதில் எனக்கு என்ன குற்றம்?

வி - ம் : தெளித்த சொல் – தெறித்த சொல். அதாவது மாறு பட்ட சொல் - மறுக்கும் சொல். தேறியார்க்கு – தேர்ந்து சொன்னவர்க்கு. இங்கே 'தேறியார்க்கு' என்பதற்கு 'தேர்ந்து சொன்ன எனக்கு' என்பது பொருள். அந்த 'தெளித்த சொல்' என்ன வென்றால் 'செல்லாமை உண் டேல் எனக்குரை மற்றும் நின் வல்வரவு வாழ்வார்க்குரை' என்றது. 'தெளித்த சொல் தேறியார்க்கு' என்பதற்கு 'அவர் தெளிவித்த சொல்லை மெய்யெனத் தெளிந்தார்க்கு' என்ற பொருள் அர்த்தமற்றது. ஆதலால் – எனக்குப் பாது காப்பளித்து 'பயப்பட வேண்டாம்' என்று சொன்னவர் 'பிரிந்து போகிறேன்' என்றதை சகிக்கமாட்டாமல் மறுத் துப் பேசி விட்டதில் எனக்கு என்ன குற்றம்? – என்பது கருத்து.

என் கணவர் என்னை விட்டுப் பிரிந்து போனால் என்னைக் காப்பவர் யார்? நான் எப்படி சகித்திருப்பேன்?:

1155. ஓம்பி னமைந்தார் பிரிவோம்பல் மற்றவர்
நீங்கி னரிதாற் புணர்வு.

ப. ரை : ஓம்பின் அமைந்தார் பிரிவு ஓம்பல்; மற்று அவர் நீங் கின் புணர்வு அரிது = (என்னைப்) பாதுகாக்கவே ஏற்பட்ட வர் (என் கணவர்) என்னைப் பிரிவதைத் தவிர்க்க வேண்டும்.

அதற்கு மாருக அவர் பிரிந்து போனல் நான் அதற்கு இணங்கி சகித்திருப்பது முடியாது.

பொ. ரை: என்னைப் பாதுகாக்கவென்றே கடமை பூண்டு ஒப்புக் கொண்ட என் கணவர் என்னை விட்டுப் பிரிந்து போவதை விட்டுவிட வேண்டும்; அதற்கு மாருக அவர் பிரிந்து போவாராயின் அதை என்னுல் சகித்துக் கொண்டிருக்க முடியாது.

வி-ம்: 'ஓம்பல்' – என்பதற்குப் 'பாதுகாத்தல்' என்றும் 'விட்டு விடுதல்' என்றும் இரண்டு நேர் மாருன அர்த்தங்கள் உண்டு. அவ்விரண்டு பொருள்களிலும் இங்கே பிரயோகப் படுத்தப்பட்டிருக்கின்றது. 'புணர்வு' என்பதற்கு இங்கேயும் 'புணர்ச்சி' என்பது பொருளல்ல. 'இசைவு' அல்லது 'சகிப்பு' என்பது பொருள். இந்தக் குறளுக்கு 'என்னுயிரைச் செல்லாமற் காத்தியாயின். அதனை ஆளுதற்கமைந்தாருடைய செலவினை அழுங்குவிப்பாயாக, அழுங்கு விப்பாரின்றி அவர் செல்வாராயின் அவராலாளப்பட்ட வுயிருஞ் செல்லும், சென்ருற் பின்னவரைக் கூடுதல் எனக்கரிதாம்' என்று உரை செய்வது முற்றிலும் பொருளற்றது. ஆதலால் என்னைப் பாதுகாக்கக் கடமைப்பட்ட என் காதலர் என்னை விட்டுப் போனல் அப்பிரிவை சகித்திருக்க என்னுல் முடியாது – என்பது கருத்து.

நான் என்ன சொன்னுலும் அவரோ பிடிவாதமாகப் போய் வருவதாகச் சொல்லுகிருர். அதனுல்:

**1156. பிரிவுரைக்கும் வன்கண்ண ராயி னரிதவர்
நல்குவ ரென்னு நசை.**

ப. ரை: பிரிவு உரைக்கும் வன் கண்ணர் ஆயின் அவர் நல்குவர் என்னும் நசை அரிது = (மீண்டும் மீண்டும்) பிரிந்து போக வேண்டும் என்பதைச் சொல்லுகிற நெஞ்சழுத்தமுள்ளராக இருப்பதாஞல் அவர் (நான் விரும்புகிறபடி பிரியாமலிருப்பதை) அருள்வார் என்னும் ஆசை முடியாது.

பொ. ரை: என் காதலர் மீண்டும் மீண்டும் பிரிந்து போக வேண்டியிருப்பதைப் பற்றியே சொல்லும் கடின சித்தமுள்ளவராக இருக்கிருர். அதனுல் அவர் என் விருப்பத்தின்படி பிரியாமல் இருப்பார் என்ற ஆசையை விட்டு விட வேண்டியதுதான்.

வி-ம்: வன் கண் = கடின சித்தம் – மன உறுதி. நசை – ஆசை. இந்தக் குறளுக்கு 'நம் கவவுக் கடுமையறிந்த தலைவர் தாமே நம் முன்னின்று தம் பிரிவினை யுணர்த்தும் வன்

தன்மையுடையராயின் அத்தன்மையர் பின்பு நம்மாற்றாமையறிந்து வந்து தலையளி செய்வரென்றிருக்குமாசை விடப்படும்' என்று உரை செய்வது சிறிதும் பொருத்தமற்றது. அலுவல் நிமித்தமாகப் போய் வருவதாகச் சொல்லுவதாலேயே அப்படிப் பிரிந்து போகும் காதலன் திரும்பிவந்து அன்பு செய்ய மாட்டான் என்று காதலி ஆசையை விட்டுவிட நினைப்பது பின்னால் நிகழ்வனவற்றிற்கு மிகவும் முரண்பட்டது. ஆதலால் — நான் எவ்வளவு சொல்லியும் அவர் மீண்டும் மீண்டும் பிரிந்து போக வேண்டியதைப்பற்றியே மிக்க உறுதியாகச் சொல்லுவதால் அவர் நான் விரும்புகிறபடி போகாமலிருக்கமாட்டார் போலிருக்கிறது. ஆதலால் அவர் போகாமல் இருக்க வேண்டுமென்னும் என் ஆசையை விட்டுவிட்டு விடை கொடுத்துதான் ஆக வேண்டும் — என்பது கருத்து.

என் காதலர் பிரிந்து போவதை விலக்க முடியாமல் நானும் விடை கொடுக்க வேண்டியிருந்தது. அவரும் பிரிந்து போய் விட்டார். அவர் போன உடனேயே என் மேனி மெலிந்து விட்டதே! அதை:

1157. துறைவன் றுறந்தமை தூற்றாகொன் முன்கை
யிறையிறவா நின்ற வளை.

ப. ரை: முன்கை இறை இறவாநின்ற வளை துறைவன் துறந்தமை தூற்றா கொல் = முன் கையின் வரிகளைக் கடந்து கழன்று விடுவன போன்ற என்னுடைய வளையல்களின் (ஓசையே) என் தலைவன் பிரிந்து போய்விட்டதை ஊராருக்கெல்லாம் தூற்றிவிடாதோ.

பொ. ரை: முன்னங் கையின் இரேகைகளைக் கடந்து கழன்று விழுவன போன்ற என் வளையல்கள் குலுங்குகிற ஓசையே என் தலைவன் என்னை விட்டுப் பிரிந்து போனதை (யும் அதனால் என் தேகம் இளைத்து விட்டதையும்) ஊருக்குள் பறை சாற்றிவிடாதா?

வி-ம்: துறைவன் — தலைவன். துறந்தமை — பிரிந்தமை. தூற்றுதல் — பலர் அறிய வெளிப்படுத்தல். முன்கை இறை — உள்ளங்கைக்கு மேல் உள்ள வரிகள். இறவா — இறந்து. இறந்து — கடந்து. காதலன் உடனிருக்கும் போது உடல் பூரித்து இருந்தது. காதலன் பிரிந்ததனால் உடல் மெலிந்து விட்டது — அதனால் முன் தாமாக நகர முடியாமல் கையோடு ஒட்டியிருந்த வளையல்கள் இப்போது முன்கையின் வரைகளையும் கடந்து விழுந்து ஒன்றோடொன்று வேகமாக மோதி ஓசை செய்கின்றன. இந்தக் குறளுக்கு 'துறைவன் பிரிந்த

மையை அவனுணர்த்தாமல் தாமே யுணர்ந்து என் முன் கையினிறையினின்றும் கழலா நின்ற வளையல்கள் எனக்கறிவியாவோ, அவனுணர்த்த வுணர்ந்து வந்து நீயறிவித்தல் வேண்டுமோ ?' என்று தோழிக்குச் சொல்லுவதாக உரை செய்வது பொருளற்றது. அதனுல் — என் முன்னங்கை வரைகளையும் தாண்டி விழுகிற வளையல்கள் குலுங்கும் ஓசையே என் தேகம் மெலிந்து விட்டதையும் அதற்குக் காரணம் காதலர் பிரிந்து போயிருக்கிருர் என்பதையும் பறை சாற்றுகின்றது — என்பது கருத்து.

காதலர் இல்லாத இடத்திலிருப்பது மிகவும் துன்பமானது :

1158. இன்ஞ தினனில்லூர் வாழ்த லதனினு
மின்ஞ தினியார்ப் பிரிவு.

ப. ரை : இனன் இல் ஊர் வாழ்தல் இன்ஞது; அதனினும் இன்ஞது இனியார்ப் பிரிவு = சுற்றத்தார் இல்லாத ஊரில் குடியிருப்பது துன்பமானது; அதைவிடத் துன்பமானது இனிமையான காதலரைப் பிரிந்திருப்பது.

பொ. ரை : உற்ருர் உறவினர் இல்லாத ஊரில் குடியிருப்பது (மனிதருக்கு) மிகவும் துன்பமான வாழ்க்கை; அதைவிடத் துன்பம் தருவது இனிமையான காதலரைப் பிரிந்திருப்பது.

வி - ம் : இனன் — இனம் — இனத்தவர்கள்; அதாவது பந்து மித்திரர்கள். இன்ஞது — துன்பமானது. இக்குறளுக்கு 'மகளிர்க்குத் தங்குறிப்பறியும் தோழியரில்லாத வேற்றூரின் கண் வாழ்தலின்ஞது; அதன் மேலுந் தன் காதலரைப் பிரிதல் அதனினு மின்ஞது' என்று 'இனன்' என்பதற்கு 'தோழியர்' என்ற பொருள் தருவது தவறு, மேலும் இது தோழிக்குச் சொல்லப்படுவதாக தோழியைப் புகுத்திப் பொருள் செய்திருக்கிற உரையில் 'தோழியர் இல்லாத ஊரில் வாழ்தலின்ஞது' என்பது சிறிதும் பொருத்த மற்றது. ஆதலால் — பந்துமித்திரர்கள் இல்லாத ஒரு ஊரில் குடியிருப்பது மனிதருக்கு மிகவும் துன்பமான காரியம்; அதைக் காட்டிலும் துன்பமானது ஒரு பெண் தன் காதலரைப் பிரிந்திருப்பது — என்பது கருத்து.

ஏன் எனில் :

1159. தொடிற்சுடி னல்லது காமநோய் போல
விடிற்சுட லாற்றுமோ தீ.

ப. ரை : தீ தொடில் சுடின் அல்லது காமநோய் போல விடில் சுடல் ஆற்றுமோ = நெருப்பானது (அதைத்) தொட்டால் சுடுமேயல்லாது காமநோயைப் போல விட்டுப் பிரிந்தால் சுடுவதைச் செய்யுமா? (செய்யாது).

பொ. ரை : (சாதாரண) நெருப்பு அதைத் தொட்டால் சுடுமேயல்லாது காமநோய் (நெருப்பைப் போல தொட்டுக்கொண்டிருக்கிற வரைக்கும் சுடாமல்) விட்டுப் பிரிந்த உடனே சுடுமா ?

வி - ம் : ஆற்றுமோ – செய்யுமா. சாதாரண நெருப்பு தொட்டால்தான் சுடும். ஆனால் காம நெருப்பு தொட்டால் சுடுவதில்லை விட்டால்தான் சுடுகிறது. என்ன விந்தை ! – என்பது கருத்து.

என் காதலரோ காரியம் பார்க்க வேண்டிய கடமையைக் கருதி பிரிந்து போயிருக்கிறார். நானோ பிரிவாற்றாமல் துன்பப்படுகிறேன். என்ன செய்வது ? காதலர் திரும்பி வருகிற வரையிலும் எப்படியாவது துன்பத்தைப் பொறுத்துக் கொண்டு தான் ஆக வேண்டும் :

1160. அரிதாற்றி யல்லனோய் நீக்கிப் பிரிவாற்றிப்
பின்னிருந்து வாழ்வார் பலர்.

ப. ரை : அரிது ஆற்றி அல்லல் நோய் நீக்கி பிரிவு ஆற்றி பின் இருந்து வாழ்வார் பலர் = மிகவும் பாடுபட்டு முயன்று துன்பந்தரும் காமநோயை விலக்கிப் பிரிந்திருப்பதைப் பொறுத்துக் கொண்டிருந்து (காதலர் வந்த) பின் அவருடன் வாழ்கின்றவரே பலராவர்.

பொ. ரை : மிகவும் பிரயாசைப்பட்டு முயன்று, துன்பமுள்ள காமவேதனையை அடக்கிக் கொண்டு, காதலர் பிரிவைப் பொறுத்துக் கொண்டிருந்து அவர் திரும்பி வந்தபின் அவருடனிருந்து இன்பவாழ்க்கை நடத்துகிறவர்கள் தாம் பெரும்பாலும் பெண்கள். (நானும் அப்படிப் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும்).

வி - ம் : அரிதாற்றி – மிகவும் முயன்று. அல்லல் நோய் – துன்பமுள்ள காமநோய். பிரிவாற்றி – பிரிந்திருப்பதைப் பொறுத்துக் கொண்டு. பின்னிருந்து வாழ்வார் பலர் – பின் காதலருடன் இல்லறம் நடத்தி வாழ்கின்றவர்களே பெரும்பாலோர். இதற்கு "பல பெண்கள் பிரிவைப் பொறுத்துக் கொண்டு உயிரோடிருப்பார்கள்; நான் அப்படிப் பின்னிருந்து வாழமாட்டேன் இறந்து போவேன்" என்று பொருள் செய்வது மிகவும் குற்றமானது. அதனால் – என்

ளைப் போன்ற நிலைமையிலுள்ள பெண்களிற் பெரும்பாலோரும் இப்படித்தொழில் முறையில் காதலர் பிரிந்துபோனதைப் பொறுத்துக் கொண்டு மிகவும் முயன்று ஆசைகளை அடக்கிக் கொண்டு தான் இருக்கிறவர்கள். அப்படி நானும் சகித்துக் கொண்டிருக்க வேண்டியதுதான் – என்பது கருத்து.

அதி. 117—படர்மெலிந்திரங்கல்

[‘படர்மெலிந்திரங்கல்’ என்பது ‘படரால் மெலிந்து இரங்குதல்’. படர்–துன்பம். மெலிந்து –இளைத்து. இரங்கல்–வருந்துதல். காதலன் பிரிந்திருக்கிற துன்பத்தால் இளைத்து வருந்துவது. இது முழுதும் காதலியைப் பற்றியது.]

1161. **மறைப்பேன்மன் யானி·:தோ நோயை யிறைப்பவர்க்**
கூற்றுநீர் போல மிகும்.

ப. ரை: யான் நோயை மறைப்பேன்; இ·:தோ இறைப்பவர்க்கு ஊற்று நீர் போல மிகும் = நான் என் காம நோயை அடக்குவேன்; இதுவோ இறைக்க இறைக்க ஊற்று நீர் போல அதிகப்படுகிறது.

பொ. ரை: (பிரிந்திருக்கும் காதலரை நினைத்து எழுகின்ற) என் காம நோயை நான் அடக்க முயல்வேன்; ஆனால் அதுவோ! இறைக்க இறைக்க வற்றாத நீரூற்றுப்போல அடக்க அடக்க அதிகப்படுகிறது.

வி-ம்: மறைத்தல் – அடக்குதல். இறைப்பவர்க்கு – இறைக்க இறைக்க. ‘இறைப்பவர்க்கு’ என்பதற்கு ‘நீர் வேண்டுமென்றிறைப்பவர்க்கு’ என்று பொருள் செய்யக் கூடாது. நீரூற்றின் ஊற்றுக் கண்ணை அடைத்தால் ஊறியநீர் பொத்துக் கொண்டு பீறிடும். ஆதலால் – என் காம நோயை நான் அடக்க முயல்வேன்; அதுவோ ஊற்றுக் கண் நீர் போல் அடக்க அடக்கப் பின்னும் வேகமாகத் துன்புறுத்துகிறது – என்பது கருத்து.

இப்படி என்னைத் துன்பப்படுத்தும் காதல் நோய்க்கு என்ன செய்வது என்று தெரியவில்லை :

1162. **கரத்தலு மாற்றேனிந் நோயைநோய் செய்தார்க்**
குரைத்தலு நாணுத் தரும்.

ப. ரை: இந்நோயை கரத்தலும் ஆற்றேன்; நோய் செய்தார்க்கு உரைத்தலும் நாணு தரும் = இந்தக் காம நோயை அடக்கவும் என்னால் முடியவில்லை; இந்த நோயை எனக்கு

உண்டாக்கி வைத்தவர்க்கு (என் காதலருக்கு) சொல்லி யனுப்பவும் வெட்கமூாக இருக்கிறது.

பொ. ரை: இந்தக் காம நோயை (அடக்கியடக்கிப் பார்க்கிறேன்) அடக்கவும் என்னுல் முடியவில்லை; இந்நோயை எனக்கு உண்டாக்கிவைத்த என் காதலருக்குச் சொல்லி யனுப்ப (நினைத்தாலும்) வெட்கமாக இருக்கிறது.

வி-ம்: கரத்தல் — அடக்குதல். அலுவலாக வேற்றூருக்குப் போயிருக்கிற காதலருக்கு வேறு அவசியம் எதுவுமில்லாமல் காமம் காரணமாக வரச்சொல்லித் தூதனுப்புவது பெண்மைக்கு வெட்கமான காரியம். ஏன் எனில் காதலர் அருகிலிருக்கிற காலத்திலும் கூடத் தன் காம ஆசையை வலியச் சொல்லிக் கொள்வது பெண்மைக்கு வழக்கமல்ல. ஆதலால் — என் காம வேதனையை அடக்கவும் முடியவில்லை; அதை என் காதலருக்குச் சொல்லியனுப்புவதும் வெட்கங் கெட்ட காரியம். என்ன செய்வேன்? — என்பது கருத்து.

அதனுல் காம வேதனை ஒரு பக்கமும் வெட்கம் ஒரு பக்கமுமாக என் உயிரை வதைக்கின்றன:

1163. காமமு நாணு முயிர்காவாத் தூங்குமென்
னோனு வுடம்பி னகத்து.

ப. ரை: என் நோனு உடம்பின் அகத்து உயிர் காவா காமமும் நாணும் தூங்கும் = என்னுடைய துன்பம் பொறுக்க முடியாத உடம்பினிடத்தில் என் உயிரைக் காவடித் தண்டாக்கி (அதன் இருபுறத்திலும்) காம நோயும் வெட்கமும் (சமனுக) தொங்கிக் கொண்டிருக்கின்றன.

பொ. ரை: (காமத் துன்பத்தைப்) பொறுக்க முடியாமல் தவிக்கிற என் உடம்பில் என் உயிரைக் காவடித் தண்டாக்கி. (அதன் ஒரு புறத்தில்) காம வேதனையும் (இன்னொரு புறத்தில்) நாணமும் சமனுகத் தொங்கிக் கொண்டிருக்கின்றன. (அதனுல் என் உயிர் வளைந்து ஒடிந்துவிடும் போல் இருக்கிறது.)

வி-ம்: கா — காவடித்தண்டு. உயிர் காவா — உயிர் காவடித் தண்டாக. தூங்குதல் — தொங்கிக் கொண்டிருத்தல். நோனு— பொறுத்துக் கொள்ள சக்தியில்லாத. காம நோய்த் துன்பமும் அதைக் காதலருக்குச் சொல்லியனுப்பத் தடையாகவிருக்கும் நாணமும் சமபலத்தோடு இருபுறத்திலும் என் உயிரை இழுத்துக் கொண்டிருக்கின்றன. அதனுல் — துன்பத்தைப் பொறுத்துக் கொள்ள வல்லமையில்லாத என் உடம்பிலிருக்கிற உயிரைக் காவடித் தண்டாக்கி, காமவேதனையும்

வெட்கமும் இருபுறத்திலும் தொங்கி இழுத்துக் கொண்டிருப்பதால் என் உயிர் வளைந்து முறிந்துவிடும் போல் இருக்கிறது – என்பது கருத்து.

இந்தத் துன்பநிலை காதலர் பிரிந்த எனக்குற்ற காமப் பெருக்கத்தால் வந்தது. அதற்கு மாற்றில்லையே :

1164. காமக் கடன்மன்னு முண்டே யதுநீந்து
மேமப் புணைமன்னு மில்.

ப. ரை : காம கடல் மன்னும் உண்டு; அது நீந்தும் ஏமப்புணை மன்னும் இல் = காமக் கடலென்னவோ இருக்கிறது; அதை நீந்திக் கரையேறப் பாதுகாப்பான மரக்கலம் என்னவோ இல்லை.

பொ. ரை : கடல் போலப் பெரிய காம ஆசை என்னவோ எனக்கு இருப்பது உண்மை; அந்தக் கடலைக் கடந்து கரையேறப் பாதுகாப்பான (என் காதலராகிய) மரக்கலந்தான் (இங்கே) இல்லை.

வி - ம் : என்காமம் கடல் போலப் பெருகி விட்டது; ஆனால் அந்தக் கடலைக் கடக்க எனக்குப் பாதுகாப்பான படகாகிய என் காதலர் இங்கில்லையே – என்பது கருத்து.

என்னிடத்தில் மிகவும் நேசமுள்ளவராக இருக்கும்போதே எனக்கு இவ்வளவு துன்பமுண்டாகும்படி பிரிந்திருக்கிறாரே :

1165. துப்பி னெவனாவர் மற்கொ றுயர்வரவு
நட்பினு ளாற்று பவர்,

ப. ரை : நட்பினுள் துயர் வரவு ஆற்றுபவர் துப்பின் எவன் ஆவர் கொல் = நேசமாக இருக்கும்போது (எனக்கு இவ்வளவு) துயரம் வரச் செய்கிறவர் (இன்னும்) நேசம் இல்லாதவராக இருந்தால் எப்படி இருப்பாரோ !

பொ. ரை : என்னிடத்தில் பிரியமுள்ளவராக இருக்கிறபோதே எனக்கு இவ்வளவு துன்பம் வரச் செய்கிற என் காதலர் என்னிடத்தில் (ஏதேனும் வருத்தமுற்று) பிரியம் இல்லாதவராகி விட்டால் இன்னும் எவ்வளவு துன்பமுண்டாக்குவாரோ ?

வி - ம் : துப்பு – அன்பின்மை – பகை. என் மீது மிகவும் பிரியமுள்ளவர் என் காதலர். அப்படியிருக்கும் போதே நான் இவ்வளவு துன்பப்பட வேண்டியிருக்கிறதே. அவர் என் மீது காதல் இல்லாதவராக இருந்தால் நான் இன்னும் எவ்வளவு துன்பப்பட வேண்டியிருக்குமோ – என்பது கருத்து.

காதலர் என்னிடம் பிரியமுள்ளவர் என்பதெல்லாம் அவர் என்னுடன் இருந்து இன்பமனுபவிக்கிற போது தான். அவர் என்னுடன் இல்லாவிட்டால்:

1166. இன்பங் கடன்மற்றுக் காம மஃதடுங்காற்
றுன்ப மதனிற் பெரிது.

ப. ரை: காமம் கடல் இன்பம்; மற்று அஃது அடுங்கால் துன்பம் அதனிற் பெரிது=காமம் (என் நாயகன் உடனிருக்கும் போது) கடல் போல் பெருத்த இன்பம்தான்; ஆனால் (என் காதலர் என்னுடன் இல்லாத காலத்தில்) அந்தக் காமம் வந்து வருத்தும்போது அத்துன்பம் அந்த (இன்பக்) கடலை விட பெரியதாக இருக்கிறது.

பொ. ரை: காம உணர்ச்சி (என் காதலர் என்னுடன் இருக்கும் போது) கடல் போல் பெரிய இன்பம் உண்டாக்கியது: ஆனால் (என் காதலர் என்னை விட்டுப் பிரிந்திருக்கிற இப் போது) அந்தக்காம உணர்ச்சி வந்து வருத்துகின்ற போது துன்பக் கடல் அந்த இன்பக் கடலை விடப் பெரியதாக இருக் கிறது.

வி - ம்: அடுங்கால் – வருத்தும் போது. காதலர் உடனிருக் கும்போது காமம் இன்பக் கடலாகத்தான் இருந்தது. அவர் என்னைப் பிரிந்திருக்கிற இப்போது அது இன்பக் கடலை விடப் பெரிய துன்பக் கடலாக இருக்கிறது – என்பது கருத்து.

அந்த மிகப் பெரிய துன்பக் கடலில் விழுந்து தவித்துக் கொண்டிருக்கிற நான்;

1167. காமக் கடும்புன னீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே யுளேன்.

ப. ரை: காம கடும் புனல் நீந்தி கரை காணேன் யாமத்தும் யானே உளேன்= காமமாகிய பெரிய கடலில் நீந்தி நீந்திக் கரைகாண மாட்டாதவளாக நடு இரவிலும் நான் தனியே இருக்கிறேன்.

பொ. ரை: காம வேதனையாகிய பெரிய கடலில் விழுந்து நீந்தி நீந்தி முயன்றும் கரை காணாதவளாக இந்த நள்ளிரவில் (என் துணைவரின்றி) தனியே தத்தளித்துக் கொண்டிருக்கிறேன்.

வி - ம்: காமக் கடும்புனல் – காமமாகிய பெரிய கடல். அதாவது, முன் சொன்ன 'துன்பம் அதனிற் பெரிது' என்றபடி இன்பக் கடலை விடப் பெரிதான துன்பக் கடல். என் காதலர் இங்கில்லாததால் எனக்குற்ற மிகுந்த காமத்தைக் கடக்க

மாட்டாதவளாக நடுச் சாமத்திலும் தனியே உறக்கமின்றி தவிக்கிறேன் – என்பது கருத்து.

எனக்கு இந்த நடுச் சாமத்தில் யாரும் துணையில்லை. எனக்குத் துணை இரவுதான். இரவுக்குத் துணை நான்தான் :

1168. மன்னுயி ரெல்லாந் துயிற்றி யளித்திரா
வென்னல்ல தில்லை துணை.

ப. ரை : மன் உயிர் எல்லாம் துயிற்றி அளித்து இரா என் அல்லது துணை இல்லை = உலகத்திலுள்ள உயிர்கள் எல்லாவற்றையும் தூங்கவைத்து (ஓய்வு கொடுத்து) அன்புசெய்துவிட்டு இரவு என்பது என்னையல்லாது வேறு துணையற்றதாக இருக்கிறது.

பொ. ரை : உலகத்திலுள்ள எல்லா உயிர்களையும் தூங்கச் செய்து சுகமுண்டாக்கி அன்பு செய்யும் இரவு, தான் தூங்காமல் என்னையன்றி வேறு துணையற்றதாக விழித்துக் கொண்டிருக்கிறது.

வி - ம் : துயிற்றி – தூங்கச் செய்து. அளித்து – அன்பு செய்து. எல்லா உயிர்களும் உறங்குகின்ற இந்த நடு ராத்திரியில் நான் ஒருத்திதான் தூக்கமற்று இருக்கிறேன் – என்பது கருத்து.

இந்த இரவும் என்னை விட்டு கொஞ்சத்தில் போவதாக இல்லை; எனக்கு மிகவும் நீடித்த துன்ப முண்டாக்கிக் கொண்டு மெதுவாக நடக்கிறது :

1169. கொடியார் கொடுமையிற் றாங்கொடிய விந்நா
ணெடிய கழியு மிரா.

ப. ரை : இந்நாள் நெடிய கழியும் இரா கொடியர் கொடுமையின் தாம் கொடிய = (காதலர் என்னுடனில்லாத) இப்போதெல்லாம் நீண்ட நேரம் மெதுவாகக் கழிக்கின்ற இரவுகள் எனக்கு இந்தக் கொடுமை செய்து விட்டவரை (என் காதலரை) விட அவைகள் மிகுந்த கொடுமை செய்வனவாக இருக்கின்றன.

பொ. ரை : (என் காதலர் என்னுடனில்லாத) இந்த நாட்களில் இரவுகள் மிகவும் நீண்ட காலம் தாமதித்து விடிகின்றன; அதனால் (எனக்கு இத்தனிமை யுண்டாக்கிக்) கொடுமை செய்து விட்ட காதலரைவிட இந்த இரவுகள் அதிகக் கொடுமை செய்கின்றன.

வி - ம் : கொடியார் – கொடுமைசெய்த காதலர். கற்புடைய பெண்கள் தம்முடைய கணவரை நொந்து கொள்ளும்போது

'கொடியார்', ''அன்பிலார்' என்ற இரண்டு பதங்களைத் தான் பிரயோகப்படுத்துவார்கள் என்பது தமிழ் வழக்கம். என் காதலர் என்னுடன் இருந்த காலங்களில் வெகு வேகமாக விடிந்துவிட்ட இரவுகள் இப்போதெல்லாம் வெகு நீடித்து விடிகின்றன. அதனால் என் காதலர் செய்த கொடுமையைக் காட்டிலும் இந்த இரவுகள் அதிகமான கொடுமை செய்வன வாக இருக்கின்றன — என்பது கருத்து.

என் கண்களும் அழ ஆரம்பித்து விட்டன. இந்தக் கண் களும் அவர் இருக்கிற இடத்துக்குப் போனால் எனக்குத் துன் பம் குறையும் :

**1170. உள்ளம்போன் றுள்வழிச் செல்கிற்பின் வெள்ளநீர்
நீத்தல மன்னோவென் கண்.**

ப. ரை : உள்ளம் போன்று என் கண் உள் வழி செல்கின் பின் வெள்ள நீர் நீத்தல = (என்) மனம் (போய் விட்டது) போல என் கண்களும் (காதலர்) உள்ள இடத்துக்குப் போனால் பிறகு (அவைகள்) வெள்ளம் போலக் கண்ணீரை ஊற்ற மாட்டா.

பொ. ரை : என் மனம் அவரைப் பின்பற்றிப் போயிருக்கிற மாதிரி என்னுடைய கண்களும் அவர் இருக்கு மிடத்துக்குப் போனால் பிறகு இப்படி வெள்ளம் போலக் கண்ணீரைக் கொட்டி அழுதுகொண்டிருக்க மாட்டா.

வி - ம் : உள் வழி — உள்ள இடம் — காதலர் இருக்குமிடம். காதலர் என்னைப் பிரிந்தது முதல் என்னுடைய மனம் அவர் பின் சென்று விட்டது. என் மனம் அவருடன் இருப்பதால் அமைதி பெறுகின்றது. ஆனால் என் உடலும் கண்களும் அவ ருடன் போகவில்லை. உடல் அவரை அணையாமல் அமைதி பெறாது. கண்கள் அவரைக் காணாமல் அமைதி பெறா. அத னால் என் உடல் அவர் இருக்கு மிடத்திற்குச் செல்ல முடியா விட்டாலும் — என் மனம் அவரிடம் போயிருக்கிற மாதிரி என் கண்களும் அவரிடம் போனால்தான் அமைதி பெறும். இல்லையானால் இங்கே அழுதுகொண்டுதானிருக்கும் — என் பது கருத்து.

அதி. 118—கண் விதுப்பழிதல்

['கண் விதுப் பழிதல்' என்பது கண்களின் விதுப்பு குறை தல். 'விதுப்பு' என்பது 'விரு விருப்பு' அல்லது துடி துடிப்பு' என்று பொருள் தருவது. 'அழிதல்' என்பதற்கு 'குறைதல்' என்பது பொருள். அதனால் 'கண்விதுப்பழி

தல்' என்பது காதலனைப் பிரிந்திருக்கும் ஏக்கத்தால் காதலி அடிக்கடி அழுது கண்களின் நலம் குறைவது. இது முழுதும் காதலியின் பேச்சு.]

**1171. கண்டாங் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாங்காட்ட யாங்கண் டது.**

ப. ரை: தண்டா நோய் நாம் கண்டது தாம் காட்ட; கண் தாம் கலுழ்வது எவன் கொலோ! = இந்த ஓயாத துன்பத்தை நான் அடைந்தது அவைகள் (அவரை) எனக்குக் காட்டின நிலேதான்; (அப்படியிருக்க) கண்கள் தாம் அழுவது எதற்காகவோ!

பொ. ரை: எனக்கு இந்த ஓயாத துன்பம் உண்டானது என்னுடைய கண்கள் அவரை எனக்குக் காட்டினதாலேதான்; (அப்படியிருக்க எனக்கு இந்த வேதனையை உண்டாக்கி விட்டு இப்போது) அந்த கண்கள் தாம் அழுகின்றனவே; இது என்ன விந்தை!

வி-ம்: தண்டா — ஓயாத. என்னுடைய கண்கள்தாம் முதலில் அவரைப் பார்த்து என்னைக் காதல் கொள்ளச் செய்தன. இப்போது அவரைப் பிரிந்திருக்கிற துன்பத்தை நான் பொறுத்துக் கொண்டிருந்தாலும் இந்தக் கண்கள் அதற்காக அழுது கொண்டே இருக்கின்றனவே! — என்பது கருத்து.

இந்தக் கண்கள் முதல் முதல் அவரைக் கண்டபோது ஆய்ந்தோய்ந்து பார்க்காமல் அவசரப்பட்டு ஆசை முட்டினதனுல் தானே இந்தத் துன்பம் எனக்கு வந்தது?; அப்படியிருக்க:

**1172. தெரிந்துணரா நோக்கிய வுண்கண் பரிந்துணராப்
பைத லுழப்ப தெவன்?**

ப. ரை: தெரிந்து உணரா நோக்கிய உண்கண் பரிந்து உணரா பைதல் உழப்பது எவன்? = ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல் விருப்பம் கொண்ட மையுண்ட கண்கள் (இப்போது அவருக்காகப்) பரிவு கொண்டு உணர்க்கையில்லாமல் அழுது துன்பப்படுவது எதற்காக?

பொ. ரை: (அவரைக் கண்ட உடனேயே அவசரப்பட்டு) ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல் அவர்மீது ஆசை கொண்ட கண்கள் இப்போது அவருக்காகப் பரிந்து அறிவில்லாமல் அழுது துன்பப்படுவது ஏனே?

வி-ம்: தெரிந்து உணரா — ஆராய்ந்து அறியாமல். அதாவது அவர் இப்படி என்னைத் தனியே தவிக்க விட்டுப் போய் விடு

வாரோ என்பதையெல்லாம் ஆராய்ந்து அறிந்து கொள்ளாமல். 'நோக்கிய' என்பதற்கு இங்கே 'விருப்பங் கொண்ட' என்பது பொருள். 'பரிந்துணரா – பரிவு கொண்டு உணர்க்கையில்லாமல். அதாவது அவருக்காகப் பரிந்து கொண்டு புத்தியில்லாமல். அவருடைய குணகுணங்களை ஆராய்ந்து தெரிந்து கொள்ளாமல் அவரைக் கண்ட உடனேயே காதல் மூட்டிவிட்ட இந்தக் கண்கள் இப்போது அவர் பிரிந்திருக்கிறாரே என்று அழுவது அறிவில்லாத்தனம் – என்பது கருத்து.

அவரைக் கண்டபோது ஒரு கணப் பொழுது கூட ஆலோசிக்கவில்லையே இந்த கண்கள் :

1173. கதுமெனத் தாநோக்கித் தாமே கலுழு
மிதுநகத் தக்க துடைத்து.

ப. ரை : கதுமென தாம் நோக்கி தாமே கலுழும் இது நக தக்க துடைத்து = திடீரென (கண்ட உடனே) தாம் ஆசை கொண்டு விட்டு (இப்போது கண்கள்) தாமே அழுகின்ற இச் செய்கை பரிகசிக்கத்தக்க தன்மையுடையது.

பொ. ரை : கண்ட உடனேயே (ஆலோசிக்காமல் அவர் மீது) காதல் கொண்டுவிட்ட இக்கண்கள் (இப்போது) தாமே அழுது கொண்டிருக்கிற இக் காரியம் இகழ்ந்து பரிகசிக்கத் தக்கது.

வி - ம் : கதுமென – திடீரென்று. கலுழுதல் – அழுதல். என் காதலரைக் கண்ட மாத்திரத்தில் ஆசை கொள்ளச் செய்தது இந்தக் கண்களேதாம், இப்போது இவைகளே அழுதுகொண்டிருக்கின்றன. இது கேலிக் கூத்துதான் – என்பது கருத்து.

துன்பப்படுவது நான். அந்தத் துன்பத்தை உண்டாக்கினது இக்கண்கள். அப்படியிருக்க :

1174. பெயலாற்ரு நீருலந்த வுண்க ணுயலாற்ரு
வுய்விநோ யென்க ணிறுத்து.

ப. ரை : உயல் ஆற்ரு உய்வு இல் நோய் என்கண் நிறுத்து உண் கண் பெயல் ஆற்ரு நீர் உலந்த = பொறுக்க முடியாத ஓயாத துன்பத்தை எனக்கு உண்டாக்கி விட்டு இந்த மையுண்ட கண்கள் இனி உகுக்க முடியாதபடி கண்ணீர் வற்றிப் போய் விட்டன.

பொ. ரை: சகிக்க முடியாதபடி ஓயாத காமவேதனையை எனக்கு உண்டாக்கி வைத்து விட்டு, என்னுடைய கண்கள்

அழுது அழுது இனிச் சிந்துவதற்குக் கண்ணீரில்லாதபடி வரண்டுபோய் விட்டன.

வி - ம்: பெயல் – பெய்தல் – சிந்துதல். உலந்த – வரண்டு போயின. உயலாற்ரு – பொறுக்க முடியாத. உய்வில் நோய் – ஒழிவு இல்லாத துன்பம். நிறுத்து – உண்டாக்கி வைத்து. எனக்குப் பொறுக்க முடியாத இடையருத் துன்பத்தை உண்டாக்கி விட்டு இந்தக் கண்கள் அழுது அழுது நீரற்று வரண்டு போயினவே ! – என்பது கருத்து.

இவ்வளவு துன்பமும் எனக்கு உண்டாக்கி வைத்து விட்டுத் தாம் அழுது அழுது வரண்டு போன இக்கண்கள் தூங்குவதற்கென்ன ? ;

1175. படலாற்ரு பைத லுழக்கும் கடலாற்ருக்
காமநோய் செய்தவென் கண்.

ப. ரை: கடல் ஆற்ரு காம நோய் செய்த என் கண் படல் ஆற்ரு பைதல் உழக்கும் = கடலும் ஈடாகாதபடி (அவ்வளவு பெரிய) காமநோயை எனக்கு உண்டாக்கி விட்ட என் கண்கள் உறங்குவதற்கு மூடாமல் துன்பத்தில் வருந்திக் கொண்டிருக்கின்றனவே !

பொ. ரை: சமுத்திரம் கூட சமானமாகாதபடி அவ்வளவு பெரிய காம வேதனையை எனக்கு உண்டாக்கி விட்டு, என் கண்கள் இமை மூடாமல் விழித்துக் கொண்டு துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனவே !

வி – ம்: கடல் ஆற்ரு – கடலும் போதாதபடி – கடலினும் பெரிய. படல் – இமை மூடுதல். படலாற்ரு – கண்மூடாமல். உழக்கும் – வருந்தும். கடலைவிடப் பெரிய காம வேதனையை எனக்கு உண்டாக்கிவிட்ட என்கண்கள் இமைமூடித் தூங்காமல் தாம் வருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றனவே ! – என்பது கருத்து.

ஆம். நிறைய வருத்தமடையட்டும்; அதுவேண்டும் இந்தக் கண்களுக்கு :

1176. ஓஒ வினிதே யெமக்கிந்நோய் செய்தகண்
டாஅ மிதற்பட் டது.

ப. ரை: எமக்கு இந்நோய் செய்த கண் தாஅம் இதன் பட்டது ஓஒ இனிதே = எனக்கு இவ்வளவு துன்ப முண்டாக்கி வைத்த கண்கள் தாம் இப்படித் துன்பப்படுவது எனக்கு மிகவும் இனிதானதுதான்.

பொ. ரை: எனக்கு இவ்வளவு காம வேதனையை உண்டாக்கி வைத்த இந்தக் கண்கள் இப்படி (அழுதழுது நீர் வரண்டு தூக்கமின்றி) துன்பத்திற் சிக்கிக் கொண்டு தவிப்பது எனக்கு மிகவும் இன்பமானதுதான். (படட்டும் நிரம்பப் படட்டும்)

வி - ம்: இதற்பட்டது – இதன்பட்டது – இப்படித் துன்பப் படுவது. நோய் செய்த – நோய் உண்டாக்கின. எனக்கு ஆசை மூட்டி இவ்வளவு துன்ப முண்டாக்கிவைத்த என் கண் இப்படித் துன்பப்படுவது நான் மகிழத் தக்கதுதான் – என்பது கருத்து.

இன்னும் அழுதழுது அதிகத் துன்பங்களை அடையட்டும்:

1177. உழந்துழந் துண்ணீ ரறுக விழைந்திழைந்து
வேண்டி யவர்க்கண்ட கண்.

ப. ரை: விழைந்து இழைந்து வேண்டி அவர்க்கண்ட கண் உழந்து உழந்து உள்நீர் அறுக = ஆசையோடு மனங் குழைந்து விரும்பி அவரைப் பார்த்த கண்கள் அழுது அழுது உள்ளநீரும் அற்றுப் போகட்டும்.

பொ. ரை: ஆசையோடு மனங் குழைந்து விரும்பி அவரைப் பார்த்த (தால் எனக்கு இத்துணை துன்பமுண்டாக்கிய) கண்கள் (இன்னும்) அழுது அழுது உள்ள நீரெல்லாம் வற்றிப் போகட்டும்.

வி - ம்: விழைந்து – ஆசை கொண்டு. இழைந்து – மனம் குழைந்து. வேண்டி – விரும்பி. இந்த மூன்று சொற்களும் ஏறத்தாழ ஒரே பொருளைத் தருவன; அழுத்தத்தைக் காட்ட அடுக்கப்பட்டுள்ளன. உண்ணீர் – உள்நீர் – உள்ள கண்ணீரெல்லாம். அவரைக் கண்ட உடன் வெகு ஆசையோடு காதலித்து எனக்கு இவ்வளவு துன்பத்தை உண்டாக்கி வைத்த கண்கள் இன்னும் அழுதழுது வரண்டு போகட்டுமே – என்பது கருத்து.

பிரிந்துபோய் என்னை இப்படித் தவிக்க விட்ட அவரைக் கருதி இந்தக் கண்கள் அழுவானேன்?:

1178. பேணாது பெட்டா ருளர்மன்னோ மற்றவர்க்
காணா தமைவில கண்.

ப. ரை: பேணாது பெட்டார் உளர் மன்னோ; மற்று அவர்க் காணாது கண் அமைவு இல = உள்ளன்பு இல்லாமல் உறவு கொண்டவர் (எங்கோ) இருக்கிறாராம்; அப்படிப்பட்ட அவ

ரைக் காணுமல் கண்கள் அமைதியில்லாமல் தவிக்கின்றன வாம். (மடமைதான்)

பொ. ரை: (என் மீது உண்மையான காதலில்லாமல் என்னுடன் பொய் உறவு காட்டினவர் (என்னை விட்டு எங்கேயோ போய்) இருக்கிருராம்; அப்படிப்பட்ட அவரைக் காணுமல் (உறக்கமின்றி அழுது) தவிக்கின்றன என்னுடைய கண்கள்! என்ன மடமை!

வி-ம்: பேணுது — உள்ளத்தில் ஆசையில்லாமல். பெட்டவர் - நேசமானவர். அமைவு — அமைதி. உளர் மன்னே — எங்கேயோ இருக்கிருராம் — (என்று அவர் போயிருக்கிற இடத்தைக் குறிப்பது). என் மீது அந்தரங்கப் பிரியமில்லாமல் என்னை மணந்து கொண்டவர் இப்படி நான் துன்பமடைய விட்டு எங்கோ போயிருக்கிற அவரைக் காணுமல் என் கண்கள் தூக்கமில்லாமல் துடித்துக் கொண்டிருப்பது சரியல்ல - என்பது கருத்து.

கண்டாலாவது சும்மா இருக்கின்றனவா? அதுவுமில்லையே!:

1179. வாராக்காற் றுஞ்சா வரிற்றுஞ்சா வாயிடை
யாரஞ ருற்றன கண்.

ப. ரை: வாராக்கால் துஞ்சா வரின் துஞ்சா ஆயிடை கண் ஆர் அஞர் உற்றன = (காதலர்) வராத போதும் உறங்குவதில்லை; வந்துவிட்டாலும் உறங்குவதில்லை; ஆகையினுல் கண்கள் ஓயாத துன்பம் பொருந்தியவைகளாக இருக்கின்றன.

பொ. ரை: (என் கண்கள் காதலர் இல்லாத காலங்களில் அவர்) இன்னும் வரவில்லையே என்ற ஏக்கத்தால் தூங்குவதில்லை; அவர் வந்து விட்டாலும் (அவரோடு இடைவிடாது இன்பமனுபவிப்பதை விரும்பி) உறங்குவதில்லை; அதனுல் இந்தக் கண்கள் எப்போதும் எனக்குத் துன்பம் உண்டாக்குவனவாகவே இருக்கின்றன.

வி-ம்: துஞ்சுதல் — தூங்குதல் — உறங்குதல். ஆயிடை — ஆதலால். ஆர் — எப்போதும் பொருந்தியுள்ள — நீங்காத. அஞர் — துன்பம். உற்றன — உடையன. கணவர் இல்லாத காலத்தில் அவர் மீது ஏக்கத்தால் என் கண்கள் உறங்குவதில்லை. அவர் இருக்கிற காலத்திலும் அவருடன் சரச சல்லாபங்களை விரும்பித் தூங்குவதில்லை. அதனுல் என் கண்களால் எனக்கு எப்போதும் துன்பம்தான் — என்பது கருத்து.

இப்படிப்பட்ட கண்களை வைத்துக் கொண்டு நான் எப்படி என் காம நோயை மறைத்து வைக்க முடியும்?:

1180. மறைபெற லூரார்க் கரிதன்றா லெம்போ
லறைபறை கண்ணா ரகத்து.

ப. ரை: எம்போல் பறை அறை கண்ணார் அகத்து மறை பெறல் ஊரார்க்கு அரிது அன்று = என்னைப்போல் பறை சாற்றுகின்ற கண்களையுடையவர்களுடைய இரகசியங்களை அறிந்து கொள்வது ஊராருக்கு அரிய காரியமல்ல.

பொ. ரை: என்னைப்போல் (இப்படி எப்போதும் துன்பப் படுத்தி என் நிலைமையை) பறையடித்துக் கொண்டிருக்கிற கண்களையுடையவர்களுடைய மனதிலுள்ள ரகசியமான காம நோயை ஊராரெல்லாரும் அறிந்து கொள்ளுவது கடினமான காரியமல்ல.

வி-ம்: மறை — மறைக்க வேண்டிய இரகசியம். இங்கே மறைக்க வேண்டிய காம நோய். பறை — துடும்பு. எந்நேரமும் இப்படி அழுது கொண்டும் உறக்கமின்றி விழித்துக் கொண்டும் என் நிலைமையை துடும்படித்துத் தெரிவிக்கிற கண்களையுடைய நான் எப்படி என் காம நோயை ஊரார் அறியாதபடி மறைக்க முடியும்? — என்பது கருத்து.

அதி. 119—பசப்புறு பருவரல்

['பசப்புறு பருவரல்' என்பது பசப்பினால் உறும் பருவரல். பசப்பு என்பது மேனியின் நிறம் மாறுபடுவது. உறும் — அடையும். பருவரல் — துன்பம். உடலின் நிறம் மாறுபடுவதனால் அடையும் துன்பம். அதாவது காதலனைப் பிரிந்து காமநோயால் வருந்துவதால் காதலியின் உடல் நிறம் வெளுத்த பசுமையாக மாறுதலடைந்துவிடும். அதைக் கண்டு அவள் வருந்துவது இது. இது முற்றிலும் காதலி தனக்குத்தானே சொல்லிக் கொள்வது.]

1181. நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன் பசந்தவென்
பண்பியார்க் குரைக்கோ பிற.

ப. ரை: பசந்த என் பண்பு நயந்தவர்க்கு நல்காமை நேர்ந்தேன்; பிற யார்க்கு உரைக்கோ = (பிரிவாற்றாமையினால்) என் மேனி நிறம் வேறுபட்டிருக்கும் நிலைமையை நான் விரும்பும் என் காதலருக்குத் தெரிவிக்க முடியாமல் இருக்கிறேன்; மற்ற யாருக்கு இதைச் சொல்லுவேன்?

பொ. ரை : (அவர் பிரிந்திருப்பதால்) என் மேனி பசந்துவிட்டதை நான் காதலிக்கிற நாயகனுக்குக் காட்ட முடியாத நிலையில் இருக்கிறேன். இதை வேறு யாரிடத்தில் சொல்லிக் கொள்வேன் ?

வி - ம் : நயந்தவர் — நான் விரும்புகின்றவர் — என் காதலர். நல்காமை — தெரிவிக்காமை — காட்ட முடியாமை. 'பிற' என்பதை அசை நிலையாகக் கொள்ளக் கூடாது. 'பிற யார்க் குறைக்கோ' என்று கூட்டி 'அவருக்கன்றி வேறு யாருக்கு உரைப்பேன்' என்று பொருள் கொள்ள வேண்டும். 'நயந்தவர்' என்பதற்கு 'உடம் படாவழி ஒழிதல் குறித்துப் பிரிவுணர்த்தினராகலின் அவர் அன்புடையரென்னுங் கருத்தான்' என்பது தவறு. 'நல்காமை' என்பதற்கு 'இதுவே உடம்பாடாக மேலும் பிரிவு நிகழுமாகலின் இனி அவரைக் கூடுதலரிதென்னும் கருத்தான்' என்பதும் தவறு. 'பசந்த என் பண்பு' என்பதற்கு 'முன்னருடம் படுதலும் பின்னர் ஆற்றாது பசத்தலும் பிறர் செய்தன அல்லவென்பான்' என்பதும் சரியல்ல. 'யார்க்குரைக்கோ' என்பதற்கு 'யான் செய்து கொண்ட துன்பத்தினை இனியொருவர்க்குச் சொல்லலும் பழியாமென்னுங் கருத்தால்' என்பதும் பொருந்தாது. ஆதலால் பிரிவாற்றாமையினால் என் மேனி பசந்து விட்டதை என் காதலருக்குக் காட்டிக் கொண்டால் தான் எனக்கு இன்பம். அதைச் செய்ய முடியாத நிலைமையிலிருக்கிற நான் வேறு யாரிடத்தில் சொல்லி என்ன பயன்? — என்பது கருத்து.

இப்படி என் மேனி நிறம் வேறுபட்டுப் பசந்திருப்பதை என் காதலருக்குக் காட்டுவதற்கு அவர் இங்கில்லை யென்றாலும் இது அவரால் உண்டானது என்பதே எனக்குப் பெருமை தான் :

1182. அவர்தந்தா ரென்னுந் தகையா லிவர்தந்தென்
மேனிமே லூரும் பசப்பு.

ப. ரை : அவர் தந்தார் என்னும் தகையால் பசப்பு இவர்தந்து என் மேனி மேல் ஊரும் = அவர் உண்டாக்கினார் என்ற தன்மையால் இப்பசப்பு பெருமிதத்தோடு என் மேனியின் மீது ஏறிக் கொண்டு என்னை ஆள்கின்றது.

பொ. ரை : (காதலராகிய) அவரால் உண்டானது என்ற காரணத்தால் இந்தப் பசப்பு நிறம் என் மேனியின் மீது உரிமையோடு ஏறிச் சவாரி செய்கிறது.

வி - ம் : தந்தார் — உண்டாக்கினார். தகையால் — தன்மையினால் — காரணத்தால். இவர் தந்து — பெருமை யடித்துக்

கொண்டு. ஊரும் — ஏறி நடத்துகிறது — சவாரி செய்கிறது. இந்தப் பசப்பு என் காதலரால் உண்டானது என்ற காரணத்தால் இது என் உடலின் மீது ஏறிக்கொண்டிருப்பதில் நான் பெருமை கொள்ளுகிறேன் — என்பது கருத்து.

என் காதலர் என்னைவிட்டுப் பிரிந்து போயிருப்பதால் எனக்கு இந்தப் பசப்பு வந்தது மட்டுமன்றி :

**1183. சாயலு நாணு மவர்கொண்டார் கைம்மாறு
நோயும் பசலையுந் தந்து.**

ப. ரை : நோயும் பசலையும் தந்து கைம்மாறு சாயலும் நாணும் அவர் கொண்டார் = துன்பத்தையும் பசலை நிறத்தையும் எனக்குத் தந்துவிட்டு, அவற்றிற்கு ஈடாக என் மேனி அழகையும் நாணத்தையும் அவர் கொண்டு போய்விட்டார்.

பொ. ரை : (பிரிவாற்றுத்) துன்பத்தையும் இந்தப் பசலை நிறத்தையும் எனக்கு உண்டாக்கிவிட்டு, அவற்றிற்குப் பதிலாக என்னுடைய மேனி அழகையும் நாணத்தையும் என் காதலர் தம்முடன் கொண்டு போய்விட்டார்.

வி - ம் : நோய் — பிரிவாற்றுமையின் துன்பம். பசலை — பிரிவாற்றுமையினுல் உண்டான நிற வேறுபாடு. சாயல் — அழகு. காதலர் பிரிந்திருக்கும் வருத்தத்தால் முகவாட்டமும் அவர் இல்லாத காரணத்தால் தன்னை அலங்கரித்துக் கொள்ளாமையும் சேர்ந்து அழகைப் போக்கிவிட்டன — என்பது குறிப்பு. ஊரார் அறியும்படி காதலரை நினைத்து அழுது கொண்டிருப்பதால் நாணமும் கெட்டுவிட்டது. அதனுல் என் காதலரின் பிரிவினுல் என்னுடைய மேனி அழகும் நாணமும் போய் மன வேதனையும் உடல் பசப்பும் வந்துவிட்டன — என்பது கருத்து.

காதலரைப் பிரிந்தால் நோயும் பசலையும் வரும் என்பது உண்மைதான். ஆனுல் அவர் என்னைவிட்டுப் பிரிந்திருக்கிருர் என்றுலும் நான் அவரை விட்டுப் பிரியவில்லையே! அப்படியிருக்க இந்தப் பசப்பு எப்படி வந்தது ? :

**1184. உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாற்
கள்ளம் பிறவோ பசப்பு.**

ப. ரை : உள்ளுவன்; யான் உரைப்பது அவர் திறம்; பசப்பு பிற கள்ளமோ = (என் காதலரையே) நினைக்கிறேன்; நான் பேசுவது அவரைப் பற்றியே; (அப்படியிருக்க) இந்தப் பசப்பு வேறு சூதாக இருக்குமோ !

பொ. ரை: (எந்நேரமும் என் காதலரையே) நினைத்துக் கொண்டிருக்கிறேன். நான் பேசுவதெல்லாம் அவரைப் பற்றியே; (அப்படியிருக்க நான் எப்படி அவரைப் பிரிந்தவளாவேன்? அதனால் – (பிரிவினால் வருவதென்கிற) இந்தப் பசலை நிறம் எனக்கு வந்தது வேறு சூதாக இருக்குமோ!

வி - ம்: அவர் திறம் – அவரைப் பற்றி. கள்ளம் – சூது – வஞ்சனை. 'பிற' என்பதை அசை நிலையாகக் கொள்ளக் கூடாது. 'பிற கள்ளமோ' என்று சேர்த்து 'வேறு மாயமோ' என்று பொருள் கொள்ள வேண்டும். அவரையே நினைத்துக் கொண்டிருக்கிறேன்; அவரைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறேன். அதனால் நான் அவரைப் பிரியவில்லையே! அப்படியிருக்கப் பிரிவினால் வரக்கூடிய இந்தப் பசப்புஎனக்கு வந்தது வேறு மாயமாக இருக்க வேண்டும் – என்பது கருத்து.

பசப்பு வருவது பிரிவினால் என்றால் நான் அவரைப் பிரியவில்லை. அல்லது இந்தப் பசப்பு அவர் தருவது என்றாலும் அவர் இங்கில்லையே! :

**1185. உவக்காணெங் காதலர் செல்வா ரிவக்காணென்
மேனி பசப்பூர் வது.**

ப. ரை: எம் காதலர் செல்வார் உவக்காண்; என் மேனி பசப்பு ஊர்வது இவக்காண்! = என்னுடைய காதலர் செல்வது அங்கே; என் மேனி பசந்து போவது இங்கே!

பொ. ரை: என் காதலர் சென்றிருப்பது எங்கோ வேறிடத்தில்; என் மேனி பசந்துபோனது இங்கே என்னிடத்தில்! இது என்ன விந்தை!

வி - ம்: உவக்காண் – அங்கே. இவக்காண் – இங்கே. என் காதலர் (எங்கேயோ) அங்கே இருக்க, இங்கே என் மேனி பசந்து விட்டதே! இப்பசப்பு அவர் தருவது என்பதும் எப்படிப் பொருந்தும்? – என்பது கருத்து.

ஓ! இப்போது தெரிந்து கொண்டேன், இந்தப் பசப்பு வராமல் இருப்பதற்கு, அவரை நான் நினைப்பதும் அவரைப் பற்றியே பேசுவதும் மட்டும் போதாது. பசப்பு வருவதற்கும் அவர் இங்கே இல்லாமலிருப்பது காரணமல்ல. பின் இப்பசப்பு எப்படிவருகிற தென்றால் :

**1186. விளக்கற்றம் பார்க்கு மிருளேபோற் கொண்கன்
முயக்கற்றம் பார்க்கும் பசப்பு.**

ப. ரை: விளக்கு அற்றம் பார்க்கும் இருளே போல் பசப்பு கொண்கன் முயக்கு அற்றம் பார்க்கும் = விளக்கு நீங்கு

வதற்குப் பார்த்துக் கொண்டேயிருந்து (விளக்கு நீங்கின உடனே வந்துவிடுகிற) இருட்டைப் போலவே, கணவருடைய தழுவுதல் நீங்குவதற்குப் பார்த்துக் கொண்டேயிருந்து (அத் தழுவல் நீங்கின உடனே தானாக) வந்துவிடுவது இப்பசப்பு.

பொ. ரை: விளக்கு இல்லாத சமயத்துக்காகக் காத்துக்கொண்டிருந்து, விளக்கு நீங்கின உடனே உண்டாகி விடுகிற இருட்டைப் போலவே என் கணவர் என்னைத் தழுவிக் கொண்டிருப்பது இல்லாத சமயத்துக்காகக் காத்துக்கொண்டேயிருந்து, தழுவல் நீங்கின உடனே தானாக உண்டாகி விடுவது இந்தப் பசப்பு.

வி-ம்: அற்றம் – இல்லாத தருணம். கொண்கன் – கணவன். முயக்கு – தழுவுதல் – ஆலிங்கனம். வெளிச்சம் இல்லாமையே இருட்டாவது போல் கணவனுடைய ஆலிங்கனம் இல்லாமையே இந்தப் பசப்பு – என்பது கருத்து.

ஆம், இப்போது நினைவுக்கு வருகிறது. அவர் என்னுடன் இருக்கிற காலங்களிலும் கூட அவருடைய ஆலிங்கனம் விலகிய உடனே என் மேனி பசந்து விடும்:

1187. புல்லிக் கிடந்தேன் புடைபெயர்ந்தே னவ்வளவி
லள்ளிக்கொள் வற்றே பசப்பு.

ப. ரை: புல்லி கிடந்தேன், புடை பெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக் கொள்வற்றே பசப்பு = (காதலரை) தழுவிக் கொண்டு படுத்துக் கிடந்தேன்; அதை விட்டு விலகினேன்; அப்போதே (என் மேனியைப்) பசப்பு அள்ளிக் கொள்வது போல் இருந்தது.

பொ. ரை: என் காதலரைத் தழுவி அணைத்துக் கொண்டு (நெடு நேரம்) படுத்துக் கிடந்து விட்டு, அந்நிலை விட்டு நீங்கின அந்தக் கணமே என் மேனி நிறத்தை பசப்பு அள்ளிக் கொண்டது போலிருக்கும். (என்பது இப்போது நினைவுக்கு வருகிறது).

வி-ம்: புல்லுதல் –தழுவுதல். புடை பெயர்தல் – நிலை பெயர்தல் – விலகல். அவ்வளவில் – அப்போதே. அள்ளிக் கொள்வற்று – அள்ளிக் கொள்வது போன்றது. என் காதலரை அணைத்துக் கொண்டு படுத்துக் கிடந்து விட்டு அந்த அணைப்பு நீங்கின அக்கணமே என் மேனி முழுதும் பசந்து போவது (இப்போது நினைவுக்கு வருகிறது) – என்பது கருத்து.

என் காதலர் இங்கு என்னுடன் இருக்கும் போதே அவருடைய புணர்ச்சி நீங்கினால் உடனே தானாக பசந்து விடுகிற

என் மேனி, அவர் என்னை விட்டுப் பிரிந்து இங்கில்லாதிருக்கிற இப்போது இப்படிப் பசந்து போனது என்னுடைய குற்றமா? இதற்காக ஊரார்:

1188. பசந்தா ளிவளென்ப தல்லா லிவளைத்
துறந்தா ரவரென்பா ரில்.

ப. ரை: இவள் பசந்தாள் என்பது அல்லால் அவர் இவளைத் துறந்தார் என்பார் இல் = (என்னைப் பார்க்கிறவர்கள்) ‘இவள் பசந்து விட்டாள்’ என்று சொல்லுகிறார்களே யல்லாமல் ‘அவர் இவளை விட்டு விட்டுப் போய் விட்டாரே’ என்பவர்கள் இல்லை.

பொ. ரை: (என்னைப் பார்க்கிறவர்கள்) ‘இவள் பசந்து நிறம் மாறிப் போனாள்’ என்று குற்றம் சொல்லுகிறார்களே யல்லாமல், ‘அவர் இவளை (இப்படித் தவிக்க விட்டுப்) பிரிந்து போயிருக்கிறாரே’ என்று (பச்சாத்தாபம்) சொல்லுகிறவர்கள் ஒருவரும் இல்லை.

வி-ம்: துறந்தார் — பிரிந்தார். என் மேனி இப்படிப் பசந்து போனது என் குற்றம் போல் எல்லாரும் ஏளனம் செய்கிறார்களேயல்லாமல் இப்படி என்னைப் பசக்க விட்டு அவர் பிரிந்திருக்கிறாரே என்று அனுதாபப்படுகிறவர்கள் யாருமில்லை — என்பது கருத்து.

என் மேனி எவ்வளவு வேண்டுமானாலும் பசக்கட்டும். ஆனால் அவர் மட்டும்:

1189. பசக்கமற் பட்டாங்கென் மேனி நயப்பித்தார்
நன்னிலைய ராவ ரெனின்.

ப. ரை: நயப்பித்தார் நல் நிலையர் ஆவர் எனின் என் மேனி பட்டாங்கு பசக்க = எனக்கு ஆசை மூட்டியவர் (என்னைப் பிரிந்திருப்பதால்) நல்ல நிலைமையுள்ளவர் ஆவார் என்றால் என் மேனி எல்லாரும் ஏளனம் செய்யும்படி பசந்தாலும் பசக்கட்டும்.

பொ. ரை: (என்னைப் பிரிந்திருப்பதால்) எனக்குக் காதலுண்டாக்கிய கணவர் நன்மை அடைவார் என்றால் யார் பரிகாசம் செய்தாலும் சரி, என் மேனி இன்னும் பசக்கட்டும்.

வி-ம்: நயப்பித்தார் — காதல் கொள்ளச் செய்தவர் — கணவர். ‘நன்னிலையர் ஆவர் எனின்’ என்பது ‘பொருள் சம்பாதிப்பதிலோ புகழ் அடைவதிலோ உத்தியோகம் உயர்

வதிலோ ‘சிறப்பு அடைவாரானால்’ என்பதைக் குறிப்பது. பட்டாங்கு — ஏளனம் — பரிகாசம். இப்படி என்னை விட்டுப் பிரிந்திருப்பதால் என் காதலருக்கு நன்மை யுண்டாகுமென்னால் யார் எப்படி என்னைப் பரிகாசம் செய்தாலும் சரி, என் மேனி இன்னும் பசக்கட்டும் — என்பது கருத்து.

நான் பசந்து போனதற்காக என்னைப் பலர் ஏளனம் செய்தாலும் செய்யட்டும். ஆனால் :

1190. பசப்பெனப் பேர்பெறுத லன்றே நயப்பித்தார்
நல்காமை தூற்றா ரெனின்.

ப. ரை. நயப்பித்தார் நல்காமை தூற்றார் எனின் பசப்பு என பேர் பெறுதல் நன்றே = (என்னைக்) காதல் கொள்ளச் செய்தவர் இங்கு இல்லாதிருப்பதை (ஊரார்) இகழ்ந்து பழி பேசாமலிருந்தால் (அது போதும்). நான் பசப்பாகி விட்டேன் என்று பேர் பெறுவது நல்லது தான்.

பொ. ரை: என் காதலர் (என்னைப் பிரிந்து) இங்கில்லாதிருப்பதைப்பற்றி ஊரார் இகழ்ந்து பழிபேசாமலிருந்தால் (எனக்கு அது போதும்) நான் பசந்து விட்டேன் என்பதைப் பற்றி ஊரார் ஏளனம் செய்வதில் எனக்குப் பெருமைதான்.

வி-ம்: ‘நல்காமை’ என்பதற்கு ‘இங்கிருந்து எனக்கு உதவாமை’ என்பது பொருள். அதனால் ‘நல்காமை’ என்பதற்கு ‘இங்கில்லாமை’ அல்லது ‘பிரிந்திருப்பது’ என்று பொருள் கொள்ள வேண்டும். ‘நயப்பித்துக் கூடினவர்க்கு இன்று நான் நல்காமையை நட்டோர் தூற்றாராயின்’ என்று பொருள் கொள்வது வெறும் குழப்பம். தூற்றுதல் — பழி கூறுதல். நான் பசந்திருப்பதைப்பற்றி ஊரார் ஏளனம் செய்வது எனக்குப் பெருமைதான். என் காதலர் பிரிந்திருப்பதைப்பற்றி ஊரார் இகழ்ந்து பேசாமலிருந்தால் அதுவே போதும். என் காதலர் நன்னிலையராகி வரட்டும் — என்பது கருத்து.

அதி. 110—தனிப்படர்மிகுதி

[‘தனிப்படர் மிகுதி’ என்பது ‘தனியாக படர்தலின் மிகுதி’ என விரியும். ‘படர்தல்’ என்பது ‘நினைத்தல்’. காதலன் காதலி இருவருக்குள் ஒருவர் மட்டும் இன்னொருவரை மிகுதியாக நினைத்து ஏங்குவது. காமம் என்பது, காதலன் காதலி ஆகிய இருவரிடத்தும் சமமான துடிப்பை ஒரே காலத்தில் உண்டாக்கினால்தான் இன்பமுள்ளதாகும் என்பதையும், அதைப்போலவே இருவருக்கும் ஒத்த காதல் இருந்தால்தான்

வாழ்க்கை இனிமையாக இருக்கும் என்பதையும் சுட்டுவது. காதலியைப் பிரிந்த காதலன் பொருள் சம்பாதிப்பதிலோ அல்லது வேறு கடமை செலுத்துவதிலோ ஈடுபட்டுப் போயிருப்பதால் அவன் எந்நேரமும் காதலியை நினைத்துக் கொண்டிருக்க முடியாது. ஆனால் வீட்டில் தனியே இருக்கிற காதலி எந்த நேரத்திலும் காதலனையே நினைத்துக் கொண்டிருப்பாள். அத்துடன் ஆண் இயல்பு காமத் துடிப்போ காதல் எண்ணமோ வரும்போதுதான் மனைவியை நினைக்கும். ஆனால் பெண்ணியல்பு காமத் துடிப்பும் காதல் எண்ணமும் இல்லாத காலங்களிலும் கணவனுடைய நலத்தை மட்டுமே கருதி அடிக்கடி நினைக்கும். அப்படிப்பட்ட இயல்பினால் காதலி காதலனைப் பற்றி மிகுதியாக நினைப்பதைச் சொல்லுவது இந்தத் 'தனிப் படர் மிகுதி'.]

1191. தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி.

ப.ரை: தாம் வீழ்வார் தம்வீழ பெற்றாரே காமத்து காழ் இல் கனி பெற்றவர் = தாம் விரும்புகின்றவர் தம்மை விரும்புகிறதை அடைந்தவர்களே காமம் என்பதன் குற்றமில்லாத கனியை அடைந்தவர்களாவார்கள்.

பொ. ரை: தாம் காதலிக்கிறவர் (கணவர் அதைப் போலவே) தம்மைக் காதலிக்கும் (பாக்கியத்தைப்) பெற்ற (பெண்களே) வர்களே காமச் சுவையின் குற்றமற்ற கனியை அடைந்தவர்களாவார்கள்.

வி-ம்: வீழ்தல் - விழைதல் - விரும்புதல். காழ் இல் - குற்றமற்ற. 'காழ்' என்பதற்கு 'விதை' என்று பொருள் கொள்வது நல்லதல்ல. ஏனெனில் மிகுந்த சுவையுள்ள கனிகளில் பெரும்பாலானவை வித்துள்ளனவாகவே இருக்கலாம். வித்தில்லாதிருப்பது நல்ல சுவைக்கு அடையாளமல்ல. அதனால் 'காழ்இல்' என்பதற்குக் 'குற்றமில்லாத' என்ற பொருளே மேலானது. குற்றமில்லாத கனியென்றால், சுவையில் புளிப்போ, காரமோ, துவர்ப்போ, கலவாதது என்றும் அதிகமாக உண்டுவிட்டாலும் தீமை செய்யாதது என்றும் குறிக்கும். தான் காதலிக்கிற கணவன் அதைப்போலவே தன்னைக் காதலிப்பதை அடைந்த பெண்ணே குற்றமற்ற காம இன்பத்தை அனுபவிக்கும் பாக்கியத்தை அடைந்தவளாவாள் — என்பது கருத்து.

காதலிக்குக் காதலன் செய்யும் அன்பு எப்படிப்பட்டது என்றால்:

**1192. வாழ்வார்க்கு வானம் பயந்தற்ருல் வீழ்வார்க்கு
வீழ்வா ரளிக்கு மளி.**

ப. ரை: வீழ்வார்க்கு வீழ்வார் அளிக்கும் அளி வாழ்வார்க்கு
வானம் பயந்த அற்று=விரும்புகின்றவருக்கு விரும்பப்பட்ட
வர் செலுத்தும் அன்பு உலகத்தில் வாழ்கின்ற மக்களுக்கு
வானம் மழை பெய்வதைப் போன்றது.

பொ. ரை: காதலிக்கிற மனைவிக்குக் காதலிக்கப்படும் கணவர்
செய்யும் அன்பு, உயிர் வாழ்வதற்கு இன்றியமையாத மழைக்
காக வானத்தையே பார்த்துக்கொண்டிருக்கும் மக்களுக்கு
மழை பெய்வதைப் போன்றது.

வி-ம்: விழ்வார்க்கு - காதலிக்கிறவருக்கு. வீழ்வார் - அவர்
யாரைக் காதலிக்கிருரோ அவர். அதனுல் 'வீழ்வார்க்கு வீழ்
வார்' என்பதற்கு 'காதலிக்கிறவருக்குக் காதலிக்கப்பட்ட
வர்' என்பது பொருள். அளிக்கும் – கொடுக்கும். அளி -
அன்பு. வானம்-மழை. உலகத்தில் மழையில்லாமல் உயிர்கள்
வாழ முடியாது. மழை வரவில்லையே என்று மக்கள் வானத்
தையே பார்த்துக் கொண்டிருக்கும் போது, அந்த வானமோ
மக்கள் விரும்புகிறபோதெல்லாம் உடனே மழை பெய்து
விடுவதில்லை. சில காலங்களில் மக்கள் நீரில்லாமல் மிகவும்
தவிக்கிறபோதும் பெய்யாமல் இருந்து விடுகிறது. பிறகு
அதுவாகப் பெய்கிறபோதுதான் மக்களுக்குச் செழிப்புண்டா
கிறது. அப்படிப் போலவே பிரிந்து போயிருக்கிற காதலன்
வரவில்லையே என்று அவனையே நினைத்துக்கொண்டு காதலி
தவித்துக் கொண்டிருக்கிருள். அக்காதலனே இவள் தவித்
துக் கொண்டிருக்கிருளே என்று உடனே வந்து விடுவதில்லை.
சில சமயங்களில் நெடுநாள் திரும்பிவராமல் அவன் போன
காரியங்களைப் பார்த்துக் கொண்டு மிகவும் தாமதித்து
வருவான். அது வரையிலும் காதலி தவித்துக் கொண்
டிருக்க வேண்டியதுதான். ஆதலால் - காதலன் வரவுக்காக
அவரையே நினைத்துத் தவித்துக் கொண்டிருக்கும் எனக்கு
என் கணவர் செய்யும் அன்பு, மழையின்றி தவித்து மழையின்
வரவையே கருதிக் காத்திருக்கும் மனிதருக்கு மழை பெய்
வதைப் போன்றதுதான் – என்பது கருத்து.

நான் மட்டும் அவரையே நினைத்துக் கொண்டிருந்து என்ன
பயன்?:

**1193. வீழுநர் வீழப் படுவார்க் கமையுமே
வாழுந மென்னுஞ் செருக்கு.**

ப. ரை: வீழுநர் வீழப்படுபவர்க்கு வாழுநம் என்னும் செருக்கு
அமையும்=தாம் விரும்புகின்றவரால் (தாமும் விரும்பப்படு

கிறவருக்குத்தான் 'வாழ்வு பெற்ளும்' என்னும் பெருமை பொருந்தும்.

பொ. ரை: தான் காதலிக்கின்ற கணவரால் தானும் காதலிக்கப்படுகிற பெண்ணுக்குத்தான் 'நல்வாழ்வு பெற்ளும்' என்று சொல்லிக் கொள்ளும் பெருமை கிடைக்கும்.

வி - ம்: 'வீழுநர் வீழப்படுவர்' – விரும்புகிறவரால் விரும்பப் படுகிறவர். நான் அவரை விரும்புகிறமாதிரி அவரும் என்னை விரும்பினல் தானே அவர் விரைவில் வந்து எனக்குக் கவலே திரும்? – என்பது கருத்து.

நான் காதலிக்கின்ற அவர் என்னைக் காதலிக்காவிட்டால்:

1194. வீழப் படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார்
வீழப் படாஅ ரெனின்.

ப. ரை: தாம் விழ்வார் வீழப்படாஅர் எனின் வீழப்படுவார் கெழீஇயிலர் = தாம் விரும்புகிறவரால் தாம் விரும்பப்படா விட்டால் தாம் விரும்புகின்ற அவர் அன்பில்லாதவர்.

பொ. ரை: நாம் காதலிக்கிற கணவரால் நாம் காதலிக்கப்படா விட்டால் நாம் காதலிக்கிற கணவர் அன்பில்லாதவரே.

வி - ம்: கெழீஇயிலர் – கெழுவிஇலர் – பற்றுடையவராக இல் லாதவர். இந்தக் குறளுக்கு "கற்புடைய மகளிரால் நன்கு மதிக்கப்படுவாரும் தாம் விரும்பும் கணவரான் விரும்பப்படா ரெனின் தீவினையாட்டியர்" என்றுபொருள் செய்வது தவறு. நல்வினை தீவினைகளைப் பற்றிய பேச்சுக்கு இங்கிடமில்லை. ஆதலால் – நான் விரும்புகின்ற என் கணவர் என்னை விரும்பாவிட்டால் அவரைப் பாசமற்றவர் என்றுதான் சொல்ல வேண்டும் – என்பது கருத்து.

இப்படியிருந்து என்ன பயன்?:

1195. நாங்காதல் கொண்டார் நமக்கெவன் செய்பவோ
தாங்காதல் கொள்ளாக் கடை.

ப. ரை: நாம் காதல்கொண்டார் தாம் காதல் கொள்ளாக் கடை நமக்கு எவன் செய்பவோ = நாம் காதல் கொண்ட அவர் தாமும் நம்மிடம் காதல் கொள்ளா விடத்து நமக்கு (அவர்) என்ன (நன்மை) செய்யப் போகிறுர்?

பொ. ரை: நான் காதலிக்கின்ற என் கணவர் தாமும் என்னைக் காதலிக்காவிட்டால் அவர் எனக்கு என்ன நன்மை செய்யப் போகிறுர்.

வி - ம் : கொள்ளாக்கடை — கொள்ளாத போது — கொள்ளா விடில். நான் காதலிக்கிறபடியே என் கணவரும் என்னைக் காதலிக்காவிட்டால் அவரால் எனக்கு என்ன இன்பம் இருக்கப் போகிறது ? — என்பது கருத்து.

இருவருடைய காதலும் சமமாக இருந்தால்தானே வாழ்க்கை இன்பமாக இருக்கும் ? இல்லையானால் :

1196. ஒருதலையா னின்னாது காமங்காப் போல
விருதலை யானு மினிது.

ப. ரை : காமம் கா போல இருதலையானும் இனிது ; ஒரு தலையான் இன்னாது = காம ஆசை துலாக்கோல் போல் இரண்டு பக்கமும் சமமாக இருந்தால்தான் இன்பம் ; (அப்படியின்றி) ஒரு பக்கம் மட்டும் இருந்தால் துன்பம் தான்.

பொ. ரை : காம ஆசை தராசு போல, காதலன் காதலி ஆகிய இருவரிடத்திலும் சமமாக இருந்தால்தான் இனியதாக இருக்கும் ; அப்படியில்லாமல் ஒரு பக்கத்தில் மட்டும் இருந்தால் துன்பம் தான்.

வி - ம் : கா — துலா - தராசு. நான் என் காதலர் மீது ஆசை கொண்டிருப்பதற்குச் சமமாக அவரும் என் மீது ஆசை கொண்டவராக இருந்தால்தானே எனக்கு இன்பம் கிடைக்கும்; அவருக்கு என் மீது ஆசையில்லாமல் நான் மட்டும் ஆசைப்படுவதில் இப்படித் துன்பப்பட வேண்டியதுதான் — என்பது கருத்து.

அந்தப் பாவி மன்மதன் எனக்கு அவர் மீது ஆசை மூட்டுவது போல அவருக்கும் என் மீது ஆசை மூட்டுவதற்கென்ன ?:

1197. பருவரலும் பைதலுங் காணான்கொல் காம
னொருவர்க ணின்றொழுகு வான்.

ப. ரை : காமன் ஒருவர்கண் நின்று ஒழுகுவான் பருவரலும் பைதலும் காணான் கொல் = மன்மதன் ஒருவர் பக்கம் சேர்ந்து கொண்டு ஓரம் செய்பவனாகி நான் அனுபவிக்கும் துன்பத்தையும் துயரத்தையும் பார்க்க மாட்டானோ !

பொ. ரை : (பொதுவாக இருக்க வேண்டிய) மன்மதன் ஒரு பக்கத்தில் சேர்ந்து கொண்டு (என் காதலர் மீது பாணம் விடாமல் என் மீது மட்டும் பாணம் விட்டு) பாரபட்சமாக நடந்து கொள்ளுகிறானே. அவன் நான் படும் துன்பத்தையும் துயரத்தையும் அறியமாட்டானா ?

வி-ம்: பருவரல் — துன்பம். பைதல் — துயரம். துன்பம் என்பது உடல் வேதனை. துயரம் என்பது மனவேதனை. ஒருவர் கண் நின்று ஒழுகல் — ஒருவர் பக்கம் சேர்ந்து கொண்டு இன்னொருவருக்கு ஓரம் செய்தல். இருவருக்கும் பொதுவாகக் காமமூட்ட வேண்டிய காமக் கடவுளான மன்மதன், என் கணவர் பக்கம் சேர்ந்து கொண்டு, என் மீது மட்டும் காமபாணம் விட்டு எனக்குத் துன்பமும் துயரமும் உண்டாக்குவது தகுமா - என்பது கருத்து.

இவ்வளவு காலம் என்னைப் பிரிந்து போயிருக்கிற என் கணவர் உடனே இங்கு வந்து எனக்கின்பம் தர முடியாவிட்டாலும். அவர் எங்கிருக்கிறார், என்ன வேலையாக இருக்கிறார், எப்போது வருவார் என்பதான ஒரு நல்ல சேதியாவது அனுப்பலாகாதா?:

1198. வீழ்வாரி னின்சொற் பெறாஅ துலகத்து
வாழ்வாரின் வன்கணா ரில்

ப. ரை: வீழ்வாரின் இன் சொல் பெறாஅது உலகத்து வாழ்வாரின் வன்கணார் இல் = (தாம்) விரும்புகின்றவரிடமிருந்து ஒரு இனிய சொல்லும் (சேதி) வராமலும் உலகத்தில் உயிரோடிருக்கிறவர்களைவிட நெஞ்சழுத்தமுள்ளவர்கள் வேறில்லை.

பொ. ரை: தாம் காதலிக்கிற கணவரிடமிருந்து ஒரு இனிய சேதி கூட வராமலிருந்தும் உலகத்தில் உயிரைவைத்துக் கொண்டிருக்கிற பெண்ணைவிட நெஞ்சழுத்தமுள்ளவர்கள் வேறில்லை.

வி-ம்: வீழ்வார் — விரும்பப்பட்ட காதலர். வாழ்வார்—உயிரோடிருப்பவர். வன்கண் — நெஞ்சுறுதி. என் கணவரிடமிருந்து ஒரு அன்பான சேதி கூட வரவில்லை. அப்படியிருந்தும் அவரைக் காணும் ஆசையால் இன்னும் உயிரைவைத்துக்கொண்டிருக்கிறேன். என்னைவிட அழுத்தமுள்ளவர்கள் வேறு யார்? — என்பது கருத்து.

அவரே சொல்லியனுப்பாவிட்டாலும் வேறு யாராவது அவரைப் பற்றி ஒரு நல்ல வார்த்தை சொன்னாலும் போதுமே:

1199. நசைஇயார் நல்கா ரெனினு மவர்மாட்
டிசையு மினிய செவிக்கு.

ப. ரை: நசை இயார் நல்கார் எனினும் அவர்மாட்டு இசையும் செவிக்கு இனிய = நான் ஆசை கொண்டுள்ளவர் (தாமாகச்

சேதியனுப்பி) உதவமாட்டார் என்றாலும் அவரைப் பற்றிய ஒரு இனிய சொல் யார் சொன்னாலும் என் காதுக்கு இன்பம் உண்டாக்கும்.

பொ. ரை: என்னால் காதலிக்கப்படுகிற என் கணவர் (என்னைக் காதலிக்காமையால் தாமாக ஒரு அன்பு வார்த்தை சொல்லி யனுப்பி) உதவாவிட்டாலும் அவரைப் பற்றி வேறு யாரா யினும் ஒரு நல்ல வார்த்தை சொன்னாலும் அது (என் துயரத் தைப் போக்கி) என் காதுக்கு இன்பம் தரும்.

வி-ம்: நசை இயார் – விரும்பப்பட்டவர். நல்குதல் – உதவு தல். இங்கே சேதியனுப்பி உதவுதல். இசை – இனிய சொல். நான் காதலிக்கும் என் கணவர் என் மீது காதலில்லாமை யால் அவராக ஒரு நல்ல சேதியனுப்பாவிட்டாலும் அவரைப் பற்றி வேறு யாராயினும் ஒரு நல்ல சொல் சொன்னாலும் அது எனக்கு ஆறுதலளிக்குமே – என்பது கருத்து.

மனமே! ஏன் இப்படியெல்லாம் அவர் இல்லாத சமயத் தில் அவரைப் பற்றி நிந்திக்கிறாய்? நீ அடைந்திருக்கிற மாதிரி அவரும் காம வேதனை அடையாததால் இன்னும் வர வில்லை. ஆனால் எப்படியும் வருவார், பொறுத்துக் கொள். அவர் வந்தபின்:

1200. உறுஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச்
செறுஅஅய் வாழிய நெஞ்சு.

ப. ரை: நெஞ்சு! வாழிய. உறுஅர்க்கு உறும் நோய் உரைப் பாய் கடலை செறு அஅய் = நெஞ்சே! உன்னை வாழ்த்து கிறேன்; (உன்னைப் போல் காமநோய்) உறுத அவருக்கு (அவர் வந்தபின்) நீ உறுகின்ற காம நோயை சொல்லிக் கொள்வாய்; கடல் போன்ற உன் காமத்தை அடக்கு.

பொ. ரை: மனமே! உன்னை வாழ்த்துகிறேன்; (நீ அடைந்த காம வேதனையைப் போல தாமும்) அடையாத (தால் விரைந்து வராத) அவருக்கு (அவர் வந்தபின்) நீ அடையும் காம வேதனைகளைச் சொல்லிக் கொள்ளலாம்; (இப்போது) கடல் போல் உன்னுள் வளர்ந்துவிட்ட காம ஆசையை அடக் கிக் கொள்ளுக.

வி-ம்: உறுஅர் – உறார் – காம ஆசை உறாதவர். கடலை – கடல் போன்ற காம ஆசையை. செறு அஅய் – செறாய் – செறுப்பாய் – அடக்குவாய். செறுத்தல் – அடக்குதல். இக் குறளுக்கு "நின்னோடுறாதார்க்கு நின்னுறு நோயை யுரைக்க லுற்ற நெஞ்சே! நீ யாற்றுயாயினும் அரிதாய அதனை யொழித்து நினக்குத் துயரஞ் செய்கின்ற கடலைத் தூர்க்க

முயல்வாயாக. அஃதெளிது'' என்று பொருள் செய்வது வெறும் குழப்பம். 'கடலைத் தூர்ப்பது எளிது' என்பது கருத்தற்றது. ஆதலால் மனமே! உன்னை வாழ்த்திக்கேட்டுக் கொள்ளுகிறேன். நீ அடைந்தது போன்ற காமத் துன்பத்தை அவர் அடையவில்லை. அதனால் இன்னும் வரவில்லை. அவர் வந்தபின் நீ அடைந்த துன்பங்களை அவரிடம் சொல்லிக் கொள்ளலாம். இப்போதைக்குக் கடல் போல் பெருக விட்டு விட்ட உன் காம ஆசையை அடக்கிக் கொள் — என்பது கருத்து.

அதி. 121—நினைந்தவர்புலம்பல்

['நினைந்தவர் புலம்பல்' என்பது 'அவர் நினைந்து புலம்பல்' அதாவது அவரை நினைத்து புலம்பல். 'புலம்பல்' என்றால் 'வருத்தப்பட்டுச் சொல்லிக் கொள்வது'. முன் அதிகாரத்தில் கடைசி குறளில் காதலி தன் நெஞ்சைப் பார்த்துப் பொறுத்துக் கொள்ளச் சொன்னாள். சிறிது நேரம் பொறுத்திருந்த நெஞ்சு பொறுத்திருக்க முடியாமல் மீண்டும் காதலனை நினைத்து வருத்தத்தோடு சொல்லுவது, 'நினைந்தவர் புலம்பல்'. இது காதலன் காதலி இருவருக்கும் பொதுவானதல்ல. காதலி மட்டும் காதலனை நினைத்து ஏங்குவது.]

1201. உள்ளினுந் தீராப் பெருமகிழ் செய்தலாற்
கள்ளினுங் காம மினிது.

ப. ரை: உள்ளினும் தீரா பெருமகிழ் செய்தலால் கள்ளினும் காமம் இனிது = நினைத்தாலும் ஓயாத நல்ல மகிழ்ச்சியை உண்டாக்குவதால் கள்ளைவிட காமம் இனிமையானது.

பொ. ரை: மனதில் நினைத்தாலும் உடனே நிரம்பவும் பெருமையுள்ள களிப்பை உண்டாக்குவதால் கள்ளை உண்ட இன்பத்தைவிட காமத்தை நினைக்கும் இன்பம் சிறந்தது.

வி-ம்: கள்ளை நினைத்தவுடன் களிப்பு வராது. அதை நினைக்கும்போது அருவருப்புதான் உண்டாகும். அதை அருவருப்போடும் குடித்த பிறகுதான் களிப்புண்டாக்கும். அந்தக் களிப்பும் கள்ளின் வேகம் தீர்ந்த உடன் நீங்கிவிடும். அத்துடன் கள்ளினால் வரும் களிப்பு தீங்கு செய்தாலும் செய்யும். ஆனால் காமத்தை நினைத்தாலும் களிப்புண்டாகும். அருவருப்பே இருக்காது. எவ்வளவு நேரமானாலும் நினைக்கிறவரைக்கும் களிப்பு குறையாமலிக்கும். யாருக்கும் ஒரு தீங்கும் செய்யாது. தீரா — குறையாத. பெருமகிழ் — பெருமையுள்ள மகிழ்ச்சி. 'பெருமகிழ்' என்பதற்குப் 'பெரிய மகிழ்ச்சி' என்று பொருள் கொள்ளல் சிறப்பன்று.

ஏனெனில் 'தீரா' என்பதிலேயே 'பெரிய' என்ற கருத்திருப்பதால் மீண்டும் அது வேண்டுவதில்லை. 'பெருமை' என்பதற்குப் 'பெருமையான' 'குற்றமற்ற' என்ற பொருளே சிறப்பு. மனதில் நினைத்தாலும் ஓயாத நல்ல மகிழ்ச்சியை உண்டாக்குவதால் கள்ளை உண்டு வருகிற களிப்பைவிட காமத்தை நினைத்து வருகிற களிப்பு மேலானது — என்பது கருத்து.

காம நினைப்பு கள்ளைவிட மட்டுமல்ல, களிப்புண்டாக்கக் கூடிய மற்றெந்தப் பொருளையும் விடச் சிறந்த இன்பம் தருவது; ஏன் எனில் :

**1202. எனைத்தொன் றினிதேகாண் காமந்தாம் வீழ்வார்
நினைப்ப வருவதொன் றில்.**

ப. ரை : காமம் எனைத்து ஒன்று இனிதே காண்; தாம் வீழ்வார் நினைப்ப வருவது ஒன்று இல் = காமம் வேறு எதை விடவும் இன்பம் தருவதென்பது உண்மை; (ஏனெனில்) தாம் விரும்புகின்றவரை நினைத்த உடனே இன்பம் வருவதுபோல் (இன்பம் தரக்கூடியது) வேறொன்றும் இல்லை.

பொ. ரை : காம நினைப்பு வேறு எந்த நினைப்பைக் காட்டிலும் இன்பமுண்டாக்குவது கண் கூடு; ஏனெனில் தம் காதலரை நினைத்த மாத்திரத்தில் (அது உண்டாக்கும் இன்பம் போல்) வேறு எதுவும் (நினைத்த மாத்திரத்தில்) இன்பமுண்டாக்குவதில்லை.

வி - ம் : 'காண்' என்பது 'காண்கிறோம்' என்று உறுதி கூற நிற்பது. நினைப்ப — நினைத்த கணமே — நினைக்கும்போதே. ஒன்று இல்—வேறொன்றும் இல்லை. மற்ற இன்பங்களை அனுபவிக்க நினைத்தால் மட்டும் போதாது, செயலும் கூட வேண்டும். ஆனால் காமம் செயல் கூடாத போதும் நினைப்பதிலேயே இன்ப உணர்ச்சி தருவது.

இந்த சமயத்தில் என் காதலரும் என்னை நினைக்கிறார் போல இருக்கிறது. அதனால் தான் எனக்குத் தும்மல் வரும் போல இருக்கிறது. ஐயோ! வந்த தும்மல் போய்விட்டதே! :

**1203. நினைப்பவர் போன்று நினையார்கொல் தும்மல்
சினைப்பது போன்று கெடும்.**

ப. ரை : தும்மல் சினைப்பது போன்று கெடும்; நினைப்பவர் போன்று நினையார் கொல்! = (எனக்குத்) தும்மல் வருவது

போல இருந்து கலைந்துவிட்டது; (ஏன்? என் காதலர் என்னை) நினைப்பதுபோல இருந்து நினைக்க வில்லையோ?

பொ. ரை: எனக்குத் தும்மல் வருவதுபோலத் தோன்றி வர வில்லை; (ஏன்? என் காதலர் என்னை) நினைப்பது போல் இருந்து நினைக்கவில்லை போல் இருக்கிறது.

வி-ம்: சினைப்பது – உண்டாவது. என் காதலர் என்னை நினைக்க ஆரம்பித்து நினைக்கவில்லை போலிருக்கிறது; அத னால் தான் எனக்கு வந்த தும்மல் நின்றுவிட்டது – என்பது கருத்து.

அவர் என்னை ஏன் நினைக்கப் போகிறார். அவருடைய எண் ணத்தில் நான் இருந்தால் தானே நினைப்பார்!:

1204. யாமு முளேங்கொ லவர்நெஞ்சத் தெந்நெஞ்சத்
தோஒ வுளரே யவர்.

ப. ரை: எம் நெஞ்சத்து ஓஒ அவர் உளரே, அவர் நெஞ்சத்து யாமும் உளேம் கொல் = என்னுடைய நெஞ்சத்தில் அவர் எப்போதும் இருக்கிறாரே. (அப்படி) அவர் நெஞ்சத்தில் நானும் இருக்கிறேனா?

பொ. ரை: என்னுடைய மனதில் (என் காதலர்) அவர் எப் போதும் இருந்து கொண்டே யிருக்கிறாரே. (அப்படி) அவர் மனதில் நான் இருக்கிறேனா? (இருந்தால் நினையாமல் விருப் பாரா?)

வி-ம்: ஓஒ – ஓவோ – ஓய்வோ – ஓய்வில்லாமல் – எப்போ தும். நான் அவரை எப்போதும் நினைத்துக் கொண்டே இருக் கிறேனே, அவர் என்னைக் கொஞ்சமாவது நினைக்கிறாரா? – என்பது கருத்து.

அவர் என்னைச் சிறிதேனும் நினைத்திருந்தால் வந்த தும்மல் போயிருக்குமா? என்னைத் துளிகூட நினைக்காத அவர்:

1205. தந்நெஞ்சத் தெம்மைக் கடிகொண்டார் நாணார்கொ
லெந்நெஞ்சத் தோவா வரல்.

ப. ரை: தம் நெஞ்சத்து எம்மை கடிகொண்டார் எம் நெஞ் சத்து ஓவாவரல் நாணார் கொல் = தம்முடைய நெஞ்சத்தில் என்னை விலக்கி விட்டவர் என்னுடைய நெஞ்சத்தில் மட்டும் இடைவிடாது வருவதற்கு நாண வேண்டாமா?

பொ. ரை: தம்முடைய மனதிலிருந்து என்னை நீக்கி விட்ட அவர், என்னுடைய மனதுக்குள் மட்டும் ஓயாமல்வந்து நுழைகின்றாரே. அவருக்கு மான மில்லையா?

வி-ம்: கடிகொண்டார் – விலக்கி விட்டவர். ஓவா – ஓயா – ஓயாமல். தம்முடைய மனதில் எனக்கு இடங்கொடுக்காத என் காதலர் என்னுடைய மனதில் மட்டும் ஓயாது வருகிறாரே, இவருக்கு வெட்கமில்லையா? – என்பது கருத்து.

நானோ எந்நேரமும் அவரையே நினைந்து புலம்பிக்கொண்டிருக்கிறேன்; அவரோ என்னை நினைப்பதேயில்லை. இப்படித் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதை விட இறந்து போகலாம் என்றாலும் இறக்க மனம் வரவில்லை. ஏன் எனில்:

**1206. மற்றியா னென்னுளேன் மன்னோ வவரொடியா
னுற்றநா ளுள்ள வுளேன்.**

ப. ரை: மற்று யான் என் உளேன் மன்னோ அவரொடு யான் உற்ற நாள் உள்ள உளேன் = மற்றும் நான் ஏன் (உயிரோடு) இருக்கிறேன் என்றால் அவரோடு நான் இன்பமுற்ற நாட்களை எண்ணி இருக்கிறேன்.

பொ. ரை: ஆனால் நான் ஏன் உயிரை வைத்துக்கொண்டிருக்கிறேன் என்றால் அவரோடு நான் இன்பம் அனுபவித்த காலங்களை நினைத்து (அந்தக்காலம் மீண்டும் வருவதை விரும்பி) உயிரோடிருக்கிறேன்.

வி-ம்: மற்றும் – 'ஆனால்' என்ற மாற்றுப் பொருளில் நிற்பது. 'மன்னோ' என்பது 'என்பீர்களோ' என்று விடை சொல்லும் குறிப்பையுணர்த்தும் அசை. நான் ஏன் உயிரை வைத்துக் கொண்டிருக்கிறேன் என்றால் அவரோடு நான் அனுபவித்த இன்பத்தை இன்னும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையினால்தான் – என்பது கருத்து.

அதனால் நான் அவரை மறக்கவே முடிவதில்லை. மறந்தால்:

**1207. மறப்பி னெவனாவன் மற்கொன் மறப்பறியே
னுள்ளினு முள்ளஞ் சுடும்.**

ப. ரை: மறப்பின் எவன் ஆவன்; மற்கொன் மறப்பு அறியேன்; உள்ளினும் உள்ளம் சுடும் = மறந்தால் என்ன ஆவேன்: மறப்பது என்பதை அறியமாட்டேன். (மறப்பது அதனால் மறப்பது என்பதை) நினைத்தாலும் உள்ளம் சுடுகின்றது.

பொ. ரை: அவரை மறந்தால் நான் என்ன கதியடைவேனோ தெரியவில்லை. (அந்த அச்சத்தால்) நான் அவரை மறப்பதே இல்லை; (மறப்பதைப்பற்றி) நினைத்தாலும் என் நெஞ்சம் கொதிக்கின்றது.

வி-ம்: 'மற்கொன்' என்பது 'மற்று அதற்காக' என்று குறிப்பில் நிற்கும் அசை. 'உள்ளினும்' என்பது 'மறப்பை உள்ளினும்' என்பதாம். 'எவனுவன்' என்பது 'என்ன ஆவேனோ' என்ற அச்சத்தைக் குறிப்பது. அதாவது அவரை மறந்தால் என் உயிர் போனாலும் போகும், பைத்தியம் பிடித்தாலும் பிடித்து விடும், அல்லது வேறு என்ன தீமை எனக்கு வந்துவிடுமோ தெரியாது — என்பது. என் காதலரை நான் மறந்தால் எனக்கு என்ன தீமை வந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன். அதனால் அவரை மறப்பதேயில்லை. மறப்பதைப்பற்றி நினைத்தாலும் என் நெஞ்சம் கொதிக்கிறது — என்பது கருத்து.

அவர் இன்னும் வரவில்லை யென்று நான் அவரைப் பலவாறு நிந்தித்து நினைக்கிறேனே, அந்த நினைப்புகளில் என் மனக் கண்ணில் தென்படுகிற அவர் நான் அவரை நிந்திப்பதற்காகக் கோபித்துக் கொள்ளுகிறாரா? இல்லையே! நாங்கள் இருவரும் சேர்ந்து இன்பம் அனுபவிக்கிற காலங்களில் எவ்வளவு இனிய முகத்தோடும் இன்பமான பேச்சோடும் அன்பு செய்தாரோ அப்படியேதானே என் நினைவில் காணப்படுகிறார்!:

1208. எனைத்து நினைப்பினுங் காயா ரனைத்தன்றோ
காதலர் செய்யுஞ் சிறப்பு.

ப. ரை: எனைத்து நினைப்பினும் காயார் அனைத்தன்றோ காதலர் செய்யும் சிறப்பு = (நான் அவரை நொந்து கொண்டு) எப்படி நினைந்தாலும் அவர் (என் நினைப்பில் தோன்றும்போது) கோபித்துக் கொள்வதில்லை; அதுவல்லவா (என்) காதலர் (எனக்குச்) செய்யும் சிறப்பு.

பொ. ரை: (அவர் இன்னும் வராதிருப்பதற்காக) நான் எப்படி (நொந்து அவரை) நினைத்தாலும் (என் நினைவில் வருகிற அவர்) கோபிப்பதே இல்லை. அதுவல்லவா என் காதலர் எனக்குச் செய்கிற பெருமை!

வி-ம்: எனைத்து — எந்த விதமாக. அனைத்து — அது. நான் எப்படியெல்லாம் குற்றஞ்சாட்டி என் காதலரை நினைத்தாலும் என் நினைப்பில் அவருடைய இனிய முகமும் இன்பச் செயல்களுந்தாம் காணப்படுகின்றன. கோபம் கொள்வதான

கடுத்தமுகம் காணப்படுவதேயில்லை. அதனால் இன்னும் அதிகமாக என் காதல் சிறக்கின்றது — என்பது கருத்து.

அவரை எப்படி நினைத்தாலும் எனக்கு இன்பம் தருவதாகத் தான் இருக்கிறதென்றாலும் அவர் இங்கு என்னுடன் இல்லாதிருப்பதை என்னால் சகித்திருக்க முடியவில்லையே! அவர் சொன்னதையெல்லாம் மறந்து விட்டாரே!:

1209. விளியுமெ னின்னுயிர் வேறல்ல மென்பா
ரளியின்மை யாற்ற நினைத்து.

ப. ரை: வேறு அல்லம் என்பார் அளியின்மை ஆற்ற நினைத்து என் உயிர் விளியும் = 'நாம் இருவரும் வேறு வேறு அல்ல' என்பவர் எனக்குத் துணையாக (அருகில்) இல்லாமையை மிகவும் நினைத்து என்னுடைய இனிய உயிர் தேய்கின்றது.

பொ. ரை: (என்னுடன் இருக்கும் போது) நாம் இருவரும் வேறு வேறல்ல (ஒன்றே) என்று சொல்லும் என் காதலர் (இப்போது) என் பாதுகாப்பாக அருகிலில்லாதிருப்பதை நினைத்து நினைத்து என் இனிய சீவன் குறைகின்றது.

வி-ம்: அளி — பாதுகாப்பு. 'அளி' என்பதற்கு 'அன்பு அல்லது 'பிரியம்' என்ற பொருள் இருந்தாலும் இங்கே 'அளி' என்பதற்கு 'பாதுகாப்பு' அல்லது 'துணை' என்று பொருள் கொள்வதே சிறப்பு. ஏன் எனில் 'உயிர் விளியும்' என்ற நிலைமைக்கு அன்பைவிட பாதுகாப்புதான் அவசியமானது. ஆற்ற நினைத்து — மிகவும் நினைத்து. மிகவும் நினைப்பதாவது 'அடிக்கடி அதையே நினைப்பது. அதாவது 'நினைத்து நினைத்து'. என்னுடன் இருக்கும்போது உன் உயிரும் என் உயிரும் வேறல்ல' என்று சொல்லும் என் காதலர் என் அருகில் எனக்குத் துணையில்லாமலிருப்பதை நினைத்து நினைத்து என் சீவன் குறைகின்றது — என்பது கருத்து.

அவரில்லாமல் என் உயிர் தேய்கிறதென்றாலும் அவரைக் காணும் ஆசையால் என் உயிர் போகாது. அவர் வருவார். துன்பம் நீங்கும். அறிவே! பொறுத்துக் கொள்!

1210. விடாஅது சென்றாரைக் கண்ணினாற் காணப்
படாஅதி வாழி மதி.

ப. ரை: மதி! வாழி; விடாஅது சென்றாரை கண்ணினால் காண படாஅதி = அறிவே! உன்னை வாழ்த்துகின்றேன்; (பொறு)

விடாப் பிடியாகப் பிரிந்து சென்றவரைக் கண்ணினால் கண்டதும் துன்பப்படுதல் நீங்குவாய்.

பொ. ரை: என் அறிவே! உன்னை வாழ்த்திக் (கேட்டுக் கொள்ளுகிறேன் பொறுத்துக் கொள்) விடாப்பிடியாகப் பிரிந்து போயிருக்கிற என் காதலரைக் கண்ணிற் கண்ட உடன் உன் துன்பமெல்லாம் ஒழிந்து விடும்.

வி - ம்: இந்தக் குறளுக்கு ''மதியே என் நெஞ்சின் இடைவிடாதிருந்தே விட்டுப் போயினாரை யான் என் கண்ணளவானாயினும் எதிர்ப்படும் வகை நீ படா தொழிவாயாக'' என்ற பொருள் அர்த்தமில்லாதது. மேலும் ''கண்ணளவான் எதிர்ப்படுதலாவது மதி இருவரானும் நோக்கப்படுதலின் இருவர் கண்ணும் அதன் கண்ணே சேர்தல்.'' என்று விளக்கம் சொல்வது மேலும் குழப்பம். இது கற்பனைக்கும்கூடப் பொருந்தாது. அத்துடன் 'மதி' என்பதற்கு 'சந்திரன்' என்ற பொருள் கொண்டுவர இங்கு இடமேயில்லை....விடாது சென்றார் — விடாப்பிடியாகச் சென்றவர். அதாவது ''செல்லாமை யுண்டேல் எனக்குறை மற்றுநின் வல்வரவு வாழ்வார்க்குரை'' என்று நான் தடுத்ததைக் கேளாமல் தான் கொண்டதை விடாமல் சென்றவர். கண்ணினாற் காண — கண்ணிற் கண்டால் — கண்ட உடனே. படாஅதி — படமாட்டாய் — துன்பப்படமாட்டாய். மதி — அறிவு. ஆதலால் — அறிவே உன்னை வாழ்த்துகிறேன். நீ நல்லறிவாகி பொறுத்துக் கொள். பிடிவாதமாகச் சென்று பிரிந்து இத்துணைத் துன்பமும் உண்டாக்கிய காதலர் வருவார். அவரைக் கண்ட உடன் துன்பமெல்லாம் நீங்கிவிடும் — என்பது கருத்து.

அதி. 122—கனவுநிலை யுரைத்தல்

['கனவு நிலை உரைத்தல்' என்பது 'கனவின் தன்மையைச் சொல்லுதல்'. எப்போதும் காதலனையே நினைத்துப் புலம்பிக் கொண்டிருக்கும் காதலி உறங்கும்போது காதலனைக் கனவில் கண்டு அவருடன் சரசமாடி விழித்துக் கொள்ளுகிறாள்; அந்த நிலையில் காதலனைக் கனவிலாவது கண்டோமே என்று மகிழ்ந்து தனக்குத் தானே சொல்லிக் கொள்ளுவது.]

1211. காதலர் தூதொடு வந்த கனவினுக்
கியாதுசெய் வேன்கொல் விருந்து.

ப. ரை: காதலர் தூதொடு வந்த கனவினுக்கு யாது விருந்து செய்வேன். கொல் — காதலர் என்னிடம் தூதாக வரும்படி

எனக்கு உண்டான (நான் கண்ட) கனவிற்கு என்ன பெருமை செய்வேனோ !.

பொ. ரை: என் காதலரே என்னிடம் தூதாக வந்ததாக நான் கண்ட சொப்பனத்திற்கு நான் என்ன பரிசளித்துப் பெருமை செய்வேனோ — தெரியவில்லை.

வி-ம்: நெடுநாள் பிரிந்திருந்தும் தூதுவன் மூலமாகவாவது ஒரு சேதியனுப்பக்கூடாதா என்று ஏங்கினவளானதால் அவரைக்கனவிற் கண்டுவிட்ட காதலி அவரே தூதாக வந்துவிட்டதாகப் பாராட்டுகிறாள். விருந்து — பரிசளித்து பெருமைப் படுத்துவது; காதலரே என்னிடம் வந்ததாக நான் கண்ட கனவிற்கு என்ன சிறப்புச் செய்தாலும் போதாது — என்பது கருத்து.

ஐயோ ! அவரிடம் நான் சொல்ல எண்ணியிருந்ததையெல்லாம் சொல்லுவதற்குள் விழித்துக் கொண்டேனே ! :

**1212. கயலுண்கண் யானிரப்பத் துஞ்சிற் கலந்தார்க்
குயலுண்மை சாற்றுவேன் மன்.**

ப. ரை: கயல் உண்கண் யான் இரப்ப துஞ்சின் கலந்தார்க்கு உயல் உண்மை சாற்றுவேன் மன் — கெண்டை மீன்கள் போன்ற மையுண்ட என் கண்கள் நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுவதற்காக (மறுபடியும்) தூங்குமானால் (கனவில் வந்து) என்னைக் கலந்த என் காதலருக்கு நான்) உயிரோடிருக்கும் உண்மையைச் சொல்லிவிடுவேன்.

பொ. ரை: (நான் என் காதலரிடம் சொல்ல விரும்பியதைச் சொல்லுவதற்குள் விழித்துக் கொண்ட என்னுடைய) கெண்டைமீன் போன்ற மையுண்ட கண்களை நான் கெஞ்சிக் கேட்டுக் கொள்ளுகிறேன்; அவை மீண்டும் உறங்கினால் கனவில் என்னைப் புணர்ந்த என் காதலரிடம் (நான் ஏன் இன்னும்) உயிரை வைத்துக்கொண்டிருக்கிறேன் என்பதைப் பற்றிய உண்மையைச் சொல்லிவிடுவேன்.

வி-ம்: 'கயலுண் கண்' என்றது கனவில் வந்த காதலர் மறைந்து விட்டாரே என்று, கெண்டை மின் புரள்வதுபோல் மருண்டு புரண்டு விழிக்கின்ற கண்கள் — என்பதைச் சுட்டுவது. இரப்ப — இரந்து கேட்டுக் கொள்வதற்காக. துஞ்சில்— தூங்கினால். கலந்தார்க்கு — கனவில் புணர்ந்த காதலருக்கு. உயல் உண்மை — உயிரோடிருப்பதன் உண்மையான காரணத்தை. அக்காரணம் '' மற்றியான் என் உளேன் மன்னோ அவரொடு யான் உற்ற நாள் உள்ள உளேன்'' என்ற குறளில் சொல்லப்பட்ட காரணம். '' கலந்தார்க்கு....சாற்று

வேன்'' என்றது. காதலரைக் கனவிற் கண்ட காதலி தான் அவர் வந்தால் சொல்ல வேண்டுமென்று எண்ணியிருந்ததை யெல்லாம் மறந்துவிட்டு, உடனே அவரோடு புணர்ந்து இன்ப மனுபவிப்பதில் முனைந்து விட்டாள். அதனால் சொல்லாமல் விழித்துக் கொண்டாள் — என்பதைக் குறிப்பது. 'மன்' என்பது 'சொல்லிவிடுவேன்' என்று உறுதியைக் காட்டும் அசை. நான் எதற்காக என் உயிரை வைத்துக்கொண்டிருக் கிறேன் என்பதை, கனவில் வந்து என்னைப் புணர்ந்த என் கணவருக்குச் சொல்லுவதற்குள் விழித்துக் கொண்டேன். மறுபடியும் தூங்கும்படி கண்களைக் கேட்டுக் கொள்ளு கிறேன். அவை உறங்கினால் அவரை மீண்டும் கனவிற்கண்டு அதைச் சொல்லி விடுவேன் — என்பது கருத்து.

நான் எதற்காக என் உயிரைப் பிடித்துக் கொண்டு பொறுத்திருக்கிறேன் என்பதை கனவில் அவரிடம் சொல்லத் தவறினதால்தான் என்னகுறை? அவரைக்காண வேண்டு மென்பதற்காகத்தானே உயிரை வைத்துக் கொண்டிருக் கிறேன். அவரைத்தான் கனவிற் கண்டு விட்டேனே!

1213. நனவினு னல்கா தவரைக் கனவினாற்
காண்டலி னுண்டென் னுயிர்.

ப. ரை: நனவினால் நல்காதவரை கனவினால் காண்டலின் என் உயிர் உண்டு = நனவில் வந்து இன்பம் தராத அவரை கனவினாலாவது கண்டு விட்டதனால் இனி என் உயிர் இருக் கும்.

பொ. ரை: சாக்கிரத்தில் வந்து இன்பம் கொடுக்காத காதலரை சொப்பனத்திலாவது பார்த்து (கலந்து) விட்டதால் என் உயிர் இனி இருக்கும்.

வி-ம்: நல்காதவர் — கொடுக்காதவர். இங்கே 'இன்பம் கொடுக்காதவர்' என்று பொருள் தருவது. என் காதலர் நனவில் வந்து இன்பம் தராவிட்டாலும் கனவில் வந்து இன் பம் தந்து விட்டதனால் இனி என் உயிருக்குப் பயமில்லை என்பது கருத்து.

நனவில் வராத காதலரைக் கனவாவது வரச் செய்ததே அந்தமட்டில்:

1214. கனவினு னுண்டாகுங் காம நனவினு
னல்காரை நாடித் தரற்கு.

ப. ரை: நனவினன் நல்காரை நாடி தரற்கு கனவினன் காமம் உண்டாகும் = நனவில் வந்து இன்பம் தராதவரைத் தேடி

என்னிடம் கொண்டுவந்து தருவதனால் கனவினாலும் காம இன்பம் உண்டாகிறது.

பொ. ரை: நனவில் வந்து எனக்கு இன்பம் தராத காதலரைத் தேடிப்பிடித்து என்னிடம் கொண்டுவந்து விடுவதனால் கனவினாலும் காம இன்பம் கிடைக்கிறது.

வி-ம்: நாடித் தரற்கு – தேடிக் கொண்டுவந்து கொடுப்பதனால். என் காதலர் போயிருக்கிற இடம் எனக்குத் தெரியாது. அவர் இருப்பிடத்தைப் பற்றி அவர் ஒரு சேதியும் அனுப்புவதில்லை. அதனால் என்னால் அவரிருக்குமிடத்தைத் தேடியறியவும் முடியாது. இந்தக் கனவு அவரைத் தேடிப்பிடித்து என்னிடம் கொண்டுவந்து விட்டது – என்பதாம். அதனால் – நனவில் வந்து எனக்கு இன்பம் தரமுடியாமல் எங்கோ இருக்கிற என் காதலரைத் தேடிப் பிடித்து என்னிடம் கொண்டு வந்து சேர்ப்பதனால் கனவினாலும் காம இன்பம் கிடைக்கிறது – என்பது கருத்து.

கனவில் அனுபவிக்கும் இன்பம் கனவுகாணும் அப்போதைக்கு மட்டுந்தானே என்றாலும்:

1215. நனவினாற் கண்டதூஉ மாங்கே கனவுந்தான்
கண்ட பொழுதே யினிது.

ப. ரை: கனவும் தான் கண்ட பொழுதே இனிது; நனவினாற் கண்டதூஉம் ஆங்கே = கனவும் தான் கனக்காணும்போது மட்டும்தான் இன்பமளிக்கிறது; நனவில் அனுபவிக்கும் இன்பமும் அப்படிப்பட்டதே.

பொ. ரை: கனவில் அனுபவித்த கலவியின்பம் கனக்கண்ட அப்போது மட்டும்தான்; (என்றால்) நனவில் அனுபவிக்கிற கலவியின்பமும் கலவி செய்கின்ற அப்போது மட்டும் தானே ?

வி-ம்: கனவில் என் காதலரைப் புணர்ந்த இன்பமும் நான் அவரை நனவில் புணர்ந்த இன்பத்தைப் போலவேதான் இருந்தது – என்பது கருத்து.

நெடுநாளாகப் பிரிந்திருக்கிற என் காதலரைக் கனவிற் கண்டு அவருடன் கலந்து மகிழ்ந்து பிரிவாற்றாமை இல்லாமலிருந்தேன். இந்த விழிப்பு வந்தல்லவா கெடுத்துவிட்டது:

1216. நனவென வொன்றில்லை யாயிற் கனவினாற்
காதலர் நீங்கலர் மன்.

ப. ரை: நனவு என ஒன்று இல்லையாயின் கனவினால் காதலர் நீங்கலர்மன் = நனவு என்ற ஒன்று இல்லாதிருந்தால் கன

வினால் (என்னிடம் வந்த) காதலர் பிரிந்திருக்கவே மாட்டார்.

பொ. ரை: சாக்கிரம் என்ற ஒன்று இல்லாதிருந்தால் சொப்பனத்தால் என்னிடம் கொண்டு வரப்பட்ட என் காதலர் என்னை விட்டுப் போயிருக்கவே மாட்டார்.

வி-ம்: கனவினாற் காதலர் — கனவினால் கொண்டுவரப்பட்ட காதலர். விழிப்பு என்ற இந்த இடையூறு வராதிருந்திருக்குமானால் கனவில் வந்து என்னைக் கலந்த காதலர் என்னை விட்டுப் போயிருக்க மாட்டார் — என்பது கருத்து.

என் காதலர் என்னைப் பிரிந்திருப்பதால் எனக்குத் தூக்கமே வருவதில்லை. பெரும்பாலும் இரவுகளில் விழித்துக் கொண்டே அவரை நினைத்து நினைத்து உயிர் தேய்ந்து கொண்டிருக்கிறேன். அப்படி விழித்துக் கொண்டு நான் நனவாக இருக்கும்போது வருவதில்லை. தப்பித் தவறி சிறிது கண்ணுறங்கினால் அப்போது கனவில் மட்டும் வந்து விட்டு உடனே போய்விடுகிறார். நான் வருந்திக் கொண்டிருக்கிற நனவில் வராத இவர், நான் பிரிவாற்றாமைத் துன்பங்களை நீக்கிச் சற்றே களைப்பாறித் தூங்கும்பொழுது மட்டும் வந்து தூக்கத்தையும் கெடுத்து விட்டுத் துன்பத்தையும் கிளப்பி விட்டுப் போய்விடுகிறாரே, என்ன கொடுமை !:

1217. நனவினா னல்காக் கொடியார் கனவினா
னென்னெம்மைப் பீழிப் பது.

ப. ரை: நனவினால் நல்கா கொடியார் கனவினால் எம்மை பீழிப்பது என் = நான் நனவாக இருக்கும்போது வந்து இன்பம் தராத கொடியவர் கனவினால் மட்டும் வந்து என்னைத் துன்பப்படுத்துவது எதற்காக ?

பொ. ரை: நான் (விழிப்பாக இருக்கும்) நனவில் வந்து எனக்கின்பம் தராத இந்த கொடுமைக்காரர் (நான் உறங்கும்போது மட்டும்) கனவில் வந்து (உடனே மறைந்து) இப்படி என்னை வருத்தப்படுத்துவது ஏன் ?

வி-ம்: 'கொடியார்' என்பது கற்புடைய மகளிர் தம் கணவரைக் கடிந்து கொள்ளும்போது 'கொடியார்', 'அன்பிலார்' என்ற இரண்டு சொற்களைத்தாம் பிரயோகிப்பார்கள் என்ற தமிழ் வழக்கை நினைப்பூட்டுவது. என்னைப் பிரிந்திருந்து இப்படித் தவிக்கச் செய்கிற என் காதலர் கனவில் மட்டும் வந்து வந்து மறைந்து வருத்தப்படுத்துவது ஏன் ? — என்பது கருத்து.

கனவில் வரும் அவர் என்னை எப்படித் துன்பப்படுத்துகிறார் என்றால் :

1218. துஞ்சுங்காற் றோண்மேல ராகி விழிக்குங்கா
னெஞ்சத்த ராவர் விரைந்து.

ப. ரை : துஞ்சுங்கால் தோள் மேலர் ஆகி விழிக்குங்கால்
விரைந்து நெஞ்சத்தர் ஆவர் = தூங்கும்போது என் தோள்
மீது படுத்திருக்கிறவராக இருந்து விழிக்கும்போது உடனே
என் நெஞ்சுக்குள் புகுந்து கொள்ளுகிறார்.

பொ. ரை : நான் தூங்கும்போது என் மீது தழுவிக் கொண்
டிருக்கிறார்; நான் விழித்த உடனே என் மனதுக்குள் புகுந்து
விடுகிறார்.

வி - ம் : தோள் மேலராகி – என் உடலைத் தழுவினவராகி.
காமப் பகுதியில் 'தோள்' என்பது தழுவி அணைப்பதையே
குறிக்கும். நான் தூங்கும்போது கனவில் வந்து புணரும்
காதலர் நான் விழித்த உடனே என் மனக் கவலையை அதிகப்
படுத்துகிறார் - என்பது கருத்து.

இருந்தாலும் என் காதலர் கனவில் வந்தாவது இன்பம் தரு
கிறாரே. அதற்கு நான் அவரை வாழ்த்த வேண்டியது தான்.
கனவிற் கூடக் காதலரைக் காணாத பெண்களும் இருப்பார்
களே. அவர்கள் தாம் :

1219. நனவினா னல்காரை நோவர் கனவினாற்
காதலர்க் காணா தவர்.

ப. ரை : கனவினால் காதலர்க் காணாதவர் நனவினால் நல்காரை
நோவர் = கனவில் தம் காதலரைக் காணாதவர்களே நனவில்
(தம் காதலர்) வந்து இன்பம் தரவில்லையென்று நொந்து
கொள்ளுவார்கள்.

பொ. ரை : கனவில் தம் காதலரைக் கண்டு அவருடன் கலந்து
மகிழாதவர்கள்தாமே நனவில் காதலர் வந்து இன்பம்
கொடுக்கவில்லையென்று நொந்து கொள்ளுவார்கள். (நான்
எதற்கு என் காதலரை நொந்து கொள்ள வேண்டும்)

வி - ம் : நல்கார் – இன்பம் தராதவர். நோவர் – நிந்திப்பர்.
காதலர்க் காணாதவர் – காதலரைக் காணாதவர். பிரிந்து
போயிருக்கிற காதலரைக் கனவிலும் கூடக் கண்டு இன்ப
மனுபவிக்காதவர்கள் தாமே காதலரை நிந்திக்க வேண்டும்?
நான் தான் அவரை கனவிற் கண்டு கனவிற் கலந்து
போலவே இன்ப மனுபவித்தேனே. நான் ஏன் அவரை நிந்
திக்க வேண்டும்? – என்பது கருத்து.

என் காதலரைக் கனவில் அடிக்கடி கண்டு இப்படி இன்பம் அனுபவிக்கிற நான் அவரைப் பிரிந்திருப்பதாகவே எண்ணக் கூடாது. ஆனால் ஊரார் அவர் என்னைப் பிரிந்துபோய் விட்டதாக நிந்திக்கிறார்களே!:

1220. நனவினா னல்கீத்தா ரென்பர் கனவினாற்
காணார்கொ லிவ்வூ ரவர்.

ப. ரை: நனவினால் நம் நீத்தார் என்பர் இவ்வூரவர் கனவினால் காணார் கொல் = நனவில் (இருந்து கொண்டு) என்னை என் காதலர் துறந்து விட்டார் என்று சொல்லுகிற இந்த ஊரார் (நானும் என் காதலரும் கனவிற் சந்தித்ததை) தாமும் கனவிற் காணவில்லை போலிருக்கிறது.

பொ. ரை: என் காதலர் என்னை விட்டுப் பிரிந்திருக்கிறார் என்று நனவிலிருந்து கொண்டு (என்னை ஏளனம்) பேசுகின்ற இந்த ஊரார் (நானும் என் காதலரும் கனவில் சந்தித்து இன்பமடைந்ததை) அவர்களும் கனவிற் காணவில்லை போலும் (கனவு கண்டிருந்தால் இப்படி ஏளனம் செய்ய மாட்டார்கள்).

வி-ம்: காதலியின் காமப்பித்து தான் காதலரைக் கனவிற் கண்டு மகிழ்ந்ததை ஊராரெல்லாரும் (அவர்களும்) கனவிற் கண்டு அறிய வேண்டுமென்று விரும்புகிறது. என் காதலர் என்னைப் பிரிந்திருப்பதைப் பரிகாசம் பண்ணுகிற ஊரார் நானும் அவரும் கனவில் கலந்து மகிழ்ந்ததை அவர்களும் (ஊராரும்) கனவிற் கண்டால் இப்படி என்னைப் பரிகசிக்க மாட்டார்கள் — என்பது கருத்து.

அதி. 123—பொழுதுகண்டிரங்கல்

['பொழுது கண்டிரங்கல்' என்பது பொழுதைக் கண்டு வருத்தப்படுதல். 'பொழுது' என்பது காலை, நடுப்பகல், மாலை என்ற மூன்றுக்கும் பொது வென்றாலும் இங்கே அதிகாரப் பொருளை ஒட்டி, காமப் பொழுதாகிய மாலைப் பொழுதைக் குறிக்கும். தனித்திருக்கும் காதலி மாலைப் பொழுது வந்ததும் காதலனை நினைத்து வருந்துவது 'பொழுது கண்டிரங்கல்']

1221. மாலையோ வல்லை மணந்தா ருயிருண்ணும்
வேலைநீ வாழி பொழுது.

ப. ரை: பொழுது! நீ மாலையோ அல்லை; மணந்தார் உயிர் உண்ணும் வேலை; வாழி = (மாலைப்) பொழுதே! நீ மாலைப்

பொழுதல்ல; காதலர்கள் உயிரைத் தின்றுவிடுகிற மாலை வேளை; வாழ்க.

பொ. ரை: மாலைப் பொழுதே! உன்னை மாலைவேளை என்று சொல்வது சரியல்ல; (கூடிப் பிரிந்த) காதலர்களின் உயிர் போகின்ற மரண காலம் (என்று சொல்வதுதான் பொருந்தும்); வாழ்க.

வி - ம்: மணந்தார் – வேட்டார் – காமங் கொண்டவர். வேலை – வேளை – காலம். உயிருண்ணும் வேலை - எமன் உயிரைக் கொண்டுபோகும் காலம். உயிர் போகும் காலத்தில் உடல் மரண வேதனை அடைகின்றது. அதுபோல் மாலைக் காலமும் காம வேதனையுண்டாக்கித் துன்புறுத்துவதால் மாலை மரண காலத்திற்கு ஒப்பாக்கப்பட்டது. 'வாழி' என்பது நிந்தனை யாக வாழ்த்துவது. மாலைப் பொழுதே உன்னை, மணந்து பிரிந்து வருந்துகின்ற காதலர்களின் மரணவேதனை என்று தான் சொல்ல வேண்டும். என்னை இவ்வளவு துன்பப்படுத்து கிற நீ சுகமாயிருப்பாய் போ – என்பது கருத்து.

மாலைப் பொழுதே! என்ன? மணந்தாரை வருத்தும் நீ கூட வாடி வருந்தி அழுது வழிகிறாயே! ஏன்?;

1222. புன்கண்ணை வாழி மருண்மாலை யெங்கேள்போல்
வன்கண்ண தோநின் றுணை.

ப- ரை: மருள் மாலை! புன் கண்ண! எம் கேள் போல் நின் துணை வன்கண்ணதோ? வாழி = மருண்டிருக்கிற மாலைப் பொழுதே! கண்கலங்குகிறாயே! (ஏன்?) என் காதலரைப் போல் உன் காதலரும் வன்னெஞ்சரோ? உனக்கு நலமுண் டாகட்டும்.

பொ. ரை: மருண்டு வருகின்ற மாலைப் பொழுதே! கண் கலங்கியிருக்கிறாயே (ஏன்?) என்காதலரைப் போலவே உன் காதலரும் (உன்னைப் பிரிந்து வராமலிருக்கிற) கல் நெஞ்சரா? (அப்படியானால்) உனக்கு இத்துன்பம் நீங்கி நல முண்டாக வாழ்த்துகிறேன்.

வி - ம்: காதலரைப் பிரிந்தவர்கள் எல்லாரும் மாலை நேரத்தில் காமத்துன்பம் அனுபவிப்பவர்களானதால், மாலைப்பொழுதே காமத் துன்பத்தில் வருந்துவதாகக் கற்பனை செய்யப்பட் டிருக்கிறது. புன்கண் - கலக்கம் – வருத்தம். வன்கண்ணர் – கடின சித்தமுடையவர். கேள் – நண்பர். இங்கே காதலரைக் குறிப்பது. மருண்டிருக்கிற மாலைப் பொழுதே! உன்னைப் பார்த்தால் நீ துன்பப்படுவதாகத் தோன்றுகிறதே. ஏன்? என் காதலரைப்போல் உன் காதலரும் உன்னைப் பிரிந்து

வராமல் இருக்கிறாரா? அப்படியானால் அனுதாபத்துடன் உன்னை வாழ்த்துகிறேன் – என்பது கருத்து.

இந்த மாலைப் பொழுது, தான் அழுது துன்பப்படுகிறது போல் தோற்றினாலும் இதைக் கண்டு என் துன்பம் அதிகரிக்கிறதே :

**1223. பனியரும்பிப் பைதல்கொண் மாலை துனியரும்பித்
துன்பம் வளர வரும்.**

ப. ரை : பனி அரும்பி பைதல் கொள் மாலை துனி அரும்பி துன்பம் வளர வரும் = கண்ணீர் அரும்பத் துன்பப்பட்டுக் கொண்டு என் முன் வரும் மாலைப்பொழுது (எனக்கு) அச்சமுண்டாகித் துன்பம் அதிகரிக்கத்தான் வருகிறது.

பொ. ரை : கண்ணீர் விட்டுத் துன்பப்படுவதாகத் தோன்றுகிற இந்த மாலைப்பொழுது எனக்கு அச்சமுண்டாகித் துன்பம் அதிகரிக்கத்தான் வருகிறது.

வி - ம் : பனி – கண்ணீர். பைதல் – துன்பம். துனி – அச்சம். இந்த மாலைப் பொழுது கண்ணீர் வடித்துத் துன்பப்படுகிறது போலத் தோன்றினாலும் எனக்கு இதனால் அச்சமும் துன்பமுந்தான் அதிகரிக்கிறது - என்பது கருத்து.

அதற்குக் காரணம் என் காதலர் என்னுடன் இல்லாதது தான் :

**1224. காதல ரில்வழி மாலை கொலைக்களத்
தேதிலர் போல வரும்.**

ப. ரை : காதலர் இல்வழி மாலை கொலைக்களத்து ஏதிலர்போல வரும் = காதலர் இங்கில்லாததால் மாலைப்பொழுது போர்க்களத்தில் பகைவர்களைப் போல் (என் மீது) வருகின்றது.

பொ. ரை : காதலர் என்னுடன் இல்லாத காரணத்தால் யுத்த களத்தில் பகைவர்கள் சீறி வருவது போல் (என் மீது சீறி) வருகின்றது.

வி - ம் : இல்வழி – இல்லாத காரணத்தால். கொலைக்களம் - போர்க்களம். ஏதிலர் - பகைவர். என் காதலர் இப்போது இங்கில்லாமல் - காம வேதனையால் - இந்த மாலைப் பொழுதைக் கண்டு நான் போர்க்களத்தில் துணைவரில்லாதவர்கள் பகைவனுக்கு அஞ்சுவது போல் அஞ்சுகிறேன் - என்பது கருத்து.

காலை நேரங்கள் இப்படி என்னை வதைப்பதில்லையே; காலைப் பொழுதும் காதலர் இல்லாமற்றானே கழிகிறது?:

1225. காலைக்குச் செய்தநன் றென்கொ லெவன்கொல்யான்
மாலைக்குச் செய்த பகை.

ப. ரை: யான் காலைக்கு செய்த நன்று என் கொல்? மாலைக்கு செய்த பகை எவன் கொல்? = நான் காலை நேரத்திற்குச் செய்த நன்மையென்னவோ? மாலை நேரத்திற்குச் செய்த பகைமை என்னவோ?

பொ. ரை: நான் காலைப் பொழுதுக்குச் செய்த உபகாரம் என்னவோ? மாலைப் பொழுதுக்குச் செய்த அபகாரமென் னவோ? (அறியேன்)

வி-ம்: 'என்', 'எவன்' என்ற இரண்டும் 'என்ன?' என்ற ஒரே வினைப் பொருளைத் தருவன. 'கொல்' என்பது ஐயப் பொருள் தரும் அசை. காலை நேரங்களில் எனக்கு இவ்வளவு பிரிவாற்றுமைத் துன்பமிருப்பதில்லை. மாலை நேரங்கள்தாம் என்னை இப்படித் துன்பப்படுத்துகின்றன. காலைப் பொழு துக்கு என்ன நன்மை செய்தேனே. மாலைப் பொழுதுக்கு என்ன தீமை செய்தேனே தெரியவில்லை – என்பது கருத்து.

இந்த மாலைப் பொழுதுங் கூட:

1226. மாலைநோய் செய்தன் மணந்தா ரகலாத
காலை யறிந்த திலன்.

ப. ரை: மாலை மணந்தார் அகலாத காலை நோய் செய்தல் அறிந்தது இலன் = மாலைப் பொழுதும் என்னை மணந்த கண வர் என்னை விட்டுப் பிரியாமல் இருந்தபோது துன்பம் செய் ததை நான் அறிந்ததே யில்லை.

பொ. ரை: (இப்போது என்னை இப்படி வதைக்கின்ற) மாலைப் பொழுதும் கூட என் கணவர் என்னை விட்டுப் பிரியாமல் (என்னுடன்) இருக்கிற காலங்களில் எனக்குத் துன்பம் செய் ததை அறிந்ததேயில்லை.

வி-ம்: மணந்தார்-கணவர். அறிந்தது இலன்–நான் அறிந்ததே யில்லை. இப்போது என்னை இப்படி வருத்துகின்ற மாலைப் பொழுது என் கணவர் என்னுடன் இருக்கும் போது வருத்து வதேயில்லையே – என்பது கருத்து.

ஓ!. இப்பொழுது தெரிகிறது. காலை நேரம் செய்யாத துன் பங்களை இந்த மாலை நேரம் மட்டும் ஏன் செய்கிறது என்பது இப்போது விளங்குகிறது:

1227. காலை யரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலருமிந் நோய்.

ப. ரை : இந்நோய் காலை அரும்பி பகலெல்லாம் போது ஆகி மாலை மலரும் = இந்தக் காம நோய் காலையில் அரும்பு விட்டுப் பகல் முழுவதும் (வளர்ந்து) மொட்டாகி, மாலையில் தான் மலர்வது.

பொ. ரை : இந்தக் காமநோய் என்னும் பூ காலை நேரத்தில் முளைவிட்டுப் பகல் முழுதும் (சிறுகச் சிறுக) வளர்ந்து முகை மொட்டாகி. மாலை நேரத்தில் தான் மலராக விரிவது.

வி-ம் : அரும்புதல் — முளைக்கத் தொடங்குதல். போது — மலரத்தக்க மொட்டு. காமநோயானது காலை நேரத்தில் கண்ணுக்குத் தெரியாத மலரரும்புபோல உணர முடியாததாக இருக்கும். பின் பகல் முழுதும் வளர்ந்து மொட்டாகிற மலரைப் போல சிறுகச் சிறுக அதிகரித்து உணர்ச்சியூட்டும். கடைசியாக, மாலையில் விரிகின்ற மலரைப் போலத் தன் முழு வேகத்தையும் விரித்துத் துன்பப்படுத்தும். மாலையில் ஆரம்பமாகும் துன்பம் விடிகிற வரைக்கும் வேதனை செய்து விடியற் காலத்தில் அயர்ந்து மறைந்து விடும். விடிந்தபின் மீண்டும் அரும்பி வளரும். அப்படிப்பட்ட இயல்புடையது காமம். அதனல் — காமநோய் என்பது காலையில் அரும்பு விட்டுப் பகலெல்லாம் மொட்டாகி மாலையில் விரிகின்ற மலருக்குச் சமானமானது. அதனல்தான் மாலைப் பொழுது வேதனை மிகுந்ததாக இருக்கிறது — என்பது கருத்து.

அதனல் காலையிலிருந்து பகல் முழுதும் நிம்மதியாக இருக்கிற என் மனம் மாலைப் பொழுது வருகிறது என்று தெரிந்த உடன் வேதனையடைகின்றது. அதனல் மாலைப்பொழுது வந்துவிட்டது என்பதை நினைப்பூட்டுகிற :

1228. அழல்போலு மாலைக்குத் தூதாகி யாயன்
குழல்போலுங் கொல்லும் படை.

ப. ரை : அழல் போலும் மாலைக்கு தூதாகி ஆயன் குழல் கொல்லும் படை போலும் = நெருப்பைப்போல (என்னைச் சுடுகின்ற) மாலைப் பொழுதிற்கு முன்னேடியாக வருகின்ற இடையன் குழலோசை என்னைக் கொல்லவரும் கொலைக் கருவி போல் இருக்கிறது.

பொ. ரை : நெருப்பைப் போல் என் உடலைக் கொதிக்கச் செய்கிற இந்த மாலைப் பொழுது வருகிறது என்ற சேதியை அறி

விக்கிற இடையனுடைய புல்லாங்குழலின் ஓசை என்னைக் கொல்ல வரும் ஆயுதம் போல் இருக்கின்றது.

வி-ம்: அழல் போலும் மாலை — காம வேதனையை அதிகப் படுத்துவதால் உடலைக் கொதிக்கச் செய்து மனதையும் சுடுகின்ற மாலைப் பொழுது. தூது — பின்னால் வரப்போகிற ஒன்றை முன்னால் வந்து அறிவிப்பவன். ஆயன் குழல் — இடையனுடைய புல்லாங்குழல். காலை முதல் பகல் முழுதும் இடையன் தன் ஆடுமாடுகளைக் காடுகளில் பல இடங்களிற் போய் மேய விடுகிறான். மாலைப் பொழுதில் அவைகளை யெல்லாம் பட்டிக்கு ஓட்டுவதற்காக ஒன்று சேர்க்கத், தன் புல்லாங்குழலை ஊதுவான். அந்த ஓசையைக் கேட்டு ஆடு மாடுகளெல்லாம் அவனிருக்குமிடத்திற்கு வரும். குழலோசை ஆடுமாடுகளையும் கூடப் பரவசப்படுத்தும் இனிய ஓசை. அந்த ஓசையும் கூட இப்போது அது மாலைப்பொழுது வந்துவிட்டதைச் சொல்ல வருவதால் கொல்லவரும் கருவியைப் போல் இருக்கிறதாம். நெருப்பைப்போல் என்னைச் சுடுகின்ற மாலைப் பொழுது வருகிறதென்பதை அறிவிக்கின்ற இடையனுடைய குழலோசை என்னைக் கொல்லவரும் கருவியைப் போல் இருக்கிறது — என்பது கருத்து.

அதனால் மாலைப் பொழுது வருகிறது என்றால்:

1229. பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
மாலை படர்தரும் போழ்து.

ப. ரை: மாலை படர்தரும் போழ்து மதிமருண்டு பதிமருண்டு பைதல் உழக்கும் = மாலை நேரத்தை நினைக்கும்போதே என் அறிவு கலங்கி இடம் தடுமாறும்படி துன்ப முண்டாகிறது.

பொ. ரை: மாலைப் பொழுதை நினைக்கும் போதும்கூட என் அறிவு கலங்கி இடம் தடுமாறும்படித் துன்ப முண்டாகிறது.

வி-ம்: படர்தல் - நினைத்தல். படர்தரும் போழ்து — நினைக்கும்போது. மதிமருண்டு — அறிவு மயங்கி. பதி மருண்டு — இடம் தடுமாறி. பைதல் — துன்பம். உழக்கும் — அனுபவிக்கும். இது, ஆயன் குழலோசை கேட்டு மாலைப் பொழுது வருகிறது என்று அறிந்த காதலி சொல்லுவது — மாலைப்பொழுது வருகிறது என்பதை நினைக்கும் போதே என் அறிவு கலங்கி இடம் தடுமாறும்படித் தலை சுற்றுகிற துன்பம் உண்டாகிறது — என்பது கருத்து.

பொருள் தேட வெளியூர் சென்றிருக்கிற என் காதலர் திரும்பி வந்து விடுவார், அவரைக் கண்டு களிக்கலாம் என்ற ஆசையினால் நான் பல துன்பங்களையும் பொறுத்துக்

கொண்டு உயிரை வைத்திருக்கிறேன். அப்படிப்பட்ட உயிரை :

1230. **பொருண்மாலை யாளரை யுள்ளி மருண்மாலை**
மாயுமென் மாயா வுயிர்.

ப. ரை: பொருள் மாலையாளரை உள்ளி மாயா என் உயிர் மருள் மாலை மாயும் = பொருள் தேடும் முறையில் (சென்றுள்ள) காதலரை நினைத்து மாயாமல் இருக்கிற என் உயிர் மருளச் செய்கின்ற மாலைப் பொழுதில் மாய்ந்து விடும்போல் இருக்கிறது.

பொ. ரை: பொருள் சம்பாதிக்கும் முறையில் என்னைப்பிரிந்து போயிருக்கிற காதலரை நினைத்து (அவர் வந்து விடுவார் காணலாம் என்ற ஆசையால்) மாயாமல் இருந்து கொண்டிருக்கிற என் உயிர் என்னை மருட்டுகின்ற இந்த மாலைப் பொழுதினுல் மாய்ந்து விடுமோ (என்று அஞ்சுகிறேன்.)

வி-ம்: மாலை - முறை - இயல்பு. பொருண் மாலை – பொருள் முறை. பொருண் மாலையாளர் - பொருள் சம்பாதிக்கும் முறையை மேற் கொண்டவர். உள்ளி - நினைத்து. பொருள் தேடச் சென்றிருக்கிற காதலரை நினைத்துக் கொண்டு போகாமல் இருக்கிற என் உயிர் இந்த மாலைப் பொழுது எனக்குண்டாக்கும் வேதனையால் போய்விடுமோ என்று அஞ்சுகிறேன் - என்பது கருத்து.

அதி. 124.—உறுப்பு நலனழிதல்

['உறுப்பு நலனழிதல்' என்பது 'உறுப்புகளின் அழகு கெடுவது; காதலன் பிரிவை ஆற்ருத காதலிக்கு ஊண் உறக்கக் குறைவாலும் அலங்கரித்துக் கொள்ளுதல் இல்லாமையாலும் அவளுடைய அங்கங்களின் வளமும் அழகும் குறைகின்றன. அதைத், தானே அறிந்து காதலி வருந்துகிருள். பொருள் தேடும் முறையில் தூரதேசம் போயிருக்கிற காதலனும் சிறிது அவளை நினைத்து வருந்துகிருன் பெரும்பாலும் காதலியின் பேச்சும் சிறிது காதலன் பேச்சுமாகச் சொல்லப்படுவது.]

1231. **சிறுமை நமக்கொழியச் சேட்சென்ருருள்ளி**
நறுமலர் நாணின கண்.

ப. ரை: சிறுமை நமக்கொழிய சேண் சென்ருர் உள்ளி கண் நறுமலர் நாணின = துன்பத்தை எனக்கு விட்டு தூரதேசம்

போனவரை (காதலரை) நினைத்துக் கலங்கி என் கண்கள் மணமுள்ள மலருக்குத் தோற்றுப் போயின.

பொ. ரை: துன்ப மெல்லாம் எனக்கு விட்டு விட்டுத் (தாம் துன்பமின்றி) தூரதேசம் போயிருக்கிற என் காதலரை நினைத்து (நினைத்துக் கலங்கி) என் கண்கள் (இப்போது) வாசனையுள்ள மலர்களுக்குத் தோற்றுப் போயின.

வி-ம்: சிறுமை – துன்பம். நமக்கொழிய – எனக்கே விட்டு. சேண் – தூரம். உள்ளி – நினைத்து. நாணின – தோற்றன. ''காணிற் குவளைக் கவிழ்ந்து நிலன் நோக்கும் மாணிழை கண் ஒவ்வேமென்று'' என்றபடி முன்னெல்லாம் என் கண்களைப் பார்த்தால் மலர்கள் வெட்கப்படும் என்று சொல்லும்படி அவ்வளவு அழகாக இருந்தன என் கண்கள். துன்ப மெல்லாம் எனக்கே விட்டு விட்டுத் தூரதேசம் போயிருக்கும் என் காதலரை நினைத்துக் கலங்கிக் கலங்கி அழகிழந்து என்னுடைய கண்கள், முன் இவைகளைக் கண்டு வெட்கப்படும் மலரைக் கண்டு இப்போது இவைகள் வெட்கப்பட வேண்டிய நிலைமையை அடைந்து விட்டன – என்பது கருத்து.

என் கண்கள் மலர்களுக்குத் தோற்றுப் போகும்படி அழகிழந்து போனது மட்டுமன்றி என் துன்பங்களை எல்லாருக்கும் வலியச் சொல்லுவனபோல:

1232. நயந்தவர் நல்காமை சொல்லுவ போலும்
பசந்து பனிவாருங் கண்.

ப. ரை: பசந்து பனிவாரும் கண் நயந்தவர் நல்காமை சொல்லுவபோலும் = பசலை நிறம் படர்ந்து கண்ணீர் ஒழுகிக் கொண்டிருக்கும் என் கண்கள் நான் ஆசை கொண்டவர் (இன்னும்) வரவில்லையென்பதைப் பிறருக்குச் சொல்லுவன போல அழுது கொண்டிருக்கின்றன.

பொ. ரை: பசந்து கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிற என் கண்கள் என் காதலர் இன்னும் வரவில்லை யென்பதை (நான் சொல்லாமலும்) தாமே பிறருக்கு அறிவிப்பனவாக இருக்கின்றன.

வி-ம்: நயந்தவர் – நான் நயந்தவர் - நான் ஆசை கொண்டவர். நல்காமை – உதவாமை. இங்கே 'வராமை' என்ற பொருள் தருவது. பசந்து – பசலை நிறம் என்பது வெளுத்த பச்சை நிறம். அது உடலின் இரத்தக் குறைவுக்கும் சுகக் குறைவுக்கும் அடையாளம். பனி – கண்ணீர். வாரும் – ஊற்றுகிற. வார்தல் - கொட்டுதல் - ஊற்றுதல். என் காதலர் இன்னும் வரவில்லை யென்பதைப் பிறருக்குச் சொல்லுவன

போன்று என் கண்கள் பசந்து கண்ணீர் வடித்துக் கொண்டே இருக்கின்றன – என்பது கருத்து.

என் காதலர் இன்னும் வரவில்லை யென்பதை என் கண்கள் விளம்பரப்படுத்துகின்றன; என் உடலோவென்ருல் :

1233. தணந்தமை சால வறிவிப்ப போலு
மணந்தநாள் வீங்கிய தோள்.

ப. ரை : மணந்த நாள் விங்கிய தோள் தணந்தமை சால அறிவிப்பபோலும் = (நாங்கள்) மணந்து கொண்ட காலத்தில் பூரிப்பால் பருத்த என் தோள்கள் (இப்போது) நாங்கள் பிரிந்திருக்கும் நிலைமையைப் பற்றி முழுதும் பிறருக்கு அறிவிப்பனபோல் (மெலிந்து விட்டன)

பொ. ரை : நானும் என் காதலரும் கல்யாணம் செய்து கொண்ட காலத்தில் (பூரிப்பினுல் இயல்பாக உள்ளதற்கு மேல்) பருத்த என் மேனி. (இப்போது) என் காதலர் என்னை விட்டுப் பிரிந்திருக்கிறதைப் பற்றிய நிலைமையை முற்றிலும் விவரமாகப் பிறருக்கு விளக்கிச் சொல்வதுபோல் (பூரிப்புப் பருமன் மட்டுமன்றி இயல்பான பருமனிலும்) மிகவும் மெலிந்துவிட்டது.

வி - ம் : 'தணந்தமை' - என்பது வெறும் 'பிரிந்தமை' என்பதைமட்டும் கருதியதல்ல. பின் என்ன வென்ருல் பிரிந்திருப்பதைப் பற்றிய நிலைமை முழுதும் - என்பதாம். 'தணந்தமை சால அறிவிப்பது' என்பது காதலர் எவ்வளவு காலமாகப் பிரிந்திருக்கிருர் என்பதையும், அதனுல் நான் எவ்வளவு துன்பமடைந்து ஊணுறக்கம் இல்லாமல் இருந்து வருகிறேன் என்பதையும், முற்றிலும் தெளிவாகத் தெரிவிப்பது. 'மணந்த நாள் வீங்கிய தோள்' - மணந்தபோது பூரிப்பால் உள்ளதைவிடப் பருத்தது, இப்போது உள்ளதைவிட மிகவும் மெலிந்து விட்டது என்பதைக் குறிப்பது. 'தோள்' என்பது வெறும் 'தோள்கள்' மட்டுமல்ல. உடல் முழுவதையும் குறிக்கும். நாங்கள் கல்யாணம் செய்து கொண்ட காலத்தில் பூரிப்பால் பருத்த என் மேனி, இப்போது இவ்வளவு இளைத்திருக்கிற நிலைமையே என் காதலர் எவ்வளவு காலமாகப் பிரிந்திருக்கிருர் என்பதையும் அதனுல் நான் எவ்வளவு துன்பமனுபவித்திருக்கிறேன் என்பதையும் எல்லாருக்கும் விவரமாகத் தெரியப்படுத்தும் - என்பது கருத்து.

என் உடல் மிகவும் மெலிந்து விட்டதனுல் :

1234. பணைநீங்கிப் பைந்தொடி சோரும் துணைநீங்கித்
தொல்கவின் வாடிய தோள்.

ப. ரை: துணை நீங்கி, பணை நீங்கி, தொல்கவின் வாடிய தோள் பைந்தொடி சோரும் = துணைவரைப் பிரிந்து, பழைய அழகை யும் மினுமினுப்புத் தன்மையையும் இழந்து மெலிந்துபோன என் கைகளில் பசும் பொன் வளையல்கள் தளர்ந்து போயின.

பொ. ரை: காதலரைப் பிரிந்ததால் முன்னிருந்த அழகையும் மினுமினுப்பு வழு வழுப்பையும் இழந்து மெலிந்துவிட்ட என் கைகளிலுள்ள பசும் பொன் வளையல்கள் நழுவுகின்றன.

வி-ம்: துணை - துணைவர். தொல் – பழைய – முன்னிருந்த. கவின் - அழகு. பணை – மூங்கில். 'பணை நீங்கி' – மூங்கி லின் தன்மை போன்ற மினுமினுப்பும் வழுவழுப்பும் போய். பெண்களின் கைகளை மூங்கிலுக்கு ஒப்பிடுவதே வழக்கம். வாடியதோள் – மெலிந்து போன கைகள். இங்கே 'தோள்' என்பதற்கு 'கைகள்' என்பது பொருள். சோரும் - தளரும்– கழலும். என் காதலர் இல்லாத ஏக்கத்தால் என் கைகள் முன்னிருந்த அழகையும் மிருதுத் தன்மையையும் இழந்து வளையல்கள் கழன்று விழும்படி மெலிந்து விட்டன – என்பது கருத்து.

தொள தொளத்துப் போனாலும் இந்த வளையல்கள் கைகளிலேயே இருக்க வேண்டும். கழற்றிவிடக் கூடாது. ஏனென்றால், அவர் இங்கு வரும்போது:

**1235. கொடியார் கொடுமை யுரைக்குந் தொடியொடு
தொல்கவின் வாடிய தோள்.**

ப. ரை: தொல்கவின் வாடிய தோள் தொடியொடு கொடியார் கொடுமை உரைக்கும் = பழைய செழுமையில் குறைந்து போன கைகள் (தளர்ந்து போன இந்த) வளையல்களோடு (இருந்தால்தான்) கொடியவராகிய என் காதலருக்கு (அவர் செய்து விட்ட) கொடுமையைச் சொல்லும்.

பொ. ரை: முன்னிருந்த (பருமன், செழுமை முதலிய) பண்பு களை (இழந்து) மெலிந்து போயிருக்கிற என் கைகள் (மிக வும் தொள தொளத்துப் போன) வளையல்களோடு (இருந் தால்தான்) கொடியவராகி விட்ட என் காதலர் (எனக்குச் செய்திருக்கிற) கொடுமைகளை (அவருக்குக்) காட்டும்.

வி-ம்: கொடியார் – கொடுமை செய்த கணவர். கொடுமை - அவர் செய்துள்ள கொடுமை. கவின் - பண்புகள். தொடி யொடு - வளையலோடு இருந்தால்தான். உரைக்கும் - தெரி யப்படுத்தும். - மெலிந்துபோன என் கைகளில் தொள தொளத்துப் போன இந்த வளையல்கள் இருந்தால்தான் காதலர், அவர் எனக்குச் செய்திருக்கிற துன்பங்களை அறி

வார். (அதனால் இந்த வளையல்கள் தொள தொளத்துப் போயின வென்று கையை விட்டு நீக்கிவிடக் கூடாது) - என்பது கருத்து.

ஆ! அவரைக் கொடியார் என்று சொன்னதில் என் மனம் வருந்துகிறதே:

**1236. தொடியொடு தோணெகிழ நோவ லவரைக்
கொடியா ரெனக்கூற னொந்து.**

ப. ரை: அவரை கொடியார் என கூற நொந்து தொடியொடு தோள் நெகிழ நோவல் = அவரைக் கொடியவர் என்று சொன்னதில் என் மனம் நோகின்றது! வளையலோடு (ஒட்டியிருந்த) கைகள் மெலிந்து போனதற்கு நோகவில்லை.

பொ. ரை: என் காதலரை நான் கொடியவர் என்று சொல்லி விட்டதற்கு வருத்தப்படுகிற என் மனம் என்னுடைய கைகள் வளையல்கள் கழன்று விழும்படி மெலிந்து விட்டதற்கு வருத்தப்படவில்லையே!

வி-ம்: தொடியொடு தோள்நெகிழ - வளையலுக்குக் கை தளர்ந்து விட. நோவல் - நோகவில்லை. வளையல்கள் கழன்று விழும்படி என் கைகள் இவ்வளவு மெலிந்து போனதற்கு வருத்தப்படாத மனம் அவரை நான் கொடியவர் என்று சொல்லிவிட்டதற்காக மட்டும் வருந்துகின்றதே! - என்பது கருத்து.

மனமே! நான் அவரைக் கொடியவர் என்று சொல்லி விட்டதற்கு வருத்தப்படுகிற நீ இப்போதே அவரிடம் போய்ச் சொல்லி அவரை உடனே வரச் செய்து:

**1237. பாடு பெறுதியோ நெஞ்சே கொடியார்க்கென்
வாடுதோட் பூச லுரைத்து.**

ப. ரை: நெஞ்சே! கொடியார்க்கு என் வாடு தோள் பூசல் உரைத்து பாடு பெறுதியோ? = நெஞ்சே! கொடியவராகிய காதலர்க்கு என் மெலிந்து போன கைகளிலிருந்து எழுகின்ற ஓசையைச் சொல்லி (அவரை வரச் செய்து) பெருமையடைவாயா!

பொ. ரை: மனமே! எனக்குக் கொடுமை செய்கிற காதலரிடம் என் கைகள் (இளைத்துப் போனதால்) வளையல்கள் (மோதுகின்ற) ஓசையைச் சொல்லி அவரை உடனே இங்கு வரச் செய்து நீ பெருமையடையலாமே? (செய்வாயா?)

வி-ம்: பாடு — பெருமை. வாடுதோள் பூசல் — மெலிந்துவிட்ட கைகளிலுள்ள வளையல்கள் ஒன்ருேடொன்று மோதி எழுகின்ற ஓசை. மனமே! என் கைகள் இளைத்து வளையல்கள் தளர்ந்து போனதற்காக நான் அவரைக் கொடியார் என்று சொல்லிவிட்டதற்கு வருத்தப்படுகிற நீ, உடனே அவரிருக்குமிடம் சென்று என் நிலைமையைச் சொல்லி, அவரை வரச் செய்து கொடுமையைப் போக்கிப் பெருமையடையலாமே? செய் — என்பது கருத்து.

மனையிலிருக்கும் காதலி எந்நேரமும் இப்படிக் காதலனை நினைத்துக் கலங்கி மனசைத் தூது போகச் சொன்னது பலித்துவிட்டது போல, பொருள் முயற்சியாக வெளியூர் போயிருக்கிற காதலன் தன்னுடைய அலுவல்களுக்கிடையே சிறிது காதலியை நினைக்கிருன்:

1238. **முயங்கிய கைகளை யூக்கப் பசந்தது**
பைந்தொடிப் பேதை நுதல்.

ப. ரை: முயங்கிய கைகளை ஊக்க பைந்தொடி பேதை நுதல் பசந்தது = இறுகத் தழுவியணைத்த என் கைகளைத் தளர்த்தினதற்கே பசும்பொன் வளையல்களையணிந்த அப் பெண்ணின் நெற்றி பசந்தது.

பொ. ரை: நான் அவளைக் கட்டியணைத்த என் கைகளைத் தளர்த்தினதற்கே பசும் பொன் வளையல்களை யணிந்த என் காதலியின் முகம் பசந்தது (என் நினைவுக்கு வருகிறது).

வி-ம்: முயங்குதல் — இறுகத் தழுவுதல். ஊக்குதல் — தளர்த்தல். பேதை நுதல் — பேதையின் நுதல் — பெண்ணின் நெற்றி. இங்கே முழு முகத்தையும் சொல்லாமல் நெற்றியை மட்டும் சொல்லுவது குறிப்பிடத் தகுந்தது. ஏனென்ருல் இறுகத் தழுவிக் கொண்டிருக்கிற இருவர் ஒருவரை யொருவர் முழு முகத்தையும் பார்க்கமுடியாது. கொஞ்சம் தளர்த்திஞல் நெற்றியை மட்டும் தான் பார்க்கலாம், என்பதைக் குறிப்பது. நான் என் காதலியைக் கட்டித் தழுவுகின்ற காலங்களில் என் கைகளைச் சிறிது தளர்த்தி அணைப்பு குறைவதைக் கூட சகிக்க மாட்டாளே, அப்படிப்பட்ட அவள் என்னைப் பிரிந்து எப்படியிருக்கிருளோ — என்பது கருத்து.

இறுகத் தழுவிய கைகளைத் தளர்த்தினதற்காக மட்டுமா அவள் பசந்தாள்? அதற்கும் அதிகமாக:

1239. **முயக்கிடைத் தண்வளி போழப் பசப்புற்ற**
பேதை பெருமழைக் கண்.

ப. ரை: முயக்கிடை தண்வளி போழ பேதை பெரும்மழை கண் பசப்புற்ற = (புணர்ச்சியில்) தழுவிக் கொண்டிருக்கும் போது உடல்களுக்கிடையில் பிளவுண்டாகி குளிர் காற்று புகுந்ததற்கே பெண்ணின் பெரிய மழைக் கண்கள் பசப்புற்றன.

பொ. ரை: (நாங்களிருவரும் புணருங் காலங்களில்) தழுவியிருக்கும் எங்கள் உடல்களுக்கிடையில் சந்துண்டாகி, குளிர் காற்று புகுந்தாலும் என் காதலியின் பெரிய மழைக்கண்கள் பசந்து விடுவது (என் நினைவுக்கு வருகின்றது).

வி-ம்: முன் குறளில் சொன்ன 'முயக்கு' என்பதற்கு 'கட்டியணைத்தல்' என்பது மட்டும் கருத்து. இங்கே 'முயக்கு' என்பதற்கு வெறும் 'தழுவுதல்' என்பது பொருளல்ல; 'புணர்ச்சி' என்பது பொருள். போழப்படாத - பிளக்கப்படாத - சந்தில்லாத. தண் வளி - குளிர்காற்று. குளிர் காற்று என்பது உடல்களில் ஆடையின்மையைக் குறிப்பது. புணர்ச்சியில் உடலோடு உடல் நெருங்கி ஒன்றுபட்டு இருக்கும். அப்போது இருவர் உடல்களும் இயல்பாக உள்ள வெதுவெதுப்போடிருக்கும். அப்படி ஒன்றோடொன்று ஒட்டியிருக்கும் உடல்கள் சிறிது பிரிந்தாலும் இடையில் காற்று புகும். அக் காற்று குளிர்ச்சியுண்டாக்கும். அதனால் 'தண் வளி' எனப்பட்டது. இடையே காற்றுக் கூட நுழையாதபடித் தழுவிக் கொண்டிருப்பதுதான் காமத்திற்கு இனிமை என்பது ''வீழும் இருவர்க்கு இனிதே வளி இடை போழப் படாத முயக்கு'' என்று முன் சொன்னது இங்கே நினைவு கொள்ளத் தக்கது. பெரு மழைக்கண் - விசாலமான மழைக் கண்கள். 'மழைக் கண்கள்' என்று பெண்களின் கண்களைக் குறிப்பது தமிழ் வழக்கு. ஏன்எனில் பெண்கள் இயல்பாகவே மிக்க இரக்கமுள்ளவர்கள். சிறு துன்பத்தைக் கண்டாலும் மன முருகி மழைபோல் கண்ணீரை கொட்டி விடுவார்கள். மேலும் எக்காரணத்தாலும் பெண்கள் நினைத்த உடன் மழை போல் கண்ணீர் வடிக்கமுடியும். அதனால் பெண்களின் கண்கள் 'மழைக்கண்' எனப்படும். 'கண் பசப்புற்ற' என்று இங்கே சொல்லப்படுவதற்கும் 'நுதல் பசந்தது' என்று முன் சொன்னதற்கும் உள்ள வேற்றுமை குறிப்பிடத் தக்கது. என்னவெனில் முன் சொன்ன 'முயக்கு' புணர்ச்சியில்லாமலும் கட்டியணைப்பதைக் குறிக்குமானதால் அதில் முகத்துக்கு முகம் இடவெளி அதிகமாக இருந்ததால் நெற்றியை மட்டுமாவது காண முடிந்தது. இங்கே சொல்லப்படும் 'முயக்கு' உடல்கள் ஒன்றோடொன்று ஒட்டி ஒன்றுகிவிட்ட புணர்ச்சியைக் குறிப்பதால் முகங்களுக்கிடையில் அதிக இடமின்மையால் கண்ணுக்கு நேராக இருக்கிற கண்ணை மட்

டும்தான் காண முடிகிறது. ஆதலால் நானும் என் காதலியும் புணரும்போது எங்கள் உடல்களுக்கிடையில் காற்று புகுந்து எங்களைப் பிரித்தாலும் கூட என் காதலி வருத்தமடைவாள். (அது என் நினைவுக்கு வருகிறது) – என்பது கருத்து.

இப்போதும் அவள் என்னைப் பிரிந்த துன்பத்திலிருப்பது போல எனக்கு முன் தோற்றமளிக்கிறது :

**1240. கண்ணின் பசப்போ பருவர லெய்தின்றே
யொண்ணுதல் செய்தது கண்டு.**

ப. ரை : ஒள் நுதல் செய்தது கண்டு பருவரல் எய்தி[ன்று] கண்ணின் பசப்போ ! = ஒள்ளிய நெற்றியளாகிய [அ]ப் பெண் முன் செய்ததுபோல் (இப்போது) என் முன் க[ண்டு] எனக்குத் துன்பமுண்டாகிறது. இது என் கண்களின் ம[யக்]கமோ !

பொ. ரை : என் காதலி முன் (என்னைப் பிரியும்போ[தெ]லாம்) படும் துன்பத்தை இப்போதும் பட்டுக்கொ[ண்டி]ருப்பது போலவே எனக்கு முன் தோன்றி எனக்குத் து[ன்ப]முண்டாக்குகிறது ; இது என் கண்களின் மயக்கந்தானே[ா] அல்லது அவள் உண்மையாகவே இப்போது துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறாளோ).

வி - ம் : எய்தின்று – எய்திற்று – அடைந்தது. பசப்பு – மயக்கம் – தோற்றம். என் காதலி நான் அவளுடன் இருக்கும் போது பிரிவினால் துன்பப்படுவதைப் போல் இப்போதும் என் கண் முன் தோன்றி என்னைத் துன்புறுத்துகிறது. இது உண்மை தானோ – வெறும் கண்ணின் மயக்கமோ அல்லது என்பது கருத்து.

அதி. 125—நெஞ்சொடுகிளத்தல்

['நெஞ்சொடு கிளத்தல்' என்பது காதலி தன்நெஞ்சோடு சொல்லுதல். கிளத்தல் - சொல்லுதல். முன் அதிகாரத்தில் 'பாடுபெறுதியோ நெஞ்சே கொடியார்க்கு என் வாடு தோள் பூசல் உரைத்து' என்பதைத் தொடர்ந்து மனதோடு பேசி, அம்மனதைத் தன் காதலரிடம் தூது போகச் சொல்லுகிறாள். இது முழுதும் காதலியின் பேச்சு.]

**1241. நினைத்தொன்று சொல்லாயோ நெஞ்சே
யெனைத்தொன்று
மெவ்வநோய் தீர்க்கு மருந்து.**

ப. ரை : நெஞ்சே ! எனைத்து ஒன்றும் எவ்வ நோய் தீர்க்கும் மருந்து ஒன்று நினைத்து சொல்லாயோ ? = நெஞ்சமே !

எப்படிப்பட்ட ஒன்ருனலும் சரி, (இந்தத்) தீராத துன்பத்தைத் தீர்க்கக் கூடிய மருந்து ஒன்றை நினைத்துப் பார்த்துச் சொல்லமாட்டாயா?

பொ. ரை: மனமே! எப்படிப்பட்டதானுலும் சரி, தீராத இந்தக் காமவேதனையைத் தீர்க்கத்தக்க ஒரு மருந்தை ஆலோசித்துப் பார்த்துச் சொல்லமாட்டாயா? (சொல்லு).

வி-ம்: எனைத்து ஒன்றும்—எப்படிப்பட்டதானுலும். அதாவது அதற்கு என்ன பத்தியமிருக்க வேண்டுமானுலும் சரி. எவ்வநோய்—தீராத நோய். மனமே! எனக்கு என் காதலர் கொடுமைக்காரர் என்று நான் சொன்னதற்கு நீ வருத்தப்பட்டாய். எனக்கோ இந்த வேதனையைப் பொறுக்க முடியவில்லை. இதற்கு ஒரு மருந்து எப்படிப்பட்டதானுலும் நீயே யோசித்துச் சொல்லு—என்பது கருத்து.

எனக்கு இவ்வளவு வேதனையும் அவரால் தானே? அவரைக் கொடியார் என்பதில் என்ன குற்றம்?:

1242. காத லவரில ராகநீ நோவது
பேதைமை வாழியென் னெஞ்சு.

ப. ரை: என்நெஞ்சு! அவர் காதல் இலர்; ஆக நீ நோவது பேதைமை; வாழி = என்னுடைய நெஞ்சே! அவர் என் மீது காதல் இல்லாதவர்; அதற்காக (நான் வருந்திஞல்) நீ நொந்து கொள்வது அறியாமை; உன்னை வாழ்த்துகிறேன் (வருந்தாதே).

பொ. ரை: (என் நலத்தைக் கவனிக்க வேண்டிய) என்னுடைய மனமே! அவர் என் மீது உண்மையான அன்புடையவர் அல்ல (என்பது நன்ருகத் தெரிகிறது); அதற்காக நான் அவரைக் கொடியவர் என்ருல்) நீ வருத்தமடைவது மூடத்தனம்; உன்னை வாழ்த்துகிறேன், வருந்தாதே.

வி-ம்: காதல் — மனைவி மணுளன் இருவருக்கும் இடையிலுள்ள மெய்யன்பு. இது காமம் மட்டுமல்ல. 'நீ நோவது' என்றது, என் மீது அவருக்கு மெய்யன்பு இல்லை யென்று நான் அவரைக் கொடியவர் என்றதற்கு 'நீ வருத்தப்படுவது'. 'என் நெஞ்சு' - என்னுடைய நெஞ்சு — எனக்காகப் பரிந்து பேச வேண்டுமேயன்றி அவருக்காகப் பரிந்து வருந்துவது சரியல்ல — என்பதைக் குறிப்பது. 'வாழி' என்றது, மனதுக்கு மகிழ்ச்சி தரச் சொன்னது. மனமே! அவருக்கு என் மீது மெய்யான ஆசை இல்லையென்று அவரை நான் நொந்து கொண்டால் அதற்காக நீஏன் வருத்தப்படுகிருய்? எனக்குச்

சொந்தமான நீ எனக்காகப் பரிந்து பேச வேண்டுமென்று உன்னை வாழ்த்திக் கேட்டுக் கொள்ளுகிறேன் – என்பது கருத்து.

மனமே! நான் கேட்டுக் கொண்டதற்காக நீ இரங்கி என்னிடம் அனுதாபப்படுகிறாய். அதற்காக மகிழ்ச்சியடைகிறேன். ஆனால் நீ இங்கிருந்து கொண்டு எனக்காக அனுதாபப்படுவது மட்டும் போதாது:

1243. இருந்துள்ளி யென்பரித னெஞ்சே பரிந்துள்ளல்
பைதனோய் செய்தார்க ணில்.

ப. ரை: நெஞ்சே! இருந்து உள்ளி பரிதல் என்? பைதல் நோய் செய்தார் கண் பரிந்து உள்ளல் இல்லை = நெஞ்சமே! நீ இங்கிருந்து கொண்டு நினைத்து நினைத்து (எனக்காகப்) பரிவு கொள்ளுவதில் என்ன பயன்? (இந்தப்) பெருந்துன்பத்தை (எனக்கு) உண்டாக்கினவரிடத்தில் பரிவோடு (என்னை) எண்ணுகிற தன்மை இல்லையே?

பொ. ரை: மனமே! நீ இங்கிருந்து கொண்டு நினைத்து நினைத்து எனக்காக அனுதாபப்படுவதால் என்ன பயன்? எனக்கு இந்தப் பெரிய வேதனையை உண்டாக்கி வைத்தவரிடத்தில் என்னைப் பற்றி அனுதாபப்படுகிற எண்ணம் இல்லையே!

வி-ம்: இருந்து – இங்கே இருந்து கொண்டு. பரிதல் – எனக்காகப் பரிவு கொள்ளல். பைதல் நோய் – துன்பமான துன்பம் – பெருந்துன்பம். மனமே! நீ இங்கிருந்து கொண்டு எனக்காக இவ்வளவு குழைந்து அனுதாபப்படுவதில் பயனில்லை; எனக்கு இவ்வளவு துன்பமும் உண்டாக்கிவிட்டு என்னை நினைத்து இன்னும் வராமல் இருக்கிற என் காதலர் இருக்குமிடம் போய் அவர் என்னைப் பரிந்து நினைக்கச் செய்து அவரை வரப்பண்ணு – என்பது கருத்து.

மனமே! அவரிடத்திற்குப் புறப்படு. நீ போகும்போது இந்தக் கண்களையும் கூட்டிக் கொண்டு போ; இல்லாவிட்டால்:

1244. கண்ணுங் கொளச்சேறி நெஞ்சே யிவையென்னைத்
தின்னு மவர்க்காண லுற்று.

ப. ரை: நெஞ்சே! கண்ணும் கொள சேறி; இவை அவர்க் காணல் உற்று என்னை தின்னும் = நெஞ்சே! (போகும்போது இந்தக்) கண்களையும் உடன் கொண்டு போவாய்; (இல்லா

விடில்) இக்கண்கள் அவரைக் காணும் ஆசையுற்று என்னைத் தின்றுவிடும்.

பொ. ரை: மனமே! (நீ என் காதலரிடம் போகும் போது) இந்த என் கண்களையும் கூட்டிக் கொண்டு போ; (இல்லாவிடில் நீ போன பிறகு) இவைகள் அவரைப் பார்க்க வேண்டுமென்று என்னை மென்று தின்றுவிடும் போல் துன்பப்படுத்தும்.

வி-ம்: கண்ணுங்கொள — கண்ணும் உடன் கொண்டு. சேறுதல் — செல்லுதல். சேறி — செல்லுவாய். உற்று — ஆசையுற்று. தின்னும் — மிகவும் துன்பப்படுத்தும். காதலரோ வரவில்லை; நான் அவரிடம் போவது பெண்மைக்குக் குறைவான காரியம். மனமோ அவரிடம் ஓடுகின்றது. கண்களோ அவரைக் காணத் தவிக்கின்றன. அவரிடமே ஓடுகின்ற மனதைத், தான் தூது போக்குவதாக நினைத்து கண்களையும் உடன் கொண்டு போகச் சொல்லுவது காமப்பித்து. மனம் போன பின்பு கண்கள் தின்று விடும் என்றது, மனம் அவரைப் பற்றி நினைக்காவிட்டாலும் அவரில்லாத காரணத்தாலேயே கண்கள் தாமாகவே அழுது கொண்டே பசந்திருப்பதைக் குறிப்பது. ஆதலால் — மனமே! நீ அவரிடம் போய் விரைவில் அவரை வரச் செய். அவர் வராவிட்டாலும் இந்தக் கண்களாவது அவரைப் பார்த்து வந்து அழாமல் இருக்கட்டும். கூட்டிக் கொண்டு போ — என்பது கருத்து.

ஏன்? மனமே! அவரிடம் போகப் புறப்படாமல் சும்மா இருக்கிறாயே? போக விரும்பவில்லையா? உனக்கும் அவர் மேல் வெறுப்பு வந்து விட்டதா என்ன? அப்படி வெறுத்து விடக் கூடாது.

1245. செற்றா ரெனக்கை விடலுண்டோ நெஞ்சேயா
முற்றா லுறாஅ தவர்.

ப. ரை: நெஞ்சே! யாம் உற்றால் உறாஅதவர் செற்றார் என கைவிடல் உண்டோ = நெஞ்சமே! நாம் விருப்பமுற்ற போது வராத அவர் (நம்மை) வெறுத்து விட்டார் என்று கைவிட்டு விடுவது (எங்கேனும்) உண்டா?

பொ. ரை: மனமே! நாம் விரும்பினபோனது காதலர் வராததற்காக, அவர் நம்மை வெறுத்து விட்டார் என்றெண்ணிக் கைவிட்டு விடுவது தகுமா? (தகாது).

வி-ம்: உற்றால் — ஆசையுற்ற போது. உறாஅதவர் - வராதவர். செற்றார் — வெறுத்து விட்டார். மனமே! நாம் விரும்பின

உடன் அவர் வரவில்லை என்பதற்காக நம்மை அவர் வெறுத்து விட்டார் என்று எண்ணிக்கொண்டு, அவரை விட்டுவிட முடியுமா (விட்டுவிடக் கூடாது; நீ போய் வரச்சொல்லு)—என்பது கருத்து.

மனமே! என்ன? நான் உன்னை அவரிடம் தூதுபோய் அவரை அழைத்து வரும்படி கேட்கிறேன். நீ என்னவோ பிணங்கிக் கொண்டதுபோல் இருக்கிறாயே! அவர் மேல் உனக்குக் கோபம் வந்துவிட்டதா? அடடா! என்ன பாசாங்கு செய்கிறாய்! உன் கோபமும் பிணக்கும் எனக்குத் தெரியாதென்று நினைக்கிறாய்?:

1246. கலந்துணர்த்துங் காதலர்க் கண்டாற் புலந்துணராய்
பொய்க்காய்வு காய்திியென் னெஞ்சு.

ப. ரை: நெஞ்சு! கலந்து உணர்த்தும் காதலர்க் கண்டால் புலந்து உணராய்; என் பொய்காய்வு காய்தி? = நெஞ்சமே! புணர்ந்து இன்ப உணர்ச்சி தருகின்ற காதலரைக் கண்டுவிட்டால் அவருடன் நீ பிணங்கியறிய மாட்டாய்; எதற்காக இந்தப் பொய்க் கோபம் கோபிக்கிறாய்?

பொ. ரை: மனமே! புணர்ந்து இன்பமூட்டும் காதலரைக் கண்டுவிட்டால் பிணங்குவதே அறியாத நீ (இப்போது) எதற்காக இந்தப் பொய்ப் பிணக்கம் பிணங்குகிறாய்?

வி - ம்: 'காய்தியென் னெஞ்சு' என்பதை 'என் காய்தி? நெஞ்சு' என்று கூட்டவேண்டும். 'என் நெஞ்சு' என்று கொண்டு 'என்னுடைய மனமே' என்று பொருள் கொள்ளல் சிறப்பல்ல. கலந்துணர்த்தும் — புணர்ந்து இன்பம் உணரச் செய்கிற. புலந்துணராய் — பிணங்கி அறியாய் — பிணங்கினதே இல்லாத நீ. காய்வு — கோபம். இங்கே 'காய்வு' என்பதற்கு 'பிணக்கம்' என்பது பொருள். முன் இப்படிப் பல தடவைகளில் காதலர் வரவில்லை யென்று பிணங்கிக் கொண்ட மனம் அவர் வந்த உடனே பிணக்கத்தை மறந்து புணர்ச்சியிற் புகுந்துவிட்டதை இடித்துக் கூறுவது இது. அதுனால் — புணர்ந்து மகிழ்ச்சியூட்டும் காதலரைக் கண்ட உடனே பிணக்கத்தை யெல்லாம் மறந்துவிட்டு அவரிடம் தாவுகின்ற நீ, இப்போது எதற்காக இந்தப் பாசாங்கு செய்கிறாய்?— என்பது கருத்து.

மனமே! நான் உன்னை அவரிடம் தூது போகும்படி கேட்டுக் கொண்டேன். நீயோ அவரிடம் போக நாணிக்கொண்டு பிணக்கம் காட்டுகிறாய். ஆனால் உன் ஆசையெல்லாம் அவரிடத்தில்தான் என்பதை அறிவேன். ஒன்று இந்தப் பிணக்

கத்தை விட்டு வெட்கப்படாமல் அவரிடம் போ ; இல்லாவிட்டால் :

**1247. காமம் விடுவொன்றோ நாண்விடு நன்னெஞ்சே
யானோ பொறேனிவ் விரண்டு.**

ப. ரை : நல் நெஞ்சே ! ஒன்றோ காமம் விடு; (ஒன்றோ) நாண் விடு ; யானோ இவ்விரண்டு பொறேன் = நல்ல நெஞ்சமே! ஒன்று காம ஆசையை விடு ; ஒன்று நாணத்தை விடு ; நானோ இந்த இரண்டையும் (ஒருங்கே) பொறுக்க முடியாது.

பொ. ரை : (என் நன்மையைக் கருதவேண்டிய) நல்ல மனமே! ஒன்று காம ஆசையை விட்டுவிட்டு (சும்மா இரு); இல்லையானால் (பிணங்குகிற உன்) நாணத்தை விட்டு விட்டு (அவரிடம் போ); நான் இந்த இரண்டு துன்பங்களையும் (சேர்ந்தாற் போல்) சகிக்க முடியாது.

வி - ம் : நன்னெஞ்சு – என் நன்மையைக் கோரும் நெஞ்சு. நாண் – நாணுதல். இங்கே 'நாணுதல்' என்பதற்கு 'பிணங்குதல்' என்பது பொருள். என் நன்மைக்கான மனமே! ஒன்று காம ஆசையை விட்டு சும்மா இரு; அவர் வந்த போது வரட்டும்; இல்லாவிட்டால் இந்தப் பாசாங்கு பிணக்கத்தை விட்டு விட்டு அவரிடம் போ. காம ஆசை, பிணக்கம் என்ற இரண்டும் ஒரே சமயத்தில் நீ வகிப்ப தென்றால் அந்த வேதனையை என்னால் பொறுக்க முடியவில்லை – என்பது கருத்து.

இதைக் கேட்ட மனம் உடனே காதலரிடம் போகப் புறப்பட்டு விட்டது. அந்த மனதைப் பார்த்துச் சொல்லுகிறாள்:- மனமே ! நான் உன்னைக் காம ஆசையையாவது விடு, அல்லது நாணத்தையாவது விடு என்று சொன்னேன். நீ காமத்தை விடாமல் நம்முடைய பெண்மைக்குப் பெருமையான நாணத்தை விட்டு விட்டு :

**1248. பரிந்தவர் நல்காரென் றேங்கிப் பிரிந்தவர்
பின்செல்வாய் பேதையென் னெஞ்சு.**

ப. ரை: பேதை என் நெஞ்சு ! அவர் பரிந்து நல்கார் என்று ஏங்கி பிரிந்தவர் பின் செல்வாய் = அறிவில்லாத என் நெஞ்சமே ! அவர் பரிவோடு இங்கு வந்துதவ மாட்டார் என்று ஏங்கி நம்மைப் பிரிந்திருக்கிற அவரைத் தேடிப் போகிறாயே!

பொ. ரை : அறிவுகெட்ட என் மனமே! அவராக ஆசைகொண்டு (நம்மை நாடி) வரமாட்டார் என்று ஏக்கமடைந்து நம்மைப்

பிரிந்து (வராமல் இருக்கிற) அவரிடம் நீ ஆசை கொண்டு போகப் புறப்பட்டு விட்டாயே! (என்ன மதியினம்!)

வி-ம்: நல்கா ரென்று — இன்பம்தர வரமாட்டாரென்று. பிரிந்தவர் — நம்மைப் பிரிந்திருக்கிறவர் — பிரிந்திருந்து கொண்டு நம்மிடம் வரவேண்டுமென்ற பரிவில்லாமல் இருக்கிறவர். 'பின் செல்வாய்' என்பது அவர் இருக்குமிடத்தைத் தேடிப் போகிறாய் என்ற பொருளது. மனமே! நம்மிடம் பரிவில்லாமல் நம்மை நாடி வராத அவரிடத்தைத் தேடி நாம் போகலாம் என்று, காம ஆசையினால் மானம் கெட்டு எண்ணுகிற உன் புத்தி என்ன புத்தி? — என்பது கருத்து.

நம்மிடத்தில் துளிகூடப் பிரியமில்லாததனால் தானே அவர் வராமல் இருக்கிறார். அப்படிப்பட்டவரிடத்திற்கு நீ போனால் உனக்கு அங்கே மட்டும் என்ன இன்பம் வந்துவிடப் போகிறது? அங்கேயிருக்கிற அவர் நமக்கு அன்புடையவரல்ல:

1249. உள்ளத்தார் காத லவராக வுள்ளிநீ
யாருழைச் சேறியென் னெஞ்சு.

ப. ரை: நெஞ்சு! காதலவர் உள்ளத்தார் ஆக, நீ உள்ளி யாருழை சேறி? = மனமே! என்னிடத்தில் காதலுள்ளவர் (என் மனமாகிய) உன்னிடத்திலேயே இருக்கும்போது நீ வேருக நினைத்து யாரிடம் போகிறாய்?

பொ. ரை: மனமே! நம்மிடத்தில் காதலுள்ளவர் நம்மிடத்திலேயே இருக்க, நீ எங்கேயோ இருப்பதாக எண்ணி யாரிடத்துக்குப் போகப் புறப்படுகிறாய்?.

வி-ம்: உள்ளத்தார் — காதலவர் — உள்ளத்தில் இருப்பவர்
தாம் நமக்குக் காதல் செய்தவர். ஊருக்குப் போயிருக்கிற
அவரல்ல. காதல் செய்தவரை எண்ணித்தானே அவர் மீண்
டும் காதல் செய்ய வரவில்லை என்று ஏங்குவது? காதல் எண்
ணம் இல்லாததால் தானே போயிருக்கிற அவர் வரவில்லை?
அதனால் மனதில் இருப்பவர் காதல் உள்ளவர். பிரிந்திருப்ப
வர் காதல் இல்லாதவர். காதல் உள்ளவர் இங்கிருக்கக்
காதல் இல்லாதவரிடம் ஏன் போக வேண்டும்? அதனால் —
மனமே! காதல் உள்ளவர் இங்கிருக்கிறார் அங்கே போயிருக்
கிறவருக்கு இப்போது நம்மிடம் காதல் இல்லை. ஏன் அவரி
டம் போக விரும்புகிறாய்? — என்பது கருத்து.

மனமே! நம்மிடத்தில் காதல் இல்லாதவரை நினைப்பதை
'விட்டுச் சும்மா இரு; இல்லா விட்டால்:

1250. துன்னுத் துறந்தாரை நெஞ்சத் துடையேமா
இன்னு மிழத்துங் கவின்.

ப. ரை: துன்னு துறந்தாரை நெஞ்சத்து உடையேமா இன்னும் கவின் இழத்தும் = (இங்கு) வராமல் நம்மைப் பிரிந்திருப்பவரை மனதில் வைப்போமானால் இன்னும் நலம் இழந்துவிடுவோம்.

பொ. ரை: நெருங்காமல் நீங்கி யிருப்பவரை (வேற்றூர் போயிருக்கிற காதலரை) மனதில் வைத்துக் கொண்டே (ஏங்கி) இருந்தால் (இதுவரை அதனால் உறுப்பு நலனழிந்ததற்கு மேல்) இன்னும் அதிகமாக உடல் நலங்களையும் இழந்து விடுவோம்.

வி-ம்: துன்னுதல் – கிட்டி வருதல். துறந்தார் – பிரிந்தவர். துன்னுத் துறந்தார் – பிரிந்து போய் வராமலிருப்பவர். உடையேமா – உடையவராக இருப்போமானால். கவின் - செழுமை – அழகு, உடல்சுகம் முதலியன சேர்ந்த நலம். மனமே! காம ஆசையினால், காதலர் வரவில்லை என்பதையே நினைத்துக் கொண்டிருப்பாயானால் நம் உடலின் அழகும் சுகமும் மிகவும் கெட்டுப் போகும். காம ஆசையை அடக்கு-என்பது கருத்து.

அதி. 126—நிறையழிதல்

['நிறையழிதல்' என்பது 'அடக்கம் கெடுதல்'. அதாவது காமத்தை அடக்கும் பொறுமை கெட்டுப் போவது. அழிதல்-கெடுதல். காமத்தை அடக்கும் குணம் பெண்களுக்கு ஆண்களினும் அதிகம். அந்த குணம் 'நிறை' என்ற பெயருடையது. நிறையும் நாணமும் பெண்களுக்குச் சிறப்பு. முன் அதிகாரத்தில் 'நாணத்தை விட்டுக் காதலரையே எண்ணிக் கலங்குவது மேலும் நலங்களைக் கெடுக்கும் அதனால் காமத்தை அடக்கு' என்று மனதிற்கு அறிவு சொன்னாள். அப்படிக் காமத்தை அடக்க முயன்றும் அடக்க முடியாமல் பொறுமை கெடுவது 'நிறையழிதல்'. இது முழுதும் பெண்ணைப் பற்றியது.]

1251. காமக் கணிச்சி யுடைக்கு நிறையென்னு
நாணுத்தாழ் வீழ்த்த கதவு.

ப. ரை: காம கணிச்சி நாணு தாழ் வீழ்த்த நிறை என்னும் கதவு உடைக்கும் = காமம் என்னும் கோடரி நாணம் என்னும் தாழ்ப்பாளிட்ட நிறை என்னும் கதவை உடைத்துவிடும்.

பொ. ரை: காமமாகிய கோடாலி நாணமாகிய தாழ்ப்பாளி ஞல் அடைக்கப்பட்டிருக்கிற (காமத்தை அடக்கும் தன்மை யான) நிறை என்னும் கதவை உடைத்து விடும்.

வி-ம்: கணிச்சி — கோடாரி. விழ்த்த — விழ்த்துள்ள — பூட்டி யிருக்கிற. ''நாணுத் தாழ் விழ்த்த கதவு'' நிறை என்பது. அதனால் நாணமும் அடக்கமும் சேர்ந்தது நிறை என்னும் பெண் தன்மை. காம மிகுதியினால் அந்தப் பெண் தன்மை கெடுகிறது. அதனால் — காம ஆசை, நாணமும் அடக்கமும் சேர்ந்த என் பெண்மையைக் கெடுத்துவிடக்கூடிய கூர்மை யும் வலிமையும் உள்ளது — என்பது கருத்து.

அம்மம்ம! இந்தக் காமம் என்னை என்ன பாடுபடுத்து கிறது!; அதைத் தவிர வேறு எதையும் நினைக்க முடிய வில்லையே!:

1252. காம மெனவொன்றோ கண்ணின்றென் னெஞ்சத்தை
யாமத்து மாளுந் தொழில்.

ப. ரை: கண் இன்று என் நெஞ்சத்தை யாமத்தும் ஆளும் தொழில் காமம் என ஒன்றோ = இரக்கமில்லாமல் என் நெஞ் சத்தை நடுச் சாமத்திலும் அடிமைப்படுத்தும் வேலை, இந்த காமம் என்ற ஒன்று தானோ?

பொ. ரை: தாட்சண்யம் இல்லாமல் என் மனதை நடுராத்திரியி லும் ஆண்டு அடிமை கொள்ளும் காரியம் இந்தக் காமமென் னும் ஒன்று தானோ?

வி-ம்: கண் — கண்ணோட்டம் — இரக்கம். 'யாமத்தும்' — பக லிலும் மாலைப் பொழுதிலும் மட்டுமல்லாமல் 'சாமத்திலுங் கூட'. பகலெல்லாம், மாலை முழுதும் என்னை வதைப்பது போதாதென்று இந்தக் காமவேதனை நடுச் சாமத்திலும் என்னை அடிமைகொண்டு துன்புறுத்துகிறதே, எனக்கு இது தானோ வேலை? — என்பது கருத்து.

நானும் என்னால் ஆனமட்டும் இந்த காமத்தை அடக்கத் தான் முயல்கின்றேன். ஆனால்:

1253. மறைப்பேன்மற் காமத்தை யானோ குறிப்பின்றித்
தும்மல்போற் றோன்றி விடும்.

ப. ரை: யானோ காமத்தை மறைப்பேன்; மன் குறிப்பு இன்றி தும்மல் போல் தோன்றிவிடும் = நானோ காமத்தை அடக்கு

கிறேன்; ஆனால் அது முன்னறிவிப்பு இல்லாமல் தும்மலைப் போல் வந்து விடுகிறது.

பொ. ரை: நானோ என் காம ஆசையை அடக்கிவைக்கத்தான் முயல்கின்றேன்; ஆனால் அது (அடக்கிவைத்தாலும்) தும்மல் வருவது போல் திடீரென்று வந்து விடுகிறது (நானென்ன செய்வேன்?)

வி-ம்: தும்மல் வரப்போவதும் தெரியாது. வந்துவிட்டால் அடக்கவும் முடியாது. மறைப்பேன் – அடக்குவேன். குறிப்பின்றி – முன்னறிவிப்பு இல்லாமல். 'மன்' என்பது 'ஆனால்' என்ற பொருள் தரும் அசை. நானோ இந்தக் காம ஆசையை அடக்கித்தான் வைக்கிறேன். ஆனால் அது தும்மல் வருவது போல் எச்சரிக்கையுமில்லாமல் அடக்கவும் முடியாமல் வந்து விடுகிறது. என்ன செய்வேன்? –என்பது கருத்து.

நிறையுடைய பெண்ணென்று பெயர் பெற வேண்டுமென்று தான் நான் விரும்புகிறேன்; ஆனால்:

1254. நிறையுடையே னென்பேன்மன் யானோவென் காம
மறையிறந்து மன்று படும்.

ப. ரை: யானோ 'நிறை உடையேன்' என்பேன்; மன் காமம் மறை இறந்து மன்றுபடும் = நான் (யாரிடமாவது) 'நான் காமத்தை அடக்குந்தன்மை உள்ளவள்' என்று சொல்லு வேன்; ஆனால் (அப்போதே) என் காமம் மறைவிடத்தைக் கடந்து வெளியே பாய்ந்து வந்துவிடும்.

பொ. ரை: நான் (யாரிடத்திலாவது) 'நான் காம ஆசையை அடக்கிவைக்கும் திறமுடையவள்' என்று சொல்லிக் கொண்டேயிருக்கிற அப்போதே என் காமம் (நான் அதை அடக்கிவைத்திருந்த) மறைவிடத்தை விட்டு வெளியில் பாய்ந்தோடி வந்து (என் சொல்லைப் பொய்யாக்கிவிடும்)

வி-ம்: நிறை – காமத்தை அடக்கி மானத்தைக் காத்துக் கொள்ளும் பெண் தன்மை. ஆம் காமத்தை அடக்குவதும் மானத்தைக் காப்பதுமாகிய இரண்டும் சேர்ந்தால்தான் 'நிறை'. 'மன்' என்பது 'ஆனால்' என்ற மாற்றுப் பொருள் தரும் அசை. மறை – மறைவிடம். இறந்து – கடந்து – விட்டு. படும் – பாயும். 'நான் காமத்தை அடக்கி என் மானத்தைக் காத்துக் கொள்ளக் கூடியவள்' என்று வாயால் சொல்லிக் கொண்டிருக்கும் போதே என் காமம் என் முகத்தின் பசப்பினாலும் கண்களின் நீரினாலும் நான் சொல்வது பொய் யென்று காட்டி என் மானத்தைக் கெடுத்து விடுகிறது. அத

னல் – காமத்தை அடக்கி விடுவேன் என்று வாயால் சொல்லலாம். ஆனால் என்றால் உண்மையில் அடக்க முடியவில்லை – என்பது கருத்து.

காம ஆசையை அடக்கி மானத்தைக் காத்துக் கொள்வது முடியாவிட்டாலும் கண்ணியத்தைக் கருதி, இருந்த இடத்திலேயாவது இருக்கக் கூடாதா? என் காதலனைத் தேடி மனம் ஓடுகின்றதென்றால்:

1255. செற்றார்பின் செல்லாப் பெருந்தகைமை காமநோ
யுற்றா ரறிவதொன் றன்று.

ப. உரை: செற்றார் பின் செல்லாப் பெருந்தகைமை காமநோய் உற்றார் அறிவது ஒன்று அன்று = பகைவர்களிடம் சென்று (அவர்கள் தயவை நாடி) வணங்கக் கூடாது என்ற பெருந் தன்மை காமநோய் அடைந்து விட்டவர்கள் அறியக்கூடிய ஒன்றல்ல.

பொ. உரை: நமக்குத் தீமை செய்துவிட்ட ஒருவரிடத்திற்கே போய் (அத் தீமையைத் தீர்த்துக் கொள்ள) அவரை வணங்கக் கூடாது என்ற பெரிய நியாயம் காமநோய் கொண்டு விட்ட (மனைவி) அறிய வேண்டிய ஒரு நீதியல்ல.

வி-ம்: செற்றார்—பகைவர்—தீங்கிழைப்பவர். பின் செல்லல் — ஒருவருடைய தயவை நாடி அவரிடம் அண்டுதல். பெருந்தகைமை — மேலான குணம். கணவன் மனைவியிடம் காமங் கொள்ளாததாலோ, வேலை மிகுதியினாலோ, விரைவில் திரும்பி வராமல் மனைவிக்குத் துன்பமுண்டாக்கி விரோதம் செய்து விட்டாலும், மனைவி காம வேதனை யடையும்போது அவனைத் தான் நினைப்பாள். அதனால் தன் விரோதியையே நாடிப் பின் செல்லுகிறாள். "ஒட்டார் பின் சென்று ஒருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று" என்ற குறளில் சொல்லப்பட்ட மேன்மையான மானம், காம நோயால் காதலன் பின் செல்லும் காதலிக்கு இல்லையென்பது குறிக்கத் தக்கது. ஆதலால் — தீங்கு செய்கிறவரிடமே போய் அத் தீங்கைத் தீர்த்துக் கொள்ளப் பணியக்கூடாது என்ற மேலான நியாயம், எனக்குக் காமநோயுண்டாக்கி இவ்வளவு தீங்கு செய்து விட்ட என் காதலரை நினைத்து அவரிடம் போகவே விரும்பும் எனக்கெப்படிப் பொருந்தும்? — என்பது கருத்து.

இந்தக் காமத்துன்பம் வெகு விசித்திரமான துயரம். மற்ற துன்பங்களால், அவைகளைத் தீர்க்கும் மாற்று மருந்துகள் வேறு எங்கே கிடைத்தாலும் போதுமென்று தேடுகின்ற

துயரத்தைத்தான் உண்டாக்கும். ஆனால் இந்த காமத்
துன்பமோ :

1256. செற்றவர் பின்சேறல் வேண்டி யளித்தரோ
வெற்றென்னை யுற்ற துயர்.

ப. ரை : செற்றவர் பின் சேறல் வேண்டி அளித்து; அரோ! என்னை உற்ற துயர் எற்று! = துன்பம் செய்தவரிடத்திற்கே போய்ப் பணிய வேண்டுமென்ற ஆசையுள்ளதாக இருக்கிறதே! ஐயோ! எனக்கு வந்த இந்தத் துயரம் எப்படிப் பட்ட (புதுமையாக) இருக்கிறது!

பொ. ரை: துன்பம் செய்தவரிடமே போய் அடைக்கலம் புகச் சொல்லி ஆசை மூட்டுகிறதே; அம்மா! எனக்கு வந்த இத் தக் கவலை எப்படிப்பட்ட விசித்திரமான கவலையாக இருக் கிறது (பார்த்திர்களா!)

வி- ம் : செற்றவர் — துன்பம் செய்தவர். பின் சேறல் — போய் வணங்குதல் — அபயம் புகுதல். அளித்து — ஆசையுள்ளதாக இருக்கிறது. 'அரோ!' அதிசயப் பொருளையும் வருத்தத் தையும் சேர்த்துக் குறிக்கும் அசைச் சொல். எற்று — எப் படிப்பட்டது. துன்பத்தால் உண்டான துயரம் துன்பத்தைச் செய்தவரிடத்திற்கே போய்த் துன்பத்தைத் தீர்த்துக்கொள்ள ஆசை மூட்டுகிறது. காதலி சொல்லும் இந்தக் கருத்து, ''பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை தன்னோய்க்குத் தானே மருந்து'' என்று காதலன் சொன்னதற்கு ஈடுகட்டு வது போன்றது. அதனால் — எனக்கு உண்டாகியிருக்கிற துய ரம் இதற்குக் காரணமான துன்பத்தை எனக்குச் செய்தவ ரிடத்திற்கே போய்த்தான் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று அல்லவா ஆசை மூட்டுகிறது! என்ன அதிசயமான துயா மாக இருக்கிறது பாருங்கள் — என்பது கருத்து.

காதலர் வரவில்லையென்று கவலைப்பட்டு, அவரைப் பகைவ ரென்றும், துன்பம் செய்கிறவரென்றும் சொல்லி, அவரிடமே போகத் தூண்டுகிற துயரத்தையும் ஏளனம் செய்து, அரு வருப்படைகிற என் நாணமெல்லாம் அவர் வந்து விட்டால்:

1257. நாணென வொன்றோ வறியலங் காமத்தாற்
பேணியார் பெட்ப செயின்.

ப. ரை : பேணியார் காமத்தால் பெட்ப செயின் நாண் என ஒன்றோ அறியலம் = நான் காதலிக்கிறவர் தாமும் (என் னைப் போல்) காம ஆசை கொண்டு நான் விரும்புகிறதைச்

செய்யும்போது நாணம் என்ற ஒன்றை மட்டுந்தானு நான் உணர்வதில்லை?

பொ. ரை: என் காதலர் தாமும் என்னைப்போல காம ஆசை கொண்டவராக நான் மிகவும் ஆசைப்படுகிற கலவி செய்யும் போது எனக்கு நாணம் ஒன்றுமட்டுமா மறந்து போகிறது? (பெண்மைக்கான மற்ற மடமை, அச்சம், பயிர்ப்பு என்ற எல்லாமமே மறந்து போகின்றன).

வி-ம்: பேணியார் — நான் ஆசை கொண்டவர் — காதலர். காமத்தால் — காமங்கொண்டு. பெட்ப — நான் ஆசைப்படு கிறவற்றை — கலவிச் செயல்களை. ஒன்ருே — ஒன்றுதானு, அதற்கு மேலும். அறியலம் — அறிகிறேனில்லை — உணர்வ தில்லை. என் காதலர் நான் இப்போது காமங்கொண்டுள்ளது போலத் தாமும் காமங் கொண்டவராக, என்னைப் புணர்ந்து என் விருப்பத்தைப் பூர்த்தி செய்கிற போதெல்லாம் என் பெண்மைக் குணங்களாகிய நாணம், மடமை, அச்சம், பயிர்ப்பு முதலிய எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன். இப்போது என் நிறையுடைமை கெட்டு அவரை நிந்திக் கிறேன் — என்பது கருத்து.

நான் என்ன செய்வேன்? காமன் கோடாலியல்லவா என் நிறையுடைமையை உடைக்கிறது?:

1258. பன்மாயக் கள்வன் பணிமொழி யன்ருேநம்
பெண்மை யுடைக்கும் படை.

ப. ரை: பல்மாய கள்வன் பணி மொழி அன்ருே நம் பெண்மை உடைக்கும் படை = மிகுந்த மாயக்காரத் திருடனுகிய காம னுடைய கட்டளையல்லவா என் பெண்தன்மையான நிறையை உடைக்கும் ஆயுதம்?

பொ. ரை: மிக்க ஓரவஞ்சகனுக (மறைந்து நின்று பாணம்விடும்) கள்ளனுகிய மன்மதனுடைய கட்டளையல்லவா என்னுடைய நிறையை உடைக்கும் (கோடாரி) ஆயுதம்?

வி-ம்: பன் மாயம் — பல மாயம் — மிகுந்த வஞ்சனை. அதாவது 'பருவரலும் பைதலும் காணுன் கொல் காமன் ஒருவர் கண் நின்று ஒழுகலான்' என்ற குறளிற் சொல்லியபடி மிகுந்த ஓரவஞ்சனையாக என் காதலருக்குக் காம மூட்டாமல் என்னை மட்டும் துன்பப்படுத்துகிருன் — என்பதைக் குறிக்கும். 'கள்வன்' என்றது கள்ளனைப் போல் கண்ணுக்குத்தெரியாமல் மறைந்திருந்து காமபாணம் தொடுப்பதைக் குறிப்பது. பணி மொழி — பணியச் செய்யும் அதிகாரக் கட்டளை. பெண்மை —

நிறையுடைமை. உடைக்கும்படை — உடைக்கும் ஆயுதம். இவ்வதிகாரத்தின் முதலில் ''காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவு'' என்றபடி நிறையை உடைக்கும் 'காமக்கோடாரி'. மிகுந்த ஓரவஞ் சனைக் காரனாகிய காமன் என்னும் கள்வனுடைய கட்டளைக் குப் பயந்தல்லவா என் நிறையுடைமை அழிகின்றது — என் பது கருத்து.

காம ஆசையை அடக்கும் என் பெண்மையின் நிறை யுடைமை இப்படி உடைபட்டுப் போவதனால் என் மனம் என் வசப்பட்டதாக நில்லாமல் காமவசப்பட்டதாகி விடுகிறது. அதனால் அவரைக் கண்டால் அவர் விரைவில் வராததற்கு அவரிடம் நான் கொண்ட பிணக்கத்தையும் வருத்தத்தையும் மறந்து விடுகிறேன். முன் இப்படி அவர் நெடுநாள் பிரிந் திருந்து வந்தபோது:

1259. புலப்ப லெனச்சென்றேன் புல்லினே னெஞ்சங்
கலத்த லுறுவது கண்டு.

ப. ரை: புலப்பல் என சென்றேன்; நெஞ்சம் கலத்தல் உறு வது கண்டு புல்லினேன் = பிணக்கம் காட்டவேண்டுமென்று (அவர் முன்) போனேன்; (ஆனால் அவரைக் கண்ட உடன்) என் மனம் அவரைப் புணர ஆசை கொள்ளுவதை யறிந்து (நான் அவரைத்) தழுவிக் கொண்டேன்.

பொ. ரை: (முன் அவர் இப்படி நெடுநாள் பிரிந்திருந்து வந்த போது) அவரிடம் பிணக்கம் கொள்ள வேண்டுமென்று (அவர் முன்) போனேன்; (ஆனால் அவரைக் கண்ட உடன்) என் மனம் அவரைப் புணர விருப்பங் கொண்டுவிட்டது; அதைக் கண்டு நான் அவரைத் தழுவிக் கொண்டேன்.

வி-ம்: புலப்பல் என — புலப்பது என்று தீர்மானித்து — அவ ருடன் பிணங்கிப், பேசவும் கூடாது என்ற உறுதியுடன். கலத் தல் — கலவி செய்தல். உறுவது கண்டு — ஆசையுறுவதைக் கண்டு. புல்லினேன் — தழுவினேன். முன் என் காதலர் நெடு நாள் பிரிந்திருந்து வந்தபோது, என் வருத்தத்தைக் காட்டிக் கொள்ள வேண்டுமென்று தீர்மானித்து அவர்முன் போனேன். ஆனால் என் மனம் அவரைக் கண்டதும் என் தீர்மானத்தைப் புறக்கணித்துவிட்டு அவரைப் புணர விரும்பியது; நான் என் பிணக்கத்தைச் செய்ய முடியாமல் அவரைத் தழுவிக் கொண் டேன் — என்பது கருத்து.

தழுவிக் கொண்டு அப்புறம் எப்படிப் பிணங்குவது? பிணங்க வேண்டும் என்ற உறுதியுடன்தான் நான் போனேன். ஆனால் என்னுடைய நெஞ்சமோ:

1260. நிணந்தீயி லிட்டன்ன நெஞ்சினார்க் குண்டோ
புணர்ந்தூடி நிற்பே மெனல்.

ப. ரை : நிணம் தீயில் இட்ட அன்ன நெஞ்சினார்க்கு புணர்ந்து ஊடி நிற்பேம் எனல் உண்டோ = கொழுப்பை நெருப்பில் போட்டது போன்ற நெஞ்சத்தை உடையவர்களுக்குத் தழுவிக் கொண்ட பின் பிணங்கி (விலகி) நிற்போம் என்பது உண்டா ?

பொ. ரை : கொழுப்பை நெருப்பில் போட்டது போல (காம வெப்பத்தால்) உருகிக் கொண்டிருக்கும் மனமுடையவர்க்குத் தழுவிக் கொண்டு (அதன்பின்) பிணங்கி நிற்போமென்பது முடியுமா ?

வி – ம் : 'புணர்ந்து' என்பதற்கு இவ்விடத்தில் 'கலவிப் புணர்ச்சி' என்று பொருள் கொண்டு விடக் கூடாது. 'புல்லுதல்' – 'தழுவுதல்' என்ற அளவில்தான் பொருள் கொள்ள வேண்டும். இக்குறள் முன் குறளில் 'நெஞ்சம் கலத்தல் உறுவது கண்டு புல்லினேன்' என்றதன் தொடர்ச்சி. ஆதலால் – காதலர் வரவில்லையே என்று காம வேதனையினால் அனலிலிட்ட மெழுகு போல் உருகியிருந்த நான், அவரைத் தழுவிக் கொண்ட பின் பிணங்குவதென்பது எப்படி முடியும் – என்பது கருத்து.

அதி. 127—அவர்வயின் விதும்பல்

['அவர் வயின் விதும்பல்' என்பது 'அவரிடம் விரைவது'. அதாவது ஒருவர் மனம் ஒருவரிடத்தில் விரைவது. விரைவது – வேகமெடுப்பது – காதலிக்குக் காம ஆசை அதிகப்பட்டு மனம் அவரிடம் விரைவதும் காதலனுக்குக் காம நினைவு வந்து மனம் மனைவியிடம் விரைவதும். இது பெரும்பாலும் காதலியின் பேச்சு. சிறுபான்மை காதலன் பேச்சு.]

1261. வாளற்றுப் புற்கென்ற கண்ணு மவர்சென்ற
நாளொற்றித் தேய்ந்த விரல்.

ப. ரை : அவர் சென்ற நாள் ஒற்றி விரல் தேய்ந்த; கண்ணும் வாள் அற்று புற்கென்ற = அவர் (என்னைப் பிரிந்து) சென்ற நாட்களை கணக்கெண்ணி என் விரல்களும் தேய்ந்து விட்டன; கண்களும் ஒளியிழந்து வரண்டு போயின.

பொ. ரை : (அம்ம ! அவர் பிரிந்து எத்தனையோ நாட்களாகி விட்டனவே !) அவர் என்னைப் பிரிந்துள்ள நாட்களை (விரல்விட்டு

எண்ணி யெண்ணி) என் விரல்களும் தேய்ந்து விட்டன; என் கண்களும் (அழுதழுது பசந்து) பிரகாசமில்லாமல் வரண்டு போய்விட்டன.

வி - ம்: வாள் – ஒளி – பிரகாசம். 'வாளற்ற கண்' என்பது சோபையற்ற கண்கள். புற்கென்ற – வரண்டு விட்டன. நாள் ஒற்றி – நாள்களை எண்ணுவதற்காக விரல்களைத் தொட்டுத் தொட்டு. கைவிரல்களால் கணக்கெண்ணுகிறவர்கள் தமது பெருவிரலால் மற்ற விரல்களைத் தொட்டுத் தொட்டுக் கணக்கெண்ணுவார்கள். அப்படித் தொட்டதாலும் கூட விரல்கள் தேய்ந்து விட்டன என்பது காமப்பித்தினால் மிகைப்படச் சொல்லுவது. அதனால் – அவர் பிரிந்த நாட்களை விரல்விட்டு எண்ணி யெண்ணி என் விரல்களும் தேய்ந்து விட்டன. அழுதழுது கண்ணீர் வடித்து என் கண்களும் பசந்து களையிழந்து போயின – என்பது கருத்து.

தோழ்! அவரைச் சற்று மறந்திருந்தால் நல்லது என்று சொல்லுகிறாயே. மறக்கலாமா? இத்துணை நாளும் மறக்காமல் இன்று அவரை மறந்தால்:

**1262. இலங்கிழா யின்று மறப்பினென் றோண்மேற்
கலங்கழியுங் காரிகை நீத்து.**

ப. ரை: இலங்கு இழாய்! இன்று மறப்பின் காரிகை நீத்து என் தோள் மேல் கலம் கழியும் = ஒளி வீசும் ஆபரணங்களையணிந்த பெண்ணே! (தோழியே!) இன்று நான் அவரை மறந்தால் என் மேனி யழகு முற்றிலும் நீங்கி என் கைகளில் (தொளதொளத்தாயினும்) இருந்துகொண்டிருக்கிற வளையல்கள் (கீழேயே) விழுந்து விடும்.

பொ. ரை: பிரகாசமான ஆபரணங்களை அணிந்திருக்கும் சகியே! (என் மனம் வேகமாக அவரை நினைக்கிற) இன்று நான் என் காதலரை மறப்பேனானால் (ஏற்கெனவே மிகவும் குறைந்து போயிருக்கிற என் அழகு) முற்றிலும் நீங்கி (கைக்குப் பெரியனவாகி தொள தொளத்தாயினும்) கைகளின் மேல் இருந்து கொண்டிருக்கிற வளையல்கள் மணிக்கட்டையும் விரல்களையும் கடந்து கீழே விழுந்தே போய்விடும்.

வி - ம்: 'இலங்கிழாய்' என்று தோழியை வர்ணித்தது, தான் தன் காதலர் இல்லாததால் வளையல்களைத் தவிர வேறு அழகும் பளபளப்பும் உள்ள ஆபரணங்களை அணிவதில்லை என்பதைக் குறிப்பது. 'இன்று' என்றது – இன்றைக்கு என் மனம் வெகுவேகமாக 'அவர் வயின் விதும்பல்' செய்து

அவரையே எண்ணுகிறது — என்பதைச் சுட்டுவது. 'காரிகை நீத்து' என்பது, அழகென்பதே இல்லாமல் நீங்கி என்பதைக் குறிப்பது. 'தோள் மேல் கலம் கழியும்' என்பது இப்போது என் கைகளின் மீது இருந்து கொண்டிருக்கிற வளையல்கள் இல்லாமலேயே விழுந்து விடும் — என்பதாம். அதாவது முன் 'பிரிவாற்ருமை' என்ற அதிகாரத்தில் "துறைவன் துறந் தமை தூற்ருகொல் முன்கை இறையிறவா நின்ற வளை" என்ற குறளில் சொன்னபடி, வளையல்கள் முன்னங்கையில் விரல்கள் ஆரம்பமாகும் இடத்துக்கு மேல் உள்ள ரேகை வரிகளைக் கடந்துவிட்டன. ஆனுலும் அவை கையைவிட்டு விழாத படி இருந்து கொண்டிருக்கின்றன. அப்படி வளையல்கள் கையை விட்டு விழுந்துவிடாமல் இருப்பதும், 'உறுப்பு நல னழிதல்' என்ற அதிகாரத்தில் "கொடியார் கொடுமை உரைக்கும் தொடியொடு தொல்கவின் வாடிய தோள்" என்ற படி, நான் அவை கைகளில் இருக்க வேண்டுமென்று விரும்புவதால்தான். இப்போது அவரை மறந்தால் என் முன் னங்கை இன்னும் மெலிந்து வளையல்கள் விரல்களையும் கடந்து கையை விட்டு விழுந்தே போகும் — என்பதைக் குறிப் பது. ஆதலால் — இன்று நான் என் காதலரை மறந்தால் கொஞ்சமாவது இன்னும் இருக்கிற என் அழகும் முழுதும் நீங்கிவிடும். அத்துடன் என் தேகம் இன்னும் மெலிந்து போய், இப்போது கைகளில் இருந்து கொண்டாவது இருக் கிற தொளதொளத்துப்போன வளையல்களும் கையைவிட்டு விழுந்துவிடும் — என்பது கருத்து.

அதுமட்டுமா! இன்றைக்கு மட்டுமல்ல; என்றைக்குமே என் காதலரை நான் மறந்தால் என் உயிரும் போய்விடும் :

1263. உரனசைஇ யுள்ளந் துணையாகச் சென்ருர்
வரனசைஇ யின்னு முளேன்.

ப. ரை : உரன் நசைஇ சென்ருர் வரல் நசைஇ உள்ளம் துணை யாக இன்னும் உளேன் = (வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்) வலிமை (தேடும்) ஆசை கொண்டு (என்னைப் பிரிந்து) போயிருக்கிறவர் (காதலர், திரும்பி) வருவதில் ஆசை வைத்து அதற்கு என் உள்ளமே (எனக்குத்) துணையாக (இருப்பதால்) இன்னும் (உயிரோடு) இருக்கிறேன்.

பொ.ரை : (வாழ்க்கைக்கு வலிமையான) பொருள் தேடும் ஆசையுடன் என்னைப் பிரிந்து போயிருக்கிற காதலர் திரும்பி வருவதில் ஆசை வைத்து, அந்த ஆசைக்கு என் மனமே அவரை மறவாமல் எனக்குத் துணை புரிவதனுல் நான் இன் னும் உயிரோடு இருக்கிறேன்.

வி - ம்: உரன் — வலிமை. இங்கே பொருள் வலிமை — செல்வ பலம். நசை — ஆசை. நசைஇ — நசையி — ஆசை கொண்டு. 'உள்ளம் துணையாக' என்பதை 'சென்றார்' என்பதன்முன் சேர்த்து இக்குறளுக்கு 'இன்பம் நுகர்தலை நச்சாது வேறலை நச்சி நாம் துணையாதலை யிகழ்ந்து தம் ஊக்கம் துணையாகப் போயினர், அவற்றை யிகழ்ந்து ஈண்டு வருதலை நச்சுதலான் யான் இவ்வெல்லையினும் உளனாயினேன்' என்று உரை கொள்வது சரியல்ல. ஆதலால் பொருள் தேடும் ஊக்கத்துடன் என்னைப் பிரிந்துபோயிருக்கிற காதலரின் வருகையை எதிர்பார்க்கும் ஆசைக்கு என் மனமே துணையாக அவரை மறக்காமல் இருப்பதால்தான் இன்னும் உயிரோடிருக்கிறேன் — என்பது கருத்து.

நான் உயிரோடிருப்பதற்கு அவரை மறவாதிருப்பதுதான் காரணம். மறவாதிருப்பதற்கு எனக்கு மனம்தான் துணை. அந்த மனத்திற்குத் துணை எதுவென்றால்:

**1264. கூடிய காமம் பிரிந்தார் வரவுள்ளிக்
கோடுகொ டேறுமென் னெஞ்சு.**

ப. ரை: பிரிந்தார் வரவு உள்ளி கூடிய காமம் கோடு கொடு என் நெஞ்சம் ஏறும் = பிரிந்திருப்பவர் (காதலர்) வரவை நினைக்கும் போதெல்லாம் உண்டாகிற காம இன்பத்தைப் பற்றுக் கோடாகக் கொண்டு என் நெஞ்சம் திடமடைகிறது.

பொ. ரை: பிரிந்திருக்கும் என் காதலர் வரவை விரும்பி நினைக்கும்போதெல்லாம் உண்டாகிற காம இன்பத்தை ஆதரவாகக் கொண்டுதான் என் மனம் (கவலை நீங்கி) தைரியமடைகிறது.

வி - ம்: கோடு — மரக்கொம்பு — ஒரு கழி. கொடு — கொண்டு. கோடு கொடு — கொம்பைக் கொண்டு. கொடிகளாகப் படரும் செடிகள் வளர்வதற்கு ஆதரவாக அவற்றின் அருகில் மரக்கொம்புகளையோ மூங்கிற் கழிகளையோ நட்டு வைப்பது வழக்கம். அந்தக் கொம்புகளின் துணை கொண்டு கொடிகள் மேலேறும். அதனால் கொடிகளுக்கு ஆதரவு கொம்புகள். அதுபோல் மனதிற்கு ஆதரவு, காதலர் வரவை நினைப்பதால் வரும் காம இன்பம். மனம் காதலர் வரவை நினைக்கும் போதும் காம இன்பம் கூடுகிறதென்பது முன் 'நினைந்தவர் புலம்பல்' என்ற அதிகாரத்தில் ''உள்ளினும் தீராப் பெருமகிழ் செய்தலால் கள்ளினும் காமம் இனிது'' என்றபடி. ஏறும் — செழித்து வளரும். எனவே — பிரிந்துள்ள என் காதலர் வரவில்லையே என்று நினைக்கும் போதெல்லாம் உண்டாகிற காம இன்பத்தினால்தான் என் மனம் தளர்ச்சியடையாமல் இருக்கிறது — என்பது கருத்து.

என் காதலர் நினைப்பினால்தான் என் உயிர் இருக்கிறது. அந்த நினைப்புக்கு என் மனம்தான் துணை. மனதிற்கு அந்த நினைப்பில் உண்டாகிற இன்பம் தான் ஆதரவு. ஆதலால் என் உடல் மிகவும் மெலிந்து மேனி பசந்து விட்டதைக்கண்டு அனுதாபப்பட்டு அவரை மறந்திருக்கச் சொல்லுகிற சகியே! இந்த மெலிவும் பசப்பும் எல்லாம் :

1265. காண்கமற் கொண்கனைக் கண்ணாரக் கண்டபி
னீங்குமென் மென்றோட் பசப்பு.

ப. ரை : •கொண்கனை கண்ணார கண்டபின் என் மென் தோள் பசப்பு நீங்கும் காண்க = கணவரைக் கண்ணார (உண்மையாக) கண்டு விட்டால் என்னுடைய மெலிந்துபோன தோள்களின் பசப்பு (உடனே) நீங்கிவிடும், பார்.

பொ. ரை : காதலரை என் கண்களின் ஆசைதிர நான் பார்த்து விட்ட உடனே மெலிந்து போன என் மேனியின் பசப்பு மறைந்துவிடும், அதை நீயே பார்க்கப் போகிறாய்.

வி - ம் : கொண்கன் – கணவன். கண்ணாரக் கண்டபின் – உண்மையாகவே கண்களின் ஆசைதீரக் கண்டு விட்டால். அதாவது நினைவினாலும் கனவினாலும் நான் அடிக்கடி அவரைக் காண்பது போல் அல்லாமல் உண்மையாகவே என் கண்களுக்கு முன்னால் கண்டுவிட்டால் – என்பதாம். 'நீங்கும் என் மென்தோள் பசப்பு' என்பதில் காமநோயால் உண்டான உடல் மெலிவும் மேனி பசப்பும் ஆகிய இரண்டும் ஒருங்கே நீங்கிவிடும் என்ற பொருள் அடங்கியுள்ளது. இங்கே 'மென் றோள்' என்பதற்கு மெலிந்துபோன தோள் என்பது பொருள். ஆதலால் – நான் கண்ணாரக் காணும்படி என் கணவர் வந்துவிடட்டும்; அவரைக் கண்ட உடனே என் உடலின் மெலிவும் மேனியின் பசப்பும் தாமாகவே நீங்கிவிடும். நீ பார்க்கப்போகிறாய் – என்பது கருத்து.

உடல் மெலிவும் மேனி பசப்பும் மட்டுமல்ல; அவர் வந்து விட்டால் :

1266. வருகமற் கொண்கனொருநாட் பருகுவன்
பைதனோ யெல்லாங் கெட.

ப. ரை : கொண்கன் வருகமன் ஒரு நாள் பைதல் நோய் எல்லாம் கெட பருகுவன் = கணவர் வரட்டும்; (வந்து விட்டால்) ஒரே நாளில் துன்பமிக்க காமநோய் முழுதும் ஒழிந்து போகும்படியாக (மருந்தைக்) குடித்து விடுவேன்.

பொ. ரை: கணவர் மட்டும் வந்து விடட்டும். இந்த வேதனை மிகுந்த காம நோயும் (அதை யொட்டிய துன்பங்கள்) எல்லாம் ஒரே நாளில் ஒழிந்து போகும்படியாகக் காம இன்பம் பருகி (பரிகாரம் செய்து கொள்வேன்.)

வி - ம்: ஒரு நாள் – ஒரே நாளில். பைதல் நோய் – வேதனை தரும் காம நோய். பருகுவன் – புணர்ச்சியின்பம் அனுபவிப்பேன். கணவர் வரட்டும், இத்துணை நாளும் நான்பட்ட துன்பமும் துயரமும் ஒரே நாளில் ஒழிந்து போகும்படி அவரைக் கலந்து மகிழ்ச்சியடைவேன்—என்பது கருத்து.

ஆமாம், அவர் இன்னும் வரவில்லை என்பதற்காக நான் அவரை என்னென்னவோ சொல்லிவிட்டேன். அவர் வந்தால் நான் அவரை எப்படி வரவேற்பேனோ தெரியவில்லையே:

1267. புலப்பேன்கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன்கொல்
கண்ணன்ன கேளிர் வரின்.

ப. ரை: கண் அன்ன கேளிர் வரின் புலப்பேன் கொல் புல்லுவேன் கொல்லோ கலப்பேன் கொல் = எனக்குக் கண் போன்ற அன்பர் வந்தால் பிணங்குவேனோ! (அவரை உடனே) தழுவிக்கொள்வேனோ! (அல்லது இரண்டு ஆசையும்) கலந்து தடுமாறுவேனோ! (தெரியவில்லையே)

பொ. ரை: எனக்குக் கண்ணான என் காதலர் வந்துவிட்டால் (தாமதித்து வந்ததற்காகப்) பிணக்கம் காட்டுவேனோ! (காம ஆசையால் உடனே ஓடி) தழுவிக் கொள்வேனோ! அல்லது பிணக்கமும் ஆசையும் கலந்து தடுமாறுவேனோ! (ஒன்றும் தெரியவில்லையே)

வி - ம்: கேளிர் – அன்பர் – காதலர். என் கண்ணானவர் வந்துவிட்டால் நான் பிணங்கிக் கொள்வேனோ, அல்லது உடனே ஓடித்தழுவிக் கொள்வேனோ அல்லது இரண்டும் கலந்து தடுமாறுவேனோ தெரியவில்லை (எதுவானாலும் சரி அவர் வரட்டும்) – என்பது கருத்து.

இப்படியாகக் காதலியின் மனம் காதலனைப் பற்றி வேகமாக எண்ணியது. காதலனைப் போய்த் தாக்கியது போல், அயலூரிலிருக்கிற காதலனும் அதே சமயத்தில் காதலியை விரைந்து நினைக்கிறான்:

1268. வினைகலந்து வென்றீக வேந்தன் மனைகலந்து
மாலை யயர்கம் விருந்து.

ப. ரை: வினை கலந்து வென்று, வேந்தன் ஈக மனை கலந்து மாலை விருந்து அயர்கம் = வேலையைச் செய்து வெற்றிகரமாக முடித்துவிட்டு அரசன் விடை கொடுக்க மனைக்குச் சென்று மாலை விருந்தாகிய கலவியின்பத்தில் அயர்வு தோன்றும் வரை அனுபவிப்போம்.

பொ. ரை: மேற்கொண்டு வந்த வேலையை வெற்றிகரமாக முடித்து விட்டு அரசனிடம் விடைபெற்று வீட்டுக்குப்போய் (மனைவியுடன்) மாலை விருந்தாகிய காமக் கலவிகளை சலிக்கச் சலிக்க அனுபவிக்க வேண்டும்.

வி - ம்: வினை கலந்து வென்று – மேற்கொண்டுள்ள உத்யோக அலுவலை சரியாகச் செய்து முடித்துவிட்டு. வேந்தன் ஈக – வேந்தன் விடைகொடுக்க. மனை கலந்து – மனைக்குச் சென்று. மாலை விருந்து – காமக் கலவி. அயர்கம் – சலிக்கும்படி – ஆசை தீர அனுபவிப்பேன். வந்த காரியத்தை முடித்துக் கொண்டு அரசனிடம் விடைபெற்று விரைவில் வீட்டுக்குச் சென்று மனைவியுடன் இத்துணை நாளும் பிரிந்திருக்கும் ஏக்கம் தீர காம இன்பத்தை அனுபவிக்க வேண்டும் – என்பது கருத்து.

நான் மனைவியைப் பிரிந்துவந்து நெடு நாளாய்விட்டது. அவள் மிகவும் ஏங்கியிருப்பாள். ஆதலால் விரைவில் வேலைகளை முடித்துக்கொண்டு போக வேண்டும்:

1269. ஒருநா ளெழுநாள்போற் செல்லுஞ்சேட் சென்றார்
வருநாள்வைத் தேங்கு பவர்க்கு.

ப. ரை: சேண் சென்றார் வரும் நாள் வைத்து ஏங்குபவர்க்கு ஒருநாள் எழுநாள் போல் செல்லும் = தூரதேசம் சென்றவர் (கணவன்) திரும்பிவரும் நாளை மனதில் வைத்து ஏங்குகின்றவர்களுக்கு (பெண்களுக்கு) ஒருநாள் கழிவது ஏழு நாட்கள் போலக் கழியும்.

பொ. ரை: (தொழில் முறையாக) தூரதேசம் போயிருக்கிற கணவன் திரும்பிவரும் நாளை நினைத்து ஏங்கிக்கொண்டிருக்கிற மனைவிக்கு ஒருநாள் கழிவது ஏழு நாட்கள் கழிவதுபோல நீட்டித்துத் தோன்றும்.

வி - ம்: வைத்து – மனதில் வைத்து – எண்ணி யெண்ணி. தூர தேசம் சென்ற கணவன் வரவில்லையே என்று ஏங்கும் பெண்களுக்கு ஒரு நாள் கழிவது ஏழுநாட்கள் போல வருத்தமுண்டாக்கும். அதனால் நான் விரைந்து மனைவியிடம் போகவேண்டும் – என்பது கருத்து.

நான் மனைவியைப் பிரிந்து தூரதேசம் வந்ததும், உத்தியோகம் செய்வதும், பொருள் சம்பாதிக்க எண்ணுவதும் எல்லாம் மனைவியுடன் கூடி இல்லறம் நடத்தி இன்பமடையத்தானே? நான் நெடு நாள் பிரிந்திருப்பதில் என் மனைவி மனமுடைந்து விட்டால் :

**1270. பெறினென்னும் பெற்றக்கா லென்னு முறினென்னு
முள்ள முடைந்துக்கக் கால்.**

ப. ரை : உள்ளம் உடைந்து உக்கக்கால் பெறின் என் ஆம்? பெற்றக்கால் என் ஆம்? உறின் என் ஆம்? =(என் மனைவி) மனம் உடைந்து (ஏதேனும்) கேடடைந்து விட்டால் (நான் வந்த காரியம்) வெற்றி பெற்றால் தானென்ன ? (அதற்காக வேந்தனிடம் பரிசும் விடையும்) பெற்றுவிட்டால்தான் என்ன ? (செல்வத்தோடு என் மனைவியிடம்) சென்றடைந்தால்தான் என்ன ? (ஒரு பயனுமில்லை).

பொ. ரை: (என்னைப் பிரிந்திருக்கும் ஏக்கத்தால்) என் மனைவி மனமுடைந்தவளாகி அவளுக்கு ஏதேனும் கெடுதியுண்டாகி விட்டால் (நான் வந்த அலுவலில்) வெற்றி பெற்றுதான் என்ன பயன்? அந்த வெற்றிக்காக மன்னனிடம் பரிசும் பணமும் பெற்றுவிட்டால்தான் என்ன பயன்? (அந்த செல்வங்களுடன்) மனைவியிடம் போய்த்தான் என்ன பயன் ? (ஒரு பயனுமில்லை)

வி - ம் : பெறின் – வந்த காரியத்தில் வெற்றி பெறின். பெற்றக்கால் – அதற்காக நல்ல ஊதியமும் சிறப்பும் பெற்றக்கால். உறின் – மனைவியிடம் அடைந்தால் – மனைக்குப் போனால். 'உக்கக்கால்' என்பதற்கு இறந்துபோனால் என்று பொருள் கொள்ளல் நல்லதல்ல, 'உக்கக்கால்' என்பதற்கு 'பதனழிந்து போனால்' அல்லது 'பண்பு கெட்டுப்போனால்' என்று பொருள் கொள்ள வேண்டும். அதாவது ஏதேனும் கெடுதி வந்துவிட்டால் என்ற பொதுவான பொருள் கொள்ள வேண்டும். அந்தக் கெடுதி மரணமாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் மரணம் என்றே பொருள் கொண்டு விடுவது குற்றம். ஏன் எனில் அது அமங்கலம் என்பது மட்டுமன்றி முன்னாற் சொல்லப்பட்ட வற்றிற்கும் இனி சொல்லப் போகிறவற்றிற்கும் முரணானது. இந்தக் குறளுக்கு "காதலி நம் பிரிவினை ஆற்றாது உள்ள முடைந்து இறந்துபட்ட வழி நம்மைப் பெறக் கடவளானாலென் ? அதுவன்றியே பெற்றாலென் ? அதுவன்றியே மெய்யுறக் கலந்தாற்றான் என் ? இவையொன்றாலும் பயனில்லை'' என்று பொருள் செய்வது தெளிவற்றது என்பதுடன் மிக்க முரண் உள்ளது. என்ன

வெனின் ''காதலி நம் பிரிவினை ஆற்றாது இறந்துபட்ட வழி........................ மெய்யுறக் கலந்தாற்றான் என்'' என்று சொல்லுவது மிகவும் முரணுடையது. இறந்து விட்டபின் 'மெய்யுறக் கலப்பது' எப்படிப் பொருந்தும்? அவளாகவும் கலக்க உயிரில்லை. இவனாகப் பிணத்தைக் கலக்க மாட்டான் அல்லவா? ஆதலால் அது குற்றம். எனவே – நான் பிரிந்து வந்து நெடுநாளாகி விட்டபடியால் என் காதலி ஏக்கத்தால் மனமுடைந்து அவளுக்கு ஏதேனும் தீங்கு நேர்ந்து விட்டபின் போனால் நான் தொழிலில் வெற்றி பெறுவதும், ஊதியம் பெறுவதும், பொருள் சேர்த்துக் கொண்டு திரும்பி வீட்டுக்குப் போவதும் எல்லாம் பயனற்றதாகிவிடும். அதனால் நான் உடனே என் மனைவியிடம் போகவேண்டும் – என்பது கருத்து.

அதி. 128—குறிப்பறிவுறுத்தல்

['குறிப்பு அறிவுறுத்தல்' என்பது 'அடையாளங்கள் நிலைமையைத் 'தெரியப்படுத்துதல்'. முன் அதிகாரத்தில் தன் மனைவியிடம் உடனே போகவேண்டுமென்று விரைந்து எண்ணிய கணவன் அலுவல்களை முடித்துக்கொண்டு வீட்டுக்குத் திரும்பி வருகிறான். அப்படி வந்த காதலனும் அவன் வரவுக்காக ஏங்கியிருக்கும் காதலியும் சந்திக்கிற காட்சி இது. முன் அதிகாரத்தில் கண்ணன்ன கணவர் வந்தால் பிணங்குவதா, தழுவிக் கொள்ளுவதா, இரண்டும் சேரத் தடுமாறுவதா என்று எண்ணிப் பார்த்த காதலி, தனக்குள் தீர்மானம் செய்துகொண்டு இங்கே, கணவர் வந்ததும் முன் சொல்லப்பட்ட எதுவும் செய்யாமல் கணவனுக்குமுன் வாய் திறக்காமல் நிற்கிறாள். கணவன் பார்க்கிறான். அவள் நிலைமையை அவளுடைய குறிப்புகளால் அறிந்துகொண்டு, கணவன் தனக்குள்ளேயே நினைப்பதையும், அவன் நினைப்பதை மனைவி அனுமானித்துக் கொண்டு அவள் நினைப்பதையும் சித்திரித்துக் காட்டுவது இந்த அதிகாரம்.]

**1271. கரப்பினுங் கையிகந் தொல்லாநின் னுண்கண்
ணுரைக்க லுறுவதொன் றுண்டு.**

ப. ரை: கரப்பினும் ஒல்லா நின் உண்கண் கையிகந்து உரைக்கல் உறுவது ஒன்று உண்டு = (நீ) மறைத்தாலும் (அதை) ஒத்துக்கொள்ளாமல் உன்னுடைய மையுண்ட கண்கள் (உன்னையும்) மீறி (என்னிடம்) சொல்லவருகின்ற (சேதி) ஒன்று உண்டு.

பொ. ரை : நீ மறைத்தாலும் அதை ஒத்துக் கொள்ளாமல் உன்னுடைய மையுண்ட கண்கள் உன்னை மீறி (என்னிடத்தில்) சொல்லவரும் சேதி ஒன்று இருக்கிறது. (அதை அறிந்து கொண்டேன்).

வி-ம் : கரப்பினும் – மறைத்தாலும். கையிகந்து – கடந்து – மீறி. ஒல்லா – சம்மதிக்காத. உறுவது – முன்வருவது. நீ மறைத்தாலும் அதற்கு மாருக உன்னுடைய கண்கள், நீ என்னுடன் பேசக்கூடாது என்ற உன் தீர்மானத்தையும் மீறி எனக்கு உன் நிலைமையைச் சொல்லுகின்றன – என்பது கருத்து. இது அவன் மனதுக்குள் சொல்லிக் கொள்வது.

அடடா! இவளுடைய மேனியழகு இவ்வளவு வாடியிருக்கிறதே! மிகுந்த துன்பங்களை சகித்திருக்கிருள் எனத் தெரிகிறது :

1272. கண்ணிறைந்த காரிகைக் காம்பேர்தோட் பேதைக்குப்
பெண்ணிறைந்த நீர்மை பெரிது.

ப. ரை : கண்நிறைந்த காரிகை காம்பு ஏர் தோள் பேதைக்குப் பெண் நிறைந்த நீர்மை பெரிது = கண்ணைக் களிப்பிக்கும் அழகும் மூங்கிலை யொத்த மென்மையான தோள்களும் உடையவளான (இவளென்ன இப்படியிருக்கிருளே!). இப்பேதைக்குப் பெண்களின் நிறையான குணம் அதிகம் (எனத் தெரிகிறது.)

பொ. ரை : கண்ணைக் கவரும் அழகும் மூங்கிலைப் போன்ற மினுமினுப்பான தோள்களும் உடைய இவள் (இவ்வளவு அழகிழந்து மங்கிப் போய் இருக்கிருளே!). இவளுக்குப் பெண்களின் இயல்பான நிறையுடைமை என்னும் குணம் அதிகமாக இருக்கிறது. அதனுல் (மிகுந்த வேதனைகளை சகித்திருக்கிருள் என்பது தெரிகிறது.)

வி-ம் : கண் நிறைந்த - கண்ணுக்கு நிறைவுதரும் – கண்ணைக் களிப்பிக்கும். காரிகை – அழகு. காம்பு – மூங்கில். ஏர் – ஒப்பான. பெண் நிறைந்த நீர்மை – பெண்ணின் நிறைகுணமாகிய தன்மை. அதாவது பெண்ணுக்கு இயல்பான 'நிறையுடைமை' என்னும் குணம். நிறையுடைமை என்பது காமத்தை சகிக்கும் தன்மை. அதிகமான காமவேதனையடைந்து அதை அதிகமாக அடக்கியதால் முகப் பொலிவும் மினுமினுப்பும் குறைந்து பசந்திருப்பதைக் குறிப்பது. 'பெண்ணிறைந்த நீர்மை' என்பதற்குப் 'பெண்பாலாரிடத்து நிறைந்த மடமை' என்று பொருள் கொள்வது தவறு. 'பேதைக்கு' என்ற சொல்லிலேயே 'மடமை' இருப்பதால்

இங்கே 'நிறைந்த நீர்மை' என்பது 'நிறையுடைமை' என்ற 'குணம்' என்பதே பொருள். ஆதலால் – கண்ணைக் கவரும் அழகும் மூங்கிலைப் போன்ற பளபளப்பு முள்ள இவள் மேனி இவ்வளவு வாடியிருப்பதைப் பார்த்தால் இவள் மிகுந்த காம வேதனையடைந்து அதை அடக்கிக் கொண்டிருந்திருக்கிறாள் எனத் தெரிகிறது – என்பது கருத்து.

அது எப்படித் தெரிகிறதென்றால்:

1273. மணியிற் றிகழ்தரு நூல்போன் மடந்தை
யணியிற் றிகழ்வதொன் றுண்டு.

ப. ரை: மணியில் திகழ்தரும் நூல்போல் மடந்தை அணியில் திகழ்வது ஒன்று உண்டு = மணிவடத்தில் தெரியக்கிடக்கிற நூல்போல் இந்தப் பெண்ணின் ஆபரணங்களால் அறியக் கூடிய (உண்மை) ஒன்று இருக்கிறது.

பொ. ரை: மணிகள் (கோத்த ஒரு மாலையில்) நூல் (இருப்பது நிச்சயமாகத் தெரியக்கிடக்கிற) உண்மைபோல, இப்பெண்ணின் ஆபரணங்களில் (அவள் எவ்வளவு துன்பம் சகித்திருக்கிறாள் என்று) அறியச் செய்கிற உண்மை ஒன்று விளங்குகின்றது.

வி - ம்: மணி – மணிகளாலாகிய மாலை. 'திகழ்வது' என்பதற்கு 'விளக்கமாகத் தெரியப்படுத்துவது' என்பது பொருள். மணியில் 'திகழ்தரும் நூல்' என்றது ஒரு மணி வடத்தில் நூல் இருப்பது கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் மணிகளெல்லாம் சேர்ந்து மாலையாக இருப்பதே அம்மணிகளின் நடுவே நூல் இருப்பதை தெளிவாகத் தெரியப்படுத்துகிறது – என்பதாம். 'அணி' என்பதற்கு 'புணர்ச்சியாலாய அழகு' என்பது குற்றம். அந்தப் பொருள் பொருந்தாமை மட்டுமல்ல, கணவனும் மனைவியும் இன்னும் புணரவில்லை. வெறும் சந்திப்புதான் இங்கே. அதுவும் மௌனமான சந்திப்பு. ஆதலால் 'அணி' என்பதற்கு 'ஆபரணம்' என்பது பொருள். ஆபரணத்தில் அறியக்கிடப்பது என்னவென்றால் காதலியின் ஆபரணம் வெறும் வளையல்கள் மட்டுமாக இருப்பதும், அவைகளும் மிகவும் தொள தொளத்துப் போகும்படி அவள் மிக்க மெலிந்து போயிருப்பதும். ஆதலால்– கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் மணிவடத்தில் நூல் இருக்கிற உண்மை போல, என் மனைவி சகித்துக் கொண்டிருந்திருக்கிற துன்பங்களை அவள் சொல்லாவிட்டாலும் அவளுடைய வளையல்களே தெளிவாகத் தெரியப்படுத்துகின்றன–என்பது கருத்து.

அவ்வளவு துன்பங்களையும் பொறுத்துக்கொண்டு என் வரவுக்காக ஏங்கியிருந்திருக்கிற என்காதலி, நான் வந்த உடனே வரவேற்று மகிழாமல் கோபங் கொண்டவள்போல் வாய் திறவாமல் நிற்கிறாளே! இருந்தாலும் நான் வந்துவிட்டதில் தான் மகிழ்ச்சியடைவதை அவள் மறைக்க முயன்றாலும்:

1274. முகைமொக்கு ளுள்ளது நாற்றம்போற் பேதை
நகைமொக்கு ளுள்ளதொன் றுண்டு.

ப. ரை: முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை நகை மொக்கு உள் உள்ளது ஒன்று உண்டு = இதழ் குவிந்த பூ மொட்டுக்கு உள்ளே இருக்கிற மணம்போல் இப்பேதைப் பெண்ணின் பல்தெரியாமல் இதழ்குவிந்திருக்கிற வாயின் உள்ளே ஒன்று (சிரிப்பு) இருக்கிறது (தெரிகின்றது.)

பொ. ரை: (இதழ் விரியாவிடினும்) மலரப் போகிற பூமொட்டுக்கு உள்ளே இருக்கிற மணம் (வெளியிலும் வீசுவது) போல, (பல் தெரியாமல்) குவிந்திருக்கிற இப்பேதையின் உதடுகளின் உள்ளே (சிரிப்பு) இருக்கிறது (எனக்குத் தெரிகிறது.)

வி. ம்: முகைமொக்குள் – முகைந்திருக்கிற மொக்குள். மொக்குள் - மலரும் தருணமுள்ள பூமொட்டு. உள்ளது - உள்ளே இருப்பது. நாற்றம் - நல்லவாசனை. நகை - பல். நகை மொக்குள் - பல்லை மறைக்கும் உதடுகளின் குவிகை. உள்ளது ஒன்று உண்டு - உள்ளே இருக்கிற ஒன்று உண்டு. 'உண்டு' என்பது 'உண்மை' என்ற பொருள் தருவது. இதழ்குவிந்திருந்தாலும், முதிர்ந்த பூமொட்டின் உள்ளேயிருக்கிற வாசனை வெளியிலும் முகரக் கூடியதாக இருப்பது போல, இவளுடைய உதடுகள் குவிந்திருந்தாலும், அவற்றின் உள்ளே இருக்கிற மகிழ்ச்சி எனக்குத் தெரியக் கிடக்கிறது-என்பது கருத்து.

நான் நெடுநாள் பிரிந்திருந்து, இவள் இவ்வளவு மெலிந்து போகும்படி உண்டான துன்பங்களுக்குக் காரணமாக இருந்தும் என் வரவில் இவ்வளவு மகிழ்ச்சி காட்டும் இவள்:

1275. செறிதொடி செய்திறந்த கள்ள முறுதுயர்
தீர்க்கு மருந்தொன் றுடைத்து.

ப. ரை: செறிதொடி செய்து இறந்த கள்ளம் உறுதுயர் தீர்க்கும் மருந்து ஒன்று உடைத்து = (ஒன்றோடொன்று மோதி) சேர்ந்திருக்கும் வளையல்களையுடைய இப்பெண் சகித்து

முடிந்திருக்கிற புண்கள் (எனக்கு) வரக்கூடிய துயரங்களை யும் தீர்த்து விடும் மருந்து ஒன்றை உடையன.

பொ. ரை: ஒன்றோடொன்று மோதிக் கொண்டிருக்கிற வளை யல்களையுடைய இவள் சகித்திருக்கிற துன்பங்கள் எனக்கு வரும் துயரங்களையும் மாற்றிவிடக்கூடிய மருந்தின் தன்மை உள்ளன.

வி - ம்: 'செறிதொடி' என்பது, முன் பூரிப்பினால் கைகள் செழித் திருந்தபோது ஒன்றோடொன்று மோதிக்குலுங்காமல் இருந்த வளையல்கள் இப்போது கைகள் மெலிந்து போனதால் மோதிக் குலுங்குகின்றன — என்பதைக் குறிப்பது. செய்து இறந்த — அனுபவித்து முடிந்த — அனுபவித்திருக்கிற. கள் ளம் — புண்கள் - துன்பம். உறுதுயர் - வரக்கூடிய துயரங் கள். இவள் காட்டியிருக்கிற சகிப்புத்தன்மை எனக்கு ஏதே னும் துயரம் வந்தாலும் அதை மாற்றிவிடக் கூடிய மருந் துக்கு ஒப்பாகும். (நான் பாக்கியசாலி தான்) - என்பது கருத்து. 'கள்ளம்' என்பது—பிறர் அறிய முடியாதபடி தனக் குள் அனுபவித்த வேதனை.

என்னை நினைத்து இவ்வளவு ஏங்கி இளைத்துப் போயிருக்கிற இவள், நான் வந்து விட்டதில் மகிழ்கின்றாள் என்பது தெரி கிறது. ஆனால் தன் உதட்டுக்குள் இருக்கிற அந்த மகிழ்ச் சியை வெளிப்படுத்தாமல் இப்படி மௌனமாக நிற்கிறாளே! ஆம், அவள் அப்படி நிற்பது:

1276. பெரிதாற்றிப் பெட்பக் கலத்த லரிதாற்றி
யன்பின்மை சூழ்வ துடைத்து.

ப. ரை: பெரிது ஆற்றி, பெட்ப கலத்தல் அரிது ஆற்றி, அன் பின்மை சூழ்வது உடைத்து = மிகவும் துன்பம் அடைந்து (அதனால்) விருப்பத்தோடு தழுவிக்கொள்ளல் இல்லாமற் செய்து (என்னுடைய) அன்பில்லாத்தனத்தை தாக்குகிற தன்மை உடையது.

பொ. ரை: (நான் நெடு நாள் பிரிந்திருந்துவிட்டதால்) மிகுந்த துன்பங்களை சகித்துக்கொண்டிருந்து (அந்த வருத்தத்தால் முன்போல்) ஆசையோடு தழுவிக்கொள்ளாமல் (இவள் இப்படி நிற்பது) என்னுடைய அன்பில்லாமையை இடித்துக் கூறுவது போன்ற தன்மையுடையதாக இருக்கிறது.

வி - ம்: ஆற்றி - பொறுத்து - சகித்து. 'கலத்தல்' என்ப தற்கு 'கலவிப் புணர்ச்சி' என்பது பொருளல்ல. 'நிறை யழிதல்' என்ற அதிகாரத்தில் "புலப்பல் எனச் சென்றேன் புல்லினேன் நெஞ்சம் கலத்தல் உறுவது கண்டு" என்ற

குறளிற் சொல்லப்பட்ட 'புல்லினேன்' என்னும் 'தழுவுதல்'. 'அரிதாற்றி' - என்பதிலுள்ள 'ஆற்றி' என்பதற்குச் 'செய்து' என்பது பொருள். அரிதாற்றி - அரிதாகச் செய்து - இல்லாமற் செய்து - இல்லாமல். அரிது - இல்லாதது. சூழ்வது - கண்டிப்பது - தாக்குவது. அதனால் - நானில்லாமல் மிகுந்த துன்பமடைந்திருக்கிற காதலி அந்த வருத்தத்தினால் முன்போல் ஆசையோடு எதிர் கொண்டு தழுவிக்கொள்ளாமலிருப்பது, நான் நெடு நாள் பிரிந்திருந்த அன்பின்மையை இடித்துக் கூறுவது போன்றிருக்கிறது - என்பது கருத்து.

வாயே திறக்காமல் தன் முன் நிற்கிற காதலியைப் பார்த்து, காதலன் இப்படியெல்லாம் எண்ணுகிற குறிப்புகளை உணர்ந்த காதலி தானும் தனக்குள்ளேயே எண்ணிக் கொள்ளுகிறாள்:

இத்துணை நாளாக என்னைத் தவிக்கவிட்டுப் பிரிந்திருந்த இவரால் நான் எவ்வளவு துன்பமடைந்திருக்கிறேன் என்பதை நாமேன் சொல்ல வேண்டும். அவரே பார்த்துக்கொள்ளட்டும். இந்த வளையல்களே சொல்லும்:

1277. தண்ணந் துறைவன் றணந்தமை நம்மினு
முன்ன முணர்ந்த வளை.

ப. ரை: தண் நம் துறைவன் தணந்தமை நம்மினும் முன்னம் உணர்ந்த வளை = அன்புள்ள நம் தலைவன் பிரிந்து போய் விட்டதை நமக்கும் முன்னால் அறிந்தவை வளையல்கள்.

பொ. ரை: அன்புள்ள என் காதலர் என்னை விட்டுப் பிரிந்து போனார் என்பதை எனக்கும் முன்னால் அறிந்தவை என் வளையல்களே (ஆனதனால் அவர் பிரிந்து நான் அடைந்துள்ள மெலிவை வளையல்களே சொல்லட்டும்.)

வி - ம்: தண் – அன்புள்ள. துறைவன் - தலைவன் - கணவன். தணந்தமை - பிரிந்தமை. என் காதலர் பிரிந்த உடனேயே எனக்குத் தெரியாமல் என் உடல் இளைத்து வளையல்கள் நெகிழ்வதாயின. நான் மெலிந்துபோனேன் என்பதை நான் அறிந்ததும்கூட என் வளையல்கள் தளர்ந்து போனதைக் கண்ட பிறகுதான். ''பணை நீங்கிப் பைந்தொடி சோரும் துணை நீங்கித் தொல்கவின் வாடிய தோள்'' என்று 'உறுப்பு நலனழிதல்' என்ற அதிகாரத்தில் சொன்னபடி, காதலர் பிரிந்த உடன் எனக்கும் தெரியாமல் என் கைகள் மெலிந்துவிட்டன - என்பதைக் குறிப்பது. ஆதலால் – என் உடல் மெலிந்து விட்டதை என்னைக் காட்டிலும் அதிகமாக என் வளையல்களே அவருக்குக் காட்டும் - என்பது கருத்து.

என்னுடைய உடல் மெலிவை வளையல்களே சொல்லுவதுடன் நான் எவ்வளவு வேதனை யடைந்திருக்கிறேன் என்பதை என் மேனியே சொல்லும் :

1278. நெருநற்றுச் சென்றாரெங் காதலர் யாமு
மெழுநாளே மேனி பசந்து.

ப. ரை : எம் காதலர் நெருநற்று சென்றார் யாமும் மேனி பசந்து எழுநாளேம் = என் காதலர் நேற்றுப் போனார்; நானும் என் மேனி பசந்து ஏழு நாட்களானது போல (நிறம் மாறி விட்டேன்.)

பொ. ரை : என்னுடைய காதலர் என்னைவிட்டு நேற்றுப் போனார்; இன்றைக்கு அவர் பிரிந்து ஏழு நாட்கள் ஆகிவிட்டது போல் என் மேனி நிறம் அவ்வளவு பசந்து விட்டது.

வி - ம் : நெருநற்று - நேற்று. ஒரு நாள் பிரிவுக்கே ஏழு நாள் பிரிவின் பசப்பு வந்து விட்ட தென்றால் இவ்வளவு நாட்கள் பிரிந்திருந்ததற்கு நான் எவ்வளவு வேதனை யடைந்திருக்கிறேன் என்பதை இப்போதுள்ள என் மேனி பசப்பே அவருக்குச் சொல்லட்டும் - என்பது கருத்து.

இப்படியாகத் தனக்குள்ளேயே எண்ணி, தன் உடல் மெலிவை காதலனுக்குச் சுட்டிக் காட்டுவது போல் :

1279. தொடிநோக்கி மென்றோளு நோக்கி யடிநோக்கி
யஃதாண் டவள்செய் தது.

ப. ரை : தொடி நோக்கி மென்தோளும் நோக்கி அடி நோக்கி அஃது ஆண்டு அவள் செய்தது = வளையல்களைப் பார்த்து, மெலிந்துபோன தோள்களையும் பார்த்து, பாதங்களைப் பார்த்த, அதுதான் அப்போது அவள் செய்தது.

பொ. ரை : (தளர்ந்து போன) வளையல்களைப் பார்த்துவிட்டு, மெலிந்து போன தன் கைகளையும் பார்த்துவிட்டு, (தலை குனிந்து கொண்டு) தன் பாதங்களைப் பார்த்தாள், அவ்வளவு தான் அப்போது அவள் செய்தது.

வி - ம் : தொடி - வளையல். மென்தோள் - மெலிந்து விட்ட கைகள். கணவனுக்கு முன்னால் நின்ற மனைவி, ஒரு வார்த்தை கூடப் பேசாமல், தன்னுடைய தொளதொளத்துப்போன வளையல்களைப் பார்த்துவிட்டு மெலிந்து, போன தோள்களையும் பார்த்துவிட்டுத், தலைகுனிந்து கொண்டாள் - என்பது கருத்து.

அப்படி அவள் செய்ததைக் கண்ட கணவன் அவளுடைய பெண்மையைத் தனக்குள்ளே பாராட்டுகிறான் :

1280. **பெண்ணினாற் பெண்மை யுடைத்தென்ப கண்ணினாற்**
காமநோய் சொல்லி யிரவு.

ப. ரை : கண்ணினால் காமநோய் சொல்லி இரவு பெண்ணினால் பெண்மை உடைத்து என்ப = (வாய்பேசாமல்) கண் பார்வையினாலேயே (தன்) காமவேதனையைத் தெரியப்படுத்தி வேண்டிக் கொள்ளும் (தன்மையுடைய) பெண்ணினால்தான் பெண்தன்மை பெருமையுடையதாகிறது என்பது (இது தான்)

பொ. ரை : வாய் பேசாமல் கண் பார்வையினாலேயே தனக் குற்ற காமவேதனையைத் தெரியப்படுத்தி (அவ் வேதனை யைத் தீர்க்கும்படி) வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிற (குண முள்ள) பெண்ணால் தான் பெண் இனத்துக்கே பெருமை உண்டாகிறது என்று சொல்லப்படுவது (உண்மைதான்).

வி - ம் : கண்ணினால் - பார்வையினால். இங்கே அந்தப் பார்வை அவள் தன் வளையலையும் கைகளையும் பாதங்களையும் பார்த்த பார்வையைக் குறிப்பது. இரவு - இரத்தல். தன்னுடைய காம ஆசையைக் கண் பார்வையினாலேயே கணவனுக்குத் தெரி வித்துக்கொள்ளுகிற பெண்மைதான் சிறப்புடையது - என் பது கருத்து.

அதி. 129—புணர்ச்சிவிதும்பல்

['புணர்ச்சிவிதும்பல்' என்பது 'கலவி செய்வதற்கு விரைந்து ஆசை கொள்ளுதல்'. முன் அதிகாரத்தில் வாய் பேசாமல் 'கண்ணினாற் காமநோய் சொல்லி இரந்த' காதலி, தன்னுடைய தோழியிடம் ஏகாந்தமாகக் காதலர் வந்துவிட்ட மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டிருக்கிறாள். அந்தப்பேச்சில் நெடுநாள் பிரிந்திருந்து வந்துவிட்ட காதலனைப் புணர அவளு டைய காமம் துடிக்கிற வேகத்தையும் அதற்கான காரணங் களையும் சொல்லி, கணவனை நாடுவதைச் சித்திரிக்கும் காட்சி இந்த அதிகாரம்.]

1281. **உள்ளக் களித்தலுங் காண மகிழ்தலுங்**
கள்ளுக்கில் காமத்திற் குண்டு.

ப. ரை : உள்ள களித்தலும் காண மகிழ்தலும் கள்ளுக்கு இல்; காமத்திற்கு உண்டு = நினைக்கும்போதே வெறி தருவதும்,

கண்ட உடனே மகிழ்ச்சி தருவதும் கள்ளுக்கு இல்லை; காமத்திற்கு உண்டு.

பொ. ரை : நினைக்கும்போதே வெறிமூட்டும் குணமும் பார்த்த உடனே மன மகிழ்ச்சியூட்டும் குணமும் கள்ளுக்கு இல்லை; ஆனால் காமத்துக்கு உண்டு.

வி-ம் : கள்ளும் காமமும் ஒருவிதத்தில் ஒரே தன்மையானவை. என்னவெனில், அவை இரண்டும் அவற்றை நாடுகின்றவர்களுக்கு என்ன துன்பம் அல்லது நடை ஏற்பட்டாலும் மீண்டும் மீண்டும் அவற்றை விரும்புகின்ற வெறியுண்டாக்குவன. என்றாலும் காமம் நினைக்கும்போதே வெறியுண்டாக்கும்; கள் குடித்த பிறகுதான் வெறியுண்டாக்கும். மேலும் காமம் கண்ணிற்காணாமல் நினைக்கும்போது வெறியுண்டாக்கினாலும் காணும்போது வெறியில்லாத மகிழ்ச்சிதான் உண்டாக்கும்; கள்ளோ காணும்போது அருவருப்புதான் உண்டாக்கும். எனவே — காதலர் இல்லாத காலத்தில் அவரை நினைக்கும் போதெல்லாம் எனக்குண்டாகும் காம ஆசை, கள்ளைக் குடித்துவிட்டது போன்ற வெறிகொடுத்து நான் காதலரைப் பற்றி என்னென்னவோ சொல்லிக் கொண்டிருந்தேன். என்றாலும் இப்போது அவரைக் கண்ட உடன் அந்த வெறியெல்லாம் நீங்கி மகிழ்ச்சியடைந்துவிட்டேன் — ஆதலால் — காமமும் கள்ளைப்போல் போதையுண்டாக்கி புத்தி தடுமாறச் செய்யும். என்றாலும் கண்ணுற் காணமலும் நினைத்த உடன் போதை உண்டாக்கும் தன்மையும், கண்டுவிட்டால் தடுமாற்றம் மாறி மகிழ்ச்சியுண்டாக்கும் தன்மையும் கள்ளுக்கு இல்லை காமத்துக்குத்தான் உண்டு — என்பது கருத்து.

காதலர் நெடுநாள் பிரிந்திருந்ததால் எனக்குண்டாயிருந்த காமநோய் இப்போது அதிகரிக்கிறது. அதனால் :

**1282. தினைத்துணையு மூடாமை வேண்டும் பனைத்துணையுங்
காம நிறைய வரின்.**

ப. ரை, பனைத்துணையும் காமம் நிறைய வரின் தினைத்துணையும் ஊடாமை வேண்டும் = பனையளவு நீண்டிருக்கும் காமம் மிகுந்து வரும்போது தினையளவும் பிணங்காமலிருக்க விரும்புகிறது.

பொ. ரை : பனைபோல் (நீண்டநாள் பிரிவால் வளர்ந்துவிட்ட) காமமெல்லாம் இப்போது சேர்ந்து வருவதால் தினையளவு கூடப் பிணங்காமல் புணரவேண்டுமென்று ஆசை உண்டாகிறது.

வி- ம்: 'பனைத்துணையும்' என்றது, நெடுநாள் பிரிந்திருந்த நீட்டத்தைக் குறிப்பது. இக்குறள் பொது விதியாகச் சொல்லப்படுவதல்ல. இப்போது காதலிக்குள்ள விருப்பத்தை கூறுவது. ஆதலால் 'வேண்டும்' என்பதற்கு 'செய்ய வேண்டியது நியாயம்' என்ற முறையில் பொருள் கொள்ளாமல் 'என் மனம் விரும்புகிறது' என்று மட்டும் கொள்ள வேண்டும். 'பனைத்துணையும் காமம் நிறையவரின்' என்பது 'நெடுநாள் பிரிவால் வளர்ந்துவிட்ட காமம் இப்போது சேர்ந்து வருவதால்' என்ற பொருளது. நிறைய — ஒன்ருகக் கூடி. நெடுநாளாகக் காதலர் பிரிந்திருந்ததால் எனக்குற்ற காமமெல்லாம் இப்போது ஒன்ருகச் சேர்ந்து வருவதால் உடனே காதலரைப் புணர என் ஆசை விரைகின்றது — என்பது கருத்து.

என்னைப் பற்றிய சிந்தனையே இல்லாமல் இவ்வளவு நாள் வெளியூர்களில் இருந்து விட்டவர் என்ருலும்:

1283. பேணது பெட்பவே செய்யினுங் கொண்கனைக்
காணு தமையல கண்.

ப. ரை: பேணது பெட்பவே செய்யினும் கொண்கனை காணது கண் அமையல = (என் விருப்பத்தை) கருதாமல் தம் விருப்பத்தின்படியே செய்தவராஞலும் கணவரைப் பார்க்காமல் கண்கள் அமைதியடைய வில்லையே!

பொ. ரை: (என்னைப்பற்றிய) எண்ணமே இல்லாமல் தாம் விரும்பியபடி (இப்படி நெடுநாள்) பிரிந்திருக்கச் செய்தவராஞலும் கணவரைப் பார்க்காமல் கண்கள் அமைதி கொள்ளவில்லை.

வி - ம்: இந்தக் குறள், திரும்பி வந்துவிட்ட கணவன் வீட்டின் வேருெரு பகுதியில் இருக்க, மனைவி தோழியோடு தனியே தன் காமத்துடிப்பைச் சொல்லி, காதலர் அந்த வீட்டுக்குள்ளேயே பிரிந்திருப்பதைக் கூடப் பொறுக்க முடியாதவளாக அவரைப் பார்த்துக் கொண்டே இருக்க விரும்புவதைக் குறித்தது. பேணது பெட்பவே செய்யினும் — என் பெட்புகளைப் பேணமல் தாம் பெட்பவே செய்யினும் — என் விருப்பங்களை மதிக்காமல் தாம் விரும்புகிறபடியே செய்தவராஞலும். அந்த விருப்பம்—நான் அவர் விரைவில் திரும்பிவர வேண்டுமென்பதை மதிக்காமல் தாம் விரும்பியபடியே தாமதப்பட்டு வந்தது. அமையல — அமைதி கொள்ள மறுக்கின்றன. ஆதலால் — என் விருப்பத்தை மதிக்காமல் தாமதித்து வந்தவராஞலும் அவரைப் பார்த்துக்கொண்டேயிருக்க விரும்பி என் கண்கள் அமைதி கொள்ள மறுக்கின்றன — என்பது கருத்து.

அதனாலேதான் அவர் வந்தால் அவருடன் பிணங்கிக் கொள்ள வேண்டுமென்று நான் எண்ணினது முடியவில்லை. அவரைக் கண்டதும்!

1284. ஊடற்கட் சென்றேன்மற் றேழி யதுமறந்து
கூடற்கட் சென்றதென் னெஞ்சு.

ப. ரை: தோழி! ஊடல் கண் சென்றேன் மன் என் நெஞ்சு
அது மறந்து கூடல்கண் சென்றது = தோழி! (அவர் வந்
ததும் என் வருத்தத்தைக் காட்டிப்) பிணங்க வேண்டுமென்று
தான் (அவர் முன்) சென்றேன்; ஆனால் (அவரைக் கண்ட
தும்) என் நெஞ்சம் அதை மறந்துவிட்டு அவருடன் புணர்ச்
சியை எண்ணிவிட்டது.

பொ. ரை: தோழி! (நானென்ன செய்வேன்) அவருடன் என்
வருத்தத்தைக் காட்டிக்கொள்ள எண்ணித்தான் அவர் முன்
போனேன்; ஆனால் அவரைக்கண்டதும் என் மனம் அதை
மறந்துவிட்டு அவருடன் புணரவேண்டுமென்ற எண்ணத்தில்
புகுந்துவிட்டது.

வி-ம்: மன் — ஆனால் என்னும் மாற்று தரும் அசை. 'பேணாது
பெட்பவே செய்தவ' ரானதால் ஊடல் செய்யச் சென்றது.
இங்கே 'ஊடல்' என்பது கலவிப் பிணக்கமல்ல. சிறு கோப
மும் கலந்த வருத்தம். இது முன் அதிகாரத்தின் கடைசியில்
'கண்ணினாற் காமநோய் சொல்லி இரவு' என்றதை ஒட்டிப்
பேசுவது. அவர் வந்தால் அவரிடம் எனக்குள்ள வருத்தத்
தைக் காட்டிக்கொள்ள வேண்டுமென்றுதான் அவர் வந்ததும்
அவர்முன் சென்றேன். ஆனால் அவரைக் கண்டதும் என்
மனம் அதை மறந்துவிட்டுப் புணர்ச்சியை எண்ணப் புகுந்து
விட்டது. என்னசெய்வேன் தோழி! — என்பது கருத்து.

காதலர் வாராதபோது அவர் எனக்குப் பல குற்றங்கள்
செய்து விட்டதாகத் தோன்றுகிறது; அவர் வந்துவிட்
டாலோ:

1285. எழுதுங்காற் கோல்காணாக் கண்ணேபோற் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

ப. ரை: எழுதுங்கால் கோல் காணா கண்ணேபோல் கொண்
கன் கண்ட இடத்து பழிகாணேன் = (கண்ணுக்கு மை)
எழுதும் போது அஞ்சனக் கோலைக் (கண்கள்) காண முடியா
தது போலவே கணவரைக் கண்டுவிடும்போது (அவரிடம்
உள்ள) குற்றம் காண முடிவதில்லை.

பொ. ரை: (அஞ்சனக் கோலால் கண்ணுக்கு) மையெழுதும் போது அஞ்சனக்கோலை கண்கள் பார்க்க முடிவதில்லை. அதுபோலவே கணவரைக் கண்ட உடன் (எனக்கு அவர் செய்த) குற்றங்கள் மறைந்து விடுகின்றன.

வி-ம்: எழுதுதல் — தீட்டுதல். கோல் — அஞ்சனக் கோல். கண்ணுக்கு மைதீட்டும் போது, அஞ்சனக்கோல் கண்ணுக்கு வெகு சமீபத்தில் இருக்கிறது. அதைக் கண் பார்க்க முடிவதில்லை. அதனால் அக்கோலிலுள்ள குற்றம், குறை, கோணல் முதலிய ஒன்றும் தெரியாது. ஆனால் அதே கோலை எட்டப் பிடித்துப் பார்த்தால் அதிலுள்ள குற்றம் குறைகள் தெரியும். அதைப்போலவே கணவர் அருகிலிருக்கும் போது அவர் நெடுநாள் பிரிந்திருந்து துன்பமுண்டாக்கிய குற்றம் மறைந்து விடுகிறது. ஆனால் அதே கணவர் தூரதேசம் போயிருந்தபோது மனம் அவரிடம் பல குற்றங்கண்டு நிந்தித்துக் கொண்டிருந்தது. அதனால் — கண்ணுக்கு மைதீட்டும் அஞ்சனக்கோல் கண்ணுக்கு வெகு சமீபத்தில் இருக்கும் போது அதைப்பார்க்க முடியாதிருப்பது போலவே கணவர் எனக்குச் சமீபத்தில் வந்துவிட்டதனால் அவர் குற்றமெல்லாம் மறந்து விடுகிறேன் — என்பது கருத்து.

காதலரைக் கண்டுவிட்டால் அவர் செய்த குற்றங்களை மறந்து விடுகிறேன் என்பது மட்டுமல்ல:

**1286. காணுங்காற் காணேன் றவறாய காணாக்காற்
காணேன் றவறல் லவை.**

ப. ரை: காணுங்கால் தவறாய காணேன்; காணாக்கால் தவறு அல்லவை காணேன் = (காதலரைப்) பார்க்கும் போதெல்லாம் அவரிடத்தில் குற்றமே காணமுடிவதில்லை; அவரைப் பார்க்காத போதெல்லாம் அவரிடம் குற்றத்தைத் தவிர வேறெதையும் காணமுடிவதில்லை.

பொ. ரை: காதலரைப் பார்த்துக் கொண்டே இருந்தால் அவரிடத்தில் எந்தக் குற்றமும் இருப்பதாகத் தெரிவதில்லை. (ஆனால்) அவரைப் பார்க்காவிட்டால் அவரிடம் குற்றங்களைத் தவிர வேறொன்றும் எனக்குத் தெரிவதில்லை.

வி-ம்: என் காதலர் என்னுடன் இருந்து கொண்டேயிருந்தால் அவர் என்ன குற்றம் செய்தாலும் அது குற்றமாகவே தோன்றுவதில்லை. ஆனால் அவர் என்னைவிட்டுப் பிரிந்து போனால் அவர் எவ்வளவு நல்ல காரியத்துக்குப் போனாலும் அது குற்றமாகவே தோன்றுகிறது - என்பது கருத்து.

அப்படிப்பட்ட நான் அவரைக் கண்டுவிட்டபின் எப்படிப் பிணங்கமுடியும்? நான் இப்போது பிணங்கினால் அது எப்படியிருக்குமென்றால்?

1287. உய்த்த லறிந்து புனல்பாய் பவரேபோற்
பொய்த்த லறிந்தென் புலந்து.

ப. ரை: உய்த்தல் அறிந்து புனல் பாய்பவரே போல் பொய்த்தல் அறிந்து புலந்து என் = தப்பித்துக் கொள்வோமென்பதை (நிச்சயமாகத்) தெரிந்து கொண்டு (முழுகி இறந்துவிடுகிறேன் என்று கிணற்றிலோ ஆற்றிலோ) நீரிற் குதிக்கிறவர்களைப் போலவே (பிணங்குவது) பொய்யாகிவிடும் என்பதைத் தெரிந்து கொண்டு பிணங்குவதில் என்ன பயன்?

பொ. ரை: கரையேற்றிவிட (ஆள் இருப்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டு (முழுகி இறந்து போகிறேன் என்று மருட்டி கிணற்றிலோ ஆற்றிலோ) தண்ணீரில் குதிப்பவர்களைப்போல (என் மனம் என்னைப் பிணங்கவிடாது. அதனால் என் பிணக்கம்) பொய்யாகிவிடும் என்பதைத் தெரிந்து கொண்டே நான் பிணங்குவதால் என்ன பயன்?

வி-ம்: உய்த்தல் – தப்பவைத்தல். புனல் பாய்பவர் - நீரிற் குதிப்பவர். பொய்த்தலறிந்து – என் புலவி பொய்யாகிவிடும் என்பதைத் தெரிந்தும். எப்படிப் பொய்யாகுமென்று தெரியுமெனின் "ஊடற்கண் சென்றேன் தோழி அதுமறந்து கூடற்கண் சென்றது என் நெஞ்சு" என்றபடி, நான் பிணங்கினாலும் என் மனம் புணரவே தூண்டி என் பிணக்கம் பொய்யாகிவிடும். புலந்து – பிணங்கி – ஊடி. சிலபேர் தம்மைச் சாகவிடாமல் கரையேற்றிவிடக் கூடியவர்கள் அருகிலிருப்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டு, பிறரை பயமுறுத்துவதற்காக முழுகி இறந்து போவதாகக் குளத்திலோ, கிணற்றிலோ, ஆற்றிலோ தண்ணீரில் குதித்து விடுவார்கள். அதனால் – தப்பித்துக் கொள்வது நிச்சயமென்று தெரிந்து கொண்டு, முழுகி இறந்துவிடுவதாகப் பயமுறுத்த நீரில் குதிப்பவர்களைப்போல நான், என்மனம் என்னைப் பிணங்கவிடாது என்பதை நிச்சயமாகத் தெரிந்தபின் தோழி! நான் பிணங்குவதால் என்ன பயன்? – என்பது கருத்து.

ஆகையினால் தோழீ! என் மனம் புணர்ச்சிக்கு விரைகின்றது. கண்கள் காதலரைப் பார்க்கத் தவிக்கின்றன. பிணங்கியிருக்க என்னால் முடியாது. நானே அவரிடம் போகிறேன் – என்று காதலி கணவனிடம் போய் அவனிடம் வலியப் பேசுகிறாள். முன் கணவன் வந்த உடன் இருவரும் சந்தித்தபோது வாய் பேசாமல் 'கண்ணினால் காமநோய்

சொல்லி இரந்த' காதலி, இனி வாயால் காமநோய் சொல்லி இரக்கிருள் :

1288. இளித்தக்க வின்ஞ செயினுங் களித்தார்க்குக்
கள்ளற்றே கள்வநின் மார்பு.

ப. ரை : கள்வ ! இளித்தக்க இன்ஞ செயினும் களித்தார்க்கு கள் அற்றே நின் மார்பு = திருடரே! இகழத்தக்க துன்பங்களைச் செய்தாலும் குடிகாரருக்குக் கள் எப்படியோ அப்படிப்பட்டதே எனக்கு உம்முடைய மார்பு.

பொ. ரை : திருடரே ! (பிறர்) இகழத்தக்க துன்பங்களை உண்டாக்குவதானுலும் குடிப்பழக்க முள்ளவர்களுக்குக் கள் எப்படியோ அப்படி எனக்கு உம்முடைய மார்பு.

வி-ம் : இளி – அவமதிப்பு – பரிகாசம். கள்ளும் காமமும் பிறர் அவமதித்துப் பரிகாசம் பண்ணக்கூடிய பல துன்பங்களை உண்டாக்குவன. அதாவது கள்ளைக் குடித்தவரும் காமத்தை நினைத்தவரும் பல நாணமற்ற காரியங்களைச் செய்வார்கள். அது தெரிந்தும் திரும்பத் திரும்ப அவற்றை விரும்புகிருர்கள். களித்தார் – குடிப்பழக்கமுள்ள குடிகாரர்கள். 'கள்வ' என்றது திருடிக் கொண்டவர். காதலியின் மனதையும் நாணம் முதலியவற்றையும் அபகரித்துக் கொண்டவர். இது சரசத்துக்காகச் சொல்லுவது. மார்பு – தழுவுதற்குரிய பொருள். கள், குடிக்கத் தூண்டுவது. மார்பு, தழுவிப் புணரத் தூண்டுவது. ஆதலால் – திருடரே ! நீர் இவ்வளவு நாளாகப் பிரிந்திருந்து பிறர் பரிகாசம் செய்யத்தக்க 'பல துன்பங்களை எனக்கு உண்டாக்கி விட்டீரென்ருலும் துன்ப முண்டாக்கும் கள்ளின் மேலேயே குடியருக்கு ஆசை உண்டாவது போல உங்கள் மீது எனக்குக் காமம் வந்துவிட்டது – என்பது கருத்து.

இதைக் கேட்ட கணவன் சொல்லுகிருன் – 'பெண்ணே ! காமம் கள்ளைப் போன்ற தீமையுண்டாக்கும் பொருளல்ல. நீ தெரியாமல் சொல்லுகிருய். காமம் எப்படிப்பட்டதென்ருல் :

1289. மலரினு மெல்லிது காமஞ் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

ப. ரை : காமம் மலரினும் மெல்லிது, அதன் செவ்வி தலைப்படுவார் சிலர் = காமம் மலரை விட மென்மையானது; (ஆனல்) அதன் காலமறிந்து அனுபவிக்கிறவர்கள் (உலகத்தில்) சிலரே.

பொ. ரை: காம இன்பம் என்பது மலரைவிட நுட்பமானது. ஆனால் அந்த நுட்பத்தைத் தக்க காலமறிந்து அனுபவிக்கிறவர்கள் உலகத்தில் சிலரே.

வி-ம்: செவ்வி – பக்குவகாலம். தலைப்படுதல் – மேற்கொள்ளல். மலர் மிகவும் நுட்பமான பொருள். அந்த நுட்பத்தை உணர்ந்து அது கசங்கிவிடாதபடி அனுபவித்தால் அது நெடுநேரம் கண்ணுக்கு அழகும் மூக்குக்கு மணமும் தரும். மேலும் அம்மலர் மொட்டாக இருக்கும்போது முகர்ந்தால் கசங்குமே யல்லாமல் முழு மணம் கிடைக்காது. அன்றி, அது மலர்ந்து நெடுநேரமாகி வாடுகிற சமயத்திலும் கண்ணுக்கும் அழகு தராது மூக்குக்கும் நல்ல மணம் தராது. ஆகையால் மலரைப் பருவகாலமறிந்து அனுபவிக்க வேண்டும். அதைப்போலவே 'காலை அரும்பி பகலெல்லாம் போதாகி மாலை மலரும் மலரா'கிய காமமும் அதன் பருவகாலம் அறிந்து அனுபவித்தால்தான் இன்பமுள்ளதாக இருக்கும். ஆனால் உலகத்தில் பெரும்பாலும் மக்கள் காமத்தைக் காலம் நேரம் கருதாமலே தான் அனுபவிக்கிறார்கள். அது குற்றம். 'மலரினும் மெல்லிது' என்பது, மலரின் வாழ்வு ஒரு நாளைய வாழ்வு. ஆனால் காமம், காதலன் – காதலி இருவருக்கும் நெடுநாள் உதவ வேண்டியது. ஆதலால் அதை மலரைக் கையாள்வதைக் காட்டிலும் கவனத்துடன் கையாள வேண்டும் – என்பதைக் குறிப்பது. ஆதலால் – காமம் என்பது மலரைக் காட்டிலும் நுட்பமானது. அதைப் பெரும்பாலும் மக்கள் காலம் நேரம் கருதாமல் அனுபவிக்கிறார்கள். அது குற்றம். நாம் அப்படிச் செய்யக் கூடாது பொறு – என்பது கருத்து.

காதலன் இதைச் சொன்னதும் காதலி தன்னுடைய ஆசைக்குத் தடை உண்டானதைக் கண்டு ஏக்கம் காட்டுகிறாள். அவளுடைய ஏக்கத்தைக் கண்ட காதலன் தனக்குள் சொல்லிக் கொள்ளுகிறான்:

1290. கண்ணிற் றுனித்தே கலங்கினாள் புல்லுத
லென்னினுந் தான்விதுப் புற்று.

ப. ரை: புல்லுதல் என்னினும் தான் விதுப்புற்று கண்ணில் துனித்தே கலங்கினாள் = தழுவிக் கொள்வதில் என்னைவிட தான் விரைவு கொண்டு கண்ணில் வருத்தம் காட்டிக் கலங்கினாள்.

பொ. ரை: தழுவிக் கொள்ள என்னைக் காட்டிலும் அவள் விரைவுள்ளவளாகி வருத்தம் தோன்றக் கண் கலங்கினாள்.

வி-ம்: கண்ணில் துனித்தே கலங்கினாள் – வருத்தத்தைக் கண்ணிலிருந்தே கண்டுகொள்ளக் கூடியதாகக் கண் கலங்கினாள்.

என்னினும் தான் விதுப்புற்று — என்னைவிட அவள் அவசரப் பட்டு — என்பது என்ன வென்றால், இயற்கையாகக் காமத் துடிப்பின் வேகம் பெண்களைவிட ஆண்களுக்குத்தான் அதிகம். அதனால் அவசரப்பட வேண்டிய நான் நிதானிக்க அவள் அவசரப்படுகிறாள் என்பதாம். கலங்கினாள் — என்பது இறந்த கால வினைச்சொல்லாக இருப்பதைக் கருதி ''எப் போதோ முன் கலங்கினாள்'' என்று பொருள் கொள்ளக் கூடாது. இப்போது நிகழ்வதைக் குறிப்பதாகவே கொள்ள வேண்டும். புல்லுதல் — தழுவிக் கொள்ளல் என்ற பொரு ளது. ஆதலால் — நான் பொறுக்கச் சொன்னதைக் கேட்ட காதலி வருத்தமுற்றுக் கண் கலங்கி, தழுவிக்கொள்ள என்னை விட அவள் முந்துகிறாள் — என்பது கருத்து.

அதி. 130—நெஞ்சொடு புலத்தல்

[' நெஞ்சொடு புலத்தல்' என்பது மனதோடு பிணங்குதல். அதாவது, மனதைக் கடிந்து கொள்வது. முன் அதிகாரத்தில் கண்டபடி, காதலி புணர்ச்சிக்கு அவசரப்பட்டதைப் போல் காதலன் அவசரப்படவில்லை யென்பதை அறிந்த காதலி வெட்கமடைந்து, புணர்ச்சிக்கு அவசரப்படுத்தித் தன்னைக் காதலரிடம் போகச் செய்த தன் மனதைக் கடிந்து கொள்ளு கிறாள். இது முழுதும் காதலியின் பேச்சு]

1291. அவர்நெஞ் சவர்க்காதல் கண்டு மெவனெஞ்சே
நீயெமக் காகா தது.

ப. ரை: நெஞ்சு ! அவர் நெஞ்சு அவர்க்கு ஆதல் கண்டும் நீஎமக்கு ஆகாதது எவன்? = நெஞ்சமே! அவருடைய நெஞ்சம் அவருக்கு உதவுதல் கண்டும் நீ எனக்கு உதவாமற் போனது ஏன்?

பொ. ரை: மனமே! என் காதலருடைய மனம் அவருக்கு அடங்கியிருப்பதை நீ பார்க்கிறாய்; பார்த்த பின்னும் நீ அதைப்போல் எனக்கு அடங்கியிருக்க மறுப்பது ஏன்?

வி-ம்: ஆதல் — சொந்தமாதல் — உதவுதல். அவர் தம்முடைய காமத்தை அடக்கிக் கொண்டிருக்க விரும்பினார். அவருடைய மனம் அவருடைய விருப்பத்திற்கிணங்கி அடங்கியிருக் கிறதே! நான் என் காமத்தை அடக்க விரும்பினால் நீ ஒத் துக்கொள்ளாமல் அவரிடமே ஓடுகின்றாயே... மனமே! என் காதலருடைய மனம் அவர் சொன்னபடி கேட்பதை அறிந் தும் நீ ஏன் நான் சொன்னபடி கேட்கமாட்டேனென்கிறாய்?— என்பது கருத்து.

அவருக்கு என் மேல் ஆசையிருந்தால் அவர் வந்த உடனேயே என் குறிப்பறிந்து என் ஆவலைத் தீர்த்திருப்பார். அவர் அப்படிச் செய்யாதிருந்தும் அவரிடம் போகச் சொல்லி நீ என்னை முடுக்கியதனால் நான் வெட்கத்தை விட்டு அவரிடம் வலியச் சென்றேன். அப்போதும் அவர் 'காமம் மலரினும் மெல்லியது, காலமறிந்து அனுபவிக்க வேண்டும், பொறு' என்று சொல்லிவிட்டார். இதையெல்லாம் அறிந்திருந்தும் மனமே! நீ மீண்டும் மீண்டும் அவரிடமே போகிறாய். அவருக்குத்தான் நம் மீது ஆசையில்லையே:

1292. உறாஅ தவர்க்கண்ட கண்ணு மவரைச்
செறாஅரெனச் சேறியென் னெஞ்சு.

ப. ரை: என் நெஞ்சு! உறாஅதவர்க் கண்ட கண்ணும் செறாஅரென அவரைச் சேறி = என் நெஞ்சமே! (நம்மிடத்தில்) ஆசையுறாதவர் எனக்கண்டபோதும் (அவர் நம்மை) விலக்காதவர் என்று அவரிடம் செல்கின்றாய்.

பொ. ரை: என்னுடைய மனமே! நம்மிடத்தில் அவர் ஆசை கொள்ளவில்லை என்பதைக் கண்டு கொண்ட பின்னும் அவர் நம்மை வெறுக்க மாட்டாரென்று அவரிடமே போகின்றாயே!

வி-ம்: உறாஅதவர் - உறாதவர் - ஆசையுறாதவர் - காமமுறாதவர். கண்ட கண்ணும் - கண்டுகொண்டபின்னும். செறாஅர் - செறாதவர் - விலக்காதவர் - வெறுக்காதவர். சேறி - செல்லுகிறாய். எனக்குச் சொந்தமான என் மனமே! நீ எனக்கு உதவாமல், என்னிடம் ஆசையில்லாத காதலரிடம் அவர் நம்மை விரும்புவாரென்று மீண்டும் மீண்டும் ஓடுகின்றாயே! — என்பது கருத்து.

மனமே! என் காதலர் பிரிந்த நாளாக நான் அவரையே நினைத்துக் கொண்டிருந்து உடல் மெலிந்து, மேனி பசந்து பார்த்தவர்கள் ஏளனம் செய்யும்படி நாணமும் மறந்தவளானேன். அதனால் ஊரார் மதிப்பை இழந்தேன். காதலர் வந்துவிட்டால் கவலைதீரும் என்று நம்பினேன். வந்த காதலரும் என்னை மதிக்கவில்லை. என் சொந்த மனமாகிய நீயும் என்னை மதிப்பதில்லை. இதைப் பார்க்கும்போது:

1293. கெட்டார்க்கு நட்டாரில் லென்பதோ நெஞ்சேநீ
பெட்டாங் கவர்பின் செலல்.

ப. ரை: நெஞ்சே! நீ பெட்ட ஆங்கு அவர் பின் செலல் கெட்டார்க்கு நட்டார் இல் என்பதோ = நெஞ்சமே! நீ விரும்பிய

படி அவர்பின் போவது ஏழையாகி விட்டவர்க்கு நண்பர்கள் இருக்க மாட்டார்கள் என்பதோ?

பொ. ரை: மனமே! நீ (என் விருப்பத்தை மதிக்காமல்) உன் விருப்பத்தின்படியே அவரிடம் தஞ்சமடையப்போவது, தரித்திரமடைந்துவிட்டவர்களுக்கு நண்பர்கள் இருக்கமாட்டார்கள் என்ற நியாயத்தைச் சேர்ந்ததோ?

வி-ம்: கெட்டார் – வறுமையடைந்து விட்டவர்கள். பெட்டாங்கு–விரும்பியபடி. பின் செலல் – அடைக்கலம் புகுவது. மனமே! நீ என்னை மதிக்காமல் உன் விருப்பத்தின்படி என் கணவரிடமே அடைக்கலம்புக ஓடுவது "வறுமையடைந்து விட்டவர்களை உற்ருர் உறவினரும் கைவிட்டு விடுவார்கள் என்ற உண்மையைச் சேர்ந்ததோ? – என்பது கருத்து.

மனமே! இனிமேல் உன்னை நம்பக் கூடாது:

1294. இனியன்ன நின்னெடு சூழ்வார்யார் நெஞ்சே
துனிசெய்து துவ்வாய்காண் மற்று.

ப. ரை: நெஞ்சே! துனி செய்து மற்று துவ்வாய்காண்; இனி அன்ன நின்னெடு சூழ்வார் யார்? = நெஞ்சமே! பிணக்கம் மேற்கொண்டு, பின் அதைக் கொண்டு செலுத்த மறுக்கிருய்: இனிமேல் அப்படி உன்னேடு சேர்ந்து ஒரு தீர்மானம் செய்யப்போகிறவர்கள் யார்? (யாருமில்லை).

பொ. ரை: மனமே! பிணங்கவேண்டுமென்று (நாம் இருவரும் ஆலோசித்துத் தீர்மானம்) செய்தோம்; ஆனல் நீ அதன்படி நடந்துகொள்ள மறுக்கிருய்; இனிமேல் இப்படி (உன்னை நம்பி) உன் ஆலோசனையைக் கேட்கப் போகிறவர்கள் யாருமில்லை.

வி-ம்: சூழ்வார்-ஆலோசிப்போர். துனி - வருத்தம் - கோபம். துனி செய்து - வருத்தமடைந்து. இங்கே 'வருத்தத்தால் பிணங்கத் தீர்மானம் செய்து' என்ற பொருள் அடங்கியது. துவ்வுதல் - உறுதி கொள்ளல் - கடைப்பிடித்து நிற்றல். மனமே! காதலரிடம் பிணங்க வேண்டுமென்று நீதான் எனக்கு யோசனை சொன்னய்; அதன்படி நடந்து கொள்ளாமல் இப்போது நீ என்னைவிட்டு அவரிடம் ஓடுகின்ருய். இனி உன்னை நம்பமாட்டேன் – என்பது கருத்து.

அம்மம்ம! இந்த மனதினல் எனக்கு எந்நேரமும் துன்பந்தான்:

1295. பெருஅமை யஞ்சும் பெறிற்பிரி வஞ்சு
மருஅ விடும்பைத்தென் னெஞ்சு.

ப. ரை: பெருஅமை அஞ்சும்; பெறில் பிரிவு அஞ்சும்; என் நெஞ்சு அருஅ இடும்பைத்து=(காதலர்) வரவில்லையே என்று துன்பமுறும். வந்துவிட்டால் பிரிந்துவிடுவாரோ என்று துன்பமுறும்; என் நெஞ்சம் தீராத துன்பமுடையதாக இருக்கிறது.

பொ. ரை: (என் மனம் காதலர் இல்லாதபோது) அவர் வரவில்லையே என்று என்னைத் துன்புறுத்திக் கொண்டிருந்தது. (இப்போது) அவர் வந்தபின் பிரிந்து போய்விடுவாரோ என்று (அவரிடத்திற்கே ஓடி என்னைத்) துன்புறுத்துகிறது; என்னுடைய மனம் (எனக்கு) ஓயாத துன்பமுண்டாக்குவதாக இருக்கிறது.

வி-ம்: பெருஅமை - அடையாமை - வராமை. அருஅ - அருத - தீராத. இடும்பை - துன்பம். இடும்பைத்து - துன்பம் தருவது. காதலர் வராமலிருந்தபோது என் மனம் அவர் வரவில்லையே என்ற துன்பத்தை எனக்கு உண்டாக்கிக் கொண்டிருந்தது; அவர் வந்திருக்கும் இப்போது அவர் பிரிந்து போய்விடுவாரோ என்று, பிணக்கம் காட்டக்கூட என்னோடு சேராமல் என்னைத் துன்பத்தில் விட்டு அவரிடமே ஓடுகின்றது. அதனால் - காதலர் வராதபோது என் மனம் அவர் வரவில்லையே என்று துன்பப்பட்டது; அவர் வந்தபின் அவர் பிரிந்து போய்விடுவாரோ என்று துன்பப்படுகிறது. அதனால் என் மனதினால் எனக்கு எப்போதும் துன்பமே - என்பது கருத்து.

காதலரைப் பற்றி எப்படி நினைத்தாலும் வேதனையுண்டாகிறதென்று என் மனதை, அவரை நினைக்காமல் சற்று என்னோடு இருக்கச் சொன்னேன். அப்போது:

1296. தனியே யிருந்து நினைத்தக்கா லென்னைத்
தினிய விருந்ததென் னெஞ்சு.

ப. ரை: என் நெஞ்சு தனியே இருந்து நினைத்தக்கால் என்னை தினிய இருந்தது=என் நெஞ்சம் (காதலரைவிட்டு என்னுடன்) தனியே இருந்து நினைத்தபோது என்னைத் தின்றுவிடும் போல் இருந்தது.

பொ. ரை: என் மனம் (காதலரை மறந்து என்னுடன் மட்டும்) தனியாக இருந்து எண்ணினபோது என்னைக் கொன்றுவிடும் போல் இருந்தது.

வி-ம்: தினிய - தின்னிய - தின்றுவிட. என் காதலரைச் சற்றே மறந்திருக்க நினைத்தபோது என் மனம் அதை மறுத்து என்னைக் கொன்றுவிடும்போல் இருந்தது - என்பது கருத்து.

இப்படி என் விருப்பத்தைச் சிறிதும் மதிக்காத மனதோடு சேர்ந்து நான் :

1297. நாணு மறந்தே னவர்மறக் கல்லாவென்
மாணா மடநெஞ்சிற் பட்டு.

ப. ரை : அவர் மறக்கல்லா என் மாணா மடநெஞ்சில் பட்டு நாணும் மறந்தேன் = அவரை (காதலரை) மறக்கமாட்டாத என்னுடைய சிறப்பில்லாத அறிவற்ற நெஞ்சத்தில் சிக்கிக் கொண்டு நான் என்னுடைய நாணத்தைக்கூட மறந்துவிட்டேன்.

பொ. ரை : காதலரை மறக்க முடியாததாகிவிட்ட என்னுடைய பெருமையற்ற அறிவில்லாத மனதில் சிக்கிக்கொண்டு நான் என்னுடைய நாணத்தைக்கூட மறந்துவிட்டேன்.

வி - ம் : மறக்கல்லா - மறக்கும் தன்மையற்றுப்போன. மாணா- பெருமையில்லாத - சிறுமை மிகுந்த. மடநெஞ்சு - புத்தியில்லாத மனம். பட்டு - அகப்பட்டு - சிக்கிக்கொண்டு. நாணு மறந்தேன் - நாணத்தைக்கூட மறந்தேன். அதாவது பெண்கள் எதை மறந்தாலும் நாணத்தை மறந்துவிட மாட்டார்கள். அப்படியிருக்க அதையும் மறந்துவிட்டேன் – என்பதாம். காதலரைச் சிறிது நேரங்கூட மறக்க முடியாததாகிவிட்ட என் புத்தி கெட்ட அற்ப மனதோடு சேர்ந்து நான் மானங் கெட்டவளானேன் – என்பது கருத்து.

என் மனம் ஏன் என் காதலரை மறக்கமாட்டேனென்கிறதென்றால் :

1298. எள்ளி னிளிவாமென் றெண்ணி யவர்திற
முள்ளு முயிர்க்காத னெஞ்சு.

ப. ரை : உயிர்க்காதல் நெஞ்சு எள்ளின் இளிவு ஆம் என்று எண்ணி அவர் திறம் உள்ளும் = உயிரின் மேல் ஆசை கொண்ட நெஞ்சம் மறந்தால் கேடு வந்துவிடும் என்று நினைத்து அவரைப் பற்றியே எண்ணும்.

பொ. ரை : உயிரின் மேல் மிகுந்த ஆசை வைத்துள்ள என்மனம் (அவரை) மறந்தால் (உயிருக்குக்) கேடுவரும் என்று எண்ணுவதால் (எப்போதும்) அவரைப்பற்றியே சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

வி - ம் : உயிர்க்காதல் நெஞ்சு – உயிரின் மேல் மிகுந்த பற்றுள்ள மனமானதால். எள்ளின் – நீக்கினால் – மறந்தால். இளிவு – கேடு. அவர் திறம் – அவர் பக்கம் – அவரைப்பற்றி.

இக்குறள், காதலரை மறவாதிருப்பதால்தான் நான் இன்னும் உயிரோடிருக்கிறேன் என்று, முன் ''மற்றியான் என் உள்ளேன் மன்னே அவரொடு உற்றநாள் உள்ள உளேன்'' என்றும் ''மறப்பின் எவனுவன் மற்கொல் மறப்பறியேன் உள்ளினும் உள்ளம் சுடும்'' என்றும் சொல்லப்பட்ட கருத்துக்களை ஒட்டியது. ஆதலால்—உயிரின் மேல் மிகுந்த பற்றுள்ள என் மனம் காதலரை மறந்தால் உயிர்போய்விடுமென்று அஞ்சி, எப்போதும் அவரைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறது—என்பது கருத்து.

இப்படி என் மனம் அவரையே நினைத்துக் கொண்டு அவர் பக்கமே இருந்தால் நான் படுகின்ற வேதனைக்கு எனக்கு ஆறுதல் சொல்லும் துணைவர் யார்? :

1299. துன்பத்திற் கியாரே துணையாவார் தாமுடைய
நெஞ்சந் துணையல் வழி.

ப. ரை : துன்பத்திற்கு தாமுடைய நெஞ்சம் துணை அல்வழி யாரே துணை ஆவார் = துன்பம் வந்தகாலத்தில் தம்முடைய நெஞ்சமே துணையல்லாமற் போய்விட்டால் வேறு யார் துணையாவார்?

பொ. ரை : ஒருவருக்குத் துன்பம் வந்துவிட்ட சமயத்தில் அவருடைய மனமே அவருக்கு உதவாவிட்டால் மற்ற யார் உதவி செய்யப்போகிறார்கள்? (நீயே சொல்லுக மனமே!)

வி—ம் : தாம் உடைய—தமக்கே உடைமையான, மற்றவர்கள் உதவி கிடைக்காவிட்டாலும் மனம் சமயோசித அறிவு சொல்லி தைரியம் ஊட்டக் கூடியதாக இருக்கிற ஒருவர் எவ்வளவு துன்பத்தையும் சமாளிக்கலாம். ஆதலால் — ஒருவருக்குத் துன்பம் வந்த சமயத்தில் அவருடைய மனமே அவருக்கு உதவாவிட்டால் மற்றயார் உதவப் போகிறார்கள்? (இது உனக்குத் தெரியாததல்லவே மனமே!)

சொந்த மனமே கைவிட்ட ஒருவரை மற்றவர்கள் மதிக்க மாட்டார்கள்; ஆதலால் :

1300. தஞ்சந் தமரல்ல ரேதிலார் தாமுடைய
நெஞ்சந் தமரல் வழி.

ப. ரை : தாமுடைய நெஞ்சம் தமர் அல்வழி ஏதிலார் தமர் அல்லர்; தஞ்சம் = (மனமே! ஒருவருக்கு) தம்முடைய நெஞ்சமே உறவற்றதாகி விட்டால் அயலார் உறவாக மாட்டார்கள்; (ஆகையால் நீ தான் எனக்கு) தஞ்சம்.

பொ. ரை: மனமே! ஒருவருக்கு அவருடைய மனமே உறவற்றுப் போய்விட்டால் மற்ற யாரும் அவருக்கு உறவாகமாட்டார்கள்; (ஆகையால் நீ தான் எனக்கு உறுதுணை; நான் உன்னை) தஞ்சமடைகிறேன்.

வி-ம்: தமர் — உறவினர். தஞ்சம் — புகலிடம் — அடைக்கலம். ஏதிலார் — அயலார் — பிறர்....ஒருவருக்கு அவருடைய மனமே உதவியற்றதாகி விட்டால் மற்ற எவரும் உதவி செய்ய மாட்டார்கள். ஆதலால் என் மனமே எனக்கு நீதான் உதவி செய்ய வேண்டும். நான் உன் அடைக்கலம் — என்பது கருத்து.

அதி. 131—புலவி

['புலவி' என்பது பிணக்கம். அதாவது புணர மறுப்பது போல் காட்டிக் கொள்ளுவது. காதலர் வருவதற்கு முன்னால் அவர் வந்தால் அவருடன் பிணங்கிக் கொள்ளுவதா, அல்லது உடனே கட்டித் தழுவிக் கொள்ளுவதா என்று ஆலோசித்தாள். அவர் வந்தார். பிணக்கமும் காட்டாமல் தழுவவும் செய்யாமல் அவர்முன் நின்றாள். அவர் இவளுடைய நிலைமையை அறிந்துகொண்டபின் சற்றே தலைகுனிந்து நின்று, பின் தன் 'கண்ணினால் காமநோய் சொல்லி இரந்தாள்'. ஆனால் காதலர் உடனே காமத் துடிப்பு காட்டவில்லை. அதன் பின் தன் தோழியுடன் தனித்திருந்து பிணங்க நினைத்தாள். ஆனால் அவளுடைய மனம் பிணங்க இடங் கொடுக்காமல் 'புணர்ச்சி விதும்பி' காம ஆசையைத் தீர்த்துக்கொள்ள அவசரப்பட்டது. அதனால் காதலரிடம் வலியச் சென்று, தன் காமத் துடிப்பை "இளித்தக்க இன்னா செயினும் களித்தார்க்குக் கள்ளற்றே கள்வ நின் மார்பு" என்று சொல்லிப் புணர்ச்சி விருப்பம் காட்டினாள். அதற்குக் காதலர் "மலரினும் மெல்லிது காமம் சிலர் அதன் செவ்வி தலைப்படுவார்" என்று சொல்லிப் பொறுக்கச் சொல்லிவிட்டார். அந்த அவமானத்தால் தன் நெஞ்சைக் கடிந்துகொண்டு, கடைசியாகத் தன் மனதினிடம் தஞ்சம் புகுந்து அது தன்னுடன் ஒத்துழைத்துப் பிணங்கவேண்டுமென்பதற்காக 'ஏதிலார் தமரல்லர் நீ தஞ்சம்' என்று கேட்டுக்கொண்டாள். அதற்கு நெஞ்சம் சற்று இணங்கியதாகத் தீர்மானித்து, தானும் தன் காதலரும் ஒரே அமளியில் படுத்திருக்கும்போது காதலனோடு பிணங்கிக்கொள்ள வேண்டுமென்று காதலி தனக்குள்ளேயே சொல்லிக் கொள்வது. இது முழுதும் காதலி நினைப்பது. ஏனென்றால் ஊடல், புலவி, பிணக்கம் என்பதெல்லாம் பெண்ணியல்பு. ஆண் பிணங்குவதில்லை.]

**1301. புல்லா திராஅப் புலத்தை யவருறு
மல்லனோய் காண்கஞ் சிறிது.**

ப. ரை: புல்லாது இராஅ புலத்தை; அவர் உறும் அல்லல் நோய் சிறிது காண்கம் = (மனமே!) தழுவாமல் இருந்து பிணங்குவாயாக; அவர் அடையும் காமவேதனையைச் சிறிது பார்ப்போம்.

பொ. ரை: (மனமே!) அவரைத் தழுவாமல் இருந்து பிணங்கிக் கொள்ளுக; அவர் காம வேதனையால் படும்பாட்டைச் சிறிது (வேடிக்கை) பார்க்கலாம்.

வி - ம்: இராஅ - இரா - இருந்து. காண்கம் - காண்போம். மனமே! காதலர் நம்மைப் புணர வரும்போது நீ அவரைத் தழுவ மறுத்துப் பிணங்கிக்கொள். அப்போது அவர் படும் பாட்டைக் கொஞ்சம் வேடிக்கை பார்க்கலாம் – என்பது கருத்து.

பிணங்கியிருப்பது, பின்னால் புணர்வதற்குச் சுவை கொடுப்பது; அதனால் சிறிது நேரம் பிணங்கியிரு. ஆனால் அளவுக்கு மேலும் பிணங்கிவிடக் கூடாது:

**1302. உப்பமைந் தற்றாற் புலவி யதுசிறிது
மிக்கற்றா னீள விடல்.**

ப. ரை: புலவி உப்பு அமைந்தற்று; நீளவிடல் அது சிறிது மிக்க அற்று = பிணங்குவது (உணவுக்கு) உப்பு சேர்ந்தது போல; (ஆனால் அந்த பிணக்கத்தை) நீள விடுவது அந்த உப்பு சிறிது அதிகமாகி விட்டது போல.

பொ. ரை: (கலவியில்) புலவிசெய்வது உணவுக்கு உப்பு சேர்ப்பது போல (சுவை தரும்); (ஆனால் அந்தப் புலவியை) நெடு நேரம் நீளவிடுவது அந்த உப்பு அதிகப்பட்டது போல் (சுவை கெடும்).

வி - ம்: உணவுக்கு உப்பைப் போல, கலவிக்குச் சுவை தருவது பிணக்கம். ஆனால் அளவுக்கு மீறிப் பிணங்கினாலும் உப்பு அதிகப்பட்ட உணவு சுவை கெட்டுப்போவது போல கலவியும் சுவை கெட்டுப் போகும் – என்பது கருத்து.

நாமோ; நெடுநாள் பிரிந்திருந்து வந்த கணவர் இன்னும் புணராமல் இருக்கிறாரே என்று தவித்துக் கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க நாம் இப்போது காதலருடைய காமவேதனையை வேடிக்கை பார்க்கலாம் என்ற ஆசையினால் சிறிது நேரம் பிணங்கியிருப்பது நல்லதுதான் என்று பிணங்

கினுல், அவர் அந்தப் பிணக்கத்தை நீக்கிப் புணராமலேயே இருந்துவிட்டால் என்ன செய்வது!:

**1303. அலந்தாரை யல்லனோய் செய்தற்றூற் றம்மைப்
புலந்தாரைப் புல்லா விடல்.**

ப. ரை: தம்மை புலந்தாரை புல்லா விடல் அலந்தாரை அல்லல் நோய் செய்த அற்று = தம்முடன் பிணங்கினவரை (பிணக்கம் தீர்த்து) புணராமல் விட்டுவிடுவது (தாமாகவே) நொந்திருப்பவரை (மேலும்) நோகச்செய்வதற்கு ஒப்பாகும்.

பொ. ரை: தம்முடன் பிணங்கிய காதலியை (காதலன் அவளுடைய பிணக்கத்தை விடச்செய்து) புணராமல் (பிணக்கத்தை அப்படியே) விட்டுவிடுவது (முன்னுலேயே) நொந்துபோயிருக்கிற (ஒருவருடைய நிலைமையைத் தெரிந்துகொண்டே இரக்கமில்லாமல்) மேலும் அவரை நோகச்செய்வதற்குச் சமானம்.

வி - ம்: இந்தக் குறள் ''பரத்தையரிடத்து நின்றும் வந்த தலைமகனெடு தலைமகள் புலந்து சொல்லியது'' என்ற எண்ணத்தைச் சிறிதும் தகாத முறையில் வருவித்துக் கொண்டு. இக் குறளுக்கு ''பிறர் பாற் சேறலின் நும்மைப் பெறுது புலந்தூடியிருக்கின்ற பரத்தையரைப் போய்ப் புலவி நீக்கிப் புல்லீராயின் அவராற்ரு ரென்பதாம்'' என்ற கருத்தைப் புகுத்தியிருப்பது திருவள்ளுவருடைய பெருமைக்கே தீங்கிழைப்பதாகும். இங்கே பரத்தையருக்கு என்ன வேலை? பொருள் சம்பாதிக்க அரசாங்க அலுவலாக வெளியூர் போயிருந்து திரும்பிவந்த கணவன் பரத்தையர் வீட்டிலிருந்து வந்தவன? இந்தக் கருத்தைப் புகுத்தியது பெருங்குற்றம்.... அலந்தார் – ஏற்கெனவே நொந்திருப்பவர். அல்லல் நோய் செய்தல் – வேண்டுமென்றே அதற்குமேலும் நோகச் செய்தல். இது பிணங்க நினைக்கும் காதலி, தான் பிணங்கினுல் காதலன் பிணக்கத்தைத் தீர்க்காமலே விட்டுவிட்டால் என்ன செய்வது என்று ஏங்குகிற நிலைமையைச் சொல்லுவது. அதனுல் – பிணங்கிய என்னை என் காதலர் பிணக்கந் தீர்த்துப் புணராமலே இருந்து விடுவாராணுல் மிகவும் நொந்து போயிருக்கிற என்னை இன்னும் நோகப் பண்ணுவதாகும் – என்பது கருத்து.

பிணங்கும் என்னை என் காதலர் பிணக்கந் தீர்த்துப் புணராமல் விட்டுவிடுவாராணுல் அது நொந்திருக்கும் என்னை மேலும் நோகச் செய்வது மட்டுமல்ல:

**1304. ஊடி யவரை யுணராமை வாடிய
வள்ளி முதலரிந் தற்று.**

ப. ரை : ஊடியவரை உணராமை வாடிய வள்ளி முதல் அறிந்த அற்று = பிணங்கியவரை பிணக்கம் தீர்க்காமை வாடிப் போன கொடியை வேர் அறுத்தற்கு ஒப்பாகும்.

பொ. ரை : பிணங்கியிருக்கும் காதலியை (காதலன்) பிணக்கம் தீர்த்துப் புணராமல் விட்டு விடுவது (நீரில்லாமல்) வாடிப் போயிருக்கிற கொடிக்கு (நீர் வார்ப்பதை விட்டு) வேரறுப்பதற்குச் சமானம்.

வி - ம் : 'உணர்தல்' என்பதற்குக் 'காமத்தில் பிணங்கியவரைப் பிணக்கம் தீர்ப்பது' என்பதே ஒரு அர்த்தம். வள்ளி—கொடியாகப் படரும் செடி. கொடியைப் பெண்களுக்கு உபமானமாகச் சொல்வது, தமிழ் வழக்கு. அதனால் 'ஊடியவரை' என்பதற்கு 'ஊடிய பெண்ணை' என்பது பொருள். ஒரு கொடி நீரில்லாமல் வாடியிருப்பதை இலையும் பூவும் நிறம்மாறியிருப்பதாலும் வதங்கியிருப்பதாலும் எளிதிற் காணலாம். அதைப் போலவே ஒரு பெண் காம இன்பமில்லாமல் வாடியிருப்பதை மெலிவாலும் பசப்பாலும் எளிதிற் காணலாம். நான் மெலிந்து பசந்து வாடியிருப்பதை அவரே கண்டவர். ஆனாலும் அவர் என்னைப் போல் புணர்ச்சிக்குத் துடிப்பவராக இல்லை. ஒருவேளை என் பிணக்கத்தைத் தீர்க்காமலேயே இருந்தாலும் இருந்து விடக் கூடியவர் — என்றெல்லாம் ஏங்குகிறாள். அதனால் — பிணங்கியிருக்கும் என் பிணக்கத்தைத் தீர்த்து என் காதலர் புணராமல் இருந்து விட்டால் அது வாடியிருக்கிற கொடியை வேரறுத்த மாதிரி. (நான் இறந்தே போவேன்) — என்பது கருத்து.

ஆனால் என் காதலர் அப்படி என்னை வேரறுத்துவிட மாட்டார். மேலும் என் பிணக்கம் அவருக்கும் உணவுக்கு உப்பமைந்தது போன்ற சுவை தருவது தானே :

**1305. நலத்தகை நல்லவர்க் கேஎர் புலத்தகை
பூவன்ன கண்ணா ரகத்து.**

ப. ரை : பூஅன்ன கண்ணார் அகத்து புலத்தகை, நலத்தகை நல்லவர்க்கு ஏஎர் = பூப்போன்ற கண்களுள்ள பெண்ணிடத்தில் பிணக்கம் நிகழ்வது விருப்பமுள்ள காதலருக்கும் இன்பமுள்ளதே.

பொ. ரை : மலர் போன்ற கண்களையுடைய காதலியிடத்தில் பிணக்கம் இருப்பது அன்புள்ள காதலனுக்கும் இன்பம் தருவதாகும்.

வி - ம் : அகத்து - இடத்தில். தகைதல் - உள்ளதாதல். புலத்தகை - புல்வி உள்ளவளாகிய. நலத்தகை - விருப்பமுள்ளவ

ரான. நல்லவர் - அன்பர் – காதலர். ஏளர் - ஏர் - நன்மை - இன்பம். மலர் போன்ற கண்களுடைய மனைவியின் பிணக்கத்தில் அவளிடம் அன்புள்ள கணவனுக்கும் இன்பமுண்டு. (என்மீது அன்புள்ளவரான என் காதலர் நான் பிணங்குவதில் அவரும் இன்பப்படுவார்) – என்பது கருத்து.

புலவி இல்லாத புணர்ச்சியில் சரியான காம இன்பம் இல்லையே :

1306. துனியும் புலவியு மில்லாயிற் காமங்
கனியுங் கருக்காயு மற்று.

ப. ரை : துனியும் புலவியும் இல்லாயின் காமம் கனியும் கருக்காயும் அற்று = (பிரிவாற்ருமைத்) துன்பமும் பிணக்கமும் இல்லாவிட்டால் காமம் குழைந்துபோன பழத்தையும் இளங் காயையும் ஒத்ததாகும்.

பொ. ரை : (நீண்டகாலப் பிரிவின்) துன்பமும் (புணருமுன்) பிணக்கமும் இல்லாவிட்டால் காம இன்பம் பதனழிந்த பழத்தையும் பச்சைப் பிஞ்சுக் காயையும் போல (சுவை கெட்டதும், சுவை அற்றதும்) ஆகிவிடும்.

வி - ம் : துனி – காமவேதனை. இது பல நாள் பிரிந்திருப்பதால் உண்டாவது. புலவி – பிணக்கம். இது பிரிந்த காதலனோ காதலியோ வந்த பின் ஒரே அமளியில் புணர்வதற்கென்று படுத்திருக்கையில் புணர்வதற்கு முன்னல் நிகழ்வது, அதனல் 'துனி' என்பதை 'நீண்டகாலப் பிணக்கம்' என்றும் 'புலவி' என்பதைக் குறுகிய காலப் 'பிணக்கம்' என்றும் சொல்லப்படும். நீண்ட காலப் பிரிவில்லாமல் தினந்தினம் அடுத்தடுத்துப் புணர்வது அதிகம் பழுத்துப் பதனழிந்த பழத்தைப்போல் சுவை கெட்டது என்றும், படுக்கையில் படுத்த உடனே பிணக்கமில்லாமல் புணர்வது பிஞ்சுக் காயைப் போல் சுவை அற்றது என்றும் சொல்லப்பட்டது. 'கனிதல்' என்பதற்கு வெறும் 'பழுத்தல்' என்பது மட்டுமல்லாமல் 'பதம் கெட்டுக் குழைந்து போவது' அல்லது 'அழுகி விடுவது' என்ற பொருளும் உண்டு. அந்த அர்த்தத்தில் இங்கே பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. அதனல் – பிரிவாற்ருமைத் துன்பமும் புணரு முன் பிணக்கமும் இல்லாவிட்டால் காம இன்பம் குழைந்துபோன பழத்தைப் போல் சுவை கெட்டுப் போனதும், பச்சைப் பிஞ்சைப் போல் சுவை இல்லாததும் ஆகிவிடும். (நான் நெடுநாள் பிரிந்திருந்த துன்பத்தை அனுபவித்தும் இப்போது பிணங்குவதும் நல்லதுதான்) – என்பது கருத்து.

பிணங்குவது நல்லதென்றாலும் அதிலும் துன்பமிருக்கிறது. என்னவென்றால் :

1307. ஊடலி னுண்டாங்கோர் துன்பம் புணர்வது
நீடுவ தன்றுகொ லென்று.

ப. ரை: ஊடலின் ஆங்கு ஒர் துன்பம் உண்டு; புணர்வது நீடுவது கொல் அன்று கொல் என்று = பிணங்கினால் அதிலும் ஒரு துன்பம் இருக்கிறது; (என்னவெனில்) புணர்ச்சி நடக்க நெடுநேரம் ஆகுமோ அல்லது புணர்ச்சி இல்லாமலேயே போகுமோ என்று (ஏங்குவது).

பொ. ரை: பிணங்கினால் அதிலும் ஒரு துன்பம் இருக்கிறது: என்னவெனில் புணர்ச்சி இன்பம் நேரம் கழித்தாயினும் கிடைக்குமோ அல்லது புணர்ச்சி இல்லாமலேயே போய் விடுமோ என்று (ஏங்கும் துன்பம்).

வி-ம்: நானோ நெடுநாள் காதலரைப் பிரிந்திருந்த காம வேதனையினால் விரைவில் புணரவேண்டுமென்று தவித்துக் கொண்டிருக்கிறேன். அவரோ அந்தத் தவிப்பு இல்லாதவராக இருக்கிறார். அதனால் — நான் பிணங்கினால் 'அவர் தாமதித்தாவது என் பிணக்கத்தை நீக்கிப் புணருவாரோ அல்லது புணராமலேயே இருந்து விடுவாரோ என்ற ஏக்கம் உண்டாகிறது; ஆதலால் பிணங்கியிருப்பதும் ஒரு வேதனை தான் — என்பது கருத்து.

ஒருக்கால் என் காதலர் என் பிணக்கத்தை நீக்கிப் புணராமலேயே இருந்து விடுவாரானால் பிணங்குவதனால் என்ன பயன்? :

1308. நோத லெவன்மற்று நொந்தாரென் றஃதறியுங்
காதல ரில்லா வழி.

ப. ரை: நொந்தார் என்று அஃது அறியும் காதலர் இல்லா வழி மற்றும் நோதல் எவன் = (பிணங்கி) நொந்திருக்கிறாளே என்று அதை உணரக் கூடிய காதலர் இல்லா விட்டால் பின்னும் (பிணங்கி) நொந்து போவது எதற்காக?

பொ. ரை: (பிணங்கி) காமவேதனை அடைந்திருக்கிறாளே என்று அந்த நிலைமையை அறியக் கூடிய கணவன் இல்லாத ஒரு பெண் (பிணங்கி) வேதனை பொறுப்பதில் என்ன பயன்?

வி-ம்: நோதல் — பிணங்கி வேதனையடைதல். அஃதறியும் காதலர் இல்லாவழி — கணவன் அதை உணரக்கூடிய சரிசமமான காம உணர்ச்சி இல்லாதிருக்கும்போது. அதனால் —

நான் பிணங்கிக் காமவேதனை யடையும்போது என் பிணக்கத்தை நீக்கிப் புணர்ந்து என் வேதனையைத் தீர்க்க வேண்டுமே என்ற உணர்ச்சி என் காதலரிடத்தில் இல்லாத இந்த சமயத்தில் நான் பிணங்கி மேலும் வேதனையடைவதில் என்ன பயன்? — என்பது கருத்து.

புணர்ச்சியை நான் விரும்புவது போல் என் காதலரும் விரும்பினால்தானே நான் பிணங்குவது இன்பமாக முடியும்?:

1309. நீரு நிழல தினிதே புலவியும்
வீழுநர் கண்ணே யினிது.

ப. ரை: நீரும் நிழலதே இனிது; புலவியும் வீழுநர் கண்ணே இனிது = தண்ணீரும் நிழல் காட்டக் கூடியதே நல்லது; (அதைப் போல) பிணக்கமும் விருப்பங் காட்டக் கூடியவரிடத்திலேதான் நல்லதாகும்.

பொ. ரை: தண்ணீரும் (உருவத்தைத் திருப்பி எதிர் உருவமாக) நிழல் காட்டக் கூடியதாக (தெளிந்திருந்தால் தான்) நன்மை பயக்கும்; அது போல, பிணக்கமும் (நம் விருப்பத்துக்கு நேரான எதிர்) விருப்பம் காட்டக் கூடியவர்களிடத்தில்தான் நன்மை பயக்கும்.

வி - ம்: 'நிழல்' என்பதற்கு இங்கே 'குளிர்ச்சி' என்பது பொருளல்ல. 'எதிர் உருவம்' — 'பிரதிபிம்பம்' என்பது பொருள். நிழலது — பிரதிபிம்பம் காட்டக் கூடிய தெளிவுடையது - பளிங்கு போன்றது. அந்தத் தெளிவு நீரின் சுத்தத்துக்கு அடையாளம். வீழுநர் — சமமாக விரும்பும் இருவர். நம்முடைய வடிவத்துக்கு எதிர் வடிவம் காட்டுகின்ற தண்ணீரைப்போல, நம்முடைய விருப்பத்துக்கு எதிர் விருப்பம் காட்டுகின்ற — என்பது இங்கே உபமானம். நீர் தாகவிடாய் தீர்த்து இன்பம் தருவது. பிணக்கம் மோகவிடாய் தீர்த்து இன்பம் தருவது. ஆதலால் — புணர வேண்டுமென்று நான் விரும்புவதைப் போல என் காதலர் எதிர் விருப்பம் கொள்ளாதபோது நான் பிணங்கியிருப்பதில் பயனில்லை — என்பது கருத்து.

அவருக்கும் என்னைப்போல் புணர்ச்சியில் ஆசையிருந்தால் இந்நேரம் என் பிணக்கத்தை நீக்கியிருக்க மாட்டாரா? இவ்வளவு நேரமாக என்னைத் தவிக்க விட்டிருக்கிறாரே! அதனால்:

1310. ஊட லுணங்க விடுவாரோ டென்னெஞ்சம்
கூடுவே மென்ப தவா.

ப. ரை: ஊடல் உணங்க விடுவாரோடு கூடுவேம் என்பது என் நெஞ்சம் அவா = (இப்படி என்னை) ஊடலில் வாடிப்போக விட்டிருக்கிறவரோடு புணர்வோம் என்பது என் நெஞ்சத்தின் ஆசை (என் ஆசையல்ல).

பொ. ரை: (இவ்வளவு நேரமாக என் பிணக்கத்தைத் தீர்க்காமல்) பிணக்கத்தில் என்னை நொந்துபோக விட்டு இருக்கிற காதலரோடு புணர்ந்து இன்புறலாம் என்று என் மனம் ஆசைப்படுகிறது (எனக்கு நம்பிக்கை விட்டுப் போயிற்று).

வி-ம்: உணங்க விடுதல் – வாடி வதங்கிப்போக விடுதல். கூடுவேம் என்பது என் நெஞ்சம் அவா – புணர்வோம் என்பதை என் மனம் இன்னும் நம்பி ஆசைப்படுகிறது. ஆனால் என்னுடைய நம்பிக்கையும் ஆசையும் விட்டுப் போயிற்று. அவள் காதலன் வருவதற்கு முன்னுலிருந்து அவர் அன்பற்றுப் போய்விட்டார் என்று பல முறை சொல்லிக் கொண்டிருந்தாள். ஆனால் அவளுடைய மனம் மீண்டும் மீண்டும் காதலனிடம் ஓடிக்கொண்டிருந்தது. காதலன் வந்த பின்னும் பிணங்க நினைத்தாள். மனம் இடங்கொடுக்காமல் அவரிடம் போய் 'கள்ளற்றே கள்வ நின் மார்பு' என்று சொல்லிப் புணர்ச்சி வேண்டச் செய்தது. அதன் பிறகு 'நெஞ்சொடு புலந்து' தன் மனம் தன்னைக் கைவிட்டு விட்டு அவரிடமே போவதைக் கண்டித்தாள். அதற்கு மேல் அந்த மனம் சிறிது வசப்பட்டது போல, அதனிடம் 'புல்லாதிராஅப் புலத்தகை அவருறும் அல்லல் நோய் காண்கம் சிறிது' என்று சொல்லிப் பிணங்க ஆரம்பித்துத் தனக்குள்ளேயே பேசிக்கொண்டு காதலன் பிணக்கம் தீர்ப்பாரென்று காத்திருந்தாள். காதலன் நெடுநேரமாகப் புலவிதீர்க்க வராமலிருப்பது கண்டு அவர் புணர்வார் என்பதில் தனக்கு ஆசை விட்டுப் போய் விட்டது என்றும் ஆனால் மனதிற்கு இன்னும் ஆசையிருக்கிற தென்றும் வெகு அழகாகச் சித்திரிக்கப்படுகிறது. ஆதலால்– இவ்வளவு நேரமாக என்னைப் பிணக்கத்தில் வாடவிட்டிருக்கிற காதலர் இன்று என்னைப் புணர்வார் என்ற ஆசை எனக்கு விட்டுப் போய்விட்டது. ஆனால் என் மனம் இன்னும் நம்பி ஆசைப்படுகிறது – என்பது கருத்து.

அதி. 132—புலவி நுணுக்கம்

['புலவி நுணுக்கம்' என்பது புலவியைப் பற்றிய நுட்பமான கற்பனை. பிணங்கியிருக்கும் காதலியைப் பிணக்கந் தீர்த்துப் புணரக், காதலன் முயலும்போது அவள் புணர்ச்சிக்குச் சம்பந்தப்படாதவள்போல அதற்குச் சில பொய்யான காரணங்களைக் கற்பித்துச் சொல்வது. அக்காரணங்கள் மிக

வும் திறமையோடு கற்பித்துச் சொல்லப்படுவதால் 'நுணுக் கம்' எனப்பட்டது. முன் அதிகாரத்தில் காதலி, தன்னைக் காதலன் நெடுநேரமாகப் பிணக்கத்தில் வாடவிட்டதால் தனக்கு ஆசை விட்டுப் போனதாகவும் ஆனால் மனம் இன் னும் ஆசைப்படுவதாகவும் சொல்லிக் கொண்டு ஏங்கினாள். அந்த சமயத்தில் காதலன் அவள் ஊடலைத் தீர்த்துப் புண விரும்பி அவளைத் தீண்டுகிறான். அதற்கு அவள் மறுப்பவள் போலச் சில பொய்யான காரணங்களை வெகு அழகாகச் சொல்லுகிறாள். இந்தக் காரணங்கள், ஒரு மனைவி தன் னுடைய கணவனை வேறு எந்தப் பெண்ணும் காதலித்துவிடக் கூடாதென்றும், தன்னுடைய கணவனும் தன்னைத்தவிர வேறு எந்தப் பெண்ணையும் காதலித்துவிடக்கூடாதென்றும் விரும்பு கிற பெண்ணியல்பின் தன்மையும் உள்ளடங்கிய நுணுக்க முடையன.]

1311. பெண்ணியலா ரெல்லாருங் கண்ணிற் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

ப. ரை: பெண் இயலார் எல்லாரும் கண்ணில் பொது உண்பர் நின் மார்பு; பரத்த! நண்ணேன் = பெண் இயல்புள்ள எல் லாரும் கண்ணிற் கண்டு பொதுவாக அனுபவிக்கும் அழகு டையது உன் மார்பு; அழகைக் காட்டி ஆசை மூட்டுபவரே! நான் உம்மைத் தீண்டமாட்டேன்.

பொ. ரை: பெண் தன்மையுடையவர்கள் எல்லாரும் கண்டு (அவர்கள் எல்லாருக்கும் உரிமையுள்ளதுபோல்) களிக்கக் கூடிய அழகுடையது உம்முடைய மார்பு; (பிறருக்கு அழ கைக்காட்டி ஆசை மூட்டும் பரத்தையரைப் போல) அழ கைக் காட்டி ஆசை மூட்டுபவரே! உம்முடைய மார்பை நான் தழுவ மாட்டேன்.

வி - ம்: 'பெண் இயலார் எல்லாரும் கண்ணிற் பொது உண் பர்' என்பதற்கு 'பார்த்த பெண்கள் எல்லாரும் பொது வாக ஆசை கொள்வார்கள்' என்பது மட்டுந்தான் பொருள். 'பெண்ணியலார்' என்பதற்கு "கற்பு நாண் முதலிய நற் குணங்களின்மையிற் பரத்தையற்குள்ளது பெண்ணியற்கை மாத்திரமே யென்னும் கருத்தாற் 'பெண்ணியலா' ரென் றாள்" என்று பொருள் கொள்வது சிறிதும் பொருந்தாதது மட்டுமின்றி பெரிதும் குற்றமானது. எப்படி யென்றால் 'கண்ணிற் பொது உண்பர்' என்று கண்ணினால் உண்பதை மட்டும்தான் சொல்லப்படுகிறது. வேசியர் வீட்டுக்குப் போகிறவன் அவர்கள் இவனுடைய மார்பைக் 'கண்ணில்' மட்டும் உண்ணும்படிக் காட்டப் போகிறவனல்ல. மேலும்

'பெண்ணியலார் எல்லாரும்' என்பதற்கு 'வேசிகள் எல்லாரும்' என்பது பொருளானால் இவன் அங்குள்ள எல்லா வேசிகளிடத்திலும் போய்க்கொண்டிருப்பவனு? ஆதலால் 'பெண்ணியலார்' என்பதற்கு 'வேசிகள்' என்று கொண்டு காதலன் வேசிகள் வீட்டுக்குப் போய்வந்தவனுகப் பேசுவது திருக்குறளிலுள்ள தூய காமத்துக்கு மாசுண்டாக்கும். 'பரத்த' என்பது 'பரத்தை' என்பதன் ஆண்பால். பரந்தையர், பலபேருக்குத் தம்முடைய அழகைக் காட்டி ஆசை யுண்டாக்குகிறவர்கள். அப்படிப்போல தன் கணவன் அவனைப் பார்க்கிறவர்களுக்கெல்லாம் ஆசை யுண்டாகும்படி அவ்வளவு அழகாக இருப்பதாக மறைமுகமாக, காதலி மகிழ்வதை நிந்தனைப் புகழ்ச்சியாகச் சொல்லப்படுகிறது. ஆதலால் — பார்த்த ஆண்களுக்கெல்லாம் ஆசை மூட்ட அழகைக் காட்டும் பரத்தை போலப், பார்த்த பெண்களுக்கெல்லாம் ஆசைமூட்டும் அழகுடையவரே உம்மைப் புணரமாட்டேன் — என்பது கருத்து.

இப்படிச் சொல்லிவிட்டுக் காதலி பிணங்கிப் படுத்துக் கொண்டே காதலன் பிணக்கம் தீர்த்துப் புணர ஆசை கொண்டு விட்டதில் மகிழ்ச்சிகொண்டு, மேலும் காதலன் என்ன செய்யப் போகிறுன் என்பதை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறுள். அந்த சமயத்தில் காதலன் தும்முகிறுன். அதை காதலி தனக்குள் பரிகாசம் பண்ணுவதுபோல் சொல்லிக் கொள்ளுகிறுள் :

1312. ஊடி யிருந்தேமாத் தும்மினுர் யாந்தம்மை
நீடுவாழ் கென்பாக் கறிந்து.

ப. ரை : ஊடி இருந்தேமா யாம் தம்மை நீடு வாழ்க என்பாக்கு அறிந்து தும்மினுர் = பிணங்கி இருந்தேனு (அப்போது) நான் அவரை 'நீடூழி வாழ்வீர்கள்' என்று சொல்லுவேனுக்கு மென்று எண்ணி தும்மினுர்.

பொ. ரை : (நான் அவருடன் பேசாமல்) பிணங்கியிருக்கும் போது நான் அவரை நெடுங்காலம் வாழ்வீர்களென்று சொல்லுவேனுக்கும் (அப்படியாவது நான் பேச வேண்டும்) என்று எண்ணி என் காதலர் தும்மினுர். (நான் அதற்கும் பேசவில்லை.)

வி - ம் : நீடுவாழ்க என்பாக்கு அறிந்து — நீடு வாழ்க என்று நான் சொல்லும் வழக்கத்தை அறிந்து. அதாவது அவர் தும்மும்போதெல்லாம் காதலி அவரை 'உங்களுக்கு நூறு ஆயுசு' என்று வாழ்த்துவது வழக்கம். அதை அறிந்தவரான தால் அதை எண்ணி — என்பது பொருள். தும்முகின்றவரை

அருகிலிருப்பவர் வாழ்த்துவது தமிழர் வழக்கம். ஆதலால்—நான் பிணங்கிக்கொண்டு அவருடன் பேச மறுத்தவள்போல் இருக்கிற சமயத்தில் நான் அவரை நீடு வாழ்க என்று வாழ்த்தி, அப்படியாவது பேசுவேனுக்கும் என்று நினைத்து காதலர் தும்மினர். (ஆனல் நான் பேசவில்லை) — என்பது கருத்து.

காதலன் தும்மியது இயல்பாக வந்த தும்மல். தும்மல் ஒருவர் விரும்பின உடனே வருவதல்ல. ஆனாலும் காதலி தன்னுடைய பிணக்கத்தில் இப்போது பிகுவு காட்டுவதாகக் கற்பனை செய்யப்பட்டது. தும்மினபோது கூட அவள் வழக்கம்போல் வாழ்த்தாதிருந்ததைக் கண்ட காதலன் அருகிலிருந்த மணமுள்ள மலர் மாலை ஒன்றைத் தன் கழுத்தில் சூடிக் கொண்டு, அதைப் பார்க்கச் சொல்லிக் காதலிக்குக் காட்டுகிருன். அதை அவள் பார்த்துவிட்டு, கோபங் கொள்ளுகிருள்; அதைக் காதலன் சொல்லுகிருன்; (இனிவரும் குறள்களெல்லாம் காதலன் சொல்வது) :

1313. கோட்டுப்பூச் சூடினுங் காயு மொருத்தியைக்
காட்டிய சூடினீ ரென்று.

ப. ரை: கோட்டுப்பூ சூடினும் ஒருத்தியை காட்டிய சூடினீர் என்று காயும் = பூமாலையை அணிந்து கொண்டாலும் 'யாரோ ஒருத்திக்குக் காட்டுவதற்காக சூடிக் கொண்டீர்' என்று கோபிக்கிருள்.

பொ. ரை: மலர்மாலையை (நான்) சூடிக்கொண்டாலும் (அதை அவள் பார்த்து விட்டு, 'அது எனக்கல்ல) வேறுயாரோ ஒருத்திக்கு உங்கள் அழகைக்) காட்டிக் கொள்ளச் சூடினீர்கள்' என்று கோபிக்கிருள்.

வி-ம்: கோட்டுப்பூ — கூட்டப்பட்ட பூ — மாலையாகச் சேர்க்கப்பட்ட மலர். காயும் — கோபிக்கும். ஒருத்தியைக் காட்டிய — வேறு ஒருத்திக்குக் காட்ட. அதாவது 'பெண்ணியலார் எல்லாரும் கண்ணிற் பொது உண்பர்' என்று சொல்லப்பட்ட பெண்ணியலார் ஒருத்திக்குக் காட்டிக் கொள்ள — என்பதாம். பிணங்குகிற பெண் காதலரிடத்தில் உண்மையான குற்றம் ஒன்றும் சொல்ல முடியாமல் புனைந்து சொல்லும் 'புலவி நுணுக்கம்' இது. ஆதலால் — நான் ஒரு பூ மாலையை சூடிக் கொண்டாலும் அது யாருக்கோ வேறு ஒரு பெண்ணுக்குக் காட்டச் சூடிக் கொண்டதாய்ப் பிணங்குகிருள் — என்பது கருத்து.

அதைக்கண்ட நான் 'அது வேறு யாருக்கும் காட்டச் சூடியதல்ல; உனக்குக் காட்டத்தான் சூடினேன். நான் மற்ற எல்

லாரிலும் உன்னைத்தான் அதிகமாக நேசிக்கிறேன்' என்று என்னுடைய நண்பர்கள், உறவினர்கள், ஆண்கள், பெண்கள் அனைவரையும் சேர்த்துச் சொன்னேன் அப்போது :

1314. யாரினுங் காதல மென்றேனா வூடினாள்
யாரினும் யாரினு மென்று.

ப. ரை : யாரினும் காதலம் என்றேனா 'யாரினும் யாரினும்' என்று ஊடினாள் = (மற்ற) யாரையும் நான் விரும்புவதை விட (உன்னிடத்தில்) நான் அதிக விருப்பமுள்ளவன் என்று சொன்னேன்; உடனே 'யாரையும் விட', 'யாரையும் விட' என்று வெறுத்துரைத்தாள்.

பொ. ரை : (நான் மற்ற) யாரையும் நேசிப்பதைவிட (உன்னை) அதிகமாக நேசிக்கிறவன் என்று சொன்னேன்; அதற்கு அவள் உடனே 'யாரையும் விட, யாரையும் விட' என்று பதறினாள்.

வி-ம் : காதலம் – காதலுள்ளேன். 'நான் உன்னைத்தான் அதிகமாக காதலிக்கிறேன்' என்று கபடமற்றுச் சொன்னேன்; என் காதலி நான் அவளை விட்டு வேறு பெண்களையும் காதலிப்பதாகக் குற்றம் கற்பித்து, 'யாரினும் அதிகமாக என்னைக் காதலிக்கிறீர்' என்று திருப்பித் திருப்பி கோபத்தோடு கேட்டாள் – என்பது கருத்து.

அதைக்கண்ட நான் அவளைச் சமாதானப்படுத்தி, 'நான் வேறு பெண்களைக் காதலிப்பவனல்ல. இந்தப் பிறப்பில் உன்னை விட்டுப் பிரிந்து பிறரிடம் ஆசை கொள்ள மாட்டேன்' என்று சொன்னேன். அதைக் கேட்ட காதலி :

1315. இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனாக்
கண்ணிறை நீர்கொண் டனள்.

ப. ரை : இம்மைப் பிறப்பில் பிரியலம் என்றேனா கண்நிறை நீர் கொண்டனள் = 'இப்பிறப்பில் உன்னைப் பிரியமாட்டேன்' என்று நான் சொன்னேன். (அவள்) கண்களில் கண்ணீர் நிறைந்து விட்டது.

பொ. ரை : நான் 'இந்தப் பிறப்பில் உன்னைவிட்டுப் பிரிந்து (வேறு எங்கும்) போய்விட மாட்டேன்' என்றேன்; உடனே என் காதலி (இந்தப் பிறப்பில் பிரியமாட்டேன் என்றால் இனிவரும் பிறப்புகளில் நான் அவளை விட்டுப் பிரிந்து விடுவேனோ என்று வருந்தி) நிறைய கண்ணீர்விட்டு அழுது விட்டாள்.

வி-ம் : 'இந்தப் பிறப்பில் நான் உன்னை விட்டுப் பிரியமாட்டேன்' என்று சொன்னேன்; அதற்கு என் காதலி நான் மறு பிறப்புகளில் பிரிந்து விடுவேனோ என்று வருத்தமுற்றுக் கண்ணீர் விட்டு அழுதாள் — என்பது கருத்து.

அவள் பிணக்கம் நீங்கினவள் போல அழுததினால் நான் மகிழ்ச்சியுற்று, காதலியின் கண்ணீரை மாற்றித் தொடர்ந்து பேசும்பொழுது நான் வெளியூர்களில் இருந்தபோது அவளை அடிக்கடி நினைத்துக் கொண்டதாகச் சொன்னேன். அதற்கு அவள் :

1316. உள்ளினே னென்றேன்மற் றென்மறந்தீ ரென்றென்னைப்
புல்லாள் புலத்தக் கனள்.

ப. ரை : 'உள்ளினேன்' என்றேன் 'மற்று என் மறந்தீர்' என்று என்னை புல்லாள் புலத்தக் கனள் = (உன்னை) 'நினைத்தேன்' என்று சொன்னேன்; (அதற்கு அவள்) 'ஆனால் ஏன் மறந்தீர்' என்று சொல்லித் தழுவாமல் பிணங்கிக் கொண்டாள்.

பொ. ரை : '(வெளியூர்களில் இருக்கும்போது) உன்னை நினைத்தேன்' என்று சொன்னேன்; (அதற்கு அவள் 'உன்னை இப்பிறப்பில் பிரியமாட்டேன்' என்றீரே அபபடியிருக்க உம்முடைய நெஞ்சில் என்னைப் பிரிந்திருந்துதானே மறுபடியும் நினைத்திருக்கிறீர்கள்) 'ஏன் இடையில் மறந்தீர்கள்?' (என்று சொல்லி என்னைத்) தழுவ வந்தவள் தழுவாமல் பிணங்கிக் கொண்டாள்.

வி — ம் : 'என் மறந்தீர்' என்பது, மனதை விட்டு நீக்கி மறந்தால்தானே மீண்டும் நினைக்க முடியும்? ஏன் என்னை உம்முடைய மனதிலிருந்து நீக்கியிருந்தீர்? — என்ற பொருள் தருவது. புல்லாள் புலத்தக் கனள் — புல்லாமல் பிணக்கிக் கொண்டாள் — அதாவது புல்லவந்தவள் பிணங்கிக் கொண்டாள். தகைதல் — நிகழ்தல். தக்கனள் — நிகழ்த்தினாள் — செய்தாள். ஆதலால் — நான் வெளியூரிலிருந்த போது அவளை அடிக்கடி நினைத்துக் கொண்டதாகச் சொன்னேன். அதற்கு அவள், 'மறந்துவிட்டதனால்தானே நினைக்க வேண்டியிருந்தது, ஏன் மறந்தீர்' என்று சொல்லி விட்டுத் தழுவ வந்தவள் பிணங்கிக் கொண்டாள் — என்பது கருத்து.

அப்படி அவள் சொல்லிக்கொண்டிருக்கும்போது எனக்குத் தும்மல் வந்துவிட்டது. நான் தும்மினேன். அதற்கும் அவள் :

1317. வழுத்தினா டும்மினே னாக வழித்தழுதாள்
யாருள்ளித் தும்மினீ ரென்று.

ப. ரை: வழுத்தினாள் தும்மினேன் ஆக யார் உள்ளி தும்மினிர் என்று அழித்து அழுதாள் = அப்படிச் சொன்னாள்; (நான்) தும்மினேன்; 'யார் (உம்மை) நினைத்து நீர் தும்மினீர்' என்று திரும்பவும் அழுதாள்.

பொ. ரை: (அப்படி அவள்) சொன்னாள் (அப்போது எனக்குத் தும்மல்வர நான்) தும்மினேன்; (அதைக்கண்டு அவள் 'யாரோ ஒருத்தி உம்மை நினைக்கிறாள்). 'யார் நினைத்து நீர் தும்மினீர்' என்று (கேட்டுவிட்டு) மீண்டும் அழுதாள்.

வி-ம்: 'வழுத்தினாள்' என்பதற்கு 'வாழ்த்தினாள்' என்று பொருள் கொள்ளக் கூடாது. அப்படிக் கொள்வதால் குழப்பமும் முரணும் உண்டாகி 'அழித்தழுதாள்' என்பதற்கு வாழ்த்தினதை அழித்து விட்டு அழுதாள் என்று தடுமாற்றமுண்டாகிறது. ஆகையால் 'வழுத்தினாள்' என்பதற்கு 'சொன்னாள்' என்ற நேரான பொருள் நான் கொள்ள வேண்டும். அழித்தழுதாள் – திரும்பவும் அழுதாள். முன், ஒரு தரம் 'கண் நிறை நீர் கொண்டனள்' என்றதில் அழுததைக் குறிப்பது. 'யாருள்ளித் தும்மினிர்' என்றது. ஒருவர் தும்மும்போது அவராகவோ அருகிலிருப்பவரோ 'யாரோ நினைத்துக் கொள்ளுகிறார்கள்' என்று சொல்லுவது தமிழ் நாட்டில் வழக்கம் என்பதை யொட்டிச் சொன்னது. ஆதலால் – அவள் 'என் மறந்திர்' என்று சொல்லும்போது நான் தும்மினேன். அவள் 'யாரோ ஒருத்தி உம்மை நினைக்கிறாள்; அதனால்தான் தும்மினிர். அப்படி உம்மை நினைப்பது யார்' என்று பிணங்கினாள் – என்பது கருத்து.

அப்படி அவள் சொன்ன சமயத்தில் எனக்கு மறுபடியும் ஒரு தும்மல் வரும்போல இருந்தது. தும்மினால் அவள் சொன்னதை ஒத்துக் கொண்டதுபோல் ஆகி விடுமோ என்று நான் வந்த தும்மலை அடக்கினேன். அதைக் கண்ட என் காதலி:

1318. தும்முச் செறுப்ப வழுதா ணுமருள்ள
லெம்மை மறைத்திரோ வென்று.

ப. ரை: தும்முச் செறுப்ப நுமர் உள்ளல் எம்மை மறைத்திரோ என்று அழுதாள் = தும்மலை அடக்கினதற்கு 'உம்ம வர் யாரோ உம்மை நினைப்பதை என்னிடம் மறைக்க முயல்கிறீர்களோ' என்று அழுதாள்.

பொ. ரை : நான் தும்மலை அடக்கினதற்கு அவள் 'உமக்கு வேண்டியவர் (யாரோ உம்மை) நினைக்கிறதை எனக்கு ஒளிக்க முயல்கின்றீர்' என்று அழுதாள்.

வி - ம் : தும்முச் செறுப்ப - தும்மலை அடக்கினதைக்கண்டு. நுமர் – நும்மவர் – உமக்கு உறவானவர். உள்ளல் – நினைப்பதை....நான் தும்மலை அடக்கினதைக் கண்டு அவள் உமக்கு உறவானவள் யாரோ உம்மை நினைக்கிருள். அதை எனக்கு மறைக்கப்பார்க்கிறீரோ – என்று அழுதாள் – என்பது கருத்து.

நான் அதற்கு 'எனக்கு உறவான பெண் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. நீ என்னை ஆசையோடு நினைத்ததினுல் தான் முன்னே எனக்குத் தும்மல் வந்தது. இப்போது நான் அடக்கியதும்மலும் நீ என்னை நினைத்ததால்தான் வந்தது. ஆனுல் நான் தும்மினுல் நீ வருத்தப்படுகிருயே என்று அதை அடக்கினேன்' என்று அவளையே புகழ்ந்து அவள் பிணக்கத்தைத் தீர்க்க முயன்றேன். அதற்கும் அவள்,

1319. தன்னை யுணர்த்தினுங் காயும் பிறர்க்குநீ
ரிந்நீர ராகுதி ரென்று.

ப. ரை : தன்னை உணர்த்தினும் பிறர்க்கும் நீர் இந்நீரர் ஆகுதிர் என்று காயும் = அவளையே (புகழ்ந்து) சொல்லியும் கூட அவள் 'மற்றவர்க்கும் நீர் இந்த மாதிரிதான் சொல்லுவீர்' என்று கோபித்துக் கொள்ளுகிருள்.

பொ. ரை : ('வேறு யாரும் என்னை நினைப்பவரில்லை நீ தான் நினைத்தாய்' என்று) அவளையே புகழ்ந்து சொல்லிப் பிணக்கம் நீக்க முயன்றும்கூட அவள் 'மற்றப் பெண்களிடத்தும் நீர் இப்படித்தானே பேசுவீர்' என்று சினந்து கொள்ளுகிருள்.

வி - ம் : உணர்த்தினும் – சமாதானப்படுத்தி பிணக்கம் நீக்கினுலும். 'உணர்த்தல்' என்பதற்குக் காமப் பகுதியில், காதலன் காதலியைப் பலவாறு புகழ்ந்து, கெஞ்சி, ஆசைமொழிகள் சொல்லிப் பிணக்கத்தை நீக்கிப் புணர்ச்சிக்கு இசையச் செய்வது – என்றே பொருள். 'உணர்த்தினும்' என்பதற்கு 'பணிந்து உணர்த்துங்காலும்' என்று பொருள் கொண்டு 'இவள் தெளிவித்த வழியுந் தெளியாளென்பது பற்றி என் மேலேற்றிய தவற்றை உடம்பட்டுப் பணிந்தேன்' என்ற கருத்தைப் புகுத்தி, காதலி சொன்ன விபசார குற்றத்தை

யெல்லாம் காதலன் (பாசாங்காகவேனும்) ஒப்புக் கொண்டதாகச் சொல்லுவது சரியல்ல. அதனால் – நான் அவளையே குறிப்பாகப் புகழ்ந்து பேசிப் பிணக்கத்தைப் போக்க முயன்றாலும் அவள் 'நீர் மற்றப் பெண்களையும் இப்படித்தானே சிங்காரமாகப் புகழ்ந்து பேசுவீர்' என்று கோபித்துக் கொள்ளுகிறாள் – என்பது கருத்து.

இப்படி அவள் நான் என்ன செய்தாலும் எதைச் சொன்னாலும் அதற்கு ஒரு குற்றம் கற்பித்து, பிணங்கி, அழுது, கோபித்துக் கொள்ளுகிறாளே, இதற்கென்ன செய்வது என்று நான் ஒன்றும் பேசாமலும், தொடாமலும் சும்மா இருந்து அவளைப்பற்றியே நினைத்துக் கொண்டிருந்து விட்டு அவளைப்பார்த்தேன். அதற்குக்கூட அவள் :

1320. நினைத்திருந்து நோக்கினுங் காயு மனைத்துநீர்
யாருள்ளி நோக்கினீ ரென்று.

ப. ரை : நினைத்து இருந்து நோக்கினும் அனைத்தும் நீர் யார் உள்ளி நோக்கினீர் என்று காயும் = (அவளையே) நினைத்துக் கொண்டு (பேசாமல் சும்மா) இருந்து விட்டு (அவளைப்) பார்த்தாலும் 'அவ்வளவு நேரமும் நீர் யாரை நினைத்துக் கொண்டிருந்து என்னைப் பார்த்தீர்' என்று கோபிக்கிறாள்.

பொ. ரை : (அவளைப்பற்றியே) நினைத்துக்கொண்டு (வாய் பேசாமல்) இருந்து கொண்டு (வேறொன்றும் செய்யாமல் அவளைப்) பார்த்தாலும் கூட 'அவ்வளவு நேரமாக யாரை நினைத்துக் கொண்டிருந்து விட்டு (இப்போது என்னைப்) பார்க்கிறீர்' என்று கோபிக்கிறாள்.

வி - ம் : 'நினைத்து' என்பது, காதலி பிணங்குவதையும் அழுவதையும் பேசுவதையும் 'நினைத்து' – என்பதாம். 'இருந்து' என்பது ஒரு வார்த்தையும் பேசாமலும் ஒரு செய்கையும் செய்யாமலும் 'சும்மா இருந்து' – என்பதாகும். இந்தக் குறளில் 'நினைத்து இருந்து நோக்கினும்' என்பதற்கு 'அவளது அவயவங்களுக்கு ஒப்பில்லாமையை நினைத்து அவற்றையே நோக்கினும்' என்றும், 'அனைத்தும் நீர் நோக்கினீர் யார் உள்ளி' என்று பிரித்து, அதற்கு 'என் அவயவங்கள் அனைத்தும் நீர் நோக்கினீர் அவற்றின் ஒப்புமையான் எந்தப் பெண்களை நினைத்து' என்றும் பொருள் செய்வது சிறிதும் பொருத்தமற்ற மிகை. அதற்கு மேலும், 'யான் எல்லா அவயவங்களானும் ஒரு பெண்ணோடு ஒத்தல் கூடாமையின் அவரெல் ஒவ்வொருவராகப் பல்ரையும் நினைக்க வேண்டும்: அவரெல்லாரையும் யானறியச் சொல்லுமின் என்னும் கருத்தால்'

என்பது சிறிதும் கருத இடமில்லாத கருத்து. 'அனைத்தும்' என்பதற்கு 'அவ்வளவு நேரமும்' என்பதுதான் பொருள். இவ்வதிகாரத்திற் பிணங்குவதற்காகக் காதலி சொல்லும் காரணங்கள் எல்லாம் வெறும் கற்பனைகளான பொய்கள். அப்படிப் பொய்களைப் புனைந்து சொல்லுகிற தன்மையினால் தான் இது 'புலவி நுணுக்கம்'. ஆகையினால் – நான் அவளைப் பற்றியே நினைத்துக்கொண்டு சும்மா இருந்துவிட்டு அவளைப் பார்த்தேன்; அதற்கும் அவள் 'இவ்வளவு நேரமாக யாரை நினைத்துக் கொண்டிருந்துவிட்டு இப்போது என்னைப் பார்க்கிறீர்' என்று கோபிக்கிறாள் – என்பது கருத்து.

அதி. 133—ஊடலுவகை

['ஊடல் உவகை' என்பது புணர்ந்தவர்கள் பிரிந்திருப்பதால் அடையக் கூடிய மகிழ்ச்சி. இந்த மகிழ்ச்சி வெறும் மனக்களிப்புமட்டுமல்ல. உடல் நலத்தையும் உள்ளடக்கிய நன்மை. ஆதலால் இங்கே சொல்லப்படும் ஊடல் மனைவி பொய்க் காரணங்களைச் சொல்லிப் புணர்ச்சியைத் தாமதப்படுத்துகிற பிணக்கம் மட்டுமல்ல. காதலனும் புணர்ச்சியில் மிதமாக இருக்கப் பிரிந்திருக்க வேண்டும் என்பதையும் சேர்ந்தது. ஆதலால் 'ஊடலுவகை' என்பதற்கு இங்கே 'பிரிந்திருப்பதால் அடையும் நன்மை' என்பது கருத்து. இது கணவன் மனைவி இருவருக்கும் பொது அறிவு; எனினும் ஆடவருக்கே சிறப்பாகச் சொல்லப்படுவது.]

1321. இல்லை தவறவர்க் காயினு மூடுதல்
வல்ல தவரளிக்கு மாறு.

ப. ரை: அவர்க்குத் தவறு இல்லையாயினும் ஊடுதல் அவர் அளிக்கு மாறு வல்லது = அவரிடத்தில் தவறு இல்லையானாலும் (தவறு சொல்லிப்) பிணங்குவது அவருடைய அன்புக்கு நிகரான அன்புடைய தன்மையுள்ளது.

பொ. ரை: காதலரிடத்தில் குற்றமில்லையென்றாலும் (குற்றமிருப்பது போலச் சொல்லிக் காதலி) பிணங்குவது காதலருடைய ஆசைக்குச் சரிசமமான ஆசைகாட்டும் தன்மையுள்ளதேயாம்.

வி-ம்: 'தவறு' என்றது காதலி பொய்யாகப் புனைந்து சொன்ன விபசாரக் குற்றம். அவர் அளிக்கு மாறுவல்லது – அவர் எவ்வளவு ஆசை காட்டுகிறாரோ அவ்வளவு ஆசை காதலியும் காட்டுவது போன்ற வல்லமையுள்ளது. அதா

வது காதலியின் பிணக்கமும் காதலனுடைய துடிப்பைப் போல் ஒரே பயனைக் கருதிய அன்புச் செயலேயாகும் – என்பது. ஆதலால் – காதலரிடத்தில் ஒரு குற்றமும் இல்லாவிட்டாலும் காதலி குற்றங்களைக் கற்பித்துப் பிணங்குவதும் காதலனுடைய புணர்ச்சி ஆசைக்கு நிகரான ஆசையுள்ளதே – என்பது கருத்து.

அந்தப் பிணக்கத்தால் சிறிது நேரம் துன்பமிருந்தாலும் பின்னால்:

**1322. ஊடலிற் றோன்றுஞ் சிறுதுனி நல்லளி
வாடினும் பாடு பெறும்.**

ப. ரை: ஊடலில் தோன்றும் சிறு துனி நல் அளி வாடினும் பாடுபெறும் = பிணங்குவதால் உண்டாகும் சிறு துன்பத்தால் நல்ல அன்பு வாடினாலும் (அதனால்) பயன் உண்டாகும்.

பொ. ரை: பிணங்கிப் புணராதிருக்கும் வரையிலும் ஏற்படும் சிறு காமத் துன்பத்தினால் பிரியம் வாட்டமுற்றாலும் (பின்னால்) அதனால் அதிகமான இன்பம் உண்டு.

வி-ம்: துனி – துன்பம். பாடு – நல்லபயன். பிணங்கிப் புணர்ச்சியில்லாதிருக்கும்போது உண்டாகிற காமத்துன்பத்தால் அன்பு அலுப்படைந்தாலும் பின்னால் புணரும்போது இன்பம் அதிகம் உண்டு – (என்பதை இதுவரை நான் பிணங்கித் துன்பப்பட்டபின் இப்போது என் காதலர் புணர்ந்ததில் நானடைந்த மிக்க இன்பத்தால் அறிகிறேன்) என்பது கருத்து.

மனமொத்த காதலர்கள் பிணங்கிப் பிரிந்திருந்து புணர்வதைப் போன்ற இன்பம்:

**1323. புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்னா ரகத்து.**

ப. ரை: நிலத்தொடு நீர் இயைந்த அன்னார் அகத்து புலத்தலின் புத்தேள் நாடு உண்டோ – நிலவளத்தோடு நீரும் சேர்ந்தது போன்றவர்களிடத்தில் பிணங்கிப் புணர்வதிலுள்ள (இன்பம்போல்) தேவலோகத்திலும் (இன்பம்) உண்டோ.

பொ. ரை: நிலவளமும் நீர்வளமும் சேர்ந்தது போன்ற (மனமொத்த) காதலர்களுக்கிடையில் (அவர்கள்) பிணங்கி

யிருந்து புணரும்போது உண்டாவது போன்ற இன்பம் தேவ லோகத்திலும் கூட இருக்காது.

வி-ம்: நிலத்தொடு நீர் இயைந்தன்ன — நிலவளமும் நீர்வள மும் பொருந்த அமைந்ததைப் போன்ற. நிலம் வளமுள்ள தாக இருந்து நீர் இல்லாது போனாலும் பயனில்லை; நீர் நிறையக் கிடைத்தும் நிலம் வளமற்றதாக இருந்தாலும் பயனில்லை. இரண்டும் சேர்ந்த இடத்தில்தான் செழிப்பும், பயிரும், உணவும் மற்ற இன்பங்களும். நிலவளமும் நீர்வள மும் சரிசமனாகப் போதிய அளவு இல்லாமல் ஒன்றுக் கொன்று குறைந்திருந்தால் அங்கே விளைச்சல் தடுமாற்ற முள்ளதாகத்தான் இருக்கும். மேலும் நிலவளமும் நீர்வள மும் சமமாக இருக்கிற வயலிலும் நிலமும் நீரும் எப்போதும் சேர்ந்திருக்கக் கூடாது. பயிர் அழுகிப்போகும். வெகு காலம் நீரில்லாமலும் இருக்கக் கூடாது. பயிர் காய்ந்து அழிந்து போகும். அதனால் பயிரின் செழிப்புக்கு நீர் நிலத் தொடு சேரவேண்டிய காலத்தில், அளவோடு சேரவேண் டும். மற்ற நாட்களில் நிலத்தை விட்டு நீர் பிரிந்திருக்க வேண்டும். வேண்டுமென்றே தண்ணீர் பாய்ச்சாத காலங் களில் பயிர் வாடினாலும் பின்னால் வளம் பெறுதற்கே. இங்கே நிலத்தைப் பெண்ணாகவும் நீரை ஆணாகவும் கொள்வது உப மானத்துக்கு அழகுதரும். புத்தேள் நாடு — தேவலோகம் — உலகத்தை விட அதிக இன்பங்கள் உள்ள இடம் என்று சொல்லப்படுவது. இங்கே 'புலத்தலின்' என்பதற்கு வெறும், 'பிணங்கியிருத்தலினும்' என்பது மட்டும் பொரு ளல்ல. 'பிணங்கிப் பிரிந்திருந்து பின் புணர்வதினும்' என் பது பொருள். ஏன் எனில் முன் குறளில் சொல்லியபடி 'சிறு துனியால் வாடிப் பாடுபெற்ற' நிலைமைக்குப் பின்னுள்ள நிலைமை இது. மேலும் வெறும் பிணங்குதல் என்று மட்டும் கொண்டால் அதில் இன்பமில்லை. அந்த இன்பமற்ற நிலை யைப் 'புத்தேள் நாட்டோடு' ஒப்பிட்டுச் சிறப்பிக்க முடி யாது. ஆதலால் — மனமொத்த காதலர்கள் பிரிந்திருந்து காமவேதனையுற்றுப் பின் புணர்வதில் உண்டாவதைப் போன்ற இன்பம் தேவலோகத்திலும் இல்லை — என்பது கருத்து.

என் மனதிற்கிசைந்த என் காதலர் இப்போது என்னைப் புணர்ந்த இன்பம் தேவலோகத்திலும் கிடைக்க முடியாத இன்பமாக இருந்தது. ஆனால் இப்போது அவர் என்னைப் புணராமல் என்னைப் பிணக்கத்திலேயே இருக்கவிட்டிருந் தால்தான் என் மனம் உடைந்துபோயிருக்கும்:

1324. புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்
னுள்ள முடைக்கும் படை.

ப. ரை : புல்லிவிடாஅ புலவியுள் என் உள்ளம் உடைக்கும் படை தோன்றும் = புணர்ந்து விடாத (வெறும்) பிணக்கத்தில் என் உள்ளத்தைப் பிளந்து விடுவது போன்ற ஆயுதம் இருந்தது.

பொ. ரை : புணர்ச்சி செய்து தீர்த்து விடாமல் (வெறும்) பிணக்கத்தில் இருந்தபோது என் மனதைக் கோடரி கொண்டு பிளப்பதைப் போன்ற துன்பம் இருந்தது.

வி-ம் : புல்லி விடுதல் – புணர்ந்து முடித்து விடுதல். புல்லி விடா – புணர்ந்து முடித்து, காம ஆசையைத் தீர்த்து விடாமல் பிணக்கத்தை நீளவிட்ட. தோன்றும் – உண்டாகும் – இருக்கும். இங்கே 'தோன்றும்' என்பது முக்காலத்துக்கும் பொது. உள்ளம் உடைக்கும் படை – 'காமக் கணிச்சி உடைக்கும் நிறையென்னும் நாணுத்தாழ் வீழ்த்த கதவு' என்றதிற் சொல்லப்பட்ட கணிச்சி. ஆதலால் – புணர்ந்து காமவேதனையைத் தீர்த்து விடாத வெறும் புலவியில்தான் என் நெஞ்சைப் பிளந்து விடும்படியான காம வேதனை இருந்தது. (இப்போது தீர்ந்து விட்டது) – என்பது கருத்து.

இப்படிக் காதலன், பிணக்கத்தை நீக்கிப் புணர்ந்ததில் காதலி அடைந்த தேவலோக இன்பத்தினும் சிறந்த இன்பத்தைப் புகழ்ந்து கொண்டு அவள் களிப்பில் இருக்கிறபோது அவளைத் தழுவிக் கொண்டிருந்த காதலன் அவளை விட்டுப் பிரிந்து தனியே படுக்கிறான். அப்படிப் பிரிந்து படுப்பதைப் பற்றி, காதலன் தனக்குள்ளேயே சொல்லிக் கொள்ளுகிறான்: (இனி வரும் குறள்களெல்லாம் காதலன் நினைப்பது).

1325. தவறில ராயினுந் தாம்வீழ்வார் மென்றோ
ளகறலி னாங்கொன் றுடைத்து.

ப. ரை : தவறு இலர் ஆயினும் தாம் விழ்வார் மென் தோள் அகல்தலின் ஆங்கு ஒன்று உடைத்து = குற்றமற்றவள் ஆனாலும் தாம் காதலிக்கின்றவளுடைய மென்மையான தோளை விட்டு அகன்றுவிட்டால் அது ஒரு நன்மை உடையது.

பொ. ரை : அவளுடைய குற்றம் ஒன்றுமில்லை யென்றாலும் தான் பிரியப்படுகிற தன் காதலியின் மென்மையுள்ள தோளைத் தழுவிக் கொண்டிருப்பதிலிருந்து (தானாகவே காதலன்) விலகி விடுவதால் அதில் ஒரு நன்மை உண்டு.

வி-ம் : இங்கே 'தவறிலராயினும்' என்பது முதற் குறளில் 'இல்லை தவறு அவர்க்காயினும்' என்பதைப் போலவே

இருந்தாலும் இது வேறு, அது வேறு, இதைக்காதலனுக்கு அடைமொழியாகக் கொள்ளக் கூடாது. இது காதலியைக் குறிப்பது. முன் 'இல்லை தவறு அவர்க்காயினும்' என்றது 'காதலனிடத்தில் கற்பித்துச் சொல்லப்பட்ட விபசாரக் குற்றம் இல்லையானாலும்' என்பதைக் குறிப்பது. இங்கே 'தவறிலராயினும்' என்பது அவனை விட்டு விலக வேண்டும் என்பதற்கான குற்றமொன்றும் காதலி செய்யாவிட்டாலும் - அதாவது, விலக வேண்டுமென்று காதலி கட்டாயம் செய்யாவிட்டாலும்' — என்பதைக் குறித்தது. இங்கே 'தவறு' என்பதற்கு 'ஊடுதல்' அல்லது 'அருவருப்பு காட்டுதல்' என்பது கருத்து. ஊடியோ அல்லது அருவருப்புக் காட்டியோ அவள் விலகச் செய்யாவிட்டாலும் — என்பதாம். அகறல் - அகல்தல் — பிரிந்து விடுதல். மென்தோள் அகறல் — காதலியின் மென்மையான தோள்களைத் தழுவி முயங்கியிருப்பதை விட்டு விலகி விடுதல். இந்தக் குறளுக்கு 'தம் கண் தவறிலராயினும் உடையார்' போல ஊடப்பட்டுத், தாம் விரும்பும் மகளிருடைய மெல்லிய தோள்களைக் கூடப் பெறாத எல்லைக் கண் அவருக்கு அப்பெற்றியதோர் இன்பம் பயத்தலுடைத்து' என்று பொருள் கொள்வது முற்றிலும் தவறு. அவ்வுரை இக்குறளின் நோக்கத்தைக் குலைத்து விடுகிறது. காதலியானவள் காதலனை விபசாரக் குற்றமுள்ளவனாகவே தீர்மானித்து அவனைப் புணர மறுத்துவிட்டால் அப்போதும் அதில் காதலனுக்கு இன்பம் இருக்கிறது என்பது எந்த விதத்திலும் பொருந்தாது. இந்தக் குறளின் நோக்கம் புணர்ச்சி முடிந்தவுடன் காதலன் காதலியின் முயக்கத்தை விட்டுப் பிரிந்துவிடுவது நல்லது என்பதேயாகும். ஆதலால்-தான் மிகவும் விரும்புகின்ற காதலியின் அருவருப்பால் அல்லாவிட்டாலும் காதலன் தானாகவே புணர்ச்சிக்குப் பின் காதலியைத் தழுவிக் கொண்டு முயங்கியிருப்பதை விட்டுப் பிரிந்து விடுவதில் நன்மைஉண்டு — என்பது கருத்து.

என்ன நன்மை என்றால் :

1326. உணலினு முண்ட தறலினிது காமம்
புணர்தலி னூட லினிது.

ப. ரை: உணலினும் உண்டது அறல் இனிது காமம் புணர்தலின் ஊடல் இனிது = (மறுபடியும்) உண்பதை விட (முன்) உண்டது செரிப்பது நல்லது; (அதுபோல்) காமத்தில் (மறுபடியும்) புணர்வதை விடப் பிரிந்திருப்பது நல்லது.

பொ. ரை: (உணவு அனுபவத்தில் மறுபடியும்) உண்பதைவிட முன் உண்டது சீரணித்துவிடப் (பொறுத்திருப்பது) நல்லது;

அது போல, காம இன்பம் (அனுபவத்தில் முன் புணர்ந்த அலுப்பு தீர்ந்துவிடப்) பிரிந்திருப்பது நல்லது.

வி-ம்: 'இனிது' என்பதற்கு இங்கே இன்பமானது என்று பொருள் கொள்ளக் கூடாது. 'நல்லது'—'நன்மை உண்டாக்குவது' என்பது பொருள். வாழ்க்கையில் நீடித்த நலங்களைப் பெறுவதற்கு தேக ஆரோக்கியம் இன்றியமையாதது. அடுத்தடுத்து உண்ணாமல், ஒரு முறை உண்ட உணவு முற்றிலும் சீரணிக்கிறவரையிலும் மறுமுறை உண்ணாதிருப்பவர்களுக்குத்தான் அந்த ஆரோக்கியம் உண்டு. அது போல, காம இன்பத்தில் நீடித்த நலங்களைப் பெறுவது அடுத்தடுத்துப் புணராமல், ஒரு முறை புணர்ந்த அலுப்பு முற்றிலும் தீரும்வரை புணராமல் பிரிந்திருப்பவர்களுக்குத் தான் உண்டு. அறல்—சீரணித்தல். ஊடல்—பிரிந்திருத்தல் (பிணங்குவதல்ல). ஆதலால் அடுத்தடுத்து உண்ணாமல், முன் உண்டது சீரணிக்கும் வரை உண்ணாதிருப்பதே ஆரோக்கியத்திற்கு அவசியமானது போல, அடுத்தடுத்துப் புணராமல் முன் புணர்ந்த அலுப்பு தீரும் வரையிலும் மீண்டும் புணராமல் பிரிந்திருப்பது காம இன்பத்திற்கு அவசியமானது—என்பது கருத்து.

இந்த உண்மை மிகவும் தெளிவாகத் தெரியக் கிடப்பது எப்படியென்றால்:

1327. ஊடலிற் றோற்றவர் வென்றா ரதுமன்னும்
கூடலிற் காணப் படும்.

ப-ரை: ஊடலில் தோற்றவர் வென்றார் அது மன்னும் கூடலில் காணப்படும் = பிரிந்திருப்பதில் தோல்வியடைகிறவர் (பின்) வெல்வார். அது அடுத்த புணர்ச்சியில் கண்டு கொள்ளப்படும்.

பொ. ரை: பிரிந்திருப்பதில் (நெடுநேரம் இருப்பதால்) தோற்றவர்களாகக் காணப்படுகிறவரே (பின்) வெற்றி பெறுவார்: அது அடுத்த புணர்ச்சியில் தெரிந்து விடும்.

வி-ம்: பிரிந்திருக்கும்போது மறு புணர்ச்சிக்கு அவசரப்படாமல் இருப்பவர் ஊடலில் தோற்றவர்; பிரிந்திருக்கும்போது மனதை அடக்காமல் மறு புணர்ச்சிக்கு அவசரப்பட்டுப் புணர்பவர் 'ஊடலில் வென்றவர்'. அதாவது 'ஊடலை வென்றவர்'. மற்றவருடைய ஊடலைப் போக்கிப் புணர்ந்து வென்று விட்டவர். காதலர் இருவர் அமளியில் பிரிந்திருக்கும்போது அவர்களில் யார் முதலில் மறு புணர்ச்சிக்கு

ஆசை மிஞ்சி விடுகிறாரோ அவருக்கு சுக்கிலமோ சுரோணி தமோ விரைவில் வெளியாகி காம இன்பம் அற்றுப் போகும். அதனால் ஊடலில் வென்ற அவர் கூடலில் தோற்றவராகி விடுகிறார். 'மன்னும்' என்பது 'மேலும்' அல்லது 'மறு படியும்' என்ற பொருள் தரும் அசை. ஆதலால் – காதலன் காதலி ஆகிய இருவருக்குள், அவர்கள் புணர்ந்து பிரிந் திருக்கும்போது யார் முதலில் மறு புணர்ச்சிக்கு அவசரப் படுகிறார்களோ அவர்கள் புணர்ச்சியில் நீடிய இன்பம் அனுப விக்க முடியாது. அதை அந்த மறு புணர்ச்சியில் கண்டு கொள்ளலாம். (வெகு நேரம் பிரிந்திருப்பதே நல்லது) – என்பது கருத்து.

அப்படிப் பிரிந்திருப்பதனால் உண்டாகும் நல்லபயன் என்னவென்றால் :

1328. ஊடிப் பெறுகுவங் கொல்லோ நுதல்வெயர்ப்பக்
கூடலிற் றோன்றிய வுப்பு.

ப. உரை: நுதல் வெயர்ப்ப கூடலில் தோன்றிய உப்பு ஊடி பெறுகுவம் கொல்லோ = நெற்றி வேர்க்கும்படி புணர்ந்த தில் வெளியான இன்பசத்தை பிரிந்திருப்பதால் பெறுவோ மாக.

பொ. உரை : உடல் வேர்க்கும்படி புணர்ச்சி செய்தபோது வெளி யேறிய இன்பசத்தைப் பிரிந்திருப்பதால் பெறுவோம் என் பது நிச்சயம்.

வி-ம்: 'நுதல் வெயர்ப்ப' என்றது 'நெற்றி வேர்வை நிலத் தில் விழ' என்பது போல வழக்கப் பேச்சாகச் சொல்லப் பட்டது. புணரும்போது நெற்றி மட்டும் வியர்க்கும் என்ப தல்ல. அதனால் 'நுதல் வெயர்ப்ப' என்பதற்கு 'உடல் வேர்க்கும்படி' என்பது பொருள். 'உடல் வேர்க்க' என் றால் 'உடல் அலுத்துப் போகும்படி'. உப்பு – சுவை கொடுக் கும் சத்து. காமத்தில் சுவை கொடுக்கும் சத்து இந்திரியம் – சுக்கிலம். தோன்றிய – வெளியேறிய. முன் நடந்த புணர்ச்சி யினால் தேகமும் அலுப்படைந்தது. இன்ப சத்தாகிய இந் திரியமும் ஓரளவு வெளியே போய்விட்டது. மறுபடியும் 'புணர', உடல் அலுப்பும் தீரவேண்டும் இந்திரிய சத்தும் ஊற வேண்டும். ஆதலால் முன் புணர்ந்ததனால் ஏற்பட்ட உடல் அலுப்புத் தீரவும் வெளியாகிக் குறைந்துவிட்ட இந்திரிய சக்தி ஊறவும் நான் பிரிந்திருக்க வேண்டியது அவசியம் – என்பது கருத்து.

இனி இந்த இரவு முழுதும் மீண்டும் புணர்ச்சியில்லாமல் பிரிந்திருந்தே கழிந்துவிட்டாலும் நல்லது தான் :

1329. ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா.

ப. ரை : ஒளி இழை ஊடுக மன்னோ; யாம் இரப்ப இரா நீடுக மன்னோ = ஒளியுள்ள ஆபரணங்களை அணிந்தவள் பிணங்கிக் கொள்ளட்டும்; நான் வேண்டிக் கொள்ளுகிறபடி (அப்பிணக்கம்) இரவு (முழுதும்) நீடிக்கட்டும்.

பொ. ரை : காதலி பிணங்கிக் கொள்ளட்டும்; நான் வேண்டிக் கொள்ளுகிறபடி (அப்பிணக்கம்) இன்று இரவு (முழுதும்) நீடிக்கட்டும்.

வி - ம் : 'யாம் இரப்ப இரா நீடுக மன்' என்பதற்கு 'அங்ஙனம் அவள் ஊடி நிற்றற்கும் அதனை உணர்த்தற் பொருட்டு யாமிரந்து நிற்றற்கும் காலம் பெறும் வகை இவ்விரவு விடியாது, நீடித்தல் வேண்டுக.' என்று உரை கொள்வது பயனற்றது. 'மன்னோ' என்பன உறுதிப்படுத்தும் பொருளில் நிற்கும் அசைகள். ஆதலால் – காதலி இனிமேல் பிணங்கியே இருக்கட்டும்; அப்பிணக்கம் இரவு முழுதும் நீடிக்க நான் வேண்டிக் கொள்ளுகிறேன் – என்பது கருத்து.

காதலர்கள், புணர்ச்சிக்குப் பின் பிரிந்திருப்பது காமத்திற்கே நல்லது. அப்படிப் பிரிந்திருந்து மீண்டும் புணருவதானாலும் எப்போது புணர வேண்டுமென்றால் :

1330. ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின்.

ப. ரை : காமத்திற்கு இன்பம் ஊடுதல்: அதற்கின்பம் கூடி முயங்க பெறின் = காமத்திற்கு இன்பம் தருவது பிரிந்திருத்தல். அதற்கு இன்பம் தருவது இருவருக்கும் காமம் கூடிப் புணர்வது பெறும் போது.

பொ. ரை : காமத்துக்கு இன்பம் தருவதே பிரிந்திருப்பது தான். அந்தப் பிரிந்திருப்பதற்கு இன்பம் தருவது (காதலன் காதலி இருவருக்கும்) (ஒத்த காம உணர்ச்சி) உண்டாகியபின் புணர்ந்தால் தான்.

வி - ம் : 'கூடி முயங்கப் பெறின்' என்பதிலுள்ள 'கூடுதல்' 'முயங்கல்' என்ற இரண்டு சொற்களும் 'புணர்தல்'

என்ற பொருள் தரத் தக்கவை. ஆனால் இங்கே அந்த இரண்டிற்கும் பொருள் வெவ்வேறு. 'கூடி' என்பதற்கு 'இருவருக்கும் புணர்ச்சி விருப்பம் கூடி' என்பது பொருள். 'முயங்க' என்பதற்குப் 'புணர' என்பது பொருள். 'பெறின்' என்பதற்குப் 'பெறக் கூடுமானால்' — 'பெறுகிற போதுதான்' என்பது பொருள். பிரிந்திருக்கும் ஊடலுக்கு இன்பம் தருவது பிரிந்திருக்கும் இருவருக்கும் ஒத்த காம ஆசை சேரும்போது மீண்டும் புணர்வதுதான். என்னவெனில் பிரிந்திருக்கும்போது இருவருக்குள் ஒருவர் சோர்வினால் புணர்ச்சி விருப்பம் இல்லாதிருக்கிறபோது மற்றவர் பலவந்தப்படுத்திப் புணர்வதில் இன்பமில்லை என்பதைக் குறிப்பது. ஆதலால் — காமத்துக்கு இன்பம் தருவதே காதலர்கள் பிரிந்திருப்பதுதான். பிரிந்திருப்பதனால் இன்பம் பெறுவது, இருவருக்கும் ஒத்த காம ஆசை ஊறியபின் புணர்வதுதான் — என்பது கருத்து.

காமத்துப்பால் முற்றிற்று.

திருக்குறள் புது உரை முற்றுப்பெற்றது.

உமா பிரிண்டர்ஸ், சென்னை-1.

திருக்குறளின் சிறப்புப்பாயிரமாகிய திருவள்ளுவ மாலை

அசரீரி

திருத்தகு தெய்வத் திருவள் ளுவரோ
டுருத்தகு நற்பலகை யொக்க—இருக்க
உருத்திர சன்ம ரெனவுரைத்து வானில்
ஒருக்கவ வென்றதோர் சொல்.

நாமகள்

நாடா முதல்நான் மறைநான் முகன்நாவிற்
பாடா விடைப்பா ரதம்பகர்ந்தேன்—கூடாரை
எள்ளிய வென்றி யிலங்கிலைவேன் மாறபின்
வள்ளுவன் வாயதென் வாக்கு.

இறையனர்

என்றும் புலரா தியாணர்நாட் செல்லுகினும்
நின்றலர்ந்து தேன்பிலிற்று நீர்மையதாய்க்—குன்ருத
செந்தளிர் கற்பகத்தின் றெய்வத் திருமலர்போன்
மன்புலவன் வள்ளுவன்வாய்ச் சொல்.

உக்கிரப்பெருவழுதியார்

நான்மறையின் மெய்ப்பொருளை முப்பொருளா [நான்முகத்தோன்
ருன்மறைந்து வள்ளுவனாய்த் தந்துரைத்த—நூன்முறையை
வந்திக்க சென்னிவாய் வாழ்த்துக நன்னெஞ்சஞ்
சிந்திக்க கேட்க செவி.

கபிலர்

தினையளவு போதாச் சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்—மனையளகு
வள்ளைக் குறங்கும் வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி.

பரணர்

மாலுங் குறளாய் வளர்ந்திரண்டு மாணடியான்
ஞால முழுதும் நயந்தளந்தான்—வாலறிவின்
வள்ளுவருந் தங்குறள்வெண் பாவடியால் வையத்தார்
உள்ளுவவெல் லாமளந்தா ரோர்ந்து.

நக்கீரர்

தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானு அறமுதலா அந்நான்கும்—ஏனோருக்
கூழி னுரைத்தாற்கும் ஒண்ணீர் முகிலுக்கும்
வாழியுல கென்னாற்று மற்று.

மாமூலனார்

அறம்பொரு ளின்பம்வீ டென்னும்அந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை—மறந்தேயும்
வள்ளுவ னென்பானோர் பேதை அவன்வாய்ச்சொற்
கொள்ளா ரறிவுடை யார்.

கல்லாடர்

ஒன்றே பொருளெனின் வேறென்ப வேறெனின்
அன்றென்ப ஆறு சமயத்தார்—நன்றென
எப்பா லவரும் இயைபவே வள்ளுவனார்
முப்பான் மொழிந்த மொழி.

சீத்தலைச்சாத்தனார்

மும்மலையும் முந்நாடும் முந்நதியும் முப்பதியும்
மும்முரசும் முத்தமிழும் முக்கொடியும்—மும்மாவுந்
தாமுடைய மன்னர் தடமுடிமேற் றாரன்றோ
பாமுறைதேர் வள்ளுவர்முப் பால்.

மருத்துவன்றாமோதரனார்

சிந்தைநோய்க் கண்டங் தெறிசுக்குத் தேனளாய்
மோந்தபின் யார்க்குந் தலைக்குத்தில்—காந்தி
மலைக்குத்து மால்யானை வள்ளுவர்முப் பாலால்
தலைக்குத்துத் தீர்வுசாத் தற்கு.

நாகன்றேவனர்

தாளார் மலர்ப்பொய்கை தாங்குடைவார் தண்ணீரை
வேளா தொழிதல் வியப்பன்று—வாளாதாம்
அப்பா லொருபாவை ஆய்பவோ வள்ளுவனர்
முப்பான் மொழிமூழ்கு வார்.

அரிசில்கிழார்

பிறந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச்—சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள்விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

பொன்முடியார்

கானின்ற தொங்கலாய்! காசிபனர் தந்ததுமுன்
கூநின் றளந்த குறளென்ப—நான்முறையான்
வானின்று மண்ணின் றளந்ததே வள்ளுவனர்
தாநின் றளந்த குறள்.

கோதமனர்

ஆற்ற லழியுமென் றந்தணர்கள் நான்மறையைப்
போற்றியுரைத் தேட்டின் புறத்தெழுதா—ரேட்டெழுதி
வல்லுநரும் வல்லாரும் வள்ளுவனர் முப்பாலைச்
சொல்லிடினும் ஆற்றல்சோர் வின்று.

நத்தத்தனர்

ஆயிரத்து முந்நூற்று முப்ப தருங்குறளும்
பாயிரத்தி னேடு பகர்ந்ததற்பின்—போயொருத்தர்
வாய்க்கேட்க நூலுளவோ மன்னு தமிழ்ப்புலவ
ரர்ய்க்கேட்க வீற்றிருக்க லாம்.

முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்

உள்ளுத லுள்ளி யுரைத்த லுரைத்ததனைத்
தொள்ளுத லன்றே செயற்பால—வள்ளுவனர்
முப்பாலின் மிக்க மொழியுண் டெனப்பகர்வார்
எப்பா வலரினு மில்.

ஆசிரியர் நல்லந்துவனார்

சாற்றிய பல்கலையுந் தப்பா அருமறையும்
போற்றி யுரைத்த பொருளெல்லாந்—தோற்றவே
முப்பான் மொழிந்த முதற்பா வலரொப்பார்
எப்பா வலரினு மில்

கீரந்தையார்

தப்பா முதற்பாவாற் றமாண்ட பாடலினன்
முப்பாலி னாற்பான் மொழிந்தவ—ரெப்பாலும்
வைவைத்த கூர்வேல் வழுதி மனமகிழத்
தெய்வத் திருவள் ளுவர்.

சிறுமேதாவியார்

வீடொன்று பாயிர நான்கு விளங்கற
நாடிய முப்பத்து மூன்றொன் றூழ்—கூடுபொருள்
எள்ளி லெழுப திருபதிற் றைந்தின்பம்
வள்ளுவர் சொன்ன வகை.

நல்கூர்வேள்வியார்

உப்பக்க நோக்கி உபகேசி தோள்மணந்தான்
உத்தர மாமதுரைக் கச்சென்ப—இப்பக்கம்
மாதாநு பங்கி மறுவில் புலச்செந்நாப்
போதார் புனற்கூடற் கச்சு.

தொடித்தலைவிழுத்தண்டினார்

அறநான் கறிபொரு ளேழொன்று காமந்
திறமூன் றெனப்பகுதி செய்து—பெறலரிய
நாலு மொழிந்தபெரு நாவலரே நன்குணர்வார்
போலு மொழிந்த பொருள்.

வெள்ளிவீதியார்

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
பொய்யா மொழிக்கும் பொருளொன்றே—செய்யா
அதற்குரிய ரந்தணரே ஆராயி னேனை
இதற்குரிய ரல்லாதா ரில்.

மாங்குடி மருதனார்

ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்—தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ள முருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

எரிச்சலூர் மலாடனார்

ஆயிர நான்கில் லறமிருபான் பன்மூன்றே
தூய துறவறமொன் றூழாக—ஆய
அறத்துப்பா னால்வகையா வாய்ந்துரைத்தார் நூலின்
திறத்துப்பால் வள்ளுவனார் தேர்ந்து.

போக்கியார்

அரசிய லையைந்து அமைச்சிய லீரைந்
தருவல் லரணிரண்டொன் றொண்கூழ்—இருவியல்
திண்படை நட்புப் பதினேழ் குடிபதின்மூன்
றெண்பொரு ளேழா மிவை.

மோசி கீரனார்

ஆண்பாலே ழாறிரண்டு பெண்பா லடுத்தன்பு
பூண்பா லிருபாலோ ராறாக—மாண்பாய
காமத்தின் பக்கமொரு மூன்றாகக் கட்டுரைத்தார்
நாமத்தின் வள்ளுவனார் நன்கு.

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார்

ஐயாறு நூறு மதிகார மூன்றுமா
மெய்யாய வேதப் பொருள்விளங்கப்—பொய்யாது
தந்தா னுலகிற்குத் தான்வள் ளுவனாகி
அந்தா மரைமே லயன்.

மதுரைத் தமிழ்நாகனார்

எல்லாப் பொருளும் இதன்பா லுளஇதன்பால்
இல்லாத எப்பொருளு மில்லையாற்—சொல்லாற்
பரந்தபா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையத் துணை.

பாரதம் பாடிய பெருந்தேவனர்

எப்பொருளும் யாரும் இயல்பி னறிவுறச்
செப்பிய வள்ளுவர்தாஞ் செப்பவரும்—மூப்பாற்குப்
பாரதஞ்சீ ராம கதைமனுப் பண்டைமறை
நேர்வனமற் றில்லை நிகர்.

உருத்திரசன்மகண்ணர்

மணற்கிளைக்க நீரூறும் மைந்தர்கள் வாய்வைத்
துணச்சுரக்குந் தாய்முலை யொண்பால்—பிணக்கிலா
வாய்மொழி வள்ளுவர் முப்பான் மதிப்புலவோர்க்
காய்தொறும் ஊறும் அறிவு.

பெருஞ்சித்திரனர்

ஏதமில் வள்ளுவ ரின்குறள்வெண் பாவினல்
ஓதிய ஒன்பொரு ளெல்லாம்—உரைத்ததனற்
றூதவிழ் தார்மாற தாமே தமைப்பயந்த
வேதமே மேதக் கன.

நரிவெரூஉத்தலையார்

இன்பம் பொருளறம் வீடென்னும் இந்நான்கும்
முன்பறியச் சொன்ன முதுமொழிநூன்—மன்பதைகட்
குள்ள அறிதென் றவைவள் ளுவருலகங்
கொள்ள மொழிந்தார் குறள்.

மதுரைத்தமிழாசிரியர் செங்குன்றூர்கிழார்

புலவர் திருவள் ளுவரன்றிப் பூமேற்
சிலவர் புலவரெனச் செப்பல்—நிலவு
பிறங்கொளிமா லைக்கும் பெயர்மாலை மற்றுங்
கறங்கிருண்மா லைக்கும் பெயர்.

மதுரையறுவைவாணிகன் இளவேட்டனர்

இன்பமுந் துன்பமு மென்னும் இவையிரண்டும்
மன்பதைக் கெல்லாம் மனமகிழ—அன்பொழியா
துள்ளி யுணர உரைத்தாரே யோதுசீர்
வள்ளுவர் வாயுறை வாழ்த்து.

கவிசாகரப் பெருந்தேவனார்

பூவிற்குத் தாமரையே பொன்னுக்குச் சாம்புனதம்
ஆவிற் கருமுனியா யானைக்—கமரரும்பல்
தேவிற் றிருமா லெனச்சிறந்த தென்பவே
பாவிற்கு வள்ளுவர்வெண் பா.

மதுரைப் பெருமருதனார்

ஆறமுப்பத் தெட்டுப் பொருளெழுப தின்பத்
திறமிருபத் தைந்தாற் றெளிய—முறைமையால்
வேத விழுப்பொருளை வெண்குறளால் வள்ளுவனார்
ஓதவழுக் கற்ற துலகு.

கோவூர்கிழார்

அறமுதல் நான்கும் அகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளியக்—குறள்வெண்பாப்
பன்னிய வள்ளுவனார் பான்முறைநே ரொவ்வாதே
முன்னை முதுவோர் மொழி.

உறையூர் முதுகூற்றனார்

தேவிற் சிறந்த திருவள் ளுவர்குறள்வெண்
பாவிற் சிறந்திடுமப் பால்பகராற்—கோவிற்
குயலில்லை சொற்சுவைநூ யேோர்வில்லை மற்றுஞ்
செயலில்லை யென்னுந் திரு.

இழிகட் பெருங்கண்ணனார்

இம்மை மறுமை யிரண்டும் எழுமைக்குஞ்
செம்மை நெறியிற் றெளிவுபெற—மும்மையின்
வீடவற்றி னுன்கின் விதிவழங்க வள்ளுவனார்
பாடின ரின்குறள்வெண் பா.

செயிர்க்காவிரியார்மகனார் சாத்தனார்

ஆவனவும் ஆகா தனவும் அறிவுடையார்
யாவரும் வல்லா ரெடுத்தியம்பத்—தேவர்
திருவள் ளுவர்தாமுஞ் செப்பியவே செய்வார்
பொருவி லொழுக்கம்பூண் டார்.

செயலூர்க் கொடுஞ்செங்கண்ணனார்

வேதப் பொருளை விரகால் விரித்துலகோர்
ஓதத் தமிழா லுரைசெய்தார்—ஆதலால்
உள்ளுந ருள்ளும் பொருளெல்லாம் உண்டென்ப
வள்ளுவர் வாய்மொழி மாட்டு.

வண்ணக்கஞ் சாத்தனார்

ஆரியமுஞ் செந்தமிழும் ஆராய்ந் திதனினிது
சீரிய தென்றொன்றைச் செப்பரிதால்—ஆரியம்
வேத முடைத்து தமிழ்திரு வள்ளுவனார்
ஓது குறட்பா வுடைத்து.

களத்தூர்கிழார்

ஒருவ ரிருகுறளே முப்பாலி னோதுந்
தரும முதல்நான்குஞ் சாலும்—அருமறைகள்
ஐந்துஞ் சமயநூ லாறுநம் வள்ளுவனார்
புந்தி மொழிந்த பொருள்.

நச்சுமனார்

எழுத்தசை சீரடி சொற்பொருள் யாப்பு
வழுக்கில் வனப்பணி வண்ணம்—இழுக்கின்றி
என்றெவர் செய்தன எல்லாம் இயம்பின
இன்றிவ ரின்குறள்வெண் பா.

அக்காரக்கனி நச்சுமனார்

கலைநிரம்பிக் காண்டற் கினிதாகிக் கண்ணின்
நிலைநிரம்பு நீர்மைத் தெனினுந்—தொலைவிலா
வானோர் மதியந் தனக்குண்டோ வள்ளுவர்முப்
பானூல் நயந்தின் பயன்.

நப்பாலத்தனார்

அறந்தகளி யான்ற பொருடிரி யின்பு
சிறந்தநெய் செஞ்சொற்றீத் தண்டு—குறும்பாவா
வள்ளுவனா ரேற்றினார் வையத்து வாழ்வார்கள்
உள்ளிருள் நீக்கும் விளக்கு.

குலபதிநாயனார்

உள்ளக் கமல மலர்த்தி யுளத்துள்ள
தள்ளற் கரியவிருள் தள்ளுதலால்—வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பாவும் வெங்கதிரும் ஒக்குமெனக்
கொள்ளத் தகுங்குணத்தைக் கொண்டு.

தேனிக்குடிக் கீரனார்

பொய்ப்பால பொய்யேயாய்ப் போயினபொய் யல்லாத
மெய்ப்பால மெய்யாய் விளங்கினவே—முப்பாலில்
தெய்வத் திருவள் ளுவர் செப் பியகுறளால்
வையத்து வாழ்வார் மனத்து.

கொடிஞாழன் மாணிபூதனார்

அறனறிந்தேம் ஆன்ற பொருளறிந்தேம் இன்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தே—மறனெறிந்த
வாளார் நெடுமாற வள்ளுவனார் தம்வாயாற்
கேளா தனவெல்லாம் கேட்டு.

கவுணியனார்

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து—முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா.

மதுரைப் பாலாசிரியனார்

வெள்ளி வியாழம் விளங்கிரவி வெண்டிங்கள்
பொள்ளென நீக்கும் புறஇருளைத்—தெள்ளிய
வள்ளுவ ரின்குறள் வெண்பா அகிலத்தோர்
உள்ளிருள் நீக்கும் ஒளி.

ஆலங்குடிவங்கனார்

வள்ளுவர் பாட்டின் வளமுரைக்கின் வாய்மடுக்குந்
தெள்ளமுதின் தீஞ்சுவையும் ஒவ்வாதால்—தெள்ளமுதம்
உண்டறிவார் தேவர் உலகடைய உண்ணுமால்
வண்டமிழின் முப்பான் மகிழ்ந்து.

54 verses

இடைக்காடர்

கடுகைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

ஔவையார்

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தரித்த குறள்.

ஆசிரியர் திருப்பெயர்கள்—9

திருவள்ளுவர்.
நாயனர்.
தேவர்.
முதற்பாவலர்.
தெய்வப்புலவர்.
நான்முகனர்.
மாதாநுபங்கி.
செந்நாப்போதார்.
பெருநாவலர்.

நூலின் திருப்பெயர்கள்-9

திருக்குறள்.
முப்பானூல்.
உத்தரவேதம்.
தெய்வநூல்
திருவள்ளுவர்.
பொய்யாமொழி.
வாயுறைவாழ்த்து.
தமிழ்மறை.
பொதுமறை.

திருக்குறள்

அதிகார அகராதி

(எண்கள் பக்கங்களைக் குறிக்கும்)

அடக்கமுடைமை	72	ஊழ்	213
அமைச்சு	363	ஒப்புரவறிதல்	120
அரண்	429	ஒழுக்கமுடைமை	78
அருளுடைமை	139	ஒற்றாடல்	336
அலரறிவுறுத்தல்	688	கடவுள் வாழ்த்து	1
அவர்வயின் விதும்பல்	767	கண்ணோட்டம்	330
அவாவறுத்தல்	208	கண்விதுப்பழிதல்	709
அவையஞ்சாமை	417	கயமை	636
அவையறிதல்	411	கல்லாமை	235
அழுக்காறாமை	94	கல்வி	229
அறன்வலியுறுத்தல்	18	கள்ளாமை	163
அறிவுடைமை	246	கள்ளுண்ணாமை	540
அன்புடைமை	44	கனவுநிலையுரைத்தல்	734
ஆள்வினையுடைமை	353	காதற் சிறப்புரைத்தல்	675
இகல்	498	கால மறிதல்	279
இடனறிதல்	284	குடிசெயல் வகை	602
இடுக்கணழியாமை	358	குடிமை	559
இரவச்சம்	629	குறிப்பறிதல் (பொருள்)	405
இரவு	621	குறிப்பறிதல் (காமம்)	654
இல்வாழ்க்கை	25	குறிப்பறிவுறுத்தல்	775
இறைமாட்சி	222	குற்றங்கடிதல்	252
இனியவை கூறல்	56	கூடா நட்பு	481
இன்னா செய்யாமை	179	கூடாவொழுக்கம்	157
ஈகை	126	கேள்வி	240
உட்பகை	516	கொடுங்கோன்மை	318
உழவு	608	கொல்லாமை	185
உறுப்பு நலனழிதல்	746	சான்றாண்மை	578
ஊக்கமுடைமை	342	சிற்றினஞ் சேராமை	263
ஊடலுவகை	812	சுற்றந்தழால்	301

சூது	545
செங்கோன்மை	312
செய்ந்நன்றி யறிதல்	61
சொல்வன்மை	369
தகையணங் குறுத்தல்	647
தவம்	151
தனிப்படர் மிகுதி	721
தீ நட்பு	475
தீவினையச்சம்	115
துறவு	196
தூது	392
தெரிந்து செயல்வகை	269
தெரிந்து தெளிதல்	289
தெரிந்து வினையாடல்	296
நடுவு நிலைமை	66
நட்பாராய்தல்	463
நட்பு	457
நலம்புனைந்துரைத்தல்	669
நல்குரவு	615
நன்றியில் செல்வம்	591
நாடு	423
நாணுடைமை	597
நாணுத்துறவுரைத்தல்	682
நிலையாமை	191
நிறை யழிதல்	760
நினைந்தவர் புலம்பல்	728
நீத்தார் பெருமை	13
நெஞ்சொடு கிளத்தல்	753
நெஞ்சொடு புலத்தல்	790
பகைதிறந் தெரிதல்	510
பகைமாட்சி	504
பசப்புறு பருவரல்	715
படர்மெலிந்திரங்கல்	704
படைச் செருக்கு	450
படை மாட்சி	443
பண்புடைமை	584
பயனில சொல்லாமை	111
பழைமை	469
பிரிவாற்றாமை	696
பிறனில் விழையாமை	83
புகழ்	132
புணர்ச்சி மகிழ்தல்	659
புணர்ச்சி விதும்பல்	782
புலவி	796
புலவி நுணுக்கம்	803
புலான் மறுத்தல்	145
புல்லறிவாண்மை	492
புறங்கூறாமை	105
பெண்வழிச் சேறல்	528
பெரியாரைத் துணைக்கோடல்	257
பெரியாரைப் பிழையாமை	521
பெருமை	572
பேதைமை	487
பொச்சாவாமை	306
பொருள் செயல்வகை	436
பொழுது கண்டிரங்கல்	740
பொறையுடைமை	88
மக்கட்பேறு	36
மடியின்மை	347
மருந்து	551
மன்னரைச் சேர்ந்தொழுகல்	398
மானம்	565
மெய்யுணர்தல்	201
வரைவின் மகளிர்	533
வலியறிதல்	274
வாய்மை	168
வாழ்க்கைத் துணைநலம்	30
வான் சிறப்பு	7
விருந்தோம்பல்	50
வினை செயல்வகை	386
வினைத்திட்பம்	380
வினைத் தூய்மை	375
வெகுளாமை	174
வெஃகாமை	99
வெருவந்த செய்யாமை	324

திருக்குறள்

பாட்டு முதற்குறிப்பு அகராதி

(எண்கள் பக்கங்களைக் குறிக்கும்)

அகட்டீராார்	548
அகப்பட்டி	638
அகரமுதல	1
அகலாதணு	399
அகழ்வாரை	88
அகனமர்ந்து	52
அகனமர்ந்தீ	56
அஃகாமை	103
அஃகியகன்	102
அங்கணத்து	416
அசையியற்	658
அச்சமுடை	308
அச்சமேகீ	639
அஞ்சாமைப	287
அஞ்சாமையீ	223
அஞ்சுமறியா	505
அஞ்சுவதஞ்	250
அஞ்சுவதோ	210
அடக்கமம	72
அடல்வேண்டு	197
அடற்றகை	448
அடுக்கியகோ	561
அடுக்கிவரினு	360
அடுத்ததுகா	408
அணங்குகொ	647
அணியன்றோ	598
அந்தணரென்	18
அந்தணர் நூற்	313
அமரகத்தாற்	477
அமரகத்துவ	605
அமிழ்தினு	39
அமைந்தாங்	276
அரங்கின்றி	235
அரம்பொரு	520
அரம்போலு	588
அரிதரோதேற்	698
அரிதாற்றி	703
அரியகற்றாசற்	291
அரியவற்று	258
அரியவென்று	316
அருங்கேட	126
அருஞ்செவ்	966
அருட்செல்	132
அருமறை	493
அருமையு	353
அரும்பய	114
அருவினையெ	280
அருளல்லதி	146
அருளில்லார்	143
அருளென்	440
அருளொடு	438
அருளகருதி	165
அருள்சேர்	140
அருள் வெஃகி	102
அலந்தாரை	798
அலரெழவாரு	689
அலர் நாண	694
அல்லலரு	141
அல்லவை	58
அல்லற்பட்	320

அவர் தந்தா 716
அவர்நெஞ் 790
அவாவில்லா 212
அவாவினை 211
அவாவென்ப 208
அவிசொரிந் 149
அவையறிந் 411
அவையறியார் 412
அவ்வித்தழுக் 97
அவ்வியநெ 98
அழக்கொண் 379
அழச்சொல் 465
அழல்போ 744
அழிவதூஉ 269
அழிவந்த 472
அழிவினவை 461
அழிவின்ற 445
அழுக்கற்ற 99
அழுக்காறவா 21
அழுக்காறுடையார் 96
அழுக்காறுடையான் 80
அழுக்காறெனை 98
அழுக்காற்றி 96
அளவல்ல செய் 167
அளவளாவில் 302
அளவறிந்தார் 167
அளவறிந்து 278
அளவின் கணி 166
அளித்தஞ்ச 699
அறங்கூறுன 105
அறஞ்சாரா 618
அறஞ்சொல் 107
அறத்தாறிது 22
அறத்தாற்றி 28
அறத்தான்வ 23
அறத்திற்கே 47
அறத்தினூஉங் 19
அறம் பொரு 290
அறவாழிய 5
அறவினையா 185
அறவினைப்பு 532
அறனழீஇ 106
அறனறிந்தா 366
அறனறிந்துமூ 257
அறனறிந்துவெ 104
அறனுக்கம் 95
அறனியலா 86
அறனிழுக்கா 224
அறனீனு 438
அறனெனப் 29
அறனேக்கி 109
அறன்கடை 83
அறன்வறை 87
அறிகிலா 687
அறிகொன் 368
அறிதோற்றி 668
அறிந்தாறறி 298
அறிவற்றங் 247
அறிவிலார்தா 494
அறிவிலானெ 493
அறிவினு 182
அறிவினுளெ 116
அறிவின்மை 492
அறிவுடையாரா 250
அறிவுடையாரே 251
அறிவுருவா 394
அறுவாய்நி 673
அறைபறை 640
அற்காவியல் 192
அற்றதறிந்து 554
அற்றமறைக்கு 577
அற்றமறைத்த 495
அற்றவரென் 210
அற்றாரழி பசி 129
அற்றாரைத்தே 292
அற்றார்க்கோ 594
அற்றாலளவறி 553
அற்றேமென் 360

அனிச்சப்பூ	671	ஆற்றுவா-லிக	521
அனிச்சமு	675	ஆற்றுவா-ல்பசி	128
அன்பகத்தில்	48	ஆற்றுவா-ல்பணி	581
அன்பறிவாரா	393	இகலானு	503
அன்பறிவு	297	இகலிற்கெ	502
அன்பிலனு	505	இகலின்மிக	501
அன்பிலாரெல்	45	இகலெதிர்	501
அன்பிற்குமு	44	இகலென்ப	498
அன்பின்வழி	49	இகலென்னு	500
அன்பின்விழை	534	இகல்காணு	503
அன்பீனுமா	46	இகழ்ச்சியிற்	311
அன்புடை—வி	585	இகழ்தெ	626
அன்புடை-ல்வே	392	இடமெல்லா	631
அன்பு நாணொ	579	இடனில்பரு	125
அன்புமறனு	27	இடிக்குந்து	260
அன்புற்றமர்ந்த	46	இடிபுரிந்தெள்	351
அன்பொறி இ	595	இடிப்பாரை	261
அன்போடியை	45	இடுக்கட்ப	376
அன்றறிவாமெ	21	இடுக்கண்கா	607
ஆகாறளவிட்	278	இடுக்கண்வ	358
ஆகூழாற்	213	இடும்பைக்கி	359
ஆக்கங்கருதி	270	இடும்பைக்கே	607
ஆக்கமதர்வி	344	இடைதெறிந்	412
ஆக்கமிழந்	343	இணரூழ்த்து	374
ஆக்கமுங்	370	இணரெரிதோ	178
ஆங்கமை	429	இதனையிதனு	299
ஆபயன்கு	323	இமைப்பிற்கர	680
ஆயுமறிவி	538	இமையாரின்	531
ஆய்ந்தாய்ந்	463	இம்மைபிறப்	807
ஆராவியற்கை	212	இயல்பாகு	197
ஆவிற்குநீரே	632	இயல்பினு	28
ஆள்வினையு	603	இயல்புளி	314
ஆற்ருருடா	285	இயற்றலு	225
ஆற்றினளவறிந்தீ	277	இரக்கவிர	621
ஆற்றினளவறிந்து	419	இரத்தலினி	130
ஆற்றின்வருந்	273	இரத்தலுமீ	623
ஆற்றினிலைத	414	இரந்துமுயி	629
ஆற்றினொழு	29	இரப்பனிரப்	633
ஆற்றுபவர்க்	429	இரப்பாரை	626

இரப்பான்வெ	628
இரவாரிரப்	611
இரவுள்ளவுள்	635
இரவென்னு	634
இருணீங்கி	202
இருநோக்கி	654
இருந்துள்ளி	755
இருந்தோம்பி	50
இருபுனலும்	427
இருமனப்பெ	539
இருமைவகை	14
இருவேறுல	215
இருள்சேரிரு	3
இலக்கமுடம்	361
இலங்கிழா	768
இலமென்றசை	614
இலமென்றுவெ	101
இலர்பலராகிய	156
இலனென்றுதீய	117
இலனென்னு	127
இல்வாழ்வா	25
இல்லதெனி	32
இல்லாரை	436
இல்லாளையஞ்	530
இல்லாள்கட்	529
இல்லைதவற	812
இவறலுமான்	252
இழத்தொறூஉ	550
இழிவறிந்துண்	555
இழுக்கலுடை	243
இழுக்காமை	309
இழைத்ததிக	456
இளித்தக்க	788
இளிவரின்	571
இளைதாகமு	515
இளையரின	403
இறந்தமைந்	527
இறந்தவெ	306
இறந்தாரிற	179
இறப்பேபுரி	576
இறலீனுமே	104
இறுதிபய	398
இறைகடி	326
இறைகாக்	315
இற்பிற-கண்ண	559
இற்பிற-கண்ணே	616
இனத்தாற்	328
இனம்போன்	482
இனியவுள	61
இனியன்ன	792
இனைத்துணைத்	54
இனையவரிவ	462
இன்கணுடை	697
இன்சொலாலீத்	226
இன்சொலாலீர	56
இன்சொலி	60
இன்பங்க	707
இன்பத்து—பய	500
இன்பத்து-வி	361
இன்பமிடை	212
இன்பமொ	622
இன்பம்விழை—னி	361
இன்பம்விழை-ன்	355
இன்மையிடு	630
இன்மையினி—த	615
இன்மையினு-து	321
இன்மையு	88
இன்மையெ	615
இன்மையொ	583
இன்றியமை	566
இன்றும்வ	619
இன்னாசெ-ரை	181
இன்னாசெ—ர்	582
இன்னாதிரக்	128
இன்னாதின	702
இன்னாமை	362
இன்னாவெ	182
ஈட்டமிவ	592

ஈதலிசைப 132
ஈத்துவக்கு 130
ஈர்ங்கைவி 641
ஈவார்கணெ 627
ஈன்றபொ 42
ஈன்ருன்மு 541
ஈன்ருள்பசி 377
உடம்பாடி 520
உடம்போ 676
உடுக்கையி 461
உடுப்பதூஉ 642
உடை செல் 550
உடைத்தம் 275
உடைமையு 55
உடையரெ 342
உடையார் 231
உட்கப்படா 540
உட்பகைய 516
உணர்வது 415
உணலினு 816
உண்டார்க 653
உண்ணற்க 540
உண்ணுது 93
உண்ணுமையு 147
உண்ணுமைவே 148
உதவி வரைத்த 63
உப்பமைந் 797
உயர்வகலந் 430
உயிருடம்பி 190
உயிர்ப்பவு 515
உய்த்தல 787
உரமொரு 347
உரணசைஇ 769
உரனென் 14
உருவுகண் 384
உருளாய 546
உரைப்பா 132
உலகத்தாரு 498
உலகத்தோ 82

உலகந்தழீஇ 249
உலைவிடத் 444
உவக்காணெம் 18
உவந்துறை 81
உவப்பத் 231
உழந்துழந் 713
உழவினார் 611
உழுதுண்டு 609
உழுவாரு 608
உழைப்பிரி 306
உளபோலர் 332
உளவெயிற்று 422
உளவெனற்று 238
உளவரைதூ 278
உள்ளக்களித் 782
உள்ளத்தார் 759
உள்ளத்தாலு 164
உள்ளத்தாற் 170
உள்ளமிலா 316
உள்ளமுடை 343
உள்ளம்போ 709
உள்ளற்க 467
உள்ளியதெல் 178
உள்ளியதெய் 311
உள்ளிற்றும் 728
உள்ளினே 808
உள்ளுவதெல் 345
உள்ளுவன் - னு 717
உள்ளுவன்-ம 678
உள்ளொற்றி 543
உறங்குவ 195
உறன் முறை 518
உறுஅதவர்க் 791
உறுஅதவர்போ 657
உறுஅதோ 690
உறு அர்க்கு 727
உறினட்ட 476
உறினுயிர 455
உறுதோறு 665

உறுபசியு	425	எண்பதத்தானோ	316
உறுபொரு	439	எண்பொருள	248
உறுப்பமைந்	443	எதிரதாக்கா	251
உறுப்பொத்	586	எந்நன்றி	66
உறுவதுசீர்	476	எப்பொருளு	401
உறைசிறி	392	எப்பொருளெ	204
உற்ற நோய்நீ	258	எப்பொருள் யார்	248
உற்ற நோய் நோ	151	எய்தற்கரி	283
உற்றவன்	558	எரியாற்சு	524
உற்றானளவு	557	எல்லாப்பொ	432
ஊக்கமுடை	281	எல்லார்க்குந	74
ஊடலிற்றோற்	817	எல்லார்க்குமெ	337
ஊடலிற்றோன்	813	எல்லாவிளக்	173
ஊடலினுண்	801	எல்லைக்கணி	472
ஊடலுணங்	802	எவ்வதுறை	250
ஊடலுணர்தல்	667	எழுதுங்கா	785
ஊடற்கட்	785	எழுபிறப்பு	37
ஊடிப்பெறு	818	எழுமையெ	64
ஊடியவ	798	எளிதென	85
ஊடியிருந்	805	எள்ளாத	274
ஊடுகமன்	819	எள்ளாமை	163
ஊடுதல்	819	எள்ளினிளி	794
ஊனுடை	597	எற்றிற்கு	642
ஊதியமென்	466	எற்றென்	377
ஊரவர்கெளவை	693	எனைத்தானுந	244
ஊருணி நீர்	122	எனைத்தான்மெ	183
ஊழிபெய	583	எனைத்திட்	385
ஊழிற் பெரு	219	எனைத்துங்	480
ஊழையு	357	எனைத்துணை	84
ஊறொரா	381	எனைத்துநி	732
ஊனைக்கு	598	எனைத்தொன்	729
எச்சமென்	593	எனைப்பகை	118
எட்பகவ	520	எனையாட்சி	435
எண்சேர்ந்	533	எனைவகை	297
எண்ணித்து	272	என்பிலதனை	47
எண்ணியவெ	383	என்றுமொ	375
எண்ணியா	286	என்னைமுன்	450
எண்ணென்ப	230	ஏதம்பெருஞ்	594
எண்பத்தாலெ	584	ஏதிலாரார	490

ஏதிலார்க்கு	110	ஒறுத்தார்க்	91
ஏதிலார்போ	658	ஒறுத்தாற்	335
ஏந்தியகொ	526	ஒற்றினொ	337
ஏமுற்றுவ	511	ஒற்றுமு	336
ஏரினுநன்	613	ஒற்றொற்றி	341
ஏரினுழாஅ	9	ஒற்றொற்று	341
ஏவவுஞ்செ	496	ஒன்றுகல்	186
ஐந்தவித்தா	15	ஒன்றுமை	519
ஐயத்தினீங்	202	ஒன்றுவுலக	133
ஐயப்படாஅ	405	ஒன்றூனு	76
ஐயுணர்வெ	203	ஒன்றெய்தி	546
ஒட்டார்	569	ஒன்னார்த்	153
ஒண்ணுதற்	652	ஓஓதல்வே	376
ஒண்பொரு	442	ஓதியுணர்ந்	489
ஒத்ததறிவா	122	ஓம்பினமை	699
ஒப்புரவினா	126	ஓர்த்துள்ள	205
ஒருதலையா	725	ஓர்ந்துகண்	[illegible]
ஒருநாளை	773	ஓஒவினிதே	[illegible]
ஒருபொழுது	194	கடலன்ன	[illegible]
ஒருமைக்க	233	கடலோடா	[illegible]
ஒருமைச்	489	கடனறிந்	396
ஒருமைமக	574	கடனென்ப	574
ஒருமையுளா	75	கடாஅக்களி	651
ஒலித்தக்கா	445	கடாஅவுரு	[illegible]
ஒல்லுங்கரு	479	கடிதோச்சி	325
ஒல்லும்வகை	20	கடிந்தகடிந்	574
ஒல்லும்வாயெ	387	கடுஞ்சொல்	327
ஒல்வதறிவ	275	கடுமொழிப்புந்	428
ஒழுக்கதினெ	81	கடைக்கோட்	[illegible]
ஒழுக்கத்தினொ	80	கணைகொடி	[illegible]
ஒழுக்கத்து	13	கண்களவு	[illegible]
ஒழுக்கமுடைமை	79	கண்டதுமன்	[illegible]
ஒழுக்கமுடைய	82	கண்டாங்கலு	[illegible]
ஒழுக்கமும்	560	கண்டாருயிரு	[illegible]
ஒழுக்கம்வி	78	கண்டுகேட்	660
ஒழுக்காறு	94	கண்ணிறைந்	776
ஒளியார்மு	413	கண்ணிற்கணி	332
ஒளியொருவ	572	கண்ணிற்றுணி	789
ஒறுத்தாரை	90	கண்ணின்பச	753

கண்ணின்றுக	106	களவென்னு	16
கண்ணுங்கொ	755	களித்தறியே	543
கண்ணுடைய	230	களித்தானை	544
கண்ணுள்ளார்	679	களித்தொறு	691
கண்ணுள்ளிற்	678	கள்வார்க்கு	168
கண்ணொடுக	659	கள்ளுண்ணாப்	545
கண்ணோட்டத்	331	கறுத்தின்னா	180
கண்ணோட்-மி	333	கற்கசடற	22
கண்ணோட்-மெ	330	கற்றதனாலா	[illegible]
கதங்காத்துக்	77	கற்றறிந்தார்	41
கதுமெனத்தா	711	கற்றாருட்கற்	4
கயலுண்கண்	735	கற்றார்முற்	419
கரத்தலுமாற்	704	கற்றிலனாயினு	243
கரப்பவர்க்	635	கற்றீண்டு	205
கரப்பிடும்பை	625	கற்றுக்கண்	396
கரப்பிலாநெ	623	கனவினானுண்	736
கரப்பிலார்	624	கனவினுமி	480
கரப்பினும்	775	காக்கபொரு	73
கரவாதுவந்	629	காக்கைகர	304
கருமஞ்சிதை	334	காட்சிக்கெ	226
கருமஞ்செய	602	காணாச்சின	507
கருமணியிற்	677	காணாதாற்	497
கருமத்தானா	597	காணிற்குவ	671
கருவியுங்கா	363	காணுங்காற்	786
கலங்காதுக	384	காண்கமற்	771
கலந்துணர்	757	காதலகாத்	256
கல்லாதமே	494	காதலரில்	742
கல்லாதவரிற்	422	காதலர்தா	734
கல்லாதானொ	236	காதலவரில	754
கல்லாதான்	235	காதன்மை	294
கல்லாதுவருந	236	காமக்கடன்	706
கல்லார்ப்பி	330	காமக்கட-லு	634
கல்லாவொரு	237	காமக்கட-னீ	706
கல்லான்வெ	509	காமக்கணிச்	760
கவறுங்கழக	548	காமமுநாணு	705
கவ்வையாற்	691	காமமுழந்	682
கழாஅக்கால்	492	காமமெனவ	761
களவினாலாகி	164	காமம்விடு	758
களவின்கட்	165.	காமம்வெகுளி	267

காலங்கருதி	281	கூற்றத்தை	523
காலத்தினாற்	62	கூற்றமோ	650
காலாழ்களரி	289	கூற்றுடன்று	446
காலைக்குச்	743	கெடல்வே	522
காலையரும்பி	744	கெடாஅவழி	474
கானமுயல	451	கெடுங்கா	467
குடம்பை	194	கெடுப்பதூஉ	9
குடிசெய்வ	603	கெடுவல்யா	69
குடிசெய்வார்	606	கெடுவாக	70
குடிதழீஇ	313	கெட்டார்க்	791
குடிபுறங்காத்	316	கேடறியா	426
குடிப்பிறந்தார்	563	கேடில்வி	234
குடிபிறந்-கு	290	கேடும்பெ	69
குடிபிறந்-த	465	கேட்டார்ப்	370
குடிமடிந்து	349	கேட்டினு	466
குடியாண்மை	352	கேட்பினுங்	245
குடியென்னுங்	348	கேளிழுக்கம்	473
குணநலஞ்	579	கைம்மாறுவே	120
குணநாடி	291	கையறியா	542
குணமென்னுங்	17	கைவேல்க	452
குணவிலனாய்	508	கொக்கொக்	283
குணனுங்குடி	464	கொடியார்-மி	708
குலஞ்சுடுங்	601	கொடியார்-பு	749
குழலினிது	40	கொடுத்தலு	303
குறிக்கொண்	656	கொடுத்துங்	508
குறித்தது	407	கொடுப்பது	97
குறிப்பறிந்து	402	கொடுப்பதூஉ	593
குறிப்பிற்—ரா	407	கொடும்புரு	651
குறிப்பிற்-ர்	406	கொடையள	228
குற்றமிலனாய்	604	கொலைமே	318
குற்றமேகாக்	253	கொலைவிற்	317
குன்றனார்	526	கொலைவினை	190
குன்றினனை	568	கொல்லாந	580
குன்றேறி	441	கொல்லாமை	188
கூடியகாமம்	770	கொல்லான்	150
கூத்தாட்ட	191	கொளப்பட்	404
கூழுங்குடிய	319	கொளற்கரி	432
கூழைமைனோ	405	கொன்றன்	65
கூற்றங்குதி	156	கோட்டுப்	806

கோளில்	6	செப்பமுடை	67
சமன்செய்	71	செப்பின்பு	519
சலத்தாற்	379	செயற்கரியசெ	16
சலம்பற்றி	562	செயற்கரிய யா	457
சாதலினின்	131	செயற்கைய	367
சாயலுநா	717	செயற்பாலசெ	255
சார்புணர்ந்	206	செயற்பாலதோ	24
சால்பிற்குக்	582	செயிரிற்றலை	149
சான்றவர்	584	செய்கபொ	443
சிதைவிடத்	346	செய்தக்க	272
சிறப்பறி	342	செய்தேமஞ்	478
சிறப்பீனு	18	செய்யாமற் செய்	61
சிறப்பீனும்	179	செய்யாமற்செற்	181
சிறப்பொடு	11	செய்வானை	298
சிறியாருணர்	575	செய்வினை	390
சிறுகாப்பி	431	செருக்குஞ்	252
சிறுபடை	288	செருவந்த	329
சிறுமை நமக்	746	செல்லாமை	696
சிறுமை பல	547	செல்லாவி	178
சிறுமையுஞ்	449	செல்லான்	613
சிறுமையுணீ	59	செல்விடத்	174
சிறைகாக்கு	34	செல்வத்துட்	241
சிறை நல	288	செல்விருந்	53
சிற்றிமை	263	செவிகைப்ப	228
சிற்றின்ப	100	செவிக்குண	241
சினத்தைப்	177	செவிச்சொல்	401
சினமென்னு	177	செவியிற் சுவை	246
சீரிடங்கா	481	செவியுணவி	242
சீரினுஞ்சீ	566	செறு அச்சிறு	657
சீருடைச்சே	596	செறிதொடி	778
சீர்மைசிற	112	செறிவறிந்	73
சுடச்சுட	155	செறு நறை	282
சுவையொளி	16	செறுவார்க்	509
சுழலுமிசை	455	செற்றவர்பி	764
சுழன்றுமேர்	608	செற்றாரென	756
சுற்றத்தாற்	303	செற்றார்பி	763
சூழாமற்று	604	சென்றவிட	247
சூழ்ச்சிமுடி	386	சொல்வல்	372
சூழ்வார்கண்	259	சொல்லுகவி	115

சொல்லுக-லை	871	தன்னைத்தான்—த	119
சொல்லுதல்	382	தன்னையுணர்	810
சொல்லப்ப	641	தாமின்புறு	233
சொல்வண	485	தாம்வீழ்—த	722
சொற்கோட்	71	தாம்வீழ்—மெ	661
ஞாலங்கருதி	280	தாம்வேண்	694
தகுதியென	66	தார்தாங்கி	447
தக்காங்கு	325	தாளாண்மையி	354
தக்காரின	260	தாளாண்மையெ	354
தக்கார்தக	68	தாளாற்றி	121
தஞ்சந்தம	795	தானந்தவ	12
தணந்தமை	748	திறனல்ல	91
தண்ணந்துறை	780	திறனறிந்	371
தந்தைமகற்	40	தினற்பொரு	148
தந்நலம்	535	தினைத்துணைந	62
தந்நெஞ்சத்	730	தினைத்துணையா	253
தமராகித்	305	தினைத்துணையு	783
தம்பொரு	38	தீப்பாலதான்	118
தம்மிலிருந்	665	தீயவைசெய்	119
தம்மிற்பெரி	259	தீயவைதீய	116
தம்மிற்றம்	42	தீயளவன்றி	556
தலைப்பட்டார்	199	தீயினாற்சுட்ட	77
தலையினிழிந்	567	தீவினையார	115
தவஞ்செய்	154	துஞ்சினர்	542
தவமறைந்	159	துஞ்சுங்காற்	739
தவமுந்தவ	152	துணைநலமா	375
தவறிலரா	815	துப்பார்க்கு	8
தள்ளாவிளை	423	துப்பினெவ	706
தற்காத்துத்	33	துப்புரவில்	620
தனக்குவமை	4	தும்முச்செறு	809
தனியேயிருந்	793	துளியின்மை	321
தன்குற்றநீக்	254	துறந்தா—த்	152
தன்றுணையின்	512	துறந்தா—ந்	25
தன்னுயிர்க்கின்	183	துறந்தார்படி	339
தன்னுயிர்தா	155	துறந்தார் பெரு	13
தன்னுயிர் நீ	188	துறந்தாரிற்	93
தன்னூன்பெரு	145	துறப்பார்	217
தன்னெஞ்சறி	170	துறைவன்	701
தன்னைத்தான்—க்	176	துவரியும் புல	800

துன்பத்திற்	795
துன்பமுறவ	385
துன்புறூஉ	57
துன்னூத்து	760
துன்னியார்	109
தூங்காமை	224
தூங்குக	386
தூய்மைது	397
தூஉய்மையெ	209
தெண்ணீரடு	632
தெய்வத்தா	357
தெய்வந்	32
தெரிதலும்	365
தெரிந்தவி	269
தெரிந்துண	710
தெருளாதா	144
தெளிவிலத	270
தென்புலத்	26
தேரான்பிற	294
தேரான்றெ	295
தேவரனைய	637
தேறற்க	295
தேறினும்	513
தொகச்சொ	395
தொடங்கற்	284
தொடலைக்	685
தொடி நோக்	781
தொடிப்புழு	612
தொடியொடு	750
தொடிற்சுடி	702
தொட்டனைத்	232
தொல்வர	616
தொழுதகை	485
தோன்றிற்	134
நகல்வல்ல	590
நகுதற்பொரு	459
நகை யீகை	560
நகையுமுவ	176
நகையுள்ளு	587
நகைவகை	479
நசை இயார்	726
நச்சப்படா	595
நடுவின்றி	99
நட்டார்குறை	532
நட்டார்க்கு	391
நட்டார்போ	484
நட்பிற்குவி	462
நட்பிற்குறு	470
நண்பாற்று	589
நத்தம் போற்	134
நயந்தவர்க்	715
நயந்தவர் நல்	747
நயனில சொல்	113
நயனிலனெ	112
நயனீன்று	59
நயனுடை	125
நயனொடு	586
நயன்சாரா	112
நலக்குரியார்	87
நலத்தகை	799
நலத்தின்க	563
நலம் வேண்	564
நல்குரவெ	617
நல்லவை	216
நல்லாண்	605
நல்லார்கட்	239
நல்லாறென	186
நல்லாறெனி	127
நல்லாற்று	140
நல்வினத்தி	268
நவிறொறு	458
நற்பொரு	617
நனவினாற்	737
நனவினானங்	740
நனவினானல்காக்	738
நனவினானல்காத	736
நனவினானல்காரை	739
நனவென	737

நன்மையுந்	296	நிறையுடைமை	96
நன்றறிவா	637	நிறையுடையே	762
நன்றாகுமாக்	189	நினைத்திருந்	811
நன்றாங்கா	218	நினைத்தொன்	753
நன்றாற்ற	273	நினைப்பவர்	729
நன்றிக்கு	81	நீங்கான்வெகு	506
நன்றிமறப்	65	நீங்கிற்றெ	663
நன்றென்ற	413	நீரின்றமை	12
நன்றேதரி	67	நீருநிழல	802
நன்னீரைவா	669	நுணங்கிய	246
நாங்காதல்	724	நுண்ணியநூ	215
நாச்செற்று	193	நுண்ணியமெ	410
நாடாதுந	463	நுண்மாணு	238
நாடென்ப	428	நுனிக்கொம்	277
நாடொறுநாடி	319	நூலாருநூல்	394
நாடோறுநாடு	300	நெஞ்சத்தார்	680
நானகத்தி	601	நெஞ்சிற்றுற	160
நாணாமை	488	நெடுங்கட	10
நாணாலு	600	நெடுநீர்மற	350
நாணாமற	794	நெடும்புன	286
நாணென	764	நெய்யாலெ	693
நாணென்	541	நெருப்பினு	619
நாணொடு	684	நெருநலுள	194
நாண்வேலி	599	நெருநற்றுச்	781
நாநல	369	நோக்கினா—கி	655
நாளென	192	நோக்கினா—கெ	648
நிணந்தீயி	767	நோதலெவன்	801
நிலத்தியல்	263	நோயெல்லா	184
நிலத்திற்	564	நோய் நாடி	557
நிலவரைநீ	133	நோவற்க	513
நிலைமக்கள்	449	நோனாவுடம்	683
நிலையஞ்சி	187	பகச்சொல்	108
நிலையிற்றி	74	பகல் கருதி	499
நில்லாதவ	191	பகல்வெல்	279
நிழனீருமின்	516	பகுத்துண்	185
நிறைநீர	458	பகை நட்பார்	511
நிறைநெஞ்	537	பகை நட்பாங்	487
நிறைமொழி	17	பகைபாவ	85
நிறையரி	687	பகைமையு	410

பகையகத்துச்	418	பழகிய செல்	459
பகையகத்துப்	421	பழகிய நட்	470
பகையென்	510	பழிமலைந்	378
பசக்கமற்	720	பழியஞ்சி	27
பசந்தாளி	720	பழுதென்	368
பசப்பென	721	பழைமையெ	469
படலாற்று	712	பழையமெ	404
படியுடை	350	பற்றற்ற கண்	301
படுபயன்	100	பற்றற்றகண்ணே	200
படைகுடி	223	பற்றற்றே	160
படைகொண்	146	பற்றிவிடா	199
பணியுமாமெ	576	பற்றுகபற்	200
பணிவுடைய	58	பற்றுள்ள	255
பணைநீங்கிப்	748	பனியரும்பி	742
பண்டறியே	649	பன்மாயக்கள்	765
பண்ணென்	331	பாடுபெறு	750
பண்பிலான்	590	பாத்தூண்	129
பண்புடை	587	பாலொடு	676
பதிமருண்டு	745	பிணிக்கு மருந்	660
பயனில பல்	111	பிணியின்மை	427
பயனில் சொற்	113	பிணையேர்	653
பயன்மரமுள்	123	பிரித்தலும்	364
பயன்றூக்கார்	62	பிரிவுரைக்	700
பயன்றூக்கி	534	பிழைத்துணர்	244
பரிந்தவர்நல்	758	பிழைப்பென்னு	206
பரிந்தோம்பிக்	78	பிறப்பொக்	573
பரிந்தோம்பிப்	54	பிறர்க்கின்	184
பரியதுகூர்	347	பிறர்நாணத்	600
பரியினுமா	216	பிறர்பழியு	599
பருகுவார்	445	பிறவிப்பெ	7
பருவத்தோ	279	பிறன்பழி	107
பருவரலும்	725	பிறன்பொரு	83
பலகுடை நீ	610	பிறன்மனை	86
பலசொல்ல	374	பீலிபெய்	276
பலநல்லகற்	483	புகழின்றார்	569
பல்குழுவு	425	புகழ்ந்தவை	310
பல்லவைக	421	புகழ்பட	135
பல்லார் பகை	262	புகழ்புரிந்	35
பல்லார் முனி	111	புக்கிலமை	195

புணர்ச்சிபழ	459	பேதைமையு	488
புத்தேளுல	121	பேதைமையெ	487
புரந்தார்கண்	457	பேதைமையொ	471
புலத்தலிற்	813	பேராண்மை	451
புலப்பலென	766	பொச்சாப்பார்	308
புலப்பேன்	772	பொச்சாப்புக்	307
புல்லவையுட்	416	பொதுநலத்	536
புல்லாதிரா	797	பொதுநோக்	305
புல்லிக்கிடந்	719	பொய்படுமொ	490
புல்லிவிடா	814	பொய்மையு	169
புறங்குன்றி	161	பொய்யாமைபொ	162
புறங்கூறிப்	106	பெய்யாமைய	172
புறத்துறப்	49	பொருடீர்ந்	114
புறந்தூய்	173	பொருட்பெண்டிர்	535
புன்கண்ணை	741	பொருட்பொரு	535
பெண்ணிய	804	பொருணீங்	142
பெண்ணிற்	32	பொருண்மா	746
பெண்ணினாற்	782	பொருளல்லவரை	436
பெண்ணேவல்	531	பொருளல்லவற்	201
பெயுத்தண்டு	335	பொருளற்றார்	143
பெயலாற்ரு	711	பொருளாட்சி	145
பெரிதாற்றிப்	779	பொருளானு	591
பெரிதினிது	491	பொருளென்	437
பெரியாரை	522	பொருள்கரு	388
பெருக்கத்து	567	பொருள்கெடுத்	549
பெருங்கொ	304	பொள்ளென	282
பெருமைக்கு	292	பொறியின்	356
பெருமைபெ	577	பொறிவாயி	4
பெ.ருமையு	574	பொறுத்தலிற	88
பெரும்பொரு	424	பொறையொ	424
பெருஅமையஞ்	792	போற்றினரி	400
பெறினென்	774	மகன்றந்தை	43
பெறுமவற்று	36	மக்கண்மெய்	39
பெற்றாற்	34	மக்களேபோல்	636
பேணுதுபெட்டா	713	மங்கலமென்ப	36
பேணுதுபெட்ப	784	மடலூர்தல்	686
பேணுதுபெண்	528	மடிமடிக்	349
பேதைபெறுங்	478	மடிமைகுடி	351
பேதைப்ப	214	மடியிலா	352

மடிபுளா	356	மனந்தூயார்	266
மடியைமடியா	348	மனந்தூய்	265
மடுத்தவா	359	மனமாறுவு	517
மணிநீருமண்	430	மனைத்தக்க	30
மணியிற்றிக	777	மனைமாட்சி	31
மண்ணேடியை	333	மனையாளை	529
மதிநுட்ப	367	மனைவிழைவா	528
மதியுடங்கை	672	மன்னர்க்கு	320
மயிர்நீப்பின்	571	மன்னர்விழை	393
மருந்தாகித்	124	மன்னுயிரெல்	708
மருந்தெனை	553	மன்னுயிரோ	141
மருந்தோமற்	570	மாதர்முகம்	673
மருவுகமாசற்	468	மாலைநோய்	743
மலரன்ன—ண்மு	674	மாலையோவல்	740
மலரன்ன—ளரு	690	மாறுபாடில்	555
மலரினுமெல்	788	மிகச்செய்	486
மலர்காணின்	669	மிகன்மேவன்	502
மலர்மிசை	3	மிகினுங்குறை	551
மழித்தலுநீ	162	மிகுதியான்	92
மறத்தல்வெ	175	முகத்தான	57
மறந்தும்பி	117	முகத்தினினி	483
மறப்பினு	79	முகத்தின்மு	08
மறப்பினெவ	731	முகநகநட்ப	60
மறமானமா	446	முகநோக்கி	409
மறவற்கமா	63	முகைமொக்	778
மறைந்தவை	340	முடிவுமிடை	389
மறைபெற	715	முதலிலார்க்	261
மறைப்பேன்மற்	761	முயக்கிடை	751
மறைப்பேன்மன்	704	முயங்கிய	751
மற்றியானெ	731	முயற்சிதிரு	355
மற்றுந்தொடர்	198	முரண்சேர்ந்	285
மனத்ததுமா	161	முறிமேனி	670
மனத்தானு	264	முறைகோடி	322
மனத்தினமை	484	முறைசெய்	227
மனத்துக்கண்	20	முறைப்பட	369
மனத்துளது	265	முற்றூற்றி	433
மனத்தொடு	171	முற்றியுமுற்	433
மனநலத்தி	268	முனைமுகத்	434
மனநலநன்கு	267	முன்னுறக்கா	309
மனநலமன்	267	மேலிருந்து	573

மேற்பிறந்தா	239	வாழ்வார்க்	723
மையலொரு	491	வாளற்றுப்	767
மோப்பக்கு	55	வாளொடென்	420
யாகாவாரா	76	வாள்போல்	516
யாங்கண்ணி	688	வானின்றுல	7
யாண்டுச்சே	524	வானுயர்தோ	158
யாதனின்யா	196	வானோக்கி	312
யாதானுநா	232	விசும்பிற்று	10
யாமுமுளே	730	விடாஅது	733
யாமெய்யா	174	விடுமாற்ற	397
யாரினுங்கா	807	விண்ணின்று	8
யானெனதெ	198	வித்துமிடல்	52
யானைக்கு	655	வியவற்க	256
வகுத்தான்	217	விருந்துபுற	50
வகைமாண்	525	விருப்பறுச்	302
வகையறச்	271	விரைந்து	373
வகையறிந்துத	514	விலங்கொடு	240
வகையறிந்துவ	417	வில்லேருழ	510
வசையிலாவ	136	விழித்தகண்	453
வசையென்ப	136	விழுப்புண்ப	455
வசையொழிய	137	விழுப்பேற்	95
வஞ்சமனத்தா	157	விழைதகை	471
வருகமற்கொ	771	விழையார்	474
வருமுன்னர்	254	விளக்கற்ற	718
வருவிருந்து	51	விளிந்தாரின்	84
வரைவிலர்மா	538	விளியுமெளி	733
வலியார்க்கு	504	வினைகலந்து	772
வலியார்முற்	144	வினைக்கண்வினைகெ	353
வலியினிலை	158	வினைக்கண்வினையு	300
வழங்குவ	561	வினைக்குரி	299
வழிநோக்	506	வினைசெய்	338
வழுத்தினுடு	809	வினைபகை	388
வறியார்க்	126	வினைத்திட்	380
வன்கண்கு	363	வினையான்	390
வாணிகஞ்செய்	72	வினைவலியு	275
வாய்மையெ	169	வீழப்படுவா	724
வாராக்காற்	714	வீழுநர்வீழ	723
வாரிபெருக்	206	வீழுமிருவர்	667
வாழ்த்தலுயிர்	677	வீழ்நாள்ப	23

வீழ்வாரினி	726
வீறெய்தி	382
வெண்மை	494
வெருவந்த	326
வெள்ளத்தனையம	344
வெள்ளத்தனையவி	358
வேட்ட	664
வேட்பத்தா	372
வேட்பன	403
வேண்டற்—ஃ	103
வேண்டற்—ன்	545
வேண்டா	209
வேண்டிய்	153
வேண்டினு	196
வேண்டுங்	208
வேண்டுதல்	3
வேலன்று	314
வேலொடு	318
வைத்தான்	591
வையத்துள்	30

☆